THE

STANDING ORDERS

OF THE

BOARD OF REVENUE

(NEW EDITION)

WITH

IMPORTANT REVENUE ACTS

IN TAMIL.

BY

V. T. VENCATRAMANA AIYAR

Clerk, Revenue Secretariat, Madras.

(Translated with the permission of the Board of Revenue.)

போர்ட் ஸ்டாண்டிங்க் ஆர்டர்கள்

இவையும்

முக்கியமான ரிவினியூ சட்டங்களும்

மதராஸ் கெவர்ண்மெண்டாபீஸ் க்ளார்க்

வீ. டீ. வெங்கடரமணய்யரால்

ரிவினியூ போர்டாரிட உத்திரவின்பேரில் தமிழில் தர்ஜிமா செய்யப்பட்டது.

(Copy-right Registered.)

Madras:

PRINTED BY GRANT & CO,

28, STRINGER'S STREET.

1892.

PREFACE.

With the kind permission of the Board of Revenue the publication of this book was undertaken by me with the main object of supplying a long felt want by the non-English knowing public—especially by village officers.

I wish to say something as regards the necessity for the publishing of this book.

So far as I know, there has been no book of the sort published till now, the only means of learning the several important orders of Government and of the Board of Revenue relating to the Revenue administration, which the public were supposed to have, being through the medium of village officers, to whom the translations of the several Standing Orders, as these are amended, have, it is understood, been ordered to be supplied. In this connection, I beg to say that these translations relate only to the amendments, or portions of the Standing Orders as undergo amendments, as, in the generality of cases, no fresh standing orders are promulgated but only amendments and additions made; and in the absence of any translations of the original orders themselves, those of amendments would be of very little importance or use or in fact nothing at all. I may further say that some of the orders date so far back as 1820, and granting that the translations of these orders were then furnished to village officers, it would be impossible now to expect any village officer to have preserved a regular file of these and of the subsequent amendments, after the lapse of nearly 80 years during which period there have been so many changes in the village offices themselves.

It cannot be denied that village officers are, in the majority of cases, the most effective agencies through whom persons in villages can be made to appreciate the value of education generally and to understand the substance of such of the important orders of Government and of the Board of Revenue as are relating to Revenue matters; it is, therefore, necessary that village officers themselves should be made to clearly understand what their own duties are, so that they may find

themselves given such a scope as would facilitate improving their own position as regards education, besides that of their villagers.

From my personal experience, in one or two Disticts, of the state of records which village officers are now keeping, I believe I shall not be far wrong if I say that not a single village officer has maintained any files of such translations, nor are these translations regularly obtained by them, as they have to pay a subscription of 1 Rupee for the gazette in which the translations are published : *Vide* S. 0, 152, para. 7.

Since their first promulgation the Standing Orders have undergone so complete a change that a book containing the translation, in easiest style, of the new Edition of the Board's Standing Orders as revised by the Honorable Mr. P. Chentsal Row Pantulu, C. I. E., was very badly needed in the interests of village officers, upon whose efficiency and hearty co-operation the success of Revenue Administration to a great extent depends.

* Examination in special tests has now been prescribed for village officers and they are required to know something of the nature of Revenue administration before they are actually appointed as such.

Having the above facts in view, I want to place before the public this volume, but in doing so I have not attempted to suggest in this book any thorough and definite means for the improvement of the position of village officers; that task I leave to more competent men, but I trust I have shown sufficient reasons for the necessity of every village officer first making himself acquainted with all the orders of Government on the Revenue Administration.

2. In the official Edition, as recently revised, only 16 Chapters have been published; the other Chapters remaining to be published are—those relating to Treasury and Financial, Contingencies, Office Routine, Public Servants and Sundry matters. But the last 3 Chapters contain very many important orders relating to public servants including Village Officers, and also the general public; without waiting, therefore, till these are re-published, which may take some more months, I have translated them as contained in the latest of the old Edition, intending that, as these Chapters are not likely to be altogether recast by fresh

---

* The Notification regarding this has been translated and added hereto; among so many other important matters, the subjects prescribed therein, except "surveying," find place in the several chapters of this book.

ones, the translation of the amended portions might as well be issued separately in a Supplemental volume.

3. From this book I have omitted a few Chapters, such as those relating to Customs, District Presses, Treasury and Financial, Contingencies, as I thought that translating and printing these Chapters which are of very little importance, or which are very little interesting, for the village officers to know, would be quite a waste of time and labour besides unnecessarily swelling the size of the book and thus making it a cumbrous one. Even among some of the Chapters published there are portions of the sort just above described, —for example, in the chapter relating to Stamps there are many portions relating to the procedure to be observed by Superintendent of Stamps, Collectors, Tahsildars and Deputy Tahsildars in regard to keeping accounts for them; again in the chapter relating to Special Funds there are portions relating to rules to be observed in the Accountant General's Office in auditing the Special Fund Accounts. These are apparently unnecessary to be brought in this book; and in such cases also I have omitted them from publication, my main desire being that the book should be as clear and concise as possible.

4. Besides the departmental words,—such as Government, Board of Revenue, Collector, etc., some of the words of the English language,–such as Railway, Stamps, Survey, Settlement, Demarcation, Appeal, Petition Pension, Court (as in Civil Court), Certificate (as in sale Certificate), Summons, Register (book), Statement (when it means a periodical return etc.,), suspension (from office), occurring in the English book have become so familiar with the non-English knowing public, nay, with the rural class of the population, that to substitute them as they occur by exact Tamil equivalents (which cannot in some cases be described by a single word) will only make the reader less clearly understand the substance if not altogether mislead him. In such cases, I have retained in Tamil the English words, as they are, fully explaining what those words mean in Tamil.

5. In some Chapters of the book, reference is very often made to certain Revenue Acts, as for example in the Chapter relating to Collction of Revenue, in S. O. No 106 it is said "sections 22 to 24 of Act II of1864 (Revenue Recovery Act) prescribe rules to be observed in the sale of distraint property and sections 36 to 46 relate to the sale of

immoveable property and the consequences of that sale", and so on; in the Chapter Relating to Revenue Courts, similar references are made to Act IX of 1822 (Malversation in Revenue Collections and Records), Regulation VI of 1831 (Hereditary Village offices), etc.—In my humble opinion, merely saying in Tamil that such and such sections relate to such and such matters cannot make any one obtain a clearer knowledge of the subject than he could originally have: to meet this want I have thought it best to reproduce those Acts in plain Tamil; accordingly these Acts, and some more Acts, such as: Boundary marks Act, an Act to make lawful compulsory labour during times of imminent danger of flood in rivers etc., Revenue summons Act, Treasure Trove Act, etc., have been translated and printed in the second part of the book. Village munsiff's Act (I of 1889) too has been added.

6. I had through notices, which the several Tahsildars were kind enough to circulate and for whom I owe my sincerest thanks, intimated to the mofussil public—rather prematurely—of my publishing this book and the result was that there were pressing demands made for the book from the Tamil Districts.

I had accordingly to engage 2 Printing Offices to work simultaneously, and in order to facilitate my doing so, I divided the book into two parts, the first consisting of *kasa* or original Orders of the book and the second—the Revenue Acts as mentioned above and the appendices to the several orders in the first part.

7. Though at first I had translated all the appendices, I have actually omitted from publication such of them as are not concerning the Tamil Districts, or as are of very little importance or use to village officers or to the general public, with a view to prevent the further swelling, with unnecessary matters, of the size of the book, which has already come to consist of about 600 pages. I mean, however, printing them separately should sometime hence experience dictate to me the advisability of doing so.

I had to engage two printing offices as I said above; this might, to some extent, have impaired the uniformity of the get-up; for this, and also for any errors that may have here and there crept in, I crave the indulgence of the public.

8. Not unfrequently the Standing Orders undergo revision and I therefore intend publishing all the amendments once a year and selling them to the purchasers of this book at a moderate price.

9. The Price of the book, *viz*: Rs.3-0-0 postage *extra*, which has been fixed having due regard to the fact that it must be within the means of all ordinary persons to obtain one, is, I venture to hope, none too high considering the price of the English Edition, *viz.* Rs. 5, and also the fact that, for every English page, 2 full pages are taken to put it in plain and clear Tamil.

I wanted to also add to this book the stamp Rules relating to, (1) instruments (in Civil Court and elsewhere) chargeable or not chargeable with stamp duty, and (2) portions of the general stamp Act dealing with the mode of ascertaining the proper stamp duty on a particular instrument, the impounding of documents insufficiently stamped, the penalties an infringer of the stamp rules would be liable to, etc; but fearing that the adding hereto of those Rules, which are now in print, might delay the publication of this book I have arranged to publish them separately in the form of a pamphlet and sell the same at Re. 0–4–6 to the purchasers of this book and at Re. 0–8–6 in the case of others.

10. In conclusion, I beg to say that I have spared no pains in putting the translation in a familiar and clear style and in giving detailed explanations where such were thought to be necessary; and I earnestly request that all gentlemen interested in the improvemet of the position—as regards education and *status*—of the Village officers, and particularly the Tahsildars and higher officials of the Revenue Department will take a lively interest in this work and will, when opportunity occurs, explain to them the usefulness of the book which, I venture to hope, will meet with their kind approval and patronage. Any suggestions regarding corrections or alterations to be made in the book or in the way of improving it, will be most thankfully received.

V. T. VENCATARAMANA AIYAR.

முகவுரை.

இங்கிலீஷ்தெரியாத பொதுஜனங்களுக்கும் அதிலும் முக்கியமாய் கிராம நவுக்கர்களுக்கும் ரெவினியூ விவகாரங்கள் சகலமும் அடங்கிய "போர்ட் ஸ்டாண்டிங்கு ஆர்டர்ஸ்" என்ற இங்கிலீஷ் புஸ்தகத்திற்குத் தமிழ் பிரதி நாளதுவரையில் இல்லாத்தால் ரெவினியூ போர்டார் அவர்களிட தயவுகூர்ந்த உத்திரவின்பேரில் அந்த இங்கிலீஷ் புஸ்தகம் தர்ஜிமா செய்யப் படலாச்சுது.

இந்த புஸ்தகம்வேண்டியது அவசியமாவென்பதைப்பற்றி இவ்விடத் தில் கொஞ்சம் பிரஸ்தாபிப்பது யுக்தமாயிருக்கிறது.

போர்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள் அப்போதைக்கப்போது பிறப் பிக்கப்படும்போதும் தித்துபாடு செய்யப்படும்போதும் தர்ஜிமாசெய்து கிரா மாதிகாரிகளுக்கு அனுப்பும்படி கெவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருந்த போதிலும் அனேகமாய் அவைகள் கிரமமாக அனுப்பப்படுகிறதுமில்லே, அப் படி அனுப்பும் ஏதோ சில விஷயங்களிலும் பந்தோபஸ்தாய் ஒருபுஸ்தக மாதிரியாக தைத்துவைக்கப்படவுமில்லே என்று தெரியவருகிறது. தவிரவும் வெகுநாளேக்குமுன் ஏற்பட்ட ஸ்டாண்டிங்கு ஆர்டர்களுக்கு தர்ஜிமா செய்திருக்கப்பட்ட தஸ்தாவேஜ் வைத்திருப்பது அசாத்தியமாயுமிருக்கும், ஏனென்றுல் கிராம உத்தியோகங்களில் அனேக ஆஸாமிகள் மாறிமாறி ஏற்படுகிருர்கள்.

ரெவினியூ சம்பந்தமான விவகாரங்கள் சகலமும் கிராமாதிகாரிகள் தெரிந்துகொள்ளும்பட்சத்தில் அவர்கள் துவாரா கிராமத்தார்கள் தெரிந்து கொள்ள ஹேதுவாயிருக்கும். சரியான உத்திரவுகள் பலானவையென்று தெரிந்துகொள்ளாமல் விருதாவில் அப்பீல் முதலானது செய்வதால் ஜனங் களுக்குண்டாகும் அஸௌகரியங்களே இவ்விடத்தில் விவரித்துச் சொல்ல வேண்டுமோ ?

1894௵ ஜனவரி௴ முதல் கிராம நவுக்கர்கள் உத்தியோகங்களுக்கு பரிக்ஷை* ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பரிக்ஷைபாஸ் செய்தவருக்குத்தான் உத்தியோகம் கிடைக்குமென்று ஸர்க்காரார் உத்திரவு செய்திருக்கிருர் கள். அந்தபரிக்ஷைக்குவேண்டிய அம்சங்கள் ஸகலமும் இந்த புஸ்தகத்தில்

---

* XI-வது பக்கத்தைப்பார்க்க.

அடங்கியிருப்பதும் தவிர இன்னும் அனேக விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

இத்தியாதி காரணங்களை முன்னிட்டு, நாளது வரையில் தித்துப்பாடானபோர்ட் ஸ்டாண்டிங்கு ஆர்டர் புஸ்தகம்ஹானரபில் **P. சேன்ட்ஸல் ராவு பந்துலுகாரு, ஸி. ஐ. ஈ.** அவர்களால் கெவர்ண்மெண்டாரிட கோருதலின் பேரில் தித்துப்பாடுசெய்து பதிப்பிக்கலான போர்ட் ஸ்டாண்டிங்கு ஆர்டர்புஸ்தகத்துக்குத்தமிழில் தர்ஜிமாசெய்வது யுக்தமாய்த்தோன்றி இந்தபுஸ்தகம் அச்சிடலாச்சுது.

2. ஷை இங்கிலீஷ் புதிய பதிப்பில் 16 அதிகாரங்கள்தான் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. பின்னிட்ட அதிகாரங்கள் தித்துப்பாடு செய்யப்பட்டுவருகிறது. ஆகிலும் இவைகள் அடியோடே மாற்றுதல் செய்யப்படமாட்டாதான படியாலும், அவைகள் அதிமுக்கியமான அதிகாரங்களானபடியாலும், இதில் தர்ஜிமாசெய்யப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரங்கள் பிரசுரம் செய்யப்பட்டமேல் தனியாய் அவைகளைதர்ஜிமா செய்து அச்சிடப்படும்.

3. ஷை இங்கிலீஷ் புஸ்தகத்தில் கிராம நவுக்கர்களுக்காவது பொது ஜனங்களுக்காவது தெரியவேண்டியது அவசியமாயிராத சில அதிகாரங்களைத் தர்ஜிமா செய்வது முற்றிலும் அனுவசியமென்று தள்ளிவிடப்பட்டது. தவிரவும் பிரசுரம் செய்யப்பட்ட அதிகாரங்களிலும் அனுவசியமானதாயிருப்பதைத் தள்ளிவிடப்பட்டிருக்கிறது.

4. இங்கிலீஷ் பாஷையிலுள்ள சிலவார்த்தைகள்(உதாரணம்: கெவர்ண்மெண்டார், ரெவினியூ போர்ட்டார், கலெக்டர் என்றவார்த்தைகள்,ரெயில்வே, ஸ்டாம்பு, ஸர்வே, ஸெட்டில்மெண்டு, அப்பீல், பிட்டிஷன், பென்ஷன், கோர்ட்டு, ஸர்ட்டிபிகேட், ஸம்மன், ரிஜிஸ்டர், ஸ்டேட்மெண்டு, கம்பன்ஸேஷன், ஸஸ்பென்ஷன் முதலான இன்னும் அனேகவார்த்தைகள் இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கும் தவிரவும் படிப்பில்லாத ஜனங்களுக்கும் கூட சாதாரண சம்பாஷணைகளில் அதிக ஸகஜமாய்ப் போயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட வார்த்தைகளுக்கு கிரமமாக தமிழில் அகராதிபிரகாரம் தர்ஜிமாசெய்து வாக்கியமெழுதினல் (தப்பர்த்தம் ஆகாமற் போனபோதிலும்) செம்மையாய் அர்த்தம் செய்துகொள்ளுவது கூடாமையாயிருக்கும். உதாரணம்: "ஸர்ட்டிபிகேட்டு" என்ருல் "யோக்கியதையைக்காட்டும் பத்திரிகை" அல்லது "யோக்கியத்தால் ஸித்தித்தப் பத்திரிகை" என்று அகராதியில் அர்த்தம்போட்டிருக்கிறது, யோக்கியதாஸித்தியர்த்தப் பத்திரிகை என்றும் எழுதப்பட்டிருக்கிறது. "ஏல ஸர்ட்டிபிகேட்டு" என்றுசொல்லவேண்டி

யிருந்தால்"ஏலயோக்கியத்தால் ஸித்தித்தபத்திரிகை" என்றால்வியக்தமாய் அர்த்தமாகுமா? அப்பேர்ப்பட்ட இடங்களில் இங்கிலீஷ் வார்த்தையைத் தமிழில்எழுதுவது யுக்தமாய்த் தோன்றி அப்படியே எழுதப்பட்டிருக்கிறது.

5. இங்கிலீஷ் புஸ்தகத்தில் சிலஇடங்களில் அனேக ரிவினியூசட்டங்கள் உதகரிக்கப்படுகின்றன: உதாரணம் 105ம் நெ. ஸ்டாண்டிங்கு ஆர்டரில், "1864 வருஷத்திய 2-வது சட்டத்திய 22 முதல் 24வரையிலுன் ஸெக்ஷன்களில் சொத்தை ஜப்திசெய்யும் விஷயமாய் விதிகள் கண்டிருக்கிறது" இப்படிச்சொல்வதால் யாதொரு புதுவிசேஷமும் தெரிய ஹேது யில்லைஎன்றும் அந்த ஸக்ஷன்களையே வாசித்திருந்தாலொழிய பிரயோஜனமில்லை என்பதாக எண்ணி அந்த ஆக்டை தர்ஜிமாசெய்து இரண்டாவது பாகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அம்மாதிரியாகவே இன்னும் அனேக ரெவினியூ சட்டமும் கிராமமுனிசீபு சட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

6. புஸ்தகம் அதி அவசரமாய் அச்சிடப்பட்டபடியால் சில இடங்களில் அச்சுப்பிழைக ளிருப்பதற்காக மன்னிப்பு கோரப்படுகிறது;

7. இரண்டாவது பக்கத்தில் அனுபந்தமும் முக்கியமான ரெவினியூ சட்டங்களும் சேர்த்திருக்கிறது. அனுபந்தங்களில் தமிழ் ஜில்லாக்களுக்கு சம்பந்தப்படாததாகவாவது கிராமநவுக்கர்களுக்கும் மற்ற பொதுஜனங்களுக்கும் உபயோகமற்றவைகளாகவாவது இருக்கப்பட்டவைகள் அச்சிடப்படயில்லை; ஆகச்சே, ஏதாவது ஒரு பிரகரணம், ஆர்டர் நெம்பர், இல்லாமற் போனால் அது மேற்கண்ட காரணத்தால் அச்சிடப்பட வில்லையென்று தெரிந்துகொள்ளுக.

8. ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள் அடிக்கடி தித்துப்பாடு செய்யப்படுகிறது. அப்படி செய்யப்பட்ட தித்துப்பாடுகளை வருஷத்திற்கொருதரம் அச்சிட்டு இந்தபுஸ்தகத்தை வாங்குகிறவர்களுக்கு சொற்ப விலைக்கு விற்கப்படும்.

9. புஸ்தகத்தின் விலை தபால்கூலி தவிர ரூபாய் 3–0–0; சாதாரணமான எல்லாஜனங்களும் ஒருபிரதி வாங்கிகொள்ளக் கூடியதா யிருக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் ஷை விலை ஏற்படுத்தப்பட்டது. இங்கிலீஷ்காபி விலை ரூ 5–0–0 க்கு விற்கப்படுகிறது. பிரதிஇங்கிலீஷ் பக்கத்துக்கும் செம்மையாய்தமிழில்தர்ஜிமாசெய்யஅதமபட்சம் 2 பக்கம்பிடிக்கிறது. இத்தியாதி காரணங்களை யோசிக்குமளவில் புஸ்தகத்தின் விலை ஜாஸ்திஎன்று சொல்ல இடமில்லை.

10. முடிவாய்ச்சொல்லுமிடத்து, வேண்டிய முக்கியமான அம்சங்கள் ஒன்றையாவதுவிடாமல் சுலபமாய்தெரிந்துகொள்ளக்கூடிய மாதிரியாய் தர்ஜிமா செய்யும்பொருட்டு அதிக முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. சுலுவில் தெரிந்துகொள்வது அசாத்தியமாயிருக்கும் பட்சத்தில் விபரமாய் உதாரணம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராம நவுக்கர்களிட படிப்பு விஷயமாயும் ஹோதாவிஷயமாயும் சிரத்தையுள்ள எல்லாரும் முக்கியமாய் ரெவினியூ டிபார்ட்மெண்டு அதிகாரிகளும் தயவுகூர்ந்து இந்த புஸ்தகத்தின் உபயோகத்தை ஜனங்களுக்குத் தெரிவிக்கும்படியாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. புஸ்தகவிஷயமாய் தித்துப்பாடாவது மாறுதலாவது செய்யும் விஷயமாகவாவது, அதை வேறுவிதமாய் விருத்திசெய்வதற்காகவாவது, செய்யப்படும் ஆலோசனைகள் அதிக வந்தனத்துடன் பெற்றுக்கொள்ளப்படும்,

V. T. வெங்கடரமண அய்யர்.

கெவர்ண்மெண்டாரிட நோட்டிபிகேஷன்.

(விளம்பரம்).

கிராமநவுக்கர்களிட சட்ட பரீக்ஷை.

கர்ணம், அஸிஸ்டெண்ட் கர்ணம், மணியகார், முனிஸீப், இந்த உத்தியோகங்களைநாடும் ஆஸாமிகள் லாயக்குள்ளவர்களா என்று பரீக்ஷித்துப் பார்க்கும்பொருட்டு "கிராமநவுக்கர்களிட சட்ட பரீக்ஷை" என்னும் ஒரு பரீக்ஷை வருஷவாரியில் நடத்தப்படும்.

2. கர்ணம் உத்தியோகம் வேணுமென்று நாடுகிற பிரதி ஆஸாமியும்,

(ஏ); வில்லேஜ் மானியூலில் குறித்திருக்கிற வில்லேஜ் கணக்குகளிலும்,

(பீ); கிராமநவுக்கர்களிட கடமைகளும் அவர்களுக்குள்ள அதிகாரங்களிலும்,

(ஸி); ஸர்வே செய்வதிலும் ;

பரீக்ஷை செய்யப்படுவார்கள் ; அவர்கள் அந்த பரீக்ஷைகளில் பாஸ் பண்ணவேண்டியது.

மணியகார் அல்லது முனிஸீபு உத்தியோகத்தை நாடுகிறவன்,

(ஏ). கிராமாதிகாரிகளிட கடமைகளும் அதிகாரங்களும்,

(பீ). கிராமத்தில் சுகாதாரத்திற்கேஷியமாய் வியாதி முதலாகியது வராமலிருக்கும்படி செய்யவேண்டிய முயற்சிகள், இவைகளில் பரீக்ஷை செய்யப்படுவார்கள், அவர்கள் அதில் பாஸ் செய்யவேண்டியது.

3. இந்தபரீக்ஷைக்கு லாயக்குள்ளவர்கள் யாரென்றால் யூனிவர்ஸிட்டி என்னும் சங்கத்தாரால் நடத்தப்படும் மட்ரிகுலேஷன், எப்யே, பீயே, முதலான பரிக்ஷை பாஸ்செய்தவர்களும், வித்தியா விஷயத்தின் டிபார்ட்மெண்ட் அதிகாரியாகிய டைரக்டராலாவது அன்கவனென்டெட் ஸிவில் ஸர்வீஸ் பரீக்ஷைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கமீஷனராலாவது

நடத்தப்படும் பரீக்ஷைகளை பாஸ்செய்பவர்களும், ப்ரைமரிஸ்கூல் பரீக்ஷை பாஸ்செய்பவர்களும் இந்த பரீக்ஷைக்குப்போகலாம்; இந்த பரீக்ஷைக்குக் கட்டவேண்டிய பணம் (பீஸ்) ஆனது யாதொரு ஜில்லாவில் வேலையிலிருக்கிற, கர்ணம், அசிஸ்டெண்ட் கர்ணம், ரெட்டி * அல்லது முனிஸிபு இவர்களிட வம்சத்தில் சேர்ந்தவர்களாயிருந்தால்ஒரு ரூபாயாகவும்,இதராள் 5ரூபாயாகவும் கட்டவேண்டியது. கிராமஉத்தியோகஸ்தர்களிட வம்சஸ்தர்களென்றும் அதனால் குறைந்தவீதம் பரீக்ஷைபணம்கட்ட பாத்தியதையுடையவர்களென்றும் சொல்லிக்கொள்ளும் ஆஸாமிகள், முதலில் தாசில்தார்களுக்காவது சம்பந்தப்பட்ட டிவிஷனிலுள்ள டிப்டிதாசீல்தார்களுக்காவது, அப்பேர்ப்பட்டபாத்தியதைகள் தங்களுக்குண்டென்றுவிண்ணப்பம்செய்து கொள்ளவேண்டியது; தாசீல்தார் அல்லது டிப்டி தாசீல்தாரானவர் அது விஷயத்தைப்பற்றி கிரமமாய் விசாரித்து மேற்கண்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இந்த விண்ணப்பதாரன் பலானவித பந்துவென்று கண்டெழுதி ஒரு ஸர்டிபிகேட் கொடுக்கவேண்டியது; பணம் கட்டும்போது கஜானா ஆபீஸரிடம் ஷை ஸர்ட்டிபிகேட்டை ஆஜர்ப்படுத்தவேண்டியது. பந்துத்துவத்தின் தாரதம்மியத்தைப்பற்றி சந்தேகமாவது தகரார்களாவது உண்டாகும் பக்ஷத்தில் அது விஷயமாய் ஜில்லா கலெக்டர் செய்யும் தீர்மானமானது முடிவானதாகும்.

4. தனித்தனியாய் பிரதிஜில்லாவிலும் பரீக்ஷைநடத்தப்படும்; அந்தப் பரீக்ஷையானது கலெக்டரிட மேல்விசாரணைக்குட்பட்டது.

5. டிவிஷனலாபீஸரிட கஸ்பாவில் அவரிட மேல்விசாரணைக்குட்பட்டு வருஷத்திற்கு ஒருதரம் பரீக்ஷை நடத்தப்படும். எந்தகாலத்தில் நடத்தப்படுமென்றால், ஜில்லா கஜெட்டில் கலெக்டரால் பிரசுரம் செய்யப்பட்ட பலான காலத்தில் நடத்தப்படும், ஜில்லா ஒட்டுக்கும் ஏககாலத்தில் பரீக்ஷை நடக்கவேண்டியது.

6. வேறேவிதமாய் கலெக்டரால் பிரத்தியோகமாய் உத்திரவு கொடுக்கப்பட்டாலொழிய, பரீக்ஷைக்குப் பணம்கட்டின ஆஸாமிகள் தாங்கள் எந்த டிவிஷனலாபீஸரிட கஸ்பாவில் சேர்ந்தவர்களோ அந்த கஸ்பாவில் பரீக்ஷைக்காக ஆஜராகவேண்டியது.

7. பலான விஷயங்களைப்பற்றி பரீக்ஷையானது எழுத்துமூலமாய் நடத்தப்படும் (அதாவது கேழ்விகளெல்லாம் காகிதத்திலெழுதிக் கொடுக்கப்

---

* சில தெலுங்கு ஜில்லாக்களில் மணியகாரர்களுக்கு "ரெட்டி" என்று சொல்லப்படுகிறது.

படும், அவைகளுக்கு ஜவாப்புகள் (ஆன்ஸர்கள்) காகிதத்திலேயே எழுதி கொடுக்கப்படவேண்டியது). பிரதிஜில்லாவில் என்ன சுதேசபாஷை வழங்கி வருகிறதோ அந்தபாஷையில் பரீக்ஷை நடத்தப்படும்.

பிரதி "விஷயத்தைப்" பற்றியும் * ஜில்லா ஒட்டுக்கும் ஒரே விதகேள்விகள்தயார் செய்யப்படும்; கலெக்டரால் நியமிக்கப்படும் ஆபிஸர் அல்லது ஆபீஸர்களால் கேள்விகள் தயார் செய்யப்படும்.

8. ஸர்வேயில் செய்யப்படும் பரீக்ஷையானது டிவிஷனல் ஆபீஸரிட மேல்விசாரணையில் வயலில் போய் பரீக்ஷை செய்துபார்க்கப்படும்.

9. பிரதி விஷயத்திற்கும் * ஏற்படுத்தப்பட்ட மார்க்குகளில் அதம பட்சம் 3ல்-1-பாகமாவது வாங்கினலொழிய (அதாவது அடைந்தாலொழிய) பரீக்ஷை பாஸ்செய்தவராக யாதொரு ஆஸாமியும் பாவிக்கப்படமாட்டார்.

10. பரீக்ஷை முடிந்த உடனே கூடிய சீக்கிரத்தில் கலெக்டரானவர் பரீக்ஷை பாஸ்செய்த ஆஸாமிகளிட பெயர்களை அவரவர்கள் மார்க்குவாங்கினதை அனுஸரித்த வரிசைப்பிரகாரம் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்ய வேண்டியது.

11. பரீக்ஷையில் தேறினவர்களுககு கலெக்டரால் கையெழுத்து செய்யப்பட்ட ஸர்ட்டிபிகேட்டுகள்கொடுக்கப்படும்; பாஸ் செய்தவன் பலான மனுஷியன்தான் என்று ஸ்திரமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸர்ட்டிபிகேட்டில் பரீக்ஷை பாஸ் செய்தவர்களிட அங்க அடையாளங்களை குறித்தெழுத வேண்டியது.

12. பரீக்ஷைக்குப்போகவேண்டியவர்கள், எந்த தேதியில் பரீக்ஷை நடத்தப்படுமென்று பிரசுரம் செய்யப்படுமோ அந்த தேதிக்கு ஒரு மாசமுன்பாக கலெக்டரிடத்தில் சரியான நமூனு பிரகாரம் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டியது; இந்த விளம்பரத்தில் 3-வது பிரகரணத்தின் பிரகாரம் பணம் கட்டினதிற்காக கஜானு ஆபீஸரால் கொடுக்கப்படும் ஒரு ரசீதை விண்ணப்பத்துடன் ஆஜர்ப்படுத்த வேண்டியது, அப்படி கட்டினபணமானது-1-ரூபாயாக இருந்திருக்கும் பட்சத்தில் தாசில்தாராலோ டிப்டி தாசில்தாராலோ கொடுக்கப்பட்ட பந்துத்துவ விஷயமான ஸர்ட்டிபிகேட்டையும் கூட ஆஜர்ப்படுத்த வேண்டியது.

---

* குறிப்பு: இவ்விடத்தில் விஷயமென்ருல், இரண்டாவது பிரகரணத்தில் உதகரிக்கப்பட்ட ஏ,அல்லது-பி,அல்லது ஸீ, என்ற பாபத்துக்ளாக அர்த்தம் செய்துகொள்ளுக.

13. இந்த பரீக்ஷைக்காக செய்து கொள்ளப்படும் பிரதி விண்ணப்பத்துடனேயும் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்டு ஹோதாவுக்குக்குறையாத ஒரு மெடிகல் உத்தியோகஸ்தரால் கொடுக்கப்பட்ட "அம்மை குத்தின விஷயமான ஸர்ட்டிபிகேட்" ஐயும் ஆஜர்ப்படுத்த வேண்டியது. முன்னடியே எந்த பரீக்ஷைக்காவது போனபோது இப்பேர்ப்பட்ட ஸர்ட்டிபிகேட்டுகள் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தால் இந்த ஸர்டிபிகேட்டானது மறுபடியும் தேவையில்லை.

14. இந்த விளம்பரமானது கெஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி ஜில்லாக்களிலுள்ள "ஷிடியூல்" பிரதேசங்கள் தவிர ராஜதானி முழுதிலும் வியாபிக்கும் (சம்பந்தப்படும்).

15. முன்னடியாகவே நியமிக்கப்பட்டு 1894ஹ ஜனவரிமீ முதல் தேதியில் வேலைபார்த்து வருகிற கிராம நவுக்கர்களுக்காவது அல்லது ஷை தேதியில் 18 வயசுக்கு மேற்பட்ட அவர்களிட வார்ஸ்தார்களுக்காவது இந்த விளம்பரத்தில் கண்ட விதிகள் சம்பந்தப்படாது, இந்த ஒரு விலக்கு நீங்கலாக, 1894ஹ ஜனவரிமீ முதல் தேதியிலும் அதற்குப் பின்னிட்டும் இந்த விளம்பரத்தின் 2-வதுபிரகரணத்தில் உதகரிக்கலான பரீக்ஷை பாஸ் செய்திராத யாதொரு ஆஸாமியும், கர்ணம், மணியம், அல்லது முனிஸீப் இந்த உத்தியோகங்களுக்கு, கலெக்டரால் பிரத்தியேகமாய் விலக்கப்பட்டிருந்தாலொழிய, நியமிக்கப்படமாட்டான்.

நிபந்தனை:—கிராம நவுக்கர்கள் 1894ஹ ஜனவரிமீ முதல் தேதியில் 18 வயதாவது அதற்கு மேற்பட்ட வயதாவது அடைந்தவர்களாக இருக்கக்கூடிய தங்களிட வார்ஸ்தார்களின் பெயரை 1893ஹ ஜனவரிமீ முதல் தேதியிலாவது அதற்கு முன்னிட்டாவது டிவிஷனலாபீஸரிட ஆபீஸில் பதிவு செய்து வைக்க வேண்டியது; இந்த விதியில் அனுமதி கொடுக்கப்பட்ட விலக்கானது மேற்கண்ட விதமாய் பதிவு செய்யப்படாத வார்ஸ்தார்களுக்கு சம்பந்தப்படாது.

Proceedings of the Board of Revenue.

(LAND REVENUE.)

Dated, 30th May, 1892.

No. 3143. Misc:

The Honorable Mr. H. W. BLISS, C. S; C. I. E.
Mr. E. GIBSON, C. S.

Read letter from V. T. VENCATARAMANA AIYAR, Clerk Revenue Secretariat, Fort. St. Gorge, Madras, dated 21st April 1892.

Resolution.

The permission asked for is granted.

(True Extract.)

(Signed) W. S. MEYER,
For Ag: Secretary.

To.

M. R. Ry.

V. T. Vencataramana Aiyar Avergal,
Clerk, Rev: Secretariat.

ரெவினியூ போர்டார் அவர்கள்.

(லான்ட் ரிவினியூ டிபார்ட்மெண்டு).

நெ. **3143.** மிஸ்:

ஹானரெபில் மேஸ்தர் **H. W.** ப்ளிஸ்துரையவர்கள். ஸி. ஐ. ஈ.

மேஸ்தர். **E.** கிப்ஸன் துரையவர்கள்.

சென்னப்பட்டணம் கோட்டைகெவர்ண்மெண்டாபீஸ் ரிவினியூ ஸிக்ரடெரிஆபீஸ் கிளார்க், V. T. வெங்கடரமணய்யரிடமிருந்து வந்தலெட்டர் * வாசிக்கப்பட்டது.

தீர்மானம்

கோரிக்கொண்டபடி அனுமதி கொடுக்கப்பட்டது.

(சரியான எக்ஸ்டிராட்டு).

(என்று) டப்லியூ. யஸ். மேயர்.

ஆக்டிக்கு ஸிக்ரெடெரிக்காக.

மகா-ள-ள-ஸ்ரீ,

V. T. வெங்கடரமணய்யர் அவர்களுக்கு,

கிளார்க், ரிவினியூ ஸிக்ரெடரி ஆபீஸ்.

---

* கிராம நவுக்கர்களுக்கும் பொது ஜனங்களுக்கும்உபயோகப்படும்படி போர்டார் அவர்களிட ஸ்டாண்டிங்கு ஆர்டர் புஸ்தகத்துக்குத் தமிழில் தர்ஜிமா செய்வதற்கு அனுமதி கொடுக்கும்படியாய் கோரப்பட்டது.

ரிவினியூ போர்டாரிட

ஸ்டாண்டிங் ஆர்டர்கள்.

(நிலையான உத்திரவுகள்)

பொருள் அட்டவணை.

முதலாவது பாகம்.

		பக்கம்.
1-வது அதிகாரம்	நிலங்களுக்குத் தீர்வை ஏற்படுத்துவதைப்பற்றியும் நிலங்களைப் பைஸலாத்தி செய்யவேண்டிய மாதிரியைப்பற்றியும்.	1
2 ,, ,,	ஸ்டாம்புகள், (முத்திரைகாகிதங்கள்). ...	129
4 ,, ,,	ஸ்பெஷல் பண்டுகள், (பவுண்டு பண்டு கிராம ஊழிய பண்டு முதலியன.	153
5 ,, ,,	தீர்வை வசூல்செய்து	164
6 ,, ,,	இனம் நிலங்களும் அதுசம்பந்தமானவிஷயங்களும்.	182
7 ,, ,,	இயோமையா ராஜாங்க பென்ஷன் முதலியன.	201
8 ,, ,,	பொது உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சத்திரம் முதலியதற்கு தானங்கள். ...	217
9 ,, ,,	கெவர்ண்மெண்டு வியாச்சியங்கள். ...	235
12 ,, ,,	ரிவினியூ கோர்ட்டுகள்	234
	கிராம உத்தியோகங்களுக்குநியமனங்கள்செய்யும் விஷயமாயும்,1831 ஷூ் த்திய 6-வது சட்டப்பிரகாரம் வியாச்சியம்செய்யவும் விதிகள் இதில் அடங்கியிருக்கின்றன 362-வது பக்கத்தையும் பார்க்க.	
13 ,, ,,	ஜலாதாரங்களும் மற்றபொது வேலைகளும்...	253
14 ,, ,,	சுகாதார சம்பந்தமாயும் வைத்தியங்கள்விஷயமாயும்.	265
15 ,, ,,	படைகளும் வழிப்பிரயாணிகளும். ...	276
16 ,, ,,	கோர்ட் அவ்வார்ட்ஸ்	292
17 ,, ,,	ஆபீஸ் முறைமைகளும் நடவடிக்கைகளும் ...	304
	(அப்பீல் பிட்டிஷன் முதலானது செய்ய விதிகள் இந்த அதிகாரத்தில் அடங்கியிருக்கிறது. 359-வது பக்கத்தையும் பார்க்க.)	
18 ,, ,,	ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள்.	302
19 ,, ,,	நானாவிதமானவை.	346

STANDING ORDERS

OF THE

BOARD OF REVENUE.

ரெவினியூ போர்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள்

(நிலையான உத்திரவுகள்.)

1—வது அத்தியாயம்.

நிலங்களுக்குத் தீர்வை ஏற்படுத்துவதைப்பற்றியும் நிலங்களை பைஸலாதி செய்யவேண்டிய மாதிரியைப்பற்றியும்.

---

1. தீர்வை இன்னின்ன தாமாஷாக்கள்படி ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது.—*ரயத்வாரி நிலங்களின் தீர்வையை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்படுத்தி யிருக்கப்பட்ட விதிகளாவன :—*

1. *தீர்வையானது நிலத்தின் (விஸ்தீரணத்தின்) பேரில்விதிக்கப்படுமேயல்லாமல் அதிலுண்டாகிற மாசூலின் தாரதம்மியப்பிரகாரமாவது, பிராமணர்கள்,மகாஜெனங்கள், புறக்குடிகள், இன்னும்மற்றவர்களான சிலவகுப்பினர்கள் குறைந்த தீர்வைக்கு பாத்தியமுடையவர்களென்பதை அனுசரித்தாவது விதிக்கப்படமாட்டாது.*

2. *நிலத்தை தரம்பிரிப்பது கூடியவரையில் சாதாரணமானதாய் இருக்கவேண்டும்; மேலும் பிரதிகிராமத்திற்கும் வெவ்வேறுவிதமாய் இராமல் எவ்விடத்திலும் ஓரேவிதமாயிருக்கவேண்டும்.*

3. *சாகுபடி முதலானவைகளுக்காக பிடித்தசிலவுகள்போக தேறுகிற மீதிமாசூலில் பாதிக்குமேற்படாமல் தீர்வைவிதிக்கவேண்டியது.*

4. *புஞ்சைநிலத்தில் இரண்டாவதுபோகம்சாகுபடிசெய்தால்அதற்கு யாதொருதீர்வையும்விதிக்கக்கூடாது. ஆனால்இருபோகம் செய்ய சாகுபடி*

காலங்களில் குறைவில்லாமல் ஜலப்பாய்ச்சலிருக்கிற நஞ்சை நிலங்களை இருபோக நிலமென்று கணக்கில் எழுதிக்கொள்ளவேண்டியது; இரண்டாவது மாகுலுக்குள்ள தீர்வையானது முதல் மாகுல்தீர்வையில் பேர்பாதி இருக்கவேண்டியது. ஜலப்பாய்ச்சலில்லாமற் போகும் போது (தீர்வையை) வஜா செய்யலாம். பலான நிலத்திற்கு ஜலாதாரங்களிலிருந்து ஜலம் பாயுமென்கிற நிச்சயமில்லாமலிருக்கிற விஷயங்களில் அந்தநிலத்திற்கு ஜலம்பாய்வதற்குள்ள சவுகரியங்களை அனுசரித்து இரண்டாவது போக தீர்வை கணக்கிடவேண்டியது. இறைத்து ஜலம்பாய்ச்சுகிற விஷயங்களில் ஒரு ஏக்ராவுக்கு தீர்வை $\frac{1}{2}$–ரூபாய் கம்மிசெய்யப்படும்.

5. சாதாரணமாய் ஜலப்பாய்ச்சல் தவக்கப்படாது என்று நிச்சயமில்லாத நஞ்சை நிலங்கள் விஷயமாய் இரண்டாவது போகத்தின் தீர்வையைசெலுத்த ஒருவிதமொத்த (கம்பவுன்ட்) தீர்வை ஏற்பாடு செய்துக்கொள்ளலாம். இந்தஏற்பாடு பிரகாரம் தீர்வையின் தாமாஷாக்களாவன:—

1. ஜலப்பாய்ச்சல்நிச்சயமில்லாதநிலங்கள் அல்லது 2–வது கூட்டத்திற்கு நஞ்சைதீர்வையில் மூன்றில்ஒருபாகம்; 3–வது கூட்டத்திற்கு நஞ்சைதீர்வையில் நாலில்ஒருபாகம்; 4–வது கூட்டத்திற்கு நஞ்சைதீர்வையில் ஐந்தில் ஒருபாகம். ஜலப்பாய்ச்சல் நிச்சயமில்லாமல்போய் (சர்க்கார்) ஏரியிலிருந்துஜலம்பாய்வதோடுகூட கிணறுகளிலிருந்துஜலம் இறைத்துக்கொள்ளும்விஷயத்தில் எவ்வளவுபாகம் இறைப்பினல் ஜலம் பாய்ச்சப்படுகிறதோ அவ்வளவுக்குள்ள தாமாஷாப்படிஇரண்டாவதுபோகத்தீர்வையை குறைத்துவிடவேண்டும். எந்தவிஷயத்திலும் (சர்க்கார்) தீர்வைஏகரா-1-க்கு அதமபட்சம் 1 ரூபாய். குடியானவர்கள் ஸெட்டில்மெண்டான பிற்பாடு கூட எப்போதாகிலும்எவ்வளவு விஸ்தீரணத்துக்காகிலும் மேலேசொன்ன மொத்தஏற்பாடு பிரகாரம் தீர்வை செலுத்த ஒப்பந்தம் பண்ணிக்கொள்ளலாம்.

6. எல்லாநிலங்களையும் நஞ்சை புஞ்சை என்று இரண்டுவிதங்களாக பிரிக்கவேண்டியது.

7. சர்க்கார் ஜலாதாரத்திற்கு 10–கஜதூரத்திற்குமேற்பட்ட புஞ்சை நிலங்களில்முழுகியிருக்கப்பட்ட *சொந்தக் கிணறுகளிலிருந்துஜலம்இறைக்கப்படுகிறநிலங்கள் புஞ்சை தீர்வையைத்தவிரவேறே எவ்விததீர்வைக்கும் உட்பட்டவைகளல்ல. நஞ்சை நிலத்திலிருக்கப்பட்ட சொந்தகிணறுகளிலிருந்து ஜலம்பாய்ச்சப்பட்டநிலங்களுக்கு இரண்டாவது போகத்தீர்வைவிதிக்கப்படும். ஆனல்இம்மாதிரியான அநேககிணறுகள் இருப்பதானதுசர்க்கார்

* சொந்தக்கிணறுகள் என்ருல் ஸர்காருடையதல்லாமல் பொதுஜனங்களால் வெட்டப்பட்டது என்று தாத்பரியமாகும்.

ஜலாதாரக்குறைவு என்பதற்கடையாளமானபடியால், ஜலக்குறைவில்லாத விஷயத்தில் விதிக்கக்கூடியதீர்வையைவிட குறைந்ததீர்வை ரேட்டுக்கு ஏற்பாடுசெய்துக்கொள்ள உத்திரவுகொடுக்கப்படுகிறது. சர்க்கார்ஜலாதாரத்திலிருந்துபோகிற பாய்ச்சலைத்தடுக்கிறகிணறுகளிலிருந்தாவது, சர்க்கார் ஜலாதாரத்திற்கு 10 கஜதூரத்திற்குட்பட்டிருக்கிற கிணறுகளிலிருந்தாவது, பெரும்பான்மையாய்ஆறுகளின் கரையில் முழுகப்பட்டு அந்த ஆறுகளின் வாய்க்கால்களிலிருந்து ஜலம் பாயப்படுகிற உயர்ந்த மாதிரி கிணறுகளான சுல்டான் அல்லது துரவு என்றுசொல்லப்பட்ட கிணறுகளிலிருந்தாவது ஜலம் பாய்கிற நிலங்களை நஞ்சை என்றுகணக்குகளில் எழுதிநஞ்சைதீர்வை விதிக்கப்படுகிறது; இரண்டாவதுபோகத்திற்கு யாதொருதீர்வையுமில்லை. முதல் போகத்திற்கு இறைத்து ஜலம் பாய்ச்சியிருக்கும் பட்சத்தில் ஏகரா 1–க்கு முதல் போகத்தீர்வையிலிருந்து 1ரூபாய் குறைக்கப்படுகிறது. ஆகிலும் ஏகரா 1–க்கு அதமபட்சம் தீர்வை 1ரூபாய். கெவர்ன்மெண்டார் மேலே சொன்னவிதிகளை தற்காலம் நிவர்த்தி செய்து 7–வ துநெம்பர் ஸ்டாண்டிங்கு ஆர்டரில் கண்டவிதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

2. மேலே சொன்ன விதிகளைஎல்லாம் அனுசரித்து நிலத்தீர்வை ஏற்பாடுசெய்யும்போது, ஸெட்டில்மெண்டுடிபார்ட்மெண்டார் பூமியின் சாராம்சத்தை அனுசரித்து நிலங்களை சிலவகுப்புகளாகப் பிரிக்கிறார்கள். பின்னும் இயல்பாய் அந்த நிலங்களுக்குள்ளதன்மைகளையும் அவைகள் செழிப்பாயிருக்கிறதை அனுசரித்து இருக்கிற மற்ற சந்தர்ப்பங்களையும் யோசித்து சிலவிதங்களாக உட்பிரிவுகள் செய்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு நிலத்திலும் உண்டாகும் பிரதான மாகூலின் அசல் ஒப்புடி இவ்வளவென்று பலவிதத்திலும் பரிசீலனை செய்து ஒவ்வொருவிதநிலமும் இவ்வளவு தானியம் உண்டாகக்கூடிய நிலம் என்று மதிப்பிடுகிறார்கள். அப்படிமதிப்பிட்ட மாகூல் அவிடத்து மாற்றுவிலையை அனுசரித்துஇவ்வளவுதொகை பொறுமென்று மதிப்பிடுகிறார்கள். அந்தமாற்று விலை இவ்வளவென்று எப்படி கணக்கிடுகிறதென்றால் ஜில்லாமொத்தத்திற்கும் ஸெட்டில்மெண்டு ஆரம்பித்ததேதிக்குமுன்புபஞ்சம்வந்தவருஷங்கள் நீங்கலாக 20 வருஷங்களின் சராசரி விலை இவ்வளவென்று தெரிந்துகொண்டு வியாபாரிகள் லாபத்திற்காகவும் தானியத்தை விற்கிறதற்காக கடைகளுக்குஎவ்வளவு தூரம் கொண்டுபோகவேண்டியதாய் நேரிடுகிறதோ அவ்வளவு தூரத்திற்காகவும் (அதாவது அவ்வளவுதூரம் கொண்டுபோவதினால் நேரிட்ட செலவுக்காகவும்) சராசரி கொஞ்சம் விலையை குறைக்கவேண்டியது. இம்மாதிரிஏற்பட்ட மொத்தமாகூலின் மதிப்பிலிருந்து சாகுபடிக்காக பிடித்தசிலவுகளையும் காலஸ்திதிகள் மாறிப்போவதற்காகவும் பயன்

தரத்தக்கதாயிராத விஸ்தீரணங்களுக்காகவும் ஏதோஒரு வீதப்பிரகாரம் கொஞ்சம்குறைக்கப்படுகிறது. அப்படி வந்தமீதிதுகையில் பேர்பாதியானது அந்த நிலத்திற்குள்ள சர்க்கார் தீர்வையாக ஏற்படுத்தப்படுகிறது. பிறகு சமமாய்ஒப்புடியாகிற நிலங்கள் எந்தவகுப்பில் சேர்ந்திருந்த போதிலும் அதைப்பற்றி நிமித்தியமில்லாமல் அவைகள் பலான தரத்து நிலங்களென்று சொல்லப்படுகின்றன. ஒவ்வொருதரத்திற்கும் ஒவ்வொரு விதத்தீர்வையுண்டு. மேல்கண்ட தாமாஷாப்படி ஏற்பட்ட தீர்வையானது நிலங்கள் எந்த கிராமங்களிலிருக்கின்றனவோ அந்தந்த கிராமங்களின் ஸ்தலவசதியையும் ஜலாதாரங்கள் வசதியையும் அனுசரித்து பின்னும் தித்துப்பாடு செய்யப்படுகின்றது. இதனால்தான் ஒரேதானியமதிப்புள்ளவகுப்பைச்சேர்ந்த நிலங்களின் தீர்வையின் தாமாஷாக்கள் பலவிதமாயிருக்கின்றன, புஞ்சை நிலங்களாயிருந்தால் அவைகள் ரஸ்தாக்களுக்கும் கடைகளுக்கும் எவ்வளவு சமீபமாக யிருக்கிறதோ அதை அனுசரித்தும் நஞ்சை நிலங்களாயிருக்கும் பட்சத்தில் மேல்சொன்ன சங்கதிகளை யோசித்தும் முக்கியமாய் ஜலபாய்ச்சலின் தாரதம்மியத்தின் வசதியை அனுசரித்தும் கிராமங்களை பல கூட்டங்களாகப்பிரிக்கிறார்கள். எந்தக்கிராமத்தில் நிலமிருக்கிறதோஅந்தக்கிராமமானது மேற்கூட்டத்திற்குச் சேர்ந்ததாயிருந்தால், கிரமமானதாமாஷாவைவிடமுன்னால் ஏற்படுத்தப்பட்ட தாமாஷாக்கள் சிலவேளை அதிகப்படுத்தப்படுகின்றன; அந்தகிராமமானதுகீழ்க்கூட்டத்தில் சேர்ந்திருந்தால் கிரமமாயுள்ள தாமாஷாவைவிட முன்னால் ஏற்படுத்தினதாமாஷாக்கள் குறைக்கப்படுகின்றன.

3. மேல்கண்டபிரகாரம் ஏற்பட்ட தீர்வைதான் நிலத்தை சாகுபடி செய்வதற்காக கெவர்ன்மெண்டுக்கு உள்ளபாகம். ஆனால் நிலத்தில் உலோகங்கள் இருப்பதாய்த்தெரிந்து அவைகளை வெட்டிஎடுக்கும்பட்சத்தில் அதற்காக பிரத்தியேகமான தீர்வைவிதிக்கப்படும். இந்தவிதியானது 1879வருடம் அக்டோபர்மீ 7௳ 2029 ம்-நெம்பருள்ளகெவர்ன்மெண்டு ஆர்டர்பிறந்தபிற்பாடு கரம்பு நிலங்களை விற்பதற்காக ஏற்படுத்தியிருக்கிற விதிகளையனுஸரித்து விற்கப்பட்ட நிலங்களுக்கு சம்பந்தப்பட்டதல்ல. அந்த கெவர்ன்மெண்டுஆர்டரினால் அப்பேர்க்கொத்த நிலங்களிலுள்ளசுரங்கங்களுக்குபாத்தியதை முழுமையும் கெவர்ன்மெண்டார் வசமாய்ப் போய்விட்டது.

4. ஸெட்டில் மெண்டுடிபார்ட்மெண்டாரால் ஸெட்டில்மெண்டுமுடிந்தாவது அல்லது நடந்துகொண்டாவது இருக்கிற ஜில்லாக்களின் கலெக்டரானவர்கள் ஸெட்டில்மெண்டில் ஏற்படுகிறதீர்வைகள் 30வருஷம்சென்று மாறுதலுக்குட்பட்ட தென்று தங்கள்ஜில்லா கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டியது. ஆகிலும் நிலங்கள்மறுபடி வகுப்புகளாக பிரிக்கப்படாதென்

றும் இவ்வளவுதானியம் விளையும் என்பதாகபுதிதாய்வேறேமதிப்பு ஏற்படுத்தப்படமாட்டா தென்றும் அந்தகாலத்தின்கடைவிலையை அனுஸரித்து மாத்திரமேதீர்வை மாறுதல் செய்யப்படு மென்றும், குடியானவர்கள் கெவர்ன்மெண்டிலிருந்து கடன் வாங்கின துகையைக்கொண்டு நிலத்தை விர்த்திசெய்வதனுல் அதின்விலைமதிப்பு ஜாஸ்தியாய்போயிருந்தால்அப்படி ஜாஸ்தியாயிருப்பதற்காக வேறே தீர்வைவிதிக்கப்படமாட்டாதென்றும் குடியானவர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டியது.

5. தற்காலம் விதிக்கப்பட்டிருக்கிற பைமாஷ் அல்லது ஸெட்டில்மெண்டு தீர்வைகள் சரியாயில்லை என்பதாக தோன்றினதின் பேரில் தித்துப்பாடு செய்யவேண்டிய எண்ணத்துடன் அந்ததீர்வையை போர்டாரிட அனுமதியன்றியில் மாற்றக்கூடாது. ஆகிலும் இந்த நிபந்தனையானது கவுல் அடைமானத்தின் பேரில் அனுபவித்து வருகிறநிலங்களுக்காகவாவது பிரத்தியேகமானவிதிகளை அனுஸரித்து குறைந்ததீர்வை விதிக்கவேண்டியதற்காகவாவது சம்மந்தப்பட்ட தல்ல.

6. தீர்வை ஜாஸ்தியாயிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டு நிலத்தைக் கைவிட்டுவிடும் விஷயங்களைப்பற்றி கலெக்டர்கள் உடனே கவனித்து அது சம்பந்தமானவிதிகளை அனுஸரித்து என்ன விதமான மாறுதல்செய்யலாமோ அதையும் ரிபோர்ட் செய்யவேண்டியது.

7. கலெக்டர்கள் தங்கள்ஜில்லாக்களின் எந்தபாகத்திலாவது தற்காலம் ஊர்ஜிதத்திலிருக்கிற தீர்வை ரேட்டுகளை மாற்றவேணுமென்று ரிபோர்ட்செய்யும்போது இதற்குமுன் சர்க்காருக்கு சேரவேண்டிய தீர்வை சேராமல் நஷ்டமாய் போனது இவ்வளவென்பதைப்பற்றியும் தாங்கள் ஆலோசனை செய்வதினுல் இனி உண்டாக்கக் கூடியலாபம் இவ்வளவென்பதைப்பற்றியும் ரிபோர்ட்செய்யவேண்டியது.

2. ஜாஸ்தியாகவாவது குறைவாகவாவது இருக்கிற நிலங்களுக்குத்தீர்வை விதிப்பது.—எந்தப்புலமாவது கணக்கில் ரிஜிஸ்டராயிருக்கிற விஸ்தீரணத்தை விட அளவில் ஜாஸ்தியிருப்பதாகத் தெரியவந்து ஜமாபந்திகாலத்தில் அதற்குத்தீர்வை ஏற்படுத்தும்போது அனுசரிக்கவேண்டியவிதி என்னவென்ருல்—ஒரு புலமானது கணக்கில்தாக்கலாயிருக்கிற விஸ்தீரணத்தைவிட 100-க்கு 10 ஜாஸ்தியாய் இருந்தால், ஜாஸ்தி பாகத்திற்குத் தீர்வை விதிக்கவேண்டியது. குறைவுபடும் விஷயங்களில் ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிற விஸ்தீரணத்திற்கு 100-க்கு 10 குறைவாயிருந்தால் அந்த குறைவுபாகத்திற்கு மாத்திரமே தீர்வை வஜாசெய்யப்படும்.

2. இதனுல் ஒருநிலம் கணக்கில்தாக்கலாயிருக்கிற அளவுக்குச்சரியாயிருக்க வில்லையென்கிறகாரணத்தினுல் தீர்வை ஜாஸ்தியோ குறைவோ

செய்யவேணும் என்கிறதாக அவசியமில்லை ; ஏனென்றால் முன்காலத்தில் தீர்வையானது நிலத்தினுடைய விஸ்தீரணத்தை அநுஸரிக்காமல் அதின் மாசூலை யனுஸரித்து ஏற்படுத்தப்பட்டது. கெவரன்மெண்டுநிமித்தியமாவது குடியானவன் நிமித்தியமாவது நிலத்தை புனர்அளவு செய்வதை கூடிய வரையில் தடுக்கவேண்டும்.

3. மேலே சொன்ன விதிகள் ஸர்வே செய்யப்படாமலும்ஸெட்டில் மெண்டு டிபார்ட்மெண்டாரால் ஸெட்டில்மெண்டு செய்யப்படாமலுமிருக் கிறஜில்லாக்களிலுள்ள நிலங்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டவை.

i. ஸர்வே செய்துஸெட்டில்மெண்டான ஜில்லாக்களில், அதற்காக வென்று ஏற்பட்டிருக்கிற டிபார்ட்மெண்டாரால் ஸர்வே செய்யப்பட்ட நிலங்களின் தாக்கலான விஸ்தீரணங்களை அந்த டிபார்ட்மெண்டாருடன் கலந்து ஆலோசியாமல் யாதொரு மாறுதலும் செய்யக்கூடாது.

ii. ஸெட்டில்மெண்டு டிபார்ட்மெண்டாராலாவதுஅல்லதுஜில்லாவி லுள்ள ரெவினியூ உத்தியோகஸ்தர்களாலாவது அளவெடுக்கப்பட்டுஸெட் டில்மெண்டு ரிஜிஸ்டர்களில் பதிவாயிருக்கிற விஸ்தீரணமுள்ள விடர்வு நிலங்கள் விஷயமாய் (ஷை விஸ்தீரணத்தை மாற்றவேண்டுமென்கிற) அம்சத்தைப்பற்றி கலெக்டர்கள் போர்டாரிட (ஸெட்டில்மெண்டு டிபார்ட் மெண்டில்) உத்திரவுக்காக ரிபோர்டுசெய்யவேண்டியது.

iii. ஜில்லா உத்தியோகஸ்தர்கள் உத்திரவுபிரகாரம் அளவெடுக்கப் பட்டு கிராமத்தில் ஏ. ரிஜிஸ்டரில் விஸ்தீரணங்கள் தாக்கலாயிருக்கிற விடர்வுள்ளநிலங்கள் விஷயமாய்கலெக்டராவதுசம்பந்தப்பட்ட டிவிஷனல் ஆபீஸராவது (விஸ்தீரணத்தை மாற்றுகிற) சங்கதியை பைசல்செய்யலாம்.

3. குயிட்ரெண்டு—ராஜதானி டவுனுக்குவெளியில் கிராமநத்தம் நிலத்தில் தவிர வீடுகட்டுவதற்காகவாவது தோட்டத்திற்காகவாவது எடுத் துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்குஅந்த நிலங்கள் சாகுபடிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் எந்தவிதிகள் பிரகாரம் தீர்வைஏற்படுத்தப்படுமோ சாதாரணமாய் அதேமாதிரிதீர்வை விதிக்கவேண்டியது. ஆகிலும் (நாளா வட்டத்தில் குடியேறி) விர்த்தியடைகின்ற பட்டணங்களில் புதிதாய் எடுத்துக்கொள்ளப்பட்ட இடங்களுக்கு 2400 சதுரஅடியுள்ள ஒரு பூமிக்கு 8-அணா மேனி அல்லது ஒரு ஏகராவுக்கு 10 ரூபா மேனி குயிட்ரெண்டு விதிக்கலாம். தூத்துக்குடியில் ஒரு மனைக்கு 1—ரூபாய் குயிட்ரெண்டு தீர்வை பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

2. (மேற்கண்டபடி எடுத்துக்கொள்ளப்படும்) நிலம் மிகவும் விலையு யர்ந்ததாய் இருக்கும்பட்சத்தில் நிலத்தை ஸ்வாதீனமாக்கிக் கொள்ள ஏற்

படுத்தியிருக்கப்பட்ட விதிகள் பிரகாரம் 25 வருஷத்திய குயிட்ரெண்டு தொகையை முதல் ஏலம் கூறும் விலையாகவைத்து நிலத்தை ஏலத்தில்விற்கலாம். கலெக்டருக்கு யுக்தமாய் தோன்றுகிறபடி பலான நிலத்தை ஏலத்தில்விற்கவேண்டு மென்பதும் விற்கக்கூடா தென்பதும் கலெக்டருடைய யுக்தானு சாரத்தைப்பொருத்தது. (இப்படி கலெக்டருடைய யுக்தானுஸாரம் செய்யும்படி ஏற்படுத்தியதற்கு) தாற்பரிய மென்னவென்றால் ஏககாலத்தில் ஒரே தொகையை செலுத்தி நிலத்தை வாங்கிக்கொள்ளக்கூடாமல்வருஷவாரியில்சொல்ப குயிட்ரென்ட்செலுத்திக்கொண்டுவரக்கூடிய ஏழை ஜனங்களுக்காக சிலநிலங்களை கலெக்டர்கள் விடுதியாய் வைத்திருக்க வேண்டுமென்பதுதான்.

3. மேலே சொன்ன விதிகள், கெவர்ன்மெண்டாரால் விடப்பட்டசன்னது மான்னியத்துக்காவது, அல்லது பிரத்தியேகமாய் உத்திரவாயிருக்கிற ஏற்பாடுபிரகாரம் விதிக்கப்பட்டிருக்கிற குயிட்ரெண்டுக்காவதுசம்மந்தப்பட்டவைகளல்ல. இந்த விஷயங்களில் ஒப்பந்தம்செய்துக்கொண்ட குயிட்ரெண்டு தீர்வையை விதிக்கவேண்டியது.

4. ராணுவஸ்தானங்களில் உள்ள நிலங்களுக்கு குயிட்ரெண்டு தீர்வைவிதிப்பதும் அவைகளை கணக்கில் தாக்கல்செய்வதும் அந்த இடத்திலிருக்கப்பட்ட ரெவினியூ உத்தியோகஸ்தருடைய வேலை. முற்காலத்தில் கொடுக்கப்பட்ட சன்னத்துகளின் ஷரத்துப்பிரகாரம் குயிட்ரென்ட் விதிக்க வேண்டியது. அந்தசன்னதில் கண்டவிஸ்தீரணத்திற்கு மேற்பட்டிருக்கிற நிலங்களுக்கும் சன்னதில்லாமல் அனுபவித்துவருகிற நிலங்களுக்கும் அந்த நிலங்களை அனுபவிப்போன் கிரமமானஸர்வே தீர்வைகொடுக்கவேண்டும். ஸர்வேசெய்யப்பட்டு சன்னதுபெற்றுக்கொண்டு அனுபவிக்கிறநிலங்களின் தீர்வையானது குயிட்ரெண்டை விடஜாஸ்தியாயிருக்குமாயின் ஸர்வே ரேட்டைக்குறைக்கலாம்.

5. வெளிஜில்லாக்களிலிருக்கப்பட்ட கோட்டைக்குள் குடித்தனக்காரர்கள் சொந்தத்துக்கு வீடுகட்டிக்கொண்டிருக்கிற நிலங்களுக்கு குயிட்ரெண்டு அல்லது தீர்வைவிதிக்கலாம். எந்தஜில்லாவில் கோட்டையிருக்கிறதோஅந்த ஜில்லாவிலுள்ள ரெவினியூ உத்தியோகஸ்தர்அந்ததீர்வையை வசூல்செய்து கணக்கில்தாக்கல் செய்துக்கொள்ளவேண்டியது.

4. புஞ்சை நிலத்தின்பேரில் விதிக்கப்படும் ஜலத்தீர்வை.— புஞ்சை வகுப்பில் சேர்ந்தநிலங்களுக்கு சர்க்கார் ஜலாதாரத்திலிருந்து

ஜலம் பாய்ச்சும் பக்ஷத்தில் அந்த நிலத்திற்கு ஸகஜமாயுள்ள தீர்வை யுடன்கூடஜலத்தீர்வையும்விதிக்கும்பொருட்டு அடியில் கண்டவிதிகள்ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. 2. முதல் 5—வரையிலுள்ளப்ரகரணங்கள் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, மலையாளம், தென்கன்னடம், நீலகிரி, இந்த ஜில்லாக்களுக்குச்சம்மந்தப்படவேண்டுமென்பது அவசியமல்ல. இந்தவிதிகளிலொன்றும்நஞ்சைநிலத்தில் சாகுபடிசெய்யப்பட்ட இரண்டாவதுபோகத் திற்குச்சம்பந்தம்பட்டதல்ல. நஞ்சை நிலத்தில்சாகுபடி செய்யப்படுகிற இரண்டாவது போகத்திற்கு பெரும்பான்மையாய் முதல்போகத்தீர்வையில் பேர்பாதியான தீர்வை வழக்கம்போல் விதிக்கப்படும்.

2. புஞ்சை நிலத்தில் நஞ்சைமாகுல் தற்காலம் சாகுபடிசெய்யப்பட்டால்இதற்குமுன் எவ்விதமான வழக்கங்களிலிருந்த போதிலும் அனுபந்தத் தில்கண்டாதாமாஷா பிரகாரம் அந்தபுஞ்சைநிலத்திற்கு கசர்த்தீர்வை விதிக் கப்படும். ஏற்றம் முதலாகிய உபாயங்களால் இறைத்து ஜலம் பாய்ச்சுகிற விஷயங்களில்ஜலத்தீர்வையில் கால்பங்குகுறைக்கப்படும்; ஆனுல்சர்க்கார் ஜலாதாரத்திலிருந்தும் அந்தநிலத்திற்குஜலம்நேராய்பாய்ந்திருக்கக்கூடாது. தென்னுர்க்காடு ஜில்லாவில் புதுஸெட்டில்மெண்டு செய்யப்படும் வரையில் மேற்கண்ட தீர்வைவீதங்கள் சம்பந்தப்படா. கோதாவரி கிருஷ்ணுஜில்லாக் களில் கழிமுகத்திற்கு எதிரிலுள்ள நிலங்களுக்கும், கர்நூல்-கடப்பை வாய்க் காலிலிருந்து ஜலம்பாய்ச்சப்படுகிற நிலங்களுக்கும் ஜலத்தீர்வை விதிப்பதற் காக விதிகள் அனுபந்தத்தில் கண்டிருக்கிறது.

3. ஒரு நிலத்தின் ஏதோஒருபாகத்திற்கு மாத்திரமாவ்து அல்லது சிலபாகங்களுக்காவது ஜலம்பாய்ச்சப்பட்டிருந்தால் எவ்வளவு விஸ்தீரணத் திற்கு ஜலம்பாய்ச்சப்படுகிறதோ அவ்வளவு விஸ்தீரணத்தை அனுசரித்து தீர்வைகணக்கிடவேண்டியது. ஆனுலும் அப்படி ஜலம்பாய்ச்சப்பட்ட பாக மானது 10 ஸெண்டுக்குக் குறைந்திருந்தால் அதற்குத்தீர்வை விதிப்பதா னது ஜமாபந்தி ஆபீஸரிட இஷ்டத்தைப்பொருத்தது.

4. ஜலத்தீர்வைக்குட்பட்ட 2—அல்லது 2-க்குமேற்பட்டவெவ்வேறு விதமான தானியங்களை ஒரேநிலத்தில் ஒரு குடியானவன் சாகுபடிசெய் தால் ஒவ்வொருவித மாகுலிலும் எவ்வளவு விஸ்தீரணம் சாகுபடி செய்யப் படுகிறதோ அந்த விஸ்தீரணத்திற்குத்தக்கபடி தீர்வை விதிக்கவேண்டும்.

5. பட்டாக்களில் தீர்வை ஏற்படாத நிலங்களை கூடசேர்த்து எழுதியிருந்தால் அப்பேர்க்கொத்த நிலங்களை ஜலத்தீர்வை விதிப்பதற்காக தீர்வை ஏற்பட்ட நிலங்களாகப்பாவித்து அவைகளுக்குத் தீர்வைவிதிக்க வேண்டியது.

6. விதை விதைக்கிறதற்காக புஞ்சைநிலங்களில் தளம் உண்டாக்கி சர்க்கார் ஆதாரத்தினுல் ஜலம்பாய்ச்சியிருந்தாலும் அதற்குத்தீர்வைபோடக் கூடாது.

7. சர்க்கார் ஜலாதாரங்களிலிருந்து ஊறிவரும் ஜலத்தினுல் புஞ்சை நிலத்தில்நஞ்சைசாகுபடிசெய்திருந்தால் அதுஜலத்தீர்வைக்குட்பட்டதல்ல. சாகுபடி செய்வதற்காக தேவையான ஜலம்பாய்ச்சிக்கொள்ள இஷ்டமா வென்று நிலக்காரனைக்கேட்கவேண்டியது. அப்படி அவன் ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஜலத்தீர்வை விதிக்கவேண்டியது. ஆனுல் ஜலம்வேண்டிய தில்லையென்றுசொன்னுல் ஊற்றுஜலம்பாய்கிறஅவன் நிலத்திற்கு யாதொரு தீர்வையும் விதிக்கக்கூடாது.

8. ஒருமாசூலை இரண்டுதரம் அறுவிடைசெய்த போதிலும் அதற்கு ஒரேதடவைதான் ஜலத்தீர்வை விதிக்கவேண்டியது. இதற்கு உதாரணம்-யாதொருகுடியானவன் சர்க்கார் ஜலாதாரத்தினுல் அவுரிபயிரிட்டுஒருவருஷத்தில் ஒருதரம் அறுவிடைசெய்து அடுத்தவருஷத்தில் இன்னும் ஒருதரம் அறுத்தால் ஒருவருஷத்து ஜலத்தீர்வைதான் விதிக்கவேண்டுமேயல்லாமல் இரண்டாவது வருஷத்திற்கு தீர்வை விதிக்கக்கூடாது.

9. கிராமாதிகாரி அல்லது ரெவினியூ இன்ஸ்பெக்டர் அல்லது அவருக்கு மேலானஅதிகாரி இவர்களில்யாதாவதொருவருடைய அனுமதியில்லாமலும் அல்லது ஜலாதாரங்கள் பப்ளிக்வொர்க்ஸ்டிபார்ட்மெண்டார் வசத்திலிருந்தால் பப்ளிக்வொர்க்ஸ்உத்தியோகஸ்தருடைய அனுமதியில்லாமலும் மேலேசொன்னவிதிகளையனுசரித்து சர்க்கார் ஜலத்தைப்பாய்ச்சிக்கொள்ளக் கூடாது.

10. உத்திரவில்லாமல் ஜலத்தைஉபயோகப்படுத்திக்கொள்ளுகிறவிஷயங்களிலெல்லாம் கடுமையான பொது நன்மை அபராதம் (அதாவது சாதாரணமாய் கொடுக்கவேண்டிய தீர்வையைவிட ஜாஸ்தி) விதிக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

11. ஏதோ ஒருகாலத்தில் மாத்திரம் ஜலம் போகிற சாதாரணமான காட்டாறுகளின் ஜலத்தை ஜலத்தீர்வையில்லாமல் இதுவரையிலும் போல் உபயோகித்துக் கொள்ளலாம்.

12. 6 முதல் **11** வரையிலுள்ள ப்ரகரணங்கள் எல்லாஜில்லாக்களுக்கும் ஜலம் பாய்ச்சப்படுகிற எல்லாவித நிலங்களுக்கும் சம்மந்தப்பட்டவை. ஆனுல் உத்திரவு பெற்றுக் கொள்ளாமலாவது பலான ஜலாதாரத்திலிருந்து ஜலத்தை உபயோகப்படுத்தக் கூடாதென்று தடுத்திருந்தும் அந்த ஜலாதாரத்திலிருந்து நஞ்சை நிலங்களுக்கும் புஞ்சைநிலங்களுக்கும் ஜலம் பாய்ச்சினுல் அதற்கு கடுமையான பொது நன்மை அபராதம் விதிக்கக்கூடும்.

5. **கேவர்ன்மெண்டு தோப்பு நிலங்களும் இந்தமாதிரியாய்வளர்ந்திருக்கிறமரங்களும்.**—யாதொரு நிபந்தனையும் குறிக்காமல் முன்னாலேயே நிலங்களை பட்டா கொடுத்தாவது இனமாக வாவது வீட்டுப்பின்புறத்துத் தோட்டமாகவாவது அடமானம் செய்திருக் கும் பக்ஷத்தில் அப்பேர்க்கொத்த நிலங்களிலிருக்கப்பட்ட மரங்களுக்குச் சொந்தக்காரர்கள் நிராக்ஷேபமான சுதந்தர பாத்தியதை யுள்ளவர்களாகை யால் சர்க்கார்உத்தியோகஸ்தர்களுடைய உத்திரவை முன்னடிபெற்றுக் கொள்ளாமலே அவர்கள் இஷ்டப்படி மரத்தை வெட்டவும் கிளை இலைமுத லியவற்றைகழிக்கவும் கூடும்.

2. 1-வது ப்ரகரணத்தில் சொல்லியபடி அடமானம் செய்யப்பட்ட பட்டா நிலத்தில் தற்காலமிருக்கிற எவ்வித மரத்துக்காவது, இனிமேல் உற்பத்தியாகக்கூடிய எவ்விதமரத்துக்காவதுயாதொரு தீர்வையும் விதிக்கப் படமாட்டாது. ஆனால் மலையாளம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஜில்லாக் களில் நிலத் தீர்வைக்குப் பதிலாக மரத்தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதே மாதிரியாகவே இனம் நிலங்களிலாவது வீட்டுப் பின்புறத்துத்தோட் டங்களிலாவதுவளருகிறமரங்களுக்குத்தீர்வைவிதிக்கப்படமாட்டாது. மரப் பட்டாபெற்றுக்கொண்டு அதில்கண்டமரத்தீர்வையை செலுத்திவருவதால் பட்டாதாரனுக்கு மரங்களின் தற்கால மாசூலை மாத்திரம் அனுபவிக்க பாத்தியதை உண்டு; அப்படிதற்கால மாசூலை மாத்திரம் அனுபவிக்க பாத்தி யதை யுள்ள விஷயங்களிலெல்லாம் மரங்களை வெட்டுவதற்கு பட்டா தாரனுக்கு பாத்தியதை யில்லையென்று பட்டாவில் கண்டெழுதவேண்டி யது. தவிரவும் நிலத்தை (அசல்) பட்டா கொடுத்து அடமானம் செய்யும் போது மரப்பட்டா ரத்துசெய்யப்படுமென்று இனிகொடுக்கப்படும் மரப் பட்டாக்களிலெல்லாம் ஒருஷரத்தும் கண்டெழுத வேண்டியது.

3. புஞ்சை நிலத்தில் மரங்களை நட்டிருந்து அவைகளுக்குச் சர்க்கார் ஜலாதாரத்திலிருந்து ஜலம்பாய்ச்சினால் புஞ்சை தீர்வையுடன் கூட வழக்க மானஜலத்தீர்வையும்விதிக்கப்படும். நஞ்சைநிலத்தில் தென்னை அல்லது இதரமரங்களை நட்டிருக்கும்பக்ஷத்தில், அந்த நிலம் ஒருபோகம் சாகுபடி செய்யக்கூடிய நிலமென்று கணக்கில்பதியப்பட்டிருந்தால் ஒருபோகத்தீர் வையும், அல்லது இருபோகம் சாகுபடிசெய்யக்கூடிய நிலமென்று பதியப் பட்டிருந்தால் அதற்கு இருபோகத்தீர்வையும் விதிக்கவேண்டியது. ஆகிலும் இருபோகம் சாகுபடி செய்யக்கூடிய நிலமென்று கணக்கில் பதிவாயிருக்கிற நிலத்தில் கூட மேலே சொன்ன விதமான மரங்கள் புதிதாய் நடப்பட்டால் வருஷத்தில் இருபோகம் நெல் சாகுபடிசெய்ய போதுமான காலம்வரை

யில் சர்க்கார் ஜலாதாரத்திலிருந்து ஜலம் பாய்ச்சி இருந்தாலொழிய, ஒரு போகத்தீர்வை மாத்திரம் விதிக்கப்டும்.

மேலே சொன்ன விதிகள் தோப்பில் மரங்களை நடுவதற்கு மாத்திரம் சம்மந்தப்பட்டவைகளேயல்லாமல்வெற்றிலைத்தோட்டங்களுக்குச்சம்மந்தப் பட்டவைகளல்ல; வெற்றிலைத் தோட்டத்தில் பயிரிடுவதை மாசூலாக பாவித்து அந்த வெற்றிலைத்தோட்டத்திற்கு இருபோகத்தீர்வை விதிக்கப் படவேண்டியது.

4. கலெக்டரானவர் யாதொருவரிட அனுபோகத்திலுமில்லாத கரம்பு நிலங்களைபட்டாகொடுத்து அடமானம் செய்யும்போது பட்டாதார னுக்கு ஸ்வதந்திரம்செய்வதற்கு முன்பாகஅந்த நிலத்தில் இங்கும் அங்கும் ஏதாவது மரங்களிருந்தால் அவைகளின் விலையை செலுத்தும்படி உத் திரவுசெய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. கலெக்டர் உத்திரவுபடி தீர்மானித்த மரத்தின் விலையை பாரஸ்டுஹேட்டில் வரவு வைத்துக்கொள்ள வேண்டியது.

5. இப்போது சர்க்கார் வசத்திலிருக்கிற தோப்புகளை, தோப்பு நில த்திற்குள்ளதரம் தீர்வையை செலுத்துகிற தென்கிற நிபந்தனைக்குட்பட்டு அடமானம் செய்துக்கொள்ள விண்ணப்பம் செய்துகொள்ளலாம். இந்த தோப்புகளை முதல்முதல் உற்பத்தி செய்தவர்களிட ஸந்ததியாரிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்க்கொற்றவர்களுக்கு மற்றவர்களைவிட மேலான பாத்தி யதை யுண்டு. இந்த விஷயத்திலும் மேற் பிரகரணத்தில் சொன்ன விஷயங் களிலும் தோப்புயிருக்கிற நிலத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டவுடனே பட் டாதாரனானவன் மரங்களுக்கு நிராக்ஷேபமான சுதந்தரமுள்ளவனாகிறான்.

6. கரம்பு நிலத்தில் மரங்கள் இருந்து அப்பேர்க்கொத்த மரங்களுக்கு மரப்பட்டா கொடுக்கப்பட்டிருந்து அந்த நிலத்தை தர்காஸ்து அடமானத் துக்காக(யாராவது) விண்ணப்பம்செய்துகொண்டால் மரப்பட்டா பாத்திய முள்ளவன் தரம் தீர்வைக்கு அந்த நிலத்தை அடமானம் செய்து கொள்ள இஷ்டமுள்ளவனாயிருந்தால் அவனுக்கே அடமானம் செய்யவேண் டியது; ஆனால் மரத்தீர்வையானது நிலத்தீர்வையை விட ஜாஸ்தியாய் இருக்கும் பக்ஷத்தில் தர்காஸ்த்தை அங்கீகரிக்கக்கூடாது.

7. தோப்புகளையாவது அல்லது இங்குமங்கும் சிதறடித்தாப்போல் மரங்கள் வளர்ந்து இருக்கிற நிலங்களையாவது பராதீனப்படுத்துவதில் கலெக்டர்கள் மிகவும் ஆலோசனைசெய்யவேண்டும். ஸ்வயமாயாவது மனுஷ னால்உண்டாக்கப்பட்டாவது வளர்ந்து வருகிற பனைமரங்கள் அல்லது பழம் கொடுக்கிற மரங்கள் அல்லது மரவேலைக்கு உபயோகப்படக்கூடிய உயர்ந்த

மரங்கள் இவைகளை சர்க்கார் வசத்தில் வைத்துக்கொள்வது பெரும்பாலும் உசிதமாயிருக்கிறது.

8. நாலாவது பிரகரணத்தில் கண்டபடி மரங்களின் மதிப்புவிலையை செலுத்தவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதானது அனவசியமாகக் கலெக்டர் அவர்களுக்கு தோன்றினல் அப்பேர்க்கொற்ற பிரத்தியேகவிஷயங்களில் அப்போது அந்தநிலத்திலிருக்கிற மரங்களினுடைய பலானுபவம் அதாவது இலைகள், கழித்துவிடும்கிளை முதலியவைகள், பழங்கள் இவைகளைமாத்திரம் அனுபவிக்க பட்டாதாரனுக்கு பாத்தியதை உண்டென்றும் மரத்தை வெட்டுவதற்கு பாத்தியதை இல்லையென்றும் ஷரத்துசண்டு கலெக்டர்கள் நிலப்பட்டா கொடுக்கலாம்.

9. நிலத்தீர்வை கொடுப்பதென்கிற நிபந்தனைக்குட்பட்டு தோப்புகளுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்படாமலும் அல்லது அப்படி விண்ணப்பம் செய்து கொள்வதின்பேரில் அடமானம் செய்வது யுக்தமில்லாதவிஷயத்திலும் தோப்புகளை குத்தகைக்காக விடக்கூடும், அல்லது மரங்களுக்கு சாதாரணமரத்தீர்வையையாவது விதிக்கக்கூடும். இப்படி செய்கிற விஷயங்களில் தற்காலத்திய மரப்பட்டாதாரன் பலானுபவத்திற்குமாத்திரம் பாத்தியதை யுள்ளவனே தவிர உத்திரவில்லாமல் மரத்தை வெட்ட அருகனல்ல.

10. தோப்புகளை குத்தகை எடுத்துக்கொள்ள சம்மதமுள்ளவர்கள் யாருமில்லாமற்போனல் கலெக்டர் மாசூலைச் சேகரித்து விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டியது.

11. இப்போதிருக்கிற ஏற்பாடு பிரகாரம் சிலசந்தர்ப்பங்களில் ஒருகுடியானவன் ஒருநிலத்திற்கு பட்டாதாரனுயும் மற்றொருவன் அந்த நிலத்தில் வளர்ந்து வருகிற மரங்களுக்குப் பட்டாதாரனுயுமிருக்கிற சில திருஷ்டாந்தங்களிருக்கின்றன. இந்தவிஷயங்களில்மரப்பட்டாதாரன் மரத்தீர்வையை நிலப்பட்டாதாரனிடம்செலுத்த சம்மதிக்காமல் போனல் மரப்பட்டா தாரனிடத்திலிருந்து மரத்தீர்வை சர்க்காரால் வசூல்செய்யப்பட்டு அந்தப்படி வசூலாகும் துகையை நிலப்பட்டாதார்ன் கொடுக்கவேண்டிய தீர்வையிலிருந்து கழித்துவிடப்படும். மரத்தீர்வையானது நிலத்தீர்வையைவிட ஜாஸ்தியாயிருக்கும்பக்ஷத்தில் ஜாஸ்திதுகை சர்காருக்குச் சேரும். ஆகிலும், இப்பேர்கொற்ற இரட்டிப்புப் பட்டாகொடுக்கிற அசௌகரியமான வழக்கத்தை நிறுத்திப்போட கலெக்டர்கள் முயற்சி செய்யவேண்டியது ; சவுகரியப்படும்போதெல்லாம் மரத்தின்சொந்தக்காரனுக்கு ரசீது கொடுக்க வேண்டுமேயல்லாமல் பட்டா கொடுக்கக் கூடாது.

12. பொது உபயோகத்திற்காகவும் சொந்த உபயோகத்திற்காக வும் புதிய தோப்புகள் உண்டாக்கவும் விறகுக்காக மரங்களை நடவும் இஷ்டமுள்ளவர்கள், அதற்காக ஏற்படுத்தியிருக்கும் விதிகளை அனுஸரித்து விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

13. பனைமரங்களும் ஈச்சமரங்களும் (ஸங்கியை) ஜாஸ்தியாய் வளர்ந்து வருகிற கரம்பு நிலத்தை ஆப்காரிமுதலாகிய கெவர்ன்மெண்டு உப யோகத்திற்காகவே ரிஸர்வ்செய்து வைக்கப்படும். இந்த மரங்களில், எதை யாவது வீட்டுவேலைக்காக குடியானவர்களுக்குக் கொடுத்து விட்டாவது விற்பனைசெய்து விட்டாவது இருந்தால் அவைகளுக்கு பதிலாக வேறுமரங் கள் நடும்படி கலெக்டர்கள் ஏற்பாடு செய்யவேண்டியது.

14. நிலத்திற்குள்ள தீர்வையை செலுத்தாமற் போகும் பக்ஷத்தில் நிலத்தையும் அதிலுள்ள மரங்களையும் பாக்கிக்காக விற்கப்படும். மரங்கள் மாத்திரம் தனியாய் விற்கப்படமாட்டாது. மரங்களுக்காக தனிப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிற ஏதோ அபூர்வமான விஷயங்களில் மாத்திரம் இந்த உத்திரவு மாற்றப்படும்.

15. பலான உபயோகத்திற்கென்று ரிஸர்வ் செய்யப்படாத நிலங்க ளிலிருந்து உற்பத்தியாகிற பாரஸ்டு டிபார்ட்மெண்டாருடைய மேல் விசா ரணைக்குட்பட்ட பாரஸ்டு மாசூலி லிருந்து வரும் ரெவினியூவை பாரஸ்டு என்ற ஹெட்டிலும் மற்ற ரெவினியூவை லாண்ட் ரெவினியூ மிஸலேனியஸ் என்கிற ஹெட்டிலும் தாக்கல் செய்ய வேண்டியது.

16. தெசபந்தம் இனாம்தார் தங்களுக்குச் சொந்தமான குளக்கரை யிலிருக்கப்பட்ட மரங்களை யனுபவித்து வருவது வழக்கமாயிருக்கும் பக்ஷத் தில் அப்படியே அனுபவித்துவரலாம்.

17. தெசபந்தம் இனாம்தார்களுடைய குளக்கரையில் வளர்கிற மரங்கள் இனாம் தார்களுக்குச்சொந்தமானவை. குளத்தை ஒழுங்கில் வைத்தி ருப்பதுஅவர்களிடகடமை; கெவர்ன்மெண்டாருக்கு அப்பேர்க்கொற்றமரங் களில் யாதொரு பாத்தியதையுமில்லை.

18. பாரஸ்டு டிபார்ட்மெண்ட் அதிகாரத்திற்காவது அல்லது மேல் விசாரணைக்காவது உட்பட்டமரங்கள், அல்லதுதோப்புகள் விஷயமாய் கன் ஸர்வேடரை ஆலோசியாமல் பிரவேசிக்கக்கூடாது.

6. பொது உபயோகத்திற்காகவும் சொந்த உபயோகத்திற்கா கவும் மரங்களை நடுவது.—(1) பொதுஜன உபயோகத்திற்காகவும் சௌக்கியத்திற்காகவும் தோப்புகள் உண்டாக்க இஷ்டமுள்ளவர்கள் முத வில் டிவிஷனல் ஆபீசருக்குத் தெரிவித்துக்கொண்டு அவருடைய அனும

தியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. அவர்கள் அப்படிச் செய்யாமற் போகும் பக்ஷத்தில் அவர்கள் சொந்த உபயோகத்திற்காக நடும் தோப்புகளுக்கு என்ன தீர்வை விதிக்கப்படக்கூடியதோ அதே தீர்வை விதிக்கப்படும். மேல்கண்ட பிரகாரம் கொடுத்துக்கொள்ளப்படுகிற விண்ணப்பங்களை ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்து வைத்துக்கொள்ள வேண்டியது. கலெக்ட்டரால் அங்கீகரிக்கப்பட்ட இடங்களிலாவது அல்லது ரஸ்தாக்களின் பக்கத்திலாவது ஒரு சத்திரத்திற் கருகாமையிலாவது அல்லது ஜனங்கள் வழக்கமாய் சேரக்கூடிய இடத்திற்குச்சமீபமாயாவது, பொது உபயோகங்களுக்கென்ருவது சவுக்கியத்திற் கென்ருவது அல்லது வேறுவிதமாய் ஜனங்களுக்கு உபயோகப்பட வேண்டுமென்ருவது, பழந்தரும் மரங்களையாவது மரசாமான் வேலைக்கு உபயோகப்படும் மரங்களையாவது அல்லது நிழல்தரும் மரங்களையாவது முன்னடியாக அனுமதி பெற்றுக் கொண்டு நட்டு தோப்பு உண்டாக்கலாம்; அப்படி உண்டாக்கின வர்களுக்கு நேரிட்ட செலவுக்கும் அவர்கள்எடுத்துக்கொண்ட சிரமத்திற்கும்பிரதிபலனுக தோப்பிலுள்ள மரங்கள் முதிரும்வரையில் அந்த நிலத்தை தீர்வையில்லாமல் பயிரிட்டுக்கொள்ள உத்திரவு கொடுக்கப்படும். மேல்கணட மரங்கள் பழந்தருமரங்களாயிருந்து பழம்கொடுக்கக்கூடிய காலம்வந்துவிட்டால் அது எவ்விதவரிக்கும் உட்படாத பொதுத்தோப்பு என்று கணக்கில் பதியப்படும்; சத்திரத்தைப் பரிபாலனை செய்வதற்கோ, ரஸ்தாவைப் பழுது பார்ப்பதற்கோ அல்லது வேறேபொது உபயோகத்திற்கோ பிரயோஜனப்படும்படி உத்தேசித்து நிலம் வாங்கிக்கொள்ளப்பட்டிருந்தால் அந்தகாரியங்களுக்கு பிரயோஜனப்படுத்தும் படியாய் ஷை பழந்தரும் மரத்தின் மாசூலை நட்டவனுக்கு விட்டுவிடப்படும்; மேலே சொன்ன உபயோகத்திற்கென்று கொடுக்கப்படுகிற நிலங்கள் கரம்பு நிலங்களாகவே இருக்கவேண்டும். ஆனல் ஏதோ சில ஸந்தர்ப்பங்களை யிட்டு செய்கால் நிலத்தையும் (அதாவது சாகுபடி செய்யக்கூடிய நிலத்தையும்) கொடுக்கலாம்.

2. ஜில்லா அதிகாரிகள் அங்கீகரிக்கக்கூடிய மாதிரியாக ரஸ்தாவின் பக்கமாய் நடப்பட்டிருக்கிற மரங்களின் மாசூலை, மரங்களை நட்டஜனங்களாவது அல்லது (மரங்களை நட்ட) கிராமத்தாராவது யாதொரு தீர்வையுமில்லாமல் அனுபவித்துக்கொள்ளக் கூடும்.

3. தங்கள் சொந்த உபயோகத்திற்காக தோப்புகளை (விறகுக்காக மரங்களை நட்டு தோப்பு உண்டாக்குவதும் இதில் சம்மந்தப்பட்டது) உண்டாக்க வேண்டுமென்று இஷ்டப்பட்டவர்களுக்கு அதற்காக நிலம் விடப்படும். அந்த நிலத்தைப் பயிரிட்டாலும் பயிரிடாமற்போனுலும் 20 வருஷம் வரையில் அந்தநிலத்திற்குத் தீர்வை கிடையாது. அந்த 20 வருஷகாலமான

பிறகுநிலம் செழிப்பில்லாமல் தரிசாயிருக்கிறதென்கிறகாரணத்தையோசித்து பிரத்தியேகமான தீர்வை ஏற்படுத்தப்பட்டாலொழிய அந்தநிலத்திற்குள்ள பூராதீர்வையும் விதிக்கப்படும். இந்தநிபந்தனை பிரகாரம்கொடுக்கப்படும் நில மானது 10 வருஷகாலம் வரையில் கரம்பு நிலமாக யிருந்திருக்கவேண்டும். செய்கால் நிலம் அல்லது வழக்கமாய் சாகுபடி செய்யக் கூடியநிலத்தில் தோப்புகள் உண்டாக்கினல் அப்படி உபயோகப்படுத்தப்பட்ட நிலத்தை சாகுபடி செய்தாலும் செய்யாமற்போனாலும் மரங்கள் நடப்பட்டது முதல் அந்நிலத்திற்குப் பூராதீர்வையேவிதிக்கப்படும். அப்படிக்கில்லாமல் பின்னும் குடிகளுக்கு அனுகூலமான ஏற்பாடுகள் செய்விக்கத் தகுந்த காரணங்கள் இருக்கும் பக்ஷத்தில் கலெக்டர்கள் போர்ட்டாருக்கு அவைகளைத் தெரி வித்துக் கொள்ள யாதொரு ஆக்ஷேபணையு மில்லை.

4. மேலே சொன்ன விதிகளை யனுஸரித்து தீர்வை கொடுக்கவேண்டி யிராத தோப்பு நிலங்களில் சர்க்கார் ஜலத்தைக்கொண்டு நஞ்சை மாகுல் பயிரிடப்பட்டால் அதற்கு ஜலத்தீர்வை விதிக்கப்படும்.

5. செய்கால் நிலத்தில் இனிமேல் *தனித்த மரங்கள் நடுவதாயிருந் தால் அந்த மரங்களின் மாகூலை அந்த நிலத்தைஎவன் சாகுபடி செய்கிறானோ அவன் தீர்வை யில்லாமல் அனுபவித்துக்கொள்ளலாம். ஆகிலும் நிலத்தை ஒருவரும் அனுபவிக்காமல் கைவிட்டுவிட்டால் அதிலுள்ள மரங்கள் மேற்சொன்ன (4 வது) ஸ்டான்டிங்கு ஆர்டரில் கண்ட விதிகளுக்குட்பட் டவைகளாகும்.

6. மேற்சொன்ன விதிகளை யனுஸரித்து நிலம்பெற்றுக்கொள்பவர் கள் பிற்பாடு தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையின் ஷரத்துப் பிரகாரம் நடக்கத் தப்பிப்போனல் தங்களுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிற கவுல் அடமானத்தை இழந்து விடுவார்கள். தோப்புகளை பாதுகா ர்க்க தப்பிப்போகும்பக்ஷத்தில் முழுநிலத்திற்குரிய பூருதீர்வையும் செலுத் துவதற்காக அவர்கள் ஜாமீன் கொடுக்கவேண்டும். ஜாமீன் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்துக்கொள்வது பார்ட்டிகளின் இஷ்டத்தைப் பொறுத்ததாயி ருக்கும்பக்ஷத்தில் சர்க்கார் சிலவில் ரிஜிஸ்டர்செய்யவேண்டியது; ஜாமீன்பத் திரங்கள் ரிஜிஸ்டர் செய்வது கட்டாயமானதாயிருக்கும் பக்ஷத்தில் நிலம் எவனுக்கு அடமானம் செய்யப் படுகிறதோ அவனுடைய செலவில் ரிஜிஸ் டர்செய்யப்பட வேண்டும்.

7. மேற்கண்ட விதிகளை யனுஸரித்து நிலம்அடமானம் பெற்றவர்கள் பிரதிவருஷத்திலும் மொத்த விஸ்தீர்ணத்தில் அதமபக்ஷம்-ஐந்தில் ஒரு

* தனித்தமரங்கள்என்றால் தோப்புஉண்டாக்கவேணுமென்கிறஎண்ண மில்லாமல் இங்குமங்கும் சிலமரங்களை நடுகிறது.

பாகத்திலாவது மரங்களை நட்டு அம்மாதிரியாக பூருவிஸ்தீரணத்திலும்-5-வருஷத்திற்குள் மரங்கள் நட்டாக வேண்டியது. இந்த கட்டளையை தவறினால் மேல்பிரகரணத்தில் கண்டபடி நிலம் அவர்களிட மிருந்து திரும்பி பெற்றுக்கொள்ளப்படும். நிலம் நல்ல எண்ணத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும் சாகுபடிசெய்வதற்கல்லாமல் தோப்பு உண்டாக்குவதற்காகத் தான்பிரயோஜனப் படுத்தப் படுகிறதென்றும்,மரங்களை நடும்மாதிரியினாலும் ஒருஏகராவுக்கு நடப்பட்டமரங்களின் ஸங்கியையினாலும் ஒருமரத்துக்கொரு மரம் இடம் விட்டு நடும் மாதிரியினாலும், கலெக்டருக்குத் திருப்திகரமாய் ஏற்படவேண்டியது.

8. மலையாளம், தென்கன்னடம் அல்லது இவைகளைப்போன்ற பிரத்தியேகமான அமைப்புள்ள ஜில்லாக்களிலும் மேல்கண்ட விதிகளைப் பிரயோஜனப்படுத்தும்பொருட்டு அவ்விதிகளில் எவ்விதமான தித்துப்பாடாவது செய்துக்கொள்ள வேண்டியதாயிருந்தால் அப்படி செய்ய போர்டாருக்கு அதிகாரமுண்டு.

7. சொந்தச் செலவில் வெட்டிக் கொள்ளப் பட்டிருக்கும் கிணறுகள்.—சொந்தச் செலவில் கிணறுகள் வெட்டி அவைகளிலிருந்து ஜலம் பாய்ச்சி சாகுபடிசெய்கிற நிலங்களின் தீர்வை, ஜில்லா ஒட்டுக்கும் புதுதீர்வை வீதம் ஏற்படுவதாயிருந்தாலொழிய, ஒருபொழுதும் ஜாஸ்தி செய்யப்பட மாட்டா தென்றும் அப்படி புதுதீர்வை ஏற்படுத்துகிறதாயிருந்தாலும் நிலங்களில் கிணறுகள் வெட்டியிருந்து அவைகளிலிருந்து ஜலம் பாய்ச்சுவதனால் நிலத்தை அதிக விலைபொறுமானதாய்ச் செய்திருந்தால் அதைப்பற்றி நிமித்திய மில்லாமலே அப்படிப்பட்ட நிலங்களின் தீர்வை மாற்றுதல் செய்யப்படுமென்றும் பயிரிடும் குடிகள் ஸ்பஷ்டமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது.

2. கிணறு முழுகுவதாய் உத்தேசித்தால் அதைப்பற்றிகலெக்டருக்கு முன்னாடி தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை; கணக்கனானவன் தன்னுடைய கணக்குகளில் கிணறு வெட்டுகிற சங்கதியைப்பதிவு செய்துக் கொண்டு கலெக்டராபீஸில் பதிவுக்காக இத்தனை கிணறுகள் வெட்டப் பட்டதென்கிற ஒரு சரியான ஸ்டேட்மெண்டு தயாரித்துவருஷத்திற் கொருதரம் அனுப்பினாலே போதுமானது.

3. ஒருவனுடைய சொந்த நிலத்தில் மாத்திரம் கிணறு முழுகவேண்டும் என்கிற நிபந்தனை ஒன்று தவிர, கெவர்ன்மெண்டு ஜலாதாரத்திற்குச் சமீபத்தில் கிணறு முழுகக்கூடாதென்று ஏற்படுத்தியிருந்த நிபந்தனைகளை எல்லாம் கெவர்ன்மெண்டார்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

4. (சர்க்கார் ஜலாதராத்திற்கு எவ்வளவுதூரத்திலிருந்தபோதிலும்) சொந்த நிலத்தில் வெட்டப்பட்டாவது, 1884ஹு ஆகஸ்டுமீ 20வுக்கு முன்பு வெட்டப்பட்டாவது இருக்கிற கிணறுகளிலிருந்து ஜலம் பாய்ச்சப்படுகிற புஞ்சை நிலத்தில்பயிரிடும் தானியத்திற்குயாதொரு கசர்த்தீர்வையும் விதிக்கப்படமாட்டாது.

5. முதல் போகத்திலாவது இரண்டாம்போகத்திலாவது ஏரி முதலாகிய சர்க்கார் ஜலாதாரத்தில்கொஞ்சம் கூட ஜலமில்லாமல் இருந்து சொந்தக் கிணறுகளிலிருந்து மாத்திரம் ஜலம்பாய்ச்சியிருந்தால், அந்த நஞ்சைநிலத்திற்கு புஞ்சை தீர்வைதான்விதிக்கவேண்டும்; ஒருபோகநிலத்திலாவது இருபோகநிலத்திலாவது இருபோகம்சாகுபடிசெய்து அப்படிசாகுபடிசெய்வதில் ஏரிமுதலாகிய சர்க்கார் ஜலாதாரத்தில் ஜலமிருக்கிற எந்த காலத்திலாவது ஒருபோகமும் அப்படிசர்க்கார் ஜலாதாரத்தில் ஜலமில்லாமற்போகும்போது சொந்தக்கிணறுகளிலிருந்து ஜலம்பாய்ச்சி இரண்டாவது போகமும் பயிரிட்டால் அந்த நிலத்திற்கு ஒருபோக நஞ்சை தீர்வைதான் விதிக்கப்படும். மொத்தமாய்ந் தீர்வை (அதாவது கம்பவுண்ட்தீர்வை) செலுத்துவதாய் ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்பட்ட நஞ்சை நிலத்தில் வருஷத்தில் சர்கார் ஜலம் கொஞ்சமாவது பாய்ந்திருக்கும் பக்ஷத்தில் ஒப்பந்தம் பணணிக்கொண்டதீர்வை பூராவும் விதிக்கப்படும். மேலே பிரஸ்தாபித்த விஷயங்களில் தீர்வை ஏற்படுத்தும் விதமானது அடியில் கண்ட அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது.

	முதல் போகம்.	இரண்டாம் போகம்.	செலுத்தவேண்டிய தீர்வை.
ஒருபோக நிலம்.	சர்க்கார்ஜலம் பாய்ந்தது ...	சர்க்கார்ஜலம் பாயவில்லை.	ஒருபோக நஞ்சை தீர்வை.
	ஷை பாயவில்லை. ...	ஷை பாய்ந்தது. ...	ஷை
	ஷை	ஷை பாயவில்லை. ...	ஒருபோகப் புஞ்சை தீர்வை.

	முதல் போகம்.	இரண்டாம் போகம்.	செலுத்தவேண்டிய தீர்வை.
சாதாரண இரு போக நிலம்.	சர்க்கார்ஜலம் பாயவில்லை.	சர்க்கார்ஜலம் பாயவில்லை.	ஒருபோகபுஞ்சைத்தீர்வை.
	ஷை ...	ஷை ...	ஒருபோக நஞ்சைத் தீர்வை பிரத்தியேகமாய்விதிககப்பட்டிருக்கிற பக்ஷத்தில் அப்பேர்ப்பட்டதீர்வை; அப்படிக்கில்லாதபக்ஷத்தில்மொத்தம் இரு போகநஞ்சை நிலத்தீர்வையில் மூன்றில் இரண்டு பங்கு.
	சர்க்கார்ஜலம் பாயவில்லை.	ஷை பாய்ந்தது ...	ஷை
தீர்வை ஒப்பந்தம்பண்ணிக் கொண்ட(கம்பவுண்டு தீர்வை) இரு போக நிலம்.	சர்க்கார் ஜலம் பாய வில்லை.	சர்க்கார் ஜலம்பாய்ந்தது.	ஒப்பந்தம் செய்துகொண்ட முழுத் தீர்வையும்
	ஷை பாய்ந்தது ...	ஷை பாயவில்லை ...	ஷை
	ஷை பாயவில்லை ...	ஷை ...	ஒருபோகபுஞ்சைத் தீர்வை.

விபரம்.—ஸெட்டில் மெண்டான ஜில்லாக்களில்புஞ்சை தீர்வையாவது எவ்வளவென்றால் பலான பூமியின் பலான கூட்டத்தில் பலான வகுப்பில் பலான விதத்திற்கு எவ்வளவு புஞ்சை தீர்வையோ அதே தீர்வை ; ஸெட்டில்மெண்டாகாத ஜில்லாக்களில் அந்த கிராமத்தில் விதிக்கப்பட்ட உயர்ந்த புஞ்சை தீர்வை.

6. நஞ்சை நிலங்களில் சொந்த கிணறுகள் இருந்தாலாவது, அல்லது அவ்வித சொந்த கிணறுகளிருந்து ஜலம் பாயக்கூடியதாய் இருந்தாலாவது, அப்பேர்ப்பட்ட நஞ்சை நிலத்தின் அனுபோகஸ்தர்களுக்கு சாவி கரம்பு களுக்காக சாதாரண விதிகள்பிரகாரம்செய்யக்கூடிய தீர்வைவஜாவுக்குள்ள பாத்தியதைகளுக்கு மேலே சொன்ன விதிகளினால் ஹானி உண்டாவதாக பாவிக்கப் படமாட்டாது.

7. ஜலம் இறைப்பதற்காக ஏற்றம் முதலான கைவேலைகளை கலெக்டருடைய உத்திரவு பெற்றுக்கொண்டு சர்க்கார் ஜலாதாரங்களின் கரைகளின் பேரில் உண்டாக்கிக் கொள்ளலாம். ஆனால் அந்த ஜலாதாரங்கள் ஸ்திரமாய் இருப்பதற்கு பாதகரமான யாதொரு அபாயமும் நேரிடாமல் இருக்க வேண்டியது. தவிரவும் இதரஜனங்களுடைய பாத்தியதைக்கும் ஹானி உண்டாகக் கூடாது; அப்படி இறைத்து ஜலம்பாய்ச்சுவதற்கு தீர்வை யென்ன வென்றால், ஜலம் பாய்ச்சப்பட்ட நிலத்தின் தாரதம்மியத்தை யனுசரித்து அந்த ஜில்லாவில் கிரமமாய் அதற்கு என்ன ஜலத்தீர்வை அல்லது தீர்வை ஜாஸ்தி ஏற்பட்டிருக்கிறதோ அதில் முக்கால்பங்கு.

8. **சொந்த செலவில் குளம் வெட்டிக் கொள்ளுதல்.**— (1) சர்க்காரில் குளம் வெட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளின் பிரயோஜனத்தை **அடையும் பொருட்டு** குளம் வெட்ட விருப்பமுள்ள யாதொரு குடியானவனானவன் முதலில் குளம்வெட்ட உத்திரவு கொடுக்கும்படியாய் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துக் கொள்ள வேண்டியது

2. கலெக்டரானவர் அப்பேர்க்கொற்ற விண்ணப்பத்தை வரப் பெற்றுக்கொண்டவுடனே அந்த இடத்தைப்போய் பார்வை யிடும்படிக்கும் உத்தேசித்திருக்கிற குளத்தை வெட்டுவதால் மற்ற சர்க்கார் அல்லது யாதாமொரு ஜனங்களிட குளம் முதலானவைகளுக்கு ஜலம்போவது தடைபடுமோ வென்றும் அல்லது பக்கத்திலிருக்கப்பட்ட நிலங்களின் சாகுபடிக்காவது அல்லது ஜலம்போகிற வாய்க்காலுக்காவது அல்லது ஜலப் பாய்ச்சலுக்காவது புகாராவுக்கு இடம் கொடுக்கும்படியாய் தடங்கலுண்டாகுமோ வென்றும் செம்மையாய் விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி தாலூக்கா தாசீல்தார்களுக்காவது அல்லது தகுந்த உத்தியோகஸ்தர்களுக்காவது உத்திரவு செய்யவேண்டியது.

3. இப்படி போய்ப்பார்த்து விசாரணை செய்ததின் பேரில் தற்காலம் இருக்கிற (ஜலாதார முதலானவை களுக்குள்ள) பாத்தியதைகளுக்கு யாதொரு தீங்கு முண்டாகாதென்று ஏற்பட்டால் (குளம் வெட்டும்) வேலையை ஆரம்பிக்கும்படி கலெக்டரானவர் விண்ணப்பதாரனுக்கு உத்திரவு கொடுக்க வேண்டும்.

4. ஜனஸ்ங்கியை மிகவும் சொல்பமாயிருக்கிற அதிதூரமுள்ள வெளிகளில் கலெக்டரிட அனுமதியில்லாமல் குடியானவர்கள் குளம் வெட்டும் வேலையை ஆரம்பிக்கும்படி நேரிடலாம். அப்பேர்க்கொத்த விஷயங்களில் அந்தக் குளத்தை வெட்டுவதற்கு விரோதமான புகாராக்கள் உண்டானாலும் அல்லது சர்க்காருக்குள்ள பாத்தியதைக்கு ஆடங்கமுள்ளதாய் ஏற்பட்டாலும் அந்தக் குளம் வெட்டுகிறவேலை நிறுத்திவிடப்படும்; ஆகிலும் அப்பேர்க் கொத்த ஆக்ஷேபணைகள் ஒன்று மிராத விஷயங்களில் முன்னாடியாய் குளம் வெட்டுவதற்கு அனுமதியைப்பெற்றுக்கொள்ளாமல்போனதினாலேயே குளம் வெட்டுகிறவன்தான்செய்யும் துரஸ்துக்காக சர்காரில் ஏற்படுத்தப்பட்ட விதிகள் பிரகாரம் உண்டான ஆதாயத்தை இழந்து விடமாட்டான்.

5. குளம் வெட்டும் யாதொரு குடியான்வன் குளத்தின் ஜலம் எவ்வளவு விஸ்தீரணம் பரவியிருக்கிறதோ அவ்வளவுவிஸ்தீரண முள்ளநிலத்தில் முன் பத்து வருஷத்திற்குள் எவ்வளவு பயிரிடப்பட்டதோ அவ்வளவுக்குள்ள தீர்வையைச்செலுத்தவேண்டியது; அப்படி குளத்தின் ஜலப்பரப்பினுடைய விஸ்தீரணத்திற்குட் பட்ட நிலங்களில் ஏதாவதுஇதராளுக்குச் சொந்தமாய் இருக்கும்பட்சத்தில் குளம் வெட்டுகிறவன் அவர்களுக்கு நிலத்திற்குப் பர்த்தி நிலம் கொடுத்தாவது அல்லது வேறு எந்த விதமாயாவது அவர்களிட சம்மதத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

6. சொந்த நிலவில் வெட்டப்பட்ட குளங்களின் வேலை முடிந்த பிற்பாடு அவைகள் பப்ளிக் வொர்கஸ் டிபார்ட் மெண்ட் உத்தியோகஸ்தரால் பார்வையிடப்படவேண்டும்; அப்படி பார்வை யிடப்பட்ட பிறகு அந்த உத்தியோகஸ்தரானவர் குளத்தின் கரையை பலப்படுத்த வேண்டு மென்றாவது அல்லதுபுதிய கலுங்கலாவது அல்லது முன்னிருந்த கலுங்கலை விட பெரிய கலுங்கலிருக்கவேண்டு மென்றாவது அல்லது வேறு விதமாய் பந்தோபஸ்து செய்யவேண்டும் என்றாவது தெரிவிக்கும் பக்ஷத்தில், அப்ப்டி பந்தோபஸ்துக்காக அவசியமென்று சொல்லப்பட்ட புதுவேலைகளை அந்தக்குளத்தின் சொந்தக்காரன் அல்லது சொந்தக்காரர்கள் நிறைவேற்றவேண்டியது. இதற்காக கலெக்டரானவர் போதுமான சாவுகாசம் கொடுக்கவேண்டும்; அந்த சாவுகாசத்திற்குள் குளத்தை பந்தோபஸ்து செய்யாமற்போனால் அந்த குளத்திலிருந்து ஜலம்பாய்கிற நிலங்களுக்குள்ள ஜலத்தீர்வையை மன்னிப்புசெய்திருந்ததை ரத்து செய்து விடப்படும்; அவசியமானால் கெவர்ண்மெண்டார் அந்தக்குளத்தை தங்கள் வசப்படுத்திக்கொண்டு தங்களிட அதிகாரத்திற்குட் படுத்திக்கொள்ளுவார்கள்.

7. பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரால் பார்வையிடப்பட்டு அவர் தாத்பரியத்தைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்றுகலெக்

டருக்குக் காரணம் தோன்றினாலொழிய: குளம் வெட்டுவதாய் உத்தேசித்திருக்கிற இடத்தை முன்னாடியாய் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் பார்வையிடவேண்டியது அவசியமில்லை.

8. பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டார் வசத்திலிருக்கிற சர்க்கார் ஜலாதாரத்திற்குச் சமீபத்தில் குடியானவர்கள் குளம் கிணறு முதலியவைகளைசொந்த செலவுசெய்து வெட்ட ஆரம்பிக்கும்விஷயங்களில், எந்த ரெவினியூ உத்தியோஸ்தரிட அனுமதி பெற்றுக்கொண்டு வேலையை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறதோ, அந்த ரெவினியூ உத்தியோகஸ்தரானவர் தற்காலமிருக்கிற பாத்தியதைகளுக்கு ஹானி உண்டாக்கக் கூடியதா வென்று பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரைக் கலந்து தெரிந்துக் கொள்ள வேண்டியது.

9. **சர்க்காருக்குச் சொந்தமானகுளத்தை சொந்தசெலவில் பழுதுபார்த்துக்கொள்வது**—5 வருஷத்திற்கு மேற்பட்ட காலமாய் பாழான ஸ்திதியிலிருந்துக் கொண்டும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் பழுதுபார்க்கஉத்தேசிக்காமலுமிருக்கப்பட்ட குளங்களை, அந்தக் குளங்களிலிருந்து ஜலம்பாயப்பட்ட ஆயக்கட்டு நிலத்திற்கு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேகமான தீர்வையைச்செலுத்திவிடுகிறதாக உடன்படிக்கை செய்துக்கொண்டு, ஜனங்கள் தங்கள் சொந்த செலவில் பழுதுபார்ககலாம். அல்லது அந்தக்குளத்திலிருந்து ஜலம் பாயப்பட்ட நிலங்களை கவுல் விதிகள் பிரகாரம் அடமானம் செய்துக் கொள்ளலாம். கவுல் அடமானத்திற்கு ஏற்படுத்த வேண்டிய உடன்படிக்கைகள் போர்ட்டாருக்குத் தெரிவித்து நிர்ணயிக்கப்படும்.

2. மழைபேய்ந்து ஜலம் வருகிற குளங்கள் விஷயமாய் கலெக்டர்கள் தாங்களே பழுதுபார்க்க உத்திரவு கொடுக்கலாம்; பிறகு பலான குளம் மழை பேய்ந்து ஜலம் வருகிற குளம் என்று பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாருக்குத் தெரிவிப்பதுடன் தம்மிட ஆபீஸில்குறித்த பாரப்பிரகாரம் ஒரு தஸ்தவேஜு தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டியது. மழை பேய்ந்து ஜலம் வருகிற குளமாவது என்னவென்றால், மழை பேய்ந்த பிற்பாடு சற்றேறக்குறைய எங்கும் பரவி யிருக்கிற சிறுவாய்க்கால் களிலிருந்தே முறைக்கு முறைவருகிற ஜலம்பாய்ந்து மழை பேய்ந்த கொஞ்ச நாள் வரையில்தான் ஜலம் தங்கி யிருக்கிற குளம்.

3. மற்ற விஷயங்களிலுத் தேசித்து இருக்கிற குளத்தைப் பழுது பார்ப்பதினால் கெவர்ன் மெண்டாரிட சுதந்தரங்களுக்காவது ஜனங்களிட சுதந்திரங்களுக்காவது பாதக முண்டாகுமோ வென்று முதலில் பப்ளிக்

வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரைக்கலந்து ஆலோசிக்க வேண்டியது. பிறகு அடியில் கண்ட வர்த்தமானங்களை கண்டு குறித்த பாரத்தில் ஒரு ரிபோர்ட் தயாரித்து அதை போர்ட்டாருக்கு அனுப்பி அவர்களிட அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியது.

i. குளம் எப்பொழுது வெட்டப்பட்டது; என்னவிதமாய் ஜலம் வருகிறது.

ii. எவ்வளவு காலமாய் பழுது பார்க்கப்படாமலிருக்கிறது.

iii. குளம் முதலில் வெட்டினதற்காகப் பிடித்த உத்தேச செலவு.

iv. கெவர்ண்மெண்டாரால் முன்னடி பத்து வருஷ காலமாய் அல்லது அதற்கு முந்தி பழுதுபார்ப்பதற்காக எவ்வளவு செலவிட்டிருக்கிறார்கள்.

v. குளம் பழுதில்லாமலிருந்த போது ஜலம்பாயும் ஆயக்கட்டின்விஸ்தீர்ணம்.

vi. குளம் பழுதில்லாமலிருந்தபோது அசல் சாகுபடியான சராசரி விஸ்தீரணம் எவ்வளவு.

vii. கெவர்ண்மெண்டாரின்ஜலாதாரங்களை துரஸ்து செய்யும் விஷயமாய் உத்தேசிப்பதில் சம்மந்தப்பட்டு இந்த குளம் தேவையாயிருக்குமா.

viii. அப்படி அந்தக்குளத்தைப் பழுது பார்ப்பதினால் எவ்வித பலனுண்டு.

ix. சொந்த செலவில் பழுதுபார்த்துக் கொள்ளுவதற்காகச்செய்யப்படும் விண்ணப்பத்திற்கு அந்த சங்கதியில்சம்மந்தப்பட்ட பேர்கள்எல்லோரும் ஒத்துக்கொண்டார்களா.

x. இது விஷயத்தில் எக்ஸிகியூடிவ் இஞ்சினீருடைய அபிப்பிராயம்

xi. கலெக்டருடைய அபிப்பிராயம்.

4. பழுதான குளத்தைச் சொந்த செலவில் பழுதுபார்ப்பதற்காக பொதுஜனங்களுக்கு விட்டுவிடுகிற விஷயங்களிலெல்லாம் கலெக்டர்கள்தீர ஆலோசனை செய்யவேண்டியது; மேல் கண்ட விண்ணப்பங்கள் பிரகாரம் அனுமதி அவசியம் வழக்கமாகக்கொடுத்துவர கலெக்டரானவர் கடமைப்பட்டவரல்ல. ஆனல், குளத்தைபழுது பார்ப்பதால் இனி ஒரு காலத்தில்சர்க்காருக்குப் பிரயோஜனப்படலாமென்கிற காரணத்தை முன்னிட்டே விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யவேண்டிதென்று இதனல் தாத்பரியமுமல்ல; ஆகிலும், குளத்திலிருந்துஜலம்பாயக் கூடிய விஸ்தீரணத்தில் கால்பாகம் இன்னும் நஞ்சை சாகுபடி செய்யக்கூடியதாயிருந்தால் யாதொருவிண்ணப்பத்

தையும் அங்கீகரித்துக்கொள்ளக்கூடாது. சர்க்காருக்குச் சொந்தமாயும் பாழ் ஸ்திதியிலிருக்கப்பட்டதுமான ஜலாதாரங்களைப் பழுது பார்க்க உத்திரவு கொடுக்கப்பட்ட பிறகு இதர மனிதருக்குள்ள சுதந்தரத்திற்கு தடங்கலுண்டாவதாய்த் தெரியவந்தால் ஷை உத்திரவு ரத்துசெய்யப்படுமென்றும்ரத்து செய்த பிற்பாடு முன்னாடி உத்திரவு கொடுத்ததினால் எதாவது நஷ்டம்நேரிட்டிருந்தால் அதற்கு கெவர்ன் மெண்டார் ஜவாப்பு தாரிகளாக மாட்டார்களென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துக் கொள்ள வேண்டியது.

5. 5 வருஷகாலமாய் பாழாயிருக்கிற குளங்களுக்கு பாழ்க்குளங்களென்று பெயர். ஒருகுளத்திலிருந்து தற்காலம் ஜலம்பாய்ந்து சாகுபடியாகிறவிஸ்தீரணமானது அந்தக் குளத்திலிருந்து சாதாரணமாய்ஜலம் பாயக்கூடியமொத்தவிஸ்தீரணத்திற்கு-100-க்கு 25-தாமாஷாவுக்குட்பட்டிருந்தால் அந்தக்குளத்தை பாழ்க்குளம் என்றுபாவிக்கக் கூடாது. ஜலம்பாயக் கூடிய விஸ்தீரணமென்றால் சாதாரண சந்தர்ப்பங்களில் அந்தக் குளத்திலிருந்து ஜலம் பாய்கிறஅஸல் விஸ்தீரணமேயல்லாமல் மொத்த ஆயக்கட்டுவிஸ்தீரணமல்ல. ஒருகுளத்தை (சொந்தசெலவில்) பழுதுபார்ப்பதற்காக கைவிட்டுவிடுவதினால் சர்க்கார்தீர்வைக்கு ஸ்திரமான நஷ்டமுண்டாகுமென்று பிரத்தியக்ஷமாய்த் தெரியவந்தால் அப்பேர்ப்பட்டகுளங்களைகெவர்ன்மெண்டாரிடஅனுமதியில்லாமல் கைவிடக்கூடாது.

6. மேற்சொன்ன விதிகளுக்குட்பட்டு குளங்களை பழுதுபார்ப்பதற்காகக்கொடுத்து விடும்போது, அந்தக்குளத்திலிருந்து ஜலம்பாய்கிற ஆயக்கட்டு நிலத்தில் நஞ்சை சாகுபடிசெய்தாலும் புஞ்சை சாகுபடிசெய்தாலும், ஷை ஆயக்கட்டுமுழுமைக்கும்எற்படுத்தப்பட்ட தீர்வையைசெலுத்தவேண்டும். ஆனால்ஆயக்கட்டுவிஸ்தீரணத்திற்கு மேற்பட்டுசாகுபடிசெய்யப்பட்டால் அதற்குஇவ்வித பிரத்தியேகமான தீர்வை விதிக்கப்படவேண்டியதில்லை.

7. சொந்தசெலவில்பழுதுபார்க்கிறதற்காக எவர்களுக்கு குளம்விடப்படுகிறதோ அவர்கள் குளத்தை பழுதுபார்த்த பிற்பாடு அதிலிருந்து ஜலம் பாயக்கூடிய விஸ்தீரணத்திற்குட்பட்ட நிலங்களைப் பயிரிட்டாலும் பயிரிடாமலிருந்தாலும், அந்த நிலங்களுக்குமுன்னாடிகுறைந்த தீர்வைவிதிக்கப்பட்டிருந்தாலும் கூடஅந்த நிலங்களின் மீது பிரத்தியேகமாய் எற்படுத்தப்பட்ட தீர்வையைச்செலுத்தவேண்டுமென்றும்அப்பேர்ப்பட்ட நிலங்களில் எதையாவது சர்க்கார் பாக்கிக்காக எலம்போடும்படி அவசியம் நேரிட்டால் மேலே சொல்லியபடிபழுது பார்க்கப்பட்டகுளத்தினுடைய ஜலத்தைப்பிரயோஜனப் படுத்திக்கொள்ளும் பாத்தியதையானது நிலத்தை யார்எலமெடுக்கிறானோ அவனைச்சேர்ந்து விடுமென்றும்தெரிவிக்கவேண்டியது. கலெக்டரானவர் குளத்தை ஒழுங்குபடுத்தப் போதுமான சாவுகாஸம் கொடுத்து ஒவ்

வொரு விஷயத்திலும் தம்மிட யுக்தானுஸாரம் பலானதேதி முதல் தீர்வை செலுத்தவேண்டியதென்று தீர்மானிக்கவேண்டியது.

8. ஒருகுளத்திலிருந்து ஜலம் பாய்கிற நிலங்களின் சொந்தக்காரர்கள் எல்லாரும் அந்தக்குளத்தைப பழுது பார்ப்பதற்கும் பிரத்யேகமாய் ஒப்பந்தம்பண்ணிக்கொண்ட (கம்பவுண்டு) தீர்வையைச் செலுத்துவதற்கும் சம்மதித்ததாக கவர்ண்மெண்டார்பாவிப்பார்களாகையால், அந்த குளத்தை பழுது பார்ப்பதை கிராமத்து குடிகள் ஒன்று சேர்ந்து செய்கிறார்களாவென்றாவது அல்லது யாதாவதொரு மனுஷனைக்கொண்டாவது அல்லது அதிக நபர்களைக்கொண்டாவது அல்லது அன்னியனைக் கொண்டாவது வேலை நடப்பிக்கிறார்களா வென்பதைப்பற்றியாவது கவர்ண்மெண்டாருக்கு யாதொரு நிமத்தியமுமில்லை. மற்ற ஏற்பாடுகளெல்லாம் குடிகள் தங்களுக்குள்ளே ஒத்து செய்துக் கொள்ளவேண்டியது.

9. இந்த ஆர்டர்பிரகாரம் பழுதுபார்ப்பதற்குவிடப்பட்ட குளத்தின் ஆயக்கட்டு நிலத்திற்குச் சொந்தமானவர்கள் போர்டாருடைய அனுமதியில்லாமல் (ஆயக்கட்டு நிலத்தை) ராஜிநாமாகொடுக்க (அதாவதுகைவிட)க் கூடாது.

10. **காட்டாறுகளிலிருந்தாவது சாதாரண மடுக்களிலிருந்தாவது ஜலம் பாய்கிற நிலங்கள்.**—சாதாரண மடுக்களையாவது காட்டாறுகளையாவது துரஸ்து செய்வதில் கெவர்ண் மெண்டார் சம்பந்தப்படாமலும் அவர்களுக்கு ஒரு செலவும் நேரிடாமலுமிருந்தால் அவ்வித ஜலாதாரங்களிலிருந்து ஜலம் பாய்வதினால் பலனடையப்படுகிறதென்கிற காரணத்தை முன்னிட்டுயாதொருநிலத்திற்குக் கிரமமாய் உண்டானதீர்வையைத்தவிர தீர்வை ஜாஸ்தி என்றாவது பசலிஜாஸ்தி என்றாவது இன்னும் எவ்விதமாயாவது சொல்லப்பட்ட வேறே யாதொரு தீர்வையும் விதிக்கப்படமாட்டாது. ஆனால் அப்பேர்ப் பட்ட ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்வதினால் யாதொரு சர்க்கார் குளம் முதலானவைகளுக்கு ஜலம்போவது தடைபடாமலும் குறைவுபடாமலும் இருக்கவேண்டும். தவிரவும் அப்பேர்ப்பட்ட ஜலாதாரங்களைவிருத்தி செய்யும் பொருட்டும்அவைகளினால் அதிக பலனடையும் பொருட்டும் எவ்வித வேலைகளையாவது இனி எப்போதாவது செய்வதற்கு சர்க்காருக்குள்ள பாத்தியதையானது மேலேசொன்னபடி தற்காலம் (காட்டாறுகளின்ஜலத்தின்) பிரயோஜனத்தை ஜனங்கள்அடைவதால் பாதிக்கப்படாமலிருக்கவேண்டியது. மேலும் காட்டாறுகளிலிருந்தாவது சாதாரண மடுக்களிலிருந்தாவது ஜலத்தைப்பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்பொருட்டு அணைக்கட்டு அல்லது ஆற்றின்உள்புறம்வாய்க்

கால் முதலானஸ்திரமான புதுவேலைகளைச்செய்ய ஒரு குடியானவன் ஆரம்பிக்குமுன்னமே பின்னால் வரும் விதிகளுக்கு உட்படவும் வேண்டியது.

2. மேலேசொல்லப்பட்ட மாதிரியான எதாவதொரு ஸ்திரமானவேலையைச் செய்ய இஷ்டமுள்ளயாதாவதொரு குடியானவன் தான் உத்தேசிக்கிற வேலை இன்னவிதமானதென்றும் அதினுடைய பரிமாணங்களையும் அதை எவ்விடத்தில் செய்ய உத்தேசித்திருக்கிறதோ அந்த இடத்தையும் விபரமாய்க்குறித்து விண்ணப்பமூலமாய் கலெக்டருடைய அனுமதியைக்கேட்டுக் கொள்ளவேண்டியது.

3. கலெக்டரானவர் அப்பேர்க்கொத்த விண்ணப்பத்தை வரப்பெற்றுக் கொண்டவுடனே அந்த இடத்தைப் போய்ப் பார்வையிடும்படிக்கும் உத்தேசித்திருக்கிற வேலையைச் செய்வதால் மற்ற சர்க்கார் அல்லது சொந்த ஏரி குளம் முதலானவைகளுக்கு ஜலம் போவதுதடை படுமோவென்றும்அல்லது பக்கத்திலிருக்கப்பட்ட நிலங்களின் சாகுபடியாவது ஜலம் போவதாவது அல்லது ஜலம் வருவதாவது புகாராவுக்கு இடம் கொடுக்கும்படியாய் தடை படுமோவென்றும் செம்மையாய் விசாரித்து ரிபோர்ட்செய்யும்படி தாலூக்கா தாசில்தாருக்காவது வேறே தகுந்த உத்தியோகஸ்தருக்காவது உத்திரவுசெய்யவேண்டியது.

4. இப்படிபோய்ப்பார்த்து விசாரணை செய்ததின் பேரில் தற்காலமிருக்கிறஜலாதார முதலானவைகளுக்கு யாதொரு தீங்கும் உண்டாகாதென்று ஏற்பட்டால் வேலையை ஆரம்பிக்கும்படி கலெக்டரானவர் விண்ணப்பதாரனுக்கு உத்திரவு கொடுக்கலாம்; ஆனால் இந்த உத்திரவுபிரகாரம், வேலைநடத்தப்படுமுன்னமேயாவது நடத்தப்படும்போதாவது அல்லது நடத்தப்பட்டபிற்பாடாவது, பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தரானவர் அந்தவேலையின் ப்ளான் முதலானவைகளை அங்கீகாரம் செய்வதற்கு உட்பட்டதாகும்.

5. பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டுஉத்தியோகஸ்தரானவர், இதர ஜலாதாரம்முதலானவைகள் பந்தோபஸ்தா யிருக்கும்பொருட்டு இந்த வேலையை பலப்படுத்த வேண்டுமென்றாவது வேறேவிதமாய் மாற்றிசெய்யவேண்டுமென்றாவது அல்லது விருத்தி செய்யவேணுமென்றாவது (உதாரணம்-ஜலம்வரத்துப்போக்குகளுக்கு ஆதாரமானகால்வாய் மதகுமுதலானவைகளை புதிதாயுண்டாக்குவது) தாத்பரியப்பட்டால் அப்படிஅவசியமென்று சொல்லப்பட்ட வேலையை கலெக்டரால் கொடுக்கப்படும்தக்க ஸாவுகாசத்திற்குள் சொந்தக்காரர்கள் செய்து முடிக்க வேண்டியது.

அப்படி குறித்த காலத்திற்குள் யாதொருகுடியானவன் அப்பேற்பட்ட துரஸ்தை செய்யாமல் அசிரத்தையா யிருக்கும் பக்ஷத்தில் அப்படி உபயோகித்துக் கொள்ளப்படும் ஜலத்திற்கு ஜலத்தீர்வை (அல்லது கசர்சார்ஜ்) விதிக்கப்படும். தவிரவும் அதுவரையில் செய்திருக்கிற முழுவேலையையும் (வேலை செய்தவனுக்குப்பிரதிபலன் செய்யாமலே) கெவர்ண்மெண்டார் தங்கள் வசப்படுத்திக் கொள்ளுவார்கள்.

6. உத்தேசித் திருக்கிற வேலையைச் செய்வதால் இதரகுடியானவர்களிட நிலங்களுக்கு ஏதாவது பாதகரம் நேரிடும்போலிருந்தால், அந்தவேலையைச் செய்கிறவன் வேலையை ஆரம்பிக்கஉத்திரவு கொடுக்கப்படும் முன்னமே, அப்பேற்பட்ட இதர குடியானவர்களிட சம்மதத்தை எழுத்து மூலமாய்ப் பெற்றுக்கொண்டு அதை ஆஜர் செய்யவேண்டியது; அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கும் அதற்குப் பணம் வசூல் செய்ய வேண்டியதற்கும் இதர குடியானவர்களிட சம்மதத்தை எழுத்து மூலமாய் ஆஜர் செய்யாமற் போனால் அந்தவேலையினால் அவர்களுக்கு (இதரகுடிகளுக்கு) உண்டாகும் பலனுக்காக அவர்களிடமிருந்து பணம்வசூல் செய்ய பாத்தியதை சொல்லிக்கொண்டால் அந்த பாத்தியதை ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

7. மேலே சொன்ன விதிகள் காட்டாறுகளுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டவைகளேதவிர ஆறுகளுக்கு சம்பந்தப்பட்டவைகளல்ல. ஆகிலும் கலெக்டராவது அல்லது டிவிஷனல் ஆபீஸாராவது பலான ஆறு "காட்டாறே யொழிய ஆறு அல்ல" வென்று எழுத்துமூலமாய்ப் பிரசித்தப்படுத்தியிருந்தாலொழிய யாதொரு ஆற்றையும் பெரியஆறல்ல காட்டாறுதான்என்று பாவிக்கக்கூடாது. ஆற்றுடன் சம்பந்தமாய் ஜலாதான்களைஉண்டாக்கிக் கொள்வதற்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களைப் பற்றி கலெக்டர் ரிபோர்ட் செய்வதின்பேரில் போர்டார் பைசல் செய்வார்கள்.

11. பொது உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும் நிலங்கள்.—பொது உபயோகத்திற்காக நிலத்தைவசப்படுத்திக் கொள்ளும்விஷயங்களில் 1870 ஞ் த்திய 10-வது ஆக்டைபிரயோகிக்கவேண்டுமா வேண்டியதில்லையா வென்பதைப்பற்றி கலெக்டரானவர்கள் முதலில் ஆலோசனைசெய்யவேண்டியது. இந்தசட்டத்தைப்பிரயோகித்து நிலத்தைக் கைப்பற்றிக்கொள்வதினால் கெவர்ண்மெண்டாருக்கு நிராக்ஷேபணையான பாத்தியதை உண்டாய்விடுகிறது. ஆனால்சர்க்கார் பாத்தியதைக்கு யாதொரு ஹானியில்லாமலும் நிலத்திற்கு சரசமான விலைகொடுத்து சீக்கிரத்தில் நிலத்தைக் கைப்பற்றிகொள்ளும் பொருட்டு (சட்டத்தை பிரயோகிக்காமலே)

வேறேஏற்பாடுசெய்துக்கொள்வது அதிகயுக்தமாயிருக்கிற சந்தர்ப்பங்களும் அடிக்கடிநேரிடலாம். பலானநிலத்திற்கு பலானவிலைபெற்றுக்கொண்டாவது அல்லது எழுத்துமூலமாய்சிலஉடன்படிக்கையின்மேலாவது நிலத்தைக் கைவிடயாதொரு சொந்தக்காரனாவது சம்மதிக்காமற் போகும் விஷயங்களில் சட்டத்தைப்பிரயோகிக்கவேண்டியது.

2. எந்த டிபார்ட்மெண்டாருக்கு நிலம்வேண்டியிருந்தபோதிலும் அந்தநிலத்தை விலைக்குவாங்க கெவர்ன்மெண்டாருடைய அனுமதியைக்கோரிக்கொள்ளும்பொருட்டு அந்தநிலத்தைப்போய் பார்வையிடுவது ரிவினியூ அதிகாரிகளைச் சேர்ந்தது. நிலமிருக்கப்பட்ட இடத்தைப்போய் பார்வையிடும்பொருட்டு அவசியம்நேரிட்டாலும் அல்லது கலெக்டர் கோறிக்கொள்ளப்பட்டாலும் அந்தகலெக்ட்டர்தாமேநேராயாவது பார்வையிடவேண்டியது, அல்லது தமகருக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரைக்கொண்டாவது பார்வையிடச்செய்யவேண்டியது. ரெவினியூடிபார்ட்மெண்டுதவிர வேறேஎந்த டிபார்ட்மெண்டுக்கு நிலம்வேண்டியிருந்தாலும் அந்தடிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரொருவர் (நிலத்தைப்போய்பார்வையிடும்பொழுது) ரெவினியூஉத்தியோகஸ்தர்களுடன் தாமும்கூடபோகவேண்டியது. சட்டத்தைப்பிரயோகிக்கிற விஷயத்தில்முன்னாடி சிலநடவடிக்கைகளை நடத்தவேண்டியது அவசியம். பலானநிலத்தைப்போய் பார்வையிட்டவுடனே அந்தநிலத்தில் முளையடிக்கவேண்டியது. பிறகு அந்தநிலத்தின் நிலமையும் அதின் விஸ்தீர்ணம் முதலானவைகளையும் கண்டு குறித்தபிரகாரம் ஒருஸ்டேட்மெண்டை கலெக்டரானவர் தயார்செய்வித்து அதில் தாம் கையெழுத்துசெய்து பின்னிட்டு நடவடிக்கைகள் நடத்தவேண்டியதற்கு கெவர்ன்மெண்டாருடைய உத்திரவைப்பெற்றுக்கொள்ளும்பொருட்டு, எந்த டிபார்ட்மெண்டுக்கு நிலம்வேண்டியிருக்கிறதோ அந்தடிபார்ட்மெண்டுக்கு அந்தஸ்டேட்மெண்டை அனுப்பவேண்டியது. அந்த ஸ்டேட்மெண்டில் பதியவேண்டிய அம்சங்கள், அவசியமான வரையில், கிராமநவுக்கர்களிட மிருந்து தெரிந்துக்கொள்ளக்கூடிய சங்கதிகளை அனுசரித்தவைகளாயிருக்கவேண்டியது. அப்படிகிராமநவுக்கர்களால் தெரிவிக்கப்படுகிற சங்கதிகள் சரியானவைகள் என்பதற்கு அவர்களே (கிராமநவுக்கர்களே) ஜவாப்தாரிகளாகிறார்கள். ரிஜிஸ்டரில் தாக்கலான ரெவினியூவயலின் ஏதோஒரு பாகம்மாத்திரம் தேவையாயிருக்கும் பக்ஷத்தில் அந்தஸ்டேட்மெண்டில் அப்படியே கண்டெழுதவேண்டியது.

3. ஸ்டேட்மெண்டில்மதிப்பு தாக்கல் செய்வதற்காக நிலம் இவ்வளவுபொறுமானதென்று மதிப்பிடுவதில் பின்னால்வரும் அம்சங்களைக் கலெக்டர்கள் கவனித்துநடக்கவேண்டியது பிரஸ்தாபத்திலிருக்கப்பட்டநிலத்தின் விலையைமதிப்பிடுவது அசாத்தியமாயிருக்கும்போது பக்கத்திலுள்ள அம்மா

திரிநிலங்களின் ஊர்விலையை அனுஸரித்து மதிப்பிடவேண்டியது; இந்த மாதிரி ஊர்விலையைத்தெரிந்துகொள்ளக் கூடாமையாயிருக்கும்பக்ஷத்தில் ரயத்துவாரிநிலங்களின்விஷயமாய்ப்பார்த்திபணம் (கம்பென்சேஷன்) கொடுப்பதற்காக, அந்தநிலங்களின் மதிப்பானது அந்த நிலங்களின் தீர்வைக்கு 15—பங்குள்ளதாகக் கணக்கிடப்படவேண்டியது; ஆனால் அந்தநிலத்தை ஸ்திரமாய்விருத்தி செய்திருந்தால் செலவுபோக அந்தநிலத்திலிருந்துவரும் வரும்படிக்கு 15—பங்குள்ளதாகவும்கம்பென்சேஷன் துகைகணக்கிடப்படும். இனம் நிலங்களாவது ஜமீன்நிலங்களாவது எடுத்துக் கொள்ளப்பட்டால் அப்படிஎடுத்துக்கொள்ளப்பட்டநிலங்களின்மதிப்பானது, ஜமீன்தாரனாவது இனம்தாரனாவது சம்பந்தப்பட்டவரையில், அடியிற்கண்டவிதமாய்க் கணக்கிடப்படும். அந்தநிலத்துக்கு ஸர்வே அல்லது பைமாஷ்தீர்வை ஏற்பட்டிருக்கும்பக்ஷத்தில் அப்பேர்ப்பட்டதீர்வைக்கும் அந்தநிலத்திற்குள்ள விகிதப்பிரகாரம் ஏற்பட்ட பைஷ்கஷ் அல்லது குயிட்ரெண்ட்தீர்வைக்குமுள்ளவித்தியாசத்திற்கு 15—பங்குள்ள தாயும், அப்படி அந்தநிலத்திற்கு (ஸர்வே அல்லது பைமாஷ்)தீர்வை ஏற்படாமலிருக்கும் பக்ஷத்தில் அந்தநிலத்தின் குத்தகை வருமானத்திற்கும் பைஷ்கஷ் அல்லது குயிட்ரெண்டு தீர்வைக்குமுள்ள வித்தியாசத்திற்கு15—பங்குள்ளதாயும் கணக்கிடவேண்டியது; ஸர்வே அல்லது பைமாஷ்தீர்வை ஏற்பட்டிருக்கிறமுதலில் பிரஸ்தாபித் தவிஷயத்தில் ஜமீன்தாருக்காவது இனம்தாருக்காவது அனுபவவுரிமை யிருக்கும்பக்ஷத்தில் அந்தபாத்தியதைக்குள்ள கம்பென்சேஷனை அந்தநிலத்தின்தீர்வைக்கு 15—பங்குள்ளதாகத் தனியாய் கணக்கிடவேண்டியது; பைமாஷ்தீர்வை ஏற்படாத பின்சொன்னவிஷயத்தில் அனுபவவுரிமைக்குள்ள வருமானமானது குத்தகைவருமானத்தில் சேர்ந்திருக்குமாகையால் அதற்காக வேறே கம்பென்சேஷன் கொடுக்கும்பொருட்டு கணக்கிடவேண்டிய அவசியமில்லை. குத்தகைக்குப்பயிரிடுகிறஒருபுறக்குடிக்கு அனுபவவுரிமையிருக்கும்பட்சத்தில் பிரத்தியேகமாய் சேரவேண்டிய கம்பென்சேஷனை, அந்த நிலத்திற்குதீர்வைஏற்பட்டிருக்கும்பட்சத்தில் அந்ததீர்வைக்கு15பங்குள்ளதாகவும் தீர்வை ஏற்படாமலிருக்கும்பட்சத்தில் ஜமீன்தாருக்காவது இனம்தாருக்காவது அவன் (புறக்குடி) கொடுக்கிறகுத்தகைக்கு 15—பங்குள்ளதாகவும் கணக்கிடவேண்டும். மேல்கண்டபிரகாரம் கணக்கிட்டு கம்பென்சேஷனைக்கொடுப்பதோடுங்கூட ஜமீன்தாரர்களும் இனம்தார்களும் செலுத்தவேண்டியபைஷ்கஷ் அல்லது குயிட்ரெண்டில் குறைவுசெய்துகொள்ளவும் அவர்களுக்குபாத்தியதையுண்டு; அப்படிகுறைவு செய்யப்பட வேண்டிய துகைஎவ்வளவென்றால், வசப்படுத்திக்கொள்ளப்பட்ட நிலங்களின் பூருபைஷ்கஷ் அல்லதுகுயிட்ரெண்டுக்கும்அந்தஎஸ்டேட்டின் மொத்ததீர்வைக்கும் என்ன தாரதம்மியமுண்டோ அதே தாரதம்மியமானது வசப்படுத்திக்கொள்ளப்பட்ட நிலங்க

ளிலிருந்து வரும்குத்தகைவரும்படிக்கும் குறைக்கப்படவேண்டிய தொகைக்கும் இருக்கவேண்டியது.

4. ஜமீன்களிலும் இனும்கிராமங்களிலுமுள்ள கரம்புநிலங்கள் பொது உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டால் அந்தநிலத்திற்கு உத்தேச குத்தகை வருமானத்தின் விலையை அனுஸரித்து அந்தநிலத்திற்கு கம்பென்சேஷனும்அதற்குள்ள பைஷ்கஷ்அல்லது குயிட்ரென்ட்தீர்வையும் கணக்கிடவேண்டியது.மேற்கண்டகுத்தகைவருமானத்தினுடையதற்காலவிலையெப்படிநிர்ணயிக்கப்படவேண்டியதென்றால், சாகுபடியாயிருக்கிறஅதே மாதிரிநிலங்களுக்குஎன்னகுத்தகைவரும்படிவருமோ அதையனுஸரித்து குத்தகை இவ்வளவுவருமென்று மதிப்புபோட்டபிறகு அனுபந்தத்தில்2வது கலத்தில்கண்டதாமாஷாப்பிரகாரம் கணக்கிடவேண்டியது. இந்த தாமாஷாவானது எப்படிகணக்கிடப்பட்டதென்றால் பொதுஉபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டநிலங்கள் சுமார் இத்தனைவருஷத்திற்குள் சாபகுடி செய்யப்படக்கூடுமென்கிறதைஅனுஸரித்துகணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகிலும் இத்தனைவருஷத்திற்குள் சாகுபடியாகக்கூடியதென்றுதிருத்தமாய்உத்தேசிக்கக்கூடாமையாய்ப்போனால்,குத்தகைவருமானத்தினுடைய உத்தேச விலையில் பேர்பாதியாக குத்தகைவருமானத்தின்தற்காலவிலையைக்கணக்கிடலாம்.

5. மேலே பிரஸ்தாபித்த ஸ்டேட்மெண்டுடன், நிலத்தின்சொந்தக்காரராவதுஅல்லது அனுபோகஸ்தர்களாவது ஏதாவதுஆக்ஷேபணைசெய்திருக்கும்பட்சத்தில் அவைகள்விஷயமாய் கலெக்டர்கள்ஏதாவது ஷெருக்கள் செய்திருந்தால் அந்தஷெருக்களைக் கண்ட ஒருஸ்டேட்மெண்டையும்அனுப்பவேண்டியது.

6. (2 வது பாராவில்கண்டபடி) பின்னிட்டு நடவடிக்கைநடத்த வேண்டியதற்கு வேண்டியஉத்திரவுகளைப்பெற்றுக்கொண்டபிற்பாடு கலெக்டராவது அல்லது இதுவிஷயமாய்கெவர்ண்மெண்டாரால் அதிகாரம் பெற்றவேறே உத்தியோகஸ்தராவது நிலத்தைவசப்படுத்திக்கொள்ளவும், எந்த உத்தியோகஸ்தருக்கு நிலம்வேண்டுமோ அவருக்கு அந்தநிலத்தை ஒப்புவிக்கவும், முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது; சட்டத்தைப்பிரயோகிக்கும் பட்சத்தில்சட்டத்தின் 6 வதுசெக்ஷனிலும் அதற்குப்பின்னால்வரும் செக்ஷன்களிலும் கண்டிருக்கிற நடவடிககைகளைக்லெக்டராவது அல்லது கெவர்ண்மெண்டாரல் அதிகாரம்கொடுக்கப்பட்டவேறேஉத்தியோகஸ்தராவது கவனிக்கவேண்டியது. நிலத்தைவசப்படுத்திக்கொள்ளும்போது அதற்குமுதவில் ஏற்படுத்தினமதிப்பு விலையானது ரொம்பவும் குறைவாய்இருப்பதாய் இப்பால் தெரியவரும்பட்சத்தில் கலெக்டர்களாவது அல்லது (கெவர்

ண்மெண்டரால் அதிகாரம்கொடுக்கப்பட்ட வேறேஉத்தியோகஸ்தர்களாவது) புதிதாய்வேறே மதிப்புப்போடுவது உசிதமாயிருக்கிறது.

7. பைஷ்கஷ் அல்லதுகுயிட்ரெண்டு தீர்வையில் குறைவு செய்வதானது, நிலத்தைக் கைப்பத்திக் கொள்ளுவதற்காக ஏற்படுத்தி யிருக்கப்பட்ட ஆக்ட்பிரகாரம் கம்பென்சேஷனுக பாவிக்கப் படத்தக்கதல்ல; ஆகையால் கம்பென்சேஷன் துகையை நிர்ணயிக்கும் பொருட்டியாதொரு விவகாரத்தை டிஸ்டிரிக்ட்கோர்டாரிட தீர்மானத்திற்கு அனுப்பும்போது கலெக்டரானவர் 3 வது ப்ரகரணத்தில் கண்டபடி எவ்வளவு துகைகணக்கிடப்படுமோ அவ்வளவு துகையைத் தாம் கொடுக்கசம்மதமுள்ளவராயிருக்கிறுரென்று தெரிவிக்கவேண்டியது. ஆகிலும் சட்டப்பிரகாரம் கொடுக்க வேண்டியதுகை யிவ்வளவென்று நிர்ணயிக்கப்பட்ட பிற்பாடு சொந்தக்காரனிட இதரநிலங்களுக்காக செலுத்தவேண்டிய பைஷ்கஷ் அல்லது குயிட்ரெண்டு தீர்வையில் குறைவுசெய்வதினுலாவது அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்குப்பதிலாக பர்த்திநிலம் அடமானம்செய்துக்கொடுப்பதினுலாவது கம்பென்சேஷனைச்சேர்ப்பிக்கலாம். இந்தவிஷயங்களில் கலெக்டர் போர்ட்டாருக்கு ரிபோர்ட்செய்துக்கொள்வதின்பேரில் போர்ட்டார் புதுநிலஅடமானத்திற்கோஅல்லது குயிட்ரெண்டு அல்லது பைஷ்கஷ்தீர்வையில் குறைவுசெய்வதற்கோ அனுமதிகொடுப்பார்கள். கம்பென்சேஷனை ரொக்கமாய்கொடுக்கும்பட்சத்தில் போர்ட்டாருக்கு விண்ணப்பம்செய்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை.

8. பணம்ரொக்கமாய் கொடுக்கும்விஷயங்களில், கலெக்டர்முன்பாகவாவதுடிவிஷனல் ஆபீசர்முன்பாகவாவது பணம்கொடுக்கப்படும். பணத்தைக்கொடுக்கும்படி தாசில்தார்களுக்கு அதிகாரம்கொடுப்பது யுக்தமென்று மேலேசொன்ன உத்தியோகஸ்தர்களுக்குத் தோன்றினுல் அந்தப்படியே உத்திரவுசெய்யக்கூடும். ஆனுல் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் தாசில்தார் பணத்தைநேராய் கொடுக்கவேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டியது. தாசில்தார் கஸ்பாவில் இல்லாமலிருக்கும்போது, தாலுக்கா சிரஸ்தேதார் தம் முன்பாக பணத்தைக்கொடுப்பிக்கலாம். இந்த விஷயங்களில், கம்பன்சேஷனுக சேரவேண்டியதுகைக்கு அனுமதிகொடுக்கப்பட்டவுடனேகம்பென்சேஷன் சேரவேண்டியஒருகக்ஷிக்காரனுக்கு ஒரு நோட்டீஸ்அனுப்பப்படும்; பிரஸ்தாபத்தி விருக்கப்பட்ட தொகை கொடுக்க வேண்டுமென்று அவர் கோரிக்கொள்ள வேண்டியதென்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட தேதி முதல் ஒரு வருஷத்திற்குள்ளாக அப்படிகோரிக்கொள்ளாமல் போனுல் (கெவர்ன்மெண்டாரிட) மறு உத்திரவுயில்லாமல் பணங்கொடுக்கப்படமாட்டாதென்றும் அந்தநோட்டீசில்கண்டெழுதித்தெ

ரிவிக்கப்படும். எந்தமனுஷனுக்கு நோட்டீஸ்பிறப்பிக்கப்படுகிறதோ அந்த மனுஷனிடத்தில்நேராய்நோட்டீஸைக்கொடுக்கவேண்டியது(ஸார்வுசெய்ய வேண்டியது), அல்லது அவன்வழக்கமாய் குடியிருக்கிறவீட்டின் வெளிச்சுவரில்ஒட்டவேண்டியது. தவிரவும் ஜில்லாகெஜட்டில் அடுத்தமூன்றுகெஜட்டுகளில்பிரசுரஞ்செய்யவேண்டியது. தொகையைப் பெற்றுக்கொள்ளகுறித்தகாலத்தில்எவனொருவன் ஆஜராகாமல்போகிறானோ அவனுடையபெயரை இன்னின்னமனுஷனுக்காக கம்பென்சேஷன் சேரவேண்டியதென்று கண்டிருக்கிறஜாப்தாவிலிருந்து கலெக்டர்நீக்கிவிட்டு துகையை தம்மிடகஜானாவில் ரெவினியூடிபாஸிட்டில் வைத்துவைக்கவேண்டியது. எவனொருவன் பெயர்ஜாப்தாவிலிருந்துநீக்கிவிடப்பட்டதோஅப்படிநீக்கிவிடப்பட்டதேதி முதல் 3 மாதத்திற்குள் அவன் ஆஜராய்தான்தாமஸித்ததற்காக கலெக்டருக்குத்திருப்திகரமானமுகாந்திரங்களைச்சொல்லும்பட்சத்தில் கலெக்டர்பணத்தைக்கொடுக்கும்படி உத்திரவுசெய்யலாம். மேலேசொன்ன 3 மாதத்திற்குப் பின்னிட்டுஆஜராய்திருப்திகரமானமுகாந்திரம்சொல்லும்பட்சத்தில்,கலெக்டரானவர் இந்தசங்கதியைப்பற்றி போர்டாருடைய உத்திரவுக்காக ரிபோர்ட்செய்ய வேண்டியது. இதுவிஷயத்தில் சம்மந்தப்படாத இரண்டுபேர்களால்கையொப்பமிடப்பட்ட குறித்தபாரத்தில் ஒருரசிதுபெற்றுக்கொள்ளவேண்டியது. கிரமமாய்அதிகாரம்கொடுக்கப்பட்ட வக்கீல்மூலமாய் ஜனங்கள்தங்களுக்குச்சேரவேண்டியதுகையைப் பெற்றுக்கொள்ளலாம். பொது உபயோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கு பர்த்தியாக கம்பென்சேஷன் கொடுக்கவேண்டியதைப்பற்றியும் துகையைக்கணக்கிடும் விதத்தைப்பற்றியும் இந்தியா கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளை இத்துடன்சேர்க்கப்பட்டிருக்கிற அனுபந்தத்தில் கண்டிருக்கிறது.

9. பொதுகாரியங்களுக்கு நிலத்தைவசப்படுத்திக்கொள்ளும் விஷயமாக எதாவது தகரார்உண்டாய் அப்பேர்ப்பட்டதகராரைத் தீர்க்க கீழ் உத்தியோகஸ்தர்களால் முடியாமற்போனால் கலெக்டராவது அல்லது டிவிஷனல் ஆபீஸராவது அந்தஇடங்களுக்குப்போய் தாங்களே விவகாரங்களை நடத்தவேண்டியது.

10. சொந்தக்காரனுடைய சம்மதமில்லாமலும் கம்பென் சேஷனை கொடுக்காமலும் பொது உபயோகத்திற்காக யாதொரு நிலத்தையும் வசப்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், கம்பன்சேஷன் துகை தீர்மானமாய் அதற்குக் கக்ஷிக்காரர்கள் சம்மதப்பட்டு ஒத்துக்கொண்டு அந்த துகைக்காக பில் தயார் செய்யப்பட்டு கையெழுத்தாய் எக்ஸ்க்யூடிவ் இஞ்சினீருக்கு அனுப்பப்படுகிற வரையில் நிலத்தை வசப்படுத்திக் கொள்ளக்கூடாதென்றும் ரெவினியூ ஆபீஸர்கள் வியக்தமாய் தெரிந்துக் கொள்ளவேண்டியது;

ஆனல் பிராணிகளையாவது சொத்துக்களையாவது காப்பாற்றும் பொருட்டு மேலே பிரஸ்தாபித்த கிரமமான நடவடிக்கைகளை நடத்தக்கூடாமலிருக்கிற ஏதோ அதிஅபூர்வமான சிலவிஷயங்களில் மாத்திரம் மேல்கண்ட விதிகள் பிரகாரமல்லாமல் வேறேவிதமாய்நடத்தலாம். சம்மந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் போதுமான முன்யோசனை எடுத்துக் கொள்ளாமையால் நேரிடுகிற அவசரத்தை ஒரு நியாயமாகச் சொல்ல வொட்டாமல் ஜாக்கிரதையாய் தடுக்கவேண்டியது. நிலத்தை வசப்படுத்திக் கொள்ளுகிற மனிதன் கெவர்ண்மெண்டாருக்குப் பிரதி நிதியாயிருந்துக்கொண்டு காரியத்தை நடத்துகிற ஒரு கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தன் என்கிற காரணத்தினலேயே ஜனங்கள் தங்கள் நிலத்தை உடனே ஒப்புக்கொடுத்து விட உட்படலாம்; ஆனல் குடிகளைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு மேற்கண்ட நியாயமே மிகவும் பிரதானமான காரணமாயிருக்கிறது. இது விஷயமாய் பின்னல் வரும் கெவர்ண்மெண்டார்டரில்கண்ட உத்திரவுகளில் கவனம் வைக்க வேண்டியது.

"ஆலோசனைசபையில்நடந்தஉத்திரவுகளின்எக்ஸ்ட்ராக்ட். 1855ஹு நவம்பர்மீ 13உ நெ. 847 ரெவினியூடிபார்ட்மெண்டு :

பிரகரணம் 1. இந்தவிஷயமாய், கோதாவரி கிருஷ்ண நதிகளின் முகத்துவார நிலத்தை துரஸ்து செய்யும் காலத்தில் வடசர்க்காரில் நடந்ததாகத் தெரியவருகிற சிலவிஷயங்களின் தன்மையைப்பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பது யுக்தமாயிருக்கிறது சிலவிஷயங்களில் சொந்தக்காரருடைய சம்மதமில்லாமலும் அவர்களுக்கு யாதொரு கம்பென்சேஷனையும் கொடுக்காமலும் ஜமீன் நிலங்கள் மூலமாய் வாய்க்கால் வெட்டப்பட்டதென்று கெவர்ண்மெண்டார் நம்பஹேது உண்டாயிருக்கிறது. இந்த நடவடிக்கை முழுமையும் கெவர்ண் மெண்டார் ரொம்பவும் நிராகரிக்கிருர்கள். எவ்வித பிரயோஜனத் திற்காவது நிலம் வேண்டியிருந்தால் அந்த நிலத்தின் சொந்தக்காரனுக்கு கிரமமான ஜாக்கிரதையுடன் அதின் விலையைக் கொடுத்துவிட்டு அந்த நிலத்தை வசப்படுத்திக் கொள்வதற்கு 1852 வது வருஷத்திய 20 வது * ஆக்ட் பிரகாரம் கெவர்ண்மெண்டாருக்கு ஸர்வாதிகாரம் உண்டு. அந்த சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற நடவடிக்கைகளை இனிஎப்போதும் அனுஸரிக்கவேண்டியது. இந்தப்பிரகரணத்திற்குஒருநகல் எடுத்து அந்தந்த இடத்திலுள்ளரெவினியூ டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்கும் இஞ்சினீர் டிபாாட்மெண்டு அதிகாரிகளுக்கும் அவர்கள் மேலதிகாரிகள் துவாரா அனுப்ப கெவர்ண்மெண்டார் தீர்மானித்திருக்கிருர்கள். தவிரவும் சொந்தக்காரர்களிட சர்வசம்மதமானது எழுத்து மூல

* இப்போது 1870-ஹு 10-வது ஆக்டு.

மாய்க் கொடுக்கப் படாமலாவது அல்லது மேலே உதகரிக்கலான சட்டத்தில் கண்ட நியமனங்களை அனுஸரிக்காமலாவது யாதொரு மனிதனுடைய சொந்த சொத்தாகிய யாதொரு நிலத்தையும் எவ்வித பொதுஉபயோகத்திற்காவது இனிமேல் தாங்களும் வசப்படுத்தக் கூடாது என்றும், தங்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களா லும் வசப்படுத்தப்பட இடம்கொடுக்கக்கூடா தென்றும், கெவர்ண்மெண் டார் கண்டிப்பாய் உத்திரவு செய்கிறார்கள்; மேலே சொன்ன சட்டத்தின் ஒரு நகலை டிஸ்டிரிக்ட் இஞ்சினீர்களுக்கு அனுப்பவேண்டியது. ரஸ்தா வுக்காவது வாய்க்காலுக்காவது இன்னும் வேறே உபயோகத்திற் காகவா வது நிலம் வேண்டியிருக்கிற ஒவ்வொரு விஷயத்திலும் அப்படி வேண்டி யிருக்கிற நிலத்தில் எவவளவு பாகம் ஜமீன்தாரி, அல்லது இனம் நிலம், அல் லது விலை பெறக்கூடிய வேறே சொந்த சொத்து, என்று இஞ்சினீர் ரிபோர்டில் கண்டெழுதவேண்டியது; அதின்பேரில் நிலத்தை சொந்தப் படுத்திக்கொள்ளும் பொருட்டு சட்டத்தின் 1, 2, 3 செக்ஷன்களில் கண்ட நடவடிக்கைகளை அனுசரிக்கவேண்டியது, மேலும் அவசியமானால், சேரவே ண்டிய கம்பென் சேஷன் துகை இவ்வளவென்று தீர்மானிப்பதற்கும் அந்த துகை யாருக்குச் சேரவேண்டிய தென்று நிர்ணயிப்பதற்கும் மேல்கண்ட செக்ஷன்களுக்குப்பின்னிட்ட செக்ஷன்களில் கண்ட நடவடிக்கைகளை ஆலசியமில்லாமல் நடத்த வேண்டியது. இஞ்சினீர் பலான வேலைக்காக செலவு இவ்வளவென்று மதிப்பிட்டு கணக்கு தயாரிக்கும்போது கம்பென் சேஷன் துகையையும் உத்தேசமாய் மதிப்பிட்டுப் போடவேண்டியது."

கலெக்டரால் கம்பென் சேஷனுக்காக நிர்ணயிக்கப்பட்ட துகையையே கணக்கில் எப்பொழுதும் காணவேண்டியது. ஆகிலும், கொஞ்சகாலம் உபயோகத்திற்காக நிலம்வேண்டியிருக்கிறவிஷயங்களில் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட் மெண்டாரானவர்கள் குடியானவர்களுடன் நேராய் உடன்படிக் கை செய்துகொள்வதற்கு ஆட்சேபணை யில்லை. ஆனால் தகரார்களிலிருக் கிற விஷயங்களில் எப்போதும் ரெவினியூ டிபார்ட் மெண்டாருடன்கலந்து ஏற்பாடுசெய்யவேண்டியது.

11. ஒரு பெரிய பொது வேலைக்கு நிலம்வேண்டியிருக்கும் போதெல் லாம் அந்தவேலைக்குத் தேவையான நிலத்தின் விலை மதிப்புத் துகையை ஏற்படுத்தி எஸ்டிமேட் தயார் செய்வதோடு கூட கம்பென்சேஷனை நிர்ணயிப்பதற்கு நியமிக்கப்படவேண்டிய ஒரு பிரத்தியேக உத்தியோகஸ்த ருக்காக பிடிக்கும் செலவையும் உத்தேசித்து எஸ்டிமேட் தயார்செய்ய வேண்டியது. நிலத்தினுடைய விலையாகக் கொடுக்கப்படும் பணத்தை

கொஞ்சம் குறைப்பதினுலும், அப்பேர்ப்பட்ட கம்பென்சேஷனை அதிசீக்கிரத்தில் நிர்ணயிப்பதால் வட்டி முதலாகிய செலவுகளை மீத்துவதினுலும், மேற்கண்ட பிரத்தியேக உத்தியோகஸ்தனை நியமிப்பதினுல் நேரிடும் செலவானது அனேகமாய் பர்த்திசெய்யப்படக்கூடும்.

12. 1870வது வருஷத்திய 10 வது ஆக்டாகிய* லாண்ட் அக்விஸிஷன் ஆக்டுபிரகாரம் க்லெக்டரால் செய்யப்படுமே தீர்மானமாவது அல்லது உத்திரவாவது எப்போதும் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியது. ஆனுல் கம்பென்சேஷன்துகை 50 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆகிலும் கம்பென்சேஷன்துகை 50 ரூபாய்க்குமேற்பட்டாலும் மேற்படாமலிருந்தாலும் விக்ரயசாஸனத்தை ரிஜிஸ்டர்செய்யவேண்டியது. சட்டத்தைப்பிரயோகிக்காமல்ஜனங்களுடன் சொந்த உடன்படிக்கைசெய்துக்கொண்டு வசப்படுத்திக்கொண்டநிலம் விஷயமாய் இத்துடன்சேர்க்கப்பட்டிருக்கிற அனுபந்தத்தில் கண்டபாரப் பிரகாரம்சாதாரண விஷயங்களிலெல்லாம் அனுஷ்டித்து விக்கிரயசாஸனம் தயார்செய்யலாம். (அப்பேர்ப்பட்டதனிஉடன்படிக்கை செய்துக்கொண்டுவசப்படுத்தின) நிலத்தின்மதிப்பு 50 ரூபாய்க்குமேற்படாமலிருக்கும் பட்சத்தில் விக்கிரயசாசனம் எழுதிக்கொள்ளவேண்டிய அவசியமில்லை; பட்டாக்களிலும் கிராமரிஜிஸ்தர்களிலும் மேற்கண்டநிலமாற்றுதலை எழுதிவைத்தாலேபோதுமானது. சொத்தினுடைய பாத்தியதையைப்பற்றி சந்தேகமாவது தகராராவது இல்லாமலிருந்தாலும் சொத்தின்மதிப்பு ரொம்ப அதிகமாயிருந்தாலும் அப்பேர்ப்பட்ட விஷயங்களிலும் அல்லதுநிலத்தின்காணியாகூலியைப்பற்றி இன்னும் எந்தவிதத்திலாவது சம்சயம் உண்டாகிறவிஷயங்களிலும் பிரதி விஷயத்தின் தன்மைகளையோசித்துகெவர்ண்மெண்ட் ஸோலிஸிடரால் தயாரிக்கப்பட்ட விக்கிரயசாசனத்தை அனுஷ்டிக்கவேண்டியது. மேலேபிரஸ்தாபித்த இரண்டுவிதவிஷயங்களிலும் சாசனங்களைரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்பிரகாரம் ரிஜிஸ்டர்செய்யவேண்டியது. பிறகு, எந்தடிபார்ட்மெண்டாருக்குநிலம்சம்பாதிக்கப்பட்டதோ அந்தடிபார்ட்மெண்டாருக்கு விக்கிரயசாஸனங்கள் தேவையில்லாமல் போகும்விஷயங்களில்அவைகளை கலெக்டர் ஆபீஸில்வைத்துவைக்கவேண்டியது.

13. ஸ்திரமான ஸெட்டில்மெண்டான பிற்பாடு அடமானம் செய்யப்பட்ட ஜமீன்களில் இருக்கிற இனும் கிராமங்களில் சட்டத்தை அனுஸரித்து நிலத்தை கலெக்டர்கைப்பற்றிக் கொண்டால், நிலத்தை கெவர்ண்

---

* குறிப்பு, நிலத்தை வசப்படுத்திக் கொள்வதற்காகஏற்படுத்தப்பட்ட ஆக்டு.

மெண்டார் வசப்படுத்திக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்களென்று சட்டத்தின் 9-வது செக்ஷன் பிரகாரம் ஜமீன்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் இன்னும் சம்பந்தப்பட்ட இதர ஜனங்களுக்கும் கலெக்டர் நோட்டீசு கொடுக்கக் கடமைப்பட்டவராயிருக்கிறார். பிரதி நபருக்கும் சேரவேண்டிய கம்பென்சேஷன் துகையைப்பற்றி கலெக்டரும் சம்பந்தப்பட்ட ஜனங்களும் ஒத்துப்போகும்பக்ஷத்தில் அப்படியே கலெக்டர் தீர்ப்பு செய்யவேண்டியது. அப்படி அவர்கள் ஒத்துவராமற்போனால் அந்த விவகாரத்தை கோர்ட்டாருக்கு கலெக்டர் அனுப்பவேண்டியது. கோர்ட்டார் பிரதி நபருக்கும் சேரவேண்டிய கம்பென்சேஷன் துகையைத் தீர்மானிப்பார்கள். ஒவ்வொருவருக்கும் சேரவேண்டிய கம்பென்சேஷன் துகையைப்பற்றி சம்பந்தப்பட்ட பார்ட்டிகள்ஒத்துவராமற்போனால் சட்டத்தைப்பிரயோகிக்காமல் சொந்தஉடன்படிக்கைசெய்து யாதொருநிலத்தையும்வசப்படுத்தக்கூடாது. இப்பேர்ப்பட்டவிஷயங்களில்லாண்ட் அக்விஸிஷன்ஆக்ட்டைஅனுஸரிக்க வேண்டியது. லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட்டை அனுஸரிக்காமல் சென்ற வருஷங்களில் வசப்படுத்திக் கொள்ளப்பட்ட நிலத்திற்கு கம்பென்சேஷன் கொடுக்கவேண்டியதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் தங்களுக்குள் எவன் துகையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதென்று ஒத்துவராமற்போனால் அவர்களிட தசரார் பாத்தியதைகளைப்பற்றி விசாரித்துத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஜில்லா கோர்ட்டுக்கு அவர்களை அனுப்பவேண்டியது.

14. கிராம ஊழியத்திற்காக விடப்பட்டிருக்கிற என்பிரன்சைஸான இனாம் நிலங்களை பொது உபயோகத்திற்காக எடுத்துக்கொண்டால் அவைகளுக்காக சேரவேண்டிய கம்பென்சேஷனை, அஸல் இனாம் நிலங்களை எடுத்துக்கொண்டால் எவ்விதமாக கம்பென்சேஷன் துகை நிர்ணயிக்கப்படுமோ அவ்விதமாக நிர்ணயிக்கவேண்டியது. என்பிரன்சைஸ் இனாம்தார் புதுநிலம் அடமானம்செய்துக்கொள்ள இஷ்டப்படுவாராகில்கிராம ஊழியபண்டுக்கு நஷ்டமுண்டாகாது; ஏனென்றால் புதிதாய் அடமானம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து வசூலாகிற குயிட்ரெண்டு தீர்வை வில்லேஜ்ஸர்வீஸ் பண்டில்வரவுவைத்துக் கொள்ளப்படும் .தாமாஷாப் பிரகாரம் குயிட்ரெண்டை குறைவு செய்வதினாலாவது ரொக்கப் பணம் பெற்றுக்கொள்வதினாலாவது தனக்குண்டான கம்பென்சேஷனை சேர்ப்பித்துக்கொள்ள இஷ்டப்பட்டால் வில்லேஜ் சேர்வீஸ் பண்டுக்கு அதிசொல்ப நஷ்டமுண்டாகும்.

12. ரெயில்வேயிக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள்.—ரெயில்வேகம்பெனிக்குநிலத்தை ஒப்புக்கொடுப்பதில் இன்னவிஷயமாய் இன்ன ஷரத்துகள் கண்டு ஒப்புக்கொடுக்கவேண்டியதற்காக ஏற்படு

த்தப்பட்டிருக்கிற விதிகளின்ஸாராம்சத்தைபின்வரும்-16-பிரகரணங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

திருத்துப்பாடுசெய்யப்படலான விதிகள்.

2. இருப்புப்பாதைக்கு சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக தேவையான நிலங்களை- A. B. C. D. என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ரெயில்வேயாருக்கும் சர்க்காருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி ரெயில்வே கம்பெனியார்வசத்தில் ஸ்திரமாய் வைத்திருக்கும்பொருட்டு அவர்களுக்கு இலவசமாய் கொடுக்கப்படும் நிலம்—முதலாவது A வகுப்பு. இலவசமாய் கொஞ்ச காலத்திற்காகமட்டும் ரெயில்வே கம்பெனியாருக்கு கொடுக்கப்படுவது-இரண்டாவது B வகுப்பு. ரெயில்வே கம்பெனியார் தம்முடைய சொந்த செலவின்பேரில் சம்பாதித்துக் கொள்ளவேண்டிய நிலம்—மூன்ருவது C வகுப்பு. ரெயில்வே கம்பெனியார் ஸ்வாதீனத்தில் நேராய் வரவேவராத நிலம் நாலாவது D. வகுப்பு.

3. ரோட்டும் அதற்குச் சேர்ந்த பாலங்கள் முதலானவைகளும், எல்லா ஸ்டேஷன்களும் வொர்க்குஷாப்புகளும் (வேலைசெய்யுமிடங்களும்) ஸ்திரமாய் சாமான்வைக்குமிடங்களும், (Permanent store yards.) இருப்புப் பாதைபோட்டானவுடன் தேவையானதும், கண்ட்ராக்டின்படி கெவர்ண்மெண்டாரால் ரையில்வேகம்பெனியாருக்கு இலவசமாய்கொடுக்கப்பட வேண்டியதுமான இவைகளைப் போன்ற மற்ற இடங்களும் இருப்புப்பாதைக்கு ஸ்திரமாய்வேண்டிய நிலங்கள், இவைகள் A வகுப்பில் அடங்கியிருக்கின்றன. அந்த நிலம் ரெயில்வே கம்பெனியார் வசத்திலிருந்து அவர்களுடைய கண்ட்ராக்ட் முடிவானபிறகு அல்லது அவர்கள் கண்ட்ராக்டைவிட்டுவிட்ட பிறகு அல்லது முழுதும் சர்க்காருக்கு சேர்ந்துபோகும்வரையில் இந்த நிலங்கள் கம்பெனியார் வசத்தில் ஸ்திரமாய் இருக்கத்தக்கவை. அதற்குப் பிந்திதான் ஷை நிலங்கள் கம்பெனியார் வசத்தை விட்டு நீங்கும். இந்த நிலங்களெல்லாம் செலவில்லாமல் ரெயில்வேகம்பெனியாருக்கு இலவசமாய் கொடுக்கப்படுகிறது.

4. இருப்புபாதையின் ஸ்திரமான கட்டடங்கள் கட்டும்வரையில் அவர்கள் வசத்தில் வைத்திருந்து வேலை ஒருபாகமாவது அல்லது முழுதுமாவது முடிந்தபின்தேவையில்லாத நிலம் B வகுப்பு நிலம்; அதுவும் அவர்களுக்கு செலவில்லாமல் தான்கொடுக்கப்படுகிறது. அவைகள் எப்படிப்பட்டவைகளென்ருல், ரோட்டு ஏற்பாடு செய்யும் வரையில் அல்லது கட்டடங்கள் கட்டும்வரையில் அந்தஇடத்துக்கு சாமான்கள் கொண்டுபோவதற்கும் ரெயில்வே கம்பெனியாருககுசாமான்கள் கையிருப்பில் வைத்துக்

கொள்வதற்கும் ஆற்றை திருப்புவதற்கும், கரைகள் கட்டுவதற்கும் ஜாஸ்தி பள்ளங்கள் வெட்டுவதற்கும், பொய்கரைகள் கட்டுவதற்கும் வேண்டிய நிலம். இவ்வகுப்பு நிலம் கொஞ்சகாலத்திற்குத்தான் அவர்கள் வசத்திலிருக்கும். அந்த நிலத்தை எப்போது விட்டுவிடவேண்டியதென்கிற சங்கதி பிரதி விஷயத்திலும் ரெயில்வே கம்பெனியாரும் கன்ஸல்டிங்கு இஞ்சினீரும் சேர்ந்துஏற்பாடு செய்துக்கொள்ளவேண்டியது. நிலத்தை ரெயில்வேகம்பெனியார் கவர்ன்மெண்டாருக்கு திருப்பிவிட்டு விட்டபிற்பாடு, ஷை நிலம் மறுபடியும் ஒருக்கால் தேவையாயிருக்கும் போலிருந்தால் அப்படி ரெயில்வே கம்பெனியாருக்குத்தேவையென்று 6மீ த்திற்கு முன்தெரிவிப்பதின்பேரில்நிலத்தைத்திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு ரிவினியூ அதிகாரிகள் வருஷவாரியில் கிரமமான ஒரு குத்தகை அடமானத்திற்கு அதைவிடவேண்டியது. இப்பேர்ப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு நிலத்தை அனுபவிக்க அந்தநிலத்திற்கு முன்சொந்தமாயிருந்தவர்கள் இஷ்டப்படுவார்களாகில் அவர்களுக்கே அடமானம் செய்யவேண்டியது. (பிற்பாடுத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்கிற நிபந்தனைமுதலானதுக்குட்படுத்தாமல்) நிராக்ஷேபணையாக நிலத்தைவிட்டுவிடுகிற விஷயங்களில், அந்த நிலத்திற்கு முன்னடி சொந்தக்காரனுயிருந்தவன் எவனே அவனிடமிருந்துகிரமமானவிலை பெற்றுக்கொள்வதின்பேரில் பட்டாகொடுத்து அடமானம் செய்யவேண்டியது; அப்பேர்பட்டவிலைநிர்ணயிக்கப்படவேண்டியதெப்படியென்ருல் அம்மாதிரி நிலங்கள் என்னவிலையாய் விற்கப்படுகிறதோ அதைஅனுசரித்துநிர்ணயிக்கவேண்டியது. இவ்வித நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்தைக்கைப்பற்றிக்கொள்ள அவனுக்கு இஷ்டமில்லாமற்போகும்பக்ஷத்தில், அதிசெழிப்பில்லாத பூமியாயிருந்தால் விறகுக்காக லாயக்கானமரங்களையும், செழிப்புள்ள நிலமாயிருந்தல் எருவுக்கு உபயோகப்படக்கூடியமரங்களையும் சதுப்பு பூமியாயிருந்தல் மூங்கில் மரங்களையும் நட்டுவளர்க்கவேண்டியது. மரங்களை நட்டுவளர்ப்பதற்கு லாயக்கற்ற பூமியாயிருந்தால், அந்த நிலத்தை ஏலத்தில் உயர்ந்தவிலைக்குக்கேட்கிறவர்களுக்கு விற்கப்படும், அப்படி ஏலம்போடுவதில் ஏலத்தில் முதல்கூறும்விலை இவ்வளவென்று நிஷ்கரிஷை செய்யவேண்டியதில்லை, ஆகிலும் வருஷவாரியில் தீர்வையைச் செலுத்திவரவேண்டியதென்று நிபந்தனை ஏற்படுத்தப்படும்,

5. ரெயில்வே கம்பெனியார் தங்களுடைய சொந்தசெலவின்பேரில் சம்பாதித்துக்கொள்ளவேண்டிய நிலம், C வகுப்புக்குட்பட்டது. செலவில்லாமல்ரெயில்வேகம்பெனியாருக்குக்கொடாவிட்டாலும் ஷை கம்பெனியாருடைய நடவடிக்கைக்குக்கிரமமாய் உட்படுகிறதென்று கெவர்ண்மெண்

டாரால் அங்கீகாரம்செய்துக்கொள்ளப்பட்ட சாமான்களைசேர்ப்பதற்கும் ஆயத்தம் செய்வதற்கும் தேவையான நிலமும் இருப்புப்பாதையின் பேரில் நடக்கிற வேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு தேவையான நிலமும் இன்னும்பலவித விஷயங்களுக்குவேண்டிய நிலமும் அந்த வகுப்பைச்சேர்ந்தவை; கெவர்ண்மெண்டார்இடத்திலிருந்துசட்டடங்கள் இருக்கும்நிலத்தைமட்டும் கம்பெனியார் பெற்றுக்கொண்டு கட்டடங்கள் கட்டுவதற்காகத் தேவையான பணத்தை தங்கள் முதலில் இருந்து கொடுக்க சம்பெனியார் கட்டாயப்பட்டிருக்கிறார்கள். சமான்களைச்சேர்த்துக்கொள்ள வேண்டியதும் கட்டடங்களைக் கட்ட துரிதப்படுத்தவேண்டியதும்ரெயில்வே கம்பெனியாருடைய செலவின்பேரில் செய்யப்படவேண்டிய காரியங்கள். முதலில் ஏற்படுத்தப்பட்டிருந்த விதிகளில் இதனடியில்கண்ட வார்த்தைகளும் இருந்தன :—ஆகையால் இவ்வகுப்பில் செங்கல் அறுப்பதற்காகவும், கல்பிளப்பதற்காகவும், அந்தவேலைகளில் அமர்ந்திருக்கிற நபர்கள் குடியிருக்க வீடு முதலானதற்காகவும் தேவையான நிலங்கள் சேரும்.

இருப்புப்பாதை போட்டானபிற்பாடு இன்ஜின்டிரைவர் முதலானவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்காகவும் இம்மாதிரி உபயோகங்களுக்காகவும் தேவையான நிலங்களும் C வகுப்பில் சேருகின்றன. இந்த விதியை விசேஷமாய் விபரித்தால் குத்தகையின்ஷரத்துகளை திருத்தவாவது மாற்றவாவதுகெவர்ண்மெண்டாருக்குஅதிகாரம் உண்டா இல்லையாவென்பதைப் பற்றிஆக்ஷேபணைகள் உண்டாகுமென்றுஇந்தியா ஸிக்ரிடெரி ஆப்ஸ்டேட் துரையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (மேலே பிரஸ்தாபிக்கப்பட்டஅதிகாரத்தைவகித்துக்கொள்ளவேண்டுமென்பது செவர்ண்மெண்டாருடைய அபிப்பிராயமல்ல.) "வேலைநடந்துகொண்டிருக்கும் இடங்களுக்கு போகும்ரோட்டுகளும்" இந்தவகுப்பில் சேர்ந்தன என்று அசல்விதிகளில் கண்டிருந்தன. அது தப்பு அர்த்தத்திற்கு இடம்உண்டாக்குமென்று இப்பால் அடித்துவிடப்பட்டது. சாமான்கள் சேகரிப்புக்காக B வகுப்பு நிலத்திலேயே ஒருஇடத்திலிருந்து ரோட்டு அவசியமாய் இருக்குமென்பது வியக்தமாய் தெரிந்த விஷயம். இதனால் அந்தரோட்டுகூட அதேவகுப்பை சேர்ந்ததாகும். செங்கல்லறுக்கும் இடம் அல்லது கல்வெட்டிஎடுக்கப்படும் இடத்திலிருந்து போகும்ரோட்டு அந்த இடமும் சுரங்கமும் எந்த வகுப்போ அந்தவகுப்புக்கு (அதாவது C. வகுப்புக்கு) சேர்ந்து போகும். தனியாயிருந்தாலும் ஸ்திரமாய் சாமான்வைக்கும் இடத்திலிருந்து போகும் ரோட்டானது வேலைகள் நடந்துக்கொண்டிருக்கிற இடத்துக்குபோகிறதாயிருந்தாலும்கூட அந்தப்பலானவேலைகள் முடிந்தபிற்பாடும் அப்பேர்க்கொத்த ரோட்டானது அவசியமாய் இருக்கும்பக்ஷத்தில் அது D வகுப்பைத்தான்

சேரும். ரெயில்வேயீக்கு தூரமான ரோட்டின் முனையில் இருக்கிற நிலம் எந்தஏற்பாடுகள்பிரகாரம் எந்தவகுப்பில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அதே வகுப்புக்கு அந்தரோட்டும் உள்ளாகிறதென்று பொதுவாய் தீர்மானித்துச் சொல்லலாம். இந்தநிலத்திற்குத் தீர்வைஏற்படுத்துவதில் இந்தநிலத்தை எந்தவேலைக்கு உபயோகப்படுத்துகிறார்களோ அந்தஉபயோகத்தினால் அந்தநிலம் கெட்டுப்போவதுமுண்டு, கெடாமலிருப்பதுமுண்டு, என்னும்சங்கதியை யோசிக்கவேண்டியது கிரமமாகயிருக்கிறது. எப்படியிருந்தாலும் எல்லாவிஷயங்களிலும் ஒரே மாதிரி நடவடிக்கை நடத்துவது சௌகரியமாயிருக்கும். அது கெவர்ண்மெண்டாரால் வசப்படுத்திக்கொள்ளப்பட்டு அடியில்கண்டபடி ஒருநியாயமான குத்தகைமொத்தத்திற்கு அனுபோகத்திற்காக ரெயில்வே கம்பெனியார் வசத்தில் விடப்படும். ரெயில்வேகம்பெனியார் அதைவைத்திருக்கவேண்டிய அவசியம்நீங்கின பிறகு ரெயில்வே கம்பெனியாரால் சர்க்கார்வசம் செய்யப்படவேண்டியது. அப்படி சர்க்கார் வசம் செய்யப்படவேண்டியதற்கு கிரமமானகாலம் பலானது என்பதை B வகுப்பு நிலங்களின் விஷயத்தைப்போல் ரெயில் ஆபீஸர்களும் கன்ஸல்ட்ங்கு இஞ்சினீரும் சேர்ந்து நிர்ணயிக்கவேண்டியது. ரெயில்வே கம்பெனியாரால் எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வகுப்பில் சேர்ந்த வருஷவாரிகுத்தகை எவ்வளவென்றால், நிலத்தை வசப்படுத்துவதற்காக கவர்ண்மெண்டாரால் கொடுக்கப்பட்ட துகையும் ஷை நிலத்திற்காக அதை எடுத்துக்கொள்வதற்குமுந்தி கவர்ண்மெண்டாருக்குச்சேரவேண்டிய தீர்வை அல்லது குத்தகைமதிப்புத்துகையும் ஆகஇரண்டும் சேர்ந்த மொத்தகைக்கு 100த்துக்கு 5 வீதம் ஏற்படுத்தப்படும். முன்னாடியாகவே கவர்ண்மெண்டாருக்குச் சொந்தமாயும் மேற்கண்டவிதமாய் வசப்படுத்திக்கொள்ளப்பட்டதுமான நிலமாயிருந்தால் கலக்டரால் உத்தேசமிட்ட பிரகாரம் நிலத்தின் மதிப்பில் 100 த்துக்கு 5. வீதம்குத்தகைமதிப்பு ஏற்படுத்தப்படும். யாதொருரெயில்வேயினிட உபயோகத்திற்காகவென்று யாதொருசொந்தமனுஷனால் இலவசமாய்விடப்பட யாதொரு நிலமானது யாதொரு ரெயில்வேகம்பெனியாருக்கு இந்தவகுப்பில் சேர்ந்த நிலமாகவிடப்படும் விஷயத்தில், அந்த நிலத்திற்காக முன்னாடியாக கவர்ண்மெண்டாருக்குச் செலுத்தப்பட்ட ஜம்மா அல்லது தீர்வையைத்தவிர கவர்ண்மெண்டாரால் யாதொரு குத்தகை மதிப்பும் விதிக்கப்படமாட்டாது.

6. ரெயில்வே சம்பந்தமான வேலை உண்டானதினால் யாதொருநிலமானது ரெயில்வே கம்பெனியாருக்குத் தேவையாயிருந்தும் ரெயில்வே கம்பெனியாருடைய வசத்தில் நேராய் வராத நிலம் D வகுப்புநிலம் என்று பெயர். அதுசெலவில்லாமல் கொடுக்கப்படும் இந்தநிலம் ரோட்டுக்கா

வேயன்றி வேறுகாரியத்திற்கல்ல அதாவது ரெயில்வேஸ்டேஷனிலிருந்து அல்லது முக்கியமான கட்டடங்களிலிருந்து கொஞ்சதூரத்தில் இருக்கும் ஸ்திரமாய் சாமான்வைக்கும் இடங்கள் அல்லது வேலைசெய்யுமிடங்களுக்கு போவதற்காக ஏற்படுத்தப்பட்ட புதுரோட்டுகள் அல்லது ரெயில்வேகட்டடங்கள் ஏற்பட்டதின் நிமித்தம் உண்டாக்கவேண்டியதாய் நேரிட்ட பழைய ரோட்டுகளின் கிளைகள் அல்லது மாறுதல்கள்.

7. ரெயில்வேகம்பெனியார் தங்களுக்காக மேலேவிவரித்தபடி யல்லாமல் வேறே விதமாக நிலம் வைத்திருந்தால் அதனால் அசௌகரியம் உண்டாகக்கூடும். இலவசமாய் ரெயில்வேகம்பெனியாருக்கு எந்தெந்த நிலங்கள் மேலேவிவரித்தபடிகொடுக்கப்படவேண்டியதில்லையோ அந்தநிலங்களை அவர்கள் கெவர்ண்மெண்டாரிடத்திலிருந்தே குத்தகைக்குப்பெற்றுக்கொள்ளும்படி செய்வதினால் நிலத்தில் அவர்களுக்குள்ளகாணியாக்ஷியானது சிக்கில்லாமல்போய்விடுகிறது; பின்னிட்டுரெயில்வேயானது கெவர்ண்மெண்டாருக்கு மாற்றப்படும்போது இதுஒரு முக்கியமானவிஷயமாயிருக்கும். ரெயில்வேகம்பெனியார் வசத்திலிருக்கிற A வகுப்பைச் சேராத யாதொருநிலத்திற்கு சர்க்காரால்கொடுக்கப்படவேண்டிய துகையை நிஷ்கரிஷை செய்வது அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அதிக கஷ்டமாயிருக்குமென்பது நிச்சயம்.

8. இலவசமாய் கொடுக்கப்படாததும் பிரத்தியேகபணம் அல்லது கம்பென்சேஷன் கொடுக்கப்படவேண்டியதுமான நிலத்தின்பேரில் இருக்கிற வீடுகள், மரங்கள், குளங்கள், அல்லது இதரசொத்துகளுக்காக உடனே ரெயில்வே கம்பெனியாரால் பணம்கொடுக்கப்படவேண்டியது. இலவசமாய் ஷை யார்களுக்கு கொடுக்கப்படும் நிலங்களின் விஷயத்தில் நிலத்தை சுத்திசெய்வதின்பேரில் கிடைக்கும் மரம் மட்டை முதலியசாமான்களை என்னசெய்தால் கெவர்ண்மெண்டாருக்கு அதிக லாபம் கிடைக்குமோ அவ்விதமாய் ரெவினியூ இலாகா உத்தியோகஸ்தர்கள் வினியோகப்படுத்திவிடவேண்டியது. தகையானது கெவர்ண்மெண்டாரிட செலவில் சுத்தப்படுத்தப்படுகிறது.

9. இருப்புப்பாதைக்குத் தேவையான எல்லாநிலங்களுக்காகவும் ஒன்றோடொன்று சேர்ந்த பாகங்களுக்கு விண்ணப்பங்கள் செய்துக்கொள்ளப்படவேண்டியது. ஒரு அங்குலமானது 150 அடி விஸ்தீரணத்தைக்காட்டும்படியான அளவுக்குப் படங்கள் எழுதப்படவேண்டியது. நிலங்களின் அளவும் விஸ்தீரணமும் பணவிஷயத்திற்காக கிராமங்கள், மவுஜே, தாலுக்கா, அல்லது பர்குண, அல்லது ஜில்லா என்று வகுக்கப்பட்டு இதன்பின்னால் சேர்க்கப்பட்டிருக்கிற நமுனவில் அந்தந்த நிலங்கள் எந்தெந்த வகுப்பில்

சேர்ந்ததாக இருக்கின்றனவோ அந்தவிபரத்தைக் கண்டும் எழுதவேண்டியது.

10. இந்த பலவகுப்பு நிலங்களுக்கு முறையே ஊதா, மஞ்சள், நீலம், பச்சை, இந்தவர்ணங்கள் கொடுக்கப்படவேண்டியது.

11. தனிப்பட்டிருக்கிற நிலத்துண்டை முக்கியமான படத்தின் ஒரு குறிப்பான இடத்தைக் கொண்டு அதற்கும் பிரஸ்தாபஇடத்துக்குமுள்ள தூரம் பரிமாணம் மற்ற அடையாளம் இவைகளையும், எந்தக்குறிப்பைக்காட்டினல் பிரஸ்தாபஇடம் உடனேதெரியுமோ அந்தவிவரத்தையும் காட்டி உதகரிக்கவேண்டியது; இதையனுஸரித்து முக்கியமான படத்தில் இந்த இடத்தைப்பற்றி கவனம் உண்டாகும்பொருட்டு பதிவுகளும் செய்யப்படவேண்டியது.

12. ரெயில்வே இஞ்சினீர்களால் தயார் செய்யப்படுகிற படங்களும் அட்டவணைகளும்மொத்தத்தில்சரியாயிருக்கின்றனவா என்பதைப்பற்றி கவர்ண்மெண்டுகன்ஸல்ட்டிங்கு இஞ்சினீர்கள் தெரியப்படுத்துகிறபடியால் பிரதேச கவர்ண்மெண்டாருடைய உத்திரவையனுஸ்ரித்து அதற்குத்தக்கபடி பைசல் செய்யப்படுவதற்காக விண்ணப்பங்களை ரெவினியூஇலாகாதார்களுக்கு அனுப்பவேண்டியது. மேலேவிவரித்தபடி நிர்ணயம் செய்யப்படவேண்டிய நிலத்துக்காக கம்பெனியாரால் வரவேண்டிய பணங்களெல்லாம் சரியாய் வரப்பற்றப்படுவதற்கு ரிவினியூ இலாகாதார்கள் கண்டிப்பாய் ஜவாப்தாரிகளாக்கப்படுவார்கள்.

13. ஒவ்வொரு ரெயில்வே சீப் இஞ்சினீர் ஆபீஸிலும் நிலத்தைப் பற்றிய பூர்த்தியான பிளான்கள் ரிகார்ட்டு செய்துவைக்கப்படவேண்டியது. அவர் நகல்களை ரிவினியூ போர்டாருக்கு அனுப்புவார். போர்டார் அந்தந்த ஜில்லாக்களுக்கு சம்பந்தப்பட்ட பாகங்களை எடுத்து கலெக்டருக்கு அனுப்புவார்கள். நிலத்தை சீக்கிரத்தில் வசப்படுத்த வேண்டியதற்காக ஒரு ஸ்பெஷல் கம்மிஷனரை இவ்வேலைக்கு நியமிப்பது அனுகூலமென்று தோன்றினல் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலத்தின் பிளானுக்கு மற்றொருகாபிசெய்து ரெயில்வே இஞ்சினீர்கள் லாண்டு கம்மிஷனரிட உபயோகத்திற்காகக் கொடுக்கவேண்டியது.

14. கவர்ண்மெண்டு கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீரும் அந்தந்தயிடத்து ரிவினியூ அதிகாரிகளும் முறையே அந்தந்த இலாகாக்களில் மேல்சண்ட விதிகள்படி சரியானகாலத்தில் நடவடிக்கை நடத்துவதற்கும் அந்தந்த ஆபீஸ்களில் பிளான்கள் ஜாக்கிரதையாய் ரிகார்ட் செய்யப்படுவதற்கும் ஜவாப்தாரிகளாக்கப்படுவார்கள்.

15. ரையில்வே கம்பெனியார் வசத்திலிருக்கிற நிலத்தில் ஏதாவது மாறுபாடு செய்ய உத்தேசிக்கப்பட்டால் ரையில்வே ஏஜண்டானவர் அதைப்பற்றிஉடனே கெவர்ண்மெண்டு கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீருக்கு தெரியப்படுத்தவேண்டியது. அவர்அதைப்பற்றி பிரதேச கெவர்ண்மெண் டாருக்குதெரிவிப்பார்; ரெவினியூஅதிகாரிகளைதங்கள் ரிகார்ட்டுகளில் அப் படிப்பட்ட மாறுதல்களைக்குறித்துக்கொள்ளச்செய்யவும் சிலசந்தர்ப்பத் தில்அவசியமான இதரநடவடிக்கைகளை நடத்தச்செய்யவும் தக்கமுயற்சி கள் எடுத்துக்கொள்ளவேண்டியது கெவர்ண்மெண்டார் கடமை.

16. எல்லாரையில்வே நிலங்களைப்பற்றியும் சரியான ரிஜிஸ்டரும்பாத் தியதையைக்காட்டும் ரிகார்ட்டும்வைக்கப்பட்டிருக்கிறதா வென்பதைப்பார் க்கவேண்டியது பிரதேச கெவர்ண்மெண்டாருக்கு அவசியமாய் இருக்கும்; ஏனென்றால் அப்படிப்பட்ட நிலங்கள்யாவும் என்றைக்காவது ஒருநாள் ராஜாங்கத்துக்கு திரும்பிவரக்கூடும். ரையில்வே கம்பெனியாரால் கெவர்ண் மெண்டாருக்குச் சேரவேண்டிய தீர்வைகளும் நிலங்களை சுத்திசெய்த பாபத்துக்காக வரவேண்டிய பணங்களும் சரியாய் வசூலாயிருக்கிறதா வென்று கெவர்ண்மெண்டார் கவனிக்கவேண்டியது.

17. ஒவ்வொரு ரையில்வேயிலும் எல்லாநிலங்களையும் காட்டத்தக்க தாகவும் துடர்ச்சியானதுமான ஒருஸெட்பிளான் இருக்கவேண்டியதவ சியம். ஒவ்வொரு ரெயில்வே கம்பெனியின் பூஸ்திதியைப்பற்றிய பிளா ன்கள் அவைகள் ஒருதரம் தயாராய் விட்டபிறகு அப்போதைக்கப்போது திருத்தப்பட்டுஎப்போதும் பூர்த்தியாய் வைத்துக்கொண்டிருக்கப்படவேண் டியது.

18. மேலேசொன்ன உத்திரவுகளையெல்லாம்கலெக்டர்கள்ஜாக்கிரதை யுடன் கவனிக்கவேண்டியது. 12 வது பிரகரணத்தில் உதகரிக்கப்படலான கையொப்பமிட்ட தஸ்தாவேஜையும் ஷிடியூலையும் வரப்பெற்றுக்கொண்ட தின்பேரில் கம்பென்சேஷன்துகையை நிர்ணயிக்கவேண்டியது. பிரதிவகுப் புநிலத்திற்கும் ஒருரிஜிஸ்டரை குறித்த நமுனைப்பிரகாரம்ஜாக்கிரதையுடன் தயார்செய்து அதுவரையில் பதிவுசெய்துவைத்திருக்க வேண்டியது. எடுத் துக்கொள்ளப்பட்ட ஒவ்வொருவிதமான நிலத்தையும் அதற்காக கொடுக்க வேண்டிய கம்பென்சேஷனையும்கண்டு அதேநமுனைப்பிரகாரம் மாதாந்திரம் ஸ்டேட்மெண்டு தயாரித்து அதை கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீர் துவாராகெ வர்ண்மெண்டாரிட அனுமதிக்கு அனுப்பவேண்டியது. இந்த ரிஜிஸ்டர்க ளின் அப்ஸ்ட்டிராக்ட்டை (சுருக்கத்தை) ஒருரிஜிஸ்டரில் பதிந்து அதையும் கலெக்டராபீஸில் வைத்துவைக்கவேண்டியது.

19. மேலான (அதாவது இந்தியா) கெவர்ண்மெண்டாருடைய உத்திரவுபிரகாரம்ரெயில்வேக்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டநிலங்களுக்காக கொடுக்கவேண்டிய கம்பென்சேஷன் முதலான இதரசெலவுகளைகண்ட்ரோலர் ஆப் பப்ளிக்கு வொர்க்ஸ் அக்கௌண்ட்ஸ்என்னும் உத்தியோகஸ்தரால் முன்னடியாக தணிக்கைசெய்யப்பட்ட பில்களின் ஆதாரத்தின் பேரில் பட்டுவாடா செய்யவேண்டியது. கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீரோ, அப்பேர்ப்பட்ட செலவுவிஷயமாய் மேல் விசாரணை செய்யும் அதிகாரியாக இருக்கிறார்; ஆகையால் இந்தமாதிரியான செலவுகளைத் தணிக்கைசெய்வதற்காக அடியில்கண்டவிதிகளைலோகல் (பிரதேச) கெவர்ண்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்:—(1)கம்பெனியாருக்கு ஒப்புவித்துவிட உத்தேசித்திருக்கிற நிலங்களையும் அவைகளுக்காக கொடுக்கவேண்டிய கம்பென்சேஷன் துகையையும் கண்டுகுறித்த நமுனைப்பிரகாரம் கலெக்டர்மாதவாரியில் ரிஜிஸ்டர்கள் தயார்செய்து அவைகளையும், அத்துடன்கூட ரிஜிஸ்டரில் காணப்பட்ட செலவுகளுக்காக குறித்த நமுனைப்பிரகாரம் ஒரு பில்லையும், கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீருக்கனுப்பவேண்டியது. (2) இந்த ரிஜிஸ்டர்களையும் பில்களையும் கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீர்கூடியவரையில் தாமதமன்றியில் கெவர்ண்மெண்டாரிட அனுமதிக்காக அனுப்பவேண்டியது. (3) அனுமதிசெய்யப்பட்டு கன்ஸல்ட்டிங்கு இஞ்சினீருக்கு வாப்ஸனுப்பப்பட்டவுடனே அவர் அதை கண்ட்ரோலருக்கனுப்பவேண்டியது. நிலத்தை மாற்றிக்கொண்டு கம்பென்சேஷன் துகையைமுஜராசெய்யும்பொருட்டு கண்ட்ரோலரானவர் அதை நேராக கலெக்டருக்கனுப்பிவிடவேண்டியது. (4) அவசரமான விஷயங்களில் அனுமதியைஎதிர்ப்பார்த்துநிலங்களை கம்பெனியாருக்கு ஒப்புக்கொடுத்துவிடலாம். ஆனால் அந்த ஸந்தர்ப்பங்களைப்பற்றி கன்ஸல்டிங்கு இஞ்சினீர் துவாரா கெவர்ண்மெண்டாருக்கு உடனே ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

20. புதுநிலம் அடமானம் செய்யவாவது, பைஷ்கஷையாவது குயிண்ட்ரெண்டையாவது குறைக்கவாவது ஆக்ஷேபணைகள் செய்யப்பட்டால் கம்பென்சேஷன்ஸ்டேட்மெண்டின்நகல்களை கலெக்டர்கள் போர்ட்டாருக்கு அனுப்பவேண்டியது; $\frac{1343}{3-3-64}$ நெ. புரொஸீடிங்க்ஸை அனுஸரித்து வருஷாந்திரம் அனுப்பப்படும் ஸ்டேட்மெண்டில் ரெயில்வே காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களைகண்டெழுதவேண்டியது.

21. ஜலம்போகிறவழிகளுக்காவது,வாராவதிகளுக்காவது, மதகுகளுக்காவது,ஆற்றின்கரைகளுக்காவது, கெடுதிஉண்டாகாமலிருக்கும்பொருட்டு ஜாக்கிரதைஎடுத்துக்கொள்ளவேண்டியதென்கிறநிபந்தனையின்பேரில்பாலஸ்

டுக்காக ஆற்றின்உள்வாயிலிருந்து மணல்எடுத்துக்கொள்ளளாயில்வே கம்பெனியாருக்கு உத்திரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமணல்யெடுத்துக்கொள்ளப்படுகிற விஷயத்தில் முன்னுடியாகபப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது; ஜமீன்இலாகாக்களில் ஜமீன்தாரிட உத்திரவைப்பெற்றுக்கொள்ளவேண்டியது.

13. ளாயில்வேஸ்டேஷன்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்கள்.—ளாயில்ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள நிலத்தை பொதுஜனங்களுக்குக்கொடுத்து விடுவதினுல் மெத்த அசௌகரியங்களுண்டாக ஹேதுயிருக்கிறபடியால் ளாயில்வேஸ்டேஷன்எல்லேக்கு அரைமயில் (880 கஜம்) தூரத்திற்குட்பட்டிருக்கிற யாதொருசாக்கார் நிலத்தையும் எவ்வித அனுபோகம் செய்துக்கொள்ளும் பொருட்டாவது, பிரதிவிஷயத்திலும் போர்ட்டாரிட அனுமதியன்றியில், கலெக்டர்கள் எந்தஸந்தர்ப்பங்களே முன்னிட்டும் அடமானம் செய்யவேகூடாது. தவிரவும் மேலான அதிகாரிகளிட உத்திரவன்றியில் அப்பேர்ப்பட்ட நிலத்தை அனுபோகித்துவரஉத்திரவுகொடுக்கக்கூடாது என்றும் அவர்களிட (தாலுக்கா அதிகாரிகளிட) செய்கையினுலாவதுஅசிரத்தையினுலாவதுயாராவதுஉத்திரவன்றியில் அப்பேர்ப்பட்ட நிலத்தை அனுபோகித்துவந்தால் அதற்கு அவர்களே (தாலுக்கா அதிகாரிகளே) ஜவாப்தாரிகளாக்கப்படுவார்களென்றும் தாலுக்கா அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டியது.

14. பொது உபயோகத்திற்காக வசப்படுத்தப்படும் கிராம ஊழியநிலத்துக்கு பர்த்திநிலம் கொடுப்பது.—ஒருகிராமநவுக்கரிட ஊழியத்திற்காக விடப்பட்டிருக்கிற நிலங்கள் பொது உபயோகத்திற்கு வேண்டியிருந்தாலாவது சொந்தக்காரனுல் விலக்கக்கூடாதகாரணங்களினுல் நிலம் சாகுபடிக்கு லாயக்கற்றதாய் போயிருந்தாலாவது (அப்படிஉபயோகமற்றுப்போன) நிலத்திற்குப்பதிலாக வேறே நிலங்கள் அடமானம் செய்யவேண்டியதற்காக் குறித்தபாரத்தில் கலெக்டர்கள் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டியது. எப்போது இப்பேர்க்கொத்த விண்ணப்பங்களே போர்ட்டாருக்கு அனுப்பவேண்டியதென்பது கலெக்டரிட யுக்தானுஸாரத்தைச்சேர்ந்தது. இம்மாதிரியான அநேககேஸ்களே ஒரேபாரத்தில் எழுதியனுப்பலாம். கைவிடப்பட்ட நிலங்களும் அவைகளுக்காக பர்த்திசெய்யப்படும் இனும் நிலங்களும் சமமானவிலேயுள்ளவைகளாய் இருக்கும்பக்ஷத்தில் புதுசாய் கொடுப்பதாய் உத்தேசித்திருக்கிற இனும் நிலமானது விஸ்தீரணத்திலும் ஒத்து இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல; ஆகிலும் நிலத்தின் விஸ்தீரணம் ஒத்து இருக்கக்கூடும் பக்ஷத்தில் ரொம்பயுக்தமாயிருக்கும். கிராம

ஊழியத்திற்காக விடப்பட்ட இனம் நிலங்களுக்கு பிரதிநிலம் கொடுக்கப்படும்பொருட்டு அந்தநிலங்கள் சாகுபடிக்கு லாயக்கற்றவைகளாய்ப் போயிருக்கவேண்டும்; அன்றியும் இனம்தார்களிட ஜாக்கிரதையினல் விலக்கக்கூடாமல் மிஞ்சிப்போன காரணங்களினல் லாயக்கற்றதாய் போயிருக்கவேண்டும். அப்பேற்பட்ட இனம் நிலங்கள் ரொம்பதாழ்ந்த வகுப்பைச்சேர்ந்தவை என்பதாவது அல்லது இனம்தார்கள் வேறேநிலங்கள் பெற்றுக்கொள்ளஇஷ்டமுள்ளவர்களா யிருக்கிருர்களென்பதாவது (பர்த்திநிலம் பெற்றுக்கொள்ள) போதுமானகாரணமாக மாட்டா.

15. கல் வெட்டிஎடுக்கிறது, சுரங்கம் தோண்டுகிறது இவைகளைப்பற்றிய நிபந்தனைகள். **1.** அடியில்கண்ட இடங்களில் இருக்கிற தாதுப்பொருள்களில் (அதாவது பொன் வெள்ளி முதலாகிய உலோகங்களில்) ராஜாங்கத்தாருக்கு யாதொருபாத்தியதையுமில்லை :—

எ. ஸ்திரமான ஸெட்டில்மெண்டாய் தீர்வை ஏற்பட்டபோது கொடுக்கப்பட்ட ஸன்னதுபெற்ற எஸ்டேட்டுகளில் (ஜமீன்முதலானவைகளில்),

பி. என்பிரன்சைஸான இனம் நிலங்களில்,

ஸி. இனம் நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள் பிரகாரம் மதசம்பந்தமான காரியங்களை சாஸ்வதமாய் அனுஷ்டித்துவரும் பொருட்டு விடப்பட்ட சொத்துக்களில்,

டி. கரம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள் பிரகாரம் 1879ஸ்ரீ அக்டோபர்மீ 7உக்குமுன்னிட்டு பட்டயசாஸனங்கள் கொடுக்கப்பட்டும் தாதுப்பொருள்களில் சர்க்காருக்கு பாத்தியதையுண்டென்று ஏற்பாடுசெய்யப்படாமலுமிருக்கிற நிலங்களில்.

2. அடியில்கண்ட விஷயங்களில் வெட்டிஎடுக்கப்பட்ட உலோகங்களில் ராஜாங்கத்தாருக்குப்பாகமுண்டு. கெவர்ன்மெண்டாருக்கு அவசியமாய்த்தோன்றும் பக்ஷத்தில் தங்களுக்குண்டான அந்தபாகத்துக்கு பணமதிப்பிட்டு அந்த பணத்தை நிலத்தீர்வையுடன் சேர்த்துவிடக்கூடும் :—

எ. ரயத்துவாரி பட்டாக்களைப் பெற்றுக்கொண்டு பயிரிட்டு அனுபோகித்துவரப்பட்ட நிலங்களில்,

பி. மலையாளம் ஜில்லாவிலுள்ள ஜென்மம் நிலங்களில் இந்த நிலங்களில் சுரங்கம்தோண்டி எடுக்க உத்தேசித்திருக்கும் ஜனங்கள் எந்தப் புலங்களில் சுரங்கம் தோண்டுவதாக உத்தேசித்திருக்கிருர்களோ அந்த நிலங்களைக்குறிப்பிட்டு அந்தஜில்லா கலெக்டருக்கு தங்கள் உத்தேசத்தைத்தெரிவிக்கவேண்டியது ; அவர்கள் நிலத்தீர்வையுடன்கூட அடியில் கண்ட

வீதப்பிரகாரம் உலோகங்களுக்காக விதிக்கப்பட்ட பிரத்தியேகமான தீர்வையைவருஷத்தில் 6 மாதத்திற்கு ஒருதரம் இரண்டுதவணையில் செலுத்தவேண்டியது:—

		ஏக்ரா–1–க்கு ரூபாய்.
1.	பொன்சுரங்கம் வெட்டி எடுப்பதற்கு.	5
2.	பொன்தவிரமற்ற உலோகங்களுள்ள சுரங்கம் வெட்டி எடுப்பதற்கு.	2
3.	வயிரக்கற்களும் இன்னும் விலையுயர்ந்த கற்களுள்ள சுரங்கங்கள்வெட்டிஎடுப்பதற்கு.	15
4.	நிலக்கரி சுக்காங்கல் முதலானவைகளுள்ள சுரங்கம் வெட்டி எடுப்பதற்கும் அல்லது கட்டடவேலைகளுக்காக கற்கள் வெட்டி எடுப்பது முதலானவைகளுக்கும்.	அப்போதைக்கப்போதுபோர்டால் ஏற்படுத்தப்படும் வீதங்கள்

கலெக்டருக்குமுன்னுடிதெரிவிக்காமல் சுரங்கங்கள் வெட்டி எடுத்தால்அவைகளுக்குமேல் கண்டவீதங்களை இரட்டிப்பு செய்து வரிவிதிக்கபபடும். சுரங்கங்களுக்காக விதிக்கப்படும் இந்தவரியானது நிலத்துக்காககொடுக்கப்பட்ட பட்டாக்களில் பதிவுசெய்யப்பட்டு, சென்னைப்பட்டணம் கெவர்ண்மெண்டாரிட 1864–ம்–வருடத்திய இரண்டாவது ஆக்ட் பிரகாரம் வசூலும் செய்யப்படும். பட்டாநிலங்களில் கிரமமாய்சுரங்கங்களைவெட்டிஎடுக்காமல் உலோகங்கள் இருக்கின்றனவா இல்லையாவென்று தெரிந்துக்கொள்ளும் பொருட்டு மாத்திரம் வெட்டிப்பார்த்தால் அதற்குயாதொரு வரியும் விதிக்கப்படமாட்டாது. சுரங்கங்களைவெட்டி வேலைசெய்து வருவதினுல் அந்த சுரங்கமுள்ள நிலமானது சாகுபடிக்கு லாயக்கற்றதாய்ப்போனுல் அந்தவிஷயத்தில்தீர்வை வஜா செய்யப்படமாட்டாது. பட்டா நிலக்காரர்களுக்கு அவர்கள் நிலங்களில் கிணறுவெட்டவும் அப்படி வெட்டும் போது அகப்படும் கற்களையும் பாறுகளையும் (பாறுகளாவது பெருமணல், கூழாங்கல்முதலியன) உபயோகப்படுத்துவதற்குள்ள பாத்தியதையானது மேல்கண்டவிதியினுல் எவ்விதமாயும் பாதிக்கப்படமாட்டாது. யாதாவதொருபட்டாதாரனுனவன்தன்னிட சொந்த உபயோகத்திற்காக பலானவேலைக்குத் தேவையான கூழாங்கல் முதலானவைகளை சொற்பமாய்வெட்டி எடுத்துக்கொள்ள இஷ்டப்படுவானேயானுல் அந்தவிஷயத்தில் யாதொருதீர்வையும் விதிக்கப்படமாட்டாது ஆனுல் அளவில்லாமல்வெட்டி எடுத்துக்கொள்ள அவன்உத்தேசித்தவனுகயிருக்கக்கூடாது. தவிரவும் வெட்டிஎடுக்குமுன்பாக அந்தநிலமானது சாகுபடிக்கு எப்படிலாயக்குள்ளதாயிருந்ததோ அப்படியே வெட்டி எடுக்கப்பட்ட பின்னும் அவ்வளவு லாயக்குக்குக் குறைவுள்ளதாயிருக்கக்கூடாது.

3. அடியில்கண்ட இடங்களிலுள்ள சுரங்கங்களுக்கும் உலோகங்களுக்கும் ராஜாங்கத்தாருக்கு முழுபாத்தியதையுண்டு.

ஏ. கரம்புநிலங்கள்விஷயமாய் ஏற்படுத்தப் பட்டிருக்கிற விதிகள் பிரகாரம் 1879ம் ௵ அக்டோபர்௴ 7-ம் தேதிக்குப்பின்னிட்டுவிற்கப் பட்ட நிலங்களில்;

பீ. எந்தநிலங்கள் வார்ஸ்தாரில்லாத்தால் சர்க்காருக்குச்சேர்ந்து போய் 1880௵ ஜூலைமாசம் 15ம் தேதி 850-ம் நெ. கெவரண்மெண்டார்டர்பிறப்பிக்கப்பட்டபிறகும் 1884-௵டிசம்பர்௴ 16-ம் தேதி1384-ம்நெ. கெவர்ண்மெண்டார்டர் பிறப்பிக்கப்பட்டமுன்பும் அவைகளிலுள்ள ஜென்மம் பாத்தியதை கெவரண்மெண்டாரால் ஏலத்தில் விற்கப்பட்டிருக்கிறதோ அந்தநிலங்களில்;

ஸீ. சர்க்காருக்கு ஊழியம் செய்வதற்குச் சம்பளமாகவிடப்பட்ட என்பிரன்சைஸாகாத இனும் நிலங்களில்;

டி. மதிராஸ்கெவர்ண்மெண்டாரிட பாரஸ்ட் ஆகட்பிரகாரம் காட்டுக்காக * ரிஸர்வ் செய்யப்பட்ட நிலங்களில்;

இ. சென்னைகெவர்ண்மெண்டாரிட பாரஸ்டு ஆக்ட் 26-வது பிரிவை யனுஸரித்து கெவர்ண்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகள் பிரகாரம் * ரிஸர்வ் செய்யப்பட்ட நிலங்கள், அல்லது விறகு உற்பத்தி செய்வதற்காக ரிஸர்வ் செய்யப்பட்ட காடுகள், அல்லது ஆடுமாடுகளுக்குத் தீனிக்காக ரிஸர்வ் செய்யப்பட்ட நிலம், அல்லது மேய்க்காலுக்காக ரிஸர்வ் செய்யப்பட்ட நிலங்கள் என்று பிரசித்தப்படுத்தப்பட்ட நிலங்களிலும், அல்லது தீப்பற்றிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டு பாதுகாத்துவரப்பட்ட காட்டு நிலங்களிலும் ;

எப். ரிஸர்வ் செய்யப்படாமல் கெவர்ண்மெண்டார் வசத்திலிருக்கிற கரம்புநிலங்களில்,

மேற்சொன்ன ஏ. பீ. ஸீ. என்ற மூன்று விஷயங்களிலும் சுரங்கங்கள் வெட்டி எடுப்பதற்காக விண்ணப்பம் செய்துக் கொள்ளப்பட்டால் அப்பேற்பட்ட விஷயங்கள் பிரதான மல்லாதவைகளா யிருக்கும் பக்ஷத்தில் கலெக்டராலும், அதிக பிரதான முள்ளவைகளாயிருக்கும்பக்ஷத்தில் போர்டாராலும் அல்லதுகெவர்ண் மெண்டாராலும் அந்தவிண்ணப்பங்கள் பைசல்செய்யப்படும். டி. இ. எப் என்ற மூன்று விஷயங்களில், பொன்முதலாகிய உலோகங்களுள்ள சுரங்கங்களை வெட்டியெடுக்க பாத்தியதை

* ரிஸர்வுசெய்யப்பட்டது என்றால் பலான உபயோகத்திற்கென்று பிரத்தியேகமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

வேணுமென்ருவது, அல்லது அந்த உலோகங்கள் இருக்கின்றனவா இல்லையாவென்று வெட்டிப்பார்ப்பதற்கு பாத்தியதைவேணும் என்ருவது, அல்லது வயிரக்கற்கள் முதலான விலையுயர்ந்த கற்களுள்ள சுரங்கங்களை வெட்டி எடுக்க பாத்தியதை வேணுமென்ருவது, விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்டால் அந்த விண்ணப்பத்தை இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற விதிகளில் முறையே I-II-III விதிகளின் பிரகாரம் பைசல் செய்யவேண்டியது. (முறையே என்ருல் பொன் முதலானவைகளுக்கு–1; அவைகள் இருக்கின்றனவாவென்று வெட்டிப்பார்ப்பதற்கு–II; வைரக்கற்கள் முதலானவைகளுக்கு III.) நிலக்கரி, சுக்காங்கல், இதர கனிசங்களுள்ள (உலோகங்களுள்ள) சுரங்கங்கள் வெட்டியெடுக்கவாவது, வர்ணக்கல், கட்டடத்துக்காக வேண்டியகல், கூழாங்கல், சலவைக்கல், இவைகளையாவது மட்பாண்டங்கள் வளையல்கள் செங்கல்கள் முதலியவற்றை செய்வதற்காக களிமண் அல்லது இதரமண்களை வெட்டி எடுக்கவாவது பாத்தியதை வேணுமென்று விண்ணப்பம் செய்துக்கொள்ளும் பக்ஷத்தில் அடியில் கண்டபிரகாரம் பைசல் செய்யலாம்.

i. கலெக்டரால் அப்போதைக்கப்போது குறிக்கப்பட்ட ஏதோஒரு காலம் வரையில் பொது ஜனங்கள் யாதொருவரியுமில்லாமல் மேற்சொன்னநிலக்கரி முதலான சுரங்கங்களை வெட்ட வுத்திரவு கொடுக்கப்படலாம்.

ii. * அதிபத்தியவரியை செலுத்துவதின் பேரில் பொது ஜனங்கள் தங்களுக்கு வேண்டியபிரகாரம் கல் முதலாகியது வெட்டிஎடுத்துக்கொள்ள உத்திரவு கொடுக்கலாம்.

iii. கருங்கல்வெட்டி எடுக்கும்போது ஜனங்கள் செலுத்த வேண்டிய அதிபத்திய வரியை வசூல் செய்வதை ஏலம் போட்டாவது வேறேவிதமாயாவது குத்தகைக்கு விடலாம்.

iv. கருங்கல்களுள்ள சுரங்கங்களையே பயிரங்கமான ஏலம்போட்டாவது வேறு விதமாயாவது குத்தகைக்கு விடலாம் ; பொது ஜனங்கள் கல் வெட்டி எடுத்துக் கொள்ள பாத்தியதை தங்களுக்கு வேணுமென்ருல் குத்தகை எடுத்தவர்களுக்கு அதிபத்திய தீர்வையைச் செலுத்துவதின் பேரில் அந்த பாத்தியதையை அடையலாம்.

v. நிலக்கரியைப் போலொத்த விசேஷமான சில விஷயங்களுக்காக செய்துக் கொள்ளப்படும் விண்ணப்பங்களை பொன்முதலாகிய உலோகங்

---

* அதிபத்தியவரியென்ருல், ரிஸர்வ் செய்யப்பட்ட நிலங்களுக்காக கெவர்ண்மெண்டாரால் விதிக்கும்படி வுத்திரவு கொடுக்கப்பட்ட வரி என்று அர்த்தம்; அவசியமானல் இந்தவரியை கலெக்டரானவர் குறைக்கலாம்.)

களுள்ள சுரங்கங்களைவெட்டி எடுப்பதற்காகக்கொடுக்கப்படும் விண்ணப்பங்களைப்பைசல் செய்வதற்கு எவ்வித விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அதேமாதிரி விதிகளை அனுசரித்து பைசல்செய்யலாம் ; இந்த விஷயத்தில் நிலத்தை சாகுபடி செய்வதற்காக விதிக்கப்பட்ட தீர்வையுடன் ஏகராவொன்றுக்கு இவ்வளவு வரிகொடுக்கவேண்டிய தென்று போர்டார் ஏற்படுத்துவார்கள்.

கல்வெட்டி எடுப்பதற்காக மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட 5 விதங்களில் எந்த விதமானது பலான ஜில்லாவின் சந்தர்ப்பங்களுக்கும் பலான விஷயத்தின் தன்மைக்கும் பொருந்தினதென்று தீர்மானிக்க வேண்டியது கலெக்டரைச்சேர்ந்தது. எந்தெந்த நிலங்களில் கல்வெட்டி எடுக்க உத்திரவு கொடுக்கலாமென்று நிச்சயிப்பதும் கலெக்டரைச் சேர்ந்தது. சாகுபடிக்கு லாயக்கான ஸ்திதியில் நிலத்தை திருப்பிக்கொடுக்க வேண்டியதென்று ஷரத்து செய்யவேண்டியதவசிய மாயிருக்கிற விஷயங்களில் ஷரத்து செய்யவேண்டியதும் அவரைச்சேர்ந்தது.

டி. யி. என்ற இரண்டுவிஷயங்களிலும் பாரஸ்டு ஸர்க்கில் கன்சர்வேட்டரைக்கலந்து தீர ஆலோசனை செய்யவேண்டியது.

4. கட்டடவேலைக்கு உபயோகமுள்ள கல்முதலான விலையுயர்ந்த கருங்கல்களுள்ள கரம்பு நிலங்களை சாகுபடி செய்வதற்காக பட்டாகொடுத்து அடமானம் செய்யக்கூடாது.

5. மேல்கண்ட விதிகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட சுரங்கங்களை வெட்டியெடுக்கும் வேலைகளை எந்த நிலததில் நடத்த உத்திரவு கொடுக்கப்பட்டதோ அந்த நிலத்தின் மேற்பரப்புக்கு அடியிலும் நேர்வுச்சமான எல்லைகள் வரையிலுமே நடத்தவேண்டியது ; அந்த எல்லைகளை மீறி தரையின்கீழ் வேலைசெய்யக் கூடாது.

I. பொன் முதலாகிய உலோகங்களை சுரங்கத்திலிருந்து வெட்டியெடுப்பதற்காக கரம்பு நிலங்களை அடமானம் செய்யும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள்; $\frac{544}{25—5—82}$ கெவர்ண்மெண்டு ஆர்டர்:—

i. கெவர்ண்மெண்டார் வசத்திலிருக்கிற கரம்பு நிலங்களில் பொன் அல்லது இதர உலோகங்களை வெட்டி யெடுக்க உத்திரவு பெற்றுக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் சுரங்கம் வெட்டி யெடுக்க குத்தகைப்பத்திரம் வேண்டுமென்று கலெக்டரிடத்தில் விண்ணப்பம் கொடுத்துக்கொள்ள வேண்டியது ; அப்படி விண்ணப்பம் செய்வதில் சுரங்கம் வெட்டி யெடுப்பதாய்

உத்தேசித்திருக்கிற நிலம் பலான இடத்திலிருக்கிற தென்றும் அதின் எல்லைகளைக் கூடியவளாயில் சரியாய்குறிப்பிட்டும் அதனிட உத்தேச விஸ்தீரணம் இவ்வளவென்றும் கண்டெழுத வேண்டியது. விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்ட பூமியை சாதாரணமாய் ஒரு படத்திலெழுதிக்காட்டி அந்த படத்தையாவது, ஸர்வேபிளானுக்கு நகல் ஒன்றெடுத்து தேவையான துண்டு நிலத்தின் நிலமையை உத்தேசமாக அந்த பிளானில் குறிப்பிட்டு அந்த நகலையாவது, பிரதி விண்ணப்பத்துடனேயும் அனுப்பவேண்டியது.

ii. பொன் வெட்டியெடுப்பதற்கு உத்திரவு பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்டிருந்தால் அப்படி விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்ட துண்டு நிலத்தின் விஸ்தீரணமானது 150 ஏகராக்களுக்குமேற்பட்டிருக்கக்கூடாது. தவிரவும் ஒவ்வொருதுண்டு நிலத்தினுடைய அகலமானது 70கஜத்துக்கு குறைவுப்பட்டதாயிருக்கக்கூடாது. பொன் தவிர மற்ற உலோகங்களை வெட்டி எடுப்பதற்காக விண்ணப்பங்கள் செய்துக்கொள்ளப்பட்டால் அந்தவிஷயங்களில் அப்பேற்பட்ட துண்டுநிலமானது அரைசதுரமயிலுக்கு மேற்படக்கூடாது.

iii. பெற்றுக்கொள்ளப் பட்ட வரிசை பிரகாரம் விண்ணப்பங்கள் பைசல்செய்யப்படும்.

iv. யாதொரு விண்ணப்பமானது வரப்பெற்றுக் கொள்ளப்பட்ட உடனே கலெக்டரானவர் அதை (ஏ—நமூனாரிஜிஸ்டரில்) பதிவுசெய்தபிறகு அந்த நிலமானது கெவர்ண்மெண்டாரிட வசத்திலிருக்கிறதாவென்றும் அந்தநிலத்தை அடமானம் செய்யும் விஷயத்தில் அந்தநிலமானது பொது உபயோகங்களுக்காக தேவை யென்றுவது அல்லது வேறே எந்தக்காரணத்தை முன்னிட்டாவது ஏதாவது ஆக்ஷேபணை உண்டாவென்று விசாரித்துத் தெரிந்துக்கொள்ள வேண்டியது.

v. யாதொரு ஆக்ஷேபணையுமில்லாததாக தெரியவரும் பட்சத்தில் கலெக்டரானவர் விண்ணப்பத்தை அங்கீகரித்துக்கொண்டு விண்ணப்பதாரனுடைய செலவில் தாமதமன்றியில் நிலத்தை டிமார்கேஷன் சர்வேசெய்விக்கவேண்டியது; ஆனால் முன்னுடியாக டிமார்கேஷன் சர்வேசெய்யப்பட்டிருந்து அதுவே

கலெக்டருக்குத் திருப்திகரமாயிருந்தால் மேலேசொன்னபடி மறுபடியும் டிமார்கேஷன் சர்வே செய்யவேண்டியதில்லை. கரம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளில் 6, 7, 11 விதிகள் இந்த விஷயத்தில் சம்பந்தப்படும்.

vi. பிறகு விண்ணப்பதாரனுக்கு குறித்த நமூனு பிரகாரம் (அத தற்குத்தக்கபடி பீ. அல்லது ஸீ. நமுனவில்) ஒருகுத்தகை சாசனம் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கொடுக்கப்படும்:—

1. இருபது வருஷத்திற்கு மேற்படாத வோர்காலத்திற்கென்றுகுத்தகை சாசனம் தயார் செய்யப்படும்.

2. பொன் வெட்டியெடுப்பதற்காக கொடுக்கப்பட்ட குத்தகை சாசனமாயிருந்தால், ஏகரா 1க்கும் அல்லது ஒன்றுக்கு குறைந்த பாகத்திற்கும் வருஷவாரி குத்தகை ரூபா 5 ஆகவும், பொன் தவிரமற்ற உலோகங்களைவெட்டி எடுப்பதற்காக கொடுக்கப்பட்ட சாஸனமாயிருந்தால் ஏகரா1க்கும் அல்லது ஒன்றுக்கு குறைந்த பாகத்திற்கும் ரூபா–2–ஆகவும், கூடுகிற தொகையை நிலுவையில் சமமாக ஆறுமாதத்திற்கு ஒருதவணையாக செலுத்தவேண்டியது. குத்தகை சாசனம்தயார் செய்யப்பட்ட தேதிமுதல் ஆருமாதமுடிவில் முதல் தவணையைச் செலுத்த வேண்டியது.

3. பொன்தவிர மற்ற வுலோகங்களை வெட்டியெடுப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட குத்தகை சாசனத்தை அனுசரித்து சுரங்கங்களில் வெட்டி யெடுக்கும்போது ஒரு டன் உலோகக்கல்லில் 27 பென்னி வெயிட் தாமாஷாவுக்கு மேற்பட்டு பொன் அடங்கி யிருப்பதாக குத்தகைதாரருக்குத் தெரியவந்தால் அதைப்பற்றி கலெக்டருக்குத்தெரிவித்து பொன் வெட்டியெடுப்பதற்காக குத்தகை சாசனம் பெற்றுக்கொள்ள வேண்டியது; பொன் வெட்டியெடுக்க குத்தகை யெடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தில் கண்டெடுக்கப்படும் வேறெந்த உலோகங்களையும், பொன் வெட்டி யெடுப்பதற்காக கொடுக்கப்

பட்ட குத்தகை சாசனத்தின் ஆதாரத்தைக்கொண்டே வெட்டிக்கொள்ள பாத்தியதை உண்டு.

4. குத்தகை சாஸனம் தயார்செய்யப்பட்டது முதல் ஒன்பது மாதத்திற்குள்ளாக குத்தகை தாரனுனவன் வேலைகளைத் துவக்கவேண்டியது; பின்னிட்டு, விலக்கவொண்ணாததற்செயலால் தடை உண்டானாலொழிய குத்தகைசாஸனத்தின் செலாவணி காலம் வரையில் வேலைகளை மெத்த செம்மையாயும் சித்திபெறக்கூடிய மாதிரியாகவும் நடுவில் விட்டுவிடாமலும் செய்துவரவேண்டியது. அப்படிசெய்திருப்பதாக தேவையானபோது ருஜூப்பிக்கவேண்டியது.

5. குத்தகை அடமானம் செய்யப்பட்ட நிலத்திலுள்ள எல்லாவெட்டு மரங்கள் இதரமரங்கள் இவைகளிட விலையை கலெக்டராலாவது இதுவிஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தர்களாலாவது ஏற்படுத்தப்பட்ட பிரகாரம் குத்தகைதாரன் செலுத்த வேண்டியது.

6. சுரங்கம் வெட்டி யெடுப்பதற்காக இந்தவிதிகளை யனுஸரித்து குத்தகைக்கு விடப்பட்ட யாதொரு துண்டு நிலத்தில் இருக்கிற ரஸ்தா, பாதை, கிளைவழி, முதலானவற்றையாவது நீரோடைகளையாவது அப்படி குத்தகை அடமானம் செய்யப்பட்ட துண்டு நிலத்தின்ஹத்துக்கு வெளிப்பட்டு திருப்பக்கூடாது; அப்பேற்பட்ட துண்டு நிலத்தின் குறுக்கே சுபாவமாய் உண்டாயிருக்கிற வாய்க்காலில் ஓடும்ஜலத்தை உபயோகித்துக்கொண்டால் அப்படி உபயோகித்துக்கொண்ட பிற்பாடு அந்தஜலத்தை அந்தநிலத்தின் ஹத்துவரையில் அந்த வாய்க்காலில் திருப்பிவிட வேண்டியது.

7. குத்தகை சாஸனத்தில் கண்ட நிபந்தனைகளில் எதையாவது அனுஷ்டிக்கக் குத்தகைதாரன் தவறிப் போகும்பக்ஷத்தில் குத்தகையை இழந்துவிட வேண்டியதாகும் ; குத்தகை சாஸ்னத்தில் கண்ட நிபந்

தனைகள் கிரமமாய் அனுஸரிக்கப்பட்டதா இல்லையா வென்பதைப் பார்த்து கடைசி தீர்ப்பு செய்யவேண்டியவர் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களா யிருக்கிறார்.

8. அஸல் குத்தகை சாஸனம் முடிவு பெறுவதின் பேரில் தற்காலம் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களால் ஏற்படுத்தப்படும் ஷரத்துகளின்பேரில் குத்தகை தாரனிட யுக்தானுஸாரம் குத்தகை சாஸனமானது புதுப்பிக்கப்படும்.

9. அஸல் குத்தகை சாஸனம் செலாவணியாயிருக்கிற காலம்வரையில் (2) வது வாக்கியத்தில் குறிப்பிட்ட குத்தகைவரி தவிர ராஜாங்கத்தாருக்காக வேறே யாதொருவரியையும் செலுத்த வேண்டியதில்லை; ஆனால், (சென்னை 1884 ஹ௵த்திய 5 வது) லோகல் போர்ட் ஆக்ட் அல்லது தற்காலம் ஊர்ஜிதத்திலுள்ள அம்மாதிரியான எந்தசட்டத்தினிட நியமனங்கள் பிரகாரமாவது விதிக்கப்படும் வரிகளைச் செலுத்தவேண்டியதாகும்; தவிரவும் குத்தகைதாரனிட வேலைப்பாடுகளால் நேராய் பாதிக்கப்பட்ட பொது ஜனத்தாரிட சுதந்தரங்களை முன்னிட்டு ஏற்படுத்தவேண்டிய பிரத்தியேகமான போலீஸ், போக்குவரத்துக்கு ஆதாரங்கள், ஜலப்பாய்ச்சல்கள், சௌக்கியம் பாதுகாார்ப்பது இன்னும் இவைகளைப்போலொத்த ராஜாங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாக கெவர்ன்மெண்டார் தாத்பரியத்தில் அவசியமாக ஏற்பட்டால் அப்பேற்பட்ட ஏற்பாடுகளுக்காக பிடிக்கும் செலவை குத்தகை தாரனிடத்திலிருந்து வசூல் செய்யும்பொருட்டு இனிமேல் விதிக்கக்கூடிய வரியையும் செலுத்தவேண்டியதாகும்.

vii. குத்தகைசாஸனமானது கிரமமாய் ஸ்டாம்பு ஒட்டப்பட்டு (நகலுடன்கூட) கக்ஷிக்காரர்களால் நிறைவேற்றப்பட்ட பிற்பாடு கெவர்ன்மெண்டாரால் கையொப்பமும் முத்திரையும் செய்யப்படும்பொருட்டு அனுப்பப்படும். (கையெழுத்தாய்) வாப்ஸ் அனுப்பப்படும்போது ஒருநகலை குத்தகை தாரனுக்கு ஒப்புவிக்கப்படும், மற்றொன்றை கலெக்டராபீஸில் தஸ்தவேஜாக

வைக்கப்படும்; ரிஜிஸ்டரில் அடமானம் செய்யப்பட்டதற்காகக் கொடுத்திருக்கும் நெம்பருடன் ஒத்து இருக்கும்படியாய் அதே நெம்பரை குத்தகைசாஸனத்துடன் அனுப்பவேண்டிய சாஸனங்களுக்கும் ப்ளான்களுக்கும் கொடுக்கவேண்டியது. ப்ளான்களில் கலெக்டர் கையெழுத்து செய்து சாஸனங்களுடன் பத்திரமாய்சேர்த்து தைக்கவேண்டியது.

viii. முன்னடியாக கலெக்டரிட எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்ட நிலத்தில் பிரவேசிக்கவும் கூடாது, வேலைகளைச் செய்யத்துவக்கவும் கூடாது.

II. காம்பு நிலங்களில் பொன்முதலான உலோகங்ள் இருக்கின்றனவா இல்லையாவென்று தெரிந்துக்கொள்ளும்பொருட்டு வெட்டிப்பார்ப்பதற்காக லைசென்ஸ் கொடுப்பதற்கான விதிகள்; $\frac{126}{1-2-62}$ நே. தேவர்ண்மேண்டார்டர்.

i. கவர்ண்மெண்டாரிட வசத்திலுள்ள காம்பு நிலங்களில் பொன்முதலான உலோகங்கள் இருக்கின்றனவா இல்லையா வென்று வெட்டிப்பார்க்க எகசுதந்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விருப்பமுள்ள ஜனங்கள் ஜில்லா கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியது, அப்படி விண்ணப்பம் செய்வதில் தேடிபார்பபதற்காக உத்தேசித்திருக்கப்பட்ட நிலம் இருக்கிற இடத்தை பரிஷ்காரமாய் குறிப்பிட்டும் அதின்எல்லைகளைக் கூடியவரையில் விவரித்தும் அதின் உத்தேச விஸ்தீரணத்தையும் கண்டெழுதவேண்டியது; விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட நிலத்தை ஒருபடத்தில் சுமாராகவரைந்து அந்தபடத்தை பிரதிவிண்ணப்பத்துடனேயும் அனுப்பவேண்டியது; அந்தநிலமானது விஸ்தீரணத்தில் சாதாரணமாய் அரைசதுரமயிலுக்குமேற்படாமல் ஒரேதுண்டுநிலமாகயிருக்கவேண்டியது.

ii. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட வரிசைப் பிரகாரம் கலெக்டர்களால் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு டீ. பாரத்தில் பதிவுசெய்யப்படும்

iii. யாதொரு விண்ணப்பமானது வரப்பெற்றுக் கொள்ளப்பட்டவுடனே, கலெக்டரானவர் அந்த நிலம் கெவர்ண்மெண்டா

ர்வசத்தில் இருக்கின்றதாவென்றும் கோறிக்கொள்ளப்பட்ட படி அனுமதி கொடுப்பதற்கு நிலம் பொது உபயோகங்களுக்கு வேண்டிய தென்கிற காரணத்தினுலாவது வேறெந்த காரணத்தை முன்னிட்டாவது ஆக்ஷேபணை உண்டாவென்றும் விசாரித்துத்தெரிந்து கொள்ளவேண்டியது.

iv. அப்பேர்ப்பட்ட யாதொரு ஆக்ஷேபணையும் இல்லாததாகதெரியவரும் பக்ஷத்தில் கலெக்டரானவர் விண்ணப்பத்தை அங்கீகரித்துக்கொண்டு தாமதமன்றியில் நிலத்தை விண்ணப்பததாரனிட வசத்தில் ஒப்புவித்து ௯. நமுனுபிரகாரம் ஒரு லைசென்ஸை அடியில்கண்ட நிபந்தனைகளின்பேரில் கொடுக்க வேண்டியது; அதாவது:—

1. அந்த லைசென்ஸானது ஆறுமாதகாலத்திற்கு செல்லுமென்றும் உலோகங்கள் இருக்கின்றனவாவென்றும் இல்லையாவென்றும் தெரிந்துகொள்ளும்பொருட்டுமாத்திரமே லைசென்ஸ் இடங்கொடுக்குமென்றும் அஸலாய் சுரங்கம் வெட்டி எடுக்க இடம் கொடுக்காதென்றும்,

2. ஏகரா 1-க்கும் அல்லது ஓர் பாகத்திற்கும் 1௹ வீதம் குத்தகைத்துகை லைசென்ஸ்கொடுக்கப்பட்ட தேதியில் முன்பணமாக லைசென்ஸ் தாரனுல் கொடுக்கப்படவேண்டியதாகும் என்றும்,

3. 2வது வாக்கியத்தில் சொல்லப்பட்ட குத்தகை தவிர வேறே யாதொரு தீர்வையும் செலுத்த வேண்டியதில்லை. ஆனுலும் (1884 ஷுலெசென்னை 5வது) லோகல்போர்ட்டின் நியமங்கள் பிரகாரமாவதுதற்காலம் ஊர்ஜிதத்தில் இருக்கிற வேறே அம்மாதிரி ஆக்டை அனுஸரித்தாவது ஏதாவது வரி ஏற்படுத்தப்பட்டால்அப்பேற்பட்ட வரிகளைச்செலுத்த வேண்டியதாகும்என்றும்,

4. லைசென்ஸ் தாரனுனவன் அந்தநிலத்தை வெட்டிப்பார்த்துஉலோகம் இருப்பதாய்கண்டுபிடித்ததாககலெக்டருக்குத் திருப்திகரமாய் ஏற்படும்படி தெரிவிக்கும் பக்ஷத்தில், லைசென்ஸ் காலம் முடிவுபெற்றதுமுதல் ஒருமாதத்திற்குள்ளாக சுரங்கங்கள் வெட்டி எடுப்ப

தற்காக விண்ணப்பம்செய்துகொண்டால் சுரங்கம் வெட்டி எடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளின்பேரில் குத்தகையைபெற லைசென்ஸ்தாரனுக்கு முதல்பாத்தியதை யுண்டு; ஆகிலும் விண்ணப்பம் செய்துக்கொள்ளப்பட்ட துண்டு நிலங்களானவை வசதியற்ற விஸ்தீரணமுள்ள சிறுசிறு துண்டுகளாக இருந்தாலாவது அல்லது விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளப்படாத பாகங்களுக்குப் போவதற்குத் தடைபடுமான நிலைமையிலிருந்தாலாவது கலெக்டரானவர் அந்த துண்டு நிலங்களை சௌகரியமுள்ள பாதிகளாய்ப்பிரிக்க சர்வாதிகாரமுள்ளவர் என்று தெரிந்துகொள்ள வேண்டியது. வெட்டி எடுப்பதற்குக் குத்தகை வேணுமென்று செய்துக்கொள்ளப்படும் விண்ணப்பத்தில் பொன் வெட்டி எடுக்கப்போகிறதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதா அல்லது இதர உலோகங்களைவெட்டிஎடுப்பதற்காக விணணப்பம் செய்துகொள்ளப்படுகிறதா வென்று கண்டெழுதவேண்டியது. சுரங்கம் வெட்டி யெடுப்பதற்காக குத்தகைகளுக்கு விதிகள் ஏற்படுத்தப்பட்ட பிரகாரம் உயர்ந்தபக்ஷம் விஸ்தீரணத்திற்கு அதிகமாக அப்பேற்பட்ட குத்தகை அடமானம் செய்யப்படமாட்டாதென்று பரிஷ்காரமாய் தெரிந்துக் கொள்ளவேண்டியது; லைசென்ஸ் தாரனிட செலவின்பேரில் நிலம் டிமார்க்கேஷன் ஸர்வைசெய்யபட்ட பிற்பாடு சுரங்கம் வெட்டி எடுக்கக் குத்தகை அடமானம் செய்யப்படும்,

5. விதிகளை அனுஸரித்து தான் பெற்றுக்கொள்ளக்கூடிய சுரங்கக் குத்தகை எடுத்துக்கொள்ளப்பட்ட விஸ்தீரணத்திற்கு ஜாஸ்தியான நிலங்களில் குழிகளை வெட்டியாவது வேறே விதமாயாவது யாதொரு லைசென்ஸ்தாரன் பழுது உண்டாக்கி யிருந்தால், அப்படி உண்டாக்கப்பட்ட பழுதை சீர்திருத்துவதற்காகத் தேவையான தொகையை கம்பன்சேஷனாக கெவர்ன்மெண்டாருக்குச் செலுத்த வேண்டியது.

ஆகிலும் அப்படி செலுத்தவேண்டிய துகையானது தீர்வை ஏற்பட்டிருக்கிற நிலமாயிருந்தால் அப்பேர்ப்பட்ட நிலத்தில் பழுதுசெய்யப்பட்ட பாகத்திற்குள்ள தீர்வைக்கும், அல்லது (தீர்வை ஏற்படாமலிருந்தால்) அக்கம்பக்கத்திலுள்ள அம்மாதிரி தீர்வை ஏற்பட்ட நிலங்களின் வகுப்பை சேர்ந்தவைகளென்று ஏற்பட்டிருந்தால் அந்த நிலங்களுக்கு என்ன தீர்வையுண்டோ அந்த தீர்வையில் பழுதுசெய்யப்பட்ட பாகத்திற்குள்ள தீர்வைக்கும், 25 மடங்குக்கு அதிகமாயிருக்கக்கூடாது.

6. இந்தலேசென்ஸின் நிபந்தனைகள் பிரகாரம் அனுஷ்டிக்கப்பட்டதாவென்றும் அனுஷ்டிக்கபடவில்லையாவென்றும் தகரார்களாவது வெவ்வேறான அபிப்பிராயங்களாவது உண்டானல் ஆலோசனே சபையிலுள்ள கவர்னர்அவர்கள் மத்தியஸ்தம் செய்யவேண்டியவர்கள், அவர்களிட தீர்ப்பானது முடிவுள்ளதாகும் (அதாவது அதற்குமேல் அப்பீல் கிடையாது).

v. முன்னுடியாக கலெக்டரிட எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட நிலத்தில் பிரவேசிக்கவும் கூடாது, வேலேகளை ஆரம்பிக்கவும் கூடாது.

III. வைரக்கற்கள் முதலான விலே உயர்ந்த கற்களை வெட்டி எடுக்க காம்புநிலஅடமானம் செய்வதற்காகஏற்படுத்தப்பட்டவிதிகள் $\frac{961}{9-9-82}$ நெ. கேவர்ண்மெண்டார்டர்.

i. கவர்ண்மெண்டு நிலத்தில் வைரக்கல்முதலான விலேயுயர்ந்த கற்களை வெட்டி எடுக்க அனுமதிபெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஜில்லா கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது, அப்படி விண்ணப்பம் செய்துக்கொள்வதில் சுரங்கம் வெட்டி எடுப்பதற்காக உத்தேசித்திருக்கப்பட்ட நிலமிருக்கு மிடத்தை பரிஷ்காரமாய் குறித்தும் கூடியவரையில் சரியாய் எல்லேகளைக் குறித்தும் உத்தேச விஸ்தீரணம் இவ்வளவென்றும் கண்டெழுதவேண்டியது; விண்ண

ப்பம் செய்துக்கொள்ளப்பட்ட துண்டுநிலத்தை சுமாராக ஒருபடத்தில் வரைந்து அதை பிரதிவிண்ணப்பத்துடனே யும் அனுப்பவேண்டியது.

ii. யாதொரு விண்ணப்பமானது வரப்பெற்றுக் கொள்ளப்பட் டவுடனே கலெக்டரானவர் அந்த நிலம் கெவர்ன்மெண் டார் வசத்தில் இருக்கிறதாவென்றும் கோறிக்கொள்ளப் பட்டபடி அனுமதி கொடுப்பதற்கு நிலம்பொது உபயோகங் களுக்கு வேண்டியகாரணத்தினுலாவது வேறெந்த காரண த்தை முன்னிட்டாவது ஆக்ஷேபணை உண்டாவென்றும் விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டியது; சுரங்கங்கள் வெட்டி யெடுப்பதற்காக குத்தகை அடமானம் செய்யுமுன் பாக மேய்காலுக்காகவும் மற்ற பொது உபயோகங்களுக்காக வும் போதுமான வீஸ்தீரணத்தை கிராமத்திய கரம்பு நிலத் தில் கலெக்டரானவர் ரிஸர்வுசெய்து வைக்கவேண்டியது.

iii. 50–ஏகராவுக்கு மேற்பட்ட வீஸ்தீரணமுள்ள துண்டு நிலத் திற்கு செய்துக்கொள்ளப்படும் யாதொருவிண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

iv. விண்ணப்பங்கள் வரப்பெற்றுக் கொள்ளப்பட்ட வரிசை பிரகாரம் கலெக்டரால் நடவடிக்கை நடத்தப்படும். முன் னுடியாக அவருடைய உத்திரவு பெற்றுக் கொள்ளாமல் விண்ணப்பம் செய்துக் கொண்ட நிலத்தில் பிரவேசிக்கக் கூடாது.

v. யாதொரு விண்ணப்பமானது கலெக்டரால் அங்கீகரிக்கப் பட்டதின்பேரில் விண்ணப்பதாரருடைய சிலவில் நிலத்தை ஸ்திரமாய் டிமார்க்கேஷன் ஸர்வே செய்யவேண்டியது; அடி யிற்கண்ட நிபந்தனைகளின் பேரில் (எப்) நமூனு பிரகாரம் குத்தகை சாஸனம் கொடுக்கப்படும். அதாவது:—

1. குத்தகை சாஸனமானது 5-வருஷத்திற்கு மேற்படாத ஓர்காலத்திற் கென்று தயார் செய்யப்படும்.

2. ஒரு ஏகராவுக்கும் அல்லது ஒன்றுக்குக்குறைந்த பா கத்திற்கும் வருஷவாரி குத்தகை ரூ 15 ஆக நிலு வையில் சமபாகமாய் ஆறுமாதத்திற்கொரு தவணை யாக செலுத்தவேண்டியது. குத்தகை சாஸனம் தயார்செய்யப்பட்டதேதிமுதல் ஆறுமாதமுடிவில் முதல்தவணையைச் செலுத்தவேண்டியது.

3. குத்தகை சாஸனம் நிறைவேற்றப்பட்டது முதல்–6–மாசத்திற்குள்ளாக குத்தகைதாரனானவன் வேலைகளைத் துவக்கவேண்டியது, பின்னிட்டு விலக்கலொண்ணாத தற்செயலால் தடை உண்டானாலொழியகுத்தகை சாஸனம் செலாவணியாயிருக்கிற காலத்தில் வேலைகளை மெத்த செம்மையாகவும் ஸித்திபெறக்கூடிய மாதிரியாகவும் நடுவில் விட்டு விடாமலும்செய்துவரவேண்டியது; அப்படிசெய்திருக்கிறதாக தேவையானபொழுது ருஜுபிக்க வேண்டியது.

4. குத்தகை அடமானம் செய்யப்பட்ட நிலத்திலுள்ள எல்லா வெட்டுமரங்கள், இதரமரங்கள், இவைகளிட விலையை கலெக்டராலாவது இதுவிஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தர்களாலாவது ஏற்படுத்தப் பட்டபிரகாரம் குத்தகைதாரன் செலுத்த வேண்டியது.

5. சுரங்கம் வெட்டிஎடுப்பதற்காகஇந்தவிதிகளையனுஸரித்துக் குத்தகைவிடப்பட்ட யாதொரு துண்டு நிலத்தின் குத்தகைதாரன்தனக்குக்குத்தகை அடமானம் செய்யப்பட்டதுண்டு நிலத்தில் இருக்கிறரஸ்தா, பாதை, கிளைவழி முதலானவற்றையாவது நீரோட்டங்களையாவது அப்படிகுத்தகையடமானம் செய்யப்பட்ட துண்டு நிலத்தின் ஹத்துக்கு வெளிப்பட்டுதிருப்பக்கூடாது. அப்பேற்பட்ட துண்டுநிலத்தின் குறுக்கே சுபாவமாய் உண்டாயிருக்கிற வாய்க்கால்களிலோடும் ஜலத்தை உபயோகித்துக் கொண்டால் அப்படி உபயோகித்துக் கொண்ட பிற்பாடு அந்தநிலத்தின் ஹத்துவாயில் அந்த வாய்க்காலை திருப்பி விடவேண்டியது.

6. குத்தகை தாரனானவன் குத்தகை சாஸனத்தில் கண்ட குத்தகையைச்செலுத்த தவறிப்போனாலாவது, நிபந்தனைபிரகாரம்அனுஷ்டிக்கத்தவறிப்போகும் பக்ஷத்திலாவது, குத்தகையை யிழந்துவிட வேண்டியதாகும். குத்தகைசாஸனத்தில் கண்ட நிபந்தனைகள் கிரமமாய் அனுஷ்டிக்கப் பட்டதாயில்லையா

வென்பதை பார்த்துக் கடைசியில் தீர்ப்பு செய்ய வேண்டியவர் ஆலோசனை சபையிலுள்ளகெவர்னர் அவர்களாயிருக்கிறார்கள்.

7. அஸல் குத்தகை சாஸனம் முடிவு பெறுவதின்பேரில் தற்காலம்ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களால் ஏற்படுத்தப்படும் ஷரத்துகளின்பேரில் குத்தகை தாரனிட யுக்தானுஸாரம் குத்தகை சாஸமானது புதுப்பிக்கப்படும்.

8. அஸல் குத்தகை சாஸனம் செலாவணியாயிருக்கிற காலம்வரையில் (2) வது வாக்கியத்தில் குறிப்பிட்ட குத்தகை வரியைத்தவிரராஜாங்கத்தாருக்காக வேறே யாதொருவரியையும்செலுத்தவேண்டியதில்லை; ஆனால் (சென்னை 1884 ஹூ த்தில் 5வது) லோகல் போர்ட்ஆக்ட் அல்லதுதற்காலம் ஊர்ஜிதத்திலுள்ள அப்பேர்க்கொத்தஎந்தசட்டத்தினிடநியமங்கள்பிரகாரம் விதிக்கப்படும் வரிகளை செலுத்தவேண்டியதாகும். தவிரவும் குத்தகைதாரனிட வேலைப்பாடுகளின் முடிவுகளால் நேராய்பாதிக்கப்பட்ட பொது ஜனத்தாரிட சுதந்திரங்களை முன்னிட்டு பிரத்தியேகமான போலீஸ், போக்கு வரத்துக்கு ஆதாரங்கள், ஜலப்பாய்ச்சல்கள், சௌக்கியம் பாதுகாப்பதுஇன்னும் இவைகளைப்போலொத்தராஜாங்க ஏற்பாடுகள் செய்யவேண்டியதாக கெவர்ண்மெண்டார் தாத்பரியத்தில்அவசியமாக ஏற்பட்டால் அப்பேர்ப்பட்ட ஏற்பாடுகளுக்காக பிடிக்கும் செலவை குத்தகைதாரனிட மிருந்து வசூல் செய்யும்பொருட்டு இனிமேல் விதிக்கக்கூடியவரியையும் செலுத்த வேண்டியதாகும்.

vi. குத்தகையானது மாற்றப்படும் பக்ஷத்தில் மாற்றப்பட்டவனும் மேலே சொன்ன நிபந்தனைகளை அனுஸரிக்கக்கடமைப் பட்டிருக்கிறான்.

16. இதராளிட நிலத்தின் எல்லைக்குள் பிரவேசிப்பது.—சர்க்கார் நிலங்களின் எல்லைக்குள்ளும், கிராமங்களிலும் பட்டணங்களிலும் இவைகளுக்குச் சமீபத்திலும் பொது பிரயோஜனகரமாயிருக்கப்பட்ட ரஸ்தாக்கள், தெருக்கள், வெட்டவெளிகள் இவைகளின் எல்லைக்குள்ளும்

சொந்தஜனங்கள் பிரவேசித்து நிலத்தைச் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கும்பொருட்டு ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியதானது ரெவினியூ உத்தியோகஸ்தர்களின் கடமையாயிருக்கிறது. இந்தமாதிரி பிறர் எல்லைக்குள் பிரவேசிக்கும் தன்மை ஜனங்களுக்குள் மிகவும் ஸகஜமாயிருக்கிறது. அவற்றைத் தடுப்பதற்கு கலெக்டர்களாலும் அவரிடகீழ் அதிகாரிகளாலுமேயல்லாமல் வெகுசாய் வேறே ஒருவராலும் சாத்தியப்பட்டதல்ல. டிஸ்டிரிக்ட் (லோகல்பண்டு) போர்டார் வசத்திலிருக்கிற பொதுரஸ்தாக்கள் தெருக்கள் இவைகளின் எல்லையில் யாராவது பிரவேசித்ததாய் தெரியவரும் பக்ஷத்தில் அதுசங்கதியை சம்பந்தப்பட்ட தாலூக்போர்ட் வைஸ்பிரஸிடெண்டுக்கு அறிவிக்கவேண்டியது.

2. ஸ்மசானம், சந்தை, தோப்பு முதலாகிய கிராம பொது உபயோகத்திற்காக கிராமத்தாருக்கு விடப்பட்டிருக்கிற நிலங்களின் எல்லைக்குள் பிரவேசிக்க வொட்டாமல் தடுக்கவேண்டியதைப்பற்றி ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டியது. மேற்கண்ட உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கிற இடம் அனுவசியமாய் அதிகமாயிருந்தா லொழிய அவைகளைக் குறைக்கக்கூடாது. ஏனென்றால் அப்பேற்பட்ட நிலத்தின் எந்த பாகத்தையாவது யாதொரு ரூடியானவனுக்குப் பட்டா கொடுத்து அடமானம் செய்வதால் (கெவர்ண் மெண்டாருக்கு) வசூலாகிற சொல்ப தீர்வையானது கிராமத்தார் (வெகு) வருஷகாலமாய் அனுபவித்து வந்த சுதந்திரங்களைக் குறைத்து விடுவதால் உண்டாகிற அதிர்ப்திக்கு ஈடுசெய்யமுடியாது.

3. ஸர்வை செய்து) தீர்வை ஏற்பட்டிருக்கிற நிலங்களை உத்திரவில்லாமல் சாகுபடிசெய்தாலாவது வேறுவிதமாய் அனுபவித்தாலாவது அப்பேர்ப்பட்ட விஷயங்களை ஜமாபந்திகாலத்தில் விசாரணைசெய்து ஒவ்வொரு கேஸையும்தர்காஸ்த் விதிகளை அனுஸரித்து பைசல் செய்யவேண்டியது. வேறேதர்காஸ்துதார் இல்லாமலிருந்தாலாவது ஏல்லது வேறேவிதமான ஆக்ஷேபணை யில்லாமற்போனாலாவது சாகுபடிசெய்தவனுக்குப் பட்டாகொடுத்து அப்படி சாகுபடியானநிலத்தை சிவாய் ஜமை கணக்கிலிருந்து (அயனுக்கு) மாற்றலாம். சாகுபடியை விர்த்தி செய்வதற்காக சாகுபடியாகத்தக்க கரம்பு நிலத்துக்குப்போகும் பொருட்டு (இப்போது அடமானம் செய்கிற நிலத்தின் மூலமாய்) வழிவிடவேண்டியது மெத்த அவசியமாயிருந்தால், உத்திரவில்லாமல் புதுசாய் (நிலத்தை) அனுபோகப்படுத்திக் கொண்டதை மன்னிப்பு செய்து அடமானம் செய்வதற்கு முன்பாக அப்பேர்ப்பட்ட வழிவிட வேண்டுமென்கிற ஷரத்து செய்துக்கொள்ளவேண்டியது.

ஆகிலும் கிராம நவுக்கர்கள் தங்கள் சொந்தகிராமங்களிலாவது இதர கிராமங்களிலாவது ஸர்வைசெய்து தீர்வை ஏற்படுத்தப்பட்ட கரம்பு நிலங்கள் தக்க அதிகாரிகளால் தங்களுக்கு தர்காஸ்தின்பேரில் அடமானம் செய்யப்பட்டிருந்தாலொழிய அந்த நிலங்களின் எல்லைக்குள் பிரவேசிக்கவாவது அவைகளை சாகுபடி செய்யவாவது கண்டிப்பாய்க்கூடாது.

4. பாரஸ்டுடிபார்ட்மெண்டு உபயோகத்திற்காக நிறுத்திவைக்கப்பட்டிராத தீர்வை ஏற்படாத நிலங்களையாவது புறம்போக்கு நிலங்களையாவது உத்திரவில்லாமல் (யாராவது) சாகுபடிசெய்தாலாவது அல்லது வேறேவிதமாய் அனுபவித்துக்கொண்டாலாவது, கலெக்டரும் டிவிஷனல் ஆபீஸரும் தங்களுடைய யுக்தானுஸாரம் அப்படிப்பட்ட நிலங்களுக்காக பட்டாகொடுத்து அடமானம்செய்து அந்த நிலங்களை அயன் அல்லது தீர்வை ஏற்பட்ட நிலமாக மாற்றலாம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அந்த நிலங்களுக்கு அடுத்த அதேமாதிரி நிலத்திற்கு என்ன தீர்வை ஏற்பட்டிருக்கிறதோ சாதாரணமாய் அதே தீர்வை அந்த நிலங்களுக்கும் விதிக்கப்படும், ஆனால் இது விஷயத்தில் ஆபீஸர்களிட இஷ்டானுஸாரம் செய்யலாம்.

5. பொது ஜனஉபயோகத்திற்காக வேண்டுமென்று வைக்கப்பட்டாவது, அல்லது கவர்ண்மெண்டு ஏலத்துக்காக நிறுத்திவைக்கப் பட்டாவது அல்லது பொது காரியங்களை முன்னிட்டு வைக்கப்படவேண்டியது அவசியமாகவாவது இருக்கிற நிலத்தை உத்திரவில்லாமல் அனுபவிக்கிற விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் பொது நன்மை அபராதம் விதிப்பதை நீக்கப்பட்டிருக்கிறது. பொது உபயோகத்திற்காக தேவையென்று தெரிந்திருக்கிற நிலத்தை உத்திரவில்லாமல் அனுபவிக்கிற விஷயங்களில் அளவில்லாமல் பொது நன்மை அபராதம் விதிக்க கலெக்டருக்கும் டிவிஷனலாபீஸருக்கும் அதிகாரமுண்டு.

6. ரெயில்வே ஸ்டேஷனுக்கு அரைமயில் தூரத்துக்குள்பட்டு இருக்கிற நிலங்களை அவைகள் தீர்வை ஏற்பட்டிருந்தவைகளானாலும் தீர்வை ஏற்படாதவைகளானாலும் உத்திரவில்லாமல் அனுபோகித்துக்கொண்டிருந்தால் அவைகள் பொதுஉபயோகத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றனவாக பாவித்து பொது நன்மை அபராதத் தீர்வை விதிக்கலாம்.

7. ரெவினியூ டிபார்ட்மெண்டாரிட உத்திரவில்லாமல் பயிரிட்ட நிலத்தின் பூருவவருஷதீர்வையையும், தகுந்த அதிகாரிகளால் தீர்வை நிர்ணயிக்கப்பட்டு அந்த தீர்வையை சாகுபடி செய்தவனுக்குத் தெரிவித்த 30 நாளைக்குள் உத்திரவில்லாமற் பயிரிட்டவன் செலுத்தவேண்டியது.

17. இரண்டாவது போகத்தில் விளைகிற தானியம். ஒரு போக வகுப்பில் சேர்ந்தநஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட இரண்டாவது போகத்திற்கு ஜலத்தீர்வை செலுத்தவேண்டியது; அந்த ஜலத்தீர்வையானது நிலத்தின் தீர்வையில் பேர்பாதி. ஆகிலும் ஜலம் பாய்வதற்காக வேறே கசர் தீர்வை ஏற்பட்டு இருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட தீர்வை விதிக்கப்பட வேண்டியது.

2. மூன்ருவது போகம்சாகுபடி செய்தால் அதற்கு யாதொருதீர்வையும் இல்லை.

3. சர்க்கார் ஜலத்தைக்கொண்டு நஞ்சை நிலத்தில் புஞ்சை மாகுல் செய்தால் அதற்குபூராநஞ்சை தீர்வையும்விதிக்கப்படவேண்டியது. ஆனல் அப்படிப்பட்ட புஞ்சைமாகுலானது முதல்மாகுல் அறுவடையான பிற்பாடு பயிரிடப்பட்ட இரண்டாவது மாகுலாயிருக்கும் பக்ஷத்தில் புஞ்சை நிலத்தில் இரண்டாவது மாகுல்பயிரிடப்பட்டால் அதற்கென்ன தீர்வையோ அதேதீர்வைதான் (பிரஸ்தாபகேஸிலும்) விதிக்கப்படவேண்டியது. அதாவது முதல்வகுப்பைச் சேர்ந்தகுளம் அல்லது கால்வாயிலிருந்து ஜலம்பாய்கிற நிலமானல் ஏகரா 1–க்கு 2. ரூபாய் வீதமாயும் இரண்டாவது வகுப்பைச்சேர்ந்தகுளம் முதலானவைகளிலிருந்து ஜலம் பாய்கிற நிலமானல் ஏகரா 1–க்கு–1½ ரூபாய் வீதமாகவும் விதிக்கவேண்டியது. ஆனலும் மேற்கண்டவிதமாய் ஏற்படுத்தப்பட்ட தீர்வையானது நிலத்தின் தீர்வையின் பாதிக்கு மேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் முதல் பிரஸ்தாபித்த தீர்வையைவிதிக்காமல் நிலத்தின் பாதி தீர்வையை விதிக்கலாம்; முதல்மாகுல் அறுவடையான பிற்பாடு நஞ்சை நிலத்தில் சர்க்கார் ஜலாதாரமில்லாமலே புஞ்சைமாகுல் சாகுபடி செய்திருந்தால் அதற்காக யாதொருதீர்வையையும் விதிக்கக் கூடாது.

4. ஒருபுலத்தில் 10–ஸெண்டுக்கு குறைந்த அளவுள்ள பாகத்தை பயிரிட்டால் அதற்கு ஜலத்தீர்வை விதிப்பதானது ஜமாபந்தி ஆபீஸரிடஇஷ்டத்தைப் பொறுத்தது என்பதாய்–4-நெ-ஸ்டாண்டிங்கு ஆர்டரில் ஏற்படுத்தப்பட்ட விதியானது நஞ்சை நிலத்தில் சாகுபடி செய்யப்படும் இரண்டாவது போகத்திற்கும் சம்பந்தப்படும்.

5. மதசம்பந்தமான தேவாலயம் முதலானவைகளுக்காகச் சேரவேண்டிய டாஸ்டிக் அலவுன்ஸ் என்பதற்கு பதிலாகவிடப்பட்டிருக்கிற ஒரு போகநஞ்சை நிலத்தில் இரண்டாவது போகம் பயிரிட்டால் அதற்கு இரு போகத்தீர்வை விதிக்கப்படுமே; ஆனல் அப்படி சேரவேண்டிய தீர்வையை குத்தகை ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டு எந்தக்குடியானவர்கள் பயிரிட்டார்களோ அவர்களிடத்திலிருந்து வசூல் செய்யவேண்டுமே யல்லாமல்

முதல் போகத்தீர்வைக்கு எவர்கள் பேருக்கு அடமானம் செய்யப்பட்டதோ அவர்களிட மிருந்து வசூல் செய்யக்கூடாது.

6. நஞ்சைநிலத்தில் பயிரிடப்படுகிற முதல் போகத்திற்காவது இரண்டாவது போகத்திற்காவது ஏற்றம் முதலானவைகள் வைத்து ஜலம் இறைத்திருக்கும் பட்சத்தில் அதற்கு வஜாசெய்யவேண்டியதுகையானது பல ஜில்லாக்களில் பலவிதமாய்இருக்கிறது. அந்தத்துகையானது ஏகார 1-க்கு 1 ரூபாயாகவும் அல்லது ஜலத்தீர்வையில் கால்பங்காகவுமிருக்கிறது. நிலத்தைப்பயிரிடுவதால் கெவர்ன்மெண்டுக்குச்சேரவேண்டியபூருதீர்வையையும் கணக்குகளில் எழுதவேண்டியது. ஏற்றம் முதலானவைகளால் ஜலம் இறைக்கப்பட்டதற்காக வஜா செய்யவேண்டிய துகையை அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற கலத்தில் (column) பிரத்தியேகமாய் காண்பிக்க வேண்டியது. எல்லாவிஷயங்களிலும் இரண்டாவது போகம் பயிரிடுவதற்காக விதிக்கப்படும் தீர்வையானது ஏகார-1-க்கு அதமபட்சம் 1 ரூபாய்.

18. ஜலம் பாயக்கூடாத நஞ்சை நிலங்கள். பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் பழுதுபார்ப்பதாய் உத்தேசிக்காதவைகளாயும்-5-வருஷத்திற்கு மேற்பட்டு பாழாயும் இருக்கிற ஏரிகளிலிருந்து ஜலம்பாயக்கூடியதாயிருக்கிற நஞ்சை நிலங்களையும், எவ்வித ஆதாரத்தினாலும் ஜலம்பாயக்கூடாத நஞ்சைநிலங்களையும், புஞ்சைதீர்வையை செலுத்திவிட்டு சாகுபடி செய்துகொள்ளும்படி விட்டுவிட வேண்டும். முதலில் பிரஸ்தாபித்த விஷயத்தில் அந்த ஏரிகளை இனி எப்போதாவது கெவர்ன்மெண்டார் பழுது பார்ப்பதாய் இருந்தால் அவைகளிலிருந்து பாயும் ஜலத்திற்கு ஜலத்தீர்வை விதிக்கவும் அல்லது சொந்தத்தில் யாராவது பழுது பார்ப்பதாய் விண்ணப்பம் செய்துகொள்ளும் பட்சத்தில் அப்பேர்ப்பட்ட விண்ணப்பதார்களுக்கு அப்படியே பழுதுபார்க்கும் பொருட்டு விட்டுவிடவும்கெவர்ன்மெண்டாருக்கு பாத்தியதையுண்டு.

$\frac{18}{1}$. ஏரி உள்வாய் நிலங்களை இன்னவிதமாய்ப் பைசல் செய்யவேண்டியதென்பது.—ஜலாதாரங்கள் பலானவை யென்று பதிந்திருக்கிற ஜாப்தாவிலிருந்து யாதொரு ஏரி அல்லது குளமானது நீக்கப்பட்டும், அதின் கீழிருக்கிற ஆயக்கட்டு நிலம் புஞ்சை தரத்துக்கு மாற்றப்படும்பட்சத்தில் ஏரி உள்வாயிலிருக்கப்பட்ட நிலங்களை அரை ஏகராவுக்குக் குறையாமல் சவுகரியமுள்ள சிறு துண்டு நிலங்களாகப் பிரிவினை செய்து புஞ்சைதரத்தீர்வையைச்செலுத்தவேண்டியதென்கிறஷரத்துக்குட்பட்டு ஏலம்போடவேண்டியது. ஷை புஞ்சைதரத்தீர்வையை எப்படி நிர்ணயிக்கவேண்டியதென்றால் அந்தக்கிராமத்தில்உயர்ந்த புஞ்சை தரத்தீர்வை எவ்வளவோ அவ்வளவுதான்.

2. ஒரு ஏரியின்கீழ் இனும் நிலங்களிருக்கும் பட்சத்தில் அந்தநிலங்களை புஞ்சைதரத்துக்கு மாத்தி அதற்குத்தக்கபடி குயிட்ரெண்டை உயர்த்திக்கொள்ளவும் உத்திரவுகொடுக்கலாம்; அல்லது அவர்களிட அனுபோகத்திலிருக்கிற நிலங்களின் நஞ்சைதரத்தீர்வைக்கும் புஞ்சைதரத்தீர்வைக்குமுள்ள வித்தியாசத்திற்கு பர்த்திசெய்யப் போதுமான நிலம் ஏரிஉள்வாயில் அடமானம்செய்தாவது பர்த்திசெய்யலாம். பின்சொன்ன விஷயத்தில் இனும்நிலங்களை ஒரே துண்டுநிலமாக அடமானம் செய்யவேண்டியது. இனும்தார்களுக்குப் பர்த்திசெய்தபிற்பாடு மீதி இருக்கப்பட்ட விஸ்தீரணத்தை மேற்கண்ட 1-வது பிரகரணத்தை அனுஸரித்து ஏலம் போடவேண்டியது.

19. பாத்தியதையைக் காட்டும் சாஸனங்களைத் தயார்செய்வதைப்பற்றி.—கரம்பு நிலத்தை ஏலம் போடுவதற்காகவும் நிலத்தீர்வையை மொத்தமாய்ச்செலுத்தி ஒப்பந்தம் செய்துக்கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட விதிகளை யனுஸரித்து ஷை சாஸனங்களை தயார்செய்வதில் கலெக்டர்கள் அடியில்கண்ட உத்திரவுகளை அனுஸரிக்கவேண்டியது. சாஸனங்களின் தலைப்பிலிருக்கிற வெத்து இடங்களை கலெக்டராபீஸில் பூர்த்திசெய்யக்கூடாது.

2. கெவர்ண்மெண்டு ஸீக்ரெடெரியானவர் அந்த சாஸனங்களில் கையெழுத்து செய்யும்போது எழுதாமல் காலியாயிருக்கப்பட்ட இடங்களைப்பூர்த்தி செய்வார்.

3. அஸல்சாஸனமும் நகல்சாஸனமும் ஒன்றுக்கொன்று ஒரேமாதிரியாயிருக்கவேண்டியது. இரண்டு சாஸனத்திற்கும் இரண்டுபடங்களைத் தயாரித்துச் சேர்த்திருக்கவேண்டியது.

4. சவுகரியப்படும் பட்சத்தில் சாஸனங்களிலேயே படங்களை வரையவேண்டியது. மற்ற விஷயங்களில், அதாவது சாஸனம் வேறுபடம் வேறாக இருக்கும் பட்சத்தில், சாஸனத்துடன் படத்தைத்தைக்கவேண்டியது. சாஸனத்திலேயே எழுதப்பட்டாவது அல்லது வேறே தனிக்காகிதத்தில் எழுதப்பட்டாவதிருக்கிற படங்களிலெல்லாம் அவைகள் சரியாயிருக்கின்றன வென்பதற்கடையாளமாக கலெக்டர்கள் கையொப்பம்செய்யவேண்டியது. ராஜாங்கத்திற்குப் பிரதிநிதியாக இருந்து சாஸனத்தை தயார் செய்விக்கிற கெவர்ண்மெண்டு ஸீக்ரெடெரியும் சாஸனங்களில் கையெழுத்துசெய்வார்.

5. கெவர்ண்மெண்டு ஸீக்ரெடெரியினுடைய கையெழுத்து செய்விக்கும் பொருட்டு இனி போர்டாருக்கு அனுப்பக்கூடிய சாஸனங்களோடு

ளைத்திருக்கிற படங்களில் எப்பொழுதும் தேதிபோடவேண்டியது. எந்த தேதியில் படங்கள் தயார்செய்யப்படுகிறதோ அந்தத்தேதியைத்தான் படங்களில்கண்டிருக்கவேண்டியது.

6. சாஸனத்தில் யாதொரு மனுஷியனை பிரஸ்தாபிப்பதில் மேஸ்தர் என்கிறவார்த்தையை எழுதக்கூடாது. ஒருசாஸனத்தில் சம்பந்தப்பட்ட ஒரு பார்ட்டியினுடைய பூருபெயர்களையும் அவனிட இருப்பிடத்தையும் அவனுடைய உத்தியோகத்தையும் முழுமையும் விபரித்து எழுதவேண்டியது.

7. சாஸனமானது தயார்செய்யப்பட்ட பிற்பாடு திருட்டுத்தனமாய் இடையில் வேறே எழுத்து எழுதப்படாமலிருக்கும் பொருட்டு ஒருசாஸனத்திலுள்ள காலிஇடங்களில் வரிபோட்டு எழுதவேண்டியது.

8. சாஸனத்திலிருக்கிற ஷிடியூல்களில் கண்ட எல்லைகளானவை ஏலத்தில் விற்கப்பட்ட நிலத்தைச் சூழ்ந்திருக்கிற நிலங்கள் முதலானவைகளாக இருக்கவேண்டியது. போர்டாருக்கு அனுப்பப்பட்ட சிலசாஸனங்களில், விக்கிரயம்செய்யப்பட்ட நிலத்தின் எல்லையாணது இதரநிலங்களின் எல்லைக்கு கிழக்கு முதலான திக்குகளில் இருப்பதாக கிரமதப்பாய் சொல்லப்பட்டிருக்கிறது; அப்படிச்சொல்வதனுல் அப்பேர்ப்பட்ட இதரநிலங்களிட எல்லைகளை விவரித்துச் சொல்வதாக ஏற்பட்டதே தவிர விக்கிரயம் செய்யப்பட்ட நிலத்தின் எல்லைகளை விவரித்துச்சொல்வதாக ஏற்படவில்லை.

9. விக்கிரயம் செய்யப்பட்ட சாஸனத்தின் விஸ்தீரணத்தை படத்தில்கண்ட நிலஅளவு எவ்விதமாய் பெயரிடப்பட்டிருக்கிறதோ அதேவிதமாக ஷிடியூலில் கடைசிபத்தியில் எழுத்தால் எழுதவேண்டியது.

10. பார்ட்டிகளிடபெயர்களையும் இடங்களிடபெயர்களையும் எழுத்துப் பிழையில்லாமல் திருத்தமாய் எழுதவேண்டிய விஷயத்தில் கவனம்செலுத்த வேண்டியது.

11. சாஸனங்கள்தயார்செய்யப்பட்டவுடனே கலெக்டரானவர் அதை போர்டார்துவாரா கெவர்ன்மெண்டாரிட கையெழுத்துக்கு அனுப்பவேண்டியது. சாஸனத்திலும் அதினிடநகலிலும் அவைகள்எந்தத்தேதியில் கெவர்ண்மெண்டாருக்குத்தயார் செய்து கொடுக்கப்பட்டதோ அந்ததேதிபோடவேண்டியது; பிறகு அது கலெக்டருக்குத்திருப்பியனுப்பப்படும்.

12. சாஸனமும் நகலும் கலெக்டருக்குத்திரும்பி வந்தவுடனே அவைகளிரண்டிலும் ஏலதாரனிட கையெழுத்துவாங்கி அஸல் சாஸனத்தை ஏலதாரனிடம் கொடுத்துவிடவேண்டியது. அதனிடநகலை கலெக்டராபீஸில் ரிகார்ட்டுக்காகவைத்து வைக்கவேண்டியது.

13. ஒருசாக்ஷிபோதுமானது ஆனல் அவனிட இருப்பிடம் தொழில் அல்லது வேறேவித விவரணத்தை அவன் பெயரின்கீழ் எழுதவேண்டியது.

14. சாஸனத்திலாவது அல்லது நகலிலாவது கலெக்டர் தம்மிட கையெழுத்தையாவது வேறே எவ்வித அடையாளத்தையாவது போடக் கூடாது. சாஸனத்தைத் தயார்செய்கிறபோது கெவர்ண்மெண்டு ஸீக்ரெடெரியானவர் சாஸனத்திலிருக்கிற எல்லா கிறுக்குகளும் தித்துப்பாடுகளும் வரிபிளர்ந்து எழுதப்பட்டவைகளுமாயிருக்கிற இடத்தில் இனிஷல் செய்வார்.

15. சாஸனங்களைத்தயார்செய்வதில் ஒவ்வொன்றுக்கும்வரிசை நெம்பர் கொடுத்துவரவேண்டியது. உதாரணம் 1866-வூ த்திய 7வது நெம்பர்: ஒருவருஷமானவுடன் அடுத்த வருஷத்தில் முதல் நெம்பரிலிருந்து ஆரம்பிக்க வேண்டியது.

16. கெவர்ண்மெண்டுக்குப் பிரதிநிதியாகிய உத்தியோகஸ்தரகளால் நிறைவேற்றப்படுகிற சாஸனங்களில் அவர்கள் ஸ்வயமாய்க் கையெழுத்து செய்யவேண்டியது; சாபாவினல் செய்யப்படும் கையெழுத்து செல்லாது.

17. மேல்பிரகரணத்தில் சொல்லப்பட்ட அம்சங்களானவை ரயத்து வாரிபட்டாக்களுக்குச் சம்மந்தப்பட்டதல்ல. பட்டாவானது ஒருபட்டாதாரன் அனுபவத்திலுள்ள நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையின் மொத்தத்தைக்காட்டும் தஸ்தாவேஜேதவிர சாஸனமாகமாட்டாது.

20. பலானமனுஷர்களுக்குப் பலான நிலம் சொந்தமென்று யெழுதியிருக்கிற ரிஜிஸ்டரில் மாறுதல்செய்ய வேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகள் (பட்டாமாற்றுதல்.)—பலான மனுஷர்களுக்குப் பலானநிலம் சொந்தமானதென்று பதிவு செய்து ஒவ்வொருகிராமத்திலும் வைத்திருக்கப்பட்ட ரிஜிஸ்டரில் எந்த மனுஷர்களுக்கு வாஸ்தவமாய் நிலம் சொந்தமானதோ அந்தமனுஷியர்கள்பேரிலும் அல்லது எவர்கள் தங்களுக்கிருக்கிற எவ்விதமானபாத்தியதையினுலாவது நிலங்களை அனுபோகித்துவருகிறவர்களோ அவர்கள்பேரிலும்பதிவு இருப்பதும்தவிர அவர்களே அந்தநிலத்தின்பேரில்சேரவேண்டிய சர்க்கார்த் தீர்வைக்கு ஜவாப்புதாரிகளாயிருக்க வேண்டியது முக்கியமானதாகையால், நிலங்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம்மாறும்பொழுது ரெவினியூ கணக்குகளில் பதிந்து இருக்கிறவைகளை மாறுதல் செய்வதில் அனுஸரிக்கவேண்டிய நடவடிக்கைகளை பின்வரும் விதிகளில் கண்டிருக்கிறது.

2. சட்டத்தை அனுஸரித்து சொத்துக்களை மாற்றிக் கொள்வதற்கு ஹேதுக்கள் (1) சொந்தக்காரர்கள் தங்கள் மனதறிந்து பிறருக்கு கொடுப்

பதினுலாவது (2) கோர்ட்டார்டிக்ரியின் பேரிலாவஃது, ரெவினியூ ஏலத்தின் பேரிலாவது (3) சந்ததிமாறுதலினுலாவது.

3. யதேச்சையாய்ப் பட்டாமாற்றுதல்:—இது (A) நிரந்தரமானதென்றும், (B) கொஞ்சங்காலம் வரையிலுள்ளதென்றும் இரண்டுவிதங்கள்.

A.—ரிஜிஸ்டரில் பதிவாயிருக்கிற சொந்தக்காரன் தனக்குள்ள பாத்தியதையை நிராக்ஷேபமாய் மாற்றுதல் செய்யும்பட்சத்தில் (எவனுக்குமாற்றப்படுகிறதோ அவனும் சேர்ந்து) மாற்றுதலில் சம்பந்தப்பட்டிருக்கிற இருகக்ஷிக்காரர்களும் சேர்ந்தாவது அவர்வளில் ஒருவராகவாவது ஸவதந்தரத்தை மாற்றும் பொருட்டு விண்ணப்பம் செய்துக்கொள்வதின்பேரில் ரிஜிஸ்டரில் மாற்றுதல் செய்யலாம்; ஆகிலும் பட்டா மாறுதல் செய்யவேண்டியதற்காக நேராகவாவது அல்லது கிரமமாய் அதிகாரம் பெற்ற ஏஜெண்டு மூலமாகவாவது எழுத்து மூலமாய் விண்ணப்பம் செய்துக்கொள்ள வேண்டியது. தவிரவும் எந்த கக்ஷிக்காரர் விண்ணப்பம் செய்துக்கொள்ளுகிருரோ அவரிட கையெழுத்து செய்து நிலம் எந்தகிராமத்திலிருக்கிறதோ அந்த கிராமத்தின் கணக்கனும் கிராமாதிகாரியும் (மணியக்காரனும்) சாக்ஷி கையொப்பமிட்டிருக்க வேண்டியது. அப்படி கையொப்பமிட்டிருப்பதே பலான மனுஷியர்கள்தான் கக்ஷிக்காரர்களென்று ருஜுப்பிக்க சாக்ஷியமாக பாவிக்கப்படலாம்; இருகக்ஷிக்காரரும் அப்படி கையொப்பமிட்ட ஒருவிண்ணப்பத்தை கொடுக்கும்பட்சத்தில் கலெக்டராவது கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறு உத்தியோகஸ்தராவது கேட்டுக்கொண்டபடி உடனே ரிஜிஸ்டரில் மாறுதல்செய்யும்படி உத்திரவுசெய்யலாம். ஆனல் பட்டா மாறுதலில் சம்பந்தப்பட்ட நபர்களில் ஒருவன் மாத்திரம் விண்ணப்பம் செய்துக்கொண்டால் அப்படி மாற்றுவதற்கு சாக்ஷியமாயும் கிரமமாய் நிறைவேற்றி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதுமான ஒரு தஸ்தாவேஜை ஆஜர்செய்து அந்ததஸ்தாவேஜுவாஸ்தமானதா வென்று கலெக்டருக்காவது கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறே உத்தியோகஸ்தருக்காவது திருப்திகரமாய் ஏற்பட்டாலொழிய கலெக்டராவது அல்லது கிரமமாய் அதிகாரம்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது அந்தவிண்ணப்பத்தின் பேரில் யாதொருவித அமுலும் நடத்தக் கூடாது; பிறகு கலெக்டராவது அல்லது கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது (பலானது சம்பந்தமாய்) ரிஜிஸ்டர் (பட்டா) மாறுதல் செய்ய விண்ணப்பம் செய்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்று ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்விக்கவேண்டியது. அப்படி பிரசுரம் செய்விக்கப்பட்ட தேதி முதல்—3—மாதத்திற்குள் அதையாராவது ஆக்ஷேபித்தாலொழிய அந்தவாய்தா முடிந்த உடனே ரிஜிஸ்டர் மாறுதல் செய்ய உத்திரவு செய்ய வேண்டும்.

மதராஸ்கெவர்ண்மெண்டாரால் 1864ஞூத்திய II–வது ஆக்டின் 25–வது பிரிவில் குறித்த மாதிரியாய் ஷை நோட்டீஸுக்கு நகல் ஒன்றை நிலம் ரிஜிஸ்டரில் எவன்பேரில் பதிவாயிருக்கிறதோ அவனுக்கும் அனுப்பவேண்டியது. ஆக்ஷேபணை செய்யப்பட்டால் விசாரணை செய்து அதின் முடிவுக்குத்தக்கபடி ரிஜிஸ்டரில் மாறுதல் செய்யவேண்டியதென்றாவது செய்யக் கூடாதென்றாவது உத்திரவு செய்யவேண்டியது. B.—ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிற சொந்தக்காரன் தன் சொத்தை குத்தகை, அடகு முதலாகிய மூலமாய் கொஞ்சகாலம் வரையில் பராதீனப்படுத்தியிருக்கிற விஷயத்தில், ரிஜிஸ்டர் மாற்றுதலில் சம்பந்தப்பட்ட இருகட்சிக்காரரும் சேர்ந்து மாற்றுதல் செய்யவேண்டுமென்று எழுத்து மூலமாய் கலெக்டருக்காவது அல்லது கிரமமாய் அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகஸ்தர்களுக்காவது விண்ணப்பம் செய்துக்கேட்டுக் கொண்டாலொழிய ரிஜிஸ்டரில் மாறுதல் செய்யக்கூடாது. நிலம் எந்த கிராமத்திற்குச் சம்மந்தப்பட்டதோ அந்தக் கிராமத்தின் கணக்கனும் கிராமத்தலைவனும் அப்பேர்ப்பட்ட விண்ணப்பத்தில் கையெழுத்து செய்யவேண்டியது.

4. பலவந்தமாய் பாத்தியதையை மாற்றுதல்.—யாதொரு கோர்ட்டாரிட தீர்ப்பை அனுசரித்துதீர்ப்புபெற்றிருக்கிறவர்களுக்காவது அல்லது யாதொரு கோர்டாருடைய தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு போடப்பட்ட ஏலத்தில் விலைக்கு வாங்கினவர்களுக்காவது ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிறசொந்தக்காரர்களிட மிருந்துபாத்தியதையை மாற்றுதல்செய்யவேண்டிய விஷயங்களில், வியாச்சியத்தில் சம்மந்தப்பட்ட எந்த கட்சிக்காரனாவது அல்லது ஏலத்தில் விலைக்கு வாங்கினவனாவது விண்ணப்பம் செய்துக் கொள்வதின்பேரிலும் தீர்ப்புக்கோ அல்லது ஏல சர்டிபிகேட்டுக்கோ (சர்க்காரால்) கொடுக்கப்பட்ட ஒருநகலையும் அதை (தீர்ப்பு அல்லது ஏல சர்டிபிகேட்டை) அனுசரித்து சொத்து ஒப்புக்கொடுக்கப்பட்டதற்காக ஒரு சர்டிபிகேட்டையும் ஆஜர் செய்வதின்பேரில் கலெக்டர் அல்லது கிரமமாய் அதிகாரம் பெற்றவேறேஉத்தியோகஸ்தர்கள் ரிஜிஸ்டரில் உடனே மாறுதல் செய்ய உத்திரவு கொடுக்கலாம்; ஆகிலும் தீர்ப்பானவுடன் ஒப்புக்கொடுத்த சர்டிபிகேட்டை ஆஜர்செய்யக் கூடாமலிருக்கும் விஷயத்தில்(அப்படிஆஜர் செய்யக் கூடாமையாயிருப்பதற்கு உதாரணம்—அப்பேர்க்கொத்த தீர்ப்பைநிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாமலே சொத்தை ஒப்புக்கொடுத்து விட்டும் தீர்ப்பானது அப்பீல் முதலியதற்கு உட்படாமல் பிரத்தியட்சமாக முடிவு பெற்றதாயுமிருக்கிற விஷயங்களில்) பட்டா மாற்றுதலில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரர்மாத்திரம் பட்டா மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்துக்கொண்டால் அதற்காக

3 வது ரூலின் A. பாகத்தில் என்ன விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வோ அவ்விதிகள் பிரகாரம் பைசல் செய்யவேண்டியது. நிறைவேற்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாத டிக்லரேடரி டிக்ரியென்னும் தீர்ப்பை (அதாவது பலானமனுஷன் வசத்தில் பட்டா பாத்தியதை யிருக் கவேண்டியதென்று தீர்ப்புசெய்யப்பட்டு அதனுல் அவன் பெயரை ரிஜிஸ்ட ரில் பதிவு மாற்றிக் கொள்ள அவனுக்கு பாத்தியதை கொடுத்திருக்கப்பட் டதீர்ப்பு) அநுசரித்து ரிஜிஸ்டர் மாற்றுதலுக்காக விண்ணப்பம் செய்து க்கொள்ளப்பட்டால் அப்பேர்க்கொத்த தீர்ப்புக்கு சரியான நகல் ஒன்றை ஆஜர்செய்வதின் பேரில்கலெக்டராவது கிரமமாய் அதிகாரம் பெற்றவேறே உத்தியோகஸ்தராவது ரிஜிஸ்டரில் மாற்றுதல் செய்ய உடனே உத்திரவு கொடுக்கலாம்.

5. சந்ததிமாறுதலால் ரிஜிஸ்டரில் மாறுதல் செய்யவேண்டியதை ப்பற்றிஃ—ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கப்பட்ட சொந்தக்காரர்கள் இற ந்து போவதினுலாவது அல்லது அவர்கள் 7 வருஷத்திற்கு மேற்பட்டகால மாய் காணுமல் போயிருப்பதினுலாவது ரிஜிஸ்டரில் மாறுதல் உண்டாக வேண்டிய விஷயங்களெல்லாம் இந்தவகுப்பு மாற்றுதலில் சேர்ந்தவை. சொத்துக்குடையவன் இறந்துபோய் அவனுக்குப் பின்னிட்டு அந்த சொத் துக்கு சுதந்தரவாளிகளின் பாத்தியதை விஷயமாய் யாதொரு தகராரும் உண்டாகாமல்போனுல் (இறந்துபோன) உடனேயாவது அல்லது ஜமாபந்தி காலத்திலாவது ரிஜிஸ்டரில் மாற்றுதல் செய்ய கலெக்டராவது கிரமமாய் அதிகாரம் பெற்றவேறே உத்தியோகஸ்தராவது உத்திரவுகொடுக்கலாம். வார்ஸ்பாத்தியதையைப்பற்றி தகரார்உண்டாகும் பட்சத்தில் கலெக்டரா வது கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது அந்த கேஸுக்கு சம்பந்தப்பட்ட வார்ஸசட்டத்தில் கண்டவிதிகள் பிரகாரம் இறந்துபோன பட்டாதாரனிட சொத்துக்கு யார்பாத்தியஸ்தனென்று சுருக்கமாய் விசாரணைசெய்து ஜில்லா கெஜட்டில் பின்வரும்மாதிரி ஒரு பிரசுரம்செய்யவேண்டியது. ரிஜிஸ்டரில் மாற்றவேண்டியதைப்பற்றி ஆக்ஷே பணை செய்கிற எவனுவது தனக்குள்ள மேலான பாத்தியதையை ஸ்தாபிக்க ஸிவில்கோர்ட்டில் வியாச்சியம் செய்திருப்பதாய் நோட்டீஸ் செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள் ஒரு உறுதிமொழி ஸ்டேட்மெண்டும் வியாச்சியத்தில் தான் கொடுத்த பிராதுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட சரியான நகல் ஒன் றையும் தாக்கல் செய்தாலொழிய சுருக்க விசாரணையில் பாத்தியதை யுள் ளவனுய் ஏற்பட்டவன்பேரில் பட்டாமாற்றுதல் செய்யப்படுமென்று நோட்டீசில் காணவேண்டியது. உறுதி மொழி ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்யாமல் போனுல் நோட்டீசில் கண்டபடி மூன்றுமாதமானவுடன் ரிஜிஸ்

டரில் (பாத்தியஸ்தரின் பெயரை) பதிவு செய்யவேண்டியது. உறுதி மொழி தாக்கல் செய்யப்பட்டிருந்தால் வியாச்சியத்தின் முடிவு தெரிந்த மேல்நடவடிக்கை நடத்தவேண்டியது. ஜில்லா கெஜட்டில் நோட்டீசை பிரசுரம் செய்வதோடு கூட சுருக்கவிசாரணை செய்யும்போது தங்களுக்கு பாத்தியதை உண்டென்று தெரிவித்துக்கொண்ட எல்லா ஜனங்களுக்கும் நோட்டீசை நேரில் ஸார்வ் செய்விக்க அனுப்பவேண்டியது. இறந்து போன பட்டாதாரர்களின் வார்சுதாரர்களின் பெயர்களைப பதிவுசெய்ய வேண்டிய விஷயங்களில் பாகம் பிரித்துக்கொள்ளாமல் ஏக குடும்பமாயி ருக்கும் பட்சத்தில், அந்த குடும்பத்தின் தலைவனுயிருக்கிறவன் பெயரை ரிஜிஸ்டர் செய்யவேண்டியது; மற்ற விஷயங்களில் (அதாவது பாகஞ் செய்துக்கொண்ட விஷயங்களில்) சொத்தின் பலானபாகங்களுக்கு சொந்த மானவார்ஸ்சுதாரர்களின் பெயரை பதிவுசெய்யவேண்டியது. யாதொரு பட்டாதாரனுவது 7வருஷகாலத்திற்குமேற்பட்டு காணுமற்போய் இன்னும் அவன் உயிரோடிருப்பதாக யாதொரு ருஜுவும் இல்லாத விஷயத்தில் அந்த பட்டாதாரன் இறந்துபோய் விட்டதாய் பாவித்து, ரிஜிஸ்டரில் தங்கள் பெ யரைபதிவு செய்துக் கொள்ள வார்சுதாரர்கள் இல்லாத விஷயங்களில், நிலங்களை அனுபவித்து வருகிற மனுஷனிடபெயரை கிரமப்படி ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த பிற்பாடு ரிஜிஸ்டரில் பதிவு செய்யவேண் டியது.

6. தங்களிட பாத்தியதைகளை ஸ்தாபிக்கும்படி யான தஸ்தாவேஜு யில்லாதவர்கள் பலான நிலத்தை 12 அல்லது அதற்கு மேற்பட்ட வருஷகா லமாய்பயிரங்கமான சுதந்தரவாளிகளாக அனுபவித்துக்கொண்டும் தீர்வை யைச்செலுத்திக் கொண்டும்வந்ததாக சுருக்கவிசாரணையில் ஏற்பட்டால் 3 (A) ரூலில் கண்ட பிரகாரம் நோட்டீஸ் வகையராக்கள் மூலமாய் பிரசுரம் செய்த பிற்பாடு ரிஜிஸ்டர்மாற்றுதல் செய்யலாம்.

7. ரிஜிஸ்டரில் மாற்றுதல் செய்யவேண்டியதற்காக கலெக்டருக்கா வது சம்மந்தப்பட்ட டிவிஷனல் ஆபீசர்களுக்காவது தாலுக்கா தாசில்தா ருக்காவது சம்மந்தப்பட்ட பிர்காடிப்டி தாசில்தாருக்காவது கஸ்பாவில் தாசில்தாரில்லாதிருக்கும்போது தாலுக்கா சிரஸ்த தார்களுக்காவது ரிஜி ஸ்டரில் மாறுதல்செய்யவேண்டியநிலம் எந்தபிர்காவுக்கு சம்பந்தப்பட்டதோ அந்தபிர்காரெவினியு இனிஸ்பெக்டருக்காவது விக்கிரயசாசனத்தை ரிஜிஸ் டர் செய்யும்போது ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசர்களுக்காவது விண்ணப்பம்செய் துக்கொள்ளலாம். ஒருபட்டாதாரன் இறந்துபோகும் பட்சத்தில், இது சங் கதியைப்பற்றியும், தன்னல் கூடுமானவரையில் விசாரித்து தெரியவந்த இறந்துபோனவனிட வார்ஸ்தார்களைப் பற்றியும், தாசில்தாருக்கு கணக்கன்

ரிபோர்ட்டு செய்யவேண்டியது. கலெக்டராவது டிவிஷனல் ஆபீஸராவது தாசில்தாராவது மேற்கண்ட விஷயங்களை முடிவாய் பைசல்செய்து தாங்களேயும், அல்லது கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸராயிருக்கும் பட்சத்தில் தாசில்தார் அல்லது டிப்டிதாசில்தார் விசாரித்து அனுப்பிய ரிபோர்ட்டை பரிசீலனை செய்வதின்பேரிலும், ரிஜஸ்டர் மாற்றுதலுக்கு உத்திரவுகொடுக்கலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட மாற்றுதலை மேலதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் உத்திரவுகொடுக்க டிபுடிதாசில்தாருக்கு அதிகாரமில்லை ; ஆகிலும் (ஜமீனிலுள்ள) இனாம்நிலத்தின் மாறுதல் விஷயமாயும் இனாம் சொத்துக்களுக்கு வார்ஸ்தாரர்களிட பாத்தியதையைப்பற்றியும் செய்துக்கொள்ளப்படும் விண்ணப்பத்தை பைசல் செய்ய ஜமீன்களிலுள்ள டிப்டிதாசில்தாரர்களுக்கு அதிகாரமுண்டு.

8. விக்கிரய சாசனதஸ்த்தாவேஜு மூலமாய் நிலத்தின் பாத்தியதை நிராக்ஷேபமாய் மாற்றப்படுகிற விஷயத்திலும் அல்லது ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசில் ரிஜஸ்டர் செய்வதாய் உத்தேசித்திருக்கிற வேறே எவ்வித தஸ்தாவேஜு முலமாய் அனுபவம் மாற்றுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும், தஸ்தாவேஜை ரிஜஸ்டர் செய்வதற்கு முன்பாக விக்கிரயம் அல்லது மாற்றுதல் செய்யப்பட்ட நிலசம்பந்தமாய் ரெவினியூ ரிஜிஸ்டரில் மாற்றுவதற்கு சம்மதிக்கிறார்களாவென்று சம்மந்தப்பட்ட பார்ட்டிகளை ரிஜிஸ்டிராரோ அல்லது சப்ரிஜிஸ்டிராரோ கேழ்க்க வேண்டியது. அவர்கள் ஒத்துக்கொண்டால் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர்செய்த பிற்பாடு, குறித்தபாரத்தில் ரெவினியூ அதிகாரிகளுக்கு (பட்டா மாற்றுதலுக்காக) விண்ணப்பம் தயார் செய்வித்து அது நிறைவேறின பிறபாடு எந்த தாலுக்காவில் நிலமிருக்கிறதோ அந்த தாலுக்கா தாசில்தாருக்கு அதை யனுப்பவேண்டியது. பிறகு தாசில்தார் தம்முன்பாக ஷை விண்ணப்பம் செய்துக்கொண்டிருந்தால் எப்படியோ அதேமாதிரியாய் பார்ட்டிகள் பட்டா மாற்றுதலுக்கு ஒத்துக் கொண்டதற்கு (சப் ரிஜிஸ்டிராரால் அனுப்பப்பட்ட) விண்ணப்பம் ருஜுவென்று அங்கீகரித்துக்கொள்ளவேண்டியது; அதில் கண்ட அம்சங்கள் சரியாயிருந்தால் உடனே அந்த விண்ணப்பத்தின்கோறிக்கைப் பிரகாரம் மாற்றுதல் செய்யவேண்டியது.

9. என் பிரஞ்சைசஸான இனாம் நிலங்கள் விஷயமாயும் மரப்பட்டாக்கள் விஷயமாயும் ரிஜிஸ்டரில் மாறுதல் செய்யவேண்டியதாயிருந்தால் மேற்கண்ட விதிகள் அவைகளுக்கு சம்பந்தப்பட்டவை. ஆனால் (Peramanently settled estate) ஸ்திரமான தீர்வை ஏற்பட்ட பூஸ்திதி அல்லது அவைகளின் சிலபாகங்கள் விஷயமாய் ரிஜிஸ்டர் மாற்றுதல்செய்யவேண்டியதாயிருந்தால் 1802 ஹு 25வது சட்டத்தின் 8 வது பிரிவில் கண்டிருக்கிற

பிரகாரம் கலெக்டர்கள் ஆபீசுஸில் வைத்திருக்கப்பட்ட ரிஜிஸ்டர்களில் கலெக்டர்கள் தாங்களே மாற்றுதல் செய்விக்கவேண்டியது. ஆகிலும் மேற்கண்ட பூஸ்திதியின்பாகங்களுக்குண்டான தீர்வைநிர்ணயிக்கப்பட்டு அந்த தீர்வை போர்டாரிட அனுமதியின்பேரில் கலெக்டரால் அந்த நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்தாலொழிய அவைகளை பிரத்தியேகமான பூஸ்திதிகள் என்று ரிஜிஸ்டர் செய்யக் கூடாது. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் நடத்த வேண்டியமாதிரியை சென்னை 1876 ௵ 1வது ஆக்ட்டில் கண்டிருக்கிறது.

10. ரெவினியூ ஆபீஸர் முன்பாகவும் ரிஜிஸ்ட்ரேஷன் உத்தியோகஸ்தர்முன்பாகவும் பட்டா மாற்றுதலுக்காக விண்ணப்பம் செய்துகொண்ட விஷயங்களில் பிறகு பட்டாதாரன் தான்செய்துகொண்ட விண்ணப்பத்தை ரத்துசெய்து விட்டதாய்த் தெரிவித்தால் பட்டா மாற்றுதல் செய்யக்கூடாது.

11. ரெவினியூ ரிஜிஸ்டரில் மாறுதல் செய்யவேண்டியதற்காக ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸர்கள் முன்பாகவும் ரெவினியூ ஆபீஸர் முன்பாகவும் செய்துகொண்ட விண்ணப்பங்களுக்கு கோர்ட்டு பீஸ் ஆக்ட் பிரகாரம் ஸ்டாம்பு ஒட்டவேண்டியது; அப்படி ஒட்டவேண்டிய ஸ்டாம்பின் கிரயமானது, கொஞ்ச காலம்வரையில் நீடித்திருக்கப்பட்ட தீர்வை ஏற்பட்ட நிலவிஷயமாயிருந்தால் ஒரு அணுவும் மற்ற நிலங்கள் விஷயமாயிருந்தால் 8 அணுவாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பட்டாபாத்தியதையின் பேரில் அனுபவிக்கப்பட்ட நிலமாயும் தீர்வைமாறக்கூடியதாயும் இருக்கிறநிலமாயிருந்தால் மேற்சொன்னவைகளில் முதல்வகுப்பையும், இதரவிஷயங்களாயிருந்தால் இரண்டாவதுவகுப்பையும் சேர்ந்தது; கிரமமான ஸ்டாம்பு ஒட்டாமற்போனால் விண்ணப்பங்களை ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் அங்கீகரிக்கமாட்டார்களென்று ரிஜிஸ்ட்ரேஷன் உத்தியோகஸ்தர் விண்ணப்பதாருக்குத் தெரிவிக்கவேண்டியது.

12. நிலத்திற்கு சேரவேண்டிய தீர்வையைச் செலுத்த பிரதிகலெக்டரும் பட்டாதாரனையே ஜவாப்தாரியாக பாவிக்கவேண்டியதாகையால் ரிஜிஸ்டர்களை மிகவும் ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ள வேண்டியவிஷயம் ரொம்பவும் முக்கியமானது.

21. நிலத்தை மாற்றுதல்—ஒரே தாலுக்காவில் ஒருகிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு நிலத்தை மாற்றவேண்டிய விஷயங்களில் ஸெட்டில் மெண்டு டிபார்ட்மெண்டாரும் கலெக்டரும் கலந்துபைஸல்செய்யக்கூடியிருந்தபோதிலும் அதிகமாய் மாற்றுதல் செய்யவேண்டியவிஷயங்களில்போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. ஒரு

தாலூகாவிலிருந்து இன்னொரு தாலூகாவுக்கு (நிலங்களை) மாற்றவேண்டிய விஷயங்களிலும், ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கு மாற்றுதல் செய்யவேண்டிய விஷயங்களிலும், கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

22. ஜமாபந்தி.—ஜமாபந்தி அல்லது வருஷாந்தர ஸெட்டில்மெண்டை பிரதிதாலூக்காவிலும் அதமபக்ஷம் 3 இடங்களிலாவது நடத்தவேண்டியது. இந்த இடங்களை செம்மையாய் ஆலோசனை செய்து தலாஷ் செய்யவேண்டியது. அவைகள் பெரிய கிராமமாயும் சுலபமாய் ஜனங்கள் போய்ச்சேரக்கூடிய இடமாயும் இருக்கவேண்டும். கலெக்டர்கள் தங்கள் தங்கள்ஜில்லாக்களின்ஜெமாபந்தியைப்பற்றிரிபோர்ட் செய்யும்போது இந்த உத்திரவு பிரகாரம் நடந்தார்களா வென்றுரிபோர்ட்டில் கண்டெழுத வேண்டியது. பிரதி தினமும் பலான கிராமங்களின் ஜமாபந்தியை பைசல் செய்யவேண்டியதென்று அதற்கு முதல்நாளாவது அல்லது முந்தியாவது தீர்மானிக்கவேண்டியது; மேலும் கிராம நவுக்கர்களும், பயிரிடும் குடியானவர்களும் அவரவர்களிட கிராமங்களின் ஜமாபந்தி எப்பொழுது நடத்தப்படுமென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு தாசில்தார் கச்சேரியிலும் ஜமாபந்தி கச்சேரியிலும் பகிரங்கமான இடத்தில் எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி (ஜமாபந்தி செய்யவேண்டிய கிராமங்களை வரிசை வாரியாய் ஒரு ஜாபிதாவில் கண்டெழுதி அதை) ஒட்டவேண்டியது.

2. பிரதி தாலூக்காவின் ஜமாபந்தியை உயர்ந்தது பசலி ஆகயருக்குள்ளாவது செய்யவேண்டியது; ஜமாபந்தி முடிந்த 15–நாளைக்குள் தாலூக்காவின் பேரீஜ் ஸ்டேட்மெண்டை தயார் செய்து முடிக்க வேண்டியது. ஜமாபந்தி ஆபீஸர் தாலூக்காவை விட்டுப்போன பிற்பாடு ஜமாபந்தி கணக்குகளை அவரிட அனுமதி யில்லாமல் தித்துப்பாடு செய்யக்கூடாது; அவர் அந்த ஜில்லாவில் இல்லாமற்போனால் டிவிஷனலாபீஸரிட எழுத்து மூலமான அனுமதியில்லாமல் ஷை கணக்குகளை தித்துபாடு செய்யக்கூடாது; ஜில்லாவின் மொத்த பேரிஜ் ஸ்டேட்மேண்டை (இந்த ஸ்டேட்மெண்டு தாலூக்கா ஸ்டேட்மெண்டுகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது) பசலி ஆகயரான ஒரு மாதத்திற்குள் தயார் செய்யவேண்டியது.

3. ஒரு ஜில்லாவில் ஒவ்வொரு தாலூக்காவின் ஜமாபந்தியை ஐந்து வருஷத்திற்கு ஒருதரம் கலெக்ட்டரே நடத்தவேண்டியது.

4. தாலூக்காவில் சம்மந்தப்பட்ட நிலத்தீர்வையின் எல்லாவித அம்சங்களை ஆராய்ந்தறிந்து ஏற்படுத்தவேணுமென்கிற எண்ணத்துடன் வருஷவாரியில் ஜமாபந்தி செய்யப்படுகிறது. ரயத்துவாரிகிராமங்களின் பேரீஜை

மாத்திரம் ஏற்படுத்துவது போதாது. ஸ்திரமான தீர்வை ஏற்பட்டிருக்கிற ஜமீன் கிராமங்கள், இனும் கிராமங்கள், சில்லறை இனும் நிலங்கள், இது களிடபேரீஜையும் அப்போதேஏற்படுத்தவேண்டியது. கிராமகணக்குகளேயும் தாலூகாகணக்குகளேயும் பரிசீலனே செய்வதற்கு தகுந்தசமயம் ஜமாபந்தியா கையால் பிரதி ஜமாபந்தியிலும்கிராமகணக்குகளேத்தீர ஆராய்ந்து பரிசீலனே செய்வதோடுகூடஅந்தக்கணக்குகளேதாலுக்காகணக்குகளுடன்தணிக்கைசெய்யவேண்டியவிஷயத்தில் கலெக்டர்கள் கவனம் வைக்கவேண்டியது. பிரதி தாலூக்காவிலும் ஜமாபந்தி செய்யும் போதும் அந்தபசலியில் தாசீல்தார் முதல்தாலூக்காவிலுள்ள கீழ்உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் என்னென்ன வேலே செய்யவேண்டியதென்று கெவர்ண்மெண்டார் நம்பியிருக்கிறுர்களோ அந்தப்படி வேலேசெய்துவருகிறுர்களாவென்றும் கவனித்துப் பார்க்கவேண்டியது ; அப்படிப்பட்ட வேலேகளில் முக்கியமானவைஃ—சாகுபடியான நிலங்களே ஜாக்கிரதையாய் அஜிமாஷ்செய்வது ; நிலத்திற்காக கொடுக்கப்பட்ட தர்காஸ்துகளே சீக்கிரத்தில் பைஸல் செய்வது ; நிலத்தைக்கைவிடுதல், மாற்றுதல், முதலானவைகளேயும் சீக்கிரத்தில்பைசல் செய்வது ; நகதி கணக்குகளே பரிசீலனே செய்வது; (தீர்வை) வஜாவுக்காக செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களே பைசல்செய்வது ; கிஸ்துபடிபேரீஜை வசூல்செய்தல்.

5. கிராமநவுக்கர்கள் எழுதவேண்டிய கணக்கு வேலேகள் வரவர அதிகப்படுவதால் கூடியவரையில் கணக்கர்களே கிராமத்திலிருந்து (தாலூக்காவுக்கு) கொஞ்சகாலத்திற்கு மாத்திரம் வரவழைத்துக்கொள்ள வேண்டியது (போர்டாராலோ கெவர்ண்மெண்டாராலோ) குறித்திருக்கப்பட்ட கிராம கணக்குகளில் ஜமாபந்தி காலத்தில் ஜமாபந்தி ஆபீஸரிடஉத்திரவை அனுஸரித்து எழுதவேண்டிய அம்சங்களுக்கெல்லாம் இடம்விட்டு மற்றப்படி கணக்குகளே எழுதவேண்டியபடி தயார் செய்திருக்கிறுர்களாவென்று தாலூக்கா அதிகாரிகளும் டிவிஷனலாபீஸர்களும் பரிசீலனே செய்ய வேண்டிய தவசியமாகக் கவனித்துச் செய்துவரும் பட்சத்திலும், நிலத்தைக் கைவிடுதல், தர்காஸ்து, பட்டாமாற்றுதல், உத்திரவில்லாமல் (சர்க்கார்நிலங்களில்) பயிரிடுவதற்காக பொதுநன்மை அபராதத்தீர்வை விதிப்பது, சர்க்கார் ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்வதற்காக தீர்வைவிதிப்பது முதலாகிய விஷயங்களே அப்போதைக்கப்போது தாலூக்கா அதிகாரிகளும் டிவிஷனலாபீஸர்களும் பைசல் செய்துவரும் பட்சத்திலும் கொஞ்சநாளேக்குத்தவிர கணக்கர்களே கிராமத்தை விட்டுவரவழைப்பதற்கு யாதொரு அவசியமும் உண்டாகமாட்டாது ; வருஷவாரியில் அப்போதைக்கப்போது எழுதிவரவேண்டிய கணக்குகளே ஏக்காலத்தில் எழுதிப்போடும் பொருட்டு தாலூக்கா

கச்சேரிக்கு கணக்கர்களை வரவழைத்து அங்கே பலவாரங்கள் வரையில் அவர்களை நிறுத்திவைத்துக் கொள்ளும் வழக்கத்தைத் தடுத்துப்போடவேண்டியது.

6. வருஷாந்தர ஜமாபந்தியை நடத்துவதில் ஜில்லா அதிகாரிகள் அனுஸரிக்க வேண்டிய விதிகளை பின்வரும் பிரகரணங்களில் சுருக்கமாய் எடுத்துச் சொல்லியிருக்கிறது. இதில் கணக்கர்களும் ரெவினியூ இன்ஸ்பெக்ட்டர்களும் எந்தெந்த விஷயங்களில் ஜவாப்புதாரிகளாய் இருக்க வேண்டியதென்பதைப் பற்றி முக்கியமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும் தாசில்தாரானவர் தம்மிட தாலூக்காவின் நிலமையைப்பற்றியும் மேலும் தாலூக்காவில் முக்கியமான அதிகாரி அவரானபடியால் அவருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களிட நடத்தைகளைப்பற்றியும் அவரே ஜவாப்புதாரிஎன்றும் ஜமாபந்தி ஆபீஸர்கவனிக்கவேண்டியது. தாலூக்காவில் தாசில்தாருக்குக் கீழ்ப்பட்ட ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் செய்கிற வேலையை மேல்விசாரணை செய்து அந்தவேலைகளை அடிக்கடி பரிசீலனை செய்ய வேண்டிய தம்மிட ஹோதாவுக்குரியகடமைகளை பசலிவாரியில் தாசில்தார் நிறைவேற்றியிருக்கிறாரா வென்று ஜமாபந்தி ஆபீஸர் கவனிக்கவேண்டியது. தாலூக்காவில் தாசில்தாருக்குக் கீழ்ப்பட்ட பிரதான உத்தியோகஸ்தராகிய தாலூக்சிரஸ்தேதாரானவர் கிராமகணக்குகளை பரிசீலனை செய்வதற்கும் தாலூக்கா கணக்குகளை சரியாய் தயார்செய்விப்பதற்கும் முக்கியமாய் ஜவாப்தாரி; இவர் வேலையைத் திறமாய் செய்திருக்கிறாரா வென்றும் ஜமாபந்தி ஆபீஸர் கவனித்துப் பார்க்கவேண்டியது. தாலூக்கா கணக்குகளையும் கிராமகணக்குகளையும் தணிக்கை செய்தால் சிரதிர்ப்திகரமாய் தன்னிட கடமைகளை செய்திருக்கிறாரா வென்றுஉடனே ஏற்படும்.

7. தாலூக்காவில் தயார்செய்துவருகிற கணக்குகளை நன்றாய்த்தணிக்கை செய்வதற்கு ஜமாபந்திதான் தகுந்த சமயமென்று கலெக்டர்கள் டிவிஷனல் ஆபீஸருக்கு அறிவிக்கவேண்டியது. அநேக ஜில்லாக்களில் கிராம கணக்குகளையும் தாலூக்கா கணக்குகளையும் ஒன்றுக்கொன்று சரிப்படுத்துவதில் ஏற்படும் சிக்குகளெல்லாம் தாலூக்கா கணக்குகளிலும் கிராம கணக்குகளிலும் உள்ள ஊழல்களினால் உண்டாயிருக்கின்றன. வருஷாந்திரஜமாபந்தியை எப்பொழுதும் தீர ஆராய்ந்து நடத்தியிருக்கும் பக்ஷத்தில் மேற்கண்ட குழப்பங்கள் உண்டாயிருக்கமாட்டா.

8. 5-எ. நெ (ஜலப்பாய்ச்சல் விபரம்கண்ட ஸ்டேட்மெண்டு) கணக்கையும் 20 நெ. (காலாவதிரிபோர்ட்டு) கணக்கையும் வைத்துக்கொண்டு

தாலூக்காஉத்தியோகஸ்தர்களிட ரிபோர்ட்டுகளைத் தணிக்கைசெய்து வெள்ளப்பாழாயும் கரம்பாயும்சாவியாயும்போயிருக்கப்பட்ட நிலங்களை தாலூக்கா உத்தியோகஸ்தர்கள்போய் பார்த்தார்களா வென்றும், தீர்வை வஜாகோறிக் கொள்ளப்பட்ட வர்களின் பாத்தியதைகள் சரியானகாரணங்களுள்ளவை களென்றும் ஜமாபந்தி ஆபீஸர் தமக்குள் திடப்படுத்திக் கொள்ளவேண்டியது. ரிமிஷன்அப்ஸட்ராக்ட் (அதாவதுதீர்வைவஜாகணக்கு) 5நெ. ஸ்டேட்மெண்டில் தாம்செய்கிற உத்திரவுகளை தம்கையாலேயே இங்கியால் எழுத வேண்டியது.

9. பிரதி கிராமத்திலும் ரிமிஷன் (தீர்வை வஜா) விண்ணப்பங்கள் பைசல் செய்யப்பட்டவுடனே அதில் ஜமாபந்தி ஆபீஸரிட உத்திரவை எதிர்ப்பார்த்துக்கொண்டு எழுதாமல் விடப்பட்டிருக்கிற பத்திகளை (கலங்களை) எல்லாம் பூர்த்திசெய்து 12-நெ. ஜமாபந்தி அப்ஸ்ட்ராக்ட் ஸ்டேட்மெண்டு கணக்கை எழுதிமுடித்து கிராமத்தின் மொத்த பேரிஜ் இவ்வளவென்று ஏற்படுத்தவேண்டியது. பிறகு இந்தக்கணக்கையும் 10 நெ. கணக்கில் ii-வது பிரிவில் கண்ட அம்சங்களையும் ஒத்திட்டுப்பார்த்து கணக்கன், ஒத்திட்ட கிளர்க்கு, இவர்களிருவரும் ஷை 2 கணக்குகளும் சரியாயிருக்கின்றன வென்பதற்கு அத்தாக்ஷியாய் அந்தக்கணக்குகளில் கையெழுத்து செய்யவேண்டியது. ஜமாபந்தி ஆபீஸரிட கிளர்க்குகளில் ஒருவர் பிற்பாடு இந்தக்கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது. 2-வது கலம் முதல் 7-வது கலம் வரையிலும் முன்வருஷத்தின் கணக்குடன் தணிக்கை செய்ய வேண்டியது. 8 முதல் 25 வரையிலுள்ள கலங்களில் செய்யப்பட்டிருக்கிற மாறுதல்களை 3 ஏ நெ-(பட்டா·மாற்றுதல்கணக்கு) கணக்கையும் தாலூக்காவிலுள்ள 4, 5, 6, கணக்குகளையும் (தர்காஸ்து ரிஜிஸ்டர், கைவிட்டநிலங்கள் பலானவை என்று சண்ட ரிஜிஸ்டர், பட்டாமாற்றுதல் ரிஜிஸ்டர்களை) வைத்துக்கொண்டு தணிக்கை செய்ய வேண்டியது. 32 முதல் 37 வரையிலுள்ள கலங்களையும் 54 வது கலத்தையும் கிராமத்திய ரிமிஷன் (ஸ்டேட்மெண்டு) 5 நெ. கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது. ஸ்டேட்மெண்டில் கரம்பு என்று எழுதப்பட்ட விஸ்தீரணத்தில் எந்த பாகத்தையாவது பின்னிட்டு ஜமாபந்தி செய்யப்பட்ட தேதிக்கும் பசலி ஆகயருக்கும் மத்தியில் சாகுபடி செய்தால் முதலில் தாக்கல் செய்த விஸ்தீரணத்தை தித்துப்பாடு செய்யக் கூடும்; ஆகிலும் ஒருவருஷத்தில் மார்ச்சுமீ த்திற்கு பின்னிடடு விதைவிதைத்து அடுத்த பசலிவரையில் அறுவடையாகாத நிலங்களை அடுத்த வருஷத்திய கணக்குகளில் காண்பிக்கவேண்டியது. சிலவிஷயங்களில் தாலூக்காவிலுள்ள தர்காஸ்து ரிஜிஸ்டர்களும் நிலத்தைக் கைவிடுதலுக்காக செய்துகொண்ட விண்ணப்

பங்களைப் பதிந்த ரிஜிஸ்டர்களும் (4, 5-நெ கணக்குகள்) சரியாயிருக்கின்றனவாவென்று பார்க்கும்பொருட்டு அந்த கணக்குகளை தர்க்காஸ்துக்காகவும் கைவிடுதலுக்காகவும் கொடுத்துக்கொண்ட அஸல் விண்ணப்பங்களை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது.

10. இந்த வேலையை செய்ய உத்திரவு பெற்ற கிளர்க்கு தாலூக்காவில் 4 நெ–முதல் 7 நெ–வரையிலுள்ள கணக்குகளை கிரமமாய் வைத்துஇருக்கிறார்களாவென்று தான்செய்யும் ஷராக்களில் காணவேண்டியது; தணிக்கை செய்யும் கிளர்க்குகளால் இந்த கணக்குகளில் ஏதாவது பிசகுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் அவைகளை செகப்பு இங்கியால் திருத்தி அவிடத்தில் தங்களிட இனிஷியல் செய்யவேண்டியது.

11. (ஜமாபந்தி அபஸ்டிராகட்டு) 12 நெம்பர் ஸ்டேட்மெண்டை எழுதிதணிக்கையாய் தித்துபாடு செய்தவுடனே தாலுக்காவிலுள்ள (ஜமாபந்தி அப்ஸ்டிராகட்டு) 12 நெம்பர் ஸ்டேட்மெண்டில் பிரதி கிராமத்தின் விபரங்களைப் பதிவுசெய்யவேண்டியது. ஜமாபந்தி ஆபீஸர் இந்த இரண்டு கணக்குகளிலும் கண்ட மொத்ததுகை ஒன்றுக்கொன்று ஒத்திருக்கிறதாவென்றுபார்த்து தாலுக்காஸ்டேட்மெண்டிலும் கிராமஸ்டேட்மெண்டிலும் தாம்கையெழுத்து செய்யவேண்டியது.

12. இந்த கிராமவாரிபேரிஜ் கணக்குதயாராய் கையெழுத்தாகிறவரையில் பட்டாகொடுக்கக் கூடாது. ஒருதாலூக்காவின் ஜமாபந்தியை நடத்தும் உத்தியோகஸ்தர் அந்ததாலூக்காவின் டிவிஷனல் ஆபீஸராயிராமற்போனால் 12 நெம்பர் தாலூக்கா அப்ஸ்டிராகட்டு ஸ்டேட்மெண்டுக்கு ஒரு நகல் எழுதி தாலூக்காவின் ஜமாபந்தி ஆனவுடனே அந்த நகலை (அந்ததாலூக்காவின்) டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பவேண்டியது. இதையும் டிவிஷனல் ஆபீஸர் ஜமாபந்திசெய்தபிறகு ஏற்படுகிற பேரீஜைக்கண்டு இப்பால் தயார் செய்யப்படுகிற ஸ்டேட்மெண்டையும் கலெக்டருக்கு அனுப்பவேண்டியது.

13. ஸ்திரமான தீர்வை ஏற்பட்ட ஜமீன் இலாகாக்கள், இனும் கிராமங்கள் முதலானவைகள், அவைகளிலிருக்கப்பட்ட தனிஇனும் நிலங்கள், இவைகளுக்கு சம்பந்தப்பட்ட அப்ஸ்டிராக்ட்டு ஸ்டேட்மெண்டை தாலூக்காவின் B ரிஜிஸ்டரிலிருந்து (ஸ்திரமான தீர்வை ஏற்பட்ட ஜமீன்முதலானவைகளின் பேரிஜைக்காட்டும் ரிஜிஸ்டரிலிருந்து) எல்லாவிதத்திலும் வசூலாகக்கூடிய ரெவினியூவின் மொத்த பேரீஜையும் கண்டு தயார் செய்யவேண்டியது.

14. (ஸர்க்கார்) பாக்கிகளைத் தணிக்கை செய்வதில் மேல்விசாரணை செய்ய வேண்டியது ஜமாபந்தி ஆபீஸரிட கடமையில் முக்கியமான பாகங்களிலொன்று ; அவர் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களில் ஒரு கிளர்க்கு 14 நெம்பர் (நபர்வாரி கணக்கு) கிராம கணக்கில் கண்ட பாக்கிகளெல்லாவற்றுக்கும், வசூலாகக் கூடாததென்று கணக்கில் அடித்துவிடப்பட்ட பாக்கிகளுக்கும், 15A. 15B. நெ. தாலூக்கா பேரீஜ் வசூல் பாக்கி கணக்கில் தகுந்தகாரணம் சொல்லப்பட்டிருக்கிறதா வென்று பார்க்க வேண்டியது; தவிரவும். 14, 14A, 15, 16, நெம்பர் கிராம காஷ் (ரொக்க) கணக்குகளில்கண்ட வசூல் துகைகள் தாலூக்காவிலுள்ள (ரயத்துவார் வசூல் அப்ஸ்டிராகட்டு) 15 நெம்பர் கணக்கிலும் (பேரீஜ் வசூல் பாக்கிஸ்டேட்மெண்டு) 15A. நெம்பர் கணக்கிலும் பதிவு செய்துயிருக்கிற துகைகளுக்கு எல்லாவிஷயத்திலும் ஒத்திருக்கின்றனவாவென்றும் பற்பல கணக்குகளில் கண்டிருக்கிற வசூல் துகைகளை வருஷ ஆரம்பத்தில் ஏற்பட்ட பேரிஜ் துகையிலிருந்து கழித்துவந்த பாக்கிதுகை இரண்டுகணக்குகளிலும் ஒரே துகையாயிருக்கிறதா வென்றும் பார்க்கவேண்டியது. 13 நெம்பர் தேதிவாரி காஷ்(தண்டல்) சிட்டாவில் கண்டிருக்கப்பட்ட மொத்த துகைகளை சாத்தியமானவரையில் எத்தனைகிராமங்களிடகணக்குகளைத் தணிக்கை செய்யக்கூடுமோ அத்தனை கிராமகணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டியது. தாலூக்கா கணக்குகளும் கிராமகணக்குகளும் முழுமையும் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கவேண்டியதென்று வற்புறுத்திச்சொல்லவேண்டியது ; ஏதாவது வித்தியாசம் தென்பட்டால் அது எவ்வளவு அற்பமானதாயிருந்தபோதிலும் அதை சரிப்படுத்தவாவது வேண்டியது, அல்லது திருப்திகரமாய் (காரணம்) விபரித்து சொல்லவாவது வேண்டியது.

15. ஜமாபந்தி ஆபீஸர் தாமாகவே சிலபாகமும் தம்மிட முன்பாக தம்மிட உத்தியோகஸ்தர்களைக்கொண்டு சிலபாகமும் கிராமக் கணக்குகளை பரிசீலனை செய்ய வேண்டியது; பின்னால் சொல்லப்பட்ட தணிக்கைகளை பெரும்பான்மையாய் அனுசரிக்கவேண்டியது; அனுபோகத்தினால் அந்தந்த யிடங்களுக்கு ஏற்றதாய் ஏற்படுகிற யின்னும் வேறுவித தணிக்கை செய்ய வேண்டியது யுக்தமாய்த்தோன்றினால் அவைகளையும் செய்ய வேண்டியது.

1. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(மாசாந்திர சாகுபடி கணக்கு) கிரமமாய் ரெவினியூ இனிஸ்பெக்டருக்கு அனுப்பப்பட்டு பிரதிமாசத்திலும் அதில் அவர் கையெழுத்து செய்திருக்கிறாராவென்று பார்க்கும் பொருட்டு இந்த கணக்கை பரிசீலனை செய்யவேண்டியது. மழை பெய்ந்த பிற்பாடு நஞ்சை புஞ்சை சாகுபடி செய்யப்பட்டதாவென்று பார்க்கும் பொருட்டு ஷை கணக்கை 20 நெம்பர் (காலாவதி ரிபோர்ட்டு) ஸ்டேட்மெண்டைவைத்

துக் கொண்டு தணிக்கை செய்யவேண்டியது; இந்த கணக்குகளில் பிரத்தியக்ஷமான பேதங்கள் ஏதாவது யிருந்தால் அவைகளுக்குக் காரணம் சொல்லவேண்டியதற்கு கணக்கனே ஜவாப்தாரியாக்கவேண்டியது. (அடங்கல்) 2 நெம்பர் ஸ்டேட்மெண்டில் எந்த நிலங்களையாவது கரம்பு என்றுகண்டு இந்த (நெம்பர் 1. சாகுபடி) ஸ்டேட்மெண்டில் அதே நிலங்கள் எந்தமாதத்திலாவது சாகுபடியானதாக எழுதப்பட்டிருக்கிறதாவென்று பார்க்கும் பொருட்டு இரண்டு கணக்குகளையும் ஒத்திடவேண்டியது.

2. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(அடங்கல்): (பலானநிலம்) சாகுபடி (பலானநிலம்) கரம்பு என்று எந்த மாதத்தில் ரெவினியூ இனிஸ்பெக்டர் அஜிமாஷ் செய்தாரோ அந்த மாதத்தைக் குறிக்கவேண்டியது. ஒவ்வொரு போகத்திலும் சாகுபடியான விஸ்தீரணமானது பிரத்தியேகமாய் பதிவுசெய்யப்பட்டிருக்கிறதாவென்று பார்க்கவேண்டியது. இதில் எழுதியிருக்கிற சாகுபடியை (மாதாந்தரசாகுபடி) 1 நெம்பர் கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது. இந்த கணக்கு மிகவும் முக்கியமானதாயும் ஜமாபந்திக்கு ஆதாரமானதாயுமிருக்கிறது. மொத்த சாகுபடி செய்த விஸ்தீரணத்தை (நபர்கதி அப்ஸ்டிராகட்டு) 12 நெம்பர் கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது; மேலும் முதல்போகசாகுபடியானுலும் அல்லது இரண்டாவதுபோக சாகுபடியானுலும் சாகுபடியான நிலங்களெல்லாம் கணக்கில் எழுதப்பட்டிருக்கின்றனவா வென்று கவனித்துப் பார்க்கவேண்டியது.

3. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(பட்டாமாற்றுதல்ரிஜிஸ்டர்) பசலிவாரியில் தர்க்காஸ்து செய்து நிலம் அடமானம் செய்துக்கொண்ட சிலவிஷயங்களில், தர்க்காஸது விஷயமாய் போர்ட்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள் பிரகாரம் அனுசரித்தார்களா வென்று பார்க்கும் பொருட்டு தர்க்காஸ்து மிமோக்களை பரிசீலனை செய்யவேண்டியது. இந்த ஸ்டேட்மெண்டில் 10வது – கலத்தை பெர்மனெண்டு (ஸ்திரமான) ரிஜஸ்டர்களை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேணடியது.

4. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(ரெவினியூ பாக்கிக்காக போடப்பட்டஏலத்தில் கவர்ண்மெண்டாரால் ஏலமெடுக்கப்பட்ட நிலங்களைப்பதிந்த ரிஜஸ்டர்): இந்தகணக்குதாலூக்காவிலுள்ள (ரெவினியூபாக்கிக்காகப்போடப்பட்ட ஏலங்களின் ரிஜஸ்டர்) 18 நெம்பர் கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்து பிரதிவிஷயத்தைப் பற்றியும் ஜமாபந்தி ஆபீஸர் விசாரணை செய்யவேண்டியது.

5. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(தீர்வைவஜா) இந்தகணக்கில் பதிவுசெய்திருக்கப்பட்ட கலங்களை 2 நெம்பர் (அடங்கல்) ஸ்டேட்மெண்டையும் நெம்பர் 6 (ஜலம்பாயப்பட்ட நிலங்களைக் காட்டும் ஸ்டேட்மெண்டு) கணக்கையும் வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது. ஜமாபந்தி ஆபீஸரானவர் தீர்வை வஜாவுக்காகச் செய்துகொள்ளும் தாவாக்களைப்பற்றி விசாரித்து தாம் செய்யும் உத்திரவுகளை தம்கையினலெழுதி ஸ்டேட்மெண்டினடியில் தாம் கையெழுத்து செய்யவேண்டியது. ஜமாபந்திஆபீஸர் தீர்வை வஜாஸ்டேட்மெண்டில் கையெழுத்து செய்த பிற்பாடு அவரிட இனிஷியலில்லாமல் இந்தஸ்டேட்மெண்டில் யாதொருதித்துபாடும் செய்யக்கூடாது.

8. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(நஞ்சை சாகுபடியான நிலங்களைக் காட்டும் ஸ்டேட்மெண்டு) ஸெட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டாரிட விபரமான உத்திரவுகளை கணக்கன் அறிந்து கொள்ளுகிருனவென்று பார்க்கும் பொருட்டு இந்த ஸ்டேட்மெண்டை ஜாக்கிரதையாய் பரிசீலனை செய்யவேண்டியது.

10. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(நபர்கதி சிட்டா) தர்க்காஸ்து விதிகள், போர்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர்கள், 64-ஞூலத்திய II-வது ஆக்டில் சண்டஉத்திரவுகள், இவைபிரகாரம் நெறி தவருமல் அனுசரித்து வந்திருக்கிருர்களா வென்றும் ஏதாவது ஒழுங்குதப்பி நடந்திருக்கிருர்களா வென்றும்பார்க்கும்பொருட்டு, இந்தஸ்டேட்மெண்டில்கண்டகைவிட்டது, பட்டமாற்றுதல் முதலாகிய சில அம்சங்களைத்தணிக்கை செய்யவேண்டியது.

10. நெம்பர் ஸ்டேட்மெண்டிலுள்ள அடக்கம்.—இறந்து போன பட்டாதாரர்களின் பெயரை ரிஜிஸ்டரில் அடித்துவிட்டு அவர்கள்வார்சுதார்களுடைய பெயரை எழுதி பட்டாமாற்றுதல் செய்யும் விஷயங்களிலெல்லாம் அந்த கிராமத்தின் ஜமாபந்தி முடிவாகிறதற்கு முன்னமே பைசல் செய்யவேண்டியது.

13. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(தேதிவாரி காஷ்சிட்டா) பயிரிடும் குடியானவர்கள் எவர்களாவது ஜமாபந்தி காலத்தில் ஆஜரிலிருந்தால் அவர்களிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கைச்சாத்துகளில் சிலவற்றை தோன்றினபடி எடுத்தாவது அல்லது வரவழைத்தாவது 13 நெம்பர்கணக்கில்செய்திருக்கிறபதிவுகளுடன் ஒத்திடவேண்டியது. இதனல் கிராம நவுக்கர்களின் நடத்தையும் அவர்கள் செய்யும் வேலையும் நன்ருய்ப்பரீட்சிக்கப்படுகிறபடியால் தவருமல் இந்ததணிக்கையை செய்ய வேண்டியது.

14. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(நபர்கதி கணக்கு), வசூலாகக் கூடாததென்றுகணக்கிலிருந்து அடித்துவிடும்படிஉத்திரவான துகைகளை இந்தஸ்டேட்மெண்டில் பதிந்திருக்கிறார்களாவென்றும் பின்னிட்டு வசூலான துகைகளெல்லாம் கணக்கில் எழுதப்பட்டிருக்கின்றனவாவென்றும்பார்க்கவேண்டியது.

14 B. (வசூலாகக் கூடாத பாக்கிகளைக் கண்டெழுதிய) ஸ்டேட்மெண்டு.—வசூலாகக் கூடாததென்று எழுதப்பட்ட பாக்கிகள் வாஸ்தவமாய் வசூலாகக்கூடாதவைகள்தான்எழுதப்பட்டிருக்கின்றனவாவென்றும்மோசக் கருத்துடனேயாவது அவசியமாய் வேண்டியமட்டுக்கு மிஞ்சியாவது எழுதப்படாமலிருக்கிறதாவென்றும் ஜமாபந்தி ஆபீஸர்தணிக்கை செய்யவேண்டியது. பிரதிவிஷயத்திலும் பாக்கிதாரனுக்கு சொத்தில்லையென்றுரெவினியூ இனிஸ்பெக்டர்எழுதி இருக்கிராரூவென்று பார்க்கவேண்டியது. ஜமாபந்தி ஆபீஸர் ஒவ்வொரு அம்சத்தையும் தாமாய்பரிசீலனை செய்து தம்மிட உத்திரவுகளை எழுதவேண்டியது. பலான பசலிகளில் பலான அம்சங்களில் வசூலாகக் கூடியதல்லவென்று ஏற்பட்ட துகையைக் கண்டு ஒரு அப்ஸ்டிராக்டு ஸ்டேட்மெண்டு தயார்செய்து 12 நெம்பர் (ஜமாபந்தி அப்ஸ்டிராக்டு) கணக்குடன் டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பவேண்டியது.

14. C. (ஜாஸ்தி வசூல் ஸ்டேட்மெண்டு) வாப்சு செய்யப்பட்டதென்று கண்டிருக்கிற துகைகளையெல்லாம் வாஸ்தவ்யமாய் சம்பந்தப்பட்ட குடியானவர்களுக்கு பட்டுவாடாசெய்து ரசீது பெற்றுக்கொள்ளப்பட்டதாவென்றும் இதில்யாதொரு தாமதமும் நேரிடவில்லை யென்றும் பார்க்கும் பொருட்டு இந்தக்கணக்கை பரிசிலனை செய்யவேண்டியது.

15. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(ரிமிஷன்பட்டி அல்லது தீர்வைவஜா ஜாப்தா,) 16. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(கிஸ்து பந்தி) கிராமத்திலிருந்து பணம் இருசால்செய்வதில் தாமதமாவது ஒழுங்குதவறுதலான நடவடிக்கைகளாவது நேர்ந்ததோவென்று பார்க்கும் பொருட்டு இந்தக்கணக்குகளைப் பரிசீலனை செய்யவேண்டியது. சிலஸ்டேட்மெண்டுகளை எடுத்து அவைகளில் கண்டிருக்கிற மொத்ததுகைகளை தாலூக்கா காஷ்சிட்டாவுடன் தணிக்கை செய்யவேண்டியது. தாலுக்காவில் கிராமங்களை பிரிவினை செய்வதில் ரொம்பகவனம் செலுத்தி பிரிவினை செய்யவேண்டியது; ஏனென்றால் அப்படி பிரிவினை செய்தபிற்பாடு பிரதிகிராமத்திலிருந்தும்கிரமமாய் இருசால் செய்து தாமதமில்லாமல் (16 நெம்பர்கிஸ்துபந்தி) ஸ்டேட்மெண்டை திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடுமானதாய் இருக்கவேண்டியது.

19. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(ஜனனமரண கணக்கு), 21. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(பட்டாதாரர்கள், கிருஷித் தொழிலுக்குவேண்டிய கால்நடைகள்). 22. நெம்பர் ஸ்டேட்மெண்டு.—(ஜலாதாரங்களைக் காட்டும் ஸ்டேட்மெண்டு,) தோன்றினபடி சில கிராமங்களின் ஸ்டேட்மெண்டுகளை எடுத்துக் கொண்டு அந்த கிராமங்கள் சம்பந்தமாய் இந்த ஸ்டேட்மெண்டுகளில் கண்டபதிவுகள் சரியாயிருக்கின்றனவாவென்று தணிக்கை செய்ய வேண்டியது. கடைசியாய் நிலங்களை உட்பிரிவினை செய்யும் விஷயமாய் பிறப்பிக்கலான உத்திரவுகள் பிரகாரம் அனுசரிக்கப் பட்டிருக்கிறதாவென்றும் தர்க்காஸ்து விண்ணப்பங்களைப்பைசல் செய்யும்விஷயத்தில் அனுவசியமான காலதாமதம் நேரிட இடங்கொடுக்கப்படாமலிருக்கிறதா வென்றும் பார்க்கும் பொருட்டு தர்க்காஸ்த்து மெமோராண்டங்களையும் தாலுக்காவிலுள்ள (4 நெம்பர் கணக்கு) தர்க்காஸ்த்து ரிஜிஸ்டரையும் பரிசீலனை செய்யவேண்டியது.

16. ஸெட்டில்மெண்டான ஜில்லாக்களில் ஒருகிராமத்திய ஜமாபந்தி செய்யும்போது அந்த கிராமத்திய கணக்கன் வசத்திலிருக்கிற படங்களையும், ஸெட்டில்மெண்டு ரிஜிஸ்டர்களையும், ஜமாபந்தி ஆபீஸர் தம்முடைய பரிசீலனைக்காகக்கொண்டு வரும்படி உத்திரவு செய்யவேண்டியது. அவைகள் ஒழுங்காய் இருக்கவில்லையென்று ஏற்பட்டால் வேண்டிய சிலவுகளை கணக்கனிடத்திலிருந்து வசூல்செய்துதாலுக்காவிலிருந்து புதுபடம் அனுப்பவேண்டியது ; மேலும் கிராம நவுக்கர்களிடவசத்திலிருக்கிற ஜில்லா கெஜட்டுகளையும் ஸர்க்கியுலர் உத்திரவுகளையும் யாதொன்றையும் விடாமல் ஒரு புஸ்தகமாதிரியாகச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்களா வென்றும் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது.

23. **தீர்வை வஜா.**—ஜலக்குறைவினாலாவது அல்லது வெள்ளப்பெருக்கினாலாவது பட்டா நஞ்சை நிலத்தை கரம்பாய்ப் போட்டிருந்த விஷயத்திலாவது அல்லது அதில்பயிரிட்ட தானியமுழுவதும்பலனில்லாமற்போயிருந்தாலாவது அப்பேர்ப்பட்ட விஷயத்தில் மாத்திரமே பூரா தீர்வையும் வஜா செய்யப்படும் ; ஆனால் அப்பேர்ப்பட்ட ஜலக்குறைவாவது வெள்ளப்பெருக்காவது நிலதார்களிட யாதொருசெய்கையினாலாவது அஜாக்கிரதையினாலாவது நேரிட்டதா யில்லாமலிருக்கவேண்டும். பூரா ரெவினியூ நிலத்தையும் கரம்பாய்ப்போட்டுவிட்டவிஷயங்ளிலாவது அந்த நிலத்தின்முழு விஸ்தீரணத்திலும் பயிரிடப்பட்ட தானியமெல்லாம் முற்றிலும் பலனில்லாமற்போன விஷயங்களில்மாத்திரமே சாதாரணமாய்மேற்கண்டதீர்வை

வஜாசெய்யப்படுமே தவிர, நிலத்தின் கொஞ்சபாகமாத்திரம் கரம்பாய் போடப்பட்டாலாவது அப்பேர்ப்பட்ட பாகங்களுக்குத் தீர்வை வஜாசெய்யப்படமாட்டாது. ஸர்வேயும் ஸெட்டில் மெண்டும் செய்யப்பட்ட ஜில்லாக்களில் நஞ்சை நிலத்தீர்வையை வஜாசெய்துகொள்ளும் பொருட்டு நிலத்தை உடபிரிவனை (ஸப்டிவிஷன்) செய்யஉத்திரவுகொடுக்கப்படும், ஆனால் அப்படிப் பிரிவனை செய்த புலமானது விஸ்தீரணத்தில் ஒரு ஏகராவுக்கு குறையாமலிருக்கவேண்டியது.

2. ஸெட்டில்மெண்டுடிபாட்மெண்டாரால் ஸெட்டில்மெண்ட்செய்யப்படாத ஜில்லாக்களில் நஞ்சை நிலத்தில் பயிரிட்ட மாசூலில் ஜலக்குறைவினலாவது வெள்ளப்பாழினலாவது ஓர்பாகம் பலனில்லாமற்போனல் அந்தபாகத்துக்குள்ள தீர்வை வஜா செய்யப்படும்; ஆனால் அப்பேற்பட்ட ஜலக்குறைவாவது அதிவெள்ளமாவது நிலத்தின் சொந்தக்காரனிட எவ்வித செய்கையினலாவது அஜாக்கிரதையினலாவது நேர்ந்ததாயிருக்கக்கூடாது. இம்மாதிரியாய் தீர்வையின் ஓர்பாகத்தை வஜா செய்வதில் பிரதி நபருக்கும் நேரிட்ட நஷ்டத்தை மதிப்பிட்டு கணக்கு ஏற்படுத்தப்படமாட்டாது. சற்றேசுமாராய் விளைந்த நிலங்களும், அனுபோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கரம்பு நிலங்களும், அனுபோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாத கரம்பு நிலங்களும் இவைகள் நீங்கலாக பிரதி ஜலாதாரத்திலிருந்து ஜலம் பாயக்கூடியதாயும் மாசூல் சாவியாயும் போயிருக்கிற ஆயக்கட்டின் விஸ்தீரணம் இவ்வளவென்று ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது. சாவியாய்ப் போயிருக்கிற நிலங்களில் போதுமானவரையில் சிலவற்றின்நிலமையைப்(பரிக்ஷார்த்தமாய்) பரிசீலனை செய்யவேண்டியது; சாவியாய்ப்போன எல்லாநிலங்களின் பேரிஜை மேலே கணக்கிட்டபடி உண்டாகிற வீதப்பிரகாரம் குறைக்கவேண்டியது. இந்த விஷயத்தில் நிலத்தின் அதமபக்ஷம் விஸ்தீரணம் இவ்வளவுதான் இருக்கவேண்டியதென்கிற அளவில்லை; தவிரவும் கலெக்டரானவர் ஒரேகிராமத்துக்காகிலும் அல்லது ஒருகுளத்திலிருந்து ஜலம் பாய்கிற விஸ்தீரணத்துக்காகிலும் அல்லது அந்த விஸ்தீரணத்தின் ஒருபாகத்துக்கு மட்டிலும் தீர்வை வஜா செய்வதாயிருந்தால் அதுவிஷயத்தில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஒரே கிராமத்தில் பிரத்தியேகமாய் 2 - 3 - ஜலாதாரங்களிருந்து அவைகள் ஒவ்வொன்றினும் கொஞ்சம் கொஞ்சமாக மாசூல் சாவியாய்ப் போயிருந்து ஆனல் பிரதி விஷயத்திலும் வியக்தமாய்த்தெரிகிற வித்தியாசமுமிருந்தால் தனித் தனியாக வீதம் போட்டுத் தீர்வை வஜா செய்யவும் கூடும்.

3. மேற்கண்ட பிரகாணத்தில் விவரித்துச் சொல்லப்பட்ட சந்தர்ப் பங்களைப் போலொத்த விஷயங்களில், (புஞ்சை மாசூல் சாகுபடிதவிர வேறேவிதமான சாகுபடிக்கு லாயக்கில்லாமல்) கரம்பாய்க்கடந்திருக்கவேண் டிய நஞ்சை நிலத்தில் புஞ்சை மாசூல் சாகுபடிசெய்தால் அதற்கு அந் தக்கிராமத்தில் புஞ்சை நிலத்திற்கு உயர்ந்த தீர்வை எவ்வளவோ அந்தத்தீர் வையைத்தான் விதிக்கவேண்டியது. இந்தவிதியானது எல்லா ஜில்லாக்களுக் கும்சம்பந்தப்பட்டது. புஞ்சைநிலத்தின்உயர்ந்த தீர்வையானதுமேற்சொல் லிய புஞ்சை மாசூல் சாகுபடி செய்யப்பட்ட நஞ்சை நிலத்தின் தீர்வை யைவிட ஜாஸ்தியாயிருந்தால் அப்பேர்க்கொத்தவிஷயங்களில் கலெக்டரா னவர் அக்கம்பக்கத்திலுள்ள புஞ்சை நிலத்தின் தீர்வையையாவது அல் லது இதேமாதிரியான புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தீர் வையையாவது கொஞ்சகாலம் வரையில் ஊர்ஜிதத்திலிருக்கும்படி தம் மிட யுக்தானுஸாரம் விதிக்கலாம். புதிதாய்ஸெட்டில்மெண்டு செய்யப்பட்ட ஜில்லாக்களில், (புஞ்சை சாகுபடியான) நஞ்சை நிலமானது எந்த வகுப்பில் எந்த தரத்தில் சேர்ந்ததோ அந்தவகுப்பு அந்த தரத்துப் புஞ்சை தீர்வை யை(புஞ்சை சாகுபடியானதற்கு) விதிக்கவேண்டியது ; ஆகிலும் பலான நிலங்கள் நஞ்சை, பலான நிலங்கள் புஞ்சை என்பது (இதுனல் மருமல்) அப்படியே யிருக்கும்.

4. ஏதோ அபூர்வமான சில விஷயங்களிலும் ஏதோ சில விசேஷ மான சந்தர்ப்பங்களிலும் தவிர புஞ்சை நிலங்களுக்கு தீர்வை வஜாசெய் யப்படமாட்டாது; அன்றியும் (அப்படி அபூர்வமான விஷயங்களில் வஜா செய்வதாயிருந்தால்கூட) போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொண்ட மேல்தான் வஜாசெய்யவேண்டியது. போர்டாரிட அனுமதியைப்பெற்றுக் கொள்ள ஜனவரிமீ முடிவுக்குள் விண்ணப்பம்செய்துகொள்ளவேண்டியது. நபர்கதி வாரியாய் நேர்ந்த நஷ்டத்தைப்பற்றி யாதொரு விசாரணையும் செ ய்யாமலே, புஞ்சை நிலத்தில் மாசூல் விளையாமல் பாழாய்ப் போனதால் நே ரிட்ட நஷ்டத்திற்குத் தக்கபடி அந்த நிலத்தின்பேரிஜைக்குறைத்து அப் படி குறைக்கப்பட்ட துகையை (ரிமிஷனுக) வஜாசெய்யவேண்டியது. 2வது பிரகரணத்தில் சொல்லியமாதிரியாய்ப் பரிசீலனை செய்யப்பட்ட சில நிலங்களுக்கு நேரிட்ட நஷ்டத் தாமாஷாப்படி எல்லாநிலங்களுக்கும் நேரிட் டதாகப் பாவித்து சராசரி வஜா துகையை கணக்கிடவேண்டியது. புஞ்சை நிலங்களுக்கு கசர்த்தீர்வை விதிக்கப்பட்டிருந்தால் ஜலக்குறைவினலாவது வெள்ளப்பெருக்கினலாவது அந்த நிலத்தின் மாசூல்முற்றிலும் நஷ்டமாய்ப் போயிருந்தால் மாத்திரமே கசர்த்தீர்வை வஜா செய்யப்படும்; ஆனல் அப் பேற்பட்ட ஜலக்குறைவாவது அல்லது வெள்ளப்பெருக்காவது நிலத்தின்

சொந்தக்காரர்களிட எவ்விதசெய்கையினலாவது அஜாக்கிரதையினலாவது உண்டானதா யிருக்கக்கூடாது.

5. தீர்வை வஜாசெய்யப்பட்ட விஷயங்களிலெல்லாம் முன்னடியே செலுத்தப்பட்ட துகைகளை வாப்ஸ் கொடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் விதிகள் பிரகாரம் வாப்ஸ் செய்யப்படும்; ஆனல் நிலத்துக்காக தீர்வைவஜா செய்யப்பட்டதினலேயே அந்தநிலத்துக்காக செலுத்தவேண்டிய "செஸ்"* தீர்வைகளை வஜாசெய்ய வேண்டியதென்று தாத்பரியமல்ல.

6. இந்த விதிகளை கண்டிப்பாய் ஊர்ஜிதத்தில் அனுஸரிக்கச் செய்ய வேண்டியது; இவைகளில் கண்ட பிரகாரம் தீர்வை வஜாசெய்யவேண்டுமே யல்லாமல் வேறே விதமாய் யாதொருவித வஜாவையும் செய்யக்கூடாது.

24. பட்டா பெற்றுக்கொள்வதினலுள்ள பாத்தியதைகளும் பொறுப்புகளும்.—ஒருரயத்துவாரி நிலத்தின் பட்டாதாரனைவன், ஜில்லாவிலுள்ள லாண்டுரிஜிஸ்டரில்தன்பேரில் பதிவாயிருக்கிறரயத்துவாரி நிலங்கள் தன்னிட வசத்திலிருந்து ரெவினியூ பாக்கிக்காகப்போடப்பட்ட ஏலத்திலாவது சட்டத்தை அனுஸரித்த இன்னும் வேறே விதமாயாவது (பிறர் வசத்துக்கு)போகும் வரையில் அந்த நிலங்களுக்கு கெவர்ண்மெண்டாருக்கு ஜவாப்புதாரியான சொந்தக்காரன்; ஒருபயிரிடும் குடியானவன்தன்நிலங்களை கரம்பாய்ப்போட்டுவிட்டானென்கிற காரணத்தினலேயே அந்தநிலங்கள் அவன்பட்டா விலிருந்து அடித்து விடப்படமாட்டா.

2. கெவர்ண்மெண்டார் சம்பந்தப்பட்ட வரையில், ரிஜிஸ்டரில்பெயர் பதிவு செய்யப்பட்ட பட்டாதாரன் தன் வசத்திலிருக்கப்பட்ட முழு நிலங்களையாவது அவைகளில் கொஞ்சபாகத்தையாவது பராதீனப்படுத்தலாம், அல்லது உட்குத்தகைக்கு விடலாம், அல்லது அடகுவைக்கலாம், அல்லது விற்கலாம், அல்லது தானம் கொடுக்கலாம், அல்லது மரணசாதனம் எழுதி தானம்செய்யலாம், அல்லது வேறு எவ்விதமாயாவது பைஸல்செய்து கொள்ளலாம்; ஆனல் மேலே சொல்லியபடி செய்வதற்கு 2 ஷரத்துகள் அவசியமானவை, அதாவது-(1)அப்படிச்செய்யப்பட்டமாற்றுதலாவதுவேறே எவ்விதமான நடவடிக்கையாவது ஜில்லாவிலுள்ள லாண்டு ரிஜிஸ்டரில் பதிவுசெய்யப்படுகிறவரையில், அப்பேர்ப்பட்டமாற்றுதல்அல்லதுவேறுவிதமானபைசல்செய்யப்படாதிருந்தால் முன்னடிரிஜிஸ்டரானபட்டாதாரனைவன் அந்த நிலங்களுக்குள்ள தீர்வைக்கும் இன்னும் சட்டத்தை யனுஸரித்து விதிக்கப்படும் இதர வரிகளுக்கும் எப்படி அவன் ஜவாப்பு தாரியாய் இருப்பானே அதேமாதிரியாகவே அவன் இப்போது லாண்டு ரிஜிஸ்டரில்

* செஸ் தீர்வைக்கு உதாரணம்:—ரோட் செஸ், வில்லேஜ் செஸ்.

பதிவு செய்கிறவரையிலும் அப்போப்பட்ட தீர்வைமுதலான வரிகளுக்கு ஜவாப்புதாரியாவான்; (2) பட்டாமாற்றுதல் செய்ததை ரிஜிஸ்டரில் பதிவு செய்வதினுல், நிலத்தைப்பெற்றுக் கொள்ளுகிறவன் அந்த நிலத்துக்குள்ள தீர்வைபாக்கி முதலான சர்க்கார்வரிகளைச் செலுத்துவதற்குட்பட்டும் நிலத்தைமாற்றினவன் அந்த நிலத்தை பொதுவாயோ அல்லது பிரத்தியேகமாயோ இருக்கப்பட்டஎவ்வித கட்டுமோனம் அல்லது ஷரத்துகளுக்குட்பட்டு அனுபவித்து வந்தானே அவ்வித கட்டுமோனத்துக்கும் ஷரத்துக்கும் உட்பட்டு நிலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாகும்.

3. நிலத்தின் சொந்தக்காரன் வெகுகாலமாய் காணுமற் போயாவது அல்லது நிலத்தை அனுபவியாமலாவது இருக்கிறுனென்கிற காரணத்திஞலேயே மேலே சொல்லியுபடி மாற்றுதல் செய்வதற்கு அவனுக்கிருக்கும் பாத்தியதைக்கு ஹானி உண்டானதாக பாவிக்கப்படமாட்டாது.

4. ரிஜிஸ்டரான ஒரு பட்டாதாரனுனவன் தன் நிலத்தில் ஒரு குளம் வெட்டியாவது அல்லது கிணறு தோண்டியாவது அல்லது கட்டடங்களைக் கட்டியாவது அந்த நிலத்தைச் சீர்ப்படுத்திஞல் அப்படி விர்த்தி செய்ததற்காக அதிக தீர்வை ஒன்றும் விதிக்கப்படமாட்டாது; ஆனுல் அப்படி விருத்தி செய்வதற்காக வெட்டப்பட்ட குளம் கிணறு முதலானவை அந்த நிலத்தில் எவ்வளவு பாகத்தில்பரவியிருக்கின்றனவோ அவ்வளவுபாகத்துக்குள்ள தீர்வையை வஜாசெய்துக் கொள்ள பாத்தியஸ்தனுய் விடமாட்டான்.

5. ஒரு நிலத்தின் ரிஜிஸ்டரான பட்டாதாரனுனவன் தன் நிலத்தைப்பயிரிட்டாலும் கரம்பாய்ப்போட்டு விட்டாலும், ரிமிஷன் செய்யவேண்டியதற்காக ஏற்படுத்தி யிருக்கப்பட்ட விதிகளுக்குட்பட்டு, அந்த நிலத்திற்குள்ள தீர்வையை குறித்தகிஸ்துகள் பிரகாரம் செலுத்தக்கடமைபட்டவனுயிருக்கிறுன்.

6. மறுபட்டா கொடுக்கப்படுகிறவரையில் முதலில் கொடுக்கப்பட்ட பட்டா செல்லும்; வருஷாவருஷம் புதுப்பட்டா கொடுக்கப்படவேண்டுமென்பது அவசியமல்ல.

7. ரிஜிஸ்டரான பட்டரதாரன் தன் நிலங்களில்சுரங்கங்களிருந்தால் அவைகளை வெட்டி எடுக்கலாம்; ஆனுல் நிலத்தின் பேரில் சாகுபடி செய்வதற்குண்டான தீர்வையோடுகூட பிரத்தியேகமாய் வேறே தீர்வையைச் செலுத்தவேண்டியது.

25. கூட்டுப்பட்டாக்கள்.—கூட்டுப்பட்டாக்களில் சம்பந்தப்பட்ட ஒருவன் இறந்துபோய் அவன் பெயரைக்கூட்டுப் பட்டாவில் அடித்து

விட்டு வேறே நபர்கள் பெயரை எழுதவேண்டிய விஷயங்களில், தனிப் பட்டாவில் (தாக்கலாயிருக்கிற) பட்டாதாரன் இறந்து போன பிற்பாடு அவன் பெயரை அடித்து விட்டு வார்ஸ்தாரனிட பெயரை எழுதுவதற்கு என்னவிதிகள் எற்படுத்தபட்டிருக்கின்றனவோ அதேவிதிகள் அனுசரிக்கப்படும்.

2. கூட்டு நிலத்தில் தனக்குள்ள பாத்தியதையை வேறு ஒருவனுக்கு மாற்ற வேணுமென்று விரும்பி அந்தப்படி கூட்டுப்பட்டாதார்களில் ஒருவர் கோறிக்கொள்வதின் பேரில் கூட்டுப்பட்டாக்களில் பெயரை மாற்றி எழுதவேண்டிய விஷயங்களில் முன்னாடி மற்றக்கூட்டாளிகளிட சம்மதம் இருக்கவேண்டுமென்பது அனாவசியம்; ஆனால் அப்படி மாற்றப்பட்ட கூட்டு நிலத்தின் ஓர்பாகத்திய விஸ்தீரணத்தைக்கண்டு பிரத்தியேகமாய் பட்டா வேணுமென்றால் எல்லா கூட்டுப்பட்டாதாரர்களிட சம்மதமில்லாமல் தனிப்பட்டா கொடுக்கப்படமாட்டாது; தனிப்பட்டாவை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகளுண்டோ அதேநடவடிக்கைகள் தான் (இது விஷயத்திலும்) அனுசரிக்கப்படும்.

3. ஒவ்வொருவரும் அனுபவிக்கிற நிலத்தின் விஸ்தீரணம் இவ்வளவென்று பிரஸ்தாபிக்காமலே கூட்டுப் பட்டாக்களில் பெயரெழுதப்படும்.

4. கூட்டுப்பட்டாதாரர்களில் யாராவது தனிரசீது புஸ்தகம் வேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கு அந்தமாதிரி தனி ரசீது புஸ்தகத்தை கொடுக்கவேண்டியது; பிரதான ரசீது புஸ்தகம் வைத்துக் கொண்டிருக்கிறவன் கிராம நவுக்கர்கள் முன்பாக அந்த ரசீது புஸ்தகத்தைக்கொண்டுவந்து தனி ரசீது புஸ்தகங்களில் செய்திருக்கிற பதிவு பிரகாரம் அதில் பதியவேண்டு மென்று கோறிக்கொண்டால் அந்தப் பிரகாரமே பதிவு செய்யப்படும். (பிரதான) ரசீது புஸ்தகம் மாதிரியாகவே தனி ரசீது புஸ்தகங்களு மிருக்கும்; ஆனால் தனி ரசீது புஸ்தகங்களில் நிலத்தின் பலான விஸ்தீரணத்துக்குத் தீர்வை செலுத்தப்பட்டதென்று எழுதப்பட மாட்டாது.

26. பட்டா கொடுப்பது.—பொதுவாய்ச் சொல்லுமிடத்து, பயிரிடும்குடியானவர்கள் புதுப்பட்டா வேணுமென்று கோறிக்கொண்டால்மாத்திரமே புதுப்பட்டாக்களைத் தயார் செய்து கொடுக்க வேண்டியது. ஒரு குடியானவனிட நிலத்தில் யாதொரு வித மாறுதலும் உண்டாகாமலிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் புதுப்பட்டா கொடுக்கவேண்டியது பிரத்தியக்ஷமாய் அனாவசியமாயிருக்கிறது; பட்டா தயார்செய்யும்போது தன் கைப்பத்திலிருக்கிற நிலங்களை விபரமாய்ப் பதிவு செய்திருக்கப்பட்ட ஒரு அசல்பட்டாவை ஒவ்வொரு குடியானவனும் வைத்துக்கொண்டிருக்க

வேண்டியது; பின்வருஷங்களில் கொடுக்கப்படும் பட்டாக்களில் ஏதாவது மாறுதலுண்டானால் அந்த மாறுதலைமாத்திரம் கண்டெழுதவேண்டியது. ஆகிலும் அசல்பட்டா எழுதினபிறகு அநேகமாறுதல்கள் உண்டாயிருக்கும் பக்ஷத்தில் புதுப்பட்டா தயார் செய்து கொடுப்பது யுக்தமாயிருக்கும்.

2. பட்டா இந்தமாதிரி பாரத்தில் இருக்கவேண்டியதென்பது கிராம கணக்கு மானியூலில் கண்டிருக்கிறது.

3. புதுப்பட்டாக்கள் கொடுக்கப்படும்போது அவைகளுக்காகப் பிடித்த காகிதச்செலவையும் அவைகளை அச்சிட்டதற்காக பிடித்த செலவையும் அடியில்கண்ட வீதப் பிரகாரம் பட்டா பெற்றுக்கொள்ளுகிறவர்க ளிடத்திலிருந்து வசூல்செய்ய வேண்டியது.

	ரூ.	அ.	பை.
(2) இரண்டுபக்கங்களுள்ள பட்டாவுக்கு	0	0	3
4 ஷை	0	0	6
8 ஷை	0	1	0
16 ஷை	0	2	0

ஆகிலும் 10 ரூபாய்க்கு மேற்படாத பேரீஜுள்ள குடியானவனிடத்திலிருந்து யாதொருசெலவும் வசூல் செய்யவேண்டியது அவசியமல்ல.

4. குடியானவனுக்குப் பட்டா கொடுக்குமுன்னமே பட்டாவின் கிரயத்தை வசூல் செய்யவேண்டியது.

27. மரமுள்ள நிலங்களுக்குக் கொடுக்கப்படும் பட்டா.—ஒரு நிலத்திலுள்ள மரங்களை வெட்டக்கூடாதென்கிற ஷரத்துகண்டு அந்த நிலத்தைப் பட்டாகொடுத்து அடமானம் செய்வதாய் உத்தேசித்திருக்கிற விஷயங்களில் பட்டாவிலேயே ஷை ஷரத்தைக் கண்டெழுதவேண்டியது. சாதாரணமான பட்டா கொடுத்து (நிலத்தை) அடமானம் செய்தால் அந்தப்பட்டாதாரனானவன் (அந்தநிலத்திலுள்ள) மரங்களுக்கு நிராக்ஷேபணையான சொந்தக்காரனாக பாவிக்கப்படுவான்.

28. ஸர்வே நிலங்களை வுட்பிரிவினை செய்வது.—எவ்வித காரியங்களுக்கும் பிரயோஜனப்படும்பொருட்டு ஸர்வே நிலங்களை பின்னால் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உட்பிரிவினை செய்யவுத்திரவு கொடுக்கலாம்;

i. பிரிவினையாக வேண்டிய பாகங்களுக்கு கிராம நவுக்கர்கள் எப்படி எல்லை குறிக்க அதாவதுடிமார்க்கேஷன் செய்ய வேணுமென்கிறார்களோ அம்மாதிரியாகவே ஸ்திரமாயிருக்கும்படியாய் எல்லைக்குறிப்பு

செய்து கிராமக்கணக்குகளில் அப்படி பிரிவினை செய்த பாகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓரெழுத்தும் நெம்பரும் கொடுக்கவேண்டியது;

ii. அப்படி பிரிவினை செய்த பாகமானது ஓரே துண்டு நிலமாயிருக்க வேண்டுமேயல்லாமல் பல துண்டுகளடங்கியதாயிருக்கக்கூடாது. மேலும் வெளியேயிருந்து சுலுவில் போய்ச் சேரத்தக்கதாயிருக்க வேண்டியது;

iii. (நிலத்தைக்) கைவிடுவதற்காக பிரிவினை செய்வதாயிருந்தால் (அப்படிகைவிடுகிறதற்காகபிரிக்கப்படும் பாகமானது குடியானவனுடைய சக்திக்கு மிஞ்சிப்போய் தடுக்கக்கூடாமையான வெள்ளத்தினலாவது வேறே காரணங்களினுலாவது நாசமாக்கப் பட்டாவது பிரயோசன மில்லாமலாவது போயிருந்தாலொழிய) அந்தப் பாகமானது புஞ்சையாயிருந்தால் 2 ஏகராவுக்கும், நஞ்சையாயிருந்தால் 1 ஏகராவுக்கும், குறைவானதாயிருக்கக் கூடாது;

iv. நஞ்சை தீர்வை வஜா செய்துகொள்வதற்காக பிரிவினை செய்யவேண்டியிருந்தால் ஸர்வே நிலமானது 2 அல்லது இரண்டுக்குமேற்பட்ட ரெவின்யூ புலம் (பீல்டு) சேர்ந்ததாயிருந்தாலும் இராமற்போனாலும் புதிதாய்ப் பிரிவினை செய்யப்பட்ட பாகமானது ஒரு ஏக்ராவுக்கு குறைவாயிருக்கக் கூடாது; உட்பிரிவினை எந்தக்கிராமத்தில்செய்யப் பட்டதோ அந்தக் கிராமத்துக்குச் சம்பந்தப்பட்ட தாலூக்காவின் ஜமாபந்தியை நடத்தும் உத்தியோகஸ்தராவது அல்லது டிவிஷனல் ஆபீஸ்ராவது பிரிவினையை ஸ்திரப்படுத்தும் வரையில்அது ஸ்திரமானதாக மாட்டாது; பிரிவினைசெய்வதில் மேலே கண்ட நிபந்தனைகள்படி நடக்காமல் போகிற விஷயங்களில் ஜமாபந்தி ஆபீஸரும் டிவிஷனல் ஆபீஸரும் அப்பேர்ப்பட்ட பிரிவினைகள் அங்கீகரிக்கப்படமாட்டாவென்று தம்மிட யுக்தானுசாரம் சொல்லலாம். (லாண்டு ரிஜிஸ்டரில்) பதிவானபிற்

பாடு பிரிவினை செய்த பாகமானது எல்லாவிஷயத்திலும் தனிநிலமாகப் பாவிக்கப்படும். மேலே சொன்ன விதிகள் பிரகாரம் உட்பிரிவினை செய்யமுடியாத விதமான ஒரு நிலத்தின் பாகத்தை ஒருகுடியானவன் அனுபவித்துவந்தால் அந்த முழு நிலத்திற்குள்ள தீர்வையை அப்படி அனுபவிக்கப்பட்ட பாகத்திற்கு மாத்திரம் விதிக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

2. ஸர்வேயாவது ஸெட்டில்மெண்டாவது செய்யப்பட்ட ஜில்லாக்களில் பின்னிட்டு ரெவினியு டிபார்ட்மெண்டாரால் ஸர்வேநிலத்தில் பிரிவினை செய்யப்பட்ட பாகங்களை அளவெடுத்து அந்த அளவை இரண்டு ரிக்கார்ட்டுகளில் கண்டெழுதி ஒரு ரிக்கார்ட்டை கலெக்டராபீசில் வைத்துக்கொண்டு மற்றதை கணக்கனுக்குக் கொடுக்கவேண்டியது. கலெக்டராபீசில் பிரதிதாலூக்காவுக்கும் பிரத்தியேகமான ஒரு ரிஜிஸ்டர் தயாரித்து அந்த ரிஜஸ்டரில் உட்பிரிவினைகள் எல்லாவற்றையும் கண்டெழுத வேண்டியது. தவிரவும் இந்த ரிஜஸ்டரில் பதிவுசெய்திருக்கிறதற்கும் மேலே சொன்னபடி (கலெக்டராபீசில்) வைத்திருக்கப்பட்ட (அளவுகளைக் கண்டெழுதிய) நகல் ரிக்கார்ட்டுக்கும் பொருந்தும்படியாய் (பிரிவினை செய்த பாகத்தின்) அளவைப் பதிந்த பிளானுக்கு ஒரு நெம்பர்கொடுக்க வேண்டியது, ஸர்வேயாவது ஸெட்டில் மெண்டாவது செய்யப்படாத ஜில்லாக்களில், கர்ணம் அளவெடுத்த பிளானை நிலத்தைப்பிரிவினை செய்வதற்காக அனுமதி கொடுக்கப்பட்ட தாக்கீதுடன்சேர்த்து வைத்திருந்தால் போதுமானது.

3. நிலத்தை உட்பிரிவினை செய்வதில் அதற்கு ஒரு உள் நெம்பராவது எழுத்தாவது கொடுத்து பிரிவினைசெய்வது ரொம்பவும் யுக்தமாயிருக்கும்.

29. கவுல்.—(என்றால் உடன்படிக்கை, அதாவது பாழாய்க்கிடக்கப்பட்ட கரம்புநிலத்தை சிலவருஷகாலத்திற்கு முதல்வருஷம் சொல்ப தீர்வையையும் அப்புறம் வருஷவாரியில் கொஞ்சகொஞ்சமாய் ஜாஸ்தி தீர்வையையும் கொடுப்பதென்கிற நிபந்தனையின் பேரில் அனுபவித்து வருகிறது. அந்தவருஷங்களானவுடன் மற்ற சாகுபடி நிலங்களுக்கு என்ன தீர்வையோ அதேதீர்வையுள்ள நிலமாக ஆய்விடுகிறது). மிதமான தீர்வை விதித்துவரும்பக்ஷத்தில் சாகுபடிக்காக நிலங்களை ரொம்பகாலம் நீடித்திருக்கும்படியான கவுல் அடமானத்திற்கு விடவேண்டிய அவசியம் நேரிடுவது அபரூபம்; ஆகையால் அடர்த்தியான காடுள்ள நிலம், சதுப்புநிலம் (சேற்று

நிலம்) காட்டுப்புல் பயிராயிருக்கிற நிலம், அல்லது இவைகளைப் போலொத்த அனுமத்தான விஷயங்களில் மாத்திரமே கவுல் உடன்படிக்கையின்பேரில் நிலஅடமானம்செய்யவேண்டியது. முட்செடிகள் அதிகமாய்வளர்ந்திருக்கிற பாழ்நிலங்களை சீர்திருத்துவதற்காகத் தீர்வையில்லாமல் கலெக்டர் தம்மிட யுக்தானுசாரம் ஐந்துமுதல் பத்துவருஷத்துக்குட்பட்டு கவுல் அடமானம் செய்யலாம்.

2. வருஷவாரியில் இவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலத்தை சீர்திருத்த வேண்டியதென்று கவுல் ஒப்பந்தத்தில் கண்டெழுதவேண்டியது. எப்படியென்றால், ஐந்துவருஷம் நீடித்திருக்கும்படியான ஒரு கவுல் ஒப்பந்தத்தில் மொத்தநிலத்தின் ஐந்தில் ஒருபாகம் சீர்திருத்தவேண்டியதென்று ஷரத்துகாணவேண்டியது. இந்த உடன்படிக்கைப்படி நடக்கத்தவறிப்போகும் பக்ஷத்தில் அதற்குதெண்டனையாக கவுல் அடமானத்தை இழந்து விட வேண்டியது; கவுலில்கண்ட நிபந்தனைகளை எல்லாம் கண்டிப்பாய் அனுஸரிக்கச் செய்யவேண்டியது.

30. தீர்வை யேற்பட்ட (ஆனால் யாராலு மனுபவிக்கப்படாத) நிலங்களை இன்னமாதிரியாய்ப் பைசல் செய்ய வேண்டியதேன்பது; (யாராலும்) அனுபவிக்கப்படாமலும் (ஸர்வே செய்து) தீர்வை ஏற்பட்டுமிருக்கிற நிலங்களை அவைகளுக்காக விண்ணப்பங்கள் கொடுத்துக் கொள்ளுகிறவர்களுக்கு, ரெவினியூ அதிகாரிகள் தங்கள் யுக்தானுசாரம் பட்டாகொடுத்துஅடமானம் செய்யலாம்.

2. அப்பேர்ப்பட்ட நிலங்களுக்காக கொடுத்துக்கொள்ளும் விண்ணப்பங்கள் எழுத்து மூலமானவைகளாயிருக்க வேண்டும்: தவிரவும் கோறிக்கொள்ளப்பட்ட நிலத்தை வியக்தமாய் அதில் குறித்துச் சொல்லவேண்டியது; எந்த சமயத்திலாவது விண்ணப்பங்கள் செய்து கொள்ளலாம்; ஆனால் விண்ணப்பம் செய்து கொள்ளும் காலத்தில் வாஸ்தவ்யமாய் (விண்ணப்பத்தில் கண்ட நிலம் யாரிட) அனுபோகத்திலுமில்லாததாயும் அல்லது அந்த காலத்தில் கைவிடப்பட்டதாயுமிருக்கப்பட்ட நிலங்களுக்கு மாத்திரம் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படுமே யல்லாமல் வேறேவிதமான விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. விண்ணப்பதாரனிட கோறிக்கைப்படி நிலத்தை அடமானம் செய்வதாயிருந்தால் விண்ணப்பதாரன் கலெக்டரிடமிருந்து வேறேவிதமான உத்திரவைப்பெற்றிருந்தாலொழிய தான் எந்த பசலியில் நிலத்தைப் பெற்றுக்கொள்ளுகிறானோ அந்த பசலியில் அந்த நிலத்துக்குள்ள தீர்வையைச் செலுத்த தயாராயிருக்கவேண்டியது.

4. தீர்வை ஏற்பட்ட நிலத்துக்கு தர்க்காஸ்து கொடுக்க வேணுமென்முல் கிராமாதிகாரிகளுக்காவது தாசில்தாருக்காவது கொடுத்துக்கொள்ளலாம்; ஆனால் அப்பீலுக்குட்பட்டு அப்பேர்ப்பட்ட தர்க்காஸ்த்துகளைப் பைசல்செய்யவேண்டியது தாசில்தாரைச்சேர்ந்தது.

5. முதலில் தாசில்தாருக்கு தர்க்காஸ்த்து கொடுத்துக் கொண்டால் அவர் அதைப்பற்றி ரிபோர்ட்டு செய்யும்படி கிராம நவுக்கர்களுக்கு அனுப்பவேண்டியது. கிராம நவுக்கர்கள் தங்களிடமே கொடுக்கப்பட்டும், அல்லது தாசில்தார் துவாராவந்ததுமாயிருக்கிற தர்க்காஸ்த்துகளைப்பெற்றுக்கொண்டதின்பேரில் உடனே இது சங்கதியைப்பற்றி கிராமத்தில் தண்டோரா மூலமாய்பிரசித்தப் படுத்தவேண்டியது. தவிரவும் இதைப்பற்றி ஒரு விளம்பரத்தை (நோடீஸை) கிராமத்திலிருக்கப்பட்ட சத்திரத்திலும் தர்க்காஸ்து செய்யப்பட்ட நிலத்திலும் 15 நாள்வரையில் ஒட்டிவைக்கவேண்டியது; அந்த 15 நாளானவுடன் (அனுபந்தத்தில் கண்ட) ஏ பாரத்தில் இரண்டு மிமோராண்டங்களைத்தயார்செய்து அவைகளையும் (பாரம் ஏ. 1) விளம்பரத்தையும் தாமதமில்லாமல் தாசில்தாருககு அனுப்பவேண்டியது; இந்த விளம்பரப் பத்திரிகையில் மணியகார், கர்ணம் இவர்கள் கையெழுத்து செய்யவேண்டியதுந்தவிர அண்டைநிலக்காரர் யாராவதிருந்தால் அவர்களாவது அல்லது அந்தகிராமத்தில் கண்ணியமுள்ள இரண்டு குடித்தனக்காரர்களாவது அந்த நோடீஸ்பிரசித்தப்படுத்தப் பட்டதென்பதற்கு அடையாளமாய்க்கையொப்பம் செய்யவேண்டியது. எப்போதும் அந்தமிமோராண்டங்களை தர்க்காஸ்த்துதாரன் மூலமாகவே தாசில்தாருக்கு அனுப்பவேண்டியது; அதற்காக மிமோராண்டத்தை தர்க்காஸ்த்து தாரனிடமே ஒப்புக்கொடுத்து விடவேண்டியது.

6. கிரமமாய் தர்க்காஸ்த்து கொடுத்துக்கொள்ளாமல் சாகுபடி செய்யப்பட்ட விஷயங்களில், டீ பாரப்பிரகாரம் பிரத்தியேகமாய் வேறே மிமோராண்டம் தயார்செய்து மாதத்திற்கு ஒருதரம் தாசீல்தாருக்கோ அல்லது டிப்டிதாசீல்தாருக்கோ அனுப்பவேண்டியது ; கிரமமாய் தர்க்காஸ்த்து கொடுத்ததின்பேரில் அதைப்பற்றி எவ்விதமாய் பிரசித்தம்செய்யப்படுகிறதோ அதேமாதிரி (தர்க்காஸ்த்து கொடுக்காமல்) சாகுபடி செய்ததைப்பற்றி கிராமத்தில் முன்னடி பிரசித்தஞ்செய்யவேண்டியது.

7. ஏ, மிமோராண்டத்தையும் டீ, மிமோராண்டத்தையும் தயார்செய்வதில் அவைகளிலுள்ள பல பத்திகளிலும் (columns) எழுதவேண்டிய சங்கதிகளை கிராமநவுக்கர்கள் சரியாய் எழுதவேண்டியது. ஐந்தாவது பத்தியில், நிலம், புஞ்சையா நஞ்சையா, தீர்வையேற்படாததா, புறம்போக்கா,

என்று விபரித்துச் சொல்லவேண்டியது. 7வது கலத்திலும் 8வது கலத்திலும் எவ்வளவு நிலத்திற்கு தர்க்காஸ்த்து கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு நிலத்தின் விஸ்தீரணத்தையும்தீர்வையையும் காண்பிக்க வேண்டியது; முழு நிலத்தின் விஸ்தீரணத்தை 19 வது கலத்தில் காண்பிக்க வேண்டியது; தீர்வை ஏற்படாத நிலமாயிருந்தால் 8 வது கலத்தில் தர்க்காஸ்த்தைப் பைசல் செய்யும் உத்தியோகஸ்தர் எழுதவேண்டிய அம்சங்களை எழுதும் பொருட்டு கிராம நவுக்கர்கள் அதில் ஒன்றும் எழுதாமல் விட்டுவைக்கவேண்டியது; ஷை உத்தியோகஸ்தர் இதை (இந்த கலத்தில் பூர்த்தி) செய்யும் பொருட்டு அண்டை நிலங்களையும் அவைகளின் விஸ்தீரணத்தையும் அவைகளின் தீர்வையையும் கிராமநவுக்கர்கள் 19வது கலமாகிய ஷுரூகலத்தில் கண்டெழுதவேண்டியது; மேலும், தர்க்காஸ்து கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு மேலே சொன்ன அக்கம்பக்கத்திலுள்ள நிலங்களுக்குள்ள விகிதப்படி தீர்வை விதிக்கக்கூடாதென்று கிராமநவுக்கர்கள் தாத்பரியப்பட்டால் அது சங்கதியை தகுந்தகாரணங்களுடன் எடுத்துச் சொல்லவேண்டியது.

8. 10வது பத்தியை பூர்த்திசெய்வதில், அந்த நிலத்தின் மூலமாய் பொது ஜனங்களுக்கு வழிவிடவேண்டுமென்பது என் அவசியமென்றும், —சாகுபடி செய்யலாயக்காயும் ஆனல் தற்காலம் கரம்பாயும் இருக்கப்பட்ட நிலத்திற்குப் போகவேண்டியதற்காகவா, அல்லது வேறே யெதற்காகவென்று—விவரித்து காரணம் சொல்லவேண்டியது. ஒரு ஜலாதாரத்தின் கரையானது இந்த நிலத்தின் குறுக்கே போகாமல் பக்கமாய் போயிருக்கும் பக்ஷத்தில் அந்த நிலத்திலிருந்து அந்தக்கரை இவ்வளவு தூரமென்று கண்டெழுதவேண்டியது. 11வது பத்தியில் நிலத்திற்கு தர்க்காஸ்த்து செய்தாவது அல்லது தர்க்காஸ்த்துதாரனுக்கோ உத்திரவில்லாமல் பயிரிட்டவனுக்கோ அடமானம் செய்வதற்கு ஆக்ஷேபணை செய்தாவதிருக்கிறவர்களிட பெயர்களை பதியவேண்டியது. 1வது பத்தி முதல் 14வது பத்தி வரையில் கிராம நவுக்கர்கள் பூர்த்திசெய்து அந்த மிமோராண்டத்தில் தேதி போட்டு அதில் மணியக்காரனும் கணக்கனும் கையெழுத்து செய்யவேண்டியது. தர்க்காஸ்த்தைப் பெற்றுக்கொண்ட தேதிமுதல் 20 நாளைக்கு மேற்பட்டு மிமோராண்டமனுப்ப தாமதப்படும் பக்ஷத்தில் ஷுரூகலத்தில் தாமசத்திற்குக் காரணம் சொல்லவேண்டியது. இந்த மிமோராண்டத்தை சரியாய் எழுதி பூர்த்தி செய்யவேண்டியதற்கு கிராமநவுக்கர்கள் ஜவாப்தாரிகள். 15வது பத்தியும் 16வது பத்தியும் தாசில்தாரால் பூர்த்திசெய்யப்பட்டு ஒருகாப்பியானது கிராமநவுக்கர்களுக்குவாப்ஸ் அனுப்பப்படும்; பிறகு அவர்

கள் 17வது பத்தியையும் 18வது பத்தியையும் பூர்த்திசெய்து தாசில்தாரிட உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டியது.

9. தீர்வை ஏற்பட்ட நிலத்தை சாகுபடி செய்வதற்காக செய்யப்படும் தர்க்காஸ்த்தை சாதாரண காகிதத்தில் எழுதிக் கொடுக்கலாம்.

10. கிராமநவுக்கர்களிட மிருந்து ஏ மிமோராண்டமாவது டீ மிமோராண்டமாவது வந்தபின்பேரில், தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாரானவர் அதிலிருக்கப்பட்ட பலபத்திகளும் சரியாய் எழுதப்பட்டிருக்கின்றனவாவென்றும், (தர்க்காஸ்த்துசெய்த) நிலத்துக்கு பட்டா கொடுக்க ஏதாவது ஆக்ஷேபணைகள் உண்டாவென்றும் பார்க்கவேண்டியது. மிமோராண்டத்தில் 13வது கலத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட 7 விஷயங்களிலும் சாகுபடிக்காக நிலத்தை அடமானம் செய்யக்கூடாது. தீர்வை ஏற்படாத நிலமாகவாவது அல்லது புறம்போக்கு நிலமாகவாவது இருந்தால் அதற்காக கொடுக்கப்படும் தர்க்காஸ்த்தை அங்கீகரிப்பதற்கு முன்பாகவே அந்த நிலத்தை தீர்வை ஏற்பட்டநிலத்தோடுசேர்ப்பிப்பதற்கு கலெக்டருடைய உத்திரவைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

11. (தர்க்காஸ்த்து செய்யப்பட்ட நிலமானது) ஒரு ஜலாதாரத்தினுடைய கரைக்கு 25 கெஜதூரத்திற்குள்ளிருந்தால் அந்த ஜலாதாரம் எந்த உத்தியோகஸ்தரிட வசத்திலிருக்கிறதோ அவருக்கும், அல்லது 18 மாசகாலமாய் அனுபோகத்திலிராமலிருந்தாலாவது (சர்க்காரால்) வைத்திருக்கப்பட்ட (ரிஸர்வ் செய்யப்பட்ட) பாரஸ்டுக்குச்சமீபத்திலாவது அல்லது பலான காரியத்திற்கென்று (ரிஸர்வ் செய்யப்படாத) வைக்கப்பட்டிராத 100 ஏக்ரா விஸ்தீரணமுள்ள நிலத்திற்குச் சமீபமாயாவதிருந்தால் டிஸ்டிரிக்ட்பாரஸ்டு ஆபீஸருக்கும், (தர்க்காஸ்த்து செய்யப்பட்ட) நிலத்தைஅடமானம்செய்யஏதாவது ஆக்ஷேபணை உண்டாவென்று எழுதிக் கேட்கவேண்டியது.

12. பட்டா கொடுத்து நிலத்தை அடமானம் செய்ய யாதொரு ஆக்ஷேபணையுமில்லாமல் போனால் தாசில்தார் அல்லது டிப்டிதாசில்தாரானவர் பல விண்ணப்பதாரர்களுக்குள் எவனுக்கு அதிக பாத்தியதை உண்டென்று தீர்மானிக்கவேண்டியது. பொதுவாய்ச்சொல்லுமிடத்து பின்வரும் கிரமமப்படி பாத்தியதைகளைத் தீர்மானிக்கவேண்டியது:—

i. தர்க்காஸ்த்து நிலத்தில் மரங்கள் இங்கும் அங்கும் இருந்து அவைகளை மரப்பட்டாவின்பேரில் அனுபவித்து வந்தாலாவது அந்த மரப்பட்டாதாரனுக்கும் அல்லது அந்தநிலத்தில் ஒரு கிணறு இருந்தால் அந்தகிணற்று ஜலத்

தை சாகுபடிக்காக பிரயோஜனப் படுத்திக்கொண்டிருக்கிற வனுக்கும் அதிக பாத்தியதை உண்டு.

ii. சிலபாகங்களுக்குமாத்திரம் செய்துகொள்ளப்பட்ட தர்க்காஸ்த்தைவிட முழு ஸர்வேநிலங்களுக்காகச்செய்து கொள்ளப்பட்ட தர்க்காஸ்த்துக்கு அதிக பாத்தியதை உண்டு.

iii. மேலேசொன்ன இரண்டு ஆதாரங்களில் ஏதாவது ஒன்றை அனுஸரித்து யாரும் பாத்தியதைகளைச்சொல்லிக்கொள்ளாமற் போனால் பின்னால்கண்ட வரிசைக் கிரமப்படி அடமானம் செய்யவேண்டியது.

ஏ. அண்டைநிலகாரனுக்கு;

பி. தர்க்காஸ்த்துகொடுத்தவர்களில்உள்ளூர்குடியானவர்கள்யாராவது தர்க்காஸ்த்து செய்திருந்தால் அவர்களில் முதல் தர்காஸ்த்துதாரனுக்கு.

ஸி. மேலேசொன்னபடி சுதந்தரமுள்ளவர்கள் யாரும் இல்லாமற்போனால் முதல் தர்காஸ்த்துதாரனுக்கு.

13. எந்த குடியானவனாவது நிலத்தைக் கைவிட்டுவிட்டு அதினால் அந்த நிலம் அனுபோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமற்போய் அடமானம் செய்யவேண்டிநேருகிறதோ, அப்பேர்ப்பட்ட குடியானவன் அண்டைநிலக்காரன் என்ற காரணத்தினாலாவது அல்லது உள்ளூரான் என்கிற காரணத்தினாலாவது அவனுக்கு மேலான பாத்தியதை கிடையாது.

14. பலான ஷரத்துகளுக்குட்பட்டு நிலம் வேண்டுமென்று தர்க்காஸ்த்து கொடுக்கப்பட்டால் அவைகளைப்பற்றி யாதொரு நடவடிக்கையும் நடத்தக்கூடாது.

15. மேலே சொன்ன விதிகள் பொதுவானவை; ஏதோபிரத்தியேகமான சிலவிஷயங்களில் நியாயத்தை யோசித்து அவசியமாயிருந்தால் இந்த விதிகளை மீறி நடக்கலாமேயொழிய வேறே விதமாய் மீறிநடக்கக்கூடாது. அப்பேர்ப்பட்ட விஷயங்களில் செய்யும் உத்திரவுகளுக்குக் காரணங்களை மெமோராண்டத்தில் 16வது பத்தியில் ஸ்பஷ்டமாய் கண்டெழுதவேண்டியது.

16. தீர்வை ஏற்பட்டு கரம்பாயிருக்கிற நிலத்திற்கு இரண்டு நபர்களாவது அல்லது ஜாஸ்தி நபர்களாவது மேலே சொன்ன விதிகள் பிரகாரம் தர்க்காஸ்த்து கொடுத்து தாசில்தாராவது, டிவிஷனல் ஆபீஸராவது, கலெக்டராவது, சாகுபடிக்காக அடமானம் செய்ய தர்க்காஸ்துதாரருக்குள் எவ

னுக்கு அதிகபாத்தியதைஉண்டென்றுதீர்மானிக்கக்கூடாமற்போனல், நிலத்தை அடமானம் செய்துகொள்ளும் பாத்தியதையை ஜில்லா கலெக்டரானவர் பகிரங்கமான ஏலத்தில் விலை கூறும்படிக்கும், அதில் உயர்ந்த துகைக்கு எவன் கேழ்க்கிருனே அவனுக்கு மேலான பாத்தியதையைக்கொடுக்கும் படிக்கும் உத்திரவு செய்யலாம்; அப்பேர்ப்பட்ட ஏலத்தில் விலைக்கு வாங்குகிறவன், முதலில் தர்க்காஸ்த்து கொடுத்தபோதே தனக்கு அந்த நிலம் அடமானம் செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு தீர்வை கொடுக்கும்படி நேரிடுமோ அதே தீர்வையைச் செலுத்த உடன்பட்டவனுகிருன். மேற்சொன்ன ஏலத்தில் எந்த மனுஷனுகிலும் ஏலம் கேழ்க்கலாம். இந்த மாதிரியாக நிலத்தை ஏலத்தில் விற்கும்போது ஏலத்துக்காக ஏற்படுத்தியிருக்கிற நிபந்தனைகளில், 1864ஹுத்திய மதராஸ் கவர்ன்மெண்டாரிட II-வது ஆக்ட்டு 36வது பிரிவு 3வது வாக்கியத்தில் கண்டமாதிரி ஏலத்தில் விலைக்குவாங்குகிறவன் ஏலத்துகைக்கு 100க்கு 15 வீதம் டேவணி கட்ட வேண்டியதென்றும் ஏலம்போட்ட தேதி முதல் 30 நாளைக்குள் மீதி ஏலத்துகையை செலுத்தாமற்போனல் டேவணியை இழந்துபோக வேண்டியதென்றும் ஒருஷரத்து கண்டுஎழுதவேண்டியது.

17. அடமானம் செய்வதாய் நிச்சயித்து இருக்கப்பட்ட தர்க்காஸ்து தாரனுக்காவது, அல்லது ஏலம் போடும்பக்ஷத்தில் ஏலத்தில் விலைக்கு வாங்குகிறவனுக்காவது நிலத்தை அடமானம் செய்யுமுன்பாக, அந்த நிலத்தில் வளர்ந்திருக்கிற மரங்கள் ஏதாவதிருந்தால் அவைகளின் விலையை டிஸ்டிரிக்ட் பாரஸ்டு ஆபீஸர் மதிப்பிட்ட பிரகாரமாவது அல்லது கலெக்டர் உத்திரவுசெய்தபடி மதிப்புபோட்டபிரகாரமாவது வசூல் செய்ய வேண்டியது.

18. நிலத்தின் குறுக்கே ஒரு ரஸ்தாபோகும்பக்ஷத்தில், அந்த ரஸ்தாவுக்கு உயர்ந்த பக்ஷம் வேண்டிய அகலம் 44 கஜவிஸ்தீரணத்தைக்கழித்து மீதி நிலத்தை சாகுபடிக்காக அடமானம் செய்யவேண்டியது.

19. அதே மாதிரியாய் ஒரு ஜலாதாரத்தினுடைய கரையானது நிலத்திற்குக்குறுக்கேயாவது அல்லது நிலத்திற்கு 25 கஜதூரத்திற்குள்ளேயாவது போகும் பக்ஷத்தில் கரையின் அடிவாரத்திற்கு நெடுகே பக்கத்தில் 25 கஜம் விடவேண்டியதற்குத் தேவையான விஸ்தீரணத்தைக் கழிக்கவேண்டியது.

20. தாலூக்காவிலும் கிராமத்திலும் தர்க்காஸ்து ரிஜிஸ்டர்கள் நாளது தேதிவரையில் எழுதவேண்டிய விஷயத்திலும் 20 வது பிரகரணத்தில் கண்டபடி ஜமாபந்தி காலத்தில் ஜமாபந்தி ஆபீஸருக்கு தாலூக்கா

தர்க்காஸ்து ரிஜிஸ்டர்களை அனுப்பவேண்டியதிலும் அதிக ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

21. தர்க்காஸ்துகளைப் பைசல் செய்வதில் தவிர தாசீல்தாரிட வேறே எந்தவேலையிலும் துரிதமும் ஒழுங்கும் அவ்வளவு முக்கியமானதல்ல(அதாவது மற்றெல்லா வேலைகளையும் விட தாசீல்தார் முக்கியமாய் தர்க்காஸ்து கேஸ்களை அதிசீக்கிரமாயும் கிரமப்படியாயும் பைசல் செய்யவேண்டியது.)

22. தாசில்தாராவது டிப்டிதாசில்தாராவது சர்க்கியூட் போகும்போது பிரதி கிராமத்திற்குப் போனவுடனே தர்க்காஸ்து ரிஜிஸ்டரையும், தர்க்காஸ்து கொடுக்காமல் சாகுபடிசெய்த விஷயங்களைப் பதிந்த ரிஜிஸ்டரையும் வரவழைத்து தாலுகா தர்க்காஸ்து ரிஜிஸ்டரை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவேண்டியது. அந்தக்கிராமத்தில் பைசலாகாமல் பாக்கியிருக்கிற தர்க்காஸ்துகள் ஏதாவதிருந்தால் அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்படு முன்னமே அவைகளைப் பைசல் செய்யவேண்டியது.

23. டிவிஷனல் ஆபீஸருக்காவது, அல்லது தர்க்காஸ்து விஷயம் எந்ததாலூக்காவில் பைசல் செய்யப்பட்டதோ அந்ததாலூக்காவானது கலெக்டரிட நேர் விசாரணையிலிருந்தால் கலெக்டருக்காவது, (தர்காஸ்த்தில் சம்பந்தப்பட்ட) எந்த கக்ஷிக்காரனாவது அப்பீல்செய்கிறவரையில் தாசில்தாரால் அங்கீகரிக்கப்பட்ட தர்க்காஸ்துகள் மேலதிகாரிகளிட உத்திரவுக்கு உட்பட்டவைகளாய் பாவிக்கப்படும். தாசில்தாரிட உத்திரவுக்கு மேல் டிவிஷனல் ஆபீஸருக்காவது, (கலெக்ட்டர் சார்ஜிலுள்ள தாலுக்காவாயிருந்தால்) கலெக்டருக்காவது, 30 நாளைக்குள் அப்பீல் செய்து கொள்ளலாம். ஸிவில் வியாச்சியத்தில் அப்பீல் செய்து கொண்டால் எப்படியோ அதுபோலவே தீர்ப்புசொன்ன தினம் நீங்கலாகவும் பிறகு எந்த உத்திரவுக்கு விரோதமாய் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்திரவுக்கு ஒரு நகல் வாங்கிக்கொள்ள எவ்வளவு நாள் செல்லுமோ அத்தனைநாள் நீங்கலாகவும் (மேலேகுறித்த வாயிதா) நாட்களை கணக்கிடவேண்டியது; தீர்ப்பு தேதி, நகலுக்காக விண்ணப்பம் செய்து கொண்ட தேதி, நகல் தயாரான தேதி, அப்பீல் வாயிதா முடிவாகிற தேதியையும் தாசில்தார் நகலின் பின்புறத்தில் குறிக்கவேண்டியது. அப்பீலுக்காக குறித்த வாயிதாவுக்குள் அப்பீல்கொடுத்துக்கொள்ளாமற் போனதற்கு தகுந்த காரணங்களிருந்ததாக அப்பீலதிகாரிக்கு திருப்திகரமாய் ருஜுப்பித்தும் தர்க்காஸ்துகொடுத்த நிலத்திற்கு தகுந்த உத்தியோகஸ்தரால் அதுவரையில் பட்டாகொடுக்கப்படாமலுமிருந்தால், மேலேசொன்ன வாயிதா கடந்த பிற்பாடு அப்பீலை அங்கீகரித்துக்கொள்ளலாம். இது விஷயத்தில் சம்பந்தப்பட்ட எந்தமனுஷனும் அப்பீல் செய்துக்கொள்ளலாம்; டிவிஷனல் ஆபீஸருடைய தீர்ப்புக்கு

மேல் கலெக்டருக்குஇரண்டாந்தரம் அப்பீல்கிடையாது, மேலும்போர்டாருக்குஇரண்டாந்தரம் அல்லது மூன்ருந்தரம் அப்பீல்கிடையாது; ஆனல்டிவிஷனல் ஆபீஸரிடஉத்திரவுக்குமேல் அப்பீல்செய்யும்பொருட்டுமேலேசொன்னமாதிரி கணக்கிட்ட 30 நாளைக்குள் கலெக்ட்டர் ஆபீஸில் சேரும்படி யனுப்பினுல் கலெக்டரும், அல்லது கலெக்டருடைய உத்திரவுக்குமேல் அப்பீல் செய்யும்பொருட்டு 40 நாளைக்குள் போர்ட்டாபீஸில் சேரும்படி யனுப்பினுல் போர்டாரும், ஏதோ விசேஷமான காரணங்களை முன்னிட்டு அப்பேர்ப்பட்ட அப்பீல்களை அங்கீகரித்துக்கொள்ளலாம்.

24. யாதொரு டிஸ்டிரிக்ட்டு உத்தியோகஸ்தரும், முதல் அப்பீலில் மற்ருெரு பார்ட்டி ஆஜராகும்படி அவனுக்கு நோட்டீஸ் கொடுத்து அவனை விசாரியாமல் அப்பீல் பைசல்செய்யக்கூடாது. மேலும் தீர்ப்பானது இங்கிலீஷில் அதிகாரிகளின் சொந்தக்கையால் எழுதப்பட்டிருந்தாலும் அல்லது அவர் வாய்மொழியாய் சொன்னபிரகாரம் சுதேசபாஷையில் எழுதப்பட்டிருந்தாலும் அந்ததீர்ப்பையே (தர்க்காஸ்து) கேஸின்ரிக்கார்டுகளுடனே வைத்திருக்கவேண்டியது ; பார்ட்டிகள் நகல் வேணுமென்று விண்ணப்பம் செய்து அவசியமான செலவுகளையும் ஸ்டாம்பையும் சேர்ப்பிப்பதின் பேரில் அவர்களுக்கு நகல் கொடுக்கவேண்டும். முன்னடி செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பு அல்லது தீர்ப்புகளுக்கு (சர்க்காரால்) கொடுக்கப்பட்ட நகல்களை அப்பீல் விண்ணப்பத்துடன் கூட அனுப்பினலொழிய அப்பீல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

25. தாசில்தார் எந்த தர்க்காஸ்துதாரனுக்கு அடமானம் செய்கிருரோ அந்த அடமானத்தை சிலவேளை டிவிஷனல் ஆபீஸர் ரத்துசெய்துப்போடுகிருர் ; டிவிஸனல் ஆபீஸர் அப்படிச் செய்து வேறேயாருக்காவது அடமானம் செய்தால் அந்த அடமானத்தை கலெக்டர் ரத்துசெய்து விடுகிருர். இந்தமாதிரி ரத்துசெய்வது, "சட்டத்தை யனுசரித்து" செய்ததாய் சொல்லக்கூடாது, ஆகச்சே அந்தவழக்கத்தைத்தடுத்துவிடவேண்டியது. ஒருஅப்பீலை அங்கீகரிக்கும்போது அப்படி அங்கீகரிக்கும் உத்தியோகஸ்தரானவர் உடனே எந்த உத்தியோகஸ்தருடைய வுத்திரவுக்கு விரோதமாய் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தருக்கு இதுசங்கதியை (அதாவது அப்பீல்செய்யப்பட்டதாக)த் தெரிவித்து சம்பந்தப்பட்ட ரிக்கார்ட்டுகளை அனுப்பும்படி நோட்டீஸ் அனுப்பவேண்டியது. டிவிஷனல் ஆபீஸரிடமிருந்தாவது அல்லது (தாலூக்காவானது கலெக்ட்டர்நேர்விசாரணையிலிருந்தால்) கலெக்டரிடமிருந்தாவது அப்பீல் வாயிதாவான 20 நாளைக்குள் அப்பேர்ப்பட்ட நோட்டீஸ் தாசில்தாருக்கு வராமற்போனுல் தாசில்தாரானவர் அப்பீல் செய்யப்படவில்லையென்று யெண்ணி தாம் எவருக்கு

அடமானம் செய்வதாய் தீர்ப்பு செய்தாரோ அவனை பட்டாதாரனாக ரிஜிஸ்டரில் எழுதிக்கொள்ள வேண்டியது. அதேமாதிரியாய் கலெக்டரிடமிருந்து மேற்கண்ட காலத்திற்குள் அம்மாதிரி நோட்டீஸ் டிவிஷனல் ஆபீஸருக்கு வராமற்போனால், டிவிஷனலாபீஸர் எவனுக்கு அடமானம் செய்வதாய் தீர்மானித்திருக்கிறாரோ அவனுக்கு அவர் பட்டாகொடுக்க வேண்டியது. கலெக்டரானவர் தமக்கு அப்பீல்செய்யப்பட்டதின்பேரில் தாம் தீர்ப்புசெய்திருந்தால் அந்தத் தீர்ப்புக்கு விரோதமாய் அப்பீல்தாக்கல்செய்துகொள்ளப்பட்டதாக போர்டாபீஸிலிருந்து அப்பீல்வாய்தா கடந்த 30 நாள் வரையில் மேற்கண்ட மாதிரி யாதொரு நோட்டீஸாம் வராமற்போனால் தம்மிடதீர்ப்புபிரகாரம் யாருக்கு அடமானம் செய்யவேண்டியதோ அவனுக்கு பட்டா கொடுக்கவேண்டியது. வேறே யாராவது (அந்தநிலத்தை) அனுபவித்துவந்து இந்தப்பட்டா பெற்றுக்கொண்டபிற்பாடு தீர்ப்பு பெற்றவன் அவனை யாதொரு நியாயமான வழிகளாலும் அந்த நிலத்தை விட்டு விடும்படி செய்யக்கூடாமற்போனால், அப்படி அனுபவித்து வருகிறவன்பேரில் வியாச்சியம் செய்து கொள்ள வேண்டியதானது தீர்ப்பு பெற்றவனிட பொறுப்பைச் சேர்ந்தது.

26. தீர்வை ஏற்பட்டதாயிருந்தாலும் செவர்ண்மெண்டு உபயோகத்திற்கென்றாவது கிராமவுபயோகத்திற்கென்றாவது அல்லது வேறே உபயோகத்திற்கென்றாவது வைக்கப்பட்டிருக்கிற நிலத்திற்கு தர்க்காஸ்துகள் செய்யப்பட்டால் அவைகளை கலெக்டரிட ஸ்பஷ்டமான உத்திரவில்லாமல் கிராமநவுக்கர்களாவது தாசீல்தாராவது அங்கீகரிக்கக்கூடாது; தர்க்காஸ்து கொடுக்கிறவன் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்து (மேலே அவசியமென்று சொல்லிய) கலெக்டரிட உத்திரவைப் பெற்றுக்கொள்ளக் கூடும். கல்வெட்டி எடுத்துக்கொள்ளவேண்டியதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கு தர்க்காஸ்து செய்து கொண்டால் அவைகளை (மேலே சொன்ன) சாதாரணவிதிகளை அனுசரித்து பைசல் செய்யாமல் அவைகளைப் பற்றி எல்லா சங்கதியையும் (அவைகளைப் பைசல் செய்யவேண்டியதற்கு) தக்கயோசனைகளையும் கண்டெழுதி போர்ட்டாரிடவுத்திரவுக்கு அனுப்பவேண்டியது. கெவர்ண்மெண்டாருக்குச் சொந்தமான களர் நிலமூலமாய் உண்டாக்கப்பட்டிருகிற எல்லாரஸ்தாக்களுக்குப் பக்கமாய் ரஸ்த்தாவின் மத்தியிலிருந்து பக்கம் ஒன்றுக்கு உயர்ந்த பக்ஷம் 22 கெஜம் அளந்து இரண்டு பக்கத்திலும் நிலம் விட்டுவைக்கவேண்டியது; இந்த எல்லைக்குட் பட்ட எந்த நிலத்தையும் எவ்விதகாரணத்தை முன்னிட்டும் குடியானவர்களுக்கு அடமானம் செய்யக்கூடாது.

27. களர் நிலங்களை சர்க்கார் செலவில் டிமார்கேஷன் செய்யப்பட்ட ஜில்லாக்களிலிருக்கிற நிலத்துக்கு தர்க்காஸ்து செய்கிறவர்கள் தாலுக்காவின் டிமார்கேஷன் செய்தவற்கு சராசரி என்னசெலவாச்சுதோ அந்த தாமாஷாப்படி கணக்கிட்டு தர்க்காஸ்து நிலத்திற்கு ஏற்பட்ட டிமார்கேஷன் செலவை நிலத்தை வசப்படுத்திக் கொள்வதற்கு முன்னமே செலுத்திவிடவேண்டியது. டிமார்க்கேஷன் செய்த தேதிமுதல் நிலத்தையாரும் அனுபவிக்காதிருந்தால் மேலே சொன்ன விதிகள் பிரகாரம் கணக்கிட்டு டிமார்க்கேஷன் செலவு தொகை பூராவையும் தார்க்காஸ்து செய்கிறவன் கொடுக்கவேண்டும். டிமார்க்கேஷன் செய்த தேதிமுதல் நிலத்தை யாராவது அனுபவித்து வந்திருந்து அப்படி அனுபவித்து வந்தவனால் செலுத்தப்பட வேண்டியடிமார்க்கேஷன் செலவு தொகை ஏதாவது பாக்கியிருப்பதாய் ஏற்பட்டால் அந்தப் பாக்கியை இப்போது தர்க்காஸ்து செய்கிறவன்கொடுக்கவேண்டியது. நிலத்தில் எல்லைக்கல்லுகள் இல்லாமற்போனால் கிராமநவுக்கர்கள் எப்படி கல் நடவேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த விதமாய் தர்க்காஸ்துதாரன் கல் நடவேண்டியதற்குக் கடமைப்பட்டவனாயிருக்கிறான்.

28. தர்க்காஸ்து விஷயங்களுக்காக நிலத்தை உட்பிரிவினைசெய்ய யாதொரு தடையுமின்றி உத்திரவு செய்யவேண்டியது. ஆனால் எல்லா விஷயங்களிலும் மேற்சொன்னமாதிரி சில பாகங்களுக்கு மாத்திரம் செய்யப்பட்ட தர்க்காஸ்துகளைவிட ஸர்வே நிலங்கள் முழுமைக்கும் செய்யப்பட்ட தர்க்காஸ்துகளுக்கு மேலான பாத்தியதை உண்டு.

29. கிராமநவுக்கர்களும் தாசீல்தார்கச்சேரியிலும் தர்க்காஸ்து விண்ணப்பங்களைப் பதிந்துக் கொள்வதற்கு ஒருரிஜிஸ்டர் வைத்துக்கொள்ளவேண்டியது. தாசில்தாரானவர் தாலூக்கா ரிஜிஸ்டரை வைத்துக்கொண்டு கிராம ரிஜிஸ்டரைத்தணிக்கை செய்து ஒத்திடவேண்டியது; பிறகு தாலூக்கா ரிஜிஸ்டர் சரியாயிருக்கிறதென்று தாம் கையொப்பம் செய்து அதை ஜமாபந்தி நடத்தும் கலெக்டர், ஸப்கலெக்டர்; அசிஸ்டாண்டு கலெக்டர் அல்லது டிப்டிகலெக்டருக்கு அனுப்பவேண்டியது. தவிரவும் இந்த தாலூக்கா ரிஜிஸ்டர் ஜமாபந்தி ஆபீஸருக்கு அனுப்பப்பட்டதென்பதற்கும் அதில்யாதொருவித ஆக்ஷேபணைகளுக்கும் இடமில்லையென்பதற்கும் அத்தாட்சியாக தாசில்தாரானவர் அதில் ஜமாபந்தி ஆபீஸரிட கையெழுத்தையும் வாங்கவேண்டியது.

30. இந்தவிதிகளுக்கும் அவைகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட பாரங்களுக்கும் சுதேச பாஷையில் தர்ஜிமாசெய்து அவைகளுக்கு நகல்களை தா

லூக்கா உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம நவுக்கர்களுக்கும் கொடுக்கவேண்டியது.

31. 1884 ஹு மார்ச்சுமீ 11உ ஸெண்ட்ஜார்ஜ்கோட்டைகெஜட்டில் பிரசித்தம்செய்யப்பட்டபாரஸ்ட்டுவிதிகளில் இரண்டாவது விதியை யனுசரித்து எந்தநிலத்தையாவது ரிஸெர்வ்செய்து வைக்கப்பட்டிருந்தால் அந்தநிலத்தின் ஸர்வே நெம்பர்கள் ரிஸெர்வ்செய்யப்பட்டதாக கிராமத்திய பைமாஷ் அல்லது ஸெட்டில் மெண்டு ரிஜிஸ்டரில் சரியான கலத்திலும் 4 நெம்பர் அடங்கல் கணக்கில் 3வது கலத்திலும் எழுதவேண்டியது ; அப்பேர்ப்பட்ட நிலத்துக்காக கொடுக்கப்பட்ட பட்டாவானது போர்ட்டாரிட ஸ்பெஷல் அனுமதியின்பேரில் கொடுக்கப்பட்டதாய் ஸ்பஷ்டமாய் ஏற்பட்டாலொழிய அப்பேர்ப்பட்ட பட்டா செல்லாது.

32. செங்கல்பட்டு ஜில்லாவில் நிலங்களுக்குத் தர்க்காஸ்து கொடுக்கப்பட்டால் அவைகளைப் பைசல் செய்ய பிரத்தியேகமான விதிகளுண்டு ; அவைகளை அனுபந்தத்தில் சொல்லியிருக்கிறது.

31. ரயத்துவாரி நிலங்களை (ராஜீநாமா கொடுத்து) கைவிடுதல்.—ரயத்துவாரி நிலங்களைக்கைவிடும் பொருட்டு எழுத்துமூலமானவிண்ணப்பம் செய்து கொள்ளவேண்டியது; மேலும் வேறொரு குடியானவன் அந்த நிலத்தில் சாகுபடி செய்யக்கூடும்படியான (சாகுபடி) காலத்திற்கு போதுமான சாவுகாசத்திற்கு முன் நிலத்தைக் கைவிடவேண்டியது.

2. பல ஜில்லாக்களில் முதல்மழை எந்தெந்தகாலத்தில் பெய்கிறதோ அதற்கு ஒத்ததாய் அந்த ஜில்லாக்களில் நிலத்தைக்கைவிட வேண்டியகாலம் இன்னதென்று ஏற்படுத்த வேண்டியது. அந்தக் காலத்தை ரொம்பவும் முன்னுடியானதாகக் குறித்து விட்டால் தங்கள் நிலத்தை கைவிட்டுவிட அசம்மதமுள்ளவர்களாயும் தவிரவும் தாங்கள் கைவிடமாட்டோமென்றால் தங்களுக்கு நஷ்டமுண்டாகாதென்று நிச்சயம் செய்து கொள்ள போதுமானகாலம் ஆரம்பித்து விட்டதா வென்று சந்தேகமாயிருக்கிறவர்களுமான குடியானவர்களுக்குவருத்தத்தை உண்டாக்கத்தக்கதாகும். பலஜில்லாக்களிலும் நிலங்களைக்கைவிடவேண்டிய தேதிகளை அனுபந்தத்தில்கண்ட ஏற்பாடு பிரகாரம் கெவர்ண்மெண்டார் குறித்திருக்கிறார்கள்.

3. ஒருகுடியானவன் கைவிடும் நிலமானது வெளியிலிருந்து சுலபமாய் போய்ச்சேரக்கூடியதா யிருக்கவேண்டியது ; அதாவது, அவனுக்கு சொந்தமான நிலங்களில் மத்தியிலிருக்கிற நிலத்தைத் தவிர மற்ற நிலங்களை வைத்துக்கொள்ள உத்திரவு கொடுக்கக்கூடாது. ஏனென்றால் வேறொரு குடியானவன் அந்த நடு நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு வசதியாயிராது.

4. நிலத்தைக் கைவிடுவதற்காகக் கொடுக்கப்படும் தஸ்தாவேஜானது பலானதீர்வையுள்ள பலான வயல்களுக்கு சொந்தக்காரனை பலான குடியானவன் பலான தீர்வையுள்ள பலான வயல்களை கைவிடுகிறுனென்று கண்டு குறித்த பாரப்பிரகாரமிருக்கவேண்டியது. மேலும் அது உண்மையான தென்பதற்கும் பிழையில்லாத தென்பதற்கும் அத்தாக்ஷியாக கிராம மணியக்காரனும் கணக்கனும் மேல்கையெழுத்து செய்யவேண்டியது; அப்பேர்ப்பட்டதஸ்தாவேஜை கிராமத்திய மணியக்காரனிடத்திலாவது கணக்கனிடத்திலாவது ஒப்புக்கொடுத்துவிடுவதே போதுமானதாக பாவிக்க வேண்டியது. ஏதோ ஷரத்துகளுக்கு உட்பட்டுக் கைவிடுவதற்குக் கொடுக்கப்படும் ராஜினுமா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கைவிட்டுவிடப்படும் நிலத்திற்காக சர்க்கார் பாக்கிசேரவேண்டியதென்கிற காரணத்தினுல் கைவிடுவதற்கு உத்திரவுகொடுக்காம லிருக்கக்கூடாது. நிலத்தைக் கைவிட்டுவிடுவதினுல் தீர்வை செலுத்தவேண்டிய பொறுப்பு விட்டுப்போகமாட்டாது; மேலும்நிலத்தைக் கைவிட்டுவிடுகிறவனுக்கு வேறேசொத்து இருக்கும்பக்ஷத்தில் கைவிடப்பட்ட நிலத்திற்காகச் சேரவேண்டியபாக்கியை வசூல் செய்யும் பொருட்டு அந்த சொத்தைத் தொடரலாம். நிலங்கள் விலை பெறக்கூடியவைகளாயிருந்தால் அவைகளைக் கைவிட்டுவிடுவது அபரூபம், அல்லது கைவிட்டுவிடுவதேயில்லை; ஆகையால் அப்பேற்பட்ட நிலங்களுக்காகச் சேரவேண்டிய பாக்கியை வசூல் செய்யும் பொட்டு அந்த நிலங்களை விற்பனை செய்வது உசிதமாயிருக்கிற விஷயம் அபரூபமாகவிருக்கும்; அல்லது உசிதமேயல்லாமலுமிருக்கும்; ஆனல் கைவிடுகிறவனுக்கு வேறே சொத்து ஒன்றுமில்லாமற் போனல் கலெக்டரானவர் ராஜினுமா கொடுத்து விடப்பட்ட நிலங்களை (அவைகளுக்குள்ள) பாக்கியை வசூல் செய்யும் பொருட்டு தம்மிட்டயுக்தானுஸாரம் விற்கலாம், அல்லது வசூலாகக் கூடாததென்று பாக்கியை கணக்குகளிலிருந்து அடித்து விடும்படி சிபார்சு செய்யலாம்.

6. தாசீல்தார் தங்கள் தாலூக்காவுக்கும், டிப்டிதாசில்தார்கள் தங்கள் இலாகாவுக்கும், வெளிப்பட்டிருக்கிற நிலங்களைக் கைவிடுவதற்காக செய்து கொள்ளப்படும் ராஜினுமாவை அங்கீகரிக்கக்கூடாது.

7. கூட்டுப்பட்டாவில் தாக்கலாயிருக்கிற நிலத்தைக் கூட்டுப்பட்டாதார்களில் ஒருவன் கைவிடவேணுமென்று ராஜிநாமா கொடுத்தால் எல்லா கூட்டுப்பட்டாதார்களிட சம்மத மில்லாமல் அந்த ராஜிநாமாவை அங்கீகரிக்கக் கூடாது.

8. தகுந்தவயது வராத பாலியர்களுக்கு (மைனர்களுக்கு)ச்சொந்தமான நிலங்களுக்கு அந்த பாலியர்களை பாதுகாத்துவருகிறவர்கள் (கார்டியன்)

ராஜீனுமாகொடுத்தால் அதை அங்கீகரிப்பது அபாயகரமானது, ஆகையால் அந்த கார்டியன்கள் சட்டப்பிரகாரமாவது அல்லது தகுந்த அதிகாரியாலாவது நியமிக்கப்பட்டவர்களாயிருந்தாலொழிய அவர்களால் கொடுக்கப்படும் ராஜிநாமாக்களை சாதாரணமாய் அங்கீகரிக்கக்கூடாது. அப்பேர்ப்பட்ட நிலங்களின்பேரில் பாக்கி ஏற்பட்டால், அந்த நிலங்களை ஜப்திசெய்து குத்தகைக்கு விடவேண்டியது; குத்தகைக்குயாரும் எடுத்துக் கொள்ளாமற் போனால்பாக்கியை (கணக்குகளில்) அடித்துவிடும்படி சிபார்சுசெய்யவேண்டும்.

32. தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களைப் பைசல் செய்வது.—பின்னால் 18வது பிரகரணத்தில் சொல்லப்பட்ட உபயோகங்களுக்காவது அல்லது பாரஸ்டு விதிகளை அனுஸரித்தாவது பாரஸ்டுக்காக ரிஸர்வ்செய்யப்படாமலும் பொது ஜனங்களில் யாருக்காவது சுதந்தரமாவது அனுபவ உரிமையாவது இல்லாமலிருக்கிற தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களை பின்வரும் 21 பிரகரணங்களில் கண்ட விதிகளை யனுஸரித்து விற்பனை செய்யலாம். எப்பொழுதும் தீர்வையில்லாமல் அனுபோகித்து வரும்பொருட்டு மேலே சொன்ன விதிகளை அனுஸரித்து விற்பனைசெய்கிற ஒவ்வொரு விஷயத்திற்கும் முன்னாடியாய் இந்தியா கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப்பெற்றுக்கொள்ளவேண்டும்; ஆனால் கட்டடங்களுக்காகவாவது தோட்டங்களுக்காகவாவது தேவையாயிருக்கிற 10 ஏகராவுக்கு மேற்படாத விஸ்தீரணமுள்ள துண்டு நிலங்களாயிருந்தால் அவைகள் விஷயமாய் இந்தியா கெவர்ன்மெண்டாரிட அனுமதி வேண்டியதில்லை. தீர்வை கொடுத்து அனுபோகித்து வருவதற்குத் தவிர வேறே எந்த உபயோகத்திற்காகவாவது தீர்வை ஏற்படாத கரம்புநிலத்தை அடமானம் செய்வதாயிருந்தால் கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது; ஆனால் கிராம நத்தத்துக்காவது அல்லது வேறே உபயோகங்களுக்காவது நிலம் அடமானம் செய்யவேண்டியதாயிருந்தால் அதற்கு கெவர்ன்மெண்டாரிட அனுமதி வேண்டியதில்லை; அவைகளுக்கு கலெக்டர் அனுமதிகொடுக்கலாம்

2. இந்தவிதிகளை அனுஸரித்து நிலங்களுக்காக செய்துகொள்ளும் விண்ணப்பங்களை அந்தநிலங்கள் எந்தஜில்லாவுக்குச் சம்பந்தப்பட்டதோ அந்தஜில்லா கலெக்டருக்கு கொடுக்கவேண்டியது; அந்த விண்ணப்பங்களில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருக்க வேண்டியது. (1) விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் (2) நிலம் இருக்கப்பட்ட இடம், சரியாய் சொல்லக்கூடியவரையில் அதின் எல்லைகள்.

3. கெவர்ன்மெண்டார் வேறே விதமாய் பிரத்தியேகமான உத்திரவு ஏதாவது செய்திருந்தாலொழிய யாதொரு துண்டு நிலமும் 500 ஏகராவுக்கு மேற்படக்கூடாது. பட்டணங்களுக்குள்ளும் கிராமங்களுக்குள்ளும் மலைப்பிரதேசங்களுக் குள்ளும் ரெயில்வே ஸ்டேஷன்களுக் குள்ளும் தேக சௌவுக்கியத்துக்காக ஜனங்கள் போகிற ஸ்தலங்களுக்குள்ளும் ஒரு துண்டு நிலம் உயர்ந்த பக்ஷம் 10 ஏகராவுள்ளதாயிருக்கவேண்டும்; ஆனால் ஒவ்வொருதுண்டு நிலமும் மேற்கண்டவிஸ்தீரணத்திற்கு மேற்படாமல் அடுத்தடுத்திருக்கிற பலதுண்டு நிலங்களுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

4. ஒவ்வொருதுண்டு நிலமும் அடுத்தடுத்துள்ளதாயும் கூடியவரையில் தீர்க்க சதுரமானதாயும் * இருக்கவேண்டியது.

அந்த நிலமானது ஒரு பொதுரஸ்தா, கப்பல் போகக்கூடிய ஆறு, வாய்க்கால், கடல் அயலேரி,ரெயில்வே அல்லது டிராம்வே இவைகளில் எதையாவது அடுத்திருக்கும் பட்சத்தில் அந்தரஸ்தா அயலேரி முதலானவையின் நீளமானது துண்டு நிலத்தின் அகலத்துக்கு பாதிக்கு மேற்பட்டதாயிருக்கக்கூடாது; மற்ற விஷயங்களிலெல்லாம் கூடியவரையில் அந்தத்துண்டு நிலங்களின் நீளமானது அவைகளின் அகலத்துக்கு பாதிக்கு மேற்படாமலிருக்கும்படியாய் ஏற்படுத்த வேண்டியது.

5. யாதொரு துண்டுநிலத்தையும் ஸர்வேசெய்து நீடித்திருக்கும்படியான எல்லைக்குறிகளை நடுகிறவரையில் அந்தநிலத்தை விற்பனை செய்யக்கூடாது.

6. 2வது பிரகரணத்தின் பிரகாரம் ஒரு விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்டதின்பேரில் கலெக்டரானவர் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட நிலத்தை இதிற்கண்ட விதிகளை அனுசரித்து விற்கக்கூடியதென்று தமக்குக் காரணம்தோன்றும்பக்ஷத்தில், அந்தநிலத்தை முன்னாடியாகவே ஸர்வைசெய்து எல்லைக்குறிகளை நடுவதற்குத் தேவையான

* தீர்க்க சதுரமாவது ஒரு நிலத்தில் ஒருபக்க அகலமானது மற்றொருபக்கத்தின் அகலத்திற்கும், ஒரு பக்க நிகளமானது மற்றபக்கத்து நிகளத்துக்கும், சமானமாயும் இவைகளில் ஒன்றுக்கொன்றுகோணாமலும் இருப்பது அதின் உருவங்களாவன—



செலவை இவ்வளவென்று மதிப்பிட்டுஅந்தத்துகையை தம்மிடத்தில் செலுத்தும்படியாக விண்ணப்பதாரனுக்கு உத்திரவு செய்யவேண்டியது. ஸர்வைசெய்வதற்கும் எல்லைக்குறிகளை நடுவதற்கும் பிடித்த செலவுகள்போக விண்ணப்பதாரன் செலுத்தியதுகையில் மீதியிருந்தால் கலெக்டர் அந்த மீதிதுகையை விண்ணப்பதாரனிடம் கொடுத்துவிட வேண்டியது; விண்ணப்பதாரன் (மேற்கண்ட செலவுகளுக்காக தான் செலுத்திய துகை போதாததாயிருக்கும்பக்ஷத்தில்) பாக்கி துகையை செலுத்தவேண்டியது.

7. 6வது பிரகரணத்தில் கண்டபிரகாரம் தேவையான துகையைப் பெற்றுக்கொண்டதின்பேரில், கூடிய சீக்கிரத்தில் கலெக்டரானவர் விண்ணப்பம்செய்து கொள்ளப்பட்ட நிலத்தை ஸர்வேசெய்தபிற்பாடு 3–வது பிரகரணத்தில் குறித்த விஸ்தீரணத்திற்கு மேற்பட்ட ஜாஸ்தி நிலத்தை மொத்த விஸ்தீரணத்திலிருந்து தள்ளுபடி செய்யவேண்டியது; பிறகு விண்ணப்பம்செய்து கொள்ளப்பட்ட நிலமிருக்கிற இடத்தை அனுசரித்தாவது அல்லது அந்த நிலத்தின் தாரதம்மியத்தை அனுசரித்தாவது ஏற்பட்டிருக்கிற அதமபக்ஷம் விலை எவ்வளவோ அத்துடன், ஸர்வேசெய்வதற்கும் எல்லைக்குறிகளை நடுவதற்கும் பிடித்த செலவையும் அதின் மேலுள்ள மரங்களின் உத்தேச மதிப்பையும் சேர்த்து ஆனமொத்தத்துகையை ஏலத்தில் முதல் கூறும்விலையாக வைத்து அந்தநிலத்தை பலானதினம் ஏலம் போடப்படுமென்று பிரசித்தம் செய்யவேண்டியது; (9வது பிரகரணத்திற் கண்டநோடீஸ் கொடுப்பதற்குத் தேவையான சாவுகாசத்தை உத்தேசித்து ஏலதினத்தைக் குறிக்கவேண்டியது);

9. இங்கிலீஷிலும் ஜில்லாவின் சுயபாஷையிலும் விளம்பரம் செய்யப்படும்: மேலும் (விண்ணப்பம்செய்யப்பட்ட) நிலமிருக்கிற இடம் அதின் விஸ்தீரணம் அதின் எல்லைகள் இதுகளையும் ஏலத்தில் முதலில் கூறும் துகை இவ்வளவென்றும் இன்னஇடத்தில் இன்னசமயத்தில் இன்னநிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் போடப்படுமென்று அந்தவிளம்பரத்தில் கண்டெழுதவேண்டியது. அந்தவிளம்பரத்தை சரியாய் 3ஸ்ரீ காலம்வரையில் (விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட) நிலத்திலும் அடுத்த கிராமங்களிலும், ஜில்லா கலெக்டராபீஸிலும், தாலூக்கா தாசில்தார் கச்சேரியிலும், (முனிஸீப்கோர்ட் ஒன்று இருக்கும்பட்சத்தில்) முனிஸீப்கோர்ட்டிலும், அதிசமீபத்திஉள்ள போலீஸ் ஆபீஸிலும் ஒட்டிவைக்கவேண்டியது. உத்தேசித்திருக்கிற ஏலத்தைப்பற்றி ஜில்லாகெஜட்டிலும் பிரசுரம் செய்யவேண்டியது. கலெக்டரானவர் தம்மிட யுக்தானுஸாரம் பலான தினத்தில் பலான இடத்தில் ஏலம் போடப்படுமென்று குறித்து அவசியமானல் அவைகளிரண்டையும் மாற்றலாம்; ஆனல் அப்படி மாற்றுகிறதாயிருந்தால்

அதம பட்சம் 14-நாளைக்கு முந்தி அதைப்பற்றி பிரசித்தம் செய்யவேண்டியது, மேலும் முன்சொல்லியபடி 3ஸ்ரீ காலம் பிரசித்தம் செய்து கொண்டுவருகிற வரையில் யாதொரு நிலத்தையும் விற்கக்கூடாது.

10. பலான இடத்தில் பலான சமயத்தில் ஏலம் போடப்படுமென்பதைப்பற்றியும், 9 - வது பிரகரணத்திற் கண்டபடி அவைகளை மாற்றியிருக்கும் பட்சத்தில் அப்படி மாற்றியிருப்பதைப்பற்றியும், கலெக்டரானவர் விண்ணப்பதாரனுக்கு எழுத்து மூலமான நோடீஸ் அனுப்பவேண்டியது; ஆனால் அப்பேர்ப்பட்ட நோடீஸானது (விண்ணப்பதாரனுக்குச்) சேரவில்லையென்கிற காரணத்தினால் ஏலத்தை தடைசெய்யக்கூடாது; அல்லது விண்ணப்பதாரன் ஆஜரில்லை என்கிற காரணத்தினாலாவது ஏலத்தை தாமதப்படுத்தவும் கூடாது.

11. இந்தவிதிகளை அனுஸரித்து நிலங்களுக்காக செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பங்களை வரப் பெற்றுக்கொண்டதின் பேரில் முதலில் செய்யவேண்டிய விசாரணையை கலெக்டரானவர் செய்து பிற்பாடு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டநிலங்களுக்கு வேறே பாத்தியஸ்தர்கள் தங்களுக்குள்ள பாத்தியதைகளைச்சொல்லிக்கொள்வார்களென்று தமக்குத் தோன்றும் பட்சத்தில், விண்ணப்பதாரனிட கோரிக்கையின் பேரிலும் அதனால் உண்டாகும் நஷ்டங்களுக்கு அவன் உட்படவேண்டியதென்கிற நிபந்தனையின் பேரிலும் மாத்திரமே ஸர்வை செய்யப்படுமென்று அவனுக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது. இந்தஷரத்துகளுக்குட்பட்டும் ஸர்வே செய்யவேணுமென்று விண்ணப்பதாரன் கோரிக்கொள்ளும் பட்சத்தில் அப்படியே ஸர்வேசெய்விக்கவேண்டியது ; ஸர்வே செய்தான பிறகு மேற்கண்ட விதிகள் பிரகாரம் நிலங்கள் விற்கத்தக்கவைகளல்லவென்று ஏற்படும்பட்சத்தில் அந்த நிலங்களைஸர்வே செய்ததற்காகவும்- 3 -வது பிரகரணத்தில் கண்டஎல்லைக்கு மேற்பட்டு ஏதாவது ஜாஸ்தி நிலம் இருந்து அதைஸர்வே செய்ததற்காகவும் பிடித்த செலவுகளை விண்ணப்பதாரன் செலுத்தவேண்டியது. முன்சொன்னபடி எச்சரிக்கை செய்யாமலிருந்து பின்னிட்டு நிலம் விற்கப்படத்தக்கதல்லவென்று ஏற்படும் பட்சத்தில் ஸர்வே செய்ததற்காகப் பிடித்த செலவு கெவர்ன்மெண்டாரைச் சேர்ந்தது. நிலத்தை விற்பனை செய்வதற்கு முன்பாக விண்ணப்பதாரனவன்தன் விண்ணப்பத்தை ரத்துசெய்துவிட்டதாய் தெரிவித்தால், 6-வது பிரகரணத்தை யனுஸரித்து அவன் செலுத்தியிருக்கும் துகையில் செலவாகாமல் எவ்வளவு மீதியிருக்கிறதோ அவ்வளவை மாத்திரம் வாப்சுபெற்றுக்கொள்ளவிண்ணப்பதாரனுக்கு பாத்தியதையுண்டு.

12. ஒரு விண்ணப்பத்தை ரத்து செய்து கொண்டதின் பேரில், நிலத்தை எவ்விதமாக பைசல் செய்தால் சர்க்காருக்கு ரொம்பவும் நல்ல

தோ அதையோசித்து கலெக்டரானவர் தம்மிட் யுக்தானுஸாரம் நிலத்தை விற்ருலும் விற்கலாம், விற்காமலிருந்தாலுமிருக்கலாம்.

13. ஏலத்தில் முதற் கூறப்படும் விலையானது, நிலத்தை ஸர்வேசெய்வதற்கும் கல் நடவேண்டியதற்காகவும் பிடித்த செலவும் நிலத்தின் பேரில் இருக்கப்பட்ட மரங்களின் உத்தேசமதிப்புத் துகையும் சேர்ந்ததாகவே இருக்கவேண்டியது. முதலில் விண்ணப்பம் கொடுத்தவனே நிலத்தை ஏலத்தில் வாங்கினவனுயிருக்கும் பட்சத்தில் அவன் முன்னுடி செலுத்தியிருக்கும் துகையானது ஏலத்துகையில் வரவுவைத்துக்கொள்ளப்படும். அப்படியில்லாமற் போனுல் (ஏலமெடுத்தவன் முதலில் விண்ணப்பம் செய்தவனுய் இல்லாதிருக்கும் பட்சத்தில்) அவன் முன்னுடி செலுத்தியிருக்கிற துகையை ஏலத் துகையிலிருந்து எடுத்து உடனே கொடுத்து விடப்படும்.

14. ஏலம் போடுவதற்கு முன்பாக நிலம் தங்களுக்குச்சொந்தமுண்டென்ருவது, தங்களுக்கே அனுபவ வுரிமை உண்டென்ருவது, மேற்கண்ட விதிகள்பிரகாரம் நிலத்தை விற்பனை செய்வதற்கு அனுஸரணையாயிராத வேறே எவ்விதபாத்தியதை உண்டென்ருவது எவர்களும் சொல்லிக்கொள்ளாமற்போனுல், பிரசித்தம் செய்தபடி நிலத்தை ஏலத்தில் விலைகூறி முதற் கூறிய விலைக்குமேல் உயர்ந்ததுகைக்கு கேட்கிறவனுக்கு நிலம் விற்பனை செய்யப்படும்.

15. ஏலத்தில் விலைக்கு வாங்கினவன் ஏலம் முடிவானதின்மேல், தான் வாங்கின விலையில் 100ற்றுக்கு 10 வீதம் கூடிய துகையை உடனே செலுத்திவிடவேண்டியது; ஏலதாரன் தன்னிட இஷ்டப்பிரகாரம் ஏலத்துகையின் மீதி பூருவையும் 30 நாளைக்குள் செலுத்தினுலும் செலுத்தலாம், அல்லது ஏலம் போடும் தேதிமுதல் 100க்கு ரூ 1க்கு 6வீதம் வட்டிபோட்டு 3 ரூத்தில் வருஷவாரியில் சமமான துகையாகச் செலுத்திவரலாம். முதலில் பிரஸ்தாபித்த விஷயத்தில், ஏலத்துகையில் பாக்கியிருப்பதை செலுத்தினதின்பேரில் அனுபந்தத்தில் கண்ட ஏ. பாரப்பிரகாரம் ஒருசாசனம் எழுதி ஏலத்தில் விலைக்குவாங்கினவனுக்கு அதை கொடுக்கவேண்டியது. பிறகு நிலங்கள் அவன் சுவாதீனத்தில் விட்டு விடப்படும். இரண்டாவது பிரஸ்தாபித்த விஷயத்தில் பாக்கியிருக்கிற (ஏல்) துகையின் முதலுக்காகவும் வட்டிக்காகவும் சேரவேண்டியதுகையை வாயிதாபிரகாரம் கிரமமாய் செலுத்துவதற்கு ஜாமீனுக நிலத்தை சர்க்கரில் ஈடு வைத்துக்கொள்ளப்படும்; அப்படி செலுத்தத்தவறினுல் கெவர்ன்மெண்டாரால் ஏலம் எடுத்தவனுக்கு ஒரு நோடீஸ் அனுப்பப்படும்:—(அந்த நோட்டீசில் கண்டெழுதப்படும் அம்சங்களாவன,) நோடீஸ்கொடுக்கப்பட்டதேதிமுதல் 30 நாளைக்குப்பிறகு கெவர்ன்மெண்டார் நிலத்தை மறுபடி தங்கள் சுவாதீனமாக்கிக்கொள்வார்களென்

றும் அல்லது நேரிடும் நஷ்டத்திற்கு பாக்கி தாரனை உள்ளாக்கி நிலம் விற்கச்செய்யப்படுமென்றும், அந்த நோடீசில் கண்டெழுத வேண்டியது; தயா விஷயமாய்க்குறித்த வாயிதாவுக்குள் பாக்கியை செலுத்தாமற்போனால் நிலத்தை திரும்ப ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவாவது மறு ஏலம் போடவாவது உடனே முயற்சி செய்யப்படும். ஏலம் எடுத்தவனானவன் கெடுவுகள் பிரகாரம் ஏலத்துகையைச் செலுத்த விரும்பும் பட்சத்தில் அட்டவணையிற் கண்ட பீ பாரப்பிரகாரம் சாஸனம் ஒன்று அவன் தயார்செய்துகொடுக்கிறவரையில் அவனுக்கு சுவாதீனம் கொடுக்கப்படமாட்டாது. பீ சாஸனத்தில் கண்ட ஷரத்துகளை கிரமமாய் நிறைவேற்றின பிற்பாடு அதைரத்து செய்து அதற்குப்பதிலாய் ஏ பாரத்தில் ஒரு சாஸனம் எழுதிக்கொடுக்கப்படும்.

16. பின்னால்வரும்ஏலநிபந்தனைகளுக்குட்பட்டுஏலம்போடப்படும்:—

i. ஏலத்தில் முதலில் கூறப்பட்ட விலைக்கு மேற்பட்டு உயர்ந்த விலைக்குக்கேட்கிறவன் ஏலத்தில் நிலத்தை விலைக்குவாங்கினவனாவான். ஒரே விலைக்கு இரண்டு மூன்றுபெயர் ஏலத்தில் கேட்டு அவர்களுக்குள் ஏதாவது தகரார் உண்டானால் தகரார் உண்டான விலைக்குஅடுத்து முந்தி தகராரில்லாமல் கேட்டவிலையைக் கூறி உடனேமறு ஏலம் போடப்படும்.

ii. நிலத்தை ஏலத்தில் விட்டு விட்ட பிற்பாடு, அதை விலைக்குவாங்கினவன் தான் எவ்வளவு துகைக்கு வாங்கினானோ அவ்வளவு துகையில் 100 க்கு 10 விகிதம் டேவணியை கலெக்டரிடத்தில் கட்டி மீதி துகையை 30நாளைக்குள் கொடுக்கஇஷ்டமா அல்லது வருஷம் ஒரு கெடுவுபிரகாரம், 3 கெடுவில் செலுத்த இஷ்டமா என்று கலெக்டருக்கு தெரிவிக்கவேண்டியது; தவிரவும் (அந்தந்தவிஷயத்திற்குத் தேவையானபடி) அனுபந்தத்தில் கண்ட ஸீ. பாரப் பிரகாரமாவது டீ. பாரப்பிரகாரமாவது ஒரு உடன்படிக்கையில் கையெழுத்து செய்யவேண்டியது.

iii. ஏலத்தில் விலைக்குவாங்குகிறவன் பாக்கி ஏலத்துகையை 30நாளைக்குள் செலுத்த இஷ்டமுள்ளவனாயிருக்கும் பட்சத்தில் ஏலம் போட்டதேதி முதல் 30 நாளைக்குள் பாக்கி ஏலத்துகையை கலெக்டரிடம் செலுத்தி அதின்பேரில் ஏ மார்க்கிட்ட பாரத்தில் நிலத்தின் விக்கிரய சாஸனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியது.

iv. ஏலத்தில் விலைக்கு வாங்கினவன் மீதி ஏலத்துகையை வருஷவாரியில் ஒரு தவணையாய் 3 ஹூத்தில் கொடுக்க இஷ்டப்ப

டும் பக்ஷத்தில் ஏலம் போட்ட தேதிமுதல் 10 நாளைக்குள் பீ. மார்க்கிட்டபாரப்பிரகாரம் ஒருசாஸனம் எழுதிக்கொடுக்கவேண்டியது.

v. ஏலத்தில் விலைக்கு வாங்கவேண்டுமென்று அபேக்ஷையுள்ள எல்லா ஜனங்களும் ஏலத்தில் விற்கப்படப்போகிற சொத்து பலானதென்றும் அதின் விவரணங்கள் சரியாயிருக்கின்றனவாவென்றும் அதினுடைய விஸ்தீரணம் எல்லைகள் இவைகளைப்பற்றியும் ஏலத்திற்கு முன்பாகவே தங்களுக்குத் திருப்திகரமாய் தெரிந்துகொள்ளவேண்டியது ; ஏனென்றால் ஏலத்தில் விலைக்கு வாங்குகிறவனுக்கு சொத்தை விட்டு விடுவதினால், சொத்து பலானதென்று விபரித்து சொல்லுவதிலும் சொத்தின் இதர விவரணங்களிலும் எவ்விதமான பிழைகள் இருப்பதாகப் பின்னிட்டுத் தெரியவந்தால் அவைகளைப்பற்றி அவன் யாதொரு ஆக்ஷேபணையும் செய்யாமல் விட்டுவிட்டதாய்பாவிக்கப்படும்.

vi. ஏலத்தில் விலைக்கு வாங்குகிறவன் 30 நாளைக்குள் பாக்கியை செலுத்த இஷ்டப்பட்டதாகச்சொல்லிஎந்தக்காரணத்தினாலாவது ஏலம் போட்டதேதி முதல் 30ம் நாள்வரையில் (மீதி ஏலத்துகையை செலுத்தி) ஏலத்தைப் பூர்த்திசெய்யாமற்போனாலும், அல்லது ஏலதாரனானவன் தவணையாகச்செலுத்த இஷ்டப்பட்டு ஏலம் போட்ட தேதிமுதல் 10 நாள்வரையில் பீ. மார்க்கிட்ட பாரத்தில் ஒருசாஸனம் எழுதிக்கொடுக்காமல் அசிரத்தையாயிருந்தாலும், ஏலதாரன், முதற் சொன்ன விஷயத்தில் விக்கிரயம் பூர்த்தியாகிறவரையிலும், இரண்டாவது பிரஸ்தாபித்த விஷயத்தில் பீ. பாரப்பிரகாரம் ஒரு சாஸனத்தை தயார்செய்து கொடுக்கிற வரையிலும், மீதி ஏலத்துகைக்கு ஏலதேதி முதல் 100க்கு வருஷம் 1 க்கு 12 வீதம் கலெக்டரிடத்தில் வட்டி செலுத்தவேண்டியது; ஆகிலும் 7வது ஷரத்தின்பிரகாரம் மறு ஏலம்போடுகிறதற்குள்ள பாத்தியதைக்கு இதினால் பாதகரம் உண்டாகாது.

vii. மேலேசொன்ன எல்லா ஷரத்துகள் பிரகாரமாவது அல்லது ஏதோ ஒரு ஷரத்து பிரகாரமாவது ஏலதாரனானவன் நடக்காமல் அசிரத்தையாயிருந்தாலும் நடக்கமாட்டேனென்றாலும் அவன் கட்டியிருக்கிறடேவணியை இழந்துபோகவேண்டியது; பிறகு அந்தப்பணம் கெவர்ன்மெண்டாரால் வைத்

துக்கொள்ளப்படும். பிறகு (முதல்) ஏலதாரனுக்கு விக்கிரய சாஸனம் முன்னுடியாய்க் கொடுக்கவேண்டிய அவசியமில்லாமலே பகிரங்கமான ஏலத்திலாவது அல்லது தனிஉடன் படிக்கையின்பேரிலாவது நிலத்தை மறுபடியும் விற்க கெவர்ண்மெண்டாருக்குஸ்வாதீனமுண்டு. அப்படி மறுஏலம் போடுவதில் கேழ்க்கப்பட்ட துகையானது முதல் ஏலத்துகையை விட குறைந்திருக்கும் பட்சத்தில் அந்தக் குறைவினுலும், மறு ஏலத்துக்காகப் பிடித்த செலவினுலும் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு மேற்கண்ட ஷரத்துகள் பிரகாரம் நடக்கத்தப்பிப் போன அல்லது நடக்கமாட்டேனென்று சொன்ன முதல் ஏலதாரன் பர்த்தி செய்யவேண்டியது.

17. ஏலத்திற்கு முன்பாக யாராவது ஏலம் போடப்படுகிற நிலத்திலாவது அல்லது அதில் கொஞ்சம் பாகத்திலாவது தனக்கு பாத்தியதை உண்டென்ருவது, தனக்கே அனுபோக உரிமை உண்டென்ருவது, அல்லது இந்த ஆர்டரில் கண்ட விதிகள் பிரகாரம் நிலத்தை விற்பதற்கு அனுஸரணையாயிராத வேறே எவ்வித பாத்தியதையையாவது சொல்லிக்கொள்ளும்பட்சத்தில் அப்பேர்க்கொத்த பாத்தியதைகள் கிரமமாய் சட்டப்பிரகாரம் விசாரிக்கப்பட்டு பைசல் செய்யப்படுகிற வரையில் நில ஏலத்தை ஒத்திவைக்க வேண்டியது.

18. மேய்ச்சல் நிலம், விறகு மரங்களை வளர்க்கிறதற்காக வேண்டிய நிலம், கட்டடங்களுக்காகவும் சிங்காரவனத்திற்காகவும் இளைப்பாறுவதற்காகவேண்டிய இடத்திற்காகவும், இன்னும் இவைகளைப்போலொத்த உபயோகங்களுக்காகவும், இன்னும் வேறு (ஸ்பெஷல்) பிரத்தியேகமான உபயோகங்களுக்காகவும் ரிஸர்வ்செய்து (பாதுகாத்து) வைத்திருக்கப்பட்ட நிலம், இவைகளை கெவர்ண்மெண்டாருடைய ஸ்பஷ்டமான அனுமதியில்லாமல் இந்த ஆர்டரில் கண்ட விதிகளை அனுஸரித்து விற்கக்கூடாது. அப்படி ரிஸர்வ்செய்து (பாதுகாத்து) வைத்திருக்கப்பட்ட நிலங்களைப் பதிந்த ஒரு ரிஜிஸ்டர் கலெக்டராபீஸில்வைத்திருக்கப்படும். விண்ணப்பம் செய்துகொள்ளவேணுமென்று உத்தேசிக்கிறவர்கள் ஜில்லாகெஜெட்டில் கலெக்டரால்பிரசித்தம்செய்து குறிக்கப்பட்டிருக்கிறபடி பலானகாலத்தில் பலான விதிகளுக்குட்பட்டு அந்த ரிஜிஸ்டரைப்பார்க்கலாம்.

19. இந்த ஆர்டரில் கண்ட பிரகாரம் விற்பனை செய்யப்பட்ட நிலங்களுக்கு சர்க்காரால் நிலத்தீர்வை ஒரு பொழுதும் கேழ்க்கப்பட மாட்டாது. ஆனல் சட்டத்தை அனுசரித்தாவது வழக்கத்தை அனுசரித்தாவது அந்

தந்த இடத்தில் கொடுக்க வேண்டிய வரிகளையும் முன்போலவே செலுத்த உட்பட வேண்டியது.

20. இந்த ஆர்டரில் கண்ட விதிகள் பிரகாரம் விற்கப்பட்ட நிலங்களின் குறுக்கேயாவது நிலத்தைச் சுற்றியாவது போகிற ரஸ்தாக்களிலும், சிறு பாதைகளிலும், ஆறுகளிலும், தற்காலத்திலும், வாடிக்கையாயும், கெவர்ன்மெண்டாருக்கும் இதரசொந்தக்காரர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் உள்ள பாத்தியதைகளுக்கு இந்தவிதிகளை யனுஸரித்து அப்பேர்க்கொத்த நிலங்களை விற்பதினால் யாதொருபாதகரமும் உண்டாகாது.

21. இதுவரையிலும்போல கெவர்ன்மெண்டார் தங்கள் யுக்தானுஸாரம் தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களை பட்டா, கவுல், வேறே எவ்விதமாயாவது அடமானம் செய்வதற்கு இந்த விதிகளில் கண்ட எதுவும் பாதகரமானதாக பாவிக்கப்படமாட்டாது.

22. யாதொரு ஜில்லாவின் முழுமையும், அல்லது அதின் ஓர் பாகத்தை மட்டும், இந்தவிதிகளை ஊர்ஜிதத்திற்குக் கொண்டு வராமல், விலக்கி வைக்க கெவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு.

23. தீர்வை ஏற்படாத கரம்பு நிலத்தை விற்பனை செய்வதற்காக ஏற்பட்ட விதிகள் **தஞ்சாவூர்** ஜில்லாவுக்காவது **மதிராஸ்** ஜில்லாவுக்காவது தற்காலம் சம்பந்தப்பட்டவைகளல்ல, ராஜதானியின் மற்ற ஒவ்வொரு ஜில்லாவிலும் நிலங்களை முதலில் இன்னவிலை கூறி விற்பனை செய்யப்படுமென்று அனுபந்தத்தில் கண்டிருக்கிறது. ஆனால் டிமார்க்கேஷன் செய்வதற்காகவும் ஸர்வே செய்வதற்காகவும் பிடித்த செலவை அந்த முதல் விலையுடன் எப்போதும் சேர்க்கப்படும்.

24. கரம்பு நிலங்களில் உலோகங்களிருந்தாலாவது அல்லது இருப்பதாய் உறுதியான நம்பிக்கையிருக்கும் பட்சத்திலாவது அவைகளை இந்த விதிகள் பிரகாரம் விற்கக்கூடாது.

25. கலெக்டர்கள் சட்டப்பிரகாரம் தாங்கள்தான் தீர்வை ஏற்படாத நிலத்தை விற்பதற்கு அதிகாரமுள்ளவர்களென்றும் ஸப்கலெக்டர்களுக்காவது மற்ற கீழ் உத்தியோகஸ்தர்களுக்காவது அதிகாரமில்லையென்றும் கவனம் வைக்கவேண்டியது. ஆகிலும் கலெக்டராலேயே முன்னாடி பிரசித்தம்செய்யப்பட்டும் அனுமதி முதலானது கொடுக்கப்பட்டுமுள்ள ஒரு ஏலத்தை மேலே சொன்ன உத்தியோகஸ்தர்கள் (ஸப்கலெக்டர்கள் முதலானவர்கள்) நடத்தலாம்.

26. கலெக்டர்களால் அனுஸரிக்கப்படும் பொருட்டு அடியிற்கண்ட உத்திரவுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறன்றன.

27. இந்தவிதிகளை ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவராமல், கட்டடவேலைக்காகவும் இன்னும் மற்ற பொது உபயோகத்திற்கு வேண்டிய தென்பதற்காகவும் ரிஸர்வ்செய்து (பாதுகாத்து) வைத்திருக்கப்பட்ட நிலங்களைப்பதிவு செய்து ஒரு ரிஜிஸ்டரைக் கலெக்டர்கள் பத்திரமாய் வைத்திருக்கவேண்டியது; அந்த ரிஜிஸ்டரில் பதிவு செய்திருக்கிறவைகளுக்கு நகல்கள் எடுத்து போர்டாருக்கு அனுப்பவேண்டியது. கரம்பு நிலங்களை விலைக்கு வாங்க வேணுமென்றுஉத்தேசிக்கிறவர்கள் இந்தரிஜிஸ்டர்களைப்பார்க்கவேணுமென்றால் கலெக்டராபீஸிலாவது போர்டாபீஸிலாவது வந்துபார்க்கலாம். பாரஸ்டு இலாகாவுக்காக ரிஸர்வ் செய்வது யுக்தமாயிருக்கிற பாரஸ்டு நிலங்கள் விஷயமாய் கலெக்டர்கள் பாரஸ்டு கன்ஸர்வேட்டர்களுடன் கலந்து ஆலோசனை செய்யவேண்டியது.

28. தீர்வை ஏற்படாத கரம்பு நிலத்துக்காகக் கொடுத்துக்கொள்ளப்படும் விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட உடனே கலெக்டரானவர் அந்த நிலத்தை விற்பனை செய்வதற்கு ஏதாவது ஆட்சேபணை உண்டாவென்றும் அல்லது அந்த நிலம் பொது உபயோகத்திற்கு வேண்டியிருக்கிறதென்கிற காரணத்தினால் ஏதாவது நிபந்தனை செய்யவேண்டுமாவென்றும் விசாரித்துத் தெரிந்து கொள்ளவேண்டியது.

29. அப்பேர்ப்பட்ட ஆக்ஷேபணைகள் ஒன்றும் இல்லையென்று தெரியவந்தால் கலெக்டரானவர் மேலே 8-9-வது பிரகரணங்களில் சொன்ன விதிகளை ஜாக்கிரதையாய் கவனித்து தாமதமன்றியில் நிலத்தை ஸர்வே செய்து எல்லைக்குறிகளை நடும்படி செய்வித்து குறித்தபடி விளம்பரப் பத்திரிகையைப் பிரசித்தம் செய்ய வேண்டியது.

30. எவ்விதகாரணத்தை முன்னிட்டும் தள்ளுபடி செய்யாமல் நிலத்தின் மொத்த வீஸ்தீரணத்தின் பேரில் முதல்விலையைக் கணக்கிட வேண்டியது; ஏலம்போடும்போது, விளம்பரத்தையும் ஏலத்தின் நிபந்தனைகளையும் ஏலம் ஆரம்பிக்குமுன்பாகவே ஏலம்போடுகிறவன் படித்துக்காட்டவேண்டியது; ஏலத்தின் விதிகளுக்கு நகல்கள் தயாரித்து (வேணுமென்றால் பொது ஜனங்கள்) பார்வையிடுவதற்காக அவைகளை வைத்திருக்கவேண்டியது.

31. இந்தவிதிகள் பிரகாரம் செய்தவிற்பனைகளையெல்லாம் குறித்திருக்கிற பாரப்பிரகாரம் இங்கிலீஷில் ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்து கலெக்டராபீஸில் வைத்திருக்கவேண்டியது. இந்த ரிஜிஸ்டரில் கொடுத்திருக்கப்பட்ட நெம்பர்களுக்கு ஒத்திருக்கும்படி அந்த நிலங்களின் அஸல் படங்களையும் பிளான்களையும் ஸர்வே ரிகார்ட்டுகளையும் ஒரு அடுக்காக வைத்

திருக்க வேண்டியது; இவைகளில் கலெக்டர்கள் கையெழுத்து செய்ய வேண்டியது.

32. இரண்டு சாஸனங்கள் எழுதவேண்டியது; பிறகு கிரமமாய் அந்த சாஸனத்தில் எழுதவேண்டியவைகளை எழுதி பூர்த்திசெய்து கையெழுத்து செய்தபிற்பாடு கெவர்ன்மெண்டாரால் முத்திரை போடப்படும்பொருட்டு போர்டார் துவாரா அனுப்பவேண்டியது. அந்த சாஸனங்கள் வாப்ஸ் அனுப்பப்படும்போது, ஏலதாரனுக்கு ஒருநகல் கொடுத்துவிட்டு மற்றதை கலெக்டர் பத்திரமாய் வைத்திருக்கவேண்டியது.

33. சாஸனங்களின் அடியிலிருக்கிற ரசீதுகளில் கலெக்டர்கள் கையெழுத்துசெய்யவேண்டியது.

34. சாஸனங்களில் மார்ஜனில் கண்ட உதரிரவுகளை ஜாக்கிரதை யாய் கவனிக்கவேண்டியது; இந்த உத்திரவுகள் எழுதப்படாமல் இருக்கிற, வெத்து பாரங்கள் சாதாரண உபயோகத்திற்காக அனுப்பப்படும்.

35. துண்டுநிலங்கள் பலானஇடத்தில் இருக்கின்றனவென்பதைப்ப ற்றி நிமித்தியமில்லாமல், ஏலம் போடப்பட்டவரிசைப் பிரகாரம் அவை களுக்குத் தொடர்ச்சிநெம்பர் கொடுக்கவேண்டியது; இந்த நெம்பர்களுக்கு ஒத்ததாய் சாஸனங்களுக்கு நெம்பர்கொடுக்கவேண்டியது.

36. சாஸனங்களுடன் கூட அனுப்பப்படும் பிளான்களில் கலெக் டர்கள் கையெழுத்துசெய்து அவைகளை சாஸனங்களுடன் பத்திரமாய் தைத்து சாஸனங்களின் நெம்பர்களுக்கு ஒத்திருக்கும்படி அதே நெம் பர்களை பிளான்களிலும் கொடுக்கவேண்டியது; பிளான்களை சாஸனங்க ளோடு தைத்துவைத்திருந்தாலும் சாஸனங்களுக்கு மேலேவைத்தனுப்பின லும் அந்தபிளான்களில் எல்லாம் கலெக்டர் தனியாய் கையொப்பம் செய்ய வேண்டியது.

37. இந்த விதிகளுக்கு நகல்களை நகல் ஒன்றுக்கு 4 அணு வீதம் பொது ஜனங்களுக்கு விற்கும்பொருட்டு தாசில்தார் முதலானவர்களுக்கு அனுப்ப வேண்டியது.

38. இந்தவிதிகள் பிரகாரம் ஒவ்வொருஜில்லாவிலும் கரம்புநிலங்களை விற்பனை செய்தவிஷயங்களை போர்டாருக்கு வருஷவாரியில் ரிபோர்ட் செய்யவேண்டியது.

39. ஆறுமாசகாலத்தில் ஏலதுகைக்காகவும் அதின் வட்டிக்காகவும் வசூலாயிருக்கிற துகைகள் இவ்வளவென்று பிரதி ஆருமாதமுடிவில் கலெக் டர்கள் போர்ட்டார் துவாரா கெவர்ண்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்ய வேண்டியது.

40. சிலசமயங்களில் ஏலம்போடப்பட்ட நிலங்களின் படங்கள் அந்த நிலங்களில் ரிஸர்வ் செய்து (பாதுகாத்து வைத்திருக்கப்பட்ட) பாகங்களை வியக்தமாய் எடுத்துக்காண்பிக்கப்படுகிறதில்லை; இவைகளிட விஸ்தீரணமானது விற்பனைசெய்யப்பட்ட நிலத்திலிருந்தாவது அல்லது அவைகளுக்கு விதிக்கப்பட்ட தீர்வையிலிருந்தாவது வியக்தமாய் விலக்கப்படுகிறதில்லை; ஆறுகள், ரஸ்தாக்கள், வழிநடைகள், காடு, இவைகளுக்காவது வேறெந்த உபயோகங்களுக்காவது ரிஸர்வ்செய்யப்பட்ட பாகங்களுக்கு ஸர்வே பிளானில் ஸ்பஷ்டமான வர்ணங்கொடுத்து அவைகளை விபரமாய்க் காண்பிக்கவேண்டியது; ஆகையால் கலெக்டர்கள் இந்தவிஷயங்களில் தேவையான அம்சங்களைப்பற்றி ஸர்வே ஆபீஸருக்கு அறிவிக்க வேண்டியது; வழிநடைக்குப் பாத்தியதை உண்டாஎன்பதைப்பற்றிக்கூட அக்கம்பக்கத்தில் தெரிந்துக்கொள்ளக்கூடுமாகையால் மேல்கண்டவிதமாய் தேவையான சங்கதிகளை அறிவிப்பதற்கு யாதொரு பிரயாசையுமிராது. சாஸனங்களில் ரிஸர்வ் செய்யப்பட்டதாக காண்பிக்கப்படும் பாகங்களானவை, ஏலம்போடும்போது எந்தகாரணத்தை முன்னிட்டாவது விற்கக்கூடாத ரிஸர்வு நிலங்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்ட படியாலும், ஆகிலும் விலைக்கு வாங்குகிறவர்கள் தங்களுக்குள்ள பாத்தியதைகள் இன்னின்னவையென்று சரியாய்த்தெரிந்து கொள்ளவேண்டியதவசியமானபடியாலும், கலெக்டர்கள், மேலேவிவரித்துச் சொன்னவைகளைப் போலொத்த ரிஸர்வ் நிலங்களையெல்லாம் படங்களில் ஸ்பஷ்டமாய் காண்பித்திருக்கிறதாவென்று அவைகளை போர்டாருக்கு அனுப்புமுன்பாக கவனித்துப்பார்க்கவேண்டியது. ரிஸர்வ் செய்யப்பட்ட விஸ்தீரணத்துக்குள்ள தீர்வையை முழுநிலத்திற்குள்ள மொத்தத் தீர்வையிலிருந்து எப்போதும் கழித்துவிட வேண்டியது.

41. பலானமனிதர்களுக்குச் சொந்தமுள்ள வேறு நிலங்களுக்குத் தொடர்ச்சியாகவாவது சமீபத்திலாவது இருப்பதாய் விவரித்திருக்கப்பட்ட நிலங்களை ஏலத்தில் விற்பதாய் உத்தேசித்தால் அதைப்பற்றி கலெக்டரானவர் அந்தமனிதர்களில் ஒவ்வொருவருக்குமாவது அல்லது அப்பேர்ப்பட்ட அடுத்த நிலங்களின் பகிரங்கமான சொந்தக்காரர்களென்று பாவிக்கப்படுகிற மனிதர்களுக்காவது விளம்பரத்தை அனுப்பிவிக்கவேண்டியது. அந்த மனிதர்கள் ஏலத்தில் ஆஜராயிருக்கும் பொருட்டும், தெரியாமைத்தனமாய் தங்களிட சொத்தின் எல்லைக்குள் யாரும் பிரவேசிக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டும் மேல்கண்ட நோடீஸ் அனுப்பப்படுகிறது.

42. ஏலத்தில் நிலத்தை விலைக்கு வாங்குகிற எல்லாமனிதர்களிட பெயர்களை முழுவதிலும் அவர்களிட பட்டய சாஸனத்தில் பதியவேண்டியதும்தவிர அவைகளைத் தயார்செய்வதில் அதிககவனம் செலுத்தவேண்டி

யது. இந்ததஸ்தாவேஜுகளை சரியாய் எழுதுவதற்கு கலெக்டரானவர் தம்மிட ஆபீசில் ஒருவனை ஜவாப்தாரியாகச் செய்யவேண்டியது. பெயர்களையும் ஊர்களையும் சரியாய் எழுத்துக்கூட்டி எழுதுவதில் கவனம் செலுத்தவேண்டியது. நிலத்தின் விஸ்தீரணத்தை (இலக்கத்தாலல்லாமல்) எழுத்தால் எழுதவேண்டியது; சாஸனத்துடன் பிளான் தைக்கப்படுகிற நூலானது கலெக்டரிட முத்திரை சொந்தக்காரன் அல்லது ஏஜண்டுமுத்திரை இவைகளிரண்டுக்கும் நடுவில் கொடுக்கப்பட்டிருக்கிறதா வென்று ஜாக்கிரதையாய்ப் பார்வையிடவேண்டியது. ஒரு துண்டுகாகிதத்தில் கலெக்டரிட முத்திரையைப்போட்டு மற்றொருதுண்டுகாகிதத்தில் சொந்தக்காரன் அல்லது ஏஜண்டின் முத்திரயைப் போட்டு அந்த நூலை இந்த இரண்டு காகிதத்திற்கு நடுவில் வைத்துஇரண்டுகாகிதத்தையும் ஜாக்கிரதையாய் ஒட்டிவிடவேண்டியது. ஒருதரம் கொடுக்கப்பட்டபிறகு சாஸனங்களில் தித்துப்பாடுகள் செய்யக்கூடாது; ஆனால் அவைகளில்ஏதாவது பிழைசெய்யப்பட்டதாக உடனே தெரியவந்தால் சாஸனத்தைப் பெற்றுக்கொள்பவன் அதையனுசரித்து நடவடிக்கைகளை நடத்துவதற்கு முந்தி தித்துப்பாடுகள் செய்யவேண்டியது. இந்தவிதிகளுக்கு விலக்குகள் செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் நேரிட்டால் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றி போர்ட்டாருககுத் தெரிவிக்கவேண்டியதவசியமானால் போர்ட்டார் கெவர்ன்மெண்டுலாஆபீஸர்களுடன் (அதாவது சட்டத்தை யனுசரித்து ஆலோசனை சொல்லும் உத்தியோகஸ்தர்கள்) ஆலோசித்து அவர்களிட அபிப்பிராயப்படி நடத்துவார்கள்.

33. நீலகிரி முதலான மலைப்பிரதேசங்களிலுள்ள தீர்வை ஏற்பட்ட கரம்பு நிலங்களைப் பைசல் செய்வது:—நீலகிரி குன்றுகளிலும் சேர்வராய் குன்றுகளிலும், வைநாடு பிரதேசத்திலுமுள்ள தீர்வை ஏற்பட்ட கரம்பு நிலங்களை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தியிருக்கும் விதிகளானவை தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களைவிற்பதற்காக மேலே சொன்ன விதிகளுக்கு அநேகமாய் ஒத்திருக்கின்றன, ஆனால் இந்த குன்றுகளிலும் வைநாடு பிரதேசத்திலுமுள்ள தீர்வைக்குட்பட்ட நிலங்கள் பிரதான (இந்தியா) கெவர்ன்மெண்டாரிட உத்திரவுகளுக்குச் சம்பந்தப்பட்டவைகளல்ல; ஆனதுபற்றி மேற்சொன்ன 2 விதிகளுக்கும் சொல்ப பேதங்களுண்டு, நீலகிரி, மலையாளம், சேலம் இந்த ஜில்லாக்களின் விஷயமாய் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளும் பாரங்களும் அந்த ஜில்லாக்களின் கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன; அவைகளை அனுபந்தத்தில் கண்டிருக்கிறது.

2. நீலகிரியில் 14–வது விதியிற் கண்டபடி ஏகரா I–க்கு ஏற்படுத்தப்பட்ட ரூபா2–தீர்வையை, மரங்கள் நடுவதற்காக எடுத்துக்கொள்

ளப்பட்ட பாரஸ்டு நிலத்திற்கு 6ம் வருஷம் வரையில் விதிக்கக்கூடாது. மரம் நடுகிறவன் தன்னுடைய நிலத்தை ஐந்து வருஷமுழுவதிலும் தீர்வையில்லாமல் அனுபவித்துவரலாம். வைநாட்டு பிரதேசத்தில் (மரம் நடுவதற்காக) பாரஸ்ட்டு நிலத்தை எடுத்துக்கொண்டால் அதை 3 வருஷம்வரையில் தீர்வையில்லாமல் அனுபவித்துவரலாம். காப்பிச்செடி, தேயிலைச்செடி, ஸின்கோனசெடிகள் நடப்பட்ட புல்நிலங்களுக்கு நீலகிரி மேட்டுப்பூமியில் 5 வருஷகாலம் வரையிலும், வைநாடு பிரதேஸத்தில் 3 வருஷகாலம் வரையிலும், தீர்வைவிதிக்கப்படமாட்டாது.

3. ஏலவிளம்பரத்தில் மற்ற விசேஷங்களுடன்கூட வருஷாந்திர தீர்வையையும் காண்பிக்கவேண்டியது.

4. இந்த விஷயத்தில் வருஷாந்திர தீர்வை பாக்கி ஏற்படும் பட்சத்தில் அந்த பாக்கியை, ரயத்துவாரி நிலங்களின் தீர்வை பாக்கியை எப்படி வசூல் செய்யவேண்டுமோ அதேமாதிரி வசூல் செய்யவேண்டியது.

5. கரம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தி இருக்கும் விதிகளினால் காப்பிச்செடிகள் முதலானவைகளை பயிரிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளெல்லாம் ரத்துசெய்யப்பட்டதாக பாவிக்கப்படும்; ஆனால் அந்த விதிகள் சில்லரைசாகுபடிக்காக பெரும்பான்மையாய் சுதேச ஜனங்கள் விண்ணப்பம் செய்து கொள்ளுகிற சொற்ப விஸ்தீரணமுள்ள நிலங்களுக்குச் சம்பந்தப்படா. எந்த சந்தர்ப்பங்களில் நிலங்களைப் பட்டா கொடுத்து அடமானம் செய்யவேண்டுமென்பதும் எந்த சந்தர்ப்பங்களில் கரம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளை யனுசரித்து பைசல் செய்ய வேண்டுமென்பதும் அந்தந்த இடத்திலுள்ள ரெவினியூ அதிகாரிகளின் யுக்தானுசாரத்தைப் பொறுத்தது.

6. நீலகிரி ஜில்லாவில் தற்காலம் அனுபவித்துவரும் நிலங்களுக்குச் சமீபத்திலுள்ள சிறு நிலத்துண்டுகளை இன்னவிதமாய் பைசல்செய்யவேண்டுமென்பதற்கு விதிகள் அனுபந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

34. தீர்வை ஏற்பட்ட நிலத்தை தீர்வை விதிக்காமலே பைசல் செய்வது.—பட்டணங்களுக்கு அடுத்தாப்போலிருக்கிற தீர்வை யேற்பட்ட நிலங்களை கட்டட வேலைக்காக வேண்டியதாய்ச் சொல்லும் விஷயத்தில், அந்த நிலங்களை தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களை விற்பனை செய்வதற்காக என்ன விதிகள்ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்த விதிகளை யனுசரித்து பைசல் செய்யவேண்டியது. அப்படி கட்டட வேலைக்காகத் தேவை யென்கிற நிலத்தின் விஸ்தீரணம் 4 ஏகராவுக்கு மேற்பட்டதாயிருக்கக் கூடாது. மேலும் அந்த நிலத்தின் 25 வருஷத்திய தீர்வையும்

ஸர்வேடிமார்க்கேஷன் செய்வதற்காகப் பிடித்த செல்வும் சேர்ந்த தொகை தான் அந்தநிலத்தைவிற்பனைசெய்வதற்குகூறும்முதல்விலை; அப்பேர்ப்பட்ட நிலங்களை ரெவினியூ அதிகாரிகள் தங்கள் இஷ்டப்பிரகாரம் வழக்கப்படி பைசல் செய்யக்கூடுமாகையால் தீர்வை ஏற்படாத கரம்பு நிலம் விஷயமாய் ஏற்படுத்தி யிருக்கும் விதிகள் சட்டங்கள் இவைகளின் பிரகாரமே தவறாமல் நடத்தவேண்டியதென்பது அவசியமல்ல.

2. தீர்வை ஏற்பட்ட நிலம் கரம்பாயிருந்தாலும் வேறே எவ்விதமாயி ருந்தாலும் தீர்வை செலுத்துவதின்பேரில் அனுபோகத்துக்குத்தவிர வேறே எந்தகாரியத்துக்காவது அதை அடமானம் செய்வதாயிருந்தால் அது விஷய த்தில் கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது; ஆகிலும் கிராம நத்தத்துக்காவது அல்லது ஜனங்களிட வேறே பொது உப யோகங்களுக்காவது தீர்வை யேற்பட்ட நிலமானது தேவையாயிருந்தால் அதை கலெக்டரானவர் தீர்வை ஏற்படாத நிலமாக மாற்றி பிறகு 32. நெ. ஸ்டாண்டிங்கு ஆர்டர் 1வது பிரகரணத்தில் உத்திரவு கொடுத்தபடி அந்த நிலத்தைப் பைஸல் செய்யலாம்; ஆகிலும் பசலிவாரியில் அப்படிச்செய்த மாற்றுதல்களை எல்லாம் பிரதிவருஷத்திலும் செப்டம்பர் மீ 15உக்குள் குறித்த பாரத்தில் போர்டாருக்கு வருஷவாரியில் ஒரு ஸ்டேட்மெண்டு தயா ரித்து அனுப்பவேண்டியது.

35. கெவர்ன்மெண்டாரிட கட்டடங்களை அவைகள் கட்டியிருக் கப்பட்ட இடம் முதலியனவற்றேடு விற்றுவிடுதல்:—சர்க்கார் கட்டடங் களை அவைகளைக் கட்டியிருக்கப்பட்ட இடத்துடனே விற்பனை செய்வ தற்கும், முற்காலத்தில் கர்னூல் பட்டணத்தில் பழையகோட்டை கொத் தளங்கள் அடங்கிய நிலங்களைப் போலொத்த நிலங்கள் விஷயமாயும், தீர் வை யேற்பட்டும் ஏற்படாமலுமுள்ள கரம்பு நிலத்தை விற்பனை செய் வதற்கு ஏற்படுத்தி யிருக்கப்பட்ட விதிகளை யனுசரியாமல் கெவர்ன்மெண் டார் அல்லது போர்டார் இவர்களிட அனுமதியின் பேரில் கட்டடவேலைக ளுக்காக ஏலத்திலாவது, நிலத்தை சுவாதீனம் செய்துகொள்வதற்கு ஏற்ப டுத்திய விதிகள் பிரகாரமாவது, நிலங்களை விற்பதற்கும் கலெக்டர்களால் கொடுக்கப்படும் பட்டாசாஸனங்கள் ஒரேமாதியாயிருக்கும் பொருட்டு இந்த விஷயங்களில் ஸாஸனம் இன்னபாரப்படி எழுதவேண்டியதென்று அனுபந் தத்தில்கண்டிருக்கிறது. அம்மாதிரியான நிலங்களையாவது சர்க்கார்கட்டடங் களையாவது, அவைகளைக் கட்டியிருக்கப்பட்ட இடத்துடனேயாவது, விற் பனை செய்ய கலெக்டர்கள் தங்கள் ஆலோசனையைப் பற்றி தெரிவிப்ப தில் அப்பேர்ப்பட்ட சாஸனத்தைக்கொடுப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபணை யிருந்தால் அந்த ஆக்ஷேபணையைப்பற்றி தெரிவிக்கவேண்டியது.

36. நிலத்தீர்வையை செலுத்தி நிலத்தை மீட்டுக்கொண்டு அதை நிராக்ஷேபமாய் சுவாதீனம் செய்துகொள்ளுதல். குடியிருக்கும் வீட்டுக்காகவாவது அல்லது வியாபார சாமான்கள் வைத்திருக்கும் இடங்களுக்காவது எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்களும் கிரமமாய் தோட்டங்கள் தோப்புகளென்று சொல்லப்பட்டவைகளுக்காக வுத்தேசித்து எடுத்துக் கொள்ளப்பட்டாவது யிருக்கிற நிலங்களின் (தீர்வையாவது அல்லது குயிட்ரெண்டாவது அல்லது சர்க்காரால் விதிக்கப்பட்ட வேறே வரியாவது மேலே சொல்லப்பட்ட நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்க வேண்டியது.) சொந்தக்காரர்களும் அப்பேர்ப்பட்ட தீர்வை வகையராக்களைக் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ள இஷ்டப்பட்டால் அந்தநிலங்கள் எந்த ஜில்லாவைச் சேர்ந்ததோ அந்த ஜில்லா கலெக்டருக்கு கடித மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியது. இந்த விதியானது ஜமீன் இலாகாக்களிலுள்ள மேலே விபரித்த விதமான நிலங்களுக்கும் கெவர்ண்மெண்டு தாலுக்காக்களிலிருக்கிற அம்மாதிரி நிலங்களுக்கும் சம்பந்தப்பட்டது; ஆனல், பாகாயத்து (நந்தவனம் அல்லது பூஞ்சோலை) என்றும், தோட்டக்காலென்றும் சொல்லப்பட்ட தோட்டங்களுக்குச் சம்பந்தப்பட வேண்டுமென்பது அவசியமல்ல. மேல்வாக்கியத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டநிலங்களுக்காக (அதாவது பாகாயத்து தோட்டக்கால் இவைகளுக்குத் தேவையான நிலங்களுக்காக) செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களை கலெக்டர்கள்எல்லா விஷயங்களையும் எடுத்துச்சொல்லி போர்டாரிட தீர்மானத்திற்காக அனுப்பவேண்டியது.

2. 1802வருடத்திய சட்டங்களின் பிரகாரம் அனுபவித்து வருகிற ஜமீன் இலாகாக்களில் (சர்க்காரால்) ரிஜிஸ்டரில் பதிவுசெய்யப்பட்ட ஜமீன்தாருக்குமாத்திரமே இந்தவிதிகள் பிரகாரம் நிலத்தீர்வையைசெலுத்தி நிலத்தை மீட்டுக் கொள்ளும்படியான பாத்தியதையுண்டு. அந்த ஜமீன்தாரர்கள் அப்படி நிலத்தை மீட்டுக் கொண்டால் அதற்குத்தக்கபடி அவர்கள் செலுத்த வேண்டிய வருஷாந்தர பைஷ்கஷ் குறைக்கப்படும். ரயத்வாரி நிலங்கள் விஷயத்தில் சர்க்காருக்கு நேராய் ஜவாப்தாரியாகிய ரிஜிஸ்டரான சொந்தக்காரன் மாத்திரமே நிலத்தீர்வைகொடுத்து சுவாதீனமாய் மீட்டுக்கொள்ளக் கூடும். மற்ற விஷயங்களில், பொதுவாய்ச் சொல்லுமிடத்து தீர்வையைச்செலுத்த பாத்தியதை யுள்ளவனையே நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு பாத்தியமுள்ளவனாக பாவிக்கவேண்டும்; ஆனல் சந்தேகமுள்ள விஷயங்களைப்பற்றி போர்டாரிட தீர்மானத்திற்காக ரிபோர்டு செய்யவேண்டியது.

3. இனும் நிலங்களும் நீலகிரி மலையிலும் சேர்வராய் மலையிலும் மலையாளம் ஜில்லா வைனுடு தாலுக்காவிலுமுள்ள கரம்புநிலங்களை விற்பதற்காக ஏற்படுத்தியிருக்கிற விதிகளை அனுசரித்து வாங்கிய நிலங்களும் அவைகளை அனுபோகிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட சாஸனங்கள் பிரகாரம் பைசல் செய்யப்படுமேயல்லாமல் இந்த விதிகளினுல் பாதிக்கப்படமாட்டா. கிராமநத்தத்திற்காக வேண்டிய நிலத்தையும் இந்த விதிகளுக்கு உட்படுத்தாமல் விலக்கி யிருக்கிறது.

4. முன்னமேசொல்லப்பட்டிருக்கிற விதிகள் பிரகாரம், தீர்வை ஏற்படாத கரம்புநிலங்களை சிலவருஷகாலஅனுபவத்திற்கென்று அடமானம் செய்திருந்து அந்த நிலங்கள் எவர்களுக்கு அடமானம் செய்யப்பட்டதோ அவர்களுக்காவது அவர்களிடவார்ஸ்தார்களுக்காவது தவிரவேறேயாருக்கும் அந்தநிலங்களில் அனுபவ உரிமையாவது ஸ்வதந்தரமாவது இல்லாமலிருந்தால்அடமானக்காரர்களுக்காவது அவர்களிடவார்ஸ்தாரர்களுக்காவது இஷ்டமிருக்கும்பட்சத்தில் அந்தநிலங்களை இந்தவிதிகளுக்குட்படுத்திக்கொண்டு அவர்களிட இஷ்டப்பிரகாரம் அந்த நிலங்களுக்காவது அவைகளில் அடுத்தடுத்திருக்கிற பாகங்களுக்காவது இனி செலுத்தவேண்டிய நிலத்தீர்வையை செலுத்திமீட்டுக்கொள்ளலாம்.

5. பலபேர் வழிகளுக்கு பாகங்களுள்ள நிலம், அல்லது கவுல் அடமானம் செய்யப்பட்ட நிலம், அல்லது குத்தகைக்காக விடப்பட்டநிலம், இந்த நிலங்களின் தீர்வையையும் பிரத்தியேகமான காணி யாக்ஷியின்பேரில் அனுபோகித்துவரும் நிலங்களின் தீர்வையையும் செலுத்தி நிலங்களை மீட்டுக்கொள்ளும் விஷயங்களைப்பற்றி போர்டாரிட அனுமதியில்லாமல் உத்திரவு கொடுக்கக்கூடாது.

6. மீட்டுக்கொள்வதற்காக கொடுக்கும் துகை எவ்வளவென்றுல், நிலத்தினுடைய வருஷாந்திர முழுத்தீர்வைக்கு 25—பங்கும், ஸர்வே செய்வதற்காகவும் ஸ்திரமான எல்லைக் கல்லுகளை நடுவதற்காகவும் பிடித்த செலவு துகையும்சேர்ந்த மொத்தத்துகை; ஆனுல் முன்னுடியாகவே அனுபோகத்திலிருக்கிற நிலத்தில் சர்க்காருக்குள்ள பாத்தியதையைக் காண்பிக்கிற ஒரு தஸ்தாவேஜில் குறைந்த துகைகொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ளலாமென்று வியக்தமாய்க் கண்டிருந்தால் அப்பேர்க்கொத்த விஷயங்களில் மாத்திரம் குறைந்ததுகையைக் கொடுத்து மீட்டுக்கொள்ளலாம். இனும் நிலத்திற்குள்ள குயிட்ரெண்டு நீங்கலாக நிலத்தின்பேரில் விதிக்கப்பட்ட எல்லாவித வரிகளையும் மேற்கண்ட தாமாஷாப் பிரகாரம் மாற்றவேண்டியது. ஆனுல் கெவர்ண்மெண்டாரிட உத்திரவுபிரகாரம் கொடுக்கப்பட்ட சாஸனங்களில் குறைந்த தாமாஷாவுக்கு மாற்றிக்கொள்ளலாமென்று கண்டிருந்தால் அப்படி குறைந்ததுகைக்கு மாற்றிக்கொள்ளலாம்.

7. மீட்பதற்காகக்கொடுக்கும் துகையை எந்தத்தீர்வையையனுஸரித்து கணக்கிடவேண்டியதென்ருல், 1802௵த்திய 25வது ஆக்ட்பிரகாரம் ஸெட்டில்மெண்டான நிலங்களாயிருக்கும் பட்சத்தில், அந்த நிலங்களுக்கு எப்போதும் ஸ்திரமாய் ஏற்படுத்தி யிருக்கப்பட்ட தீர்வையின் பேரிலும், மற்றவித நிலங்களாயிருக்கும் பட்சத்தில் ஸர்வே தீர்வையின் பேரிலாவது அல்லது சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற வேறே தீர்வையின்பேரிலாவது, கணக்கிடவேண்டியது. பலான தீர்வை செலுத்தி பரம்பரையாயனுபவித்து வருகிற நிலங்கள் விஷயத்தில் அப்பேர்க்கொத்த தீர்வையின் பேரில் தான் கணக்கிடவேண்டியது. ஷை தீர்வையில் ஸெஸ் வகையருக்கள் சேர்ந்திருந்தால் அவைகளைக்கழித்து மீதியின்பேரில் கணக்கிடவேண்டியது. மீட்டுக்கொண்டபிறகும் செஸ்வகயருக்கள் செலுத்தப்படவேண்டியதாகும்.

8. இந்த விதிகள் பிரகாரம் நிலத்தீர்வை கொடுத்து நிலத்தை மீட்டுக் கொள்வதினுல், நிலத்தின் சொந்தக்காரனிடம் உடன்படிக்கை செய்து கொண்டு அனுபவித்து வரும் கீழ்குத்தகை அல்லது அனுபோகவுரிமை அல்லது வேறெந்த பாத்தியதையாவது பாதிக்கப்படமாட்டாது.

9. இந்த விதிகள் பிரகாரம் நிலத்தீர்வை செலுத்தி மீட்டுக் கொள்ளப்பட்ட நிலங்கள் அப்படி மீட்கப்படாத மற்றநிலங்களைப் போலவே முனிஸிபல் வரிக்கும் அந்தந்த யிடத்தில் விதிக்கப்பட்டிருக்கும் இதர வரிக்கும் இன்னுமற்ற பொது வரிகளுக்கும் வழக்கம் போலுட்பட்டவைகள்.

10. நிலத்திற்குள்ள தீர்வையைச் செலுத்தி நிலத்தை ஸ்வாதீனமாக்கிக் கொள்வதினுல் அந்த நிலத்தில் கெவர்ண்மெண்டாருக்கு மாத்திரம் யாதொரு சுதந்திரமுமில்லையென்று தெரிந்து கொள்ளவேண்டியது. நிலத்தை மீட்டுக் கொள்வதற்காக விண்ணப்பம் செய்து கொள்ளுகிறவனுக்கு அந்த நிலத்தில் சுதந்தர பாத்தியம் இருப்பதாக பிரத்தியட்சமாய்த்தெரியும் பட்சத்தில் அவனுக்கு அந்த நிலமானது மேற்கண்ட விதமான சுவாதீனம் செய்யப்படும். வேறே யாராவது விண்ணப்பதாரனுடைய பாத்தியதையை தகரார் செய்து நிலம் தங்களுடையதென்று சொன்னுல் அவர்கள் பட்டாதாரனுக்கு நிலத்தை சுதந்தரம் செய்வதற்கு முன்பாக எப்படியாகப் பட்டாதாரன் பேரில் ஸிவில்கோர்ட்டில் தாவாசெய்யலாமோ அதேமாதிரி இப்போதும் தாவாசெய்து கொள்ளலாம்.

11. இந்த விதிகள் பிரகாரம் தீர்வையை மொத்தமாய் செலுத்தி நிலத்தை மீட்டுக் கொள்வதற்காக செய்து கொள்ளும் விண்ணப்பங்களில் அந்த நிலங்களிருக்கப்பட்ட இடத்தையும் தெரிந்தவரையில் அதினுடைய விஸ்தீரணத்தையும் அதினுடைய தீர்வை இவ்வளவென்றும் விண்ணப்பதா

ரன்தான் அவைகளுக்கு சொந்தக்காரனென்று சொல்வதற்கு உள்ளபாத்தியதைகளையும் கண்டெழுதவேண்டியது.

12. ஒரு விண்ணப்பத்தை அங்கீகரித்துக் கொண்டதின்பேரில் நிலத்தின் எல்லைகளை வியக்தமாய் விபரித்துக்காட்டும்படி ஸ்திரமான எல்லைக் கல்லுகளை நடவேண்டியது. பிறகு கூடியசீக்கிரத்தில் அந்த நிலத்தை சர்வே செய்து அதற்கொரு பிளான் தயார் செய்யவேண்டியது. எல்லைக்கல்லுகளை நடவேண்டியதற்காகவும் அவைகளை பாது காப்பதற்காகவும் நிலத்தைசர்வே செய்வதற்காகவும் அதன் பிளான் எடுப்பதற்காகவும் பிடித்த செலவுகளெல்லாம் விண்ணப்பதாரனைச் சேர்ந்தது.

13. சம்பந்தப்பட்ட நிலத்தை அளவு சாஸ்திரங்கள் பிரகாரம் முன்னுடியாகவே சர்வேசெய்து அதின் விவரணங்களெல்லாம் தஸ்தாவேஜுகளில் பதியப்பட்டிருக்கும் பட்சத்தில் அதை மறுபடியும் சர்வே செய்யவேண்டிய அவசியமில்லை, அப்பேர்கொத்த விஷயங்களில் விண்ணப்பதாரனானவன் அந்தநிலத்திற்கு ஸ்திரமான எல்லைக்குறிகளை நடுவதற்காகவும் அதின் பிளான் செய்வதற்காகவும் பிடித்த செலவுகளுக்குமாத்திரம் ஜவாப்புதாரியாவான்.

14. விண்ணப்பதாரனுடைய கோரிக்கையின்படி தீர்வை செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு கலெக்டர் உத்திரவு கொடுக்கமாட்டேனென்று சொல்லும் விஷயங்களிலெல்லாம் விண்ணப்பதாரன் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள யாதொரு ஆட்சேபணையுமில்லை.

15. மொத்தத்தீர்வை செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்ள உத்திரவு பெற்றவன் மீட்டுக்கொள்வதற்காகத் தேவையான தொகை முழுமையும் சர்வே டிமார்க்கேஷன் செய்வதற்காக பிடித்த செலவுகளையும் செலுத்துவதின்பேரில் கலெக்டரானவர் இந்த ஆர்டரின் அனுபந்தத்திற்கண்ட பாரப்பிரகாரம் ஒரு சாஸனம் தயாரித்து அவனுக்குக் கொடுக்கவேண்டியது. நிலத்தை மீட்பதற்காகச் செலுத்தவேண்டியதுகை பூருவும் சர்வேசெய்வதற்காகவும் டிமார்க்கேஷன் செய்வதற்காகவும் பிடித்த செலவும், அல்லது டிமார்க்கேஷன்மாத்திரம் செய்யவேண்டிய விஷயங்களில் டிமார்க்கேஷனுக்குமட்டில் பிடித்தசெலவும், எந்ததேதியில்செலுத்தப்படுகின்றதோ அந்த தேதிவரையில் நட முதல்தீர்வையும்செலுத்தப்படவேண்டியதென்று தெரிந்துகொள்ளவேண்டியது.

16. இந்தவிதிகள்பிரகாரம் மொத்தத்தீர்வைசெலுத்தி மீட்டுக்கொள்ளக்கூடிய நிலங்களின் சொந்தக்காரர்கள் தீர்வை செலுத்தி மீட்டுக்கொள்ள சக்தியற்றவர்களாகவாவது சம்மதமில்லாதவர்களாகவாவது இருந்தால் சர்வே செய்வதற்காகவும் ஸ்திரமான எல்லைக்குறிகளை நடுவதற்காகவும் பிடித்த

செலவை செலுத்தி (தங்களுக்கு பட்டயசாஸனங்கள் வேண்டுமென்று) விண்ணப்பம் கொடுத்துகொள்வதின்பேரில் இதுவரையில் கொடுக்கப்பட்ட வருஷாந்திர பட்டாக்களுக்குப் பதிலாக அனுபந்தத்தில் கண்ட பாரப்பிரகாரம் ஸ்திரமான ஒரு பட்டய சாஸனம்தயார்செய்து அதில் கெவர்ண்மெண்டாரிட முத்திரைசெய்வித்து அவர்களுக்குக்கொடுக்கப்படும். இப்பேர்ப்பட்ட சாசனங்களின்பிரகாரம் அனுபவித்து வருகிற நிலத்தைமேலே சொல்லியபடி வருஷாந்திர பூரு தீர்வையின் 25 பங்குதுகையை செலுத்தி விடுவதின்பேரில் தங்களிஷ்டப்படி சுதந்தரமான சொத்தாக மாற்றிக்கொள்ளலாம்.

17. அடியிற் கண்டிருக்கிற உபவிதிகள் பின்னும் விபரமாய் நடவடிக்கைகள் நடத்தவேண்டிய விஷயத்தில் கலெக்டர்களுக்கு உபயோகமுள்ளவைகள்.

18. எவனுவது தன்னிட அனுபோகத்திலிருக்கப்பட்ட நிலத்தை மொத்ததீர்வைசெலுத்தி மீட்டுக்கொள்ளவாவது அல்லது எப்போது இஷ்டமோ அப்போது மீட்டுக்கொள்ளும்படி ஸ்திரமான பட்டாவேணுமென்ருவது விண்ணப்பம் செய்துகொண்டால், அந்த விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொள்வதின்பேரில் கலெக்டரானவர் விண்ணப்பத்தில் கண்ட கோரிக்கைப்படி நடத்தபிரத்தியட்சமாய் யாதொரு ஆக்ஷேபணையுமில்லாததாக தமக்குத்தோன்றும் பட்சத்தில் அந்த விண்ணப்பத்தை அங்கீகாரம் செய்வதற்குமுன்பாக அந்த நிலத்தை ஸர்வேசெய்வதற்காகவும் டிமார்க்கேஷன் செய்து ஸ்திரமான எல்லைக்கல்லுகளை நடுவதற்காகவும் பிடிக்கக்கூடிய உத்தேச செலவுக்காக டேவணி கட்டவேண்டுமென்று விண்ணப்பதாரனுக்கு உத்திரவு செய்யவேண்டியது. ஆனல் அளவு சாஸ்திரப்பிரகாரம் முன்னடியாகவே நிலத்தை ஸர்வே செய்திருந்தால் அந்த விஷயத்தில் அந்த நிலத்திற்கு ஸ்திரமான எல்லைக்குறிகள் நடுவதற்கும் அதின் பிளான் தயார்செய்வதற்கும் பிடிக்கக்கூடிய செலவின் உத்தேச துகையை செலுத்தவேண்டியதென்று உத்திரவு செய்யவேண்டியது.

19. மேற்கண்ட விதியை அனுசரித்து உத்திரவுசெய்தபடி செலுத்த வேண்டிய துகையை உத்திரவுசெய்த தேதிமுதல் 6 வாரத்துக்குள் விண்ணப்பதாரன் செலுத்தத் தவறிப்போகும்பட்சத்தில் அவனிட விண்ணப்பம் ரத்துசெய்யப்பட்டதாக பாவித்து அதின்பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தப்படமாட்டாது.

20. விண்ணப்பதாரன் செலுத்திய டேவணிதுகையில் எந்தகாரியத்திற்காக டேவணிசெலுத்தப்பட்டதோ அந்தகாரியத்தில் எவ்வளவு துகை செலவாகவில்லையோ அவ்வளவுதுகையை டேவணிகட்டினவனுக்குத் திருப்

பிக் கொடுத்துவிடவேண்டியது ; அதேமாதிரியாகவே விண்ணப்பதாரன் தான் செலுத்திய டேவணிபோதாமல் குறைவுபடும்பட்சத்தில் குறைவுபடும் துகையை செலுத்தவேண்டியது.

21. மொத்தமாய் நிலத்தீர்வை செலுத்தி நிலத்தை சுவதந்திரப் படுத்திக் கொள்வதற்காகவும், ஸ்திரமான பட்டாகொடுப்பதற்காகவும் ஏற்படுத்தியிருக்கப்பட்ட விதிகளையனுஸரித்து பைஸல்செய்திருக்கப்பட்ட விஷயங்களையெல்லாம் குறித்த பாரப்பிரகாரம் ரிஜிஸ்டர்களில் கலெக்டர்கள் பதிவுசெய்வித்து அந்த ரிஜிஸ்டர்களை பத்திரமாய் வைத்திருக்க வேண்டியது; தவிரவும் நிலங்களின் அசல் படங்கள் அல்லது பிளான்களையும் ஸர்வே ரிகார்ட்டுகளையும் ரிஜிஸ்டரில் கொடுத்திருக்கிற நெம்பர் பிரகாரம் வரிசைப்படி பத்திரமாய் வைக்கவேண்டியது.

22. இரண்டு ஸ்வாதீனசாஸனம் தயார்செய்ய வேண்டியது, சரியாய் அவைகளை எழுதி பூர்த்தி செய்து, ஒத்திட்டு கையெழுத்து செய்த பிற்பாடு அவைகளில் கெவர்ண்மெண்டாரிட ஸீக்ரடெரி (காரியதரிசி) கையெழுத்து செய்வதற்காக அவைகளை போர்டார் துவாரா அனுப்பவேண்டியது. அவைகள் திரும்பி அனுப்பப்பட்ட பிற்பாடு, விண்ணப்பதாரனுக்கு ஒரு காப்பிகொடுக்கப்படும்; இன்னொரு காப்பி கலெக்டரிடம் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளப்படும். நிலங்களின் எல்லைகளை சாஸனங்களில் வியக்தமாய் எழுதவேண்டியது.

23. விபரங்கள் பதியப்பட்ட ரிஜிஸ்டர்களுக்கு ஒத்திருக்கும் படியாய், சாஸனங்களுக்கும் பட்டாக்களுக்கும் வரிசையாய் தொடர்ந்தநெம்பர் கொடுக்கவேண்டியது.

24. தஸ்தாவேஜுகளுடன் அனுப்பப்படும் பிளான்களில் கலெக்டர்கள் கையெழுத்து செய்து, அவைகளை சாஸனங்களுடனுவது அல்லது பட்டாக்களுடனுவது பத்திரமாய் தைத்து, சாஸனங்கள் அல்லது பட்டாக்களுக்கு ஒத்திருக்கும்படியாய் அவைகளுக்கு நெம்பர் கொடுக்கவேண்டியது.

25. பிரதி ஆறுமாதத்திற்கொருதரம் கலெக்டர்கள், மொத்த தீர்வை செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்வதற்காக எவ்வளவு துகை அடுத்து முந்தின ஆறுமாதகாலத்தில் வசூலாச்சுதோ அந்த துகையைப்பற்றி ஒரு ரிபோர்டு தயார்செய்து அதை போர்டார் துவாரா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டியது.

26. நிலத்தின் தீர்வையை செலுத்தி நிலத்தை மீட்பதற்காகத் தேவையான பணத்தை கலெக்டரிடம் செலுத்துகிற தேதிவரையிலும் அந்த

நிலத்திற்குள்ள தீர்வையோ குயிட்ரெண்டோ வசூல்செய்யப்படும். வருஷம் நடுவில் மொத்தத் தீர்வை செலுத்தி நிலத்தை மீட்டுக்கொள்வதாயிருந்தால் அப்படி மீட்டுக்கொள்வதற்கு முந்தி சாதாரண அனுபோகத்தில் இருந்த காலத்துக்கு வருஷாந்திரத்திற்கு அந்த நிலத்திற்கு என்ன தீர்வையோ அல்லது குயிட்ரெண்டோ அந்த தாமாஷாப் பிரகாரம் ஏற்பட்ட தீர்வை அல்லது குயிட்ரெண்டை விதிக்கவேண்டியது.

27. போர்டாரால் வீதம் ஏற்படுத்தப்பட்ட விலைப் பிரகாரம் பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு இந்த விதிகளுக்கு நகல்கள் எடுத்து அவைகளை தாசீல்தாருக்கு அனுப்பவேண்டியது.

37. வீடு கட்டுவதற்காக வேண்டிய இடங்களும் கிராமநத்தங்களும்.—ஜமீன் கிராமங்களிலும், சொந்த சொத்தாக ஸ்வாதீனமாக்கிக் கொள்ளப்பட்ட கிராமங்களிலும் தவிர, கிராம நத்தத்திற்காக விடப்பட்டிருக்கிற இடங்களை உத்திரவில்லாமல் சொந்தத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாதென்று தடுக்கவும் அப்படி அவைகளை உபயோகப்படுத்திக்கொண்டால் அவைகளுக்கு தீர்வையை விதிக்கவாவது அல்லது உபயோகித்துக் கொண்டவர்களை பிராஸிகியூஷன் செய்யவாவது கெவர்ண்மெண்டாருக்குள்ள சுதந்தரத்தை கலெக்டர்கள் ஜனங்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கவேண்டியது.

2. கிராம நத்தத்தில் யாருக்கும் சொந்தமில்லாமலிருக்கிற சிலபாகங்கள் பொது ஜன உபயோகத்திற்குத் தேவையில்லாமலிருக்கிற நிலங்களாயிருக்கும் பட்சத்தில் அவைகளை, அந்தந்த ஜில்லாக்களுக்குத்தேவையானபடி கலெக்டர்களால் ஏற்படுத்தப்படும் திட்டப்பிரகாரம் அடியில் 6வது பிரகரணத்தில் கண்ட சாஸனத்தில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த நிலங்களை கட்டடவேலைகளுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளுகிறவர்களுக்கு அடமானம் செய்யப்படும். கலெக்டர்கள் தங்களிஷ்ட யுக்தானுஸாரம் ஷை திட்டத்தை எற்படுத்தவும் மாற்றவும் கூடும் ஆனால் அப்போர்ப்பட்ட திட்டம் முன்னடியே ஏற்பட்டிராமற்போனால் அடியில்கண்ட திட்டத்தை அனுஸரிக்கவேண்டியது :—

50 ரூ. அல்லது அதற்குமேற்பட்ட பட்டாதார்களுக்கு,	10	ஸெண்டுகள்.
மற்றப்பட்டாதார்களுக்கு … … … …	5	ஷை
பட்டாதார் அல்லாத மற்றவர்களுக்கு … …	4	ஷை

3. யாருக்கும் சொந்தமில்லாமலிருக்கப்பட்ட பொது உபயோகத்துக்காக கிராமநத்தம் இல்லாமற்போனால் தீர்வையில்லாமல் நிலங்கள் அந்த உபயோகத்திற்காக விடப்படும்; ஆனால் கிராமத்தில் குடியிருக்கிறவர்களுக்கும்

அல்லது கிராமத்தில் குடிவரப்போகிற கிராம நவுக்கர்களுக்கும், பட்டாதாரர்களுக்கும், பயிரிடும் தொழிலாளிகளுக்கு மாத்திரமே மேற்கண்டபடி நிலம் விடப்படும். இப்படி நிலங்களை அடமானம்செய்வது ஒரு ஒழுங்கு பிரகாரம் அளவுள்ளதா யிருக்கவேண்டியது; தவிரவும் மேற் பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஷரத்துக்கும் உட்பட்டிருக்கவேண்டியது. புது கிராம நத்தத்திற்காகவாவது அல்லது இருக்கிற கிராம நத்தத்தை விருத்தி செய்வதற்காகவாவது நிலம் தேவையாயிருக்கும்பட்சத்தில் அந்த நிலத்திற்குள்ள தீர்வையை கைவிட்டுவிட அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டியதற்காக குறித்தபாரத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

4. வீட்டுக்குப் பின்புறத்திலிருக்கும் தோட்டங்கள் என்று சொல்லக்கூடாத கிராமநத்தங்களில் சாகுபடி செய்தால், கிராமநத்தமானது எந்தஉபயோகத்திற் கென்று விடப்பட்டிருக்கிறதோ அந்த உபயோகத்துக்கு பிரயோஜனப்படுத்தப்படாமல் அந்த கிராமநத்தத்தை துர்விநியோகப்படுத்துவதாக நிர்சந்தேகமாய் பாவித்து அதற்கு கடுமையான ஜாஸ்தி தீர்வை விதிக்கவேண்டியது; ஆனால்இப்பேர்ப்பட்டவிஷயத்தில் நடவடிக்கைநடத்த தடையுண்டாய் கூடாமற்போனுலாவது அல்லது வெகுகாலமாய்அதை அனுபோகித்து வருகிறகாரணத்தால் அதின்பேரில் நடவடிக்கை நடத்துவது யுக்தமில்லாமல் இருந்தாலாவது,ஜாஸ்தி தீர்வை விதிக்கக்கூடாது. எவ்விதத்திலும் பட்டா கொடுக்கப்படக்கூடாது. வீட்டுக்குப்பின் புறமான தோட்டங்களின் கிரமமான எல்லைக்குள், கறிகாய்ச் செடிகள், புகையிலை முதலானவைகளைப் பயிரிடுகிற வழக்கத்தைத்தடுக்கக்கூடாது.

5. குறித்திருக்கப்பட்ட அளவு பிரகாரம் வீடுகட்டிக்கொள்வதற்காக இடங்களைக் கொடுக்க தாசில்தாருக்கும் டிப்டி தாசில்தாருக்கும் அதிகாரமுண்டு. அந்த அளவுக்கு ஜாஸ்தியாய் நிலம் வேணுமென்று கோரிக்கொள்ளப்பட்டால் டிவிஷனல் ஆபீசர் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டியது. ஆகிலும் வீடுகட்டிக்கொள்ள நிலம் வேணுமென்று விண்ணப்பம் செய்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை முதலில் கிராமநவுக்கர்களிடத்தில் கொடுக்க இஷ்டப்பட்டால் அப்படியே செய்யலாம். அப்படி கொடுத்து கொள்ளப்பட்டபிறகு அவைகளைப்பற்றி அனுபந்தத்தில் கண்டபாரத்தில் ஒரு ரிபோர்ட்டுடன் தாசில்தாருக்காவது டிப்டி தாசில்தாருக்காவது அதை அனுப்பவேண்டியது, கிராமநத்தத்தை அடமானம் செய்ய கிராமநவுக்கர்களுக்கு அதிகாரமில்லை.

6. இப்படி செய்யப்பட்ட அடமானங்களை மேற்பிரகரணத்தில் கண்டபாரப்பிரகாரம் ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்யவேண்டியது; அனுபந்தத்தில் கண்ட பாரத்தில் ஒரு சாஸனம் கொடுக்கவேண்டியது.

7. எந்தகிராமங்களிலாவது கிராமநத்தமானது தற்காலத்திற்கும் இனிமேலுக்கும் எவ்வளவு தேவையோ அதற்கு ரொம்ப ஜாஸ்தியாயும் அதிக விஸ்தீரணமுள்ளதாயுமிருந்து அதில் அனுபோகிக்கப்படாத பாகங்களில் முட்செடிகள் நெருங்கிவளர்ந்திருந்தால் அவைகளை துரஸ்துசெய்துகொள்ள பட்டா கொடுக்கலாம்; ஆனால் கிராமத்தார்களுக்குப்போதுமானஇடம் விடவேண்டிய விஷயத்தில் கியாபகம் வைக்கவேண்டியது.

8. மேலே சொன்ன விதிகளை பொதுவாய் அனுசரிக்கவேண்டியது அவசியம்; மேலும் அந்த விதிகளானவை அவைகளைப் பிரயோஜனப் படுத்துகிற உத்தியோகஸ்தர்களிட இஷ்டத்தையும் தயைதாக்ஷிண்யத்தையும் அனேகமாய் பொறுத்ததாய் இருக்கின்றன.

9. கெவர்ண்மெண்டாரிட அனுமதியன்றியில் முனிஸிபாலிடியாருக்கும், இவர்களைப்போலொத்த பொதுவிஷயங்களை விசாரிக்கும் அதிகார சங்கத்தாருக்கும், கிராமநத்தங்களை பராதீனப்படுத்தக் கூடாது. அப்பேர்ப்பட்ட விஷயங்களில் அனுமதியை கோரிக்கொள்ளும் போது, கட்டடங்களுக்காகவும் தோட்டங்களுக்காகவும் தேவையான விஸ்தீரணம் இன்னும் எவ்வளவு இருக்கிற தென்பதைப்பற்றியும், கிராமத்தில் குடியிருக்கும் ஜனங்களுக்கு வீடுகட்டிக்கொள்ள கிரமமான காலத்துக்குள் ஜாஸ்தி இடம் இவ்வளவு தேவையென்பதைப் பற்றியும் வியக்தமாய் ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

38. கெவர்ண்மெண்டின் யாதொரு டிபார்ட்மெண்டாரிட அனுபோகத்திலிருக்கிற நிலத்தை பைஸல்செய்வது.—கெவர்ண்மெண்டு நிலத்தையும் கட்டடங்களையும் விற்கவேண்டியதற்காக கவர்ண்மெண்டார் வியக்தமாய் அனுமதி கொடுத்திருந்தால் அப்படி விற்கவேண்டியது ஜில்லா கலெக்டரையே சேர்ந்தது; ஆனால் இதர டிபார்டுமெண்டார் வசத்தில் நிலமிருந்து அந்த நிலம் வகையறுக்களை தாங்களே விற்பனை செய்வது யுக்தமாய்த்தோன்றினால் அப்படியே உத்திரவுகொடுக்கும்படி யாதொரு ஆக்ஷேபணையின்றி கேட்டுக்கொள்ளலாம்; மேல் சொன்ன இரண்டு விஷயங்களிலும் விற்பனை செய்துவந்ததுகையை ரெவினியூ டிபார்ட்மெண்டுக்கு வரவுவைத்துக் கொள்ளவேண்டுமேயன்றி பலான டிபார்டுமெண்டுக்கு வரவு வந்ததாக கணக்கில் வரவு வைத்துக்கொள்ளக்கூடாது. நிலத்தை மட்டிலாவது, நிலத்தையும் அதின் பேரிலுள்ள கட்டடங்களையுமாவது விற்பனை செய்வதற்காக மாத்திரம் இந்தவிதியானது சம்பந்தப்பட்டதே யல்லாமல் கட்டட வேலைக்காக வேண்டிய உபகருவிகளையாவது இவைகளைப்போலொத்தவேறேசொத்தையாவது விற்பனை செய்யவேண்டியதற்கு சம்பந்தப்பட்டதல்ல.

39. முனிஸிபாலிடியார்களுக்கு பராதீனப்படுத்தப்பட்ட கரம்பு நிலங்கள்.—முனிஸிபல் எல்லைக்குள்ளிருக்கிற கரம்பு நிலங்களை எல்லாம் முனிஸிபல் அதிகாரிகளுக்குக் கொடுத்து விட வேண்டுமென்பதாக ஒருபோதும் தாத்பரியப்படவில்லை; ஆனாலும், ஏதோபலான பட்டணங்களை விர்த்தி செய்வதற்காக கரம்பு நிலங்களை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று செய்யப்படும் கோரிக்கைகளைப்பற்றி கெவர்ன்மெண்டார் அனுகூமான ஆலோசனையில் எடுத்துக்கொள்ளத்தயாராயிருப்பார்கள். கலெக்டர்கள் முன்னுடியாக கெவர்ன்மெண்டாரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் கரம்பு நிலங்களை முனிஸிபாலிடியாருக்கு பராதீனப்படுத்தவே கூடாது. கைவிடப்பட்ட கிராமத்தையாவது, கட்டட உபயோகத்திற்காக விடப்பட்ட இடங்களையாவது, நாள்பட்டவை என்கிற காரணத்தினுல் பாழாய்ப்போன கரம்பு நிலங்களாக பாவிக்கும்படி நேரிடும் விஷயத்தில் அப்படி நாள்பட்டுப்போனதால் அந்த நிலத்தில் உள்ள சுதந்தர பாத்தியதை போய்விட்டதாக பாவிக்கக்கூடாது; மேலும் முனிஸிபாலிடியாருக்கு அந்த இடங்களைத்திரும்பி எடுத்துக்கொள்ள பாத்தியதையும் இல்லை.

40. ஜமீன்தார்களுக்குக் கொடுக்கப்படும்ஸன்னதுகள்.—ஸ்திரமான ஸெட்டில்மெண்டு செய்யப்பட்ட நிலங்களுக்காக கொடுக்கப்படும் ஸன்னது இன்ன மாதிரி பாரத்தில் இருக்கவேண்டியதென்று அனுபந்தத்தில்கண்டிருக்கிறது.

41. ஜமீன்தாரி ஆஸ்திகளுக்கு வார்சுதார்கள்.—ஜமீன் இலாகாவின் சொந்தக்காரன் இறந்து போனபிற்பாடு அதற்காக உள்ள வார்ஸ் பாத்தியதையைப் பற்றி தகரார் உண்டாய் அந்த விஷயத்தில் பிரவேசித்து மத்தியஸ்தம் செய்யவேண்டியது அவசியமாகத் தோன்றும் பட்சத்தில் இந்த விஷயத்தைப்பற்றி கலெக்டர்கள் அந்த குடும்பத்தின் வம்ச அட்டவணை ஒன்று தயாரித்து ரிபோர்டு செய்து அனுமதி பெற்று கொண்ட பிற்பாடு பாத்தியஸ்தர்களில் பலானவர் ஜமீன்தார் என்பதாக பாவிக்க வேண்டியது.

II-வது அதிகாரம்.

ஸ்டாம்புகள் (முத்திரைக்காகிதங்கள்).

42. கலெக்டர்களிட கடமைகள்.—பிரதி ஜில்லாவிலும் ஸ்டாம்பு பாபத்தில் வசூலாகும் தீர்வையைப்பற்றி மேல்விசாரணை செய்யவேண்டியது ரெவினியூ கலெக்டரைச் சேர்ந்தது. ஸ்டாம்பு விஷயமாய் அபகரிப்பு நடந்திருக்கும்பட்சத்தில் முதலில் கலெக்டர்களே கண்டிப்பாய் ஜவாப்தாரி யாவார்கள்; தாங்கள் சட்டத்தில்கண்ட விதிகள்பிரகாரம் கண்டிப்பாய் நடந்துவந்ததாயும் தங்கள் சக்திக்கும் ஜாக்கிரதைக்கும் மிஞ்சிப்போன காரணங்களினால் நஷ்டம்நேரிட்டதென்றும் திருப்திகரமாய் ருஜுப்பித்தால் மாத்திரமே மேற்கண்ட பொறுப்பு அவர்களை விட்டு நீங்கும்

2. 1879 ஹ்த்திய. 1-வது சட்டத்தில் ஸ்டாம்பு ஒட்டாமலும் அல்லது குறைவான ஸ்டாம்பு ஒட்டப்பட்டுமிருக்கிற தஸ்தாவேஜுகள் விஷயமாய் சம்பந்தப்பட்ட 30, 37, 38-வது பிரிவுகளை அனுஸரித்துத் தவிர பலான தஸ்தாவேஜுகளில் ஒட்டவேண்டிய கிரமமான ஸ்டாம்பின் கிரயத்தை நிர்ணயிக்க கலெக்டர்களுக்கு அதிகாரமில்லை; ஷை பிரிவுகளில் கண்ட நியமங்களும் ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டிய தஸ்தாவேஜுகளாகிய பிராமிஸெரிநோட் (ஆண்டிமாண்டுநோட் என்று தமிழில் வழக்கமாய்ச் சொல்லப்படுகிறது) களுக்கும் *பில் ஆப் எக்ஸ்சேஞ்சுகளுக்கும் சம்பந்தப்பட்டவைகளல்ல.

3. குறைந்த ஸ்டாம்பு ஒட்டப்பட்டதென்பதற்காக சர்க்காரால் வசப்படுத்திக்கொள்ளப்பட்ட அப்பேர்ப்பட்ட குறைந்த ஸ்டாம்பு ஒட்டின தஸ்தாவேஜுகளை சட்டப்பிரகாரம் செல்லுமானதாக செய்கிற விஷயங்களில்

---

* பில் ஆப் எக்ஸ்சேஞ்சு என்றால்:—ஒரு மனுஷியனுக்குச் சேரவேண்டிய ஓர் தொகையை மற்றொருவனிடம் கொடுக்கும்படி தொகையைக்கொடுக்கவேண்டிய மனுஷியனைக் கோரிக்கொள்ளும் தஸ்தாவேஜு. உதாரணம்: ஏ. என்பவனுக்கு ஸீ. என்பவன் 100 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது, ஏ. ஆனவன் ஸீ. பெயருக்கு ஒருகாகிதம் எழுதி அதில் டீ. என்பவனிடம் அந்தப்பணத்தைக் கொடுக்கும்படி உத்திரவுசெய்தால் அந்த தஸ்தேவேஜுக்கு பில் ஆப் எக்ஸ்சேஞ்சு என்றுபெயர்.

அப்படிச்செய்யும் உத்தியோகஸ்தர்முன்பாக சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் ஆஜராகவேண்டுமென்பது அவசியமல்ல; ஆகிலும் அப்படி ஆஜராவது அநேகவிஷயங்களில் ரொம்ப யுக்தமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட விஷயங்களில் 1869 ௵த்திய 3-வது ஆக்ட்பிரகாரம் சம்மன்செய்து பார்ட்டிகளை வரவழைக்க கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. குறைவான ஸ்டாம்பு ஒட்டினதைப்பற்றி பிராஸிக்யூஷன் செய்யவேண்டிய விஷயம் பிரத்தியேகமானது; அந்தந்த விஷயத்தின் தன்மைகளை யோஜித்து பிராஸிக்யூஷன் செய்யவேண்டியதா அல்லது செய்யவேண்டிய தில்லையா வென்று நிர்ணயிப்பது கலெக்டரைச் சேர்ந்தவிஷயம்.

4. அந்தந்த இடங்களில் ஸ்டாம்புகளை பட்டுவாடா செய்வதும் விற்பனைசெய்வதும் கலெக்டரிட மேல்விசாரணையையும் பொறுப்பையும் சேர்ந்தது.

5. ஒரு ஜில்லாவின் சார்ஜை கலெக்டர் எடுத்துக்கொள்ளும் போது ஸ்டாம்பு கணக்குகளையும் கஜானுவிலிருக்கப்பட்ட மீதி ஸ்டாம்பையும் பரிசீலனை செய்து, அதற்கப்புறம் குறித்த பாரத்தில் ரசீதை தம்மிடம் சார்ஜு கொடுத்த உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கவேண்டியது.

6. கலெக்டராபீஸில் ஸ்டாம்பு விவகாரங்களை விபரமாய் மேல்விசாரணை செய்யவேண்டியது கஜானு டிப்டிகலெக்டரைச் சேர்ந்தது, அவரிட மேல்விசாரணை கலெக்டரிட அதிகாரத்துக்குட்பட்டது.

7. பிரதிமாசம் 12உ க்கு முன்பாக கஜானு டிப்டிகலெக்டரானவர் கஜானு உத்யோகஸ்தர் வசத்திலிருக்கப்பட்ட கையிருப்பு ஸ்டாம்பை தணிக்கை செய்து குறித்த பாரப்பிரகாரம் கலெக்டருக்கு தாம் செய்த தணிக்கையைப்பற்றி ரிபோர்ட் செய்ய வேண்டியது. கலெக்டரானவர் அதில் மேல்கையெழுத்து செய்து அதை ரிகார்டுடன் சேர்த்து வைக்கவேண்டியது.

8. அதமபக்ஷம் வருஷத்திற் கொருதரமாவது கலெக்டர்தாமே நேராகவாவது தம்மிட அஸிஸ்டாண்டுகளில் ஒருவரைக் கொண்டாவது கஜானுவிலுள்ள கையிருப்பு ஸ்டாம்பு பூராவையும் தணிக்கை செய்து அப்படி தணிக்கை செய்ததின் முடிவை ஸ்டாம்பு சூப்ரிண்டெண்டண்டுக்கு தெரியப்படுத்தி விடவேண்டியது.

9. பிரதி ஸ்டாம்பு காகிதத்தையும் விற்பனைக்காவது பிரயோஜனத்துக்காவது வெளிப்படுத்து முன்பாக, கஜானு டிப்டி கலெக்டரானவர் போர்டாரால் கொடுக்கப்பட்டிருக்கிற முத்திரையை அதில் போடவேண்டியது

10. செக்கு முதலான அச்சிட்டவெத்து பாரங்களிலாவது, $\frac{2170}{22-5-91}$ நெ. இந்தியா கெவர்ண்மெண்டாரிட விளம்பரத்தில் கண்டவிதமான தஸ்தாவேஜுகளிலாவது ஸ்டாம்பு அடித்துகொள்ள இடமுள்ளவர்கள் கொடுத்துக்கொள்ளும் விண்ணப்பங்களை கஜானு டிப்டிகலெக்டர் பெற்றுக்கொண்டு கலெக்டரிடம் அனுப்பலாம். இஷ்டமிருக்கும் பட்சத்தில் ஜனங்கள் நேராய் கலெக்டர்களுக்கும் விண்ணப்பம் கொடுத்துக்கொள்ளலாம்.

11. தஸ்தாவேஜுகளுக்கு ஸ்டாம்பு அச்சிட்டுக்கொடுக்க வேண்டுமென்று கலெக்டருக்காவது கஜானு டிப்டிகலெக்டருக்காவது விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளலாம். ஒட்டவேண்டிய ஸ்டாம்பின் கிரயத்தை விண்ணபத்துடன்கூட அனுப்பவேண்டியது. கலெக்டர் கஜானுவில் ஸ்டாம்பின் கிரயம் கொடுக்கப்பட்டதாக விண்ணப்பத்தின் பேரிலேயே ரசீதுஎழுதிகாலக்கிரமத்தில் அதை ஸ்டாம்பு ஸுபரிண்டெண்டண்டுக்கு அனுப்பவேண்டியது. ஸ்டாம்புகிரயம் செலுத்தினதற்காக கஜானு டிப்டிகலெக்டரால் ஒருரசீது சம்பந்தப்பட்ட பார்டிக்கு கொடுக்கப்படும். காலக்கிரமத்தில் ஸுபரின்டென்டெண்டானவர் அந்த தஸ்தாவேஜில் ஸ்டாம்புஅடித்து அதைகஜானுடிப்டிகலெக்டருக்கு திருப்பியனுப்பவேண்டியது. டிப்டி கலெக்டர், ஸ்டாம்பு கிரயம் பெற்றுக்கொண்டதற்காக தம்மால் கொடுக்கப்பட்ட ரசீதை ஆஜர்செய்வதின்பேரில், சொந்தக்காரர்களுக்கு அந்த தஸ்தாவேஜுகளை ஒப்புவித்துவிடவேண்டியது. அப்பேர்ப்பட்ட விண்ணப்பங்களை எல்லாம் ஸுபரின்டென்டெண்டு ஒரு புஸ்தகமாதிரியாக தைத்து வைத்துக் கொள்ளவேண்டியது. ஸ்டாம்பு ஸுபரின்டெண்டண்டு அவர்களால் ஸ்டாம்பு அடிக்கப்படும்பொருட்டு கலெக்டர்களிடம் தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்தும்பார்ட்டிகள்தபால்சார்ஜு கொடுக்கவேண்டியதில்லை. தபால் மார்க்கமாய் ரிகார்டைஅனுப்புவதில் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனல் பார்டிகள் ரிஜிஸ்டர் செய்யவேணுமென்று இஷ்டப்பட்டால் ரிஜிஸ்டர்கூலி அவர்களிடமிருந்து வசூல்செய்ய யாதொரு ஆக்ஷேபணையுமிருக்க மாட்டாது.

12. ஸ்டாம்பு ஒட்டவேண்டிய தஸ்தாவேஜுகள் தற்செயலினலோ பிசகினலோ அதி அவசரத்தினலோ கிரமமாய் ஸ்டாம்பு ஒட்டப்படாதிருக்கிற விஷயங்களில், கலெக்டரானவர் கிரமமான ஸ்டாம்பு கிரயத்தையும் குறைவான ஸ்டாம்பு ஒட்டினதற்கு ஏதாவது துகை தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட துகையையும் செலுத்துவதின்பேரில் 1879 வருஷத்திய 1-வது ஆக்டின் 38-வது பிரிவைஅனுசரித்து கிரமமான ஸ்டா

ம்பு கிரயம் வசூல் செய்யப்பட்டதென்று அந்த தஸ்தாவேஜில் கலெக்டர் இண்டார்ஸ் செய்யவேண்டியது;

13. கொஞ்சகாலத்திற்கோ அல்லது ஸ்திரமாயோ ஒரு கஜானு டிப்டி கலெக்டர் தம்மிடவேலையை காலிசெய்யும் பிரதி தருணத்திலும் அவர் வைத்திருந்த கணக்கையும் கையிருப்பு ஸ்டாம்பையும் பின்வரும் உத்தியோகஸ்தர் தணிக்கைசெய்து ரசீது கொடுக்கவேண்டியது.

14 ஸப் கலெக்டர், ஹெட்அஸிஸ்டென்ட் கலெக்டர், இவர்கள் 1879 ௵த்திய 1–வது சட்டத்தின் 15, 17, 30, 31, 45, 51, 52, 53, 54, பிரவுகள் விஷயமாய் கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்களைக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். * அவர்கள் தங்கள் டிவிஷனுக்குள் அதிகாரங்களைச் செலுத்தவேண்டியது.

44. ஸ்டாம்புவிற்பனையைப்பற்றி.

15. எக்ஸபிஷியோவெண்டர்கள் பொதுஜனங்களுக்கு தந்தி (டலிகிராப்) ஸ்டாம்புகளைவிற்கலாம். ஆனால் அப்படி ஒரு வெண்டர் விற்கிற ஸ்டாம்புகளின் மொத்தகிரயமானது 5 ரூபாயிக்குக் குறையாமலிருக்கவேண்டியது, மேலும் ஒவ்வொரு விதத்திலும் விற்கப்பட்ட ஸ்டாம்பின் கிரயத்துகையானது 1 ரூபாயிக்குக் குறையாமலிருக்கவேண்டியது, இந்த ஸ்டாம்பு விற்பதற்கு டிஸ்கவுண்டுகிடையாது.

17. கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும், சர்வீஸ் ஸ்டாம்புகளை வாங்கி உபயோகிக்க பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டவர்களுக்கும், சர்வீஸ் தபால்லேபில்களை ரொக்க விற்பனைக்கு விற்கவேண்டியது. அப்படிவிற்பதற்கு டிஸ்கவுண்ட் கிடையாது.

18. லோகல் டிபோக்களிலிருந்து பொதுஜனங்களுக்கு சாதாரண தபால்லேபில்கள் முதலானவை ரொக்கவிற்பனைக்கு விற்கப்படும் ; யாதொரு மனிதனுக்கு ஒருசமயத்தில் விற்கப்பட்ட லேபில் வகையராக்களின்மொத்த கிரயமானது 5நூக்குட்பட்டதாயிருக்கக்கூடாது ; தவிரவும் 1நூக்குக் குறைந்த சில்லரை துகை அடங்கியதாயிருக்கக்கூடாது. தபால் கவர்களும் கார்டுகளும் கட்டுகெட்டுகளாகவே விற்கப்படவேண்டியது. அப்படி விற்பனை செய்வதற்காக டிஸ்கவுண்டு கிடையாது. சில லோகல் டிபோக்களிலிருந்து மாத்திரமே ஸோல்ஜர்ஸ்கவர்கள் என்றுசொல்லப்பட்ட பட்டாளங்களிட பிரயோஜனத்துக்கான கவர்கள் பூராகட்டுகெட்டுகளாக

---

* இப்பால் டிப்டிகலெக்டர்களும் கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்களைக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

பட்டாளத்தலைமைஉத்தியோகஸ்தர்களுக்கு விற்கப்படும். இதற்கு டிஸ்கவுண்ட் கிடையாது.

19. பிரதி தபாலாபீஸிலும், காகிதம் வெளியேஅனுப்ப தபால்பெட்டியிருக்கிற தாசீல், டாணா, போலீஸ் ஸ்டேஷன் இந்த இடங்களிலுள்ள தலைமை உத்தியோகஸ்தரும், பொது (ஜனரல்) ஸ்டாம்புகளை விற்கும்பொருட்டு 1879 ஹூ த்திய ஸ்டாம்பு ஆக்ட்டின் விதிகளை அனுஸரித்து லைசென்ஸ் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும், பொது ஜனங்களுக்கு ஒரு வாரத்தில் சுமார் எவ்வளவுதபால் ஸ்டாம்புகள்தேவையாயிருக்குமோ அவ்வளவு ஸ்டாம்புகளை கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு மேல்பிரகரணத்திற் கண்ட நிபந்தனைகளின் பேரில் ஸோல் ஜர்ஸ்கவர்கள் நீங்கலாக சாதாரணதபால் லேபில் வகையறுக்கள் லோகல் டிபோக்களிலிருந்து விற்கப்படும். அப்படி விற்பனை செய்வதில் 1 ரூ க்கு காலணாவட்டம் (டிஸ்கவுண்டு) கொடுக்கப்படும்.

20. மேல்பிரகரணத்தில் முதல் வாக்கியத்தில் கண்ட உத்தியோகஸ்தர்கள், ஒருஅணா ரெவினியூ ஸ்டாம்புகளை பொது ஜனங்களுக்கு விற்கும் பொருட்டு அவைகளையும் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியது. 18வது பிரகரணத்தில் இவ்வளவு தொகைக்கு வாங்கவேண்டிய தென்கிறதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் பிரகாரமே லோகல் டிபோக்களிலிருந்து அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு அணா ஸ்டாம்புகள் விற்கப்படும். அப்படி விற்பனைசெய்வதில் ரூ 1க்கு $\frac{1}{2}$ அணா வீதம் டிஸ்கவுண்டு கொடுக்கப்படும்.

21. சாதாரண தபால் லேபில் வகையறுக்களை சில்லரையில் விற்க வேணுமென்ற நல்ல எண்ணத்துடன் வாங்கி விற்கிறவர்களுக்கு ரூபாய்க்கு காலணா டிஸ்கவுண்டு கொடுக்கும்படி கலெக்டர் உத்திரவு செய்யலாம்; ஆனால் அப்படி விற்கிறவன் கெவர்ண்மெண்டு கஜானாவில் வேலை பார்த்து வருகிறவனாயிருக்கக் கூடாது. அப்படி கலெக்டர் செய்யும் உத்திரவானது எழுத்து மூலமானதாயிருக்கவேண்டும்; அது ஒரு வருஷம்வரையில் ஊர்ஜிதத்திலிருக்கும்; அடியில்கண்ட எல்லாவித நிபந்தனைகளையாவது சிலவற்றையாவது அதில் கண்டெழுதவேண்டியது, அதாவது:—சில்லரையில் விற்கிறதற்கு எல்லாவிததபால் லேபில் வகைராக்களையாவது குறிப்பிட்ட எதாவது ஒருவித தபால் ஸ்டாம்புகளையாவது போதுமானவரையில் வைத்துக் கொள்ளவேணுமென்றும், ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட பலான பலான இடங்களில் விற்கவேண்டுமென்பதும் மற்ற இடங்களில் விற்கக் கூடாதென்பதும் பலான தினத்தில் பலான மணிமுதல் பலானமணிவரையில்

விற்கவேண்டுமென்பதும்; அப்பேர்ப்பட்ட உத்திரவை கலெக்டர் யாருக்குக் கொடுக்கிருரோ அவனிடபெயர் இருப்பிடம் தொழில் இவைகளைக் கண்டு ஒரு ரிஜிஸ்டர் தயாரித்து வைத்திருக்கவேண்டியது.

46. ஸ்டாம்பு கிரயங்களை வாப்ஸ் செய்வதும் ஸ்டாம்புகளை புதுப்பிப்பதும்:—எ. நான்ஜுடிஷல் ஸ்டாம்புகளைப்பற்றி: கெட்டுப் போயாவது, உபயோகத்துக்கு லாயக்கற்றதா யாவது, சரியாய் உபயோகப் படுத்தப்படாமலாவது, உபயோகத்திற்குத் தேவையாயிராமலாவதிருக்கிற நன்ஜுடிஷியல் ஸ்டாம்புகிரயத்தை வாப்ஸ்செய்யும்பொருட்டும் அல்லது அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகளை புதுப்பிக்கும் பொருட்டும் விதிகள் 1879ஞூ த்திய 1–வது ஆக்ட் 6–வது அதிகாரத்தில் கண்டிருக்கிறது; 52, 53, 54-வது பிரிவுகளானவை சட்டத்தை அனுஸரித்து உபயோகப்படுத்தப்படும் எல்லாவித ஸ்டாம்புகளுக்கும் சம்பந்தப்பட்டவை. ஆனல் அட்ஹிஸிவ்லேபீல் என்கிற தஸ்தாவேஜின் பேரில் ஒட்டப்படும் லேபிலின்கிரயத்தைவாப்ஸ் செய்வதில் அதிக எச்சரிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது.

2. ஸ்டாம்புகளை புதுப்பிக்கும் விஷயமாய் 53–வது பிரிவில் கண்ட ஒரு அணு வஜாவை செய்யக்கூடாது.

3. உபயோகப்படுத்தப்படாத ஸ்டாம்புகாகித விஷயத்தில் ரொக்கமாய் மாத்திரம் வாப்சு செய்யக்கூடும்.

4. 1–வது பிரகரணத்தில் கண்ட ஸ்டாம்புகளின் கிரயத்தை வாப்ஸ் செய்யவாவது அவைகளை புதுப்பிக்கவாவது உத்திரவு கொடுக்கப்படுவதற்கு, ஸ்டாம்பு கெட்டுப் போயாவது உபயோகமில்லாமற்போயாவது போனதேதி முதல், அல்லது ஸ்டாம்பு வாங்கப்பட்ட தேதிமுதல், 6 மாசத்திற்குள் அப்படிகிரயத்தை வாப்ஸ்பெற்றுக்கொள்ளவாவது ஸ்டாம்புகளைப்புதுப் பித்துக் கொள்ளவாவது விண்ணப்பம் செய்து கொண்டால் மாத்திரமே உத்திரவு கொடுக்கவேண்டியது. ஆனல் உபயோக மில்லாமற் போன ஸ்டாம்புகளின் கிரயத்தைவாப்ஸ் பெற்றுக்கொள்ளவாவது, ஸ்டாம்புகளை புதுப்பித்துக்கொள்ளவாவது, அப்படி உபயோக மில்லாமற்போன தேதி முதலாவது அல்லது ஸ்டாம்பு வாங்கப்பட்ட தேதி முதலாவது ஒரு வருஷத்திற்குள் விண்ணப்பம் செய்து கொள்வதின் பேரில் போர்டார் உத்திரவு கொடுக்க அதிகார முள்ளவர்கள், ஆகையால் அப்பேர்ப்பட்ட விஷயங்களில் செய்துகொள்ளும் விண்ணப்பங்களை போர்டாரிட உத்திரவுக்கு அனுப்பவேண்டியது.

5. 54 வது பிரிவில்கண்ட உத்திரவுகள் ஸ்டாம்புவெண்டர்களுக்கு சம்பந்தப்படா, ஏனென்றால் ஸ்டாம்புகளை உபயோகிக்கவேணுமென்கிற நல்ல எண்ணத்துடன் ஸ்டாம்பு கிரயம் பூரா வையும்கொடுத்து வாங்கின வர்களுக்குமாத்திரம் ஸ்டாம்புகிரயம் வாப்ஸ்செய்யப்படும்; ஆனால் யாதொரு ஸ்டாம்பு வெண்டாராவது அவனிட பிரதிநிதிகளாவது உபயோகத்துக்கு லாயக்கற்றதாய்ப் போகாமலிருக்கிற ஸ்டாம்புகளை கலெக்டராபீசில் ஆஜர்படுத்தி அவைகளின் கிரயத்தை திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம்செய்துகொள்ளப்பட்டு அந்த விண்ணப்பத்தில் கண்ட கோரிக்கைப்பிரகாரம் அனுமதிகொடுப்பது யுக்தமென்று கலெக்டருக்குத் தோன்றினால் அவர்கள் தங்களிட யுக்தானுஸாரம் ஒரு ரூபாய்க்கும் ஒரு ரூபாய்க்குக் குறைந்த பாகத்திற்கும் ஒருஅணுவீதம் கழித்துக்கொண்டு ஸ்டாம்பின் கிரயத்தை திருப்பிக்கொடுத்தாலும் கொடுக்கலாம், அல்லது அந்த கிரயத்துகைக்குப்பதிலாய் வேறு ஸ்டாம்புகளை கொடுத்தாலும் கொடுக்கலாமென்று இந்தியா கெவர்ண்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

6. ஜாஸ்தியாக விதிக்கப்பட்ட ஸ்டாம்பு கிரயத்தையும் அபராத தண்டனைத்துகையையும் போர்டாரிட உத்திரவின் பேரில் பார்டிகளுக்கு வாப்ஸ் செய்யப்படும்; அப்படி வாப்ஸ் செய்யப்பட்டதற்கு அத்தாக்ஷியாக வவுச்சர்கள் அக்கவுண்டண்டு ஜனரலுக்கு அனுப்பப்படும்.

பீ. கோர்ட்பீஸ் ஸ்டாம்புகளைப்பற்றி; (கெட்டுப்போன அதாவது) உபயோகத்துக்கு லாயக்கற்றதாய்ப்போன கோர்ட்டுபீஸ் அட்ஹிஸிவ் (அட்ஹிஸிவ்என்றால் ஒட்டக்கூடிய) லேபில்கள் விஷயமாய் ஸ்டாம்புகிரயம் வாப்ஸ் செய்யப்படக்கூடாது. ஸ்டாம்பு அழுத்தப்பட்ட காகிதங்களில் ஒட்டப்பட்டகோர்ட்டு பீஸ் லேபில்களின் கிரயம் வாப்ஸ் செய்யப்படலாம். ஆனால் கலெக்டரானவர் அப்பேர்ப்பட்டகோர்டு பீஸ் ஸ்டாம்புகள் தம்மிட ஜில்லாவிலாவது இதர இடத்திலாவது வாங்கப்பட்டிருந்து அப்படி வாங்கிய தேதி முதல் 6 மாசத்திற்குள்ளாக தமக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதின் பேரிலும் சம்பந்தப்பட்ட ஸ்டாம்புகளை ஆஜர்ப்படுத்துவதின்பேரிலும் ஸ்டாம்புகளை புதுப்பிக்கலாம்; காகிதத்திலேயே ஸ்டாம்பு அழுத்தப்பட்டிருக்கிற காகிதங்களில் ஒட்டப்பட்டிருக்கும் கோர்ட் பீஸ் அட்ஹிஸிவ் ஸ்டாம்புகளை அவைகளின் கிரயத்துகையை வாப்ஸ் செய்கிற விஷயமாய் காகிதத்திலேயே அழுத்தி யிருக்கப்பட்ட ஸ்டாம்புகளாக அடியில் 2-வது பிரகரணத்தின் (ஏ) பிரிவுபிரகாரம் பாவிக்கப்படும். அடியில் கண்ட விஷயங்களில் கோர்டு பீஸ் ஸ்டாம்புகள் கெட்டுப்போனதாயும் உபயோகத்திற்கு லாயக்கற்றதாயும் பாவிக்கப்படும்.

i. யாதொரு கோர்ட்டார் முன்பாகவாவது சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாகவாவது ஆஜர்படுத்தப்படும் முன்னமே கோர்டு பீஸ் ஸ்டாம்புகளுக்கு ஏதோ கெடுதி நேரிட்டு உபயோகத்திற்கு லாயக்கற்றதாய்ப் போனல்;

ii. அல்லது ஷை ஸ்டாம்புகள் ஒட்டியிருக்கப்பட்ட காகிதங்களில் எழுதவேண்டிய மாதிரியிலாவது அல்லது எழுதியசங்கதியிலாவது ஏதோ பிசகுஉண்டாய் அதினல் அந்த ரிகார்டானது பிரயோசனமற்றதாய்ப்போயிருந்தால்;

iii. அல்லது யாதொரு கோர்டாரிடத்திலாவது யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாகவாவது யாதொரு கோர்டு பீஸ் ஸ்டாம்பானது தாக்கல்செய்யப்பட்டு அந்த கோர்ட்டாரோ அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தரோ அந்த ஸ்டாம்பை தலையடித்து விடச்செய்திருந்து, அவ்வளவு கிரயமுள்ள ஸ்டாம்பானது தேவையென்பதாகத் தப்பாய் உத்திரவு செய்ததாகவும் குறைந்த மதிப்புள்ள ஸ்டாம்பு ஒட்டவேண்டிய தென்று சொல்லியிருக்க வேண்டியதாகவும் பின்னிட்டு தெரியவந்து அதற்குமேல் ஷை கோர்டாரோ சர்க்கார் உத்தியோகஸ்தரோ மேற்கண்ட அம்சங்களைக் கண்டு ஒரு ஸர்டிபிகேட்டைத் தயார் செய்து கொடுக்கும்பட்சத்தில்;

iv. அல்லது அப்படி ஸ்டாம்பு ஒட்டப்பட்ட காகிதங்களில் எழுதப்பட்ட பிராதானது யாதொரு கோர்டாரிடத்திலும் தாக்கல் செய்யப்பட்டாமலிருந்தாலாவது.

குறிப்பு*:—3-வது வாக்கியத்தில்கண்ட மாதிரியாய் கெட்டுப்போன ஸ்டாம்புகள்விஷயமாய் ஸ்டாம்பின் கிரயத்தை வாப்ஸ்செய்யவோ அல்லது ஸ்டாம்பை புதுப்பிக்கவோ கலெக்டர் உத்திரவு செய்யலாம்; அப்படி கிரயத்தைவாப்ஸ் பெற்றுக்கொள்ளவாவது ஸ்டாம்பை புதுப்பிக்கவாவது அந்த வாக்கியத்திற் கண்ட ஸர்டிபிகேட்டானது சொந்தக்காரனிடம் கொடுக்கப்பட்ட தேதிக்குப்பின்னிட்டு ஆறுமாதகாலத்திற்குள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

2. (ஏ) காகிதங்களில் அழுத்திடப்பட்ட கோர்டுபீஸ் ஸ்டாம்புகளை யாதொரு மனுஷன் வைத்துக்கொண்டிருந்து அவைகளை உடனே பிரயோ

---

* நான் ஜுடிஷல் ஸ்டாம்பாவது கோர்ட் பீஸ் அல்லாத மற்றவிதமான ஸ்டாம்பு; அட்ஹீஸிவ் என்றால் கோர்டுபீஸ் ஸ்டாம்புகளென்றும் அர்த்தமாகும்.

ஜனப்படுத்தும்படியான ப்ரமேயமில்லாமற்போனலாவது, அல்லது கெட்டுப்போயாவது அல்லது உத்தேசித்த காரியத்திற்கு லாயக்கற்றதாயாவது போயிருந்தாலாவது, அல்லது, (பீ) ஒருபோதும் ஒன்றுக்கொன்று வெவ்வேருகப்பிரிக்கப்படாமலும் உடனே பிரயோஜனப்படுத்தப்பட பிரமேயமில்லாமலும் இருக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட (அல்லது 5 ரூபாய்க்குக்குறைந்த கிரயத்தைச்சேர்ந்ததாயிருந்தால், நாலு அல்லது அதற்கு மேற்பட்ட) கோர்ட்டுபீஸ் அட்ஹிஸிவ் (ஒட்டப்படக்கூடிய) லேபில்களை யாதொருவன் வைத்திருந்தாலாவது அப்பேற்பட்ட மனுஷியன் அந்த ஸ்டாம்புகளைப் பரிகரித்து விடவேண்டுமென்று கலெக்டரிடம் ஆஜர்ப்படுத்தி, அந்த ஸ்டாம்புகளை உபயோகிக்க வேணுமென்கிற நல்லெண்ணத்துடன் தான்வாங்கினதாயும் அவைகளுக்குள்ள கிரயம் பூருவையும் தான் கொடுத்ததாயும், அல்லது அவைகளாவது, காகிதத்திலேயே அழுத்தப் பட்டிருக்கிற கோர்ட்டுபீஸ் ஸ்டாம்புகளாயிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகளாவது, அப்படிஆஜர் படுத்தப்பட்ட தேதிக்கு முன் ஆறுமாத காலத்திற்குள் அவைகளை வாங்கினதாயும் கலெக்டருக்குத்திருப்திகரமாய்ருஜுப்பித்துவிண்ணப்பம்செய்து கொள்ளும் பட்சத்தில் அப்பேர்ப்பட்டஸ்டாம்புகள் அல்லது லேபில்களின் கிரயத்தை ரொக்கமாய் திருப்பிக்கொடுக்க வேண்டியது. ஆகிலும், பிரத்தியேகமான (ஸ்பெஷல்) விஷயங்களில், ஸ்டாம்புகளோ லேபில்களோ வாங்கப்பட்ட தேதி முதல் ஒருவருஷத்திற்குள்ளும்,காகிதங்களிலேயே அழுத்தப்பட்ட கோர்ட்பீஸ் ஸ்டாம்புகளாயிருக்கும் பட்சத்தில் அப்பேற்பட்ட ஸ்டாம்புகள் உபயோகத்திற்கு லாயக்கற்றவைகளாய்ப் போன தேதிமுதல் ஒருவருஷத்திற்குள்ளும், போர்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளும் பட்சத்திலும் அவைகளின் கிரயத்தை வாப்ஸ் செய்யும்படி போர்டார் உத்திரவு செய்யலாம்.

3. யாதொரு லைசென்ஸ் பெற்ற வெண்டரானவன் தான் பெற்றிருந்த லைசென்ஸைத்திரும்பி ஒப்புக் கொடுத்துவிட்டாவது அல்லது அவன் இறந்துபோயாவதிருந்து, அவனே, அல்லது அவன் இறந்துபோயிருக்கும் பட்சத்தில் அவனிடபிரதிநிதிகளோ, கெட்டுப்போகாமலும் உபயோகத்திற்கு லாயக்கற்றதாய்ப்போகாமலு மிருக்கப்பட்ட ஸ்டாம்புகளையும் லேபில்களையும் கலெக்டராபீஸில் ஆஜர்ப்படுத்தி அவைகளின் கிரயத்தை வாப்ஸ் கொடுக்க வேணுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டு அப்பேர்ப்பட்ட விண்ணப்பத்தின் கோரிக்கைப்படி உத்திரவு செய்ய நியாயமான சந்தர்ப்பங்கள் நேர்ந்திருந்தால் கலெக்டரானவர் அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகள் அல்லது லேபில்களின் கிரயத்தை ரூபாய்க்கு 1 அணு வீதம் கழித்துக்கொண்டு

தம்மிட யுக்தானுஸாரம் வாப்ஸ் செய்யலாம், அல்லது வேறே ஸ்டாம்புகளையாவது லேபில்களையாவது பர்த்தியாகக் கொடுக்கலாம்; ஆனால் அட்ஹிஸிவ் (ஓட்டப்படக்கூடியது) கோர்ட்பீஸ் லேபில்கள் விஷயமாய் அடியிற்கண்ட விஷயங்களில் அவைகளின் கிரயமும் வாப்ஸ் செய்யப்படமாட்டாது, வேறே ஸ்டாம்புளும் பர்த்தியாய்க் கொடுக்கப்படமாட்டாது; 5 நூக்குக்குறையாத விலையுள்ள லேபிலாக யிருக்கும் பட்சத்தில் ஒன்றுக்கொன்று பிரிக்கப்படாத அப்பேர்ப்பட்ட அதமபட்சம் இரண்டுலேபில்களாவது இல்லாதிருக்கும் பட்சத்திலும்; லேபில் 1க்கு 5நூக்குக் குறைந்த விலையுள்ள லேபில்களாக யிருக்கும் பட்சத்தில் ஒன்றுக்கொன்று வேவ்வேறுக்கப்படாமலிருக்கிற அப்பேர்ப்பட்ட 4 லேபில்கள் இல்லாமல்போனலாவது, இந்த இரண்டு விஷயங்களிலும் வாப்ஸும் செய்யப்படமாட்டாது, பர்த்தி ஸ்டாம்புகளும் கொடுக்கப்படமாட்டாது.

4. (i) 1870 ஷுத்திய VIIவது சட்டத்தின் 13, 14, 15, வது பிரிவுகள் பிரகாரம் பற்பல கோர்ட்டாராலும் கோர்ட்டு பீஸ் லேபில்களின் கிரயத்தை வாப்ஸ் செய்ய ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும்; அப்படி கொடுத்த பிற்பாடு அவைகள் ஆஜர்ப்படுத்தப்படும்போது தங்களிட ஆபீஸில் வைத்துவைக்கும்படி கஜானுடிப்டி கலெக்டருக்கு அதைப்பற்றி தெரிவிக்கப்படும்.

(ii) ஸிவில் புரோஸீஜர் கோட்பிரகாரம் ஸ்டாம்புகிரயத்தை வாப்ஸ் பெற்றுக்கொள்வதற்காகக் கொடுக்கப்பட்ட ஸர்டிபிகேட்டுகளை பார்ட்டிகள் கஜானு டிப்டி கலெக்டருக்கனுப்பவேண்டியது. நேராய் கொடுத்தாலும் கொடுக்கலாம், தபால் மூலமாய் அனுப்பினாலும் அனுப்பலாம். ஸர்டிபிகேட்டுக்கு சொந்தக்காரன் அந்த ஸர்டிபிகேட்டின்படி பணம்தன்னிடத்திலேயே பட்டுவாடா செய்யவேண்டியதா வேறே யாருக்காவது பட்டுவாடா செய்யவேண்டியதாவென்றும், எந்தகஜானாவில் பட்டுவாடா செய்யப்படவேண்டு மென்றும் ஸர்டிபிகேட்டின் பின் புறத்தில் எழுதவேண்டியது. வேறே விண்ணப்பமாவது வக்காலத்துநாமாவாவது தேவையில்லை.

5. கட்டளை வகையறுக்களை பிறப்பிக்கிறதற்காகவும் ஸர்வ் செய்கிறதற்காகவும் விதிக்கப்பட்ட ப்ரோஸஸ்பீஸ் என்கிற கட்டளைப்படியானது ஜாஸ்தியாய் வசூல்செய்யப்பட்டிருந்தால் அந்த ஜாஸ்தியை வாப்ஸ் செய்யக்கூடும்; கோர்டுசோதல்வாரது கணக்குடனே அக்கவுண்டெண்டு ஜனரலுக்கு இந்த ஜாஸ்தி கட்டளைப்படிக்கு வவுச்சர்கள் அனுப்பவேண்டியது. 1864 ஷுத்திய 2வது ஆக்டாகிய தீர்வை வசூல்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆக்டை அனுஸரித்து பிறப்பிக்கப்படலான கட்டளைவகயறுக்

களை கோர்ட்டு பீஸ் ஆக்டுபிரகாரம் ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டிய கட்டளை களைக்கண்ட ஜாபிதாவிலிருந்து ஸ்பெஷலாய் (பிரத்தியேகமாய்) விலகக் பட்டிருக்கின்றது.

47. ப்ராஸிகியூஷன் செய்வது, அதாவது நியாயாதிகாரிமுன் பாக குற்றம் சாட்டுவது:—ஸ்டாம்பு ஆக்டின் 69வது பிரிவுபிரகாரம் வியாச் சியம் ப்ராஸிகியூஷன் முதலியவை கலெக்டர்களால் ஸ்டாம்பு ரெவினியூ கலெக்டர்கள் என்றஹோதாவில் நடத்தப்படவேண்டியது; ஆனால் ஸடாம்பு ஆக்டுபிரகாரம் மாஜிஸ்டிரேட்டார் முன்பாக நடக்கும் ப்ராஸிகியூஷன்களில் ஸ்டாம்புரெவினியூ கலெக்டருக்காகவும் அவரிடபேராலும் ப்ராஸிகியூஷனை நடத்தும்படி கலெக்டர் தங்களிட யுக்தானுஸாரம் தமக்குக்கீழ்ப்பட்ட ஒரு உத்தியோகஸ்தருக்காவது ஒரு வக்கீலுக்காவது அதிகாரம் கொடுக்கலாம்.

2. அப்படி நடத்தப்பட்ட யாதொரு பிராஸிகியூஷனை நடத்தாமல் நிறுத்தவும், சட்டப்பிரகாரம் யாதொரு குற்றத்தை ராஜிபடுத்தவும் தங் களுக்கு நியாயமாயும் திருப்திகரமாயும் தோன்றினல் கலெக்டர்கள் அப்படி யேசெய்யலாம்.

48. பாபர் வியாச்சியங்களில் ஸ்டாம்பு வரியைப் பற்றி:— (பாபர் வியாச்சியமாவது—யாதொரு வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட ஒரு பார்ட்டியானவன் ஏழை என்கிற காரணத்தினல் ஸ்டாம்பு வரியைசெலு த்தாமல் வியாச்சியமாடுவது) பாபர் வியாச்சியங்களில் ஸ்டாம்பு வரியை வசூல் செய்யவேண்டியதில் அனுஸரிக்கவேண்டிய நடவடிக்கையை அடி யில் எடுத்துச் சொல்லியிருக்கிறது. யாதொரு கோர்ட்டாரிடமிருந்து ஒருடிக்கிரியின் (தீர்ப்பின்) நகலைவரப்பெற்றுக் கொண்டதின் பேரில், ஸ்டாம்பு வரியை செலுத்தவேண்டிய பார்ட்டியானவன் அதைச்செலுத்த சக்திவந்தனுயிருக்கிறுனு வென்று முதலில் விசாரித்துத் தெரிவிக்கும்படி தாசில்தாருக்கு அந்த நகலை அனுப்பவேண்டியது. வரியைச்செலுத்த அ வன் சக்திவந்தனென்று ஏற்பட்டால் அந்த மொத்தத்திற்காக அந்த பார்ட் டியினிட சொத்தை ஜப்தி செய்துவிற்பனை செய்யும்பொருட்டு ஸிவில் புரோஸீஜர் சட்டப்பிரகாரம் கெவர்ண்மெண்டு வக்கிலானவர் கோர் ட்டாரை விண்ணப்ப மூலமாய் கோரிக்கொள்ளவேண்டியது. செலவைக் கொடுக்கும்படி செய்யப்பட்ட டிக்கிரியை (அதாவது தீர்ப்பை)நிறைவேற்ற வேண்டியதற்கு சம்பந்தப்பட்ட வரையில் ஸிவில்புரோஸீஜர் சட்டத்தின் பிரகாரம் கண்டெழுதவேண்டிய விவரங்களை இந்த விண்ணப்பத்தில் கண் டெழுதவேண்டியது, தவிரவும், வக்கீல் பீஸுஉள்பட இந்த விண்ணப்பத்தை செய்வதற்குப் பிடித்த செலவைக் கொடுக்கும்படி உத்திரவு செய்ய

வேணுமென்று கோரிக்கொள்ளப்படுகிறதென்றும் அந்த விண்ணப்பத்தில் கண்டெழுத வேண்டியது. டிக்கிரி பெற்றவனனவன் டிக்ரியை நிறைவேற்றும்படி கோரிக்கொண்டிருந்தாலும் இல்லாமற் போனலும் டிக்ரி செய்யப்பட்ட பிற்பாடு எப்போதாவது ஷை விண்ணப்பத்தைக் கொடுத்துக்கொள்ளலாம்.

2. பாபர்வியாச்சியங்களில் சேரவேண்டிய ஸ்டாம்பு வரியை வசூல் செய்ய மார்க்கமில்லாததாக விசாரணையினல் தெரியவரும்பக்ஷத்திலும், அல்லது அப்படி வசூல்செய்வதற்குள்ள பாத்தியதையானது காலம்கடந்துவிட்ட காரணத்தால் ஊர்ஜிதத்துக்குக் கொண்டு வரப்படக்கூடாமையாகவாவதிருக்கும் பக்ஷத்திலும், அந்த ஸ்டாம்புவரியை வசூலாகக்கூடாததென்று கணக்கிலிருந்து அடித்துவிடும்படி அனுமதி கொடுக்கும்பொருட்டு போர்டாருக்கு ரிபோர்டு செய்யவேண்டியது. பிரதிவிஷயத்திற்கும் பிரத்தியேகமான ரிபோர்ட்டு செய்துகொள்ளப்படவேண்டியஅவசியமில்லை; இப்பேர்ப்பட்ட எல்லாவிஷயங்களையும் ஒரு ஸ்டேட்மெண்டில் தயார்செய்து வருஷவாரியில் அனுப்பலாம்.

3. பாபர் வியாச்சியங்களில் சேரவேண்டிய ஸ்டாம்புவரியை வசூல் செய்ய ஆரம்பிக்கும்பக்ஷத்தில், பார்ட்டிகள் தங்களுக்கு தினம்ஜீவனம்சத்துக்குள்ள மார்க்கங்களைக்கூட இழந்து போவார்கள் போலிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஸ்டாம்பு வரியை வசூல் செய்ய ஜப்தி கட்டளை முதலானவைகளை பிறப்பிக்காமலிருக்க கலெக்டர்களுக்கு ஸர்வாதிகாரமுண்டு; அப்பேர்ப்பட்ட வரித்தொகையை மேல் 2வது பிரகரணத்தில் கண்டமாதிரியாய்ப் பைஸல் செய்யலாம்.

49. ஏழை என்கிறகாரணத்தினல் ஸ்டாம்பு வரிசெலுத்தாமல் வியாச்சியம் செய்யவேணுமென்று செய்து கோள்ளப்படும் விண்ணப்பங்களை எப்படி பைசல் செய்யவேண்டு மென்பதைப்பற்றி:— இப்பேர்ப்பட்ட விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக ஸிவில் புரொஸீஜர் கோட் 403–வது பிரிவு பிரகாரம் நோட்டீஸை வரப்பெற்றுக் கொண்டதின் மேல் கலெக்டர்கள் விண்ணப்பதாரனுடைய வாஸ்தவமான அந்தஸ்த்து பலானதென்பதைப்பற்றி அவசியமான விசாரணை செய்து பிறகு வாஸ்தவ்யத்தில் அவன் ஏழைதான் என்று திருப்திகரமாய் தெரியவந்தால் அப்படி செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தைப்பற்றி தகரார் செய்யவேண்டியதவசியமில்லை.

2. ஆனல் அப்பேர்ப்பட்ட விசாரணை செய்ததின்பேரில் மேற்கண்ட விதமாய் விண்ணப்பதாரனிட ஸ்திதி முதலானவைகளை யோ

ஜிக்குமளவில், பாபராக வியாச்சியம் செய்ய அனுமதி கொடுக்க வேண்டியதவசியமில்லை என்று பிரத்தியக்ஷமாய் ஏற்பட்டால் கலெக்டரானவர் அந்த வியாச்சியத்தில் பிரதிவாதி அல்லது அப்பீல் எதிரி (அதாவது மேற்கண்ட பாபர்வியாச்சியம் செய்ய விண்ணப்பம் செய்து கொள்ளுகிறவனுக்குஎதிரி) பட்சத்தில் சேர்ந்து பிறகு மேற்படி பிரதிவாதியோ அல்லது அப்பீல் எதிரியோ அந்த விண்ணப்பத்தைப் பற்றி தகரார் செய்ய இஷ்டப்படும் பட்சத்தில் அவனுக்கு அனுஸரணையாகயிருந்துக் கொண்டு அவன் ஏற்படுத்திய வக்கீலையே தாமும் ஏற்படுத்தி கலெக்டரானவர் விண்ணப்பத்தை தகரார் செய்து தடுக்சக்கூடும்.

3. யாதொரு பிரதிவாதியோ அல்லது அப்பீல் எதிரியோ மேற்படி விண்ணப்பத்தைப்பற்றி, தகரார் செய்ய இஷ்டமில்லாதவனுயிருந்து, அப்பேர்ப்பட்ட விண்ணப்பத்தை அவசியமாய் தகரார் செய்ய வேண்டுமென்று கலெக்டர் அபிப்பிராயப்பட்டால் ஒரு வக்கீலை நியமித்து சாக்ஷிகளைக் கோரவேண்டியது. இப்பேர்ப்பட்ட விஷயங்கள் நேரிடுவது சாதாரணமாய் அபரூபமாயிருக்கும். சட்டப்பிரகாரம் வக்கீலுக்குச்சேரவேண்டிய பீஸுக்காகவும் நேர்ந்த இதரசெலவுகளுக்காகவும் போர்டார் அனுமதிகொடுப்பார்கள். வக்கீல் பீஸும் இதர செலவும் சேர்ந்ததுகையானது, கோர்ட்டார்(இதரபார்ட்டி கொடுக்கவேண்டியதென்று) தீர்ப்புசெய்த செலவுதுகைக்கு அதிகப்படாமலிருந்து அப்பேர்ப்பட்ட செலவுதுகையை வக்கீலே முன் போட்டு நடத்தியிருக்கிற விஷயங்களில் கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டு வசூலான செலவு துகையிலிருந்து வக்கீல்பீஸையும் இன்னும் அவருக்கு நேர்ந்த செலவுகளையும் முஜரா செய்து கொள்ளும்படி வக்கீலுக்குக் கலெக்டர் உத்திரவு கொடுக்கலாம். யாதொருமனிதன், பாபராக வியாச்சியம் செய்யலாமென்று உத்திரவுகொடுக்கப்பட்டபிற்பாடு அந்த வியாச்சியத்தில் பின்னிட்டு நடக்கிற நடவடிக்கைகளை கவனித்துகொண்டு வரும்படி ஒரு வக்கீலை நியமிக்கவேண்டியதவசியமில்லை. ஆனால் வாதியோ அல்லது அப்பீல் வாதியோ பாபராகவியாச்சியம் செய்யலாமென்று தயாவிஷயமாயக் கொடுத்த உத்திரவுக்கு அவன் அபாத்திரனென்று பின்னிட்டு தெரியவந்தால்இந்த ஆர்டரின் 2-வதுபிரகரணத்தில்கண்டபடி அந்தவியாச்சியத்தின் எதிரிஅல்லது அப்பீல் எதிரியுடனேசேர்ந்தாவது, அல்லது 3-வது பிரகரணத்தில் கண்டபடி தனியாயாவது, கலெக்டரானவர் விண்ணப்பத்தைப்பற்றி தகரார்செய்யலாம்.

50. **நான் ஜுடிஷல் ஸ்டாம்புகள்**:—(கோர்ட்டுகளில் செலாமணியாய் வருகிற ஸ்டாம்புகள் தவிர மற்ற ஸ்டாம்புகளுக்கு நான் ஜுடிஷல் ஸ்டாம்புகளென்று பெயர்); **ஸ்டாம்புவெண்டர்கள்**:—1879ஞூத்

திய 1–வது ஆக்டின் 55, 57–வது பிரிவுகள் பிரகாரம் ஸ்டாம்புகளை விற்பனை செய்யும்பொருட்டு கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அடியில்கண்டிருக்கிறது. போர்டாரோ கெவர்ண்மெண்டாரோ எந்தெந்த சர்கார் உத்தியோகஸ்தர்கள் தங்களிட அசல்உத்தியோகத்தோடும் கூட ஸ்டாம்புகளை விற்பனை செய்யவேண்டுமென்றும் உத்திரவு செய்கிறார்களோ அவர்களுக்கு எக்ஸபிஷியோ வெண்டர்களென்று பெயர். கலெக்டரால் லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது, அல்லது லைசென்ஸ் கொடுக்கும்படி போர்டாரோ அல்லது கெவர்ண்மெண்டாரோ அதிகாரம் கொடுத்திருக்கிற வேறு உத்தியோகஸ்தரால் லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது, இருக்கிறவர்களுக்கு லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் என்று பெயர்.

2. எக்ஸ்பிஷியோ வெண்டர்கள் (அல்லது ஸர்க்கார் வெண்டர்கள்) எந்த ஸ்டாம்புகளை விற்கும்படி போர்டாரோ கெவர்ண்மெண்டாரோ உத்திரவு செய்கிறார்களோ அந்த ஸ்டாம்புகளை விற்கவேண்டியது. லைசென்ஸில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஸ்டாம்புகளை லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் விற்கவேண்டியது.

3. எந்த அதிகாரியானவர் முதலில் லைசென்ஸ் கொடுத்தாரோ அவரால் பின்னிட்டு எப்போதாவது அந்த லைசென்ஸானது ரத்துசெய்யப் படக்கூடும்; லைசென்ஸ் பெற்றவரிடபெயர், லைசென்ஸ் பிரகாரம் விற்கவேண்டிய ஸ்டாம்புகளின் விபரம், விற்பனை செய்யவேண்டிய இடம் இவைகளையும் இன்னும் அவசியமான அம்சங்களையும் லைசென்ஸில் கண்டெழுதவேண்டியது; லைசென்ஸ்கொடுக்கும் அதிகாரியானவர் லைசென்ஸில் கையெழுத்து செய்யவேண்டியது.

4. 6–வது ரூலுக்குட்பட்டு, கெவர்ண்மெண்டாரிடத்தில் ரொக்கபணம் செலுத்தி ஒவ்வொன்றும் 5 ரூபாய் அல்லது அதற்குக்குறைந்த விலையுள்ள ஸ்டாம்புகளை 5 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த துகைக்கு வாங்குகிற பிரதி லைசென்ஸ் பெற்ற வெண்டரும் 100 க்கு $6\frac{1}{4}$ லுக்குக்குறையாமல் டிஸ்கவுண்டு பெற்றுக்கொண்டு வாங்கிக்கொள்ள வேண்டியது.

5. 6வது ரூலுக்குட்பட்டு, பிரதி ஸ்டாம்பும் 5 ரூபாய்க்கு மேற்பட்டும் 50 ரூபாய்க்கு அதிகப்படாமலும் விலையுள்ள ஸ்டாம்புகளை கெவர்ண்மெண்டாரிடத்தில் ரொக்கப்பணத்திற்கு வாங்குகிற பிரதி லைசென்ஸ் பெற்ற வெண்டரும் அடியிற்கண்ட வீதங்களுக்கு மேற்படாமல் போர்டாராலோ கெவர்ண்மெண்டாராலோ ஏற்படுத்தப்படக்கூடிய டிஸ்கவுண்டை பெற்றுக்கொண்டு ஸ்டாம்புகளை வாங்கிக்கொள்ள வேண்

டியது:—அதாவது கெவர்ண்மெண்டாரால் ஸ்டாம்பு விற்கப்படுகிற இடங்களில் லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் 100 க்கு 3 வீதமாயும், மற்ற விடங்களில் லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் 100 க்கு 5 வீதமாயும்;

6. 50 ரூபாய்க்கு மேற்பட்ட விலையுள்ள யாதொரு ஸ்டாம்பை வாங்குவதற்காவது, வாங்குகிறவனாலேயே கொடுக்கப்பட்ட காகிதம் முதலானவஸ்துக்களின்பேரில் அச்சிடப்பட்ட ஸ்டாம்புக்காவது, பலான வித ஸ்டாம்பில் அல்லது பலான விலையுள்ள ஸ்டாம்பு தினுஸில் இந்த விதிகள் பிரகாரம் ஒரு தருணத்தில் எவ்வளவு வாங்கவேண்டுமோ அவ்வளவுக்குக்குறைந்து வாங்கினாலாவது, யாதொரு டிஸ்கவுண்டும் கொடுக்கப்படமாட்டாது,

7. லைசென்ஸ் பெற்ற ஸ்டாம்பு வெண்டர்களுக்கு அவர்கள் ரொக்கப்பணம் செலுத்த வேண்டுமென்று கேட்காமலே ஸ்டாம்புகள் கொடுக்க ரிவினியூ போர்டாராவது கெவர்ண்மெண்டாராவது அதிகாரம் கொடுக்கலாம். 100 க்கு 2 க்கு மேற்படாமல் கெவர்ண்மெண்டாராலோ போர்டாராலோ ஏற்படுத்தப்பட்ட வீதப்பிரகாரம் மேற்கண்ட மாதிரியாய் பெற்றுக்கொண்ட ஸ்டாம்புகளுக்கு லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் கமிஷன் பெற்றுக்கொள்ளலாம். இந்த விஷயத்தில் லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் கெவர்ண்மெண்டாருக்குச்செலுத்த வேண்டிய துகைக்கு அவர்களிடமிருந்து போதுமான ஜாமீன் வாங்கிக்கொள்ளவேண்டியது.

8. பிரதி லைசென்ஸ் பெற்ற வெண்டரும் தன்னிட பெயரையும் ஸ்டாம்புகளை விற்க லைசென்ஸ் பெற்றவர் என்றவார்த்தைகளையும் இங்கிலீஷிலும் ஜில்லாவின் சுயபாஷையிலும் ஒரு பலகையில் எழுதி அந்தப் பலகையை தான்ஸ்டாம்பு விற்கும் இடத்திற்கு வெளியே எல்லாராலும் பார்க்கப்படக்கூடிய இடத்தில் மாட்டிவைக்கவேண்டியது. தான் விற்கும் ஸ்டாம்புகளுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்டுகளையும் ஷிடியூல்களையும், மேற்கண்ட விதிகளை இங்கிலீஷிலும் மேற்கண்ட சுயபாஷையிலும் ஸ்டாம்பு விற்குமிடத்தில் ஸ்டாம்பு வாங்குகிறவர்களால் பார்க்கப்படும் பொருட்டும் வாசிக்கப்படும்பொருட்டும் வைத்திருக்கவேண்டியது.

9. யாதொரு சர்க்கார் வெண்டர்அல்லது (எக்ஸபீஷியோவெண்டர்) லைசென்ஸ் பெற்ற வெண்டர்களுக்கல்லாமல் வேறே யாருக்காவது ஸ்டாம்புகளை விற்கும்போதும், ஷை பிரதி ஸர்க்கார் வெண்டரும் பிரதி லைசென்ஸ் பெற்ற ஸ்டாம்பு வெண்டரும் தான் விற்கிற பிரதி ஸ்டாம்பு காகிதத்தின் பின்புறத்திலும் அடியிற்கண்ட அம்சங்களைக்கண்டெழுதவேண்டியது:—கெவர்ண்மெண்டார் உத்திரவையனுஸரித்த ஒரு

தொடர் நெம்பரும், விற்பனை செய்யும் தேதியும், ஸ்டாம்பு வாங்குகிறவரிட பெயர் இருப்பிடமும், எந்தமனுஷன் ஸ்டாம்புக்காக பணத்தை ஆஜர் படுத்துகிறானோ அந்த மனிதனுக்கல்லாமல் வேறே யாருக்காவது பிரயோஜனப்படும்பொருட்டு ஸ்டாம்பு வாங்கப்பட்டால் அந்த மனுஷனிட பெயரும் இருப்பிடமும், ஸ்டாம்பின்கிரயத்தை எழுத்தால் பூருவும் தன்னிட வழக்கமான கையெழுத்தையும் ஆகிய இந்த அம்சங்களைக் காணவேண்டியது; அதேகாலத்தில் கெவர்ண்மெண்டாரால் குறிக்கப்படக்கூடிய பாரப்பிரகாரம் தான் தயார் செய்துவைத்திருக்கிற ஒரு ரிஜிஸ்டரிலும் மேற்கண்ட அம்சங்களைப் பதியவேண்டியது. விற்கப்பட்ட ஸ்டாம்பின் பின்புறத்தில் மேற்கண்டமாதிரியல்லாமல் ஸ்டாம்பு வெண்டரானவன் தப்பான மாதிரியாக இண்டார்ஸ் மெண்டு எழுதும்பக்ஷத்திலும், தன்னிட ரிஜிஸ்டரில் தப்பு பதிவுகளைச்செய்தாலும் இந்தியன் பினல்கோட் பிரகாரம் தண்டனைக்குள்ளாகிறான்.

10. விற்பனைக்காக வெண்டரிடத்தில் இருக்கப்பட்ட யாதொரு ஸ்டாம்பின் கிரயத்தை யாதொருமனுஷியன் கெவர்ண்மெண்டாருக்குச் சேரவேண்டிய தொகைக்காக அந்த ஜில்லா கலெக்டரால்அங்கீகரித்து கொள்ளப்படக்கூடியஎவ்வித நாணயவாரியிலாவது செலுத்தி அந்த ஸ்டாம்பு வேணுமென்று கேட்டால், அப்பேர்ப்பட்ட ஸ்டாம்பை தாமதமன்றியில் பிரதி சர்க்கார் வெண்டரும் அல்லது லைசென்ஸ் பெற்ற வெண்டரும் கொடுக்கவேண்டியது.

11. எந்தஸ்டாம்புகளாவது விற்கப்படக் கூடாதென்று தகுந்த அதிகாரிகளால் நிறுத்தி விடப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகளை யாதொரு ஸர்கார் வெண்டராவது, லைசென்ஸ் பெற்ற வெண்டராவது விற்கக்கூடாது.

12. ரிவினியூபோர்டாராலாவது கெவர்ண்மெண்டாராலாவது ஏற்படுத்தப்படக்கூடிய கணக்குகளை பிரதிஸர்க்கார் வெண்டரும் லைசென்ஸ் பெற்ற வெண்டரும் வைத்திருக்கவேண்டியது. அப்பேர்ப்பட்ட கணக்குகளையும் 9-வது விதியில் கண்டபடி வைத்திருக்கப்பட வேண்டிய ரிஜிஸ்டரையும் தன்வசத்திலிருக்கப்பட்ட கையிருப்பு ஸ்டாம்புகளையும் எப்போதாவது பரிசீலனை செய்ய வேணுமென்று ஜில்லா கலெக்டராவது அல்லது கலெக்டராலோ போர்ட்டாராலோ கெவர்ண்மெண்டாராலோ அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறேஉத்தியோகஸ்தராவது சொல்லும் பட்சத்தில் அப்படி பரிசீலனை செய்வதற்காக லைசென்ஸ்பெற்ற வெண்டரும் அவைகளை (அந்த கணக்கு வகையறுக்களை) க்காண்பிக்கவேண்டியது.

(13.) கலெக்டராவது, போர்டாராலோ கெவர்ண்மெண்டாராலோ அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறு உத்தியோகஸ்தராவது, யாதொரு ஸ்டாம்பு வெண்டரிட வசத்திலிருக்கப்பட்ட ஸ்டாம்புகளை எப்போதாவது ஒப்புவித்து விடவேணுமென்று கேட்டால், பிரதி ஸர்கார் வெண்டரும் லைசென்ஸ் பெற்ற வெண்டரும் அப்படியே ஒப்புவித்து விடவேண்டியது. அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகளுக்கு அவர்கள் விலைகொடுத்திருந்து அப்பேர்ப்பட்ட துகையிலிருந்து, அவர்களுக்கு கமிஷன்துகை ஏதாவது கொடுக்கப்பட்டிருந்தால், அதைக்கழித்தபிற்பாடு மீதிதுகையைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

(14.) காகிதத்திலேயே அச்சிடப்பட்ட பலான கிரயமுள்ள ஸ்டாம்பு காகிதம்வேண்டுமென்று யாராவது கஜானா டிப்டிகலெக்டரையாவது ஸ்டாம்பு வெண்டரையாவது கோரிக் கொண்டால், கஜானா டிப்டிகலெக்டரோ ஸ்டாம்பு வெண்டரோ அப்பேர்ப்பட்ட கிரயத்துகைக்குக் கூடுமானால் ஒரேதாள் ஸ்டாம்பை கொடுக்கவேண்டியது. ஒரேதாளில் அவ்வளவு கிரயமுள்ள ஸ்டாம்பு காகிதம் இல்லாமற் போனால் அந்ததுகை மொத்தத்துக்கு கூடுமானவரையில் அதமபட்சம் எத்தனை தாள்கள் சேர்த்தால் துகை சரியாயிருக்குமோ அத்தினை தாள்கள்* கொடுக்கவேண்டியது. பின்சொல்லப்பட்ட (அதாவது, கேட்டஸ்டாம்பு இல்லாத்தால் குறைந்த விலையுள்ள ஸ்டாம்பு தாள்கள் சேர்த்து கொடுக்கிற) விஷயத்தில், தன்னிடத்தில் இருக்கப்பட்ட ஸ்டாம்புகளுக்குள் உயர்ந்தவிலையுள்ள ஸ்டாம்பு காகிதத்தில், "கேட்ட விலைபொறுமான ஸ்டாம்புகாகிதமில்லாத்தால் அவ்வளவு துகைக்குச் சமானமாய் அதமபட்சம் சங்கியையுள்ள தாள்கள் சேர்த்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கண்டெழுதவேண்டியது.

(15.) ஆகிலும், யாருக்காவது வேணுமென்று கேட்டுக்கொள்ளப்படும் ஸ்டாம்பு காகிதத்தின் கிரயமானது யாதொரு வெண்டர் விற்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற உயர்ந்த துகைக்கு மேற்பட்டு மதிப்புள்ளதாயிருந்தால், அப்பேர்ப்பட்ட ஸ்டாம்பை கொடுப்பதற்காக தான் விற்கக்கூடிய ஸ்டாம்புகளில் பலதாள்களைச் சேர்த்து 14–வது விதியில்

---

* உதாரணம் ஒருவன் 30 ரூ ஸ்டாம்பு வேணுமென்று கேட்கிறான். ஸ்டாம்பு வெண்டரிடத்தில் 30 ரூ ஸ்டாம்பு கிடையாது, 15 ரூபாய் ஸ்டாம்புகளும் 10 ரூ ஸ்டாம்புகளுமிருக்கிறது, இப்பேர்ப்பட்ட விஷயத்தில் 15 ரூபாய் ஸ்டாம்பில் இரண்டு ஸ்டாம்பு கொடுக்கவேண்டுமேயல்லாமல் 10 ரூபாய் ஸ்டாம்பில் மூன்றுகொடுக்கக்கூடாது.

கண்டபடி ஒரு ஸர்டிபிகேட்டு தயார்செய்து அப்படி வேணுமென்று சொல்லப்பட்ட ஸ்டாம்பை கொடுப்பிக்க எத்தனிக்கக்கூடாது.

2. போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட உபவிதிகளை இதனடியில் 8 பிரகரணங்களில் கண்டிருக்கிறது.

3. கலெக்டராபீஸில் கஜானச்சி (நகதிஆபிஸர்) யும், தாசீல்தார்கச்சேரியில் தாலூக்சிரஸ்தேதாரும், எக்ஸ்பிஷியோ (சர்க்கார்) வெண்டர்கள்; ஆனால் கலெடராபீஸிலிருக்கப்பட்ட கஜானச்சியானவர் லைசென்ஸ்பெற்ற வெண்டர்களுக்குத்தவிர வேறே யாருக்கும் அட்ஹிஸிவ் லேபில்களைத்தவிர மற்ற லேபில்களை விற்கக்கடமைப்பட்டவரல்ல. கலெக்டர் தம்மிடயுக்தானுஸாரம் லைசென்ஸ் கொடுத்து வெண்டர்களை ஏற்படுத்தலாம். டிவிஷனலாபீஸர்களும் தங்களிட டிவிஷனுக்குள் லைசென்ஸ்கள் கொடுக்கலாம்.

4. பலான விதமான ஸ்டாம்புகளைத்தான் விற்கவேண்டு மென்று உத்திரவு செய்யப்பட்டிருந்தாலொழிய, சர்க்கார் வெண்டர்கள், எல்லா வித கிரயமுள்ள ஸ்டாம்புகளையும் வேணுமென்று கேட்கிற எல்லாருக்கும் விற்கவேண்டியது.

5. லைசென்ஸ் பெற்ற ஸ்டாம்பு வெண்டர்களுக்குக்கொடுக்கப்படும் லைசென்ஸானது அடியில்கண்டபாரப்பிரகாரமிருக்க வேண்டியது:— "ஸி என்கிற ஜில்லாவின் கலெக்டராகிய ஏ. பீ. என்கிற நான், ஷை ஜில்லா எப். என்கிற தாலூகாவில் இ. என்கிற இடத்தில், பிரதி ஸ்டாம்பும் 50 ரூபாய்க்கு மேற்படாமல் மதிப்புள்ள ஜெனரல் ஸ்டாம்பு ஆக்ட் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட எல்லா ஸ்டாம்புகளையும் விற்கும்பொருட்டு இதனால் டீ என்பவனுக்கு லைசென்ஸ் கொடுக்கிறேன்;" லைசென்ஸை பெற்றுக்கொள்வதற்கு முன்னமே, லைசென்ஸ் கொடுக்கப்பட்டவனானவன் அடியில் கண்ட பாரப்பிரகாரம் ஒரு உடன்படிக்கை கொடுக்கவேண்டியது:—"ஸி என்கிற ஜில்லா கலெக்டரால் ஸ்டாம்பு விற்கும்படி ஏ. பீ. என்கிற எனக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டபடியினாலே—ரூபாய்க்கு ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் துரையவர்களுக்கு இதனால் பிணை படுகிறேன்; ஸ்டாம்பு விற்கவேண்டியதைப்பற்றியும் அவைகளை வைத்துக்கொள்ள வேண்டிய விதத்தைப்பற்றியும் கலெக்டரால் எனக்கு அப்போதைக்கப்போது பிறப்பிக்கப்படும் உத்திரவு பிரகாரம் நடக்கவும், லைசென்ஸ் பிரகாரம் நான் விற்கக்கூடிய எல்லா ஸ்டாம்புகளிலும் போதுமான அளவு கையிருப்பில் வைத்துக்கொள்ளவும், நாயிற்றுக்கிழமை நீங்கலாகவும், டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட சர்க்கார் விடுமுறை நாள்கள் நீங்கலாகவும், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில்

லைசென்ஸில் கண்ட இடத்தில் நான் ஸ்டாம்புகளை விற்கவும், போர்டா ரால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் கணக்குகளை வைத்துக் கொள்ளவும், ரிபோர்ட், ஸ்டேட்மெண்டு, முதலானவைகளை தயாரித்து அனுப்பவும், கலெக்டரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட யாதொரு ஆஸாமியானவர் என்னுடைய கணக்குகள், புஸ்தகங்கள், கையிருப்பு ஸ்டாம்புகள், இவைகளை பரிசீலனை செய்யவேணுமென்று கேட்கும் போதெல்லாம் அவைகளை அவருக்கு எடுத்துக்காட்டவும், என்னுடையவும், என்னால் நியமிக்கப்பட்ட வேறு யாதொரு மனுஷியனுடையவும், கிரமமான ஜாக்கிரதை குறைவினால் நேரிடும் நஷ்டங்களையெல்லாம் கட்டிக்கொடுக் கவும், பொதுவாய்ச் சொல்லுமிடத்து நான் ஸ்டாம்பு வெண்டரா யிருக் கிறதை முன்னிட்டு நான் பொறுப்பாளியாயிருக்கிற கடமைகளையெல் லாம் யோக்கியமாயும் கிரமமாயும் நிறைவேற்றவும், இதனால் நான் கடமைப் பட்டவனாகிறேன்."

6. ஒரு அணா ஸ்டாம்புகளை மொத்தமாய் 5 ரூபாய்க்குக் குறையா மல் வாங்குகிறவர்களுக்கு 100 க்கு $6\frac{1}{4}$ வீதம் கமிஷன் கொடுக்கப்படும்; பிரதிஸ்டாம்பும் 5 ரூபாயும் அதற்குக் குறைந்தும் விலையுள்ள ஸ்டாம்பு களை (ஒரு அணா ஸ்டாம்பு நீங்கலாக) 5 ரூ. மொத்தத்துக்குக்குறையாமல் வாங்கினால் 100 க்கு 5 வீதம் டிஸ்கவுண்டு கொடுக்கப்படும்.

7. பிரதி ஸ்டாம்பும், 5 ரூபாய்க்கு மேற்பட்டதும் 50 ரூபாய்க்கு மேற்படாமலு மிருக்கிற ஸ்டாம்புகளை வாங்குகிற லைசென்ஸ் வெண் டர்களுக்கு, சர்க்கார் வெண்டர்கள் விற்குமிடத்திற்கு 3 மயிலுக்குட்பட்ட இடத்தில் ஸ்டாம்பு விற்கும்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வெண்டரா யிருந்தால், 100 க்கு 3 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்; அப்படி 3 மயி லுக்குட்பட்டதாயிராத இடத்தில் விற்கும்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வெண்டராயிருந்தால், 100க்கு 4 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

8. டிஸ்கவுண்டுவழக்கப்பிரகாரம் டிஸ்கவுண்டு கொடுக்கப்பட்டு ஸ்டாம்பு விற்கப்படுகிற யாதொரு இடத்தில் ஸ்டாம்பு விற்பனையானது ரொம்ப ஜாஸ்தியாயிருப்பதினால் அப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிற டிஸ் கவுண்டு வீதங்கள் அனவசியமாய் ஜாஸ்தியாயிருந்தால் கலெக்டர்கள்முன் னடியாக போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அந்த இடத் தில் ஸ்டாம்புகளை பலான கமிஷன் பெற்றுக்கொண்டு விற்க இஷ்டமுள்ள வர்களெல்லாரும் ஆஜராகவேண்டிய தென்று தெரிவிக்கவேண்டியது.

9. ஏ. 9-வது கெவர்ன்மெண்டு விதி பிரகாரம் எழுதவேண்டிய இண்டார்ஸ்மெண்டை பில் ஆப் எக்ஸ்சேஞ்சு, பிராமசெரி நோட் வகை

யருக்கள் முதலிய ஸ்டாம்பு காகிதங்கள் எல்லாவற்றிலும் கண்டெழுத வேண்டியது; கோர்ட்பீஸ் அல்லாத நான்ஜூடிஷல் அட்ஹீஸிவ் (ஒட்டப்படக்கூடிய) ஸ்டாம்புகளில் எழுதக்கூடாது; புதுமாதிரி கோர்ட்பீஸ் அட்ஹீஸிவ் லேபில்களில் விடப்பட்டிருக்கும் காலி இடத்தில் வெண்டரானவர் லேபில் வாங்குகிறவனிட பெயரையும் விற்பனை தேதியையும் தன்னிடகையெழுத்தையும் போடவேண்டியது; யாதொரு சர்க்கார்வருஷத்தில், முதலில் விற்ற ஸ்டாம்பிலிருந்து துடர் நெம்பர் ஆரம்பித்து வருஷமாகையரில் விற்கப்பட்ட ஸ்டாம்புடன் அந்த நெம்பர் முடிவு பெறும்; லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் ஸ்டாம்புகளை விற்கும்போது துடர் நெம்பராவது மேல்கண்ட இண்டார்ஸ் மெண்டாவது எழுதப்படமாட்டாது; குறித்த பாரத்தில் ஒரு ரிஜிஸ்டரில் விற்பனைகளை பதிந்து வைக்க வேண்டியது, பிரதி விற்பனையும் செய்தவுடனே பதிவு செய்யவேண்டியது; யாதொரு வெண்டரானவர் தன் கையிலிருக்கப்பட்ட ஸ்டாம்புகளில் சொந்த உபயோகத்திற்காக ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டால் அதை விற்பனையாக பாவித்து அவ்விதமாகவே புஸ்தகங்களிலும் எழுதவேண்டியது; ஒரேமனிதன் ஒரேகாலத்தில் ஒரேவித விலையுள்ள அட்ஹீஸிவ் ஸ்டாம்புகளை வாங்கினல் கணக்கில் ஒருமொத்தமாகவே எழுதிக்கொள்ள வேண்டியது, ஆனல் 4—வது கலத்தில் அப்பேர்ப்பட்ட ஸ்டாம்புகளின் ஸங்கியை இவ்வளவென்று காண்பிக்கவேண்டியது; பிரதிதினமும் புஸ்தகத்தில் பதிந்திருக்கிறவைகளை மொத்தம் போட்டு வெண்டர் அதில் இனிஷியல் செய்ய வேண்டியது.

பீ. (1.) ஸ்டாம்பு வெண்டர்கள் ஸ்டாம்பு காகிதங்களில்தாங்கள் எழுதிய அம்சங்களை மாற்றவே கூடாது.

(2.) யாதாவது ஒரு வெண்டர் இந்த விதியை மீறிநடந்ததாக ருஜூவானல் அவனிட லைசென்ஸ் ரத்து செய்யப்படும்.

(3.) தெரியாமைத்தனமாய் தப்பாய் யாதொரு ஸ்டாம்பின் பின்புறத்தில் எழுதிப்போட்டால் அப்பேர்ப்பட்ட ஸ்டாம்பு காகிதம் 1879 ஷு 1-வது ஆக்ட் 51 பிரிவின் ஏ பாகப்பிரகாரம் கெட்டுப்போனதாகபாவித்து அவற்றின் கிரயத்தை கொடுக்கும்படி கேட்கலாம்.

10. எல்லா ஸர்க்கார் வெண்டர்களும் லைசென்ஸ்பெற்ற வெண்டர்களும் அடியிற்கண்ட கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டியது; தினவருமானத்தைக்காட்டுவதற்காக 25-வது பாரம், 27-வது பாரங்கள்:—ரொக்கமாய்ப்பணம் கொடுத்து வாங்கின ஸ்டாம்புகளைப் பதிவுசெய்வதற்காக 25-வது பாரம்கணக்கு. கமிஷன் பெற்றுக்கொண்டு விற்பனை செ

ய்வதற்காக வாங்கப்பட்ட ஸ்டாம்புகளையும் சர்க்கார் வெண்டர்களால் வாங்கப்பட்ட ஸ்டாம்புகளையும்பதிவதற்காக 27-வதுபாரம்; எல்லாஸ்டாம்புகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட வுடனே அவைகளை கணக்குகளில் பதிய வேண்டியது. பிரதி மாதத்தின் கடைசி தினத்தில் வெண்டர்கள் கணக்கில் எல்லாபத்திகளிலும் உள்ள எண்ணிக்கைகளைக்கூட்டி மாதமுழுமையிலும் வசூலான வருமான மொத்தத்தை ஒரேவரியில் பதியவேண்டியது; இந்தவரிக்குக் கீழாக 26-வது அல்லது 28-வது பாரத்தைப்பார்த்து விற்பனைகளைப்பதிய வேண்டியது. வரும்படியிலிருந்து விற்பனை எண்ணிக்கைகளைக்கழிக்க வேண்டியது; கழித்துவந்த மீதியை அடுத்த மாதத்தில் கையிருப்பாக கட்டிக்கொள்ள வேண்டியது; 26, 28-வது பாரங்கள் அல்லது தினவிற்பனைகளைக் காட்டும் கணக்குகள்; ரொக்க பணத்திற்கு வாங்கப்பட்ட ஸ்டாம்புகளைப் பதிவதற்காக 26-வது பாரமும், கமிஷன் பெற்றுக்கொண்டு விற்பனை செய்வதற்காக வாங்கின ஸ்டாம்புகளையும் சர்க்கார் வெண்டர்கள் வாங்கின ஸ்டாம்புகளையும் 28-வது பாரமும்; பிரதி மாசம் ஆகையரிலும் இந்த கணக்குகளை மொத்தம் போடவேண்டியது. 55, 56-வது பாரங்கள் ஸ்டாம்பு வரவு செலவைக்காட்டும் மாதாந்திர கணக்குகள்; 75-வது பாரப்பிரகாரம் சர்க்கார் வெண்டர்களும், 76-வது பாரப்பிரகாரம் லைசென்ஸ் வெண்டர்களும், பிரதிமாத ஆரம்பத்தில் அவைகளை டிப்டி கலெக்டர்களுக்கு அனுப்பவேண்டியது; டிஸ்கவுண்டு பெற்றுக்கொண்டு விற்கிற வெண்டர்களுடைய விற்பனைகளை 76-வது பாரத்தில் காணவேண்டியது; அப்படி காண்பிப்பதில் பலான விலையுள்ள ஒவ்வொருவித ஸ்டாம்பிலும் வரவுசெலவானதைப்பற்றி நிமித்தியமில்லாமல் ஒவ்வொருவகுப்பு ஸ்டாம்பிலும் உள்ளமொத்த வரவுசெலவுகளை மாத்திரம் காண்பிக்கவேண்டியது, டிஸ்கவுண்டு கழித்துகொண்டு வெண்டர்களுக்கு விறபதற்கும் மற்றவர்களுக்குச்செய்யும் விற்பனைக்கும் உள்ள வித்தியாசத்தை சர்க்கார் வெண்டர்கள்கவனிக்கவேண்டியது. இந்த பாரங்களடங்கியபுஸ்தகங்களை சர்க்கார்வெண்டர்களுக்கும் லைசென்ஸ்பெற்ற வெண்டர்களுக்கும் தேவையானபோதுகொடுக்கவேண்டியது. புஸ்தகம் கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள் புஸ்தகங்களின் பக்கங்களில் நெம்பர் கொடுத்திருக்கிறதா வென்றும் அந்த பக்கங்கள் இத்தனை என்று முதல்பக்கத்தில்பதியப்பட்டிருக்கிறதாவென்றும் பார்த்து கையெழுத்து செய்யவேண்டியது. கலெக்டருடைய எழுத்து மூலமான உத்திரவன்றியில் யாதொரு புஸ்தகத்தையும் பரிகரிக்கக்கூடாது.

11. சர்க்கார் வெண்டர்களைப்பற்றி அடியிற்கண்ட நிபந்தனைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (1) யாதொரு சர்க்கார் வெண்டருக்கு, அவர் ஸ்டாம்புவாங்கும்போதும் அவர் விற்பனைசெய்வதற்கும் யாதொருடிஸ்கவுண்

டும் கொடுக்கப்படமாட்டாது. (2) சிரஸ்தேதார் கையிருப்பிலிருக்கப்பட்ட கையிருப்பு ஸ்டாம்புகளையும் கணக்குகளையும் தாசில்தார் மாதவாரியில் பரிசிலனைசெய்து அப்படி செய்ததாக 75வது பாரத்தில் கையெழுத்து செய்ய வேண்டியது. (3) லைசென்ஸ்பெற்ற வெண்டர்களுக்கு டிஸ்கவுண்டின்பேரில் ஸ்டாம்புகள் விற்கப்படும்போது வெண்டரானவன் டிஸ்கவுண்டை கழித்துக்கொண்டு ஸ்டாம்புகளின் கிரயத்தைச் செலுத்தவேண்டியது. ஸ்டாம்பு கணக்குகளிலும் தாலூகா அல்லது ஹஜூர் கணக்குகளிலும் ஸ்டாம்பு கிரயம் முழுமையும் வரவு வைத்துக்கொண்டு டிஸ்கவுண்டைசெலவாக எழுதிக்கொள்ளவேண்டியது.

12 டிஸ்கவுண்டு வெண்டர்கள் சம்பந்தமாய் அடியில்கண்ட விதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (1) லைசென்ஸ்பெற்ற வெண்டர்கள் லைசென்ஸ்பிரகாரம் தாங்கள் விற்கக்கூடிய ஸ்டாம்புகளில் போதுமானவரையில் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியது. (2) டிஸ்கவுண்டு கழித்துக்கொண்டு ஸ்டாம்புகள் வாங்கியிருக்கிற யாதொரு லைசென்ஸ் வெண்டரானவன் இறந்துபோனலாவது அல்லது அவன் லைசென்ஸ்காலம் கடந்துபோயிருந்தாலாவது அல்லது லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டாலாவது அல்லது யாதொரு கோர்ட்டானது வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டாவது அல்லது எடுபட்டுப்போயாவது இருக்கின்றவைகளைப் போலொத்த காரணங்களினலாவது தன்கையிலிருக்கப்பட்ட ஸ்டாம்புகளைவிற்க அசக்தனயிருக்கும் பட்சத்தில் கலெக்டரானவர் மீதிஸ்டாம்பை விற்றுவிடும்படி வெண்டருக்காவது அல்லது அவர்களிட வார்ஸ்தார்களுக்காவது குறித்த ஓர்காலம் வரையில் ஊர்ஜிதத்திலிருக்கும்படி ஸ்பெஷல் லைசென்ஸ் கொடுக்கலாம், அல்லது 46-வது ஸ்டாண்டிங்கு ஆர்டரில்கண்ட விதிகள் பிரகாரம் ஸ்டாம்பின் கிரயத்தை திருப்பிக்கொடுத்தாலும் கொடுக்கலாம்.

13. 1879 ஹீத்திய 1-வது ஆக்ட் 9, பீ உட்பிரிபு பிரகாரம் இந்தியா கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளையனுஸரித்து ஸ்டாம்பு சூபரிண்டெண்டெண்டால் சொந்த தஸ்தாவேஜுகளில் ஒட்டப்பட்ட ஸ்பெஷல் அட்ஹிஸிவ் லேபில்களுக்கு இந்த விதிகள் சம்பந்தப்படா. விற்கும் பொருட்டு லைசென்ஸ் பெற்ற வெண்டர்களுக்கு கொடுக்கப்படும் ஸ்டாம்பு சூப்ரிண்டெண்டெண்டால் குறிக்கப்பட்டிருக்கிற பில்பேபர் விஷயமாய் டிஸ்கவுண்டு கொடுக்கப்படும்.

14. உபவிதிகள் பிரகாரம் லைசென்ஸ் பெற்ற வெண்டர்களிடமிருந்து வாங்கிய உடன்படிக்கைகளை ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்பது கட்டாயமல்ல. ஆகிலும் ஜாஸ்தியாய் ஸ்டாம்பு

வரவு செலவாய்க் கொண்டிருக்கிற விஷயங்களில் கலெக்டர்கள் ரிஜிஸ்டர் செய்யவேணுமென்று தங்கள் யுக்தானுஸாரம் கேட்கலாம்; ரிஜிஸ்ட்ரேஷன் செலவை வெண்டர்கள் கொடுக்கவேண்டியது.

15. ஏதோ அதி அபரூபமான விஷயங்களுக்கு மாத்திரம் சர்க்கார் வெண்டர்களுக்கு இதற்காக தனி சம்பளம் கொடுக்கப்படும்.

16. பிரதி ஜில்லாவிலும் நூறுயிரம் ஜனத்துகைக்கு அதமபக்ஷம் லைசென்ஸ் பெற்ற வெண்டர்கள் 5 பேர் வீதமாவது இருக்கவேண்டும்.

51. கோர்ட்டுபீஸ் ஸ்டாம்புகள்:—1879ஸூ த்திய ஸ்டாம்பு ஆக்டு 2–வது பிரிவு பிரகாரமும் கோர்டுபீஸ் ஆக்டின் 34-வது பிரிவு பிரகாரமும், 1879 ஸூ த்திய 1-வது ஆக்டு 53, 57-வது ஸெக்ஷன்களை அனுசரித்து பிரசுரம் செய்யப்பட்ட விதிகளானவை கோர்ட்டு பீஸ் ஸ்டாம்புகளுக்கும் சம்பந்தப்பட்டவை. ஆனல் கோர்ட்டு பீஸ் லேபிலுக்காக தனியாய் கணக்குகள் முதலானவை வைத்திருக்கவேண்டியது.

2. கோர்ட் பீஸ் ஆக்டு பிரகாரம், யாதொருபீஸ் முதலான வரியை செலுத்தவேண்டியதற்கு பதிலாக உபயோகபடுத்தப்படுகிற ஸ்டாம்பானது அப்பேர்ப்பட்ட வரிக்குச் சமானமான மதிப்புள்ள ஸ்டாம்பாயிருக்கவேண்டியது; அப்படி சரியான விலை பொறுமான ஸ்டாம்பு இல்லாமற் போகும் பட்சத்தில் அந்த விலைக்கு அடுத்த குறைந்தவிலையுள்ள ஸ்டாம்பை முதலிலும், அவ்விதமாய் முஜரா செய்யப்பட்ட துகைபோக மீதியிருக்கப்பட்ட துகைக்கு ஷை முதலாவது ஸ்டாம்புக்கு அடுத்து குறைந்த விலையுள்ளதாகிய ஸ்டாம்புகளை ஒட்டி பூரு துகைக்கும் இம்மாதிரியாக சரிப்படுத்த வேண்டியது.

3. கோர்ட்டு பீஸ் ஸ்டாம்புகளை பெரும்பான்மையாய் ஸர்க்கார் வெண்டர்கள் விற்கவேண்டியது ; ஆனல் இந்த வழக்கமானது அசௌகரியமுள்ளதாகவாவது கஷ்டமானதாகவாவது அபாயகரமானதாகவாவது இருந்தால் கலெக்டரானவர்கள் டிஸ்கவுண்டு கொடுத்து லைசென்ஸ் வெண்டர்களை ஏற்படுத்த வேண்டியது. 100 க்கு 1 விகிதம் டிஸ்கவுண்டு கொடுக்கப்படும், கலெக்டர்கள் ஷை டிஸ்கவுண்டை உயர்த்தவேணுமென்று அவசியமாக தங்களுக்கு தோன்றினல் இது விஷயமாய் முன்னடியாக போர்டாரிட ஸ்பெஷல் அனுமதியைப் பெற்றுக்கொண்டு 100 க்கு $1\frac{1}{2}$ வீதம் வரையில் உயர்த்தலாம்.

53. ஜெனரல் ஸ்டாம்புகளும் கோர்ட்டு பீஸ் ஸ்டாம்புகளும் ஒட்டவேண்டிய அவசியமில்லாமலாவது, குறைந்த விலையுள்ள

ஸ்டாம்புகள் ஒட்டக்கூடியவைகளாவது இருக்கப்பட்ட தஸ்தாவேஜுகள்:—(அனுபந்தத்தில் இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.)

54. தந்தி சமாசாரங்கள்:—ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு தந்திமூலமாய் அனுப்பப்படும் சமாசாரங்கள் வாய் மொழியான சமாசாரங்களாக பாவிக்கப்படுமோகையால் தந்திமூலமாய் அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு கோர்ட்டு பீஸ் ஆக்டுபிரகாரம் ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியமில்லை; ஆகிலும், இப்பேர்ப்பட்ட தந்தி சமாசாரங்கள் நேரிலாவது, கையெழுத்து போட்டாவது, அனுப்பக்கூடாதவைகளா யிருப்பதைப்பற்றி அந்த தந்திகளின் பேரில் யாதொரு முகிவான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படக் கூடாதாகையால், தந்தி சமாசாரம் அனுப்பியவுடனே அதற்கு ஒரு நகலையாவது அல்லது அந்த சமாசாரங்களை விமர்சையாய் எடுத்துச் சொல்லிய வேறே யாதொரு விண்ணப்பமுதலியவற்றையாவது அனுப்பும்போது அவைகளுக்கு சட்டப்பிரகாரம் ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

IV. (4)-வது அதிகாரம்.

ஸ்பெஷல்பண்டுகள்.

93. ஸ்பேஷல்பண்டுகள்.—இந்த ராஜதானியில் ஸ்பெஷல் பண்டுகள் விஷயமாய் வரவு செலவு முதலாகிய விசாரணைசெய்ய வேண்டிய கடமையை கலெக்டரிடமும் அதை மேல்விசாரணை செய்யவேண்டிய கடமையை போர்டாரிடத்திலும் ஒப்புவித்திருக்கிறது. * * *

2. ஸ்பெஷல்பண்டுகணக்குகள் சம்பந்தமாயும் அவைகளைத்தணிக்கை செய்வதற்காகவும் அனுபந்தத்தில் விதிகள் கண்டெழுதப்பட்டிருக்கின்றன.

94. ஸ்பேஷல் பண்டுகள்.—சென்னை ராஜதானியில் லோகல் பண்டுசட்டத்தை யனுஸரித்து விதிக்கப்படுகிற வரிகள்பாபத்தில் வசூலான பண்டுகள்தவிர மற்ற இன்கார்பொரேடெட்லோகல்பண்டு (அதாவது பலான உபயோகத்திற்கென்று வசூல்செய்யப்பட்டபணங்களுக்கு) ஸ்பெஷல்பண்டு என்று பெயர்.

அவைகளாவன:—

1. வில்லேஜ் ஸெர்வீஸ் பண்டு (அதாவது கிராம நவுக்கர்களுடைய ஊழியத்திற்காக ஏற்பட்ட பண்டு.)
2. பவுண்டு பண்டு (அதாவது கால் நடைகளைப் பட்டியில் அடைப்பதினால் வசூலாகும் பண்டு.)
3. இரிகேஷன் பண்டு (அதாவது, ஜலப்பாய்ச்சலுக்காக விதிக்கப்பட்ட வரியினால் வசூலான பண்டு.)
4. கனால் அண்டு பெர்ரீ பண்டு (அதாவது சர்க்கார்வாய்க்கால்களின் ஓடத்துறைகளை உபயோகப்படுத்திக் கொள்வதற்காக ஏற்படுத்திய வரியினால் வசூல் செய்யப்படும் துகை.

95. வில்லேஜ் ஸேர்வீஸ் பண்டு.—இந்த பண்டில் பலான பாபத்துகளில் வரவு செலவுகள் நேரிடுகிறதென்று அடியில் கண்டிருக்கிறது.

வரவு.

1. 1864 ஹூத்திய IV வது ஆக்டு பிரகாரம் ஏற்படுத்தியவரி.
   (a) பிரத்தியேகமாய் விதிக்கப்பட்ட வரி
   (b) அசல் தீர்வையுடன் சேர்த்திருக்கப்பட்ட வரி
2. கெவர்ண்மெண்டாரால் இந்த பண்டுக்காக கொடுக்கப்படும் துகை.
3. பேரீஜ்வஜா, அதாவது நிலத்தீர்வையின் பேரீஜிலிருந்து வஜா செய்வது.
4. மீராக்கள், அல்லது நிலத்திற்குள்ள தீர்வைக்குமேல் வசூலான பணம்.
5. என்பிரன்சைஸான (சொந்த சொத்தாகச் செய்து கொள்ளப்பட்ட) கிராம ஊழிய இனம் நிலங்களின் குயிட்ரெண்டு.
6. சர்க்கார் பாக்கிக்காகப்போடப்பட்டவட்டி, கெவர்ண்மெண்டாரிடத்தில் ஒப்புக்கொடுத்து வைத்திருக்கப்பட்ட பணத்துக்காகவரும் வட்டி.
7. சில்லறை பாபத்துகளில் வசூலாகும் துகை.

செலவு.

1. கிராம நவுக்கர்களுக்குச் சம்பளம் கொடுப்பது.
2. கிராமச் சாவடிகளையும், காவலிருக்கிறதற்காக குடிசைகளையும், கட்டுவதும் பழுதுபார்ப்பதும்.
3. சில்லறை விஷயங்களில் செலவு.

2. இந்தவரியினாலுண்டாகும் வரும்படிகளை, எந்தகிராமத்தில் அல்லது பட்டணத்தில் வரி வசூலாயிற்றோ அந்த கிராமங்களிலும் பட்டணங்களிலுமுள்ள ரெவினியூ வேலைகளையும் போலீஸ் வேலைகளையும் பார்த்து வருகிற கிராம நவுக்கர்களிட சம்பளத்திற்கு மாத்திரம் பிரயோஜனப்படுத்தவேண்டியது.

3. வில்லேஜ் ஸர்வீஸ்ஸெஸ் ஆக்டாகிய 1864 ஹூத்திய IV வது ஆக்டு ஊர்ஜிதத்தில் இருந்துக்கொண்டும், கிராம எஸ்டாபிளிஷ்மெண்டை (சிப்பந்திகளை) சீர்திருத்தம்செய்யப்பட்டும், இருக்கப்பட்ட ஜில்லாக்களிலும் அல்லதுஜில்லாவின் சிலபாகங்களிலும் கெவர்ண்மெண்டார் சம்பளத்தின் தாமாஷா ஏர்ப்படுத்தி யிருக்கிறார்கள். மற்ற இடங்களில், போர்டாராலோ கெவர்ண்மெண்டாராலோ ஏற்படுத்தப்பட்ட பிரகாரம் சம்பளம் கொடுக்கப்படும்.

4. ரிமிஷன் செய்யப்படும் துகைஉள்பட நிலத்திற்குண்டானதீர்வை யையனுசரித்தே வில்லேஜ்ஸெஸ்ஸை கணக்கிடவேண்டியது. ஆனால் கிணற்று ஜலம்பாய்கிற நிலங்களாயிருக்கும் பக்ஷத்தில், அவைகள் விஷயமாய் இறைத்து ஜலம்பாய்ச்சுவதற்காக தீர்வையில் ஒருதிட்டப்பிரகாரம்ஏதாவது குறைவு செய்யப்பட்டிருந்தால் அப்படி குறைக்கப்பட்ட துகை நீங்கலாக மீதி தீர்வையை யனுசரித்து வில்லேஜ் ஸெஸ்ஸை கணக்கிடவேண்டியது. மேற்சொன்னபடி இறைத்து ஜலம்பாய்ச்சுவதற்காக தீர்வையின் மொத்தத்தில் குறைக்கப்படும் துகையை சர்க்கார் வேலைகளின் நிமித்தம் கணக்குகளில் ரிமிஷனுக காண்பித்தபோதிலும், காலவித்தியாசத்தினால் செய்யப்படும் அஸல் ரிமிஷன்களுக்கும் இதற்கும் அதிகபேதமுண்டு. ஆகையினால் அப்படி யிறைப்பதற்காக குறைக்கப்பட்ட துகை நீங்கலாக ஸெஸ்கணக்கிடப்படவேண்டியது.

96. பவுண்டுபண்டு.—1870 வருஷத்திய 1வது ஆக்டாகிய காட்டல் டிரெஸ்பஸ் ஆக்ட், அதாவதுகால்நடைகள் அதிக்கிரமித்து (இதராள் எல்லைக்குள்) செல்லுவதற்காக ஏற்படுத்தின சட்டத்தை அனுசரித்து வசூலாகும் வரியைக்கொண்டு பவுண்டுபண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருக்கிற கால் நடைகளுக்காக விதிக்கப்படும் அபராதங்களும் பேவார்ஸ் கால் நடைகளை விற்பதினால் வரும் வித்துமுதல் துகையுமே முக்கியமாய் இந்த பண்டுக்கு வருமானத்திற்கு ஆதாரம். பவுண்டு சிப்பந்திகளுக்கு சம்பளம், பட்டிகளைக்கட்டுவதற்காகவும் பழுது பார்க்கிறதற்காகவும் பிடித்த செலவு, இன்னும் இதர செலவுகள், இவைகளையெல்லாம் பட்வாடாசெய்தபிற்பாடு செலவாகாமல் மீதி ஏதாவதிருந்தால் அதை பிரதி மூன்று மாதத்திய முடிவிலும் பயிரிடும் உபயோகங்களுக்காக பிரயோஜனப்படுத்த வேண்டியது. ஆகிலும் மீதியிருக்கப்பட்டதுகையில் எவ்வளவாவது பட்டிகள் விஷயமாய் மேல் விசாரணை செய்யும் மற்ற காரியங்களுக்கு செலவுக்காகத் தேவையாயிருந்தால் அந்த மீதி துகையை வேறுவிதமாய் பிரயோசனப் படுத்துமுன்பாக அதிலிருந்து இப்பேர்ப்பட்ட செலவுக்கு வேண்டிய துகையை கழித்துக்கொள்ளலாம். சராசரி மாதத்தில் நேரிடும் செலவு துகையின் பாதிக்கு மேற்பட்டு கையிருப்பில் பணம் வைத்திருக்கவேண்டியதாய் அவசியமாய்த்தோன்றினால் அக்கவுண்டெண்டு ஜெனரல் அனுப்பும் பிளஸ் அண்டு மைனஸ் மிமோராண்டத்தின் அடியில் சங்கதியை விபரமாய்க் காண்பிக்க வேண்டியது. இந்த பண்டானது இப்போது ப்ரொவின்ஷியல் ஸெர்வீஸுடன்—(என்றால் ஸர்க்காரின்அஸல் வருமானங்களைப்பற்றிய கணக்கு வகையராக்களுடன்) சேர்க்கப்பட்டிருக்கிறது ; கஜானுகணக்குகளிலும் ப்ரொவின்ஷியல் ஸெர்வீஸில் சேர்க்கப்

பட்டதாகக்காண்பிக்கப்படுகிறது ; ஆனால் தணிக்கை முதலாகியது செய்யும் பொருட்டு இன்னும் ஸ்பெஷல் பண்டாக பாவிக்கப்படுகிறது.

2. இந்த பண்டுக்காக நேரிடும் வரவு செலவுகளின் முக்கியமான பாபத்துகளை அடியில் கண்டிருக்கிறது.

வரவு.

1. இங்குமங்கும் திரிகிற கால் நடைகளுக்காக விதிக்கப்படும் அபராதங்கள்.
2. பேவார்ஸ் கால்நடைகளை விற்பனைசெய்வதினால் வரும் விற்றுமுதல் பணம்.
3. தீனி செலவுகளுக்காக வசூல் செய்யப்படும் பணம்.
4. அட்வான்ஸ் செய்யப்பட்ட துகைகளையும் முஜராவாகாத செலவு துகைகளையும் மீட்டுக்கொள்வது.
5. சில்லரை பாபத்துகள்.

செலவு.

1. சிப்பந்தி.
2. பட்டி சிப்பந்திகளுக்குச் சம்பளம்.
3. தீனிச் செலவு.
4. பட்டிகளைக் கட்டுவதும் பழுது பார்ப்பதும்.
5. திரும்பிப்பெற்றுக்கொள்ளக்கூடியதாய் அட்வான்ஸ் கொடுப்பது.
6. சில்லரை பாபத்துகள்.
7. பயிரிடுகிறதற்காக பிடிக்கும் செலவில் ஏதோ கொஞ்சபாகம் கொடுக்கிறது.

3. பட்டியிலடைக்கப்பட்ட ஒவ்வொரு கால் நடைக்கும் அடியிற் கண்ட தாமாஷாப்படி அபராதம் விதிக்கவேண்டியது:—

	ரூ.	அ.	பை.
யானை	2	0	0
ஒட்டை அல்லது எருமை	0	8	0
குதிரை, பெண்குதிரை, விரை வாங்கப்பட்ட குதிரை, மட்டக் குதிரை, ஆண்குதிரைக்குட்டி, பெண் குதிரைக்குட்டி, கோவேறுகழுதை, எருது அல்லது பசு, அல்லது எருமை.	0	4	0
கன்றுக்குட்டி, கழுதை, அல்லது பன்றி	0	2	0
செம்மறி ஆண்டு, செம்மறி பெண்ணாடு, ஆட்டுக்குட்டி, ஆடு, வெள்ளாடு அல்லது வெள்ளாட்டுக்குட்டி	0	1	0

4. பட்டியிலடைக்கப்பட்ட பிராணிகள் விஷயமாய் சட்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்தி பைசல் செய்யப்படுகிற வரையிலும் அந்தப் பிராணிகளை பவுண்டுகீபரானவன் ஒப்புக்கொண்டு தீனி கொடுத்தும் ஜலம் காட்டியும் வரவேண்டியது; அப்படி தீனி கொடுப்பதற்காகவும் ஜலம் காட்டுவதற்காகவும் பிடித்த செலவை கால்நடைகளின் சொந்தக்காரனிடமிருந்து வசூல் செய்தாவது அல்லது அவைகளைவிற்றுவந்தபணத்திலிருந்து எடுத்தாவது பவுண்டுகீபருக்குக் கொடுத்துவிடப்படும்.

5. கால்நடைகளை விற்றுவந்தபணத்தில் மீதி யிருப்பதற்கு சொந்தக்காரர்கள் யாரும் ஏற்படாமற் போனால் அந்தஜில்லாவின் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்திரவுகளுக்குட்பட்டு அந்தப்பணத்தை மூன்றுமாதம்வரையில் அமானத்தில் வைத்திருக்கவேண்டியது; அந்த மூன்றுமாதகாலத்திற்குள் யாராவது தனக்கு பாத்தியதை யுண்டென்பதாகச்சொல்லி அந்த பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளாமற் போனால் அந்த துகையை பவுண்டு பண்டுக்காக வரவு வைத்துகொள்ளவேண்டியது.

6. கால்நடைகளை விற்பனை செய்துவந்த பணத்துக்கு பாத்தியஸ்தர்கள் ஒருவருமில்லாமற்போயதினாலும், அபராதங்களுக்காகவும், வசூலான துகைகளிலிருந்து, (ஏ) சிப்பந்திசம்பளங்களும் பவுண்டுகீபர் சம்பளங்களும், (பி) பட்டிகளைக் கட்டுவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் பிடித்த செலவுக்காகவும், அல்லதுசட்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்துவதில் பிடித்த வேறே ஏதாவது செலவுகளிருந்தால் அந்த செலவுக்காகவும், கொடுக்கப்படும்.

7. உயர்ந்தபக்ஷம் இவ்வளவுதுகைபெறவேண்டியதென்றும், தாழ்ந்தபக்ஷம் இவ்வளவுதுகை பெறவேண்டியதென்றும், அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பட்டிகளில் வசூலாகும் துகைகளில் 100–க்கு 50 வீதம் பவுண்டுகீப்பர்களுக்கு கம்மீஷனாக கலெக்டர் யுக்தானுசாரம் ஏற்படுத்தப்படும்; மாதம் ஒன்றுக்கு உயர்ந்தபக்ஷம் கொடுக்கக்கூடிய தொகை 5 ரூபாய்; ஒரு மாதத்தில் மொத்தம்வசூலான துகை 1 ரூபாய்க்குகுறைந்திருக்கும்பக்ஷத்தில் அப்படிவசூலாகும்துகை பூராவும் பவுண்டுகீபருக்குக் கொடுத்துவிடப்படும்; ஒருமாதத்தில் வசூலாகும்துகை ஒருரூபாய்க்கு மேல்பட்டும் 2 ரூபாய்க்குக் குறைந்துமிருக்கும்பக்ஷத்தில் பவுண்டுகீபருடையசம்பளம்-மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஏற்படுத்தப்படும். சில விசேஷமான விஷயங்களில் வருஷாந்திரத்தில் வசூலாகும் துகை சராசரி 200-முதல் 400 ரூபாய்க்குட்பட்டிருந்தால் மாதம் ஒன்றுக்கு 6 ரூபாய் கமிஷனாகவும் வருஷாந்திரத்தில் வசூலாகும் துகை 400 ரூபாய்க்கு மேற்படும் பக்ஷத்தில் உயர்ந்தபக்ஷம் கமிஷன் 7 ரூபாயாகவும், கலெக்டர்கள் ஏற்படுத்தலாம்; பட்டியிலடைக்கவேண்டிய கால்நடைகளுக்கு இடம் சம்பாதித்துக்கொள்ளுகிற பவுண்டுகீப்பர்களுக்கு

மாதம் ஒன்றுக்கு உயர்ந்தபக்ஷம் ஒரு ரூபாய்க்குட்பட்டு 100-க்கு 25மேனி வாடகை சேர்த்துக் கொடுக்கப்படும். மேலேசொன்ன தாமாஷாக்கள் நீலகிரி ஜில்லாவுக்கு சம்பந்தப்பட்டதல்ல. அந்தஜில்லாவில் மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய்முதல் 8 ரூபாய்வரையில் தாமாஷா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

8· பட்டிகளை சுத்தம் செய்வதற்காகவாவது, கால்நடைகளை பராமரிப்பதற்காகவாவது, கீழ் வேலைக்காரர்களுக்கு ஸந்தர்ப்பப்படி சம்பளம் கொடுப்பதும் கொடுக்காததும் கலெக்டரிடயுக்தானுசாரத்தைபொறுத்தது. கமிஷன் துகையானது வசூலாகும் துகையில் 100-க்கு 15க்கு மேற்படாமலும் தவிரவும் ஸ்ரீ 1க்கு 2 ரூபாய்க்கு ஒருக்காலும் மேற்படாமலுமிருக்கவேண்டியது. சௌகரியப்படும் பக்ஷத்தில் சம்பளம்கொடுப்பதை நிறுத்திப்போட்டு அவர்களுடைய சம்பளத்துக்குப்பதிலாக கால்நடைகளின் எருவை கொடுத்துவிடவேண்டியது. நீலகிரிஜில்லாவில் சுத்தஞ்செய்கிறவனுக்கு மாதம்–1–க்கு 4–ரூபாய் கொடுக்கப்படுகிறது.

97. இர்ரிகேஷன் லேஸ்பண்டு.—1856ளு அக்டோபர் ஸ்ரீ 30வ யுள்ள 2003 நெ. கெவர்ண்மெண்டார்டரினால் இந்தபண்டு ஏற்பட்டது. திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள சில வாய்க்கால்களை கூலியில்லாமல் வேலைசெய்து பராமரித்துவரும் வழக்கத்திற்குப்பதிலாக அந்த வாய்க்கால்களிலிருந்து ஜலம்பாய்கிற நிலத்தின் ஒவ்வொருகாணிக்கும் சொற்பவரி வசூல்செய்து அப்படி வசூலாகும் துகையிலிருந்து ஸ்திரமாய் சிப்பந்தி வைத்து அவர்களைக்கொண்டு வாய்க்கால்சம்பந்தமான வேலைகளைப் பார்க்கச் செய்வதற்காக செய்யப்பட்ட ஆலோசனையானது ஷை கெவர்ண்மெண்டார்டரில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஏற்பாடு 1857ளு மேஸ்ரீ 1வயில் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

2. இந்தவரியானது, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர் இந்த 4 ஜில்லாக்களில் மாத்திரம்விதிக்கப்படுகிறது. இந்தவரியினால் வசூலாகும் வரும்படியை பெரும்பான்மையாய் அடியிற்கண்ட வேலைகளுக்காக பிரயோஜனப்படுத்தப்படுகிறது.

(a.) ஜலம்வரும் கால்வாய்களை ஒழுங்காய் வைத்திருப்பதற்காக நியமிக்கப்பட்ட பெர்மெனென்ட் (ஸ்திரமான), அல்லது டெம்பரெரி (கொஞ்சகாலத்திற்கு இருக்கப்பட்ட), சிப்பந்திகளுக்காகப் பிடிக்கும்செலவு.

(b.) வாய்க்கால்களைசீர்திருத்தவும்,சொற்பகாலத்திற்குத்தேவையான அணைபோடுவதற்காகவும், மதகுகள், ஜலம்பாய அணைக்கட்டு முதலானவைகள், இவைகளைக் கட்டவேண்டியதற்காக பிடிக்கும் செலவில் ஏதோ கொஞ்சபாகம் கொடுப்பதற்காகவும் தேவையான மொத்தச்செலவு.

3. சிப்பந்திகளில் பெர்மெனென்டு, டெம்பரெரி என்று இரண்டுவித முண்டு; வாய்க்கால் குமாஸ்தா, மணியம், சேவகர்கள் முதலானவர்கள் சேர்ந்தபெர்மெனென்ட் சிப்பந்திகள் வருஷம் முழுவதும் வேலைபார்த்து வரும்படி நியமிக்கப்படுகிறார்கள். இந்த பெர்மெனென்டு சிப்பந்திகளிட நேமனத்தை அங்கீகாரம்செய்த உத்திரவை சம்பந்தப்பட்ட கலெக்ட்ராபீஸ்களில் வைத்திருக்கவேண்டியது. பெரும்பான்மையாய் டெம்பரெரி சிப்பந்திகள் வருஷத்தில் சிலமாதங்களிலும் ஜலக்குறைவு உண்டாகும் காலங்களிலும் கலெக்டரிட அனுமதியின்பேரில் நேமிக்கப்படுகிறார்கள். தாலுக்காவின் மற்ற பெர்மெனென்டு சிப்பந்திகள் சம்பளத்திற்காக எப்படி பில் தயார்செய்து கஜானாவிலிருந்து பணம்வாங்கிசம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறதோ அதேமாதிரியாக .மேலேசொன்ன பெர்மெனென்டு சிப்பந்திகளுக்குச் சேரவேண்டிய சம்பளங்களை பட்டுவாடாசெய்யவேண்டியது.

4. டெம்பரெரி சிப்பந்திகளுக்காகவும் வாய்க்கால்களை வெட்டி துரஸ்துசெய்வதற்காகவும் பிடிக்கும்செலவை இதற்காகவென்று தாசீல்தாரிடத்திலாவது டிப்டி தாசில்தாரிடத்திலாவது கொடுத்துவைக்கப்பட்டிருக்கிற பணத்திலிருந்து முஜரா செய்துகொள்ளவேண்டியது. அதிசீக்கிரமாய் நடத்தப்படவேண்டிய வேலைகளுக்காகப்பிடிக்கும் செலவுகளுக்கு கலெக்டர் செய்யவேண்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாகவே ஸப்டிரஷரியிலிருந்து பணம்கொடுக்க உத்திரவுசெய்ய டிவிஷனலாபீஸருக்கு அதிகாரமுண்டு. இப்பேர்ப்பட்ட அவசரமான வேலைகள் நீங்கலாக பலானவேலைகளுக்காக இவ்வளவு துகை பிடிக்கக்கூடியதென்று கண்ட எஸ்டிமேட் கணக்குகள் முன்னாடியாக கலெக்டரிடம் அனுப்பப்படுகின்றன; கலெக்டரானவர் இந்த எஸ்டிமேட்டை அங்கீகரித்த பிற்பாடு அங்கீகாரம் செய்யப்பட்டதுகைமுழுவதும் தாசில்தார் அல்லது டிப்டிதாசில்தார் வசத்தில் வைக்கப்படுகிறது, தாசீல்தாராவது அல்லது டிப்டி தாசில்தாராவது அஸலாய் பட்டுவாடா செய்வதற்கு தேவையான பிரகாரம் பணத்தை மொத்தமாகவாவது கொஞ்சம் கொஞ்சமாகவாவது கஜானாவிலிருந்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். இப்படியாக கஜானாவிலிருந்து வாங்கிக்கொள்ளப்பட்ட துகைகள் ஏதாவதுஇருந்தால் அதை தாசில்தார் அல்லது டிப்டி தாசீல்தார் தம்மிட அக்கௌண்டுகரண்டு கணக்கில்காண்பித்து அவைகளுக்கு அத்தாக்ஷியாக மாசாந்திரத்தில் வவுச்சர்களை அனுப்புகிறார்கள். டெம்பரெரியாய் நியமிக்கப்பட்ட சிப்பந்திகளின் பெயர்வாரிபட்டியும் சாதல்வார்செலவு பில்களுமே மேல்கண்டவவுச்சர்களாம். மேலேசொன்ன அக்கவுண்டுகரண்டுகணக்கை கிரமப்படி தாசீல்தாராவது அல்லது டிப்டிதாசீல்தாராவதுகலெக்டர்களுக்கே அனுப்புகிறார்கள், ஆகையால் தாசீல்தார் அல்லது

டிப்டிதாசில்தாரானவர் முன்மாசத்திய ஆகையர்வரையில்செலவாகாமல் மீதி யிருக்கிற துகையையும் அந்த மாசத்தில் கஜானுவிலிருந்து வாங்கிய துகை யையும் தம்மிடம் வரவுவக்கதாக வைத்துக்கொண்டு கணக்குடன் அனுப்பப் பட்டிருக்கும் ரசீதுகள் பிரகாரம் துகை செலவிடுவதாகபாவிக்கப்படும்.

5. அக்கவுண்டுகெரண்டு கணக்கையும், வவுச்சர்களையும் கடைசியாய் தணிக்கைசெய்து பைசல் செய்யும்பொருட்டு அவைகள் கலெக்டருக்கு அனுப்பப்படும்.

6. லோகல்பண்டு சிப்பந்தி பராவர்த்துகளை தணிக்கைசெய்வதற் காக எந்தமாதிரி ரிஜிஸ்டர் வைக்கப்பட்டிருக்கிறதோ அதேமாதிரிதணிக்கை ரிஜிஸ்டர்வைத்து அதைக்கொண்டு இந்த சிப்பந்திபராவர்த்துகளை ஹஸுர் ஆபீஸில் தணிக்கைசெய்யவேண்டியது. வாய்க்கால்களை வெட்டி துரஸ்து செய்வதற்காக செய்யப்பட்ட அட்வான்ஸ்துகைகளை முஜராசெய்யும்பொரு ட்டு 93. செ, ஸ்டாண்டிங்கு ஆர்டரின் அனுபந்தத்தில் கண்ட 11 நெம்பர் பாரப்பிரகாரம் ஒரு ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ளப்படும்.

98. கறைல் அண்டு பேர்ரி பண்டு அதாவது, கால்வாய் துறைகள் இவைகளை உபயோகப்படுத்திக் கோள்வதற்காக விதிக் கப்படும் வரியினுல் வசூலாகும் பண்டு:—1870 வருஷத்திய 1-வது சட் டத்தை அனுஸரித்து இந்த பண்டு எற்படுத்தப்பட்டிருக்கிறது. கால்வாய் களையும் ஓடத்துறைகளையும் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக விதி க்கப்படும் லைசென்ஸ்வரி, சுங்கம், இவைகள் இந்தபண்டுக்கு வரும்படிக்கு ஆதாரம்; தோணிகள் செய்வது அவைகளை பழுதுபார்ப்பது முதலாகிய வேலைக்காகவும், கால்வாய்களை பின்னும் வெட்டி விர்த்தி செய்வதற் காகவும், கால்வாய்களுக்கும் ஓடத்துறைகளுக்கும் போகும் ரஸ்தாக்களை ஒழுங்காய் வைத்திருப்பதற்காகவும் இந்தபண்டின் பணமானது பிரயோஜ னம் செய்யப்படுகிறது. கால்வாய் முதலானவைகளுக்குப்போகிற ரஸ்தாவை ஒழுங்காய் வைத்திருப்பதற்காக 1884 வருஷத்திய 5வது ஆக்ட் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டலோகல்பண்டிலிருந்து செலவு செய்யவேண்டிய தாகையால் அப்படி செலவாகிற துகையில் கொஞ்ச பாகம் இந்த பண்டி லிருந்து கொடுக்கப்படும்.

2. ஓடத்துறைகளில் வேலைசெய்வதற்காகவும் அவைகளை பராமரிப் பதற்காகவும் அனுஸரிக்கப்பட்ட வழக்கமானது பலஜில்லாக்களில் பலவித மாயிருக்கிறது. ஆனல் பின்னல் வரும் பொதுவான சிலவிதிகள் ஏற்படுத் தப்பட்டிருக்கின்றன; அவைகளை கிரமமாக அனுஸரித்துவரலாம்: (1) எல் லா ஓடத்துறைகளையும் மேல் விசாரணைசெய்ய கெவர்ன்மெண்டாருக்கே

பாத்தியதையுண்டு. ஆனுல் இது விஷயங்களில் பிரவேசித்து நடவடிக்கை நடத்துவதற்கு தகுந்த காரணங்களிருப்பதாக கலெக்டருக்குத் தோன்றினுலொழிய, மேல் சொன்ன சர்க்காருக்குள்ள பாத்தியதை கட்டாயப்படுத்தப்பட மாட்டாது. (2) ஓடத்துறைகள் விஷயமாய் மேல்விசாரணை செய்வது முதலாகியதை பொது ஜனங்கள் சொந்தத்தில் மேல் போட்டுக்கொள்வதாயிருந்தால் அது விஷயத்தில் அனுமதிகொடுக்கப்படும். ஆனுல் பொது ஜனங்களுக்குக் கெடுதியும் அசௌகரியமும் உண்டாகும்படி யாதாவதுஒருமனிதன் ஏகசுதந்திரம்செய்துகொள்ளக்கூடாது. (3) உபயோகமுள்ள ஓடத்துறைகளை ஏற்படுத்த தேவையான ஒத்தாசை எவ்வளவுவேண்டுமோ அவ்வளவுமட்டில் கெவர்ண்மெண்டார் உதவிசெய்வார்கள். (4) பிரத்தியக்ஷமாய் ஓடத்துறைகள் ஏற்படுத்தவேண்டிய இடங்களில் ஜனங்கள் சொந்தத்தில் இந்தவேலையை மேற்போட்டுக்கொண்டு செய்ய இஷ்டமில்லாதவர்களாயிருந்தால், கலெக்டர் அவைகளை ஏற்படுத்த வேண்டியது. (5) இன்னமும் கெவர்ண்மெண்டார் பராமரித்து வரும் ஓடத்துறைகளிலிருந்து உற்பத்தியாகும் வரும்படியானது அவைகளுக்காக செலவாகும் துகைக்கு சரிப்பட்டுப்போனுல் போதுமானது. சாத்தியப்படும் விஷயங்களில் கெவர்ண்மெண்டு ஓடத்துறைகளை குத்தகைக்கு விட்டுக்கொண்டு வரவேண்டியது.

3. தென்கன்னடம், மலையாளம் ஜில்லாக்களில் அநேக ஓடத்துறைகளிருக்கின்றன. 1870 ஹூத்திய I-வது சட்டத்தின் 22 - வது (ஸெக்ஷன்) பிரிவுபிரகாரம் ஷை ஓடத்துறைகள்விஷயமாய் ஏற்படுத்தியவிதிகளை அனுபந்தத்தில் கண்டிருக்கின்றது.

4. இந்தபண்டின் பணத்திலிருந்து செலவிடவேண்டிய பாபத்து பெரும் பான்மையாய் எதுவென்முல், கால்வாய்களுக்குப் போகும் பாதைகளை ஒழுங்கில் வைத்திருப்பதற்காக லோகல்பண்டு பணத்திலிருந்து செலவாகும் துகையில் கொஞ்சபாகம் இந்த பண்டின் பணத்திலிருந்து கொடுக்கப்படுவது தான்.

5. மேல் சொன்னபாபத்து தவிர இதர செலவு பாபத்துகளாவன:—

1. சிப்பந்தி,
2. கால்வாய்களை வெட்டுவதும் பழுது பார்ப்பதும்,
3. தோணிவகையராக்களை செய்வதும் பழுது பார்ப்பதும்,
4. பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் மேல் விசாரணைக்காக பிடிக்கும் செலவும், சில்லறை ஆயுதங்கள் செடிகள் இவைகளைச் சேகரிப்பதற்காக பிடிக்கும் செலவும்.

6. தாலூக்காவில் மற்ற ரெவினியூ சிப்பந்திகளுக்கு எந்த மாதிரி பராவர்த்து தயார் செய்து சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறதோ அதேமாதிரி இந்தபண்டு சிப்பந்திகளுக்கும் பராவர்த்து தயார் செய்து சம்பளம் பட்டுவாடா செய்யப்படும். இந்தபராவர்த்துகளை மற்ற பண்டு சிப்பந்திகளிட பராவர்த்துகள் விஷயத்தைப்போலவே கிரமமான பாரத்தில் பிரத்தியேகமான சிப்பந்தி தணிக்கை ரிஜிஸ்டர் ஒன்று தயாரித்து அத்துடன் ஹஸூராபீஸில் தணிக்கை செய்யப்படும்.

7. மற்ற செலவு செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் ரெவினியூ ஆபீஸர்கள் தாங்களேயாவது, பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு அதிகாரிகளைக் கொண்டாவது, செய்வித்து செலவு செய்யலாம். பப்ளிக் வொர்க்ஸ் டிபார்மெண்டார் செலவு செய்வதாயிருந்தால் அந்த செலவை பப்ளிக் வொர்க்ஸ் அகவுண்டு எக்ஸாமினர் என்னும் உத்தியோகஸ்தர் தணிக்கைசெய்து முடிவுசங்கதிகளை அக்கௌண்டாண்டு ஜெனரல் துவாரா கலெக்டருக்குத் தெரியப்படுத்தவேண்டியது. ரெவினியூ டிபார்ட்மெண்டார் செலவு செய்வதாயிருந்தால் சம்பந்தப்பட்ட மேல் உத்தியோகஸ்தர்கள் அப்போதைக்கப்போது தேவையான துகைகளை கஜானுவிலிருந்து பெற்றுக்கொண்டு அந்தத் துகைகளுக்கு வவுச்சர்களுடன் மாசாந்திர அக்கௌண்டு கரண்டு கணக்கை அனுப்பி வரும் வழக்கத்தை அனுஸரிக்கவேண்டியது. ரெவினியூ டிபார்ட்மெண்டார் செலவு செய்யும் விஷயங்களில் சம்பந்தப்பட்ட டிவிஷனலாபீஸராலாவது, அல்லது பலான வேலையை செய்யும்படி கலெக்டர்களால் அதிகாரம்பெற்ற வேறே உத்தியோகஸ்தராலாவது, வவுச்சர்கள் ஜாக்கிரதையாய் தணிக்கை செய்யப்படும்; தவிரவும் இர்ரிகேஷன் ஸெஸ்பண்டு பிரகாரம் வாய்க்கால்களை வெட்டவும், பழுது பார்க்கவும் கொடுக்கப்படும் முன் பணங்கள் விஷயமாய் எப்படியாக கலெக்டராபீஸில் கணக்குகளில் முஜராமுதலானது செய்து சரிப்படுத்துகிறார்களோ அதேமாதிரியாக இந்த பண்டுபிரகாரம்நேரிட்ட செலவுகளும் கணக்குகளில் கலெக்டராபீஸில் சரிப்படுத்தப்படும்.

99. ஸ்பேஷல்பண்டு சிப்பந்திகள்.—ஸ்பெஷல்பண்டு சிப்பந்திகளிட சம்பளத்தைப் பிரதிமாசத் துவக்கத்திலும் தணிக்கையாவதற்கு முன்பாக கலெக்டர் பட்டுவாடாசெய்யலாம்; அப்படி பட்டுவாடா செய்த துகைகள் கஜானுகணக்கில் (டிரெஷரி அக்கௌண்டில்) தாக்கல்செய்யப்படும்; ஸ்பெஷல்பண்டுக்காக செய்யப்படும் செலவுகளுக்கு ஆதாரமாய் பலபண்டுகளிலிருந்தும் செலவு செய்யப்பட்ட துகைகளைக்கண்டு கலெக்டரால் கையெழுத்து செய்யப்பட்ட ஒரு ஸர்டிபிகேட்டு டிரெஷரி அகவுண்டுடன் அக்கவுண்டண்டு ஜெனரலுக்கு அனுப்பப்படும். அகவுண்டெண்டுஜெனரல்

இந்த செலவுகளை ஏற்றுக்கொள்ளும்பொருட்டு மேல்பிரஸ்தாபிக்கப்பட்ட ஸர்டிபிகேட்டே போதுமான வவுச்சராகும்.

2. பிரதியீ 15உக்கு முன்பாக கலெக்டர்களானவர்கள்தங்கள் மேல் விசாரணையில் வைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு ஸ்பெஷல் பண்டிலும் முன் மீத்தில் வரவு செலவானதற்கு ஒரு ஸ்டேட்மெண்டு தயாரித்து போர்டாருக்கு அனுப்பவேண்டியது. சிப்பந்திகள் விபரங்களை மாதமாதம் தெரியப்படுத்தவேண்டிய தவசியமில்லை. இந்தவிவரங்களை ஏப்பிரல்மீ அனுப்பும் ஸ்டேட்மெண்டில் கண்டு எந்தஉத்திரவுகள்பிரகாரம்ஷை சிப்பந்திகள் ஏற்படுத்தப்பட்டார்ளோ அந்தஉத்திரவுகளையும் கண்டெழுதி அனுப்பினால் போதுமானது; ஆனால் பின்னிட்ட மாதங்களில் சாங்கிஷனை (அனுமதி கொடுக்கப்பட்ட) துகைக்கும் அஸலாய் செலவான துகைக்கும் ஏதாவது பேதமிருந்தால் அதற்கு காரணத்தை விவரித்துச் சொல்லவேண்டியது. மற்ற செலவுகளுக்கெல்லாம் விபரம் முழுமையும் பிரதிமாதத்தில் அனுப்பும் ஸ்டேட்மெண்டில்எப்போதும் கண்டெழுதவேண்டியது.

3. ஸ்பெஷல் பண்டிலிருந்து செலவு செய்து செய்யப்படும் வேலைக்காக டெம்பிரெரியாய் மேஸ்திரி, குமாஸ்தா முதலானவர்களை நியமிக்கலாம். அவர்களுக்குநாள் கூலி வீதப்பிரகாரம் கணக்கிட்டு மாசாந்தரத்தில்சம்பளம் கொடுக்கப்படும். அந்த சம்பளத்தின் துகை அவர்கள் எந்தவேலைக்காக நியமிக்கப்பட்டு வேலை செய்து வருகிறார்களோ அந்தவேலையில் செலவானதாகக் கணக்கிடப்படும்.

4. மேலே சொல்லிய ஸ்பெஷல் பண்டுகள் சம்பந்தமாய்த் தேவையாயிருக்கிற காயிதம் பேனா முதலானவஸ்துக்களை கலெக்டரானவர் ஸ்டேஷனரி ஸூபரிண்டெண்டண்டுக்கு கணக்கனுப்பி வரவழைத்துக்கொள்ள வேண்டியது. அதின் கிரயத்துகையை சம்பந்தப்பட்ட பண்டுகளில் பகிர்ந்து செலவெழுதவேண்டியது. கிராம கணக்குகளை எழுத கணக்கர்களுக்கு கொடுக்கப்படும் பேனா காகிதம் வகயறாக்களின் கிரயத்தை நிலத்தீர்வை சாதல்வாரில் செலவெழுதவேண்டியது.

V. (5)-வது அதிகாரம்.

தீர்வை வசூல் செய்வது.

100. தீர்வையை செலுத்துவது:—பொன் நாணயங்கள் சட்டப்பிரகாரம் ஏற்றுக் கொள்ளக்கூடாதவைகளான போதிலும், அவைகள் ஸிவில் அக்கவுண்ட்கோட் 1-வது புஸ்தகம் 28-வது அத்தியாயம் 2-வது பிரிவில் கண்டமாதிரி நிறை* (இடை) யுள்ளவைகளாயிருந்தால், கெவர்ண்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய துகைக்காக எல்லா கஜானுவிலும் பெற்றுக்கொள்ளப்படும்; கெவர்ண்மெண்டு கரன்ஸீ நோட்டுகள் எந்த சர்க்கிலுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருந்தாலும் அவைகளை ஏற்றுக்கொள்ள யாதொரு ஆக்ஷேபணையு மில்லை.

2. நிலத்தீர்வை செலுத்தவேண்டிய விஷயங்களில் நிலத்துக்குச் சொந்தமானவர்கள் கெவர்ண்மெண்டு கஜானுவில் ஸ்டாக்கு நோட்டுகளை கொடுத்துவைத்துக் கொள்ளலாம்; இந்த ஸ்டாக்கு நோட்டுகளுக்கு வட்டி எப்போது சேரவேண்டியதாகிறதோ அப்போது அந்த வட்டிதுகையை ஸ்டாக்கு நோட்டின் சொந்தக்காரனுல் சேரவேண்டிய நிலத்தீர்வைக்காக வரவு வைத்துக்கொள்ளவேண்டியது. ஸ்டாக்கு நோட்டு கட்டினவன் தன்னிட ஸ்டாக்குநோட்டுகளைத் திரும்பி பெற்றுக்கொண்டு கணக்குகளை முடிவு செய்து கொள்ளவேண்டுமென்று விரும்பும்பக்ஷத்தில், அப்படியே ஸ்டாக்கு நோட்டுகளை திருப்பிக்கொடுத்து கணக்குகளை முடிவு செய்து கொடுக்கவேண்டியது.

3. பலஜில்லாக்களில் நிலத்தீர்வையை வருஷத்தில் இன்னின்ன காலங்களில் செலுத்தவேண்டியதென்று அனுபந்தத்தில் கண்டிருக்கிறது. குறித்திருக்கப்பட்ட மாதங்களில் பிரதிமீ"த்திலும் 10௳ வரையில் செலுத்தப்படாமல் இருக்கிற துகையை பாக்கியாக ஏற்படுத்தப்படும்.

4. கிஸ்துபந்தியானது (அதாவது வாயிதாபடி பலான தேதிகளில் பணம் செலுத்த வேண்டியதென்பது) இனும் குயிட்ரெண்ட்களுக்கும்

---

*அவைகளிடை அஸல்இடையில் 500ல் 1பங்குக்குமேல் இடை தேய்ந்து போகாமலிருந்தால் ஒத்துக்கொள்ளலாம்; ஸாவரின் $122\frac{3}{4}$ கோதுமைதானிய இடைக்குக் குறையாமலிருந்தால் 10-4-0 ரூபாயாகவும், அரைஸவரின் $61\frac{1}{2}$ கோதுமைதானிய இடைக்கு குறையாமலிருந்தால் 5-2-0 ரூபாயாகவும், ஏற்றுக்கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டது; ஆனால் ஜமீன்தாரர்கள் செலுத்தவேண்டிய பைஷ்கஷ் தீர்வைக்கு சம்பந்தப்பட்டதல்ல. ஜமீன்தாரர்கள் தீர்வை செலுத்த வேண்டியதற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஸன்னதுகளில்கண்ட ஷரத்துகள் பிரகாரம் கிஸ்துபந்தி ஏற்படுத்தவேண்டியது.

101. நடமுதல் வசூல்துகை:—நடமுதல் வருஷத்திய தீர்வையை அந்த வருஷத்திற்குள் வசூல்செய்யவேண்டியதென்பது முக்கியமான அம்சமாயிருக்கிறது. இந்த எண்ணத்தை நிறைவேற்ற கலெக்டர்கள் கூடியவரையில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது. முன் வருஷங்களின் பழைய பாக்கிகளை வசூல்செய்வதால் குடியானவர்களிட ஜீவாதாரங்களுக்கு கெடுதியுண்டாகிறது, நடமுதல்வருஷத்திய தீர்வையை வசூல்செய்வதானது கஷ்டமுள்ளதாய்விடுகிறது, ஜனங்களை உபத்திரவிக்க கீழ்உத்தியோகஸ்தர்களுக்கு ஒருசமயமும் வாய்க்கிறது; ஒருவருஷத்திய பாக்கிகளைப்பற்றி அடுத்தவருஷத்திய ஜெமாபந்தியில் ஜாக்கிரதையாய் விசாரித்து வசூலாகக்கூடாத பாக்கிகள் ஏதாவதிருப்பதாக ஏற்பட்டால் அவைகளை கணக்கிலிருந்து அடித்துவிடும் பொருட்டு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியது.

102. கிஸ்துவசூலை நிறுத்திவைப்பது:—ஸ்திரமாய் ஸெட்டில்மெண்டுசெய்யப்பட்ட ஜமீன் இலாகாக்களில் பிரதிகூலமான காலவர்த்தமானத்தை முன்னிட்டு கிஸ்துவசூலை நிறுத்திவைக்கவேண்டியதாயிருந்தால் கலெக்டர்கள் போர்டாரிட உத்திரவை கோரிக்கொள்ளவேண்டியது.

103. பாக்கிகளை வஜா (ரிமிஷன்) செய்வது:—பாக்கிகளை கணக்குகளிலிருந்து அடித்து விடும்போதெல்லாம், கீழ் ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் குடியானவர்களிட பணத்தை அபகரிக்காமல் இருக்கும்பொருட்டு, சம்பந்தப்பட்ட பாக்கிதாரர்களுக்கு அவர்கள் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தீர்வைபாக்கியில்லையென்று தெரிவிக்கவேண்டிய விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டியது; பாக்கி வஜா செய்யப்பட்ட சங்கதியைப்பற்றி ஹுஸூர்கச்சேரியிலும் தாலுக்கா கச்சேரியிலும் பிரசித்தம் செய்யவேண்டியது.

2. நிலத்தீர்வையின் பாக்கிகள் வசூலாகக் கூடாதவைகளென்று அவைகளை கணக்கிலிருந்து அடித்துவிட உத்திரவுகொடுக்கப்பட்டு அடித்துவிட்டபிற்பாடு அந்த நிலத்திற்காக வசூலாகவேண்டிய (ஸெஸ்கள்) வரிகளையும், நிலத்தீர்வையை அடித்து விடுவதற்காக கொடுக்கப்பட்ட உத்திரவையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, அடித்துவிட வேண்டியது.

104. வசூலானதீர்வை மொத்தத்தை வரவுவைத்துக் கொள்ள வேண்டுமென்பது:—கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களில் வசூல் செய்யப்

பட்ட தீர்வை மொத்தத்தையும் கணக்கில் கொண்டு வரவேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது. சம்பளம் கூலி முதலாகியவைகளைக் கொடுக்கும் பொருட்டாவது வேறே விதமாய் பணம் கொடுக்கும் பொருட்டாவது அப்படி கொடுக்கவேண்டியபணத்தை சர்க்கார் தீர்வையிலிருந்து கழித்து மீதியை வசூல் செய்கிற வழக்கத்தை, கெவர்ண்மெண்டாரிடமிருந்து பிரத்தியேகமாய் அனுமதி பெற்றிருந்தாலொழிய, கண்டிப்பாய்த் தடுத்துப்போடவேண்டியது.

105. வசூல் செய்யும் விதம்:—தீர்வையை வசூல் செய்யவேண்டியதானது கணக்கனிடவேலையல்ல. பணத்தை வசூல் செய்ய வேண்டியது மணீகாரிட வேலை. ஆகிலும் மணீகார் முன்னுடியாக ரசீதில் கையெழுத்து செய்திருந்தால், பணம் செலுத்துகிறவனுனவன் தான் செலுத்திய பணத்தை கணக்குகளில் கிரமமாக தாக்கல்செய்து கொண்டதற்கு அடையாளமாக கணக்கனும் கையெழுத்து செய்யவேண்டுமென்று கட்டாயப் படுத்தி கேட்கலாம்.

106. 1884 ௵த்திய III வது சட்டத்தினுல் சீர்திருந்தப்பட்ட 1864 ௵த்திய சென்னை கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட IIவது சட்டப்பிரகாரம் நடத்தவேண்டிய பொது நடவடிக்கைகள்.—சென்னை கெவர்ண்மெண்டாரிட 1864௵த்திய 2வது சட்டத்திய 1வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட "நிலதாரன்" என்னும் வார்த்தையானது சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்துவதாக உடன்பட்டு நிலத்தை அனுபோகித்துவரும் ஒவ்வொருவருக்கும் சம்பந்தப்பட்டது. இவர்கள் ரயத்துவாரி நிலக்காரர்களென்று சொல்லப்பட்டாலும், அல்லது 1802௵த்திய சட்டங்கள்பிரகாரம் காணியாக்ஷிக்காரர்கள் அதாவது ஸ்வதந்திரமுள்ளவர்களென்று சொல்லப்பட்டாலும், இவர்கள் செலுத்தவேண்டிய பாக்கிகள் வசூல் செய்யப்படும்பொருட்டு இவர்கள் எல்லாரும் ஒரேவித சட்டத்துக்கு உட்படுவார்கள். நிலதார்கள் கெவர்ண்மெண்டாருக்கு செலுத்திய அல்லது செலுத்தவேண்டிய துகைக்கு "ரெவினியூ" என்றுபெயர். குத்தகைக்குப் பயிரிடும் குடிகள் அவர்களிட நிலதார்களுக்கு கொடுக்கவேண்டிய துகைக்கு குத்தகைபாக்கியை வசூல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரகாரம் வித்தியாசத்தைக் காண்பிக்கும்பொருட்டு "ரெண்ட்" என்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. 5வது 6வது பிரிவுகளை அனுஸரித்து கலெக்டரும் அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரும் (அதாவது பெரும்பான்மைாய் தாலூக்கா தாசில்தாரும்) பாக்கிதாரனிட அசையும் பொருளையாவது அல்லது அசையாப்பொருளையாவது அல்லது தம்மிட யுக்தானுஸாரம் இர

ண்டையுமாவது விற்று பாக்கியை நேர்ந்த செலவுடன் வசூல் செய்யக் கூடும்; பாக்கிதாரனனவன் ஜமீன்தாரி நிலதாரனக இருந்தாலும் ரயத்து வாரி நிலதார்னக விருந்தாலும் நிமித்தியமில்லை. ஆனல் பாக்கிதாரனன வன் ஸ்திரமான ஸன்னதை அனுஸரித்து நிலத்தை அனுபோகித்து வந் தால் ஸன்னதில் கண்டநிபந்தனைகள்படி பாக்கியைவசூல் செய்யவேண்டி யது; யாதொரு ஜமீன்தார் ஸன்னதி மீல்கியாத் இஸ்தீம்ரார் என்னும் ஸன்னதைப் பெற்றுக்கொண்டு நிலத்தை அனுபோகித்து வரும் விஷயத்தில் முதலில் அசையும் பொருளை விற்கவேண்டியது ; பாக்கிமுழு மையும் பைஸல் தீராமற்போனல் பின்னிட்டு நிலத்தை விற்கவேண்டியது. எந்த நிலத்திற்காக தீர்வை சேரவேண்டுமோ அந்த நிலத்திலல்லாமல் (வே றே நிலத்தில்) கட்டப்பட்ட வீடுகளை ஜப்திசெய்து விற்கும் பொருட்டுசட் டத்தினல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்று நிச்சயமாய் ஏற்பட வில்லை; ஆகையால்கலெக்டர்கள் வேறேஎவ்விதமாயாவது பாக்கியை வசூல் செய்யக்கூடுமாயிருந்தால், மேற்கண்ட பிரகாரம் கட்டப்பட்ட வீடுகளை ஜப்தியாவது விற்பனையாவது செய்யக்கூடாது.

3. 7வது பிரிவின் பிரகாரம் பாக்கிக்கு 100 த்துக்கு வருஷம் 1 க்கு 6 வீதம் வட்டியுண்டு, ஆனல் கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸரிட உத்திரவில்லாமலும், ஜமீன்தாரி இலாகா கிஸ்துகளுக்கும் இனம் கிராம த்திய கிஸ்துகளுக்கும் தவிர, நிலத்தீர்வை பாக்கிகளுக்கு பசலி ஆகியர் வரையில் வட்டிவிதிக்கக் கூடாது. குத்தகை பாக்கி வசூல்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரகாரம் பாக்கி ஏற்படும்பக்ஷத்தில் நிலதாரர்கள் தங்களிட குத்தகைக்குப் பயிரிடுகிற குடிகளிடமிருந்து முன்வாங்கிவந்த படி மாதம் 1 க்கு 100 க்கு 1 வீதம் வட்டிவிதித்து வாங்கிக்கொள்ளக் கூடும்.

4. 8 முதல் 21 வரையிலுள்ள பிரிவுகளில், அசையும் பொருள்ஜப்தி செய்வதற்காக அனுசரிக்கவேண்டிய விதிகளைக் கண்டிருக்கிறது. ஜப்தி செய்ய உத்திரவு பிறப்பிக்கக்கூடிய உத்தியோகஸ்தர் பெரும்பான்மையாய் தாசீல்தார்; ஆனல் இதுகள்விஷயமாய் தாசீல்தாருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டியது; கலெக்டரானவர் "தாசீல்தார் எல்லாரும் ஜப்திசெய்ய உத் திரவு பிறப்பிக்கக்கூடும்" என்று பொதுவாய் ஒட்டுத்திரவு செய்யும் பக்ஷத் தில் எல்லாதாசீல்தார்களும் அதிகாரம் பெற்றவர்களாவார்கள். எழுத்துமூல மாய் ஒரு டிமாண்டு எழுதி அதை ஜப்திசெய்கிறவனுக்கு கொடுக்கவேண் டியது; அவன் இந்த டிமாண்டை (பாக்கிதாரனுக்கு) காண்பிக்கவேண் டியது; அப்படிகாண்பித்தஉடனே செலுத்தாமற்போனல் வேறே நோட் டீஸ் கொடுக்காமலே இந்த டிமாண்டை ஆதாரமாகக்கொண்டு ஜப்தி

செய்யலாம்; குத்தகைக்குப் பயிரிடும் குடியானவனிடதான்னியத்தை ஜப்தி செய்யக்கூடாதென்று ஏற்படுத்தியிருந்த பழைய உத்திரவானது 11 வது பிரிவின் கடைசிவாக்கியத்திலும், 17வது பிரிவின் கடைசிவாக்கிய த்திலும், கண்ட ஏற்பாடுகளினுல் ரத்து செய்யப்பட்டதாகிறது.

5. 22 முதல் 24வரையிலுள்ள பிரிவுகளில் ஜப்திசெய்த சொத்தை விற்பனை செய்வதில் அனுஸரிக்கவேண்டிய விதிகளை கண்டிருக்கிறது; ஏலம் போடப்படுமென்று விண்ணப்பம் செய்தபிற்பாடு 15 நாள் கழித்து ஏலம் போடவேண்டியது. 10வது பிரிவு பிரகாரம் ஏலம் குறித்த தேதிக்கு முன் னுள் சூரியஸ்தமனமாகுமுன்பு பாக்கியை செலவுகளுடனே செலுத்தும் பட்சத்தில் பாக்கிதாரனிட சொத்தை விடுதலை செய்யவேண்டியது.

6. சட்டத்தினுடைய மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட பிரிவுகள் அசை யும் பொருள் ஜப்திக்குச்சம்பந்தப்பட்டது. சட்டத்தின் அடுத்த 25 முதல் 35வரையிலுள்ள பிரிவுகளில், நிலத்தைஜப்தி செய்வதற்குமுன்பாக எழுத்து மூலமாய் டிமாண்டு ஒன்று தயார் செய்து அந்த டிமாண்டுக்கு ஓர்நகல் எடுத்து அந்த நகலை பாக்கிதாரனுக்கு கொடுக்க (ஸார்வ் செய்ய) வேண்டி யது; ஜப்தி செய்த பிற்பாடு சில விபரங்கண்டு ஒருநோடீஸை நிலத்தில் எல் லாருக்கும் தெரியும்படியான இடத்தில் ஒட்டிவைக்கவேண்டியது; ஜப்தி செய்யப்பட்ட சங்கதியைப்பற்றி, அந்த நிலத்தில் தண்டோரா போட்டு ஜில்லா கெஜட்டில் பிரசித்தப்படுத்தவேண்டியது. நிலத்தை ஏலம்போடு முன்பாக இந்த நடவடிக்கைகளை எல்லாம் ஜாக்கிரதையாய் அனுஸரிக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

7. 28வது முதல் 33வது வரையிலுள்ள பிரிவுகளில், ஜப்தி செய்யப் பட்டிருக்கிற நிலத்தை மேல்விசாரணை செய்து பராமரித்து வருவதற்காக விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தீர்வைபாக்கிக்காக ஜப்தி செய்யப் பட்ட ஜமீன் இலாகாக்களை மேல் விசாரணைசெய்து பராமரித்து வர வேண்டிய வேலையை கலெக்டர்கள் மேற்போட்டுக் கொள்ளவேண்டும் என் பதுபோர்டாரிட இஷ்டமல்ல; ஆனுல் அவைகளை ஏலம்போடும் முன்பு மிகவும் அவசியமாயிருக்கிற கொஞ்ச நாள்வரையில் விசாரணை செய்து வரலாம்; அல்லது ஏதோ அபூர்வமான சிலவிஷயங்களில் கலெக்டர்கள் தாங்கள் மேல்விசாரணை செய்து பராமரித்து வரவேண்டுமென்று தோன் றினுல் அதற்குள்ள காரணங்கள் முழுமையும் எடுத்துச் சொல்லி போர்டா ரிட அனுமதியைக் கோரிக்கொள்ள வேண்டியது. பாக்கிகள் வசூலாகாமல் அதிகமாய் சேர்ந்து போய்விட்ட ஜமீன் இலாகாக்களை, பாக்கி பைசல் தீர் ந்து போனவுடன் திருப்பிக்கொடுத்து விடலாம் என்கிற எண்ணத்துடன், மேல்விசாரணை செய்து பராமரித்து வரும் வழக்கமானது அதிக ஆக்ஷே

பணைக்கு இடமானது; ஆகையால் ஏதோ அபூர்வமான சிலகாரணங்களிருந்தாலொழிய அந்தமாதிரி பராமரித்துவர உத்திரவு கொடுக்கப்படமாட்டாது. சர்க்கார் பாக்கி செலுத்தவேண்டிய நிலதாரனுக்குள்ள அசையும்பொருள் சொத்தையாவது அல்லது அசையாப்பொருள் சொத்தையாவது ஏலம்போட்டு எல்லாபாக்கிகளையும் சீக்கிரத்தில் வசூல் செய்யும் பொருட்டு சட்டத்தில் விவரித்துச்சொல்லப்பட்ட முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டியது. மேலும் சர்க்கார் பாக்கிவைத்துக்கொண்டிருக்கிற ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் தங்கள் தங்களிட இலாகாக்களுக்குபாக்கிசெலுத்தவேண்டியதாய் ஏற்படும்பொழுது பாக்கியை செலுத்தாமற்போனால், "இலாகாக்களை மேல்விசாரணைசெய்து பராமரித்து வரவேண்டியவேலையை கலெக்டரானவர் மேற் போட்டுக்கொள்ளாமல் சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கப்பட்ட விதமாய் பாக்கியை உடனே வசூல்செய்ய முயற்சி எடுத்துக்கொள்வார்" என்று ஜமீன்தாரர்களுக்கும் மிட்டாதார்களுக்கும் வியக்தமாய்த் தெரிவிக்கவேண்டியது.

8. சட்டத்தின் 35-வது 37-வது பிரிவுகள் பிரகாரம், குத்தகைக்குப் பயிரிடும் குடியானவனாவது, ஈடுவாங்குவோர்களாவது, ஜப்திசெய்யப்பட்டாவது ஏலம் போடப்போகிறதாகவாவது இருக்கிற நிலத்தில் சிரத்தையுள்ள எந்தமனுஷியனாவது, சேரவேண்டிய பாக்கியை செலுத்திவிட்டு நிலத்தை மீட்டுக்கொள்ளலாம்; அப்பேர்ப்பட்ட ஜனங்களுக்கு அந்த நிலத்திலுள்ள பாத்தியதையைக்காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு நியாயமாய் அவர்களுக்குத்தேவையான மார்க்கங்களைத் தேடிக்கொள்ள இடங்கொடுக்கவேண்டியது.

9. 36 முதல் 46வரையிலுள்ள பிரிவுகளிலும், 1884 ௵த்திய 3-வது சட்டத்திலும், நிலத்தை ஏலம்போடுவதைப் பற்றியும் அப்படி ஏலம் போட்டபிறகு உண்டாகும் முடிவுகளைபற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது; ஜமீன்தாரிநிலங்கள் தவிர மற்ற நிலங்களை ஏலம் போடுவதற்காக முன்னுடியாக போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது இனிமேல் அவசியமல்ல; பாக்கிதாரனிட நிலத்தை ஜப்திசெய்யும்போது பிறப்பிக்கவேண்டிய விளம்பரத்தைத்தவிர ஏலவிளம்பரத்தையும் பிறப்பிக்கவேண்டியது. இந்த ஏலவிளம்பரத்தில் 36-வது பிரிவின் 2-வது வாக்கியத்தில் சொன்ன விபரங்களைக்கண்டெழுதவேண்டியது. இந்த விளம்பரத்தை இங்கிலீஷிலும் ஜில்லாவின் சுயபாஷையிலும் தயாரித்து ஏலத்துக்குமுன் அதமபட்சம் ஒருமாசம் வரையிலாவது கலெக்டராபீஸிலும் குறிக்கப்பட்ட மற்ற இடங்களிலும் ஒட்டவேண்டியது. ஏலம் போடும்போதும் அந்த விளம்பரத்தை முழுவதிலும் படித்து அப்படி படிக்கப்பட்டதாக

அதில் கையெழுத்து செய்யவேண்டும். ஏலம் போடுகிற உத்தியோகஸ்தரானவர் ஏலவிளம்பரத்தைப்படித்து அப்படி படிக்கப்பட்டதாக ஏலத்தைப் பற்றி செய்யப்படும் ரிபோர்டில் கண்டெழுதவேண்டியது. ஜமீன்தாரி பூஸ்திகளை சர்க்கார் பாக்கிக்காக ஏலம் போடுவதற்கு கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப்பெற்றுக்கொள்ளவேண்டியதவசியம்; தீரா அவசியமாயிருக்கிற விஷயங்களில் தவிர கலெக்டர்கள் பூர்வகாலத்து ஜமீன் இலாகாக்களை ஏலம் போட உத்தேசிக்கக்கூடாது; ஸ்திரமான ஸெட்டில் மெண்டு செய்யப்பட்ட பாரிஜமீன் இலாகாக்களை ஏலம் போடுவதாயிருந்தால் கவனென்டெட் * உத்தியோகஸ்தரிட முன்பாகவாவது அல்லது டிப்டி கலெக்டர் முன்பாகவாவது ஏலம்போடவேண்டியது. சொற்பபாக்கிக்காகப் போடவேண்டிய சிறியஏலங்களைதாலூகா கச்சேரியில் தாசீல்தாரிட முன்பாகவாவது அல்லதுஇதுவிஷயமாய் கலெக்டரால் அனுப்பப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிட முன்பாகவாவது நடத்தலாம்; சர்க்கார் பாக்கிக்காக ஏலம்போடப்படும் ஜமீன் இலாகாக்களை கலெக்டர்கள் கெவர்ன்மெண்டாருக்காக ஏலத்தில் எடுக்கலாம். ஆனுல் அப்படி கெவர்ன்மெண்டு தரப்பில் ஜமீன் இலாகாக்களை ஏலத்தில் வாங்குவதில் அந்தஜமீன் இலாகாக்கள் என்ன விலைபொறுமோ அந்தவிலைக்கு மேற்பட்ட துகைக்கு வாங்கக்கூடாது; மேலும் கெவர்ன்மெண்டாருக்குச்சேரவேண்டிய பாக்கி எவ்வளவோ அந்ததுகைக்கு மேற்பட்டும் வாங்கக்கூடாது.

10. (1) 1884 ௵த்திய 3-வது சட்டத்தினுல் தித்துப்பாடு செய்யப்பட்டபடி 1864 ௵த்திய 2-வது ஆக்டின் 38-வது பிரிவுபிரகாரம் ஏலத்தை ஸ்திரப்படுத்தி ஸர்டிபிகேட் பிறப்பிக்க கவனென்டெட் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரமுண்டு. அப்பேர்ப்பட்ட அதிகாரங்களைச்செலுத்த கலெக்டரானவர் டிவிஷனல் சார்ஜிலுள்ள டிப்டிகலெக்டர்களுக்கும் அதிகாரம் கொடுக்கலாம்; ஆனுல் டிவிஷனலாபீஸர்கள் ஏலத்தைஸ்திரப்படுத்தினுலும் அல்லதுரத்துசெய்தாலும் அப்பேர்ப்பட்டவுத்திரவுகள் 1828 ௵ 7-வதுசட்டத்தின்பிரகாரம் கலெக்டர்களால்தித்துப்பாடுசெய்யப்படுவதற்கு உட்பட்டவைகளாகும். அப்படி தித்துப்பாடுசெய்யகலெக்டருக்குள்ள அதிகாரத்தை அவரே சுயமாகவாவது அல்லது சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்களில் யராவது ஒருவர்அப்பீல்செய்துகொள்வதின் பேரிலாவதுசெலுத்தலாம்.

---

* கவனென்டெட் என்முல் உடன்படிக்கை செய்துகொண்ட, அதாவது இங்கிலாந்திலிருந்து (சீமையிலிருந்து) இவடம் கலெக்டர், ஜட்ஜி, ஸப் கலெக்டர் முதலான உத்தியோகம் செய்யவருகிறவர்கள் அவர்களிட நடத்தை சம்பளம் முதலானவைகளைப்பற்றி மஹாராணியிடம் சில உடன்படிக்கை செய்துகொண்டு வருகிமுர்கள்.

ஆனுல்மேற்சொன்னஇரண்டு விஷயங்களிலும் டிவிஷனலாபீஸர் உத்திரவு செய்ததேதி முதல் 30-நாளைக்குள்ளாக அமுல்நடத்தவேண்டியது. டிவிஷனலாபீஸரிட உத்திரவுக்கு ஒருநகல்பெற்றுக் கொள்ள எவ்வளவு காலம் பிடித்திருக்குமோ அந்த காலத்திற்கு அடுத்தநாள் முதல் அப்பீல் வாயிதாவை கணக்கிடவேண்டியது.

(2.) ஆகிலும், 1864-ம்ஹூ த்திய 2-வது சட்டத்திய59-வது பிரிவின் நிமித்தம்,யாதொரு ஏலமானது டிவிஷனலாபீஸாரால் ஸ்திரப்படுத்தப்பட்டவுடனே பூர்த்தியானதாகிறது.

11. நிலதார்களுக்கும் அவர்களிடம் உடன்படிக்கை செய்துகொண்டு அவர்கள் நிலத்தைப் பயிரிடும் புறக்குடிகளுக்கும் என்னசம்பந்தமுண்டோ, அதுமாதிரி சம்பந்தமானது ஜமீன்தார்களுக்கும் அவர்கள் இலாகாவுக்குள்ளும்,இனம் கமிஷனரால்செட்டில்மெண்டாயும்,இருக்கிற இனம் நிலங்களின் அனுபோகஸ்தர்களுக்கும் கிடையாது, ஆகையால் அப்பேர்ப்பட்ட இனம் நிலங்களுக்காக செலுத்தவேண்டிய குயிட்ரெண்டு துகையை 1864ஹூ த்திய 2வது ஆக்ட் பிரகாரந்தான் வசூல்செய்யக்கூடும். அப்பேர்ப்பட்ட இனம் நிலங்களுக்காக செலுத்தவேண்டிய குயிட்ரெண்டை அல்லது லாண்டுஸெஸ்ஸை வசூல்செய்யும் பொறுப்பை ஜமீன்தார்களுக்கு விட்டிருந்து, அப்பேர்ப்பட்ட ஜமீன்தார்களிடம் இனம் தார்கள் குயிட்ரெண்டு செலுத்தமாட்டோமென்ருல், 1864ஹூ த்திய 2-வது சட்டத்தை அனுஷ்டிக்க வேண்டும் பொருட்டு ஜமீன்தார்கள் கலெக்டர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

12. 1870ஹூ த்திய 1-வது ஆக்ட்பிரகாரம் ஓடத்துறைசுங்கம் வரிகளை 1864ஹூ த்திய 2-வது ஆக்டின் 52-வதுபிரிவை அனுஸரித்து வசூல்செய்ய வேண்டியது.

13. பாக்கிதாரனுவது இன்னும் வேறே யாராவது ஏலத்தில் நிலத்தை விலைக்குவாங்கும்பொருட்டு இப்போது சட்டப்பிரகாரம் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது; ஆனுல் இதுவிஷயமாய் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏலத்தில் நிலங்களை வாங்கும் பொருட்டாவது ஏலத்தில் கேழ்க்கும் பொருட்டாவது கெவர்ண்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் விதிகளும் உத்திரவுகளும் இன்னும் ஊர்ஜிதத்தில் அனுஷ்டிக்கப்படவேண்டியது.

14. பாக்கியை செலவு வகையராக்களுடனே வசூல் செய்துகொள்ளும்பொருட்டு நிலத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தை விற்பனைசெய்தால் போதுமோ அவ்வளவு விஸ்தீரணத்திற்கு மேற்பட்ட பாகத்தை விற்கக்

கூடாதென்று 44-வது பிரிவில் கடைசிவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; ரிஜிஸ்டரில் தனியாய் நெம்பர்கொடுத்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும்ஒரு புலமானது பாக்கிதாரனுக்கே ஏகசுதந்திரமுள்ளதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட தனி ஸர்வே நெம்பர்கொடுக்கப்பட்ட ரெவினியூ புலத்திற்கு குறைந்த பாகத்தை இதுவிஷயமாய் விற்பனை செய்யக்கூடாது.

15. 47-வது பிரிவுபிரகாரம் பாக்கியை செலுத்துவதற்காக ஜாமீன் கொடுக்கப்பட்டால் அந்த ஜாமீனை ஏற்றுக்கொண்டு பாக்கிதாரனிட சொத்தின் ஏலத்தை நிறுத்திவைக்க கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு.

16. 48, 49, வது பிரிவுகள் பிரகாரம், பாக்கிதாரனுவது அல்லது அவனுக்காக ஜாமீன் கொடுத்தவனுவது பாக்கிகளை செலுத்தாமல் வேணுமென்று நிறுத்தி வைத்துக்கொண்டதாகவாவது, அல்லது பாக்கியை செலுத்தாமலிருக்கும்பொருட்டு மோச நடவடிக்கையான குற்றங்களை செய்ததாகவாவது நம்புகிறதற்கு கலெக்டருக்கு காரணம் தோன்றும்பக்ஷத்தில் பாக்கிதாரன் செலுத்தவேண்டியபாக்கிக்காகஅவனை (பாக்கிதாரனையாவது ஜாமீன்தாரனையாவது) காவலில் பிடித்துவைக்கலாம். செவர்ண்மெண்டாருக்குச் சேரவேண்டிய பாக்கிக்காக கைதுசெய்யப்பட்ட பாக்கிதாரர்களுக்கு ஸிவில் புரோஸீஜர் கோட்பிரகாரம் தீர்ப்பு செய்யப்பட்ட கடன்காரனுக்கு ஏற்படுத்தப்பட்ட வீதப்படி. தீனிச்செலவு அல்லது சாப்பாட்டுக்காக பத்தா கொடுக்கவேண்டியது. லோகல்பண்டுகளுக்கு சேரவேண்டிய பாக்கிக்காக பாக்கிதாரனை கைதுசெய்தால் அந்தவிஷயத்தில் அப்பேர்ப்பட்ட பண்டுகளிலிருந்து சாப்பாடு பத்தாகொடுக்கவேண்டியது.

17. நிலதாரனிட மாசூலை சட்டப்பிரகாரம் ஜப்தி செய்திருந்தாலொழிய அவன் அந்த மாசூலை அறுவடைசெய்து எடுத்துக்கொண்டுபோவதைத்தடுக்க, இந்த சட்டத்தின் 51-வது பிரிவில்கண்ட சந்தர்ப்பங்களில் தவிர,வேறெந்த இடத்திலும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. நிலத்தில் உற்பத்தியாகும்மாசூலைசர்க்காராரும் பயிரிடுகிறவனும் பங்குபிரித்து சர்க்காருக்குள்ளபாகத்தை தீர்வைக்குப்பதிலாக எடுத்துக்கொள்ளுகிற வழக்கப்பிரகாரம் தீர்வை செலுத்த வேண்டியதாயிருக்கும்பட்சத்தில் (இப்போது இந்த வழக்கம் மிகவும் அபரூபம்) கெவர்ண்மெண்டாருக்குள்ள பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்வரையிலாவதுஅல்லது அதற்காக ஜாமீன் கொடுக்கும் வரையிலாவது, மாசூலை அப்புறப்படுத்தாமல் தடைசெய்ய மேற்சொன்ன 51-வது பிரிவில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

18. 52-வது பிரிவு பிரகாரம், நிலத்தீர்வை தவிர வேறே பாபத்து தீர்வைகளையும், ரெவினியூ விஷயங்களுக்காக சர்க்கார் பணத்திலிருந்து

கொடுக்கப்பட்ட முன்பணத்தையும் (அட்வான்ஸையும் அதாவது கடன் துகைகளையும்) ரெவினியூ வேலைகளையும் போலீஸ் வேலைகளையும் செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட கிராமநவுக்கர்களுக்காக செலுத்தவேண்டிய பீஸ்வகையறுக்களையும் சட்டப்பிரகாரம் விதிக்கப்பட்ட மற்ற வரிகளையும் ; நிலத்தீர்வை பாக்கிகளைப்போலவே வசூல் செய்யலாம்.

19. 56-வது பிரிவு பிரகாரம் தீர்வை செலுத்துகிறவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட ரசீதுகளில் கலெக்டராவது அல்லது கலெக்டரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது கையெழுத்து செய்யவேண்டும்.

20. பலபேர்வழிகள் அனுபோகித்து வரும் நிலங்களுக்கு பட்டா ஒரு பேர்வழியின்பேரில் இருந்தால் அந்தபேர்வழிகளில் ஒவ்வொருவனும் தன் அனுபோகத்திலிருக்கிற பாகத்திற்குள்ள கிஸ்தை செலுத்தும்பட்சத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும், தனி (ஸப்) ரசீது புஸ்தகம் கொடுக்கப்படலாம்; பிறகு இந்த தனிரசீது புஸ்தகங்களில் பதிவு செய்திருப்பவைகளை அஸல் ரசீது புஸ்தகத்தில் மாற்றி எழுதிக்கொள்ளும் பொருட்டு அசல் ரசீது புஸ்தகங்கள் ஆஜர்ப்படுத்தப்பட்டால் அப்படியே மாற்றி எழுதிக் கொடுக்கப்படும்.

21. 57-வது பிரிவு பிரகாரம்படிவிஷனலாபீஸர்களானவர்கள் ஜப்தி நோடீஸ்களை (இதர ஜில்லாக்களுக்கு அனுப்பவேண்டியதாயிருந்தால்) தங்கள் ஜில்லாகலெக்டரிட மேல் கையொப்பமில்லாமல் இதர ஜில்லாக்களுக்கு அனுப்பக்கூடாது.

22. கலெக்டர்கள் ரெவினியூ வசூல் செய்வதற்காக ஏற்படுத்திய சட்டத்தில் கண்ட நியமங்களை யெல்லாம் பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவதும் தவிர இந்த சட்டம் முழுவதையும் அவசியமாய் தெரிந்து கொள்ளவேண்டியதென்று ரெவினியூ வசூல் செய்யும் கிராமநவுக்கர்களுக்கும் தாலூகா உத்தியோகஸ்தர்களுக்கும் தங்களிட கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும் உத்திரவு செய்ய வேண்டியது.

23. இந்த சட்டப்பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட பாரங்கள் அனுபந்தத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

107. **ஏலத்தை நடத்தும்விதம்:**—கெவர்ன்மெண்டாருக்குச்சேர வேண்டியதாகவாவது, அல்லது நடுவாந்திரத்தில் வேறே ஒரு பார்ட்டிக்கு சேரவேண்டியதாகவாவது, இருக்கிற எவ்வகையான பாக்கிகளுக்காக ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை தாக்ஷியண்ணியங்களுக்குட்படாமலும் குறித்த படி கண்டிப்பாயும் ஏலம் போடவேண்டியது. ஏலத்தில் கூட்டுக்கள்ளயோ

சீனஅல்லது பட்சபாதம் இவைகள் நடவாமலிருக்கும்பொருட்டுக் கிரமமாய் மேல்விசாரணை செய்யப்படுகிறதா வென்கிற விஷயத்தில் ஜாக்கிரதையெடுத்துக்கொள்ளவேண்டியது கலெக்டரிடகடமை. ஏலத்தை நிறுத்திவைகவாவது தாமதிக்கவாவதுஇடம் கொடுக்கப்படாமல்விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகள் பிரகாரம் ஏலம் கண்டிப்பாக நடத்தப்படுமென்று ஏலம்போடுவதற்குமுன்பாக தெரிவிக்கவும் வேண்டியது.

(2.) மேலேபிரஸ்தாபிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் என்ற பதமானது ஒருதரம் ஏலம்போடப்பட்ட துண்டு அல்லது பாகத்தின் விஷயமாய் நிறுத்திவைத்தல் என்று தாத்பரியம் செய்யப்படும்; ஏலம் போடவேண்டிய துண்டுநிலங்கள் மிகவும் அதிகமாயிருந்து அவைகள் எல்லாவற்றையும் ஒரே நாளில் ஏலம்போடக் கூடாமற் போனால், (ஒருநாளில்) எத்தனைமணிவரையில் வேலைசெய்யவேண்டியதோ அந்த காலமானவுடன் கிரமமாக ஏலத்தை அடுத்த வேலைநாள்வரையில் நிறுத்திவைக்கலாம்; அப்படி நிறுத்திவைக்கப்பட்ட பலான தினத்தில் பலானமணியில் ஏலம் போடப்படுமென்று கிரமமாக விளம்பரம் செய்யவேண்டியது. ஜாப்தாவில் கண்ட வரிசைப்படியே துண்டுநிலங்களை ஏலம்போடவேண்டியது.

108. பராதீனப்படுத்தப்பட்ட நிலங்களை ரேவினியூஏலம் போடுவது:—ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்ட பட்டாதாரனானவன் வேறொரு நபருக்கு தன் நிலங்களை எவ்வளவு ஒழுங்கீனமாகவாவது மாற்றுதல் செய்திருந்தபோதிலும் அப்பேர்ப்பட்ட நிலங்களுக்காக தீர்வை சேரவேண்டியதில்லாமற்போனால் அந்த நிலங்களை, ஏலத்தில் கொண்டுவரப்படாத பட்டாதாரனிட வேறே நிலங்களுக்காகச் சேரவேண்டிய தீர்வைக்காக, ஏலம் போடுவது யுக்தமல்ல. ரிஜிஸ்டரில் தாக்கல் செய்யப்பட்ட பட்டாதாரன் வசத்திலிருக்கிற மற்ற நிலங்கள், சொத்துக்கள் இவைகள் எல்லாவற்றையும் ஏலம்போட்டு விற்பனை செய்யும் வரையில், எவர்களுக்கு பராதீனம் செய்யப்பட்டதோ அவர்கள் வசத்திலிருக்கிற நிலங்களை கலெக்டர்கள் விற்பனை செய்யக்கூடாது; ஆனால் அப்பேர்ப்பட்ட பாக்கியானது பராதீனம் செய்யப்பட்டவனால் செலுத்தப்படவேண்டியிருந்தால் அப்போது அவன்வசத்திலிருக்கிற நிலத்தை ஏலம்போடலாம். ஏலம்போடப்படவேண்டிய நிலங்கள் ரிஜிஸ்டரில் தாக்கல் செய்யப்பட்ட பட்டாதாரனுக்குச் சொந்தமானவைகளா அல்லவா என்பதையும், பராதீனம் செய்யப்பட்ட பாகத்திற்குள்ள பாக்கியை பராதீனம்பெற்றவன் செலுத்தவேண்டியதா அல்லது அப்பேர்ப்பட்ட பாக்கியை ரிஜிஸ்டரில் பெயர் தாக்கல் செய்யப்பட்ட பட்டாதாரன் செலுத்தவேண்டியதா என்பதையும், அந்தந்த இடத்தில் விசாரித்து நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

109. சந்தேகமுள்ள சுதந்திரம்:—கலெக்டர்கள் தங்களிட யுக்தானுஸாரம் பாக்கிதாரனிட அசையும் பொருள் சொத்தையாவது அல்லது ஸ்தாபரசொத்தை(அசையாப்பொருள்)யாவது தொடரக்கூடும். ஆகையால், நிலத்திற்கு பலானவன் சுதந்திரமுள்ளவன்என்பது தகராரிலிருக்கும்போதும் அல்லது சந்தேகமாயிருக்கும்போதும் அனுசரிக்கவேண்டிய கிரமமான மார்க்கமென்னவென்றால்—நிலத்தை ஜப்திசெய்து அவசியமானால் ஏலம் போடுவதுதான்; அந்த நிலத்திற்கு யார் சொந்தக்காரனாயிருந்தபோதிலும் அந்தநிலத்திற்காக தீர்வை செலுத்தவேண்டிய தென்பதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபணையுமிருக்கக்கூடாது. என்பிரஞ்சைஸ் செய்யப்பட்ட (சொந்த சொத்தாக செய்யப்பட்ட) இனும் நிலங்களுக்குள்ள சுதந்தரத்தைப்பற்றி சந்தேகமிருக்கும்போது அந்த இனும் நிலங்களுக்காகச் சேரவேண்டிய குயிண்டுரெண்டு தீர்வையை வசூல் செய்யும்பொருட்டும் மேற்சொல்லிய மார்க்கத்தையே அனுசரிக்கவேண்டியது.

110. கெவர்ண்மெண்டு தரப்பில் ஏலமெடுப்பது.—ரெவினியூ பாக்கிக்காக ஏலம்போடப்பட்ட நிலத்தையாரும் ஏலத்தில் கேழ்க்காமற் போனால் அந்த நிலத்திற்கு நாமகார்த்தமாக ஏதோ ஒரு விலைகுறித்து கெவர்ண்மெண்டாருக்காக நிலத்தை அந்த விலைக்கு ஏலமெடுக்கவேண்டியது. அப்படி ஏற்படுத்தப்பட்ட விலையை பாக்கிதாரனால் சேரவேண்டிய துகைக்காக வரவுவைத்துக் கொள்ளவேண்டியது. நிலத்தின் விலையை வசூல் செய்யவொட்டாமல் (கிராமத்தார்கள்) உடந்தை செய்திருப்பதாக சந்தேகிக்கத்தகுந்த காரணமிருந்தால், ஏலம் போடுகிற உத்தியோகஸ்தரானவர், ஏலத்தில் விலைகேட்கும்பொருட்டு வேறே ஜனங்கள் இருந்தாலும் இல்லாமற்போனாலும் அந்த நிலத்திய வருஷாந்திர தீர்வை எவ்வளவோ அந்த துகைக்குமேற்படாமல் கெவர்ண்மெண்டாருக்காக அந்த நிலத்தை ஏலத்தில் கேழ்க்க அதிகாரமுண்டு. கெவர்ண்மெண்டுதரப்பில் நிலங்களை ஏலத்தில் வாங்கும்பட்சத்தில் (Secretary of State for India) இந்தியா தேசத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஆலோசனை மகாசபையிலுள்ள (மகாராணியவர்களிட) ராஜாங்க காரியதரிசி அவர்கள்பேரால் சர்டிபிகேட் தயார் செய்யப்படவேண்டியது.

2. இந்தவிஷயங்களில் ஏலத்திற்கு முன்பாக பிறப்பித்த கட்டளை முதலானவைகளை நிறைவேற்றின அமீனுக்களுக்குச்சேரவேண்டிய பத்தா அல்லது படியானது நிலத்தை ஏலத்தில் வாங்குவதற்காகப் பிடித்த மொத்த விலை இவ்வளவென்று கணக்கில் எழுதியிருக்கப்பட்ட துகையிலிருந்து கொடுக்கப்படும். ஏலத்தில் எவ்வளவு துகைக்கு வாங்கப்பட்டதோ அந்த த்துகையிலிருந்து படிச்செலவைக் கழித்து வந்த மீதி துகை நிலத்

தீர்வை பாக்கிக்காக வரவுவைத்துக் கொள்ளப்படும்; அப்படி கழிக்கப் பட்ட துகை ரொக்கமாய் அமீனுவுக்கு கொடுக்கப்படும்.

3. 1864 ஹூத்திய 2-வது ஆக்ட் பிரகாரம் தீர்வை பாக்கிக்காக போடப்பட்ட ஏலங்களில் கெவர்ண்மெண்டு தரப்பில் வாங்கப்பட்ட நில ங்கள் விஷயமாய் கெவர்ண்மெண்டாருக்குள்ள பாத்தியதையானது நிரா க்ஷேபமானது; ஆனதுபற்றி இந்த நிலங்களானவை தர்காஸ்து கொடுத்தா வது தர்காஸ்து கொடுக்காமலாவது கிராமத்திலுள்ள குடியானவர்கள் அனு போகித்து வரக்கூடிய கரம்பு நிலங்கள்தானென்று முதலில் பாவிக்கக் கூடாது; கணக்கன் பிரத்தியேகமாய் ஒரு ரிஜிஸ்டரில் இந்தநிலங்களை பதிவு செய்து வைக்கவேண்டியது; இம்மாதிரி நிலங்கள் இந்த ரிஜிஸ்டரில் பதி செய்து வைக்கப்பட்டிருக்கிற வரையில் தர்காஸ்து விதிகள் பிரகாரம் பைஸல் செய்யப்படமாட்டாதென்றும், உத்திரவில்லாமல் அந்தநிலங்க ளில் பிரவேசிக்கும்பட்சத்தில் (சாகுபடிமுதலானவை செய்யும்பட்சத்தில்) அப்படி பிரவேசிக்கிறவர்கள்சிக்ஷைசெய்யப்படுவார்களென்றும் கிராம நவுக் கர்கள் தாங்களும்தெரிந்துகொண்டு, ஜனங்களுக்கும் தெரியப்படுத்தவேண் டியது. ரெவினியூ ஏலத்தில் ஜனங்கள் போட்டிபோட்டு ஏலம் கேழ்க்கா மற்போய் அதினுல் கெவர்ண்மெண்டு தரப்பில் நிலத்தை ஏலமெடுக்கும்படி அவசியம் நேர்ந்திருந்து, அப்படி போட்டிபோட்டு ஏலம்கேழ்க்காமற்போ னதற்கு காரணமானது அசௌகரியமான காலஸ்திதி, அல்லது கிராமத்தா ருக்குள் உடர்தை (அல்லது கட்டுப்பாடு), முதலாகிய அநித்தியமானகாரணங் களை முன்னிட்டதாயிருக்கும்பட்சத்தில், பிறகு உடனேஎந்தசமயத்தில் ஏலம்போட்டால் ஏலம் நிறைவேறுமென்று உத்தேசிக்கக்கூடுமோ அந்தசம யத்தில் எல்லாருக்கும்பிரசித்தப்படுத்தி நிலங்களை மறுபடி ஏலம்போடவேண் டியது. ஆனுல் அப்பேர்ப்பட்ட நிலங்கள் யாதொரு விலைபெருதவைக ளென்றும் மறுஏலத்தில்யாதொரு மதிப்புள்ளவிலைக்கும் போகக்கூடியதல்ல வென்றும் தமக்கு திருப்திகரமாய் ஏற்பட்டால் கலெக்டரானவர் தனி ரிஜி ஸ்டரிலிருந்து அந்தநிலங்களை அடித்துவிடும்படிக்கும் பின்பு அவை களை கிராமத்தில் சாதாரண கரம்பு நிலங்களின் வகுப்பில் சேர்த்து விடும்படிக்கும் உத்திரவு செய்யலாம்; பிற்பாடு அந்தநிலங்கள் தர்கா ஸ்து விதிகளுக்குட்பட்டவைகளாகும்; (மேலேபிரஸ்தாபிக்கப்பட்ட ரிஜி ஸ்டரில் பதிவு செய்யப்பட்ட) நிலங்களில் எந்த நிலங்களை மறுஏலம் போடவேண்டியதென்றும் எந்த நிலங்களை விலைபெருதவை என்று அடித்து விடவேண்டியதென்றும் நிச்சயித்துக் கொள்ளும் பொருட்டு டிவி ஷனலாபீஸர்கள் ஜமாபந்தி காலத்தில் அந்த ரிஜிஸ்டரை ஜாக்கிரதையாய் தணிக்கைசெய்யவேண்டியது; அந்த ரிஜிஸ்டரில் நிலங்களை வெகுகாலம்

அனுவசியமாய் வைத்திருக்காமலிருக்கும்பொருட்டு ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டியது. நிலங்களை ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து வைத்திருக்கும்போது, முன் அந்த நிலங்களுக்குச் சொந்தக்காரன் எவனோ அவனாவது அல்லது வேறே எவனாவது உத்திரவில்லாமல் அந்த நிலங்களை அனுபோகிக்கும் பட்சத்தில் அந்தப்படி உத்திரவில்லாமல் அனுபோகித்ததற்காக சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி தீர்வை விதித்து அந்த தீர்வையை சட்டப்படி யுக்தானுஸாரம்வசூல் செய்ய கலெக்டருக்கு சர்வாதிகாரமுண்டு. நிலங்கள் வாஸ்தவ்யமாய் அதிக விலை பெறுதவைகளாயிருந்து, அவைகளை அனுபோகித்துக் கொள்ளும் பொருட்டு உத்திரவு பெற்றுக் கொள்ளாமற்போன தானது தெரியாமைத்தனத்தினால் என்று ஏற்படும் பட்சத்தில் நிலத்தை அனுபோகிக்கிறவன்வசமாய் அதை அடமானம்செய்து விட்டு உத்திரவில்லாமல் அனுபோகித்ததற்கு சிக்ஷையாக முதல்வருஷத்தில் செலுத்த வேண்டிய தீர்வையுடன்சொற்ப ஜாஸ்தி தீர்வை விதித்தால்போதுமானதாகும். ஆனால் நிலங்கள் விலைபெறுமானவைகளாயிருக்கும் பட்சத்தில் அதிக தீர்வையை சிக்ஷையாக விதித்து உத்திரவில்லாமற் பிரவேசித்தவனை நீக்கிவிட்டு நிலங்களை பகிரங்கமாய் ஏலம்போடவேண்டியது. ஒவ்வொரு விஷயத்தையும் அததனிடதாரதம்மியப்பிரகாரம் பைசல் செய்யவேண்டியது.

4. 3 வது பிரகரணத்தில் சொன்னபடி நிலங்களை மறுஏலம் போடுவதற்காக பிறப்பிக்கவேண்டிய விளம்பர நமூனாவையும், அந்தமறுஏலத்தில் நிலங்களை ஏலமெடுத்தவனுக்கு கொடுக்கவேண்டிய பட்டையசாசனத்தின் நமூனாவையும்அனுபந்தத்தில்கண்டிருக்கிறது. ஸ்டாம்பு ஆக்ட்பிரகாரம் பட்டைய சாஸனத்துக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியது.

111. கட்டளை சம்மன் முதலானவைகளை ஸார்வுசெய்வது (கோடுப்பது):—சௌகரியப்படும்பட்சத்தில் 1864ம்வருஷத்திய சென்னை 2-வது ஆக்ட்பிரகாரம் கட்டளை முதலானவைகளை சார்வுசெய்வதும் அதே சட்டப்பிரகாரம் பாக்கிக்காக ஜப்திசெய்வதும்கெவர்ண்மெண்டாரிட கிராம நவுக்கர்களிட வேலை. இந்தவேலையானது அவர்கள் கிரமமாகவே செய்ய வேண்டிய வேலைகளில் ஒன்று; (ஆகையால்) அதற்காக அவர்கள்செய்யும் வேலைக்கு பிரத்தியேகமாய் சம்பளம் கொடுக்கப்படமாட்டாது.

2. இதற்காக பத்தா சேவகர்கள் வாஸ்தவ்யமாய் தேவையாயிருந்தால் பத்தாசேவகர்களை நியமிக்கலாம்; ஆனால்,அனுவசியமாயிருக்கும்போது

பத்தா சேவகர்களை நியமிக்காமலிருக்கும்பொருட்டும், ஜீவனத்துக்கு மார்க்க மில்லாமல் கச்சேரியில் உமேதிவார் செய்துகொண்டிருப்பவர்களுக்கு வேலை கொடுக்கும்பொருட்டு அவர்களை பத்தாசேவகர்களாக நியமிக்காமலிருக்கும் பொருட்டும், ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

3. பிரதிதாலூகாவுக்கும் பத்தா சேவகர்கள் எவ்வளவு வேணுமென் பது டிவிஷனலாபீஸரால் நிர்ணயிக்கப்படவேண்டியது; பத்தா சேவ கர்களை நேமிக்குமுன்பாக டிவிஷனலாபீஸர்கள் அவர்களைப் பார்வையிட வேண்டியது. அவர்களிட பெயரை ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்து வைத்திருக்கவேண்டியது; ரிஜிஸ்டரில் பெயர் எழுதியிருக்கப்பட்ட முறை மைப்பிரகாரம் அவர்களுக்குவேலையிட்டு அனுப்பவேண்டியது; அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் மாதம் 1 க்கு 7 ரூபாய்க்கு மேற்படக்கூடாது. ஒருவருஷத்தில் பத்தாவுக்காக வசூல் செய்யப்படும் துகையானது எத் தனை பத்தா சேவகர்களிட சம்பளத்துக்காக பிடிக்கும் துகைக்குப் போ துமானதோ அவ்வளவு பத்தா சேவகர்களை நியமிக்கவேண்டும்; டிவிஷ னலாபீஸர்களிட உத்திரவை பெற்றுக்கொண்டு சந்தர்ப்பங்களுக்குத் தக் கப்பிரகாரம் பத்தா சேவகர்களின் ஸங்கியை (ஜாஸ்தியாகவாவது குறைவாகவாவது) மாற்றவேண்டும்; கட்டளை முதலானவைகளை ஸார்வு செய்கிறவர்களை ஒரு தாலூகாவிலிருந்து மற்றொருதாலூகாவுக்கு மாற்று வது அனுபோகத்தை அனுசரித்து யுக்தமாய்த்தோன்றினல் அப்படியே மாற்றலாம்.

4. கிராமத்தலைவன் (அதாவது மணியக்காரன்) முன்பாகத்தவிர பத்தா சேவகர்கள் யாதொரு சொத்தையும் ஜப்தி செய்யக்கூடாது.

5. கட்டளை முதலானவற்றை ஸார்வ் செய்வதற்காக கொடுக்கப் பட வேண்டிய படி அல்லது பத்தாவானது 4 அணுவுக்கும், ஜப்தி செய் கிறதற்காவது சொத்தை விற்பனைசெய்வதற்காவது, 8 அணுவுக்கும் மேற் படக்கூடாது. சட்டப்பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளம் கொ டுக்கப்படும் சிபப்ந்திகளைக் கொண்டு கட்டளை வகையராக்கள் ஸர்வு செய்யப்படுகிற விஷயங்களில் மாத்திரமே பத்தா விதிக்கப்படக்கூடும்; அப் படி விதிக்கப்படும் போது அதை ரொக்கமாய் வசூல் செய்து "1864ளு 2-வது சட்டத்தை அனுசரித்து வரவுவந்த கட்டளை வகையறுபடி—நிலத்தீர் வை வகையறு" என்ற ஹேட்டில் வரவுவைத்துக்கொள்ளவேண்டியது. ரெ வினியூ கோர்டுகளால் பிறப்பிக்கப்படும் கட்டளை வகையறுக்களை ஸார்வ் செய்விக்கிறதற்காக கோர்ட்டுபீஸ் லேபிலாக விதிக்கப்படும் (பத்தா) படித் துகையின் வீதங்களை 180 நெ. ஸ்டாண்டிங்கு ஆர்டரில் கண்டிருக்கிறது.

6. பத்தாவுக்காக வசூல் செய்யப்பட்ட துகை இவ்வளவென்றும் சட்டப்பிரகாரம் வேலையிடப்பட்ட ஜனங்களுக்காக பத்தா கொடுக்கப்பட்ட துகை இவ்வளவென்றும் கலெக்டராபீஸில் (தனியாய்) ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்து வைத்திருக்கவேண்டியது; கலெக்டர் தம்மிட ஜில்லாவின் ஜமாபந்தி ரிபோர்ட்டை அனுப்பும்போது, தீர்வை வசூல் செய்யவேண்டிய தற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட டிமாண்டு ஜப்திகட்டளை முதலான பல வந்தமான முயற்சிகளைப்பற்றி பிரஸ்தாபிப்பதில், மேலேசொன்ன விதமாய் பத்தாவுக்காக வசூல்செய்யப்பட்ட துகை இவ்வளவென்றும் செலவுசெய்யப் பட்ட துகை இவ்வளவென்றும் முக்கியமாய் எடுத்துச் சொல்லவேண்டும்.

7. கெவர்ண்மெண்டு கிராம நவுக்கர்கள் இல்லாத ஜமீன் வகைரு இலாகாக்களில் கட்டளை வகையரூவை ஸர்வு செய்வதற்காக பிரத்தியேக மாய் பத்தாசேவுகர்கள் நியமிக்கவேண்டியது அவசியமாயிருக்கும்.

8. கட்டளை முதலானவைகள் பிறப்பிக்கப்பட்டவைகளை அனுபந் தத்தில்கண்ட பாரப்பிரகாரம் தாலூக்காவில் ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்து வைத்திருக்கவேண்டியது.

112. சர்க்காரில் கடன் (அட்வான்ஸ்) கொடுப்பது:—1883௵ த்திய 19-வது சட்டமாகிய அதாவது நிலங்களை துரஸ்து செய்வதற்காக கடன்கொடுக்கும்பொருட்டேஏற்படுத்தப்பட்டசட்டப்பிரகாரமும், 1884௵ த்திய 12-வது சட்டமாகிய அதாவது பயிரிடும் குடியானவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரகாரமும், ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுபந்தத்தில் கண்டிருக்கிறது. இந்தவிதிகளை அனுசரித்து நடக் கவேண்டிய விஷயத்திலும் பயிரிடும் குடியானவர்கள் அவைகளை செம்மை யாய் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டிய விஷயத்திலும் கலெக்டர் கள் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது.

113. ஸிவில்கோர்ட்டாரால் ஏலத்தில் விற்கப்பட்ட நிலங்களுக் காகச் சேரவேண்டிய சர்க்கார் பாக்கிகள்:—ஸிவில்கோர்ட்டாரிட டிக்ரியை அனுஸரித்து ஏலத்தில் விற்கப்பட்ட நிலத்தில் விளையும் மாசூவி லிருந்து தீர்வை பாக்கியை வசூல்செய்து கொள்வதற்காக யாதொருமுயற்சி யையும் எடுத்துக்கொள்ளக்கூடாது. கெவர்ண்மெண்டாருக்குச் சேரவே ண்டிய நடமுதல் தீர்வையையும் ஸனவார் தீர்வை பாக்கியையும் வசூல்செய் யும்பொருட்டு ரெவினியூ சட்டப்பிரகாரம் நிலம் ஒருவனிட சுதந்திரத்திலி ருந்துவேறே ஒருவனுக்கு மாறிப்போவதைப்பற்றி நிமித்தியம் செய்யாமலே நிலத்தையே ஜப்திமுதலானவை செய்யும்பொருட்டு கட்டளைவகையரூக்

களைப்பிறப்பிக்கக்கூடும், கோர்ட்டாரால் போடப்பட்டஎலத்தில் நிலத்தை விலைக்குவாங்குகிறவனுனவன் அந்த நிலத்திற்காகசெலுத்தவேண்டிய பாக்கி முதலான செலவுகளுக்குட்பட்டு நிலத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிருன்; இந்தஎலவிஷயமாய் எல்லாஜில்லாக்களிலும் பிறப்பிக்கப்படும் விளம்பரத்தில் பிரஸித்தம் செய்திருக்கிறபிரகாரம் எலதாரனுனவன் (விலைக்குவாங்கினவன்) சர்க்கார்பாக்கி சம்பந்தப்பட்டவரையில் அந்தநிலத்தின்பேரில்எவ்வளவுபாக்கியிருக்கிறதென்று தாசீல்தாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு தெரிந்து கொள்ளக்கூடும்.

114. * **ஸிவில் கோர்ட்டாரால் ஜப்திசெய்யப்பட்ட நிலங்களுக்காகச் சேரவேண்டிய தீர்வை பாக்கிகளை எப்படி வசூல்செய்ய வேண்டுமென்பது:**—தீர்ப்புசெய்யுமுன்பாகவாவதுதீர்ப்புசெய்தபிற்பாடாவது கோர்ட்டாரால் நிலம் ஜெப்திசெய்யப்படுவதானது அந்த நிலத்தை தீர்வைபாக்கிக்காக ஜப்திசெய்ய வேண்டியதற்கு ஆடங்கமுள்ளதாக மாட்டாது. தீர்வைபாக்கிக்காக நிலங்களையும் அவைகளிலுள்ள மாசூல்களையும் ஜப்திசெய்யவும் விற்கவும் அவைகளை ஸிவில் கோர்ட்டார் ஜப்திசெய்யு முன்பாக கலெக்டர்களுக்கு என்ன அதிகாரமுண்டோ அதே அதிகாரம் ஸிவில் கோர்ட்டார்ஜப்திசெய்தபிற்பாடும் கலெக்டர்களுக்குண்டு; ஏனென்ருல் தீர்ப்புசெய்யப்பட்ட கடன்காரனிட நிலங்களிலும் மாசூல்களிலும் அவனுக்குள்ள சுதந்திரத்தையும் பாத்தியதையும் மட்டில்தான் கோர்ட்டார் ஜப்திசெய்து எலம்போடுகிருர்கள்; ரெவினியூ அதிகாரிகளோ நிலத்தையும் அதிலுள்ள மாசூல்களையும் எலம்போட்டு விற்கிருர்கள்.

2. நிலத்தையும் அதிலுள்ள மாசூலையும் தீர்வைபாக்கிக்காக ஜப்தி செய்யும்போது, அந்தநிலத்திலும் மாசூலிலும் பாக்கிதாரனுக்குள்ள சுதந்தரத்தையும், பாத்தியதையையும், ஸிவில் கோர்டாரிட உத்திரவு பிரகாரம் முன்னுடியாகவே ஜப்திசெய்திருப்பதாக தெரியவந்தால், தீர்வை பாக்கிக்காக அந்த நிலத்தையும் மாசூலையும் ஜப்தி செய்வதைப்பற்றியும், பாக்கி பைசல் செய்யப்படாமல் போனுல் அவைகளை எலம்போடுவதாக ரெவினியூ அதிகாரிகள் உத்தேசித்திருக்கிருர்களென்றும் கண்டெழுதி ஒரு விளம்பரத்தை அப்படி முன்னுடி ஜப்திசெய்ததற்கு உத்திரவுகொடுத்த ஸிவில் கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டியது.

115. **சபாவணிகேஸ் முதலான விசேஷங்களைத் தெரியப்படுத்துகிறவர்களுக்கு வேதமதிகோடுப்பது.**—சாகுபடி செய்யப்பட்ட விஷயங்களை மறைத்து வைத்தல் சம்பந்தமாயாவது, வருஷவாரி

ஜமாபந்தியில் விசாரணை செய்யவேண்டியவைகளில் ஒருபாகமான நிலத் தீர்வையின் எந்த அம்சம் விஷயமாகவாவது, கணக்கர்களால் செய்யப் பட்ட மோசகாரியங்களைப்பற்றி ஜமாபந்தி காலத்திலாவது அல்லது ஜமாபந்திக்கு முன்பாகவாவது அல்லது ஜமாபந்தியான பிறகும் கிரம மான காலத்திற்குள்ளாகவாவது யாராவது தெரியப்படுத்தி அப்படி அவன் தெரிவித்த சங்கதிக்கு ஹேஷ்யங்களிருப்பதாக எற்பட்டால், சம் பந்தப்பட்ட நிலத்திய வருஷாந்திர தீர்வையிலாவது, அல்லது வேறே (சர்க் காருக்கு) சேரவேண்டியிருந்த துகை எவ்வளவோ அதிலாவது, 100ற்று க்கு 50 க்கு மேற்படாமல் சமாசாரம் தெரிவித்தவர்களுக்கு வெகுமதி கொடுக்கும் பொருட்டு கலெக்டர்கள் போர்டாருக்கு சிபார்சு செய்ய லாம். அப்படி வெகுமதி கொடுப்பதற்காக கலெக்டர்கள் செய்து கொள் ளும் விண்ணப்பமானது குறித்தபாரப்பிரகாரம் இருக்கவேண்டியது.

---

* குறிப்பு:—114-வது ஆர்டரின் 1-வது பாராவின் தாத்பரியமாவது:— ஸிவில் கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டிருந்தாலும் ரெவினியு அதிகாரி களும் ஜப்தி செய்யலாம்; கோர்ட்டு ஜப்தியை மீட்டால் ரிவினியூ ஜப் திக்காகவும் தீர்வையைச்செலுத்தவேண்டும். கோர்ட்டாரால் விற்கப் பட்டால் அப்படிவாங்குகிறவன் தீர்வையை செலுத்தவேண்டும்.

குறிப்பு:—110-வது ஆர்டரில் 3-வது பாராவில் 176-வது பக்கத்தில் "தர்காஸ்த்து விதிகளுக்குட்பட்டவைகளாகும்" என்றவார்த்தைகளுக்கப்பு றம் "ஆகிலும் கலெக்டரானவர் தமக்கு யுக்தமாய்த் தோன்றினல், ஷை ரிஜி ஸ்டரில் மறுபடியும் அந்த நிலங்களைப் பதிவுசெய்விக்கலாம்." என்று சேர்த்து வாசிக்கவும்.

VI. (6)-வது அதிகாரம்.

இனம்நிலங்களும் அது சம்பந்தமான விஷயங்களும்.

116. இனம் நிலங்களை புதிதாய் ஸெட்டில்மெண்டு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகள்:—இனம் கமிஷனரானவர் சில விதிகளை அனுஸரித்து இனம் நிலங்களை பைசலாதி செய்திருக்கிறார்; அந்த விதிகளை அனுபந்தத்தில் கண்டிருக்கிறது; இன்னும் ஸெட்டில்மெண்டாகாமல் பாக்கியிருக்கிற இனம் நிலங்கள் விஷயமாய் சொன்ன விதிகளை அனுசரித்து கலெக்டர்கள் அவைகளைப் பைஸல் செய்யவேண்டியது.

117. இனம் கமிஷனரால் ஸெட்டில்மெண்டு செய்யப்பட்ட இனம்நிலங்கள் விஷயமாய் கலெக்டர்களிட கடமை:—இனம் கமிஷனரால் என் பிரஞ்சைஸ்* செய்யப்பட்ட இனம் நிலங்கள்விஷயமாய் (அந்த இனம் நிலங்களை முன்னுடி எவ்விதமான காணியாட்சியாக அனுபவித்து வந்திருந்தபோதிலும்) கலெக்டர்கள் பிரவேசிக்கக்கூடாது ஸந்ததிவழியில் வார்ஸ்தார் ஏற்படும் விஷயத்திலும், மாற்றுதல் விஷயத்திலும், உட்பிரிவு செய்யும் விஷயத்திலும் தீர்வை (இனம் நிலமானுல் குயிட்ரெண்டு, ரயத்துவாரி நிலமாயிருந்தால் தீர்வை) பாக்கிக்காக ஏலம் போடும் விஷயத்திலும்

---

* என் பிரஞ்சைஸ் செய்கிறதென்பதற்கு வியாக்கியானம்:—1859ம் வருஷத்தில் மேமீ்த்தில் ஸர் சார்லஸ் டிரேவிலியன் என்னும் கெவர்னர் துரையவர்கள் இனம் நிலவிஷயமாய் சிலவிதிகள் ஏற்படுத்தினர், அந்தவிதிகளின் தாத்பரியமாவது: தீர்வையில்லாமல் 50—வருஷகாலம் ஒரு மனிதன் ஒருநிலத்தை அனுபோகித்துவந்திருந்தாலும், அல்லது அவனுக்கு யாரிடத்திலிருந்து நிலம் பாத்தியதைப் பிரகாரம் கிடைத்ததோ அவர் அனுபவித்திருந்தாலும், அப்படி அவ்வளவு காலம் அனுபவித்ததினுலேயே அந்த மனிதனுக்கு அந்த நிலம் அவனிட இனம் நிலமென்று சொல்லபாத்தியதையுண்டு; ஒரு நிலத்தில் அப்பேர்ப்பட்ட இனம் பாத்தியதை ஏற்பட்டுப்போனபிற்பாடு இனம்தாரனனவன் அந்த இனம் நிலத்தை தனக்கு வழக்கமாயுள்ள காணியாக்ஷியின் பேரில், சிலகாலத்திற்குஅப்புறம் அந்த

என்பிரன்சைஸான நிலங்களும் ரயத்துவாரி நிலங்களும் ஒரேமாதிரியான வைகள்; எப்படியானுல் ரயத்துவாரி நிலங்களானவை எந்தகாரியத்திற்காக வாவது ஜாமீனுக ஏற்றுக்கொள்ளப்படுமோ அதேமாதிரியாய் என் பிரஞ்சைஸான நிலங்களும் ஜாமீனுக அங்கீகரித்துக் கொள்ளப்படும்.

2. மதசம்பந்தமாயாவது தர்மத்திற்காவது ஏற்படுத்தப்பட்டவித்தியா சாலை முதலாகியவைகளுக்குப் பிரயோஜனப்படும் பொருட்டாவது ஜலப் பாய்ச்சலுக்காதாரமான ஏரிமுதலானவைகளையாவது அல்லதுபொதுஉபயோ கமுள்ள வேலைகளையாவது பராமரித்து வருவதற்காகவாவது இனும்கமீஷன ரால் ஸ்திரப்படுத்தப்பட்ட இனும்நிலங்கள்விஷயமாய், எந்த எண்ணத்தைக் கொண்டு ஷை இனும் விடப்பட்டதோ அந்த எண்ணத்தை நிறைவேற்ருமல் இனும்தார்கள் இனும்நிலங்களை அனுபவிப்பதை தடுக்கும்பொருட்டு ஜாக் கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது கலெக்டருடையகடமை. எந்தவித்தி யாசாலைமுதலானவைகள் எடுப்பட்டுப்போகும் பட்சத்திலும், அல்லது இனும் கமீஷனரால் கொடுக்கப்பட்ட பட்டையசாஸனத்திலும் ரிஜிஸ்டரிலும் கண்டஉபயோகத்திற்காகஇனும் நிலங்களின் வரும்படியை பிரயோஜனப்படு தாமல் போகும் பட்சத்திலும், இது சங்கதியைப்பற்றி போர்டாரிட உத்திர வுக்காக ரிபோர்ட் செய்யவேண்டியது. ஆனுல் அப்படி போர்டாரிட உத்திர வுக்கு ரிபோர்ட்டு செய்யுமுன்பாக, (வித்தியாசாலை முதலானவைகளில்) செய்யவேண்டியவேலைகள் கொஞ்சகாலத்திற்கு முன்புதான் செய்யப்படா மல் நிறுத்திவிடப்பட்டதாக ஏற்பட்டால் அந்தவேலையை மறுபடியும் அனுஷ்டிப்பதற்கு இனும்தாரனுக்கு இஷ்டமிருக்கும்பட்சத்தில் அப்படியே அனுஷ்டிக்கும் பொருட்டு அவனுக்கு ஸாவுகாசம் கொடுக்கவேண்டியது; ஆகிலும், 12வருஷத்திற்கு மேற்பட்ட காலமாய் பாழான நிலமையிலாவது

நிலத்தை விட்டுவிடவேண்டியதற்குட்பட்டும் பராதீனம்செய்ய அதிகார மில்லாமலும், அனுபவித்து வரலாம்; அல்லது அதை என்பிரன்சைஸ் செய்துகொள்ளலாம்—அதாவது வருஷவாரியில் சொற்ப குயிட்ரெண்டு செலுத்தி வருவதினுலாவது அல்லது ஒரேதடவையாய் 25 வருஷத்திய குயிட்ரெண்டை செலுத்துவதினுலாவது அவனிட சொந்த சொத்தாக செய்து கொள்ளலாம். இனும் நிலங்கள் என்பிரஞ்சைஸ் செய்யப்படுவ தற்குமுன் அந்தஇனும் நிலங்களில் கெவர்ன்மெண்டாருக்குள்ள பாத்திய தைகளை கெவர்ன்மெண்டாரிட உத்தியோகஸ்தர்கள் நிர்ணயித்து பைசல் செய்யவேண்டியது; இனும் நிலங்கள் என்பிரஞ்சைஸ் செய்யப்பட்ட பிற்பாடு அவைகளில் சர்க்காருக்காவது வேறே யாருக்காவதுள்ள பாத்தி யதைகளை நியாயவிசாரணை செய்யும் ஸிவில்கோர்ட்டார்மாத்திரம் நிர்ண யித்து பைசல் செய்யக்கூடும்.

அல்லது கைவிடப்பட்டாவது இருக்கிற கோவில்களுக்காக ரொக்கமாய்க் கொடுக்கப்படும் தொகைக்கும் அவைகளுக்காக விடப்பட்ட இனும் நிலங்களுக்கும் முன்னுடிபோர்டாரிட அனுமதிபெற்றுக்கொள்ளாமலே பூரு தீர்வையை விதித்தாலும் விதிக்கலாம், அல்லது அவைகளை திரும்ப சர்க்கார் வசத்தில் எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், மறுபடி சர்க்கார் வசத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயத்தின் சந்தர்ப்பங்களை வருஷாந்திர ஜமாபந்தி ரிபோர்ட்டில் கண்டெழுதவேண்டியது. எந்தகுளம் முதலானவைகளைப் பராமரித்து வருவதற்காக தெசபந்தமினும் விடப்பட்டதோ அந்தகுளம் முதலானவைகளை தேவையான இடத்தில் பழுதுபார்க்கும்படி தெசபந்த இனும்தாரர்களுக்கு கிரமமாக அறிவித்திருந்தும் அவர்கள் பழுது பார்க்காமற் போனால், மேற்கண்டமாதிரியாகவே கலெக்டரானவர் போர்டாரிட அனுமதிக்காக ரிபோர்ட்டுசெய்யாமலே அந்ததெசபந்தமினுங்களுக்கு முழுத்தீர்வையும் விதிக்கலாம்.

3. தெசபந்தம் இனும்தார்கள் பராமரித்து வருகிற (குளம்முதலான) வேலைப்பாட்டின் பிரயோஜனத்தினால் ஜாஸ்தி தீர்வைவரும் பட்சத்தில் அந்த தொகையில் அவர்களுக்கும் பங்குண்டு. ஷம்லாத் இனும் விஷயமாய் ரிஜஸ்டரில் தாக்கல் செய்யப்பட்ட விஸ்தீரணத்திற்கு மேற்பட்டு ஜலம் பாய்ச்சப்பட்ட புஞ்சை நிலத்திலிருந்து வரும் வரும்படியில் ஷம்லாத் தெசபந்தம் இனும்தார்களுக்கு அவர்கள் எவ்வளவு ஷம்லாத்து இனும் நிலங்களை அனுபவிக்கிறார்களோ அதற்குத்தக்கபடி பாகங்கொடுக்கப்படும்; கண்டம் இனுங்கள் விஷயமாய் எவ்வளவு நிலங்கள் ஜாஸ்தி சாகுபடி செய்யப்பட்டதோ அவ்வளவுக்கு விதிக்கப்பட்ட ஜலத்தீர்வையில் 100க்கு 25 கண்டம் தெசபந்தம்தாரர்களுக்கு கொடுக்கவேண்டியது.

4. ஜீவாதாரத்துக்கு விடப்பட்டு என்பிரன்சைஸாகாத இனும் நிலங்கள் விஷயமாய் கலெக்டரானவர் இனும் கமீஷனரால் கொடுக்கப்பட்ட பட்டையஸாஸனத்தில் கண்ட ஷரத்துகளையும் நிபந்தனைகளையும் அனுசரித்து நடந்து கொள்ளவேண்டியது. இனும் நிலமானது அப்போது எவன்கைப்பற்றிலிருக்கிறதோ அவன் ஆயுஸ்பரியந்தம் அனுபவிக்கவேண்டியதென்று அவனுக்கு ஸ்திரப்படுத்தப்பட்டிருந்தால் அந்த அனுபோகஸ்தன் இறந்து போனபிற்பாடு கலெக்டர்கள் அந்த இனும் நிலத்திற்கு பூருதீர்வையும் விதிக்கலாம்; இனும் நிலமானது அப்போது எவன்கைப்பற்றிலிருக்கிறதோ அவன் ஆயுஸ்பரியந்தமும் அவனிட வார்சுதாரனுடைய ஆயுஸ்பரியந்தமும் அனுபவிக்கப்படும்படி விடப்பட்டிருந்தால் அந்த இருவரும் இறந்த பிற்பாடு கலெக்டரானவர் இனும் நிலத்திற்கு பூருதீர்வையும் விதிக்கலாம். பரம்பரையாய் அனுபவித்து வரும்படி இனும் நிலங்கள் அடமானம் செய்ய

ப்பட்டிருந்தால் அப்பேர்க்கொத்த விஷயங்களில் இனும் நிலங்களை பராதீனப்படுத்தி மாற்றக்கூடாதென்றும் அவைகளுக்கு அவிபக்த சகோதரர்களும், கடைசியாய் அனுபோகித்தவனுடைய நேர் சந்ததியார்களும் அவர்கள் இல்லாமற் போகும்பட்சத்தில் முதலில் எவனுக்கு அடமானம் செய்யப்பட்டதோ அவனுடையநேர்சந்ததியார்களும், ஆகிய இவர்களுக்குத் தான் வார்சு பாத்தியதை உண்டென்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. மேலே சொன்ன சுதந்தரவாளிகள் ஒருவருமில்லாமற் போனால் கலெக்டரானவர் ரிபோர்ட்டுசெய்யாமலே அந்த இனும் நிலத்திற்கு பூருதீர்வையும் விதிக்கலாம். (கலெக்டரிட) இந்த உத்திரவினால் எவனாவது அதிருப்தியடைந்து அதற்கு விரோதமாய் அப்பீல் செய்ய இஷ்டப்பட்டால் கலெக்டரானவர் தாம்செய்த உத்திரவுக்குள்ள காரணங்களை எடுத்துச்சொல்லி அவனுக்கு ஒரு இண்டார்சுமெண்டு கொடுக்கவேண்டியது.

5. கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட என்பிரஞ்சைஸாகாத இனும் நிலங்கள் அவைகளை ரெவினியூ அல்லது போலீஸ் ஊழியத்திற்காக அனுபவிக்கப்பட்டவைகளாயிருந்தாலும் அல்லது கிராமத்து பொதுஜனங்களுக்கு செய்யவேண்டிய ஊழியத்திற்காக அனுபவிக்கப்பட்டு வந்தாலும், அவைகள் 1831ளு த்திய 6-வது சட்டத்துக்குட்பட்டது. ஆனால் சம்பளத்திற்குப்பதிலாக நிலம் அனுபோகம் செய்துகொள்ளும்படி விடப்பட்டிருக்கிறதா அல்லது நிலத்தின்தீர்வையை வசூல்செய்துகொள்ளும்படி ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறதா வென்பதைப்பற்றி தகராருண்டாகும்போது இந்ததகரார் ஸிவில்கோர்ட்டாரால் தீர்க்கப்படவேண்டுமேயன்றி 1831ளு த்திய 6-வது சட்டப்பிரகாரம் தீர்க்கப்படக்கூடாது.

6. என் பிரஞ்சைஸான இனும் நிலங்களின் குயிட்ரெண்டை வசூல் செய்யவேண்டிய விதம் எப்படியென்றால், ரயத்துவாரி நிலங்களின் தீர்வையை எந்தவிதமாய் வசூல் செய்யவேண்டுமோ அதேவிதமாய்த்தான். ஜீவாதாரத்திற்காவது மதசம்பந்தமான வேலைகளுக்காவது தர்மகாரியவேலைகளுக்காவதுஅல்லது வேறேவேலைக்காகவாவது அனுபவித்துவரப்பட்ட என்பிரஞ்சைஸாகாத இனும் நிலங்களின்குயிட்ரெண்டுதீர்வைகளை வசூல்செய்வதற்கு, ரெவினியூ எலம்போட்டு வசூல்செய்யும் சாதாரண மார்க்கமானது சம்பந்தப்பட்டதல்ல. மதசம்பந்தமான காரியத்திற்காகவாவது தர்மகாரியத்திற்காகவாவது விடப்பட்டிருக்கிற இனும் நிலங்களுக்காகச் சேரவேண்டிய குயிட்ரெண்டு பாக்கி ஏற்படும்பட்சத்தில் கலெக்டரானவர்கள் 1863ளு த்திய 20-வது சட்டப்பிரகாரம் மானேஜிங் கம்மிட்டியார் அல்லது பொறுப்பாளிகள் (ட்ரஸ்டிகள்) ஷை இனும் நிலங்களைக் கைப்பற்றிக்கொண்டு அவைகளின் தீர்வை பாக்கிகளை பைசல்செய்ய இஷ்ட

மில்லாதவர்களா யிருக்கிறூர்களென்று முன்னுடி நிச்சயமாய்த் தெரிந்து கொண்டு, பிற்பாடு அந்த இனம் நிலங்களை ஜப்திசெய்து பிறகு அவைகளுக்கு பூருதீர்வையையும்விதிக்கும்பொருட்டு போர்டாரிட அனுமதியைக் கோரிக்கொள்ளவேண்டியது. என்பிரஞ்சைசாகாத இனம் நிலங்களுக்காக தீர்வைபாக்கி ஏற்பட்டிருந்து அந்த இனம்நிலங்கள் ஜீவாதாரத்திற்காக விடப்பட்டவைகளாயிருந்தால், கிரமமாக நோடீஸ் கொடுத்தபிற்பாடு அவைகளுக்கு பூருதீர்வையும் விதித்து அவைகளை அயன் நிலங்களோடு சேர்த்துவிட்டுப் பிறகு பாக்கிக்காக ஏலம்போடலாம்; குயிட்ரெண்டுபாக்கி சேரவேண்டிய யாதொரு இனம்நிலமானது, ஊழியம்செய்து வருகிறவனிட அனுபோகத்தில் இல்லாத கிராமஊழியஇனம் நிலமாக யிருந்தால், அதை ஜப்தியில்வைத்து இனம்நிலத்தின் வரும்படியைக்கொண்டு பாக்கியை கொஞ்சம் கொஞ்சமாக முஜராசெய்து கொண்டுவரவேண்டியது. இனம்நிலமானது ஊழியம்வேலைபார்த்து வருகிறவனிட அனுபோகத்தில் இருந்தால் அதை ஜப்திசெய்வது யுக்தமல்ல, ஏனென்றுல் வேலை பார்த்துவருகிறவனுக்கு சம்பளத்துக்காக கிடைக்கக்கூடிய வரும்படியானது அவனுக்குக் கிடைக்காமற்போய்விடும்; ஆனுல்இதுவிஷயத்தைப்பற்றி மேலதிகாரிகள் விசாரித்து பாக்கிதாரன்பேரில் தப்புஇருப்பதாகத் தோன்றினுல் அவனுக்கு தண்டனைவிதிக்கலாம். ஆகிலும், கிரமப்படி இந்த இரண்டு விஷயங்களிலும், இனம்தாரனிட இதரசொத்துக்களைத் தொடருவதற்கு ஆக்ஷேபணை ஒன்று மில்லை. பிரத்தியேகமான ஏற்பாடுகள் செய்ய வேண்டிய விஷயங்களைப்பற்றி போர்டாருடைய உத்திரவுக்காக ரிபோர்ட் செய்யலாம்.

7. புது ஸெட்டில் மெண்டு பிரகாரம் கொடுக்கப்படும் பட்டைய சாஸனத்தை இனம்தார்கள் பெற்றுக்கொள்ளமாட்டோமென்று சொல்லும் பட்சத்தில் கெவர்ண்மெண்டு நிலங்களோடு அந்த இனம் நிலங்களை சேர்த்துவிட்டு இனம் தாரனிடத்திலிருந்து பூருதீர்வையையும் வசூல் செய்யலாம்; இந்த விஷயத்தில் பட்டைய சாஸனங்களை ரத்து செய்யும்பொருட்டுஅவைகளை இனம் கமிஷனருக்குத் திரும்பு அனுப்பிவிட வேண்டியது. இனம்தார்கள் அகப்படாமற்போவதால் பட்டையசாஸனம் கொடுப்பதற்குத் தடையுண்டாகும்விஷயத்தில் இனம்நிலத்தை ஜெப்தி செய்தும் இனம்தார் அகப்படாமலே யிருந்தால் பின்னிட்டு ஒருவருஷமானபிறகுஇனம் நிலத்தை திரும்ப கெவர்ண்மெண்டாரிட வசமாக்கிக்கொள்ளவேண்டியது.

8. என்பிரஞ்சைஸான இனம் நிலங்களின் இனம்தாரனுனவன் அவனுக்கு டைட்டில்டீட் கொடுக்கப்படுமுன்பாகவே இறந்துபோய்விட்

ட்டால் முதலில் சாஸனத்தை பத்திரமாய் வைத்திருக்கும்பொருட்டு ரெவினியூ அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டியது. பிற்பாடு இறந்துபோனவனிட வார்ஸ்தாரன் என்று சாஸனத்தைப் பெற்றுக்கொள்ள பிரத்தியக்ஷமான பாத்தியதையுள்ளவன் எவன் என்று கலெக்டரானவர் விசாரணைசெய்து பிறகு தகுந்த கோர்ட்டாரிட உத்திரவினால் கலெக்டர் தடுக்கப்பட்டாலொழிய அப்படி பாத்தியதை உள்ளவனாய் ஏற்பட்டவன் எவனோ அவனுக்கு 6 மீ காலத்திற்குள் சாஸனம் கொடுத்துவிடப்படுமென்றும் விளம்பரம் செய்யவேண்டியது. கூடியவரையில் எல்லாருக்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யும்பொருட்டு விளம்பரத்தை ஜில்லாகெஜட்டுகளில் பிரசுரம் செய்யவேண்டியது. கலெக்ட்டரானவர் பட்டைய சாஸனத்தில் யாதொரு இத்துப்பாடும் செய்யாமல் தம்மிடம் வந்து சேர்ந்த போது அவைகள் எப்படிஇருந்தனவோ அப்படியே இறந்துபோனவனிட வார்ஸ்தாரர்களுக்கு அவர்களிட மிருந்து ரசீது பெற்றுக்கொண்டு கொடுத்து விடவேண்டியது.

9. கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட இனாம் நிலங்களுக்காக புதிதாய் விதிக்கப்பட்ட குயிட்ரெண்டு துகையை வில்லேஜ்ஸர்விஸ்பண்டில் வரவுவைத்துக்கொள்ளவேண்டியது.

10. சொந்தக்காரர்களால் கைவிட்டுவிடப்பட்டாவது, அல்லது தீர்வைபாக்கிக்காகபோடப்பட்ட ஏலங்களில்கெவர்ண்மெண்டுதரப்பில்எலமெடுக்கப்பட்டாவது, இருக்கிற என்பிரன்சைஸான இனாம் நிலங்களைப்பற்றி கெவர்ண்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டிய அவசியமில்லை; அந்த இனாம் நிலங்களை ரயத்துவாரி நிலங்களுடன் சேர்ப்பித்து விடவேண்டியது; கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட இனாம் நிலங்கள் என்பிரன்சைஸ் ஆவதற்கு முன்பாவது என்பிரன்சைஸ் ஆனதற்குப் பின்னிட்டாவது கைவிடப்படுவதினாலாவது, அல்லதுவார்ஸ்தார்கள் இல்லாமற்போவதாலாவது, அல்லது வேறுவிதமாயாவது, கெவர்ண்மெண்டாருக்குச் சேர்ந்துபோய் விட்டால் அந்த இனாம் நிலங்களை கணக்குகளில் ரயத்துவாரி நிலங்களென்று தாக்கல் செய்யவேண்டியது; ஆனால் (ரயத்துவாரி நிலங்களாக மாற்றப்பட்ட பிற்பாடு) அவைகளிலிருந்து வசூலாகும் (ரயத்துவாரி) தீர்வையிலிருந்து முன் அந்த நிலங்கள் இனாமாயிருந்தபோது அவைகளுக்குள்ள (குயிட்ரெண்டு) ஜோடிதீர்வையைக் கழித்து மீதி துகையை வில்லேஜ் ஸர்வீஸ் (கிராமஊழிய) பண்டில் வரவு வைத்துக்கொள்ளவேண்டியது. இந்த நிலங்களுக்காகக் கொடுக்கப்படும் பட்டாக்களில் முன்னாடி வில்லேஜ் ஸர்வீஸ் இனாமாகஇருந்த நிலங்கள்என்றும் ஆகையால் வில்லேஜ் ஸர்வீஸ்பண்டுக்குச் சம்மந்தப்பட்ட நிலங்களென்றும், விபரித்து

எழுதவேண்டியது; ஆனால்ரயத்துவாரி நிலக்காரர்களுக்கு என்னென்ன சுதந்தரங்கள் உண்டோ அந்த சுதந்தரங்களெல்லாம் இந்த பட்டாதாரர்களுக்குமுண்டு; (ரிமிஷனுக்காக ஏற்படுத்தப்பட்ட) விதிகள்பிரகாரம் ரிமிஷனும் (தீர்வை வஜா) செய்யப்படும்; ஆகிலும், இந்த நிலங்களை யாரும்அனுபோகத்துக்குஎடுத்துக்கொள்ளாமலிருக்கும்போது, (அனுபோகத்திலிருந்திருந்தால் வசூலாகக்கூடிய) தீர்வையின் எந்தபாகத்தையாவது கெவர்ண்மெண்டாரிடமிருந்து வசூல்செய்துகொள்ள வில்லேஜ் ஸர்வீஸ் பண்டுக்கு பாத்தியதையில்லை.

11. என் பிரஞ்சைசான வில்லேஜ் ஸர்வீஸ் இனம்நிலங்கள் குயிட்ரெண்டு பாக்கிக்காக ஏலம்போடப்பட்டு கெவர்ண்மெண்டு தரப்பில் ஏலமெடுக்கப்பட்ட விஷயத்தில் வில்லேஜ் ஸர்வீஸ்பண்டு நிமித்தியமாக ஏலமெடுக்கப்படுகிறதாகையால் ஏலத்துகையை வில்லேஜ் ஸர்வீஸ்பண்டில் செலவெழுதவேண்டியது.

12. குயிட்ரெண்டானது ஸெட்டில் மெண்டு டிபார்ட்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட தீர்வையை விட ஜாஸ்தியாயிருக்கும்பட்சத்தில் குயிட்ரெண்டை (ஸெட்டில் மெண்டில் ஏற்பட்ட) தீர்வைக்கு சமமாயிருக்கும்படி குறைக்கலாம்.

13. தனி இனம் (நிலங்கள்) விஷயமாய் நடத்தப்படும் நடவடிக்கைக்கும் இனம்கிராமங்கள் விஷயமாய் நடத்தப்படும் நடவடிக்கைக்கும் யாதொரு பேதமுமிருக்கக்கூடாது.

118. **சந்ததியின்வார்ஸ்:**—இரண்டு அல்லது மூன்று பரம்பரை வரையில் அனுபவித்துக்கொள்ளவேண்டியதென்றுவிடப்பட்ட இனம் நிலங்கள் விஷயத்தில் முதல் அனுபோகஸ்தன் இறந்துபோனபிறகு அடுத்த சந்ததியை 2–வது சந்ததி என்றும் அதற்குப் பின்னிட்ட சந்ததியை 3–வது சந்ததிஎன்றும் பாவிக்கவேண்டும். உதாரணம்:—3 ஸந்ததிவரையில்அனுபவித்துக்கொள்ளும்படிஒருஇனம்நிலத்தைஏ. என்பவனுக்குவிடப்பட்டிருக்கிறது. அவனுக்குப் பின்னிட்டு ஜீவித்திருக்கிற அவிபக்தர்களான ஸி-டீ-ஈஎன்ற பிள்ளைகள் 2-வது சந்ததியாவார்கள். ஸி யின் பிள்ளையாவது டீ யின்பிள்ளையாவது ஈ யின் பிள்ளையாவது எவன் கடைசியாய் ஜீவித்திருக்கிறானோ அவன் 3-வது சந்ததி யாகபாவிக்கப்படுவான்; ஆனால் இந்த விஷயங்களில் குடும்பமானது பிரதி சந்ததியிலும் அவிபக்தமாயிருந்திருக்க வேண்டியது (பாகம்பிரித்து கொள்ளாம லிருந்திருக்கவேண்டியது.) 2வது சந்ததியில் சொத்தை பாகம் செய்துகொள்ளும் பட்சத்தில் அந்த சந்ததியில்எவன் பிள்ளையில்லாமல் இறந்துபோகிறானோ அவனுடைய பங்கு அற்றுப்போய்விடும்.

119. என்பிரந்சைசலான இனம் நிலங்களிலுள்ள கூட்டுபாத்தியதையைபிரிவினைசெய்வது:— அடியில் கண்ட விளம்பரப்பிரகாரம் சில நிபந்தனைகளுக்கும் சில அளவிற்கும் உட்பட்டு, கெவர்ண்மெண்டு குயிட்ரெண்டை பொதுவில் செலுத்திவருகிற என்பிரன்சைசலான இனம் நிலங்களின் கூட்டாளிகள் தங்களுக்கு அந்த நிலங்களிலுள்ள கூட்டு பாத்தியதையை பிரிவினை செய்துகொள்ளலாம்; இந்த விளம்பரத்தை ஜில்லா கெஜட்டில் அப்போதைக்கப்போது பிரசுரம்செய்யவேண்டியது:— "(1) இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிப்பதென்ன வென்றால், கூட்டுஅனுபோகத்திலுள்ளஎன் பிரன்சைசலான இனம் நிலத்திலிருந்து அடையக்கூடிய ஆதாயங்களையும் கெவர்ண்மெண்டாருக்குசெலுத்தவேண்டிய குயிட்ரெண்ட் தீர்வையையும் பிரிவினைசெய்துகொள்ள அந்த இனம்நிலத்தின் கூட்டாளிகள் எல்லாரும் ஒத்துவந்து (ஆகிலும் அப்படி பிரிவினை செய்யப்பட்டபிறகு யாராவது ஒருவன் செலுத்தவேண்டிய குயிட்ரெண்டானது 2 அணா அல்லது அதற்குமேற்பட்டு இருந்தாலொழிய அந்தக் குயிட்ரெண்டைப்பற்றி கலெக்டர் கவனிக்கவேண்டிய அவசியமில்லை) ஒரு உடன்படிக்கையில் அந்தந்த விஷயப்பிரகாரம் நிலத்தையாவது அல்லது மாசூலையாவது அல்லது குத்தகை முதலான ஒப்பந்தத்துக்குப்பயிரிடும் புறக்குடிகளிடத்திலிருந்து வரும்குத்தகையையாவது பிரிவினை செய்துகொள்ளும் விபரங்களை எல்லாம்கண்டெழுதி, மேலேசொன்ன உடன்படிக்கையானது ஒருவனும்விலக்கில்லாமல் எல்லா கூட்டாளிகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்டதென்றும் கண்டெழுதி அந்தஉடன்படிக்கையில் எல்லாரும் கையெழுத்துசெய்து அதற்கு கிரமமான ஸ்டாம்புஒட்டி அதை ரிஜிஸ்டர் செய்துகலெக்டர்முன்பாக ஆஜர்ப்படுத்தும்பட்சத்தில், கலெக்டரானவர்இப்படி பிரிவினைசெய்ய உத்தேசித்திருப்பதை பொதுஜனங்களுக்கு பிரசித்தம் செய்து, பிறகு இதுவிஷயமாய் யாதொரு ஆக்ஷேபணையும் அங்கீகரிக்சப்படாமல் இருந்தால், அடியில் கண்டநிபந்தனைக்குட்பட்டு பிரிவினை செய்யும் யோசனைகளை அங்கீகாரம் செய்யத் தயாரா யிருக்கிறார்; அந்த நிபந்தனையாவது:—அங்கீகரிக்கப்பட்டும் கணக்கில்தாக்கல் செய்யப்பட்டும் இருக்கிற இனம்நிலத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் சேரவேண்டிய சர்க்கார் தீர்வையை வசூல்செய்யபாக்கிதாரனிட வேறே சொத்துக்கள்போதாததாக ஏற்பட்டால் அந்தப் பாகம் ஏலம் போடப் படும்; ஆயினும் சர்க்காருக்குச்சேரவேண்டிய துகைஇன்னமும் முஜராவாகாமலிருந்தால், பாக்கித்துகையை மற்றகூட்டாளிகளிடத்திலிருந்து சம்பந்தப்பட்ட இனம் கிராமத்தில் அவர்களுக்குள்ள பங்குகளையாவது அல்லது அவர்களுக்குச் சொந்தமான வேறுசொத்தையாவது அல்லது இரண்டையுமாவது ஏலம்போட்டு வசூல்செய்ய

கலெக்டருக்கு சுதந்திரமுண்டு. (2) (பிரிவினை முதலான விஷயங்களைப்பற்றி செய்யப்பட்ட) எந்த ஆலோசனைகளைப்பற்றியாவது தகுந்த கக்ஷிக்காரர்கள் ஆக்ஷேபணை செய்யும்பட்சத்தில் அந்த ஆக்ஷேபணைகளைப்பற்றி கலெக்டரானவர் விசாரணை செய்து அவைகளை தக்கப்பிரகாரம் பைஸல்செய்வார்."

2. பிரிவினை செய்யும்பொருட்டு உத்தேசித்து கிரமப்படி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டதென்று சம்பந்தப்பட்ட கிராமத்திலும் தாலூகாகச்சேரியிலும் ஹுஜூர்கச்சேரியிலும் விளம்பரப்பத்திரிகை மூலமாய் பிரசித்தம் செய்யவேண்டியது. சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் சம்மதித்துச் செய்த ஆலோசனை என்று விளம்பரப்பத்திரிகையில் கண்டெழுதவேண்டியது; தவிரவும் அந்த ஆலோசனையடங்கிய விண்ணப்பத்திற்கு விரோதமாய் 3 மாதத்திற்குள் ஆக்ஷேபணை செய்தாலொழிய பலானதேதியில் அந்த ஆலோசனையடங்கிய விண்ணப்பமானது பைசல் செய்யப்படும் என்றும் விளம்பரப்பத்திரிகையில் கண்டெழுதவேண்டியது.

3. விண்ணப்பத்தில்கண்ட ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளக் கலெக்டர் தீர்மானித்தபிற்பாடு மேலேசொன்ன விளம்பரத்தின் ஷரத்துகள் பிரகாரம் இனம் நிலத்தை எல்லாரும் சம்மதப்பட்டு பிரிவினை செய்து கொள்ளும்பொருட்டு செய்து கொண்ட ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றும், பிரிவினை செய்ய வேண்டிய விபரத்தையும், கண்டு தாலூகா அதிகாரிகளுக்கு கலெக்டர் ஒரு உத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

4. ஒவ்வொரு ஆலோசனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடனே அது ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று ஜில்லாகெஜட்டில் பிரசித்தம்செய்யவேண்டியது.

5. இந்த ஆர்டரில் கொடுக்கப்பட்ட உத்திரவானது எத்தனை விஷயங்களில் பிரயோஜனப்படுத்தப்பட்டதென்று கலெக்டரானவர்கள் தங்களிட வருஷாந்திர ஜமாபந்தி ரிபோர்டுகளில் பிரஸ்தாபம் செய்யவேண்டியது.

120. என்பிரன்சைஸான இனம்நிலங்களில்பிரிவினை செய்யப்பட்ட பாகங்களுக்குத் தீர்வை விதிப்பது:—என்பிரன்சைஸான முழு இனம் நிலத்திற்குள்ள விலையானது பிரிவினை செய்யப்பட்ட பாகங்களின் விலைக்கு எவ்வளவு பங்குள்ளதோ அதேதாரதம்மியப் பிரகாரம் அந்த முழு இனம் நிலத்திற்குள்ள ஜோடி அல்லது குயிட்ரெண்டை அதினுடைய பிரிவினை செய்யப்பட்டபாகங்களுக்கு பாகிக்க வேண்டியது. பிரிவினை செய்

யப்பட்ட பாகங்கள் சிறியவைகளாயிருக்கும் பட்சத்தில், இத்தனை வருஷத்திய குயிட்ரெண்டை செலுத்தி மீட்டுக்கொள்ளலாம் என்கிற மார்க்கத்தை அனுஷ்டிக்கச் செய்யவேண்டியது.

2. இனம்நிலத்தின் பிரிவினையான பாகமானது எலத்தில் விற்கப்பட்டாலாவது அல்லது வாங்கப்பட்டாலாவது அதற்காக தனியாய் சாஸனம் கொடுக்கப்படவேண்டிய அவசியமில்லை. இதரசொத்துக்களின்விஷயங்களைப்போலவே (நிலத்தை) விற்பனைசெய்கிறவனால் எழுதிக்கொடுக்கப்பட்ட சாஸனங்களானவை (நிலத்தை) விலைக்குவாங்கினவனிட பாத்தியதையை ருஜுப்பிப்பதற்கு போதுமானவைகள். எவர்களாவது குயிட்ரெண்டு தீர்வையை பாகித்துக்கொள்ளும்பொருட்டு ரெவினியூ அதிகாரிகள் முன்பாக ஆஜராகும் பட்சத்தில் முதலில் இனம் கமிஷனரால் முழு இனம் நிலத்திற்கும்கொடுக்கப்பட்ட பட்டைய சாஸனத்தில்கண்ட விஸ்தீரணத்திலிருந்து விற்பனையானபாகத்தை கழித்துவிட்டு அந்தப்பிரகாரம் பட்டைய சாஸனத்தின் பின்புறத்தில் எழுதி அதில் கலெக்டராவது அல்லது அஸிஸ்டெண்டு கலெக்டர்களில் ஒருவராவது அல்லது டிப்டிகலெக்டராவதுகையெழுத்து செய்யவேண்டியது. எப்படியானால் சாதாரண ரயத்துவாரிநிலங்களை விலைக்குவாங்கினவன், (நிலம் விஷயமாய் உண்டாகும்) மாறுதலை பதிவு செய்து கலெக்டராபீஸில் வைத்திருக்கப்பட்ட ரிஜிஸ்டரிலிருந்து எக்ஸ்டிராக்ட் எடுத்துக்கொள்ளக் கூடுமோ அதைப்போலவே (இனம் நிலங்களின் பாகத்தை) விலைக்கு வாங்கினவனும் அந்த ரிஜிஸ்டரிலிருந்து எக்ஸ்ட்ராக்ட் (சம்பந்தப்பட்ட பாகத்திறகு நகல்) எடுத்துக்கொள்ளலாம்.

3. ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் அஸ்யூரென்ஸஸ் (Registration of assurances) ஆக்ட்டின் படிபாத்தியதையை ஸ்திரப்படுத்திக் கொள்ளஇன்னும் சில ஆதாரங்களுண்டு.

121. சொந்தத்தில் தத்தகைமுதலான ஒப்பந்தம் செய்வது:— ரிஜிஸ்டரில்தாக்கல்செய்யப்பட்ட சொந்தக்காரர்கள் தங்களிட என்பிரன்சைஸானஇனம் நிலத்தை விற்பனைசெய்து விடும்பட்சத்தில் கலெக்டரானவர் அப்படி உண்டான மாறுதலானது ரிஜிஸ்டரில் தாக்கல்செய்துகொள்ளப்படமாட்டாதென்று சொல்லக் கூடாது; ஆனால் அப்படி செய்யப்பட்ட பராதீனத்தினால் கெவர்ன்மெண்டாருக்கு கடைசியாய் உள்ள பாத்தியதைக்கு ஹானிஉண்டாகும்போலிருந்தால் இந்த விஷயத்தில் உண்டான மாறுதலை ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து கொள்ளும்முன்பாக (போர்டாருக்கு)ரிபோர்ட் செய்யவேண்டியது.

122. **கம்பென்சேஷன் அதாவது பிரதிபலன்:—**இனும்தார்கள் தங்களிட நிலங்களுக்குப்பதிலாய் வேறே நிலங்கள் வேண்டுமென்ருவது தங்களிடநிலங்களுக்கு கம்பென்சேஷன் வேண்டுமென்ருவது பாத்தியதை சொல்லிக்கொள்வதற்குள்ளகாரணங்களை இரண்டு வகுப்புகளாகபிரிக்கலாம், அதாவது:—(1)நேரிட்டதாய்சொல்லப்பட்டநஷ்டமானது இனும்தாரனிட கட்டுப்பாட்டுக்கு மிஞ்சிப்போனகாரணங்களினுல்நேரிட்டதாயிருப்பது; (2) அவ்விதநஷ்டமானது கெவர்ன்மெண்டாரிட ஏதோ ஒருசெய்கையினுல் நேரிட்டதாயிருப்பது.

2. இனும்தாரனிடகட்டுப்பாட்டுக்குமிஞ்சிப்போன காரணங்களினுல் நேரிட்ட நஷ்டத்தைப்பற்றி பாத்தியதைகளை சொல்லிக்கொள்ளும் விஷயத்தில், அந்தஇனுமானது எவ்விதமானதென்றுமுதலில்ஆலோசனையில் எடுத்துக்கொள்ளப்படும். ராஜாங்கத்துக்காக நேராய் பலான ஊழியம் செய்வதற்குப் பிரதிபலனுக விடப்பட்ட இனும் நிலமாய் இருந்தால் (இதற்கு உதாரணம்—கம்மாளன், சிற்பன் முதலானவர்களல்லாத மற்றகிராம நவுக்கர்களுக்கு விடப்பட்ட இனும்; அல்லது கோவிலுக்கு விடப்பட்ட இனுமல்லாத சத்திரத்திற்காக விடப்பட்ட இனும்) அவர்கள் இனும்நிலத்திற்கு வேறு நிலம் வேண்டுமென்பதாய் சொல்லிக்கொள்ளும்பாத்தியதைகள் ஏற்றுக்கொள்ளப்படும், ஆனுல் (இனும் நிலங்களுக்கு உண்டான நஷ்டமானது வாஸ்தவ்வியமாய் இனும்தாரனிட கட்டுப்பாட்டுக்கு மிஞ்சிப்போன ஏதோ காரணத்தால்தான் நேரிட்டதென்றும் அப்படி நஷ்டம்நேரிட்டதனுல் அந்த இனும்நிலத்திலிருந்து இனி வரும் வரும்படியானது கிராமநவுக்கர்கள் செய்யப்பட்ட ஊழியத்திற்குப்போதுமான சம்பளமாயிருக்கமாட்டாது என்றும் ருஜூப்பிக்கவேண்டியது. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் முன்னிருந்த இனும்நிலத்துடன்கூட வேறு நிலத்தை எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கும்படியான அடமானம் செய்தாவது, அல்லது (நஷ்டமாகாமலிருக்கிற) மீதிஇனும்நிலத்திற்காக குயிட்டுரெண்டு செலுத்தவேண்டியிருந்தால் அந்த குயிட்டுரெண்டை மேற்கண்டபடி ஸ்திரமாய் குறைத்தாவது கம்பன்சேஷன் (பிரதிபலன்) செய்யப்படும். கூட வேறுநிலஅடமானம் செய்வதாயிருந்தால் அவ்விஷயத்தில், கூடியவரையில் நிலங்களை பிரிவினை செய்வதைத்தடுத்துவிட்டு நேரிட்ட நஷ்டத்தின் மதிப்புக்கு சமமானமதிப்புள்ள ஒருநிலத்தையாவது கொடுக்கவேண்டியது; அல்லது (நஷ்டமாய்விட்ட) இனும்நிலத்தைவிட ஜாஸ்திவிலை பெறும்படியானநிலத்தை பர்த்தியாய் கொடுத்து இந்த இரண்டு நிலங்களின் விலைகளுக்கும் என்னவித்தியாசமுண்டோ அந்த வித்தியாசப்படும் துகைக்குச் சமமாய் (அதாவது அப்படி விலையில் ஜாஸ்தி பாகத்துக்குச் சமமாய்) குயிட்ரெண்டு செலுத்தும்படி நிபந்

தனே செய்யவேண்டியது. கரம்பு நிலத்தை அடமானம் செய்யும் பட்சத்தில் அதமபட்சம் விஸ்தீரணம் ஒரு ஏகராவாகவாவது இருக்க வேண்டியது; அவசியமானல் இதற்கு குயிட்டுரெண்டு தீர்வை விதிக்கலாம். ராஜாங்கத்தாருக்கு நேராகச் செய்யப்படாத ஏதோஊழியத்திற்காக விடப்பட்ட இனமாயிருந்தால்,கம்பென்ஸேஷனுக்காக சொல்லிக்கொள்ளப்படும் யாதொரு பாத்தியதையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எப்படியானல் கெவர்ண்மெண்டார் ஜனங்களிட மற்ற சொந்த சொத்துக்கள் விஷயமாய் பிரவேசிக்கறதில்லேயோ அதேமாதிரியாய் மேலே சொன்ன (அதாவது ராஜாங்கத்தாருக்குநேராய் செய்யப்படாத வேலேக்காகவிடப்பட்டிருக்கிற) இனம் நிலங்கள் விஷயமாயும் கெவர்ண்மெண்டார் சிரத்தை எடுத்துக் கொண்டுபிரவேசிக்க மாட்டார்கள்; இப்பேர்ப்பட்ட இனம் நிலங்கள் முன்னுடிஅடமானம் செய்யப்பட்டிருந்ததினலேயே,கெவர்ண்மெண்டாரிட எவ்விதசெய்கையினலும் அல்லாமல்அந்தநிலங்களுக்கு நஷ்டம் நேரிட்டிருக்கும்பட்சத்தில் இனம்அடமானம் பெற்றவனே அப்பேர்ப்பட்ட நஷ்டங்களிலிருந்து நீக்கிக்காப்பாற்ற கெவர்ண்மெண்டார் கடமைப்பட்டவர்களாக மாட்டார்கள்.

3. கெவர்ண்மெண்டாரால்செய்யப்பட்ட ஏதோ ஒரு காரியத்தினல் நஷ்டம் நேரிட்டிருந்து அதைமுன்னிட்டு பிரதிபலனுக்காக பாத்தியதைகள் சொல்லிக்கொள்ளும்பட்சத்தில்,அப்பேர்ப்பட்ட விஷயத்தில் இனம்தாரனனவன் அவனுக்கு இனம் விடப்பட்டதற்காக தகுந்த ஊழியம் செய்தாலும் செய்யாமற் போனலும் அவனிட பாத்தியதை நிராக்ஷேபமானது; அந்த இனம் நிலமானது கோவில் முதலானவைகளுக்கு உபயோகப்படும் பொருட்டு விடப்பட்டதாயிருந்தால் ஸர்வீஸ் இனம் (அதாவது ஊழியத்திற்காக விடப்பட்ட இனம்)நிலங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட விதமாகவே ஸ்திரமானபிரதிபலன் செய்யப்படும்: மற்றவிஷயங்களில்அடியிற்கண்ட 3 விதங்களில் இனம்தாரனிட இஷ்டப்பிரகாரம் எந்த ஒருவிதமாயாவது பிரதிபலன் செய்யப்படும்; (1) மேலேசொல்லப்பட்டநிபந்தனேகளுக்கும்அதமபக்ஷ விஸ்தீரணத்திற்கும் உட்பட்டு பர்த்திநிலம் பெற்றுக்கொள்வது; (2) (நஷ்டமாகாத) மற்றநிலங்களுக்காக செலுத்தவேண்டிய குயிட்ரெண்டை (கெவர்ண்மெண்டாரால்) கைப்பற்றிக்கொள்ளப்பட்ட நிலத்திலிருந்து வருஷவாரியில் வரும்வரும்படிக்குச் சமமாய் குறைவுசெய்துகொள்வது;(3) ஒரே தடவையாய் ரொக்கப்பணம் பெற்றுக்கொள்வது.

4. ரொக்கப்பணமாய் கம்பென்சேஷன் கொடுக்கப்படும்விஷயத்தில் அதற்குத் தேவையான பணம் எந்தடிபார்ட்மெண்டாரால் நஷ்டம் நேரிட்டதோ அந்தடிபார்ட்மெண்டாரால் கொடுக்கப்படவேண்டியது.

5. பொது உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கு பர்த்தியாக வேறு நிலங்கள் அடமானம்செய்வதாக ஆலோசனைசெய்து ரிபோர்ட்செய்யும்போது இனாம்தாரனுக்கு பர்த்தியாக கொடுப்பதாய் உத்தேசித்திருக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணமானது இனாம்தாரன் இழந்துவிட்டநிலத்தின் விஸ்தீரணத்துக்கு கூடியவரையில் சமமானதாயிருக்க வேண்டியவிஷயத்தில் கலெக்டர்கள் கவனம் வைக்கவேண்டியது. இரண்டுநிலங்களிட தீர்வைகளும்சமமாயிருக்கின்றன அல்லது அந்த நிலங்களின் விஸ்தீரணத்திற்குள்ள வித்தியாசத்திற்கு பதிலாக ஜாஸ்தி குயிட்ரெண்டு விதிக்கப்பட்டது என்பதே போதாது. எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கும்படியான பைசலாதி செய்யப்பட்ட ஜமீன் இலாகாக்களிலிருந்து நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்காக பர்த்திசெய்யும் பொருட்டு அந்த நிலங்களின் பைஷ்கஷ்தீர்வையை குறைக்கவேணுமென்று கோரிக்கொள்ளப்படும் பட்சத்தில், அந்த நிலங்களின் தற்காலத்திய பைஷ்கஷ் தீர்வை இவ்வளவென்றும் குறைக்க உத்தேசித்திருக்கிற துகை இவ்வளவென்றும் இனி வசூலாகக் கூடிய பைஷ்கஷ் துகை இவ்வளவென்பதைப்பற்றியும் ரிபோர்ட் செய்யவேண்டியது.

6. வருஷவாரியில்வரும் குத்தகையை பலனாக அடையவேண்டுமென்ற ஸ்பஷ்டமான கருத்துடன் இனாம் தார்களுக்கு நிலம் அடமானம் செய்யப்பட்டிருந்து, இனாம்தார்களிடத்தில் குத்தகைக்குப் பயிரிடுகிற குடியானவர்கள் சட்டப்படி கொடுக்கவேண்டியகுத்தகையானது அவர்கள் இனாம்தார்களுக்கு கொடுக்கவேண்டியதென்று முதவில் உத்தேசித்திருந்த மதிப்பைவிட சென்னைகெவர்ண்மெண்டாரிட ரெண்ட் ஆக்டு (குத்தகை வசூல் ஆக்டு) பிரகாரம் குறைந்து போய்விடும் பட்சத்தில், அப்படிகுறைவாய்ப் போனதற்கு பர்த்திசெய்யும்பொருட்டு இதுவிஷயத்தைப்பற்றி கலெக்டர் போர்டாருக்கு தெரிவித்துக்கொள்ள யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

7. இனாம்நிலங்களுக்கு பர்த்திசெய்யும்பொருட்டு (யாரிட) அனுபோகத்திலாவதிருக்கிற நிலங்களின் தீர்வையை வசூல்செய்துஎடுத்துக்கொள்ளும்படி உத்திரவுசெய்யலாம். இவ்விதமாய் பர்த்திசெய்வதாயிருந்தால் அதற்கு போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது; மேலும், அப்படி தீர்வையை வசூல்செய்து எடுத்துக்கொள்ளும்படி நிலத்தை அனுபவிக்கிறவர்களிட சம்மதமன்றியில் சிபார்சு செய்யவேகூடாது; நிலத்தை அனுபவிக்கிறவர்கள் இந்தமாதிரி சம்மதிக்காமற்போனாலாவது,பர்த்திசெய்வதற்காக வேறு நிலம் அடமானம்செய்யவும் கூடாமையாயிருந்தாலாவது, ரொக்கப்பணம் கொடுத்தாவது பேரிஜைக்குறைவுசெய்தாவது பர்த்திசெய்யவேண்டியது.

123. ஜலத்தீர்வை:—இனும்தாரனிட பட்டையசாஸனத்தில் கண்டெழுதப்பட்ட நஞ்சை நிலத்தின் விஸ்தீரணத்தில் ஒருபோகசாகுபடி செய்வதற்காக ஜலம் பாய்ச்சிக்கொண்டால் அதற்காக இனும்தாரனிடத்திலிருந்துஜலத்தீர்வை வசூல்செய்யக்கூடாது. அந்த நஞ்சையானதுஇருபோக நிலமென்று கணக்கில் தாக்கலாயிருந்தால் இரண்டுபோகத்திற்கும் பாய்ச்சிக்கொண்ட ஜலத்திற்கும் தீர்வைகிடையாது. ஆனல் கணக்கில் புஞ்சையென்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிலத்தை சர்க்கார் ஜலாதாரங்களிலிருந்து ஜலம்பாய்ச்சி நஞ்சைநிலமாகச்செய்துகொள்ளும்பட்சத்தில், இனும்தாரன் கைப்பற்றிலிருக்கிற சாகுபடியான நஞ்சைநிலத்தின் விஸ்தீரணத்தைப்பற்றிநிமித்திய மில்லாமலே (புஞ்சையை நஞ்சையாகச்செய்த) நிலத்திற்கு கிரமமான ஜலத்தீர்வை விதிக்கப்படும்.

2. முதலில் ஜலம் பாய்வதற்குள்ள எவ்வித சௌகரியங்களை யோஜித்து நிலங்கள் நஞ்சையென்ற வகுப்பில் சேர்க்கப்பட்டதோ அவ்விதமாய் ஜலம் பாயக்கூடிய சௌகரியங்கள் முழுமையுமாவது கொஞ்சமாவது ஜலாதாரங்களை பழுதுபார்ப்பதினல் மறுபடி உண்டாகும்பட்சத்தில் இனும்தாரனுனவன் ஜலத்தீர்வையில்லாமல் அவனுக்குக்கிரமமாயுள்ள வீதப்பிரகாரம் ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்ள இடங்கொடுப்பது நியாயமே. ஆனல் இனும்தாரர்களிட ஆதாயங்களுக்காக (சர்க்கார்) ஜலாதாரங்களை அவர்களுக்கு ஜாஸ்தி தீர்வை விதிக்காமல் துரஸ்துசெய்வதை கெவர்ண்மெண்டார் மேற் போட்டுக்கொள்ளுகிறதில்லை.

124. ஜாஸ்தி அளவு:—சில்லரை இனும்நிலங்களின் (அசல்) விஸ்தீரணமானது கமீஷனரால் கொடுக்கப்பட்ட பட்டையசாஸனங்களில் தாக்கல்செய்யப்பட்ட விஸ்தீரணத்திற்கு மேற்பட்டு இருப்பதாய் இப்போது நடந்தேறிவருகிற ரெவினியூ சர்வேயில் தெரியவந்தால் அந்த ஜாஸ்திவிஸ்தீரணத்தைப்பற்றிஅடியில்வரும்பிரகரணங்களில் கண்டமாதிரியாய் பைசல் செய்யவேண்டியது.

2. பட்டையசாஸனங்களில் இப்போது தாக்கல்செய்யப்பட்டிருக்கிற விஸ்தீர்ணமானது அந்தந்த இடத்தில் வழங்கிவரும் சுதேச அளவுபிரகாரம் ஏற்படுத்தப்பட்ட விஸ்தீரணத்திற்குச் சமமானதாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

3. சுதேசத்தில் வழங்கிவரும் அளவை (இங்கிலீஷ்) ஏகராவாக மாற்றும்பொருட்டு அந்தந்த யிடத்தில் அனுஸரித்துவரும் தாமாஷாவானது குறைவுள்ளதாய் ஸர்வைசெய்யும்போது ஏற்படும்பட்சத்தில், அந்தந்த இடத்தில் வழங்கிவருகிற சுதேச அளவுபிரகாரம் தாக்கல்செய்யப்பட்ட இனும்

நிலத்தின் விஸ்தீரணத்திற்கு சற்றேறக்குறைய சமமா யிருக்கும்படியாய் நிலம் இருக்கப்பட்ட கிராமத்தின் சராசரியை யோசித்து பலானஏகரா விஸ்தீரணமுள்ள நிலத்தையும் அத்தோடேகூட முன்னளவில் குறைவுபட்டதற்குப் பர்த்தியாக 100 க்கு 10 ஜாஸ்தியும் சேர்த்து, யாதொரு ஜாஸ்தி தீர்வையில்லாமல் இனாம்தாரனுக்கு விடவேண்டியது.

4. இனாம் நிலமானது மேலேசொன்ன விதமாய் கணக்கிடப்பட்ட விஸ்தீரணத்திற்கு மேற்பட்டு இருப்பதாக சர்வேசெய்யும்போது ஏற்படும் பட்சத்தில், அப்படி ஜாஸ்தியாயிருக்கப்பட்ட பாகத்திற்கு அதேகிராமத்தில் அத்தன்மையான நிலத்திற்கு விதிக்கக்கூடிய பூரா தீர்வையும் விதிக்கப்படும்.

5. மேலேசொல்லப்பட்ட விதியை அடியில்வரும் உதாரணத்தினால் விவரித்துக்காட்டி யிருக்கிறது: ஒரு இனாம்நிலமானது 100 புட்டிகள் அடங்கிய நிலம்என்று தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது. இனாம் கமீஷனரால் புட்டி 1 க்கு வழக்கப்பிரகாரம் சமானமான 8 ஏகராக்கள் வீதம் கணக்கிடப்பட்டு மொத்தம் 800 ஏகராக்களானதாகப் பட்டையசாஸனத்தில் தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது; ஆனால் அந்தகிராமத்தை சர்வேசெய்தபிற்பாடு அந்தந்தயிடத்தில் வழங்கிவரும்புட்டியானது 9 ஏகராக்களுக்குச் சமானமானதாக சராசரியில் ஏற்பட்டால் யாதொரு ஜாஸ்தி தீர்வையில்லாமல் இனாம்தாரனானவன் (100 × 9) 900 ஏகராவையும் அதின்பேரில் 100க்கு 10 வீதம் சேர்த்து (அதாவது சர்வேசெய்யப்பட்ட மொத்தம் 990 ஏகராக்களை) அடைய பாத்தியதையுள்ளவன். இனாம்தாரனிட வசத்திலிருக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணமானது 990 ஏகராகளுக்கு மேற்பட்டிருப்பதாக சர்வேசெய்த பிற்பாடு ஏற்படும்பக்ஷத்தில் அப்படி ஜாஸ்தி என்று ஏற்பட்ட விஸ்தீரணத்திற்கு பூரா தீர்வையும் இனிமேல் செலுத்த இனாம்தாரன் உட்பட்டவனாவான்.

6. உத்திரவில்லாமல் ஹத்துக்கு மேற்பட்டு பிரவேசித்து அனுபவித்து வரும் விஸ்தீரண முள்ள நிலம் பலானதுதான் என்று வித்தியாசித்து தெரிந்து கொள்வது சாத்தியமல்லாததானபடியால் ஜாஸ்தி விஸ்தீரணத்துக்கு பட்டாகொடுக்கக்கூடாது; ஆனால் அதற்கு விதிக்கவேண்டிய தீர்வையை "இனாம் மொத்தத்திற்கும் ஜாஸ்திகுயிட்ரெண்டாக" விதிக்கவேண்டியது, கணக்கிடப்பட்ட விஸ்தீரணத்தையும், குயிட்ரெண்டு எவ்வளவு ஜாஸ்தி செய்யப்பட்டதென்பதையும் இனாம் ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து அதில் கலெக்டர் கையெழுத்து செய்ய வேண்டியது; தவிரவும் பட்டையசாஸனம் ஆஜர் செய்யப்பட்டால்

அதின் பின்புறத்தில் மேற்கண்ட அம்சங்களை கண்டெழுதவேண்டியது. அப்பேர்ப்பட்ட விஷயங்களை ஒரு ரிஜிஸ்டரிலும், சுதேசத்தில் வழங்கிவரும் அளவை ஏகராவாக மாற்றுவதற்கு அனுஸரிக்கப்பட்ட தாமாஷாவானது பட்டைய சாஸனம் தயார் செய்யப்படும்போது அனுஸரிக்கப்பட்ட தாமாஷாவைவிட குறைவாகயிருப்பதாய் சர்வேசெய்த பிற்பாடு ஏற்பட்டால் அப்பேர்ப்பட்ட விஷயங்களை வேறொரு ரிஜிஸ்டரிலும், பதிவுசெய்து வைத்திருக்கவேண்டியது. அனுபந்தத்தில் அந்த ரிஜிஸ்டர்களின் பாரங்கள் கண்டிருக்கிறது.

7. மேலேசொல்லப்பட்ட விதிகள் சில்லறை இனும் நிலங்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டவை; இனும் கிராமங்களின் சொந்தக்காரர்கள் இனும்கமிஷனரால் செய்யப்பட்ட ஸெட்டில்மெண்டின் நிபந்தனைகள்பிரகாரம் தங்கள் கிராமத்திய எல்லைக்குள்ளிருக்கிற முழுபைத்துக்கட்டையும் அதின் (ஜாஸ்தியோ குறைவோ) விஸ்தீரணத்தைப்பற்றி நிமித்தியமில்லாமலே அனுபவித்துவர பாத்தியதையுள்ளவர்கள்.

125. கைவிடுதல் அல்லது ராஜினுமா கொடுத்தல்:—பட்டா நிலங்களை ராஜிநாமாகொடுத்தால் எந்த நிபந்தனைகளின்பேரில் அது அங்கீகரிக்கப்படுகிறதோ அதே நிபந்தனைகளின்பேரில், என்பிரன்சைஸான இனும் நிலத்தை அதற்குப் பட்டைய சாஸனம் கொடுக்கப்பட்ட பிற்பாடு ராஜிநாமாகொடுத்தால் அதை அங்கீகரித்துக்கொள்ள கலெக்டருக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை; ஆனாலும் சாஸனத்தில்கண்ட பேர்வழிகளெல்லாம் இனும் நிலத்தை ராஜிநாமாகொடுப்பதில் சம்மதப்பட்டிருக்கவேண்டியது.

2. ஒரே பட்டையசாஸனத்தில் கண்டு அடமானம் செய்யப்பட்ட என்பிரன்சைஸான இனும் நிலத்தில் ஏதோ ஒருபாகத்தை ராஜிநாமாகொடுப்பதாயிருந்தால் மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கலெக்டரானவர் அதையும் அங்கீகரித்துக்கொள்ளலாம்; ஆனால் இனும் நிலமானது முறைமைப்படி கலெக்டரால் உட்பிரிவினை செய்யப்பட்டும், அப்படி பிரிவினை செய்யப்பட்ட பாகங்களுக்கு குயிட்ரெண்டு பாகிக்கப்பட்டும் இருக்கவேண்டியது; தவிரவும் அப்படி ராஜிநாமாகொடுக்கப்பட்ட பாகமானது ஒருரெவினியூ புலத்திற்குக் குறைந்ததாக இருக்கும்பட்சத்தில், கைவிடப்பட்ட விஸ்தீர்ணமானது ஒரு ஏகராவுக்குக் குறைந்ததாக இருக்கக்கூடாது. மேலும் கைவிடப்பட்டபாகமானது ஒருதுண்டாகவும், கைவிடப்படாமல் வைத்துக்கொண்டிருக்கப்பட்ட இனும் நிலத்தால் சூழப்படாததாயும், இருக்கவேண்டியது. பூரா ரெவினியூ புலங்கள் ராஜினுமா கொடுக்கப்பட்டால் அந்த ராஜிநாமாக்களை மேற்கண்ட ஒரு ஏகராவென்னும் நிபந்தனையைப்

பற்றி நிமித்தியமில்லாமலே அங்கீகரித்துக்கொள்ளலாம் ; ஆகிலும் அப்படி கைவிடப்பட்ட நிலங்களானவை கைவிடப்படாத நிலங்களால் சூழ்ந்து இருக்கப்பட்டு இதரர்களால் சாகுபடிக்காக எடுத்துக்கொள்ள சௌகரியப்ப டாத பட்சத்தில் அப்பேர்ப்பட்ட ராஜிநாமாக்களை தள்ளுபடி செய்யத்தான் வேண்டியது.

3. இனும் நிலம் மொத்தத்துக்குள்ள குயிட்ரெண்டுக்கும் அந்த இனும் நிலத்திற்குள்ள (சர்வேதீர்வை ஏற்பட்டிருந்தால் அந்த) தீர்வைக்கும் எவ்வளவு தாரதம்மியமுண்டோ அதே தாரதம்மியந்தான் கைவிடப்பட்ட பாகத்தின் குயிட்ரெண்டுக்கும் அதின் (சர்வே) தீர்வைக்கும் இருக்க வேண்டியது ; ஆனல் இனும் பைசலாதியான பிற்பாடு இனும் நிலம் ஜாஸ்தி விஸ்தீரணமுள்ளதாய் ஏற்பட்டு அந்த ஜாஸ்தி விஸ்தீரணத்துக்காக தீர்வை போடப்பட்டிருந்தால் இது விஷயத்தை மேற்சொன்ன விதிக்குட்படுத்தாமல் விலக்கு செய்யப்படும். இந்த விஷயத்தில் ராஜினமா கொடுத்து விடப்பட்ட பாகத்தையாவது, அல்லது அளவு ஜாஸ்திக்கென்று விதிக்கப்பட்ட துகைக்கு சமமான தீர்வையுள்ள அதின் ஓர் பாகத்தையாவது ராஜிநாமா கொடுக்கப்பட்ட ஜாஸ்திநிலமாக பாவிக்கப்படும்; மீதிபாகம் ஏதாவதிருந்தால் அதற்கு குயிட்ரெண்டு மேற்கண்டவிதமாக விதிக்கப்படும்: உதாரணம்—20 ரூபாய் தீர்வை ஏற்பட்டும், 12 ரூ குயிட்ரெண்டு (இந்த 12 ரூபாயில் அசல் குயிட்ரெண்டு 8 ரூ ஆகவும் அளவு ஜாஸ்திக்காக 4 ரூ ஆகவும்) உள்ளதாயும் இருக்கிறயாதொரு இனும் நிலத்தில் ரூபா 6 தீர்வை ஏற்பட்டபாகநிலத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டால் மீதிவைத்துக்கொண்ட இனும் நிலத்திற்கு அனுபந்தத்தில் கண்ட பிரகாரம் 7 ரூ குயிட்ரெண்டாக விதிக்கப்படும்.

4. ராஜிநாமா கொடுப்பதற்கு இனும் தாரனுக்கு பாத்தியதையுண்டாவென்பது சந்தேகமாயிருக்கும்பட்சத்திலாவது தகரார் செய்யப்படும்பட்சத்திலாவது, அல்லது இனும் நிலங்களானவை வாஸ்தவ்யமாய் இனும்தாரனிட சுதந்தரத்தில் இல்லாமலிருந்தாலாவது, இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ராஜினமா கொடுப்பதை அங்கீகரிக்கக்கூடாது ; ஆனல் குயிட்ரெண்டு செலுத்தத் தவறிப்போவதினல் பாக்கிதாரர்களாகிய இனும்தார்களைத் தொடரவேண்டியது அவசியமாயிருக்கும் விஷயத்தில் நிலத்தீர்வையை வசூல்செய்வதற்காக ஏற்படுத்தியிருக்கப்பட்ட விதிகள்பிரகாரமே என் பிரன் ஸைஸ்ஆன இனும்நிலங்களை ஜப்திசெய்து ஏலம் போடவேண்டியது.

5. கெவர்ண்மெண்டு பட்டாநிலங்களை ராஜினமாகொடுக்கும்பட்சத்தில் அதை அங்கீகரித்துக் கொள்ளும்பொருட்டு ஏற்படுத்தியிருக்கப்பட்ட விதிகளை அனுஸரித்தே, இனும்நிலங்களைராஜினமாகொடுப்பதற்கு தஸ்தாவேஜை

தயாரித்து தாக்கல் செய்யவேண்டியது. அப்படி இனும்நிலங்களுக்காக கொடுக்கப்படும் ராஜிநாமாவின் தஸ்தாவேஜை சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்கள் தாசில்தாரிடம் நேரில்கொடுக்கவேண்டியது; அப்படிகைவிடப்பட்ட இனும்நிலங்களின் பட்டையசாசனங்களை கலெக்டராபீஸில் வைத்து வைக்கவேண்டியது.

126. **பதில்மாற்றுதல்:**—மதசம்பந்தமான வேலைகளுக்காக விடப்பட்ட இயோமையாவென்னும் பென்ஷன்கள் அல்லது ரொக்கமாய் கொடுக்கப்படும் பென்ஷன்கள் இவைகளுக்கு பதிலாக நிலத்தீர்வை அடமானம் செய்யப்பட்டிருந்து அவ்விதமாய் ஏற்படுத்தப்பட்ட இனுங்களுக்காக இனும் கமிஷனரால் பட்டையசாஸனங்கள் கொடுக்கப்பட்டிருந்தால், அவைகளை (அந்த இயோமையாவகையரு பென்ஷன்கள் பதிவுசெய்திருப்பதை) இயோமையா ரிஜிஸ்டரிலிருந்து நீக்கிவிடவேண்டியது; அந்தபென்ஷன்கள் (வார்ஸ்தாரில்லாமற் போவதாலாவது வேறே எவ்விதகாரணத்தினுலாவது) பட்டுவடா செய்யப்படாமல் நிறுத்தி விடப்பட்டால் அவைகளைப் பற்றி இனி மேல் ரிபோர்ட்செய்யவேண்டியதில்லை.

127. **ஏலத்தில் விற்பனைசெய்வது:**—யாதாவது ஒரு இனும்தாரனவன் பாக்கி செலுத்த வேண்டியதாய் ஏற்பட்டு அந்த பாக்கியை வசூல் செய்ய இனும் நிலத்தின் ஓர்பாகத்தை மாத்திரம் ஏலத்தில் விற்பனை செய்தாலே பாக்கியை முஜராசெய்யபோதுமானதாயிருக்கும் பட்சத்தில், பாக்கி ஏற்பட்ட முழு இனும்நிலத்தையும் 1864ஞுத்திய 2-வது ஆக்டின் 45-வது பிரிவில்கண்ட நியமங்களை அனுஸரித்து ஏலத்தில் விற்கவேண்டியது அவசியமல்ல. சௌகரியப்பட்டவரையில்பாக்கியை வட்டியுடனேயும் இதர செலவுகளுடனேயும் வசூல்செய்ய எவ்வளவுபாக நிலம் அவசியமாய் ஏலம் போடவேண்டுமோ அவ்வளவு பாகத்திற்கு மேற்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யக்கூடாது.

2. என்பிரஞ்சைஸான இனும்நிலத்திற்காக தீர்வைபாக்கி செலுத்த வேண்டியதாயிருக்கும் பட்சத்தில் அந்த நிலத்திற்குள்ள அஸல் குயிட்ரெண்டுக்குட்பட்டு அதை ஏலம் போடவேண்டியது. பாக்கி துகைக்குக்கூட அந்தநிலம் ஏலத்தில் கேட்கப்படாவிட்டால், அந்தநிலத்தைகெவர்ண்மெண்டு தரப்பில் ஏலமெடுத்து அந்தநிலத்தின் பட்டையசாஸனத்தை ரத்துசெய்து பிறகு கெவர்ண்மெண்டுநிலமாக கணக்குகளில் பதிவுசெய்துக் கொள்ளவேண்டியது.

128. **ஜமீன்தாரி முதலானவைகளிலுள்ள இனும்நிலங்கள்:**—ஜமீன்தாரிகளிலும் பாளையங்களிலும் முழு இனும் கிராமங்களிலும் கைவிட

ப்பட்டாவது அல்லது திரும்ப சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டாவது இருக்கிற இனம் நிலங்களை அவைகளின் பூருதீர்வையில் மூன்றில் இரண்டுபங்கை குயிட்ரெண்டு அல்லது பைஷ்கஷுடன் சேர்த்து ஜமீன் தார் அல்லது பாளையக்காரர் அல்லது முழுஇனம்கிராமத்திய இனம் தார் இவர்களுக்கு அவர்களுடைய சம்மதியின்பேரில் ஒப்புக்கொடுத்துவிட வேண்டியது.

2. ஸ்திரமான பைஸலாதி செய்யப்பட்ட ஜமீன் இலாகாக்கள் சிறிய வைகளாயிருந்தாலும் அல்லது பெரியவைகளாயிருந்தாலும். அவைகளில் விடப்பட்டிருக்கிற தசபந்தம் இனம் நிலங்களானவை (அவைகள் எந்த காரியத்திற்காக விடப்பட்டிருக்கின்றனவோ அந்த) காரியங்களை நிறைவே ற்றுவதில் பிரத்தியட்சமாய் ஏதாவதுசொஸ்தி செய்திருப்பதாக ஏற்பட்டால் அந்த ஜமீன் முதலான இலாகாக்களுக்கு சுதந்தரமுள்ளவனுல் (அதாவது ஜமீன்தார் முதலானவர்களால்) திரும்ப கைப்பற்றிக் கொள்ளப்படத்தக்க வை. அந்தஜமீன்தாரிமுதலானவைகளில் ஸ்திரமான பைஸலாதிசெய்த காலத்தில்கூட அப்பேர்ப்பட்ட நிலங்கள் இனமாக இருந்திருந்தால்கூட அப்பேர்ப்பட்ட இனம் நிலங்களை திரும்ப வசப்படுத்திக்கொள்ள கெவர்ண் மெண்டாருக்கு பாத்தியதை கிடையாது. நஞ்சை தீர்வை வசூலாக ஆதா ரமாயிருந்த குளங்களை ஒழுங்காய் பாதுகாத்துவரவேண்டிய பொறுப்பா னது ஸ்திரமான ஸெட்டில்மெண்டு ஏற்பட்டபோது கெவர்ண்மெண்டா ரை விட்டுஜமீன்தாரனிடம் மாறிப்போய்விட்டது. ஜமீன்தார்களுக்குச் சேரவேண்டியதீர்வையை தசபந்தம் இனம்தார்கள் வசூல்செய்து எடுத்துக் கொள்ளும்படி அவர்களுக்கு தசபந்தம் இனம் விடப்படுகிறது; ஆகச்சே, சம்பந்தப்பட்ட குளம் பழுதாகாமல் இருக்கும்படி அதை ஒழுங்காய் பாது காத்து வைத்திருக்கவேண்டியதென்று ஒரு நிபந்தனை செய்துகொள்ளுகி ருர். தசபந்தம் இனம் தாரனானவன் ஒப்பந்தம் செய்துகொண்டபடி தான் செய்யவேண்டியவைகளை செய்யத்தவறிப்போய் அதினல் அந்தப்பொறுப் பானது ஜமீன்தாரைச் சேரும்பட்சத்தில் இனம் நிலத்தைத் திரும்பவசப் படுத்திக்கொள்ள அவனுக்கு (ஜமீன்தாருக்கு) பாத்தியதையுண்டு.

VII. (7)-வது அதிகாரம்.

இயோமையா, ராஜாங்கபென்ஷன்முதலியன.

129. பென்ஷன் பட்டுவாடாசெய்வதும் பென்ஷனர் முதலான வர்களைப்பார்வையிடுவதும்:—எல்லா பென்ஷனர்களிடவும் இயோமை யாதார்களிடவும் விபரங்கண்டஜாபிதா ஒன்றை ஒருபொட்டியில் வைத்து பூட்டி அதின்சாவியைபென்ஷன் பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தர் வைத்துக்கொள்ள வேண்டியது.

2. விபரங்கண்ட ஜாபிதாக்களில்லாமல் ஸர்டிபிகேட்டுகளை மாத்தி ரம் பென்ஷன்தார்களிடம் கொடுக்கவேண்டியது; இந்த ஸர்டிபிகேட்டு களில் காணவேண்டிய அம்சங்களாவன:—ரிஜிஸ்டரில் பென்ஷன் தாரிட நெம்பர், அவரிட பென்ஷன் துகை, அவரிட பெயர்: அகௌண்டன்ட் ஜெ னரலால் பர்மெனெனட் பேயபில் ஆர்டர் (Permanent payable order அதாவது பலானவருக்குச் சேரவேண்டிய பென்ஷன் துகைக்காக ஒரு அதிகாரபத்திரிகை) கொடுக்கப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங் களில் அந்த ஆர்டரின் கௌண்டர் பார்ட்டை (அதாவது அந்த ஆர்ட் டருடன் சேர்த்திருக்கப்பட்ட நகலை)ஸர்ட்டிபிகேட்டுக்குப் பதிலாக (பென் ஷன் தாரனுக்கு) கொடுக்கப்படும்; அப்பேர்ப்பட்ட கௌண்டர் ப்பார்ட் டையோ அல்லது ஸர்டிபிகேட்டையோ (அததற்குத் தக்கப்படி) பிரதி பென்ஷன் பட்டுவாடா செய்யப்படு முன்னமே ஆஜர்ப்படுத்தப்பட்டு பரிசீலனை செய்யப்படவேண்டியது.

3. பிரத்தியேகமாய் விலக்கப்பட்டிருந்தாலொழிய, எல்லாவித பென் ஷனர்களும் தங்கள்தங்களிட பென்ஷன் துகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்களே நேராக ஆஜராகவேண்டியது, தவிரவும் 6 மாததத் திற்கொருதரம் ஒரு கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தரிட முன்பாக பரிசீல னைக்கு ஆஜராகவும்வேண்டியது. பிரத்தியேகமாய் உயர்ந்த அந்தஸ்துள்ள ஆசாமிகள் விஷயத்திலும் மதக்கோட்பாடுகள்பிரகாரம் வெளியில் பகிரங்க மாய் வரக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிற கோஷா ஸ்திரீகள்விஷயத் திலும் மாத்திரமே நேராய் ஆஜராகவேண்டியதென்கிற விதியானது விலக்கு

செய்யப்படும்; அப்போதுகூட, அவர்கள் எந்தசந்தர்ப்பத்தை முன்னிட்டும் வெளியில் ஒருபோதும்வருகிறதேயில்லையென்கிறதாக கலெக்டருக்குத்திருப்திகரமாய் ருஜுப்படுத்தவேண்டியது. கோஷா ஸ்திரீகள்விஷயத்தில் கலெக்டர்கள் விலக்குசெய்யக்கூடும். மற்றவிஷயங்களில் கெவர்ன்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. மேலேசொன்ன சுதந்தரத்துக்கு பாத்தியதையில்லாத ஆஸாமிகள் தேகப்பழுதுள்ளவர்களாகவாவது விருத்தாப்பியமுடையவர்களாகவாவது இருக்கிறார்களென்கிற காரணத்தால் கலெக்டரால் பிரத்தியேகமான சிலவிஷயங்களில் விலக்கப்படலாம்.

4. பரிசீலனைக்காக கலெக்டரால் சம்மன்செய்யப்படும்போது ஒவ்வொரு பென்ஷனரும் அல்லது இயோமையாதாரும் ஆஜராகவேண்டியது, அப்படிக்கில்லாமல் மேற்சொன்ன விதியின்பிரகாரம் அந்தஸ்துள்ளவராகவாவது கோஷாஸ்திரீயாகவாவது இருப்பதாய் (அந்த விதியிலிருந்து) விலக்கப்பட்டிருந்தால், அப்பேர்ப்பட்ட விஷயத்தில் அந்தஸ்துள்ளவர் என்கிற காரணத்தால் விலக்கப்பட்டிருக்கிறவரை கலெக்டராவது அல்லது பென்ஷனர்வசிக்கிற டிவிஷன் சார்ஜிலுள்ள ரெவினியூ உத்தியோகஸ்தராவது அல்லது கலெக்டரால் இதுவிஷயமாய் அனுப்பப்படும் டிப்டி கலெக்டர் ஹோதாவுக்குக் கீழ்படாத வேறெந்த உத்தியோகஸ்தராவது வருஷத்தில் ஒருதடவைபோய் பார்வையிடவேண்டியது; கோஷாஸ்திரீகள் விஷயத்தில் கலெக்டரால் அனுப்பப்படும் ஓர் நம்பகமுள்ள ஸ்திரீ போய் பார்வையிடவேண்டியது. இப்படிபோய் பார்வையிடவேண்டியதானது என்னத்திற்காகவென்றால் நபர்கள் ஜீவித்திருக்கிறார்களாவென்றும் பலான அடையாளமுள்ள நபர்கள்தான்என்று நிச்சியப்படுத்திக்கொள்ளும் பொருட்டே. 3–வது பிரகரணத்தின்பிரகாரம் அந்தஸ்துள்ளவர் அல்லது கோஷாஸ்திரீ என்கிற காரணத்தினால் ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறவர்களைத்தவிர மற்ற ஆசாமிகளைப் போய் பார்வையிடவேண்டிய வேலையை தாசில்தார் அல்லது டிப்டிதாசில்தாரிடபொறுப்பாக்கலாம்; விருத்தாப்பியம் அல்லது தேகப்பழுதுள்ளவர்கள் என்கிறகாரணத்தால் நேராய் ஆஜராகவேண்டிய விதியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் காலாகாலத்தில் (6–மாதத்திற்கொருதரம்) செய்யப்படும் பரிசீலனைக்காக ஆஜராகவேண்டியது.

5. பென்ஷன்களைப் பெற்றுக்கொள்ள நேராய் ஆஜராகவேண்டியதில்லையென்று விலக்கப்பட்டிருக்கிற பென்ஷனர்களுக்கும் இயோமையாதார்களுக்கும்அவர்கள் ஏஜெண்டுமூலமாய்பென்ஷன்கொடுபடிக்கலாம்; அப்பேர்ப்பட்ட விஷயத்தில் 2–வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்படலான பென்ஷன் ஸர்டிபிகேட்டை அத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற நமூனாவில்

பென்ஷனர் அல்லது இயோமையாதாரால் கையெழுத்து செய்யப்பட்டும் ஷ ஏஜெண்டுகளால் கையொப்பமிடப்பட்டும் கிரமமாய் ஸ்டாம்பும் ஒட்டப்பட்ட அதிகாரபத்திரத்தையும் அல்லது பிரமாணிக்கப்பத்திர முதலியவற்றையும், அதிகாரப்பத்திரம் ஆஜர் செய்யப்படாமற்போகிற விஷயத்தில் பென்ஷனர் அல்லது இயோமையாதாரால் கையெழுத்துசெய்யப்பட்ட பென்ஷன் ரசீதையும் கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தன் அல்லது பென்ஷனரால் அல்லது பிரஸித்திபெற்றவர்களும் நம்பிக்கையுள்ளவர்களுமான ஜனங்களால் கையெழுத்து செய்யப்பட்ட ஒரு ஜீவன ஸர்ட்டிபிகேட்டையும், ஆஜர்ப்படுத்த வேண்டும். (சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத) சொந்த (ப்ரைவேட்) ஆஸாமியால் கையெழுத்துசெய்யப்பட்ட ஜீவன ஸர்டிபிகேட்டுகளாயிருந்தால் அந்த ஸர்டிபிகேட்டானது ஓர் கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தனாலும் கையெழுத்து செய்யப்படவேண்டியது. நாட்டுப்புறத்துகிராமங்களில் கிராமமுனிஸீப் அல்லதுகணக்கரால் கையெழுத்து செய்யப்படவேண்டும்; ராணுவ ஸ்தானங்களில் ஸ்டேஷன் ஸ்டாப் ஆபீஸரால் கையெழுத்து செய்யப்படவேண்டும்; பட்டாளங்களுள்ள இடங்களில் ஓர்சுதேசபட்டாள ஆபீஸரால் கையெழுத்து செய்யப்படவேண்டியது. பெரியபட்டணங்களில் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றித் தெரிந்திருக்கக்கூடிய ஓர் உத்தியோகஸ்தரால் கையெழுத்து செய்யப்படவேண்டும்; இந்த உத்தியோகஸ்தரை கலெக்டர் முன்னடியாக குறிப்பிட்டிருக்கவேண்டியது. மோசடியான காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிற விஷயங்களில், ஜீவன ஸர்டிபிகேட்டை கையெழுத்து செய்கிற ஆஸாமியாவது அல்லது ஏஜெண்டாவது பென்ஷனராயுமிருந்தால், அவருக்குச் சேரவேண்டிய பென்ஷன்களை அதுவிஷயத்தைப்பற்றி விசாரணைசெய்யும்வரையில் பட்டுவாடா செய்யாமலிருக்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

6. மோசடியான காரியங்களை செய்யவொட்டாமல் தடுக்கும் பொருட்டு பென்ஷன்களைப்பெற்றுக் கொள்ள நேராய் ஆஜராகவேண்டியதில்லை என்றாவது பரிசீலனைக்காக நேராய் ஆஜராகவேண்டியதில்லை என்றாவது விலக்கப்பட்டிருக்கிற பென்ஷனர்களையும் இயோமையாதார்களையும் கண்ட ஒரு ஜாபிதாவை வருஷவாரியில் ஜில்லாகெஜட்டில் சுயபாஷையிலும் இங்கிலீஷிலும் பிரசுரம் செய்யவேண்டியது. அந்த ஜாபிதாவானது அட்டவணை மாதிரியாகஇருக்கவேண்டியது, அதில் காணவேண்டிய அம்சங்களாவன:—பென்ஷனர்களிட பெயரும் இருப்பிடமும், பென்ஷன் கொடுக்கும்படி முதலில் உத்திரவுசெய்யப்பட்டபோது அவர்களிட வயது, தற்காலத்தியவயது, பென்ஷன் துகை, ஜீவன ஸர்டிபிகேட்டை கொடுக்கிறவர்க

ளின்பெயரும் இருப்பிடமும் பென்ஷனை பெற்றுக்கொள்ளும்படி கடைசியாய் நியமிக்கப்பட்ட வக்கீலின் பெயரும் இருப்பிடமும்.

130. இறந்துபோனவர்களைப்பற்றி தெரிவிப்பது.—ஜீவன ஸர்டிபிகேட்டுகளை மேல்கையெழுத்து செய்யவேண்டிய கடமையுள்ளவர்களென்று மேல் ஆர்டரில் 5-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்படலான உத்தியோகஸ்தர்கள் (பென்ஷன்தார்களில்) இறந்துபோனவர்களைப்பற்றி ரிபோர்ட்டுசெய்யவும்வேண்டியது, இந்தசங்கதியானது சரியாய் தெரிவிக்கப்படுகிறதாவென்பதற்கு அவர்களே ஜவாப்புதாரிகளாக பாவிக்கப்படுவார்கள்.

2. ஸிவில் பென்ஷனர்களில் யாராவது ஒருவன் இறந்துபோயிருந்து அப்படி இறந்துபோன தேதி முதல் மூன்றுமாதத்திற்குள்ளாக ரிபோர்ட் செய்யப்படாமலிருந்து அப்பேர்ப்பட்ட விஷயத்தைப்பற்றி பென்ஷன் பட்டுவாடா செய்து வந்திருக்கிற கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தருக்கு யார்ஒருவர் அதிசீக்கிரத்தில் தெரியப்படுத்துகிறாரோ சந்தர்ப்பங்களுக்குத்தக்கபடி அவருக்கு 5 ரூ முதல் 50 ரூ வரையில் வெகுமதிகொடுக்கப்படும். பென்ஷன் பெற்றுவருகிற நபர்கள் விஷயத்தில் அவர்களிட பென்ஷனுக்கு பாதகப்படக்கூடியவைகளாகிய விவாகங்கள், சர்க்கார் உத்தியோகத்தில் அமருவது, அல்லது வேறெந்த விதமாகவாவது ஜீவனும்சத்துக்கு மார்க்கம் தேடிக்கொள்வது, முதலான விஷயங்களைப்பற்றித் தெரியப்படுத்துகிறவர்களுக்கும் மேல்கண்ட விதி சம்பந்தப்படும்.

3. இறந்து போனவர்கள் விஷயமாயும் பென்ஷன் அற்றுப்போன விஷயமாயும் தப்பிதங்கள் அடிக்கடி நேரிடாமலிருக்கும்பொருட்டு, எல்லா பென்ஷன்கள் இயோமையாக்கள் முதலான வரும்படிகளுள்ள ஆஸாமிகளைக் கண்ட ஜாபிதாக்களை ஜில்லா கெஜட்டுகளில் பிரசுரம் செய்யவேண்டியது. ஏதாவது மாறுதல் உண்டானல் அவைகளைக்குறித்து நமூனவில் கண்டெழுதி தித்துப்பாடு செய்யப்பட்ட ஜாபிதாக்களை பிரதிவருஷமும் பிரசுரம் செய்யவேண்டியது.

131. பாக்கிகள்.—பென்ஷன்களில் பாக்கிநின்று போனவைகளை பட்வாடா செய்யும் விஷயத்தில் அனுஸரிக்கவேண்டிய நடவடிக்கையை சீர்திருத்துவதற்காக அடியிற் கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பென்ஷன் பெற்றுக்கொள்கிறவர்கள் கோரிக்கொள்ளாமல்போவதாலாவது வேறேவிதமாய் அசிரத்தையாய் இருப்பதாலாவது பாக்கிநின்று போயிருக்கிற எல்லாபென்ஷன்கள்முதலான பண வரும்படிகளுக்கெல்லாம் அந்தவிதிகள் சம்பந்தப்பட்டவை ; ஆனல் ஸர்வீஸ் பென்ஷன்களுக்கு—

அதாவது ஸிவில்பென்ஷன் கோடில் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்துக் கொடுக்கப்படும் பென்ஷன்களுக்கு—சம்பந்தப்பட்டவைகளல்ல. (1) அந்தந்த பெர்மெனென்டு பேஆர்டரில் (ஸ்திரமான சம்பளப்பட்டியில்) கண்டபிரகாரம் பென்ஷன் முதலானவைகள் மாதவாரியிலாவது 3மீ த்திற்கு ஒருதரமாவது 6 மீ த்திற்கு ஒரு தரமாவது வருஷவாரியிலாவது கொடுக்கப்படும். (2) எந்தகாலங்களுக்குப் பென்ஷன் சேரவேண்டியதாய் ஏற்படுகிறதோ அந்தகாலமானவுடனே பென்ஷன் வகையராக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை ஒருவிதியாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. (3) பென்ஷன் வகையருக்கள் பாக்கி நின்றுபோய் அப்பேர்ப்பட்ட தொகைகளை பட்டுவாடா செய்யவேணுமென்று விண்ணப்பம் செய்துகொண்டால் பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தரானவர் விண்ணப்பதாரனைப் பார்வையிட்டு பென்ஷன் வகையருக்களைப் பெற்றுக்கொள்ள பாத்தியதையுடையவன் அந்த விண்ணப்பதாரன்தான் என்று தமக்குள்திருப்திகரமாய்தெரிந்து கொள்ளவேண்டியது. பிற்பாடு அடியில் கண்டவிதிகளில்சொல்லப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பதாரனுக்குச்சேரவேண்டிய பாக்கியை பட்டுவாடாசெய்யவேண்டியது. நேராய் ஆஜராகவேண்டியதில்லை என்று விலக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் விஷயத்தில்மோசடியான நடவடிக்கைகள் நடக்காமல் தடுக்கும்பொருட்டு பட்டுவாடாசெய்யும் உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய் எச்சரிகை எடுத்துக்கொள்ளவேண்டியது. (4) பென்ஷன் பட்டுவாடா செய்யவேணுமென்று எந்ததேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்ததேதியை பாக்கிநின்ற பென்ஷன்கள் பட்டுவாடாசெய்யப்படும். பென்ஷன் வவுசர்களில் எல்லாம், பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தரானவர் பரிஷ்காரமாய் குறித்தெழுதவேண்டியது. விண்ணப்பதாரனுணவன் பட்டுவாடாசெய்யும் உத்தியோகஸ்தரால் நேராய் பரிசீலனை செய்யப்பட்டானென்றும், அல்லது நேராய் ஆஜராகவேண்டியதில்லை என்று விலக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் விஷயமாயிருந்தால் பட்டுவாடாசெய்யும் உத்தியோகஸ்தரானவர் விண்ணப்பதாரன் பலானவன்தான் என்று தமக்குள் திருப்திகரமாய் நிச்சயப்படுத்திக்கொண்டாரென்றும் (3–வது விதியைப்பார்க்க), ஒரு ஸர்டிபிகேட்டில் கண்டெழுதி அதையும் (வவுசருடன்) சேர்க்கவேண்டியது. (5) பிரதி பென்ஷன்வகையரு எந்தபெர்மனெண்டு பே ஆர்டர்பிரகாரம் பட்டுவாடாசெய்யப்படுகிறதோ அந்த ஆர்டரின் நெம்பரை வவுச்சரில் ஸ்பஷ்டமாய்க் குறித்தெழுதவேண்டியது. (6) பென்ஷன் வகையருக்கள்ஏன் பெற்றுக்கொள்ளப்படாமலிருக்கின்றனவென்ற காரணங்களை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தர்கள் கூடிய வரையில் முயற்சி செய்யவே

ண்டியது; இறந்து போனவர்களின் விஷயமாய் பலானவர்கள் இறந்துபோனவர்களென்று பதியவேண்டிய ரிஜிஸ்டரில் பதிவு செய்து பலானவர்கள் பலான தேதியில் இறந்துபோனூர்களென்று தாமதமன்றியில் அகௌண்டாண்டு ஜனரலுக்குத் தெரியப்படுத்தவேண்டியது; எந்த பெர்மெனெண்டு ஆர்டரை அனுஸரித்து பென்ஷன் பட்டுவாடா செய்யப்பட்டதோ அந்த ஆர்டரை அப்பொழுதே வாப்ஸ் அனுப்பிவிட வேண்டியது. கர்னூடக பென்ஷன்தார்களில் சாவுநேரிடும் விஷயத்தில் சென்னை சேப்பாக்கத்திலுள்ளகெவர்ண்மெண்டு ஏஜெண்டு கர்னூடிக் பென்ஷன்களை பட்டுவாடாசெய்யும் தலைமை உத்தியோகஸ்தர் இவர்களுக்கும் ரிபோர்ட்டு அனுப்பவேண்டியது.

(7) யாதொரு பென்ஷன் வைகயரூவை பட்டுவாடா செய்யும்படி 6 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் கோரிக்கொள்ளாமற்போனூல் அப்பேர்ப்பட்ட பென்ஷன் வகைபரூவை ரிஜிஸ்டர்களில் அடித்துப் போடவேண்டியது; பாக்கிநின்றுபோன பென்ஷன் வகையரூவை இழக்கச் செய்ய வேண்டியது. ஆனூல் பரம்பரை பாத்தியதையல்லது ஸ்திரமான பாத்தியதையை அனுஸரித்துக்கொடுக்கப்பட்ட பென்ஷன் வகையரூவாயிருந்தால், அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கடைசியாய் பென்ஷன் பெத்துக்கொண்ட தேதிமுதல் 12வருஷங்களுக்குள்ளாக பென்ஷன் பாத்தியதையைத் தெரிவித்துக்கொண்டால் (பாக்கிநின்று போனபென்ஷன்வகையரூவைபட்டுவாடா செய்யாமல்) செவர்ண்மெண்டாரிட பிரத்தியேகமான அனுமதியின்பேரில் அந்த பாத்தியதை திரும்பவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(8) பாக்கிநின்றுபோன பென்ஷன்களை, மேற்கண்ட விதிகளின் நியமங்களுக்குட்பட்டும் அடியிற்கண்ட விதிகள் பிரகாரமும் பட்டுவாடா செய்யலாம்.

(9) பலானகாலத்துக்கு இவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிற பென்ஷன் வகையரூவானது அந்த காலம்முடிந்தவுடன் பட்டுவாடா செய்யப்பட வேண்டியதாகும், அந்தகாலம் முடிவான தேதியிலிருந்து ஒருவருஷம் வரையில் அவைகள் நடமுதல் பட்டுவாடாக்களாக பாவிக்கப்படும்; அந்த ஒரு வருஷத்திற்கு பிற்பாடு அவைகள் பாக்கி நின்றுபோனவைகளென்று (அதாவது ஸனவார்) என்று பாவிக்கப்படும்: **வியாக்கியானம்:**—1879 ஹூ டிசம்பர்மீ த்திற்காகச்சேரவேண்டிய பென்ஷன் வகையரூவானது 1880ஹூ ஜனவரி மீ 1உ யில் பட்டுவாடா செய்யப்படவேண்டியதாகும், 1881 ஹூ ஜனவரிமீ 1உக்கு முன்னிட்டு பட்டுவாடா செய்ய வேணுமாய் கோரிக்கொள்ளும் பட்சத்தில் நடமுதல் பட்டுவாடாவாக பாவித்து பட்டுவாடா செய்யப்படும். அந்த தேதிமுதலும் அதற்குபின்னிட்டும் சனவார் பட்டுவாடாவாக பாவித்து பட்டுவாடா செய்யப்படும்.

(10) பாக்கிநின்ற இரண்டு வருஷத்திய பென்ஷன் வகையரூ

பூருவையும் நடமுதல் பட்டுவாடா வுடன் சேர்த்து பட்வாடா செய்யப்படும். வியாக்கியானம் 1880 ஹு ஜனவரிமீ 1வ யில் சேர வேண்டியிருந்து 1882 ஹு ஜெனவரி மீ 1வ வரையில் பட்டுவாடாவுக்காக கேட்டுக்கொள்ளப்படாத யாதொரு பென்ஷனுவது 1882 ஹு டிசம்பர்மீ ஆகயருக்குள் கேட்டுக்கொள்ளப்பட்டால் 1883 ஹு ஜெனவரி மீ த்திற்குமுந்தி யாதொரு மாதத்திற்காவது, மூன்றுமீ த்திற்காவது, ஆறு மாதத்திற்காவது, வருஷத்திற்காவது, சேரவேண்டிய பென்ஷனுடனே சேர்த்து பூருவும் பட்டுவாடாசெய்யப்படும். (11) யாதொரு பென்ஷன் வகையருவின் ஓர்பாகமானது இரண்டு வருஷத்திற்குமேற்பட்ட காலமாய் பாக்கி நின்றுயிருந்தால் அடியிற்கண்ட விதமாய் பட்டுவாடாசெய்யப்படும்:—

நடமுதல்வருஷம்	... ...	பூராவும்.		
முதல்வருஷத்திய பென்ஷன்	...	பூராவும்.		
2–வது ஷை	... ...	பூராவும்.		
3–வது ஷை	... ...	100 க்கு 10 கழித்து விடவேண்டியது.		
4–வது ஷை	... ...	ஷை	15	ஷை.
5–வது ஷை	... ...	ஷை	20	ஷை.
மொத்தம் 6 வருஷம்.				

வியாக்கியானம்:—1875 ஹுத்திலிருந்து சேரவேண்டிய யாதொரு பென்ஷனுனது 1880ஹுத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டால் அடியில்கண்ட விதமாய் பட்டுவாடா செய்யப்படும்:—

நடமுதல்	1880 பூராவும்			
சனவார் அல்லது பாக்கி...	1879 பூராவும்			
	1878 பூராவும்			
	1877, 100க்கு	10	வீதம் கழித்து விடப்படும்	
	1876	ஷை	15	ஷை
	1875	ஷை	20	ஷை

132. இறந்துபோன யாதோரு ஆசாமியிட நியாயமான பிரதிநிதியால் பாக்கி பேன்ஷன் வகையராவை பட்டுவாடாவுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதின்பேரில் நடவடிக்கை நடத்துவது:—இறந்துபோன யாதொரு ஆசாமிக்கு பிரதி நிதியாக யாதொருவர் பாக்கி பென்ஷன்வகையருவைபட்டுவாடா செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டதுகையை பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரன் பாத்தியதைவுடையவனுவென்றுஎழுத்து மூலமான ஒருஉறுதிமொழிபத்திரம் அல்லது பிரமாணிக்க

பத்திரத்தை கொண்டுருஜூப்பிக்கவேண்டியதென்று பட்டுவாடாசெய்யும் உத்தியோகஸ்தர் உத்திரவு செய்யவேண்டியது. அப்பேர்ப்பட்ட பிரமாணிக்கப் பத்திரங்களும் உறுதிமொழி பத்திரங்களும் 1879ம் ஷ 1-வது ஆக்டின் 2-வது ஷிடியூல் பிரகாரம் ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டியதில்லை.

133. மாற்றுதல்கள்:—இயோமையா முதலான பென்ஷன்கள் எந்த ஜில்லாவில் கொடுக்கப்படும்படி முதலில் உத்திரவு செய்யப்பட்டதோ அந்த ஜில்லாவை விட்டு வேறு ஜில்லாவில் கொடுக்கப்படும்படி மாற்றுகிற வழக்கமானது ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அனுவசியமான தொந்திரவை உண்டுபண்ணக்கூடியதாயும் மோசடியான காரியங்களைசெய்ய வசதியுள்ளதாயுமிருக்கிறபடியால் ஆக்ஷேபகரமானதாய் இருக்கிறது. அப்படி மாற்றுவதற்கு மிகவும் முக்கியமான காரணங்கள் இருந்தாலொழிய அப்பேர்ப்பட்ட மாற்றுதலுக்காக செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை ரெவினியூ போர்டாருக்கு அனுப்பக்கூடாது. அப்பேர்ப்பட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டால் பென்ஷனை மாற்றுகிற உத்தியோகஸ்தரானவர் பென்ஷனருக்கு கொடுக்கவேண்டிய சர்டிபிகேட்டை கொடுத்து அதற்கு ஒரு நகலையும் குறித்தபாரத்தில் பென்ஷனரிட விவரண ஜாபிதாவையும் (மோயினஜாபிதா) பட்டுவாடாசெய்யும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியது.

134. யாத்திரை போவதற்காக ரஜா எடுத்துக்கொள்ளுதல்:— இயோமையாதாரர்கள் மெக்கா முதலான இடங்களுக்கு யாத்திரைபோக உத்திரவு கொடுக்கப்படலாம். அவர்கள் அப்படி யாத்திரை போயிருக்கும்போது 7 வருஷகாலத்திற்கு அவர்களுடைய பென்ஷனை பெற்றுக்கொள்ளலாம். ஆகிலும் மெக்காவுக்குப் போவதற்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை கெவர்ன்மெண்டாரிட அனுமதிக்காக அனுப்பவேண்டியது. பென்ஷனர்கள் யாத்திரை போயிருக்கும் காலங்களில் மோசடியான காரியங்கள் நடக்கவொட்டாமல் தடுக்கும்பொருட்டு யாத்திரை போகப்போகிற பிரதிகர்னுடகபென்ஷனரும் யாத்திரை போவதற்குமுன்பாக அவரிட விவரண ஜாபிதாவை குறித்த நமுனா பிரகாரம் திருத்தமாய் தயார்செய்யவேண்டியது. அந்த ஜாபிதாவில் காணவேண்டிய அம்சங்களாவன:—பென்ஷனர் பிரயாணம்போகும்போது அவரிட உருவம், வயது, முதலானவைகள், பற்பல தேசங்களிலும் ப்ரிடிஷ் பொலிடிகல் எஜண்டு (அதாவது இங்கிலீஷ்காரிட ராஜ விவகாரங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட காரியஸ்தர்) என்ற உத்தியோகஸ்தர் முன்பாக பென்ஷனர்போய் ஆஜராகவேண்டியதென்று உத்திரவு செய்யப்பட்டால் அந்த உத்தியோகஸ்தர்களுக்கு இந்தவிவரண ஜாபிதாக்களின்

நகல்களை அனுப்பவேண்டியது. சர்வீஸ் இயோமையா பென்ஷனர்கள் விஷயத்தில் பின்னால் சொல்லப்பட்ட விதியானது அனுஸரிக்கப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இயோமையாதாா இல்லாதகாலத்தில் அவருக்குப் பதிலாக அவர் வேலையை பார்த்துவரும்படி நேமிக்கப்படும் ஆஸாமிக்கு அந்த இயோமையா பென்ஷனனது பட்டுவாடா செய்யப்படும். பென்ஷனர்கள் ரஜாகொடுக்கப்படும் சாதாரண விஷயங்களில் அப்பேர்ப்பட்ட ரஜாவைப்பற்றி கெவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்காமலே கலெக்டர் உத்திரவு கொடுக்கக்கூடும்; பென்ஷனர்கள் ரஜாவிலிருக்கும்போது அவர்களிட பென்ஷனை பட்டுவாடா செய்வதற்காக பிரதிவிஷயத்திலும் போர்டாருக்கு அவசியமாய்த் தோன்றக்கூடிய விதிகளை ஏற்படுத்தவேண்டியது. யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் எந்த பென்ஷனர்களுக்காவது ஜீவனம்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் இதுவிஷயமாய் ஏற்படுத்தப்பட்ட உத்திரவு பிரகாரம் நடப்பதாக ஜாமீன் கொடுத்தாலொழிய அப்பேர்ப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டினுடைய அதிகார எல்லைக்கு வெளிப்பட்டு ரஜா கொடுக்கப்படக்கூடாது.

135. கோரிக்கப்பட்ட பென்ஷன் வகையறவை வேறுவிதமாய் மாற்றுதல்:—பென்ஷன்களை வேறுவிதமாய் மாற்றுதல் செய்யும் விஷயமாய் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற விதிகளில் கலெக்டர்கள் கவனம் வைக்கவேண்டியது. பரம்பரையாய் அனுபவிக்கும்படி கொடுக்கப்பட்ட பென்ஷனாயிருந்தாலும் அல்லது ஒருவரிட ஆயுள் பரியந்தம் வரையில் அனுபவிக்கத்தக்கதாக கொடுக்கப்பட்ட பெஷனாயிருந்தாலும் எல்லாவித பென்ஷன்களுக்கும் ஷை விதிகள் சம்பந்தப்பட்டவை. ஆகிலும் வருஷத்தில் 20 ரூபாய்க்கு மேற்பட்ட பென்ஷனை மேற்கண்டவிதமாய் மாற்றுதல் செய்யக்கூடாது; ஆனால் வெளியில் வரக்கூடாதென்று ஏற்பாடுள்ள ஸ்திரீகள் விஷயத்தில் வருஷவாரியில் பென்ஷன் துகையானது ரூ 240க்கு மேற்படாமலிருந்தால் மேற்கண்ட விதமாய் பென்ஷனை மாற்றிக்கொள்ளலாம். பென்ஷன்தார்கள் தங்களிட பென்ஷன்களை மேற்கண்டவிதமாய்மாற்றிக்கொண்டு அதைஆதாயமான வேலைகளில் பிரயோஜனப்படுத்த ஹேது உண்டாக்கிக் கொள்ளும் தன்மையை உற்சாகப்படுத்துவதானது மிகவும் யுக்தமாயிருக்கிறது; ஆகையால் மாற்றுதலுக்காகக் கோரும் விண்ப்பதாரனிட நடத்தையானது யோக்கியமான தென்றும் அப்படிமாற்றிக் கொள்வதின் தாத்பரியமானது பென்ஷனை ஆதாயத்துடன்கூடிய வேலைகளில் பிரயோஜனப்படுத்துவதற்கேயன்றிபணத்தை விருதாவாய் செலவிடுவதற்காக அல்லவென்றும் அப்படி ஆதாயமுள்ள மார்க்கங்களில் பணத்தை பிரயோஜனப்படுத்துவார் என்ற ஓர் நம்பிக்கையிருப்பதாகவும்

நிச்சயமாய் ஏற்படும் விஷயங்களிலெல்லாம் மேற்கண்ட விதமாய் பென்ஷன்களை மாற்றிக்கொள்ளும்படி ஜனங்களை உற்சாகப்படுத்தவேண்டும். கர்னூடக பென்ஷன்களை மாற்றிக்கொள்ளுவதற்காகச் செய்துகொள்ளப் படும் விண்ணப்பங்களை சென்னைசேப்பாக்கம் ஏஜெண்டுமூலமாய் அனுப்ப வேண்டியது:—

1. அந்தந்த இடத்திலுள்ள அதிகாரிகளால் ரிபோர்ட்டு செய்யப்படுவதின் பேரிலும் பென்ஷன் பெற்றுக்கொள்பவர்களிட சம்மதத்தின் பேரிலும், அவரவர்கள் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்ட பாளையக்காரர்கள் அல்லது பென்ஷன் கொடுக்கப்பட்ட ராஜாக்கள் இவர்கள் விஷயத்தில் வருஷத்தில் 20 ரூபாய் அல்லது 20 ரூபாயிக்கு குறைந்த வருமானமுள்ள பரம்பரை பென்ஷன்களையும், மாவிகானு பென்ஷன்களையும், 20 வருஷத்திற்குகூடும் பென்ஷன் துகை வீதம் (அதாவது) வருஷவாரி பென்ஷன் துகையில் பிரதி 10 ரூபாய்க்கும் (10×20) 200 ரூபாய் வீதமாக ஒரேதடவையில்பெற்றுக்கொள்ளும்படி மாற்றுதல்செய்ய கவர்ண்மெண்டார்அனுமதிகொடுப்பார்கள் மசூதிகள் தேவாலயங்கள் முதலான ஸ்திரமானஸ்தாபனங்களுக்கு ஆதாரமாக கொடுக்கப்பட்டிருக்கிறதாயும் கிரமமாய்பரம்பரையானதென்றும் பாவிக்கப்படுகிறதுமான பென்ஷன் வகையறுக்களும் அதேதாமாஷா பிரகாரம் மாற்றுதல் செய்யப்படலாம்.

2. யாதொருவரிட சொந்த உபயோகத்திற்காக கொடுக்கப்படும் வருஷவாரியில் 20 ரூபாய்அல்லது அதற்குகுறைந்துமிருக்கிறபென்ஷனனது கெவர்ண்மெண்டாருக்கு வியக்தமாய் தெரிவிக்கப்பட்டதின்பேரில் பரம்பரையானதென்று அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட பென்ஷன்களை மேற்கண்ட தாமாஷாப்படி மேற்கண்டவிதமாய் மாற்றிக்கொள்ளவும் கெவர்ண்மெண்டார் உத்திரவு கொடுப்பார்கள்.

3. துர்க்காக்கள், கோரிகள், தக்காக்கள் மாகான்கள் இவைகளிட பரிபாலனைக்காக விடப்பட்டிருக்கிற பென்ஷன்கள் பரம்பரையானவைகளாக பாவிக்கப்படக்கூடாது. அந்தபென்ஷன் வாங்கிவருகிறவர் இறந்து போவதின்பேரில் பென்ஷன் நிறுத்தியாவது விடப்படும் அல்லது பென்ஷன்துகையை குறைத்தாவது விடப்படும்; அப்பேர்ப்பட்ட பென்ஷன்கள் விஷயமாய், அந்தபென்ஷன்தாரர்களிடவயதை அனுஸரித்தும்அவர்களுக்குப்பிற்காலம் பென்ஷன் துடர்ந்து கொடுக்கப்படக்கூடிய நோக்கத்தை யனுஸரித்தும், ஆகிலும் எவ்விஷயத்திலும் உயர்ந்த பட்சம் 15 வருஷத்தில்கூடும் பென்ஷன்துகைக்கு மேற்படாமலும், மேற்கண்ட விதமாய் மாற்றுதல் செய்ய கலெக்டர்கள் கெவர்ண்மெண்டாருக்கு சிபார்சு செய்யலாம்.

4. அந்தந்த இடத்திலுள்ள உத்தியோகஸ்தர்களால் ரிபோர்ட்டு செய்யப்படுவதின்பேரிலும் பென்ஷன்தார்களிட சம்மதத்தின்பேரிலும் பலான பென்ஷன்தாரிட ஆயுஸ்பரியந்தமென்று விடப்பட்டிருக்கிற வருஷவாரியில் ரூ 20 அல்லது அதற்குக்குறைந்து முள்ள பென்ஷன்களை எல்லாம் அனுபந்தத்தில் கண்ட ஷிடியூலில் பதிவு செய்யப்பட்ட விதங்கள் பிரகாரம் கெவர்ன்மெண்டார் மாற்றுதல் செய்வார்கள் ஆனல் அப்படி மாற்றுதலுக்காக விண்ணப்பம் செய்துகொண்டவனுனவன் விண்ணப்பம்செய்துகொண்டபோது சரியான தேகசௌக்கியமுள்ளவனுயிருக்கிருனென்று உறுதிமொழி செய்யப்படவேண்டும்.

5. மேலேசொன்ன விதிகளை அனுஸரித்து பென்ஷன்துகையின் முழுமையுமாவது ஓர்பாகத்தையாவது மாற்றுதல் செய்யப்பட்டிருந்து அப்பேர்ப்பட்ட பென்ஷனை தப்பிதமாகவாவது மோசடியாகவாவது மறுபடி பட்டுவாடா செய்வதைத் தடுக்கும் பொருட்டு மேற்கண்ட விதமாய் மாற்றுதல் செய்யப்பட்ட பென்ஷன்களை எல்லாம் கலெக்டர்கள் தங்களாபீஸ்களில் பிரத்தியேகமாய் ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்து வைக்கவேண்டியது. குறித்த நமுனுப்பிரகாரம் இந்த ரிஜிஸ்டரைதயார் செய்து வைத்துவைக்க வேண்டியது; மாற்றுதலுக்காக விண்ணப்பம் செய்யப்படும் பிரதிதருணத்திலும் இந்த ரிஜிஸ்டரை பார்வையிட வேண்டியது; கெவர்ன்மெண்டாரிட உத்திரவுகளுக்காக அனுப்பப்படும்பிரதி விஷயத்திலும் இந்த ரிஜிஸ்டர் பரிசீலனைசெய்யப்பட்டதென்று வியக்தமாய்க் கண்டெழுதவேண்டியது.

6. பென்ஷன் பெற்றுக்கொள்ளுகிறவன் அல்லது பெற்றுக்கொள்கிறவர்கள் என்ருல் ஜில்லா ஜாபிதாக்களில் பெயர்பதிவு செய்யப்பட்ட ஆஸாமி அல்லது ஆஸாமிகள் என்று தாத்பரியம் செய்து கொள்ள வேண்டியது, அந்த குடும்பத்தில் அந்த பென்ஷனில் பங்குடையவர்களைப் பற்றி நிமித்தியமில்லை ; இந்தவிதிகளை அனுஸரித்து மாற்றுதல் செய்து கொள்வதற்காக ஒருகுடும்பத்தின் தலைமை ஆஸாமியிட சம்மதமாவது அல்லது ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிற பென்ஷன் பெற்றுக்கொள்கிறவர்களிட சம்மதமாவது போதுமானதாக பாவிக்கப்படும்; ஆனல் கலெக்டரானவர் தமக்குக்காரணம் தோன்றும் பட்சத்தில், ஒரு குடும்பத்தின் நபர்கள் அவர்களிட மொத்தபென்ஷனை எந்ததாமாஷாப்பிரகாரம் வழக்கமாய் பாகித்துக்கொண்டு வந்தார்களோ அந்த தாமாஷாப்பிரகாரம் மாற்றுதல் செய்யப்பட்ட மொத்த பென்ஷன் துகையை அந்தநபர்களுக்குள் பாகித்துக்கொள்ளும்படி உத்திரவு செய்யலாம்.

7. இந்த உத்திரவுகளை எல்லாபென்ஷனர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டியது. இப்போது சொற்ப துகையாயிருக்கிற பென்ஷன்களை

எல்லாம் மேற்கண்டவிதமாய் மொத்தப்பணம் கொடுத்து மீட்டுவிட முயலவேணுமென்று கலெக்டர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சில்லறை துகைகளை பட்டுவாடாசெய்வதிலும் அது விஷயமாய் கடிதம் போக்குவரத்து செய்வதிலும் அதுசம்பந்தமானகணக்குவகையறுக்களை தயாரிப்பதிலும் கலெக்டர்கள், அகௌண்டாண்டு ஜெனரல் கெவர்ண்மெண்டார் இவர்களுடைய வேலைகாலம் வீணாய்ப்போய்விடுகிறது. இதில் பிரயோஜனப்படுத்தும் காலத்தை ஜாஸ்தி ஆதாயமுள்ளவிஷயங்களில் பிரயோகிக்கக் கூடுமாயிருக்கிறது, மேலும் அநேகபென்ஷன்கள் அல்லது அவைகள் பாகிக்கப்பட்டிருக்கிற பங்குகள் அதிகொஞ்சமானவைகளாயிருக்கிறபடியால் அந்த பென்ஷன் துகைகளைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களிட ஜீவனும்சத்திற்குக் கொஞ்சம்கூட போதாமையாயிருக்கிறது, தவிரவும் இவ்விடத்தில் உத்திரவு கொடுக்கப்பட்ட ஆதாயமான நிபந்தனைகள் பிரகாரம் அநேகவிஷயங்களில் பென்ஷனை சந்தோஷத்துடன் மேற்கண்ட விதமாய் மாற்றிக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

136. முதலில் உத்திரவுசெய்யப்பட்ட பென்ஷன் துகைகளைக் குறைத்தல் அல்லது ஜாஸ்திப்படுத்தல்:—ஸர்வீஸ் இயோமையாக்களை உட்பிரிவினை செய்யவே கூடாது, ஏனென்றால் உட்பிரிவினைசெய்ய உத்திரவுகொடுக்கும் பட்சத்தில் எந்த நோக்கங்களை முன்னிட்டு அந்த பென்ஷன்கள் முதலில் உத்திரவு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்கள் கொஞ்சகாலத்திலேயே கைகூடி வராததாய்போய்விடும். ஜீவனும்சத்திற்காகக் கொடுக்கப்படும் பென்ஷன்களையும் பரம்பரையான பென்ஷன்களையும் மிகவும் முக்கியமான காரணங்களன்றியில் உட்பிரிவினை செய்யக்கூடாது. பலான குடும்பம் அல்லது பலான ஆசாமியிடகண்ணியமானஜீவனார்த்தத்துக்காக இந்த பென்ஷன்கள் கொடுக்கப்படும்படி வழக்கமாய் உத்திரவுசெய்யப்பட்டன, அந்தகுடும்பத்தின் நபர்கள் தங்களிட பரிபாலனைக்காக அந்தக் குடும்பத்தின் தலைவனைக்கோரிக்கொள்ளவேண்டியது. யாதொரு பரம்பரை பென்ஷனில் எந்தபாகத்தையாவது வேறொருவர் பெயருக்கு மாற்றி பராதீனம் செய்வதானது 1871ஹு 23-வது ஆக்டுக்குவிரோதமாயிருக்கிறது; அப்படி செய்யப்பட்ட மாற்றுதல்களை ஒத்துக்கொள்ளவாவது அல்லது மாற்றப்பட்டபிரகாரம் அனுஷ்டிக்கவாவது கலெக்டர்கள் கட்டாயப்பட்டவரல்ல. அன்றியும் யாதொரு பென்ஷனரிட குடும்பஸ்தர்கள் பென்ஷனில் ஓர்பாகத்திற்காவது ஜீவனும்சத்திற்காவது பாத்தியதையுடையவர்களாயிருந்து பாகம்செய்யப்படவில்லைஎன்பதாக முறையிட்டுக் கொண்டால் அந்த விஷயத்தை அதனிட குணாகுணங்களுக்குத்தக்கபடி பைசல் செய்ய வேண்டியதானது கலெக்டரிட கடமை; கலெக்டரிட உத்திரவு பிரகா

ரம் பென்ஷனர் நடக்காமல் அசிரத்தையாயிருக்கும் பட்சத்தில் பென்ஷன் துகையிலிருந்து கிரமமானபாகங்களைத் தனித்தனியாய் பட்டுவாடா செய்யும்படி உத்திரவு செய்யவேண்டியது; அல்லது குடும்பத்தின் நபர்கள் எல்லாரிட பாத்தியதைகளை பரிபாலித்து வருவதற்குத் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டியது. 1871 ௵த்திய 23-வது ஆக்டைஅனுஸரித்து அடியிற் கண்ட விதிகள் கெவர்ண்மெண்டாரால் அனுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

(1871 ௵த்திய 23-வது ஆக்டாகிய பென்ஷன் ஆக்டை அனுஸரித்து ஏற்படுத்தப்பட்ட தித்துப்பாடான விதிகள்).

"1. பென்ஷன் ஆக்டின்வரம்புக்குட்பட்ட பென்ஷன், ரொக்கம் கொடுப்பது, அல்லது நிலத்தீர்வையை வசூல் செய்துகொள்வது, இவைகளுக்கு சம்பந்தப்பட்ட பாத்தியதைகள் பென்ஷன் ஆக்டின் 5-வது பிரிவு பிரகாரம் கலெக்டராலாவது வேறே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற உத்தியோகஸ்தராலாவது விசாரிக்கப்பட்டபிறகு கலெக்டரால் ரெவினியூ போர்டார் துவாரா கெவர்ண்மெண்டாரிட உத்திரவுக்கனுப்பப்படவேண்டியது,

"2. 1871௵த்திய23-வது சட்டமாகிய பென்ஷன் ஆக்டானது என் பிரஞ்சைஸாகாத இனங்களுக்கு சம்பந்தப்படும்; அப்பேர்ப்பட்ட பென்ஷன் வகையறுவுக்கு பாத்தியதையைஸிவில் கோர்டாரால் விசாரிக்கபடவேணுமென்று சர்டிபிகேட்டு கொடுக்கும் விஷயத்தில் ரெவினியூ போர்டார் துவாரா கெவர்ண்மெண்டாரிட அனுமதியை முன்னடி பெற்றுக்கொள்ளாமல் 6-வது பிரிவுபிரகாரம் ஸர்டிபிகேட் கொடுக்கப்படக்கூடாது.

"3. பென்ஷன்வகையறு தனக்குசேரவேண்டியபாத்தியதையுண்டென்று யாதொரு ஆஸாமியானவன் எந்தஷரத்துகளையும்எண்ணங்களையும் கொண்டு (பென்ஷன்முதலான) தானம் விடப்பட்டதோ அந்த ஷரத்துகளுக்கும் எண்ணங்களுக்குமுட்பட்டு மனப்பூர்த்தியாய் சொல்லிக்கொள்ளும்பட்சத்தில் அப்பேர்ப்பட்ட சர்டிபிகேட்டானது சாதாரணமாய் கொடுக்கப்படும்; ஆனால் கெவர்ண்மெண்டார் எந்த நோக்கங்களைக்கொண்டு யாதொருபென்ஷன் வகையறுவை ஏற்படுத்தினார்களோ அல்லது தொடர்ந்து கொடுத்துவந்தார்களோ அந்த நோக்கங்களுக்கு விரோதமாய் தற்காலத்திய பென்ஷன்தாரனானவன் அப்பேர்ப்பட்ட பென்ஷனையாவது அதின் ஓர்பாகத்தையாவது இதராளுக்கு பராதீனப்படுத்தியிருந்து அப்பேர்ப்பட்ட பென்ஷன் வகையறுவைப் பெற்றுக்கொள்வதற்காக பாத்தியதை சொல்லிக்கொள்ளப்பட்டால் அந்தவிஷயத்தை விசாரித்து கெவர்ண்மெண்டாரிட தீர்ப்புக்காக ரிபோர்ட் செய்யவேண்டியது.

"4. 3-வது விதியை அனுஸரித்து விசாரிக்கப்பட்ட விஷயங்களில் கெவர்ண்மெண்டாரிட தீர்ப்பானது பென்ஷன் அல்லது அதின் எந்தபாகத்துக்காவது நியாயமாய் பாத்தியதை உண்டென்று அங்கீகரித்துக்கொள்வதாயிருக்கும்போதெல்லாம், அந்த தீர்ப்பானது அடியிற்கண்ட விதமாய் நிறைவேற்றப்படும்:—

(ஏ.) பென்ஷனனது ரொக்கப்பணமாகவாவது பேரிஜ் குறைவு செய்தாவது கொடுக்கவேண்டியதாக இருந்தால், பாத்தியஸ்தர்களுக்கு அதுவரையில் சேரவேண்டிய பென்ஷன் துகை கஜானுவிலிருப்பதையும் அல்லது இனிமேல் சேரவேண்டியதாக ஏற்படும் துகையையும் கிரமமானபாத்தியஸ்தனுக்கு பட்டுவாடா செய்யும்படி சம்பந்தப்பட்ட கிராம நவுக்கர்களுக்காவது கஜானு உத்தியோகஸ்தர்களுக்காவது உத்திரவு செய்யவேண்டியது.

(பீ.) நிலத்தீர்வையை வசூல் செய்து கொள்ளும்படி விடப்பட்ட பென்ஷனுக இருந்தால் ஏ. ப. என்பவன் இனும்தாராக அவன் பட்சம் கெவர்ண்மெண்டார் தீர்ப்பு செய்திருக்கிறுர்களென்று சம்பந்தப்பட்ட நிலத்தை அனுபவித்து வருகிறகுடியானவர்களுக்கு எழுத்து மூலமான நோடீஸ் கொடுத்தும் கிராமத்தில் தண்டோரா போட்டும் வைக்கவேண்டியது; முன்னுடியாகவே யாராவது பாத்தியதையுடையவனென்று சொல்லிக்கொண்டு அப்பேர்ப்பட்ட பென்ஷன் அல்லது இனும் நிலத்தை துராக்கிருதமாய் பெற்று இருந்தால் அப்பேர்ப்பட்ட நபர்களின் பேரில் தாவாசெய்யும்படி கெவர்ண்மெண்டாரால் பாத்தியஸ்தன் என்று அங்கிகரிக்கப்பட்ட ஆசாமிக்கு ஒரு ஸர்டிபிகேட்டைக் கொடுக்கவேண்டியது.

2. ரொக்கபணம் பென்ஷனுவது நிலத்தீர்வை அடமானமாவது யாதொரு ஆஸாமியினிட பிரயோஜனத்துக்காக விடப்படாமல் மதசம்பந்தமான ஸ்தாபனங்களுக்காக விடப்பட்டதாயிருக்கிற விஷயத்திலும், அப்படியார்பேருக்கு இனும் வகையரு விடப்பட்டிருக்கிறதோ அவனும் அவனிட ஸந்ததியார்களும் அந்த இனும் வகையரு முழுதையுமாவது ஓர்பாகத்தையாவது அந்தஸ்தானத்திற்கு பிரயோஜனப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறவிஷயங்களிலும், 1871 ௵ 23-வது ஆக்ட் சம்பந்தப்பட்டதல்ல. தீர்வையில்லாமல் நிலம் அடமானம் செய்யப்பட்டதானது பென்ஷன் ஆக்டுக்கு சம்பந்தப்பட்டதல்ல, இந்த ஆக்டில் "பென்ஷன்ஸ்" "கிரானட்ஸ்

அதாவது அடமானம்" என்ருல் ஒருவரிட சொந்த உபயோகத்திற்காக விடப்பட்டபென்ஷன் வகையருவென்று அர்த்தமேதவிர தானம் செய்துவிடப்பட்ட பென்ஷன் என்றுதாத்பரியமல்ல.

3. யாதொரு பென்ஷனுனது பரம்பரையானதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிற விஷயங்களில்பென்ஷன்தார்கள் இறந்துபோய் புதுசாய்பாத்தியதை கொண்டாடுகிறவன் அப்படி இறந்துபோனவனிட நியாயமான வார்ஸ்தாரனென்று சட்டப்பிரகாரமாவது சம்பந்தப்பட்ட நபர்களிட வழக்கப்பிரகாரமாவது ஏற்பட்டால் புதுசாய்பாத்தியதை கொண்டாடுகிறவனிட பெயரால் உடனே ரிஜிஸ்டரில் தாக்கல்செய்துகொண்டு பென்ஷனவழக்கம்போல் பட்டுவர்டாசெய்துவரலாம். இதுவிஷயத்தைப்பற்றி கெவர்ண்மெண்டார் ஸ்திரப்படுத்தும் பொருட்டு கெவர்ண்மெண்டாருக்கு தெரியப்படுத்தவேண்டியது. ஆனல் யாதொரு பென்ஷனுனது சொந்த சொத்தின் சுபாவமுள்ளதாகவாவது அல்லது கெவர்ண்மெண்டாருக்கு ஒப்புக்கொடுத்துவிட்ட சொத்துக்குப்பதிலாக பரம்பரையான பென்ஷனுகவாவது இருக்கிற விஷயங்களில்தவிர பரம்பரை அனுபோகத்திற்கென்று விடப்பட்ட பென்ஷனுனது பரம்பரை ஸந்ததி முடிவுபெற்றவுடனே நின்றுபோய்விடுமேயல்லாமல் ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்ட பிள்ளைகளுக்குச்சேராது. அற்றுப்போனபென்ஷன்களைப்பற்றிக்குறித்தாமுனுவில் ரிபோர்ட்செய்யவேண்டியது; முதலில்கொடுக்கப்பட்ட ஸன்னதுவதாவது அகப்படும்பட்சத்தில் அதையும் அதின் தர்ஜிமாவையும் அனுப்பவேண்டியது, தர்மகாரியங்களையாவது மதசம்பந்தமானவேலையையாவது செய்துவரவேண்டியதென்கிற நிபந்தனையின்பேரில் அப்பேர்ப்பட்ட காரியங்களுக்காக விடப்பட்டிருக்கிற பென்ஷன்களை திரும்பவும்கொடுக்கவேண்டியதென்று ரிபோர்ட்டு செய்யும்போது அப்பேர்ப்பட்டகாரியங்கள் இன்னமும் செய்யப்பட்டு வருகிறதா இல்லையாவென்று கண்டெழுதவேண்டியது. பாடசாலைகளுக்காக விடப்பட்டிருக்கிற இயோமையாக்கள் விஷயமாய் அந்த பாடசாலையின் சுபாவத்தையும் அதைபரிபாலித்துவரவேண்டியதற்கு அவசியமிருப்பதைப்பற்றியும் ரிபோர்டு செய்யவேண்டியது. ராஜாங்கத்தார்நிமித்தியமாகஜெபங்கள் செய்வதற்காக விடப்பட்ட இயோமையாக்கள் பரம்பரையானவைகளாக பாவிக்கப்படக்கூடாது. தரித்திர ஸ்திதியிலிருப்பதானது யாதொரு பென்ஷன் வகையருவை திரும்பிகொடுக்கவேண்டியதற்கு ஒருநல்லகாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. யாதொருபென்ஷன் வகையருவை திரும்பவும் கொடுக்கவேண்டியதற்காகவிண்ணப்பம்செய்வதில் ஏதாவது தாமதம்நேரிட்டிருந்தாலும் இப்போது கேட்டுக்கொள்ளப்படும் தொகைக்கு ஏதாவது வித்தியாசமிருந்தாலும் அதைப்பற்றி பூர்த்தியாய் விவரித்துச் சொல்லவேண்

டியது. விதந்துவான ஸ்திரீகள் பாத்தியஸ்தர்களாயிருக்கும்பட்சத்தில் அவர்களிட வயது இவ்வளவென்று தெரிவிக்கவேண்டியது. யாதொரு பென்ஷன் வசயருவானது ஒருவர் ஆயுஸ்பரியந்தம் மாத்திரம் என்று புதுப்பிக்கப்பட்டால் அது சங்கதியைப் பற்றி புதுபென்ஷன் அடமானதாரனுக்கு பரிஷ்காரமாய் விவரித்துச்சொல்லிவிட வேண்டியது.

4. யாதொருராஜாங்க பென்ஷன்தாரன் அல்லது பென்ஷன் வம்சத்தைச் சேர்ந்த நபர்கள் இறந்துபோவதின் பேரில் அப்படி இறந்துபோனவனிட அல்லது அவனிட குடும்பத்தாரிட ஸந்ததிவார்ஸ்தார்களுக்காவது அல்லது அவர்களைச்சார்ந்து இருக்கிறவர்களுக்காவது இனிஜீவனும்சத்திற்காக ஏதாவது பென்ஷன் கொடுக்கப்பட உத்திரவு செய்வதற்காக மைசூர் சந்ததியாருக்காக ஏற்படுத்தப்பட்டவிதிகள் பிரகாரமாகவே இறந்துபோன பென்ஷன்தாரனிட விஷயமும் பிரதேச கெவர்ன்மெண்டாரிட ஆலோசனையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அம்மாதிரி விதிகளும் ஏற்படுத்தப்படும்.

5. கலெக்டரால் கோரிக்கொள்ளப்படுவதின்பேரில், யாதொரு ராஜாங்க பென்ஷனனது அற்றுப்போயிருந்து அப்பேர்ப்பட்டபென்ஷனில் பேர்பாதியை இறந்துபோன பென்ஷன்தாரனிட பெண்ஜாதியின் பரிபாலனைக்காக பென்ஷனை துடர்ந்து கொடுத்துவருவது யுக்தமாவென்று கெவர்ண்மெண்டார் ஆலோசனையில் எடுத்துக்கொள்வார்கள்.

VIII. (8) - வது அதிகாரம்.

பப்ளிக் என்டோமெண்டுகள் (அதாவது பொது உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்டசத்திரம் முதலியதற்கு தானங்கள்.)

137. சுதேசவழி பிரயாணிகளின் உபயோகத்திற்காக கட்டிய சத்திரங்கள்.—பிரஜைகளால் கட்டப்பட்ட சத்திரங்களுக்காதாரமாக தானம் செய்யும்பொருட்டு கரம்பு நிலங்களை அடமானம் செய்வதை சீர்படுத்துவதற்காக அடியிற்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன :—(1) யாதாவதொருவன் சத்திரம் கட்டுமுன்பாக பிரத்தியேகமாய் போர்டாரிட அனுமதியைப்பெற்றுக்கொண்டிருந்தாலொழிய அப்படி கட்டப்பட்ட சத்திரத்திற்கு கரம்பு நிலம் அடமானம் செய்யப்படமாட்டாது. இது விஷயமாய் கலெக்டர்கள் போர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும்போது கலெக்டர்கள் சத்திரம் கட்டுதவாய் சொல்லுகிற பேர்வழிகள் எவ்வளவு தொகை செலவிடுவதாய் உத்தேசித்திருக்கிறார்களென்பதைப் பற்றி ரிபோர்ட் செய்யவேண்டியதுடன்கூட உத்தேசித்திருக்கப்பட்ட கட்டடத்திற்கு ஒரு பிளானையும் தயாரித்து அனுப்பவேண்டியது. (2) ஒரு சத்திரமானது எல்லாவகை ஜனங்களும் வந்து தங்கியிருப்பதற்கு இடமுள்ளதாயிருந்தாலொழிய அந்த சத்திரத்திற்கு யாதொரு அதீனமும் செய்யப்படமாட்டாது. ஒரேவிதமானதாயும் சமமான விசாலமுள்ளதாயும் பிராமணர்கள் சூத்திரர்கள் இவர்களுக்காக ஒரு கட்டடமும், மற்றவகுப்பு ஜனங்களுக்காக ஒரு கட்டடமும் ஆக இரண்டுகெட்டடங்களையும் வெவ்வேறு ப்ளானில் குறித்துக்காட்டவேண்டியது. அந்தபிளானை இந்தவிதிகள்பிரகாரம் சத்திரங்களைக்கட்ட உத்திரவுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் நபர்களுக்கு காண்பிக்கவேண்டியது. ஆனால் அப்படி காண்பிப்பதால் அந்த பிளானில் கண்ட ஏற்பாடுகளையெல்லாம் அனுஸரித்து நடக்கவேண்டுமென்று கருத்தல்ல; நானாவிதஜனங்களும் தங்கியிருக்க இடமிருக்கும்பொருட்டு இன்னவிதமாய்கட்டவேணும் என்று பாவனைசெய்துகொள்ளவேணுமென்கிற அபிப்பிராயத்துடன் காண்பிக்கப்படுகிறது; ப்ளானில் காட்டியிருக்கிற பிரகாரம் ரஸ்தாவின் எதிர்பக்கங்களில் இரண்டுகெட்டடங்கள் கட்டவும் அல்லது ஒவ்வொரு கட்டடத்திலும் சரியாய் ஒரேமாதிரியானவிடுதிகளை ஏற்படுத்த

வும் எப்பொழுதுமே சவுகரியப்படாது. பிராமணர்கள் சூத்திரர்கள்தவிர மற்ற வகுப்பினர்களுக்காக கட்டப்பட்ட கட்டடமானது ப்ளானில்கண்ட விசாலத்தைவிட குறைந்த விசாலமுள்ளதாய் எந்த சந்தர்ப்பங்களிலும் இருக்கக்கூடாது. (3) மேலேசொன்ன விதமான ஒருசத்திரத்திற்கதீனமாக விடப்படும் கரம்புநிலத்தின் விஸ்தீரணமானது வருஷவாரியில் 60 ரூ தீர்வை எவ்வளவு விஸ்தீரணத்தின்பேரில் விதிக்கப்படுமோ அந்த விஸ்தீரணத்திற்கு அதிகமானதாயிருக்கக்கூடாது. (4) ஒரேரஸ்தாவில் இரண்டு சத்திரங்களிருக்கும்பட்சத்தில் அவைகள் ஒன்றுக்கொன்று அதமபட்சம் 10 மயில் தூரமுள்ளவைகளாயிருந்தாலொழிய அவைகள் கரம்புநிலம் அதீனம்செய்யப்பட பாத்திதையுள்ளவைகளாய் பாவிக்கப்படமாட்டாது. ஆனல், சிலவிசேஷமான சந்தர்ப்பங்களில்தமக்குயுக்தமாய்த்தோன்றினல் இந்தப்பொது விதியிலிருந்து விலகி நடக்கும்பொருட்டு கலெக்டரானவர் சிபார்சு செய்யக்கூடும். (5) நிலம் அதீனம்செய்யப்பட்ட சத்திரங்கள் பழுதில்லாமல் ஒழுங்காய் பாதுகாத்து வரப்படுகிறதாவென்றும் பிரயாணிகளிட சௌகரியங்களுக்காக தேவையான சிப்பந்திகள் வைக்கப்பட்டிருக்கிறார்களாவென்றும் காலாகாலங்களில் விசாரித்து தெரிந்துகொள்ளவேண்டியது கலெக்டரிட கடமை. (6) இவ்விதமானபிரயோஜனங்களுக்காக செய்யப்பட்ட நிலஅடமானமானது எந்த எண்ணத்தைக்கொண்டுசத்திரம்கட்டப்பட்டதோ அந்த எண்ணத்தைக் கைவிட்டவுடனே ரத்தாய்ப்போனதாக பாவிக்கப்படும்.

2. எந்த ஜனங்களிட சவுகரியத்திற்காக முதலில் சத்திரங்கள் ஏற்படுத்தபட்டதோ அந்தஜனங்களுக்கல்லாமல் வேறெந்தகாரியத்திற்கும் சத்திரங்களின்முழுமையுமாவது கொஞ்ச பாகத்தையாவது அனுபோகிக்க உத்திரவு கொடுக்கக்கூடாது. சாதாரணமாய் சர்க்கார் வேலைகள்சம்பந்தமாயும் அவைகளை உபயோகப்படுத்தக்கூடாது.

3. இந்தவிதிகள்பிரகாரம் சத்திரங்கள் கட்டியானபிற்பாடு அதில் பிரயாணிகள் வந்து தங்கியிருக்கலாமென்று தண்டோரா மூலமாய் பிரசித்தம் செய்யவேண்டியது.

138. பாடசாலைகள்:—தானங்கொடுக்கிறவர்கள் எந்த எண்ணங்களுடன் தானம்விட்டார்களோ அந்த எண்ணங்களுக்கு விரோதமாய் அப்படி தானம்விடப்பட்ட சொத்தின் வரும்படியை பிரயோஜனப் படுத்துவதை தடைசெய்யவேண்டியது கலெக்டர்களிட கடமை. ஆனல் முன் காலத்திய கெவர்ன்மெண்டாரால் தானம் விடப்பட்டிருக்கிற இந்து மத விஷயமான போதனைகளை கற்பிக்கும் பாடசாலைகள் அல்லது மகம்மதியன் மதவிஷயமான போதனைகளைக் கற்பிக்கும் பாடசாலைகள் விஷயமாய்

அவைகளுக்காக விடப்பட்டிருக்கிற தானங்களை வேறேகாரியத்திற்குபயோகப்படுத்தாமல் அந்தபாடசாலைகளுக்குப் பிரயோஜனப்படுத்துகிற விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியதைத் தவிர ஜாஸ்தி மேல்விசாரணை செய்யவேண்டியதனுவசியம்.

139. சுதேசபோது கட்டடங்களை பிரயோஜனப்படுத்துவது.— சுதேசிகளிட கட்டடங்களைபிரயோஜனப்படுத்தும் விஷயமாய் மாஜிகோர்ட் அவ் டைரக்டர்ஸ் (Court of Directors) அவர்களால் தெரிவிக்கப்பட்ட அடியில் கண்ட அபிப்பிராயங்களை கலெக்டர்கள் கவனிக்கவேண்டியது:— 1842 ம்ஹு மார்ச்சுமீ 30உயில் 4ம் நெம்பருள்ள நம்மிட டிஸ்பாட்ச்சில் (டிஸ்பாட்ச்சு என்றால்—மகாராணியவர்களாவது அவர்களிட ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களாவது—கெவர்னர்ஜனரல் அல்லதுகெவர்னர்அவர்களுக்கு எழுதும் கடிதத்துக்கும், இவர்கள் மகாராணி முதலானவர்களுக்கு எழுதும் கடிதத்திற்கும் டிஸ்பாட்ச்சு என்றுபெயர்) 5–வது பிரகாரணத்தில், ஸிக்கந்தரா என்னும் நகரத்தில் இருக்கப்பட்ட கோரியை மகம்மதிய ஜனங்களிட மதசம்பந்தமான அனுதாபங்களுக்கு விரோதமுண்டாகாமல் பிரயோஜனப்படுத்திக்கொண்டதாய் நாம் நம்பியிருப்பதாக தெரிவித்திருக்கிறோம். தவிரவும் 1813 ஹு பிப்ரவரி மீ 23உ யுள்ள டிஸ்பாட்ச்சில் 26–வதுபிரகரணத்திலும்1820 ஹு எப்ரல்மீ 26 உ யுள்ள டிஸ்பாட்ச்சில் 131 முதல் 133 வரையிலுள்ள பிரகரணங்களிலும் நம்மிடஅபிப்பிராயங்களைதங்களுக்கு (உங்களுக்கு) தெரிவித்திருக்கிறோம். அந்தநோக்கங்களில் தாங்கள் கவனம் செலுத்தவேண்டியது அவசியமென்று நாங்கள் எண்ணுகிறோம்;அந்த அபிப்பிராயங்களாவன:—இந்தியா ராஜ்யமானது பூர்வகாலத்தில் அலங்காரமுள்ளதாயிருந்த தென்பதற்கு அடையாளமாகிய இப்பேர்க்கொத்த கட்டடங்களை பத்திரமாய் பாதுகாத்து வருவதால் நம்மிட ராஜ்ஜிய பரிபாலனத்திற்கு கியாதி உண்டென்பதும், மகம்மதியர்களாயிருந்தாலும் ஹிந்துக்களாயிருந்தாலும் சுதேசிகளிட மதசம்பந்தமான எண்ணங்களையும் ப்ரீதிகளையும் கண்ணியப்படுத்தி அவைகளை அனுபாலித்துவரச்செய்யவேண்டியதானது நம்மிட கெவர்ண்மெண்டின் லட்சணத்தை முன்னிட்டு அவசியமானதென்பதும் தான் ; இத்தியாதி நோக்கங்களை யோசிக்குமளவில் சிக்கந்தரா நகரத்திலுள்ள ஆக்பர் கோரியை கைதிகளை அடைத்துவைக்குமிடமாக உபயோகப்படுத்துவதாய் தாங்கள் அபிப்பிராயப்பட்டதை நாம் அங்கீகாரம் செய்யக்கூடாமையா யிருக்கிறது. அப்படி நாம் அங்கீகாரம்செய்ய ரொம்பவும் தகுந்த காரணங்களிருப்பதாக தாங்கள் அபிப்பிராயப்பட்டாலொழிய அந்த கட்டடத்தை அப்பேர்ப்பட்ட காரியத்திற்கு பிரயோஜனப்படுத்துவதை உடனே நிறுத்திப்போடவேண்டுமென்றுநாம்விரும்புகிறோம்."

140. தேவாலயங்களின் விசாரணைசபையார்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்டவிதிகள்:—1863ம் வருஷத்திய 20-வது ஆக்ட் 7-வது பிரிவு பிரகாரம் நியமிக்கப்பட்ட மேல்விசாரணை சபைகளில் காலி நேர்ந்தால் அந்த காலிகளுக்கு நபர்களை நேமிக்கும்விஷயமாய் அடியில்கண்ட விதிகளை கெவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்:— (1) ஒருகாலி நேரிடுவதின் பேரில் உடனே அந்த சபையில் இருக்கிற மீதிசபையார் அப்பேர்ப்பட்ட காலி நேர்ந்திருப்பதைப் பற்றி எல்லாருக்கும் தெரிவிக்கும்பொருட்டு ஜில்லாகெஜட்டில் பிரசித்தம்செய்தும், தங்களிட விசாரணைக்குட்பட்டிருக்கிற மதசம்பந்தமான பிரதிஸ்தாபனத்திலும் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலும் எழுத்து மூலமான விளம்பரத்தையாவது அச்சடித்த விளம்பரத்தையாவது ஒட்டியும், பிரசுரம் செய்யவேண்டியது. (2) பிரசித்தப்பத்திரிகையிலும் விளம்பரத்திலும் கண்டெழுதவேண்டிய அம்சங்களாவன:— எந்த மெம்பருக்கு பதிலாக புதுமெம்பரை தலாவ்ஷ் செய்யவேண்டியிருக்கிறதென்றும், எந்ததேதியில் காலி நேரிட்டதென்றும் சபையின் மற்ற மெம்பர்கள் எந்த இடத்தில் எந்ததேதியில் எத்தினைமணிக்கு தலாவ்ஷ் செய்யப்போகிறார்களென்றும்; (3) எந்த இடத்தில் தலாவ்ஷ்செய்யவேண்டியதென்றால், சபையாரின் விசாரணையிலிருக்கிற மதசம்பந்தமான பிரதான ஆலயத்திலாவது அல்லது எந்ததேவாலயசபையில் காலிநேரிடுகிறதோ அந்ததேவாலயமானது எந்த ஜில்லாவின் அல்லது தாலூகாவின் கஸ்பா பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த கஸ்பா விலாவது; (4) எந்த தேதியில் தலாவ்ஷ்செய்ய வேண்டிய தென்றால், காலி நேர்ந்த தேதிமுதல் ஒருமாதத்திற்கு முன்படாமலும் மூன்றுமாதத்திற்குப் பின்படாமலுமிருக்கவேண்டியது. அப்பேர்ப்பட்டகாலத்துக்குள் ஏற்படுத்தப்படும் தினமானது சபையாரிட அதிகார எல்லைக்குள் வசிக்கிறவர்களாயும் 13-வது விதியை அனுசரித்து பலானவரை தலாவ்ஷ்செய்ய வேண்டியதென்பதற்கு அவரவர்களுக்கு யாரைநேமிக்கவேணுமென்று இஷ்டமிருக்கிறதோ அந்தஇஷ்டத்தைத் தெரிவிக்க பாத்தியதையுள்ளவர்களாயுமிருக்கிற ஜனங்கள், தங்களுக்கு இஷ்டமான புதுமெம்பருடைய பெயரைச்சொல்லும் பொருட்டு அந்தசபைக்கு வருவதற்காகப் பிடிக்கும் ஸாவுகாசத்தை கூடியவரையில் அனுஸரித்ததாயிருக்கவேண்டியது. (5) தலாவ்ஷ்செய்வதற்காகக்குறித்த தேதியில் அவரவர்கள் இஷ்டத்தைத் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டு காலை 6 மணிக்காரம்பித்து மாலை 6 மணிக்குள் முடிவு செய்யவேண்டியது. (6) தலாவ்ஷ் செய்வதற்காக அவரவர்கள் யாரிட பெயரை இஷ்டப்பட்டுச் சொல்லுகிறார்களோ அதை கேட்டிருந்து பதிவு செய்யும்பொருட்டு கௌரவமும் நம்பிக்கையுமுள்ள மனிதர்கள் எவ்வளவு தேவையிருக்கலாமோ அவ்வளவு நபர்களை சபையின் பாக்கி மெம்பர்கள் நேமிக்கவேண்டியது; காலியாயி

ருக்கிற உத்தியோகத்துக்கு யாதொரு மனுஷியனானவன் நாடுகிறவனாயிருந்தாலாவது அல்லது நாடுகிறவனிட ஏஜெண்டாயிருந்தாலாவது அப்பேர்ப்பட்டவனை (மேற்சொன்னபடி பல பேரிட இஷ்டங்களைக் கேட்டிருந்து பதிவு செய்வதற்காக) நியமிக்கக்கூடாது. (7) தலாஷ்செய்வதற்காக அவரவர்கள் யாரிடபெயரை இஷ்டப்பட்டுச் சொல்லுகிறார்களோ அவ்வித இஷ்டத்தைத் தெரிவிக்கும்பொருட்டு சபையின் மற்றமெம்பர்கள் எவ்வித ஏற்பாடு செய்யவேண்டுமென்றால், குறித்த நேரத்திற்குள் அவரவர்கள் இஷ்டத்தைத் தெரிவிக்கவேண்டியவர்களெல்லாரும் அவரவர்கள் இஷ்டத்தைத் தெரிவித்து பதிவு செய்விக்கும்பொருட்டு கிரமமாய்த் தேவையான ஸாவகாசத்தையும் தருணங்களையுமுடைய வர்களாயிருக்க வேண்டியது. மேலும் இஷ்டங்களைத் தெரிவிக்கக்கூடிய பிரதி ஆபீஸுக்கும் இரண்டு டெல்லர்களுக்கு (டெல்லர்கள் என்றால் அவரவர்கள் சொல்லுமிஷ்டங்களை கேட்டிருந்து பதிவுசெய்வோர்கள்) க்குறையாமல் சபையின் மற்றமெம்பர்கள் நியமிக்கவேண்யது. தலாஷ்செய்வதற்காக இஷ்டத்தைத்தெரிவிக்க பாத்தியதையுள்ளபிரதி மனுஷியனும் தன்னிட பெயர், இருப்பிடம், தொழில் முதலான விவரங்களைத்தெரிவிப்பதுடன் தான் யாரைநியமிக்கவேண்டு மென்று இஷ்டப்படுகிறானோஅவனிட பெயர், இருப்பிடம், தொழில் முதலான விவரங்களைடெல்லருக்கு உறுதியாய்த்தெரிவிக்கவேண்டியது. (8) டெல்லரானவன் உடனே தலாஷ்செய்ய இஷ்டத்தை தெரிவிக்க பாத்தியதையுள்ளவரிடபெயர் முதலானவைகளையும் அவர் யாரை நேமிக்கவேண்டுமென்கிறாரோ அவரிடபெயர் முதலானவைகளையும் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புஸ்தகத்தில் பதிவுசெய்து தலாஷ்செய்ய இஷ்டத்தைத்தெரிவிக்க பாத்தியதையுள்ளவரை அவரிட கையெழுத்தையோ தற்குறியையோ எழுதும்படி கேட்கவேண்டியது. தவிரவும் அவரவர்கள் இஷ்டத்தைத் தெரிவித்தால் சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் டெல்லர்கள் கிரமமாய் பைசல் செய்து வைக்கவேண்டியது. (9) பதிவு புஸ்தகங்களானவை குறித்த பாரப்பிரகாரமிருக்கவேண்டியது; அவரவர்கள் இஷ்டங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டு முடிவானவுடனே அந்த இஷ்டங்களைப்பதிவு செய்து வந்த டெல்லர்கள் அந்த புஸ்தகத்தில் கையெழுத்து செய்யவேண்டியது. (10) இஷ்டத்தைத் தெரிவித்தல் முடிவானபிறகு 24 மணி நேரத்திற்குள்ளாக தலாஷ்செய்ததின் முடிவை சபையின் மற்ற மெம்பர்கள் உறுதிப்படுத்தவேண்டியது. (11) தலாஷ்செய்யப்பட்டதின் முடிவைக்கண்டு ஒரு விளம்பரப்பத்திரிகை தயாரித்து அதில் சபையாரின் மற்ற மெம்பர்களும் டெல்லர்களும் கையெழுத்துசெய்து தாமதமன்றியில் அடுத்த 3 ஜில்லா கெஜட்டுகளில் பிரசித்தப்படுத்தி சபையாரின் மேல்விசாரணைக்குட்பட்டிருக்கிற பிரதிதேவாலயத்தில் ஒரு பகிரங்க

மான இடத்தில் அதை ஒட்டவேண்டியது. (12) தலாஷ்செய்ததின் முடிவைத் தெரிவித்த பிற்பாடு இரண்டுவாரம் வரையில் தலாஷ் செய்வதில் இஷ்டத்தைத்தெரிவிக்க பாத்தியதையுள்ளவர்கள் பார்வையிடும்பொருட்டு தலாஷ் செய்த பட்டணத்தில் சவுகரியமான ஒரு இடத்தில் தலாஷ்செய்ததை பதிவுசெய்த புஸ்தகங்களையும் அதுசம்பந்தமான தஸ்தாவேஜுகளையும்வைக்கவேண்டியது. (13) சபைகளின் மெம்பர்களை தலாஷ் செய்ய இஷ்டத்தைத் தெரிவிக்க பாத்தியதையுள்ளவர்களாவன:— (ஏ) சபையாரிட அதிகார எல்லைக்குட்பட்டு வருஷவாரியில் சர்க்காருக்கு 20 ரூபாய்க்குக் குறையாத தீர்வை செலுத்துகிற நிலங்களின் சொந்தக்காரர்கள்; (ப) கெவர்ண்மெண்டு தீர்வை முழுமையுமாவது கொஞ்சபாகமாவது விதிக்கப்படாமல் விலக்கியிருக்கப்பட்டும், ஆனால்விலக்கப்படாமலிருந்திக்கும் பட்சத்தில் வருஷவாரியில் 20 ரூபாய் செலுத்த வேண்டியதுமான மேற்சொன்ன எல்லைக் குட்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்கள்; (ஸீ) 250 ரூபாயல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பு விலையுள்ள மேற்கண்ட எல்லைக்குட்பட்ட வீட்டின் சொந்தக்காரர்கள். (டீ) வருஷவாரியில் 50 ரூபாய் அல்லது அதற்குமேற்பட்டு வாடிகையுள்ள மேற்கண்ட எல்லைக்குட்பட்ட வீடுகளை அனுபவிப்போர்கள். (ஈ) வருஷவாரியில் 150 ரூபாய் அல்லது அதற்குமேற்பட்டு சம்பளமுள்ள கெவர்ண்மெண்டு உத்தியோகத்திலிருப்பவர்கள் அல்லது அவ்வளவுதுகையை கெவர்ண்மெண்டு பென்ஷனுக வாங்குகிறவர்கள். (எப்) 150 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சொந்த வருமானமுள்ளவர்கள் (ஜி) சபையார் விசாரணைக்குட்பட்டமதசம்பந்தமான யாதொருதேவாலயம் அல்லது வித்தியாசாலை வகையறுவை பராமரித்து வரும் பொருட்டு வருஷவாரியில் 50 ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்துவந்தாவது அல்லது ஒரேதரமாய் 500 ரூபாய் தானமாகக் கொடுத்தாவது உதவிசெய்பவர்கள்; (எச்) தலாஷ் செய்ய இஷ்டத்தைத் தெரிவிக்குமுன்பு 6 மாசகாலமாய் சபையாரின் அதிகார எல்லைக்குள் வசித்தும் எந்த சர்வகலாவித்தியாசாலையிலாவது பீ. ஏ. பரீட்சை கொடுத்திருப்பவர்கள்; (14) மேலே சொன்ன விதமாய் லாயக்கில்லாமல்போனயாதொருவர் தன்னிஷ்டத்தைத்தெரிவிக்கத்தனக்கு பாத்தியதையுண்டென்று சொன்னல் அவர் சபையாருக்குத் திருப்திகரமாய்த்தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க வேண்டியது. (15) சபையாரின்மேல் விசாரணைக்குட்பட்ட தேவாலயம் வகையறுக்களை எந்த மதத்தினுடைய உபயோகங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அல்லது பராமரித்துவரப்படுகிறதோ அந்த மதத்தை யாதொரு ஆஸாமியானவர் அனுஷ்டிக்கிறவராயும் அந்த தேவாலயம் முதலானவற்றை பராமரித்து வருவதில் சிரத்தையுள்ளவராயும் மைனரல்லாதவராயும் இருந்தாலொழிய யாதொரு ஆசாமியும் புதுமெம்பரை தலாஷ் செய்யும் விஷயத்தில் தன்னிட இஷ்டத்தைத்

தெரிவிக்க பாத்தியமுள்ளவராகமாட்டார்; தவிரவும், காலிநேரிடுவ தற்குமுன்பு அதமபட்சம் 7 நாளுக்கு முன்னடியாக புதுமெம்பர் நேமிக்கவேண்டிய விஷயமாய் பலான ஆஸாமி தன்னிட இஷ்டத்தைத் தெரிவிக்கப் போகிறவராக ரிஜிஸ்டரில் பதியப்பட்டிருந்தாலொழிய யாதொருவரும் தன்னுடைய இஷ்டத்தைத் தெரிவிக்க பாத்தியதை யுள்ளவரல்ல. அவரிஷ்டத்தைத் தெரிவிக்கும்படி அவருக்கிடமும் கொடுக்கக்கூடாது (16) பிரதி சபையாரும் இஷ்டத்தைத்தெரிவிக்க பாத்தியதை யுள்ளவர்களைக் கண்டு ஒருரிஜிஸ்டர் வைத்துவைக்கவேண்டியது; சபையார் தலாஷ்செய்யும் தருணத்தில் தன்தன் இஷ்டத்தைத் தெரிவிக்க பாத்தியதையுள்ள ஒவ்வொருவரிட பெயர், தொழில், மற்றவிபரம், அவருடைய லாயக்குகள் இவைகளை ரிஜிஸ்டரில் பதிவுசெய்யவேண்டியது. மேலே பிரஸ்தாபிக்கப்படலான யோக்கியதைகளை (லாயக்குகளை) உடையவரென்று ஒவ்வொரு ஆஸாமியும் சபையாருக்குத் திருப்திகரமாய் எடுத்துக்காட்டும்பட்சத்தில் இஷ்டத்தைத் தெரிவிக்க உரிமையுள்ளவராக பதிவு செய்துகொள்ள அவருக்கு பாத்தியதை யுண்டு. ரிஜிஸ்டரில் அவர் பெயர் வகைறுக்களை பதிவு செய்திருப்பதற்கு ஒரு நகல் அவருக்குக் கொடுக்கவேண்டியது. (17) ஒவ்வொருகாலிக்கும் ஒரு தரத்துக்குமேல் தன்னிட இஷ்டத்தைத் தெரிவிக்க யாதொரு ஆஸாமிக்கும் பாத்தியதை இல்லை (18) சபையார் மேல்விசாரணைக்குட் பட்டிருக்கிற தேவாலயம் முதலானவைகளைப் பராமரித்து வரும் பொருட்டு வருஷவாரியில் 500 ரூ அல்லது அதற்கு மேற்பட்ட துகையையாவது ஒரேதடவை 5000 ரூ யாவது கொடுத்து உதவிசெய்கிற ஆஸாமிகள் விஷயத்தில்மாத்திரம் அவர்கள் வராதிருந்தால் அவர்களுக்குப் பதிலாய் பிரதி நிதியின் மூலமாய் இஷ்டத்தைத் தெரிவிக்க உத்திரவு கொடுக்கக்கூடும்; அந்த பிரதிநிதியால் ஆஜர் செய்யப்படும் அதிகாரப்பத்திரமானது ஸப்மாஜிஸ்ட்ரேட் ஹோதாவுக்குக் கீழ்ப்படாத ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்பாக தயார் செய்யப்பட்டதாயும் அவரால் சாக்ஷிகையொப்பம்செய்யப்பட்டதாயும் இருக்கவேண்டியது. (19) இஷ்டத்தைத் தெரிவிக்க பாத்தியதையுள்ளவர் ஒவ்வொரு காலியை பூர்த்தி செய்யவேண்டியதற்கு ஒருவித இஷ்டத்திற்கு மேற்பட்டு மனஸறிந்து பதிவுசெய்திருக்கிறதாக ருஜுவானல் அதினல் அவர்கள் இனிமேல் இஷ்டத்தைத்தெரிவிக்க லாயக்கில்லாதவர்களாவார்கள்; அவர்களிடபெயரையும் ரிஜிஸ்டரிலிருந்து தள்ளிவிடப்படும். (20) எந்த ஆஸாமி பட்சமாய் ஜாஸ்திபேர்களால் இஷ்டம் தெரிவிக்கப்படுகிறதோ அந்த ஆஸாமியானவன் சபையின் ஒரு மெம்பராகக் கிரமமாய் தலாஷ் செய்யப்பட்டவனென்று பிரசித்தம்செய்யவேண்டியது; 2 அல்லது 2 க்கு மேற்பட்ட ஆஸாமிகள் பட்சமாய் இஷ்டங்கள் தெரிவிக்கப் பட்டதானவை

சமமானதாயிருந்தால் சீட்டுபோட்டு தலாவ்ஷ் செய்யவேண்டியது. (உதாரணம் பத்து ஆஸாமிகள் ஏ. என்பவனை மெம்பராக நியமிக்கவேணுமென்று இஷ்டப்படுகிறார்கள்; வேறு பத்து ஆஸாமிகள் ப. என்பவனை நியமிக்க இஷ்டமுடையவர்களாயிருக்கிறார்கள்; இந்தசந்தர்ப்பத்தில் ஏ. ப. இரண்டுபேருக்காகவும் சீட்டுபோட்டு எவனுக்கு சீட்டுவிழுகிறதோ அவன்தான் மெம்பராக ஏற்படுத்தப்படுவான்) (21) யாதாவதொரு மனுஷியன் தன் பட்சமாய் இஷ்டம்தெரிவிக்கும்பொருட்டு (இஷ்டம் தெரிவிக்க உரிமையுடையவனுக்கு நேராகவாவது வேறு மூலமாகவாவது யாதொரு விலைமதிக்கக் கூடிய பிரதிபலனைக் கொடுத்ததாய் ருஜுவாகும் பட்சத்தில் அதினால் அந்த மனுஷியன் தலாவ்ஷ் செய்யப்பட லாயக்கற்றவனாவான்; (22) இந்தவிதிகளை யனுஸரிக்காமல் யாதொரு மனுஷியனானவன் தலாவ்ஷ் செய்யப்பட்டால் அப்படி நியமிக்கப்பட்டதானது பலனற்றதாய்ப்போய்விடுகிறது (ரத்தானதாக பாவிக்கப்படும்).

2. தேவாலய உபயோகங்களுக்காக கொடுக்கக்கூடிய பணத்தை, சம்பந்தப்பட்ட தேவாலயங்களானவை ஒருசபையாரிட மேல்விசாரணைக்குட்பட்டிருக்கும் பட்சத்தில் தேவாலய சபையார் எவர்களைட்ரஸ்டிகளாக (அதாவது பொறுப்பாளிகளாக) ஏற்படுத்தியிருக்கிறார்களோ அவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டியது. மேல்கண்ட மாதிரி நிச்சியமாய்ச் செய்யப்படும் பொருட்டு எந்த தாலூக்காவிலிருந்து பணம்கொடுக்கப்படவேண்டியதோ அந்ததாலூகாதாசீல்தாருக்கு பலசபையார்கள் தங்களிட உத்திரவுபிரகாரம் ட்ரஸ்டிகள் நேமிக்கப்பட்டதையும் நீக்கப்பட்டதையும்பற்றி தெரிவிக்கவேண்டியது; அதின்பேரில் தாசீல்தார் கிராமஅதிகாரிகளுக்கு அவசியமான உத்திரவைப்பிறப்பிக்கவேண்டியது. ஒரு தேவாலயத்தின் சபையார் எவர்களை தேவாலய உத்தியோகஸ்தர்கள் அல்லது ட்ரஸ்டிகள் என்று பாவிக்கிறார்களோ அவர்களைத்தான் தேவாலய உத்தியோகஸ்தர்கள் அல்லது ட்ரஸ்டிகளாக கெவர்ண்மெண்டார் பாவிக்கக்கூடும். சம்பந்தப்பட்ட தேவாலயங்களானவை சபையாருடைய மேல்விசாரணைக்குட்பட்டிராத விஷயங்களில் துகையை சேர்ப்பிக்கப்படவேண்டிய ஆஸாமியைப்பற்றி தகராருண்டாகும் பக்ஷத்தில் எதிர்ப்பாத்தியஸ்தர்களை ஸிவில் கோர்டில் நியாயம் பெற்றுக்கொள்ளும்படி அனுப்பிவிட்டு, தகுந்த கோர்டாரால் வேறே விதமாய் உத்திரவு செய்யப்படுகிறவரையில், இதற்கு முன்போலவே துகையை பட்டுவாடாசெய்து வரவேண்டியது.

IX. (9) - வது அதிகாரம்.

கெவர்ண்மெண்டு வியாச்சியங்கள் அதாவது கெவர்ண் மெண்டார் ஒருகக்ஷிக்காரராக இருந்து நடத்தப்படும் வியாச்சியங்கள்.

141. முன் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டு வியாச்சியங்கள் நேரிட வொட்டாமல் செய்வது:—கலெக்டர்களாவது அவருக்கு கீழ்ப் பட்ட உத்தியோகஸ்தர்களாவது அவர்களிட உத்தியோக முறமையில் செய் யப்பட்ட செய்கைகளுக்காக அவர்கள்பேரில் தாவாசெய்ய உத்தேசித்து இருப்பதாக ஸிவில்புரோஸீஜர்கோட் 424 வது ஸெக்ஷன் பிரகாரம் கக்ஷிக் கார்களால் கலெக்டர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டால்பிரஸ்தாப தாவா விஷயத்தில் கலெக்டர்கள் உடனே ஜாக்கிரதையாய் கவனம் செலுத்தவே ண்டியது; தாவாதாரன்சொல்லும் ஸங்கதிகளானவை வியக்தமாய் அறிந்து கொள்ளக் கூடாதவைகளாயிருந்தால், கிரமமாய் கிடைக்கக்கூடிய நியா யத்தை அடைவதற்குமுக்கிய ஆதாரமாக தன்னுடையகுறைகளை வாய்மொ ழியினலாவது, அல்லது வியக்தமாயும் புரியும்படியாயும் எழுத்துமூலமாயா வது, விவரித்துச்சொல்லும்படி தாவாதாரனை கலெக்டர் கோரவேண்டியது. தாவாசெய்யப்பட்ட நடவடிக்கைகளானவை கொஞ்சங்கூட ஏற்றுகொள்ள ப்படுவதற்குக் கூடாமையாயிருப்பதாய்த் தெரியவரும்பட்சத்தில், சொல் லிக்கொள்ளப்பட்டக் குறையைத் தீர்த்து நியாயம்செய்வதற்கு கலெக்டரு க்கு அதிகாரம் இருக்கும்பட்சத்தில் அப்படியே உடனே தீர்க்கவேண்டியது. அப்படிச்செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லாமற்போகும்பட்சத்தில் போர்டாரிட உத்திரவுகளுக்காக சங்கதியை ரிபோர்டு செய்யவேண்டியது. தாவாவானது பிரத்தியட்சமாய் ஆதாரமற்றதாக இருந்தால், செய்யப்படுவ தாய் சொல்லப்பட்ட தாவாவை எதிர்க்கும்பொருட்டு (டிபென்ட் செய்யும் பொருட்டு) தேவையான ஸமாசாரங்களை தெரிந்து வைத்துக்கொள்வதை விட வேறே அமுல் அவசியமில்லை, ஆனல் சந்தேகமுள்ள எல்லாகேஸ்க ளையும் அவசியமானல் கெவர்ண்மெண்டு ப்ளீடரிட அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு தாமதமன்றியில் போர்டாருக்கு ரிபோர்டு செய்யவேண்டியது.

2. இந்தவிதிகளை மிகவும் ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டியது, ஏனென்றால் இவ்விதிகள் பிரகாரம் நடக்கத் தவறிப்போவதினால் அடிக்கடி தாமதம் நேரிட்டுப்போய் தாவாக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிற்பாடு அவைகளைப்பற்றி போர்டாருடைய உத்திரவுகளுக்காக ரிபோர்டு செய்யவேண்டியதாயிருக்கிறது; ஆன்ஸர் தாக்கல்செய்வதற்குக் குறித்திருக்கப்பட்ட தேதிக்குமுன்பாக சரியாய் ஆலோசனைசெய்யப் போதுமான ஸாவுகாசம் போர்டாருக்கு இல்லாமற்போகிறது.

142. வியாச்சியங்களை தாக்கல்செய்வது:— வியாச்சியங்களை தாக்கல்செய்வதற்காக போர்டாரிட அனுமதிவேண்டிய கேஸ்களிலெல்லாம், மசூதாபிரியாது ஒன்றுதயாரித்து அத்துடன்கூட சங்கதிகளை செம்மையாய் விமர்சித்து எழுதி ஒரு லெட்டரையும்கூட அனுப்பவேண்டியது.

143. வியாச்சியங்களை எதிர்த்துவழக்காடுவது(டிபேன்ஸ் செய்வது):— கலெக்டர்களாவது அவர்களுக்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களாவது தங்களிட ரெவினியூஉத்தியோக முறமையில் செய்தசெய்கைகளுக்காக தங்கள்பேரில் ஸிவில்கோர்ட்டுகளில் தாவா செய்யப்பட்டால் அது விஷயத்தைப்பற்றி பிரியாதுக்கு ஒரு நகலுடன் ரிவினியூபோர்டாருக்கு உடனே தெரியப்படுத்த வேண்டியது, தவிரவும் அப்படிப்பட்ட தாவாக்களானவை எதிர்த்து வழக்கிடக் கூடியதாயிருப்பதாக பாவிக்கப்பட்டால் தாக்கல் செய்வதாய் உத்தேசித்திருக்கிற ஆன்ஸர் அல்லது ஸ்டேட்மெண்டுகளுக்கு மசூதா தயாரித்து அனுப்பவேண்டியது,அவைகளை பலான தேதியில் தாக்கல் செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் தெரியப்படுத்தவேண்டியது. தாவாவின் பெறுமானம் துகை இவ்வளவென்று கலெக்டர்கள் தெரிவிக்கவேண்டியது. வியாச்சியங்களை எதிர்த்து வழக்காடுவதில் யாதொரு தாமதமும் நேரிட வொட்டக்கூடாது; அந்தந்த இடத்திலுள்ள அதிகாரிகள்பேரில் கோர்ட்டுகளில் வியாச்சியம் தாக்கல் செய்யப்பட்டு ஸர்கார்செலவில் எதிர்வழக்காடும்படி உத்திரவுசெய்யப்பட்டிருக்கிற வியாச்சியங்களின் முடிவை தப்பாமல் ரிபோர்ட்செய்யவேண்டியது, தவிரவும் ஜட்ஜ்மெண்டுக்கும் டிக்கிரிக்கும் நகலை போர்டாருக்கு அனுப்பவேண்டியது.

2. (வியாச்சியத்தின்) முடிவானது கெவர்ன்மெண்டாருக்கு பிரதிகூலமானதாக இருக்கும் பக்ஷத்தில், (ஒரிஜினல்) அஸல் கோர்ட்டிலும் அப்பீல் கோர்ட்டிலும் செய்யப்பட்ட டிக்கிரிகளுக்கும் ஜட்ஜ்மெண்டுகளுக்கும் ஸ்டாம்பு காகிதத்தில் நகல்கள் வாங்கி அவைகளை அப்போதே அனுப்பவேண்டிய விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது; நகல்களை பின்னிட்டு அனுப்பாமல் அதேகாலத்தில் அனுப்பவேண்டியது. அதற்

குமேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யும்படி ஒருக்கால் தீர்மானிக்கும் பட்சத்தில் யாதொரு கால தாமதமும் நேரிடாது.

3. பட்டா மாற்றுதலுக்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களில் யாதொரு சிக்குமுதலானதில்லாத விஷயங்களில் போர்டாருக்குத் தெரிவிக்காமலே அப்பேர்ப்பட்ட வியாச்சியங்களை எதிர்த்து வழக்கிட கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. அப்பேர்க்கொத்த கேஸ்களைப்பற்றி 3 மீத்திற்கு ஒருதரம் கலெக்டர்கள் போர்டாருக்கு அனுபந்தத்தில்கண்ட நமூனு பிரகாரம் ரிபோர்டு அனுப்பவேண்டியது. கெவர்ண்மெண்டாருக்கு நிமித்தியமில்லாத விஷயத்தில் அப்பேர்ப்பட்ட வியாச்சியங்களின் முடிவை ரிபோர்டு செய்யவேண்டியதவசியமில்லை. நேரிட்ட செலவு துகையானது அனுமதி கொடுக்கப்பட்ட துகையைவிட ஜாஸ்தியாயிருக்கும்பட்சத்தில், போர்டாருக்குத் தெரியப்படுத்தாமலே ஜாஸ்தி துகையை கணக்கில் செலவெழுதலாம். செலவுகள் விஷயத்தில் டிக்ரியானது கெவர்ண்மெண்டாருக்கு பிரதிகூலமாய் இருக்கும் பட்சத்திலாவது அல்லது கெவர்ண்மெண்டாரால் வேறே ஆக்ஷேபணைக்கிடமிருக்கும் பட்சத்திலாவது, சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி அப்பீலோ அல்லது ரிவியூமனுவோ ஆஜர் செய்யும்பொருட்டு போதுமான ஸாவுகாச மிருக்கும்படி ஒரு ஸ்பெஷல் ரிபோர்ட்டு தயாரித்து அனுப்பவேண்டியது ; அந்த ரிபோர்ட்டுடன்கூட (அந்தவியாச்சியத்தின்) டிக்ரிக்கும் ஜட்ஜ்மெண்டுக்கும் ஒருநகலும் அனுப்பவேண்டியது.

4. கெவர்ண்மெண்டாருக்கு அனுகூலமாக செய்யப்பட்ட தீர்ப்புகளின்பேரில் அப்பீல்செய்யப்படும் விஷயங்களில், கலெக்டரானவர் தாமதம் நேரிடாமலிருக்கும்பொருட்டு போர்டாரிட கிரமமான அனுமதியை எதிர்பாராமலே அப்பீல்களை எதிர்த்து வழக்காட அவசியமான ஏற்பாடு செய்யலாம், ஆனால் அப்பீல் செய்யப்பட்டிருகிற ஸங்கதியைப்பற்றி எப்போதும் போர்டாருக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

5. கெவர்ண்மெண்டாபீஸர்கள்பேரில் அவர்கள் ஸர்க்கார் உத்தியோக முறமையில் செய்த செய்கைகளுக்காக கொண்டுவரப்படும் வியாச்சியங்களில் டிபென்ஸ் நடத்தும் உத்தியோகஸ்தர்கள், தஸ்தாவேஜுகளை தாக்கல்செய்யவும் சாக்ஷிகளை ஆஜர்ப்படுத்தவும் வியாச்சியத்தின் டிபன்ஸுக்கு வேண்டிய மற்றமுயற்சிகளை எடுத்துக்கொள்ளும்பொருட்டு 3மாதம் ஸாவுகாசம் கொடுக்கும்படி கோர்ட்டார்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட 3 மாத காலத்திற்கு ஜாஸ்தியாய் ஸாவுகாசம் கொடுப்பது ஜட்ஜினுடைய யுக்தானுஸாரத்தைப் பொறுத்தது.

6. யாதொரு வியாச்சியத்தை எதிர்த்து வழக்கிட அனுமதிகோரிக் கொள்ளப்பட்டு வியாச்சியத்தின் ஹியரிங்குக்காக கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட தேதிக்குள்ளாக யாதொரு பதிலும் வராமற்போனுல் ஜாஸ்திஸாவுகாசம்வேண்டுமென்று கோர்ட்டாருக்கு மனுகொடுத்து கோரிக்கொள்ளவேண்டியது. அப்பேர்ப்பட்ட மனுவானது எற்றுக்கொள்ளப்படாமற்போனுல், மசூதா ஆன்ஸர் தயாரித்த பிற்பாடு தங்களுக்குத் தோன்றியிருக்கக்கூடிய விவகாரங்களுடனுவது வேறே மாறுதல்களுடனேயாவது ஆன்ஸர் தாக்கல் செய்யவேண்டியது, அன்றியும், இது விஷயமாய் மேலதிகாரிகளுடைய உத்திரவுகள் கிடைக்க வில்லையென்றும் ஆகையால்ஸப்ளிமெண்டெரி (அதாவது முன்கொடுத்த ஆன்ஸருடன் கூட உதவி ஆன்ஸர்) ஆன்ஸர் தாக்கல் செய்யும்படிஅவசியம் நேரிடுமென்றும் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

7. கெவர்ண்மெண்டாருக்கு நிமித்தியமுள்ள யாதொருமுக்கியமான வியாச்சியம் தாக்கல் செய்யப்பட்டு பாரிஸ்டராவது அல்லது அந்தந்த இடத்திலுள்ள கெவர்ண்மெண்டு வக்கீலைவிட ஜாஸ்தி அனுபோகமுள்ள வேறே லாயரையாவது கெவர்ண்மெண்டு தரப்பில் நியமித்து கேஸை நடத்தவேண்டியது யுக்தமாய் கலெக்டருக்குத் தோன்றுகிற விஷயத்தில், கலெக்டரானவர் முன்னுடியாக போர்டார் துவாரா கெவர்ண்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது.

8. கலெக்டரால் அவரிட மேஜிஸ்டிரட்டு அதிகார முறைமையில் செய்யப்பட்ட செய்கைகளுக்காக அவர்பேரில் வியாச்சியம் செய்யப்படும்படி நேர்ந்தால், அது விஷயமானது ரிவினியூ போர்டாருக்கு சம்பந்தப்பட்டதல்ல; ஆனபடியால் அந்த வியாச்சியத்தை டிபண்டு செய்யும் பொருட்டு கலெக்டர் நேராக கெவர்ண்மெண்டாரைக் கோரிக்கொள்ள வேண்டியது.

9. ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் தங்களிட உத்தியோக முறைமையில் சம்பந்தப்பட்ட செய்கைகள் நடத்தைகளைப்பற்றி சமாசாரப் பத்திரிகைகளில் (News papers, நியூஸ் பேபர்கள்) பழிப்பாய் எழுதி இருப்பதை தப்பென்று ருஜூப்பிப்பதற்காக தங்களிட ஸர்கார் நடவடிக்கைகள் அல்லது ஸர்க்கார்சம்பந்தமாய் தங்களிட நடத்தைகளைப் பற்றிகோர்டார்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்னமே கெவர்ண்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது; ஆனுல், தன்னிட சொந்த விவகாரங்கள் அல்லது நடத்தையைப்பற்றி தனக்கு யுக்தமாய்த்தோன்றிய எந்தமாதிரியாகவாவது டிபெண்டு செய்துகொள்ள ஒரு உத்தியோகஸ்தருக்குடைய பாத்திய

தையானது இந்த ஆர்டரினுல் பாதிக்கப்படமாட்டாது; ஆனுல் உத்தியோகமுறைமையில் அவருக்குள்ள கீர்த்திக்கு ஹானிவராமல்செய்வது கெவர்ண்மெண்டாரைச்சேர்ந்தது. ஆகச்சே, பிரதி விஷயத்திலும் ஸர்க்கார் தரப்பில் நடவடிக்கைகள் நடத்தவேண்டியது அவசியமா அல்லது யுக்தமா என்பதை முன்னுடியாக கெவர்ண்மெண்டார் நிர்ணயிப்பார்கள்; கிரமமாய் அனுமதி பெற்று நடவடிக்கை நடத்தும்பட்சத்தில் அதுவிஷயமாய் நேர்ந்தசெலவை கெவர்ண்மெண்டார் எற்றுக்கொள்வார்கள்.

144. பொறுப்பு:—கலெக்டர்கள் தாங்கள் கொடுக்கப்போகிற ஆன்ஸர்களின் மசூதாவை அனுப்புமுன்பாக தங்கள் பட்சமிருக்கப்பட்ட சாக்ஷியமானது பிராதியினுடைய ஸ்டேட்மெண்டுகளை நிரூபிப்பதற்கும் சர்க்காராரிட ஸ்டேட்மெண்டுகளை ருஜுப்பிப்பதற்கும் முற்றிலும் போதுமானதாகயிருக்கிறதாவென்று கலெக்டர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது; தவிரவும் தாவாசொல்லிக்கொள்ளப்பட்ட செய்கையைப்பற்றி உத்தியோகமுறைமையில் திருப்திகரமாய் காரணம் விவரித்துச்சொல்லக் கூடியதாயிருந்தாலும் அது கோர்ட்டாரால் சட்டத்தின் கண்டிப்பான விதிகளை அனுஸரித்து தீர்மானிக்கப்படுமென்றும், ஆகையால் அப்பேர்ப்பட்ட ஒரு செய்கையானது சட்டத்தையனுஸரித்தும் கிரமத்தை யனுஸரித்தும் (டிபன்ட் செய்ய) அங்கீகாரம் செய்யக்கூடியதாயிருந்தா லொழிய இது விஷயமாய் டிபன்ஸ் நடத்தப் பிரயத்தனப்படக்கூடாது; இந்த இரண்டு சங்கதிகளும் மகாமுக்கியமானவைகளாக பாவிக்க வேண்டும். கொடுக்கப்படவேண்டிய ஆன்ஸர்களில் சொல்லவேண்டிய வாக்குமூலங்களை அதிஜாக்கிரதையுடன் கலெக்டர்கள் தயார் செய்யவேண்டியது, தவிரவும் தாவா சொல்லிக்கொள்ளப்பட்ட செய்கையானது கெவர்ண்மெண்டாரிட சட்ட திட்டங்களை யனுஸரித்து முற்றிலும் சரியென்று ஸ்திரப்படுத்தக்கூடியதாக மசூதா ஆன்ஸரினுல் ஏற்பட்டாலொழிய இந்தவியாச்சியத்தை சர்க்கார் சிலவில் டிபன்ஸ் செய்யும்படி அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்று கலெக்டர்கள் அறிந்து கொள்ளவும் வேண்டியது; யாதொரு பப்ளிக் உத்தியோகஸ்தனுனவன் யாதொரு தாவாவானது தாக்கல் செய்யப்படும் காலத்தில் அதை டிபன்ஸ் செய்யக்கூடாததாக வியக்தமாயும் நிராக்ஷேபகரமாயும் தெரிவித்திருக்கப்பட்டிருந்து அந்தவியாச்சியத்தை டிபன்ட் செய்ய வேணுமென்று சிபார்சு செய்தாலாவது டிபன்ஸ் ஆரம்பித்தாலாவது அத்தருணத்தில் அப்படி டிபன்ஸ்செய்வது யுக்தமானதாக தோன்றிய சந்தர்ப்பங்களெதுவாயிருந்தாலும் அப்பேர்ப்பட்ட சர்க்கார்உத்தியோகஸ்தரையே அந்த வியாச்சிய விஷயத்தில் ஜவாப்தாரியாக்க தாமதிக்கமாட்டார்களென்று கெவர்ண்மெண்டார் தெரிவித்திருக்கிருர்கள்.

2. கலெக்டர்களிடஸர்க்கார் ரிபோர்ட்டை அனுசரித்துநடத்திய நடவடிக்கைகளுக்காக கலெக்டர்கள் கொடுக்கவேணுமென்று தீர்மானித்திருக்கிற யாதொரு மொத்தமானது மேற்சொன்ன அபிஷல் ரிபோர்ட் தயார்செய்யும் காலத்தில்அப்படி தயார்செய்கிறவர்கள் தாங்கள் ரிபோர்டு செய்யும் சங்கதிகள் தப்பென்று தெரிந்துகொள்வதற்குமார்க்கம் இருந்ததாக நம்ப இடமிருக்கும் பட்சத்தில் அப்பேர்ப்பட்ட கீழ் உத்தியோகஸ்தர்களே அந்த துகைகளுக்கு ஜவாப்தாரிகளாவார்கள்.

3. வியாச்சியங்களை எதிர்த்து டிபன்ஸ் நடத்துவதில் நேரிடும் சொஸ்தித்தனத்துக்காகவும் கலெக்டர்களே ஜவாப்தாரிகள், அப்படியாய் சொஸ்தியாயிருந்த காரணத்தை முன்னிட்டு கெவர்ண்மெண்டு தரப்பில் ராஜியாய்ப்போகும்படி நேரிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டம் முதலானவைகளை அவர்களே ஏற்றுக் கொள்ளவேண்டியது. டிபன்ஸ் செய்யும் விஷயத்தில் நேரிட்ட செலவுகளை கடைசியாய் எவ்விதமாய்ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் அம்சமானது டிக்ரி செய்கிறவரையில் நிர்ணயிக்காமல் நிறுத்திவைக்கப்படும். தீர்மானமானது கெவர்ண்மெண்டுக்கு விரோதமாய்ப்போகும் பட்சத்தில் கலெக்டரானவர் வியாச்சியத்தின் டிபன்ஸ்முழுதிலும்சரியான ஜாக்கிரதையுடன்கவனத்தை செலுத்தியிருப்பதாகவியக்தமாக ஏற்பட்டாலொழிய அவர்களிட பொறுப்பு அவர்களை விட்டு நீங்கிவிட்டதாக பாவிக்கப்படமாட்டாது.

145. க்ரிமினல்தரப்பில்ப்ராஸிகியூஷன் செய்யப்பட்டசர்க்கார் உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் டிபன்ஸ் நடத்துவது:—யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தரானவர் க்ரிமினல் தரப்பில் பிராஸ்கியூஷன் செய்யப்படும்போது டிபன்ஸ் செய்துகொள்ள ஏற்பாடு தானேசெய்து கொள்ள வேண்டியது. இதுவிஷயமாய் யோசிக்கவேண்டிய விஷயங்களெல்லாம் கூடி என்னவென்றால், டிபன்ஸ் செலவை தானாகவே கொடுத்துக்கொள்ள வேண்டியதா அல்லது கெவர்ண்மெண்டார் கொடுக்கவேண்டியதா என்பதுதான். இந்த அம்சமானது கேஸ் விசாரணையான மேல்தான் தீர்மானிக்கக்கூடியதாயிருக்கிறது. ஆகையால் பிராஸிகியூஷன் செய்யப்பட்ட உத்தியோகஸ்தரானவர் ஒருவக்கீலை நேமிக்கும்படி டிஸ்டிரிக்ட்மாஜிஸ்டிரேட்டை கோரிக்கொள்ளவேண்டியது; அது வியக்தமாய் சொந்த சங்கதியைப்பற்றியதாயிருந்தாலொழிய அல்லது வக்கீல் ஒத்தாசை தேவையிராத அதிக சாதாரணமான கேஸாயிருந்தாலொழிய டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேடானவர், வக்கீல் பீஸ்கொடுக்கும் விஷயமாய் மறு உத்திரவுக்குட்பட்டு, கோரிக்கை பிரகாம் வக்கீலை நியமிக்கவேண்டியது.

146. கெவர்ண்மெண்ட்டு ப்ளீடர்:—யாதொரு வியாச்சியத்தை நடத்துவதில், அப்பேர்ப்பட்ட வியாச்சியமானது கெவர்ண்மெண்டு பக்ஷமாய் தீர்ப்பானாலும் வேறேவிதமாய் தீர்ப்பானாலும் சட்டப்பிரகாரம் சேரவேண்டிய பூரா பீஸும் சென்னைப்பட்டணத்திலிருக்கிற கெவர்ண்மெண்டு ப்ளீடர் பெற்றுக்கொள்ள பாத்தியஸ்தர். வியாச்சியத்தின் முடிவுவரையில் தாமதிக்காமல் அவசியமானால் வியாச்சியம் வழக்காடப்படுவதற்கு முன்னமே பீஸ் கொடுக்கப்படலாம்; வெளிஜில்லாக்களிலிருக்கிற கெவர்ண்மெண்டு வக்கீல்கள் விஷயத்தில், கெவர்ண்மெண்டு பட்சம் தீர்ப்பாகிற கேஸ்களில் பூரா பீஸும் கொடுக்கப்படும். கெவர்ண்மெண்டார் விஷயமாய் சில்லறை காரியங்கள் கோர்ட்டில் ஷை கெவர்ண்மெண்டு வக்கீலால் செய்யப்படுவதற்கு பிரத்தியேகமாய் பீஸ் கொடுக்கப்படமாட்டாது. ஏனென்றால் அவர்களுக்கு பீஸ் தவிர மாதத்தில் சம்பளம் * அடியிற் கண்ட விதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கெவர்ண்மெண்டாருக்கு விரோதமாய் தீர்ப்பாகிற விஷயங்களில் எப்போதும் பாதி பீஸ் கொடுக்கப்படும்; ஏதோ சில அபூர்வமான விஷயங்களில் கலெக்டரால் சிபார்சு செய்யப்படுவதின்பேரில் அந்த சிபார்சுபடி பைசல் செய்யப்படும்.

* திருநெல்வேலி மதுரை மலையாளம் தஞ்சாவூர் பல்லாரி கோதாவரி சேலம் சித்தூர்	ஸ்ரீ 1க்கு 50	தென்கன்னடம் கெஞ்சம் கடப்பை தென்னார்க்காடு விசாகப்பட்டணம் திருச்சினாப்பள்ளி நெல்லூர் கோயம்புத்தூர்	ஸ்ரீ 1க்கு 30
கர்நூல் செங்கல்பட்டு நீலகிரி கிருஷ்ணா அநந்தபூர்	ஸ்ரீ 1க்கு 25		

147. காம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரகாரம் செய்யப்பட்ட வியாச்சியம்:—கரம்பு நிலங்களுக்குச் சொல்லிக்கொள்ளப்படும் பாத்தியதைகளை தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல்கோர்ட்டுகளில் தாக்கல்செய்யப்பட்டதாவாக்களை சர்க்கார்செலவில்எதிர்த்து வழக்காடும் பொருட்டு அனுமதி பெற்றுக்கொள்ளுவதற்காக கிரமப்படி விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டிய அவசிய மில்லை; ஏனென்றால் 1863 ஷுத்திய 10-வது பிரிவின் பிரகாரம் (கரம்பு நில) பாத்தியதைகளை கலெக்டரும் போர்டாரும் அங்கீகரிக்காமற்போய் அவைகளை ஸ்தா

பித்துக்கொள்ளும்பொருட்டு மேலே பிரஸ்தாபித்த கோர்ட்டுகளில் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களிலெல்லாம் பாத்தியதையைச் சொல்லிக்கொள்கிறவன் வாதியாயும், ஜில்லா கலெக்டர் அல்லது கலெக்டருக்குப்பதிலாய் வேலைபார்க்கிற இதரஉத்தியோகஸ்தர் கெவர்ண்மெண்டுக்குபதிலாய் பிரதிவாதியாக ஆஜாரகவேண்டியதென்று கண்டிப்பான நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகிலும் அப்பேர்ப்பட்ட வியாச்சியங்கள் தாக்கல் செய்யப்பட்டதைப்பற்றி கெவர்ண்மெண்டாருக்கு தெரிவிக்க வேண்டியது.

148. ஆக்ஷேபகரமான தீர்ப்புகள்:—பொதுவாய் முக்கியமான விஷயங்கள் டிஸ்டிரிக்ட் கோர்டாரால் தீர்மானம் செய்யப்பட்டு அந்த தீர்மானத்திற்கு விரோதமாய் தகரார்செய்ய நியாயமிருப்பதாய் கலெகக்டர் அபிப்பிராயப்பட்டு அது சங்கதியைப்பற்றி உடனே போர்டாருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டிய தவசியமானால் அப்பேர்ப்பட்ட தீர்ப்பானது தப்பிதமுள்ளதாயிருக்கும்பட்சத்தில் உடனே அந்தத்தப்பிதத்தை இத்துபாடு செய்யும்பொருட்டும் அது விஷயமாய்சட்டத்தை கிரமமான அதிகாரிகளால் ஒரேதடவையாக நிர்ணயிக்கும்பொருட்டும் அந்ததீர்ப்பை மேலான கோர்ட்டாரிட நோட்டீஸுக்குக் கொண்டுவரலாம்.

149. கெவர்ண்மெண்டு வக்கீல்கள்:—வியாச்சியத்தில் கெவர்ண்மெண்டார் பட்சமாக நியமிக்கப்படும் வக்கீல்களுக்குச் சேரவேண்டிய பீஸ்துகையை டிக்ரிசெய்யப்பட்டபிற்பாடு கொடுக்கவேண்டியது; சட்டப்பிரகாரம் கொடுக்கவேண்டிய பீஸ்துகையானது 5ரூபாய்க்கு உட்பட்டிருந்து யாதொருவக்கீல் நடத்தினவேலைக்கு அந்தத்துகையானது போதாதென்று கலெக்டர் தாத்பரியப்பட்டால் 5 ரூபாய்க்கு மேற்படாமல் பீஸ்கொடுக்கும்படி உத்திரவு செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. 146 நெ. ஸ்டாண்டிங்கு ஆர்டரில் கண்ட மாதசம்பளபீஸ் முனிஸீப்கோர்ட்டுகளில் கெவர்ண்மெண்டு பட்சமாய் நியமிக்கப்படுகிற வக்கீல்களுக்குச் சம்பந்தப்படா. அவர்களுக்கு பீஸ் கொடுக்கும் விஷயமாய் பிரத்தியேகமான ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டியது; ஆனால் சட்டப்பிரகாரம் கொடுக்கவேண்டிய பீஸுக்குமேற்படவும் கூடாது. சில்லறை கேஸ்களில் கெவர்ண்மெண்டு பட்சமாய் ஆஜராகிறவர்களுக்கு அதமபட்சம் பீஸ் 2 ரூபாய்; ஸ்டாம்பு ஆக்டை அனுஸரித்து 47–வது ஸ்டாண்டிங்கு ஆர்டர்பிரகாரம் பிராஸிகியூஷன் செய்யும்பொருட்டு நேமிக்கப்படும் வக்கீல்களுக்கு 10 ரூபாய்க்கு மேற்பட்டு பீஸ் கொடுக்கக்கூடாது.

150. கெவர்ண்மெண்டுக்கு விரோதமாய் தாக்கல் செய்யப்பட்ட வியாச்சியங்களுக்கு சம்பந்தப்பட்ட ரிகார்டுகள் ஈரங்கிதேதிக்கு கொஞ்

சநாள் முன்னடியாகத்தான் போர்டாருக்கு அனுப்பப்படுகின்றன. அத ஞல் ஈரங்கி தேதி ஒத்திவைக்கும்படி அடிக்கடி கேட்கும்படி நேரிடுகிறது; இவ்விதமாக போர்டாருக்குமெத்த அசௌகரியம் நேரிடுகிறதும் தவிர அதிக சிக்குகளுள்ள கேஸ்களில் செம்மையாய் ஆலோசனைசெய்ய போது மானஸாவுகாசமு மில்லாமற்போகிறது. உத்திரவுகளையும் தந்தி மூலமாய் அ னுப்பும்படி நேரிடுகிறது ; அப்படி அனுப்புவதால் அதிக செலவு நேரிடுவது மல்லாமல் தப்பர்த்தம்செய்ய இடம் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது. வியாச்சியங்கள் விஷயமாய் சம்பந்தப்பட்ட எல்லா வேலையையும் கலெக் டர்கள் தங்களாபீஸில் சீக்கிரமாய் செய்யும்படிக்கும் அவசியமான விசார ணைசெய்து ரிபோர்ட்டு செய்வதில் யாதொரு தாமதமும் நேரிடாமல் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளும் பொருட்டும் கலெக்டர்களைக் கோரிக் கொள்ளப்படுகிறது.

2. யாதொரு வியாச்சியத்தில் கெவர்ண்மெண்டார் ஒரு பார்ட்டியா யிருந்து அவர்களுக்கு விரோதமாய்தீர்ப்பு செய்யப்பட்டால் கெவர்ண்மெ ண்டு ப்ளீடர் முன்னடி கலெக்டருடன் ஆலோசிக்காமலே அந்த ஜட்ஜ்மெ ண்டுக்கும் தீர்ப்புக்கும் நகல் வாங்கவேண்டியது. நகல்வாங்கின மேல் அப் பீல்செய்வது யுக்தமா என்று தம்மிட அபிப்ராயத்துடன் நகலை கலெக்ட ருக்கு அனுப்பவேண்டியது. தேவையான நகலை சீக்கிரத்தில் வாங்கவே ண்டிய விஷயத்திலும், அப்பீல்செய்வது யுக்தமாயில்லையா என்பதைப்பற்றி கலெக்டருக்கு தெரியப்படுத்துவதிலும், தாமதிக்காமலிருக்கவேண்டிய அவசியத்தை கெவர்ண்மெண்ட் ப்ளீடர்களுக்குவற்புறுத்தித் தெரிவிக்கவே ண்டியது.

XII. (12) - ம் அதிகாரம்.

ரெவினியூ கோர்ட்கள் (ரெவினியூ விவகாரங்களைவிசாரணைசெய்யும் நியாயஸ்தலங்கள்).

175. 1816.ம் ௵த்திய 12-வது சீர்திருந்தச் சட்டம்:—இந்தியாவில் பிரிட்டிஷ் கெவர்ண்மெண்டாருக் குட்பட்ட நிலங்களை அனுபோகித்து வருகிற ஐரோப்பியரானவர்கள், நிலத்தை இன்னவிதமாய் அனுபவிப்பதற்காக செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளைசீர்திருத்துவதற்காகவும் அந்த நிபந்தனைகளைப்பற்றி ஏதாவது தகரார் உண்டாகும் பட்சத்தில் அவைகளைத் தீர்ப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டு தற்காலம் ஊர்ஜிதத்திலிருந்துகொண்டு வருகிற சட்டங்களுக்கெல்லாம் உட்பட்டவர்கள் (வகை சொல்லவேண்டியவர்கள்); ஆகையினாலே ஐரோப்பியர்களுக்குள்ளாவது அல்லது ஒரு ஐரோப்பியனுக்கும்ஒருசுதேசிக்கும் தகரார்கள் உண்டாகும்பட்சத்தில் அது விஷயமாய் 1816–வது வருஷத்திய 12-வது சீர்திருத்தச் சட்டத்தை அனுஸரித்து நடவடிக்கைகள் நடத்தக் கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படி நடவடிக்கை நடத்துவதில் நியமிக்கப்படவேண்டிய பஞ்சாயத்தார்கள் எல்லாருமாவது சிலராவது ஐரோப்பியர்களாயிருக்கலாம்.

176. * 1822-வது ௵த்திய 9-வது சீர்திருந்தச் சட்டம்:—1822 வது ௵த்திய 9–வது சீர்திருத்தசட்டத்தையும் அதற்கு உபசட்டங்களாக ஏற்படுத்தப்பட்ட 1828 ௵த்திய 7-வது சீர்திருத்தச்சட்டத்தையும் 1837 ௵த்திய 36–வது சட்டத்தையும் அனுசரித்து கலெக்டர்களிட அதிகாரத்துக் குட்பட்டவர்கள் இன்னின்னாரெனறு அந்தசட்டங்களில் விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், ஜப்திசெய்யப்பட்ட பூஸ்திதிகளை மேல்விசாரணை செய்துவரும் பொருட்டு நியமிக்கப்பட்டவர்களும் சுரோத்திரிய கிராமங்களிலுள்ள கிராமநவுக்கர்களும் மேல்கண்ட சட்டப்பிரகாரம் தண்டனைக் குட்பட்டவர்கள. சொந்த இலாகாக்களிலுள்ள பயிரிடும் குடியானவர்களால் அந்த இலாகாக்களினுடைய சொந்தக்காரனிட ஏஜெண்டுக்கு விரோதாய் செய்யப்படும் பிரியாதுகளை மேற்கண்ட சட்டத்தை அனுசரித்து பைசல்செய்யக்கூடாது. எவர்களையாவது

---

* இரண்டாவது பாகம் 1வது பக்கத்தில் பார்க்க

விசாரணைசெய்வதற்கு முன்பாகவே அவர்கள் உத்தியோகத்தை விட்டுவிட்டார்கள்என்ற காரணமானது அவர்கள் கலெக்டர் விசாரணைக்குட்பட்டவர்கள் என்பதை பாதிக்காது.

2. எந்தசர்க்கார் உத்தியோகஸ்தர்களானவர்கள் 1822 வருஷத்திய 9-வது சீர்திருத்தச்சட்டத்தின் 2-வது செக்ஷனில் 2-வது வாக்கியத்தில் விபரித்துச்சொல்லப்பட்ட வகுப்புகளில்வியக்தமாய் சேர்ந்திருக்கிற யாது குற்றங்களைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டு அப்படி குற்றம்சாட்டப்பட்ட தற்க்கு ஆதாரமாய் நியாயமாயும் பிரத்தியட்சபிரமாணமாயுமான சாக்ஷியம் இருந்து, மேலும் குற்றவாளியென்று தீர்மானம் செய்வதுடனே கடுமையான சிட்சையடைய வேண்டிய அவ்வளவு ப்ரமாதமானதாய் இருக்கும் பட்சத்தில் கலெக்டரானவர் இந்த சட்டத்தினுல் தமக்குகொடுக்கப்பட்ட அதிகாரங்களை உபயோகிக்கவேண்டியதானது பிரத்தியக்ஷமாய் யுக்தமாகயிருக்கிறது. எல்லாருக்கும் தெரியும்படியாய் ஒருவனை சிட்சை செய்கிறதினுல், யாவருக்கும் தெரியாமல் கெட்டசெய்கைகளை நடத்தி வருவதில் மிகவும் சக்திவந்தர்களாகிய ஜனங்கள் செய்யும் உத்தியோக துரோகங்களையும் மோசங்களையும் செய்ய வொட்டாமல் தடுக்கக்கூடும்; ஆனுல் யாதொரு குற்றமானது ருஜூவாகும் பட்சத்தில் பிரமாதமான சிட்சை செய்யவேண்டியதவசியமாயிராத அற்பவிஷயங்களில் இந்த சட்டத்தையனுசரித்து கிரமப்படி விசாரணைசெய்ய எத்தனிப்பது அனுவசியமாயும் அயுக்தமாயுமிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சமயங்களில் கலெக்டரானவர் தாம் ரெவினியூ சிப்பந்திகளுக்கு மேலதிகாரியென்கிறமுறைமையில் தமக்குள்ள பொது அதிகாரத்தை யனுசரித்து விதிக்கக்கூடிய சிட்சைகளை மாத்திரமே விதித்து வரவேண்டியதானது யுக்தமாய் இருக்கும்; கிராமநவுக்கர்களால் செய்யப்படுகிற அற்பமோசவிஷயங்களை இவ்விதமாய் பைசல் செய்யவேண்டியது.

3. கலெக்டரானவர்கள் 1822 வருஷத்திய 9-வது சீர்திருத்தச்சட்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்தும்போது ஜூடிஷல் (அதாவது நியாயஸ்தலத்தில் செய்யவேண்டிய) வேலைகளை செய்து வருவதாக பாவித்துக்கொள்ளவேண்டியது. அந்த சட்டமானது அதிகமாய் சிட்சை விதிக்கக்கூடிய சுபாவமுள்ளதாகவே யிருக்கிறது; ஆகையால் கலெக்டர்கள் விசாரணைசெய்யஅதிகாரம் கொடுக்கப்பட்டுசெய்துவரும் விசாரணைகளானவை நியாயஸ்தலத்தில் விசாரணைசெய்யும் மாதிரியாகவே கிரமமாய் விசாரணை நடத்தி அவைகளை ரிகார்டிலும் எழுதவேண்டியது; அப்படி செய்வதால்போர்டாரும் கெவர்ன்மெண்டாரும் தங்களுக்குமுன்பாக அந்த கேஸானது வரும்போது அவைகளை ரிவிஷன் (அதாவது ரத்துசெய்வது மாற்றுவது முதலியன) செய்ய சௌகரியமாயிருக்கும்.

4. சாட்டியிருக்கப்பட்ட குற்றங்கள் இன்னின்னவையென்றும் குற்றவாளியானவன் சொல்லிக்கொள்ளும் குறைப்பாட்டையும் ஸ்பஷ்டமாய் எழுதவேண்டியது. மேலும் சாட்சியங்களைப் பூராவும் எழுதவேண்டியது. குற்றம்சாட்டியிருப்பதற்காதாரமான சாக்ஷிகளையும் குற்றவாளியின் பட்சத்து சாக்ஷிகளையும் எப்போதும் குற்றவாளியின் முன்பாகவே விசாரணை செய்யவேண்டியது, மேலும் அந்த சாக்ஷிகளை மாறுஸவால் செய்யும்பொருட்டு குற்றவாளிக்கு இடமும் கொடுக்க வேண்டியது. சாக்ஷியத்தில் ஆஜர் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளையெல்லாம் குற்றவாளியானவன் பார்வையிடும் பொருட்டு அவனுக்குக் காண்பித்து அதின்பேரில் அவன் சொல்லும் ஷராக்களையும் ரிகார்ட்டில் எழுதவேண்டியது. ஒரு குற்றவாளியின்பேரில் என்னென்ன குற்றம் சாட்டவேண்டியதென்று நிர்ணயித்துக் கொள்ளும்பொருட்டு கலெக்டர்கள் குற்றவாளி இல்லாமலிருக்கும்போது அவனுக்குத்தெரியாமலும் சாக்ஷியம் எடுத்துக்கொள்ளலாம். ஆனல் அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட யாதொரு சாக்ஷியத்தை குற்றவாளிக்கு விரோதமாய் உபயோகிக்குமுன்பாக அந்த சாக்ஷியத்தையும் அதினுல்ஸ்தாபிக்கப்பட்ட குற்றங்களையும் கண்டெழுதி அவனுக்கு காண்பித்து அவன்முன்பாக மறுபடியும் அன்வயித்துச் சொல்லவேண்டியது; தவிரவும் அந்த சாக்ஷியத்தை உறுதிப்படுத்தின சாக்ஷிகளை மாறுஸவால் செய்ய அவனுக்கு அனுமதி கொடுக்கவேண்டியது. அதற்குமேல் அவன்பேரிலிருக்கிற குற்றங்களுக்கு ஜவாப்பு செய்யும்படியாயும் தன்னிட ஜவாப்புகளுக்காதாரமான சாக்ஷியத்தை ஆஜர்படுத்தும்படியாயும் அவனுக்குத்திரவு செய்யவேண்டியது. அவனிட சாக்ஷிகளை ஆஜர்ப்படுத்த அவனுக்கு அசாத்தியமாயிருக்குமாகில் கலெக்டரானவர் சென்னை கெவர்ண்மெண்டாரிட 1869 ௵ த்திய 3-வது சட்டத்தின்பிரகாரம் ஸம்மனனுப்பி அந்த சாக்ஷிகளை ஆஜராகும்படி கட்டாயப்படுத்த வேண்டியது. (2-வது பாகம் 15-வது பக்கத்தில் பார்க்க.)

5. யாதாவதொரு கேஸில் தீர்மானம் செய்வதில் கலெக்டரானவர் பலகுற்றங்களைப்பற்றின சாக்ஷியங்களை சுருக்கமாய் எடுத்துக்காட்டி ஒவ்வொரு குற்றத்தையும் குற்றவாளியானவன் செய்ததாக ஏற்பட்டதா அல்லது செய்யவில்லை என்று ஏற்பட்டதா வென்று விய்க்தமான ஒரு தீர்ப்பையும் அந்த தீர்ப்புக்காதாரமாய் சுருக்கமான ஸ்டேட்மெண்டையும் ரிகார்டில் இங்கிலீஷில் எழுதவேண்டியது. இந்த சட்டத்தின் 5-வது செக்ஷன் பிரகாரமாவது அல்லது 6-வது செக்ஷன் பிரகாரமாவது யாதொருவன் பேரில் தீர்ப்பு சொல்லப்பட்ட பிரதி விஷயத்திலும் தீர்ப்பு செய்கிற உத்தியோகஸ்தரானவர் அப்பீல் செய்து கொள்வதற்கு வாய்தா இத்தனை

நாளென்று அவனுக்குநேராய்த் தெரிவித்துஅப்பீல் வாயிதா எந்த தேதியில் கடந்து விடுமோ அந்த தேதியை அவனுக்கு கொடுக்கப்படும் தீர்ப்பு நக லில் குறித்தெழுதவேண்டியது. நடவடிக்கைகள் முடிந்தவுடனே அப்பேர் ப்பட்ட நகலை யாதொரு செலவில்லாமலும் பிரதிவாதிக்குக் கொடுக்கவே ண்டியது.

6. தண்டனை விதிப்பதற்குரிய அதிகாரசம்மந்தமாய் 2-வது செக் ஷனில் 2-வது வாக்கியத்தில் சொல்லப்பட்ட 1, 2, 3 வகுப்புகளைச் சேர்ந்த குற்றங்களுக்கும் 2-வது வாக்கியத்தில் 4-வது வகுப்பிலும் 5-வது வகுப்பிலும் சொல்லப்பட்ட குற்றங்களுக்குமுள்ள வித்தியாச மானது வியக்தமாய் விவரிக்கப்பட்டு சட்டமுழுவதிலும் வித்தியாசி த்தே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்பதை கவனிக்க வேண்டியது; அதுபோலவே மேற்கண்ட இரண்டுவிஷயங்களில் ஒவ்வொரு விஷ யத்திலும் விதிக்கவேண்டிய தண்டனைக்கும் குற்றவாளி என்று தீர்க்கப் பட்டபிற்பாடு செய்யவேண்டிய நடக்கைக்கும் வித்தியாசமாய் எடுத்து விவரித்திருக்கிறது. 1, 2, 3–வது வகுப்புகளில் கண்டகுற்றங்களை செய்ததாக குற்றவாளிஎன்று ஏற்பட்டவர்களை குற்றவாளிகள் பலான துகை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புசெய்யக்கூடும் 5-வது செக்ஷன் முதலாவது வாக்கியத்தைப்பார்க்க). அப்பேர்ப்பட்ட துகைக்காக செய்யப் படும் தீர்ப்பு நிறைவேறுகிறவரையில் குற்றவாளியை 5-வது செக்ஷன் 2-வது வாக்கியத்தை அனுஸரித்து முதலில் கலெக்டர் கச்சேரியிலும் பின்னிட்டு அவசியமானல் ஜில்லாஜெயிலிலும் காவலில் வைக்கவேண்டி யிருக்கிறது; அதாவது பணம்செலுத்தத்தவறினுல் பணத்தை வசூல்செ ய்ய தீர்ப்பை பிறப்பித்து அதை 5–வது செக்ஷன் 3-வது வாக்கியத்தில் கண்ட பிரகாரம் நிறைவேற்ற வேண்டியது. யாதொரு சொத்தாவது அல் லது போதுமான சொத்தாவது தென்படாமற் போகும்பட்சத்தில் 13-வது செக்ஷன் 2-வது வாக்கியப்பிரகாரம் கலெக்டரானவர் ஜில்லா கோர்ட்டுக்கு அனுப்பி கடைசியில் சொல்லப்பட்ட (அதாவது 13-வது) செக்ஷனில் கண்டபிரகாரம் நடவடிக்கை நடத்தவேண்டியது. 2-வது செக்ஷனில் 1, 2, 3-வது வகுப்புகளில் விவரித்த குற்றங்களை செய்ததாக ஏற்பட்டவர் களை நடத்தும் விதமானது சாதாரண ரெவினியூ பாக்கிதார்களை என்ன விதமாய் நடத்தவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறதோ அந்த விதத்திற் கொப்பானதாயிருக்கிறது; அவர்களிட சாப்பாட்டுக்காக பிடிக்கும்செல வை "நிலத்தீர்வை" என்ற ஹெட்டில் "பாக்கிதாரர்களுக்குச் சாப்பாட் டுக்காக பிடித்த பணம்" என்ற உள்பாபத்தில் தாக்கல் செய்யவேண்டியது; இரண்டாவது செக்ஷன் 4, 5-வது வகுப்புகளில் கண்ட குற்றங்களை செய்த

தாக ஏற்பட்டவர்கள் விஷயமானது வேறுவிதமானது. 5-வது செக்ஷன் 4-வது வாக்கியப்பிரகாரம் கலெக்டரானவர் குறிப்பிட்டதுகைக்கு மேற்படாமல் அபராதம் போடவேண்டியதாயிருக்கிறது; மேலும் அபராதம் செலுத்தத்தவறினல் 12 மாதத்திற்கு மேற்படாமலாவது அல்லது அபராதம் செலுத்தும் வரையிலாவது காவலில் வைக்கவேண்டியதாயிருக்கிறது; இந்தவிஷயங்களில் அபராதத்தை வசூல் செய்வதற்காக யாதொரு உத்திரவும் பிறப்பிக்கவேண்டிய அவசியமில்லை; அபராதத்தை செலுத்தவேண்டியதானது குற்றவாளியின் பொறுப்பாயிருக்கிறது; அபராதம் செலுத்தத் தவறினல் தீர்ப்பு செய்யப்பட்டவுடனே காவலில் வைக்கவேண்டியதாயிருக்கிறது; ஆகையால் அம்மாதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் க்ரிமினல் (அதாவது பினல்கோட்டில் கண்ட குற்றங்களைச் செய்தவர்களாய்) குற்றஞ் சாட்டப்பட்டவர்களை ஒத்தவர்களாகையால் அவர்கள்விஷயமாய் அம்மாதிரியாகவே விசாரணை தண்டனை முதலானவைகள் செய்யவேண்டியது: (இந்த சட்டத்தில் கண்ட குற்றங்களைச் செய்த குற்றவாளிகளாகிய) அவர்கள் ஒருமாசத்திற்கு குறைவுபட்டு காவல்சிக்ஷைவிதிக்கப்பட்டால், அதேகாலம் காவல் சிக்ஷைவிதிக்கப்பட்ட மற்ற குற்றவாளிகளிகளுக்கு தற்காலத்திய ஜெயில் சட்டங்களை அனுஸரித்து எவ்விதமான ஜெயில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்த ஜெயில்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். ஒருமாதகாலத்திற்குமேற்பட்ட காவல் சிக்ஷைவிதிக்கப்பட்டால் அவர்கள் போலீஸ்தார் வசம் ஜில்லா ஜெயிலுக்கு அனுப்பப்படுவார்கள், அவர்களிட சாப்பாட்டுசெல்வை "19, லா அன்டுஜெஸ்டிஸ்" (அதாவது சட்டம் நியாயம் விஷயமாய் செலவான துகைகளை தாக்கல் செய்யவேண்டிய ஹேட்) என்ற ஹேட்டில் செலவெழுதப்படும். ஆகிலும் குற்றவாளியானவன் தப்பித்துக்கொண்டு ஓடிப்போகாமலும் அவ்விதமாய் நியாயம் தவருமலும் இருக்கும் பொருட்டு தக்க முன் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளப்படும் பட்சத்தில், மாஜிஸ்டிரேட்டுகள் குற்றவாளிகளிகளுக்கு விதித்த அபராதத் துகையை சேகரித்து செலுத்தும் பொருட்டு தங்களிட யுக்தானுஸாரம் அவர்களுக்கு (குற்றவாளிகளுக்கு) கிரமமான ஸாவுகாஸம் கொடுக்கிற மாதிரியாகக் கலெக்டர்களும் அப்பேர்ப்பட்ட ஸாவுகாசம் ஏன் கொடுக்கக்கூடாதென்பதற்கு காரணம் தென்படயில்லை. பெரும்பாலும் அபராதமானது வசூலாய்விடும்.

7. கலெக்டரிட தீர்ப்புக்கு விரோதமாய் அப்பீல் பிடீஷன் கொடுக்கப்பட்டால் அந்த பீடீஷன் தம்மிடம் சேர்ந்த 3 வாரத்திற்குள்ளாக அதையும் அந்த கேஸில் சம்பந்தப்பட்ட அஸல் ரிகார்ட்களையும் கலெக்டர்கள் போர்டாருக்கு அனுப்பவேண்டியது. தவிரவும் அப்பீல் விண்ணப்பத்தில் கண்ட சங்கதிகளைப்பற்றி சொல்லவேண்டிய குறிப்புகளைக் கண்டு ஒரு கடித

த்தையும் கூட அனுப்பவேண்டியது; 1828 ஞூ௵த்திய 7-வது சீர்திருத்த சட்டத்தில் அப்பீல் வாயிதா 3 மாதம் என்று குறித்திருந்த போதிலும் அப்பீல் செய்ய தாமஸித்ததற்கு தக்கநியாயமானகாரணத்தைச் சொல்லும் பட்சத்தில் அந்த 3 மாதத்திற்கு பின்னிட்டும் கூட அப்பீலை ஏற்றுக்கொள்ள போர்டாருக்கு அதிகாரமுண்டு. சாதாரண கோர்ட்டுகளில் தாவாசெய்து கொள்ளும்படி போர்டார் அப்பீல்தாரனுக்கு தெரிவிக்கும்பட்சத்தில் அப்பீல்தாரனானவன் போர்டாரிட உத்திரவுபெற்ற தேதிமுதல் 3 மாதங்களுக்குள்ளாக அந்தக்கோர்ட்டுகளில் அப்பீல்செய்து கொள்ளவேண்டியது.

8. கலெக்டர்களுக்கு கீழ்பட்ட உத்தியோகஸ்தர்கள் இந்த சட்டப்பிரகாரம் செய்யும் தீர்ப்புக்கு விரோதமாய் கலெக்டர்களுக்கு அப்பீல்செய்யும் பட்சத்தில், 1831 ஞூ௵த்திய 6-வது சீர்திருத்தசட்டத்தை* அனுஸரித்து அப்பீல்செய்யப்பட்ட விஷயத்தில் என்ன நடவடிக்கையை நடத்தவேண்டுமோ அதேமாதிரி நடவடிக்கையை நடத்தவேண்டியது.

9. அப்பீல்கொடுக்கப்பட்ட விஷயங்களிலெல்லாம், 15-வது செக்ஷன் 6-வது வாக்கியத்தில் சொத்தை ஏலம்போடும் பொருட்டும் ஜாமீன் பேரில் குற்றவாளிகளை விடுதலை செய்யும்பொருட்டும் கண்டநியமங்களை கவனிக்கவேண்டியது. இந்தசட்டத்தையனுஸரித்து செய்யப்படும் தீர்ப்புகளை நிறைவேற்றும்படி தீவிரமாய்க் கட்டாயப்படுத்தக்கூடாது; முக்கியமாய் சொத்தை ஏலம்போடும்விஷயத்தில் தீவிரமாய் கட்டாயப்படுத்தக்கூடாது. சொத்தை முதலில் வசப்படுத்திக்கொண்டால் பின்னிட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் மெத்த சவுகரியமுள்ள எந்த சமயத்திலாவது ஏலம்போடக்கூடும்.

10. இந்த சட்டத்தின் 7, 8, 9, 13.வது செக்ஷன்கள் பிரகாரம் கலெக்டர்களுக்கு வகித்திருக்கப்பட்ட அதிகாரங்களை கலெக்டர்கள் சாந்தமாயும் தயையுடனேயும் செலுத்தவேண்டியது யுக்தமாயிருக்கிறது; முக்கியமாய் சுதேசபெரிய உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவ்விதமாய்செலுத்தவேண்டியது. 9-வது செக்ஷன் பிரகாரம் தஸ்தாவேஜுவகைருக்களைத் தேடி எடுக்கும்பொருட்டு யாதாவதொருவனுக்குச் சொந்தமான வீட்டைப் பரிசோதனை செய்யவேண்டியதவசியம் என்று ஏற்படும் போதெல்லாம் அந்த செக்ஷனில் கண்ட மாதிரி வாரெண்டை இன்னவிதமாக நிறைவேற்றவேண்டியதென்று அந்த வாரெண்டில் கண்டெழுதவேண்டியவிஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. அந்த செக்ஷனில் பிரஸ்தாபிக்கப்படலான கையொப்பமிட்ட ஜாப்தாக்களை தயார்

---

* இரண்டாவது பாகம் 39-வது பக்கத்தைப்பார்க்க.

செய்யதப்பிப்போகும் பக்ஷத்தில் கலெக்டர்கள் நடத்தின நடவடிக்கைக ளெல்லாம் ரத்து செய்யப்படத் தக்கவைகளாய்ப்போய் தாங்களும் அதிக உத்திரவாதத்துக்குட்படுவோர்களென்று கலெக்டர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

11. யாதொருசர்க்கார் உத்தியோகஸ்தனிடவசத்தில் வாஸ்தவமாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட பணமானது நம்பிக்கை துரோகமாக துர்வினியோ கப்படுத்தப்பட்டு யிருந்தாலாவது அல்லது உத்திரவுசெய்யப்பட்டபோது ஆஜர்ப்படுத்தப்படாமலாவது போய் அப்படி துர்வினியோகப்படுத்தப்பட்ட பணம் இவ்வளவென்று கச்சேரியிலுள்ள சர்க்கார் கணக்குகளைக்கொண்டு வியக்தமாய்த்தெரிந்துகொண்ட விஷயங்களில் சட்டத்தின் 6-வது செக் ஷன் பிரகாரம் அப்படி அபகரிக்கப்பட்ட துகையை சர்க்கார் தீர்வை பாக்கி யை எவ்விதமாய் வசூல் செய்யவேண்டியதோ அதேமாதிரிவசூல் செய்ய கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அப்படி அபகரித்த குற்றவிஷயமான சாக்ஷியத்தை கிரமமாகவும் நியாயமாகவும் விசாரணை செய்யாமல் அந்தக்குற்றத்திற்கு தண்டனையாக அபராதம் விதிக்கக் கலெக்டர்களுக்கு அதிகாரமில்லை.

12. தீர்ப்பை இங்கிலீஷில் எழுதவேண்டிய விஷயமாயும் அல்லது அப்பீல் விண்ணப்பத்தில் கண்ட சங்கதிகளைப் பற்றி கவனிக்கவேண்டிய விஷயமாயும் மேலே சொல்லப்பட்ட உத்தரவுகள் பிரகாரம் நடக்க யா தொருகலெக்டராவது தப்பிப்போகும் பட்சத்தில் அந்த கேஸ்விஷயமாய் நடத்தின நடவடிக்கைகளை தித்துப்பாடு செய்யும் பொருட்டு திருப்பி அனுபப்பட்டும்.

13. இந்த சட்டத்தை அனுசரித்து கலெக்டர்களாலாவது அல்லது அவர்களுக்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தர்களாலாவது விசாரணைசெய்யப்ப ட்ட எல்லா கேஸ்களையும் கண்டு குறித்தபாரத்தில் மாசாந்தரம் ஒரு ஸ்டே ட்மெண்டு தயாரித்து அனுப்பவேண்டியது. அப்பேர்ப்பட்ட கேஸ்களில் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுவகையறுக்களை முன்னுடியாக போர்டாரிட அனுமதி பெற்றுக்கொண்டு தீர்ப்புசெய்தது முதல் 5 வருஷத்திற்கு பின் னிட்டு பரிகரித்துப் போடவேண்டியது.

177. 1828 ஸ்ரீலத்திய 7-வது சீர்திருத்தச்சட்டம்:—1828 ஸ்ரீலத் திய 7-வது சீர்திருத்தச்சட்டம் 4-வது செக்ஷன் 1-வது வாக்கியத்திலும் 4-வது வாக்கியத்திலும் 50 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கக்கூ டிய சொற்ப அபகரிப்பு கேஸுகளையெல்லாம் தாசில்தாரிட விசாரணைக்கு அனுப்ப கலெக்டருக்கு அதிகாரமுண்டு. ஆகிலும், இந்தசட்டத்தினல்

சாதாரணமாய் உத்திரவுமாத்திரம் கொடுக்கிறதேதவிர கட்டாயப்படுத்தயில்லை, அபகரிக்கப்பட்ட பணத்தின் துகை இவ்வளவென்பதை அனுஸரிக்காமல் அபகரித்த சந்தர்ப்பங்களையோசித்தே பலான கேஸானது பிரமாதமானதா என்று தெரிந்துகொண்டு அப்படி பிரமாதமானதாய் கிராம நவுக்கர்களின் பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களையெல்லாம் விசாரிக்கும்பொருட்டு டிவிஷனலாபீஸர்களுக்கு கலெக்டர்களனுப்பவேண்டியது.

2. 1828 ம் ஸூத்திய 7-வது சட்டத்தை யனுஸரித்து தங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தாலொழிய 1822 ம் ஸூத்திய 9-வது சட்டத்தை யனுஸரித்து தாசில்தார்கள் கிராமநவுக்கர்களால் செய்யப்பட்ட உத்தியோக துரோககேஸுகளை விசாரிக்கக்கூடாது.

178. 1831 ம் ஸூத்திய 6-வது சீர்திருத்தச் சட்டம்:—இந்தசட்டமானது ஜமீன்தாரி இலாகாக்களிலும் மற்றெங்குமுள்ள கிராமநவுக்கர்கள் எல்லாருக்கும் சம்பந்தப்பட்டது. ஆனால் ஸ்திரமான பைஸலாதி செய்யப்பட்ட இலாகாக்களிலுள்ள கிராம அக்கௌண்டண்டு அல்லது கர்ணம் விஷயத்தில் மாத்திரம் வேறுபிரத்தியேகமான சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சட்டமானது கிராம கம்மாளர்களிட பரம்பரையான தொழிலாளிகளுக்கு சம்பந்தப்பட்டதென்று மாஜி ஸுதர் அதாலத் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2. இந்த சீர்திருத்தச் சட்டமானது, பிரசித்திப்பெற்றதும் வெகுநாளாய் மாமூல் வழக்கத்தை அனுஸரித்ததுமான முன்காலத்திலிருந்த சட்டத்தை விவரித்து உறுதிபடுத்துகிறது; அந்த சட்டத்தில் கிராம நவுக்கர்களிட உத்தியோகங்கள் பரம்பரையானவைகளென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த சீர்திருத்த சட்டமானது பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே ஏற்பட்ட கிராம உத்தியோகங்களுக்கும் இந்த சட்டம் சம்மந்தப்பட்டதாகவே பாவிக்கப்படும். ஆகிலும், இந்த சட்டம் நிர்மாணிக்கப்பட்ட தேதிக்குமுன்னிட்டு நேமிக்கப்பட்டவர்களுக்கு இந்த சட்டமானது சம்பந்தப்பட்டதாக பாவிக்கக்கூடாது.

3. கிராம முனிசிப் உத்தியோகத்திற்கும் மணியகார் உத்தியோகத்திற்கும் தக்கமனிதர்களை நியமிக்கவேண்டிய விஷயத்தில் கலெக்டர்கள் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது பரம்பரை பாத்தியங்களும் கிராமத்தில் குடியிருப்பதும் நிலசம்பந்தமான சொத்திருப்பதுமே முனிசிப் உத்தியோகத்திற்கும் மணியகார் உத்தியோகத்திற்கும் முக்கியமான யோக்கிதைகள்; தவிரவும் கிராமத்தார்களிடத்தில் அப்பேர்ப்பட்டவர்களுக்கு செல்வாக்கிருப்பதும் மெத்த முக்கியமானயோக்கிதை,

4. வேலையில் அச்ரத்தையாயிருக்கும் குற்றத்துக்காவது அல்லது மோசகரமான நடவடிக்கைகளுக்காகவாவது கிராமநவுக்கர்களை அவர்களிட வேலையிலிருந்து ப்ரதர்ப் செய்ய இந்த சட்டப்பிரகாரம் கலெக்டர்களுக்கும் பலானதாலூகா அல்லது தாலூகாக்களின் சார்ஜிலுள்ள அவர்களிட டிவிஷனலாபீஸர்களுக்கும் அதிகாரமுண்டு; இந்த கிராம உத்தியோகங்கள் பரம்பரையானவைகளானபடியினாலேயும் கிராம நவுக்கர்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கிராமங்களில் கௌரவமுள்ளவர்களாக (அதாவது கிராமத்தார்களால் மரியாதை செய்யப்பட்டவர்களாக) இருக்க வேண்டியதானது அதிக யுக்தமாயிருக்கிறபடியினாலேயும் மெத்த திருப்திகரமான காரணங்களை முன்னிட்டுத் தவிர கிராமநவுக்கர்களை அவர்களிட வேலையிலிருந்து நீக்குவதானது அயுக்தமான காரியமாயிருக்கிறது.

5. கிராம ஊழியத்திற்காக ஏற்படுத்தியிருக்கப்பட்ட வருமானங்களை பலஜனங்களுக்கு பகிர்ந்து கொடுப்பதானது ஆக்ஷேபணைக்கு இடமுள்ளதாயிருக்கிறது. முன்னாடியாகவே அப்படி பலஜனங்களுக்குப் பகிர்ந்துகொடுத்திருக்கிற விஷயங்களிலெல்லாம் கிராம உத்தியோகத்தின் வேலைகளை கிரமமாய் நிறைவேற்ற அவசியமாய் எத்தனைபேர்கள் தேவையோ அத்தனை நபர்களுக்கு மாத்திரமே அந்த வருமானங்களை காலாகாலங்களில் சேர்ப்பித்துவிடவேண்டியது. வேலைபார்க்காமலிருக்கிற நபர்கள் கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட வருமானங்களை அனுபவித்துக் கொண்டுவரும்விஷயங்களில் அப்பேர்ப்பட்ட நபர்களில் யாதாவதொருவன் இறந்துபோகும்போதெல்லாம் அந்த வருமானங்களை வாஸ்தவமாய் வேலைபார்த்துவருகிற நபர்களுக்குச்சேர்ப்பிக்க வேண்டியது.

6. இந்த சீர்திருத்தச் சட்டத்தை யனுஸரித்து தாக்கல் செய்யப்பட்ட தாவாக்கள் (ஸூட்கெம்பர்கள் என்று வழக்கத்தில் சொல்லப்படுகிறது) விஷயமாய் கலெக்டர்கள் செலுத்தும் அதிகாரங்களானவை ஜூடிஷல் தன்மையுள்ள (அதாவது நியாயஸ்தலத்திற்கடுத்த) வைகள்; ஆகையால் கலெக்டர்களிட நடவடிக்கைகள் முறைமைப் பிரகாரமும் கிரமமாயும் செய்யப்பட்டவைகளாயிருக்கவேண்டியது. யாதொருகிராம உத்தியோகத்திற்குள்ள வருமானங்களை கொடுக்கவேண்டுமென்றாவது அல்லது கிராம உத்தியோகத்திற்கே வார்ஸ்தாரனாகவேண்டு மென்றாவது செய்யப்பட்டதாவா விண்ணப்பங்களைஎல்லாம் ஒருபைலாகக்கட்டிவைக்கவேண்டியது; சட்டத்தில் கண்ட நியமங்களை அனுஸரித்து அஸ்ஸெஸர்களால் தீர்க்கப்படும் பொருட்டு அனுப்பிய விஷயங்களில் தவிர தாவாக்கள்வரிசை கிரமமாய் விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படவேண்டியது. தீர்ப்பை இங்கிலீஷில் கிரமமாய் எழுதவேண்டியது. விசாரணைகளெல்லாம் முடிந்த பிற்பாடு தாவாக்

களின் கக்ஷிக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் யாதொரு செலவுமில்லாமல் அந்த தீர்ப்புக்கு ஒரு நகல் கொடுக்கவேண்டியது. இந்த சட்டத்தின் 4-வது செக்ஷன் 4-வது வாக்கியபிரகாரம் ஸம்மன் செய்யப்பட்ட சாக்ஷிகளை ஆஜராகும்படி (1869 ஞூ த்தியசென்னை 3-வது) சட்டத்தை யனுசரித்து கட்டாயப்படுத்தலாம்; இந்த (1869 ஞூ த்திய 3-வது) சட்டத்தை யனுஸரித்து பிறப்பிக்கப்படலான ஸம்மன்கள் பிரகாரம் ஆஜராகத் தவறும்பட்சத்தில் தவறுகிறவர்கள் பினல்கோடின் 172 முதல் 174 வரையிலுள்ள செக்ஷன்கள்பிரகாரம் அந்தந்த கேஸின் சுபாவத்துக்குத் தக்கபடி தண்டனைக்குள் * ளாகிறுர்கள்.

7. பலானகிராம உத்தியோகத்திற்கு யாதொரு நபரானவர் கிரமமாய் நியமிக்கப்பட்டிருந்து அந்தவேலையை அடையும் பொருட்டு வேறொருவர் செய்துகொள்ளப்படும் தாவாவானது இந்த சட்டப்பிரகாரம் எற்றுக்கொள்ளக் கூடியது (தள்ளிவிடத்தக்கதல்ல);

8. யாதொரு ஆஸாமியானவன் ஒருகிராம உத்தியோகத்தை 3 வருஷகாலம் அடுத்துப்பார்த்து வந்திருக்கும்பட்சத்தில் அவன் குறைந்த பாத்தியதையுள்ளவனென்ற காரணத்தினுல் அந்த ஆஸாமியை வேலையைவிட்டு நீக்கக்கூடாது. தவிரவும் (மூன்றுவருஷகாலம் ஒருவன் பார்த்துவந்தவேலை தனக்கு வேணுமென்று) விண்ணப்பம் செய்துகொள்ளுகிறவன் இப்போது வேலைபார்த்துவருகிறவன் நேமிக்கப்பட்டபோது மைனராக (அதாவது தக்க வயது வராதவனுக) இருந்தாலுங்கூட வேலைபார்த்துவரும் ஆஸாமியான்வன் குறைந்தபாத்தியதை யுள்ளவனென்று நீக்கப்படக்கூடாது. விண்ணப்பதாரனுனவன் காலிநேரிடும் வரையில் கார்த்திருந்து அதற்கப்புறம் நெம்பர் தாக்கல் செய்யக்கூடும். அம்மாதிரியாகவே (ஸர்வேயும் ஸெட்டில்மெண்டும் செய்யப்பட்ட பிறகு) கிராமசிப்பந்திகள் விஷயமாய் புது எற்பாட்டில் செய்யப்பட்ட நேமங்களைப்பற்றி மூன்றுவருஷத்திற்கப்புறம் ஆக்ஷேபிக்கக் கூடாது; ஆனுல் எதோசில (ஸ்பெஷல்) பிரத்தியேகமான விஷயங்களில், தாவாசெய்யதாம சப்பட்டதற்குத் தகுந்த முகாந்திரங்கள் சொல்லப் பட்டும் தாவாசொல்லிக் கொள்ளப்பட்ட சங்கதியானது முன்னுடி தீர்ப்பு செய்யப்பட்டதாகயிராமலு மிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தை மேலே பிரஸ்தாபித்த விதியிலிருந்து போர்டார் விலக்கலாம். புது எற்பாடு (ரிவிஷன்) சம்பந்தமான விஷயங்களில் மாத்திரமே மேற்கண்டமாதிரி விலக்குகள் செய்யக்கூடும்.

---

* ஆறுமாதம்வரையில் வெறுங்காவல், அல்லது 1000 ரூ வரையில் அபராதம், அல்லது இரண்டும்.

9. பலான வேலே காலியானவுடன் பலான ஆஸாமிக்கு அந்த வேலைக்கு பாத்தியதையுண்டென்று தீர்ப்பு செய்யும்படி கோரி செய்யப்படும் தாவாக்களாணவை சட்டப்பிரகாரம் அங்கீகரிக்கக்கூடியவைகளல்ல, ஆகையால் அவைகளை தாக்கல் செய்து கொள்ள அனுமதிகொடுக்கக்கூடாது.

10. உத்தியோகத்தின் வருமானங்களைப் பராதீனப்படுத்துவது (அந்த வருமானங்களின் சொந்தக்காரர்கள் சம்மதப்பட்டு செய்தால்கூட) சட்டத்திற்கு விரோதமானபடியால், அப்பேர்ப்பட்ட சொந்தநடவடிக்கைகளின் பேரில் உண்டானபாத்தியதைகள் (அந்தபாத்தியதைகள் சட்டம் நிர்மாணிக்கப்பட்டதற்குமுன்பாக உண்டாயிருந்தாலொழிய) ஸ்திரமானதாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆனால் அந்த மனிதனுனவன் தன்னிட சொந்த ஏற்பாடுகளைத் தவிர்க்கவேண்டியதற்கு இதை (சொந்த நடவடிக்கை நடத்தினதால் உண்டான பாத்தியதைகள்ஸ்திரமானதாக மாட்டாதென்கிற காரணத்தை) ஒரு நியாயமாக எடுத்துச்சொல்ல இடம் கொடுக்கக்கூடாது.

11. அடியில் வருவதானது பரம்பரையான கிராம உத்தியோகங்களுக்கு நேமங்கள் செய்வதில் பொதுவாய் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் :—

(1) ஒருகிராம உத்தியோகத்திலிருக்கிறவன் அந்த உத்தியோத்தின் வேலைகளை நிறைவேற்ற சக்திவந்தனுயிருக்கவேண்டுமென்பது முதல் முக்கியமான சங்கதி. பரம்பரை வம்சஸ்தன் என்கிற காரணத்தினுலேயே ராஜாங்கத்துக்குத் தேவையான யோக்கியதைகளை வேண்டியதில்லை என்று அலக்ஷியம் செய்யக்கூடாது. ஆகையால் இதினுல் என்ன ஏற்படுகிறதென்றுல்:—வேலைகளை நிறைவேற்றப் பிரத்தியட்சமாய் சாமர்த்தியமற்றவர்களான ஸ்திரீகள் வேலைக்கு லாயக்கற்றவர்களென்று தள்ளிவிடப்பட வேண்டியது. ஆனுலும், நியாயமான வார்ஸ்தாரானவர் பிள்ளையில்லாத விதந்துவாயிருந்து பிள்ளையை (ஸ்வீகாரம் செய்துகொள்ள) வளர்த்துக்கொள்ள தான் உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கும் பட்சத்தில் அப்படி ஸ்வீகாரம் செய்துகொள்ளும் பொருட்டு அவளுக்குக் கிரமமான ஸாவுகாசம் கொடுக்கவேண்டியது. அப்படிக்குறித்த ஸாவுகாசத்திற்குள் ஸ்வீகாரம் செய்துமுடித்துவிட்டால் ஸ்வீகாரம் செய்யப்பட்ட பிள்ளையை உத்தியோகத்தில் நியமிக்கவேண்டியது. ஸ்திரீகள் மூலமாய் பாத்தியம் கொண்டாடுகிறவர்களை விலக்கிவிட்டதாக மேற்கண்டவிதியினுல் தாத்பரியப்படயில்லை உதாரணம்:—ஒரேவம்சத்தில் பிறந்து பின்னிட்டு பா

கித்துக்கொண்டு வேருய்போன வார்ஸ்தாரனுக்குள்ள பரம்பரை பாத்தியதையைவிட ஒரு குமாரத்தியின் பிள்ளைக்கு மேலானபரம்பரை பாத்தியதையுண்டு.

(2) ஸ்திரீகளின் விஷயத்திற்கும் பால்யமாயிருப்பதினுலேயாவது அல்லது மற்ற அநித்திய காரணங்களினுலேயாவது சாமர்த்தியமற்றவர்களாய்ப் போகும் புருஷர்களின் விஷயத்துக்கும் வித்தியாசமுண்டு; நியாயமான வார்ஸ்தாரனுனவன் மைனராயிருந்தால் அவனை உத்தியோகத்திற்குச் சொந்தமானவனென்று தாக்கல் செய்து வேலைகளைப் பார்த்து வரும்படி கலெக்டரானவர் ஒரு குமஸ்தாவை நியமிக்க வேண்டியது. குமஸ்தாவை தலாஷ் செய்வதில் அந்த மைனரிட குடும்பத்தின் இஷ்டங்களை அனுசரிக்கவேண்டியது; எப்போதும் அவர்களுக்கு இஷ்டமுள்ள ஒரு மனுஷியனையே (அப்படி அவர்களுக்கு இஷ்டமுள்ளவனும் வேலைபார்ப்பதற்கு லாயக்குள்ளவனும் யாதொருவரும் அகப்படாமற்போனுலொழிய) நியமிக்கவேண்டியது; அசமர்த்தனுய்ப் போன இஸ்கும்தாரனுனவன் வேறொரு குமாஸ்தாவை நியமிக்க இஷ்டப்படுகிறுனென்கிற காரணத்தினுலேயே ஒரு தரம் நியமிக்கப்பட்ட குமாஸ்தாவை வேலையிலிருந்து நீக்கக்கூடாது. கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட (இனும்) நிலங்கள் என்பிரன்சைஸ் செய்யப்பட்டிருந்தால் கிராம உத்தியோகத்திற்குள்ள சம்பளம் பூராவையும் குமாஸ்தாவுக்குக் கொடுத்துவிடவேண்டியது; ஆனுல் சம்பளத்திற்காக நிலங்கள் விடப்பட்டிருந்தால் குமாஸ்தாவானவன் அந்த நிலங்களிலிருந்துவரும் தீர்வையைமாத்திரந்தான் அடையவேண்டியது; குமாஸ்தாவானவன் உத்தியோகத்தினுடைய வேலைகளை மைனருக்குக் கற்பிக்கும்படி குமாஸ்தாவுக்கு உத்திரவுசெய்யவேண்யது.

(3) ஒரே விதியாய்ச் சொல்லுமிடத்து, தாக்கல் செய்யப்பட்ட இஸ்கும்தாரனுக்கிருந்த லாயக்கின்மையானது (குறையானது) நிவர்த்தியாய்ப்போய்விட்டாலும் அல்லது தன்னுடைய சந்ததியில் தனக்குள்ளவார்ஸ்தாரனை நியமிக்கவேண்டுமென்று இஸ்கும்தாரன் கேட்டுக்கொண்டு அந்த வார்ஸ்தாரன் லாயக்குள்ளவனுயிருந்தாலும் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் குமாஸ்தாவை வேலையை விட்டு நீக்கவேண்டியது. ஆனுல் இந்த விதியை அனுஸரித்து நடப்பதில், ஒரு கிராம முனிஸீபினிட

நியாயஸ்தலத்து வேலைகளைச் செய்வதற்கு சிலகால அனுபோகம் அவசியமானதென்றும் மெத்த சிறிய வாலிபனுக்கு கிராமத்தில் அதிக செல்வாக்கு பெரும்பாலுமிராதென்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. ஆகையால் இந்த முக்கியமான உத்தியோக விஷயமாய் குமாஸ்தாக்களை வேலையிலிருந்து நீக்குவதிலும், நியமிக்கும்போது (பால்யம்என்கிற காரணம் தவிர) வேறேவிதமாய் லாயக்குள்ள பாலியர்களை நேமித்து வேலைபார்க்க ஆரம்பிக்கும்படி அவர்களுக்கு உத்திரவு கொடுப்பதிலும், கொஞ்சதூரம் கலெக்டருக்கு அவரிடயுக்தானுஸாரம் நடத்த இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது ;

(4) தவிரவும் யாதொரு சந்ததியின் வார்ஸ்தாரன் (அவனிட முன்னோர்களாகிய கிராம நவுக்கர்கள் செய்த குற்றத்தில்) சம்பந்தப்படாதவனாய் இருந்தால்கூட அந்தவார்ஸதாரனை வேலையில் நியமிப்பது அயுக்தமாயிருக்கிற சிலசந்தர்ப்பங்களை முன்னிட்டு கிராமநவுக்கர்கள் பர்தர்ப்பு செய்யப்படுகிறார்கள், அப்பேர்க்கொத்த விஷயங்களில்கூட முன் சந்ததியின் வார்ஸ்தாரனை இஸ்தும்தாரனாக தாக்கல் செய்து குமஸ்தாவை நியமிக்கவேண்டியது. சாதாரணமாய் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் நல்லநடக்கையாயிருக்கிறவரையில் குமஸ்தா வேலைபார்த்துவரவேண்டியது; ஆனால் குமஸ்தாவை முதலில் நியமனம் செய்யும்போதும் பின்னிட்டு வேறு குமாஸ்தாக்களை நியமனம் செய்யும்போதும் அந்தநியமன காலமானது பர்தர்ப்புசிக்ஷை அடைந்தவன் இறந்துபோனதின்பேரிலாவது அல்லதுவேறே பலான யாதொரு விசேஷமாவது நேரிடும் பட்சத்தில் முடிவு பெறுமென்று சொல்வதானது கலெக்டரிட யுக்தானுஸாரத்தைப்பொறுத்தது.

12. 1831 ஞ்த்திய 6வது சீர்திருத்தச் சட்டத்தை யனுஸரித்து செய்யப்படும் தாவாக்களை கலெக்டர்கள் விசாரித்து தீர்க்கவேண்டுமென்றும் அவர்களிட தீர்மானத்துக்கு விரோதமாய் செய்யும் அப்பீலை போர்டாருக்குச் செய்துகொள்ள வேண்டுமென்றும் அந்தசட்டத்தில் உத்திரவுசெய்யப்பட்டிருக்கிறது ; 1828 ஞ்த்திய 7-வது சட்டத்தினால், கலெக்டர்களுக்கு அப்போது (அதாவது இந்த 7–வது சீர்திருத்தச்சட்டம் நிர்மாணிக்கப்படும்போது) கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்களும் அந்த சட்டம் நிர்மாணிக்கப்பட்டபிறகு கலெக்டர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய அதிகாரங்களும் டிவிஷனலாபீஸர்களுக்கும் வகிக்கப்பட்டன. ஆனதுபற்றி,

1831 ஹூத்திய 6-வது சீர்திருத்தச்சட்டத்தை அனுஸரித்து நடவடிக்கை நடத்தும் டிவிஷனலாபீஸரானவர் அந்த சட்டம் சம்பந்தப்பட்டவரையில் கலெக்டரிட பிரதிநிதியாகவேயிருக்கிருர் (அதாவது கலெக்டர் ஹோதாவிலேயே யிருக்கிருர்). (ஆகையால்) அவரிட (டிவிஷனலாபீஸரிட) தீர்ப்புக்கு விரோதமாய்ச் செய்யும் அப்பீலை போர்டாருக்குச் செய்ய வேண்டியது. ஆகிலும், தம்மிட கீழ் உத்தியோகஸ்தர்களால் 1831 ஹூத்திய 6-வது சீர்திருத்தச் சட்டத்தை யனுஸரித்து செய்யப்பட்ட தீர்ப்பை மாற்றவும் கலெக்டருக்கதிகாரமுண்டு; கலெக்டர்களுக்குக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் செய்ததீர்ப்புகளை சீர்திருத்தம்செய்யும்பொருட்டு கலெக்டர்களுக்கு விண்ணப்பங்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டால், அப்பேர்ப்பட்ட விண்ணப்பங்கள் நியாயமற்றவை என்று உடனே தள்ளிவிடக்கூடிய விஷயங்களில் தவிர, ஈரங்கிதேதியை(அதாவது விசாரணை செய்யும் தேதியை) இருகக்ஷிக்காரர்களுக்கும் எப்போதும் தெரிவிக்கவேண்டியது. கலெக்டர்ரிட கீழ் உத்தியோகஸ்தர்கள் செய்ததீர்ப்புக்கு விரோதமாய் போர்டாருக்கு ஒருதரம் அப்பீல் செய்யப்பட்டு போர்டாரால் அந்தத்தீர்ப்புஸ்திரப்படுத்தப்பட்டாவது அல்லது கொஞ்சம் மாறுதல் செய்யப்பட்டாவது அல்லது அடியோடு மாற்றப்பட்டாவதிருந்தால், அந்தக்கீழ் உத்தியோகஸ்தரிட தீர்ப்பைக்கலெக்டரானவர் மாற்றக்கூடாது. 1831 ஹூத்திய 6-வது சீர்திருத்தச் சட்டத்தையனுஸரித்து நடவடிக்கை நடத்துகிற டிவிஷனலாபீஸர்களானவர்கள் தாங்கள் செய்யும் தீர்ப்பின் நகலை கக்ஷிக்கார்களிடம் கொடுக்கும்போது அடியில்கண்டவிதமாய்அந்தநகலில் எழுதவேண்டியது:— இந்தத்தீர்ப்பினுல் அதிருப்தியடையும் கக்ஷிக்காரர்கள் தீர்ப்பு தேதிமுதல் 3ஸ்ரீ த்திற்குள்ளாக தீர்ப்பை சீர்திருத்தம் செய்யும்படி கலெக்டர்களுக்கு விண்ணப்பமாவது கொடுத்துக்கொள்ளவேண்டியது, அல்லது போர்டாருக்கு அப்பீலாவது செய்து கொள்ளவேண்டியது; கலெக்டரானவர்கள் தங்களால் தீர்மானம்செய்யப்பட்ட கேஸ்களில் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளும்பொருட்டு சம்பந்தப்பட்ட பார்டிகளுக்கு மேற்கண்டமாதிரி எச்சரிக்கை செய்யவேண்டியது.

13. 1831 ஹூத்திய 6-வது சட்டத்தையனுசரித்து கலெக்டரால் செய்யப்பட்ட தீர்மானங்களுக்கு விரோதமாக போர்டாருக்கு அப்பீல்செய்துகொள்ளக் குறித்த வாயிதா கடந்துபோனதின்பேரில், கலெக்டரிடமிருந்து அவரிட முதல் தீர்ப்பைப்பற்றி புனராலோசனை செய்யப்படமாட்டாதென்ற புதிய உத்திரவையடைந்துஅதினுல் போர்டாருக்கு அப்பீல் செய்ய வேண்டிய வாயிதாவை அந்த புது உத்திரவுதேதிமுதல் கணக்கிட்டுக்கொள்ளலாமென்கிற கருத்துடன் (கலெக்டரிட தீர்ப்புக்கு விரோதமாய்) கலெக்

டர்களுக்குக் கொடுக்கப்படும் ரிவியூமனுக்களும் ; * யாதொருகலெக்டரான வர் செய்த தீர்ப்பை முன்னடியே சொன்ன நியாயங்களை முன்னிட்டே புன ராலோசனை செய்யவேண்டுமென்று தாத்பரியமுள்ள விண்ணப்பமென்று சொல்லக்கூடியதாயிருக்கிறதும் அதே கலெக்டருக்காவது புதிதாய் மாற்றப் பட்டுவந்த வேறே கலெக்டருக்காவது செய்யப்படுவதுமான ரிவியூமனுக்க ளும், போர்டாருக்குச் செய்துகொள்ளப்படும் அம்மாதிரியான ரிவியூமனுக் களும் இந்த சட்டத்தை அனுஸரித்து ஆலோசனையில் எடுத்துக்கொள்ளப் படமாட்டாது. தங்களிட தீர்ப்புகளையே புனராலோசனை செய்யக்கலெக் டர்களுக்கு எந்தஉத்திரவினுலும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை; கலெக் டர்கள் தங்களிட தீர்ப்புகளை புனராலோசனைசெய்யமாட்டோம் என்றுசொ ல்வதினுல் யாதொரு பாதகரமும் உண்டாகாது; ஏனென்றுல் சட்டப்பிரகா ரம் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள இடமிருக்கிறது. கடைசியாய் தித்துப்பாடு செய்யு மதிகாரம் கெவர்ன்மெண்டாருக்குண்டு. ஆகையால் எந்த உத்தியோகஸ்தர்களாவது செய்யும் உத்திரவுகளை புனராலோசனை செய்ய வேண்டுமென்று அந்த உத்தியோகஸ்தர்களுக்கே செய்யப்படும் வி ண்ணப்பங்களை எப்போதும் தள்ளுபடி செய்யவேண்டியது.

14. ஒரு கிராம உத்தியோகத்திற்கு விடப்பட்டிருக்கிற இனுமானது பலான நிலமா அல்லது அதின் தீர்வையாவென்பதைப்பற்றி தகரார் உண் டாகும்போது அந்தசந்தேகத்தை ஸிவில் கோர்ட்டார் தீர்மானம் செய்யவே ணுமேயன்றி ரெவினியூ கோர்ட்டார் தீர்க்கக்கூடாது.

15. பரம்பரைபாத்தியதையுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் கெ வர்ண்மெண்டு வேலைகளிலாவது சொந்த வேலைகளிலாவது நியமிக்கப் படலாம், அந்த விஷயத்தில் குமாஸ்தாவைக்கொண்டு கிராம உத்தியோ கத்தின் வேலைகளைசெய்வித்து வரவேண்டியது. குமாஸ்தாவினுல் வேலை பார்த்துவர யாதொரு கிராமஉத்தியோகஸ்தனுக்கு உத்திரவு கொடுக்கப்பட் டால் அந்த உத்தியோகத்திற்காக விடப்பட்டிருக்கிற ஊழியவருமானங்கள் முழுதையும் குமாஸ்தா அனுபவிக்கவேண்டியது.

16. இனும் கிராமங்களின்இனும்தார்களுக்கு தங்கள் கிராமஉத்தியோ கஸ்தர்களை நியமிக்க பாத்தியதை யில்லை; அந்த உத்தியோகஸ்தர்கள் 1831 ஞூத்திய 6-வது சட்டத்திற்கு உட்பட்டவர்கள்.

17. 1831 ஞூத்திய 6-வது சட்டத்தை யனுஸரித்து நடவடிக்கை நடத்தும் சம்பந்தமாய் (1870 ஞூத்திய 7-நெ) கோர்ட்டு பீஸ் ஆக்ட்பிரகா

---

* ரிவியூமனுக்களாவது யாதொரு தீர்ப்பை புனராலோசனை செய்ய வேணுமென்று கொடுக்கப்படும் மனுக்கள்.

ரம் விதிக்கப்பட வேண்டிய பீஸ்கள் அடியில் கண்டவைகள்தான்:—ஒவ்வொரு பிரியாது (அல்லது தாவாவிண்ணப்பத்து) க்கும், நிறைவேற்றுதலுக்காககொடுக்கும் மனு ஒவ்வொன்றுக்கும், கலெக்டர்களுக்குக்கொடுக்கப்படும் ரிவிஷன் (அப்பீல்) பிடிஷன்களுக்கும், 0—8—0 அணா. போர்டாருக்கு செய்யப்படும் அப்பீல் விண்ணப்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2—0—0. இந்த (1831 ஸ்ரீத்திய 6-வது) சட்டத்தை அனுஸரித்து செய்யப்படும் தீர்ப்புகளின் நகல்களுக்கு கோர்டுபீஸ் கிடையாது. (அதாவதுகோர்ட் பீஸ்லேபில் ஒட்டவேண்டியதில்லை).

18. இவ்விடத்தில் உத்தேசம் செய்யப்பட்டவைகளை யொத்த கிராம ஸ்தாபனங்களை பெரியபட்டணங்களில்கட்டாயப்படுத்தஎத்தனிப்பதுஆக்ஷேபணைகரமானதென்று கலெக்டர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டியது.

178A. கிராமகோர்ட்டுகள்:—கிராம முனிசீபுகளை நியமிப்பதில் 1889 ஸ்ரீத்திய 1-வது ஆக்டின் 7-வது பிரிவையும் அதின்பிரகாரம்பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளையும் அனுஸரித்துச் செய்யப்படுகிறபடியால், 1890 ஸ்ரீ ஜுலை மீ 16வ முதல் இந்தவேலைக்கு 1831 ஸ்ரீத்திய 6-வது சட்டமானது சம்பந்தப்படாததாக பாவிக்கப்படும்; ஷை தேதியில் மேற்கண்ட விதிகள் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்தவிதிகளைப் பின்னிட்டு 1891 ஸ்ரீ ஜுலைமீ 2-ம்தேதியில் கெவர்ன்மெண்டார் தித்துப்பாடு செய்தபடி அடியில் கண்டிருக்கிறது:—1889 ஸ்ரீத்திய 1-வது சட்டத்தின் 7-வதுபிரிவை அனுஸரித்து கிராமமுனிசீபு உத்தியோகத்திற்கு யாதொரு நபரைநியமிப்பதில், கலெக்டரானவர் கெவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படக்கூடிய படிப்புமுதலானயோக்கியதைகள் உள்ளவர்களாய்ப்பார்த்து தலாஷ்செய்யவேண்டியது; அப்பேர்ப்பட்ட உத்தியோகமானது பரம்பரை பாத்தியதையுள்ளதாயிருக்கப்பட்ட ஜில்லாக்களில் கலெக்டர்கள் மேற்கண்ட யோக்கியதையுள்ளவர்களுக்குள்ள மிராசு பாத்தியதையின் தாரதம்மியத்தை யோசித்து அடியிற்கண்ட திட்டப்பிரகாரம் தலாஷ் செய்யவேண்டியது:—

(1) யாதொரு கிராமகோர்ட்டின் அதிகார எல்லைக்குட்பட்ட சிறு கிராமங்கள், அல்லதுகிராமத்தின்பாகம், அல்லதுதனிகிராமம், இவைகளில் பரம்பரையாய் கிராம முனிசீபு வேலைபார்த்து வந்த ஸந்ததியில் சேர்ந்த நபருக்கு

(2) மேற்கண்டவிதமாய் மணியம் வேலைபார்த்து வந்திருக்கிற சந்ததியில் சேர்ந்தநபருக்கு.

179. ரெவினியூ வியாஜ்யங்களில் தஸ்தாவேஜுகள்:—நியாயஸ்தலத்திற்கடுத்ததாய் நடவடிக்கை நடத்தும் கெவர்ன்மெண்டு ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் தாங்கள்செய்யும் தீர்ப்புகளையும் முடிவான உத்திரவுகளையும் இங்கிலீஷிலாவது தங்கள் தங்கள் சுயபாஷையிலாவது எழுத வேண்டியது.

2. 1816 ஷு௵த்திய 2-வது சட்டத்தையும் 1822-ம் ஷு௵த்திய 9-வது சட்டத்தையும் 1831-ம் ஷு௵த்திய 6-வது சட்டத்தையும் அனுஸரித்து தங்களுக்குவகிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைச்செலுத்தும் கலெக்டர்கள் நியாயஸ்தலத்திற்கு நியாயாதிபதிகளாக நடவடிக்கைகள் நடத்துகிறார்களாகையால் கலெக்டர்களும் அவருக்குக் கீழ்ப்பட்ட அங்கிலேய உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்கள்தீர்ப்புகளை அவைகளின் காரணத்துடனே இங்கிலீஷில் எழுதக்கடமைப்பட்டிருக்கிறார்கள்; இந்த ஏற்பாடுபடி நடக்காமல்போவதால் அப்பீல் செய்யப்படும் அதிகாரிக்கு வெகு தொந்திரவு உண்டாவதும் தவிர வேலைபார்த்து வருவதில் ஆக்ஷேபணைகரமான சொஸ்தித்தனமானது விருத்தியடைய இடமாயிருக்கிறது; இதினால் நியாயாதிகாரிக்குள்ள அதிகாரங்கள் எந்த எண்ணத்தைமுன்னிட்டு கலெக்டர்களுக்கு வகிக்கப்பட்டனவோஅந்த எண்ணமானது நிறைவேறாமல் போகிறது.

3. 1822 ஷை த்திய மாஜி 5-வது சீர்திருத்தச் சட்டத்தில் சேர்த்திருக்கிற சாதாரண டைரிபாரமானது போர்டாருக்கு அப்பீல் செய்யக்கூடியதாயும் 1822ம்ஷு௵த்திய 9-வது சட்டத்தை அனுஸரித்தும் 1831ஷு௵த்திய 6-வது சட்டத்தை அனுஸரித்தும் செய்யும் தீர்ப்புகளை ரிகார்டு செய்யவும் போதுமானதாயிருக்கிறது; கலெக்டர்கள் இப்பேர்ப்பட்ட கேஸ்களைப் பைசல் செய்வதில் இந்த பாரத்தையே எப்போதும் உபயோகிக்கவேண்டயது.

180. கட்டளை முதலானவைகளை ஸர்வுசெய்வது (கொண்டு போய்க்கொடுப்பது) கட்டளை பிறப்பிக்கும்படி எந்த கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த கோர்ட்டாரிட அதிகார எல்லைக்குட்பட்டாவது வெளிப்பட்டாவது கட்டளையை ஸார்வுசெய்யவேண்டியிருந்தாலும் எல்லா ரெவினியூ கோர்ட்டாரும் 1865ம்ஷு 8–வது சட்டம், 1822ம்ஷு 9–வது சட்டம், 1831ம்ஷு 6–வது சட்டம், இவைகள் சம்பந்தமான கேஸ்களை விசாரணை செய்யும்போது அனுபந்தத்தில் கண்டிருக்கும் ப்ரோஸெஸ் ஸர்விஸ் பீஸின் (அதாவது கட்டளையை கொண்டுபோய்க் கொடுப்பதற்காக கொடுக்கப்படும் கட்டளைப்படியின்) தாமாஷாவை அனுஸரிக்கவேண்டியது.

2. கட்டளை பிறப்பிப்பதற்காக விதிக்கப்படும் கட்டளைப் படியின் தொகைக்குச்சமானமானகோர்ட்டு பீஸ்லேபில்கள் வாங்கிகட்டளை பிறப்பிக்கும்

பொருட்டு செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தில் ஒட்டவேண்டியது; விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நியமிக்கப்பட்டிருக்கிற உத்தியோகஸ்தரானவர் அப்பேர்ப்பட்ட லேபிலைத் தலையடித்து கிரமமான பீஸ்வசூல் செய்யப்பட்டதென்று கட்டளையின்பேரில் இண்டர்ஸ்செய்ய வேண்டியது. கட்டளையை நிறைவேற்றும்பொருட்டு அதை ப்ரிடிஷ் (இங்கிலீஷ்காருக்குச்சொந்தமான) இந்தியாவில் சென்னைப்பட்டணம் ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட எந்தகோர்ட்டுக்காவது அனுப்பவேண்டியதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட கீழ்கோர்ட்டார் அந்தக்கட்டளையை பிறப்பிப்பதற்காக கிரமமானபீஸ் செலுத்தப்பட்டதென்பதற்கு அந்தக் கட்டளையின்பேரில் செய்யப்பட்டிருக்கிற இண்டார்ஸ்மெண்டையே போதுமானருஜுவாக அங்கீகரித்துக்கொண்டு கிரமமான உத்தியோகஸ்தர் துவாரா கோரிக்கைப்படி அந்தக்கட்டளையை ஸார்வுசெய்வித்து எந்தகோர்ட்டாரால் அந்தக்கட்டளையனுப்பப்பட்டதோ அந்தக்கோர்ட்டாருக்கு அதை வாப்ஸ் அனுப்பவேண்டியது.

3. கலெக்டரிட கோர்ட்டுகளில் நியமிக்கப்படும் அமீனுக்களின் சம்பளம் மீ 1-க்கு 14 ரூபாயாகவும், மற்ற ரெவினியூ கோர்ட்டுகளில் நியமிக்கப்படும் அமீனுக்களின் சம்பளமானது 12 ரூபாயாகவுமிருக்கவேண்டியது. ஏற்படுத்திய சம்பளத்துடன்கூட ஏதோ பிரத்தியேகமான சிலகேஸுகளில் பத்தாவையும் ஹைகோர்ட்டாரிட முன்னனுமதி பெற்றுக்கொண்டு கொடுக்கலாம்.

4. கட்டளைகளை ஸார்வுசெய்வதற்காக கலெக்டரிட கோர்ட்டுகளில் நியமிக்கப்படும் சேவுகர்களுக்கு சம்பளம் மீ 1 க்கு 7 ரூபாயாகவும், இதர ரெவினியூ கோர்ட்டுகளில் நியமிக்கப்படும் சேவுகர்களுக்குசம்பளம் மீ 1-க்கு 6 ரூபாயாகவும், இருக்கவேண்டியது, ஏதோ பிரத்தியேகமான சிலவிஷயங்களில் குறித்தசம்பளத்துடன் பத்தாவையும் ஹைகோர்ட்டாரிட முன்னனுமதி பெற்றுக்கொண்டு கொடுக்கலாம்.

5. கலெக்டரால் தம்மிட ஆபீஸிலும், கலெக்டருக்குக் கீழ்ப்பட்ட ஆபீஸர்களால் அவர்களிட ஆபீஸ்களிலும், கட்டளையை ஸார்வு செய்கிறவர்களாக(எத்தனை நபர்கள்) நியமிக்கவேண்டியதென்றால் அவ்வித சிப்பந்திகளுக்காகப் பிடிக்கும் செலவானது ஸார்வுசெய்து நிறைவேற்றின கட்டளைக்காக விதிக்கப்பட்ட பீஸ்களைக்கொண்டாவது முஸராசெய்யப்படத்தக்கதாய் இருக்கவேண்டியது. அப்படி நியமிக்கப்படவேண்டியவர்களைப்பற்றி முதலில் அங்கீகரிக்கும்பொருட்டு போர்டாருக்கும் கெவர்ண்மெண்டாருக்கும் தெரிவிக்கவேண்டியது. அவர்கள் உத்திரவு செய்கிறபிரகாரம் அப்போதைக்கப்போது அந்தசங்கியை மாற்ற வேண்டியது. அவர்களிட அனுமதியன்றியில் சங்கியை ஜாஸ்திப்படுத்தக் கூடாது. ஆனால் தம்மிட அதி

கார எல்லேக்குட்பட்ட ஒரு ஆபீஸிலிருந்து மற்ருெரு ஆபீஸுக்கு கட்டளையை ஸார்வு செய்கிறவர்களை அனுபோகத்துக்குத்தக்கபடி மாற்ற கலெக்டருக்கதிகாரமுண்டு; மேலும் சவுகரியத்தை முன்னிட்டு ஒரு ஆபீஸரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை மற்ருெரு ஆபீஸருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளைஸார்வு செய்கிறவர்களைக்கொண்டு ஸார்வு செய்விக்க வேண்டியதாயிருந்தால் அம்மாதிரியாகவே அவைகளை ஸார்வு செய்விக்கலாம்.

6. 1869 வருஷத்திய சென்னை 3-வது சட்டத்தை யனுஸரித்து ரெவினியூ உத்தியோகஸ்தர்கள், ரிவினியூகோர்ட்டு சம்பந்தமாயல்லாமல், தங்களிடசாதாரண அதிகார முறைமையில் பிறப்பிக்கக்கூடிய ஸம்மன்கள் இன்னபாரங்கள் பிரகாரம் இருக்கவேண்டியதென்று அனுபந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தர்காஸ்து, பட்டாமாற்றுதல், அல்லது நிலங்கள் சம்பந்தமான தகரார்களை தீர்த்துக்கொள்ளுதல் முதலான காரியத்திற்காக கலெக்டரிட முன்பாகவும் தாசீல்தாரிட முன்பாகவும் ஆஜராகிற கக்ஷிக்காரர்களிடமிருந்து யாதொருகட்டளை பீஸுகம் வசூல் செய்யக்கூடாது. அப்பேர்ப்பட்ட விஷயங்களில் கட்டளைகளை கெவர்ன்மெண்டு சேவகர்களைக்கொண்டும் கிராம நவுக்கர்களைக் கொண்டும் ஸார்வுசெய்விக்கவேண்டியது; ஆனல் யாதாவதொரு தாலுகாவில் மெத்த ஜாஸ்திவேலையிருப்பதை முன்னிட்டு கட்டளைகளை ஸார்வு செய்வதற்காக பத்தா சேவகர்களை நியமிக்கவேண்டியதவசியமாக இருந்தால் கலெக்டரானவர் பிரத்தியேகமான விஷயமாக பத்தா சேவகர்களை நியமிக்கும் பொருட்டு போர்டாரிட அனுமதியைக் கோரிக்கொள்ளலாம். இவ்விதமாய் நேமிக்கப்பட்ட சிப்பந்திகள் டெம்பொரரியாய் வேலைபார்க்கவேண்டியவர்களே தவிர அவர்களுக்குபென்ஷன் கிடையாது. அவர்களுக்குச் சேரவேண்டிய பத்தாவை எந்தவிண்ணப்பதார்களுக்காக கட்டளைபிறப்பிக்கப்படுகிறதோ அவர்களிட மிருந்து ரொக்கமாய் வசூல் செய்து கொடுக்க வேண்டியது. யாராவும் கோரிக்கொள்ளப்படாமல் உத்தியோகஸ்தர்களாகவே கட்டளை பிறப்பிக்கும் பக்ஷத்தில் யாரிடத்திலிருந்தும் அப்படி ரொக்கம் வசூல் செய்யக்கூடாது.

7. தேவையான தொகைக்கு மேற்பட்டு செலுத்தப்படும் பீஸ்களை சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்களுக்கு திருப்பிக்கொடுத்து விடக்கூடும், ரொக்கத்தில் பணத்தைத் திருப்பிக்கொடுக்கக்கூடும், அந்த தொகையை ஸாதல்வார் பண்டில் செலவெழுதவேண்டியது.

XIII. (13) - வது அதிகாரம்.

ஜலாதாரங்களும் மற்றப்பொது வேலைகளும்.

181. ரேவினியூ டிபார்ட்மேண்டாருக்கும் பப்ளிக் வோர்க்ஸ் டிபார்ட்மேண்டாருக்குமுள்ள சம்பந்தம்:—கலெக்டரானவர் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாருடன் கலந்து செய்யவேண்டிய விஷயங்களை பப்ளிக் வொர்க்ஸ் சட்டபுஸ்தகத்தில் விவரித்துச் சொல்லியிருக்கிறது; கலெக்டர்கள் அந்தபுஸ்தகத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது.

2. கலெக்டரானவர் அந்தந்த இடங்களிலுள்ள பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு அதிகாரியுடன் பலான விஷயங்களைப்பற்றி கலந்தாலோசியாமல் அந்த டிபார்ட்மெண்டாரிட நோக்கங்களுக்கு விரோதமாய் ஒருபோதும் எந்த சங்கதிகளையும் எடுத்துச் சொல்லாமல் இருக்கவேண்டிய விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

3. தாலூகா ஓவர்ஸியரிட மேல்விசாரணையிலிருக்கிற வேலைகளைப் பற்றி ஏதாவது தெரிந்துகொள்ளும் பொருட்டாவது அல்லது பலானசங்கதியைப்பற்றி ஏதாவது தெரிந்து கொள்ளும் பொருட்டாவது அல்லது பலானசங்கதியைப்பற்றி ரிபோர்ட் செய்யவேணுமென்றுவது கோரிக்கொள்ளப்படும் கடிதங்களையும் எக்ஸிகியூடிவ் இஞ்சினீர்களுக்கு எழுதியனுப்ப வேண்டுமேயல்லாமல் அவர்களிட கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பக் கூடாது.

4. பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டாருக்குத் தேவையான பொருள்களை சேகரிக்கவேண்டிய விஷயத்திலும் வேலைமுதலானவைகளுக்காக ஆள் சேர்ப்பிக்கவேண்டிய விஷயத்திலும் ரெவினியூ டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கிரமமாய் கூடுமானவரையில் ஒத்தாசை செய்யவேண்டியது; யாதொரு தாலூக்கா உத்தியோகஸ்தர்கள் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரிட காரியங்களுக்குத் தாங்களே நேராகவாவது அல்லது வேறேவிதமாயாவது தடையுண்டாக்கும் பட்சத்தில் அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கடினமாய் சிக்ஷைசெய்யப்படுவார்கள்.

5. பப்ளிக் வொர்க்ஸ் எக்ஸிக்யூடிவ் உத்தியோகஸ்தர்கள் (சுயமாய் அதிகாரம் செலுத்தக்கூடிய உத்தியோகஸ்தர்கள்) தங்களிட வசத்தி லுள்ள ஸர்க்கார் பணப்பெட்டிகளை தாலூகா கஜானுவில் வைக்கவேண்டு மென்று தெரிவித்துக்கொண்டால் அப்படியே வைத்துக்கொள்ளக் கலெக் டர்கள் உத்திரவுகொடுக்கவேண்டியது. தவிரவும் ரெவினியூடிபார்ட்மெண்டு கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு பப்ளிக் வொர்க்ஸ்டிபார்ட்மெண்டார் பணத் தை அனுப்ப தேவையான உதவியை அடியிற்கண்ட நிபந்தனைக்குட் பட்டு கலெக்டர்கள் செய்யலாம், அதாவது அப்படி ஒத்தாசைசெய்வதால் தங்களிட டிபார்ட்மெண்டில் சரியாய் வேலைசெய்து வருவதற்கு யாதொரு ஆடங்கமும் நேரிடாமலிருக்கவேண்டியது.

182. பப்ளிக் வோர்க்ஸ் கணக்கில் செலவு எழுதிக்கொண்டு கட்டடமுதலாகிய வேலைகளையும் பழுதுபார்க்கும் படியான வேலைக ளையும் செய்ய அனுமதிகொடுக்கும் பொருட்டுள்ள அதிகாரம்:—மழை காலத்திலாவது அல்லது வெள்ளம்வரும்போதாவது ஜலாதாரங்களையாவது, ரஸ்தாக்களையாவது, பாலங்களையாவது, ஆற்றுக்கொண்டங்களையாவது, பாதுகார்க்கும்பொருட்டும் அல்லது உடனே பழுதுபார்க்கும பொருட்டும் தேவையாகிய அவசரமான வேலையைச் செய்விக்கத்தக்க பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரிட உத்தியோகஸ்தனில்லாமற் போனுல், ரெவினியூ டிபார்ட்மெண்டாரால் செய்யப்படும்பொருட்டும் செலவிடவேண்டியதுகை யைப்பற்றி யாதொரு அளவில்லாமலும் கலெக்டராவது அல்லது அவர் களிடகீழ் உத்தியோகஸ்தர்களில் எவராவது அனுமதிகொடுக்கலாம்.

2. ஜலாதாரங்களையும் பப்ளிக்வொர்க்ஸ் பட்ஜட்டில் சம்பந்தப்பட்ட ரெவினியூ டிபார்ட்மெண்டின் கட்டடங்களையும் ஸகஜமாய் பழுதுபார்க்கும் பொருட்டு அனுமதிகொடுப்பதைப்பற்றி கலெக்டருக்குள்ள அதிகாரங்களை பப்ளிக் வொர்க்ஸ் புஸ்தகத்தில் விவரித்துக் கண்டிருக்கிறது.

184. ஜலம்செலவிடுவதை மேல்விசாரணை செய்வது:—பிரத்தி யேகமாய் சிம்பந்திகள் நியமித்திருக்கப்பட்ட பெரிய ஜலாதாரங்களிலிருந்து ஜலம்செலவிடும் விஷயத்திலெல்லாம் பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் மேல் விசாரணை செய்து வரவேண்டியது; ஆனுல் சிறிய ஜலாதாரங்களிலிருந்து ஜலம் செலவிடுவதை மேல்விசாரணைசெய் வது ரெவினியூ டிபார்ட்மெண்டாரைச் சேர்ந்ததாயிருக்கிறது.

2. சர்க்கார் ஜலத்தை வீணுய் செலவிடாமலிருக்கும் விஷயத்தில் கலெக்டர்கள் ஜவாப்தாரிகளாவார்கள்; அவசியமானுல் சர்க்கார் ஜலத்தை செட்டாய்செலவிடவேண்டிய விஷயத்தில் கலெக்டர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது.

3. புதிதாய் உண்டாக்கப்பட்ட ஜலாதாரங்களில் அணைக்கட்டுமுதலானது கட்டப்படும்பக்ஷத்தில் கெவர்ன்மெண்டாரும் நிலதார்களும் சில நிபந்தனைகளுக்குட்படுவதாக நிலதார்களுடன் முச்சிலிக்கா செய்துகொண்டால் அந்த ஜலாதாரங்களிலிருந்து ஜலத்தைசெலவிடவேண்டிய விஷயத்தில் மேல்விசாரணை செய்ய கெவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதையை இழந்துவிடும்படியாய் நேரிடும். இந்த மாதிரி நடவடிக்கையை தடுக்கவேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. புதுஜலாதாரத்தினுல் பலனடையும்பொருட்டு உத்திரவு செய்யவேண்டியது கெவர்ன்மெண்டாரைச்சேர்ந்ததென்றும் ஜலத்தை செலவிடவேண்டிய விஷயத்தில் மேல்விசாரணை செய்யவேண்டியதும் கெவர்ன்மெண்டாரைத்தான் சேர்ந்ததென்றும் ஜில்லா கெஜட்டிலும் தாசில்தார் கச்சேரியிலும் கலெக்டராபீஸிலும் பிரசித்தப்படுத்தவேண்டியது.

4. ஜலம் குறைவுபடும் காலங்களில் இவ்வளவு விஸ்தீர்ணத்திற்கு மேற்பட்டு நஞ்சை சாகுபடி செய்யக்கூடாதென்று உத்திரவுசெய்யக் கலெக்டர்களுக்கு பாத்தியதையுண்டு; ஆனுல் பிரதி வயலுக்கும் இவ்வளவு ஜலத்திற்குமேல் பாய்ச்சக்கூடாதென்று கலெக்டர்கள் உத்திரவுசெய்ய வேண்டிய அவசியம் நேரிடுவது அபுரூபம். பலான கிராமங்களுக்கு இவ்வளவு ஜலம் விடவேண்டியதென்கிற விஷயத்தில் மாத்திரம் ரெவினியூ அதிகாரிகள் மேல்விசாரணை செய்ய வேண்டியது; பலான வயல்களுக்கு இவ்வளவு ஜலம் பாயவேண்டியதென்கிறதை கிராமத்தார்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளும்படி விட்டுவிடவேண்டியது, சாதாரணமானகாலங்களிலெல்லாம் கிராமத்தார்கள்தான் தீர்த்துக்கொள்ளுகிருர்கள். ஏதோஅபூர்வமான சிலவிஷயங்களில் தவிர, ரெவினியூஆபீஸர்கள் அவசியமாய் செய்யவேண்டியதெல்லாம் கூடி என்னவென்ருல், ஆயக்கட்டில் எவ்வளவுபாகம் சாகுபடிசெய்யப்பட வேண்டுமென்று தீர்மானிப்பதும்அந்த பாகத்துக்கு மேற்பட்டு சாகுபடி செய்து அதினுல் தானியங்கள் சாவியாப்போகும் பட்சத்தில் தீர்வை வஜாசெய்யப்பட மாட்டாதென்றும் எச்சரிக்கை செய்யவேண்டியதே. பலான விஸ்தீர்ணம் அல்லது பலான நிலங்களுக்குத் தான் ஜலம் பாய்ச்சிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பது யுக்தமல்ல.

5. நஞ்சை நிலங்களுக்குப்பாய ஜலம் போதாமலிருக்கும்பட்சத்தில் புஞ்சைநிலங்களுக்கு ஜலம் கொடுக்கப்படமாட்டாதென்று கலெக்டர்கள் உத்திரவுசெய்ய வேண்டியது.

185. ஜனங்களுக்குச் சொந்தமான ஜலாதாரங்களைப் பாதுகாப்பது:—யாதாவதொருவனுக்குச் சொந்தமான ஒரு குளமானது பொது

ஜனங்களிட சொத்துக்கு அபாயமுண்டாக்கும்படியான ஸ்திதியில் இருக்கும் பட்சத்தில் அதை பழுது பார்க்கும் பொருட்டுக் கலெக்டர்கள் கோரிக்கொண்டதின்பேரில் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் பழுதுபார்த்திருக்கிறார்கள், அப்பேர்ப்பட்ட விஷயங்களில் பழுதுபார்ப்பதற்காகப் பிடித்த செலவை குளத்தின் சொந்தக்காரனிடத்திலிருந்து வசூல் செய்வது அசாத்தியமாயிருப்பதாய் பலதடவைகளில் ஏற்பட்டிருக்கிறது. கெவர்ன்மெண்டாரிட பிரத்தியேகமான அனுமதியன்றியில் இனிமேல் இந்த வழக்கத்தை அனுஸரிக்கக்கூடாது.

2. ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் தங்களிட இலாகாக்களிலுள்ள குளத்தையும் வாய்க்கால் கொண்டங்களையும் ஒழுங்கான ஸ்திதியில் இருக்கும்படி பாதுகாற்காமலாவது அல்லது கலுங்கல் முதலானவைகள் பந்தோபஸ்தான ஸ்திதியில் இருக்கின்றனவாவென்று பார்த்துவராமலாவது அச்ரத்தையாயிருப்பதால், ரெயில்வே ரஸ்தாமுதலானவைகளுக்கு நேரிடக்கூடிய நஷ்டத்திற்கு பர்த்தி செய்யவேண்டிய பொறுப்புள்ளவர்களென்று அவர்களுக்கு கலெக்டர்கள் எச்சரிக்கை செய்யவேண்டியது.

3. எந்த மனிதர்களிட அச்ரத்தையினால் பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் வசத்திலிருக்கப்பட்ட ஜலாதாரங்களுக்கு நேரிடக்கூடிய நஷ்டத்திற்குப் பலானவர்கள் ஜவாப்தாரி என்பதைக்குறித்து பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தகுந்த அதிகாரிகளுக்கு இனிமேல் தெரிவித்துக்கொள்ளவேண்டியது, அப்படி தெரிவித்துக் கொள்வதற்குக் காரணமென்னவென்றால், அப்படி நேரிடக்கூடிய நஷ்டத்தை நேரிடாமல் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட ஜனங்களை கட்டாயப்படுத்தும்பொருட்டு அவசியமான நியாயமுள்ள அமுல்களைச் செய்யவேண்டியதற்காகத்தான்; மேற்கண்ட விதமாய் கலெக்டருக்குத் தெரிவித்துக்கொள்ளும்பக்ஷத்தில் அவர் அந்தவிஷயத்தின் தன்மைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கப்பிரகாரம் நியாயமுள்ள நடவடிக்கைகளை நடத்தவேண்டியதானது அவரிட(கலெக்டரிட) கடமை.

186. சர்க்கார் ஜலாதாரங்களைப்பாதுகார்ப்பது:—ஜலாதாரங்களைப்பாதுகார்க்கும்விஷயத்தில் ஏற்படுத்தப்பட்ட அடியிற்கண்ட விதிகளை முக்கியமாய் **கிராமநவுக்கர்கள்** கவனிக்கவேண்டியது.

2. ஏரிகளினுடைய கரைகளை ஜாக்கிரதையாய் பார்வையிட்டு அவைகளிலிருக்கிற நஷ்டமுண்டாவதற்கு காரணமான சிறிய துவார முதலானவைகளை மாமூல்பிரகாரம் அடைத்துப் பழுது பார்க்கவேண்டியது.

3. அதிகமழை பெய்யும்போது கரைகளைக் கார்க்கும்பொருட்டு தலையாரிகளை அனுப்பவேண்டியது; ஏதாவதுஅபாயம்உண்டாகும்போலிருந்தால் அதைப்பற்றி உடனே தலையாரிகள் தெரிவிக்கவேண்டியது.

4. முனிஸீபுகளாவது வேறே கிராம நவுக்கர்களாவது கூடியவரையில் அடிக்கடி குளங்களை அல்லது ஏரிகளைப் பார்வையிடவேண்டியது.

5. கரை எவ்விடத்திலாவது உடைந்துவிடும்போலிருந்தால் கிராமத்திய கூலிகளை வரவழித்து அதை எப்படி தடுக்கவேண்டுமோ அப்படி தடுக்கும்படி வேலையிடவேண்டியது.

6. அபாயமுண்டாவதைப்பற்றி அதி சமீபத்திலிருக்கப்பட்ட பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாபீசருக்காவது கீழ் உத்தியோகஸ்தருக்காவது உடனே தெரிவிக்கவேண்டியது.

7. கரை உடைந்துபோய் விட்டால் சாகுபடிசெய்த நிலங்களைக் காப்பாற்றும் பொருட்டு வளைவான கொண்டமொன்று போடும்படி கிராமத்திய கூலியாள்களை உடனே வேலையிடவேண்டியது.

8. ஜனங்கள் தாங்களே செய்து கொள்ளக் கடமைப்பட்டும் அப்படி செய்யும்படி ரெவினியூஉத்தியோகஸ்தர்கள்கட்டாயப்படுத்தக்கூடியதுமான வேலைகள் நீங்கலாக மற்ற வேலைகளுக்கெல்லாம்கிரமமாக கூலி கொடுக்கப்படுகிறதாவென்று எக்ஸிகியூடிவ் இஞ்சினீர் கவனிக்கவேண்டியது.

9. ஆற்றுக்கரைகளும் வாய்க்கால்கரைகளும் உடைந்துபோனதை பழுதுபார்ப்பதற்காகத் தேவையான மண்ணை விலை பெறும்படியான நிலத்திலிருந்து எடுக்கும்பட்சத்தில் அதற்குபிரதிபணம் (கம்பென்சேஷன்) கொடுக்கப்படும், அப்படி கொடுக்கவேண்டிய தொகை இவ்வளவென்று ரெவினியூ அதிகாரிகளால் தீர்மானிக்கப்படும்; 1858 ஸூத்திய 1-வது ஆக்டில்* 5-வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட உபகரணங்கள் என்றபாபத்தில் மேற்கண்ட விதமாய் எடுத்துக்கொள்ளப்பட்ட மண் சேர்ந்ததாக பாவிக்கவேண்டியது.

10. குளங்களை அல்லது ஏரிகளை பந்தோபஸ்தாய் வைத்திருக்கும் பொருட்டு சாதாரண முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படாமல் அசிரத்தையாயிருக்கும் விஷயங்களைப்பற்றி தாசீல்தார்கள் தப்பாமல் கலெக்டருக்கு ரிபோர்ட் செய்யவேண்டியது. தவிரவும் அப்படி அசிரத்தையாயிருக்கும் சந்தர்ப்பங்களில் தீர்வை வஜாவுக்காக சொல்லிக்கொள்ளப்படும் பாத்

---

* இரண்டாவது பாகம் 42-வது பக்கத்தில் பார்க்க.

தியதைகள் கவனிக்கப்படமாட்டாவென்று ஜனங்களுக்கு எச்சரிக்கைசெய்யவேண்டியது.

11. இந்த உத்திரவுகளெல்லாம் நிறை வேற்றப்பட்டதாவென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு மழை காலத்திற்கு முன்னும் மழைக்காலத்திலும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு ஏரிகளைத் தாசீல்தார்களும் அவர்களுடைய கீழ் உத்தியோகஸ்தர்களும் போய்பார்வையிட வேண்டியது.

12. சர்க்கார் ஏரிகளின் கலுங்கல்களுடைய நுனியானது முழு ஏரிமட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும் பட்சத்தில் பின்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலம் அந்த கலுங்கல்களின் பேரில் குடியானவர்கள் கொண்டங்கள் போடலாம். (1) கொண்டம் போடுவதற்காக கலுங்கல்களின் கற்களுக்கு மத்தியிலிருக்கிற சந்துக்களை அடைக்கும் பொருட்டு உபயோகிக்கிற உபகரணங்களானவை, ஏரிக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் அப்போது ஜலம் வேகமாய் பாய்வதினுல் அடித்துக் கொண்டாவது நீக்கப்பட்டாவது போகும்படியானவைகளாயிருக்கவேண்டியது; மேலும் கொண்டங்களானவை முழு ஏரிமட்டத்துக்கு மேல் 6 அங்குலத்தை விட உயரமானவைகளாயிருக்கக் கூடாது. (2) காலாகாலங்களில் மழை பெய்யும் தருணத்திலும் மழைகாலத்திலும் அல்லது புசல் அடிக்கிறகாலத்திலும் நீர்கெந்திகளும் மற்றவர்களும் ஏரிகளை இராப்பகலாய் கார்த்துவரவேண்டியது. (3) ஏரியிலுள்ள ஜலமானது ஏரிக்கு அபாயம் நேரிடும்படியான மட்டத்திற்கு உயர்ந்து வரும்போது சந்தர்ப்பங்களுக்குத் தக்கப்படி தத்சாந்தியாக போட்டுக்கொண்ட கொண்டங்களை அடியோடாவது கொஞ்சபாகத்தையாவது இடித்துத் தள்ளிவிடவேண்டும். (4) கலுங்கல்களிலுள்ள கல்லுகளுக்கு நடுவில் போட்டிருக்கும் அடைப்பானது ஜலம் வேகமாய்ப்பாய்ந்து அடித்துக்கொண்டு போகக் கூடாமையாயும் அல்லது சீக்கிரத்தில் நீக்கப்படக் கூடாமையாயும் கெட்டியாய் போகவொட்டாமலிருக்கும் பொருட்டு அதமபட்சம் வருஷத்திற்கொருதரமாவது கலுங்கல்களை துரஸ்து செய்யவேண்டியது. (5) ஏரி பந்தோபஸ்தாயிருக்கும்பொருட்டு அவசியமானமுன் காரியங்களை எல்லாம் செய்வதற்கு கிராம நவுக்கர்களும் நீர்கெந்திகளும் ஜவாப்தாரிகள்.

13. அடுத்தடுத்து இருக்கும் ஏரிகள், பொது ரஸ்தாக்களுக்கு சமீபத்திலிருக்கும் ஏரிகள் ரெயில்வேரஸ்தாவுக்கு சமீபத்துஇருக்கும்ஏரிகள் இவைகளின் கலுங்கல்களை ஜாக்கிரதையாய் கார்த்து வருவதாய் நிச்சயப்பட்டாலொழிய காலாகாலங்களில் பெய்யுமழை வழக்கமாய் ஆரம்பிக்கும் தேதிக்கு அதமபட்சம் 2 வாரங்கள்முன்னிட்டாவது துரஸ்துசெய்யும்படி கட்டாயப்

படுத்தவேண்டியது. இந்த மாதிரியான ஒவ்வொரு ஏரியின் சந்தர்ப்பங்களைப்பற்றி கலெக்டர்களானவர்கள் ஜில்லா இஞ்சினீருடன் கலந்து அந்த ஏரியின் கலுங்கலில் கொண்டம்போட உத்திரவு கொடுக்கலாமாவென்று நிர்ணயிக்கவேண்டியது, மேலும் தங்களுக்குத்தோன்றும் நிபந்தனைகளையும் ஏற்படுத்தலாம்.

14. முழு ஏரிமட்டத்திற்கு மேற்பட்டு ஜாஸ்தி ஜலம்போகும் கலுங்கல்களின்பேரிலாவது கலுங்கல்களுக்கு எதிரிலாவது கொண்டங்கள் போடவேகூடாது.

15. ஒரு ஏரியிலிருந்து ஜலம்பாயும் நிலங்களின் சொந்தக்காரர்கள் அந்த ஏரிக்கரைகளில் பிரவேசித்து சாகுபடிக்காக தங்கள் நிலத்தோடு நிலம் சேர்த்துக் கொள்ளவொட்டாமல் இருக்கவேண்டியவிஷயத்தில் கலெக்டர்கள் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. அப்படி அநேகவருஷகாலமாய் சாகுபடி செய்து வந்து பிரதானமான ஒரு ஜலாதாரமானது அபாயகரமானஸ்திதியில் இருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் அதற்கு ஹானி உண்டாகும்படி விட்டுவிடுவதைவிட அந்த நிலத்தை விலைகொடுத்து வாங்குவது யுக்தமாயிருக்கும்.

16. மேலேசொன்ன உத்திரவுகளானவை, ஆற்றுவாய்க்கால்கள், அணைக்கட்டுகள், மதகு முதலானவைகளுக்கும் சவுகரியப்பட்டவரையில் சம்பந்தப்பட்டவைகளாகும். பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரிட நேர் விசாரணையிலிருக்கிற ஜலாதாரங்களுக்கு அந்த உத்திரவுகள் சம்பந்தப்படவேண்டியதென்பது அவசியமல்ல.

17. 1858 ஸ்ரீத்திய 1–வது ஆக்ட் 6-வது பிரிவு பிரகாரம் ஜலாதாரங்கள் விஷயமாய் வழக்கமாய் செய்துவரவேண்டிய வேலையானது பிரதிகிராமத்திலும் செய்யப்பட்டு வருகிறதாவென்று கவனிக்கவேண்டியது அந்தந்த ஜில்லா கலெக்டர்களிட கடமை. கிராமத்திய குடியானவர்கள் செய்ய வேண்டிய மாமூல் வேலைக்குப் பதிலாய் வரி செலுத்துவதாய் ஒத்துக்கொண்ட விஷயங்களில் தவிர மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட மாமூல் வேலையை குடியானவர்களேயாவது செய்யவேண்டும், அல்லது அவர்கள் செலவிலாவது செய்விக்கவேண்டும்; மாமூலாய்ச்செய்யவேண்டியவேலை என்னென்னவோ அதைமட்டில்தான் செய்யும்படி கட்டாயப்படுத்தலாம், இவ்வளவு பணம்தான் செலுத்தவேண்டியதென்று குறிப்பிடக்கூடாது. அநேகஜில்லாக்களில் அடியிற்கண்ட வேலைகள் மாமூல் வேலைகளென்று சொல்லப்படும். (1) ஏரிக்கரைகளிலும் வாய்க்கால் கரைகளிலும் மழைபெய்வது, ஆடுமாடுகள் நடப்பது, முதலான காரணங்களினால் உண்டாகும் குழிகள் முத

லான மேடுபள்ளங்களை சமப்படுத்துவது. (2) கரைகளில் வளர்ந்திருக்கும் முட்செடிகளையும் இவற்றைப்போன்ற அதிகமாய் வளர்ந்தும் தீங்கு செய்யக்கூடியவைகளுமான புல் பூண்டுகளையும் வளரவொட்டாமல் தடுப்பது. (3) ஏரிகளின் கரையில் வளர்ந்திருக்கிற கீழ்ச்செடிகள் தீங்குசெய்யக்கூடியவை என்றுஎக்ஸிகியூடிவ் இஞ்சினீருக்குத்தோன்றும்பட்சத்தில் அவைகளை பிடுங்கியெறிவது. (4) குடியானவர்களிட வயல்களுக்குச்சராகமாய் நீர்பாயும்பொருட்டு ஏரிகளின் மதகுகளிலும் ஆற்றுவாய்க்கால்களிலும் ஊரல்வாய்க்கால்களிலுமுள்ள மண்வகையரு மேட்டை துரஸ்துசெய்வது.(5) சிறியவாய்க்கால்களிலும் கிளைவாய்க்கால்களிலும்மேடிட்டிருக்கிற மண்ணை துரஸ்து செய்வது ஏரிகளிலிருந்து போகும்வாய்க்கால்களிலெல்லாம் வயல்களுக்குபோகத் தடையாய் மண் குப்பை கூளம் முதலானவைகளாலுண்டாயிருக்கும் மேட்டை துரஸ்து செய்வதும். (6) ஏரிகளுக்கு ஜலம் வருகிற வாய்க்கால்களை ஒழுங்காய் வைத்திருக்கும்பொருட்டு அந்தந்த இடத்தில் அனுசரித்து வரும் மாமூல் வேலையைச் செய்வது. (7). மழைகாலத்தில் எல்லா ஏரிகளின் கரைகளையும் காவல் காற்பது, அலைகள் மோதி சந்து உண்டாயிருக்கிற பாகங்களுக்கு புல்பத்தை அடிப்பது; கலுங்கல்களைத் திறப்பதும் மூடுவதும்; கரைகள் உடையாமலும் இன்னும் இதர அபாயங்களையும் தடுப்பதற்கு மேல்கண்ட விதமான சில்லறை வேலைகளை பெரும்பாலும் செய்வது. (8) அடைப்புகள் உடையும்போது வளைவுகொண்டங்கள்போடுவதும், அவசியமானால் சாகுபடி காலத்தில் ஏரிகள் கரைகளை தற்காலம் கெட்டிப்படுத்துவதும்; பொதுவாய்ச்சொல்லுமிடத்து, அந்தந்த இடத்திலிருக்கும்குடித்தனக்காரர்கள் மாத்திரமே எடுத்துக்கொள்ளக்கூடிய ஜாக்கிரதையுடனேயும் கவனத்துடனேயும் கெவர்ண்மெண்டாருக்கும் குடியானவர்களுக்கும் பொதுவான ஜலாதாரங்களுக்கு அற்பகெடுதிகளும் நேரிடவொட்டாமல் அவைகளை பாதுகாக்கவேண்டியதும், (அப்படிப்பட்ட அற்ப தீங்குகளைத் தடுக்காமற்போனால் அவைகளால் பின்னிட்டு அதிகநஷ்டமும் விரயமும் உண்டாகும்). (9) ஏரிகரைகளிலுள்ள மதகுகளை பழுதுபார்க்கவேண்டியிருந்தால் அவைகளை பப்ளிக்வொர்க்ஸ்டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பார்வையிடும்பொருட்டு அந்தமதகுகளைத் திறப்பது.

18. ஏரிக் கரைகளிலாவது அல்லது வாய்க்கால்கரைகளிலாவது முட்செடிகள் அதிகமாய் வளர்ந்து போய்விட்டால் அந்த முட்செடிகளை பிடுங்கி எறிவதற்கு பிடிக்கும்செலவை கிராமத்தார்களிடமிருந்து வசூல் செய்யக்கூடாது. ஆகிலும் ஒருதரம் அவைகளை துரஸ்து செய்தபிற்பாடு அவைகளை வளரவொட்டாமல் தடுக்கவேண்டியது கிராமத்தாரிட மாமூல்வேலையைச் சேர்ந்தது. அவசியமானால் இப்பேர்க்கொத்த

விஷயங்களைப்பற்றி ப்ப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டார் கலெக்டருக்கு தெரிவிப்பார்கள். மூதல்தரம் துரஸ்து செய்வதும்அல்லது மறுபடி துரஸ்து செய்வதும் ரெவினியூ டிபார்ட்மெண்டாரைச்சேர்ந்தது.

19. கிராமத்தில் வசிக்கிறவர்களாவது, அல்லது காடுகளைபாதுகாற்க வைத்திருக்கும் பண்டிலிருந்து செலவுசெய்து கெவர்ண்மெண்டாராவது, முன்னடி உத்திரவு பெற்றுக்கொண்டு வேலமரத்தைப்போலொத்த மரங்களையும் கூறைபோடுவதற்காக உபயோகிக்கப்படும் புற்களையும் எருமை மாடுகளுக்கும் பசுக்களும் ஆகாரமாயும் சுதேசத்தில் சொல்லுகிறபடி தாண்டான் கட்டை என்றுபெயருள்ள புல்லையும் ஏரிகளின் கரையில் வெளிப்புறத்தில் நெடுகெநடலாம். இப்படி நிலம் உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்ட விஷயத்தில் பட்டா கொடுக்கக்கூடாது; ஆனல் கெவர்ன்மெண்டாரால் நடப்பட்ட மரங்களாயிருந்தால் அவற்றிற்குத் தீர்வை விதிக்கப்படும்.

20. ஏரிகளில் ஜலமில்லாத போது, ஏரி உள்வாய் உள்பட மேய்கால் பூமியிலெல்லாம் கிராமத்தார்களுக்குள்ள பொதுபாத்தியதைகளை ஜாக்கிரதையாய் பரிபாலித்து வரவேண்டியதென்பது அதிக முக்கியமான விஷயம்; ஏரி உள்வாயிலுள்ள நிலத்தை யாராவது சுதந்தரம் செய்து கொள்ள முயற்சி எடுத்துக்கொள்வதாய்த்தெரியவந்தால் அந்த முயற்சியை செய்யவொட்டாமல் ஜாக்கிரதையாய் தடுத்துப் போடவேண்டியது.

187. (இந்த ஆர்டரானது கிராமநவுக்கர்களுக்கு சம்பந்தப்பட்டதல்லவாகையால் அது தர்ஜிமாசெய்யப்படயில்லை.)

188. கட்டடங்கள் இன்னர்வசத்திலிருக்கவேண்டுமேன்பது:— யாதாவது ஒரு சர்க்கார் கட்டடத்தை ரெவினியூ டிபார்ட்மெண்டாரானவர்கள் காலிசெய்து விட்டாலாவது அல்லது கைவிட்டுவிட்டாலாவது கலெக்டர் அந்த கட்டடத்தை முறைமைப்படி பப்ளிக்வொர்க்ஸ்டிபார்ட்மெண்டாருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியது; அதற்குமேல் அந்தக் கட்டடத்தை என்னவிதமான பைசல் செய்கிறதென்கிற விஷயத்தைப்பற்றி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் கெவர்ண்மெண்டாரிட உத்திரவுகளைப்பெற்றுக்கொள்ளுவார்கள்.

2. பழையகோட்டை மதில்கள் அல்லது மற்றப்பழைய கட்டடங்கள் இவைகளிட சாமான்கள் பொது கட்டடங்களுக்காவது முனிஸீபல் வேலைகளுக்காவது தேவையாயிருக்குமாவென்று பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுடன் கலந்து தெரிந்து கொள்ளாமல் அந்த மதில் முதலானவைகளை ஜனங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது.

191. **கல் மண்முதலானவைகளை பப்ளிக்வோர்க்ஸ் டிபார்ட் மேண்டார் வெட்டி எடுப்பது:—**பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் மண், கல், கூழாங்கல் முதலானவைகளை சர்க்கார்வேலைக்காக வெட்டிஎடுப்ப தற்காக கரம்புநிலத்தை உபயோகப்படுத்தும்பொருட்டு அடியிற்கண்ட விதிகள் கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.—பொதுவாய் சொல்லுமிடத்து கெவர்ண்மெண்டாருக்குச் சொந்தமாகிய ரஸ்தாக்கள் அணைகள் ஏரிக்கரைகள், இப்பேர்ப்பட்ட மற்றவேலைகளைசெய்யவும் பழுது பார்க்கவும்தேவையான மண்முதலானவைகளைவெட்டிஎடுப்பதற்காகச் சர்க்கார் கரம்பு நிலங்களை ரெவினியூ டிபார்ட்மெண்டாருடன் கலந்தாலோசியாமலே உபயோகப்படுத்திக்கொள்ளலாம். (2) தேவையான மண் முதலானவைகளை டிபார்ட்மெண்டாரே—அதாவது பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரிட மேல்விசாரணையின் பேரில்—வெட்டிஎடுத்தால், ரேஞ்சு ஆபீசர் அல்லது டிவிஷனல் ஓவர்சியரானவர் எந்த நிலத்திலிருந்து மண் முதலானவைகள் வெட்டி எடுக்கப்படவேண்டுமோ அந்த நிலமானது வாஸ்தவமாய் யாருக்கும் பாத்தியதையில்லாத சர்க்கார் கரம்பு தான்என்று கிராமத்தாருடன் கலந்தாவது அல்லது வேறே எவ்விதமாயாவது தமக்குள் திருப்திகரமாய் தெரிந்து கொண்டு மண் முதலானவைகளை வெட்டிஎடுப்பதற்காக எல்லைசள் குறிக்க எத்தனிக்க வேண்டியது; அப்படி குறிக்கும் போது தற்காலமிருக்கப்பட்ட ரஸ்தாக்களுக்குக் கெடுதியுண்டாகாமலிருக்கும்பொருட்டும் ரஸ்தாவின் பக்கத்திலிருந்து கிரமமான தூரத்தில் குழிகளெல்லாம் வெட்டப்படும்பொருட்டும்முக்கியமாய் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. (3) மண் முதலிய சாமான்கள் மெத்த அதிகமாயிருந்து வேண்டிய போதெல்லாம் அவைகளை உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடியதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் மண்முதலானவைகளை வெட்டியெடுக்க கெவர்ண்மெண்டு நிலமாக உபயோகிக்கும் பொருட்டு பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாருக்கு அந்த நிலத்தை ஒப்புவித்து விடும்படி தாசில்தாரைகோரிக்கொள்ளவேண்டியது. (4) மண்முதலியவைகளை வெட்டி எடுப்பதற்காக பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டார் கொஞ்சகாலம்வரையில் நிலத்தை உபயோகப் படுத்திக்கொள்ளும்விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் அந்த நிலத்திற்காக கொடுக்கப்படும் தர்காஸ்துகளைப்பற்றி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாருடன் முன்னுடி கலக்காமல் அந்த தர்காஸ்துகளை அங்கீகாரம் செய்யாமல் இருக்கும்பொருட்டு தாசில்தாருக்குத் தெரிவிக்கப்படும். (5) சர்க்கார் நிலத்தில் மண் முதலானது வெட்டி எடுக்கக் கண்ட்ராக்டர்கள் (குத்தகை எடுத்துக் கொள்கிறவர்கள்) நேமிக்கப்பட்டால் பலான கண்ட்ராக்டுதாரன் பலான கரம்பு நிலங்களின் பலான அளவுக்கு மண் முதலிய

வைகளை வெட்டியெடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறானென்று ரேஞ் சாபீஸரானவர் ஒரு ஸர்டிபிகேட் தயார்செய்து அதை அவனுக்குக்கொடுக்க வேண்டியது. பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரால் மண் முதலானவை கள்வெட்டி எடுக்கப்படும் போது ரஸ்தாக்களில் பிரவேசித்து மண் முதலானவைகளை வெட்டாமல் இருக்க எப்படியானுல் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஜவாப்புதாரிகளோ அதேமாதிரியாய் கண்ட்ராக்டர்களானவர்கள் ரஸ்தாக்களில் பிரவேசித்து மண் வெட்டாமலிருக்கும் பொருட்டும் (அவர்கள் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்கள்) ஜவாப்புதாரிகளாவார்கள். (6) கணக்கர்களும் மணியக்காரர்களும் தங்கள் தங்கள் கிராமங்களில் கரம்பு நிலங்கள் இருப்பதைப்பற்றி பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குத் தேவையான சமாசாரங்களைஎல்லாம் தெரிவிக்கவேண்டியதுடன் மண் முதலானவைகளை வெட்டி எடுக்க ஆரம்பிக்கும்போதெல்லாம் தாசீல்தாருக்குத் தெரியப்படுத்த வேண்டியது. (7) கெவர்ண்மெண்டு கரம்பு நிலத்தின் மூலமாய் புது ரஸ்தாக்களையாவது அல்லது கரைகளையாவது போடும்போது ரஸ்தாவின் மத்தியிலிருந்து பிரதி பக்கத்திலும் உயர்ந்தபக்ஷம் 22 கஜம் பக்க நிலம் விட வேண்டியது.

2. ஜனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் (ப்ரைவேட் நிலங்கள்) விஷயமாய் அடியில் கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.—(1) மண் முதலானவைகளை வெட்டி எடுப்பதற்காக சொந்தக்காரனிட சம்மதியில்லாமல் சொந்த நிலங்களில் பிரவேசிக்கும் எவர் பேரிலாவது (அவன் கண்ட்ராக்டரா யிருந்தாலும் கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தரா யிருந்தாலும்), சொந்தக்காரன் கோர்ட்டில் பிரியாது செய்யும் பக்ஷத்தில் அவசரத்தை முன்னிட்டு அப்படி யனுமதியன்றியில் பிரவேசித்ததாகருஜுபடுத்தினுலொழிய அப்படி பிரவேசிப்பவரே அந்தபிரியாதுக்கு ஜவாப்தாரியாவார். (2) பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களும்அவர்களிட கண்டிராக்டர்களும் சொந்த நிலத்தில் சொந்தக்காரனிட அனுமதியன்றியில் பிரவேசிக்கக்கூடாது. சொந்தக்காரர்களும் பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரும் (அல்லது அவர்களிட கண்டிராக்டரும்) பலான ஓர் உடன்படிக்கைக்கு ஒத்துவராமற்போனுல் ரெவினியூ ஆபீஸர் அவர்களுக்கு ஒத்தாசைசெய்ய வேண்டும்; அவசியமானுல், நிலத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை (லாண்ட் அக்விஸிஷன் ஆக்டு, Land Acquisition Act) அனுஸரித்து நிலத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டியது. (3) சொந்த நிலத்தில் மண் முதலானவைகள் வெட்டி எடுக்கப்பட்டால் பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள்

சற்றேனும் தாமதமன்றியில் அப்படி எடுக்கப்பட்ட பாகத்தை அளவிடவேண்டியது. (4) மண் முதலானவைகளை வெட்டி எடுக்கும்பொருட்டு (சொந்தக்காரர்களுடன்) சமாதானமான உடன்படிக்கைகள் செய்யும் விஷயத்தில் கூடியவரையில் தாசில்தார்கள் உதவிசெய்ய வேண்டும்; ஏரிக்கரைகள், இன்னும் மற்றக்கரைகள், இவைகளைப் பழுதுபார்ப்பதாயிருந்து அப்போது தேவையான மண்முதலானவைகளை வெட்டியெடுத்துக் கொள்ளும் பொருட்டு இவைகளுக்கடுத்தாப்போல் நிலம் விட்டு வைக்கவேண்டிய விஷயத்தில் தப்பாமல் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது.

3. சவுகரியப்படும்போதெல்லாம் ஏரிகளைப் பழுதுபார்க்கும்பொருட்டு மண்முதலானவைகளை ஏரி உள்வாயில் வெட்டி எடுக்கவேண்டியது.

XIV. (14)-வது அதிகாரம்.

சுகாதாரசம்பந்தமாயும் வைத்திய விஷயங்கள் சம்பந்தமாயும்.

192. புதியபட்டணங்கள்:—ரெயில்வேஸ்டேஷன்களுக்குச்சமீபத்தில் உண்டாக்கக்கூடியபட்டணங்களுக்கு இடம் விட்டுவைப்பதைப்பற்றி கெவர்ன்மெண்டாரால் விதிக்கப்பட்டிருக்கிற குறிப்புகளை அது சம்பந்தமாயும் (அதாவது பட்டணங்கள் உண்டாக்கிக்கொள்ளும் விஷயமாயும்) புதுப் பட்டணங்கள் உண்டாக்கும் மற்ற விஷயங்கள் சம்பந்தமாயும் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அடியிற்கண்ட அந்த குறிப்புகளில் முதல் பாகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஸ்திரமான பட்டாவுக்குப் பதிலாக இப்போது சாஸனங்கள் கொடுக்கப்படுகின்றன:—"இது விஷயமாய் அளவிற்கு மிஞ்சி பிரயத்தனம் செய்யக்கூடாதென்றும், தெருக்கள் அகலமாயும் ஒழுங்காயும் இருக்கும் பொருட்டும் ஜலதாரைகளுக்கு போதுமான இடம் விடாமல் நெருக்கமாய் குடியிருக்கவொட்டாமல் தடுக்கும் பொருட்டு மாத்திரமே விதிகளை அனுஷ்டிக்கவேண்டியது. கெவர்ண்மெண்டுக்குச் சொந்தமான கரம்பு நிலம் வீடுகட்டிக்கொள்வதற்கு சவுகரியமானதாயிருக்கும் பட்சத்தில் தெருக்களுக்காகவும் மனைகளுக்சாகவும் இடம் குறித்துவைக்கலாம்; யாராவது விண்ணப்பம் செய்துகொள்வதின் பேரில் சில ஷரத்துகள் கண்டு அந்த இடங்களை அடமானம் செய்யலாம், அந்த ஷரத்துகளாவன:—ஆறுமாதத்திற்குள்ளாவது அல்லது குறிப்பிட்ட வேறேகாலத்திற்குள்ளாவது கட்டடம் கட்டவேண்டியதென்பது, வீட்டுக்கெதிரில் ஜலதாரை கட்டுவதற்காவது அல்லது அதற்காக வேண்டியகல்லுக்காவது சொற்பதுகை செலுத்துவது, அந்த நிலத்திற்காக வருஷவாரியில் ஒரு துகைசெலுத்துவது; இவைகளைப்போலொத்த நிபந்தனைகள் செய்ய வேண்டியது அவசியம், ஏனென்றால் ஜனங்கள் நிலங்களை சம்பாதித்துக்கொள்ளும் விஷயத்தில்ரொம்ப இஷ்டத்துடன் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள், பிறகு அவைகளை அனுபோகத்திற்கு எடுத்துக்கொள்ளாமல் சில வருஷகாலம் அச்ரத்தையாயிருக்கிறார்கள். இன்னமாதிரியாய் கட்டடம் கட்டவேண்டியதென்று ஷரத்து செய்யக்கூடாது; ஆனால் உயர்ந்த அந்தஸ்துள்ள ஜனங்களுக்கென்று விடப்பட்டிருக்கிறபாக

ங்களில் ஓடுவீடாவது மெத்தை (அல்லது மாடி) வீடாவது கட்டவேண்டிய தென்கிறமாதிரியான பொதுஷரத்துகள் செய்யக்கூடும்; இப்பேர்ப்பட்ட வகுப்பினர்களுக்காக விடப்படும் இடங்களும் விசாலமுள்ளவைகளாயிருக்கவேண்டும். ஏழை ஜனங்களுக்கென்று விடப்பட்டிருக்கிற இடங்ள் சிறியவைகளாயிருக்க வேண்டும். அந்த இடங்களை அனுபோகப்படுத்திக் கொள்கிறவர்கள் அவைகளை உட்பிரிவினை செய்யக் கூடாது; மேற்கண்ட ஷரத்துகளுக்காவது அல்லது அவைகளைப்போலொத்த ஷரத்துகளுக்குட்பட்டு நிலத்தை முழுசுதந்தரத்துடன் அனுபவிக்கும்படியாய் அடமானம் செய்யவேண்டியது; ஒருஸ்திரமான பட்டாவில்நிபந்தனைகள் கண்டு அதையே சாஸனமாகக் கொடுக்கவேண்டியது. யாரிட அனுபோகத்திலுமிராத கெவர்ண்மெண்டு நிலம் சமீபத்தில் இல்லாத இடங்களில், புதிதாய் குடியேறுகிறவர்கள் சொந்த நிலங்களில்தான் வீடுகள் முதலானது கட்டிக்கொள்ள வேண்டியதாய் அவசியம் நேரிடும், ஆனால் இப்பேர்ப்பட்ட விஷயத்திலும் கலெக்டரும் ரெயில்வே அதிகாரிகளும் சேர்ந்துமேற்சொல்லப்பட்ட விஷயங்களை கவனித்து மெத்த உதவிசெய்யக்கூடும். முக்கியமாய்ச் சொல்லுமிடத்து, இனாம்நிலங்களும் ஜமீன்தாரி நிலங்களும் தவிர மற்ற நிலங்களெல்லாம் கிரமமாய் தரம்தீர்வைக்குட்பட்டவைதான்; இந்த இடங்களில் வாஸ்தவ்யமாய் வீடு கட்டிக்கொள்வதற்காகவும் தெருக்களுக்காகவும் நல்லெண்ணத்துடன் எடுத்துக்கொள்ளப்பட்டநிலத்திற்காக மேற்கண்ட விதமாய் செலுத்த வேண்டிய தீர்வையை மன்னிப்பு செய்யகெவர்ண்மெண்டார் ஸர்வ சம்மதமுள்ளவர்களாயிருப்பார்கள்; இப்படி தீர்வையை மன்னிப்பு செய்வதினாலேயே, மேலேசொல்லப்பட விதிகளுக்குட்பட பட்டாதாரன் இஷ்டமுள்ளவனாயிருக்கக்கூடும்; அம்மாதிரியாய்எடுத்துக்கொள்ளப்பட்ட தன்னிட நிலத்திற்கு வாடிகைவிதித்து வசூல்செய்துகொள்ள யாதொரு ஆக்ஷேபணையுமில்லை; அந்த நிலத்திற்கு முனிஸிபல்வரி அல்லது ஜலதாரைசுத்தம்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட வரி விதிக்கப்படும் புதிதாய்ப்பட்டணம் உண்டாக்கிக் கொள்வதற்காக கெவர்ண்மெண்டு நிலத்தில்இடம் விடப்பட்டிருந்தாலும் விடப்பட்டிராமற்போனாலும், சொந்த நிலத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள சவுகரியப்பட்டு கட்டிக்கொள்ளும்பட்சத்தில் யாதொரு நிபந்தனைகளும் (அவைகள்மேலேகுறிப்பிட்டுச் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு சம்பந்தப்பட்டவைகளாயிருந்தாலொழிய) ஏற்படுத்தக்கூடாது. மேலேசொல்லப்பட்ட ஏற்பாட்டினால் இனிமேல் விருத்தி உண்டாக காரணமுண்டாகுமே தவிர முதலில் யாதொரு பலனும் உண்டாகாது. தெருக்கள் அகலமானவைகளாயும் ஒழுங்குள்ளவைகளாயும் சீர்திருத்தப்படலாம், பிரதிமனையும் போதுமான விசாலமுள்ளதாக்கலாம். ஆனால் விருத்தி உண்டாக வேண்டியவைக

ளெல்லாம் இவைகள்மாத்திரமேயல்ல ; நாளாவட்டத்தில் இன்னும் விருத்தி உண்டாகலாமென்று நம்பஹேதுவுண்டு. அதிகமாய் விர்த்தியடைய அனேக வித ஹேதுக்கள்உண்டு. நேர்த்தியாயும் ஸ்திரமாயும்இருக்கப்பட்டரெயில்வே கட்டடங்களை பார்ப்பது, பலவித ரெயில்வே உத்தியோகஸ்தர்களுடன் சம்பாஷணை செய்வது, சென்னைப்பட்டணம் முதலான இடங்களை அடிக்கடி போய் பார்ப்பது, ரெயில்வே உண்டானதால் சரக்குகள் மலிவானவிலைக்கு கிடைப்பது ; அதமபட்சம் சிலபேர்களுக்காவது செல்வம் விருத்தியாவது, ஒருதரம் ஒருகாரியத்தை ஆரம்பித்துவிட்ட பிற்பாடு அதை போட்டிபோட்டாவது நிறைவேற்றவேணுமென்று உண்டாகும் தன்மை ; கெவர்ண்மெண்டார் நோக்கம்வைத்திருந்த பலன்களெல்லாம் சித்தியாகும் பொருட்டு கெவர்ண்மெண்டார் நேராய் பிரவேசித்து முயலுவதைவிட இவைகளெல்லாம்சேர்ந்து நிச்சயமாக அந்த பலன்சித்தியாகஹேதுவாகும்; கெவர்ண்மெண்டார் நேராய் முயற்சி எடுத்துக்கொள்வதனல் உண்டாகக்கூடிய விர்த்தியைவிட நேராய் இம்மாதிரியாக உண்டான விர்த்தியானது நிச்சயமாய் எங்கும் பரவக்கூடும் ; கெவர்ண்மெண்டார் நேராய் உட்புகுந்து விர்த்தி செய்யும்பொருட்டு முயலும்பட்சத்தில் சகல காரியமும் கெவர்ண்மெண்டாரிட வேலையாக பாவிக்கப்பட்டு அந்தவேலைகள்மாதிரி செய்ய ஜனங்கள் முயலமாட்டார்கள். மேற்கண்ட கெவர்ண்மெண்டாரிட நோக்கங்களை ரெயில் போகிற ஜில்லாக்களிலுள்ள கலெக்டர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டு அவர்களுக்கு போர்டார் தெரியப்படுத்துவார்களாக. ரெயில்வேஸ்டேஷன்களுக்கு சமீபத்தில் கெவர்ண்மெண்டுக்குச் சொந்தமான கரம்பு நிலமிருக்கும்பட்சத்தில், கலெக்டரானவர் ரெயில்வே ரஸ்தாவுக்குப் பிரதிபக்கத்திலும் ஓர் சுமாரானவிஸ்தீரணத்திற்குள் மனைகளுக்காகவும் தெருக்களுக்காகவும் நிலம் குறிப்பிடவேண்டியது. இந்தநிலம் புதுசாய் குடியேறுகிறதற்கு உத்தேசித்திருக்கும் ஜனங்களுக்கு அடமானம் செய்யப்படும்.

2. இந்தவிஷயங்களில் முக்கியமாய் கவனம்வைக்கவேண்டிய அம்சங்களாவன:—விசாலமான ராஜபாட்டைஉண்டாக்குவது நன்றாய் காற்றுவீசும்படியாக இடம்விடுவது; செம்மையாய் கழிவுஜலம் போகும்படி ஜலதாரைகளைக்கட்டுவது, ஜலம் பரிசுத்தமாயும் எல்லாருக்கும் பிரயோஜனப்படக்கூடியதாயும் இருக்கும்பொருட்டு ஜலம்வரும்வழிகளை பாதுகார்ப்பது.

3. (இந்த இடங்களில்) உத்திரவில்லாமலும் ஒழுங்கீனமாயும் யாரும் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பதற்கு தாசில்தார்களை ஜவாப்புதாரிகளாக்க வேண்டியது.

193. **ஆடுமாடுகளுக்கு வரும்நோய்:**—ஆடுமாடுகள் வியாதியினால் சாகாமலிருக்கும்படியாக அவைகளுக்கு வியாதியுண்டாகாமல் தடுக்

கும்பொருட்டு எடுத்துக்கொள்ளவேண்டிய சுகம் பாதுகாக்கும் முயற்சிகளைப்பற்றி ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்கும் குடியானவர்களுக்கும் தெரிவிக்கும்பொருட்டு கெவர்ண்மெண்டார் இந்த ராஜதானியில் அநேகமாய் பிரதிஜில்லாவுக்கும் ஆடுமாடுகளுக்குவரும் வியாதியை சொஸ்தப்படுத்தும் இன்ஸ்பெக்டர் என்றும் ஒரு உத்தியோகஸ்தரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எல்லா டிவிஷனல் ஆபீஸர்களுக்கும் தாலூகா ஆபீசர்களுக்கும் ஆடு மாடுகளுக்குவரும் வியாதியைப்பற்றி வியக்தமாய் எடுத்துச் சொல்லியிருக்கிற ஒரு புஸ்தகம் அனுப்பப்பட்டிருக்கிறது; தவிரவும் இந்த புஸ்தகத்தை தமிழிலும் தெலுங்கிலும் மொழி பெயர்த்து ஜில்லா கெஜட்டுகளில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. புஸ்தகத்தில் கண்ட குறிப்புகளையும் அந்தந்த இடத்திலுள்ள இன்ஸ்பெக்டர்களால் கற்பிக்கப்படும் குறிப்புகளையும் ஆடு மாடுகளுக்கு வியாதிகளுண்டாகும்போது அனுஸரிக்கும்படி குடியானவர்களை உற்சாகப்படுத்தவேண்டியது. எதாவது வியாதிகளுண்டாகும் பட்சத்தில் அதைப்பற்றி உடனே கிராமநவுக்கர்கள் அந்த இடத்திலுள்ள இன்ஸ்பெக்டர்களுக்கு தெரிவிக்கவேண்டியது. அவர் அவசியமானால் எந்த கிராமங்களில் நோய் உண்டாயிருக்கிறதோஅவ்விடங்களில் போய் பார்வையிட்டு எந்த மாதிரி அவைகளை சொஸ்தப்படுத்த வேணுமோ அவைகளைப்பற்றியும் நோய்களை வியாபிக்கவொட்டாமல் தடுக்கும் பொருட்டு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளைப்பற்றியும் போதிக்க வேண்டியது. அந்தந்த இடத்திலுள்ள இன்ஸ்பெக்டர்களிடத்தில் ஆடு மாடு வியாதிகளுக்காக வேண்டிய மருந்துகள் எப்போதும் கையிருப்பிருக்கும். நோய்களை சொஸ்தம்செய்யஇனிஸ்பெக்டரிடத்தில் அவர்களிட கற்பனைகள் பிரகாரம் நடக்கும் பொருட்டும் கூடியதக்கமுயற்சி எடுத்துக்கொண்டு குடியானவர்களை உற்சாகப்படுத்தவேண்டியது. அந்த இடத்திலுள்ளஇன்ஸ்பெக்டர்களிடத்தில் ஆலோசனைசெய்யும்பொருட்டும் அவர்களிட உத்திரவுகள்பிரகாரம் நடக்கும்பொருட்டும் கூடியதக்க முயற்சிஎடுத்துக்கொண்டு குடியானவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது, அந்தந்த இடத்திலுள்ள இன்ஸ்பெக்டர்களுடைய கற்பனைகளை முக்கியமாய் கவனிக்கும் பொருட்டும் கூடியவரையில் அவைகள்பிரகாரம் நடக்கும் பொருட்டும் தாலூகா உத்தியோகஸ்தர்களுக்கும் கிராமநவுக்கர்களுக்கும் உத்திரவு செய்யவேண்டியது. தொத்து நோய்களால் பாதிக்கப்படுகின்ற பிராணிகளை தங்களிட மற்ற ஆடு மாடுகளின் கூட்டத்திலிருந்து விலக்கும்படியாயும் வியாதி அடையாதபிராணிகள் புழங்குமுன்பாக அந்தக் கட்டடங்களின் சுவறுகளை தேய்த்து சுண்ணாம்படிக்கும் படியாயும் ஆடு மாடுகளின் சொந்தக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியது. வியாதி பிடித்த ஆடு மாடுகளிருந்த விடத்திலுள்ள மரசாமான்களை, தொத்து வியாதி

யை மாற்றுகிற திராவகத்தை வென்னீருடன் கலந்து ஜாக்கிரதையாய்த் தேய்த்து அலம்ப வேண்டியது; வியாதியினால் இறந்துபோன பிராணிகளின் தோல்களைக் கொளுத்தி அழித்துப்போடவேண்டியது. ஆடு மாடுகளின் சரியான விருத்தாந்தங்களை கிராம நவுக்கர்கள் அனுப்புவிக்கிறார்களாவென்று கவனிக்கும்படி தாலூகா அதிகாரிகளுக்கு உத்திரவு செய்யவேண்டியது.

3. ஆடுமாடுகளுக்கு வரும் நோயினால் இறந்துபோன பிராணிகளிட தோல்களை எப்போதும் அழித்துப்போடவேண்டியது. கலெக்டர்கள் தங்களுக்கு யுக்தமாய்த்தோன்றும்போதெல்லாம் 1866 ஹூ த்திய 2–வது ஆக்டை பிரயோஜனப்படுத்தும்பொருட்டு அனுமதி கோரிக்கொள்ள வேண்டியது.

194. ஜெனன மரணங்களைப்பதிவுசெய்வது:—ஜீவஜெந்துக்களின்ஜெனனமரணங்களைப்பதிவுசெய்யும் வழக்கமானது 1865 ஹூ த்தில் ஏற்படுத்தப்பட்டு வெகுகாலமாய் ஊர்ஜிதத்தில் இருக்கிறபடியால் அபூர்த்தியான கணக்குகளையாவது பிழையுள்ள கணக்குகளையாவது கிராம நவுக்கர்கள் அனுப்பஹேது வில்லை (அதாவது அனுப்பக்கூடாது, அப்படியனுப்பினால் அதற்காக சொல்லப்படும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.) கலெக்டர்களும் டிவிஷனலாபீஸர்களும் வருஷவாரி ஜமாபந்திசெய்யும்போது மரண ரிஜிஸ்டர்களை பரிசீலனை செய்து பட்டாபெற்றுக்கொள்ள ஆஜராயிருக்கிற குடியானவர்களை விசாரணைசெய்து அந்த ரிஜிஸ்டர்கள் சரியாயிருக்கின்றனவா இல்லையா வென்று தணிக்கைசெய்யவேண்டியது. கிராமத்தார்களுடனும் கிராமநவுக்கர்களுடனேயும் கலந்து ஜெனன மரண கணக்குகளில் தாங்களே இம்மாதிரியாக கவனம் செலுத்தி அந்த கணக்குகள் எப்போதும் திருத்தமுள்ளவைகளாய் செய்விக்கவேண்டியது. ஆகிலும் அநீதியாய் கண்டிப்பான உத்திரவுகள் பிறப்பிப்பதனால் பொய்க்கணக்குகள் எழுதஹேது உண்டாகும் என்பதையும் மறந்து விடக்கூடாது. வாஸ்தவ்யமாய் கணக்குகளை திருத்தமாய் செய்வித்து விருத்தி செய்வதானது படிப்படியாகத்தான் உண்டாகக்கூடும்.

2. ஜமீன்தார்கள் தங்களிலாகாவிலுள்ள பிராணிகளின் ஜனனமரணங்களைப்பற்றிப் பிழையில்லாமலும் கிரமமான காலத்திலும் தங்கள் கணக்கர்கள் மூலமாய்த் தெரிவிக்க வேண்டியது முக்கியமானதென்பதைப் பற்றிக் கலெக்டர்கள் ஜமீன்தார்களுக்கு வற்புறுத்தி சொல்லவேண்டியது.

3. வாந்திபேதியினால் இறந்துபோவதைப்பற்றி பிரதி தினமும் ரிபோர்ட்செய்துவரும் விஷயங்களில் போலீஸாரால் செய்யப்படக்கூடிய உதவி

யையும் அடிக்கடி செய்வித்துக் கொள்ளலாம்; போலீஸாரால் தெரிவிக்கப் படும் சமாசாரங்களானவை கிராமத்திலிருந்து அனுப்பப்படும் மரணக்கணக் குகளை தணிக்கைசெய்வதில் பிரயோஜனப்படும்.

195. பெருவாரி நோய்கள் உண்டாவது.—யாதாவதொரு தாசில் தாராவது அல்லது டிப்டி தாசில்தாராவது தம்மிட தாலூகாவிலாவது அல் லது இலாகாவிலாவது வாந்திபேதி முதலாகிய பெருவாரி நோய்கள் கண்டி ருப்பதாகத் தமக்குத் தெரியவரும்போதெல்லாம் அந்தசங்கதியைப்பற்றி உடனே ஏககாலத்தில் ஜில்லாகலெக்டருக்கும் ஜில்லாமெடிகல் (வைத்திய) உத்தியோகஸ்தருக்கும் அந்ததாலூகாவிகலோ அல்லது டிவிஷனிலோ தரும வைத்தியசாலை ஒன்றிருக்கும்பட்சத்திவ் அதிலிருக்கும் வைத்திய உத்தி யோகஸ்தருக்கும் தெரிவிக்கவேண்டியது.

196. பிரத்தியட்சமாய் முழுகிப்போனஜனங்கள்:—பிரத்தியட்ச மாய் முழுகிப்போனஜனங்கள் விஷயமாய் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதற்கு ஏற்படுத்தப்பட்ட கற்பனைகளின் தாத்பரியத்தை கலெக் டர்கள் தங்கள் ஜில்லாக்களில் தெரிவிக்கவேண்டியது. இந்தகற்பனைகளட ங்கிய புஸ்தகங்கள் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு பட்வாடா செய்யப்பட்டிருக்கின்றன; அவைகளை அடிக்கடி ஜில்லாம்கஜட்டில் வில் லேஜ் ஷீட்டில் சுயபாஷையில் பிரசுரம்செய்யவேண்டியது.

197. வெள்ளம்வரும் சமாசாரத்தைப்பற்றி தந்தி மூலமாய் தெரிவிக்கவேண்டியது:—பெரியநதிகளில் வழக்கத்துக்கு மிஞ்சி ஜாஸ்தி வெள்ளம் வருவதால் அடிக்கடி நஷ்டம் நேரிடுகிறது; வெள்ளம் வருவ தைப்பற்றி காலகிரமத்தில் தெரிவிக்கும்பட்சத்தில் நஷ்டம் நேரிடாமலிருக் கச் செய்யக்கூடும்; கலெக்டரானவர்கள் தங்கள்ஜில்லாக்களில் அப்பேர்ப் பட்ட வெள்ளங்கள் உண்டாகும்பட்சத்தில் வெள்ளத்தினுல் பாதிக்கப்படக் கூடிய ஆறுபோகும் வழியிலுள்ள ஜில்லாக்களின் கலெக்டர்களுக்கு அந்த சங்கதியைப்பற்றி உடனே தந்தி மூலமாய் தெரியப்படுத்தவேண்டியது.

198. ஐரோப்பிய கிறிஸ்தவர்களிட ஸ்மசானங்கள்: ஐரோப் பிய கிறிஸ்தவர்களிறந்துபோனவர்களைப் புதைக்கும் சமாதிகளானது அந்த ந்த ஊருக்கு ஏற்பட்டிருக்கும் ரெஸிடென்ட்ச்சாபளின் (என்றால் ஐரோ பாதேசத்திலிருந்து இங்கேவந்து வாசம்செய்கிற கிறுஸ்தவ குரு) வசத்தி லும் ரெஸிடென்ட்ச்சாப்ளேன் இல்லாமலிருக்கிற இடங்களில் அவடத்தி லுள்ள பிரதான மாஜிஸ்ட்ரேட் வசத்திலும் அல்லது அந்தசமாதிகள் ராணு வபோர்சேவகர்களிருக்குமிடத்துக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால் தலைமை ராணுவ உத்தியோகஸ்தன் வசத்திலுமிருக்கின்றன. சர்ச் கம்மிட்டீ (மாதா

க்கோவில் சபையார்) இருக்கிற வெளிஇடங்களில் உள்ள பொதுசமாதியானது அந்தகம்மீட்டி இல்லாத இடங்களில் அந்தஜில்லா மாஜிஸ்டிரேட்டினுல் நியமிக்கப்படும் யாதாவதொரு கீழ்உத்தியோகஸ்தரிட வசமாகும்; சலெக்டர்களாவது அல்லது அவர்களிட கெவர்ண்மெண்டு அஸிஸட்டெண்டுகளாவது வருஷவாரியில் இந்த சமாதிகளைப்போய்ப் பார்வையிட்டு அனுபந்தத்தில் கண்ட பாரப்பிரகாரம் சுருக்கமாய் கெவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்ய வேண்டியது; அந்த சமாதிகளைப் பழுது பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கும் பட்சத்தில் அதற்கு வேண்டிய பணத்துகைகளை வெனரபில் ஆர்ச்டேகன (எல்லாரும்வணங்கத்தக்க உபாத்தியக்ஷகுரு) சேகரித்து வைக்க ஏற்பாடு செய்யும் பொருட்டு அந்தகுருவின் மூலமாய்க் கெவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் அனுப்பவேண்டியது; இந்த ரிபோர்டில்பிரஸ்தாபிக்கப் படவேண்டிய விஷயங்களாவன:—

(எ.) கெவர்ன்மெண்டுச்சாப்ளேன் வசத்திலாவது அல்லது கெவர்ண்மெண்டாரால் சிப்பந்தி ஏற்படுத்திப் பராமரித்து வரப்படுகிறதாகவாவதிருக்கிற ஐரோப்பிய கிறிஸ்தவர்களிட சமாதிகளைப்பற்றியும் ;

(ப.) ஐரோப்பிய கிருஸ்தவர்களிட சமாதிகள் கைவிடப்பட்டவைகளைப்பற்றியும் எவ்விதமானகோரிகளைபற்றியும்பழைய காலத்திய கோரிகள் அல்லது சமாதிக் கல்லறைகளிட நிலமையைப்பற்றியும் முக்கியமாய்கவனிக்கவேண்டியது. ஜில்லாக்கள் எங்கும் இங்கு மங்குமிருக்கிற கிறிஸ்தவ கோரிகளெல்லாம்அந்தந்த இடங்களிலுள்ளஸிவில்அதிகாரிவசத்திலிருக்கின்றன.

199. வைத்திய உத்தியோகஸ்தர்கள் :—வைத்திய விஷயமாய் உதவிசெய்யும் பொருட்டு ரிவினியூ ஆபீஸர்களில் வைத்திய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் வெளியில் ஸர்கியூட் போய் தங்களிட கஸ்பாக்களுக்குத் திரும்பிவரும்போது அந்த வைத்திய உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குத் தேவையில்லை. அப்பேர்ப்பட்ட விஷயத்தில் அந்த இடத்திலுள்ள பிரதான வைத்திய உத்தியோகஸ்தரிடம் போய் அவரிட உத்திரவுபடி நடந்து கொள்ளும் படிக்கும் வெளியில் சர்க்கியூட் போகிறதற்காக மறுபடி அவர்கள் தேவை யென்று வரவழைக்கப்படுகிறவரையில் அங்கேயே இருக்கும்படிக்கும் அந்த வைத்திய கீழ் உத்தியோகஸ்தர்களுககு ரிவினியூ ஆபீஸர்கள் உத்திரவு செய்ய வேண்டியது.

2. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் வைத்திய கீழ் உத்தியோகஸ்தர்கள் தங்களிடத்தில் (ரிவினியூ) டிபார்ட்மெண்டு உபயோகங்களுக்காக ஒப்புவிக்கப்பட்ட மருந்துகளையும் சாமான்களையும் தங்கள் வசத்தில் தான் வைத்துக்கொள்ள வேண்டியது. ஆனால் பிரதான வைத்தியஉத்தியோகஸ்தரானவர் கீழ் வைத்தியஉத்தியோகஸ்தர்கள் தம்மிட மேல் விசாரணைக்குட்பட்டு வரும் போதும் தம்மிட மேல்விசாரணையை விட்டுப் போகும்போதும் அவர்களிடத்திலிருக்கிற கையிருப்புசாமான்களை பரிசீலனை செய்யவும் அவைகளை தம்மிட ஆபீஸ் கையிருப்பு கணக்கை வைத்துக்கொண்டு தணிக்கை செய்யவும் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

200. வெளியில்போய் வைத்தியம்பார்ப்பது:—சென்னைராஜதானியில் கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு வைத்தியம்பார்க்க வேண்டிய விஷயத்தில் அடியில்கண்ட விதிகளை கெவர்ண்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்:—

சென்னைப்பட்டணம் டௌனுக்கு வெளிப்பட்ட ஜில்லாக்களில்:—100 ரூபாய், அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளமுள்ள கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களெல்லாரும் (7வது கேஸில்கண்டவர்கள்நீங்கலாக) வைத்திய உத்தியோகஸ்தர்களின் வீட்டுக்குப்போய் வைத்தியம் செய்துகொள்ள கூடாமையான வியாதியிலிருக்கும்போது அந்தஜில்லாவிலோ அல்லது அந்த இடத்திலோ உள்ள வைத்திய உத்தியோகஸ்தர்களை தங்கள் வீட்டிலேயே வரவழைத்து வைத்தியம்பார்த்துக்கொள்ள பாத்தியதையுண்டு.

2. 100 ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ள கெவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை அவர்களிட வீட்டுக்கே போய் வைத்திய உத்தியோகஸ்தர் பார்வையிடவேண்டியது யுக்தமாயிருக்கிற விஷயங்கள் அடிக்கடி நேரிடக்கூடியதென்பது வாஸ்தவ்வியமே. அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்காக யாதொரு திட்டமான விதியை ஏற்படுத்துவதை விட வைத்திய உத்தியோகஸ்தர்களே அவர்கள் கிரமமான இஷ்டத்துக்கும் சவுகரியத்திற்கும் தக்கபடிநடந்து கொள்வார்களென்று கெவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்.

3. வியாதிஸ்தராயிருக்கிற யாதொரு கெவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரானவர் வைத்திய உத்தியோகஸ்தரிட ஹோதாவையும் பலான விஷயத்தின் சந்தர்ப்பங்களையும் கிரமமாய் அனுசரித்து வைத்தியம் பார்த்துக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பலான இடத்தில் பலான காலத்தில் வைத்திய உத்தியோகஸ்தரிகளிடம்போக அசக்தர்களாயிருந்தாலொழிய கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களிட வீட்டுக்கேவந்து அவர்களுக்கு வையித்தியம்பார்க்க வேண்டுமென்பது வைத்திய உத்தியோகஸ்தர்கள் கடமையல்லவென்று வியக்தமாய் தெரிந்துகொள்ளவேண்டியது.

4. யாதாவதொரு டௌனில் அஸிஸ்டென்டு ஸர்ஜனுவது அப்பாதி கெரியாவது ஆஸ்பிடல் அஸிஸ்டெண்டாவதிருந்து, ஆனுல் ஆஸ்பத்திரியில் தக்க இடமில்லாமலிருக்கப்பட்ட விஷயத்தில் மேற்சொன்ன வைத்திய உத்தியோகஸ்தர்களானவர்கள் கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும் உத்தியோகஸ்தர்களல்லாத கிளர்க்குகள் உள்பட மேல்வரும் வகுப்பில்சேர்ந்த கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களிட வீட்டிற்கேபோய் வைத்தியம்பார்க்க வேண்டியது; மேற்சொன்ன கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கு ஸர்க்காரில் விடப்பட்டிருக்கும் குடியிருப்பு இடங்களிலிருந்து இரண்டு மைலுக்கு மேற்பட்ட தூரமுள்ள இடத்தில் வாசம்செய்தால் அவர்கள் அந்த வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கு வண்டிகூலி கொடுக்க வேண்டியது. அபாயகரமான விஷயங்களிலெல்லாம் வியாதிஸ்தரை ஸிவில் ஸர்ஜன் பார்வையிடுவார்.

5. நீலகிரி:—ஆகிலும் வெர்ண்மெண்டார் நீலகிரியிலிருக்கும்போது கெவர்ண்மெண்டு வேலையிலிருக்கிற அக்கௌண்டண்டு உத்தியோகஸ்தர்கள் எல்லாரிட வீட்டிலும் வைத்திய உத்தியோகஸ்தர்போய் அவர்களுக்கும் அவர்களிட ஸம்ஸாரங்களுக்கும் யாதொரு செலவில்லாமல் வைத்தியம்பார்த்துவரவேண்டியது.

6. சென்னைப்பட்டண டௌனில்:—சென்னைப்பட்டணம் டௌனிலுள்ள இவ்விதமானசர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போய் பார்ப்பதினுல் வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கு அதிக உபத்திரவமாயிருக்கும். அதிமிதமான துகையைக் கொடுக்கும் பட்சத்தில், டௌனிலுள்ள ஜனரல் ஆஸ்பத்திரியில் தகுந்த இடம் விடப்படுகிறது, கெவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் அந்த இடத்தைத் தங்கள் அக்கறையை முன்னிட்டே உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது முக்கியமாயிருக்கிறது, இந்த பலன்களை எல்லாம் உபயோகப்படுத்திக்கொள்ள மாட்டோம் என்று சொல்லும் கவெர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு வைத்தியம் பார்த்துக்கொள்ளும் பொருட்டு தாங்களே இதுவரையிலும் போல் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியது.

7. **ராஜதானி டௌனுக்கும் வெளிப்பிரதேசங்களுக்கும் பொதுவானது**:—மேலான கெவர்ன்மெண்டு ஸீவில் உத்தியோகஸ்தர்களும் 250 ரூபாய் சம்பளமும் 250 ரூபாய்க்குமேல்பட்சம்பளமும்உள்ள உத்தியோகஸ்தர்களும் தாங்கள் குடியிருக்கும் இடங்களுக்கே ஜில்லாஸ்ர்ஜனையோ ஸிவில் ஸர்ஜனையோ (அததற்கு தக்கபிரகாரம்) வரவழைத்து செலவில்லாமல்

தங்களுக்கு வைத்தியம் பார்த்துக்கொள்ள எப்போதும் பாத்தியதையுடைய வர்கள்.

8. **மருந்துகள் சப்ளைசெய்வது:**—கெவர்ண்மெண்டு ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும் அவர்களிட ஸம்ஸாரங்களுக்கும் மருந்துகள் சப்ளை செய்யும்பொருட்டு அனுபந்தத்தில் விதிகள் கண்டிருக்கின்றன.

201. மேடிகல் ஸர்டிபிகேட்டுகள்:—சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்படும் மெடிகல் ஸர்டிபிகேட்டுகளை அவைகள் கெவர்ண்மெண்டாரிட அதிகாரத்திற்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டிருக்கிற கெவர்ண்மெண்டு வைத்திய உத்தியோகஸ்தர்களால் கொடுக்கப்பட்டால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளக்கூடும். சொந்தத்தில் வைத்தியம் பார்த்துவருகிறவர்களால் கொடுக்கப்படும் ஸர்டிபிகேட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா; ஸர்டிபிகேட்டுகள் கொடுக்கவேண்டிய விஷயத்தில் ஏற்பட்டவிதிகளை அனுபந்தத்தில் கண்டிருக்கிறது.

2. வெளிஜில்லாக்களில் ரஜாவின்பேரில் இருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பிரதான ஆபீஸர் தவிர வேறெந்த உத்தியோகஸ்தர்களிடமிருந்தாவது ஸர்டிபிகேட் வாங்கினால் அந்த ஸர்டிபிகேட்டுகளை அந்த இடத்திலாவது அல்லது அதிசமீபத்திலாவதிருக்கிற ஸிவில் ஸர்ஜனோ அல்லது ஜில்லாஸர்ஜனோ அவரிடமுன்பாக அந்தசர்க்கார் உத்தியோகஸ்தன் நேராய் ஆஜராய் அந்தஸர்டிபிகேட்டுகளில் அவர்களிட மேல்கையொப்பத்தை செய்துகொள்ளவேண்டியது.

202. மருந்துமுதலானவைகளை பட்டுவாடா செய்வது:—வாந்திபேதியாவது அல்லது மற்ற அபாயகரமான பெருவாரிநோய்களாவது தங்கள் ஜில்லாக்களில் உண்டாயிருக்குபோது மருந்துகளை வாங்க சாதல்வார் செலவிட தங்கள் ஆபீஸ்களிலும் தங்களுக்குக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களிட ஆபீஸ்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிற அப்பாதகிரிகளையும் ட்ரஸ்ஸர்களையும் ஆபீஸ் சிப்பந்திகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்வதும் தவிர முக்கியமாய் கச்சேரி ஸர்க்யூட் போகும் தங்களிட எல்லைக்குட்பட்ட எல்லாவித ஜனங்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டியதென்று கலெக்டர்களும் (கலெக்டர்வகையறுக்களும்) அறிந்துகொள்ள வேண்டியது. அப்பேர்ப்பட்ட சமயங்களில் மருந்து உபயோகிக்கவேண்டிய விஷயத்தில் செம்மையாய் போதனைசெய்யவேண்டியது. தவிரவும் அவசியமானல் செலவுபெற்றுக்கொள்ளாமல் மருந்து கொடுக்கவேண்டியது.

2. சாதாரணமான மருந்து சரக்குகளை கடையில் வாங்கக்கூடும், முக்கியமான கொஞ்சம் மருந்துகளை மாத்திரம்தான் மெடிகல்டிபார்ட்மெண்டா

ரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியது, அந்தந்த இடங்களிலுள்ள கடைகளில் விலைக்குவாங்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற மருந்துகளை சேகரிக்கவேண்டியதில் வைத்திய உத்தியோகஸ்தர்கள் கலெக்டர்களுடன் சேர்ந்து ஒத்தாசை செய்யவேண்டுமென்று வைத்திய உத்தியோகஸ்தர்களை இந்தியா (மெடிகல்) வைத்திய டிபார்ட்மெண்டின் இன்ஸ்பெக்டர் ஜெனரலானவர் கேட்டுக்கொண்டிருக்கிறூர்; ஆகையால் கலெக்டர்கள் இவ்வித ஒத்தாசையை உபயோகப்படுத்திக்கொள்வது மிகவும் யுக்தமாயுருக்கிறது; ஏனென்றுல்; வாங்கப்பட்ட மருந்துகளை அந்த மெடிகல் டிபார்ட்மெண்டார் பரிசீலனை செய்யாமற்போனுல் அந்த மருந்துகள், கள்ள மருந்துகளாயும் பழைய மருந்துகளாயுமிருந்தால் அவைகளைக் கண்டுபிடிப்பது தவறிப்போகக்கூடும்.

3. வாந்திபேதி முதலானவைகளைத் தடுப்பதற்காக மருந்து பட்டுவாடா செய்வதில் கலெக்டர்களுக்கு நேரிடும் செலவுகளை சம்பந்தப்பட்ட லோகல்போர்ட்டார் கொடுக்கவேண்டியது. ஆகிலும் யாதாவது காரணங்களை முன்னிட்டு அந்த செலவை எந்த லோகல் போர்டாராவது கொடுக்க மாட்டோமென்றுல் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் மெடிகல் மிஸிலேனியஸ் (வைத்தியத்திற்காக சில்லரை செலவு) என்ற பாபத்தில் அந்த செலவைதாக்கல் செய்யு முன்பாக அதுவிஷயமாய் முன்னுடி கெவர்ண்மெண்டாரிட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியதவசியம்.

203. அம்மை குத்துதல்:—அம்மை குத்தல் டிபார்ட்மெண்டாரால் தர்மத்திற்கு செய்வதாய் சொல்லப்படும் பலன்களை ஜனங்கள் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும் பொருட்டு கலெக்டர்கள் தங்கள் தங்கள் ஜில்லாக்களிலுள்ள ஜனங்களை உற்சாகப்படுத்த தங்களால் கூடிய வரையில் முயலவேண்டியது. தக்கவைத்திய உத்தியோகஸ்தர்களைக் கொண்டு ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் இஷ்டமுள்ளவர்களுக்கெல்லாம் அம்மை குத்தும்படி அந்த மெடிகல் உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு செய்து அவ்விதமாய் ஜனங்களுக்குரொம்ப ஒத்தாசை செய்யலாம்.

XV. (15) - ம் அதிகாரம்.

படைகளும் வழிப்பிரயாணிகளும்.

204. படை (சேனை) களுக்கு வண்டி.—சேனைகள் போவதற்குத்தே வையான வண்டிகளை சேகரிக்க பட்டாள அதிகாரிகள் முதலானவர்கள் தவறிப்போகும் பக்ஷத்தில், அப்பேர்ப்பட்ட வண்டிகளை சேகரித்துக்கொடுக்கவேண்டியது கலெக்டரிடகடமை. அப்பேர்ப்பட்ட சமயங்களில் ஸிவில் அதிகாரிகளுக்கு (அதாவது ராணுவஉத்தியோகஸ்தர்கள் தவிர மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஸிவில் அதிகாரிகள் என்று பெயர்) முன்னுடியாகத் தெரிவித்திருக்கவேண்டியது, அந்த ஸிவில் அதிகாரிகள் ராணுவ தலைமை ஆபீஸரால் கோரிக்கொள்ளப்பட்ட மேல் தான் வண்டிகள் சேகரித்துக்கொடுப்பார்கள். சாத்தியப்படும்போதெல்லாம் கலெக்டரானவர் வண்டியை குத்கையாக சம்பாதிக்கமுயலவேண்டியது, தீரா அவசியமான விஷயங்களில் மாத்திரமேகட்டாயப்படுத்தி காரியத்தைச் செய்து கொள்ள வேண்டியது.

2. கட்டாயப்படுத்த வேண்டிய விஷயங்களில் அடியிற் கண்ட விதிகளை கவனிக்கவேண்டியது:—(1) சேனைகள் ரெயில்வே மூலமாயாவது, வாய்க்கால் மூலமாயாவது அல்லது சமுத்திரக்கரை மூலமாயாவது நடத்தப்படாமல் சாதாரண ரஸ்தாக்கள் மூலமாக நடத்தப்படும் ஜில்லாக்களில், அவசியமானால், அந்த ஜில்லாவிலுள்ள ராணுவ ஆபீஸருடனும் அவிடத்திலுள்ள தளகர்த்தர்களுடனும் கலெக்டரானவர் கலந்து, அந்த ஜில்லாவிலுள்ள எல்லா வண்டிக்காரர்களிட வண்டிக்கு சொந்தமானவர்களிட அவர்களிட இருப்பிடத்தையும், பிரதி வண்டிக்காரனுக்கும் எத்தினைவண்டிகள் இருக்கின்றனவென்றும் சேனைகளுக்காக அவனிட வண்டிகளை கடைசியாய் எந்த தேதியில் எந்த ஸந்தர்ப்பங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டனவென்றும் கண்டு ஒரு ரிஜிஸ்டர்தயார் செய்து வைத்துவைக்கவேண்டியது. (2) யாதொரு ஆஸாமிக்குச் சொந்தமான வண்டிகள் சாதாரணமாய் சத்தத்துக்கு (பாடிகைக்கு) விடப்படுகிறவைகளாகவாவது, அல்லது அவைகளால் பணம் சம்பாதிக்கும்பொருட்டு வைத்திருக்கப்பட்டவைகளாயிருந்தா

லாவது அப்பேர்ப்பட்ட வண்டிகள் சேனைகள் போவதற்காகத் தேவையா யிருக்கும்பட்சத்தில் அதற்காக அந்த வண்டிகள் பிரயோஜனப்படக் கூடிய வைகளாக பாவிக்கப்படும். இந்த கட்டாயமான வேலையினால் (அதாவது கட்டாயமாய் வண்டிகள் சத்தத்துக்கு ஓட்டவேணும் என்பது) கூடியவ ரையில் (வண்டிக்காரர்களுக்கு) தொந்தரவு உண்டாகாமலும் கூடியவரை யில் எல்லாவண்டிக்காரர்களும் இந்த வேலைக்காக வண்டி அனுப்பும்படியாய் கூடுமானவரையில் முயற்சி செய்யவேண்டியது. சாத்தியப்படும்போதெல் லாம் ஒரே கிராமத்திலிருந்துவரும் வண்டிக்காரர்கள் சேர்ந்தாப்போல்போய் தங்கியிருக்க அனுமதி கொடுக்கவேண்டியது; தூலையிலிருந்து வண்டி சேக ரிக்கப்பட்டிருந்தாலாவது அல்லது ஒரு இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிரு ந்தாலாவது அப்பேர்ப்பட்ட விஷயத்தில், வாஸ்தவ்யமாய் எவ்வளவு தூ ரம் போனதற்கு எவ்வளவு சத்தம் கொடுக்கப்படுகிறதோ அந்த சத்த வீதத் துக்குக்குறையாமல் தேவையான பத்தா பணம் (அதாவது தங்கு கூலி) வண் டிக்காரர்களுக்கு கொடுக்கவேண்டியது, எது வரையில் வண்டிக்காரர்கள் வண்டி ஓட்டிக்கொண்டு வந்து அப்புறம் நின்று விடவேணும் என்பதைப் பற்றியும் அவர்கள் கிராமங்களுக்குத் திரும்பிவந்த பிற்பாடு எவ்வளவுகாலம் அவர்கள் மறுபடி வண்டி ஓட்டவேண்டியதில்லை என்று விலக்கப்பட்டிருக் கிறார்களென்பதைப்பற்றியும் வண்டிக்காரர்களுடன் செய்து கொள்ளப்ப ட்ட உடன் படிக்கையின் ஷரத்துகள்படி கண்டிப்பாய் நடத்தவேண்டியது. வண்டிக்காரர்களிட மனப்பூர்த்தியான முழுசம்மதத்துடனல்லாமல், அடுத்த ஜில்லா அல்லது பிரதேசத்தின் முதல் கிராமத்திற்கப்பால் வண்டிகளை எப் போதும் ஓட்டிக்கொண்டுபோகக்கூடாது; (ஆனால் தீரா அவசியம்நேரிடும் பட்சத்தில் ஜாஸ்திவீத சத்தம் கொடுத்து வண்டி ஓட்டிக்கொண்டுபோக லாம்). (3) வண்டிதேவைஎன்று ஒரு பட்டாளத்தின் தளகர்த்த உத்தி யோகஸ்தரால் கோரிக் கொள்ளப்பட்டதின் பேரில், எந்ததேதியில் சேனை போகின்றனவோ அந்ததேதிக்கு முன்னிட்ட இரண்டாம் நாள் பட்டா ளத்திற்கு வண்டிகளை ஒப்புவித்து விடும்படியாய் கூடிய சீக்கிரமாயும் தே வையான வண்டிகளை தம்மிட கச்சேரியில் சேகரித்து வைக்கவேண்டியது கலெக்டரிட கடமை. (4) வண்டிகள் தயாராயிருக்கும்போது கலெக் டரானவர் தளகர்த்த உத்தியோகஸ்தருக்கு வண்டி தயாராயிருக்கிறதெ ன்பதைப்பற்றி மிமோராண்டம் மூலமாய்த் தெரிவித்து அடுத்தநாளில் அந்தவண்டிகளை ஒப்புக்கொள்ளும்பொருட்டு பொறுப்புள்ள ஒரு ஆஸா மியை அனுப்பும்படி கோரிக்கொள்ளவேண்டியது. (5) அனுப்பப்பட்ட வண்டிகள் பொறுப்புள்ள ஆஸாமியினால் தள்ளிவிடப்பட்டால் அவைகள் உடனே நிவர்த்திசெய்யப்படும்; நல்லஸ்திதியில் இருக்கிற வண்டிகளைப்பற்றி

கலெக்டராபீசில் ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்யப்படும். எல்லாவண்டிகளும் அனுப்பப்பட்ட வுடனே அந்த ரிஜிஸ்டருக்கு ஒரு நகல்எடுத்து அந்தநகலை பட்டாள தளகர்த்த உத்தியோகஸ்தருக்குக் கலெக்டர் அனுப்பவேண்டியது. (6) ஆகாரத்திற்காகப் பிடிக்கும் செலவையும் தானியவிலையையும் அனுஸரித்துக் கலெக்டரானவர்கள் சத்தத்தை ஏற்படுத்தி ஆறுமாசத்திற்கொரு தரம் ஜில்லா கெஜட்டில் பிரசுரம்செய்யவேண்டியது. அப்படி ஏற்படுத்தப்பட்ட சத்தங்களானவை சொந்தஜனங்களால் கொடுக்கப்படும் சத்தங்களைவிட ஜாஸ்தி தாமாஷா உள்ளதாயிருக்கவேண்டியது, ஆகிலும் சொந்தஜனங்கள் எவ்வளவு சத்தம் கொடுப்பார்களோ அவ்வளவு சத்தம்தான் ஸிப்பாய்களிடத்திலிருந்து வசூல்செய்யப்பட்டு பாக்கியை கெவர்ண்மெண்டாரால் செலுத்தப்படும். (7) கலெக்டரானவர் தம்மிட கஜானாவிலிருந்து ஒவ்வொரு வண்டிக்காரனுக்கும்அடியிற்கண்ட வீதம் முன்பணம்கொடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார். 100 மயிலுக்குட்பட்ட தூரமாயிருந்தால், பிரதி 10 மயிலுக்கும் 8 அணா வீதமும் அதற்குமேற்பட்ட தூரமுள்ளதாயிருந்தால 12 அணாவீதமும் ; மேஸ்திரிக்கு பூரா கூலிகொடுக்கும்பொருட்டு கலெக்டரானவர் வண்டி ஒன்றுக்கு பிரதி 10 மயிலுக்கும் 1 அணா வீதம் பிடித்துவைத்துக்கொண்டு, எவ்வளவு முன் பணம் கொடுக்கவேணுமென்று தமக்கு யுக்தமாய்த் தோன்றுகிறதோ அவ்வளவு முன்பணம் பட்டுவாடா செய்து, வண்டிகள் எந்தஇடத்திற்கு ஓட்டப்படவேண்டியதென்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனவென்றும் உடன் படிக்கையின் நிபந்தனைகள் பிரகாரம் நடந்து கொண்டார்களென்றும் தளகர்த்த உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு ஸர்டிபிகேட்டை மேஸ்திரியானவன் ஆஜர்ப்படுத்துவதின்பேரில் பாக்கிபணத்தைக் கொடுப்பிக்கவேண்டியது. (8) 15 மயில் அல்லது அதற்குமேற்பட்ட தூரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வண்டிகளுக்குப் பிரதி 15 மயிலுக்கும் 4 அணாவீதம் பத்தா கொடுக்கவும் கலெக்டர்களுக்கதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அல்லாமலும், பட்டாளத்திற்கு வண்டிகளை ஒப்புக்கொடுக்கு முன்பாக கச்சேரியில் வண்டிகள் நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட பிரதி தினத்திற்கும் மேல் கண்டவீதம் படியை (பத்தாவை) கொடுக்கவும் கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ; அப்படி எப்போது ஒப்புக்கொடுக்கப்படவேண்டுமென்றால் பட்டாளம்போவதற்கு இரண்டுநாள் முன்பாக. அனாவசியமாய் அதிக காலம் வண்டிகளை நிறுத்தி வைத்துக்கொள்ளாமலிருக்கும் பொருட்டு கலெக்டர்ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது,ஆனால் அவசியமாய் அவைகளை எத்தனை நாளைக்கு நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டியதாய் ஏற்படுமோ அத்தனைநாளைக்கு அவைகளுக்காகப் படிபெற்றுக்

கொள்ள பாத்தியதையுண்டு ; இந்தபடியையும் தூரத்திலிருந்து வருவதற்காக கொடுக்கப்படும் படியையும் கலெக்டரானவர் கெவர்ண்மெண்டு கணக்குகளில் செலவெழுத வேண்டியது. (9) வேறெவ்விடத்திலிருந்தும் வண்டியைச் சேகரிக்க கூடியவரையில் முயன்றபிற்பாடு மாத்திரமே, இதர டிபார்டுமெண்டுகளால் அவர்களிட உபயோகத்திற்காக முன்னுடி திட்டம்செய்துகொண்ட வண்டிகளை ராணுவவேலைக்காக கட்டாயப்படுத்தி உபயோகிக்கவேண்டியது. (10) மேலேசொல்லப்பட்ட கடமைகளை கலெக்டரானவர் இஷ்டப்பட்டால் தம்மிட அஸிஸ்டெண்டுக்கு ஒப்புவிக்கலாம்; கலெக்டர் இல்லாதபோது அவரிட அஸிஸ்டெண்டு அந்தவேலைகளைப் பார்க்கக்கூடாமல்போனுல் தாசில்தாரானவர் ஹுஸூர் கச்சேரியிலுள்ள ஒரு ரைடரைதமக்கு உதவியாகவைத்துக்கெண்டு பட்டாளங்களுக்கு வண்டிகள் ஸப்ளைசெய்யவேண்டிய விஷயத்தில் மேல்விசாரணை செய்யவேண்டியது.

3. ஒரு தளகர்த்த உத்தியோகஸ்தருக்கு வண்டிகள் ஸப்ளை செய்யப்படும்போது குறித்த பாரப்பிரகாரம் வண்டிகளைப்பற்றி பதிவுசெய்யப்பட்ட ஒருரிஜிஸ்டர் அவருக்குக்கொடுக்கப்படும். பட்டாளத்துக்காக நியமிக்கப்பட்ட வண்டியின் சொந்தக்காரர்களையாவது அல்லது வண்டி ஓட்டுகிறவர்களையாவது உத்தியோகஸ்தர்களாவது அல்லது ஜனங்களாவது எவ்விதமாயும் தீங்குசெய்யாமல் இருக்கும் பொருட்டும் வண்டிகள் பேரிலும் எருதுகள் பேரிலும் அளவுக்கு மிஞ்சின சுமை யேத்தாமலிருக்கும் பொருட்டும் கெவர்ண்மெண்டாரிட உத்திரவு பிரகாரம் தளகர்த்த உத்தியோகஸ்தரானவர் ஜவாப்தாரி ; வண்டியில் வழக்கமாய்ப் போகிற ஜனங்கள் உள்பட வண்டியின் சுமையானது ஒரு பொழுதும் 800 ராத்தலுக்கு மேற்படக்கூடாது. எருதின் பேரில் ஏத்தும் சுமையானது 123 ராத்தலுக்கு மேற்படக்கூடாது. முதலில் எந்த தேதிமுதல் பட்டாளம் போகவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டதோ அந்த தேதிக்கு பின்னிட்டு 2 நாளுக்கதிகமாய் வண்டிகள் எவ்வளகாலத்திற்கு நிறுத்திவைத்துக் கொள்ளப்படுகின்றனவோ அவ்வளவு காலத்திற்கும், தவிரவும் ஒரு தடவையில் பூர்த்தியான இரண்டு தினங்களுக்குமேற்பட்டு தங்கியிருந்தால் அப்படி தங்கியிருப்பதற்காகவும் வண்டியின் சொந்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் பத்தா (படி) இன்ன வீதப்பிரகாரம் கொடுக்கவேணுமென்று முன்னுடியாய் எற்படுத்த வேண்டியது, கிரமமாய்க் கொடுக்கவேணுமென்று தளகர்த்த உத்தியோகஸ்தர் கட்டாயப்படுத்த வேண்டியது. பட்டாளத்தினுடைய பயணம் முடிவானவுடனே, தளகர்த்த உத்தியோகஸ்தரானவர் பாக்கி சத்தத்தை உடனே கொடுத்துவிட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது.

205. பட்டாளங்கள்போகும்போது அவர்களுக்குத்தேவையான உணவுகள்:—பட்டாளங்கள் போகும்போது அவர்களுக்குத் தேவையான ஸாமகிரிகளை ஸரபரா செய்யும் விஷயமாய் கெவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்ட அடியில் கண்ட விதிகளையும் குறிப்புகளையும் கலெக்டர்கள் கவனிக்கவேண்டியது:—"ஐரோப்பிய ஆபீசாராலாவது அல்லது சுதேச பட்டாள ஆபீசாராலாவது நடத்தப்பட்ட பட்டாளங்களைப் பற்றியும் ஐரோப்பிய பட்டாளங்கள் எவ்வளவு சங்கியை உள்ளவர்களாயிருந்தபோதிலும் அவர்களைப்பற்றியும் ஸிவில் அதிகாரிகளுக்கும் இதர அதிகாரிகளுக்கும் விளம்பர மூலமாய்த் தெரிவிக்க வேண்டியது, ஆனால் 12 மனிதர்களுக்குக் கீழ்பட்ட சுதேசப்பட்டாளங்களைப் பற்றி (மௌண்டெட்கோர் அதாவது வாகனத்தின்மேல் ஏறின பட்டாளங்களும், கஜானா பணத்தைக் காவல் கார்க்கிறவர்களும் விலக்காக) அம்மாதிரி விளம்பர மூலமாய்த் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. 12 மனிதர்களும் அதற்கு மேற்பட்டு மிருக்கிற படைகளெல்லாம் 4நாளைக்கொருதரம் தங்கி இருக்கக்கூடும். இதை அனுஸரித்தே பட்டாளங்கள் இன்னின்ன தேதியில் இன்ன இடத்திற்கு வருவார்களென்று கணக்கிட்டு மேல்கண்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டியது. 12 மனிதர்களுக்கு குறைந்த பட்டாளங்கள் (கஜானாகாவலாளிகள் நீங்கலாக, பிரகரணம் 31ஐ பார்க்க) தினம் ஒன்றுக்கு 10 மயில் வீதம்நடந்து 7 நாளைக்கொரு தரம் தங்கியிருக்கக்கூடும்:—சென்னைராஜதானியின் எல்லைக்குள் பட்டாளங்கள் போகும்போது அவர்களுக்குத் தேவையானவைகளை ஸரபரா செய்யும் பொருட்டு கெவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அடியிற்கண்ட விதிகளை தளகர்த்த உத்தியோகஸ்தர்கள் அனுஸரித்து நடக்கவேண்டியது. (1) ஒரு ஜில்லாவின் மூலமாய் பட்டாளங்கள் எந்த வழியாய்ப்போகிறார்களென்பதைப்பற்றி குவார்டர் மாஸ்டர் ஜெனரல் டிபார்டு மெண்டாராலாவது அல்லது பட்டாளதளகர்த்த உத்தியோகஸ்தராலாவது தெரிவிக்கப்பட்டதின் பேரில், கலெக்டராயும் மேஜஸ்டிரேட்டாயும் இருக்கப்பட்ட ஆபீஸரானவர் உடனே எந்த தாலூகா மூலமாய் பட்டாளங்கள் போவார்களோ அந்த தாலூகா தாசில்தார்களுக்கு எவ்வளவு ஸங்கியையுள்ள பட்டாளங்கள் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், பட்டாளத்தோடு கூடவருகிறவர்கள், வருவார்களென்றும் ஒவ்வொரு தாலூகாவிலும் இன்னின்ன இடத்தில் இன்னின்ன சமயத்தில் அவர்கள் தங்குவார்களென்றும் சுமார் அவர்கள் எந்ததேதியில் வருவார்களென்றும் தெரிவிக்கவேண்டியது. (2) தேவையான எந்தந்த வஸ்துக்கள் ஸரபரா செய்யப்பட வேணுமென்று உத்திரவு செய்யப்படுகிறதோ அந்த வஸ்துக்களை வாங்கும்பொருட்டு ஹஸ்ஸேர்கஜானாவிலிருந்து

பணத்தை உடனேவரவழைத்துக்கொள்ளும்படிதாசீல்தார்களுக்குஉத்திரவு செய்யவேண்டியது. (3) குறித்த ஒவ்வொரு இடத்திலும் ஸரபரா செய்ய தேவையான வஸ்துக்களை வாங்கி யாதாவதொரு தேதிக்கு முன்னிட்டு தயாராய்வைத்திருக்கும்பொருட்டு தங்களிட பேஷ்கார் அல்லது பிறுகா கார்க்கோனையும், அவர்களுக்குதவியாக புத்திசாலியான 2 சேவகர்களையும் அனுப்பும்படி தாசீல்தாருக்குத்திரவு செய்யவேண்டியது. (4) விற்கும்பொருட்டு பிரதிபண்டமும் பெரும்பான்மையாய் சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுகிறது; அப்படி சமீபத்திலிருள்ள வாரம்தோறும் கூடுகிறசந்தைகளில் கூடியவரையில் பட்டாளத்துக்கு வேண்டிய ஸாமகிரிகளை வாங்கும்படி உத்திரவு செய்யவேண்டியது,ஆனால்தேவையான எல்லா வஸ்துக்களும் (இவ்விதமாய்) சந்தையிலிருந்து சேகரிக்க சாத்தியமில்லாமற்போனால் பாக்கிஸாமகிரிகளை சாதாரணஜனங்களிடத்திற்குப்போய் அவைகளுக்குவிலைகொடுத்து அவர்களிடமிருந்து வாங்கவேண்டியது. யாதொருகாரணத்தை முன்னிட்டும் விலை கொடுக்காமல் வாங்கவேகூடாது. (5) தேவையான ஸாமகிரிகளை வாரம்தோறும் கூடுகிற சந்தையிலிருந்து வாங்கினபோதிலும் அல்லது கிராமங்களிலிருந்து வாங்கினபோதிலும் ஒவ்வொரு விஷயத்திலும் கொடுக்கவேண்டிய விலையை உடனே கொடுத்துவிட்டு ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது; வஸ்துக்களை வாங்கினதைப்பற்றியும் விற்பனை செய்ததைப்பற்றியும் விபரமான கணக்கை ஹுஸூர்கச்சேரிக்கு அனுப்பும்போது அந்த ரசீதுகளை வவுச்சர்களாக (அதாவது அத்தாக்ஷியானதஸ்தாவேஜுகளாக) அனுப்பவேண்டியது. (6) ஸாமகிரிகளைவாங்கினதற்காகக்கொடுக்கவேண்டியபணத்தை சம்பந்தப்பட்ட ஆஸாமிகளுக்கு பட்டுவாடா செய்யும்படி கிராமத்திய கணக்கனுக்காவது அல்லது பிரதான குடியானவனுக்காவது யாதொரு காரணத்தை முன்னிட்டும் கொடுக்காமல் அந்த ஆஸாமிகளுக்கு நேராகவே பட்டுவாடாசெய்யவேண்டியது. (7) ஒரு பட்டாளமாவது அல்லது பெருத்த படைகளாவது ஒரு ஜில்லா மூலமாய்ப் போகும்போது கூடுமானால் தாசீல்தார்களும் தங்கள்தங்கள் தாலூகாமூலமாய் அந்தப்படைகள் போகும்போது அவர்களுடன் கூடப்போகும்படி அவர்களுக்கு (தாசீல்தார்களுக்கு) கட்டளையிடவேண்டியது, ஆனால் யாதொரு சமயத்திலாவது விலக்கவொண்ணாமையான அடங்கத்தினால் அப்படி போகக்கூடாமல் நேரிடும்பட்சத்தில் பேஷ்கார் அல்லது தாலூகா சிரஸ்தேதாரை படைகளுடன் கூடப்போகும்படி அனுப்பவேண்டியது; முன்னாடியாகவே சேகரிக்கப்பட்ட ஸாமகிரிகள் போதாமையாயிருந்தால் ஜாஸ்தி ஸாமகிரிகளை சேகரிக்கவும் தேவையான எந்த உதவியையும் செய்யவும் அவர்கள் தயாராயிருக்கவேண்டியது; (8) ஒவ்வொரு இடத்திலும் படைகள் வந்துசேர்ந்த மேல் தாசீல்தாரானவர்

பேஷ்காருக்கு அல்லது கார்க்கோனுக்கு அல்லது கௌரவமுள்ள இதரரெவினியூ உத்தியோகஸ்தருக்கு புத்திசாலியான 2 சேவகர்களை உதவியாகக் கொடுத்து அவர்களைக்கொண்டு பட்டாளத்துக்கு வேண்டிய ஸாமகிரிகளை ஒவ்வொன்றுக்கும் ஜாக்கிரதையாய் விலைபெற்றுக்கொண்டு ஸரபரா செய்விக்கவேண்டியது; செலவாகாமல் மீதிசாமான்கள் ஏதாவதிருந்தால் பின்னிட்டு அவைகளை உடனே ஏலம் கூறி விற்கவேண்டியது; பலானவஸ்துக்கள் பலான விலைக்கு வாங்கப்பட்டனவென்றும் படைகளுக்குப் பலானவைகள் விலைக்கு கொடுக்கப்பட்டனவென்றும் ப்ாக்கிசாமான்களை விற்று உருவான துகை இவ்வளவென்றும் விபரங்கள்கண்ட ஒருகணக்கைப்படைகள் தாலூகாவை விட்டுப்போன பிறகு 5 தினங்களுக்குள்ளாக ஹுஸ்ஹுர் கச்சேரிக்கு அனுப்பவேண்டியது. (9) கூலியையாவது, பானைகளையாவது, நெருப்புக்குச்சிகளையாவது, கூடாரம் முளைகளையாவது, இன்னும் மற்ற சாமான்களையாவது,(இதுவரையில் வழக்கமாயிருந்த போதிலும்) இனிமேல் அவைகளுக்காகத் துகைபொற்றுக்கொள்ளாமல் கொடுக்கக் கூடாதென்று தாசீல்தார்களுக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கவேண்டியது. (10). ஆகிலும், கூலியாட்கள் யாராவது தேவைஎன்றால் அவர்களுக்காக நபர் ஒன்றுக்கு 10 மயில் தூரத்திற்கு 3 அணு விழுக்காடு முதல் ஆள் கூலி பெற்றுக்கொண்டு தேவையான கூலிகளை அனுப்பும்படி தாசீல்தாருக்கு உத்திரவு செய்யவேண்டியது. (11) படைகள் போகக்கூடிய இடத்திற்கு சமீபமாயுள்ள கிராமத்தார்களுக்கு, பலான தேதியில் படைகள் அந்த இடத்திற்கு வந்து சேருவார்களென்று சமயத்தில் தெரிவித்து (வாரந்தோறும் கூடுகிற சந்தைகளில் விற்பனை செய்கிற மாதிரியாகவே) விற்பனைக்காக அவர்களிட (அந்த கிராமகுடிகளிட) த்திலுள்ள ஒவ்வொருபண்டங்களையும் கொண்டு வரும்படி உற்சாகப்படுத்தி வரவழைக்கவும் அவர்களிட மிருந்துயாதொன்றும் அபகரிக்கப்படா தென்றும் அவர்களுக்கு எவ்வித ஹிம்ஸையும்நேரிடும்படி இடம் கொடுக்கப்படமாட்டா தென்றும் அவர்களுக்கு தைரியம் சொல்லும்படிக்கும் தாசீல்தார்களுக்கு உத்திரவு செய்யவேண்டியது. பட்டாளத்தையாவது படை வகுப்பையாவது நடத்தும் எல்லாஉத்தியோகஸ்தர்களும் அப்படி பட்டாளத்தையாவது படைவகுப்பையாவது நடத்தாமலும் அவர்களுடன் கூடப்போகாமலும் இருக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு வேண்டிய சுமை ஆட்கள், அல்லது கூலி ஆட்கள், அல்லது தோணிக்காரர்கள், வண்டிகள் எருதுகள், அல்லதுசாப்பாட்டுக்கு வேண்டிய சாமகிரிகள், அல்லது இதர சமான்களானவை கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர் யாதொருவரால் ஸரபராசெய்யப்பட்டால், அந்த கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர் பேரில் முறை சொல்லிக்கொள்ள ஏதாவது காரணமிருந்தாலும்

அதைப்பற்றி நிமித்திய மில்லாமலே, தங்களுக்கு ஸரபரா செய்யப்பட்ட சுமையாட்கள், கூலியாட்கள் முதலானவர்களுக்குச்சேரவேண்டிய கூலிகளை யும் அல்லது தங்களுக்கு ஸர்பரா செய்யப்பட்ட சாமான்களின்கிரயத்தை யும் முதலில் கொடுத்துவிட வேண்டியது; ஜாஸ்தி பணம் தங்களிடத்திலிரு ந்து வசூல் செய்து விட்டார்களென்ருவது வேலையில் அசிரத்தையாயிருந் தார்களென்பதற்காகவாவது இன்னும் வேறெவ்வித காரணத்திலாவது அவ்வித சர்க்கார் உத்தியோகஸ்தர்பேரில் பட்டாள உத்தியோகஸ்தர் முறை சொல்லிக்கொள்ளவேண்டுமோனல் ஜில்லாமாஜிஸ்ட்ரேட்டுக்கு உடனேபிரி யாது செய்து கொள்ளவேண்டியது, அதின் பேரில் ஜில்லா மாஜி ட்ரேட் தீர்ப்பு செய்த பிற்பாடும் அது விஷயத்தைப் பற்றி இன்னும் மேலதி காரிகளுக்குத்தெரிவிக்கவேண்டியது அவசியமாயிருந்தால் அவர்களுக்குள்ள முறைகளை கிரமமாயும் வழக்கமாயும் தங்கள் மேலதிகாரிகள் துவாரா கெவ ர்ண்மெண்டாருக்குத்தெரியும்படி சொல்லிக்கொள்ளவேண்டியது; இடை யிடையே உள்ள யாதொரு கிராமத்தில் கூலியாட்கள் அல்லதுவண்டிகள் அல்லது கால் நடைகள் வேணுமென்று கேட்கக்கூடாது, ஆனல் கூலியாட் கள் இறந்துபோவதினுலாவது அல்லது கைவிட்டுவிடுவதினுலாவது அல்லது கால் நடைகள் இறந்து போவதினுலாவது தீடீரென்று ரஸ்தாவில் விக்கி னம் நேரிடும் பக்ஷத்தில் அது சங்கதியைப்பற்றி தளகர்த்த உத்தியோகஸ்த ருக்குத்தெரிவித்துக்கொள்ள வேண்டியது, அப்படி தெரிவித்துக்கொள்ளப்ப ட்டசங்கதியானது கிரமமானதென்று அந்ததளகர்த்தஉத்தியோகஸ்தருக்கு த்திருப்திகரமாய் ஏற்படும் பக்ஷத்தில் அவர் ரெவினியூ உத்தியோகஸ்தரு டன் கலந்து அந்த கிராமத்தின் தலைவரை புது ஸரபராக்கள் தேவை என்று கேட்க வேண்டியது, அந்த கிராமத் தலைவரானவர்* படைகளுடன் கூடப் போகும்படி கலெக்டரால் தற்காலத்திய சட்டங்களை யனுஸரித்து உத்திரவு செய்யப்பட்டிருக்கிருர், அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் தளகர்த்த உத்தி யோகஸ்தர்கள் தாங்கள் கோரிக்கொண்டதின்பேரில் வேலைக்காக அனுப்பப் பட்டஜனங்களுக்குத் தக்ககூலிகொடுப்பிக்கும்படி கண்டிப்பாய் கட்டாயப் படுத்தவேண்டியதும்தவிர அந்த கிராமத்திலுள்ள ஜனங்களுக்குள்ள ஜீவன மார்க்கங்களையும் ஸ்திதியையும் கிரமமாய்கவனிக்கவும்வேண்டியது.—மேலே சொன்ன விஷயங்களைப்பற்றி ஸிவில் அதிகாரிகளுடன் கலந்து பேச தகுந்த ஹோதா உள்ளவர் யாரென்ருல் பட்டாளம் அல்லது படைவகுப்பை நடத் தும் தளகர்த்த உத்தியோகஸ்தர் ஒருவர் மாத்திரமே. கடுமையான வியா தியாயிருக்கும் விஷயங்களில் பட்டாளங்களையும் படைவகுப்புகளையும் நட த்தும் உத்தியோகஸ்தர்கள் தீரா அவசியமாய் நாட்டுப்புறத்துக் கட்டில்கள்

* அதாவது மணீகார் அல்லது முனிசீபு.

எவ்வளவுதேவையோ அவ்வளவு கட்டில்களை சேகரித்துக் கொடுக்கும்படி கலெக்டரையாவது கம்மிஸேரியட் டிபார்டுமெண்டையாவது கோரிக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள், தேசங்களில் படைகள்போவதற்காகவும் படைகள் பாளையம் இறங்குவதற்காகவும் நேரிட்டசெலவுகளை (உதாரணம்-தோணிகள், கூலியாட்கள், வழிகாண்பிக்கும் தலையாரிகள், முதலானவர்கள் இவர்களுக்காக கொடுக்கவேண்டியகூலிகள்) ஏற்படுத்தப்பட்ட விதிகள் பிரகாரம் கணக்கில் முஜரா செய்யவேண்டியது.—மேற்கண்டமாதிரியான விஷயங்களில் தளகர்த்த உத்தியோகஸ்தர்கள் தாங்கள் எந்த ஜில்லாக்கள் மூலமாய்ப் போகிறார்களோ அந்தஜில்லாக்களின் கலெக்டர்களை தங்களுக்குத் தேவையான சாமான்களுக்காகவாவது அல்லது உதவிக்காகவாவது கோரிக்கொள்ளவேண்டியது; அப்படி கோரிக்கொண்ட பிரகாரம் ஸரபரா செய்யும்பொருட்டு கலெக்டர்களிட உத்தியோகஸ்தர்களுக்கு (கலெக்டர்கள்) தெரிவிக்கவேண்டியது, தளகர்த்த உத்தியோகஸ்தர்கள் தங்களிட உபயோகத்திற்காக அனுப்பப்பட்ட தோணிகள், கூலியாள் வகைறாக்கள் இத்தனை நபரென்றும் இவ்வளவுகாலந்தான் அவர்கள் வேலை செய்தார்களென்றும் இன்னும் தேவையான மற்றெல்லா விபரங்களையும் கண்டு ஸர்டிபிகேட் கொடுக்கவேண்டியது, அக்கௌண்டண்டு ஜெனரல் ஆபீஸில் கணக்குகளின் முஜரா வைத்துக்கொள்ளும்படி கலெக்டர் தயாரித்து அனுப்பும் பில்லுடன்கூட மேற்கண்ட ஸர்டிபிகேட்டுகளாகிய தஸ்தாவேஜுகளை அனுப்பவேண்டியது.—படைகள் பாளையம் இறங்குவது முதலாகியதினால் பயிர்களுக்கு நேரிடும் நஷ்டத்திற்காகப் பிரதிபலன் வேணுமென்றாவது அல்லது வேறே எவ்விதகாரணத்தை முன்னிட்டாவது நேரிடும் செலவுகளைக் கொடுக்கவேணுமென்றாவது பாத்தியதைகள் சொல்லிக்கொள்ளப்பட்டு எவ்வளவுநஷ்டம் நேர்ந்தது என்பது முதலான விவரணங்கள் தளகர்த்த உத்தியோகஸ்தருக்குத் தெரியாமலிருக்கக் கூடுமாகில் தளகர்த்த உத்தியோகஸ்தர்களால் கொடுக்கப்பட்ட ஸர்டிபிகேட்டுகளைத் தவிர்த்துவிட்டு கலெக்டர்களாலேயே கையெழுத்து செய்யப்பட்ட பில்களை பாஸ்செய்யவேண்டியது.—படைகள் போவதினால் நேர்ந்த செலவுகளானது மேலேசொன்ன நியமங்களுக்கு உட்படாதவைகளாக யேற்படும் பட்சத்தில் ஸாதல்வார் செலவுகளை தணிக்கைச்செய்யும் விதமாய் தளகர்த்த உத்தியோகஸ்தர்களிட பில்களை தணிக்கைசெய்து அவசியமாய் விவரிக்கவேண்டிய முகாந்திரங்களுடன் கலெக்டர்களிடமிருந்து தங்களுக்குத்தேவையான உதவியை பெற்றுக்கொள்ளாமற்போன விஷயத்தைப்பற்றி முக்கியமாய் விவரித்துச்சொல்லவேண்டியது. சேனையின் குவார்டர் மாஸ்டர் ஜெனரலுக்கு பில்அனுப்பவேண்டியது, குவார்டர் மாஸ்டர் ஜெனரலானவர்

அந்தபில் வரப்பெற்றுக்கொண்டதின்பேரில் அவைகள் தகாதவைகளெ ன்று விலக்கப்படுவதற்கு ஹேதுவற்றவைகளாய் ஏற்பட்டால் "அங்கீகரிக் கப்பட்டது" என்றவார்த்தையை அந்தபில்களில் எழுதி அவைகளில் கையெழுத்து செய்யவேண்டியது ; அப்படி அவர்கையெழுத்து செய்வதின் பேரில் அந்தபில்களில்கண்ட துகை பட்டுவாடா செய்யப்படும்.

2. அநுபந்தத்தில்கண்ட ஜாபிதாவானது காலாட்சேனை பட்டாளம் ஒன்றுக்கு சாதாரணமாய்த் தேவையான சாமான்களின் துகைகளைகாண்பிப் பதில் சற்றே சுமாராய் உபயோகப்படும் ; ஆகிலும் இந்த ஜாபிதாவானது 1856 ௵த்தில் தயாரிக்கப்பட்டது, ஆகையால் விலைகள் உயர்ந்திருப்பத ற்காக அந்த ஜாபிதாவில்கண்ட துகையைவிட கிரமமான ஜாஸ்திதுகை கொடுக்கவேண்டியது. ஒரு படை வகுப்பானது ஒரு பட்டாளத்திற்கு குறைவானதாய் போகும்போது அதற்குள்ள தாமாஷாபிரகாரம் குறைந்த சாமானகள் ஸரபரா செய்யப்படும்.

அநுபந்தம்.

பிரகரணம் 2.] காலாட்சேனை பட்டாளம் ஒன்றுக்குத் தேவை யான சாமான்கள்.

	ரூ.	அ.	பை.
நெற்பயிர் வைக்கோல்	5	0	0
வரகு ௸	8	0	0
புல்	5	0	0
விறகு	10	0	0
பானைகள்	4	0	0
கூடார முளைகள்	1	0	0
முதல்தர ஆடு, ஆடு 1 க்கு 1 ரூ - யாக 5 ஆடுகளுக்கு	5	0	0
2-ம் தர ௸ ௸ ௸ 12 அணுவாக 10 ௸ ...	7	8	0
முதல்தர கோழி, கோழி 1க்கு2அணுவாக 20கோழிகளுக்கு	2	8	0
2-ம் தர ௸ ௸ ௸ 1 ௸ 30 ௸	1	14	0
ஆ ரூ	49	14	0

3. சாதாரணமாய்க் கடைத்தெருவுகளில் சாமான்வாங்கி எத்தனைநப ர்களுள்ள படைகளுக்கு ஸரபராசெய்யக்கூடுமோ அவ்வளவு நபர்களுக்கு மேல்பட்ட பட்டாளங்கள் வந்திருந்தாலும், அல்லது படைகள்போகிற வழியிலிருந்து கடைத்தெருவுகள் தூரமாயிருக்கும் பக்ஷத்திலும், பட்டாளங்

களுக்குவேண்டிய சாமான்களை வாங்கி பட்டாளங்கள் தங்கியிருக்கப்பட்ட இடங்களுக்கு சர்க்கார் செலவில் கொண்டுபோகவேண்டியது; சாமான்களை வாங்கும்போது சமான்களின் சொந்தக்காரர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது, அவர்களிட (சாமான்களின் சொந்தக்காரர்களிட) இருப்பிடங்களை விட்டுவரும்படி அவர்களை கட்டாயப்படுத்தக் கூடாது. படைகள் வந்து சேர்ந்தமேலாவது அல்லது அவர்களுக்கு முன்னுடிவருகிற ஒருகாவலாள் வந்து சேந்தமேலாவது பட்டாளத்திற்காக சேகரிக்கப்பட்டிருக்கிற சாமான்களை உடனேபட்டாளத்திலுள்ள யாதாவதொரு உத்தியோகஸ்தருக்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டியது; அந்த ஸாமகிரிகளை பட்டுவாடா செய்யவும் அவைகளுக்குள்ள விலையைக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டியது அந்த உத்தியோகஸ்தரிட கடைமை; முன்னுடியாய்க் கோரிக்கொள்ளப்பட்ட சாமான்களை சேகரித்துக் கொடுக்கவேண்டியது மாத்திரமே மாஜிஸ்ட்ரேட்டினுடைய கீழ் உத்தியோகஸ்தர்களிட கடைமை;பட்டாளத்தாரால் விலக்கி வாங்கிக்கொள்ளப்படாத சாமான்களை ஏலம் கூறி விற்றுவிடும்பொருட்டு அவைகளை மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒப்புவித்துவிட வேண்டியது ; (அதினுலுண்டாகும் நஷ்டமானது சொற்பமாகத்தான் இருக்குமென்று சிலஜில்லாக்களில் அனுபோகப்பட்டதினுலேயேதெரியவந்திருந்தால்) அப்பேர்ப்பட்ட நஷ்டம் சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மிலிடெரி டிபார்டுமெண்டில் செலவு எழுதிகொள்ளப்படும், பிரதி தாலூகா அல்லது இலாகா மூலமாய் பட்டாளம்போகும்போது அவர்களுடன் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரும் போகவேண்டியதவசியம். படைகள் போவதற்காகத் தேவையான சவுகரியங்கள் செய்யும் பொருட்டு நேரிட்ட செலவுகளை எல்லாம் கலெக்டர் கையெழுத்து செய்வதின்பேரில் தணிக்கை ஆபீஸரால் பாஸ்செய்யப்படும் ; ஆனுல் அந்த செலவுகளை தளகர்த்த உத்தியோகஸ்தர் தணிக்கை செய்து ஒத்துபார்க்கக்கூடியதாயிருந்தால் அந்த செலவு நேர்ந்ததற்குஆதாரமாக அவருடைய ஸர்டிபிகேட்டும் ஆஜரப்படுத்தப்படவேண்டியது. வழிப்பிரயாணம்போய் கொண்டிருக்கிற படைகளின் தளகர்த்தஉத்தியோகஸ்தரால் சொல்லிக்கொள்ளப்படும் முறைப்பாடுகள் எல்லாம் உடனே கவனிக்கப்படவேண்டியது, தவிரவும் அப்படி முறைசொல்லிக்கொண்ட விஷயமாய் செய்யப்படலான உத்திரவுகளும் தளகர்த்த உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கப்படவேண்டியது.

206. தங்குமிடங்களும்வாந்திபேதி வியாதியஸ்தர்களுக்காக குடிசை முதலானது கட்டுவதும்:—கலெக்டர்களானவர்கள் தங்கள் ஜில்லாக்கள் மூலமாய்ப்போகிற ரஸ்தாக்களின் பக்கங்களில் படைகள் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட இடங்களை காலாகாலங்களில் பார்வையிட வேண்டி

யது ; தவிரவும், பட்டாளம் இறங்குகிற பிரதி இடத்திலும் அந்த உபயோகத்திற்காக 800 கஜநீளம் 800 கஜ அகலம் உள்ள சதுரத்திற்குக் குறையாமல் இடம் பாதுகார்த்து வைக்கப்பட்டிருக்கவேண்டிய விஷயத்தில் கலெக்டர்கள் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. பட்டாளத்தார் ஒரு தங்கும் இடத்தை விட்டுப்போனபிற்பாடு அந்த யிடத்தை முழுமையும் சுத்தி செய்யவேண்டியது, அப்படி சுத்திசெய்யும்பொருட்டுப் பிடித்த செலவானது கெவர்ண்மெண்டாரைச்சேர்ந்தது. இந்த இடங்களையும் ராணுவஸ்டேஷன்களுக்கு அருகாமயில் வாந்திபேதி வியாதிஸ்தர்களுக்காக கட்டப்பட்ட குடிசைகளுள்ள இடங்களையும் ஜாக்கிரதையாய் பராமரித்து வர கிராமநவுக்கர்களை ஜவாப்தாரிகளாகச் செய்யவேண்டியது. வாந்திபேதிவியாதிஸ்தர்களுக்காக கட்டப்பட்ட குடிசை முதலானவைகளுள்ள இடங்களில் சாகுபடி செய்துகொள்ள யாதொரு ஆக்ஷேபணையுமில்லை; ஆனால் அந்தஇடங்கள் தேவையானபோது விட்டுவிடப்படவேண்டியது, அந்தயிடங்களில்(சர்க்காரார்) பிரவேசிப்பதைக் தடுக்க கூடாது. வாந்திபேதி வியாதியஸ்தர்களுக்காககட்டப்பட்ட குடிசைகளுள்ள இடங்களை படைகள் விட்டுபோனவுடனே உழுதுப்போடவேண்டியது.

207. வாந்திபேதி வியாதி வாராமல் இருக்கும்பொருட்டு எடுத்துக் கோள்ளவேண்டிய முன் எச்சரிக்கைகள் :— படைகள் வழக்கமாய்ப் போகிற ரஸ்தாக்களின் பக்கங்களில் வாந்திபேதி உபத்திரவமாய் இருக்கும் பக்ஷத்தில் அதுசங்கதியைப்பற்றி மிலிடெரி டிபார்ட்மெண்டாருக்கு அவசியமாய்த்தெரிவிக்கவேண்டிய விஷயத்தில் கலெக்டர்கள் முக்கியமாய் கவனம் வைக்கவேண்டியது.

2. ஸிவில் அதிகாரிகளானவர்கள் தங்கள்ஜில்லாக்கள் மூலமாய் ராணு உத்தியோகஸ்தர்கள் போகும்வழிகளில் வாந்திபேதி வியாதியானது பரவி இருக்கும்பக்ஷத்தில், அதுவிஷயம் தங்களுக்கு எப்போதும் தெரியும்படியான ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியது ; அப்படி அந்தவியாதியானது பரவி இருக்கும்பக்ஷத்தில் அந்தசங்கதியைப்பற்றி அதிஸமீபத்திலுள்ள ராணுவஸ்டேஷனுக்கும் படைவகுப்பை நடத்தும் உத்தியோகஸ்தருக்கும் தெரியப்படுத்தவேண்டியது.

3. யாதொரு ஜில்லாவின்மூலமாய் படைகள் போகப்போகிறார்களென்று ராணுவ அதிகாரிகளால் தெரிவிக்கபட்டவுடனே அந்தஜில்லா கலெக்டரானவர் அப்படி படைகள் போவதாய்ச் சொல்லப்பட்டவழியில் வாந்திபேதி வியாதி உண்டாவென்று முக்கியமாய் விசாரணைசெய்து படைகள் அந்தஜில்லாவைக் கடந்து போகும்வரையில் அந்தவிஷயத்தை

பற்றி (அதாவது வாந்திபேதி பரவி இருக்கிறதா இல்லையா என்கிற விஷயம்) அப்போதைக்கப்போது ரிபோர்ட்டு செய்யும்படி தாசில்தார்களுக்கு உத்திரவுசெய்யவேண்டியது. பிற்பாடு, இதுவிஷயமாய் வாஸ்தவமான ஸ்திதியைபற்றி படைகளைநடத்தும் தளகர்த்த உத்தியோகஸ்தருக்கும் படை வகுப்பின் கஸ்பா உத்தியோகஸ்தருக்கும் ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

4. கலெக்டர்களானவர்கள் இந்தக் கட்டளைகளை ஜாக்கிரதையாய்க் கவனிக்கும்படி தங்களுக்குக் கீழ்ப்பட்ட டிவிஷனல் ஆபீஸர்களுக்கு உத்திரவுசெய்யவேண்டியது.

* **208.** வழிப்பிரயாணிகளுக்காக வண்டி:—அவசியமானபோது வழிப்பிரயாணிகளுக்கு உதவியாக வண்டிசேகரித்துக்கொடுக்க வேண்டியது கலெக்டரிடகடமை, சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிற பிரயாணிக்கு அவசியம் உதவிசெய்யவேண்டியது. ஆகிலும், சொந்த ஏற்பாடு செய்துகொண்டு தேவையான வண்டிமுதலானவைகளை திருப்திகரமாகசேகரித்துக்கொள்ளக் கூடும் போலிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கலெக்டர்கள் உட்பிரவேசிக்க வேண்டிய அவசியமிராது.

2. கலெக்டரால் ஏற்படுத்தப்பட்ட சத்தமானது தாராளமானதாயிருக்கவேண்டியது, ஏனென்முல் சத்தத்திற்கு ஓட்டுகிறவர்கள் கிரமமாயும் திருப்திகரமாயும் அவர்களிடவேலையை செய்விக்க ஹேதுவாகும்; அல்லாமலும் அடிக்கடி வண்டி அமர்த்திக்கொடுக்க கெவர்ண்மெண்டார் நிச்சயமாய்சொல்லக்கூடாமையாயிருக்கிறது(ஏனென்முல் அப்படி அடிக்கடி அமர்த்திக்கொடுக்கும் நிச்சயமானது ஒரு ரஸ்தாவில் செல்லும் பிரயாணிகளின் சங்கியை அனுஸரித்ததாக யிருக்கிறது). பிரதிஜில்லாவின் சந்தர்ப்பங்களை அனுஸரித்து சத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமேயல்லாமல் ராஜதானி ஒட்டுக்கும் ஒரே வீதம் உள்ளதாயிருக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் ஏற்படுத்தக் கூடாது. நிறுத்திவைத்துக் கொள்வதற்காகக் கொடுக்கும் பத்தாவையும் பயணக்கூலியையும் அம்மாதிரி நியமங்களை யனுஸரித்து கொடுக்கவேண்டியது. சுமையாட்களாவது எருதுகளாவது அதே ரஸ்தாமூலமாக முதலில் போனபிரயாணியுடன் திரும்பிவரும்போதும் அல்லது போகவேண்டிய

---

* எந்த டிபார்ட்மெண்டையாவது சேர்ந்த எந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தராவது வேலையின்பேரில் வெளியே ஸஞ்சாரம் செய்யும்போது வண்டி தேவையாயிருந்து ஊரில் விசாரித்து சத்த வண்டி சம்பாதித்துக்கொள்ள முயற்சி செய்தும் முடியாமற்போனல் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கிராம முனிசீபானவர் அவருக்கு சத்தவண்டி தயாரித்து கொடுக்கவேண்டியதென்று இப்பால் கெவர்ண்மெண்டார் உத்திரவு செய்திருக்கிருர்கள்.

இடமானது 2மயிலுக்கு மேற்படாமலிருக்கும்போதும் வழிப்பிரயாண கூலிகளை 24மணிநேரம் நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட பின்னிட்டு மாத்திரமே டிடென்ஷன் பத்தாவுக்கு (அதாவது நிறுத்திவைத்துக் கொள்வதற்காகக் கொடுக்கப்படும் பத்தாவுக்கு) பாத்தியதையுண்டு.

3. சில்லறையாய் அப்போதைக்கப்போது நேரிடக்கூடிய செலவுகளுக்காக கெவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் ஏற்படுத்தப்படும் வண்டிகளெல்லாவற்றிற்கும் ஒரு சொற்பவரி விதிக்கப்படவேண்டியது. அப்படி விதிக்கப்படும் வரியானது சில்லறை செலவுகளுக்காகப் போதுமானதாகவே இருக்கவேண்டியது. அப்படி வசூலாகும் வரியின் மொத்தத்தை அப்போதைக்கப்போது அனுபோகத்திற்குத்தகுந்த பிரகாரம் கணக்குகளில் முஜரா வைத்துக் கொள்ளக்கூடும்.

4. குறிப்பிட்ட பயணம் முடிந்தவுடனே பிரயாணியே எப்போதும் சத்தத்தைக் கொடுத்து விடவேண்டியது; சத்தம் சேரவேண்டிய ஆஸாமிகளிடத்திலேயே தயாராய்க்கொடுத்து விடும்பக்ஷத்தில் மனப்பூர்த்தியாயும் திருப்திகரமாயும் அவர்களிடத்திலிருந்து வேலைவாங்குவதற்கு நிச்சியமான ஹேதுவாயிருக்கிறது, அல்லாமலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உட்பிரவேசித்து ஜாஸ்தியாய் நடவடிக்கை நடத்துவதையும் தவிர்த்து விடுகிறது. பலான தூரம் போனவுடனே பலான துகைகொடுக்க வேணுமென்று வியக்தமாய்க் கண்ட வழிப்பிரயாண பில்களை பிரயாணிகளுக்கு கொடுக்கவேண்டியது; பிரயாணக்காரனானவன் சத்தத்தைக் கொடுக்கத் தவறிப்போகும் பக்ஷத்தில் சர்க்கார் உதவியைக்கொண்டு பின்னிட்டு அவன் பிரயாணம் போவது கண்டிப்பாய் நிறுத்திவிடப்படும். ஜாஸ்திசத்தம் வசூல்செய்யப்பட்டதென்றாவது, அல்லது துர்நடத்தைக்காகவாவது, சொல்லிக்கொள்ள வேண்டிய முறைகளைப் பின்னிட்டு சொல்லிக்கொண்டு தீர்த்துக்கொள்ள வேண்டியது, அப்பேர்ப்பட்ட சாக்குபோக்குகள் இருக்கின்றனவென்கிற காரணத்தால் பிரயாணபில்லில் கண்ட துகைகளைப் பிடித்துவைத்துக் கொள்ளக்கூடாது.

5. அன்னியர்களுக்கு வண்டிஅமர்த்திக்கொடுக்குமுன்பாக அவர்கள்இன்னாரென்று தெரிவிக்கும்படியாவது அல்லது டேவணிசெலுத்தும்படியாகவாவது அவர்களைக் கேட்கவேண்டியது. ஆனால் அப்படிக்கொத்த மார்க்கத்தை அனுஸரிக்க அவசியம் அடிக்கடி நேரிடாது. டேவணிகட்டியிருக்கும்பட்சத்தில், பிரயாணியானவன் அந்த ஜில்லா மூலமாய் அவன் பயணம் முடிவானவுடனே டேவணிபணத்தை அவனுக்குத் திருப்பி கொடுத்து விடவேண்டியது.

6. எருதுமாட்டுவண்டியில் அளவு பிரகாரம்போகக்கூடிய பிரயாணிகள்—வயதுவந்த இரண்டுநபர்களும் ஒருவேலைக்காரனும்; 3 வயதுக்கும் 12 வயதுக்கும் மத்திய வயசுள்ள பாலியர்கள் 2 பேர்சேர்ந்து வயதுவந்த ஒரு நபருக்குச்சமானமாக பாவிக்கப்படும் ; 3 வயதுக்குக் கீழ்பட்ட குழந்தைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா. அளவுக்கதிகப்பட்டு ஏறுகிற வயதுவந்த நபர் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் மொத்தசத்தத்தில் கால்பங்கு ஜாஸ்தியாய் வசூல்செய்யப்படவேண்டியது.

7. சத்தத்தின் வீதங்களை ஜில்லாகெஜட்டில் அப்போதைக்கப்போது பிரசித்தம்செய்யவேண்டியது, அந்தவீதங்கள்கண்ட ஜாப்தாக்களைப் பிரயாணிகளுக்குக் கொடுக்கவேண்டியது.

209* வழிப்பிரயாணிகளுக்குஸரபராசெய்வது:—எந்தஇடங்களிலாவது கடைத்தெருவுஇல்லாமற்போயும் ஆனதுபற்றி கிராமத்துமணியகா

I * யாதொரு கிராமத்திய மணியகாரர் யாதொரு வழிப்பிரயாணிக்காவதுஅல்லது தன்கிராமத்தருகாமையில் முகாம்செய்கிற கலெக்டருக்காவது தேவையான சாமான்களை அவைகளுக்காக விலைபெற்றுக்கொண்டு ஸரபரா செய்யக்கடமைப்பட்டிருக்கிறார், ஆகச்சே, பிரதி ஜில்லா உத்தியோகஸ்தரும், அன்றியும் முக்கியமாய்க் கலெக்டரும் அவருக்குக் கீழ்ப்பட்ட டிவிஷனல் ஆபீசர்களும், தாங்கள் எந்த கிராமத்தில்போய் முகாம்செய்கிறார்களோ அந்த கிராமத்திய மணியகார் ஸரபராசெய்கிறவைகளுக்கெல்லாம் எப்பொழுதும் பூராகிரயம் அவருக்குக் கொடுக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டிய விஷயத்தில் தங்களால் கூடியவரையில் எச்சரிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியது.

II. கலெக்டரானவர் எந்த கிராமத்திலாவது கொஞ்சநாள் தங்கியிருப்பதாக உத்தேசித்தால் கிரமமாய் அவர்செய்யவேண்டிய ஏற்பாடு என்னவென்றால்:—அந்த கிராமத்தில் எந்த தேதியில் கலெக்டர் வந்து சேருவாரென்று அந்த கிராமத்திய மணீகாருக்குத்தெரிவிக்கும்படிக்கும் கலெக்டரிட பரிவாரங்கள்வந்துசேர்ந்தவுடனே என்னென்ன தேவையோ அதை ஸரபராசெய்யவும் மேலும் பிரதிதினம் எவ்விதமான எவ்வளவு சாமான்கள் தேவையாயிருக்குமென்று கலெக்டரிடவேலைக்காரர்களிடத்திலிருந்துதெரிந்துகொள்ளவும் ஆஜரிலிருக்கும்படி மணீயகாருக்கு உத்திரவு செய்யும்படிக்கும், தவிரவும் தான் ஸரபராசெய்கிற சாமான்களுக்குள்ள கிரயத்தைத் தன்னிடம் கொடுக்காமற் போனால் உடனே கலெக்டரிடத்தில் சொல்லிக் கொள்ளும்படிக்கும், கண்டெழுதி மணீகாருக்கு ஒரு தாக்கீதை அனுப்பும்படி தாலூகா தாசில்தாருக்கு உத்திரவு செய்யவேண்டியது.

ரர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் வழிப்பிரயாணிகளுக்கும் தேவையான ஸாமகிரிகளை சேகரித்து உதவிசெய்யக்கடமைப் பட்டவர்களாயும் இருக்கிற விஷயங்களில் எப்போதும் ரொக்கபணம் கொடுத்துவிடவேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டியது. கிராமநவுக்கர்கள் கடனாக (அதாவது பின்னிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்ற நம்பிக்கையுடன்) சாமான்களை ஸரபராசெய்யும் பட்சத்தில் அதினாலுண்டாகும் நஷ்டத்திற்கு அவர்களே உட்பட்டவர்கள், (இதுவிஷயத்தில்) துகையைக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்த மேலதிகாரிகளிட ஒத்தாசையைத் தேடக்கூடாது.

III. பிரதிகலெக்டராவது அல்லது ஜில்லா இதரஉத்தியோகஸ்தராவது தம்மிட வேலைக்காரர்களும் சேவகர்களும் தம்மிட பேரைச்சொல்லி சாமான்களை அவைகளுக்கு கிரயம்கொடுக்காமல் பெற்றுக்கொள்வதை தடுக்கக்கூடியவரென்று கெவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்; இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு மிகவும் தக்கமார்க்கம் எதுவென்றால்—தேவையான ஒவ்வொருவஸ்துக்கும் எழுத்து மூலமான ஒரு உத்திரவைக்கொடுக்கும்படி தம்மிட வேலைக்காரர்களை திட்டப்படுத்த வேண்டியதுதான். இவ்வித எழுத்து மூலமான உத்திரவுகளானவை மணீகாரிட பில்லுக்கு (செலவுகள் கண்ட ஜாப்தாவுக்கு) ஆதாரமான வௌச்சர்களாக (அத்தாக்ஷிதஸ்தவேஜுகளாக) உதவும் ; மேலும், அந்தஆபீசரே தாம்அந்த கிராமத்தை விட்டுப்போகுமுன்பாக மணீகாருக்குச்சேரவேண்டிய துகைகள் பூராவையும் பெற்றுக்கொண்டாரா இல்லையாவென்று மணீயகாரரைவிசாரித்துத் தெரிந்துகொள்ளுவாரேயானால் கலெக்டரானவர் தம்மிட ஜில்லாவில் தாம் ஸர்கியூட் போவதினால் தாம் தங்குகிற கிராமங்களிலுள்ள கிராமத்தார்களுக்கு தொந்திரவும் நஷ்டமும் நேரிட ஹேதுவாயிருக்கிறதென்ற யாதொரு புகாராவும் உண்டாக இடமில்லை ; அன்றியும், ஸரபரா செய்யப்பட்ட சாமான்களுக்குள்ள கிரயத்தை உடனே கொடுத்து விடும் வழக்கமானது அந்தசாமான்கள் அதிதயாராய் ஆஜர்செய்யப்பட நிச்சயமான ஹேதுவாயிருக்கும்; அதேமாதிரியாய் (கலெக்டருக்குக்) கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களை ஸரபராசெய்யும்படி மணீகாரைக் கோரிக்கொள்ளும் பட்சத்தில் எழுத்து மூலமான உத்திரவுகள்கொடுத்தால் மாத்திரமே அவர்களுக்கு மணீகார் ஸரபராசெய்ய வேண்டியது.

XVI. (16) - வது அதிகாரம்.

கோர்ட்டு அவ் வார்ட்ஸ்.*

*(அதாவது: ஜமீன்தாரர்கள், சாதாரண குடியானவர்கள், முதலானவர்களிட ஆஸ்திக்குச் சுதந்தரவாளிகளான ஆஸாமிகள் மைனராயிருப்பதினுலாவது ஸ்திரீஜாதியாயிருப்பதினுலாவது அல்லது சுபாவமாய்த் தேகத்திலுள்ள பங்கங்களினுலாவது (உதாரணம் பைத்தியம் குருடு முதலியன), தங்களுக்குச் சுதந்தரமான ஆஸ்தியை மேல் போட்டுக்கொண்டு பராமரித்துவர அசக்தர்களாய்ப் போய் அப்பேர்ப்பட்ட ஆஸ்திகளை சொந்த ஜனங்களிடத்தில் ஒப்புவித்து பராமரித்து வரும்படி செய்ததில் அப்பேர்ப்பட்ட சொந்த ஜனங்கள் அந்த ஆஸ்தியின் வருமானங்களை துர்வினியோகப்படுத்தினதாய் ஏற்பட்டபடியினுல் அப்பேர்ப்பட்ட ஆஸ்திகளை சர்க்கார் தரப்பில்மேல்போட்டுக்கொண்டு பராமரித்து வரும் பொருட்டு கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டு. இத்தக் கோர்ட்டார் யாரென்ருல் ரெவினியூ போர்டு மெம்பர்கள் தான்.)

---

210. தீர்வை ஏற்படுத்துவதும் வசூல் செய்வதும்:—கோர்ட்டு அவ் வார்ட்ஸ் வசத்தில் எஸ்டேட்டுகள் (என்ருல் இலாகாக்கள்) சில வருஷகாலம் இருக்கக்கூடிய வைகளாக யிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் சௌகரியப்படும் பட்சத்தில் ரயத்வாரி நிலங்களுக்குத் தீர்வை விதித்து வசூல் செய்யும் மாதிரியாகவே எஸ்டேட்டுகளுக்கும் தீர்வைவிதித்து வசூல் செய்ய வேண்டியது. நிலங்களை சிலவருஷகாலங்களுக்குக் குத்தகை அடமானத்திற்கு விட்டுவரும் வழக்கத்தை நிறுத்திப்போடவேண்டியது.

2. யாதொரு எஸ்டேட்டானது கோர்ட்டு அவ் வார்ட்ஸின் மேல்விசாரணையில் இருக்கும் போது எற்பட்ட சர்க்கார் பாக்கிக்காக கோர்ட்டு அவ் வார்ட்ஸ் மேல் விசாரணையிலிருக்கிற அந்த எஸ்டேட்டை எலம் போட கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு 1804ம் ௵த்திய 5-வது சீர்திருத்த சட்டப்பிரகாரம் அதிகாரமில்லை. எஸ்டேட்டைசொந்தக்காரனுக்கு ஒப்புவித்து விடும்போது அப்பேர்ப்பட்ட பாக்கிகளை கணக்குகளிலிருந்து அடித்து விடவேண்டியது அவசியமாக இருக்கிறது. கோர்ட் அவ் வார்ட்ஸாரிட

மேல் விசாரணையிலுள்ள யாதொரு எஸ்டேட்டின் வரும்படி பூராவையும் அந்த எஸ்டேட்டுக்காக கெவர்ண்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய தீர்வைக்கு வரவுவைத்துக்கொள்ள கலெக்டருக்கு அதிகாரமில்லை. எஸ்டேட்டினிடவருமானத்திலிருந்து மைனரிட செலவுக்காக அதமபக்ஷம்100க்கு10 எடுத்துவைக்கவேண்டியது, சர்க்கார் தீர்வையானது எஸ்டேட்டின் வருமானத்தில் 100க்கு 90 வீத முள்ளதாயிருக்கும் பக்ஷத்தில் செலவுபோக பாக்கி 90 யும் சர்க்கார் தீர்வைக்காக வரவு வைத்துக்கொள்ளலாம்.

3. கோர்ட்டு ஆவ் வார்ட்ஸாரிட மேல் விசாரணையில் யாதொரு எஸ்டேட்டானது எடுத்துக்கொள்ளப்படும் போது அந்த எஸ்டேட்டுக்காக சர்க்கார்தீர்வை பாக்கி செலுத்தவேண்டியதாயிருந்து கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட மேல் விசாரணையிலிருக்கும் போது வந்த வரும்படியானது கோர்ட் ஆவ் வார்ட் ஸாரிட விசாரணையிலிருந்த காலம் வரையில் கெவர்ண்மெண்டாருக்குச் சேரவேண்டியத் தீர்வையைச் செலுத்தவும் மைனரிட செலவுகளுக்குமே போதுமானதாயிருந்திருக்கும் பக்ஷத்தில் அந்த எஸ்டேட்டை சொந்தகாரனுக்கு ஒப்புவிக்கும் போது அந்த எஸ்டேட்டின் பேரில் சொந்தக்காரன் செலுத்தவேண்டிய கடனாக அவ்வித சர்க்கார் பாக்கியானது (அதாவது கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட வசத்தில் எடுத்துக்கொள்ளப்படுமுன்பாக இருந்த பாக்கி) பாவிக்கப்படலாம்.

4. (இப்பால் இது ரத்து செய்யப்பட்டது.)

5. தற்காலம் தன்னுஸ்தியைப் பரிபாலித்து வர சக்தியற்றவனாய்ப் போயிருக்கிற சொந்தக்காரனுக்கும் (நிலக்காரனுக்கும்) புறக்குடிக்கும் உள்ள தகரர்கள் விஷயமாய் என்ன அதிகாரங்களுண்டோ அவைகளை விட ஜாஸ்தியில்லாமலும் குறைவில்லாமலும் அதே அதிகாரங்கள் கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட ஏஜெண்டுகளாகிய கலெக்டர்களுக்குஉண்டு.

211. வித்தியாப்பியாஸம்செய்விப்பது:—ஆண்பிள்ளையாயிருந்தாலும் பெண்பிள்ளையாயிருந்தாலும் மைனர்கள் (தக்க வயதுவராதசிறியவர்களை) படிப்பிக்கும்விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டியது; அவர்கள் படித்துவருகிற பாடசாலைகளின் தலைமை உபாத்தியாயரிடமிருந்து அவர்கள் பள்ளிக்கூடம்போனதைப்பற்றியும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததைப் பற்றியும் படிப்பில் எவ்வளவு தேர்ச்சி அடைந்திருக்கிறார்களென்பதைப் பற்றியும் மாதவாரியில் சுருக்கமான ரிபோட்டைத்தருவிக்க வேண்டியது. இந்தவிஷயமாய் வருஷவாரியில் ரிபோர்ட்டு செய்யும்பொருட்டு ஒரு அட்டவணை ஸ்டேட்மெண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

2. தகுந்தவயது வராத பாலியர்களான சுதந்திரவாளிகளையும் அவர்களிட ஸகோதரர்களையும் அவர்களிட வீட்டில் இருக்கும் நிலமையினால் அவர்

களை துன்மார்க்கமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடியவயதில் அவர்களை வீட்டிலிருந்து வெளிப்படுத்தி கொண்டுவந்து இனி அவர்களுக்குண்டான பொறுப்புகளை எல்லாம் அவர்கள் கிரமமாய் அறிந்துகொள்ளும்பொருட்டு அவர்களிட மனதுகளை ஜாக்கிரதையாய் தேர்ச்சியடையச் செய்வதினாலும் தேசத்தில் ஸித்திக்கக்கூடிய நாகரீகமான பலன்களைப்பற்றி அதிகமாய்ச்சொல்லவேண்டிய அவசியமில்லை. இப்படியிருக்கையிலோ, இந்த ஏற்பாட்டினால் கெவர்ன்மெண்டாரிட எண்ணப்பிரகாரம் சித்திக்கக்கூடிய நோக்கங்களைப்பற்றி (அந்த ஏற்பாட்டின் ஸித்திக்கு அடியோடு ஹானியான தப்புஎண்ணங்களும் மனஸ்தாபங்களும் உண்டாகும்படியான) தப்பு அர்த்தம் செய்யவொட்டாமல் தடுக்க ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது.

3. கோர்ட் ஆவ் வார்ட்ஸுக்கு ஏஜெண்டுகளாகிய கலெக்டர்கள் தங்கள் வசத்திலிருக்கப்பட்ட மைனர்களிட படிப்பைப் பற்றியும் தேர்ச்சியைப்பற்றியும் பாடசாலை இன்ஸ்பெக்டர்களுடன் தாராளமாய்க் கலந்து சம்பாஷிக்கவேண்டியது. யாதொரு மைனரை ஒரு பாடசாலையை விடச்செய்து மற்றொரு பாடசாலையில் சேர்க்கும் பொருட்டு முன்னடியாக டைரெக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் என்னும் உத்தியோகஸ்தருடன் ஆலோசியாமல் கோர்ட் ஆவ் வார்ட்ஸாருக்கு சிபார்சு செய்யக்கூடாது. அப்படி சிபார்சு செய்யும்போதும் அந்த டைரக்டரிட தாத்பரியங்களையும் எப்போதும் கூடகண்டெழுதி யனுப்பவேண்டியது. யாதாவதொரு மைனர் இறந்துபோவதினாலாவது அல்லது தக்கவ்யது வந்து விட்டகாரணத்தினாலாவது அவன் படிக்காமல் நின்று போகும் பக்ஷத்தில் அந்த சங்கதியைப்பற்றி மேலே சொல்லப்பட்ட டைரெக்டர் என்கிற உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கவேண்டியது.

4. மைனர்களைப் பரீக்ஷை செய்யுமுன்பாக அது விஷயமாய் ரெவினியூ அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி யெடியூகேஷனல் டிபார்ட்மெண்டு (அதாவது வித்தியாசாலை சம்பந்தமான டிபார்ட்மெண்டு) உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவிக்கப்படிருக்கிறது.

212. விவாகம்:—மைனர்களுக்கு தேக சம்பந்தமாயும் புத்திசம்பந்தமாயும் தேர்ந்து விர்த்தியடையத்தேவையான காலம்வரையில் அவர்களிட விவாகத்தை நிறுத்திவைக்கவேண்டியது அதிக முக்கியமானதென்று கோர்ட் ஆவ் வார்ட்ஸ் எண்ணியிருக்கிறார்கள். ஆகையால் கோர்ட்டாரிட பிரத்தியேகமான சம்மதமன்றியில் விவாகத்தைக் குறித்து யாதொரு முயற்சியும் எடுத்துக்கொள்ள வொட்டாமல் கலெக்டர்கள் ஜாக்கிரதையாயிருப்பதுடன் அந்த எண்ணம் அதேமாதிரியாய் நிறைவேறும்படிக்கு மைனர்களிட

பந்துக்களுடன் சினேகமேரையான ஒத்தாசை செய்வித்துக்கொள்ள தங்களால் கூடியவரையில் முயற்சி செய்யவேண்டியது.

213. **ஆஸ்தியை மேல் விசாரணை செய்கிறவர்களும் மைனர்களைப் பாதுகார்ப்பவர்களும் ;—**(மானேஜர்களும் கார்டியன்களும்) :—கோர்ட் ஆவ் வார்ட்ஸ் மேல் விசாரணையிலிருக்கிற எஸ்டேட்டுகளை பரிபாலிக்க சக்தியற்ற சுதந்தரவாளிகளுக்கு மானேஜர்களாகவும் கார்ட்டியன்களாகவும் நியமிக்கப்படும் ஆஸாமிகளுக்கு கலெக்டரால் முத்திரையும் கையொப்பமும் செய்யப்பட்ட அதிகாரசாஸனங்கள் 1804 வருஷத்திய 5-வது சீர்திருத்தச் சட்டத்தின் 11-வது பிரிவையும் 21–வது பிரிவையும் அனுசரித்து கொடுக்கப்படும். அப்பேர்ப்பட்ட அதிகார சாஸனங்களும் மானேஜர்களோ அல்லது கார்ட்டியன்களோ (தேவையான்போது) நேராய் ஆஜராவதாய் கொடுக்கவேண்டிய ஜாமீன்பத்திரமும் அவர்கள் தயாரித்து கொடுக்கவேண்டிய பொறுப்பு தஸ்தாவேஜுகளும் இன்னபாரங்கள் பிரகாரம் இருக்கவேண்டியதென்று அனுபந்தத்தில் கண்டிருக்கிறது. சுதேசபாஷையில் அவைகளை (மேல்சொன்ன தஸ்தாவேஜுகளை) கலெக்டர்கள் தர்ஜிமாசெய்வித்து இத்துடன் சேர்ப்பிக்கவேண்டியது; தேவையான போது நேராய் ஆஜராகாத விஷயத்தில் ஏற்படுத்தப்பட்ட தண்டனையானது பெரும்பான்மையாய் ஒப்புக்கு விதிக்கப்படுவதாகும்.

214. பைனன்ஷியல் (அதாவது அரசிறை முதலிய பணவருமானம் செலவுகள் சம்பந்தமான ஏற்பாடுகள்).—கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய மேல் விசாரணையிலிருக்கிற எஸ்டேட்களிலிருந்துவரும் வரும்படியில் செலவுகள் போக பாக்கியிருந்தால் அப்பேர்ப்பட்ட பாக்கியில் அதமபட்சம் ஒரு பாகத்தையாவது அந்த ஆஸ்தியை ஸ்திரமாய் விர்த்திசெய்யவேண்டிய விஷயத்திற்காக பிரயோஜனப்படுத்துவது யுக்தமாயிருக்கிறது, இப்படி பிரயோஜனப்படுத்தும்பொருட்டு 1804-ம் வருஷத்திய 5-வது சீர்திருத்தச் சட்டத்தின் 16-வது பிரிவில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ; அப்படி செலவு போக மீந்ததுகை பூராவையும் சர்க்காரில் வட்டிக்கு போட்டிருந்தால் சொந்தக்காரனானவன் எஸ்டேட்டை வசப்படுத்திக்கொண்டமேல் அந்த பணத்தை தாறுமாறாய் செலவழித்துவிட ஹேதுவாயிருக்கும். மைனராயிருக்கிற சுதந்தரவாளிகளுக்காக சர்க்காரில் பணத்தை வட்டிக்குபோட்டு பெற்றுக்கொண்ட தஸ்தாவேஜுகளை மதராஸ் பாங்கியில் வைத்து வைக்கும்பொருட்டு கோர்ட் ஆவ் வார்ட்ஸாருக்கு அனுப்பிவிடவேணடியது.

2. எஸ்டேட்டினுடைய பேரீஜ் தீர்வையிலிருந்து எஸ்டேட்டை மேல்விசாரணை செய்வதற்காகவும் தீர்வையை வசூல் செய்வதற்காகவும் எஸ்டேட்டுகளிலுள்ள பொது வேலைகளையும் கட்டடங்களையும் பராமரித்துவருவ

தற்காகவும் பிடிக்கும் செலவுகள் போக பாக்கியிருக்கிற தீர்வையை அனுஸரித்து கெவர்ண்மெண்டாருக்குச் சேரவேண்டிய கம்மிஷன் கணக்கிடப்படும். கடுதாசு பேனு முதலியவைகளுக்காகப் பிடிக்கும் செலவையும் இதர சாதல்வார் செலவையும் மேற்கண்ட தீர்வையிலிருந்து கம்மிஷன் கணக்கிடப்படும் பொருட்டு கழிக்கலாம். ஆனால் மைனரைப் பரிபாலிக்கவும் அவருக்கு வித்யாப்பியாஸம் செய்விக்கவும் பிடிக்கும் செலவுகளையாவது தேவஸ்தானங்களையும் சத்திரங்களையும் வீடுகளையும் பழுதுபார்ப்பதற்காக பிடிக்கும் செலவையாவது அல்லது தர்மம் செய்யும்பொருட்டு வேண்டிய செலவையாவது (கம்மிஷன் கணக்கிடப்படும்போது) மொத்தத்தீர்வை வருமானத்திலிருந்து கழிக்கக்கூடாது.

215. இனும் நிலங்களை பராதீனப்படுத்துவது.—இந்த சீர்திருத்த சட்டத்தை அனுசரித்து கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட மேல்விசாரணையில் எடுத்து கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் (ஸ்திரமான பைஸலாத்தி ஏற்பட்டபின்னிட்டு விடப்பட்டிருக்கிற இனும் நிலங்கள் விஷயமாய் கலெக்டர்கள் ஜாக்கிரதையாய் விசாரணை செய்யவேண்டியது.

2. அப்படி விடப்பட்ட இனும் நிலங்கள் வெகுசாய் திரும்பவும் எஸ்டேட்டுடன் சேர்த்துவிடப்படக்கூடியவை; மேலும் தங்களிட ஆஸ்திகளை பரிபாலித்துவர சக்தியற்றவர்களுக்கு நம்பிக்கையுள்ள பிரதிநிதிகள் கோர்ட் ஆவ் வார்ட்ஸராகையால், அவர்கள் (கோர்ட் ஆவ் வாட்ஸார்) தங்கள் பரிபாலனையில் இருக்கிறவர்களுக்கு இந்த இனும் நிலங்களிலும் மற்றவிஷயங்களிலும் உள்ள சிரத்தைகளையும் பாத்தியதைகளையும் ஸ்திரப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

3 இனும்நிலங்களில் ஏதாவது, இன்னமும் அனுஷ்டித்து வருவது யுக்தமாயிருக்கிற உபயோகங்களுக்காக விடப்பட்டிருந்தாலொழிய அல்லது இனும்நிலங்களை திரும்ப ஆஸ்தியுடன் சேர்த்துவிடாமல் நிறுத்திவைப்பதற்கு ஏதோ பிரத்தியேகமான காரணம் இருந்தாலொழிய, (இதற்கு உதாரணம்—எந்த ஆஸாமிக்கு இனும் விடப்பட்டிருக்கிறதோ அவன் எஸ்டேட்டின் சொந்தக்காரனிட வம்சத்தை சேர்ந்தவனென்கிற காரணத்தினால் தயாலோசனைக்கு இடமிருப்பது, அல்லது அப்படி அந்த இனும்நிலத்தை திரும்ப ஆஸ்தியுடன் சேர்த்துவிடுவதானது சட்டப்பிரகாரம் கூடாமையாய் போய்விடுதல்), அந்த இனும் நிலங்களை உடனேஆஸ்தியுடன் திரும்ப சேர்த்துவிட வேண்டியது. அப்பேர்ப்பட்ட இனும்நிலங்களை அனுபவிக்கிறவன் தனக்குள்ள இனும் பாத்தியதையை விட்டுவிடமாட்டேனென்றால் கிரமமாய் அவன்பேரில் தாவாசெய்து இனும் நிலத்தை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடும்.

4. இனும்நிலங்களை தொடர்ந்தனுபவிக்கும்பொருட்டு விடப்பட்ட விஷயங்களில் எஸ்டேட்டின் சுதந்தரவாளிக்கு அந்த இனும் நிலங்களில் உள்ளபாத்தியதையை பரிபாலித்து வரும்பொருட்டு அந்த இனும் நிலங்களுக்குள்ள குயிட்ரெண்ட் தீர்வையை ஜாஸ்திபடுத்தவேண்டியது ; அப்படி விடப்பட்ட இனுமானது தயாதாட்சணியத்தை முன்னிட்டு விட்ப்பட்டதே தவிர பாத்தியதையை முன்னிட்டு விடப்படவில்லையென்றும் மைனரானவன் தருந்தவயதை அடைந்தஉடனே அப்படி விடப்பட்ட இனுங்களின் அடமானத்தை ரத்துசெய்யப்படுமென்றும் கண்டெழுதி ஓர் பட்டாகொடுக்கவேண்டியது.

216. கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய வசத்தில் எஸ்டேட்டுகள் எடுத்துக்கொள்ளப்படும்பொழுதுஅந்த எஸ்டேட்டுகளில் பின்னிட்ட இனும்நிலங்களைப்பற்றி கலெக்டர்கள் உடனே விசாரணைசெய்து அவைகளை எவ்விதமாய் பைசல்செய்யவேண்டுமென்பதைப்பற்றி காலகிரமத்தில் ரிபோர்ட்செய்யவேண்டியது. குத்தகை அடமானங்கள் ஜமீன்தார்களையாவது இதரஎஸ்டேட்களையாவது அல்லது அப்பேர்ப்பட்ட எஸ்டேட்டுகளின் பாகங்களையாவது கோர்ட் அவ் வார்ட்ஸார் குத்தகை அடமானத்துக்காக விடும்பொழுது குத்தகை பத்திரமானது எப்போதும் குறித்த நமூனுபிரகாரமிருக்கவேண்டியது.

217. வியாச்சியங்கள்:—பட்டா மாற்றுதலுக்காக செய்யப்படும் வியாச்சியங்களில் கெவர்ன்மெண்டுக்கு பிரதிநிதியாகநின்று ஆதரிக்கும் பொருட்டு கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாய் பிரஸ்தாபத்திருக்கிற விதியானது கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய மேல்விசாரணையிலிருக்கிற எஸ்டேட்டுகள் விஷயமாய் உண்டாகும் வியாச்சியங்களுக்கு சம்பந்தபட்டதல்ல ; இந்த விஷயங்களில் கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய உத்திரவை பெற்றுக்கொள்ளவேண்டியது.

218. பப்ளிக் வோர்க்ஸ்.—அதாவது போது உபயோகமான வேலைகள்:—எஸ்டேட்டுகள் சம்பந்தமாய் செய்யவேண்டிய அசல்வேலைகளுக்கு பிடிக்கும் சிலவு எவ்வளவாகயிருந்தபோதிலும், அந்தவேலைகளுக்காகவும், 200 ரூ அல்லது அதற்குமேற்பட்டு செலவழித்து செய்யவேண்டிய பழுதுபார்க்கும் வேலைகளுக்காகவும், முன்னுடியாய் கலெக்டர்கள் கோர்ட் ஆப் வார்ட்ஸாருடைய அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டியது.

2. 200ரூபாய்க்கு கீழ்பட்டு பிடிக்கக்கூடிய பழுதுபார்க்கும்வேலைகளை செய்விக்கக் கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு, ஆனுல் அதற்காக பிடிக்கும் சிலவானது பட்ஜட்டில் ஏற்படுத்தப்பட்ட துகையிலிருந்து சிலவிட போதுமானதாக இருக்கவேண்டியது.

38

3. அவசரமாய் பழுதுபார்க்கவேண்டியிருந்தால் எந்தசந்தர்ப்பங்களி லும் அனுமதியை எதிர்பார்த்தே பழுது வேலைகளை செய்விக்கக்கூடும். ஆகி லும் கெவர்ண்மெண்டு பப்ளிக்வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரால் மைனர் முத லானவர்களுடைய எஸ்டேட்களில் நடத்தப்படும் வேலைகளுக்கு மேலே சொன்ன விதிகள் சம்பந்தப்பட்டதல்ல, அப்பேர்ப்பட்டவேலைகள் பப்ளிக் வொர்க்ஸ் புஸ்தகத்தின் விதிகளுக்கு உட்பட்டவை.

219. ஆபீஸ்.—அதாவது உத்தியோகசாலை:—மைனர்களுடைய எஸ்டேட்டுவிஷயமாய் போக்குவரத்து செய்யப்படும் கடிதங்களுக்கு சொ ந்த தபால் லேபில் ஒட்டவேண்டியது. அப்படி ஒட்ட வேண்டிய லேபில் களை கடிதங்களை அனுப்பும்போதே ஒட்டவேண்டியது. மைனர்களுடைய எஸ்டேட்கள் சம்பந்தமாய் கலெக்டர்களுக்கு கீழ்ப்பட்டு வேலைபார்த்து வரு கிற உத்தியோகஸ்தர்களுக்கு செல்லுமான லேபில்களை அவர்களுக்கு கலெக் டர்கள் அனுப்ப வேண்டியது. அதற்காக பிடிக்கும்சிலவை சம்பந்தப்பட்ட எஸ்டேட்களில் சிலவானதாக எழுதவேண்டியது.

2. கலெக்டர்கள்கோர்ட் ஆப் வார்ட்ஸாருடன் கடிதபோக்குவரத்து செய்யும்போது அப்பேர்ப்பட்ட கடிதங்களுக்காக இங்கிலீஷ்பூல்ஸ்காப் என்ற காகிதத்தை உபயோகிக்க வேண்டியது.

220. ரிபோர்ட்டுகள்.—யாதொருஎஸ்டேட்டை கோர்ட் ஆப் வார் ட்ஸாரிட மேல் விசாரணையில் எடுத்துக்கொள்ளும் விஷயமாய் ரிபோர்ட் செய்யும்போது அந்த விஷயத்தின் சந்தர்ப்பங்களைக் கூடியவரையில் பூர்த்தி யாய்க்கண்டு விபரமான ரிபோர்ட்டை அனுப்ப சட்டப்பிரகாரம் கலெக்டர் கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்; முக்கியமாய் அவர்கள் குறித்து ரிபோர்ட்டு செய்யவேண்டியவைகளாவன:—தன்னிட ஆஸ்தியைப்பரிபாலித்துவர சக் தியற்றவனாகிய சுதந்திரவாளி புருஷனா, ஸ்திரீயா என்றும் என்னவயசுள்ள வரென்றும், இறந்துபோன சொந்தக்காரனுக்கு இந்தவார்சுதார் என்னவித மான பந்துவென்றும் ஆஸ்தியின் ஸ்பஷ்டமான ரொக்கஸ்திதியைப்பற்றியும் அந்த வம்சத்திலுள்ள இதர ஆஸாமிகளின் பெயர்களும் அந்த ஆஸாமிகளிட இஷ்டங்களையும் அந்த எஸ்டேட்டை கோர்ட் ஆப் வார்ட்ஸாரிட மேல்விசா ரணையில் எடுத்துக்கொள்வதில் அந்த ஆஸாமிகளுக்குள்ள பாத்தியதைக ளானது எவ்விதமாய் சம்பந்தப்பட்டன வென்றும்தெரிவிக்கவேண்டியது.

2. ஜமீன்தாரி இலாகா தவிர மற்ற சிறிய எஸ்டேட்டுகளை கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட மேல் விசாரணையில் எடுத்துக்கொள்ளும் பொருட்டு ஆலோசனைகள் அடங்கிய ரிபோர்ட்டுகளை அனுப்பாமலிருக்கும் விஷயத் தில் யுக்தானுஸாரம் நடத்த கலெக்டர்கள் பொதுவாய் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறார்கள்,

3. கெவர்ன்மெண்டார் யாதொரு எஸ்டேட்டை கோர்ட் ஆப் வார்ட்ஸாரிடமேல்விசாரணையில் ஒப்புக்கொடுத்தவுடனே அந்த எஸ்டேட்டுக்கு ஒருமானேஜரையும் ஒருகார்டியனையும் நியமித்தும் எஸ்டேட்டை மேல் விசாரணைசெய்ய ஏற்பாடுகளைப்பற்றியும் அந்த எஸ்டேட்டின் வருமானத்தைப்பற்றியும் செலவைப்பற்றியும் சுருக்கமாய் எடுத்துக்காட்டியும் ரிபோர்ட்டுசெய்யவேண்டியது.

4. பின்னிட்டு கூடிய சீக்கிரத்தில் அடியிற்கண்ட அம்சங்களைப் பற்றி ரிபோர்ட் செய்யவேண்டியது. (1) பரிபாலிக்கப்படுகிற மைனர் முதலானவர்களால் கொடுக்கப்படவேண்டிய கடன்களைப் பற்றியும் அவர்களுக்கு இதராளால் சேரவேண்டிய கடன்களைப்பற்றியும் அவ்விதகடன்கள் என்னமாயுண்டானதென்றும், அவைகளுக்கு வட்டி வீதம் என்ன வென்றும், எவ்வளவு காலத்திற்குள் என்னவிதமாய் வசூலாகுமோ அல்லது செலுத்தப்படுமோ அதையும், கண்டெழுதப்பட்ட ஒரு ஜாப்தாவையும் அதி சமீப காலத்திற்கு முன்னிட்டு தெரியவந்த சமாசாரங்களால் அந்த எஸ்டேட்டின் ரொக்க ஸ்திதியைப்பற்றி ஒரு அட்டவணை ஸ்டேட்மெண்டையும் அந்த ஜாப்தாவுடன்கூட அனுப்பவேண்டியது. (2) அந்த எஸ்டேட்டின் சரித்திரத்தைப்பற்றியும் அதினுடைய விஸ்தீரணம், நிலைமை, பூகோள சாஸ்திரத்திற்கடுத்த அமைப்புகள், குடிகள், கிராமங்கள் இவைகளைப்பற்றி எழுதப்படலான சுருக்கமான சரித்திரம் (3) உள்நாட்டில் போக்குவரத்துக்காக என்ன ஆதாரங்களிருக்கின்றனவென்றும் அப்படி தாராளமாய் போக்குவரத்து செய்யும்பொருட்டு ஏற்படுத்தவேண்டிய ரஸ்தாக்களையும் பாலங்களையும் காண்பித்து எழுதலான ஒரு படத்தையும் இதுவரையில் ஏற்பட்டிருக்கிற ரஸ்தாக்களை ப்ராமரித்துவர எஸ்டேட் பணத்திலிருந்து வருஷவாரியில் செலவிட வேண்டிய துகையையும், புதுசாய் ரஸ்தாக்களையும் பாலங்களையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான உத்தேச துகையையும் கண்ட ஒரு ஸ்டேட்மெண்டு. (4) பொது உபயோகமுள்ள சில்லறை வேலைகளையும் கட்டடங்களையும் கண்ட அம்மாதிரி ஸ்டேட்மெண்டு. (5) ஜலாதாரங்களையும் தற்காலமிருக்கிற ஒவ்வொரு ஜலாதாரத்திலிருந்து ஜலம் பாய்வதால் எவ்வளவு தீர்வை உற்பத்தியாகிற தென்றும் கண்ட அம்மாதிரி ஒரு ஸ்டேட்மெண்டு. (6) சாகுபடியாகிற விஸ்தீரணம் இவ்வளவு வென்றும் அந்தவேளாண்மையானது எவ்வித சுபாவமுள்ளதென்றும் எவ்வித நியமங்களுக்குட்பட்ட தென்றும் அவ்விடத்தில் அனுஷ்டானத்தில் இருக்கிற ஸெட்டில் மெண்டின்விவரணத்தையும்,பயிரிடுகிறவர்களிட காணியாக்ஷிகள் இன்னவிதமானவை என்றும் அடுத்த சர்க்கார் கிராமங்களில் உள்ள பயிரிடுங்குடியானவர்களுக்கும் பிரஸ்தாப எஸ்டேட்டிலுள்ள பயிரிடுங்குடியான

வர்களுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றியும் கண்ட மிமொராண்டம்; (7) (பிரஸ்தாப எஸ்டேட்டிலுள்ள) காடுகளின் நிலமையையும் அவைகளை எவ்விதமாய் பரிபாலித்து வரவேண்டியிருக்கிறதென்றும், கோர்ட் ஆவ் வார்ட்ஸார் (எஸ்டேட் சம்பந்தமான) பொது உபயோகமான வேலைகள் விஷயமாய் செலவாகும் துகையைப்பற்றிமேல் விசாரணை செய்யவும் அவ்வித வேலைகள் கிரமமாய் விருத்தியடைகின்றனவா இல்லையாவென்று தெரிந்துகொள்ளவும் மேல்கண்ட 3, 4, 5 ஸ்டேட்மெண்டுகள் உபயோகமுள்ளவைகளாயிருக்கும்.

5. அடுத்த பஸலியில் யெஸ்டேட் சம்பந்தமான உத்தேச வருமானங்களையும் செலவுகளையும்கண்டு ஒரு பட்ஜட் கணக்கைத்தயாரித்து அதை வருஷவாரியில் ஏப்ரெல் மீ 1௳ யில் அனுப்பவேண்டியது. எவ்வளவு துகை பப்ளிக்வொர்க்ஸ் விஷயமாய் செலவிட வேண்டியதென்பதைப்பற்றி மேல் சொன்ன பட்ஜட் கணக்குடன் அனுப்பும் கடிதத்தில் விவரித்துச் சொல்ல வேண்டியது.

6. மேலே கண்ட ஸ்டேட்மெண்டுகள் பூராவையும் தயார்செய்யு முன்பாக எந்த விஷயங்களைப்பற்றியாவது உத்திரவு பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பற்றி சமாசாரம் தெரிந்த பிற்பாடு அவைகளைப்பற்றி ரிபோர்ட்செய்யலாமென்று நிறுத்திவைத்துக் கொண்டு ஸத்தியாய் எந்தந்த விஷயங்களைப்பற்றி ரிபோர்ட் செய்யக்கூடுமோ அந்த விஷயங்களைப்பற்றி ரிபோர்ட் செய்ய வேண்டியது. ஆனால், 4-வது பிரகரணத்தில் கண்ட நெம்பர்வரிசை பிரகாரம் பல விஷயங்களையும் காண்பிக்கவேண்டியது. எந்த சங்கதிகளைப் பற்றி ரிபோர்ட்டு செய்யவில்லையோ அந்த சங்கதிகளை முதலில் அனுப்பப்படும் ஸ்டேட்மெண்டில் எழுதாமல்விட்டு வைக்கவேண்டியது. மேலே விவரித்துச் சொன்ன ஸ்டேட்மெண்டுகளானது பெரிய எஸ்டேட்டுகளைப்பற்றி சங்கதிகள் தெரிவிப்பதற்காக எற்படுத்தப்பட்டவையாகையால் சிறிய எஸ்டேட்டுகளைப் பற்றி ரிபோர்ட் செய்ய வேணடியதாயிருந்தால் அந்த ஸ்டேட்மெண்டுகளில் அனேகபாகம் எழுதப்படவேண்டியதில்லாமலே இருக்கும். ஆகிலும் பிரதி விஷயத்திலும் அந்த ஸ்டேட்மெண்டுகளை மேலாவிகளுக்கு அனுப்பவேண்டியது. பின்னிட்டு ஜாஸ்தியாய் சங்கதிகள் தெரிவிக்க வேண்டியதென்று கலெக்டருக்கு யுக்தமாகத் தோன்றும் பக்ஷத்தில் அப்படியே தெரிவித்துக் கொள்ளக்கூடும்.

7. கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிட மேல்விசாரணையிலிருக்கிற எஸ்டேட்களுக்குச்சேரவேண்டிய பேரீஜையும் வசூலாகாமலிருக்கிற பாக்கி தீர்வை

களையும் ஜரூராய் வசூல் செய்யவேண்டியது அதிக முக்கியமானதென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

8. பிரதி எஸ்டேட்டுக்கும் சம்பந்தமான பேரீஜு-வசூல் பாக்கி கண்ட ஒரு ஸ்டேட்மெண்டை குறித்த பாரப்பிரகாரம் தயார்செய்து 3 மாசத்திற் கொருதரம் மேலாவிகளுக்கு அனுப்பவேண்டியது. இப்படி அனுப்பப் பட்ட ஸ்டேட்மெண்டுகளை கோர்ட்ஆவ் வார்ட்ஸாரிட ஆபீசில் சேர்த்து வைத்து ஒருதரமாகப் பைசல்செய்யப்படும்.

9. மைனருடைய எஸ்டேட்டில் ஜலாதாரங்களையாவது அல்லது இதரவேலைகளையாவது செய்யும்பொருட்டு விபரமாய் கோர்ட்ஆவ வார்ட் ஸாருக்கு ரிபோர்ட்செய்யப்படும்போது பூமிமட்டங்களைப்பற்றியும் வேலைக ளின் பிரிவுகளைப்பற்றியும் விபரங்கண்ட ரிபோர்ட்டும் எப்போதும் கோர்ட் ஆவ் வார்ட்ஸாருக்கு அனுப்பப்படவேண்டியது. ஜலாதாரங்களைப் பழுது பார்க்கிறதற்காக எஸ்டிமேட் தயாரித்து மேலாவிகளுக்கு அனுப்பும்போது அப்படி பழுதுபார்ப்பதற்காக உத்தேசித்திருக்கப்பட்ட ஜலாதாரத்தின் மூல மாய் சென்ற 5வருஷகாலத்தில் உயர்ந்த தீர்வை எப்போது வசூலாச்சுதோ அந்ததீர்வை இவ்வளவென்றும் அந்த ஜலாதாரத்தைப் பழுதுபார்க்கப் பிடிக்கும் செலவுக்காக கணக்கில் துகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாவென் றும் கலெக்டர்கள் ரிபோர்ட்செய்யவேண்டியது.

10. செலவிடுவதற்காக எஸ்டிமேட்தயாரித்து மேலாவிகளுக்கு அனு ப்பும்போது அடியிற்கண்ட அம்சங்களைப்பற்றியும் தெரிவிக்கவேண்டியது. எஸ்டேட்டின்பெயர், வருஷவாரியில் நிலத்திலிருந்துவரும் வரும்படி, வட்டி க்குப்போட்ட பணங்களுக்காகவாவது இதரமூலமாகவாவது வருஷவாரியில் வரும்வரும்படி, கையிருப்பு, எஸ்டேட்டை மேல்விசாரணை செய்வதற்காகப் பிடிக்கும் செலவுள்பட வருஷவாரியில் செலவாகிற துகை, பைஷ்கஷ் தீர் வைசெலுத்தவேண்டியபாக்கியுள்பட கடன்கள் கோர்ட் ஆவ் வார்ட்ஸாரால் பரிபாலிக்கப்படவேண்டியவரிட வயது.

11. மதசம்பந்தமான சடங்குகளுக்கும் குடும்பத்தில் செய்யவேண் டிய சடங்குகளுக்கும் பணம் பட்டுவாடா செய்யும்பொருட்டு அனுமதி பெற்றுக்கொள்வதற்காக கோர்ட்ஆவ் வார்ட்ஸாருக்கு அடிக்கடி தெரிவிக்க வேண்டிய அவசியமில்லாமலிருக்கும்பொருட்டு அப்பேர்ப்பட்ட உபயோ கங்களுக்காக ஒவ்வொருவிஷயத்திலும் அனுமதி பெற்றுக்கொள்ளாமலே அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணம் பட்டுவாடா செய்ய கலெக் டர்கள் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.—(1) (இப்போது எந்தஉப யோகத்திற்காகப் பணம்கொடுக்கவேணுமோ) அதேமாதிரி பிரயோஜனத்தி ற்குப் பணம் செலவுசெய்ய முன்னடியாகவே ஒருதரம் கோர்ட் ஆவ் வார்ட்

ஸார் அனுமதி கொடுத்திருக்கும் பக்ஷத்திலும்; (2) இப்போது செலவிடுவதாக உத்தேசித்திருக்கப்பட்ட துகையானது இதற்கு முன்னுடி கோர்ட்டாரிட அனுமதியின்பேரில் செலவு செய்யப்பட்டிருக்கிற துகைக்கு 100க்கு 10க்கு மேற்பட்டு வித்தியாசப்படாமல் இருக்கும்பக்ஷத்திலும்; (ஆகிலும், அனுமதிசெய்யப்பட்ட தாமாஷாவுக்கு மேல்பட்டுதுகை செலவிடுவதற்காக ஏதோ அபூர்வமான சில சந்தர்ப்பங்களை முன்னிட்டு மாத்திரமே அனுமதி கொடுக்க வேண்டியது, அந்த செலவை கண்டெழுதப்பட்ட அக்கௌண்டு கரண்டுகணக்கில் அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களைப் பற்றி விவரித்து சொல்ல வேண்டியது.) (3) பலான விஷயத்தில் செலவு செய்வதற்காக பட்ஜட் கணக்கில் துகையை எற்படுத்தியிருக்கும் பக்ஷத்தில். (4) கோர்ட் ஆவ் வார்ட்ஸாரால் பரிபாலிக்கப்பட்டவர்களிட எஸ்டேட்டின் நிலைமையிலாவது அல்லது செலவு செய்யும்படி எவனுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவன் நிலைமையிலாவது அவ்விதமான செலவுசெய்யும்படி இதற்கு முன் கோர்டாரால் அனுமதிகொடுக்கப் பட்டகாலமுதல் முக்கியமான யாதொரு மாறுதலும் உண்டாகமலிருக்கும் பக்ஷத்திலும்.

12. 11-வது பிரகரணத்தை அனுஸரித்து கலெக்டரானவர்கள் தாங்களே செலவிட்ட துகையை அக்கௌண்டு கரண்டு கணக்கில் தாக்கல்செய்யும்போது அப்படி தாக்கல் செய்வதற்கு நேராக அவ்வித பிரயோஜனத்திற்கு செலவிடும்படி முதலில் கோர்ட் ஆவ் வார்ட்ஸார் அனுமதிகொடுத்த உத்திரவு பலானதென்று காணவேண்டியது.

***203. ரிபண்டுகள்—அதாவது பணத்தைத் திருப்பிக்கொடுத்தல்:**—அப்பீலின்பேரில் தீர்வைவஜா செய்யப்பட்டதனுலாவது அல்லது வேறுகாரணங்களினுலாவது தப்பாய் சர்க்காரில் வரவுவைத்துக்கொண்ட எந்த துகைகளும் டிவிஷனலாபீசரால் வாப்ஸ் கொடுக்கப்பட அனுமதிகொடுக்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனுல் அப்படி சர்க்காரால் வசூல்செய்யப்பட்ட பணமானது அடுத்தமுன் 2 வருஷங்களுக்குள் வசூல் செய்யப்பட்டிருக்க வேண்டியது. கலெக்டர்கள் தாங்களே அப்பேர்ப்பட்ட பணங்களை வாப்ஸ்செய்யும் விஷயங்களில் முன்னுடியாக போர்டாரிட அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டியது. இரண்டுவருஷத்திற்கு மேற்பட்ட விஷயங்களிலெல்லாம் போர்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது.

---

*15-ம் அதிகாரம்: இந்த அதிகாரத்திலும் இதற்குப் பின்னிட்ட அதிகாரங்களிலும் கண்ட ஆர்டர்கள் போர்டாரால் தித்துப்பாடுசெய்யப்படுகின்றன. அவைகளுக்கு முன் பதிப்பிலிருந்த நெம்பர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒருதரம் போர்டாரால் அனுமதிகொடுக்கப்பட்டு அந்த அனுமதிப்பிரகாரம் யாதொரு நடவடிக்கையும் ஒரு வருஷத்திற்குள் நடத்தாமற்போனால் அப்படிபோர்டாரால் கொடுக்கப்பட்ட அனுமதியானது காலம் கடந்துவிட்டதாக பாவிக்கப்படும்; இந்த விதிகளானவை ஸ்பெஷல்பண்டிலிருந்து கொடுக்கப்பட்ட பணங்களுக்கும் சம்பந்தப்பட்டவை, ஆனால் இந்த விஷயத்தில் வேறே ஸ்டேட்மெண்டு தயாரிக்கவேண்டியது.

2. ரெவினியூ டிபார்ட்மெண்டு அதிகாரிகளால் விதிக்கப்பட்ட அபராதங்களை அதேமாதிரியாய் கலெக்டர்கள் வாப்ஸ்செய்யலாம், வாப்ஸ்செய்யப்படுவதற்காக செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்திற்கு ஆதாரமாய் அப்பீல் அதிகாரியிட உத்திரவை அனுப்பவேண்டியது.

3. அப்பீல் கோர்டாரிட உத்திரவை அனுஸரித்து ஜுடிஷல் (அதாவது நியாயஸ்தல சம்பந்தமான) அபராதங்களை கலெக்டர்கள் வாப்ஸ் செய்யலாம்.

4. பரீக்ஷைக்காக கட்டின பணங்களை வாப்ஸ் செய்துகொள்ளும் பொருட்டு, பரிக்ஷைகளின் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது, அப்படி வாப்ஸ் செய்யவேண்டியது தமக்குகிரமமாகத் தோன்றும் பட்சத்தில் அப்படி வாப்ஸ் செய்யவேண்டியதற்காக அந்த உத்தியோகஸ்தர் போர்டாரிட அனுமதியைக் கோரிக்கொள்ளவேண்டியது.

XVII. (17)-வது அதிகாரம்.

ஆபீஸ் முறைமைகள் அல்லது நடவடிக்கைகள்.

குறிப்பு:—இந்த அத்தியாயத்தில் கிராமநவுக்கர்களும் மற்ற பொது ஜனங்களுக்கும் உபயோகமாகவாவது தெரியவேண்டியது யுக்தமாகவாவதிருக்கிற பாகங்களைமட்டில் தமிழில் தர்ஜிமா செய்திருக்கிறது.

221. சர்க்கார் தஸ்தாவேஜுகளில் தித்துபாடுசெய்வது:—சர்க்கார் தஸ்தாவேஜ்களில் வரிபிளந்து எழுதியிருக்கிற இடத்திலும் தித்துபாடு செய்திருக்கிற இடத்திலும் அந்த தஸ்தாவேஜானது எவரால் கையெழுத்து செய்யப்படுகிறதோ அவரால் இனிஷியல் செய்யப்பட வேண்டியது; தாசில்தார்களும் சிரஸ்தேதார்களும் தஸ்தாவேஜை பார்வையிடும்போது அவைகளில் வரிபிளந்து எழுதியிருந்தாலும் தித்துபாடு செய்யப்பட்டிருந்தாலும் அந்தந்த இடங்களில் தஸ்தாவேஜில் கையெழுத்து செய்தவரிட இனிஷியல்கள் செய்யப்படக் கூடாமையாயிருந்தால் அப்பேர்ப்பட்ட இடங்களில் தாங்கள் இனிஷியல் செய்யவேண்டியது. தாலூகா ரிகார்டுகள் சார்ஜிலுள்ள குமாஸ்தாக்கள், ரிகார்ட்டுடன் சேர்க்கப்படும்பொருட்டுத் தங்களிடம் ஒப்புவிக்கும் பிரதி தஸ்தாவேஜுகளையும் ஜாக்கிரதையாய்ப் பார்வையிட்டு அவைகளில் எந்த இடத்திலாவது வரிபிளந்து எழுதியிருந்தாலும் தித்துபாடுகள் செய்திருந்தாலும் அந்த இடங்களில் இனிஷியல் செய்யப்படும்பொருட்டு அவைகளை தாசில்தாரிட பார்வைக்குக் கொண்டு வரவேண்டியது. கஜானா கையிருப்பை ஆறுமாதத்திற்கொருதரம் பரிசீலனை செய்யும்போது மேற்கண்ட விதிகள்பிரகாரம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறதா வென்று டிவிஷனலாபீஸர்கள் பார்வையிட்டு அதின்முடிவைப்பற்றி கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டியது.

2. ரெவினியூ இனிஸ்பெக்டர்கள் தாங்கள் வெளியில் முகாம் போகும்போது கணக்கர்கள் வசத்திலுள்ள கிராம கணக்குகளில் வரிபிளந்தும் தித்துப்பாடுசெய்யப்பட்டுமுள்ள இடங்களைப்பார்வையிட்டு இனிஷியல்செய்யவேண்டியது, மேலும் அப்படி இனிஷியல் செய்யப்படாமல் வரி

பிளந்து எழுதியிருக்கப்பட்ட கணக்குகளை கணக்கர்கள் வைத்திருக்கும் பட்சத்தில் அதுவிஷயமாய் கண்டிப்பான நடவடிக்கைகள் நடத்தப்படு மென்று கணக்கர்களுக்கு எச்சரிக்கைசெய்ய வேண்டியது.

3. தாசில்தார் அல்லது சிரஸ்தேதாரிட வியக்தமான உத்திரவன்றியி லும் கிரமமான மேல்பார்வையன்றியிலும் தாலுகா ரிகார்டுகளைப்பார்வையிட கணக்கர்களுக்கு இடம்கொடுக்கக்கூடாது. அன்றியும், மேற்கண்ட அதிகா ரிகளில் ஒருவரால் அப்படி மேல் பார்வையிடும் பொருட்டு அனுப்பப்பட்ட ஆஸாமியின் நேரில் மாத்திரம் தஸ்தவேஜுகளைப் பார்வையிட இடம் கொ டுக்கவேண்டியது.

222. **ஜில்லா பிடிஷன்கள்**:—(விண்ணப்பங்கள்)ஃ ஜில்லாவிண்ணப் பங்கள் எப்பொழுது கொடுக்கப்படாலும் யாரால் கொடுக்கப்பட்டாலும் பெ ற்றுக்கொள்ளப்படவேண்டியது; கலெக்டர்களும் ஸப்கலெக்டர்களும் அஸி ஸ்டெண்டு கலெக்டர்களும் எல்லாவகுப்பைச்சேர்ந்த டிப்டிகலெக்டர்களும், குடியானவர்களுடனேயும் முறைப்பாடுகள் சொல்லிக்கொள்ளவேண்டியவர் களாகிய மற்றவர்களுடனேயும், நேராய்சம்பாஷணை செய்யும்பொருட்டுபிரதி வாரத்திலும் அதமபக்ஷம் 3 நாட்களையாவது குறித்து வைக்கவேண்டியது. மனக்குறைகளை பரிகரித்துக்கொள்ளும்பொருட்டு ஆஜராகும்ஜனங்களுக்கு நியாயம் கிடைக்கும் பொருட்டும், ஆபீஸரிட சிப்பந்திகளிட நடத்தை வகை யறுக்கள் பரிசீலனை செய்யப்படும்பொருட்டும், ஒரு ஆபீஸரானவர் ஜனங் களுடன் கலந்து அவர்கள் சொல்லிக்கொள்வதை எல்லாம் பொறுமையுடன் கேட்பது மாகாமுக்கியமானது. விண்ணப்பங்களைப் பற்றி ரிபோர்ட் செய்யும் படி கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அனுவசியமாய் அனுப்பக்கூடாது, அப் படிப்பட்ட ரிபோர்ட் செய்யவேண்டியது வாஸ்தவ்யமாய் தேவையாயிருக் கும் பக்ஷத்தில், பலான விண்ணப்பத்தை ரிபோர்ட்டுக்காக அனுப்பும்போது அந்த விண்ணப்பத்தில் கண்ட எந்தெந்த அம்சங்களில் விபரமான ரிபோர்ட் தேவையென்று வியக்தமாய் குறித்துக்காண்பிக்கவேண்டியது. கலெக்டர் களும் டிவிஷனலாபீஸர்களும் தாங்கள் வெளியில் விஜயம் செய்கையில் தாங்கள் முகாம் செய்யுமிடத்திற்கு சமீபமாயுள்ளகிராமங்களுக்கு சம்பந்த ப்பட்ட விண்ணப்பங்கள் தங்களிட ஆபீஸில் எதாவது பாக்கியிருந்தால் அப்போது அவைகளை பைஸல்செய்யவேண்டியது. வருஷவாரி ஜெமாபந்தி காலத்தில், ஜமாபந்தி செய்யப்படப்போகிற பிரதிகிராமத்திலும் பாக்கியி லுள்ள விண்ணப்பங்களையெல்லாம் பைஸல்செய்யவேண்டியது; அப்பேர்ப் பட்ட விண்ணப்பங்களை ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்து அந்த பிடிஷன் 'ஜமாபந்தி காலத்தில் பைஸல்செய்யப்படும்' என்று இண்டார்ஸ்மெண்டு மூலமாய் முன்னடியாக விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

2. ஆபீஸ்வேலைகளின் சந்தர்ப்பங்களை அனுஸரித்து பிரதிதினமும் எத்தனைமணிக்கு விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படக் கூடுமோ கூடியவரையில் அதேமணிக்கே விண்ணப்பங்களை கொடுத்துக்கொள்ளும்படி ரெவினியூ ஆபீஸர்கள் ஏற்பாடுசெய்யவேண்டியது.

3. போர்டாருக்கு அப்பீல்செய்ய உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்கள்கேஸ் சம்பந்தமான எல்லாதஸ்தாவேஜுகளுக்கும் நகல்கள் (கோரிக்கொண்டபடி நகல்கொடுப்பதால் சர்க்கார் ரீதிகளுக்கு ஹானி உண்டாகக் கூடிய அனுமத்தான சிலவிஷயங்களில் தவிர) பெற்றுக்கொள்ளக்கூடும், ஆனால் நகல்பெற்றுக்கொள்வதற்காக வழக்கப்படி ஒட்டவேண்டிய ஸ்டாம்புகளை ஒட்டிஎழுத்துகூலி முதலானதையும் செலுத்தவேண்டியது; ஜில்லாவிலுள்ள மேலதிகாரிகளுக்கு செய்ய உத்தேசித்திருக்கப்பட்ட அப்பீல்களுக்கும் இந்த விதியானது சம்பந்தப்பட்டது.

223. போர்டாருக்கு விண்ணப்பங்கள்:—போர்டாருக்குக் கொடுத்துக்கொள்ளப்பட்டவிண்ணப்பங்கள் விபரம்சொல்லப்படும்பொருட்டாவது ரிபோர்ட் செய்யப்படும்பொருட்டாவது கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்டால், அப்படி தேவையான சமாசாரங்களை கலெக்டராபீஸிலுள்ள ரிகார்டுகளைக்கொண்டு சேகரிக்கக் கூடியதாகயிருந்தால் அந்த விண்ணப்பங்கள் வந்து சேர்ந்து 5 அல்லது 8 நாட்களுக்குள் ஜவாப்பு அனுப்பவேண்டியது; விண்ணப்பங்களில் கண்ட அம்சங்களைப்பற்றி நபர்களை விசாரிக்கவேண்டியிருந்தாலாவது கலெக்டரிட கஸ்பாவிலிருந்து தூரத்திலுள்ள தாசீல்தார்கள் முதலானவர்களுக்கு அனுப்பி விசாரிக்கவேண்டியிருந்தாலாவது (மேற்சொன்ன 5 அல்லது 8) க்குமேல் ஜாஸ்திநாட்கள்எடுத்துகொள்ளலாம். விண்ணப்பதார்களிட முறைப்பாடுகளை நீடித்தகாலம்வரையில் பைஸல் செய்யாமல்போட்டுவிடுவதால் விண்ணப்பதாரர்களுக்கு அதிக கஷ்டங்கள்நேரிடுகிறதாகையால் அவசியமான ரிபோர்ட்டை உயர்ந்த பக்ஷம் ஒருமீத்திற்குள் அனுப்ப முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது.

2. இண்டார்ஸ்மெண்டு மூலமாய் ரிபோர்ட்டு செய்யும்படித்தெரிவிக்கப்பட்டால் கலெக்டரானவர் விண்ணப்பத்தின் முறைப்பாடுகளைப் பற்றி கொஞ்சம் விபரமாய்அதின்பேரில் இண்டார்ஸ்மெண்டு செய்யவேண்டியது; கடைசியாய் போர்டாரிட பைஸலுக்காக விண்ணப்பத்தை திருப்பி அனுப்பவேண்டியது. இண்டார்ஸ்மெண்டுக்காகவோ அல்லது ரிபோர்ட்டுக்காகவோ போர்டாரால் அனுப்பப்படும்விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும்தேதியையும் அவைகளை திரும்பிஅனுப்பும் தேதியையும் விண்ணப்பங்களின் பேரிலேயே கலெக்டர் குறிக்கவேண்டியது.

3. போர்டர்ருக்கு ரிபோர்ட்டு செய்யப்படாமல் கலெக்டரால் பைஸல் செய்யப்படும் பொருட்டாவது ஆலோசிக்கப்படும் பொருட்டாவது போர்டாரால்விண்ணப்பங்கள்அனுப்பப்படலாம்; அந்தவிண்ணப்பதாரனிடபாத்தியதைகள் ஆதாரமற்றவைகளென்று கலெக்டரானவர் தாத்பரிய பட்டாலும் கூட, அந்த விண்ணப்பதாரன் மறுபடியும் போர்டாருக்கு அப்பீல் செய்யயும் பட்சத்தில் அந்தவிண்ணப்பத்தை போர்டார் பைசல்செய்யும்பொருட்டு கலெக்டரானவர் அந்த விண்ணப்பத்தில் கண்ட சங்கதியைப்பற்றி சுருக்கமாய் இண்டார்ஸ் செய்ய வேண்டியது.

4. யாதொரு விண்ணப்பமானது போர்டாரால் இண்டார்ஸ்மெண்டு செய்யப்பட்டு பைஸல்செய்யப்பட்டபிற்பாடு 2-வது விண்ணப்பத்தில்பிரதானமான சில புதுசங்கதிகள் கண்டிருந்தாலொழிய அதேவிஷயத்தில் 2-வது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்றும் போர்டாரால்பைஸல் செய்யப்படும்விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களுக்கு "தபால் பேரிங்காக-அதாவது தபால் கூலி விண்ணப்பதாரர்கள் கொடுக்கவேண்டியதாக" வாப்ஸ் அனுப்பப்படு மென்றும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

224. சென்னைகேவர்ண்மேண்டாருக்கு பிட்டிஷன்கள் கொடுத்துக்கோள்வது சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள்:—கெவர்ண்மெண்டுஸிவில் அல்லது மிலிடெரி வகையிற் சேர்ந்த யாதொருஸர்க்கார் உத்தியோகஸ்தன் பேரில் தாவா சொல்லிக்கொள்ள ஹேது உள்ள ஜனங்கள், முதலிலே அந்தந்த இடத்திலுள்ளதலைமை அதிகாரியிடம் சொல்லி நியாயம் தேடிக்கொள்ள வேண்டியது; செய்துகொள்ளப்பட்ட கோருதல்படி அனுமதிகொடுக்க அப்பேர்ப்பட்ட அதிகாரிக்குக் கூடாமையாய்ப் போனால் அவர் அவ்விதமாக ஒரு உத்திரவு செய்ய வேண்டியது. அப்பேர்ப்பட்ட உத்திரவினால் அதிருப்தியடைந்தால் அந்தந்த இடத்திலுள்ள (லோகல்) அதிகாரிக்குமேலதிகாரியாகிய ரெவினியூபோர்டார், அல்லது வேறே கோர்ட்டார், அல்லது, ஸிவில் (—ராணுவ உத்தியோகஸ்தர்களல்லாத மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு ஸிவில் உத்தியோகஸ்தர்களென்று பெயர்.) அல்லது ராணுவ அதிகாரிகளிடம் அப்பீல் செய்வதற்கு ஆக்ஷேபணை யில்லை; அப்பேர்ப்பட்ட மேலதிகாரிகள் இல்லாத விஷயத்தில் கெவர்ண்மெண்டாரிடம் அப்பீல் செய்துகொள்ளலாம்.

2. யாதொரு பிட்டிஷனரானவன் முதலிலே, அந்தந்த இடத்திலுள்ள தலைமை அதிகாரிகளுக்கும், அதற்கு மேல் போர்ட்டார் அல்லது வேறே மேலதிகாரிகள் இருக்கும் பட்சத்தில் அப்பேர்ப்பட்ட மேலதிகாரிக்கும் அப்பீல் செய்துகொண்டதாய் ஏற்பட்டாலொழிய, யாதொரு விஷ

த்தைப்பற்றியும் கெவர்ண்மெண்டார் பிட்டிஷன்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட தலைமை உத்தியோகஸ்தர்களுக்கும் அதற்கு மேற்பட்ட் அதிகாரிகளுக்கும் கொடுத்துக்கொள்ளப்பட்ட பிட்டிஷன்களையும் அல்லது அவைகளுக்கு நகல்களையும் அந்தந்த அதிகாரிகள் ஏதாவது உத்திரவு செய்திருந்தால் முறையே அவரவர்களிட ஜவாப்பு உத்திரவுகளையும் கெவர்ண்மெண்டுக்கு அனுப்பப்படும் பிட்டிஷன்களுடன் சேர்த்தனுப்பவேண்டியது.*

3. முறைசொல்லிக்கொள்ளும் கக்ஷிக்காரர்களுக்கு அநீதியாவது கஷ்டமாவது மேற்கண்டவிதியினால் உண்டாகாமல் கெவர்ண்மெண்டார் அனுஷ்டித்துவரும் பொருட்டு, யாதொரு உத்திரவினால் பாதிக்கப்பட்ட ஒருபார்ட்டியானவன் கோரிக்கொள்வதின் பேரில் அப்பேர்ப்பட்ட உத்திரவுக்கு ஒரு நகலை அடைய பாத்தியதையுள்ளவனென்று ஆபீஸ் தலைமைஅதிகாரிகளெல்லாரும் அறிந்துகொள்ளவேண்டியது; அந்த தீர்ப்புக்கு காரணங்களை முற்றிலும் விவரித்துக்காண வேண்டியது. இந்த நகலை அந்தபார்ட்டிக்கு சாதாரண காகிதத்தில் யாதொரு செலவில்லாமல் கொடுக்கவேண்டியது.

4. முதலாளிகளிடத்திலிருந்துவரும் பிடிஷன்கள்மாத்திரமே கெவர்ண்மெண்டார் பெற்றுக்கொள்வார்கள். யாதொரு வக்கீல் மூலமாகவாவது ஏஜெண்டு மூலமாயாவது சொல்லிக்கொள்ளப்படும் முறைப்பாடுகள் காதில் போட்டுக்கொள்ளப்படமாட்டாது. கையெழுத்து இல்லாமல் அனுப்பப்படும் (அனனிமஸ்) பிட்டிஷன்களைப்பற்றி கொஞ்சங்கூட கவனம்செலுத்தப்படமாட்டாது.

5. கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பப்படும் பிட்டிஷன்கள் அடியிற்கண்ட விஷயங்களில் உடனே தள்ளுபடி செய்யப்படக்கூடியவைகள்:

(1.) யாதொரு பிடிஷனனது எழுத்து தெரியும்படியாயிராமலாவது அல்லது ஸாராம்ச மின்னதென்று தெரிந்துகொள்ளக்கூடாததாகவாவது இருந்தால்,

(2.) யாதொரு பிடிஷனில்கண்ட வார்த்தைகள் ராஜாங்க விரோதமானவைகளென்றாவது, அவமரியாதையுள்ளவைகளென்று

---

* உதாரணம்: ஒரு கிராம மணியகார் ஸப் கலெக்டர் டிப்டி கலெக்டர் முதலானவர்களால் பர்தர்ப்பு செய்யப்பட்டால் முதலில் கலெக்டருக்கு அப்பீல் செய்யவேண்டியது. அப்புறம் அவசியமானல் போர்டாருக்கும், அவசியமானல், அதற்கப்புறம்தான் கெவர்ண்மெண்டாருக்கும் அப்பீல் செய்துகொள்ளவேண்டியது.

வது தகுதியற்றவைகளென்ருவது கெவர்ண்மெண்டார் அபி ப்பிராயப்பட்டால் ;

(3.) யாதொரு பிட்டிஷனனது சென்னை கெவர்ண்மெண்டராலாவது,ஆலோசனை சபையிலுள்ள கெவர்னர் ஜனரல் (இந்தியா கெவர்ண்மெண்டார்) அவர்களாலாவது மஹாராணியவர்களிட இந்தியாதேசத்துக்காக ஏற்படுத்தப்பட்ட மந்திரி அவர்களாலாவது பைஸல் செய்யப்பட்டிருந்து, அதை புனராலோசனை செய்ய நியாயந்தோன்றும்படியான சந்தர்ப்பங்களாவது சங்கதிகளாவதுஒன்றும்அடங்கியதாயில்லாமல் (அதேவிஷயமாய்) மறுபடியும் விண்ணப்பங்கள் கொடுத்துக்கொள்ளப்பட்டால்.

(4.) பிரத்தியட்சமாய் யாதொரு பாத்தியதையுமிராதவனை யாதொருவன் தனக்கு திரவ்விய ஸகாயம் செய்யவேணுமென்று கொடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பமாயிருந்தால்;

(5.) கெவர்ண்மெண்டார் பிரவேசிக்க சட்டப்பிரகாரம் அதிகாரமில்லாத யாதொரு நியாயஸ்தலத்துத் தீர்ப்பின்பேரில் செய்யப்பட்ட அப்பீலாயிருந்தால். (அதாவது ஸிவில் தரப்பிலாவது மேஜிஸ்டிரெட்டு தரப்பிலாவது செய்யப்பட்ட தீர்மானங்களுக்கு ஸிவில்கோர்ட்டு அல்லது ஸெஷன் கோர்ட்டுகளுக்காவது அல்லது ஹைகோர்ட்டாருக்காவது அப்பீல்செய்யவேணுமேயல்லாமல் கெவர்ண்மெண்டாருக்குச் செய்யக்கூடாதென்று தாத்பரியம்.)

(6.) யாதொரு சட்டப்பிரகாரமாவது சட்டப்பிரகாரமான விதியின் பிரகாரமாவது யாதொரு தீர்ப்பானது முடிவுபெற்றதென்று தீர்க்கப்பட்டிருந்து அப்பேர்ப்பட்ட முடிவான தீர்ப்புக்குமேல் செய்யப்படும் அப்பீல் பிட்டிஷனுக யிருந்தால்.

(7.) சட்டப்பிரகாரம் வேறேவிதமாய் நியாயம்தேடிக்கொள்ள மார்க்கமிருந்து அல்லது சட்டப்பிரகாரம் குறிக்கப்பட்ட அப்பீல்வாயிதாவானது கடந்துபோயிருந்து அப்பேர்ப்பட்ட விஷயத்தில் செய்யப்படும் அப்பீலாகயிருந்தால்.

(8.) இன்னமும் ஸர்க்கார்உத்தியோகத்தில் இருந்துகொண்டிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தரால்செய்யப்பட்டதாயும், (ஸிவில் ஸர்வீஸ் ரிகுலேஷன் 995 ஸெக்ஷன்படிக்கு தவிர,) இனி அவருக்குச் சேரவேண்டிய பென்ஷன் சம்பந்தமானதாயும், இருந்தால்.

(9.) சட்டப்பிரகாரமாவது யாதொரு விதியின் பிரகாரமாவது கெவர்ன்மெண்டாரால் யுக்தானுசாரம்செலுத்தப்படவேண் டியஅதிகாரத்தைச் செலுத்தாமற்போனதைப்பற்றி செய்யப் படும் அப்பீல் பிடிஷனுயிருந்தால்.

6. தாழ்ந்த உத்தியோகங்களுக்கு நேமங்கள் செய்கிற விஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள சிறப்புற்ளுேங்கிய கவர்னர் அவர்கள் ஒருக்கா லும் பிரவேசிக்கிற தில்லையானபடியினுல், நியமனம் செய்யும் அதிகாரமா னது அந்தந்த டிபார்ட்டு மெண்டின் தலைமையதிகாரியைச் சேர்ந்த தாயிருக் கப்பட்ட உத்தியோகங்களுக்காக கெவர்ன்மெண்டாருக்கு செய்து கொள் ளப்படும் விண்ணப்பங்களைப் பற்றி யாதொரு கவனமும் செலுத்தப்பட மாட்டாது.

225. மகிமைபொருந்திய மஹாராணி அவர்களுக்கும் அவர்க ளிட இந்தியாதேசத்துக்கு மந்திரியாகிய ஸிக்ரடேரி அவ்ஸ்டேட் அவர்களுக்கும் விண்ணப்பங்கள்கொடுத்துக்கோள்வதைப்பற்றி:— சொந்த ஜனங்களாலும் ஸிவில் டிபார்ட்மெண்டிலுள்ள உத்தியோகஸ்தர் களாலும் மகிமைதங்கிய மஹாராணி அவர்களாகிய இந்தியா சக்கிர வர்த்தினிக்காவது இந்தியாவின் சிறப்புற்ளுேங்கிய ஸிக்ரடெரி ஆப் ஸ்டேட்டுக்காவது கொடுத்துக்கொள்ளப்பட்ட மெமோரியல்களை * (விண் ணப்பங்களை) யும் அவ்விதமான இதர தஸ்தாவேஜுகளையும் அனுப்ப வேண்டிய விஷயத்தில் அடியில்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன:—(1) அடியில்கண்டவிதமாய்அனுப்பப்பட்டாலொழிய யாதொரு விண்ணப்பத்தைப்பெற்றுக்கொள்ளவாவது கவனம் செலுத்தப்படவாவது மாட்டாது. (2) பிரதி மெமோரியலும் யார்பெயருக்கு எழுதப்பட் டிருக்கிறதோஅந்த அதிகாரிக்கு அனுப்பும்படி ஒரு கடிதமெழுதி அந்த கடிதத்தை அந்தந்த மெமோரியலுடன் அனுப்பவேண்டியது. (3) மஹா ராணியவர்கள் பெயருக்காவது ஸிக்ரடெரி ஆப் ஸ்டேட்டுஅவர்களிட பெய ருக்காவது எழுதப்படும் பிரதி மெமோரியலையும் மெமோரியல்தார் எந்த கெ வர்ண்மெண்டு எல்லைகுட்பட்டு வசிக்கிருரோ அல்லது உத்தியோகமாயிருக் கிருரோ அந்த பிரதேச கெவர்ண்மெண்டார் துவாரா அனுப்பவேண்டியது. (4) சென்னை ராஜதானியிலும் பம்பாய் ராஜதானியிலும் உள்ள ஜனங்

---

* இந்தியா கெவர்ண்மெண்டாருக்கும் மஹாராணி அவர்களுக்கும் அவர்களிட ஸிக்ரடெரி ஆவ்ஸ்டேட் அவர்களுக்கும் கொடுத்துக் கொள்ள ப்படும் விண்ணப்பங்களுக்கு மெமோரியல் என்று வழக்கத்தில் சொல்லப் படுகிறது.

களால் மகாராணி அவர்களுக்காவது ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்காவது கொடுத்துக்கொள்ளப்படும் மெமோரியல்களை பிரதேச கெவர்ண்மெண்டார் அந்த மெமோரியல்களில் கண்ட அம்சங்களைப்பற்றி பூர்த்தியாய் விமர்சித்தும் அவர்களிட அபிப்பிராயத்தைத் தெரிவித்தும் நேராக அனுப்பவேண்டியது; ஆனல் யாதொரு மெமோரியலானது இந்தியா கெவர்ண்மெண்டாரிட விதி அல்லது ஸ்திரமான உத்திரவு இதுகள் சம்பந்தப்பட்டதாயிருந்தாலாவது, அல்லது அந்த மெமோரியலின் கோரிக்கை அருளப்படுமேயாகில் அதனுலுண்டாகக்கூடிய செலவுக்கு முக்கியமான ஜவாப்புதாரி பிரதேச கெவர்ண்மெண்டாரல்லாமல் இம்பீரியல் (அதாவது இந்தியாகெவர்ண்மெண்டார்) ஆக இருக்கவேண்டியதாயிருக்குமானுலாவது அல்லது ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரல் அவர்களிட சட்ட நிரூபணைசம்பந்தமான நடவடிக்கையைப்பற்றியதாகவாவது இருந்தால் அப்பேர்ப்பட்ட மெமோரியல்களை (நேராக மகாராணி அவர்களுக்காவது ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்காவது அனுப்பாமல்) அவைசள் எந்த சங்கதிகளைப்பற்றியதாக இருக்கிறதோ அந்த சங்கதிகளை விசாரிக்க வேண்டிய டிபார்ட்மெண்டில் இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு ப்ரதேச கெவர்ண்மெண்டார் அந்த மெமோரியலில் கண்ட அம்சங்களைப்பற்றி பூர்த்தியாய் விமர்சித்தும் அவர்களிட அபிப்பிராயத்தையும் கண்டு ஒரு கடிதம் எழுதி அந்த கடிதத்துடன் அந்த மெமோரியலை அனுப்பவேண்டியது; இந்தியா கெவர்ண்மெண்டார் அதை ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்கு அனுப்புவார்கள். (5) பெங்காளம், வடமேற்கு மாகாணங்கள், அயோத்தியம், பஞ்சாப் இந்த ததேசங்களிலுள்ள ஜனங்களால் மகாராணியவர்கள் பெயருக்காவது ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்கள் பெயருக்காவது எழுதி கொடுத்துக்கொள்ளப்படும் மெமோரியல்களை அந்தந்தப் பிரதேச கெவர்ண்மெண்டார் அந்த மெமோரியலில் கண்ட அம்சங்களைப்பற்றி பூர்த்தியாய் விமர்சித்தும் அவர்களிட தாத்பரியத்தைத்தெரிவித்தும் சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டில் இந்தியாகெவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டியது, இந்தியா கவர்ண்மெண்டார்மகாராணியவர்களுக்காவது ஸிக்ரடெரி ஆப் ஸ்டேட் அவர்களுக்காவது அனுப்புவார்கள். ஷடிதேசங்களின் கவர்னர் அவர்களால்செய்யப்பட்டஉத்திரவுகளுக்கு விரோதமாக சொந்த ஜனங்கள் (அப்பீல் செய்துகொள்ளவேண்டியதாயிருந்தால்) முதலில் இந்தியாகெவர்ண்மெண்டாருக்கு அப்பீல்செய்துகொள்ளவேண்டியது. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு செய்து கொள்ளப்பட்ட அப்பீலானது தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்கு அப்பீல் செய்துகொள்ளக்கூடும். (6) (Central) மத்தியமாகாணங்கள், ப்ரிடிஷ்பர்மா,

பேரார், மைசூர், குடகு, அஸ்ஸாம் நாடுகளான சில்லறை இராச்சியங்களி லுள்ள ஜனங்களால் மகராணியவர்களிட பெயருக்காவது ஸீக்ரடெரி ஆவ்ஸ் டேட்அவர்களிட பெயருக்காவது கொடுத்துக்கொள்ளப்படும் மெமோரியல் களை சீப் கம்மிஷனராவது அந்தந்த தேசத்தில் ராச்சியபரிபாலனவசத்திலு ள்ள வேறே உத்தியோகஸ்தராவது அந்தமெமோரியல்களில்கண்ட அம் சங்களைப்பற்றி பூர்த்தியாய் விமர்சித்தும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தும் சம்பந்தப்பட்ட டிபார்டுமெண்டில் இந்தியா கெவர்ண்மெ ண்டாருக்கு அனுப்பவேண்டியது; அவர்கள் அந்த மெமோரியல்களை மகா ராணியவர்களுக்கோ ஸீக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்கோ அனுப்புவார் கள். இந்த சில்லறை ராச்சியங்களிலும், சீப் கம்மிஷனர்கள் முதலானவர் களால் செய்யப்பட்ட உத்திரவுகளுக்கு விரோதமாய் (அப்பீல் செய்துகொ ள்ளவேண்டுமேயானால்) முதலில் ஆலோசனைசபையிலுள்ள கெவர்னர் ஜெ னரல் அவர்களுக்கும், பின்னிட்டுதான் ஸீக்ரடெரி ஆவ்ஸ்டேட் அவர்களு க்கும் அப்பீல் செய்து கொள்ளக்கூடும். (7) இந்தியாவிலுள்ள கெவர்ண் மெண்டார்களிட யாதொரு உத்திரவுக்கு விரோதமாக ஹோம் கெவர்ண் மெண்டாருக்கு (அதாவது சீமையிலுள்ள கெவர்ண்மெண்டாருக்கு) இவ்வ ளவு காலத்துக்குள்தான் அப்பீல் செய்துகொள்ளவேண்டியதென்று வாயிதா கிடையாது; ஆனால் ராஜாங்க உத்தியோகஸ்தர் ஜெட்ஜாக இருந்து அவ ரால் செய்யப்பட்ட தீர்ப்பாயிருந்து அந்த தீர்ப்புக்கு விரோதமாக சாதா ரணமாய் ராஜாங்க விஷயங்கள் விசாரிக்கப்பட்டுவருகிற (பொலிடிகல், Political) டிபார்ட்மெண்டில் கெவர்ன்மெண்டாருக்கு அப்பீல்செய்துகொ ள்ளக்கூடியதாகயிருந்தால்அப்பேர்ப்பட்ட தீர்ப்புக்கு விரோதமாய் செய்து கொள்ளப்படும் அப்பீல்களை அந்ததீர்ப்பானதுசம்பந்தப்பட்ட நபருக்கு எந்ததேதியில் தெரிவிக்கப்பட்டதோ அந்த தேதிமுதல் 12 மாதகாலத்திற் குள்ளாகசெய்துகொள்ளவேண்டியது. மெமோரியல்களை அச்சிட்டாவது கையாலெழுதியாவது அனுப்பலாம், ஆனால் மெமோரியல்தாரன் கையொப் பமிடவேண்டியது. (8) மெமோரியல்களும் அத்துடன் அனுப்பப்படும் தஸ்தாவேஜுகளும் இங்கிலீஷில் இருக்கவேண்டியது. கூட அனுப்பப்படும் தஸ்தாவேஜுகளை அவசியமாய் சுயபாஷையிலேயே அனுப்பவேண்டிய தாயிருந்தால் அதை இங்கிலீஷில் தர்ஜிமா செய்வித்து அந்த தர்ஜிமாவில் மெமோரியல் தாரன் கையொப்பமிட்டு அனுப்பவேண்டியது.

குறிப்பு:—மெமோரியல்களை அனுப்பும் உத்தியோகஸ்தர்கள்அப்பேர்ப் பட்ட தர்ஜிமாக்களை பரிசீலனை செய்வது உசிதம், அப்படி பரிசீலனைசெய் ததின் பேரில் அவைகள் தப்பாயிருப்பதாகத் தெரிய வந்தால் மெமோரியலை அனுப்பும்போது அந்த சங்கதியைப் பற்றி பிரஸ்தாபிப்பது உசிதம்.

(9) மெமோரியல்களை இரண்டு அல்லது மூன்று நகல்களுடன் அனுப்பவேண்டுமென்றவசியமில்லை. அஸல் மெமொரியல்களே இங்கிலாந்துதேசத்துக்கு அனுப்பப்படும்; அவசியமானால், ரிகார்டாக வைத்துக்கொள்ளும் பொருட்டு இந்தியா கெவர்ண்மெண்டார் நகல்தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டியது. (10) பொது விதியாய்ச் சொல்லுமிடத்து, கிரமமாய் மேலாவிகள் துவாரா அனுப்பப்பட்ட யாதொரு மெமோரியலை இங்கிலாண்டுக்கு அனுப்புவதில் அப்பேர்ப்பட்ட மெமோரியலானது இந்தியாவிலுள்ள கெவர்ண்மெண்டாரால் பெற்றுக் கொள்ளப்பட்ட பிறகு ஒரு ஸீத்திற்குமேல் நிறுத்திவைத்துக் கொள்ளக்கூடாது. (11) மகாராணியவர்களுக்காவது ஸிக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்காவது கொடுத்துக்கொள்ளப்படும் மெமோரியல்களை அடியில்கண்ட விஷயங்களில் இந்தியாவிலுள்ள கெவர்ண்மெண்டார்களும் ராச்சிய பரிபாலனத்தாரும் தங்கள் யுக்தானுஸாரம் அனுப்பாமல் நிறுத்திவிட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்:—(ஏ) யாதொரு மனுவில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துகள் தெரியாதவைகளாயாவது அல்லது அந்த மெமோரியலில் கண்ட சங்கதிகள் அர்த்தமாகாதவைகளாகவாவது இருந்தால். (ப) யாதொரு மனுவில் அவமரியாதை அல்லது ஒழுங்கீனமான வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தால். (ஸி) யாதொரு மனுவானதுஇப்போது எந்த அதிகாரிபெயருக்குக்கொடுக்கப்படுகிறதோ அதே அதிகாரியால் (அது விஷயமாய்) ஒரு தீர்மானமான உத்திரவு முன்னடியே செய்யப்பட்டும், அப்படி செய்யப்பட்ட தீர்மானத்தை புனர் ஆலோசனை செய்ய இடங்கொடுக்கும்படியான யாதொரு புது காரணங்களும் இந்த 2-வது மனுவில் எடுத்துச்சொல்லப்படாமலும், இருந்தால்; யாதொரு மனுதாரனனவன் முன்னடியாக ஸீக்ரடெரி ஆப்ஸ்டேட் அவர்களுக்கு மனுகொடுத்து அவரால் அந்தமனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்து பிற்பாடு மகிமைதங்கிய மகாராணி அவர்களுக்கு கொடுத்துக்கொள்ளப்படும் மனுவானது அதே அதிகாரிக்கு 2-வது தடவை கொடுக்கப்பட்டமனுவாக பாவிக்கப்படுமானபடியால் அப்பேர்ப்பட்ட மனுக்களை அனுப்பக்கூடாது. (டீ) பிரத்தியட்சமாய் யாதொரு பாத்தியதையும் இல்லாத ஒரு மனுஷியனால் திரவ்யஸகாயத்துக்காகக் கோரிக்கொள்ளப்படும் மனுவாகயிருந்தால். (ஈ) கவனென்டட்ஸர்வீஸுக்குச் சம்பந்தப்படாத யாதொரு மனுஷியனால் இந்தியாவிலுள்ள கெவர்ன்மெண்டாரிட அதிகாரத்துக்குட்பட்ட உத்தியோகத்துக்காக செய்து கொள்ளப்படும் விண்ணப்பமாக இருந்தால்; (யப்) யாதொருமனுவானது ஜுடிஷல் (நியாய கோர்ட் சம்பந்தமான) தீர்மானத்தின்பேரில் செய்யப்படும் அப்பீலாகயிருந்தால். (ஜீ) நாளது வரையிலும் யாதொரு மனுஷியன் ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்துகொண்டும் பின்

னிட்டுச் சேரவேண்டிய பென்ஷன் விஷயமாய் சம்பந்தப்பட்டும் மனுசெய்துகொண்டால். (யச்) மாதம் ஒன்றுக்கு ரூபா 250 க்கு மேற்படாமல் சம்பளம் பெற்றுவந்த யாதொரு கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தனை பர்தர்ப்பாவது, வேலையிலிருந்து நீக்குதலாவது குறைவாவது, செய்திருந்து இவைகள்விஷயமாய்லோகல்(பிரதேச)கெவர்ண்மெண்டாரிடதீர்மானத்தை இந்தியாகெவர்ண்மெண்டார் ஸ்திரப்படுத்தியிருந்து அப்படி ஸ்திரப்படுத்தியிருக்கப்பட்டஇந்தியாகெவர்ண்மெண்டு உத்திரவுக்கு விரோதமாய் செய்யப்படும் அப்பீல் மனுவாயிருந்தால். (ஐ)இந்தியாவிலுள்ள கெவர்ண்மெண்டு அல்லதுஇராஜாங்கத்தார் அவர்களுக்கு சட்டதிட்டங்கள் பிரகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற யுக்தானுஸாரமானநடவடிக்கையைபிரயோகிக்கவில்லைஎன்கிறதாக செய்யப்படும் அப்பீல் மனுவாயிருந்தால். (13) மகிமைதங்கிய மஹாராணி அவர்களுக்காவது ஸீக்ரெடரி ஆப் ஸ்டேட் அவர்களுக்காவது மனு செய்யும் யாதொரு மனுதாரனனவன் அந்தவிஷயமாய் முன்னுடியாய் இந்தியா கெவர்ண்மெண்டாருக்காவது பிரதேச (லோகல்) கெவர்ண்மெண்டாருக்காவது மனு செய்யாமலிருந்திருந்தால். (14) 12-வது விதியின் படி யுக்தானுஸாரம் அனுப்பாமல் நிறுத்திவிடப்பட்ட மனுக்களுக்கு ஜாபிதாஒன்று தயாரித்து, பிரதேச கெவர்ண்மெண்டாரால் நிறுத்திவிடப்பட்ட மனுக்களாயிருக்கும்பட்சத்தில், 3 மீ த்திற்கு ஒருதரம் இந்தியா கெவர்ண்மெண்டாருக்கும், இந்தியா கெவர்ண்மெண்டார் ஸிக்ரெடரிஆப்ஸ்டேட்டுக்கும், அனுப்பவேண்டியது.

2. இராணுவசேனைகளிட அனுஷ்டானத்துக்காக இராணுவ அதிகாரிகளால் இதுவிஷயமாய் யேற்படுத்தப்பட்ட உத்திரவுகளை மேற்கண்ட இந்த உத்திரவுகள் எவ்விதமாயும் பாதிக்கவாவது ரத்து செய்யவாவது மாட்டாது.

226. கட்சிக்காரர்களுக்கு நகல்கொடுப்பது:—சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் சொந்தஜனங்களுக்குக் கொடுக்கப்படும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட அடியிற்கண்ட விதிகளானவை, நகல்களை பெற்றுக்கொள்ள பாத்தியதை உடையவர்களுக்கு தற்காலத்திய விதிகளை அனுஸரித்து செலவில்லாமல் நகல் கொடுக்கவேண்டியது அவசியமாயிருக்கக்கூடிய ரெவினியூ கேஸ்களிடவும் மேஜிஸ்டீரியில் கேஸ்களிடவும் ப்ரோஸிடிங்கிஸ்கள் தீர்ப்புகள் உத்திரவுகள்—இவைகள்விஷயமாய் சம்பந்தப்பட்டவையல்ல.

2. இந்தவிதிகளுக்குட்பட்டு தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் கொடுக்கஉத்திரவுபெற்றசர்க்கார் உத்தியோகஸ்தர்கள்யாரெருல்—கலெக்டர்கள், டிவிஷனல் ஆபீஸர்கள், தாசில்தார்கள், டிப்டிதாசில்தார்கள்; டிவிஷனல்ஆபீ

ஸர்களானவர்கள் தங்களாபீஸ்களிலும்தங்களுக்குக்கீழ்பட்ட உத்தியோகஸ்தர்களிட ஆபீஸுகளிலும் பிறப்பிக்கப்படலானதஸ்தாவேஜுகளுக்கு நகல்களைக்கொடுப்பிக்கலாம்;அந்த தஸ்தாவேஜுகளில்நேராய்சம்பந்தப்பட்டநபர்களுக்கு நகல்களைக் கொடுக்கவேண்டும் ; ஆகிலும் அடியில்கண்ட மாதிரியான தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள்கொடுக்க அவர்களுக்கு (டிவிஷனலாபீஸர்களுக்கு) அதிகாரமில்லை:—(1) அந்தரங்கமான தஸ்தாவேஜுகள் அல்லது எந்த தஸ்தாவேஜுகளின்நகல்கள் கொடுக்கப்படுவதுஆக்ஷேபணைகரமானதாகத்தோன்றுகிறதோ அந்த தஸ்தாவேஜுகள். (2) கிராமஉத்தியோகஸ்தர்களிட ரிபோர்ட்டுகளும் தாலுகாஉத்தியோகஸ்தர்களிடரிபோர்ட்டுகளும் சேர்ந்த சர்க்கார்கடிதப் போக்குவரத்து. (3) லைஸென்ஸ் டாக்ஸ் (வரி) சம்பந்தமானதஸ்தாவேஜுகள், நிலதுரஸ்து செய்யும்பொருட்டுஸர்காரில்கடன்கொடுப்பதுசம்பந்தமான தஸ்தாவேஜ்கள்,பென்ஷன்கள்,இயோமையா,வார்ஸ்தாரில்லாத நிலங்கள், மாலிக்ஹானு பென்ஷன், இவைகள் சம்பந்தமான தஸ்தாவேஜுகள். (4) லாண்டுஸெஸ் (நிலவரி) தீர்வை விஷயமாய் நிலதார்கள்கொடுக்கும் ஸ்டேட்மெண்டுகள். (5) ஸ்திரமானஸெட்டில்மெண்டு செய்யப்பட்ட எஸ்டேட்களின் ரிஜிஸ்டரில் பதிவு சம்பந்தமாயாவது உட்பிரிவினை சம்பந்தமாயாவது இருக்கப்பட்ட கணக்குகள். (6) எல்லைத்தகரார்விஷயமாயாவது ஜலத்தகரார்விஷயமாயாவது செய்யப்படும் தாவாக்களில் கெவர்ண்மெண்டார் ஒரு கக்ஷிக்காரர்களாக இருந்தால் அப்பேர்ப்பட்ட தகரார்கள் சம்பந்தமான தஸ்தாவேஜ்கள், கெவர்ண்மெண்டாருக்கு விரோதமான வியாச்சியங்களுக்கு ஆதாரமான தஸ்தாவேஜுகள். (7) கோர்ட்ஆப் வார்ட்ஸாரிட மேல்விசாரணையிலுள்ள எஸ்டேட் சம்பந்தமான தஸ்தாவேஜுகள். (8) நகல்கள் கொடுக்கப்படக்கூடாதென்று ஜில்லா கலெக்டரால் தடுக்கப்படக்கூடிய தஸ்தாவேஜுகள். தாசீல்தார்களும் டிப்டி தாசீல்தார்களும் தங்களால் பைஸல் செய்யப்பட்ட தர்க்காஸ்து கேஸ்களிலும் பட்டா மாறுதல் விஷயமாயும் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளுக்கு நகல்கொடுக்க அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

3. இந்தவிதிகளுக்குட்பட்டு சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் தேவையானஜனங்கள்,தங்களுக்கு நகல்தேவையான தஸ்தாவேஜானதுஎந்த ஆபீஸில் வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆபீஸின் அதிகாரிக்கு எழுத்து மூலமாய் முதலில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது. அந்தஆபீஸரானவர் தம்மிட அதிகாரத்தின்பேரிலேயே நகல் கொடுக்கக்கூடிய தஸ்தாவேஜாயிருந்தால் சந்தர்ப்பங்களுக்கு தக்கப்பிரகாரம்விண்ணப்பத்தின் கோரிக்கைப்படி நகல் கொடுக்கவோ அல்லது விண்ணப்பத்தை தள்ளிவிடவோ கூடும்.தம்மிட அதிகாரத்தின்பேரிலேயே நகல்கொடுக்கக்கூடாத தஸ்தாவேஜாயிருந்தால் அந்த விண்ணப்பத்தை தம்மிட ஷராக்களுடன் கலெ

க்டருக்கு அனுப்பவேண்டியது; தஸ்தாவேஜானது கலெக்டரிட ஆபீஸிலே யேஇருந்தால், விண்ணப்பதார்கள் தபால்மூல்மாயாவது அல்லது வேறே மூலமாகவாவது, அல்லாமலும் நேராகவாவது அல்லதுதாசீல்தார்கள் அல்லது அஸிஸ்டெண்ட் கலெக்டர்கள் துவாராவாவது, கலெக்டருக்கு எழுத்து மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது.

4. தம்மிடஜில்லாவிலுள்ள தஸ்தாவேஜுகளுக்குநகல் கொடுக்கப்படுவதற்கு கலெக்டரானவர் ஜவாப்புதாரி ; ஆகையால் நகலுக்காக விண்ணப்பம்செய்துகொள்ளும் ஒவ்வொரு விஷயத்திலும் (டிவிஷனலாபீஸர்களும் தாசீல்தார்களும் நகல்கொடுக்கலாம் என்று அதிகாரம் கொடுக்கப்பட்ட 2-வது பிரகரணத்தில்கண்டதஸ்தாவேஜுகள் நீங்கலாக) அப்படிநகலுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட தஸ்தாவேஜுக்கு நகல் கொடுப்பதனுல் சர்க்கார் நிமித்தியங்களுக்கு ஹானிஉண்டாகக்கூடியதோ வென்ருவது அந்தரங்கம் வெளியாகக்கூடுமோவென்ருவது நிர்ணயிக்கவேண்டியது கலெக்டரைச்சேர்ந்தது; நகல் கொடுக்கப்படலாமென்று வேறெவ்விடத்திலாவது பிரஸ்தாபிக்கப்படாத எவ்வித தஸ்தாவேஜுகளுக்காவது தம்மிட கீழ்உத்தியோகஸ்தர்களால் நகல் கொடுக்கப்படக் கூடாதென்று பொது உத்திரவு பிறப்பிக்கவும் கலெக்டருக்கு யுக்தானுஸாரமான அதிகாரமுண்டு.

5. யாதொரு தஸ்தாவேஜுக்கு நகல் கொடுப்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை என்று கலெக்டருக்குத் திருப்திகரமாய் எற்பட்டால் கலெக்டரானவர் அப்பேர்ப்பட்ட தஸ்தாவேஜானது ஜில்லா ரிகார்ட்டிலேயே இருப்பதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட தஸ்தாவேஜுக்கு நகலை, விண்ணப்பதாரன் அவசியமான ஸ்டாம்பு ஒட்டப்பட்ட காகிதத்தை ஆஜர் செய்வதின்பேரில், கொடுக்கும்படி கஜானு டிப்டி கலெக்டருக்கு உத்திரவுசெய்ய வேண்டியது; அல்லது அந்த தஸ்தாவேஜானது ஜில்லா ரிகார்ட்டிவில்லாமல் வேறே ஆபீஸ்களிலிருந்தால் 2—வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தருக்கு அம்மாதிரி உத்திரவுசெய்ய வேண்டியது; ஆனல் பிரஸ்தாபத்திலிருக்கும் தஸ்தாவேஜானது போர்டாரிடமிருந்தாவது அல்லது கெவர்ண்மெண்டாரிட மிருந்தாவது வந்ததாயிருந்தால், விண்ணபத்தின் கோரிக்கை பிரகாரம் நகல் கொடுக்க உத்திரவு வேணுமென்று போர்டாரையோ அல்லது கெவர்ண்மெண்டாரையோ முதலில் கடிதமூலமாய் கோரிக்கொள்ளவேண்டியது. ஆகிலும், போர்டாருக்கு விண்ணப்பங்கள் கொடுத்துக்கொள்ளப்பட்டு அவைகளின் பேரில் போர்டாரால் செய்யப்பட்ட உத்திரவுகளுக்கு நகல்கள் வேண்டுமென்றுசம்பந்தப்பட்ட பார்ட்டிகளால் விண்ணப்பம்செய்துகொள்ளப்பட்டால் அப்படியே நகல் கொடுக்க கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு; ஆனல் பார்

ட்டிக்ளுக்காவது பொதுஜனங்களுக்காவது தெரிவிப்பது ஆக்ஷேபணைகரமானதாகிய உத்தியோகஸ்தர்களிட நடத்தையைப்பற்றியும் இதர சங்கதிகளைப்பற்றியும் செய்யப்பட்ட ரிமார்க்கு களடங்கிய தஸ்தவேஜை நகல் கொடுக்கலா மென்ற தஸ்தாவேஜுடன் சேர்ந்ததாகமாட்டாது.

6. யாதொருநகல் கொடுப்பது ஆக்ஷேபணைகரமானதென்று கலெக்டர்களுக்குத்தோன்றினல், விண்ணப்பத்தின்பேரில் இண்டார்ஸ்மெண்டுசெய்து விண்ணப்பத்தைத் தள்ளிவிடவேண்டியது, அப்படி தள்ளிவிடுவதற்கு சுருக்கமாய் காரணம் சொல்லவேண்டியது. விண்ணப்பதாரன் போர்டாருக்கு அப்பீல் செய்ய பிரியப்படுவானுகில், கலெக்டரிட இண்டார்ஸ்மெண்டைட் அப்பீல் விண்ணபத்துடன் வைத்தனுப்பி அப்படியே அப்பீல்செய்துகொள்ளலாம்.

7. கலெக்டராபீஸிலிருந்தே நேராய்க் கொடுக்கப்படும் நகல்கள் சரியாயிருப்பதற்கும் எழுத்து தெரியும்படியாயிருப்பதற்கும் அவைகள்சீக்கிரத்தில் கொடுக்கப்படுவதற்கும் காஜனு டிப்டிகலெக்டர் ஜவாப்புதாரியாயிருக்கிருர்; தவிரவும், தம்மிட கையொப்பத்தையே செய்யும்படிகலெக்டரால் பிரத்தியேகமாய் அதிகாரம் செய்யப்பட்ட விஷயங்களில் தவிர, அப்பேர்ப்பட்ட பிரதி நகலிலும் அவர் மேல்க்கையெழுத்து செய்யவேண்டியது.

8. இந்த விதிகளுக்குட்பட்டு, சொந்த ஜனங்களால் தேவையானதஸ்தாவேஜுகளின் நகல்களானவை ஆபீஸ் அஸல் சிப்பந்திகளால் தயாரிக்கப்படாமல், கிரமமாய் லாயக்குள்ளவர்களாயும்நம்பிக்கையுள்ளவர்களாயும் ரிஜிஸ்டரில் தாக்கல் செய்யப்பட்டவர்களாயும் இருக்கிற காபீஸ்டுகளால் தாயாரிக்கப்படும், பரீக்ஷை பாஸ்செய்தவர்கள் விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளும்போது அவர்களை தலாஷ் செய்து நியமிக்கவேண்டியது; இந்த விதிகள் பிரகாரம் தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் கொடுக்க அதிகாரம்பெற்ற பிரதி உத்தியோகஸ்தரிட ஆபீஸிலும் அவர்களை நியமிக்கவேண்டியது.

9. கலெக்டராபீஸில் காபீஸ்டுகளை நியமிக்கவும் நீக்கவும் கஜானு டிப்டி கலெக்டருக்கு அதிகாரம் வகிக்கப்பட்டிருக்கிறது, மற்ற விஷயங்களில் அந்தந்த ஆபீஸின் தலைமை அதிகாரிக்கு அதிகாரமுண்டு; எல்லா விஷயங்களும் கலெக்டரிட பொதுவான மேல்விசாரணைக்குட்பட்டவைகளாகும்.

10. கலெக்டராபீஸில் நகல்கள் கஜானு டிப்டி கலெக்டரிட நேர்மேல் பார்வையில் தயார்செய்யப்படவேண்டியது.

12. இந்த விதிகளுக்குட்பட்டு (கலெக்டர் ஆபீஸுக்கு) கீழ்ப்பட்ட ஆபீஸ்களிலிருந்து நகல்கள் கொடுக்கப்படக்கூடிய விஷயங்களில், கலெக்

டராபீஸிலிருந்து நகல்கள் சரியாயும் செம்மையாயும் தயார் செய்யப்பட என்னவிதிகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதேவிதிகள் அநுஸரிக்கப்பட வேண்டியது. கஜாஞ டிப்டி கலெக்டரைச்சேர்ந்த கடமைகளும் பொறுப்புகளும்—ஸப் கலெக்டராபீஸில் ஸப்டிவிஷன் ஹெட்கிளர்க்கையும், தாசீல்தார் ஆபீஸில் தாலூக்காசிரஸ்தேதாரையும், சேர்ந்தவை. ஹெட் அஸிஸ்டெண்டு கலெக்டராபீஸிலும் டிப்டிகலெக்டராபீஸிலும் அந்தக்கடமைகளும் பொறுப்புகளும் ஹெட்கிளார்க்கைச் சேர்ந்தவை.

13. *.

14. நகல்களுக்காக செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களெல்லாம் கஜாஞ டிப்டி கலெக்டராலாவது இதர மேல் விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்களாலாவது ரிஜிஸ்டர் செய்யப்படும், அவைகளிட வரிசை கிரமத்தையும் அல்லது அவைகள் ஆஜர்செய்யப்பட்டதையும் அநுஸரித்து அவைகள் விஷயமாய் கவனம் செலுத்தப்படும்.

15. யாதொரு நகலுக்காக சேரவேண்டியதென்று ஏற்படுத்தப்பட்ட கூலி செலுத்திவிடப்பட்டாலொழிய அந்த நகலுக்காகவிண்ணப்பம் செய்துகொண்ட நபருக்கு அந்த நகல் ஒப்புக்கொடுக்கப்பட மாட்டாது.

17. தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் வேணுமென்று கோரிக்கொள்ளும் நபர்கள் காபீஸ்டுகளுடன் யாதொருவித சம்பாஷணையும் செய்ய இடங்கொடுக்கப்பட மாட்டார்கள்; காபீஸ்டுகள் தங்கள் வேலையை ஆபீஸில் செய்யவேண்டியது, ஆபீஸிலிருந்து யாதொரு தஸ்தாவேஜையும் அப்புறப்படுத்தக்கூடாது.

* * * * *

24. தபால் துவாரா பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு நகல்களை தபால் துவாரா பார்ட்டிகளுக்கனுப்பும் பட்சத்தில் "சர்க்கார் ஸர்வீஸ்" ஆக போவதாக மேல் விலாசத்தில் எழுதப்படமாட்டாது. விண்ணப்பதாரன் தனக்குச்சேரவேண்டியநகல்களை பேரிங்கு போஸ்டேஜ் (அதா

---

* 13–வது 16–வது பிரகரணங்கள் இப்பால் கவர்ண்மெண்டாரால் ரத்து செய்யப்பட்டவைகளாக ப்ாவிக்கவேண்டியதாயிருக்கிறது. நகல் எழுதுவதற்கும் எழுத்து கூலி, காகித கூலி முதலானதற்கும், ஸிவில் கோர்ட்டில் அநுஸரிக்கிறமாதிரியாக இரண்டணு கிரயமுள்ள காபி ஸ்டாம்பு பேபர்களை உபயோகிக்கும்படி ரிவினியூ டிபார்ட்மெண்டிலும் உத்திரவு செய்திருக்கிருர்கள். ஒரு பக்கத்தில் 175 வார்த்தைகள் எழுதப்படும். ஷை காபி ஸ்டாம்பு பேபர்களை வாங்கி கொடுக்கும் பக்ஷத்தில் வேறே காகித கூலி எழுத்து கூலி முதலானது கொடுக்க வேண்டியதில்லை.

வது தபால் சார்ஜை ப்பார்டிகள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டியது, வழக்கத்தில் நாட்பெய்ட் என்று சொல்லப்படுகிறது) ஆக அனுப்பாம லிருக்க ஏற்பாடுகள் செய்து கொண்டாலொழிய நகல்கள் "பேரிங்குபோஸ் டாக" அனுப்பப்படும்.

25. யாதொரு தஸ்தாவேஜுக்கு நகல் கொடுக்கும்படி யாதொரு கலெக்டரானவர் யாதொரு கோர்ட்டாரால் உத்திரவு செய்யப்பட்டிரு ந்து அப்படி நகல்களைக் கொடுப்பதற்கு ஆக்ஷேபணைகளிருப்பதாக கலெக்ட ருக்குத்தோன்றும்பட்சத்தில் கலெக்டரானவர் அந்த தஸ்தாவேஜை ஒரு தகு ந்த உத்தியோகஸ்தரிடம்கொடுத்து கோர்டாரிடத்தில் காண்பிக்கும்படி அந்த உத்தியோகஸ்தரை அனுப்பவேண்டியது; அந்தஉத்தியோகஸ்தரானவர் அந்த தஸ்தாவேஜுக்கு நகல் கொடுக்கும் விஷயத்தில் ஆக்ஷேபணை செய்வதற்கு கலெக்டருக்குள்ள நியாயங்களை எடுத்துச்சொல்ல வேண்டியது; அதின்மேல், நகல் கொடுக்கப்பட வேண்டுமா நகல் கொடுக்கப்படக்கூடாதா என்று தீர் மானிக்கவேண்டிய கடமை கோர்ட்டு ஜெட்ஜைச் சேர்ந்தது.

26. ஸர்க்கில் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டாவது அல்லது அவர்க ளால்பிறப்பிக்கபட்டாவதுஇருக்கிறலோகல்பண்டுதஸ்தாவேஜுகளுக்கு நகல் கள் கொடுப்பதும், கொடுக்கப்பட மாட்டாதென்று சொல்வதும், லோகல் பண்டுபோர்ட் பிரஸிடென்டினிட யுக்தானுஸாரத்தைப்பொறுத்தது. ஆகி லும், இவடத்தில் கண்ட விதிகளை அனுஷ்டிக்க வேண்டியது.

27. ரெவினியூ ஸூட்டுகளில் (தாவாக்களில்) சம்பந்தப்பட்ட வாக்கு மூலங்களுக்கு நகல்கள் அந்த ஸூட்டுகளை விசாரிக்க அதிகாரமுடைய கோ ர்டாரால் கொடுக்கப்படலாம். கிரமமாய்ச் சொல்லுமிடத்து இந்த தஸ்தாவே ஜுகள் நியாயஸ்தல சம்பந்தமான தஸ்தாவேஜுகளே தவிர ரெவினியூ தஸ்தவேஜ்களல்ல.

28. ஸ்டாம்பு ஒட்டும் விஷயமாய் கோர்டுபீஸ் ஆக்டின் நியமங்களை கவனிக்க வேண்டியது.*

---

* இரண்டாவது பாகத்தில் அனுபந்தத்தைப் பார்க்க.

XVIII. (18) - வது அதிகாரம்.

ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள்.

* * * * * * * *

241. சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு நிலம் இருப்பதைப்பற்றி.—கெவனென்டெட் ஆபீஸர்கள் * கிருஷித் தொழில் நிமித்தமாய் சென்னை ராஜதானிக்குள் எந்த சந்தர்ப்பங்களிலும் நிலங்களைக் கைப்பற்றில் வைத்திருக்கக்கூடாது, அந்த நிலங்களைப் பராமரித்து வருவதில் அவர்கள் நேராய் சம்பந்தப்பட்டவர்களாயிருந்தாலும் இல்லாமற் போனாலும் (அது விஷயமாய்) நிமித்திய மில்லை, அல்லது அப்பேர்ப்பட்ட நிலங்கள் அவர்கள் வேலையாயிருக்கிற ஜில்லாக்களில் இருந்தாலும் இல்லாமற் போனாலும் அதைப்பற்றி நிமித்தியமில்லை. கிருஷித்தொழில் சம்பந்தமாயாவது வேறே விதமாயாவது தேசத்தின் சௌகரியங்களின் விருத்திக்காக ஏற்பட்டிருக்கிற கம்பெனிகளில் ஸிவில் ஸர்வென்டுகள் *(ஸிவில்உத்தியோகஸ்தர்கள்) பங்குகள் வைத்துக்கொள்வதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை; ஆனால் மேல்விசாரணை செய்வதில் அவர்கள் தலையிட்டுக் கொள்ளக்கூடாது; தவிரவும் அந்த கம்பெனியாரிட வேலைகள் நடந்தேறி வருகிறஜில்லாக்களில் அவர்கள் வேலைபார்த்துவரக்கூடாது. பண்டுகளிலாவது பங்குகளை எடுத்துக்கொண்டாவது பேரங்கள் செய்ய இந்த உத்திரவினால் இடங்கொடுக்கப்பட்டதாக பாவிக்கக் கூடாது.

2. கம்பெனிகளை பராமரித்து வரக்கூடாது என்ற உத்திரவானது கவனென்டெட் அல்லது அன்கவனென்டெட் உத்தியோகஸ்தர்களும் வேலைபார்த்தே வந்தாலும் அல்லது பர்லோலீவ் எடுத்துக்கொண்டிருந்தாலும், எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பந்தப்படாது.

243. ஸிவில்உத்தியோகஸ்தர்களும் சுதேசிகளும்லாவாதேவி செய்வது:—கெவர்ன்மெண்டாரால் பொதுவாகவாவது பிரத்தியேகமாகவாவது அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, ஸிவில் உத்தியோகஸ்தர்களும் அவர்களிட அதிகாரத்துக்குட்பட்ட சுதேசிகளும் ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது.

---

* இந்த பக்கத்திற்கு அர்த்தம் 170–வது பக்கத்தைப் பார்க்க.

2. பணம் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிற விவகாரங்களுக்குள் அடியில்கண்ட அம்சங்கள் சேர்ந்தவைகள்:—பணம் கடன் வாங்குவது அல்லது கடன் கொடுப்பது, வீடுகள், குதிரைகள் அல்லது வண்டிகள் இவைகளை வாங்குவது அல்லது விற்பனை செய்வது, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு குடியிருக்க இடத்துக்காக வீடுகளை கட்டும்படியாவது வாங்கும்படியாவது செய்தல், பெரும்பான்மையும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஆதாய முண்டாக வேண்டிய நோக்கத்தை முன்னிட்டு நடத்திவரும் நடவடிக்கைகளெல்லாம். ஜீவனத்திற்கு சாதாரணமாய்த் தேவையானவைகளை சுதேசிகள் அவரவர்கள் வியாபாரத்தை அனுஸரித்து ஸரபராசெய்வதானது மேலே தடுக்கப்பட்டவைகளுக்குள் சேர்ந்ததல்ல. பலான பலானவிதமான விஷயங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன வென்று பரிஷ்காரமாய் தெரிந்து கொள்ளும் பொருட்டு இந்த உதாரணங்கள் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன; ஆனால் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களிட நடத்தையின் பொது தன்மையையும் மாதிரியையும் அனுஸரித்து அவர்களிட நடத்தை இப்பேர்ப்பட்ட தென்று தீர்மானிக்கப்படும்.

3. ஒரு ஜில்லாவினிட பிரதி குடியும் அந்த ஜில்லாவிலுள்ள பிரதி ரெவினியூ உத்தியோகஸ்தரிட அதிகாரத்துக்குட்பட்டிருக்கிறான்; அதே மாதிரியாகவே, ஒரு ஜில்லாவிலாவது பலான டிபார்ட்மெண்டாருடனாவது வர்த்தமானம் செய்துவரும் பிரதி சுதேசியும் (உதாரணம், வர்த்தகர்கள், குத்தகைதாரர்கள்) உட்பட்டிருக்கிறார், ஆகச்சே, சர்க்கார் வேலையிலிருக்கிற சுதேசஉத்தியோகஸ்தர்கள் பின்னும்ஜாஸ்தியாய்உட்பட்டிருக்கிறவர்களாவார்கள்.

4. இது விஷயமாய்பின்னும் விதிகளைப்பற்றி 248 எ. நெ ஸ்டாண்டிங்கு ஆர்டரைப்பார்க்க.

244. சில கீழ் உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் கலெக்டருக்குள்ள அதிகாரம்:—தாசீல் உத்தியோகத்திற்கும் டிப்டிதாசீல் உத்தியோகத்திற்கும் ஆஸாமிகளை நியமிப்பதானது கலெக்டரைச் சேர்ந்தது, ஆகிலும் அப்பேர்ப்பட்ட நியமனங்கள் விஷயமாய் கெவர்ண்மெண்டாரிட அனுமதியை போர்டார் பெற்றுக்கொள்ளவேண்டியது. ஹேட் சிரஸ்தேதார் வேலைக்கு நியமனம் செய்வதும் கலெக்டரைச் சேர்ந்தது, இந்தவிஷயத்தில் போர்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. கலெக்டர்கள்தாங்கள் நியமிக்கும் ஆஸாமியின் படிப்பைப்பற்றியும் நடத்தையைப்பற்றியும் ஸர்வீஸைப்பற்றியும் குணத்தைப்பற்றியும் எப்போதும் தெரிவிக்கவேண்டியது.

நியமிக்கப்பட்ட ஒருவர் தேவையான பரீக்ஷைகளை எப்போது பாஸ்செய்தாரென்றும் அவரிடபெயர்ஸெண்ட் ஜார்ஜ்கோட்டைகெஜட்டின்அனுபந்தத்தில் எந்தபக்கத்தில் காணப்படக்கூடும் என்றும் தெரிவிக்கவேண்டியது. மெத்த ரெவினியூ அனுபோகமில்லாதவர்களை ஹேட் சிரஸ்தேதார் வேலைக்கு ஒருபோதும் நியமிக்கக்கூடாது. இவ்விடத்தில் பிரஸ்தாபம்செய்யப்பட்ட அனுமதியானது ஸ்திரமான நியமன விஷயங்களாயிருந்தாலும் டெம்பொரெரி (கொஞ்சகாலம் நீடித்திருக்கும்படி) யாயிருந்தாலும் தேவையானது.

2. யாதொரு கலெக்டரானவர் ப்ரிவிலீஜ் (சம்பளத்துடன்) லீவில் இருக்கும்போதுஅவருக்குப்பதிலாகவேலைபார்த்துவரும் உத்தியோகஸ்தரால் செய்யப்படும் தாசில் நியமங்களும் ஹுஜூர் சிரஸ்தேதார் வேலைக்கு நியமங்களும் (காயம்) கலெக்டர் ஜில்லாவுக்கு திரும்பிவருவதின்பேரில் அவரிட அனுமதிக்கு உட்பட்டதாக பாவிக்கப்படும்.

3. தாசில்தார், டிப்டி தாசில்தார், அல்லது ஹேட் சிரஸ்தேதார், ஸப் கலெக்டரிட ஹெட்கிளர்க்கு, தாலூக்சிரஸ்தேதார் இவர்களிட ஹோதாவுக்கு கீழ்ப்பட்ட எல்லா உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும் தண்டிக்கவும்பார்தர்ப்பு செய்யவும் ஸப்டிவிஷனுயிருந்தால் கலெக்டரிட தித்துப்பாட்டுக்கும் மேல் விசாரணைக்குமான அதிகாரங்களுக்குட்பட்டு ஸப்கலெக்டரையும், ப்ரின்ஸிபல் (அதாவது கலெக்டர் இருக்கும்) டிவிஷனுயிருந்தால் கலெக்டரையும், சேர்ந்தது. ஆகிலும் ஸ்வாதீனமான அதிகாரம் செலுத்திவருகிற அஸிஸ்டெண்டு கலெக்டர்களும் டிப்டி கலெக்டர்களும் மீ 1க்கு ரூ 20க்கு மேற்படாத சம்பளமுள்ள சில்லறை உத்தியோகங்களிலெல்லாம் நியமனம் செய்யக்கூடும், அப்படி செய்யப்பட்ட நியமனங்களை கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டியது, தவிரவும் அவரால் சீர்திருத்தப்படுவதற்கு உட்பட்டவைகளாகும். தாலூக் சிரஸ்தேதார் ஹோதாவுக்கு கீழ்ப்பட்ட தங்களிட உத்தியோகஸ்தர்களைஎல்லாம்கலெக்டரிட மேலதிகாரத்துக்குட்பட்டு ஸஸ்பெண்டு செய்யவும் அபராதம் விதிக்கவும்அவர்களுக்கு (அஸிஸ்டெண்டு அல்லது டிப்டி கலெக்டர்களுக்கு) அதிகாரமுண்டு, ஆனால் எந்த ஹோதாவுள்ளஉத்தியோகஸ்தர்களை நியமிக்க அவர்களுக்கு அதிகாரமுண்டோ அந்தஹோதாஉத்தியோகஸ்தர்களை மாத்திரமே பர்தர்ப்பு செய்யக்கூடும்; மீ 1க்கு 20 ரூக்கு மேற்பட்டு சம்பளமுள்ள உத்தியோகங்களில் நியமனம் செய்யவேண்டியதானது கலெக்டர் டிவிஷனில் கலெக்டரைச் சேர்ந்ததாகயிருந்தாலும் ஸ்வாதீன அதிகாரமுள்ள அஸிஸ்டெண்டு கலெக்டரும் டிப்டிகலெக்டரும் தங்களிடத்திலுள்ள உத்தியோகஸ்தர்களிட பாத்தியதைகளை கலெக்டருக்

குத்தெரிவிக்கலாம், அப்படி அவர்கள்செய்யும் சிபார்சுகளை கிரமமாக ஆலோசனையில் எடுத்துக்கொள்ளவேண்டியது. அதுபோலவே, ஸப்டிவிஷனி லுள்ள தாசில், டிப்டிதாசில், தாலூக் சிரஸ்தேதார், ஸப்கலெக்டரிட ஹெட்கிளர்க்கு, இந்த உத்தியோகங்களில் நியமனம் செய்வதற்கு ஆஸாமிகளை தலாஷ் செய்வதற்கு முன்பாக கலெக்டர்களானவர்கள் ஸப்கலெக்டருடன் ஆலோசனை செய்யவேண்டியது. நியமனங்கள் செய்யப்பட்டவைகளை உடனே அடுத்த ஜில்லாகெஜட்டுகளில் பிரசுரம்செய்யவேண்டியது. எந்த ஆஸாமிகளாவதுஅவர்களிட தப்பினலல்லாமல்(வேறேவிதமானகாரணத்தை முன்னிட்டு) வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தால் அவர்களிட பெயர்களை ஜில்லாகெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டியது; கலெக்டர்கள் தங்களிட ஆபீஸ்களில் நேரிடும் காலிகளை, பூர்த்திசெய்வதில் இந்தஜாபிதாவில் பதியப்பட்டுள்ள ஆஸாமிகளை மற்றவர்களிட கிரமமான பாத்தியதைகளையும் தகுதியானவரையில் அனுஸரித்தும் நியமிக்கவேண்டியது.

5. டெம்பொரெரியாக வேலைபார்த்து வரும்படி உத்தியோகஸ்தர்களை நியமிப்பதை கூடிய வரையில் தடுத்துவிடவேண்டியது. (யாதொருவர்) நீக்கப்படுவதாலாவது இறந்துபோவதாலாவது காலி நேரிட்டால் அதை உடனே பூர்த்திசெய்துவிடவேண்டியது.

7. ராஜாங்க காரணங்களை முன்னிட்டு தாசில்தார்களை ஒருதாலூகாவிலிருந்து மற்ருெரு தாலூகாவுக்கு மாத்த கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு.

8. போர்டாரிட அப்பீலுக்குட்பட்டு கலெக்டர்கள் தாசில்தார்களையும் டிப்டி தாசில்தார்களையும் துர்நடத்தைக்காக 6மீ காலத்திற்கு ஸஸ்பென்ஷன் செய்யலாம், அல்லது சம்பள நஷ்டமடையும்படி மாற்றலாம்: ஆனல் ஹோதாவைக் குறைக்கக்கூடாது.

9. 1-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஆபீஸர்களிட ஹோதாவுக்குக் கீழ்ப்பட்ட ஹோதாவுள்ள உத்தியோகஸ்தர்களை கலெக்டர்கள் தாங்களே பர்தர்ப்புசெய்ய அதிகாரமுடையவர்கள். பலான குற்றத்திற்காகவாவது பொதுவாய் வேலைகளில் அசிரத்தையாயிருப்பதற்காகவாவது ஒரு கிராமநவுக்கருக்கு பர்தர்ப்பு சிக்ஷை விதிக்கப்படும் போதெல்லாம் டிவிஷனலாபீஸரானவர் அப்படி பர்தர்ப்பு செய்ததற்காகத் தகுந்த காரணங்களை இங்கிலீஷில் எழுதவேண்டியது, பர்தர்ப்பு செய்யப்பட்ட ஆஸாமி தம்மிட முன்பாக ஆஜராகும்படியாக சமயம் கொடுக்கவேண்டியது.

10. 1-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களில் யாரையாவது பர்தர்ப்பு செய்யவேண்டியதானல் போர்டாருக்கு

ரிபோர்ட்டு தயாரித்து அனுப்பவேண்டியது. தாசீல்தார்கள் டிப்டிதாசீல்தார்கள் விஷயமாகயிருந்தால் அவற்றை போர்டார் கெவர்ன்மெண்டாரிட உத்திரவுகளுக்காக அனுப்பவேண்டியது.

11. கிராம மாஜிஸ்டிரேட்டுகள் மஜிஸ்டீரியல் சம்பந்தமான நடவடிக்கைகளில் செய்தகுற்றத்திற்காக அவர்களை கலெக்டர்களிட அனுமதி பெற்றுக்கொள்ளாமல் ப்ராஸிகியூஷன் செய்யும்படி கலெக்டர்கள் இடங் கொடுக்கக்கூடாது.

12. 1-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களிட ஹோதாவுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கலெக்டர்களால் ப்ராஸிகியூஷன் செய்யப்படுவதற்காக முன்னடி அனுமதிபெற்று கொள்ளப் பட வேண்டிய அவசியமில்லை.

13. தாசீல்தார்களாவது டிப்டிதாசீல்தார்களாவது தங்களிட ரெவினியூ நடவடிக்கைகளிலாவது மாஜிஸ்டீரியல் சம்பந்தமானநடவடிக்கைகளிலாவது செய்தகாரியங்களுக்காக அவர்களைப்ராஸிகியூஷன் செய்யும்பொருட்டுமுன்னடியாக போர்டாராலாவது போர்டார் துவாராகெவர்ன்மெண்டாராலாவது அனுமதி கொடுக்கப்பட்டிருக்க வேண்யடிது. எந்த குற்றத்தை முன்னிட்டுப்ராஸிகியூஷன் செய்யவேண்டியதற்காகமுன்னடி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறதோ அந்தகுற்றமானது வேலைமுறைமையில் செய்யப்பட்டதாக (உதாரணம்—தாசீல்தார் நீதிதவறுதலான தீர்ப்பு செய்ததாகச் சொல்லப்படுகிறது,) ஏற்பட்டால் கெவர்ன்மெண்டாரிட அனுமதியைபெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். வேலைமுறைமையில் செய்யப்பட்டதாக ஏற்படாமற் போனுல் (உதாரணம், தாசீல்தார் லஞ்சம்கேட்டதாகவாவது பெற்றுக்கொண்டதாகவாவது பணத்தை துராக்கிருதமாய் அபகரித்ததாகவாவது சொல்லப்பட்டால்) போர்டாரிட அனுமதியே போதுமானது.

14. யாதொரு சுதேசஸுபீரியர்* உத்தியோகஸ்தரையும் அவரிட நடத்தையைப்பற்றி கிரமமாக விசாரிக்காமல் பர்தர்ப்பு செய்யக்கூடாது. 1822 ௵ 9-வது சீர்திருத்தச்சட்டத்தை அனுஸரித்து விசாரிக்கக்கூடிய குற்றமாயிருந்தால் அந்தசட்டத்தை பிரயோஜனப்படுத்தவேண்டியது; பொதுவாய்ச் சொல்லுமிடத்து, சாட்டப்பட்ட குற்றமானது முழுதும் ருஜுவானலொழிய உத்தியோகத்திலிருந்து பர்தர்ப்பு செய்வது கூடவே கூடாது.

---

*சேவகர் முதலான உத்தியோகஸ்தர்களுக்கு இன்பீரியர், கிளர்க்கு முதலானவர்களுக்கு ஸுபிரியர், ஸர்வீஸ் என்று சொல்லப்படுகிறது.

யாதொரு ஆஸாமியானவன் சர்க்கார் ஸர்வீஸில் துடர்ந்து வேலைபார்த்து வர தகுதியற்றவனென்று கிரமமாய் குற்றம் ஏற்படுத்தும்படியான பலத்த சந்தேகாஸ்பதமான சந்தர்ப்பங்களிருப்பதாக எடுத்துக் காட்டப்படும் விஷயங்களும் உண்டாகலாம்; ஆகிலும் ஜுடிஷல் நடவடிக்கைகளில் எடுத்துக்கொள்ளப்படுவதைப்போலொத்தசாக்ஷியத்தை சேகரிப்பது அசாத்தியமாக இருக்கலாம். அப்பேர்ப்பட்டவிஷயத்தில், தண்டனை யில்லாமலாவது மறுபடிவேலைக்குலாயக்கற்றவனென்று தீர்க்காமலாவது வேலையைமாத்திரம் இழக்கச் செய்வதே அந்த விஷயத்திற்குத் தகுதியானதண்டனை.

15. கிரமமான அதிகாரமுள்ளகோர்ட்டாரல் யாதொருஉத்தியோகஸ்தரானவர் யாதொருகுற்றத்திலிருந்து விடுதலைசெய்யப்பட்டால்,அவர்மறுபடி தன்வேலையைஅடைய பாத்தியதையுள்ளவர்; ஆனுல் விடுதலைசெய்யப்பட்டதான துநல்லெண்ணத்துடன்செய்யப்பட்டதாயும் கேஸின் தாரதம்மியங்களை அனுஸரித்துசெய்யப்பட்டதாயும்,சாதாரணசந்தேகம்—சாக்ஷியத்தில்நியாயவழுவாகத்தவறுதல்—சாக்ஷிகளுடன்உடந்தைஇவைகளைப்போலொத்த சந்தர்ப்பம்இவற்றை முன்னிட்டுசெய்யப்படாததாயும் இருக்கவேண்டியது. பூராவும் விடுதலை செய்யப்பட்டிருந்தும், அவர் வேலையை கைவிட்டுவிட்டதாகவாவது ஏதோ அசிரத்தையாயிருந்தாரென்ருவது விசாரணைகாலத்தில் வெளியான காரணத்தை முன்னிட்டு அபராதம் ஸஸ்பென்ஷன் முதலான ஓர் தண்டனை விதிக்கவேண்டியது அவசியமாயிருந்தாலாவது, உத்தியோகஸ்தரை மறுபடி வேலையில் நியமிப்பது தகுதியற்றதாகவாவது, இருக்கிற விஷயங்களில், அந்த சங்கதிகளைப்பற்றி போர்டாரிட பிரத்தியேகமான உத்திரவுகளுக்காக அவர்களுக்கு அனுப்பவேண்டியது. பூராவும் விடுதலை செய்யப்பட்டமேல் தோஷபரிஹாரமில்லாமல் வேலையில் திரும்ப நியமிக்க வேண்டிய அதிகாரமானது முதலில் நியமிப்பதற்கு எந்த உத்தியோகஸ்தருக்கு அதிகாரமிருந்ததோ அந்த ஆபீஸரைச்சேர்ந்தது ; ஆனுல் அப்பேர்ப்பட்ட அதிகாரமானது யாதொரு மேல் அதிகாரியிட அனுமதி அல்லது ரத்துக்குட்பட்டு செலுத்தப்படவேண்டிய தென்று நிர்ப்பந்திக்கப்பட்டதாயிருந்தால், அப்பேர்ப்பட்ட விஷயத்தில் மறுபடி வேலையில் நியமிப்பதை அப்பேர்ப்பட்ட மேலதிகாரியானவர் ஸ்திரப்படுத்தவேண்டிய தவசியம்.

16. ரெவினியூ ஆபீஸர்கள் தங்களிட கீழ்உத்தியோகஸ்தர்கள் வைத்திய அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டும் இனி வேலைபார்க்க தகுதியற்றவர்கள் என்று கண்டெழுதப்பட்ட ஒரு ஸர்டிபிகேட் ஆஜர் செய்யப்பட்டும் இருந்தாலொழிய அசௌக்கியமாயிருக்கிருர்களென்ற காரணத்தை முன்னிட்டாவது அவர்களிட வேலைகளை செய்துவர சக்தியற்ற

வர்களாயிருக்கிறார்களென்ற காரணத்தை முன்னிட்டாவது அவர்களை பர்தர்ப்பு செய்யவும் கூடாது வேலையிலிருந்து நீக்கவும் கூடாது.

17. ஸ்ரீ 1 க்கு 10 நூக்கு மேற்பட்டு சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களும் எல்லா கிராமநவுக்கர்களும் பர்தர்ப்பு செய்யப்பட்டதையும் ஸஸ்பெண்டு செய்யப்பட்டதையும் குறித்த நமூனா பிரகாரம் தயார்செய்யப்பட்ட கணக்குகளை போர்டாருக்கு அனுப்பவேண்டியது. வேலையிலிருந்து ஸஸ்பெண்டு செய்வதானது ஓர் குறித்த காலம் வரையிலுள்ளதாய் எப்போதும் இருக்கவேண்டியது, பர்தர்ப்பு அல்லது ஸஸ்பெண்டு செய்ததற்கு காரணத்தை ஜாக்கிரதையாயும் சுருக்கமாயும் கணக்கின் சரியானகலத்தில் எழுதவேண்டியது.

247. வில்லேஜ் ஆபீஸர்கள் கிராமநவுக்கர்கள்:—கிராமநவுக்கர்கள் விஷயமாய்,இதனடியில்கண்டிருக்கிற போர்டுப்ரொஸீடிங்க்ஸை கலெக்டர்கள் கவனிக்கவேண்டியது. இந்த நவுக்கர்களிட ஹோதாவின்நிலமையை உயர்த்தவேண்டும் பொருட்டு கூடியவரையில் பிரயத்தனம் செய்யவேண்டியது:—"கிராமநவுக்கர்கள் தாலூகா கச்சேரிகளில்அனுவசியமாய் வரவழைக்கப்படாமலிருக்க வேண்டிய தென்றும் அவர்களிட வேலைகளைச் செய்து வருவதில்அனுவசியமான அசௌகரியங்கள் உண்டாகாமலிருக்க வேண்டிய தென்றும் கெவர்ண்மெண்டார் விரும்புகிறார்களென்று தெரிவித்திருக்கிற போர்டாரிட 20—2—1885ஸ்ரீ ஒட்டுத்திரவு விஷயத்தில்கவனம் செலுத்தும்படி தங்களைக் கோரிக்கொள்ள எனக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவுகள் முக்கியமாய் போலீஸ் நடவடிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்டவைகள்: ஆனால்அந்தவிதிகளினிட ஸாராம்சமானது ரெவினியூவேலைகளுக்கும் அதேமாதிரி சம்பந்தப்பட்டது, கிராமத்தலைமை உத்தியோகத்தை கௌரவ முள்ளதாயும் சிரேஷ்டமான அவாவுடன் இச்சிக்கத் தக்கதாயும் இருக்கும்படி கெவர்ண்மெண்டார் முயற்சிசெய்வதில் தங்களிட உதவியை நாடினவர்களாயிருக்கிறார்கள். இந்த முக்கியமான முடிவானது, கலெக்டர்கள் தங்களிட கீழ் உத்தியோகஸ்தர்களிடத்தில் காருண்யமான சாந்த குணத்துடனேயிருப்பதினாலும் படித்தவர்களாயும் குணக்கியர்களாயும் இருக்கப்பட்டவர்களை தாசில் உத்தியோகத்துக்குத் தலாஷ் செய்து நியமித்து கெவர்ண்மெண்டாரிட அபிப்பிராயங்களை அவர்களுக்குத் தெரிவித்து அந்த அபிப்பிராயங்கள் பிரகாரம் பூர்ணமனதுடனேயும் காரியஸாதகமாகும்படியானதாயுமான வணக்கத்துடன் நடத்திவருகிறார்களாவென்று கலெக்டர் கவனிப்பதாலுமே உண்டாகக் கூடியதென்று கெவர்ண்மெண்டாரும் போர்டாரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இது விஷயத்தில் பலானவிதிகள்தான் திட்டமானவைகளென்று ஏற்படுத்த சாத்தியமில்லாததாயி

ருப்பதுடன் அப்படி ஏற்படுத்துவது அனுவசியமாயுமிருக்கிறது; ஆனால்நோக்கத்தில் வைக்கவேண்டிய நியமமான துஎன்னவென்றால்—தகுந்த காரணங்களன்றியில் கிராமத்தலைவர்களை அவர்களிட இருப்பிடத்திலிருந்து வரவழைத்து விடக்கூடாது, தவிரவும், சௌகரியப்படும் போதெல்லாம், அதிமுக்கியமானவைகளல்லாத விஷயங்களில், கிராமத்தலைவர்களிடமிருந்து (மணிகார்களிடமிருந்து) ஏதாவது சமாசாரங்களாவது காரணங்களாவது தெரிந்து கொள்ளவேணுமென்றால் அப்பேர்ப்பட்டவைகளைத்தெரிந்துகொள்ளும் பொருட்டு அவர்களை நேராய் ஆஜராகச் செய்வதற்கு பதிலாக அவர்களுக்குத் தாக்கீதனுப்பி அது மூலமாய் தெரிந்து கொள்ளவேண்டியது. கிராமத்திலிருந்து தாலூக் கஜானாவுக்கு இருஸால் அனுப்பும் போதெல்லாம் கிராமத்தலைவன் (மணிகார்) இருஸாலுடன் கூடபோகவேண்டியது அவசியமல்லவென்று பரிஷ்காரமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது. பூராவும் வசூல் செய்ய வேண்டியதும் சரியாயும் விபரமாயுமான இருஸால் நாமாவுடன் நம்பிக்கையுள்ளவனும் தகுந்தவனுயுமான காவலாள் மூலமாய் இருஸால் செய்விக்க வேண்டியதும் மணிகாரனிட கடமை. ஆனால் வசூல் துகையானது நடமுதல் பேரீஜுக்குச் சமமானதாகவாவது சற்றேறக்குறைய சமமானதாகவாவது இருந்து இருஸால்போகும்போது விசேஷமான ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டிய தவசியமில்லாத சந்தர்ப்பங்களில் கிராமத்தலைவனானவன் இருஸாலுடன் போகாமலிருக்க வேண்டிய விஷயத்தில் தன்னிட யுக்தானுஸாரம் நடத்தலாம். இந்தவிஷயத்தில் கிராமத்தலைவன் ஆஜராயிருந்தமாதிரியாகவே இருஸால்துகை தாலூகாவில் வந்து சேர்ந்தவுடனே அதைப்பரி சோதித்து கஜானாவில் பெற்றுக்கொள்ள வேண்டியது. இந்த ஏற்பாடு பிரகாரம், கிராமத்தலைவன் இருஸால்செய்யும்போது தகுந்த பந்தோபஸ்துடனல்லாமல் இருஸால் செய்யும்பட்சத்தில் (அதுவிஷயத்தில் கிராமத்தலைவன் ஜவாப்புதாரியாக்கப்படுவான்; இருஸால் துகை தாலூகா கஜானாவில் பரிசோதிக்கப்பட்ட மேல் ஏதாவது குறைவுபடுவதாகவாவது ஜாஸ்தி படுவதாகவாவது ஏற்பட்டால் கிராமத்தலைவன் அதேமாதிரியாய் ஜவாப்புதாரியாவான்.

2. பிரத்யேகமான அனுமதி பெற்றுக்கொள்ளாமல், கிராம நவுக்கர்களின் சங்கியையை ஜாஸ்திசெய்ய கலெக்டர்களுக்கு அதிகாரமில்லை.

3. சம்பளம் பத்தாக்கள் விஷயமாய் ஸிவில் ஸர்வீஸ் ரிகுலேஷன் புஸ்தகத்தில் ஏற்படுத்தப்பட்ட விதிகளானவை கிராமநவுக்கர்களுக்கு சம்பந்தப்பட்டவைகளல்ல; யாதொரு கிராம நவுக்கரானவர் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கிராமங்களிட வேலைகளைச் செய்துவந்தால், அந்தகிரா

மங்களின் மொத்த பேரீஜுக்கு ஒத்திருக்கிற வகுப்புக்கு ஏற்படுத்தப்பட்ட சம்பளம் அவனுக்கு கொடுக்கப்படவேண்டியது.*

4. கிராம நவுக்கருக்கு ரஜாவேண்டுமென்ருல், ரஜா எடுத்துக்கொள்ளும் உத்தியோகஸ்தரிட பொறுப்பின்பேரில் வேலையை நடத்திவர ஏற்பாடு செய்யப்படவேண்டியதென்கிற நிபந்தனைக்குட்பட்டு, 15 நாள்களுக்கு மேற்படாத காலத்திற்கு கிராம நவுக்கர்களுக்கு ரஜாகொடுக்க தாசில்தார்களுக்கு அதிகாரமுண்டு; கிராமநவுக்கர்கள் தங்களிட பொறுப்பின்பேரில் வேலைகளை செய்துவர ஏற்பாடுசெய்யும் விஷயத்தில் யாதொரு பந்துவைக் கொண்டாவது சிநேகிதனைக்கொண்டாவது பெரும்பான்மையாய் செய்விக்கலாம்.

5. 15 நாட்களுக்கு மேற்பட்ட ஜாஸ்திகாலங்களுக்கு ரஜா கொடுக்க வேணுமென்று கோரிக்கொள்ளப்பட்ட விஷயங்களை டிவிஷனல் ஆபீஸர் பைஸல்செய்யவேண்டியது. காயமான இஸூம்தாரனுனவன் ரஜாவிலிருக்கும்போது பதில் ஆஸாமி நியமிக்கவேண்டியதவசியமாக ஏற்படும் விஷயங்களிலெல்லாம் அந்த உத்தியோகத்தின் சம்பளம் பூராவையும் வாஸ்தவ்யமாய் வேலைபார்த்துவருகிற ஆஸாமிக்கு பட்டுவாடா செய்யவேண்டியது; ஆனுல் அப்படி பதிலியாயிருக்கிற ஆஸாமியானவன் வேருெரு கிராமத்திய நவுக்கனுயிருக்கும் பட்சத்தில் 3–வது பிரகரணத்தில்கண்ட விதிப் பிரகாரம் (சம்பளவிஷயத்தில்) அனுஸரித்து நடக்கப்படும். இந்தவிஷயத்தில் மீதி துகையை கிராம ஊழியபண்டுக்கு வரவு வைத்துக்கொள்ளப்படும்.

6. கோர்ட்டாரால் ஸம்மன் செய்யப்பட்டதின்பேரில் கோர்ட்டில் போய் ஆஜராகிற கிராமநவுக்கர்கள் வேலையின்பேரிலிருப்பதாக பாவிக்கப் பட்டு அவர்களிட சம்பளம் அவர்களுக்குப் பட்டுவாடா செய்யப்படவேண்டியது. அப்பேர்ப்பட்ட பிரதிவிஷயத்திலும் கிராம நவுக்கர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து வெளியே போகப்பட்டகாலமானது சொற்ப நாட்களுக்கு மேற்பட்டிராது, அப்பேர்ப்பட்ட காலங்களில் பதில் ஆஸாமி நியமிக்கவேண்டிய அவசியம் நேரிடுவது அதி அபுருபம்.

---

* ரிவிஷனில் (புதுஏற்பாட்டில்) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம உத்தியோகங்களுக்கு யாதொருவனுக்கு பாத்தியதையிருக்கும் பக்ஷத்தில் ஒரு வேலையை மாத்திரம் அவன் பார்த்து வந்து மற்ற வேலைகளுக்கு அவன் தரப்பு குமஸ்தாக்களை நேமிக்கும்படி இப்பால் கெவர்ண்மெண்டார் உத்திரவு செய்திருக்கிருர்கள்.

248. **அன்கவனன்டேட் * உத்தியோகஸ்தர்கள் நிலம்வைத்துக் கொண்டிருக்கிற விஷயமாய்:**—முன்னுடியாகவே யாதொரு டிப்டி கலெக்டர் நிலம் சம்பாதித்து இருந்தால் அப்பேர்ப்பட்டவிஷயத்தில்தவிர (அந்தவிஷயத்திலும் கெவர்ண்மெண்டாரிட உத்திரவைப் பெற்றுக்கொள்ளவேண்டியது), தாம் உத்தியோகம் செய்கிற ஜில்லாவில் வேறேவிதமாய் நிலத்தையாவது அதில்வேறுஎவ்விதமானபாத்தியதையையாவது வைத்துக் கொள்ளவாவது, வேறேநிலம் விலைக்காவது, கொதுவைக்காவது, வேறே எவ்விதமாயாவது, நேராகவாவது வேறொருவரைக்கொண்டாவது, வாங்கக் கூடாது.

2. கலெக்டரிட சிரஸ்தேதார்கள் தாங்கள் வேலைபார்க்கிற ஜில்லாவில் தங்களுக்கு முன்னுடியாகவே பிதிரார்ஜிதமாய் உண்டான நிலத்தைத் தவிர வேறே நிலத்தைக் கைபற்றில் வைத்துக்கொள்ளவாவது புதுசாய் சம்பாதிக்கவாவது கூடவேகூடாது.

3. தாசில்தார்களும் டிப்டி தாசில்தார்களும் தாங்கள் வேலைபார்க்கிற தாலூகாவுக்குள் நிலங்களை கைப்பற்றில் வைத்துக்கொள்ளவாவது புதுசாய் சம்பாதிக்கவாவது கூடாது.

4. கிராமநவுக்கர்கள் நீங்கலாக சேவகர்கள் ஹோதாவுக்கு மேற்பட்ட ரெவினியூ உத்தியோகஸ்தர்களும் மேஜிஸ்டிரட்டு உத்தியோகஸ்தர்களும் தாங்கள் வேலைபார்க்கிற தாலூகா அல்லது அசூர்கஸ்பா எல்லைக்குட்பட்டு சர்க்கார் பாக்கிக்காகப் போடப்பட்ட ஏலத்தில் அசையும்பொருளையாவது ஜங்கம சொத்தையாவது நோரகவாவது வேறொருவரைக்கொண்டாவது வாங்கக்கூடாது.

5. கரம்பு நிலங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுசரித்தாவ்து வேறே விதமாயாவது விவசாய மூலமாய் பலனடையும் பொருட்டு அன் கவனென்டட் உத்தியோகஸ்தர்கள் பெரும்பிடிபந்தால் நிலங்களை வாங்குவதற்குயாதொரு விஷயத்திலும் உத்திரவு கொடுக்கப்பட மாட்டாது.

---

* அன்கவனென்டட் உத்தியோகஸ்தர்கள் என்றால் இங்கிலாந்து தேசத்தில் மஹாராணி அவர்களுடன் சில உடன்படிக்கை செய்துகொண்டு இவடம் வருகிறவர்களாகிய கலெக்டர்கள், ஜில்லா ஜெட்ஜுகள், ஸப் கலெக்டர்கள், அஸிஸ்டண்டு கலெக்டர்கள் முதலானவர்களல்லாத இந்தியா தேசத்தில் நேமிக்கப்படுகிற டிப்டிகலெக்டர், தாசில்தார் சிரஸ்தேதார் முதலான உத்தியோகஸ்தர்கள்.

6. மேலேகண்ட நிர்ப்பந்தங்களைத் தவிரவும், அடியிற்கண்ட சில ஷரத்துகள்படி நடப்பதின் பேரிலும், ஸர்க்கார் அன்கவனன்டட் உத்தியோகஸ்தர்கள் நிலம் கைப்பற்றில் வைத்துக்கொள்ளவும் சம்பாதிக்கவும் கூடும்.

7. கலெக்டர் அதிகாரத்துக்குட்பட்ட எல்லா சேவக ஹோதாவுக்கு மேற்பட்ட அன் கவனென்டட் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு அந்த ஜில்லாவிலும் இதர ஜில்லாவிலும் கைப்பற்றிலாவது சம்பாதிக்கப்பட்டாவது இருக்கப்பட்ட நிலத்திற்கு விவரம்கண்ட ஒரு ஜாபிதா தயாரித்து பிரதி ஜனவரிமீ 15வயில் கலெக்டராபீஸில் பதிவுக்காக அனுப்பவேண்டியது. தவிரவும் தான் வேலைபார்க்கும் ஜில்லாவிலும் இதர ஜில்லாவிலும் தனக்குள்ள அல்லது தான் சம்பந்தப்பட்ட நிலங்களெல்லாவற்றையும் காண்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் அந்தஜாபிதாவின் அடியில் உறுதிமொழிஎழுத வேண்டியது. மனைவி அல்லது இதர பந்துவின் பெயரால் சொத்தைப் பதிவு செய்வது மாதிரியாகிய மோசகரமான பதிவுகளைச் செய்ய வொட்டாமல் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. இது விஷயமாய் தேவையான அம்சங்களைத் தெரிவிக்காமற்போவதினால் நேரிடக்கூடிய கடுமையான சிக்ஷையைப்பற்றி எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதனால் எச்சரிக்கப்படுகிறார்கள். நிலங்களை விற்பனை செய்யும் ஆஸாமிகள் ஜில்லாவிலுள்ள ஒரு கவனென்டட்ரெவினியூ உத்தியோகஸ்தரிடம் மாற்றுதல் ராஜினாமா கொடுத்துக்கொள்கிற வரையிலும், அந்த நிலங்கள் புதுசாய் வாங்கினவர்களிட பேருக்கு கிராம ரிஜிஸ்டரிலும் ஜில்லா ரிஜிஸ்டரிலும் மாற்றப்படக்கூடாது.

8. மேற்கண்ட அன்கவனென்டட் உத்தியோகஸ்தர்கள் பிதிரார்ச்சிதமாக நிலத்தையாவது அதில் வேறெவ்வித சம்பந்தத்தையாவது அடையும் போது அது விஷயமாய் எல்லாவிஷயங்களையுங்கண்டு உறுதிமொழியையும் எழுதி கலெக்டருக்கனுப்பவேண்டியது.

9. நிலத்தை கைப்பற்றில் வைத்துக்கொண்டாவது வேறேவிதமாய் நிலத்தில்சம்பந்தப்பட்டாவது இருக்கிறவர்கள், டிப்டிகலெக்டர்களாகவாவது ஹுசூர்ஆபீஸிலாவது தாலூகா ஆபீஸிலாவது சிப்பந்திகளாக நேமிக்கப்பட்டால்மேற்கண்ட மாதிரி ஜாபிதா அனுப்பவேண்டியது.

10. உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் செய்து கொள்ளும் போதும் நிலசம்பந்தமான மேற்கண்ட உறுதி மொழி கண்டெழுதவேண்டியது. கெவர்ன்மெண்டாராலோ போர்டாராலோ நேமிக்கப்பட வேண்டிய உத்தியோகங்களுக்காக ஆஸாமிகளைப்பற்றி கலெக்டர்கள் சிபார்சு செய்யும்

போது அவர்களுக்கு நிலமிருக்கும் சம்பந்தமாயும் அவை எவ்விடத்தில் இரு க்கின்றனவென்பதைப்பற்றியும் கண்டெழுதவேண்டியது.

11. மேற்கண்ட விதிக்குட்படவேண்டிய யாதொரு அன்கவனென் டட் உத்தியோகஸ்தர் ஒரு ஜில்லாவிலிருந்து மற்ற ஜில்லாவுக்கு மாற்றப் படும் போது தான் எந்த ஜில்லாவிலிருந்து மாற்றப்படுகிறாரோ அந்த ஜில்லா விலுள்ள மேற்கண்ட ரிஜிஸ்டரிலிருந்து ஒரு நகல் பெற்றுக் கொண்டு தான் மாற்றப்படுகிற ஜில்லாரிஜிஸ்டரில்பதிவுக்காகஅதைஆஜர்செய்யவேண்டியது.

12. மேற்கண்ட விதமாய் நிலம் வகையறா கைப்பற்றிக் கொள்ளவா வது சம்பாதிக்கப்படக் கூடியதாகவாவது உத்திரவு கொடுக்கப்பட்ட டிப்டி கலெக்டர்களும் ரெவினியூ அல்லது மேஜிஸ்டிரட்டு உத்தியோகஸ்தர்களும் யாதொரு சந்தர்ப்பத்தை முன்னிட்டும் அந்த நிலங்களை சாகுபடி செய்வதில் நேராய் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. ஸர்க்கார் உத்தியோக விஷயத் தில் அவர்கள் செலுத்த வேண்டிய காலத்தையும் கவனத்தையும் அப்பேர்ப் பட்ட சாகுபடிமுதலானது விஷயமாய்செலுத்தக்கூடாது. எந்த தாலூகாவில் எந்த ரெவினியூ அல்லது மெஜிஸ்டீரியல் உத்தியோகஸ்தர்களுக்கு நிலமிருக் கிறதோ அவர்களை அந்த தாலூகாவிலாவது அல்லது அந்த நிலங்களைப் பரா மரித்து வருவதில் தலையிட்டுக் கொள்ளக்கூடிய உத்தியோகங்களிலாவது நேமிக்காமலிருக்கும் பொருட்டு கலெக்டர்கள் கூடிய வரையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியது.

13. ஸர்க்கார் பாக்கிக்காக போடப்பட்ட ஏலத்தில் கிராம நவுக்கர்கள் நிலம் வாங்கினால் 1864 ஹூ II-வது சட்டப்பிரகாரம் 9-வது நமூனாவிலும் 10-வது நமூனாவிலும் அவனிட உத்தியோகத்தின் ஹோதாவை கண்டெழுத வேண்டியது.

14. 7, 8, 9-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டஸ்டேட்மெண்டு களை அவ்விடத்தில் கண்ட மாதிரியாய் அனுப்பாமல் போகும் பட்சத்தில்சம்ப ந்தப்பட்ட ஆஸாமியானவர் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து உடனே பர் தர்ப்பு செய்யப்படுவார்.

15. இந்த விதிகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட எல்லா நிலங்களையுங்கண்ட ஒரு ரிஜிஸ்டர் கலெக்டராபீஸில் வைத்துவைக்கவேண்டியது. டிப்டிகலெக் டர்கள் விஷயமாய் போர்டாபீஸில் ஷை ரிஜிஸ்தருக்கு ஒரு நகல் வைத்து வைக்கப்படும். இந்தரிஜிஸ்தரில் பதிவு முதலானது செய்வதற்கு பிரதிஹூ மார்ச்சுமீ 1உயில் கலெக்டர்கள் போர்டாருக்குத் தேவையான அம்சங் களைப்பற்றி ரிபோர்ட் செய்யவேண்டியது. யாதொரு பசலியில் எத்தனை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நிலம் எவ்வளவு சம்பாதித்தார்களென்று ஜமா பந்தி ரிபோர்ட்டில் கண்டெழுதவேண்டியது..

16. இந்த விதியில் கண்ட பிரகாரம் நிலம் கைப்பற்றில் வைத்துக் கொள்ளவாவது புதுசாய் சம்பாதிக்கவாவது கூடுமோனால் அது விஷயமாய் அப்படி கைப்பற்றில் வைத்துக்கொள்ளும் பொருட்டாவது புதுசாய் சம் பாதிக்கும் பொருட்டாவது முன்னடியாக கலெக்டரிட அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டியதவசிய மில்லை.

17. வீடுகளுக்காகவாவது, வாஸஞ் செய்யும் பொருட்டாகத் தேவை யான நிலங்களுக்காவது, தோப்புவிதிகள் பிரகாரம்உண்டாக்கப்பட்டதோப்பு களுக்காவது, இந்த விதிகளில் கண்ட எதுவும் சம்பந்தப்படுவதாக பாவிக் கப்படமாட்டாது.

18. ஜில்லா முழுதிலும் இந்த விதிகளை பிரசித்தப்படுத்தவேண்டியது. அடிக்கடி ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்ய வேண்டியது. இதுகளை தர் ஜிமா செய்து ரெவினியூ ஆபீஸ்களில் ஒட்டி வைக்கவேண்டியது.

248. ஏ. கவனேன்ட் உத்தியோகஸ்தர்களும் அன்கவனேன்ட் உத்தியோகஸ்தர்களும் பணம் முதலான விஷயமாய் கோடுக்கல் வாங்கல் செய்வது:—கவனென்டட் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் (சீமை யிலிருந்து நியமிக்கப்பட்ட கலெக்டர், ஜட்ஜி, ஸப்கலெக்டர் ஹேட்அஸிஸ் டெண்டு கலெக்டர் முதலானவர்கள்), இந்தியா கெவர்ண்மெண்டாரால் மகிமை பொருந்திய மஹாராணி அவர்களுடைய அனுமதியின் பேரில் டி கலெக்டர் முதலான வேலைகளுக்கு நியமிக்கப்படுகிற சுதேச ஸிவில் உத்தி யோகஸ்தர்களும், கெஜட்டில் பிரசுரம் செய்யப்படுகிற ஹோதாவுள்ள அன் கவனென்டட் உத்தியோகஸ்தர்களும், ஸிவில் அல்லது ராணுவ உத்தியோ கங்களில் நம்பிக்கையும் பொறுப்பு முள்ள உத்தியோகங்களைப் பார்த்துவரு கிற உத்தியோகஸ்தர்களும் தாங்கள் எந்த இடங்களில் நியமிக்கப்படுகிறார் களோ அந்த இடங்களின் எல்லைக்குட்பட்டு வாசம் செய்கிறவர்களாகவா வது, சொத்து உடையவர்களாகவாவது அல்லது பேரஸாரம் செய்கிறவர்க ளாகவாவது இருக்கிற ஜனங்களிடத்திலிருந்தாவது தங்களிட உத்தியோக அதிகார முறைமைக்குட்பட்டவர்களான ஜனங்களிடத்திருந்தாவது கடன் வாங்கவாவது அல்லது அவர்களுக்கு பணசம்பந்தமான வகைகளில்ஜவாப்பு சொல்லவேண்டியவர்களாகவாவது இருக்கவேகூடாது. இந்தவிதியை மீறி நடந்தால் வேலையிலிருந்து பர்தர்ப்பு செய்யப்படுவார்கள். அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் சென்னை ராஜதானியிலிருக்கிற நிலதார்களுக்கு தாங் களே நேராகவாவது பந்து முதலான ஏஜெண்டு மூலமாகவாவது பணத்தை வட்டிக்கிடக்கூடாது.

2. கூட்டு முதல் வைத்து வியாபாரம் செய்யும் இங்கிலீஷ் கம்பெனியார்களுடனும் பாங்கிக்காரர்களுடனும் பணசம்பந்தமான சாதாரண நடவடிக்கைகளுக்கு ஷை வியாதியானது சம்பந்தப்படாது.

3. மேற்கண்ட விதியானது பலான நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டதென்று விவரித்துச் சொல்வது அசாத்தியமாயிருப்பதுடன் அனுவசியமாயு மிருக்கிறது. அடியிற்கண்ட பாபத்துகள் வியக்தமாய் ஷை விதியில் சம்பந்தப்பட்டவை :—தானம்கொடுப்பது, கடன்வாங்குவது, கடன்கொடுப்பது சொத்துக்களையாவது குடியிருப்பதுமுதலானதற்கு வேண்டிய இடத்தையாவது கிரமமான மதிப்புக்குக் குறைவான துகைக்காவது கிரமமாய் கொடுக்கவேண்டிய பிரதி பலனுக்குக் குறைவாயாவது பெற்றுக்கொண்டு ஸரபரா செய்வது, கிரமமாய் விற்கக்கூடிய விலையைவிட அதிஜாஸ்தி விலைக்கு சொத்து விற்பனை செய்வது, முதலாகியதும் சேர்ந்ததாகும். பிரதி உத்தியோகஸ்தனும் அவரவரிட விஷயத்தில் ஷை விதியை அனுஸரித்து நடப்பதற்கு யாதொரு அப்பியந்ததிரமும் நேரிட இடமிராதென்பது வியக்தமாயிருக்கிறது ; ஆகச்சே, இந்த விதியை கண்டிப்பாய் அனுசரித்து நடக்காமல் போவதற்கு உபயோகமற்ற சாக்கு போக்குகள் எது சொல்லிக்கொண்டாலும் அதை ஒரு காரணமாக எடுத்துக்கொண்டு அப்படி சாக்கு போக்கு சொல்லுகிறவர்களிட தவறுதலை கெவர்ண்மெண்டார் மன்னிக்கவே மாட்டார்கள், அன்றியும் அப்பேர்ப்பட்ட செய்கைகளை அதி அதிருப்தியுடன் கண்டிப்பார்கள்.

4. இந்த விதியானது ரெவினியூ டிபார்ட்மெண்டில் கவனென்டட் ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும், சுதேச ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும், டிப்டி கலெக்டர், ஹஸுர் சிரஸ்தேதார் ஸப்கலெக்டரிட ஹெட்கிளார்க்கு ஹெட் அஸிஸ்டண்டு கலெக்டரிட ஹெட்கிளார்க்கு, தாசீல்தார், தாலூகா சிரஸ்தேதார், ஸப்மாஜிஸ்டிரேட்டுகள், டிப்டி தாசில்தார், பாரஸ்டு ரேஞ்சு ஆபீஸர்கள், கெவர்ண்மெண்டாபீஸிலும் போர்டாபீஸிலும் உள்ள சுதேச அஸிஸ்டெண்டுகள், இப்பேர்ப்பட்டவர்களைப்போன்ற பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள், இவர்களுக்கு சம்பந்தப்பட்டது.

252. கடனிறுக்கநிர்வாகமின்மை:—கடன்வாங்கி அதை இறுக்க (கொடுத்துத்தீர்க்க) நிர்வாகமில்லாத கடன்காரர்களை தப்புவிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிற சட்டத்தையே கதியாக அடைகிற (இன்ஸால்வெண்ட்) கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்கள் எவர்களாயிருந்தாலும் விலக்கில்லாமல் ஸஸ்பென்ஷன் செய்யப்படுவோர்கள் ; அவர்கள் ஸஸ்பென்ஷன்செய்யப்பட்டிருக்குங்காலத்தில் அவர்களுக்கு சம்பளம்பட்டுவாடாசெய்யும் விஷயமானது வேறேவிதமாய் ஸஸ்பென்ஷன் செய்யப்பட்டிருக்குங்

காலத்தில் சேரவேண்டிய சம்பளவிஷயமாய் ஸிவில் ஸ்ர்வீஸ்ரிகுலேஷ னில் ஏற்படுத்தியிருக்கப்பட்ட விதியை அனுஸரித்து பட்வாடா செய்யப் படும்.

2. கடனுக்காக ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் கெவர்ண்மெண்டாரிட பின்னும் உத்திரவுகளுக்குட்பட்டு சம்பளத்தை முற் றிலும் பட்வாடா செய்யாமலும் நிறுத்திப்போடலாம்.

3. கடனிறுக்க நிர்வாகமற்றபிரதிவிஷயத்தையும் விசாரித்துத் தீர்க் கப்பட்டஉடனே அதுவிஷயத்தைப்பற்றி கோர்டாரிட தீர்ப்புக்கு ஒருநகல் எடுத்துஅனுப்பி போர்டாருக்கு ரிபோர்ட்டு செய்து தெரிவிக்கவேண்டியது. போர்டார் அந்தரிபோர்ட்டை பப்ளிக் டிபார்டுமெணடில் கெவர்ண்மெண் டாருக்கு அனுப்புவார்கள்.

4. நெடுநாளாக நீடித்த கடனிருந்துகொண்டும் அதைத் தீர்ப்பதற்கு நம்பிக்கையற்றதாயுமான ஸ்திதியில் இருக்கிற ஓர்மனுஷியனே சர்க்கார் ஸர்வீஸில்வைத்துக்கொள்வதானது அயுக்தமாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஸ்திதியிலிருப்பதால் உண்டாகக்கூடிய அவாக்களானவை கடன்காரனிட வேலைகளை அவசியம் மிகவும் சொஸ்திப்படுத்த ஹேதுவாயிருக்கும்; தவிர வும் அயோக்கியதையான காரியங்களைச் செய்துவர மனதைக்கவரவும்ஹேது வாயிருக்கும், அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட மனச்சாய்வு களை தடுப்பது மிகவும்கஷ்டம்.

5. இதை அனுஸரித்து கெவர்ண்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற விதி என்னவென்றால், யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தரிட சம்பளத்தில் பேர் பாதி அவரிட கடனுக்காக எப்போதும் பிடிக்கப்பட்டுவந்தாலாவது, 2 வரு ஷத்திற்கு மேற்பட்டகாலமாய் அடுத்துப்பிடிக்கப்பட்டுவந்தாலாவது, தீர்க்க ப்படும்பொருட்டு சாதர்ரண சந்தர்ப்பங்களில் 2 வருஷத்திற்குமேற்பட்ட காலம் பிடிக்கக்கூடிய கடன் துகைக்காக பிடித்துவரப்பட்டாலாவது, அப் பேர்ப்பட்ட விஷயங்களில் அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தரிட கடன்துகை கள் பூராவையும் கண்டு தயாரிக்கப்பட்ட ஒரு ஷிடியூலே அந்த உத்தியோ கஸ்தரிட தலைமை ஆபீஸரிடமிருந்து வரவழைத்து அந்த விஷயத்தைப்ப ற்றி கெவர்ண்மெண்டாருக்கு ரிபோர்ட்செய்யவேண்டியது. கெவர்ண்மெ ண்டார்அந்தவிஷயத்தை கடன்காரனுனவன்இன்ஸால்வெண்ஸி கோர்ட்டை (கடனிறுக்கச்சக்தியற்றவர்களைதப்புவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டகோர்ட்) கதியாக அடைந்திருந்தால் எப்படி நடவடிக்கை நடத்தப்படுமோ அதே மாதிரியாய் பைஸல் செய்வார்கள்.

6. அப்பேர்ப்பட்ட ரிபோர்டுகளில் காணவேண்டிய முக்கியமான அம்சங்களாவன:—

I. கடனுக்கும் சம்பளத்திற்குமுள்ள தாரதம்மியம், கடன் காரனிடசர்க்கார் உத்தியோக விஷயமான காரியங்களில் எவ்வளவு சொஸ்தி உண்டாகிறதென்றும்,

II. கடன்காரனிட நிலைமையானது சீரடையத் தக்கதாசத் தோன்றுகிறதா,

III. அந்தந்த சந்தர்ப்பங்களை அனுஸரித்து அவரை (எ) அவரிட வேலையிலேயே நிறுத்திவைப்பது யுக்தமா, (ப) சர்க்காரில் எந்த உத்தியோகத்திலாவது நிறுத்திவைப்பது யுக்தமா.

254. ஸஸ்பென்ஷன் செய்யப்பட்டாவது விசாரணையிலாவது இருக்கிறஅன்கவனென்டேட்உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுப்பதைப்பற்றி:—துர்நடத்தைக்குத் தண்டனையாகவாவது துர்நடத்தையுள்ளவனென்று சொல்லப்பட்டு அதைப்பற்றி விசாரணையை முன்னிட்டாவது வேலையிலிருந்து ஸஸ்பெண்ஷனாவது பர்தர்ப்பாவது செய்யப்பட்ட யாதொரு அன்கவனென்டெட் உத்தியோகஸ்தரை வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும்பொழுது சம்பளம் கொடுப்பதைப்பற்றி ஏற்படுத்தப் பட்ட விதிகள்.

I. III–வது விதியில் 2-வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரகாரம் நீங்கலாக, யாதொரு உத்தியோகஸ்தரிட சம்பளமானது அவர் பர்தர்ப்படைந்த தேதிமுதல் முற்றிலும் நிறுத்திவிடப் படும். பர்தர்ப்பு உத்திரவுக்கு விரோதமாக அப்பீல் நடத்துவதற்காகப் பிடித்தகாலத்திற்கும் அவருக்கு சம்பளம் கொடுக்காமல் நிறுத்தி போடலாம்.

II. III–வது விதியில் 2–வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரகாரம் நீங்கலாக, யாதொருஉத்தியோகஸ்தரானவர் கெட்டநடத்தைக்கு சிக்ஷையாக உத்தியோகத்திலிருந்து ஸஸ்பெண்டு செய்யப்பட்டு வேலைபார்த்துவராத காலத்திற்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது.

III. யாதொரு உத்தியோகஸ்தரானவர் வேலையிலிருந்திருந்தால் என்ன செலவு பிடித்திருக்குமோ அந்த துகைக்கு மேற்பட்டு பிரதேச கெவர்ண்மெண்டாரிட அனுமதியன்றியில் செலவிடக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு,

i. யாதொரு உத்தியோகஸ்தர் துர் நடத்தையாய் நடந்திருப்ப தாகத் தெரியவந்திருந்து அதைவிசாரணை செய்வதை முன் னிட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டால்அந்த உத்தியோகஸ் தருக்கு அவரை ஸஸ்பெண்டுசெய்யும் அதிகாரியால் அவரிட சம்பளத்தில் கால்பங்குக்கு மேற்படாத தமாஷா பிரகாரம் ஓர்துகை ஜீவனும்சத்திற்காக கொடுக்கப்படலாம். ஆனல் அந்த உத்தியோகஸ்தரானவர் ஐரோப்பியனாக இருக்கும்பட் சத்தில் அவருக்குக்கொடுக்கப்படும் ஜிவனும்ச துகையானது சாதாரணமாய் மீ 1க்கு 25 ரூ க்குக் குறைந்ததாயிருக்கக் கூடாது; அவரிட சம்பளமானது மீ 1க்குரூ 100 க்குக் குறைந்திருந்தால் அம்மாதிரியாகவே தாமாஷாவை உயர்த் திக்கொள்ளலாம்.

குறிப்புஃ—ஜீவனும்சத்திற்காக ஏற்படுத்தப்பட்ட துகையானது தயா னுகூலமாய் மாத்திரமே கொடுக்கப்பட்டுவருகிறதே தவிர பாத்தியதை உண் டென்பதாய் கேட்கப்படக்கூடாது.

ii. துர்நடத்தைக்கு சிக்ஷையாக யாதொரு உத்தியோகஸ்தர் ஸஸ்பென்ஷன் செய்யப்பட்டிருந்து புனராலோசனை செய் யப்பட்டதின் பேரிலாவது அப்பீலின் பேரிலாவது அபாத்திர மாய் ஸஸ்பென்ஷன் செய்யப்பட்டதென்ருவது ஸஸ்பென் ஷனானது பூராவும் பாத்திரமுடையதல்லவென்ருவது ஏற்படுத்தப்பட்டாலும் அல்லது யாதொரு உத்தியோக ஸ்தரானவர் துர்நடத்தையாக நடந்திருப்பதாய் சொல்லப் பட்டு அது விஷயமாய் விசாரணையை முன்னிட்டு ஸஸ் பென்ஷன் செய்யப்பட்டிருந்தாலாவது அல்லது வேலையிலி ருந்து பர்தர்ப்புசெய்யப்பட்டிருந்தாலாவது அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தரிட விஷயத்தைப்பற்றி விசாரணை செய்யப் பட்ட மேலாவது புனராலோசனை செய்யப்பட்டதின் பேரி லாவது அப்பீல் செய்யப்பட்டதின் பேரிலாவது அவரை மறுபடி வேலையில் நியமித்தால், அப்படி (முதல் உத்தி ரவை) சீர்திருத்தின அதிகாரியாவது அப்பீல் அதிகாரியா வது அந்த உத்தியோகஸ்தர் வேலையிலில்லாத காலத்திற்கு அடியில் கண்டவிதமாய் சம்பளம் கொடுக்கலாம்.

1. உத்தியோகஸ்தரானவர் கௌரதையுடன் விடுதலை செய்யப்பட்டால்—பூரா சம்பளம்.

2. அப்படிக்கில்லாவிடில், அப்பீல் அதிகாரிக்கு யுக்தமா [illegible] தோன்றக்கூடிய (சம்பளத்தின்) பாகம்.

256. சர்க்கார் உத்தியோஸ்தர்களை வேலையில் நியமிப்பது:— ஜாதி அல்லது மதஸம்பதமானபேதமானது சர்க்கார் உத்தியோகத்திற்கு லாயக்கற்றதாக கெவர்ண்மெண்டார் பாவிக்க மாட்டார்கள். ஆகையால், பலான உத்தியோகங்களுக்குத் தேவையான பரிக்ஷைகளை பாஸ் செய்து இருந்து அந்த உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் நன்முய்த் தகுதியானவர்களென்று அந்த ஆபீஸின் தலைமை அதிகாரியானவர் அபிப்பிராயப்படும் பட்சத்தில் எல்லா ஜாதியார்களும் பிரிவினர்களும் அப்பேர்ப்பட்ட உத்தியோகங்களுக்கு சமமான லாயக்குள்ளவர்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் அவர்கள் அதிகவயது சென்றவர்களல்லாதவர்களாயிருக்கவேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது, தவிரவும் கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களிலுள்ள கீழ் உத்தியோகங்களானவை செல்வர்க்குள்ள சிலகுடும்பத்தார்களாலேயே ஏகஸ்வதந்தரமாக அனுபவிக்கப்படாமலிருக்கவேண்டிய விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது. பிரதி ஜில்லாவிலுள்ள மேலான உத்தியோகங்களை பலவித ஜாதியாருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டியதாய் எப்போதும் முயற்சி செய்ய வேண்டியது, இதற்கு உதாரணமாக, ஹெட்சிரஸ்தேதாரானவர் மஹாராஷ்டிரபிராமணராக இருந்தால்.ஸப்கலெக்டர்ஆபீஸில்ஹெட்கிளார்க்கானவர் வேறே ஒரு வகுப்பினரைச் சேர்ந்தவராக இருப்பது யுக்தமாயிருக்கும்; பிரதிஜில்லாவிலுமுள்ள தாசில்தார்களில் ஓர்தாமாஷா பிரகாரம் சில பேர் பிராமணர்களல்லாத வேறே ஜாதியார்களாகயிருக்கவேண்டியது; கலெக்டராபீஸில் பிரதானமான சுதேச உத்தியோகஸ்தர்கள் இரண்டு பேரும் வெவ்வேறு ஜாதியார்களாயிருக்க வேண்டிய தென்கிறதானது ஸ்திரமான விதியாக பாவிக்க வேண்டியது.

3. பட்வாடாவுக்காகவரும் பில்களைப்ஸல் செய்யும்விஷயத்தில்தாசில்தார்களுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு பிரதி தாலூகாகச்சேரியிலும் இங்கிலீஷ் தெரிந்த ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட ஆஸாமிகளை குமாஸ்தாவாக நியமிக்க வேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது.

4. உண்மையுள்ளவர்களாயும் வேலையில் கெட்டிக்காரர்களாயுமிருக்கவேண்டியதென்கிற நியமங்களுக்குட்பட்டு, சர்க்கார் ஸர்வீஸில் தங்களிட சென்ற காலங்களை உழைத்து இருக்கப்பட்டவர்கள் வேலைகொடுக்கப்பட கிரமமாய் மேலான பாத்தியதை யுடையவர்கள், ராஜாங்கத்துக்கு நெடுநாளாக உழைத்திருப்பதை அனுஸரித்து செய்யப்பட்ட பாத்தியதை

களைப்பற்றி எப்பொழுதும் செம்மையாய் ஆலோசனையில் எடுத்துக்கொண்டு பைஸல்செய்யவேண்டியது. ஆனால், பலான உத்தியோகஸ்தரானதவர் ஸர்வீஸில் முதன்மையானவர் என்ற காரணத்தினாலேயே அவரை அவரால் செய்யமுடியாத கடமைகளடங்கிய ஓர் வேலைக்கு ப்ரமோஷன் செய்வது (உயர்த்துவது) கூடாது; தவிரவும், குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள் அதிக முக்கியமான வேலைகளையும் ஜாஸ்தி சம்பளம் வாங்குகிறவர்கள் அவ்வளவு முக்கியமில்லாத வேலைகளையும் செய்துவரும்படி ஆபீஸில் ஏற்பாடுகள் செய்வதும் கண்டிப்பாய்கூடாது.

5. வேறொருடிபார்ட்மெண்டில்வேலைபார்த்துவருகிறஉத்தியோகஸ்தர்களை அந்த டிபார்ட்மெண்டு தலைமை அதிகாரியினிட வியக்தமான அனுமதியன்றியில் ஒருடிபார்டுமெண்டில் நியமிக்கவேகூடாது.

6. தாசீல் உத்தியோகத்திற்குத் தேவையான ஸ்பெஷல் டஸ்டு பரீக்ஷைகளை யாதொரு ஆஸாமியானவர் பாஸ்செய்திருந்த போதிலும், அடியிற்கண்ட உத்தியோகங்களில் யாதொன்றிலாவது அல்லது ஒன்றுக்குமேற்பட்ட வேலைகளிலாவது 3வருஷகாலம் வேலைபார்த்திருந்தாலொழிய அவர் அந்தஉத்தியோகத்துக்கு நியமிக்கப்படக்கூடாது:—சிரஸ்தேதார், ஸப்மாஜிஸ்டிரேட்டு அல்லது டிப்டி தாசீல்தார்; கலெக்டர் கெவர்னர் ஏஜெண்டு ஸப்கலெக்டர் ஹெட் அஸிஸ்டன்டு கலெக்டர் இவர்களிட ஆபீஸ்களின் ஹெட்கிளர்க்கு; மலையாளம் ஸ்பெஷல் அஸிஸ்டெண்டு கலெக்டர் ஆபீஸின் ஹெட்கிளர்க்கு; போலீஸ் இனிஸ்பெக்டர்; கலெக்டராபீஸின் மாஜிஸ்டீரியல் ஹெட்கிளர்க்கு; ஹெட் வர்னகுலர் கிளர்க்கு; ஸப்கலெக்டராபீஸின் 2–வது கிளர்க்கு; ரெவினியூ இனிஸ்பெக்டர்; ஸெட்டில்மெண்டு டிபார்ட்மென்டிலும் ஸர்வே டிபார்ட்மென்டாலுமுள்ள அடியில்கண்ட உத்தியோகஸ்தர்கள்—(ஸெட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டில்), டிப்டி டைரெக்டரிட அன்கவனென்டட் அஸிஸ்டன்டு பீல்ட் பார்டிகளின் (வயிலில்வேலைசெய்தும் வரும் பார்டிகள்) ஸூபர்வைஸர், பீல்ட் பார்டிகளின் இனிஸ்பெக்டர்கள்; (ஸர்வேயில் டிபார்ட்மெண்டில்), மானேஜர், ஸப் அஸிஸ்டென்டு, பௌன்டரி இனிஸ்பெக்டர்; ஸால்ட் டிபார்ட்மெண்டில் அஸிஸ்டென்டு இனிஸ்பெக்டர்கள்; மேஜிஸ்டீரியல் அதிகாரங்களைச் செலுத்திவரும் ஸீகஸ்டம்ஸ் ஸூபெரின்டன்டன்ட் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரானவர் (F. A.) யப்ஏ பரீக்ஷைபாஸ் செய்தவராக இருந்தால் மேற்சொன்ன உத்தியோகங்களில் ஏதாவது ஒன்றில் 2வருஷம் வேலைபார்த்து வந்திருந்தால் போதுமானது, பியே (B. A.) பாஸ் செய்தவராயிருந்தாலோ அப்படி ஒருவருஷம் வேலைபார்த்து இருந்தாலே போதும்.

263. அபராதங்கள்:—பலான குற்றத்திற்கு தண்டனை செய்யவேணுமென்ற எண்ணத்துடன் அபராதம் விதிக்கப்படுகிறது, பல சொற்ப அசிரத்தைகளுக்காக பல சொற்ப அபதாரங்கள் யாதொரு ஆஸாமிக்கு விதிக்கக்கூடாது, வேலையில் கவனம் செலுத்தாமல் யாதொருவன் எப்போதும் அசிரத்தையுள்ளவனாக இருந்தால் அப்பேர்ப்பட்டவரை ஸ்ஸ்பென்ஷன் செய்வது அல்லது ஹோதாவைக் குறைப்பதாவது இப்பேர்ப்பட்ட சிக்ஷை செய்வது அதியுக்தமாயிருக்கிறது. யாதொரு ரெவினியூ உத்தியோகஸ்தருக்கு வெகுசாய் 2 அல்லது 3 ரூபாய்க்கு மேற்பட்டு அபராதம் விதிக்கக்கூடாது,கலெக்டரானவர் போர்டாரிடமிருந்து பிரத்தியோகமாய் அனுமதிபெற்றுக்கொண்டிருந்தாலொழிய, 10 ரூபாய்க்குமேற்பட்டு ஒருபோதும் அபராதம் விதிக்கக்கூடாது. கிராம நவுக்கர்கள் விஷயத்திலும் ஷை அபராத விதியானது சம்பந்தப்பட்டது.

2. தாசீல்தார்களுக்கு ஸஸ்பென்ஷன்அல்லது அபராதம் சிக்ஷைவிதிப்பதைவிட அவர்கள் வேலைசெய்து வரும் மாதிரியை அடிக்கடிநேராக பரிசிலனை செய்துவருவது காரியசித்தியுள்ளதாயிருக்கிறது.

3. ம்ீ 1க்கு 10 ரூக்கு மேற்பட்ட சம்பள வருமானமுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு விதிக்கப்பட்டஎல்லாஅபராதங்களையும் கிராமநவுக்கர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதங்களையும் கண்டு 3 ம்ீத்திற் கொருதரம் ஒரு ஸ்டேட்மெண்டை குறித்த ஈமுனா பிரகாரம் தயாரித்து மேலாவிகளுக்கு அனுப்பவேண்டியது.

4. அப்ராதம் விதிக்கப்பட்டதை ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யக்கூடாது.

5. தாசில்தார்களும் டிப்டி தாசில்தார்களும் 1 ரூ வரையில் அபராதம் விதிக்க அதிகாரமுள்ளவர்கள்.

266. பர்தர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்கள்:—துர் நடத்தைக்காக சர்க்கார் உத்தியோகத்திலிருந்து பர்தர்ப்பு செய்யப்பட்டிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தரை இது விஷயமாய் கெவர்ண்மெண்டாரிட பிரத்தியேகமான அனுமதியை முன்னாடி பெற்றுக்கொண்டிருந்தாலொழிய சர்க்கார்ஆபீஸர்கள் தங்களிட ஆபீஸ்உத்தியோகத்தில் நியமிக்கக்கூடாது. அப்பேர்ப்பட்ட ஆஸாமிகள் பணவிஷயத்திலாவது கணக்குகள் விஷயத்திலாவது மோசடியாய் நடவடிக்கைகள் செய்து இருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் அவர்களை எப்போதும்வேலையில் நியமிக்கக்கூடாதென்று நீக்கிவிடுவதே அதியுக்தமாயிருக்கிறது.

2. உத்திரவுகளை அசிரத்தை செய்ததற்காவது, பலான வேலைக்கு லாயக்கற்றவர்கள் என்றகாரணத்தை முன்னிட்டாவது, துன்மார்க்கநடக்கை அல்லது பிரமாத குற்றமுள்ள நடக்கையை செய்ததாக குற்றம் சாட்டப் படாமல் ஏதோ சில ரா்ஜாங்கசௌகரியத்தைமுன்னிட்டாவதுவேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிற உத்தியோகஸ்தர் விஷயமானதுமேல் பிரகரணத்தில் கண்டநிர்ப்பந்தமானஉத்திரவில் சேராது. ஆகையால் பர்தர்ப்பு சிக்ஷைசெய்ய உத்திரவு தயாரிக்கும் போது எந்த காரணங்களை முன்னிட்டு அப்படி பர்தர்ப்பு செய்யப்படுகிறதோ அந்த காரணங்களை வியக்தமாய்க் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விஷயத்தில் கிரமமாய் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டியது.

267. ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சாக்ஷிகளாக கோரப் படுவது.—ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியாயஸ்தலங்களில் சாக்ஷிகளாக கோரலாம். அப்படி சாக்ஷி சொல்லப்போகும்போது வேலையின் பேரில் போயிருப்பதாக பாவித்து கிரமம்போல அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப் படும். அவரிடவேலையை ஆபீஸில் வேறொருவரைக்கொண்டு ஜாஸ்தி செலவில்லாமல் நடத்திக்கொள்ளவேண்டியது. ஆனால் தங்களிட ஸௌகரியங்களுக்கு அனுஸரணையாயிருக்கும்படி சாக்ஷிகளாக கோரப்படும்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்துகொள்ளாதிருக்க வேண்டிய விஷயத்தில் ஜாக்கிரதை செய்துகொள்ளவேண்டியது.

2. 1869-ஞு 3-வது சட்டப்பிரகாரம் ரிவினியூ டிபார்ட்மெண்டிவில்லாத வேறு உத்தியோகஸ்தர்களுக்கு ஸம்மன் அனுப்பவேண்டியிருந்தால் அந்த ஆபீஸ் தலைமை அதிகாரிக்கு கிரமமாக அதைப்பற்றி தெரிவிக்க வேண்டியது.

271. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வக்கீல்களாக வேலை செய்துவருவது:—கலெக்டர்கள் தங்களுக்குத் தெரியாமலும் தங்களிட அனுமதியன்றியிலும் தங்களிட கீழ் உத்தியோகஸ்தர்கள் வக்கீல்களாக வேலைபார்த்து வராமல் இருக்கும்படி செய்யவேண்டியது; அப்படி வக்கீலாக வேலைசெய்யும் பட்சத்தில் அதற்கு சிக்ஷை என்னவென்றால் சர்க்கார் ஸர்வீஸிலிருந்து உடனே பர்தர்ப்பு செய்யப்படுவேது தான்.

272. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மத்தியஸ்தம் செய்கிறவர் களாகயிருப்பது.—அடியிற்கண்ட இந்தியா கெவர்ண்மெண்டாரிட விதிகளுக்குட்பட்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மத்தியஸ்தம் செய்யும் வேலையை மேற்போட்டுக்கொள்ளலாம்:—(1) யாதொரு உத்தியோகஸ்தரானவர் தன்னிடநேர்மேலதிகாரியிட அனுமதியன்றியிலாவது, மத்தியஸ்தரைஏற்

படுத்த அதிகாரமுள்ள கோர்டாரால் (மத்தியஸ்தராக இருக்கும்படி) உத்திரவு செய்யப்பட்டாலன்றியலாவது யாதொரு விஷயத்தில் மத்தியஸ்தராக இருக்கக்கூடாது. (2) யாதொரு உத்தியோகஸ்தரிட ஜூடிஷல் (அதாவது நிதி செலுத்துகிற) அல்லது யெக்ஸிகுடிவ் (அதாவது ஸ்வயமாய் அதிகாரம் செலுத்தக்கூடிய) உத்தியோக முறைமையில் எவ்விதமாகவாவது தம்மிடத்தில் வரக்கூடிய யாதொரு விஷயத்தில் மத்தியஸ்தராக இருக்கக்கூடாது. (3) தகரார் செய்கிறவர்களிட கோரிக்கையின் பேரில் மத்தியஸ்தராக இருந்திருந்தால் அவர் யாதொரு பீஸூம் வாங்கிக்கொள்ளக்கூடாது. (4) நியாயஸ்தலத்தாரால் (கோர்டாரால்) நியமிக்கப்பட்டு மத்தியஸ்தம் வேலை பார்த்து வந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கோர்ட்டாரால் ஏற்படுத்தப் படக்கூடிய பீஸை வாங்கிக்கொள்ளலாம்.

273. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களால் சொத்துக்கள் விற்பனை முதலானது செய்யப்படுவது:—யாதொரு ஸர்க்கார் ஐரோப்பிய உத்தியோகஸ்தரானவர் யாதொரு ஜில்லாவைவிட்டு வெளியே போக ஹேஷ்யமில்லாமலிருக்கும் போது தன்னிட வீடு, பங்களா, யானை, குதிரை, வண்டி விலைபெறுமான இதர சொத்துக்களை சர்க்கார் ஸர்வீஸில் தாம் வேலைபார்த்து வருகிற ஜில்லாவின் எல்லைக்குள்ளாவது தன்னிட அதிகாரவரம்புக்குள்ளாவது இருக்கிற எந்த சுதேசிக்காவது விற்பனைசெய்துப் போட இஷ்டப்பட்டால் அவர் அந்த சங்கதியையும் ஸந்தர்ப்பங்களையும்பற்றியும் விற்பனைசெய்யவேண்டிய சொத்துக்கு என்ன விலைகொடுப்பதாகச் சொல்லப்படுகிறது என்பதைப்பற்றியும் கண்டெழுதி தன்னிட எண்ணங்களைப்பற்றி கெவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது. அப்படித் தெரிவிக்கப்பட்ட சங்கதியின் தாரதம்மியத்திற்கு தக்கபடி கெவர்ண்மெண்டார் உத்திரவு செய்வார்கள். இதே ஏற்பாடுகள் சொத்துக்களை வாங்குவதற்கும் சம்பந்தப்பட்டது.

2. யாதொரு சர்க்கார் ஐரோப்பிய உத்தியோகஸ்தரானவர் தாம் வேலைபார்த்துவருகிற ஜில்லாவை அல்லது இடத்தை ஸ்திரமாகவாவது திரும்பிவர நெடுங்காலம் பிடிக்கக்கூடியதாயிருக்கும் ஸந்தர்ப்பங்களிலாவது விட்டுப்போக இருந்தால் தன்னிட வீடு, பங்களா, யானை வண்டி குதிரைகள் முதலான விலைபெறுமான சொத்தை சுதேசிகளுக்கு விற்பனை செய்ய இஷ்டப்பட்டால் அவர் தன்னிட நேர் மேலதிகாரிக்குத் தன்னிட எண்ணத்தைத் தெரிவிக்கவேண்டியது, அந்த அதிகாரியானவர் அந்தப்படி பேரம்செய்ய உத்திரவு கொடுக்கலாமா, அல்லது பின்னும் உத்திரவுகளுக்காக அந்த விஷயத்தைப்பற்றி கெவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டியதா என்பதைப்பற்றி தம்மிடயுக்தானுஸாரம் நடக்கவேண்டியது.

3. யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தரானவர் தான் வேலேபார்த்து வந்த இடம் அல்லது ஜில்லாவைவிட்டுப் போவதின்பேரில் தன்னிட சாமான்களையும் வீட்டுசாமான்கள் ஜீவப்பிராணிகள் முதலானவைகளை விற்றுப் போட இஷ்டப்பட்டால், யாதொரு மேலதிகாரிக்கும் தெரிவிக்காமலே, அப்பேர்ப்பட்ட சொத்தின் ஜாபிதாக்களை பொதுஜனங்களுக்கு அனுப்பியாவது அல்லது அவற்றை பகிரங்கமாய் ஏலம்போட்டாவது விற்பனைசெய்ய அவருக்கு சர்வ சுதந்தரமுண்டு. செய்யவேண்டியதெல்லாங்கூடி என்னவென்றால், அந்த பேரமானது (நடவடிக்கையானது) அந்த இடத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பகிரங்கமானதாயிருக்கவேண்டியதே.

4. ஸிவில், மிலிடெரி, அன்கவனென்டட் முதலான எல்லாவித ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த விதிகள் சம்பந்தப்பட்டவை.

5. போர்டாரிட அதிகாரத்துக்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் கெவர்ன்மெண்டுக்கு அனுப்பப்படும் ரிபோர்ட்டுகள் போர்டார் துவாரா வரவேண்டியது.

276. ஸர்க்கர் உத்தியோகஸ்நர்களும் பொது ஜனங்களும்:— ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களால் நற்சாக்ஷிபத்திரங்களும் (testimonials) ஸ்தோத்திரப்பிரசங்கப் பத்திரிகைகளும் (address) பெற்றுக்கொள்ளப்படும் விஷயமாய் இந்தியா கெவர்ன்மெண்டாரால் அடியிற்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. யாதொரு கெவர்ன்மெண்டு அல்லது ராச்சிய பரிபாலனத்திற்குத் தலைமையாகிய அதிகாரியால் பிரசங்கப்பத்திரிகைகள் பெற்றுக்கொள்ளப்படும் விஷயத்திற்கு இந்தவிதிகள் சம்பந்தப்பட்டவைகளல்ல:—

(1.) இந்தவிதிகளில் வேறேவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற விஷயங்கள் நீங்கலாக, கவனென்டட் அல்லது அன்கவனென்டட் ஆக இருந்தாலும் எல்லா ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் எவ்விதமான ஸ்தோத்திர அல்லது உபசாரமுள்ள பிரசங்கப்பத்திரிகைகளைப் பெற்றுக்கொள்ளவாவது, எவ்வித நற்சாக்ஷிப்பத்திரங்களை அங்கீகரித்துக் கொள்ளவாவது தங்களுக்குகௌரதையாக நடத்தப்படுகிறபொது முறைமையான உபசரணைகள் அல்லது பொதுஜன சபைகளுக்குப் போகவாவது கூடாது. (2) ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்து (பென்ஷன்முதலானது பெற்று) நீங்கின உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் அவர்கள் உத்தியோகத்திலிருந்து நீங்கினவுடனே செய்யப்படுகிறதாயும் அவர்கள் ஸர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும்போது செய்த நடவடிக்கைகளை வாழ்த்துகிற தாத்பரியங் கொள்ளப்பட்டதாயுமான அம்மாதிரி பிரசன்னங்களையும் கெவர்ன்மெண்டார் வெறுக்கிறார்கள். (3) யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரிட சொந்த சினே

கிதர்கள் (இவர்களில் சிலர் அந்த உத்தியோகஸ்தரிட கீழ் உத்தியோகஸ்தர் களேயாக இருந்தபோதிலும்) அவர் ஸர்வீஸிலிருந்து நீங்கும்போதாவது அவர் வேலைபார்த்துவந்த இடம் அல்லது ஜில்லாவை விட்டுப்போகும்போ தாவது அவரிட சொந்த நடவடிக்கைகளைப்பற்றியாவது சர்க்கார் நடவடிக் கைகளைப்பற்றியாவது மரியாதையான உபசாரங்கள் சொல்லக்கூடாது என்ற தாத்பரியமல்ல; ஆனால் அப்பேர்ப்பட்ட சமயங்களில் நடத்தப்படும் நடவடிக் கைகளானவை வாஸ்தவ்யமாய் ப்ரைவேட்டாயும் ஏதோ ஒருவிதஒழுங்குபிர காரம் செய்யப்படாதவைகளாயும் இருக்கவேண்டியதென்று கோரப் படுகிறது.(4) யாதொருஉத்தியோகஸ்தரானவர்அவர்வேலைபார்த்துவந்தஇட த்தையாவது ஜில்லாவையாவது விட்டுப்போன பிற்பாடு அவர் அந்த இடத் தில் அல்லது ஜில்லாவில் இருந்தபோது அவரிட ஸர்க்கார் உத்தியோக முறைமையில் அவர் செய்த உதவிகளுக்காகவும் அவரால் சொல்லப்பட்ட புத்திமதிகளுக்காகவும் வந்தனங்கள் செய்வதாய் எழுதப்பட்ட யாதொரு பிரதேச கூட்டத்தாரிட தீர்மானப்பத்திரிகையை அந்த உத்தியோகஸ்தருக் கனுப்ப பிரதேச கெவர்ண்மெண்டாருக்கும் ராச்சியபரிபாலனத்தாருக்கும் அதிகாரமுண்டு. (5)வைத்தியஉத்தியோகஸ்தார்கள் எந்தஜனங்கள் அல்லது கூட்டத்தாருக்காவது வைத்தியம் பார்த்ததற்காக அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டால் அதைப்பெற்றுக்கொள்ளக்கூடாதென்று தடை செய் யப்படவில்லை ; ஆனால் வைத்திய உத்தியோகஸ்தர்கள் யாதொரு பொது ஜனங்களால் செய்யப்படும் ஸ்துதிப்பிரசங்கப்பத்திரிகைகளை பெற்றுக்கொள் வதற்கு முன்னாடியாக அது விஷயமாய் பிரதேச கெவர்ண்மெண்டார் அல் லது ராச்சியபரிபாலனத்தாரிட அனுமதியைப்பெற்றுக்கொள்ளவேண்டியது. (6) இந்த விதிகளை யாதாவது ஒரு பிரத்தியேகமான விஷயத்தில் விலக்கு செய்யவேண்டியது யுக்தமாக பிரதேசகெவர்ண்மெண்டார் அல்லது இராச் சியபரிபாலனத்தாருக்குத் தோன்றும் பக்ஷத்தில் அது விஷயமாய் முன்னாடி யாக இந்தியா கெவர்ண்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

2. முன்னாடியாக கலெக்டரிட அனுமதியைப்பெற்றுக்கொள்ளாமல்' சுதேச ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சத்திரங்கள் கட்டுவது முதலான பிரயோஜனங்களுக்காக சந்தாபணம் வசூல் செய்யக்கூடாது.

3. (Native chiefs) * சுதேசத்தலைவர்களிட மிருந்தும் மற்றவர்க ளிடமிருந்தும்வெகுமதியை கெவர்ண்மெண்டுஉத்தியோகஸ்தர்கள்அங்கீகரித்

---

* சுதேசத்தலைவரென்று இவ்விடத்தில் தாத்பரியபட்டவர்கள் ,யாரெ ன்றால், சுதேச ராஜாக்கள், பாளையகார் முதலானவர்கள்.

துக்கொள்ளும் விஷயமாய் தற்காலம் உளர்ஜிதத்திலுள்ள சட்டத்தின் விதிகளைச்சுருக்கமாய் அடியில்கண்டெழுதப்பட்டிருக்கிறது. இந்தியாகெவர்ண்மெண்டாரிட அனுமதியன்றியில் இந்த விதிகளை மீறி நடக்கக்கூடாது:—(1) இந்த விஷயமாய் சட்டத்தின் முக்கிய நிபந்தனைகளானவை, 13, ஜார்ஜ் III அத்தியாயம் 63, பிரிவுகள் 23, 24லும் 33 ஜார்ஜ் அத்தியாயம் 52. பிரிவுகள் 62, 63 லும், 3, 4, 2 வில்லியம் IV அத்தியாயம் 85, பிரிவு 76 லும் அடங்கியிருக்கின்றன (2) சுதேசத்தலைவர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் வெகுமதிகள் பெற்றுக்கொள்ளக்கூடாதென்ற விதியானது ஏதோ கொஞ்சம் புஷ்பங்கள் பழங்கள் முதலான சொற்பவிலை பெறுமான வஸ்துக்களைப்பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்டதல்ல, ஆனாலும் அப்பேர்ப்பட்ட சொற்ப வெகுமதிகளைக்கூட அங்கீகரித்துக்கொள்ளாமலிருக்க முயற்சி செய்யவேண்டியது. (3) சுதேசத்தலைவர்களுடன் கவர்னர்கள் (பங்காளதேசத்து) லெப்டினன்டு கவர்னர்கள், சீப்கம்மிஷனர்கள், கவர்னர் ஜெனரல் அவர்களிட ஏஜெண்டுகள் அல்லது பொதுவாய்ச்சொல்லுமிடத்து ராஜாங்க உத்தியோகஸ்தர்கள், இவர்கள் சம்பாஷணை செய்யும் போது வெகுமதிகளை கொடுக்கல் வாங்கல் செய்யும் விஷயத்தில் மேற்சொன்ன விதியானதுசம்பந்தப்படாது;அப்பேர்ப்பட்டசமயங்களில்சுதேசத்தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வெகுமதிகளை கெவர்ண்மெண்டு கஜானாவில் வைக்கப்பட்டு சர்க்கார் செலவில் பிரதிவெகுமதிகள் கொடுக்கப்படும். (4) வைத்திய உத்தியோகஸ்தர்கள் வைத்தியம் செய்வதற்காக நல்லெண்ணத்துடன் அவர்களுக்குக்கொடுக்கப்படும் வெகுமதிகளுக்கும் சம்பந்தப்படாது. (5) சுதேசியாகயிருந்தாலும் ஐரோப்பியனாகயிருந்தாலும் கவனென்டடாக இருந்தாலும் அன்கவனென்டடாக இருந்தாலும் எந்த டிபார்ட் மெண்டில் வேலைபார்த்து வந்தபோதிலும் கெவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் மேற்கண்ட நிர்ப்பந்த உத்திரவானது சம்பந்தப்பட்டது. (6) மனஸ்தாபத்தை உண்டாக்காமல் வெகுமதிகளைமுற்றிலும் மறுத்து விடக்கூடாமையாயிருந்தால் (அதாவது வெகுமதியைப்பெற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்வதால் மனஸ்தாபம் உண்டாகும் போலிருந்தால்) அப்பேர்ப்பட்ட விஷயத்தில் வெகுமதிகளை கெவர்ண்மெண்டார் வசம் ஒப்புவித்துப்போடவேண்டியது; இந்தவிதியை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்களிட வியக்தமான அனுமதியன்றியில், மீறி நடக்கவே கூடாது, அப்படிப்பட்ட அனுமதியானது ஏதோ சில விசேஷமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே கொடுக்கப்படும்.

4. கெவர்ண்மெண்டு ஸர்வீஸிலுள்ள உத்தியோகஸ்தர்கள் சமாசாரப் பத்திரிகைகளை அச்சிடும் விஷயமாய் சம்பந்தப்பட்டிருப்பதைப் பற்றி

இந்தியா கெவர்ண்மெண்டாரிட தீர்மானத்தை சுருக்கமாய் அடியில் கண்டெழுதப்பட்டிருக்கிறது;—(1) கெவர்ண்மெண்டு ஸர்வீஸிலுள்ள யாதொரு உத்தியோகஸ்தரும், தான் எந்த கெவர்ண்மெண்டாருக்குக் கீழ்ப்பட்டு வேலை பார்த்துவருகிறாரோ அந்தகெவர்ண்மெண்டாரிட அனுமதியை முன்னாடி பெற்றுக்கொள்ளாமல், யாதொரு சமாசாரப்பத்திரிகை அல்லது பிரசித்தப்பத்திரிகையின் தனி (Proprietor) சுதந்தரக்காரனாகவாவது கூட்டு சுதந்தரக்காரனாகவாவது இருக்கவாவது அல்லது யாதொரு சமாசாரப் பத்திரிகை அல்லது பிரசித்தப்பத்திரிகையை அச்சிடுவிக்கிறவர்களாகவாவது மேல்விசாரணை செய்துவருகிறவராகவாவது ஆகக்கூடாது. அப்பேர்ப்பட்ட அனுமதியும், ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபிக்காமல் வேறுவிதமான விஷயங்களை (உதாரணம்: கைத்தொழில்கள், சாஸ்திர ஞானங்கள் (Science) கல்வி விருத்திகளைப்பற்றி) பிரஸ்தாபம் செய்கிற சமாசாரப்பத்திரிகைகள் விஷயத்தில்மாத்திரமே கொடுக்கப்படும். கெவர்ண்மெண்டாருக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட அனுமதியான துரத்துசெய்யப்பட உட்பட்டதாகும். (2) கெவர்ண்மெண்டுஸர்வீஸிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பொதுவான சமாசாரப் பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்திவருகிறதற்கு யாதொரு தடையுமில்லை, ஆனால் மிதமாயும் நியாயமாயுமுள்ள சம்பாஷணைகள் செய்வதற்குட்பட்டேயிருக்க அவர்களிட நிலமையினால் அவர்கள் கடமைப்பட்டவர்களாகிறார்கள்: தவிரவும், தங்களிட உத்தியோக முறைமையில் தங்களுக்குத்தெரிந்திருக்கக்கூடியசமாசாரங்களையாவது அல்லதுதஸ்தாவேஜுகளையாவது, முன்னாடியாக கெவர்ண்மெண்டாரிட அனுமதியன்றியில் பிரசித்தம் செய்யக்கூடாது. இதுவரையில் அனேகவிஷயங்களில் இந்தவிதிகளானது உண்மையுடன் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிகளைமீறி நடந்தாலாவது அல்லது யாதொரு உத்தியோகஸ்தரானவர் சமாசாரப்பத்திரிகை அச்சிடப்படும் விஷயமாய் சம்பந்தம் வைத்துக்கொள்வதானது சர்க்கார் ரீதிகளுக்கு விரோதமானதாக இருப்பதாக கெவர்ண்மெண்டார் அபிப்பிராயப்படும் பட்சத்திலாவது அப்பேர்ப்பட்ட விஷயங்களில் சந்தா செலுத்துவதற்காக அவருக்குள்ள சுதந்தரமானது ரத்துசெய்யப்படும். (3) சமாசாரப்பத்திரிகை பிரசுரம் விஷயமாய் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்டிருப்பது கெவர்ண்மெண்டு வேலைகளை செய்துவர பொருந்தி யிருக்கிறதாவென்ற விஷயமாய் சந்தேகம் உண்டாகும்பட்சத்தில் அதுவிஷயத்தை இந்தியா கெவர்ண்மெண்டார் தீர்ப்பார்கள். (4) இந்த விஷயமாய் இராணுவங்களுக்கு இப்போது சம்பந்தப்பட்டு வருகிற சட்டங்களின் நிபந்தனைகளை இந்த தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட யாதொரு விதியும் ரத்துசெய்வதாக தாத்பரியமல்ல.

XIX. (19) - வது அதிகாரம்.

நாலுவிதமானவை.

277. காட்டுமிருகங்களைக் கொல்வதற்காக வெகுமதிகொடுப்பது:—காட்டுமிருகங்களைக் கொல்வதற்காக அனுபந்தத்தில்கண்ட வீதங்கள்பிரகாரமும் அடியிற்கண்ட ஷரத்துகளுக்குட்பட்டும் வெகுமதி கொடுக்க கலெக்டர்களுக்கும் டிவிஷனல்ஆபீஸர்களுக்கும் அதிகாரமுண்டு; ஆகிலும் டிவிஷனல்ஆபீஸர்களிடம் ஆஜராய் வெகுமதிக்காகபாத்தியதைகளைச் சொல்லிக்கொள்வதற்கு சிக்காரிகளுக்குதுலை தூரமாயிருப்பதை முன்னிட்டுக்கூடாமையாயிருப்பதாக அபிப்பிராயப்பட்டால், பிரதிகேஸிலும் முன்னடியாகப் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய போர்டாரிடஅனுமதிக்குட்பட்டுதாசில்தார்களுக்கும் ஸ்வயஅதிகாரமுள்ள டிப்டிதாசில்தார்களுக்கும் இந்த உத்திரவின்படிகலெக்டர் அதிகாரம் கொடுக்கலாம். எல்லா கேஸ்களிலும் சிக்காரிகள் தங்களுக்குச்சேரவேண்டிய இனும்பாத்தியதைகளைப்பற்றி தாசில்தாரிடத்திலும் டிப்டி தாசில்தாரிடத்திலும் சொல்லிக்கொள்ள வேண்டியது. அப்படி அவர்கள்சொல்லிக் கொள்வதின்பேரில் மேலதிகாரிகளுக்கு அவர்கள் அதைத் தெரியப்படுத்த வேண்டியது.

2. யாதொரு பிரத்தியேகமான மிருகத்தைக் கொல்வதற்காக பிரத்யேகமான வெகுமதி கொடுக்கவேண்டியது அவசியமாய்த் தோன்றும்பட்சத்தில் அது விஷயமாய் முன்னடி கெவர்ண்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

3. அனுபந்தத்தில்கண்ட வீதங்கள்உயர்ந்தபட்சம் வீதங்கள் என்றும் அந்த ரேட்டு பிரகாரமாகவே எல்லாவிஷயங்களிலும் கொடுக்கப்படவேண்டுமென்கிற அவசியம் கிடையாதென்றும் தெரிந்து கொள்ளவேண்டியது. வெகுமதி கொடுக்க உத்திரவுசெய்யும் உத்தியோகஸ்தர்கள் பிரதி கேஸிலும் நேர்ந்த அபாயம் கஷ்டம் இவைகளை ஆலோசித்து அதற்கு அனுஸரணையாய் வெகுமானத்துகையை இவ்வளவு என்று ஏற்பாடு செய்யவேண்டியது. குட்டிகளுக்காவது அல்லது யாதொரு மிருகத்தைக் கொல்வதால் யாதொரு கஷ்டமாவது அபாயமாவது நேரிடாமலிருக்கிற கேஸ்களிலாவது உயர்ந்தபட்சம் துகை வெகுமானம் கொடுக்கப்படக்கூடாது. ஆகிலும், எந்த பிரதேசத்தில்மனுஷியர்களையும் ஆடுமாடுகளையும் விசேஷித்துக் கொல்லுகிறபுலி

கள் சிவிங்கிகள் இருக்கின்றனவோ அப்பேர்ப்பட்ட இடங்களில் அந்த மிருகங்களைக்கொல்லும் விஷயங்களில் உத்தியோகஸ்தர்கள் தாராளமான வெகுமதிகொடுத்துவரவேண்டும்.

4. யானைகளைக்கொன்ற கேஸ்களில் தவிர எந்தமிருகத்திற்காக வெகுமதி கேட்கப்படுகின்றதோ அந்த பிராணியினிட மண்டையோடு பற்கள் பதனிட்டாதத்தோல் நகங்கள் இவைகளையும், சம்பந்தப்பட்ட கிராமாதிகாரியிடமிருந்து தன்னிட கிராமஎல்லைக்குள் பிரஸ்தாப பிராணியானது கொல்லப்பட்டதென்று கண்டெழுதப்பட்ட ஒரு ஸர்டிபிகேட்டையும் ஆஜர்படுத்தினலொழிய வெகுமானம் கொடுக்கதங்களுக்கு அதிகாரமுண்டென்று உத்தியோகஸ்தர்கள் தாத்பரியப் படக்கூடாது, எந்த தேதியில் பலான பிராணியானது கொல்லப்பட்டதோ அதையும் ஸர்டிபிகேட்டில் கண்டெழுத வேண்டியது. ஏஜென்ஸி* பிரதேசங்களாயிருக்கும் விஷயத்தில் கிராமநவுக்கரிட ஸர்டிபிகேட்டு அவசியமில்லையென்று தவிர்த்து விடலாம்; இவிடங்களில் வெகுமானம் கொடுக்கும் அதிகாரிகள் வெகுமானத்துக்காக கொண்டாடப்படும் பாத்தியதை நிஜமானதென்று தங்களுக்கு ரொம்பவும் திருப்திகரமாய் தெரிந்துகொள்ளவேண்டிய வகையின்னதென்று ஆலோசித்துத்தெரிந்துக்கொள்ள வேண்டியது.

5. மண்டை ஒட்டையும் தோல்களையும் அடியிற்கண்ட மாதிரியாக பைசல் செய்துப் போடவேண்டியது:—வெகுமானம் கொடுக்கப்பட்டவுடனே பணம் பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தர் முன்பாக மண்டை ஒட்டை உடைத்துப்போடவேண்டியது; பணம் பட்டுவாடா செய்ததற்கு அத்தாக்ஷிப்பத்திரமாக தோலை ஜில்லா கஜானுவுக்கு அனுப்பிவிடவேண்டியது; பணம் பட்டுவாடா செய்யப்படுமுன்பாக தாம் நேராய் அதை பரிசீலனை செய்ததாக பட்டுவாடா செய்யும் உத்தியோகஸ்தர் ஒரு ஸர்டிபிகேட்டு யெழுதி அந்த ஸர்டிபிகேட்டையும் ஷை தோலுடன் அனுப்பவேண்டியது.

மேற்கண்டபடி அனுப்பப்பட்ட தோல்களையெல்லாம் பரிசீலனை செய்யவும் அவைகளுக்கு முன்னுடியாக வெகுமானம் கொடுக்கப்படயில்லை என்று கண்டறியவும் கஜானு டிப்டிகலெக்டர் உத்திரவாதியாக்கப்படுவார்; அப்படி பரிசீலனை செய்யப்பட்டு அவைகள் அத்தாக்ஷிபத்திரங்களாக (வவுச்சர்களாக) பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அந்தத்தோல்களிலெல்லாம் ஒரு அடையாளம் போடவேண்டும், இரண்டாம் தடவை மறுபடியும்

---

*கெஞ்சம் விசாகப்பட்டணம் ஜில்லாக்களுக்கு ஏஜென்ஸி பிரதேசங்களென்று பெயர்.

அவைகள் ஆஜர்ப்படுத்தப்படாமலிருக்கும்பொருட்டு எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரே விதமான அடையாளமாக இருக்கவேண்டியது,—அதாவது தோலின் நெடுகே வாலின் அடியில் திரிகோணவடிவின் இரண்டு பக்கங்களாக இருக்கிறப்போல் ஒரு அங்குல உளியால் இரண்டு வெட்டுக்கள் :— நகங்களை தோலிலிருந்து பெயர்த்துவிட வேண்டியது.

இதர தேசத்து தோல்கள் இறக்குமதி செய்யப்படுகிறதாக அனுமானிக்கக்கூடிய கரையோரம் ஜில்லாக்களில் தோல்களை பரிசீலனை செய்யும் விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதையெடுத்துக்கொள்ளவேண்டியது; அவசியமானல் தாசீல்தாரையாவது டிப்டி தாசீல்தாரையாவது அந்தந்த இடத்திற்குப்போய் விசாரணை செய்யும்படி உத்திரவு செய்ய வேண்டியது.

மண்டை ஓடு தோல் இவைகள் ஆஜர் செய்யப்படக்கூடாத ஏதோ சில ஸ்பெஷல் கேஸ்களில், (அப்பேர்ப்பட்ட கேஸுக்கு உதாரணம்—தோல்களை நரபலி அல்லது ம்மாம்ஸாதிகளைப்போல உபயோகித்துக்கொள்ளும் காட்டுஜனங்கள் விஷயத்தில்), வெகுமானத்துக்குள்ள பாத்தியதையானது வாஸ்தவமானதென்று தாங்கள் நேராய் திருப்திகரமாய் விசாரணைசெய்து தெரிந்து கொண்டமேல் தோலும் மண்டை ஓடும் ஆஜர் செய்யப்படாமலே வெகுமானம் கொடுக்க கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. மிருகத்தை கொல்லுகிறவன் மண்டை ஓட்டையும் தோலையும் வெற்றி அடையாளமாக வைத்துக்கொள்ள இஷ்டப்படுகிற யேதோ சில அபூர்வ கேஸ்களில் மண்டை ஓடு தோல்கள் ஆஜர்ப்படுத்தவேணுமென்கிற கட்டாயம் இல்லாமலே வெகுமானம் பட்டுவாடா செய்ய உத்திரவு செய்யலாம்; அப்பேர்ப்பட்ட கேஸ்களில் வெகுமானத்திலிருந்து தோலினிட மதிப்புத்துகையை கழித்துவிடவேண்டியது.

6. குறிப்பிட்ட பலான ஒரு பிராணியைக்கொல்ல ஸ்பெஷல் வெகுமானம் கொடுக்கும்படி உத்திரவு செய்யப்படும் விஷயத்தில், எந்த மிருகத்திற்காக ஸ்பெஷல் வெகுமானம் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டதோ அதே மிருகத்துக்குத்தான் இப்போது பட்டுவாடா செய்யப்பட வேண்டிய விஷயத்தில் முக்கியமாய் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டியது.

7. மனிதர்களைக் கொல்கின்றனவென்ருவது அல்லது விசேஷித்து திரிந்துக்கொண்டு சாகுபடிகளை அழித்துக்கொண்டு வருகின்றனவென்ருவது ஏற்படும் யானைகளுக்காக குறிப்பிட்டு வெகுமானம் கொடுக்கப்படும் என்று முன்னுடியாகத்தெரிவித்திருக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் தவிர யானைகளைக்கொல்வதற்காக அதிகாரிகள் வெகுமதிகள் கொடுக்கக்கூடாது. ஆனாலும், மேலே குறிப்பிட்டுச்சொல்லப்பட்ட யானைகள் ஏதாவது ஒரு

இடத்திலேயே சஞ்சரித்து குடிகொண்டிருக்கிறதென்று தெரியவந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களில் வெகுமானம் கொடுக்கவேண்டியது கலெக்டர்களிடகடமை.

8. இந்தவிதிகளை அப்போதைக்கப்போது பிரசுரம் செய்துவரவேண்டியது, சமயம்நேரும்போது இந்தவிதிகளை சிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட இன்னுமற்றவர்களுக்கும் வாய்மொழியாய் விவரித்துச்சொல்லவேண்டியது, இந்த உத்திரவு பிரகாரம் டிவிஷனல் ஆபீஸர்கள் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் வெகுமானங்களை (காலதாமதம்நேரிடவொட்டாமல்) உடனுக்குடனே கொடுப்பிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் டிவிஷனல் ஆபீஸர்களுக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்தவேண்டியது.

காட்டுமிருகங்களை கொல்வதற்காக வெகுமதி கொடுப்பது.

ஜில்லாக்கள்.	புலி.	சிவிங்கி சிறுத்தை சித்தா.	கரடி.
	ரூபா.	ரூபா.	ரூபா.
விசாகப்பட்டணம்.	100	25	5
தென்கன்னடம் ... மலையாளம் ... ... கோதாவரி	70	25	5
கடப்பை ... ... சேலம்	50	25	5
மற்ற ஜில்லாக்கள்	35	25	5

278. யானையைச்சுடுதல்;—யானைகளைச் சுடுவதற்காக தனித்தனி லைஸென்ஸ் கொடுக்கும்படி அனுமதிசெய்யவேண்டிய அதிகாரத்தை கெவர்ண்மெண்டார் மாத்திரமே வகித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விண்ணப்பங்கள் கொடுத்துக்கொள்ளப்பட்டால் அவைகளை கலெக்டர்கள் பெற்றுக்கொண்டு பப்ளிக் டிபார்ட்மெண்டில் கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டியது. துஷ்டத்தனம் செய்யாத யானைகளைச் சுடுவதற்கு (அவைகள் அதிகமாயிருக்கிறபடியால் அபாயகரமானதென்று தெரிவிக்கப்பட்டாலொழிய) அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

279. பேவார்ஸ் சொத்து:—ஸ்தாபரசொத்தாயிருந்தாயிருந்தாலும் ஜங்கமசொத்தாயிருந்தாலும், அதற்கு நியாயமான சொந்தக்காரன் இல்லாமற்போனால் அது இராஜாங்கத்தாருக்குச் சொந்தமாகும்.

2. முபஸலிலுள்ள (வெளிஜில்லாக்களிலுள்ள) ஹிந்துக்கள், மஹம்மதியர்கள், இன்னும் மற்றவர்கள் ஸந்தானம் இல்லாமல் இறந்துபோயிருந்து அவர்கள் வைத்துவிட்டுப் போன ஜங்கமசொத்துகளுக்கு பாத்தியஸ்தர்கள் இல்லாமல் இருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பைஸல்செய்யும் விஷயத்தில் அனுஸரிக்கவேண்டிய நடவடிக்கையானது 1802 ஸூ 3-வது சீர்திருத்தசட்டம், 16-வது பிரிவு, 7-வது வாக்கியத்தில் கண்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டானவர் அப்பேர்ப்பட்ட விஷயத்தைப்பற்றி ஸப்ஜெட்ஜுக்கு (ஜில்லாவில் ஸ்ப்ஜெட்ஜ் இல்லாமற்போனால் டிஸ்டிரிக்ட்டு ஜெட்ஜுக்கு) தெரிவித்துவிட்டு கலெக்டருக்கும் அதைப்பற்றி தெரிவிக்கவேண்டியது. ஸப்ஜெட்ஜ் அல்லது டிஸ்டிரிக்ட் ஜெட்ஜ்முன்பாக அந்த சொத்துக்கு பாத்தியதை உண்டென்று இப்பால் யாராவது சொல்லிக்கொண்டால், அப்படி சொல்லிக்கொள்ளப்பட்ட பாத்தியதையானது ஆதரவற்றவையென்று நம்ப ஹேதுயிருந்தால், கலெக்டரானவர் அந்த கேஸைபோய் கவனித்து கெவர்ண்மெண்டாருக்குள்ள பாத்தியதைகளை கோர்டார்முன்பாகச் சொல்லிக்கொள்ள ஏற்பாடுசெய்யவேண்டியது. ஐரோப்பிய இங்கிலீஷ் குடிகளாலும் இந்தியன் வார்ஸ் பாத்தியதை சட்டம் சம்பந்தப்படுகிற மற்ற ஜனங்களாலும் வைத்துவிடப்பட்டுப்போன சொத்தானது அட்மினிஸ்டிரேடரால் வசப்படுத்திக்கொள்ளப்படுகிறது. சென்னைப்பட்டணம் டவுனில் ஸந்தானமில்லாமல் இறந்துபோகிறவர்களிட அசையும் பொருள் சொத்தானது மதிப்பில் ரூ. 200 க்கு மேற்படாததாயிருந்தால்போலீசாரால் வசப்படுத்திக்கொள்ளப்பட்டு 1867 ஸூ த்திய 8-வது சட்டமாகிய மதராஸ் போலீஸ் ஆக்டின் 76, 77-வது பிரிவுகளை அனுஸ்ரித்து பாத்தியதை ஸ்தாபித்திருக்கிறவர்களுக்கு போலீஸ் கம்மிஷனர் உத்திரவு பிரகாரம் ஒப்புவித்து விடப்படுகிறது.

3. ரஸ்தாக்கள் பொதுவழிகள் முதலான இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சொத்துக்களுக்கு சொந்தக்கார் இன்னாரென்று தெரியாமற்போனால் அந்தசொத்தை போலீஸ்தார் தங்கள்வசமாக்கிக்கொண்டு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டினிட உத்திரவுகள் பிரகாரம் பைசல் செய்யவேண்டியது. அந்த சொத்துக்கு பாத்தியஸ்தர்கள் இருந்தால் அவர்கள் தங்களுக்குள்ள பாத்தியதைகளை மூன்று மாதத்திற்குள் ஆஜராய் சொல்லிக்கொள்ளும்படி ஒரு நோட்டீஸ் பிரசுரம் செய்ய வேண்டியது. யாராலும் பாத்தியதைகள் சொல்லிக்கொள்ளப் படாமற்போனாலாவது அல்லது சொல்லிக்கொள்ளப் பட்ட பாத்தியதைகள் ஸ்தாபிக்கப்படாமற்போனாலாவது அப்பேர்ப்பட்ட, சொத்தை பகிரங்கமானஏலத்தில் விற்றுவிட்டு வித்துமுதல் பணத்தை கெவர்ன்மெண்டாருக்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டியது; சொந்தக்காரர்களாவது அவர்களிட சுதந்தரவாளிகளாவது தங்களுக்கு பாத்தியதை உண்டென்று எப்போதாவது சொல்லி அதை ருஜூப்பித்தால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்த சொத்தைத் திருப்பிக்கொடுக்க கெவர்ன்மெண்டாருக்கு ஸர்வ சுதந்திரமுண்டு.

4. 1817 ௵ 7-வது சீர்திருத்தச்சட்டத்தின் 6, 7, 8 பிரிவுகளின் நிபந்தனைகள் பிரகாரம் ஸ்தாவர சொத்துக்கள் கெவர்ன்மெண்டாரைச் சேர்ந்து போனவைகளை யெல்லாம் மேல்விசாரணை செய்ய வேண்டியதானது போர்டாரிடத்தில் வகிக்கப்பட்டிருக்கிறது; அப்பேர்ப்பட்ட விதமான யாதொரு சொத்தைப்பற்றி "அந்தந்த இடத்திலுள்ள காரியஸ்தர்கள் மூலமாய்" பூரா சமாசாரமும் தாங்கள் தெரிந்துகொண்டு தங்கள் அபிப்பிராயத்தில், சர்க்கார் பட்சமாக அந்த சொத்தைவிற்று விடவேண்டியதா, அல்லது வேறே எந்த விதமாய் அதைப்பைஸல் செய்யவேண்டியது என்றும் கெவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது. அந்தந்த இடத்திலுள்ள எக்ஸ்அபிஷியோ காரியஸ்தராயிருக்கிற (அதாவது அப்படி காரியஸ்தராய் இருப்பதற்காக அவருக்கு பிரத்தியேகமான சம்பளம் கிடையாது) கலெக்டரானவர் வார்ஸ்தார் இல்லாத காரணத்தால் சர்க்காரைச் சேரவேண்டிய சொத்துக்களை வசப்படுத்தி அந்த சொத்துக்கு பாத்தியஸ்தர் யாராவதிருந்தால் அவர்கள் தங்களிட பாத்தியதைகளைச் சொல்லிக்கொள்ளவேண்டியதென்று தெரியப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டு பிற்பாடு அந்த சங்கதியைப்பற்றி போர்டாரிட உத்திரவுகளுக்காகத் தெரிவிக்கவேண்டியது. வாஸ்தவ்யமாய் அந்த சொத்தை தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற யாதொருவனால் கலெக்டரிட நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டால் கலெக்டரானவர் அந்த சொத்தை வசப்படுத்திக் கொள்வதை தவிர்த்துவிட்டு கெவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதையை

ஸ்தாபிப்பதற்காக வியாச்சியம் தொடர்வது சரியாயிருக்குமா என்பதைப்பற்றி தம்மிட தாத்பரியம் என்னமோ அதைக்கண்டும் அந்த ஸந்தர்ப்பங்களைப்பற்றியும் ரிபோர்ட் செய்யவேண்டியது. சொத்துக்கு பாத்தியஸ்தர்கள் இருந்தால் தங்கள் பாத்தியதைகளை வந்து சொல்லிக்கொள்ளும்படி பிறப்பிக்கப்பட்ட நோடீஸானது 6 மீ காலம் வரையில் பகிரங்கமாக இருக்க வேண்டியது. லிமிடேஷன் ஆக்டின் நிபந்தனைகள் பிரகாரம் வார்ஸ்தார் இல்லாமல் ஸர்க்காரைச் சேர்ந்துபோன ஸ்தாவரசொத்தானது 12 வருஷம் கெவர்ண்மெண்டார் வசத்தில் இருந்தாகிற வரையில் சாதாரணமாய் விற்பனை செய்யப்படாது. சொத்தின்மதிப்பு 50 ரூக்கு மேற்படாததாயிருந்தால் கெவர்ண்மெண்டார் தங்களுக்குத் தெரிவிக்காமலே அப்பேர்ப்பட்ட வார்ஸ்தாரில்லாத காரணத்தினால் ஸர்க்காரைச் சேரவேண்டிய விஷயங்களை பைஸல் செய்யும்படி போர்டாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கேஸ்களைப்பற்றி கெவர்ண்மெண்டாருக்குத் தெரியும்பொருட்டு வருஷவாரியில் அவைகளின் விபரங்கண்ட ஒருஸ்டேட்மெண்டை கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டியது. யாதொரு சொத்தானது வாஸ்தாரில்லாத காரணத்தினால் கெவர்ண்மெண்டாரைச்சேர்ந்திருக்கவேண்டியதா யிருந்து (யாதொருவராலாவது) நியாயவிரோதமாய் வசப்படுத்திக்கொள்ளப்பட்டு அதுவிஷயத்தைப்பற்றி (ஸர்க்காருக்கு) யாதாவது ஒரு பொது மனுஷியன் தெரிவிக்கும்பட்சத்தில் அப்பேர்ப்பட்ட சொத்தினிட மதிப்பில் 100 த்துக்கு 10 வீதம் அப்படி தெரியப்படுத்துகிறவனுக்கு வெகுமதி கொடுக்கப்படும். ஆகிலும் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றி கெவர்ண்மெண்டாரிட உத்திரவுகளுக்காகத் தெரிவிக்கவேண்டியது.

5. 1865 ஞூ-த்திய ஆக்டாகிய இந்தியன் வார்ஸ்பாத்தியதை ஆக்டு சம்பந்தப்பட்ட துர்பீஜ ஜனங்கள் ஸந்தானமில்லாமல் இறந்துபோய் அவர்களிட ஸ்தாபர சொத்துக்களானவை சன்மார்க்கமாய்ப் பிறந்த பந்துக்கள் அவர்களுக்கு இல்லாத காரணத்தால் கெவர்ண்மெண்டாரைச் சேர்ந்துபோனால், அந்த சொத்திலிருந்து நேரிட்ட செலவுகளையும் அடியில் கண்டதாமாஷா பிரகாரம் ராஜாங்கத்துக்கு ஒரு பாகமும் கழித்து மீதியை துர்பீஜமில்லாதவர்களாயிருந்திருந்தால் சட்டப்பிரகாரம் அந்த ஆஸ்திக்கு பாத்தியஸ்தர்களாயிருந்திருக்கக்கூடிய ஜனங்களுக்கு இங்கிலீஷ்கார் வழக்கமாதிரி கொடுக்கப்படும். ராஜாங்கத்தாருக்குச் சேரவேண்டிய பாகமானது எவ்வளவென்றால், மீதி துகையானது ரூ 5000க்குக் குறைந்ததாக இருந்தால் 10ல் 1; ரூ 5000த்துக்கும் ரூ 10,000 மத்தியாயிருந்தால் 8ல் 1; ரூ 10,000 த்துக்கும் ரூ 50,000 த்துக்கு மத்தியாயிருந்தால் 6ல் 1; ரூ 50,000த்துக்கும் ரூ 1,00,000 மத்தியமாக இருந்தால் 5ல்1; ரூ 1,00,000 த்துக்கு மேற்பட்டதாய் இருந்தால் 4ல் 1; ஆகிலும், இறந்து போனவன்

தன்னிட எண்ணங்களை செல்லவழங்காத மரணசாதன தஸ்தாவேஜில் வியக்தமாய்த்தெரிவித்திருந்தால் அந்த சாஸனம் அங்கீகரித்துக்கொள்ளப் படுகிறது. யாதொரு துர்பீஜஙபரிட தகப்பனுணவன் பெற்ருேரிட கடமையை நிறைவேற்ருமலிருந்திருந்தால் சட்டப்பிரகாரம் அனுஸரிக் கப்படும் விதியை மீறி தாயாருக்கும் அவளுடைய பந்துக்களுக்கும் மேலானபாத்தியதை உண்டென்று ஏற்படுத்தப்படுகிறது.

6. ஹிந்துக்கள், மஹம்மதியர்கள், இந்தியன் வார்ஸ்பாத்தியதை ஆக்டு சம்பந்தப்படாத மற்றவர்களுக்குச் சொந்தமாயிருந்திருக்கக் கூடிய ஆஸ்திகள் வார்ஸ்தாரில்லாத காரணத்தினுல் சர்க்காரைச்சேர்ந்து போகிற விஷயங்களில், யாராவது ஒருவர் துர்பீஜமாயில்லாதிருந்திருந்தால் அந்த சொத்துக்கு வார்ஸ்பாத்தியஸ்தராகக்கூடுமோயிருந்திருந்தாலாவது அல்லது ஆலோசனை செய்யப்படுவதற்கு நியாயமான பாத்தியதை யில்லாமற்போன போதிலும் எந்த காரணத்தை முன்னிட்டாவது கிரமமானபாத்தியதை யிருக்கிறவராயிருந்தால் அப்பேர்ப்பட்டவர்களிட பாத்தியதைகளை பிரதேச கெவர்ண்மெண்டார் தயாளமான நோக்கங்களுடன் நடத்த வேண்டிய தென்று இந்தியா கெவர்ண்மெண்டார் விதித்திருக்கிருர்கள். வார்ஸ்தா ரில்லாத காரணத்தினுல் சர்க்காரைச்சேர்ந்துபோகிற ஆஸ்திகள் அல்லது சொத்துமதிப்பில் ரூ 1000 க்கு மேற்படாததாயிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றி முன்னுடியாக இந்தியா கெவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்காமலே பிரதேச கெவர்ண்மெண்டார் பைசல் செய்யலாம்; ஆகி லும் அப்படி பைஸல் செய்யப்பட்ட விஷயங்களைப்பற்றி வருஷவாரியில் ஒரு ஸ்டேட்மெண்டு தயார்செய்து இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டியது. சொத்தின் மதிப்பானது ரூ 1000 த்துக்கு மேற்பட் டிருந்தால் அப்பேர்ப்பட்ட விஷயத்தைப்பற்றி இந்தியா கெவர்ண்மெண் டாரிட உத்திரவுகளுக்காகத் தெரிவிக்கவேண்டியது.

7. மலையாளத்தில், மருமகட்டாயம்(லா)சட்டத்திற்குட்பட்ட ஜனங் களிட ஆஸ்திகள் நியாயமான வார்ஸ்தாரில்லாத காரணத்தால் ஸர்க்காரைச் சேர்ந்துபோகிற விஷயங்களிலெல்லாம், அந்த ஆஸ்தியின் மதிப்பு துகையி லிருந்து இறந்துபோன சொந்தக்காரனிட கடன்களை தீர்த்து அவனிட கர்மகாரியங்களுக்காக பிடித்த செலவைக்கழித்து மீதிமதிப்புத்துகை ரூ 500 க்கு மேற்படாததாயிருந்தால் அப்பேர்ப்பட்ட ஆஸ்தியை சுபாவமாயுள்ள வார்ஸ்தார்களுக்குக் கொடுத்துவிடும்படி கெவர்ண்மெண்டார் போர்டா ருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிருர்கள். ஆஸ்தியினிட மதிப்பானது ரூ 500 க்கு மேற்பட்டால், அந்தவிஷயத்தைப்பற்றி கெவர்ண்மெண்டாரிட உத்தி ரவுகளுக்காக ரிபோர்ட்டுசெய்யவேண்டியது

8. மலையாளத்தில் கெவர்ண்மெண்டாரைச் சேர்ந்துபோய்விட்ட நிலங்களின் ஜென்மம் பாத்தியதையானது கெவர்ண்மெண்டு தரப்பில் விற்கப்பட்டால் வித்து முதல்பணத்தில் 100த்துக்கு 10வீதம் தொகையை ரஸ்தாக்கள், வாராவதிகள் முதலாகிய விருத்திசெய்துகொள்ளும்பொருட்டு செலவு செய்யப்படுகிறது.

9. கடலிலிருந்து எடுக்கப்பட்ட சிற்றடிப்பண்டங்களுக்கு பாத்தியதைகள் சொல்லிக்கொள்ளப்பட்டால் அவைகளை 1875ஞூ 12-வது சட்டம் 44-வது பிரிவுபிரகாரமும் 1880ஞூ 7-வது ஆக்டு 71-79 பிரிவுகள் பிரகாரமும் பைஸல் செய்யப்படும்; புதையல்* அகப்பட்டிருந்து அதற்கு பாத்தியஸ்தர்கள் ஏற்பட்டால் அவர்களிட பாத்தியதைகளை 1878 ஞூத்திய 6-வது சட்டத்தையும் 10-9-78 ல் ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற விதிகளையும் அனுஸரித்து பைஸல்செய்யப்படும்.

10. கெவர்ண்மெண்டாருக்கு தீர்வை செலுத்திவருகிற ஸ்தாபரசொத்தானது(1882ஞூத்திய 10-வது ஆக்டாகிய)க்ரிமினல் புரொஸிஜர் கோட் 88-வது பிரிவை அனுஸரித்து ஜப்திசெய்யப்பட்டிருந்தால் அந்த சொத்தை கலெக்டர் தம் வசப்படுத்திக்கொண்டு எந்தகோர்ட்டாரிட கோரிக்கையின்பேரில் ஜப்தி செய்யப்பட்டதோ அந்த கோர்ட்டாரிட உத்திரவின்பேரில் விற்றுவிடவேண்டியது.

11. வார்ஸ்தாரில்லாத காரணத்தால் கெவர்ண்மெண்டாரைச்சேர்ந்துபோயாவது, அல்லது பினல்கோட்முலானதசட்டப்பிரகாரம்† இழந்துபோய் கெவர்ண்மெண்டாரைச் சேர்ந்து போயாவதிருக்கப்பட்ட சொத்தானது கெவர்ண்மெண்டு நிலங்களை பராதீனப்படுத்தும் விஷயமாய் பிரதேச கெவர்ண்மெண்டாருக்குள்ள அதிகாரத்தையும் நிபந்தனைகளையும் விவரித்து இந்தியாகெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்குட்பட்டது.

281. **வித்தியாவிஷயமான டிபார்ட்மெண்டு**:—ரெவினியூ ஆபீஸர்கள் பலாத்காரமான முயற்சிகளை நாடாமலே, தங்களில் வித்தியாப்பியாசம் செய்ய வாஞ்சையை விர்த்தி செய்யவேண்டியவிஷயத்தில் தங்களுக்குள்ள செல்வாக்கை செலுத்தி பிரயோஜனம் செய்விக்க அனேகசமயங்க

* இரண்டாவது பாகத்தில் பார்க்க.

† உதாரணம். மஹாராணி அவர்களுக்கு விரோதமாய், கலகம் சண்டைசெய்ய எத்தனிக்கிற ஒருவனை தூக்கில் போட்டு விடும்படிக்கும் அவனிட சொத்துக்களெல்லாம் ஸர்க்கார் வசமாக்கும் படிக்கும்சிக்ஷை விதிப்பது.

ளுண்டு; இந்தவிஷயத்தை தங்களிட கடமைகளில் ஒன்றாக அவர்கள் பாவிக்கவேண்டியது.

2. கலெக்டர்களும், டிவிஷனலாபீஸர்களும் ஸ்கூல் இனிஸ்பெக்டர்களுடன் அடிக்கடி சம்பாஷணைகள் செய்யவேண்டியது.

282. **திரிகோணமிதிசம்பந்தமான ஸ்டேஷன்கள்:**—"பெரியதிரிகோணமிதி ஸர்வே" செய்யப்பட்டுள்ள இடங்களில் யாரும் பிரவேசித்து நிலத்தைச்சேர்த்துக்கொள்ளாமலிருக்கும் பொருட்டும் அல்லது அவைகளை அழிக்காமல் இருக்கும்பொருட்டும் அவைகளை பாதுகார்த்து வரவேண்டியதானது தாலூகா உத்தியோகஸ்தர்களிடவும் கிராம உத்தியோகஸ்தர்களிடவும் கடமையாயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட பிரதியிடத்தையும் பாதுகார்க்கும்பொருட்டுவருஷவாரியில் சராசரியில் ரூ 4க்கு மேற்படாமல் செலவிட கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு; இந்த தொகைக்குமேற்பட்டு பெரிய திரிகோணமிதி ஸர்வே ஸூபரிண்டெண்டெண்டினிட ப்ரத்யேகமான உத்திரவன்றியில் செலவிடக்கூடாது. தனியாய் ஒரு ரசீதுசெய்யப்பட்ட ஒரு பில்ஆதாரத்தின்பேரில் பணம் பட்வாடா செய்யவேண்டியது; கஜானா ஆபீஸரானவர் அந்தபில்லை ஸர்வே ஸூபரின்டெண்டெண்டுக்கு அனுப்ப வேண்டியது, அவர் அதில் மேல்கையெழுத்துசெய்து கம்பட்ரோலர் ஜெனரலுக்கு(Comptroller General) அனுப்புவார். தனி ரசீதானது ஜில்லா கணக்குகளில் செலவு எழுதுவதற்கு ஆதாரமானதாகும். கற்களை வெளிப்படுத்தவாவது அந்த இடத்தை எவ்விதமாகவாவது அழிக்கவாவது எத்தனிக்கிற ஜனங்களுக்கு காண்பிக்கும்பொருட்டு இங்கிலீஷிலும் சுயபாஷையிலும், ஒரு நோட்டீஸ் எழுதி அதை அந்தஇடங்களின் வசத்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கவேண்டியது. இம்மாதிரியான குற்றச் செய்கைகளுக்காக பினல் கோட் பிரகாரம் சிக்ஷை செய்யப்படும், அப்படி சிக்ஷை செய்யப்படுமென்று கலெக்டர்கள் நோட்டீஸ் கொடுத்து குற்றஞ் செய்தவர்களை தக்க விதமாய் சிக்ஷை செய்யவேண்டியது. ரிபோர்ட் செய்யவேண்டியதவசியமான விஷயங்களில், கலெக்டர்கள் ஸூபரிண்டெண்டெண்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டியது.

282. **ஏ. பூர்வீக மண்டபம்முதலியன:**—பாதுகார்த்துவைத்துக் கொண்டுவர வேண்டியதற்காக முன்னாடியாகவே தலாஷ்செய்யப்பட்ட பூர்வீகமண்டபம்முதலானவைகளிட ஜாபிதாவைப்பார்வையிட்டு தம்மிட ஜில்லாவிலுள்ள அப்பேர்ப்பட்ட கல்லறைகளை பழுதுபார்க்க வேண்டியிருந்தால் அவைகளைப்பற்றி பிரதி வருஷம் ஆகயருக்குள்ளாக ரிபோர்ட் செய்யவேண்டியது பிரதி கலெக்டரிட கடமையாகிறது.

2. மேற்சொன்ன ஜாபிதாவில் புதுசாய் [ஏதாவது மண்டபம் முதலானவற்றை சேர்த்தெழுதி வைக்கவேண்டியதவசியமாக கலெக்ட்ரானவர் தாத்பரியப்பட்டால், அப்படியேசேர்த்தெழுதலாம்; அப்படி சேர்க்கப்பட்ட பிரதி விஷயத்தைப்பற்றியும் சுருக்கமாய் விவரித்து ரிபோர்ட் செய்யவேண்டியது.

283. **அளவில்லாமல் ஜாஸ்தி அபராதம் விதிக்கும் விஷயமாய் விலக்கு செய்வது:**—ஜமீன்தாரிகள், பாளையங்கள், சுரோத்திரியங்கள் முதலான எஸ்டேட்டுகளின் சொந்தக்காரர்கள் 1871 ௵ I நெ. ஆக்டில் கால்நடைகள் மீறி நடக்கும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட ஆக்டில் உதகரிக்கப்பட்ட மாதிரியான அபராதங்களை விதிக்கக்கூடவே கூடாது. முதலில் பைஷ்கஷ் தீர்வை யேற்படுத்தியபோது அப்பேர்ப்பட்ட அபராதங்களை அனுஸரித்து ஏற்படுத்தியிருந்தால், அதில் (பைஷ்கஷில்) அதற்குத் தக்கதாய் குறைவு செய்யலாம்:—(அதாவது எவ்வளவு துகை அப்பேர்ப்பட்ட அபராதத்தால் வசூலாகுமென்று உத்தேசித்து பைஷ்கஷ்ஏற்படுத்தப்பட்டதோ அவ்வளவு துகையை பைஷ்கஷிலிருந்து குறைத்துவிட வேண்டியது). அப்படி அபராதம் வசூல்செய்யும் அதிகாரமானது வழக்கத்தின் முறைமை பிரகாரமாக மாத்திரமே செலுத்தப்பட்டு வந்திருந்தால், சென்ற 5 வருஷத்தில் சராசரி வசூலான துகையை அனுஸரித்து கம்பன்ஸேஷன் துகை கணக்கிடப்படும். இந்த கம்பன்ஸேஷன் துகையானது ஸந்தர்ப்பங்களை அனுஸரித்து நியாயமென்றும் கிரமமென்றும் மாத்திரமே கொடுக்கப்படுகிறதே தவிர பாத்தியதை உண்டென்பதாக கொடுக்கப்படுகிறதில்லை.

284. **பட்டியில் அடைக்கப்பட்ட கால் நடைகள்:**—பேவார்ஸ் கால் நடைகளை விற்பதற்கு முன்பாக குறைந்தபக்ஷம் 14 நாளைக்காவது பட்டியில் வைத்துவைக்கவேண்டுமென்று சட்டத்தில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது; கால்நடைகளிட மதிப்புத் துகையானது அந்தகாலம்வரையில் கால் நடைகளை பட்டியில் வைத்துப்பராமரித்து வருவதற்காகப்பிடிக்கும் செலவுக்கு கட்டாததாயிருந்தால்கூட அந்த நிபந்தனை பிரகாரம் நடக்க வேண்டியது.

***287.** **எல்லைக்குறிகள்:**—ரெவினியூஸர்வே நடந்தேறிவருகிற ஜில்லாக்களில், கணக்கர்களும் கிராமத்தலைவர்களும் (மணியக்காரர்களும்) டிமார்கேஷன் ஆபீஸர்கள் அந்தந்த இடத்தை விட்டுப்போவதற்கு முன்பாக கிராமஎல்லைக்குறிகளும் புலங்களின் எல்லைக்குறிகளும் கிரமமாய் நடப்பட்டிருக்கிறதாவென்று தங்களுக்குள் திருப்திகரமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டியது; தவிரவும் டிமார்கேஷனுபீஸர்களால் அவர்களுக்குக் (கிராமாதி

* இரண்டாவது பாகத்தில் பார்க்க.

காரிகளுக்குக்) கொடுக்கப்படும் எல்லைக்குறி ஜாபிதாவில் அடியில்கண்ட ரசீதில் கையெழுத்து செய்யவேண்டியது.

2. அதற்குப்பின்னிட்டு, எல்லைக்குறிகளை ஜாக்கிரதையாய்ப்பராமரித்து வருவதற்கு கிராமநவுக்கர்கள் ஜவாப்புதாரிகளாக்கப்படுவார்கள். எல்லைக்குறிகள் பெயர்த்துவிடப்பட்டிருந்தாலாவது, மாற்றுதல் செய்யப்பட்டிருந்தாலாவது, வெளிப்படுத்தப்பட்டிருந்தாலாவது, கெடுதிசெய்யப்பட்டிருந்தாலாவது அதைப்பற்றி தாசீல்தாரிட நோட்டீஸுக்குக்கொண்டுவர வேண்டியதானது கிராமநவுக்கர்களிட கடமை.

3. சமயம் நேரிடும்போது அடிக்கடி கிராமஎல்லைக்குறிகளின் நிலமையைப்பற்றி விசாரிக்க வேண்டியது தங்களிட கடமையில் முக்கியமான அம்சமாக தாசீல்தார்களும் ரெவினியூ இனிஸ்பெக்டர்களும் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. எல்லைக்குறிகளுக்குக்கெடுதி செய்யப்பட்டதாக எப்பொழுதாவது கண்டுபிடிக்கப்பட்டால், அப்படி குற்றம் செய்தவன் கண்டுபிடிக்கப்பட்டாலும் கண்டுபிடிக்கப்படாமற்போனாலும், அது சங்கதியைப் பற்றி, அப்படி செய்யப்பட்ட கெடுதியை பழுதுபார்ப்பதற்காக அவசியமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் பொருட்டு தாசீல்தாரானவர் தாமதமன்றியில் டிவிஷனலாபீஸருக்கு ரிபோர்ட்செய்யவேண்டியது.

4. எல்லைக்குறிகளுக்கு தீங்கு முதலானது செய்த குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை அபராதம் விதிக்க 1860 ஆக்ட்டு 28-வது சட்டம் 9-வது பிரிவு பிரகாரம் ஸப் மாஜிஸ்டிரேட்டுகளுக் கதிகாரமுண்டு; அந்த பிரிவின்நிபந்தனைகளை ஸப்மாஜிட்டிரேட்டுகள்கவனிக்கவேண்டியது.

288. மானேஜ்மேண்டு செய்து வரப்பட்ட பூஸ்திதிகள் (எஸ்டேட்டுகள்):—யாதொரு எஸ்டேட்டானது யாதொரு ஸிவில் கோர்ட்டாரிட உத்திரவு பிரகாரம் கலெக்டரிட மானேஜ்மெண்டில் வைக்கப்பட்டிருந்தால் அந்த ஸந்தர்ப்பத்தைப்பற்றி போர்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது. பிரதி எஸ்டேட்டையும் மானேஜ்மெண்டு செய்யப்படுவதைப்பற்றி கலெக்டர்கள் வருஷவாரியில் ஒரு ரிபோர்ட் தயார் செய்து அதை போர்டாருக்கனுப்பவேண்டியது; மீதி பணங்களைகெவர்ண்மெண்டாரிடத்தில் வட்டிக்கிடவேண்டியது. வருஷவாரி ரிபோர்டுடன் கூட மீதிகையிருப்பு பணம் இவ்வளவென்றும், வட்டிக்கிட்டிருக்கிற துகை இவ்வளவென்றும் நீக்குகையிருப்பு இவ்வளவென்றும் கண்டு ஒரு ஸ்டேட்மெண்டையும் அனுப்பவேண்டியது.

2. ஆகூஷிவிலக்கப்பட்ட (அதாவது கடன்காரர்களுக்கு கடன் கொடுக்கும் பொருட்டு கடன் வாங்கினவர்களிடசொத்தை வசப்படுத்தி கொண்டு கடன் தீர்த்துவருவது) எஸ்டேட்டை மானேஜ்மெண்டு (பராமரிப்பு) செய்து வருவதற்காக, அந்த ஆஸ்தியின் சொந்தக்காரனையாவது அல்லது

அவனிட பந்துக்களுக்குள் தகுந்த ஆஸாமி கிடைப்பானுகில் அப்பேர்ப்பட்ட பந்துவையாவது ஸிவில் கோர்ட்டாரிட உத்திரவைப் பெற்றுக்கொண்டு அமீனுவாக நியமிக்கலாம். ஆஸ்தியைப்பராமரித்து வரவேண்டிய பொறுப்பானது அயலார்களிடத்தில் ஒப்புவிக்கப்படுவதற்கு பதிலாக மேற்கண்ட ஏற்பாட்டினுல் ஆஸ்திவிருத்தியடைவதில் சிரத்தையுள்ள ஒருவன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அமீனுவினிட நடவடிக்கைகளாவது பராமரிப்பாவது அதிருப்திகரமானதாய் ஏற்படும்பட்சத்தில் அப்பேர்ப்பட்ட அமீனுவை எப்போதாவது நீக்கிவிட கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு.

3. மேற் பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்படலான மார்க்கத்தை, (சர்க்கார்) பாக்கிகளுக்காக ஜப்திசெய்யப்பட்ட ஆஸ்திகள் விஷயத்தில் அனுஸரிப்பது சௌகரியமாகயிருக்கும்.

289. ஜாமீன்பத்திரங்கள்:—ஸ்தாபரசொத்தானது கெவர்ண்மெண்டாருக்கு ஜாமீனுக யாதொரு ஆஸாமியால் கொடுக்கப்பட்டால், ஜாமீன் பத்திரங்களானவை ரிஜிஸ்டிரேஷன் ஆக்டுபிரகாரம் கிரமமாய் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியது ; ஜாமீனுகக் கொடுக்கப்பட்ட கெவர்ண்மெண்டு ப்ராமிஸரி நோட்டுகளெல்லாம் கெவர்ண்மெண்டார் பெயருக்கே கிரமமாய் இன்டார்ஸ் செய்யப்படவேண்டியவிஷயத்தில் ஜாக்கிரதைஎடுத்துகொள்ளவேண்டியது.

2. ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு செய்யப்பட்ட ஆப்காரி (சேந்தி) குத்தகைதாரர்களாவது மற்றவர்களாவது பாங்கியில் பணம்கட்டினுல், (ஜாமீன்பத்திரமானது) ஜில்லா கலெக்டர் பெயரில் இருக்கவேண்டுமேயன்றி அந்தகாலத்தில் கலெக்டர்வேலையை பார்த்துவரும் ஆஸாமியினிட பெயரிலிருக்கக்கூடாது (அதாவது உதாரணம்—பலான ஜில்லாகலெக்டருக்கு என்று எழுதவேண்டியது பலான ஜில்லா கலெக்டராகிய இன்னுருக்கென்று எழுதக்கூடாது)

3. அஷ்யூரன்ஸ்களை (ஒப்பந்தம் செய்வது முதலியதை) ரிஜிஸ்டர் செய்வதானது இஷ்டத்தைப் பொறுத்ததாக இருந்து—(இதற்கு உதாரணமாக ஒருவருஷத்திற்குக் குறைந்த காலத்திற்கென்று தயார்செய்யப்பட்ட குத்தகைப்பத்திரங்கள்: 100 ரூ விலைமதிப்புக்குக் குறைந்த சொத்து அல்லது வீடுகளைவாங்குவது, சாராயம் ஓடத்துறை இதர இஜாரா (குத்தகை) இவைகளின் கபூலியாத்துகள்) கக்ஷிக்காரர்களில் ஒரு திரத்தார் கெவர்ண்மெண்டாராக யிருந்தால் அப்பேர்ப்பட்டவிஷயத்தில் ரிஜிஸ்டர் செய்யவேண்டியதானது கட்டாயமானதாகிறது ; ஏதோ இஷ்டமிருந்தால் செய்யலாம் என்பதாக இருக்ககூடாது.

இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு பிட்டிஷன்கள் செய்துகொள்வதைப்பற்றி.*

1 வது பிரிவு.

சொந்தஜனங்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுவானவிதிகள்.

---

1. இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு பிட்டிஷனும், அந்தபிட்டிஷனில்கண்ட சங்கதியானது இந்தியா கெவர்ண்மெண்டாரிட ராஜாங்க ரீதியைப்பற்றினதாகவாவது இருந்தாலும் பிரதேச கெவர்ண்மெண்டாரிட உத்திரவுகள் அல்லது ராஜாங்கரீதி அல்லது செய்கைகளைப் பற்றினதாகவாவது இருந்தாலும், மனுதார் எந்தபிரதேச கெவர்ண்மெண்டாரிட எல்லைக்குள் வாசம்செய்கிறாரோ அல்லது உத்தியோகம்செய்கிறாரோ அந்த பிரதேச கெவர்ண்மெணடார் துவாரா அனுப்பவேண்டியது. ஆனால் மனுதாரனுக்கிஷ்டமிருக்கும்பட்சத்தில், மேற்கண்ட விதமாய் பிரதேச கெவர்ண்மெண்டாருக்கு யாதொரு பிடிஷனை அனுப்பும்போதே அதற்கு நகல்ஒன்றை இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பலாம்; ஆனால் அப்படி அனுப்புகிற விண்ணப்பத்தின்பேரில் "நகல்–(டேப்ளிகேட்)" என்று எழுதவேண்டியது.

2. யாதொரு பிட்டிஷனை கையால் எழுதியாவது அச்சிட்டாவது அனுப்பலாம்; ஆனால், பிட்டிஷனையும் அத்துடன் அனுப்பும் தஸ்தாவேஜ்கள் எல்லாவற்றிலும் மனுதாரனானவன் கையெழுத்து செய்யவேண்டியது; மனுதார்கள் அனேகம்பேர்களாயிருக்கும்பக்ஷத்தில் அவர்களில் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆஸாமிகள் கையெழுத்து செய்யவேண்டியது. தவிரவும் மனுவின் கடைசிபாகத்தில் கோரிக்கொள்ளப்பட்ட ஸங்கதி (அல்லது வேண்டுகோள்) பலானதென்று கண்டெழுதவேண்டியது.

3. ஒவ்வொரு பிட்டிஷனை அனுப்பும்போதும், இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அந்தபிட்டிஷனை அனுப்பவேணுமென்று பிரதேசகெவர்ண்மெண்டாரைக்கோரிக்கொள்ளும் மாதிரியாக ஒரு கடிதத்தை பிரதேச கெவர்ண்மெண்டாருக்கு எழுதி அனுப்பவேண்டியது; யாதொரு பிரதேச கெவர்ண்மெண்டாரிட யாதொரு உத்திரவுக்கு அப்பீல்செய்கிறதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட உத்திரவுக்கு ஒருநகலும் அத்துடன்கூட அந்தகேஸ் விஷயமாய் கீழ் அதிகாரிகள் செய்த உத்திரவுகளுக்கு நகல்களையும் இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பும் பிட்டிஷன்களுடன் அனுப்பவேண்டியது.

4. ஆலோசனை சபையில் பிரஸ்தாபம் நடந்துகொண்டுவருகிற சட்ட நிருபணை விஷயமான பில்கள் சம்பந்தமான சமாசாரங்களாயிருந்தால் அது விஷயத்தை ஆலோசனை சபையிலுள்ள கெவர்னர் ஜெனரல் அவர்களிட சமுகத்துக்கு பிட்டிஷன் மூலமாயாவது அல்லது லெஜிஸ்லேட்டிவ் டிபார்ட்மெண்டு ஸீக்ரடெரிக்கு கடித மூலமாயாவதுத் தெரிவிக்கலாம், ஆனால் பிட்டிஷனாக அனுப்புவதா யிருந்தாலும் கடிதமூலமாக அனுப்புவதாயிருந்தாலும் ஷை ஸீக்ரெடரி விலாசத்துக்கே அனுப்பவேண்டியது. சாதாரணமாய் அப்பேர்ப்பட்ட பிட்டிஷன் அல்லது கடிதத்திற்கு ஜவாப்பு அனுப்பப்படமாட்டாது. ஷை விஷயமாய் அம்மாதிரி சமாசாரங்களை இந்தியா கெவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டியதா யிருந்தால், கல்கத்தாவிலுள்ள ஹைகோர்ட்டார் நீங்கலாக மற்ற கோர்ட்டார் அல்லது உத்தியோகஸ்தர்கள் முதலான ஸர்க்கார் மனுஷியர்கள் அந்தந்த பிரதேசகெவர்ண்மெண்டார் துவாரா அனுப்பவேண்டியது.

II - வது பிரிவு.

ஸர்க்கார் ஸிவில் உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் பிட்டிஷன் செய்வதைப்பற்றி.

1. இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு பிட்டிஷன்செய்துகொள்ளுகிற பிரதி உத்தியோகஸ்தரும் அவரவர் தனித்தனியாக செய்துகொள்ளவேண்டியது.

2. மனுதாரர் எந்த ஆபீஸில் வேலையாயிருக்கிறாரோ அந்த ஆபீஸின் தலைமை அதிகாரி துவாரா கிரமமான மார்க்கமாய் அனுப்பவேண்டியது. ஆனால் அப்போதே நேராக இந்தியாகெவர்ண்மெண்டாருக்கு ஒரு நகலை அனுப்பலாம்.

3. யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனும் தன்னிட உத்தியோகத்தின் நிலைமையைப் பற்றினதாயிருக்கப்பட்ட ஸங்கதிகளில் தான் சம்பந்தப்பட்டிருந்தாலொழிய அந்த விஷயமாய் பிட்டிஷன் செய்யக்கூடாது.

III - வது பிரிவு.

பிரதேச கெவர்ண்மெண்டார் இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு பிட்டிஷன்களை அனுப்புவதைப்பற்றியும் அனுப்பாமல் நிறுத்திவிடக் கூடியதைப்பற்றியும்.

1. பிரதேச கெவர்ண்மெண்டார் அவர்களுக்கு அனுப்பப்படும் பிட்டிஷன்களின் ஸாராம்சங்களைப்பற்றி அவர்கள் சுருக்கமாய் அன்வயித்தும்

(அபிப்பிராயத்தைத் தெரிவிக்காதிருக்க பிரத்தியேகமான காரணங்களிருந்தாலொழிய) அதைப்பற்றி அவர்களிட அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவேண்டியது. ஸர்க்கார் ஸர்வீஸிலிருந்து பர்தர்ப்பு செய்யப்பட்டிருந்து அந்த உத்திரவுக்கு விரோதமாக அப்பீல் செய்கிற விஷயமான மனுவாயிருந்தால் அந்த மனுதாரன்பேரில் சாட்டப்பட்ட குற்றம் பலானதென்று எழுத்துமூலமாய்த் தெரிவிக்கப்பட்டதா அந்த குற்ற விஷயமாய் மனுதார்சொல்லும் ஜவாப்புகள் எழுத்துமூலமாய்ப் பெற்றுக்கொள்ளப்பட்டதா, அதுவிஷயமான தீர்மானமானது எழுத்துமூலமாய் செய்யப்ப்ட்டதா என்றும் பிரதேச கெவர்ண்மெண்டார் அனுப்பும் ரிகார்டுகளினால் ஏற்படவேண்டியது.

2. யாதொரு பிட்டிஷனானது இங்கிலீஷில் எழுதப்படாமல் இருந்தால் பிரதேச கெவர்ண்மெண்டார் அந்தபிட்டிஷனை (இங்கிலீஷில்) தர்ஜிமா செய்தனுப்ப வேண்டியது.

3. இந்தியா கெவர்ண்மெண்டாருக்கு அனுப்பப்படும் பிடிஷன்களை அடியிற்கண்ட விஷயங்களில் யுக்தானுஸாரம் அனுப்பாமல் நிறுத்திப்போட பிரதேச கெவர்ண்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது:—

இந்தியா கெவர்ண்மெண்டாரிட பிட்டிஷன் விதிகளுக்காக,		சென்னை கெவர்ண்மெண்டாரிட பிட்டிஷன் விதிகளின்,	
(1) வது பிரிவுக்காக	(308-வது பக்கத்தில்),	(1)	பிரிவைப்பார்க்க.
(2) ,,	,,	(2)	,,
(3) ,,	309-வது பக்கத்தில்	(3*)	,,
(4) ,,	,,	(4)	,,
(6) ,,	,,	(5)	,,
(8) ,,	,,	(6)	,,
(9) ,,	,,	(7)	,,
(11) ,,	,,	(8)	,,
(12) ,,	,,	(9)	,,

(5.) ஸர்க்கார் ஸர்வீஸில் இல்லாத யாதொரு ஆஸாமியானவன் தனக்கு உத்தியோகம் வேணுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால்.

(7.) 100 ரூக்கு மேற்படாமல் சம்பளம் பெற்றுவந்த யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரானவர் பர்தர்ப்பாவது, மோகூப்

---

* இதில் "சென்னை கெவர்ண்மெண்டாராலாவது" என்றவார்த்தையைத்தள்ளி விட்டு இவ்விடத்தில் வாசிக்க.

பாவது(மோகூப்பு என்ருல் நீக்குதல், Removal), வேலை யில் பதவியைக்குறைத்தாவது(Reduction ரிட்யூஸ் செய் கிறது), வேறேவித தண்டனையாவது செய்யப்பட்டிருந்து அப்பேர்ப்பட்ட உத்திரவுக்கு விரோதமாக பிரதேச கெவ ர்ண்மெண்டாருக்கு அப்பீல் செய்யப்பட்டிருந்து அப்பேர் ப்பட்ட உத்திரவானது பிரதேச கெவர்ண்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு (ஸ்திரப்படுத்தப்பட்டு அதாவது அப் பீலானது தள்ளிவிடப்பட்டு) அப்படி பிரதேச கெவர்ண் மெண்டார் செய்யும் தள்ளுபடி உத்திரவுக்கு விரோதமாக செய்யப்பட்ட அப்பீல் பிட்டிஷனுகயிருந்தால்.

(10.) பிரதேசமெண்கெவர்ண்டாரால் யாதொரு உத்திரவோ தீர்ப் போ செய்யப்பட்டிருந்து அப்பேர்ப்பட்ட உத்திரவு அல் லது தீர்ப்பானது சம்பந்தப்பட்ட பிட்டிஷன்தாருக்கு தெரி விக்கப்பட்ட 6 மாதகாலத்திற்குப்பிறகுசெய்யப்பட்ட அப் பீலாயும் அப்படி நேர்ந்த தாமதத்திற்காக சர்காருக்கு திரு ப்திகரமான முகாந்திரங்கள் எடுத்துச்சொல்லாமலும் இருக் கப்பட்ட அப்பீல் பிட்டிஷனுக யிருந்தால்.

(13.) யாதொரு அப்பீல் பிட்டிஷனில் கண்ட ஸங்கதியைப்பற்றி பிரதேச கெவர்ண்மெண்டார் உத்திரவு முதலானது செய்ய அதிகாரமுள்ளவர்களாயிருந்து அதுவிஷயமாய்முன்னுடி பிரதேச கெவர்ண்மெண்டாரிடம் பரிகாரம் தேடிக்கொள் ளும் பொருட்டு அவர்களுக்கு பிட்டிஷன் செய்திராதி ருந்தால்.

4. யாதொரு பிட்டிஷனுனது மேற்கண்டவிதமாய் அனுப்பாமல்நிறுத் திவிடப்பட்டால் அப்படி அனுப்பாதிருந்த ஸங்கதியைப்பற்றியும் அதற்கு காரணத்தையும் பிட்டிஷன் தாரனுக்குத்தெரிவிக்கவேண்டியது.

5. 3-வது விதியில் கண்ட மாதிரியாக அனுப்பாமல் நிறுத்திவிடப் பட்ட பிட்டிஷன்களைப்பற்றி அவைகளுக்கு காரணத்துடன் ஒரு ஸ்டேட் மெண்டு தயாரித்து 3ஷ் த்திற்கு ஒருதரம் அதை இந்தியா கெவர்ண்மெண் டாருக்கு அனுப்பவேண்டியது.

பின்னும் உபயோகமான பொதுவிதிகள்.

(1.) சென்னைகெவர்ண்மெண்டாருக்குச்செய்யப்படும்பிட்டிஷன்கள். இவைகளுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை. அப்பீல் வாயிதா இவ்வள வென்று குறிப்பிடவில்லை.

(2.) 1889ஹூத்திய 1.வது (கிராம முனிசீபு கோர்ட்) சட்டத்தின் 8–வது ஸெக்ஷன் * பிரகாரம் கிராம முனிசீபுகள் ஸஸ்பென்ஷனு வது பர்தர்ப்பாவதுசெய்யப்பட்டு அதற்குமேல் போர்டாருக்கு அப்பீல்செய்யப்பட்டிருந்து போர்டார்அது விஷயமாய் செய்த தீர்மானத்திற்கு விரோதமாய் அப்பீல்செய்யப்பட்டால்,309-வது பக்கத்தில் 6–வதுவிதியில் கண்ட மாதிரியாக அது கெவர்ண்மெண்டாரால் தள்ளுபடி செய்யப்படும்.

(3.) 309–வது பக்கத்தில் 7-வது விதியில் முதல் வாக்கியத்துக்கு உதாரணம்:1864 ஹூத்திய 2-வது சட்டமாகிய தீர்வை வசூல் செய்வதற்கான சட்டத்தின் 38–வது பிரிவு (3) உட்பிரிவு ‡ பிரகாரம் தீர்வைபாக்கிக்காகப் போடப்பட்ட ஏலத்தை கலெக்டர் ஸ்திரப்படுத்தியிருந்து அப்படி ஸ்திரப்படுத்தின உத்திரவுக்குவிரோதமாகச்செய்யப்படும் அப்பீல்.

(4.) இன்கம்டாக்ஸ் (வருமானத்தின்பேரில்வரி) ஆக்ட்பிரகாரம் விதிக்கப்பட்ட வரியைக்குறைக்கவாவது அடியோடே ரத்துசெய்யவாவது விண்ணப்பம் செய்வதாயிருந்தால் 30நாளைக்குள் கலெக்டருக்கு அப்பீல் செய்யவேண்டியது. தாமதத்திற்கு தகுந்தகாரணம் சொல்லும்பட்சத்தில் 30 நாள்கடந்து செய்யப்பட்ட அப்பீலையும் கலெக்டர் அங்கீகரித்துக் கொள்ளலாம். கலெக்டரிட தீர்ப்புவிஷயத்தில் அதிருப்தியடைந்து அதின் பேரில் அப்பீல்செய்யவேணுமென்முல் தீர்ப்புதேதிமுதல் 30 நாளைக்குள் அப்பீல்செய்யலாம்.

(5.) மிராசு பாத்தியதையுள்ள கிராம உத்தியோகங்கள் விஷயமாய் ரெவினியூ போர்டாரோ கெவர்ண்மெண்டாரோ செய்த உத்திரவானது முடிவு பெற்றதாகையால் அந்த உத்தியோகங்கள் விஷயமாய் செய்யப்படும் அப்பீலானது மஹாராணி அவர்களிட ஸீக்ரெடரி ஆவ் ஸ்டேட் அவர்களுக்கு அனுப்பப்படுகிறதில்லை; மிராசு பாத்தியதை யில்லாத உத்தியோகங்கள் விஷயமாய்செய்யப்பட்ட அபபீல் பிட்டிஷன்களும்அம்மாதிரி அனுப்பப்படவேண்டிய தில்லையென்று மஹாராணியவர்களிட ஸீக்ரடெரி ஆவ் ஸ்டேட் அவர்கள் தெரிவித்திருக்கிமுர்கள். தர்காஸ்த்து விஷயமாய் செய்யப்படும் அப்பீல்களை கெவர்ண்மெண்டார் அனுப்பாமல் நிறுத்திவிடக்கூடும்.

(6.) மஹாராணியவர்களிட ஸீக்ரெடெரி ஆவ் ஸ்டேட் அவர்களிட உத்திரவுக்குமேல் பார்லியமெண்டு மஹா சபையாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்; ஆனுல் அப்பேர்ப்பட்ட அப்பீலை பார்லியமெ

---

* இரண்டாவது பாகம் 49–வது பக்கத்தைப்பார்க்க.

‡ இரண்டாவதுபாகம் 27–வது பக்கத்தைப்பார்க்க.

ண்டு மஹாசபையில் ஒரு மெம்பர் மூலமாக கொடுத்துக்கொள்ளவேண்டி யது. ஆனாலோ, மஹாராணி அவர்களிட ஸீக்ரெடெரி ஆவ் ஸ்டேட்என்கிற இந்தியா தேசத்துக்காக நேமிக்கப்பட்ட மந்திரி அவர்களுக்கே கிராமஉத் தியோகவிஷயமாய் அப்பீல்செய்ய இடமில்லாதபோது அவருக்கு மேற்பட்ட பார்லிய மெண்டாருக்கு அப்பீல் செய்ய இடமில்லை யென்பது வியக்தமாய் ஏற்பட்ட ஸங்கதியாக யிருக்கிறது.

(7.) 1831 ஹூத்திய மிராசுபாத்தியதையை ஸ்தாபிக்கும் சட்டம் அடியில்கண்ட ஜில்லாக்களிலுள்ள உத்தியோகங்களுக்கு சம்பந்தப் படாது,

(1). தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, சேலம், மலையாளம், தென்கன்னடம், விசாகபட்டணம்ஏஜென்ஸி பிரதேசங்கள், இந்த ஜில்லாக்களிலிருக்கப்பட்ட கிராமஉத்தியோகங்களுக்காவது,

(2). எந்த ஜில்லாவிலாவது இருக்கப்பட்ட அஸிஸ்டண்டு (உதவி) கர்ணம் வேலைக்காவது; அதாவது என்ன தாத்பரியமென்றால் மேல்கண்ட ஜில்லாக்களிலுள்ள உத்தியோகங்களுக்கும் எல்லா ஜில்லாக்களிலுள்ள அஸிஸ்டெண்டு கர்ணம் உத்தியோகத்துக்கும் மிராசு பாத்தியதை கிடையாது.

(8). (ரிவிஷன்) புது ஏற்பாடு;-புதுஏற்பாட்டில் கிராம உத்தியோகங்களுக்கு செய்யப்பட்ட நேமனங்களைப்பற்றி ஆக்ஷேபிக்கவேண்டியிருந்தால் எப்போதாவது 1831 ஹூத்திய 6-வது சட்டப்பிரகாரம் (ஸ-ஒட் டெம்பர்) வியாச்சியம் செய்யலாம். அப்படி வியாச்சியம் செய்து தங்களுக் குள்ள பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்ளுகிறவர்கள் வேலையில் நேமிக் கப்படவேண்டியது. ஆனால் எந்த ஆஸாமியை வேலையைவிட்டு நீக்கவேண் டுமென்று கோரப்படுகிறதோ அந்தஆஸாமி நேமிக்கப்பட்ட தேதிமுதல் 3 வருஷத்திற்குப் பின்னிட்டு வியாச்சியம் செய்யப்பட்டிருந்தால் மேற்கண் டபடி நேமிக்கப்படமாட்டார், அல்லது வியாச்சியம் செய்கிறவனானவன் ரிவிஷன் வரையில்வேலை பார்த்துவந்திருந்து ரிவிஷனில் வேலை போய்விட் டால் அப்படிப்பட்ட ரிவிஷன் செய்யப்பட்ட தேதிமுதல் 3 வருஷத்திற்குள் வியாச்சியம் செய்திருந்தால்தான், இப்போது வேலைபார்த்துவருகிறவன் குறைந்த பாத்தியதையுள்ளவனென்று தீர்மானம் செய்யப்படுவதின்பேரில், நியமிக்கப்படுவான், மேற்கண்டபடி 3 வருஷமானபிறகு செய்யப்பட்டது

என்பதற்காக விலக்கு செய்யப்பட்டவர்கள் மறுபடி காவிநேரிடுகிற வரையில் கார்த்திருக்கவேண்டியது.

ரிவிஷனில் நேமங்கள் செய்வதில் அடியில்கண்ட விதிகள் அனுஸரிக்கப்படவேண்டியது.

1. வட்டமாக சேர்க்கப்பட்ட கிராமங்களில்.

B. பி. என்ற கிராமமானது A. ஏ. கிராமத்துடன் சேர்க்கப்பட்டு, பிரதி கிராமத்திலும்இருந்த உத்தியோகஸ்தன் வட்டகிராமத்துக்குதன்னைநேமிக்க வேண்டுமென்ருல்,

(1.) இருவரில் ஒருவ்ராவது மிராசுதாரர்களா யிராமற்போனல், ஏ கிராமத்திய ஆஸாமியை நேமிக்கவேண்டியது.

(2.) ஏ கிராமத்திய ஆஸாமி மிராசுதாரனும் பி கிராமத்திய ஆஸாமி மிராசுதாரனல்லாமலும் இருந்தால், ஏ கிராமத்து ஆஸாமியை நேமிக்கவேண்டியது.

(3.) ஏ கிராமத்திய ஆஸாமி மிராசுதாரனல்லாதவனும் பி கிராமத்தியஆஸாமி மிராசுதாரனுகவுமிருந்தால், பி கிராமத்து ஆஸாமியை நேமிக்கவேண்டியது.

(4.) இரு கிராமத்தாஸாமிகளும் மிராசுத்ரார்களாகயிருந்தால் ஏ கிராமத்திய ஆஸாமியை நேமிக்கவேண்டியது.

2. தனிகிராமங்களில்.

(1) உத்தியோகம் பார்க்கும் நவுக்கர்களின் சங்கியை குறைக்கப்பட்டால்;

அந்தகிராமத்திய இரண்டு நவுக்கர்களில்:

(1.) ஒருவராவது மிராசுதாரனுயில்லாமற்போனல் ஜாஸ்தி ஸர்வீஸுள்ள ஆஸாமி நேமிக்கப்படவேண்டியது.

(2.) ஒருவர் மிராசுதாரராகவும் மற்றவர் மிராசுதாரரல்லாமலு மிருந்தால், மிராசுதார் நேமிக்கப்படவேண்டியது.

(3.) இருவரும்மிராசுதாரர்களா யிருந்தால், ஜாஸ்தி ஸர்வீஸுள்ளவன்நேமிக்கப்படவேண்டியது;

ஆனால் குறைந்த ஸர்வீஸுள்ள மிராசுதாரன்பிரத்தியட்சமாய்ஜாஸ்தி பாத்தியதை யுள்ளவனுயிருந்து,—உதாரணம்: இரண்டு மிராசுதார்களும் ஒரே வம்சஸ்தர்களா யிருந்து அதில் குறைந்த ஸர்வீஸுள்ளவன்; ஜேஷ்ட (மூத்த) ஸந்ததியைச் சேர்ந்தவனுயிருப்பது இப்பேர்ப்பட்ட விஷயத்தில் குறைந்த ஸர்வீஸுள்ளவனு யிருந்தாலும் அவனையே (குறைந்த ஸர்வீஸுள்ளவனையே) நியமிக்கவேண்டியது. ஒரே வம்சஸ்தர்களல்லாமல் வெவ்வேறு வம்சஸ்தர்களாயிருந்தால் ஜேஷ்ட வம்சஸ்தனென்பதை முன்னிட்டாவது புருஷ ஸந்ததியைச் சேர்ந்தவனென்பதை முன்னிட்டாவது ஒருவருக்கும் மேலான பாத்தியதை உண்டாகமாட்டாது ; அவர்களிட வம்சங்களின் ஸர்வீஸ் ஸமபாகவாவது சற்றேறக்குறைய சமமாகவாவது இருந்தால் அவர்கள் ஸமமான பிராசு பாத்தியதை உடையவர்களென்று பாவித்து அவர்களுக்குள் ஸ்வய ஸர்வீஸ் ஜாஸ்தி யாருக்குண்டென்பதை யோசித்தாவது யாருக்கு படிப்பு முதலிய லாயக்கான யோக்கியதைகள் ஜாஸ்தி இருக்கின்றனவென்பதை யோசித்தாவது தலாஷ் செய்யப்படும்.

(2) கிராம நவுக்கர்களின் ஸங்கியையில் குறைவு செய்யவேண்டியதில்லாமற் போனல்,

வேலைபார்த்து வருகிறவர்களை வேலையில் ஸ்திரப்படுத்திவிட்டு மிராசு பாத்தியதை சொல்லிக்கொள்ளுகிறவர்கள் யாராவதிருந்தால் வியாச்சியம் (ஸூட் மெம்பர் என்று வழக்கத்தில் சொல்லப்படுகிறது) செய்துகொள்ளும்படி சொல்லவேண்டியது,

கிராமநவுக்கர்கள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு தண்டனையாகவாவது ராஜாங்க ஸௌகரியத்தை முன்னிட்டாவது மாற்றப்படக்கூடாது. யாதொரு கிராம நவுக்கர் லீவ் பெற்றுக்கொண்டு போகும்போதாவது ஸஸ்பென்ஷன் அல்லது பர்தர்ப்பு செய்யப்பட்டிருந்து அப்பீலின் பேரில் வேலைக்கு மறுபடி நியமிக்கப்பட்டால் முன்னுடி வேலையில்லாமலிருந்த காலத்துக்கு சம்பளம் கொடுக்கப்படக்கூடாது. அப்பேர்ப்பட்டகாலத்தில் யார் வேலைபார்த்து வருகிருரோ அவருக்குத்தான் பூரா சம்பளமும் சேரும்.

243-வது பக்கத்தில் 8-வது பிரகரணத்தில் கண்ட விதியானது கிராம நவுக்கர்களிட குமாஸ்தாக்களுக்குச் சம்பந்தப்பட்டதல்ல; தவிரவும் யாதொரு மைனரானவன் 3 வருஷத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னமே இஸ்திம்தாரனுக தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் இப்பால் ஸூட் செம்பர் செய்து மிராசு பாத்தியஸ்தனென்கிற காரணத்தினுல் பாத்தியதை சொல்லிக்கொள்ளுகிறவனுக்கு ஷ விதியில 1-வது வாக்கியத்தில்கண்ட "3வருஷ விதி" யானது சம்பந்தப்படாது.

பொருளடக்கம்.

			பக்கம்.
1. 1822-ஞூத்திய 9-வது	சட்டம்,	சர்க்கார் பணம் விஷயமாயும் தஸ்தாவேஜ் விஷயமாயும் மோசடியான தப்பு தண்டாக்கள் செய்வதைப்பற்றி.—	1
2. 1828-ஞூத்திய 7-வது	,,	சட்டப்பிரகாரம் கலெக்டருக்குள்ள அதிகாரங்களை ஸப்கலெக்டர் தாசில்தார் முதலானவர் செலுத்தலாமென்பது ...	13
3. 1839-ஞூத்திய 7-வது	,,	ஜப்திசெய்த சொத்தை இன்னார் ஏலம் போடலாமென்பது ...	15
4. 1802-ஞூத்திய 29-வது	,,	ஜமீன் இலாக்காக்களின் கணக்கர்களைப்பற்றி	15
5. 1869-ஞூத்திய 3-வது	,,	ரிவினியூ தரப்பில் ஸம்மன் பிறப்பிக்கூடிய அதிகாரிகள் ...	15
6. 1864-ஞூத்திய 2-வது	,,	தீர்வை வசூல் செய்வது.. ...	16
7. 1817-ஞூத்திய 8-வது	,,	ராணுவ உத்தியோகத்திலுள்ள சிப்பாய் முதலானவரிடத்திலிருந்து தீர்வை வசூல்செய்யும் விதம்	17
8. 1860-ஞூத்திே 28-வது	,,	எல்லைக் குறிகள்..	38
9. 1831ஞூ-த்திய 6-வது	,,	மிராசு கிராம ஊழியத்தின் வருமானத்தைப்பற்றிய சட்டம் ...	39
10. 1866-ஞூத்திய 4-வது	,,	என் பிரஞ்சைஸ்* செய்யப்பட்ட இனும் நிலங்களுக்கு 1831-ஞூத்திய 6-வது சட்டசம்பந்தப்படாதென்பது..	42
11. 1858-ஞூத்திய 1வது	,,	ஆற்றில் வெள்ளமுதலானது வந்து ஏரி வகையரா உடைந்துபோகும்போலிருக்கப்பட்ட விஷயங்களில் ஜனங்களை கட்டாயப்படுத்தி வேலை வாங்குவது (கிராமகுடிமராமத்து வேலை.)	42
12. 1878-ஞூத்திய 6-வது	,,	புதையல் அகப்பட்டால் இன்னவிதமாய்ப் பைஸல் செய்யப்படுமென்பது ... ...,	45
13. ‡ 1889-ஞூத்திய 1-வது	,,	கிராம முனிசிபு கோர்ட்டு சட்டம்	46
14. ரெவினியூ போர்ட்டார் ஸ்டான்டிங்கு ஆர்டர்களுக்கு அனுபந்தங்கள்			69

---

* இந்த பதத்திற்கு அர்த்தம் 1 - வது பாகம் 182 - வது பக்கத்தில் பார்க்க.

‡ இதற்கு விபர அட்டவணை இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கிராம முனிசீபு சட்டம்.

அட்டவணை.

1. (1) சுருக்கமானபெயரும் வழங்கதொடங்குவதும்.

(2) வியாபிக்குமிடம்.

2. (1) சட்டதிட்டங்கள்ரத்து.

(2) ரத்துசெய்யப்பட்ட ஆக்ட்டுகளின்படி எற்படுத்தப்பட்ட கோர்ட்டுகள் முதலியவை.

(3) முந்திய ஆக்ட்டுகளை உதகரிப்பவை.

3. நடந்துகொண்டிருக்கும் வியாச்சியங்கள் அல்லது டிக்ரிகளுக்கு ஆக்ட் வியாபிப்பது.

4. ஆக்ட் வியாபாகத்தினின்று நிவர்த்திசெய்யப்பட்ட பிரதேசத்தில் முடிவாகாமல் நடந்துகொண்டிருக்கும் வியாச்சியங்களையும்டிக்கிரிகளையும் இன்னவிதமாய் நடத்துவது.

5. அர்த்தம்: கிராமம்என்பதற்கு, கிராம முனிசீப்என்பதற்கு, கிராம கோர்ட் என்பதற்கு, டிஸ்டிரிக்ட் ஜட்ஜி டிஸ்டிரிக்ட் முனிஸீப் என்பவற்றிற்கு.

6. கிராமகோர்ட்களை ஸ்தாபிப்பது.

7. கிராமமுனிசீபை நேமிப்பது.

8. கிராமமுனிசீபை ஸஸ்பெண்ட் செய்வது அல்லது தள்ளிப்போடுவது.

9. நியாயசபைகளைக்குறித்த நிபந்தனைகள்—விளம்பர மூலமாய் யாதொருகிராமத்திற்கு அவகளை வியாபிக்கச்செய்வது.

(2) நியாயசபையில் மெம்பராக உட்கார்ந்து வேலை நடுத்துவதற்கு யோக்கிதை யுள்ளவர்களைக்குறித்து ஜாபிதா எற்படுத்தி வைத்திருப்பது.

(3) வியாச்சியத்தில் வாதியாவது பிரதிவாதியாவது நியாயசபையாரால் விசாரணை நடத்தப்படவேண்டியதென்றுசுதந்தரித்து கேட்கலாமென்பது.

(4) நியாயசபைக்கு மெம்பர்களை எற்படுத்துவது.

(5) நியாயசபை மெம்பர்களை சம்மன்மூலமாய் முனிசீப் வரவழைப்பது.

(6) நடவடிக்கை.

(7) நியாயசபையில்சேர்ந்து காரியம்நடத்த உள்ளாயிருப்பது.

(8) நியாயசபையில்சேர்ந்து காரியம்நடத்த நிராகரித்தாலும் தவறிப்போனாலும் தண்டனை.

10. வியாச்சியங்களுக்காக ரிஜிஸ்தர்வைக்கவும் நடவடிக்கைகளை எழுதவும் கிராமகர்ணம் முனிஸீபுக்கு உதவிசெய்வது.

11. கிராமஊழியக்காரன் சம்மன் முதலியதை சேர்ப்பிப்பது.

12. கிராமகர்ணம்—கிராமஊழியக்காரன் இவர்களுக்குப் பதிலாகவாவது இவர்களோடுகூடவாவது யாதொருநபரை கலெக்ட்டர் நேமிக்கலாம்.

13. கிராமக்கோர்ட்டுகள் வியாச்சியங்களை விசாரணைசெய்வது.

14. சம்மதத்தின்பேரில் 200 ரூபாய் வரையிலுள்ள வியாச்சியங்களை விசாரணைசெய்ய அதிகாரம்.

15. இன்னகோர்ட்டில் வியாச்சியம் தொடரவேண்டுமென்பது.

16. கிராமமுனிசீப்நேராய் சம்பந்தப்பட்டவராயிருக்கும் வியாச்சியத்தில் இன்னபடி நடப்பது.

17. முன்னடி தீர்மானமாயிருக்கிற விஷயங்கள்.

18. வியாச்சியத்தில் தாவா முழுமையும் சேர்ப்பது, தாவாவில் ஒரு பாகத்தை தள்ளி விடுவது.

19. கிராமக் கோர்ட்டுகளால் விசாரணை செய்யப்படக் கூடாத விஷயங்களை இடையில் தீர்மானிப்பது.

20. கால நிர்ணயம் நிபந்தனை.

21. வியாச்சியங்களை வேறொரு கோர்ட்டுக்கு அனுப்புவது.

22. வியாச்சியத்தை பிரியாது கொடுத்து அதின் மூலமாய் ஆரம்பிப்பது

23 பிரியாது எழுதவேண்டிய விபரங்கள்.

24. நேராக ஆஜராவது அல்லது ஏஜெண்டை ஆஜர்ப்படுத்துவது.

25. பிரதிவாதிக்கு சம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.

26. சம்மன் சேரவொட்டாமல் பிரதிவாதி தப்பித்துக் கொண்டிருக்கும்போது அதை இன்னபடி சேர்ப்பிப்பது.

27. கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியில் பிரதிவாதி இருந்தால் சம்மனை இன்னபடி சேர்ப்பிப்பது.

28. பிரதிவாதி ஆஜராகா விட்டால் நடவடிக்கை வியாச்சியத்தைப் பற்றி இரண்டுகாலையநோட்டீசு கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதிசுதந்தரித்துக் கேட்கலாம்.

29. யாருக்காக கட்டளை பிறப்பிக்கப் படுகிறதோ அந்த கட்சிக்காரனுடைய செலவில் அதைசேர்ப்பிப்பது.

30. வாதி ஆஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வாதியினுடைய தவறுதலினாலே சம்மன் சேர்ப்பிக்கப் படாவிட்டாலும் நடவடிக்கை.

31. வாதி ஆஜராகாதிருந்து பிரதிவாதி தாவாவை ஒப்புக்கொண்டால் நடவடிக்கை.

32. 30-அல்லது 31-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்திரவை காரணம் தெரிவிக்கப்படுவதின் பேரில் ரத்துசெய்வது.

33. பிரதிவாதியின் பேரில் ஒரு தலையாக செய்யப்பட்ட டிக்கிரியை ரத்து பண்ணுவது.

34. எதிர் கட்சிக்காரனுக்கு நோட்டீசு கொடாமல் டிக்கிரியை ரத்து பண்ணக் கூடாதென்பது.

35. இருகட்சிகாரர்களும் ஆஜராவதின்பேரில் நடவடிக்கை.

36. வியாச்சியத்தைத் தள்ளிக் கொள்வது.

37. இன்னபடிக்கானால் வியாச்சியத்தை பிரமாணத்தின்பேரில்பைசல் செய்யலாமென்பது.

38. எதிர்க்கடன்.

39. ஆஜராயிராத சாட்சிகளை சம்மனனுப்பி வரவழைப்பது.

40. சாட்சிகளுக்கு இன்னவிதமாய் சம்மன் சேர்ப்பிப்பது. இன்ன விஷயங்களில் சவால்கள் அனுப்புவது.

41. ஆஜராகி சாட்சியம் சொல்லவாவது தஸ்தாவேஜை கொண்டுவந்து காட்டும்படியாவது சம்மன் பிறப்பிப்பது.

42. சில ஸ்திரீகளும் வேறே சில நபர்களும் நேராய் ஆஜராக வேண்டியதில்லையென்றுநிவாரணை (விலக்கு.)

43. சாட்சிகளை விசாரணை பண்ணுவது.

44. ராஜியாய்ப் போகும் பொருட்டாவது வேறே காரணத்தினலாவது வியாச்சியத்தை நிறுத்திவைப்பது.

45. விசாரணை செய்து முடிந்த பின்பு கோர்ட்டார் டிக்கிரி பிறப்பிப்பது.

46. டிக்கிரியில் எழுதவேண்டிய அம்சங்கள்.

47. டிக்கிரியில் வட்டி தீர்மானிக்கலாம் அல்லது வாயிதாக்களில்செலுத்தும்படி உத்திரவு பண்ணலாம்.

48. இன்ன கோர்ட்டாரால் டிக்கிரி நிறைவேற்றப் படலாமென்பது.

49. டிக்கிரியின்படியாவது வேறே ஏற்பாட்டின்படியாவது பணஞ்செலுத்துவதை முனிசீபுக்கு எதிரில் செலுத்துவது அல்லது ரிகார்டு பண்ணுவது.

50. குறித்த யாதொரு அசையும் பொருளைப்பற்றிய டிக்கிரியை நிறைவேற்றலாமென்பது.

51. தீர்ப்பான கடஞளியை பிடிக்கவும் அசையாப்பொருளை ஜப்தி பண்ணவும் கூடாதென்பது.

52. அசையும்பொருளை ஜப்திபண்ணுவது.

53. தீர்பான கடஞளியினுடைய ஸ்வாதீனத்திலிருந்தால் இன்னபடி ஜப்தி பண்ணுவது.

54. தீர்ப்பான கடஞளியினுடைய ஸ்வாதீனத்திலிராவிட்டால் இன்னபடி ஜப்தி பண்ணுவது.

55. கடன் தொகைகளை இன்னபடி ஜப்திபண்ணுவது.

56. ஜப்திசெய்யப்பட்ட பின்பு பொருளை உள்ளுக்குள்ளாகப் பராதீனம்செய்வது செல்லாதென்பது.

57. ஜப்திசெய்யப்பட்ட பொருளின்பேரில் கொண்டுவரப்படும் தாவாவைக்குறித்து விசாரணைபண்ணுவது.

58. ஜப்திசெய்யப்பட்டபின்பு பதினைந்து நாளைக்கு பின்னிட்டு ஒரு நாளில் பொருளைவிற்பதும் விற்பனையை பிரசித்தப்படுத்துவதும்.

59. விற்பனையில் நடவடிக்கை.

60. எலவிற்பனையை நிறுத்திவைக்க அதிகாரம்.

61. கிராமமுனிசிபும் மற்றஉத்தியோகஸ்தர்களும் விற்கப்படும்பொருளை விலைகேட்கவும் விலைக்குவாங்கவுங்கூடாது.

62. பாக்கித்தொகையும் செலவும் செலுத்தக் கொண்டு வரப்பட்டால் விற்பனையைநிறுத்துவது.

63. விற்றுவந்தபணத்தை பகிர்ந்துகொடுப்பது.

64. நேராய்க் கைப்பற்றப்பட்ட பொருளை கிரயதாரனுக்கு ஒப்பித்து விடுவது.

65. மற்றவிஷயங்களில் இன்னபடி கிரயக்காரனுக்கு பொருளை ஒப்புவித்துவிடுவது.

66. நிறைவேற்றுவதற்காக டிக்கிரியை டிஸ்திரிக்ட்டு முனிசிபுக்கு அனுப்பலாம்.

67. யாதொரு டிக்கிரியை நிறைவேற்றும் அலுவலை டிஸ்திரிக்ட்டு முனிசிபு வரவழைத்துக்கொள்ளலாம்.

68. வியாச்சியத்தைச்சேர்ந்த கட்சிக்காரன் இறந்துபோவதின்பேரில் விண்ணப்பஞ் செய்து கொள்ளப்பட்டால் இறந்து போனவனுடைய நியாயமான பிரதிநிதியை ரிகார்டில் பதிவுசெய் துகொள்ளலாம்.

69. விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படாவிட்டால் வியாச்சியத்தைத் தள்ளிப்போடுவது.

70. வாதிகள் அல்லது பிரதிவாதிகள் ஒருவனுக்கு மேற்பட்டிருந்தால் ஜீவித்திருக்கிறவன் கேட்டுக்கொள்வதினலாவது அவன்பேரிலாவது வியாச்சியம் நடப்பது.

71. டிக்கிரிபெற்றவன் இறந்து போனவனுடைய நியாயமான பிரதிநிதியை அவனுக்கு பதிலாகச்சேர்க்கலாம்.

72. தீர்ப்பான கடஞளி இறந்து போனல் அவனுடைய சட்டசம்பந்தமான பிரதிநிதியின்பேரில் டிக்கிரியை நிறைவேற்றலாம்.

73. கிராமக்கோர்ட்டாருடைய நடவடிக்கைகளை டிஸ்திரிக்ட்டு முனிசீபு பிரிசிலனைபண்ணுவது.

74. டிஸ்திரிக்ட்டு முனிசிபு டிஸ்திரிக்ட்டு ஜட்ஜிக்கு ரிபோர்ட் பண்ணலாமென்பதும் சிலவிஷயங்களில் ரிபோர்ட்டுபண்ண வேண்டுமென்பதும்.

75. நமூனக்கள் எற்படுத்த ஹைகோர்ட்டாருக்கும், ரிகார்ட்டுகளை பரிசோதனைசெய்ய டிஸ்திரிட்டு ஜட்ஜிக்கும், அதிகாரம் உண்டு.

இரண்டாவது பாகம்.

IMPORTANT REVENUE ACTS.

(முக்கியமான ரெவினியூ சட்டங்கள்.)

1822ம் - ஷூ 9 - வது சட்டம்.

ரெவினியூ விவகாரங்களிலே செய்யப்படும் தப்பு தண்டா விஷயங்களை முதலிலே விசாரணை செய்யும்படியான அதிகாரத்தை கலெக்ட்டர்களுக்குக் கொடுக்கிறதற்காகவும், அப்படி விசாரணை செய்வதைக்குறித்தும், கலெக்டர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டவர்களாகிய சர்க்காருத்தியோகஸ்தர் முதலானவர்களாலே அபகரிக்கப்பட்டாவது, லஞ்சமுதலான கெட்ட செய்கையினாலே கைப்பற்றப்பட்டாவது, இருக்கிற பணங்களை வசூல செய்வதைக் குறித்தும் நிபந்தனைகளை ஏற்படுத்துகிறதற்காகவும், மேற்படி விஷயங்களிலே கலெக்ட்டர்கள் செய்யுஞ் சுருக்கமானவிசாரணைத் தீர்ப்புகளின்பேரில் அப்பீல்வியாச்சியங்களை அங்கீகரிக்கும்படிக்கும் விசாரிக்கும்படிக்கு யேற்பாடு செய்வதற்காகவும், இந்த சட்டத்திற் பிரஸ்தாப்பிக்கப்பட்ட குற்றமான தப்புகளைக்குறித்து தண்டனை செய்வதற்குக் குற்றவிசாரணை நியாயாதிபதிகளுக்கும், சஞ்சார நியாயசபையாருக்கும் அதிகாரமின்னதென்று விவரிக்கிறதற்காகவும் - 1802 - ஷூ 33 - வது சட்டத்தை ரத்துசெய்து விடுகிறதற்காகவும் விதிக்கப்பட்ட சட்டம்; இது, 1822-ஷூ டிசம்பர்மீ 20உ சென்னபட்டணத்துக்கோட்டை ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களாலே விதிக்கப்பட்டது.

பீடிகை:—கலெக்ட்டர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டிருக்கிற சர்க்காருத்தியோகஸ்தர்களாவது கிராமவுத்தியோகஸ்தர்களாவது அல்லது மற்றெவர்களாவது மேற்படி கலெக்ட்டர்களுடைய நிமித்தமென்றாலும், அல்லது அவர்களுடைய அதிகாரத்தை மேற்கொண்டானாலும், அவர்களுத்தரவு கொடுத்தார்களென்று பொய்யாகச் சொல்லியாகிலும், சர்க்கார்ப்பணத்தை அபகரித்துக் கொண்டார்களென்றாவது வசூல் செய்யும்படி நியமிக்கப்பட்டதல்லாத பணத்தண்டலைச் செய்தார்களென்றாவது, லஞ்சம் வாங்கினார்களென்றாவது, பண மதிப்புள்ள வஸ்துக்களைக் கொடுக்கும்படி செய்தார்களென்றாவது, கலெக்ட்டர்களுக்கு தெரியவந்தால், அந்த விஷயங்களைக்குறித்து அவர்களே சுருக்கமான விசாரணைசெய்து தீர்மானம் பண்ணும்படிக்கும் அப்படிப்பட்ட விஷயங்களிலே அவர்கள் செய்யுந் தீர்மானங்களை அனுஷ்

டானத்துக்கு கொண்டுவரும்படி கட்டாயப்படுத்தவும் அவர்களுக்கே அதிகாரம் கொடுக்க வேண்டியதானது துரைத்தனத்தாருடைய வருமானங்கள் பந்தோபஸ்தாயிருக்கிறதைக்குறித்தும் பிரஜைகளுக்கு சவுக்கிய முண்டாக்குகிறதைக் குறித்தும் அவசியமாயிருக்கிறபடியினுலேயும், அப்படி கலெக்ட்டர்கள் செய்யுந் தீர்ப்புகளின்பேரில் அப்பீல், சாதாரணமான நியாய சபையாராலே ஜனங்களுக்கு அசவுகரியமில்லாமலும், கூடுமான சீக்கிரத்திலும் விசாரிக்கப் படக் கூடாமலுமிருக்குமாகையாலும் சில விஷயங்களில் ஷெ. அப்பீல்களை விசாரிக்கிறதற்கு கமிஷனர்களை நியமிக்கும்படி செய்வது அவசியமாயிருக்கிறபடியினுலேயும், பின்னும், லஞ்சம் வாங்குதல் முதலான இந்த சட்டத்திற் காட்டிய குற்றங்களைக் குறித்துத் தண்டனை விதிப்பதில், குற்றவிசாரணை செய்யும் நியாயாதிபதிகளாலேயும், சஞ்சார நியாயசபையாராலேயுஞ் செலுத்தப்படுகிற அதிகாரத்தை யின்னதென்று விவரித்துக் காட்டவேண்டிய தவசியமா யிருக்கிறபடியினுலேயும், மேலும் 1802-ஹூத்து 33-வது சட்ட நிபந்தனைகள் - எந்தகாரியத்திற்காக உத்தேசித்து யேற்படுத்தப்பட்டதோ அந்தக் காரியத்திற்கு லாயக்கற்றதாய்ப்போயிருப்பதாக தெரியவந்திருக்கிறபடியாலேயும் அந்த சட்டத்தை ரத்துசெய்து விடுகிறது யுக்தமென்று தோன்றின படியினுலேயும் இதற்கடியில் கண்ட நிபந்தனைகளை ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்கள் எற்படுத்தியிருக்கிறுர்கள்.

2. ரீவினியூ விவகாரங்களிலே செய்யப்படும் தப்பு தண்டாக்களைப் பற்றி முதலிலே விசாரிக்கிறதற்குக் கலெக்ட்டர்களுக்கதிகாரமுண்டு :— I. இதற்கடியிற் காட்டிய பலவகை ஜனங்களுக்குள் எவர்களாவது இந்தப்பிரிவின் இரண்டாவது உட்பிரிவில் விவரித்துக் காட்டிய எந்தமாறுபாடான செய்கையையாவது வேணுமென்று செய்தார்களென்ருவது செய்வித்தார்களென்ருவது குற்றஞ் சாட்டப்பட்டாவது அனுமானந்தோற்றப்பட்டாவது இருக்கிற சகலவிஷயங்களையும் முதலிலே விசாரணை செய்வதற்கும், அப்படி, குற்றஞ் சாட்டப்பட்டாவது, அனுமானந் தோற்றப்பட்டாவதிருக்கிறவர்கள் பேரிற் குற்றம் ருசுவானதற்குமேல் இந்த சட்டத்தினுலே தீர்மானம் பண்ணுகிறதற்குக் கலெக்ட்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப்படி தண்டனைவிதிக்கிறதற்கும், ரிவின்யூ கலெக்ட்டர்களுக்கு இதினுலே அதிகாரங் கொடுக்கப்படுகிறது.

II. இந்த சட்டப்படி விசாரிக்கப்படத்தக்க குற்றங்களின் விவரம் :— இந்தசட்டப்படி கலெக்ட்டர்களாலே விசாரிக்கப்படத்தக்க குற்றங்களின் பலவகைகள் இதற்கடியில் விவரிக்கப் பட்டிருக்கின்றவை:—

(1) ஸர்க்கார் உத்தியோக காரியங்களைச் செய்கிறதற்காகப் பணம் முதலானதுகளை அநியாயமாய் வாங்குகிறதும் கேட்கிறதும் :— சர்க்காருத்தியோகங்களிலே எப்படிப்பட்ட காரியத்தைச் செய்கிறதற்காகப் பணமுதலான பொருள்களைக் கேட்கிறதற்கும் வாங்குகிறதற்கும் நியாயமில்லாமலிருக்குமோ

அப்படிப்பட்ட காரியத்தைச் செய்கிறதற்காவது, செய்விக்கிறதற்காவது, அல்லது, பணமுதலான பொருள்களைக் கொடுத்தால் அப்படி பொருள் கொடுத்தவர்களுக்கு நியாயத்துக்கு விரோதமான சில லாபத்தையுண்டாக்குகிறதற்காவது, உண்டாக்குகிறேனென்று சொல்லுகிறதைக் குறித்தாவது பணமுதலான விலைபெற்றபொருள்களை நேராயாவது மற்றொருவர் மூலமாயாவது, தனக்குக்கொடுக்கும்படி செய்தல், அநியாயமாய் வாங்குதல்.

(2) **சட்டத்தின் பிரகாரம் விதிக்கப்பட்ட வரிகளுக்கு மேல் ஜாஸ்தியாய் சேட்டு வசூல் செய்வது**:—யாதொரு சட்டத்தினாலேயாவது, துரைத்தனத்தாரவர்களுடைய யாதொரு கட்டளையினாலேயாவது ஏற்படுத்தப்படாத வரிகளையாவது, அதிக பணத்தொகையையாவது ஜாஸ்திவசூலென்று சொல்லப்பட்ட அதிகபணத்தண்டலாக தங்களுடைய சொந்தப் பிரயோசனத்துக்காக வசூல் செய்தல் அல்லது வசூல் செய்யும்படி செய்தல்;

(3) **சர்க்கார் பணங்களை அபகரித்தல்**:—சர்க்கார் பணங்களை அபகரித்தல் அல்லது அவைகளை நியாயத்தப்பாக உபயோகப்படுத்தல்.

(4) **சர்க்கார் கணக்குகளிலே புரட்டாக பதிவு செய்தல்**:—கலெக்டருடைய விசாரணைக்குட்பட்ட எந்தவகையிலாவது சேர்ந்த சர்க்கார் பணத்தின் வரவு செலவுகளைக்குறித்தாவது, நிலத்தினளவு, மதிப்பு, தரம், தீர்வை இதுகளைக்குறித்தாவது, சர்க்கார்கணக்குகளிலாவது தஸ்தவேஜுகளிலாவது புரட்டாயாவது, தப்பாயாவது, கணக்கு பதிவுசெய்தல்.

(5) **சர்க்கார் கணக்குகளை தப்பாகச்செய்தல், அழித்தல், மறைத்தல்**:—சர்க்கார்பணத்தின் வரவு செலவுகளிலே சம்பந்தப்பட்ட எவ்விதமான சர்க்கார்கணக்குகள் முதலான சாதனங்களை வேணுமென்று தப்பாகச்செய்தல், அழித்தல், மறைத்தல்.

III. **இந்த சட்டப்படி கலெக்ட்டர் அதிகாரத்துக்குட்பட்டவர்கள் பலானவர்கள் என்பது**:— இந்த சட்டத்தினாலே சுருக்கமான விசாரணை தீர்மானம் தண்டனை இதுகளைச் செய்யும்படி கலெக்ட்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மேற்படி கலெக்ட்டர்கள் எவர்கள்பேரிற் செலுத்தலாமோ அவர்கள் பலானவர்களென்று இதற்கடியில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

(1) கலெக்ட்டருடைய அதிகாரத்துக்குட்பட்டவர்களாய் நியமிக்கப்பட்டிருக்கிற சுதேச உத்தியோகஸ்தர்கள்எல்லாரும்.

(2) அந்தந்த கலெக்ட்டர்களுடைய ஜில்லாக்களுக்குட்பட்ட சகல கிராமங்களின் தலைக்குடித்தனக்காரர்கள் அதாவது மணியக்காரர் நாட்டாமைக்காரர் முதலானவர்கள், கணக்கர்கள், அவர்களுடைய குமஸ்தாக்கள், அல்லது அவர்களுக்காக வேலைபார்க்கிறவர்கள் இவர்கள் முதலான சகலகிராம நவுக்கர்களும், ஊழியஞ்செய்கிறவர்களும்.

(3) சர்க்காருத்தியோகஸ்தர் வகையிற் சேராதவர்களாய் கலெக்ட்டர், ஸப்கலெக்ட்டர், அசிஸ்டாண்டுகலெக்ட்டர், இவர்களுடைய சொந்த ஊழியக்காரர்களாயிருந்துகொண்டே மேற்படியார்களுடைய அதிகாரத்தைக் கொண்டு காரியத்தை நடப்பிக்கிறவர்களென்று பொய்யாகச் சொல்லுகிறவர்கள். தங்களை சர்க்காருத்தியோகஸ்தர்களாக பிறர் எண்ணி கொள்ளும்படி செய்கிறவர்கள், ரிவினியூ வுத்தியோகஸ்தர் கிராமவுத்தியோகஸ்தர் இவர்களுடைய உத்தரவைக்கொண்டு காரியத்தைநடப்பிக்கிறவர்கள், அல்லது மேற்படியாருடைய அதிகாரத்தைக்கொண்டு நடப்பிக்கிறோமென்று பொய்யாகச் சொல்லுகிறவர்கள், இப்படிப்பட்டவர்களாகிய மேற்படி சர்க்காருத்தியோகஸ்தர் வகையிற்சேராதவர்கள் எந்தவகையிலாகிலுஞ்சேர்ந்த சர்க்கார்பணத்தை வசூல்செய்தல், செலவிடுதல், இதுகளில் தாங்களேபிரவேசித்தாலும், அல்லது சர்க்கார் பணமென்றாவது ரிவினியூகாரியங்களுக்கென்றாவதுபணத்துகையைகேட்டாலும் வாங்கினாலும், அல்லது பணமுதலான பொருள்களைக் கொடுத்தால் அப்படி பொருள்கொடுத்தவர்களுக்கு நியாயத்துக்குவிரோதமான சில லாபத்தை யுண்டாக்குகிறதற்காவது, உண்டாக்குகிறோமென்று சொல்லியாவது, பணமுதலான விலைபெற்றபொருள்களைத் தங்களுக்குக் கொடுக்கும்படிசெய்தாலும், அநியாயமாய்வாங்கினாலும் இப்படிப்பட்ட காரியஞ் செய்கிறவர்களெல்லாரும் இந்த சட்டத்தினாலே கலெக்ட்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகார விசாரணைக்குட்படுவார்கள்.

3. (1) **சாட்சிகளை அழைப்பிக்கிறதற்கும் சாஸன நகுவுகளை கேட்கிறதற்கும் கலெக்ட்டர்களுக் கதிகாரமுண்டு:**—இந்த சட்டத்திற் சொல்லப்பட்ட விஷயங்களைக் கிரமமாய் விசாரிக்கிறதற்கும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களாயாவது, அனுமானந் தோற்றப்பட்டவர்களா யாவதிருக்கிறவர்கள் பட்சத்திலும், அவர்களுடைய எதிர்ப்பட்சத்திலும் வேண்டிய சகல சாட்சிகளையும் தங்கள் முன்பாக அழைப்பிக்கிறதற்கும் தஸ்தாவேஜ்சாக்ஷியங்களை ஆஜர் படுத்தும்படி செய்கிறதற்கும், கலெக்ட்டர்களுக் கதிகாரமுண்டு; அந்தகாரியங்களுக்காக மேற்படி கலெக்ட்டர்களாலே பிறப்பிக்கப்படுகிறசம்மனில்அவர்களுடைய வுத்தியோக முகரும் கையெழுத்தும் செய்யப்பட வேண்டியது. அதிலே சாட்சிகள்வந்து காத்திருக்கவேண்டியகாலமும் இடமுமின்னதென்றும் தஸ்தாவேஜ் நகுவுகளைப் பார்வையிடவேண்டியிருந்தால் அதுகளை எந்த சாட்சிக்காரர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த சாட்சிகள் மேற்படி தஸ்தாவேஜ்களைக்கொண்டுவரும்படிக்கு உத்தரவுங் கண்டெழுதப்பட்டிருக்கவேண்டியது.

(3) **வேறேநு ஜில்லாவிலிருக்கிற சாட்சிக்காரர் அவர்கள் குடியிருக்கும் ஜில்லா ஜட்ஜினாலே விசாரிக்கப்படுவார்கள்:**—எந்தசாட்சியினுடைய வாக்குமூலங் கலெக்ட்டருக்கு வேண்டியிருக்குமோ அந்த சாட்சிக்காரன் மேற்படி கலெக்ட்டரிட அதிகார எல்லைக்கு வெளிப்பட்ட இடத்திற் குடியிருந்தால், கலக்டர் மேற்படி சாட்சி எந்த ஜில்லாவின் எல்லைக்குட்பட்டவிடத்திற்

குடியிருக்கிருனே அந்த ஜில்லா நியாயதிபதியிடத்துக்கு எழுத்துமூலமாய் ஸவால்களைக்கண்டு - அதாவது எந்தெந்த அம்சங்களுக்கு அவர்களிடமிருந்து பதில் வேணுமோ அந்த அம்சங்களை எழுத்துமூலமாய்க்கண்டு—அனுப்பவேண்டியது. அந்த கேள்விக்கு உத்தரவுகளை எழுத்துமூலமாகவாங்கி மேற்படி கலெக்ட்டரிடத்துக் கனுப்பிவிக்கவேண்டியது. மேற்சொன்னமாதிரியாக, துரைத்தனத்தாரவர்களுடைய பட்சத்திலாவது, குற்றஞ் சாட்டப்பட்டவன் பட்சத்திலாவது மேற்கண்டவிதமாய் கேள்விகளின்பேரிற் சாட்சிவிசாரிக்கப் படும்போதெல்லாம், எதிர்க்கக்ஷிக்காரன், மாறு ஸவால்களை அனுப்புவிக்கக் கூடும் அந்த மாறுஸவால்களுக்கு சாட்சிகளுடைய ஜவாப்புகளை அதினுடனே கூட மேற்காட்டியபடி வாங்கி அனுப்பிவிக்கவேண்டியது.

4. இந்தசட்டப்பிரகாரம் பண்ணப்படுகிற விசாரணை சுருக்கமாயிருக்க வேண்டியது:—இந்த சட்டத்தினுலே கலெக்ட்டருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப்படி செய்யும் விசாரணைகள் சுருக்கமானவைகளாயிருக்கவேண்டியது; சாக்ஷியமாக ஆஜர்செய்யப்படுகிற சகல ரிகார்டுகளிலும், கலெக்டர் தம்மிட கையெழுத்தாவது இனிஷியலாவது செய்யவேண்டியது. அவைகள் ஆஜர் செய்யப்பட்ட தேதியையும் போடவேண்டியது, குற்றஞ்சுமத்தப்பட்டவன் சொல்லும் டிபன்ஸ்வாக்குமூலத்தை சுருக்கமாகவும், மேலும், கலெக்ட்டர்கள் செய்யுந் தீர்மானத்தையும் அதுக்குள்ளஹேதுக்களையும், ரிகார்ட்டில் எழுதவேண்டியது.

5. (1) இந்தசட்டத்து 2-வது பிரகரணத்தி னிரண்டாவது உட்பிரிவிற் காட்டிய, 1-வது, 2-வது, 3-வது, வகையிற்சேர்ந்த குற்றம் நிச்சயிக்கப்பட்டவர்களுக்குக் கலெக்ட்டர்கள் செய்யுந் தீர்மானம்:—இந்த சட்டத்து 2 - வது பிரகரணத்து மூன்ருவதுட்பிரிவிற் காட்டிய எந்தவகையாரிற் சேர்ந்தவர்கள் பேரிலாவது, இந்தசட்டப்படி விசாரணை செய்ததற்குமேல், மேற்படி பிரகரணத்து இரண்டாவதுட்பிரிவிற் காட்டிய முதலாவது, இரண்டாவது, மூன்ருவதுவகையிற்சேர்ந்த எந்த குற்றத்தைக்குறித்தாவது கலெக்ட்டர் முன்பாகக் குற்றம் நிச்சயிக்கப்பட்டால் அப்பொழுது, மேற்படியாராலே தங்களுக்குக்கொடுக்கும்படி செய்யப்பட்டாவது, தகுதியல்லாமல் வாங்கப்பட்டாவது, அபகரிக்கப்பட்டாவது, தப்பாக உபயோகப்படுத்துவிக்கப்பட்டாவது காணப்பட்டபணத்தொகைக்கு இரட்டிப்புக்கு மேற்படாமல், யுக்தமாய்க் காணுகிறதொகையை அவர்கள் கொடுக்கும்படி தீர்மானம் பண்ண வேண்டியது.

(2) குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறவனாக்கும் காவலில் வைக்கப்படுவார்கள்:—மேற்பிரகரணத்தின் பிரகாரம் பணங்கொடுக்கும்படி கலெக்ட்டராலே தீர்மானம் பண்ணப்பட்டபின்பு எவன்பேரில் அப்படி தீர்மானம்பண்ணப்பட்டதோ அவன் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறவனாக்கும், முதலிலே கலெக்ட்டருடை கச்சேரியிலும், அவசிய

மானால் அதற்குமேல் அடியிற்கண்டமாதிரியாக ஜில்லா ஜெயிலிலும் காவற் படுத்தி வைக்கப்படுவான்.

(3) **கலெக்ட்டர்கள் செய்யுந் தீர்மானங்கள் இன்னபடி நிறைவேற்றப் படவேண்டியதென்பது :**—மேற்கண்ட பிரகரணத்திற் சொன்னபடி பணத்தை வசூல்செய்கிறதற்காகக் கலெக்ட்டர் செய்யுந் தீர்மானங்கள், ஜில்லா நியாயசபையார் செய்யுந் தீர்மானங்களை நிறைவேற்றுகிறவிதமாய் கலெக்ட்டருடைய உத்தியோக முத்திரையுங் கையெழுத்தும் போடப்பட்ட வாரண்டென்னுங் கட்டளையினாலே நிறைவேற்றப்படவேண்டியது. அதிலே, மேற்படி தீர்மானம் எவன்பேரிற் பண்ணப்பட்டதோ அவனுடையபெயரும் கலெக்ட்டர் மேற்படிதீர்மானம் பண்ணினதேதியும், வசூல்செய்யவேண்டிய பணத்தொகையுங் கண்டெழுதப்படவேண்டியது. மேற்படி கட்டளையை நிறைவேற்றுகிறதிலே, பணங்கொடாதவனுடையசொத்து எந்தவிடத்திலாலாவது, எவன்வசத்திலாவது காணப்பட்டாலும் அதைக்கைப்பற்றிக்கொள்ள வேண்டியது. பணம் செலுத்தவேண்டிய குற்றவாளியினுடைய சொத்தென்று நம்ப நல்லஹேது இருக்கும்போது அந்தசொத்தானது தன்னுடையது என்று வேறேயாராவது பாத்தியதை சொல்லிக்கொண்டாலும் அதைப்பற்றி நிமித்தியமில்லாமலே வாரண்டை நிறைவேற்றவேண்டிய உத்தியோகஸ்தர் அந்தசொத்தை ஜப்திசெய்யவேண்டியது. அப்படி ஜப்திசெய்யப்பட்ட சொத்து அசையும்பொருள் சொத்தானால், கலெக்ட்டர்முன்பாகக் கொண்டுவரப் படவேண்டியது. ஜங்கமசொத்தானால், அதைக்குறித்து பூர்த்தியாய் ரிபோர்டுசெய்யவேண்டியது; அவர், அந்த சொத்தின்விஷயமாய் சொல்லப்படுகிற பாத்தியதையைக்குறித்துத் தாமே சுருக்கமான விசாரணைசெய்யவேண்டியது; அல்லது-அப்படிவிசாரணைசெய்யும்படி பஞ்சாயத்தாருக்கனுப்பவேண்டியது; மேற்படிசொத்து பணம்செலுத்தவேண்டியவனுக்கு வாஸ்தவமாய் சொந்தமானதென்று ருஜுவானால் அதினுடைய தன்மையையும் மதிப்பையுங் குறித்து விவரமாய் கலெக்ட்டருடைய இந்தகேஸ் ரிகார்ட்டிலே பதியவேண்டியது அதின்பின்பு அந்தசொத்தை வாரண்டையனுசரித்து ஜப்தி செய்யப்படுகிறமற்றசொத்துகளை விற்பனைசெய்வது போலவே விக்கிரயம் பண்ணும்படி கலெக்ட்டர் உத்தரவு செய்யவேண்டியது.

(4) **இந்த சட்டத்து 2-வது பிரகரணத்து இரண்டாவ துட்பிரிவிற் சொல்லிய 4-வது 5-வது வகையிற்சேர்ந்த குற்றம் நிச்சயிக்கப்பட்டவர்கள் இன்ன தண்டனை விதிக்கப் படுவார்கள் :**—மேற்சொன்ன ஆசாமிகள் இந்த சட்டத்து 2 - வது பிரிவின் 2 - வது பிரகரணத்தில் சொல்லிய 4, 5-வது வகையிற்சேர்ந்த எந்தக்குற்றங்களையாவது செய்ததாக நிச்சயிக்கப்பட்டால் அப்பொழுது கலெக்ட்டர் 500 - ரூபாய்க்கு மேற்படாமல், தகுதியாய்த் தோன்றுகிற அபராதத்தை மேற்படி குற்றம் செய்தவனுக்கு விதிக்கவேண்டியது. மேலும் அப்படி விதிக்கப்பட்ட அபராதத்தைக் கொடாவிட்டால்

அந்த குற்றவாளியைப் பன்னிரண்டு மாதத்துக்கதிகப்படாத ஓர் காலத்திற்கு அவனை பணங்கொடுக்கிறவனாக்கும் காவலில் வைக்கும்படி மேற்படி கலெக்ட்டர் தீர்மானம் பண்ணவேண்டியது.

6. சர்க்காருத்தியோகஸ்தன் கொடுக்கவேண்டிய பணத்தொகை யிவ்வளவென்று கலெக்ட்டர்கள் எழுதிக்கேட்கிற விஷயங்களின்னது, அவைகளிலே நடத்தவேண்டிய நடவடிக்கைகளின்னதென்பது :—பணம் சர்க்காருத்தியோகஸ்தன்வசத்திலொப்புவிக்கப்பட்டும், அந்தப்பணம் அபகரிக்கப்பட்டாவது வேண்டியபொழுது ஆஜர்படுத்தப்படாமலாவது போயும், அப்படி அபகரிக்கப்பட்ட பணத்தொகை யிவ்வளவென்று நிச்சயமாய் கச்சேரி சர்க்கார் கணக்குகளாலே வியக்த்தமாய் ஏற்பட்டுமிருக்கிற விஷயங்களில் சாக்ஷி விசாரணை அனாவசியம். அப்பேர்க்கொத்த விஷயங்களில் கலெக்ட்டர்கள் மேற்படி சர்க்காருத்தியோகஸ்தன் கொடுக்கவேண்டிய பலான பணத்தொகையை கொடுக்கவேண்டியதென்று எழுத்து மூலமாய்க் கேட்டதின்பேரில் அவன் அந்தப்பணத்தை கொடுக்கமாட்டேனென்று சொன்னாலும் அல்லது அதைக் கொடாமற் போனாலும் அதற்குமேல் சர்க்கார் தீர்வை பாக்கியை வசூல் செய்கிற விதமாக மேற்படி பணம் கொடாதவனுடைய சொத்தை ஜப்திசெய்து ஏலம்போட்டாவது அவசியமாயிருந்தால் அவனைக்காவலில் வைத்தாவது அந்தபணத்தை வசூல் செய்யவேண்டியது.

குறிப்பு :—இந்த பிரிவுபிரகாரம் கலெக்ட்டர் செய்த உத்திரவுக்குமேல் போர்ட்டாருக்கு அப்பீலுண்டு. உத்திரவு தேதியிலிருந்து 3-மாதத்திற்குள் கலெக்ட்டர் துவாரா போர்ட்டாருக்கு அப்பீல் செய்யவேண்டியது. தகுந்த காரணம் சொல்லும்பக்ஷத்தில் 3-மீ த்திற்குமேலும் அப்பீல் அங்கீகரிக்கப்படும்.

7. கலெக்ட்டர்கள் குற்றஞ் சாட்டப் பட்டவர்களாயாவது அனுமானந் தோற்றப் பட்டவர்களாயாவ திருக்கிறவர்களைக்குறித்து இனி செய்யப்போகிற தீர்மானத்தை நிறைவேற்றுகிறதற்காக அவர்களிடத்தில் ஜாமீன் கேட்பதைப்பற்றி:— இந்த சட்டப்படி விசாரணை செய்வதற்கு எத்தனப்படும்போதெல்லாம் குற்றஞ் சாட்டப்பட்டவனாகவாவது அனுமானந்தோற்றப்பட்டவனாகவாவதிருக்கிறவன் மேற்படி விசாரணையான பின்பு செய்யப்படும் உத்தரவுக்காவது தீர்மானத்துக்காவது உட்படாமல் தப்பித்துக் கொள்ளுகிறதற்காகத் தன்னுடைய சொத்தை மறைத்து வைத்தானென்றாவது, மோச எண்ணத்துடன் மற்றொருவனிடம் வசப்படுத்தினானென்றாவது, அப்படி செய்ய எத்தனப்பட்டானென்றாவது, நம்புகிறதற்கு தக்க ஹேது இருப்பதாக மேற்படி கலெக்ட்டருக்குத் தோன்றினால் அப்பொழுது, கலெக்ட்டர் தாம் இனிமேல் செய்யக்கூடிய தீர்மானத்தை நிறைவேற்றுகிறதற்காகத் தகுதியாய் தமக்குத் தோன்றுகிற தொகைக்கு மேற்படியானிடத்திற் ஜாமீன் கேட்கவேண்டியது. கேட்டபடி தகுதியான ஜாமீன்களைக் கொடாவிட்டால் மேற்படி குற்றஞ் சுமத்திச் சொல்லப்பட்டவனாகவாவது அனுமா

னந் தோற்றப்பட்டவனுகவாவதிருக்கிறவனுடைய சொத்தை ஜப்திபண்ணு கிறதற்கும் மேற்படி விசாரணேயில் தீர்மானஞ் செய்கிறவனைக்கும் அதை ஜப்தியில் வைக்கும்படி செய்கிறதற்கும் மேற்படி கலெக்ட்டருக்கதிகாரமுண்டு. அப்படிப்பட்ட விஷயங்களிற் பிறப்பிக்கப்படும் ஜப்தி கட்டளேயின் ஆதாரத்தைக்கொண்டு, குற்றஞ்சுமத்திச் சொல்லப்பட்டவனுகவாவது அனுமானந் தேற்றப்பட்டவனுகவாவதிருக்கிறவனுடைய சொத்து எவ்விடத்திலாவது எவன்வசத்திலாவது இருந்தபோதிலும், அந்த சொத்தைத் தொடரலாம்; இந்த பிரகரணப்படி ஜப்தி பண்ணப்பட்ட சொத்து தன்னுடையதென்று மற்றொருவனுலே பாத்தியத்தை சொல்லப்பட்டால் அப்பொழுது கலெக்ட்டர் இந்தசட்டத்து 5–வது பிரகரணத்தின் மூன்ருவது உட்பிரிவில் இப்பேர்கொத்த விஷயங்களில் விதிக்கப்பட்டிருக்கிறபடி நடக்கவேண்டியது.

8. **கலெக்ட்டர் இன்னவிஷயங்களிலே பணங் கோடாதவர்களுடைய சொத்தைத் தம்மிடத்தி லொப்பிவிக்க வேண்டியதென்று விளம்பரம் பிரசித்தம் செய்வது :—** குற்றஞ் சாட்டப்பட்டவனுகவாவது அனுமானந் தோற்றப்பட்டவனுகவாவதிருக்கிற எவனுனலும் 7 - வது பிரகரணத்திற் சொன்னபடி கலெக்ட்டர் கேட்டபடி ஜாமீன் கொடாதவிஷயங்களிலும், இந்த சட்டத்தின் 5-வது பிரகரணத்தின் முதலாவது உட்பிரிவிற் காட்டிய நிபந்தனேகளின்படி தீர்மானஞ் செய்யப்பட்ட விஷயங்களிலும், ஒருவன் இந்தச்சட்டத்தின் 6 - வது பிரகரணத்திற் காட்டிய நிபந்தனேகளின்படி தன்னேக் கேட்டபணத்தைக் கொடாதவிஷயங்களிலும், கலெக்ட்டர் மேற்படி பணங் கொடாதவனுடைய சொத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அந்தச்சொத்தைப் பதினேந்து நாளேக்குக் குறையாமல் எற்படுத்திய ஒரு கெடுவுக்குள்ளாகத் தம்மிடத்தில் ஒப்புவிக்க வேண்டியதென்று விளம்பரத்தினுலே தெரியப்படுத்தவேண்டியது, மேற்படி விளம்பரம் பிரசித்தமாகி அதிற் காட்டிய கெடுவின் காலமானபின்பு எவனுவது, மேற்படி சொத்துக்களே வஞ்சனேயாய் மறைத்து வைத்தானென்ருவது, அப்படிச் செய்தவனுடனே கலந்திருந்து அந்தச்சொத்தை வஞ்சனேயாக வாங்கினுனென்ருவது, குற்றவிசாரணே நியாயாதிபதி முன்பாகக் குற்றம் நிச்சயிக்கப்பட்டால் அப்பொழுது அவன் தன்னுலே வஞ்சனேயாக மறைத்து வைக்கப்பட்டதாயாவது, வஞ்சனேயாக வாங்கப்பட்ட தாயாவதிருக்கிற சொத்தின் மதிப்புக்கு மூன்றத்தனே தொகைபணம் அபராதமாகக் கொடுக்கும்படி செய்வதும், அந்த அபராதங் கொடுக்கிறவனைக்குங் காவலிலிருக்கும்படி செய்வதுமாகிய தண்டனேயை மேற்படி குற்றவிசாரணே நியாயாதிபதியினுலே விதிக்கப்படுவான். குற்றவிசாரணே நியாயாதிபதிக்கு இதினுலே மேற்படி விஷயங்களே விசாரணே செய்வதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது, குற்றவிசாரணே நியாயாபதி மேற்படி அபராதத்தொகையை வழககமான கட்டளேயைக்கொண்டு வசூல் செய்யவேண்டியது, அபராதத்தொகை முழுதும் வசூல் செய்யாதபடிபோனுல், குற்றவாளியை ஜில்லா ஜெயிலில் வைக்கவேண்டியது, ஆனுல், இந்தப்

பிரகரணப்படி விதிக்கும் காவல்காலம் எவ்விதத்திலும் பன்னிரண்டு மாசத்துக்கதிகப்படக்கூடாது.

9. கலெக்ட்டர்கள் இன்னவிஷயங்களிலே கணக்குகள் முதலான தஸ்தாவேஜுகளைச் சோதிக்கிறதைக்குறித்துச் சோதனைக்கட்டளையைப்பிறப்பிக்கவேண்டியது:—ரெவினியூ காரியங்களைச்சேர்ந்த தஸ்தவேஜுகள் கணக்குகளாவது, ரெவினியூவிஷயங்களிற்செய்த தப்புதண்டா சம்பந்தமான தஸ்தவேஜுகள் கணக்குகளாவது பலானவிடத்தில் வஞ்சனையாகமறைத்துவைக்கப்பட்டிருக்கின்றனவென்று கலெக்ட்டருக்குத் தெரிவிக்கப்பட்டால், அப்பொழுது அவர், அந்தக்கணக்கு முதலானதுகளிருக்குமிடங்களைச்சோதிக்கும்படி தம்முடைய கச்சேரி உத்தியோகஸ்தர் ஒருவர் பேருக்காவது, ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்காவது எழுதித் தம்முடைய உத்தியோக முத்திரையுங் கையெழுத்தும் போட்டு உத்தரவு கொடுக்கப்படுகிற ஸர்ச்சு வாரெண்டென்னுஞ் சோதனைக்கட்டளையைப் பிறப்பிக்கவேண்டியது. அந்தச்சோதனைக்கட்டளையை சூரியோதயமுதல் அஸ்தமானபரியந்தம் பகல்காலத்தில் மாத்திரமே நிறைவேற்றவேண்டியது, கூடுமானால் மேலும் அந்தப்பிரகாரம் சோதிக்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்ட வீடுமுதலான இடங்களெந்தக் கிராமத்திலிருக்கின்றனவோ அந்தகிராமத்தில் கண்ணியமுள்ள இரண்டு மூன்று குடித்தனக்காரர்களை வைத்துக்கொண்டு நிறைவேற்றவேண்டியது, மேற்படி கட்டளைகளின் ஆதாரத்தைக்கொண்டு ஜப்திபண்ணப்பட்ட கணக்குமுதலான சகலசாஸனங்கள் எல்லாவற்றையும் கண்டு ஒருஜாபிதாவை அவ்விடத்திலேதானே எழுதவேண்டியது, இதற்கு ஒருநகலும்எழுதி அவ்விரண்டு பிரதிகளிலும் அந்தக்கட்டளையை நிறைவேற்றின உத்தியோகஸ்தன், அவ்விடத்திற் சாட்சிகளாயிருந்த குடித்தனக்காரர், இவர்களுடைய கையெழுத்துசெய்யப்படவேண்டியது. மேற்படி அட்டவணைகளிலொருபிரதியை அந்தவீட்டிற் குடியிருக்கிறவனிடத்திலாவது அவனுக்காக அவனுடைய மனுஷனிடத்திலாவது கொடுக்கவேண்டியது. மற்றொருபிரதியை கலெக்ட்டரிடத்தில் மறுபடியும் மேற்படிவாரண்டு கட்டளையைத்திருப்பிஅனுப்பும்போது அத்துடன்சேர்த்தனுப்பவேண்டியது. ஆனால் ஸ்திரீகள் சாதாரணமாய் வெளியிலே புறப்படுகிற வழக்கமில்லாதவர்கள் வீட்டின் அந்தப்புரங்களிலே ஸ்திரீகள் தவிர மற்றெவர்களாவது போகலாமென்று இதிற்காட்டிய எந்தவிதிகளாலும் தாற்பரியப்படவில்லை.

10. இந்த சட்டப்படி கலெக்ட்டர்கள் செய்யுமுத்தரவுகளை நிறைவேற்றுகிறதற்குச் சொத்துகளை விக்கிரயம் பண்ணவேண்டிய விதம்:—இந்த சட்டப்படி கலெக்ட்டர்கள் செய்யும் உத்தரவையாவது தீர்மானத்தையாவது நிறைவேற்றுகிறதற்காகச் சொத்துகளை விக்கிரயம் பண்ணவேண்டியதவசியமாயிருக்கும்போதெல்லாம் அந்தவிக்கிரயத்தை தாசீல்தாராவது, அதற்காகக் கலெக்ட்டராலே நியமிக்கப்படுகிற வேறே சர்க்காருத்தியோகஸ்தராவது நடத்தவேண்டியது.

12. எவனிடத்தில் அநியாயமாய்ப் பணம்வாங்கப்பட்டதோ அவனுக்கு அந்தப்பணமுழுதையுமாவது அதினொருபாகத்தையாவது கலெக்ட்டர் கொடுக்கலாம்:—எந்தமனிதர்களிடமிருந்து பணம் அனியாயமாய் கேட்கப்பட்டதோ அல்லது வாங்கப்பட்டதோ அப்படிப்பட்டபணம் இந்தசட்டத்தின் நியமங்கள்பிரகாரம் வசூல்செய்யப்பட்டபொழுது அந்தந்த விஷயத்தின் சந்தர்ப்பத்தையோசித்து கிரமமாய்த்தோன்றுகிறபடி அந்தப்பணமுழுதையுமாவது அதினொருபாகத்தையாவது மேற்படி மனிதர்களுக்கு கொடுக்கிற விஷயமாய் போர்டாருடைய அனுமதிக்குட்பட்டு கலெக்ட்டர் தம்மிட யுக்தானுஸாரம் கொடுக்க அதிகாரமுள்ளவர்; ஆனல் யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு பணங்கொடுத்தவர்கள் அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று அந்தப்பணம் கொடுக்கப்பட்டதேதிமுதல் இரண்டு மாசத்துக்குள்ளே கலெக்ட்டரிடத்திலாவது ஸப்கலெக்ட்டரிடத்திலாவது அசிஸ்டாண்டுகலெக்ட்டரிடத்திலாவது தெரிவித்தல் அப்படி அந்தசர்க்கார் உத்தியோகஸ்தருக்கு கொடுக்கப்பட்டதையெல்லாம் மறுபடியும் கட்டாயமாய் பெற்றுக்கொள்ளுகிறதற்கு மேற்படி மனிதர்களுக்கு பாத்தியதையுண்டு.

13. (1) இந்தசட்டபடி எவர்கள்பேரில் விசாரணை ஆரம்பித்திருக்கின்றதோ அவர்கள் காவற்படுத்தப் படுவார்கள்:—கலெக்ட்டர்கள் இந்த சட்ட நிபந்தனைகளின்படி எவர்கள்பேரில் விசாரணையை ஆரம்பித்திருக்கிறார்களோ, அவர்கள் தப்பியோடிப்போகாதப்படி அவர்களுடையவீட்டிலே சேவகரை வைத்தாவது, அல்லது, அவசியமானல், அவர்களை கச்சேரி பாராவில்வைத்தாவது மேற்படியாரைக் காவற்படுத்திவைக்கலாம். மேலும், மேற்படியார்பேரில் தீர்மானம் பண்ணப்பட்டால் அப்படி தீர்மானம் பண்ணப்பட்ட தொகை அவர்களாலே கொடுக்கப்படுகிறவரைக்குமாவது, தீர்மானத்தை நிறைவேற்றுகிறதற்காகத் ஜப்தி பண்ணப்பட்டசொத்தை விக்கிரயம்பண்ணுகிறதினலே தொகைவசூல்செய்கிறவரைக்குமாவது மேற்படியாரை அந்தக்காவலிலே யிருக்கும்படிசெய்யலாம்.

(2) பணங் கொடாதவர்களாவது, அல்லது குற்றஞ்செய்தவர்களாவது ஜில்லா சிறைக்கூடத்திற் காவற்படுத்தப்படவேண்டிய விஷயமின்னது:—இந்த சட்டத்தின்படி எவனுக்குவிரோதமாக, தீர்மானமாவது, உத்தரவாவது பண்ணப்பட்டிருக்கிறதோ அவனுடைய சொத்து யாதொன்றும் வெளிப்படாமலாவது, அவன்கொடுக்கவேண்டிய தொகைக்குக்குறைவாயாவது, இருந்தால் அப்பேர்ப்பட்டவிஷயத்தில் கலெக்ட்டர், மேற்படி பணங்கொடாதவனையாவது அல்லது மேற்காட்டிய குற்றஞ் செய்தவனையாவது ஜில்லா கோர்ட்டு (நியாயசபை)க்கனுப்பிவித்து அவன்கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்கிறவரைக்குமாவது, அல்லது அவனைக் காவலிலிருந்துவிடும்படி கலெக்ட்டர் மறுபடியும் அந்த நியாயசபையாரைக் கேட்கிறவரைக்குமாவது அவனைக் காவலில்வைக்கும்படிசெய்ய நியாயாதிபதிக்கு அறிக்கைகொடு

க்கும்படி அந்த நியாயசபையிலிருக்கும் கவர்ண்மெண்டு (துரைத்தனத்தாரவர்களுடைய) வக்கீலுக்கு உத்திரவுகொடுக்கவேண்டியது. மேற்படிவக்கீலினலே கொடுக்கப்படுகிற அறிக்கையில் அந்தக்காவலில்வைக்கப்பட்டவன் கொடுக்கவேண்டிய பணத்தொகை இவ்வளவென்று விவரமாய்க்கண்டெழுதியிருக்கவேண்டியது. ஜில்லா நியாயாதிபதி மேற்படி அறிக்கையை நியாயசபைகூடியிருக்கும்பொழுதாவது தனியாயிருக்கும்பொழுதாவது வாங்கிக்கொண்டு மேற்படி மனுஷியனைக் காவலில்வைக்கும்படி உத்திரவு செய்யவேண்டியது. மேலும், கலெக்டர் அறிக்கையிற் கண்டிருக்கிற தொகைமுழுமையுங் கொடுக்கிறதற்கு முன்னமேயாவது, அவனைவிட்டு விடும்படி மறுபடியும் கலெக்டர் கேட்கிறதற்கு முன்னமேயாவது, நியாயாதிபதியானவர் மேற்படியானைக் காவலிலிருந்து விடக்கூடாது.

15. (2) இந்தசட்டபிரகாரம் நியமிக்கப்படும் கமிஷனர்களுடைய அதிகாரம்:—இப்பொழுது ஊர்ஜிதத்திலுள்ள சட்டங்கள்படி ஜில்லாநியாயசபையாருக்கு என்னென்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகள், இந்த சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் தங்களாலே நிறைவேற்றத்தக்ககாரியங்களைச் செம்மையாகவும் பூர்த்தியாகவும் நடப்பிக்கிறதற்கு அவசியமாக வேண்டியதெவ்வளவோ அவ்வளவுவரைக்குஞ் செலுத்தவேண்டியது. மேற்படி கமிஷனர் செய்யும் விசாரணையானது நியாயநியமங்களுக்கு ஒத்ததாயிருக்கவேண்டியது. இந்த சட்டத்தில் வியக்தமாய் பிரஸ்தாபிக்கப் படாமலிருக்கிற விஷயங்களிலெல்லாம் பொதுசட்டத்தின் நிபந்தனைகளை கூடியவரையில் அனுசரித்து நடப்பிக்கவேண்டியது.

(3) கமிஷனர், கலெக்டராலே முன்பு செய்யப்பட்ட சுருக்கமான விசாரணையில் கலெக்டரால் செய்யப்பட்ட நடவடிக்கைகளையும் விசாரிக்கப்பட்ட சாக்ஷியங்களையும் அழைப்பித்துச் சோதித்துப்பார்த்து அந்த சாக்ஷியங்களை யெல்லாம் நன்ருய் ஆலோசித்ததின்பேரில் இப்போ அப்பீல் பண்ணப்பட்டிருக்கிற கலெக்டருடைய தீர்மானமானது நியாயமாகவும், யுக்தமாகவுமிருக்கிறதைக்குறித்தும், அல்லது அப்படியிராமற்போனல் எந்த விஷயத்தில் தப்பாயிருக்கிறதோ அதைக்குறித்தும் நிர்ணயம் செய்யவேண்டியது, மேலும் கொடுக்கப்படவேண்டியதென்று கலெக்ட்டராலே தீர்மானம் பண்ணப்பட்ட எந்த பணத்தொகையாவது அப்படி கொடுக்கப்படவேண்டுவதில்லையென்று கமிஷனர்களுக்குத்தோன்றினல், அதைநியாயமானவட்டியுடனே திருப்பிகொடுக்கும்படி அவர்கள் உத்திரவுபண்ணவேண்டியது. ஷை கலெக்டர் செய்த தீர்மானத்தை நிறைவேற்றுகிறதற்காக எந்த சொத்தாவது விக்கிரயம் பண்ணப்பட்டிருந்தால், ஷை கமிஷனர்கள் அந்த தீர்மானத்தைப் பரிசீலனை செய்யும்பொழுது, அப்படி விக்கிரயம் பண்ணப்பட்ட சொத்திற்குப் பர்த்தியாக எவ்வளவு துகை கொடுக்கப்பட வேண்டியதென்று நிச்சயம் பண்ணவேண்டியது. தவிரவும், அப்பீல் தாரனுக்கு ஏதாவது நஷ்டம்

நேரிட்டிருந்தால் அதற்குப்பர்த்தியாகவாவது, அவனை அக்கிரமமாய் காவலில் வைத்ததற்குப் பர்த்தியாகவாவது, அவனுக்குநேர்ந்த செலவுகளுக்குப் பர்த்தியாகவாவது, கொடுக்கப் போதுமானதாய்த் தோன்றுகிறநியாயமான செலவு முதலானவைகளைக் கொடுக்கும்படி ஷையார் தீர்மானம் செய்யலாம்.

(4) **கமிஷனர்கள் தாங்கள் நடத்திய விசாரணைவகயறாரிகார்டுகளை கவர்னர் அவர்களுக்கு அனுப்புவது.**—விசாரணை முடிந்தவுடனேயாவது அதின் பிறகு கூடிய சீக்கிரத்திலாவது, கமிஷனர்கள் செய்த விசாரணை வகயறா சம்பந்தமான ரிகார்டுகள் முழுவதையும் சாக்ஷியங்களையும் அந்தவிஷயத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களிடத்துக்கு அனுப்பவேண்டியது.

(5) **கமிஷனர் செய்யும் தீர்ப்புக்குமேல் அப்பீல் கிடையாது; கம்பன்சேஷன் அதாவது பர்த்திபணம் இன்னவிதமாய் கோடுக்கப்பட வேணுமேன்பதை கவர்னர்மெண்டார் தீர்மானிக்கவேண்டியது:**—இந்த சட்டபிரகாரம் கமிஷனர்கள் செய்யும்தீர்மானமானது முடிவுள்ளது (அதாவது அதற்கு மேல் அப்பீல்கிடையாது). ஆனால், மேல் பிரகரணத்தின் பிரகாரம் பர்த்திபணம் கொடுக்கப்படும்படி உத்திரவுசெய்கிறவிஷயத்தில் அப்பேர்ப்பட்டதுகையை ஸர்க்கார் கஜானாவிலிருந்து எடுத்துக் கொடுக்கவேண்டியதா, அல்லது, (முதலில் விசாரணை நடத்தியபோது கலெக்டரானவர் அநீதியாயும் அக்கிரமமாயும் நடவடிக்கை நடத்தியிருப்பதாகவாவது, அல்லது பிராதியின்சொத்தைப் பைஸல்செய்த விஷயத்தில் குற்றமாகும்படி அஜாக்கிரதையாயிருந்ததாக ஏற்பட்டாலாவது இவைகளைப்போலொத்த விஷயங்களில்) அப்பேர்பட்ட பணம் பூருவையுமாவது ஓர்பாகத்தையாவது முதலில் விசாரணைநடத்தி அந்தவிசாரணையின்பேரில் செய்யப்பட்ட சுருக்கத்தீர்மானத்தை நிறைவேற்றும்பொருட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்ட கலெக்டரிடத்திலிருந்து வசூல்செய்து கொடுக்கவேண்டியதா, என்று தீர்மானிக்கவேண்டியதானது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களைச்சேர்ந்தது.

(6) **அப்பீல் பைசலாகிறவரையில் சொத்தை ஜப்திசெய்து வைத்திருப்பது.**— இந்த சட்டபிரகாரம் கலெக்டரிட சுருக்க தீர்மானத்தின்பேரில்செய்யப்பட்ட அப்பீல் பிட்டிஷனானது, ஜப்திசெய்யப்பட்டிருக்கக்கூடிய சொத்து விற்பனை செய்யப்படுவதற்கு முந்தி ஆஜர்செய்யப்பட்டால், அப்பேர்ப்பட்ட சொத்தையாவது (அல்லது சொத்தின் சிலபாகம் விற்கப்பட்டிருந்தால் விற்கப்படாமலிருக்கிற அதின் எந்தபாகத்தையாவது அப்பீல் முடிவாகிற வரையில் ஜப்தியில் வைத்திருக்கவேண்டியது ; ஜப்திசொத்தின் மதிப்பானது முதலில் செய்யப்பட்ட விசாரணையிலே கலெக்டரால் செய்யப்பட்ட தீர்ப்புப்பிரகாரம் கொடுக்கவேண்டிய துகையை சரிப்படுத்தப் போதுமானதாயிருக்கும்பக்ஷத்திலும், அல்லது கலெக்டரிடதீர்ப்புபிரகாரம் முடிவில்

நடப்பதற்குத் தகுந்த ஜாமீன் அப்பீல்தாரனானவன் கொடுக்கும் பக்ஷத்திலும், கமிஷனர்களால் செய்யப்படும் விசாரணை முடிவுபெறுகிறவரையிலும் அவனை காவலிலிருந்து விட்டுவைக்கவேண்டியது.

(7) **கமிஷனர்கள் செய்யும் தீர்மானத்தை இன்னவிதமாய் நிறைவேற்ற வேணுமேன்பதைப்பற்றி**:—யாதொரு கலெக்டர் செய்யும் தீர்மானத்தை கமிஷனர்கள் ஸ்திரப்படுத்தி தீர்ப்பு செய்தால், அப்பேர்ப்பட்ட தீர்ப்பானது அதாலத் கோர்ட்டு தீர்ப்பு எப்படி நிறைவேற்றப் படுகிறதோ அது போல நிறைவேற்றப்படும்; கடைசியாய் தீர்மானம்பண்ணப்பட்ட துகையானது கொடுக்கப்படாமற்போனால், அப்பீல்தார்களையும், அவனுக்காக இதரான் ஜாமீன் கொடுத்திருந்தால் அப்பேர்ப்பட்ட ஜாமீன்தார்களையும், ஜில்லா ஜெயிலில் அடைக்கும்படி கமிஷனர்கள் உத்திரவுசெய்த இந்தப்பிரகாரம் அடைக்கவேண்டியது, அந்த உத்திரவில் கமிஷனர்கள் கையெழுத்து செய்யவேண்டியது, விதிக்கப்படவேண்டிய துகை இவ்வளவென்று கண்டெழுதவேண்டியது; அப்பேர்ப்பட்ட மனிதர்களை ஜில்லா ஜெயிலில் அடைக்கவும், அவர்கள் கொடுக்கவேண்டியதென்று தீர்மானமாயிருக்கப்பட்ட துகை பூருவும் செலுத்தப்படுகிறவரையிலும் அல்லது போர்ட்டார் அல்லது கவரண்மெண்டாரிட உத்திரவு பிரகாரம் கலெக்ட்டர் அவர்களைவிட்டுவிடவேண்டுமென்று கோரிக்கொள்ளும் வரையிலாவது அவர்களை ஜெயிலிலேயே வைத்து வைக்கவும், அப்பேர்ப்பட்ட உத்திரவானது ஜில்லா ஜட்ஜிகளுக்கு போதுமான அதிகாரப்பத்திரிகையாகும்.

16. இந்தசட்டப்பிரகாரம் கலெக்ட்டர்செய்த சுருக்கவிசாரணை விவகாரங்களைநடத்துவதில் ஏதோ அநியாயம்செய்ததாக அப்பேர்ப்பட்ட கலக்ட்டருக்கு விரோதமாய் தாவாவது, அல்லது அவர்செய்த தீர்மானத்திற்குமேல் அப்பீலாவது செய்யப்படுகிற ஒவ்வொரு வியாச்சியமும், தாவா செய்கிற நபர் அதாலத் கோர்ட்டில் ஆஜராய் தன் குறைகளைச்சொல்லி நியாயம் பெற்றுக்கொள்ளலாமென்று 1828-வுஸ்த்திய 7-வது சட்டம் 6-வது பிரிவு 2-வது வாக்கியத்தில் கண்டமாதிரியாய் போர்டாரிட ஸிக்ரெடெரியால் கையொப்பமிடப்பட்டு கொடுக்கப்பட்ட ஒரு உத்திரவை ஷி தாவாவிண்ணப்பத்துடன் கூடவும், அப்பேர்ப்பட்ட உத்திரவு பார்ட்டியினிடம் ஒப்புவிக்கப்பட்டதேதி முதல் 3-மாதகாலத்திற்குள்ளும், செய்யப்பட்டாலொழிய, அப்பேர்ப்பட்ட யாதொரு வியாச்சியத்தையும் யாதொரு அதாலத் கோர்ட்டாரும் தாக்கல் செய்துகொள்ளக்கூடாது.

1828-வுஸ்த்திய 7-வது சட்டத்தின் சுருக்கம்.

ஸப்கலெக்டர்களும் அசிஸ்டாண்டுகலெக்டர்களும் இப்போதிருக்கிற சட்டப்பிரகாரமும் இனி உண்டாக்கப்படுகிற சட்டப்பிரகாரமும் கலெக்டர்களுக்குள்ள அதிகாரத்தைச்செலுத்தலாம், கலெக்டர்கள் டிவிஷன் சார்ஜிலு

ள்ள தங்களிட கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும் டிவிஷனல் சார்ஜிவில்லாத கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும் தங்கள் அதிகாரத்தைச்செலுத்தும்படி உத்திரவு கொடுக்கலாம்.

மேற்கண்டபிரகாரம் டிவிஷனல் ஆபீஸர்கள் செய்யும் உத்திரவு அல்லது நடவடிக்கைகள் எவ்விதத்திலும் கலெக்டர் அதிகாரத்துக்குட்பட்டவை.

1822-ஹூச்திய 9-வது சட்டப்பிரகாரம் கேஸ்களை விசாரணை செய்யும்படி கலெக்டரானவர் ஹுசூர் சிரஸ்தேதார்களுக்கும் தாசில்தார்களுக்கும் அதிகாரம் கொடுக்கலாம். மேற்கண்ட விதமாய் நியமிக்கப்பட்டவர்கள் ஷை சட்டத்தில் 3-வது பிரிவு 1-வது வாக்கியத்தில் கலெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை செலுத்தலாம். ஆனால் பிரமாணிக்கத்தின்பேரில் சாக்ஷிகளை விசாரிக்கக்கூடாது. உத்தியோகஸ்தர்களால் சம்மன் பண்ணப்பட்ட நபர்கள் ஆஜராகாமற்போனாலும் வேறேஜில்லாவில் இருந்தாலும் அதுசங்கதியைப்பற்றி கலெக்ட்டருக்குத் தெரிவிக்கவேண்டியது. ஷை உத்தியோகஸ்தர்கள் கேஸை விசாரித்து கலெக்ட்டர்களுக் கனுப்பவேண்டியது. கலெக்டர்கள் அதின்பேரில் தீர்ப்பு செய்யலாம், ஆனால் அப்படிசுதேச உத்தியோகஸ்தரால் நடத்தப்பட்டவிசாரணைகளில்கலெக்டர்கள் ஷைசட்டத்தின் 2-வது பிரிவு 2-வது வாக்கியத்தில் கண்டமுதலாவது, இரண்டாவது, மூன்றாவது வகுப்பு குற்றமாயிருந்தால் 50-ரூபாய்க்குமேல் கொடுக்கும்படிவிதிக்கக்கூடாது ; அதேவாக்கியத்தில் கண்ட 4-5-வது வகுப்பைச்சேர்ந்த குற்றங்களாயிருந்தால் 50-ரூபாய்க்கு மேற்பட்டு அபராதமும் போடக்கூடாது. (அதாவது 50-ரூபாய்க்கு மேற்பட்டு விதிக்கக்கூடிய கேஸ்களை சிரஸ்தேதார் தாசில்தார் இவர்களுக்கு அனுப்பக்கூடாது ; 1822 - ஹூத்திய 9 - வது சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்ட தீர்ப்புக்குமேல் அப்பீல் செய்யவேண்டுமானால் 3-மீ த்திற்குள் போர்டாரிடம் கலெக்டர் துவாரா அனுப்பவேண்டியது. இந்த அப்பீல் மனுவுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை. போர்டார் அதை தள்ளுபடிசெய்தாலும் செய்யலாம், விண்ணப்பதாரனிட கோரிக்கையின்படி அனுமதிகொடுக்கலாம், அல்லது கவர்ண்மெண்டாருக்கு அதை அனுப்பலாம், அல்லது அதாலத்கோர்ட்டில் நியாயம் தேடிக்கொள்ளும்படி உத்திரவுசெய்யலாம். ஷை கேஸை விசாரிக்கும்படி கவரண்மெண்டார் கமிஷனர்களை ஏற்படுத்தலாம்.

1837-ஹூத்திய 36-வது சட்டம். சர்க்கார் பணத்தை அபகரிப்பு செய்வதற்காகவும், சர்க்கார் பணம் சம்பந்தமான கணக்கு வகையறுக்களை பரிகரிப்பு முதலானது செய்யும்விஷயமாய் ஏற்படுத்திய விதிகளானவை ஸர்க்காருக்குச்சொந்தமான எந்தபொதுசொத்துக்கும், அப்பேர்ப்பட்ட எந்தபொது சொத்தின் சம்பந்தமான ரிகார்ட்டுகளை பரிகரிப்பு முதலானது செய்யும் விஷயமாயும், சம்பந்தப்படும் ; கலெக்டர்கள் அவைகளை விசாரிக்கவும் அதிகாரமுண்டு.

1839-ஹூத்திய 7-வது சட்டம்.—இந்த சட்டப்பிரகாரம் தாசில்தாரர் கள் ஜப்தி சொத்துக்களை எலம்போடலாம். அதுவிஷயமாய் அவர்கள் கலெக் டரிட அதிகாரத்துக்குட்பட்டவர்கள். இதற்காக அவர்களுக்கு பிரத்தியேக மான பீஸ் கிடைக்கமாட்டாது. சட்டப்பிரகாரம் வசூலாகக்கூடிய பீஸ் எதா வதிருந்தால் அவைகளை கவர்ண்மெண்டுக்காக வரவுவைத்துக்கொள்ளவேண் டியது.

கலெக்டரிட அதிகாரத்துக்குட்பட்டு, தாசில்தார்கள் தங்களுக்கு கீழ்ப் பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு ஷை அதிகாரத்தைக்கொடுக்கலாம்.

* **1802-ஹூத்திய 29-வது சட்டம்.** ஜமீன்தாரிகளிலுள்ள கணக்கர் களை கலெக்டரிட அனுமதிக்குட்பட்டு நியமிக்கமாத்திரம் ஜமீன்தாரர்களுக் கதிகாரமுண்டு. அவர்களை வேலையைவிட்டு நீக்க வேண்டியதாயிருந்தால் ஜில்லா கோர்ட்டார்தான் நீக்கவேண்டியது.

1869ஹூத்திய 3-வது சட்டம். ரிவனியூவிஷயமான விசாரணையில் ஆ ஜராகவும் தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்தவும் சம்மன்பிறபிக்க அதிகாரமுள்ள வர்கள், எவர்களென்றால் :—கலெக்டர், ஸ்ப்கலெக்டர், அஸிஸ்டாண்டு கலெ க்டர்; டிப்டிகலெக்டர் தாசில்தார், டிப்டிதாசில்தார்; ஸம்மன் செய்யப்பட்ட மனுஷனிடம் நேராய் சம்மனை ஸார்வுசெய்யவேண்டியது, அவன் அகப்படாவி ட்டால் அவன்வம்சத்தில் வயதுவந்த ஒரு ஆண்பரிடமாது அல்லது அந்த கிராமத்திய தலைவனிடமாவது ஒப்புவித்துவிடவேண்டியது; தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்தும்படி கொடுக்கப்பட்ட சம்மானுயிருந்தால் வேறொருமனி தனிடம்கொடுத்தனுப்பி ஆஜர்ப்படுத்தினாலே போதுமானது; ஸம்மன்செய்யப் பட்ட யாதொருமனிதனாவன் வியாதியினாலாவது தேகப்பழுதினாலாவது ஆஜராகக் கூடாமற்போனாலாவது, அல்லது அந்தஸ்த்தை யோசித்தாவது ஸ்திரிஜாதியாயிருப்பதை முன்னிட்டாவது, சம்மன் பிறப்பிப்பது யுக்தமில் லாமலிருக்கிறவிஷயத்திலும், சம்மன் பிறப்பிக்கும் உத்தியோகஸ்தர் தாமாக வேயாவது, அல்லது சம்மன்செய்யப்பட்ட பார்ட்டியால் கோரிக்கொள்ளப் படுவதின் பேரிலாவது, அப்பேர்ப்பட்ட பார்ட்டி நேராய் ஆஜராகவேண்டிய தென்று கட்டாயப்படுத்தாமலே தமக்கு கீழ்ப்பட்ட ஒரு உத்தியோகஸ்தனை அனுப்பி சாக்ஷி விசாரணைசெய்து வரும்படிசெய்யவேண்டியது.

குறிப்புகள் :—ஸம்மன்படிக்கு ஆஜராகாமற்போனால் இந்தியன் பினல் கோட் 174-வது பிரிவுபடி தண்டனைக்குட்படுவார்கள்.

---

* இந்த சட்டத்தை இப்போது தித்தப்பாடு செய்வதாய்த் தெரியவரு கிறபடியால் இதைப்பற்றி அதிக விமர்சையாய் இவிடத்தில் சொல்லப்பட யில்லை.

ஸென்ஸஸ் கணக்குகள், ஜமாபந்திகணக்குகள், தவுல் கணக்கு இவைகள் சம்பந்தமாய் தாசில்தார் முன்பாக ஆஜராய் சில சமாச்சாரங்களைத் தெரிவிக்கும்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு சம்மன்பிரகாரம் ஒருகணக்கன் ஆஜராகமவிருந்தால் அது இந்த சட்டத்தில் சம்பந்தப்பட்டதல்ல, அப்பேர்ப்பட்ட சம்மன்படி ஆஜராகாமற்போனுல் இந்தியன் பினல்கோட் 174-வது பிரிவு பிரகாரம் குற்றமாகமாட்டாது என்று ஹைகோர்ட்டார் தீர்ப்புசெய்திருக்கிறார்கள். சம்மன் ஸார்வ் செய்யப்படக்கூடாமல் ஒளித்துக்கொண்டால் அது இ. பி. கோ. 172-வது பிரிவு பிரகாரம் குற்றமாகும். தெண்டனை ஒருமாதம் வரையில் வெறுங்காவல், அல்லது 500-ரூபா வரையில் அபராதம், அல்லது இரண்டும்; இன்னும்பிறப்பிக்கப்படாமலிருக்கிற ஸம்மன் ஸர்வ் செய்யப்படவொட்டாமலிருக்கும்படி முன்னுடியாக ஒளித்துக்கொண்டால் அது குற்றமல்ல; அப்படி பிறப்பிக்கப்பட்ட பிற்பாடும் ஒளித்துக்கொண்டிருந்தால் அது குற்றமாகும்.

ஒரு தாலூக்கா சிரஸ்தேதார் ஒரு கிராம உத்தியோகஸ்தனை ஆஜராகும்படி ஸம்மன் அனுப்பினுர்; அவன் ஆஜராகவில்லை. பின்னிட்டு சிரஸ்தேதார் அவனை மாஜிஸ்டிரட்டு தரப்பில் சம்மனுக்கு கீழ்ப்படியவில்லை என்று குற்றஞ்சாட்டி தண்டித்தார். ஹைகோர்ட்டார் "ஷை தண்டனை சட்டத்துக்கு நியாய விரோதம், ஏனென்ருல் 1869-ஷு 3-வது சட்டத்தில் சம்மன் பிறப்பிக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டவர்களில் சிரஸ்தேதார் ஒருவரல்ல" என்று தீர்மானித்து அஸல்தீர்ப்பை ரத்துசெய்துவிட்டார்கள்.

சென்னபட்டணம்.

1864-ஷுத்து - 2 - வது ஆக்டு.

தீர்வை வசூல் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஆக்டு.

சென்னைராஜதானியில் ஸர்க்கார்தீர்வை பாக்கியை வசூல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டங்களை ஒன்ருய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்டு.

பீடிகை:—சர்க்கார்தீர்வையை வசூல்செய்வதைக்குறித்த சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்ருய்ச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியினுலே, இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்ருல்:—

1. நிலதாரன் :—இந்த ஆக்டில் பிரஸ்தாபிக்கப்படும் நிலதாரனென்னும் வார்த்தையானது எப்படிப்பட்டவனென்று அர்த்தஞ் செய்து கொள்ளப்படுமென்ருல்:—

மில்கதிஸ்திமீரார்சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும், மற்றெல்லா ஜமீன்தாரர்களும், சுரோத்திரியதார்களும், ஜாகீர்தார்களும், இனும்தார்களும், சர்க்காரிடத்தில் நிலத்தீர்வைகுத்தகைசெய்து கொள்ளுகிற சகலமானவர்களுமென்றும்; ரயித்துவாரி திட்டப்படிக்காவது, சர்க்காருக்கு நேராய்த் தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிற எல்லோருமென்றும் அர்த்தமாகும். நிலத்திற்காகச் சேரவேண்டிய சர்க்கார்தீர்வை என்பது, பாய்ச்சலுக்காக விடப்பட்ட ஜலத்திற்காக செலுத்தப்படத்தக்க ஸெஸ்முதலானவரிகளும் சேர்ந்ததாகும்.

2. நிலமானது தீர்வைக்கு ஈடுசெய்துகொள்ளப்படுமென்பது:—நிலமும், அதின்பேரிலிருக்கிற கட்டடங்களும், அதிலுண்டாகிற மாசூலும் சர்க்கார் தீர்வைக்கு ஈடாகபாவிக்கப்படும்.

3. பூமிக்குடையவன் இன்னகாலத்தில் இன்னூரிடத்திலே தன்னுடைய கிஸ்து பணத்தைச் செலுத்தவேணுமென்பது:— பூமிக்குடையவனுகிய பிரதிமனிதனும் தன்னிலத்தின்பேரில் சேரவேண்டிய தீர்வையை கிஸ்து பந்தி பிரகாரமாவது வேறேயாதொரு உடன்படிக்கைப் பிரகாரமாவது வாயிதா கடந்துவிடுகிறதேதியிலாகிலும் அதற்கு முன்னிட்டாகிலும் கலெக்டரிடத்திலாவது இதை வாங்கிக்கொள்ளும்படி அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாவது செலுத்தவேண்டியது; அப்படி தேதி நிஷ்கரிஷை செய்யப்படாதிருந்தால், ஊர்வழக்கப்படிக்கு அந்தத் தீர்வையைச் செலுத்தவேண்டிய வாயிதா கடந்துபோவதற்குள் செலுத்தவேண்டியது: ஆனால் மில்கதி ஸ்திமீரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறேயாதொரு சாஸனத்தின்படிக்காவது நிலம் அனுபவிக்கப்படுகிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே, அந்தந்த கிஸ்தி அல்லது வாயிதாதொகையையும், அந்தந்ததொகை செலுத்தப்படவேண்டிய தேதிகளையும் டிஸ்டிரிக்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்வித்து அப்போதைக்கப்போது ஏற்படுத்தவும் மாற்றவும் ரிவினியூ போர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

4. கிஸ்தி முழுமையுமாவது அதில் எவ்வளவாவது செலுத்தப்படாதிருந்தால், அது தீர்வைபாக்கியென்று சொல்லப்படுமென்பது:—யாதொரு கிஸ்துமுழுமையுமாவது அதில் எவ்வளவாவது மேற்சொல்லியபடிசெலுத்தப்படாதிருந்தால் அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது தீர்வை பாக்கி என்று எண்ணப்படும்.

5. தீர்வைபாக்கியை வசூல்செய்கிற விதம்:—சர்க்கார் தீர்வைபாக்கியிருந்தால், அந்த பாக்கிதாரனுடைய ஸ்தாவரஜங்கம சொத்துகளை எலத்தில்விற்றுவது, இதின்பின்னால் சொல்லியிருக்கிறபடி பாக்கிதாரனைக் காவலில்வைத்தாவது, அந்தபாக்கியையும் அதற்குவட்டியையும் நடவடிக்கை நடத்துவதற்குண்டான செலவுகளையும் வசூல் செய்யத்தொடங்குவதற்கு கலெக்டரு

க்காகிலும், வசூல்செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரங்கொடுக்கப்பட்ட வேறே யாதொரு அதிகாரிக்காகிலும் அதிகாரமுண்டு.

6. மில்கதிஸ்திமீரார் சன்னதின்ஷரத்துகளை அனுசரிக்க வேணுமென்பது:—பாக்கிதாரன் மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது, அப்படிப்பட்ட வேறே யாதொரு சாஸனத்தின்படிக்காவது அனுபவித்துக் கொண்டிருந்தால், அந்த சன்னதிலுள்ள ஷரத்துகளின்படி பாக்கியை வசூல்செய்யலாகும்; மற்றபாக்கி தாரர்களின் விஷயத்தில் கலெக்ட்டராவது பாககியை வசூல் செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறே யாதொரு அதிகாரியாவது, தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த பாக்கிதாரனுடைய அசையும் பொருளையாகிலும் அசையாப்பொருளையாகிலும் அவ்விரண்டையுமாகிலும் ஏலத்தில்விற்று அந்தபாக்கியை வசூல்செய்யத் தொடங்கலாம்.

7. * தீர்வை பாக்கிக்கு வட்டியுண்டென்பது.— சர்க்கார் தீர்வைபாக்கிக்கு, வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு வட்டி போடப்படும்.

8. அசையும்பொருளை ஜப்திசெய்து விற்பதற்கு நிபந்தனைகள்:—சர்க்கார்தீர்வைக்காக அசையும்பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கிறபட்சத்தில், அடியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி நடக்கவேண்டும்.

(1) **தண்டல்பத்திரிகை:**— கலெக்ட்டராவது, தண்டல் பத்திரிகை (டிமாண்டு) கொடுக்கும்படி கலெக்ட்டரால் நேமிக்கப்படுகிற வேறேயாதொரு அதிகாரியாவது, தண்டல்பத்திரிகையெழுதி அதில் பாக்கிதாரனுடையபெயரையும், எவ்வளவுபாக்கிக்காக ஜப்திக்கு உத்தரவுபிறப்பிக்கப்பட்டதோ அந்த பாக்கித்தொகையும், அந்தபாக்கிக்கு வாயிதாகடந்துவிட்ட தேதியையுங்கண்டு தம்மிட கையெழுத்துப்போட்டு, ஜப்திசெய்யப்போகிற மனிதனுக்கு அந்த டிமாண்டை கொடுக்கவேண்டியது. ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல் பத்திரிகையைக்காட்டி 53-வது பிரிவின்படி அந்த பாக்கியும் தனக்குச்சேர வேண்டிய படிச்செலவும் உடனே செலுத்தப்படாவிட்டால் அந்த டிமாண்டு பத்திரிகையை ஜப்திசெய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக் கொண்டு சொத்தை ஜப்திசெய்கிறதேதியில் அந்த பத்திரிகைக்கு நகலெழுதி, அந்த நகலின்மேல் ஜப்திசெய்யப்படுகிற சொத்தின் விவரத்தையும், அந்த சொத்து வைத்துவைக்கப்படுகிற இடத்தையும் கண்டெழுதி அந்தநகலை பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது.

(2) **ஜப்திசெய்யப்பட்ட சொத்து விற்கப்படுமென்று அந்த பத்திரிகையில் எழுதவேணுமென்பது:**—அந்த பாக்கிதொகையும் அதற்குவட்டியும்

---

* எந்தமாதத்தில் தீர்வை செலுத்தப்படாமல் பாக்கி ஏற்படுகிறதோ அதற்கடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து வட்டி போடப்படும.

படிச்செலவும் ஜப்திசெலவும் எலத்திற்கு முன்னமேசெலுத்தப்படாவிட்டால், ஜப்திசெய்யப்பட்ட சொத்து உடனே எலத்தில் விற்கப்படுமென்றும் அந்த பத்திரிகையில் கண்டெழுதவேண்டியது.

(3) பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால், அந்த பத்திரிகையின் நகலை இன்னவிதமாயச் சேர்ப்பிக்கவேணு மென்பது:—பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால், அந்த பத்திரிகையின் நகலை, அதின்மேலெழுதப்பட்ட ஜப்தி சொத்தின் ஜாபிதாவகைரா ஸகிதமாய் ஜப்திசெய்த தேதிமுதல் மூன்று நாளைக்குள்ளாக, அந்த பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது ஒட்டவேண்டியது, அல்லது கொடுத்துவிட்டு வரவேண்டியது.

9. அறிக்கை செய்யப்பட்டபின்பு பாக்கிதாரன் பணங்கட்டாவிட்டால் இன்னது செய்யப்படுமென்பது:—தண்டல் பத்திரிக்கையின் ஷரத்துகளின் படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்ட்டாருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், சேரவேண்டிய பாக்கித்தொகை, அதற்குவட்டி, படிச்செலவு, ஜப்திசெலவு, இதுகளுக்காக ஜப்திசொத்தை எலத்தில், விற்கும்பொருட்டு, அந்தசொத்தின் ஜாபிதாவை, சட்டப்படி ஜப்திசொத்தை விற்பதற்கு அதிகாரம்பெற்று சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு, ஜப்திதாரன் அனுப்பவேண்டியது.

10. விற்பனை தினத்திற்கு முன்னதாக பாக்கியையும் செலவுகளையும் கட்டினால், ஜப்தி விடுதலை செய்யப்படுமென்பது:— பாக்கிதாரனானவன் தன்னுடையசொத்து ஜப்தி செய்யப்பட்டபின்பு, எலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக பாக்கி பணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்குப்பிடித்த அவசியமான செலவுகளையும் கட்டுகிறதாகப் பணங்கொண்டுவந்தால், உடனே அந்தப்பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு, தட்சணம் ஜப்தியை விடுதலை செய்யவேண்டியது.

11. மாசூல் ஜப்திசெய்யப்பட்டால், அதை இன்னபடி செய்யலாமென்பது:—ஜப்திதாரனானவன் பாக்கிதாரனுடைய நிலத்திலுண்டாகிய விளைச்சல் பயிர்களையாவது அறுவடை யாகாத மாசூல்களையாவது ஜப்திசெய்தால், அறுவடை செய்யத்தகுந்தகாலத்தில் அதுகளை அவன் விற்பனை செய்விக்கலாம், அல்லது தனக்கு யுக்தமாகத்தோன்றினால், தகுந்தகாலத்தில் அவைகளை அறுவடை முதலானதுசெய்து விற்பனையாகிறவரையில் தகுந்தஇடத்தில் சேர்ப்பிக்கலாம். இவ்விதமாக அறுவடைசெய்து சேர்த்துவைத்தால் அதற்காகப் பிடிக்கிறசெலவை, சொந்தக்காரன் அந்த சொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில் அவன் கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனை

செய்யப்படுகிற பட்சத்தில் வித்துமுதல் பணத்திலிருந்து அந்தசெலவு துகை எடுத்துக்கொள்ளப்படும். யாதொரு குத்தகைக்கு பயிரிடும் குடியானவனுடைய மாசூல் வகையராக்கள் விற்பனை செய்யப்பட்டால், அவன் அந்த மாசூல் வகயறுவுக்குண்டாகிய கிரயத்தை, அது உற்பத்தியான நிலத்திற்காக அப்போதாகிலும் பின்பாகிலும் ஸர்க்கார் பாக்கிதாரனுக்கு தான் கொடுக்க வேண்டிய குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம். மேலும் சர்க்கார்தீர்வை பாக்கிக்காக யாதொரு குத்தகைகுடியானவனுடைய மாசூல் ஜப்தி செய்யப்பட்டால் அவன் அந்தபாக்கியைச் செலுத்திவிட்டு, அந்தப் பணத்தை அப்போதாகிலும் பின்பாகிலும் சர்க்கார்பாக்கிதாரனுக்கு தான் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையிலிருந்து மேற்சொல்லிய விதமாய்க் கழித்துக்கொள்ளலாம்.

குறிப்பு:—நிலத்தில் சம்பந்தப்பட்ட யாராவது இந்த பிரிவில் கண்ட மாதிரி பணத்தைக் கட்டிவிடலாம்; அப்படி கட்டியதற்கு ரசீது கொடுக்கப் படும்.

12. ஜப்தி செய்யப்பட்ட மாடு முதலிய பிராணிகளையாவது சாக்குகளையாவது உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடாதென்பது:—ஜப்திதாரனானவன், ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய கால்நடைகளிடத்தில் வேலை வாங்கவும்கூடாது, ஜப்தி செய்யப்பட்ட சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவும்கூடாது; ஆடுமாடு முதலிய பிராணிகளுக்கு வேண்டிய தீனியை ஜப்திதாரன் போடவேண்டியது; அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தசொத்தை மீட்டுக்கொள்ளுகிற பட்சத்தில், அவன் கொடுக்க வேண்டியது; அந்தசொத்து விற்பனை செய்யப்படுகிற பட்சத்தில் வித்துமுதல் பணத்திலிருந்து அந்தசெலவு துகை எடுத்துக்கொள்ளப்படும்.

13. ஜப்தி சொத்துவிஷயத்தில் அஜாக்கிரதை செய்யப்பட்டால், அதற்காக உத்தியோகஸ்தன் உத்திரவாதியாக வேணுமென்பது:—ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது வேண்டிய முன் ஜாக்கிரதையோடு தகுந்த பந்தோபஸ்து செய்யப்படாமையினாலாவது, அதினிடத்தில் அக்கிரமமாய் வேலை வாங்கினதினாலாவது, அதை உபயோகப்படுத்தினதினாலாவது, களவுபோனாலும், போக்கடித்தாலும், சேதமானாலும், யாருடைய அஜாக்கிரதை அல்லது செய்கையினாலே அப்படி நேரிட்டதோ அந்த உத்தியோகஸ்தனிடத்திலிருந்து கலெக்ட்டரானவர் சுருக்க அமுல்களினாலே இந்தநஷ்டம் அல்லது சேதத்தொகையை வசூல்செய்யலாகும், அப்படி வசூலாகிறதொகையை நஷ்டமடைந்தவனுக்குக் கொடுக்கவேண்டும்.

14. பாக்கிக்குத் தகுந்த சொத்து ஜப்தி செய்யப்படுமென்பது:—ஜப்தி செய்யப்படுகிற சொத்தின் மதிப்பானது பாக்கிதொகைக்கு அதிகப்படாமல் கூடினவரையிலே சுமாராக பாக்கித்தொகை எவ்வளவோ அவ்வளவிருக்க வேண்டியது.

15. இன்னகாலத்தில் ஜப்தி செய்யப்படுமேன்பது:—சூரிய உதயத்துக்குப்பின்பு சூரிய அஸ்தமானத்திற்குள் ஜப்தி செய்யவேணுமே யல்லாமல், வேறே எந்த காலத்திலாவது ஜப்தி செய்யகூடாது.

16. ஜப்திக் குள்ளாகாதபடிக்கு மோசடியாய் சோத்தைக் கோண்டு போய் விட்டால் அதற்கு தேன்டனை:—பாக்கிக்காகச் செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக்கொண்டு போய் விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டார் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒபபுவிக்கும்படிச் செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியின் பினல்கோடின் 424-வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

17. ஜப்திசேய்துவிற்கப்பட்ட சோத்துக்குண்டாகியதாவாவைக்குறித்து:—பாக்கிதாரனுகவாவது, அவனுக்கு உத்தரவாதியாகவாவது இல்லாத வேறே எவனுகிலும் ஜப்திசெய்யப்பட்டசொத்துக்கு பாத்தியதை உண்டென்றுசொல்லியும் பாக்கிக்காக ஜப்திதாரன் அந்தசொத்தை விற்பனைசெய்வித்தால், எந்த பாக்கிக்காக சொத்து விற்பனைசெய்யப்படுகிறதோ அந்த சர்க்கார் பாக்கிக்காக அந்தசொத்து பொறுப்பானதென்று ஜப்திதாரன் ருஜுவுசெய்யமாட்டாமல் போனால் தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டில் மேற்படி பாத்தியதையை ருஜுப்பிப்பதின்பேரில், அந்தந்த சங்கதிக்குத்தக்கபடி தாவாதாரன் அந்தசொத்தின் பூராவிலையை வட்டி, செலவு, நஷ்டம் இதுகளுடனே ஜப்திதாரனிடத்தில் வசூல் செய்துகொள்ளலாம்; ஆனால், பாக்கிதாரனுடைய ஸ்வானதீனத்திலுள்ள நிலத்திலிருக்கிற பயிராவது அறுவடைசெய்யப்பட்ட மாசூல்களாவது ஜப்தி செய்யப்பட்டால், அவைகள் விற்பனையாவது கொதுவையாவது மற்ற எதவாவது முன்னமேதானே செய்யப்பட்டிருக்கிறதென்கிற ஆதாரத்தின்பேரில் அதுகளைக்குறித்து வேறே தாவாசெய்யப்பட்டபோதிலும், அந்த தாவா, அந்த பயிர் அல்லது மாசூல் எந்தநிலத்தில் உற்பத்தியாச்சுதோ அந்தநிலத்திற்காக பாக்கியாயிருக்கிற சர்க்கார்தீர்வை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்கலாகமாட்டாது.

18. ஜப்திசேய்யப்பட்ட சோத்தை பல வந்த மாயாவது மறைவாகவாவது எடுத்துக்கோண்டு போய்விட்டால் அதற்கு தேண்டனை:—ஜப்தி செய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனுகிலும் எடுத்துக்கொண்டுபோய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அந்தக்கோட்டார் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்புவிக்கும்படி செய்யலாம். மேலும் அப்படி குற்றஞ்செய்தவன் இந்தியன் பினல் கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

19. ஜப்தீதாரன் இன்னஇடங்களை பலாத்காரமாய்த் திறக்கலாமேன்பது:—யாதொருலாயம், மாட்டுக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு, வெளிப்புறத்துவீடு முதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டில்நுழையவும் ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு; மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்தக்குடியிருப்பு வீட்டிலுள்ள யாதொரு அறையின்கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால் இதில்பின்னால் சொல்லியிருக்கிறபடிதவிர அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள்வாசஞ்செய்வதற்கென்று பிரத்தியேகமாய்விடப்பட்டிருக்கிற அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத்திறக்கவாவது அதில் நுழையவாவது கூடாது.

20. போலீசு உத்தியோகஸ்தனைக் கூட்டவைத்துக்கொண்டு பலாத்காரமாய் வெளிக் கதவுகளைத்திறப்பதற்கு ஜப்திதாரனுக்குண்டாகிய அதிகாரம்:—வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொருகுடியிருப்பு வீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்காகவிடப்பட்டு தேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் உத்தேசிக்க ஜப்திதாரனுக்கு முகாந்தரமிருந்தால், அந்த ஜப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீசு டாணாவின் தலைவனுக்கு அந்தசங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல், அந்தட்டாணா தலைவன் ஒரு போலீசுசேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஜப்திதாரன் அவனைக்கூடவைத்துக்கொண்டு, அந்தவீட்டினுள் அந்தப்புரம்தவிர வேறேயாதொரு அறையின் கதவைத்திறப்பதுபோலவே அந்தவீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்திறக்கலாம். மேலும் ஜப்திதாரன் அந்த போலீசு சேவகனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தப்புரத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம்போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பஹிரங்கத்தில்வரக்கூடாத அந்தஸ்துள்ள ஸ்திரீகளாயிருந்தால்) அவர்கள் அப்புறம் போவதற்கு தகுந்தபடி என்னவகைசெய்யவேணுமோ அதைச்செய்தபின்பு, அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு அந்த அறைகளுக்குள் நுழையலாம்; ஆனால் அவ்விடத்திலே பாககிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியில் எடுத்துக்கொண்டு வந்துவிட்டு, அந்த அறைகளை அந்த அந்தப்புரத்து ஸ்திரீகளுக்குப் பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

21. அக்கிரமமாய் நுழைந்தால் அதற்கு தேண்டனை:—இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைகளுக்குள் நுழைந்தாலும், குடியிருப்பு வீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறந்தாலும், அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்குமுன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் - 500 - ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளா

வார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலில் எதிலா கிலும் வைக்கப்படுவார்கள்.

22. ஏலம்போடுகிற காலத்தைக்குறித்தும் விற்கப்படுகிற சோத்தைக் குறித்தும் இஸ்திரியார்போடவேணு மேன்பது— ஜப்தி செய்யப்பட்ட சொத்தை ஏலம்போடுவதற்கு 1839ஞூ-த்து 7-வது ஆக்ட்டின்படி அதிகாரம்பெற்ற சர்க்கார்உத்தியோகஸ்தரானவர், விற்கப்படும்சொத்துக்கு ஒரு ஜாபிதா எழுதி அதையும், ஜப்திசெய்யப்பட்டசொத்து இன்ன இடத்தில் இன்ன தேதியில் இத்தனைமணிக்கு ஏலம்போடப்படுமென்று ஒரு இஸ்தியார்நாமாவையும், பாக்கிதாரனுடைய வீட்டுவெளிக்கதவில் ஒட்டுவிக்கவேண்டியதுமல்லாமல் எந்த நிலத்திற்காக பாக்கியேற்பட்டதோ அந்தநிலமிருக்கிற கிராமத்திலும், மற்ற எந்தெந்தஇடத்தில் அந்த ஏலத்தைக்குறித்துத் தகுந்தபடி பிரசித்தஞ்செய்யவேணுமென்று கலெக்ட்டராவது அதற்காக அவரால் அதிகாரங்கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது நினைக்கிருரோ அவ்விடங்களிலும் தண்டோராபோட்டுவிக்கவும் வேண்டியது. மேற்சொல்லியபடி இஸ்திரியார்நாமா ஒட்டப்பட்டதேதிமுதல் பதினைந்துநாளாகுமுன்பாக ஏலம் போடக்கூடாது.

23. இன்னவிதமாய் ஏலம்நடத்தப்படுமேன்பது:— நேமிக்கப்பட்ட காலத்திலே மேற்படி உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி சொத்தானது ஒரேகூறுகவாவது பலகூறுகளாகப்பிரிக்கப்பட்டாவது, ஏலத்தில் கடைசியாய் உயர்ந்தவிலைக்குக்கேட்கிறவனுக்கு விற்றுப்போடப்படும்; அந்தசொத்து பாக்கிபணத்துக்கு ஜாஸ்தியாய்விற்பனையானல், அந்த ஜாஸ்தி பணத்திலிருந்து ஜப்தி, ஏலம், முதலானதுகளுக்குப் பிடித்தசெலவுகளையும் வட்டியையும் தள்ளிக்கொண்டு மிகுதியை அந்தபாக்கிதாரனுக்குக் கொடுத்துவிடவேண்டியது.

24. ஜப்திசெய்யப்பட்டசோத்தை ஏலத்தில் வாங்குகிறவர்கள் பணஞ் சேலுத்தவேண்டிய தன்னமாதிரி:—சொத்து விற்பனைசெய்யப்பட்டகாலத்திலாவது, விற்பனைசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நியமிக்கிறகாலத்திற்குள்ளாவது, அந்த சொத்தைவாங்கினவன் ரொக்கப்பணஞ்செலுத்தவேண்டியது; அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்த சொத்தில் எவ்வளவையாவது அவன் எடுத்துக்கொண்டுபோகவொட்டக்கூடாது; ஏலத்தில் விலைக்குவாங்கினவன் கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டால், அந்தசொத்து மறுபடி ஏலம் போடப்படும், அப்படிச்செய்வதினலே ஏதாவது நஷ்டமுண்டானல் அதுவும், மறுபடி ஏலம் போடுவதற்குப் பிடிக்கிறசெலவும் முதலிலே ஏலத்திலெடுத்துப் பணங்கட்டாமற்போனவனிடத்திலிருந்து வசூல்செய்யப்படும். அந்தசொத்து முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிக

விலைக்குவிற்ருல், அந்த அதிகபணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம் போடப்பட்டதோ அவனுக்கு*ச்சேரவேண்டியது.

25 நிலத்தை ஜப்திசெய்வதற்கு முன்னமே தண்டல் பத்திரிகை கொடுக்க வேணுமென்பது:—கலெக்ட்டராவது, ஜப்தி பண்ணும்படி அவரால் அதிகாரங்கொடுக்கப்பட்டவேறே உத்தியோகஸ்தராவது, பாக்கிதாரனுடைய நிலத்தையாகிலும் அதின்பேரிலிருக்கிற சட்டடத்தையாகிலும் ஜப்தி செய்யத் தொடங்குவதற்கு முன்னமே, அவர் தண்டல் பத்திரிகை தாயார்செய்து, அதில் பாக்கித்தொகையையும், எதற்காக பாக்கி சேரவேண்டியிருக்கிறதோ அந்த பூஸ்திதி அல்லது நிலத்தையும் பாக்கிதாரனுடைய பேனாயும், தண்டல் பத்திரிகையைக் கொண்டுபோய்க் கொடுக்கிறவனுக்குச் சேரவேண்டிய படிச் செலவையும், எதின்பேரில் பாக்கியிருக்கிறதோ அந்தநிலத்துக்கும் பணம் செலுத்தப்படவேண்டிய இடத்திற்கு மிருக்கிற தூரத்தையோசித்து அதற்குத் தக்கபடி பணஞ் செலுத்துவதற்காக நிச்சயிக்கப்படுகிற காலத்தையும் கண்டெழுதி, அதை பாக்கிதாரனுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது. அந்த தண்டல் பத்திரிகையைச் சேர்ப்பிக்கிறவித மெப்படியென்ருல், அந்த பாக்கிதாரனிடத்திலாவது, அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்தில் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு வயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது, அவனுல் அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது, ஒருபிரதியை ஒப்புவிக்கவேண்டியது, அல்லது அவன் கடைசியாய் வாசஞ்செய்ததாகத் தெரியவருகிற இடத்திலாவது ஜப்தி செய்யப்போகிற நிலமிருக்கிற இடத்திலாவது, எல்லாருக்குந் தெரியும்படி ஒரு நகலை ஒட்டவேண்டியது.

26. பாக்கிதாரன் பணங்கட்டாவிட்டால் இன்னது செய்யப்படுமென்பது:—தண்டல் பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொகை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்ட்டருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே யாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியான வகை செய்யப்படாவிட்டாலும், அவர், பாக்கிதாரனுடைய நிலத்தை அடியில் கண்டிருக்கிற விதமாய் ஜப்திசெய்து ஏலத்தில் விற்று அந்தபாக்கியை வசூல்செய்யத் தொடங்கவேண்டியது.

27. ஜப்தி செய்கிற விதம்:—எல்லாருக்குந் தெரியும்படியான நிலத்தின் ஓர் பாகத்தில் இஸ்தியார் ஒட்டி ஜப்தி செய்யவேண்டியது, பாக்கியும் அதற்கு வட்டியும் செலவுகளும் இன்னதேதிக்குள் செலுத்தப்படாவிட்டால் அந்த நிலமானது சட்டப்படி ஏலத்தில் விற்றுப் போடப்படுமென்று அந்த இஸ்திதியாரில் கண்டெழுதவேண்டியது. ஜப்தியை நிலமிருக்கப்பட்டயிடத்தில் பிரசித்தஞ் செய்யவேண்டியது மல்லாமல் ஜில்லா கெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

---

* அதாவது தீர்வை செலுத்தாமல் பாக்கி ஏற்பட்டு அதனுல் ஏலம் போட அவசியம் நேரிட்டதோ அவனுக்கு (அந்தபாக்கிதாரனுக்குக்) கொடுக்கப்படுமே யல்லாமல் முதல் ஏலம் எடுத்தவனுக்கு கொடுக்கப்படமாட்டாது.

28. எஜென்டை நேமிப்பது :— பாக்கிதாரனுடைய நிலத்தை ஜப்தி செய்கையிலாகிலும், அல்லது அது ஜப்தியிலிருக்கையி லெப்போதாகிலும், அந்த நிலத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவர கலெக்ட்டருக்கு அதிகார முண்டு. அப்படி செய்கிறபட்சத்தில், அவர் அப்படி நடத்திவருவதற்காக தகுந்த சிப்பந்திகள் சகிதமாய் ஒரு எஜெண்டை நேமித்து, இன்னபடி நடந்துகொள்ளவேண்டியதென்று கண்டெழுதி தன்னுடைய முத்திரையுங் கையெழுத்தும் போட்டு அந்த எஜெண்டுக்கு ஒரு நேமனப்பத்திரிகை கொடுக்கவேண்டியது; அப்படிகாரியம் நடத்திவருவதற்காகப் பிடிக்கிற செலவுகள் அந்த சொத்தின் வரும்படியிலிருந்து செலவழிக்கப்படும்; ஆனால் சொத்தானது மிகவும் சொற்பமாயிருந்து, அதின் வரும்படியிலிருந்து எஜெண்டுக்கு சம்பளம் கொடுக்கக் கூடாமையாயிருந்தால், கலெக்டரால் நேமிக்கப்படும் ரிவினியூ உத்தியோகஸ்தன் வசத்தில் அது ஒப்புவிக்கப்படும். அந்த உத்தியோகஸ்தன் எஜெண்டுகளைக் குறித்து இதில் சொல்லியிருக்கிற எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டியது.

29. அப்படி நடத்திவரப் போகிற சங்கதியை தெரிவிக்கவேணுமென்பது:—அப்படி அந்த சொத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவரப் போகிறதைக்குறித்து பாக்கிதாரனுக்கு 25-வது பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் உடனே நோட்டீசு கொடுக்கவேண்டியதுமல்லாமல் அந்த நிலமிருக்கப்பட்டயிடத்தில் பிரசித்தஞ்செய்து ஜில்லா கெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

30. எஜெண்டு செய்யவேண்டிய காரியங்கள் :—28-வது பிரிவின்படி எஜெண்டானவர் காரியங்களை நடத்திவருகையில், அந்த பாக்கிதாரனுக்கும் அவனிடத்தில் குத்தகை செய்துகொண்டிருக்கிறவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கைகளின் பிரகாரமாவது, அப்படி உடன்படிக்கைகள் ஏற்பட்டிராவிட்டால் நடந்து வருகிற வழக்கப்படிக்காவது, அந்த சொத்தைக் குறித்து அதுவரையில் பாக்கியாயும் இனி வரவேண்டியதாயுமிருக்கிற குத்தகைத்தொகைகளையும் வரும்படிகளையும் அந்த எஜெண்டு வசூல்செய்து வரவு செலவுகளுக்குக் கணக்கெழுதி, அந்தக்கணக்கையும் மீதிப்பணத்தையும் கலெக்ட்டரிடத்திற்காவது கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவாது மாதாந்தரமாகிலும் கேட்கப் படும்போதாகிலும் அனுப்பிவிடவேண்டியது. மேற்படி பாக்கிதாரன் தகுந்தகாலங்களிலே அந்த கணக்குகளைப் பார்வையிடலாம், கட்டணம் பீஸ் ஒன்றுங்கொடாமலே தன்னுடைய சொந்த செலவில் அதுகளுக்கு நகல்கள் எழுதிக்கொள்ளலாம்.

31. வியாச்சியத்திற்காவது பிரியாதுக்காவது எஜெண்டு உள்ளாவாரென்பது :—மேற்படி பாக்கிதாரனுக்காவது அவனுடைய சொத்துக்காவது கெடுதியுண்டாகும்படி எஜெண்டினால் சட்டத்துக்கு விரோதமாய் யாதொரு

அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து அந்த எஜெண்டின்பேரில் அந்த பாக்கிதாரன் வியாச்சியமாவது தொடரலாம்; பிரியாதாவது செய்யலாம்; உட்கடைபாத்தியத்தினலே அனுபவிக்கிற ரயித்துகள் முதலானவர்களெல்லோரும் பாக்கிதாரனல் யாதொரு அநியாயஞ் செய்யப்பட்டால் அதைக் குறித்து நியாயந்தேடிக்கொள்வதுபோலவே எஜெண்டினல் செய்யப்படுகிற அநியாயத்திற்கும் நியாயம் தேடிக்கொள்ளலாம்.

32. பூமிக்குடையவனுக்கும் குத்தகைதார்களுக்கும் உண்டாயிருக்கிற உடன் படிக்கைகள் இன்ன பிரயோஜனப் படுமென்பது:—பூமிக்குடையவனுக்கும் அவனுடைய குத்தகைதார்களுக்கும் பிறந்திருக்கிற உடன் படிக்கைகளிலே இதில் பின்னல் கண்டிருப்பவைகள் தவிர மற்றெல்லா உடன் படிக்கைகளின்படிக்கும் கலெக்ட்டரானவர் சொத்து ஜப்தியிலிருக்கும் காலத்தில் உட்படவேண்டியது; ஆனல் ஜப்தியை பிரயோசனப்படவொட்டாமல் தடுக்கவேணுமென்ருவது ஆலசியப்படுத்தவேணுமென்ருவது கெட்ட எண்ணத்துடனே செய்யப்பட்ட சகல உடன்படிக்கைகளும், தொழிற்சாலைகள் அல்லது கட்டடங்கள் கட்டவேணுமென்றும் கரம்பு நிலத்தை சாகுபடிக்கு லாய்க்குள்ளதாய்ச் செய்து சாகுபடிசெய்யவேணுமென்கிறதுமான நல்லெண்ணத்துடன் செய்யப்படாமலும் வழக்கமான குத்தகை வரியைவிட குறைந்த குத்தகைவரி வீதத்துக்கு தயார் செய்யப்பட்டதுமான குத்தகை ஒப்பந்தங்களும், ஜப்திக்குப்பின்பு செய்யப்பட்ட சகல உடன் படிக்கைகளும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாததென்று தெரிவிப்பாராகில், அப்படிப்பட்டவை அவர்பேரில் தொடருவதற்குச் சம்பந்தமற்று ரத்தாய் விடும்; ஆயினும் அடிப்பட்ட உடன்படிக்கையில் சம்பந்தமுள்ளவர்கள் தங்களுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்வதற்கு சாதாரண நியாயஸ்தலங்களிலே கலெக்ட்டர்பேரில் வியாச்சியங்கொண்டுவர பாத்தியமுடையவர்களாவார்கள்; அப்படிப்பட்ட நிலத்தின்பேரில் கொதுவை முதலிய எவ்விதமான செலவுகளிருந்தபோதிலும் அதுகளையெல்லாம் சர்க்கார் தீர்வை செலுத்துகிறவரையில் நிறுத்திப்போடவேண்டியது.

33. குத்தகைதார்கள் பாக்கியைச் செலுத்துவது:—யாதொரு சர்க்கார் பாக்கிதாரனிடத்தில் குத்தகை ஒப்பந்தம் செய்து பயிரிடும் யாதொரு குத்தகைதாரனனவன் தன்னல் வாஸ்தவமாய் ஷை பாக்கிதாரனுக்குச் சேரவேண்டிய குத்தகை வகையருக்களுக்காக பூமிக்குடையவனிடத்திலாவது அவனுக்காக வேருெருவனிடத்திலாவது சொத்தைச்சேர்ந்த காரியங்கள் ஸர்க்காரால் நடத்திவரப்படுமென்று மேற்சொல்லியபடி பிரசித்தஞ் செய்யப்படுவதற்கு முன்னமே பணஞ் செலுத்தியிருந்தால், அதை கலெக்ட்டர் ஒப்புக்கொள்ள வேண்டியது, அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்டபின்பாவது, செலுத்தவேண்டிய கெடுவுக்கு முன்னமேயாவது செலுத்தப்பட்ட பணமானது கலெக்ட்டரால் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதல்ல; ஆகையினலே அதை

யார்செலுத்தினர்களோ அவர்களிடத்திலிருந்து பாக்கிவகையரு தொகை முழுமையும் குத்தகைத்தொகை பாக்கியைப்போலவே வசூல்செய்ய கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு; இஷ்டமிருந்தால் அப்படி அவர்கள் செலுத்திய தொகைக்காக அவர்கள் பாக்கிதாரன்பேரில் சாதாரணகோர்ட்டுகளில் வியாச்சியம் தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம்.

34. ஜப்தி பரகாஸ்தானபின்பு இன்னவிதமாய் பைசல் செய்யவேண்டுமென்பது :—ஜப்தி சொத்திலிருந்து வந்த பணத்திலே ஜப்திசெலவும் சொத்தை பராமரித்ததற்கு செலவும் செலுத்தப்பட்டபின்பு மற்றதை தீர்வை பாக்கிக்கும், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு அதின்பேரில் கூடுகிறவட்டிக்கும் செல்லாக பாக்கிதாரன்பேரால் வரவு வைத்துக்கொண்டேவந்து, இவ்விதமாய் தீர்வை பாக்கி முழுமையும் வட்டியும் ஜப்திசெலவும் சொத்தைப் பராமரித்து வந்ததற்காகப்பிடித்த செலவும் தீர்ந்துபோன உடனே ஜப்தி விடுதலைசெய்யப்பட்டு ஜப்தியிலிருந்தவரையிலுண்டான சகல வரவு செலவுகளுக்கும் பூர்த்தியாய் கணக்கு கொடுக்கப்படும்.

35. நிலத்தில் சம்பந்தமுடையவர்கள் அதை ஜப்தியிலிருந்து நிவர்த்தி செய்யலாமென்பது :—ஜப்திசெய்யப்பட்டாவது ஜப்திசெய்யப்படப்போகிறதாயாவதிருக்கிற நிலத்தில் பாத்தியமுடையவனெவனாகிலும் தீர்வை பாக்கியையும் வட்டியையும் மற்றுமுண்டான செலவுகளையும் செலுத்தி அந்த நிலத்தை ஜப்தியிலிருந்து நிவர்த்திசெய்து கொள்ளலாம்; அப்படி நிவர்த்தி செய்துகொள்வதற்காக யாதொரு குத்தகை ஒப்பந்தக்காரன் பணஞ்செலுத்தினல் அந்த பணத்தை பாக்கிதாரனுக்கு அப்போதாகிலும் பின்பாகிலுங் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத்தகைத்தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம் ; அந்த சொத்தின்பேரில் கொதுவையாகவாவது வேறே எவ்விதமாகவாவது வாஸ்தவமாய் பணங் கொடுத்திருக்கிறவன் மேற்படி தொகையைச்செலுத்தினல் அது அவனுக்கு மேற்படி பாக்கிதாரன் அந்த நிலத்தின் பேரில் கொடுக்கவேண்டிய கடனாகும் ; அப்படியானபோதிலும், மற்ற கடன்களைப்போலவே பணஞ் செலுத்தப்பட்ட தேதி வரிசைப்படி அவனுக்குச் செலுத்தப்படவேண்டியதாகும்.

36. அசையாப்பொருளை விற்பதில் அனுசரிக்கவேண்டிய விதிகள்:—இந்த ஆக்டின்படி அசையாப்பொருளை விற்கையில் அனுசரிக்கவேண்டிய விதிகளென்னவென்றால் :—

(1) பகிரங்கமான எலம் :—பகிரங்கமான எலத்தில் உயர்ந்த விலைக்கு கேட்கிறவனுக்கு விற்கப்படும். அந்த சொத்து இருக்கிற ஜில்லாவின் கலெக்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே அதிகாரியாவது எலம் போடப்படும் காலத்தையும் இடத்தையும் நிச்சயிக்கவேண்டியது. அந்தகாலமானது பசலிவருஷம் முடிவதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவதிருக்கலாம்.

(2) எலம்போட ஒருமாசத்திற்கு முன்னமே இஸ்தியார் :—எலம் போடு வதற்கு முன்னமே கலெக்ட்டராவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது, பாக்கிதாரனுடைய பெயரையும், நிலத்தின் இருப்பிடத்தையும் அளவையும் அதின்பேரில் கட்டியிருக்கிற அவனுடைய கட்டடங்களின் நிலைமையையும் விஸ்தீரணத்தையும், அந்தநில மொத்தத் திற்காவது துண்டு துண்டாகவாவது போடப்பட்டிருக்கிற தீர்வைத்தொ கையையும், நடமுதல் பசலிக்காகச் சேரவேண்டிய சர்க்கார் பாக்கி இவ்வ ளவென்பதையும், இன்னகாலத்தில் இன்ன இடத்திலே இன்ன ஷரத்துக ளின்படி எலம் போடப்படுமென்பதையும், கண்டெழுதி இங்கிலீஷிலும் அந்த ஜில்லாவில் வழங்குகிற பாஷையிலும் இஸ்தியார்பிறப்பித்து, அதை எலம் போடுவதற்கு அதமபக்ஷம் ஒருமாசத்துக்கு முன்னமே கலெக்ட்டர் கச்சே ரியிலும் தாலூக்கா கச்சேரியிலும் சமீபத்திலிருக்கிற டாணுவிலும் அந்த நிலத்தில் எல்லாருக்குந்தெரியும்படியான இடத்திலும் ஒட்டவேண்டியது.

(3) டேவணி கட்டுவதையும் மற்றப்பணத்தைச் செலுத்துவதையுங் குறித்து :—நிலங்களை எலத்திலெடுக்கிறவன் அந்தக் கிரயத்தொகையில் நூற் றுக்கு பதினைந்து விழுக்காடு கலெக்ட்டரிடத்திலாகிலும் கலெக்டரால் அதி காரம் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் எலத்தி லெடுக்குங் காலத்தில் டேவணி கட்டவேண்டியது. கிரயத்தொகையில் மற்ற பணத்தை முப்பது நாளைக்குள் அவன் செலுத்தாவிட்டால், அந்த டேவணிபணத்தை இழந்துவிடுவான்.

(4) பணஞ் செலுத்தாவிட்டால் மறுபடி எலம்போடுவது :—எலத்தி லெடுக்கிறவன் மேற்சொல்லியபடி டேவணி கட்டாவிட்டாலும் கட்டமா ட்டேனென்றாலும், டேவணி கட்டினபோதிலும் மீதி கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டாலும், அந்த சொத்தை மறுபடி எலம்போட்டு, அதினாலு ண்டாகிற செலவையும் நஷ்டத்தையும் சர்க்கார் தீர்வைபாக்கியை வசூல் செய்கிற விதமாகவே எலமெடுத்தவனிடத்திலிருந்து வசூல் செய்யலாகும். அந்தநிலம் முதல் எலத்தைவிட இரண்டாவது எலத்தில் அதிகவிலைக்கு விற்றால் அந்த அதிகப்பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் எலம் போடபட்டதோ அவனுக்கு*ச்சேரவேண்டியது.

(5) எஜெண்டுகள் தங்கள் முதலாளிகளுடைய பெயரைச் சொல்ல வேணுமென்பது:—எலத்தில் விலை கேட்கிறவர்களெல்லோரையும் தங்கள் சொந்தத்திற்கு விலைகேட்கிறார்களா அல்லது வேறே யாருக்காவது எஜெ

---

* தீர்வை பாக்கி செலுத்தவேண்டியவன் என்று தாத்பரியப்பட வேண்டுமேயல்லாமல் முதல் எலமெடுத்தவன் என்று தாத்பரியப்படக் கூடாது.

ண்டுகளாக விலைகேட்கிறார்களா அதைச் சொல்லும்படி கேட்டு, எஜெண்டு களாயிருந்தால் முதலாளிகளுடைய கையெழுத்துள்பட அதிகார பத்திரத் தைக்கொண்டுவந்து ஆஜறப்படுத்தச் சொல்லலாம். கேட்கப்பட்டபடி அவர் கள் ஆஜர் செய்யாவிட்டால், அவர்கள் எலத்தில் விலைகேட்பதை தள்ளு கடை செய்யலாம்.

37. எலத்திற்கு முன்னாள் சூரிய அஸ்தமானத்திற்குள் பாக்கியைக் கட்டலாமென்பது:—பாக்கிதாரனாவது, அவனுக்காகக் காரியங்களை நடத்து கிற எவனாவது, நிலத்தில் பாத்தியமுடையவனெவனாவது, தீர்வை பாக்கி முழுமையும், அதற்கு வட்டியையும், பாக்கியைத் தண்டல் செய்வதற்கும் சொத்தை ஜப்திசெய்வதற்கும் அதை பாரமரித்து வந்ததற்கும் எலம் போடுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்வதற்கும் பிடிக்கிற சகல செலவுகளையும், கொண்டுவந்து கட்டினால் எலம்போடுவது நிறுத்திவிடப் படும்: ஆனால் அப்படி பணங்கட்டுகிறவர்கள் எலத்திற்கு நிச்சயித்திருக்கிற தினத்திற்கு முன்னாள் சூரிய அஸ்தமானத்திற்குள் கட்டவேணும் அப்படி யாதொரு குத்தகை ஒப்பந்தக்காரனாவது, அல்லது அந்த சொத்தின்பேரில் கொதுவையாகவாகிலும் வேறே எவ்விதமாகவாகிலும் பணங் கொடுத்திருக் கிறவனாவது கட்டினால் அந்தத்தொகையை 35-வது பிரிவில் சொல்லி யிருக்கிற விதமாய் வசூல்செய்து கொள்ளலாம்.

38. எலத்தை ரத்துசெய்ய விண்ணப்பஞ் செய்வது:—எலத்தைப் பிர சித்தம் செய்வித்ததிலாவது எலத்தை நடத்தியதிலாவது யாதாவது முக்கிய மான ஒழுங்கீனம், தப்பு, அல்லது மோசடியான செய்கை நடந்திருப்பதாக சொல்லி எலத்தை ரத்துசெய்யவேண்டுமென்று நிலயேலம் போடப்பட்ட தேதிமுதல் 30-நாளைக்குள்ளாக எப்போதாவது கலெக்ட்டருக்கு விண்ணப் பஞ் செய்துகொள்ளலாம் ; ஆனால், எலத்தை ரத்துசெய்வதற்காக அடியில் கண்ட விஷயங்களில் தவிர, எலத்தை ரத்து செய்வதற்காக செய்துகொள்ளப் படும் விண்ணப்பத்தினால் விண்ணப்பதாரனுக்கு அப்பேர்ப்பட்ட ஒழுங் கீனம் தப்பு முதலியவற்றால் வாஸ்தவமாய் தீங்குநேரிட்டிருந்ததாக கலெ க்ட்டருக்குத் திருப்திகரமாய் ஏற்பட்டாலொழிய அப்பேர்ப்பட்ட ஒழுங் கீனம் தப்பு முதலிய காரணத்தை முன்னிட்டு யாதொரு எலமும் ரத்துசெய் யப்படக்கூடாது.

(2) விண்ணப்பத்தை அங்கீகரித்துக்கொள்ளும் பக்ஷத்தில், கலெக்ட்ட ரானவர் எலத்தை ரத்துசெய்து புது எலம்போடும்படி உத்திரவு செய்யலாம்.

(3) எலம் ஸ்திரப்படுத்தப்பட்டதென்றாவது ரத்து செய்யப்பட்டதென் றாவது உத்திரவுசெய்வது :—அப்பேர்ப்பட்ட யாதொரு விண்ணப்பஞ் செய் துகொள்ளாமற்போனாலாவது அல்லது அப்படி விண்ணப்பஞ் செய்துகொள் ளப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலாவது, எலம் போட்டதேதி

முதல் 30-நாளானபிறகு கலெக்ட்டர் ஏலத்தை ஸ்திரப்படுத்தவேண்டியது. ஆனால், அப்பேர்ப்பட்ட யாதொருமனுவானது செய்துகொள்ளப்படாமற் போனாலும் அல்லது விண்ணப்பஞ் செய்துகொள்ளப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட அப்பேர்ப்பட்ட விண்ணப்பத்தில் கண்ட காரணங்களல்லாமல் வேறே காரணங்களை முன்னிட்டாவது ஏலத்தைரத்து செய்யவேண்டுமென்று தாமே நினைக்க நியாயமிருக்கும் பக்ஷத்தில், கலெக்டரானவர் எழுத்துமூலமாய் தம்மிட காரணங்களை யெழுதி ஏலத்தை ரத்து செய்யலாம்.

(4) ஏலம் ரத்து செய்யப்பட்டால் டேவணியை வாப்ஸ் செய்வது :—யாதொரு நில ஏலமானது அப்படி ஸ்திரப்படுத்தப் படாமலாவது அல்லது ரத்து செய்யப்பட்டாவது இருந்தால் ஏலமெடுத்தவன் கட்டியிருக்கும் டேவணியானது அவனுக்குத்திருப்பி கொடுக்கப்படும்.

(5) அப்பேர்ப்பட்ட யாதொரு ஏலமானது ஸ்திரப்படுத்தப்பட்ட பிற்பாடு, ஏலத்தில் விலைக்கு வாங்கினவனென்று பகிரங்கமாய் சொல்லப்பட்ட ஆஸாமிபேரால் கலெக்ட்டரானவர் நிலங்களை ரிஜிஸ்டர்செய்து தம்மிட முத்திரையும் கையெழுத்தும் போடப்பட்ட ஒரு ஏல ஸர்ட்டிபிகேட்டை தயாரித்து அதை ஏல்தாரனுக்கு கொடுக்கவேண்டியது. விற்கப்பட்ட சொத்து பலானதென்றும், ஏலத்தில் விலைக்கு வாங்கினவனிடபெயரையும் அப்பேர்ப்பட்ட ஸர்ட்டிபிகேட்டில் கண்டெழுதவேண்டியது; அப்படி இந்தநிலமானது பலானவனால் ஏலத்தில் வாங்கப்பட்டதென்று எந்த நியாயஸ்தலங்களிலாவது ருஜூப்பிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தால் அப்பேற்பட்ட நியாயஸ்தலங்களில் ஷை சர்ட்டிபிகேட்டானது ஏலத்தில் பலானவனால் வாங்கப்பட்டதென்பதற்கு முடிவான சாக்ஷியமாகும்; எந்த அதிகாரியின் முன்பாக யாதொரு ஸர்ட்டிபிகேட்டானது ஆஜர் செய்யப்படுகிறதோ அந்த அதிகாரியானவர் அந்த ஸர்ட்டிபிகேட்டில் செய்திருக்கும் கலெக்ட்டரிட முத்திரையாவது அல்லது கையொப்பமாவது உண்மையானதோ அல்லவோவென்று சந்தேகிக்க இடமிருந்தாலொழிய, அப்பேற்பட்ட முத்திரை அல்லது கையொப்பம் இவைகளுக்கு ருஜூ வேண்டிய அவசியமில்லை.

39. விக்கிரயத்தைப் பிரசித்தஞ் செய்வது:—நிலங்கள் ஏலத்தில் வாங்கி கொள்ளப்பட்டால் கலெக்ட்டராவது கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட வேறெ உத்தியோகஸ்தராவது கிரயத்துக்கு வாங்கினவனுடைய பெயரையும், வாங்கினதேதியையும், மேற்படிநிலங்களில் முன்சொந்தகார்களுக்கு உண்டாயிருந்த சகல சுதந்தரங்களும் பாத்தியதையும் சட்டப்படி ஏலத்தில் கிரயம் வாங்கினவனுக்கு உண்டென்றும்,ஏலம்போடப்பட்ட நிலங்களிருக்கிற கிராமங்களிலும் தாலூக்காகச்சேரிலும், அந்தஜில்லா ஹூஜூர்கச்சேரிலும், ஜில்லாகெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

40. சொத்தை ஸ்வாதீனஞ்செய்வது:—அப்படி பிரசித்தஞ் செய்யப் பட்டிருந்தும், நிலத்தை நியாயமாய் ஏலத்தில் வாங்கினவன் அதை ஸ்வா தீனப்படுத்திக் கொள்ளவொட்டாமல் தடுக்கப்படுவானாகில் தகுந்த அதிகார முடைய யாதொரு கோர்ட்டாரிடத்தில் மனுவுசெய்துகொண்டு 38-வது பிரிவில் சொல்லியிருக்கிற ஏலவிக்கிரயச்சீட்டைக் காட்டுவதின்பேரில், அந் தக் கோர்ட்டார் அந்தநிலம் கிரயதாரனுக்கு சித்திக்கும்படி கோர்ட்டு தீர் ப்பாயிருந்தா லெப்படியோ அவ்விதமாகவே அவனுக்கு அதை ஸ்வாதீனப் படுத்தும் பொருட்டு தகுந்தகட்டளை பிறப்பிக்கவேண்டியது.

41. பாக்கிதாரனிடத்தில் செய்து கொள்ளப்பட்டிருக்கிற உடன்படி க்கைகளையும் செலுத்தப்படிருகிற பணத்தையும் ஏலக்கிரயக்காரன் இவ்வளவு மட்டில் ஒப்புக்கொள்ள வேணுமென்பது:—பாக்கிதாரன் தன்னுடைய குத் தகை ஒப்பந்தக்காரர்களிடத்தில் செய்துகொண்டிருக்கிற சகல உடன் படி க்கைகளையும் அவர்கள் அவனுக்குச் செலுத்தியிருக்கிற சகல தொகைகளை யும் அப்படிப்பட்டதை என்ன திட்டங்களின்படி எவ்வளவுமட்டில் ஒப்புக் கொள்ளவேணுமென்று இந்த ஆக்ட்டு 32-வது 33-வது பிரிவுகளில் சொல் லியிருக்கிறதோ அந்தப்படியே ஏலகிரயதாரன் ஒப்புக்கொள்ள வேண்டியது.

42. ஏலத்தில் போடப்பட்ட சொத்துக்குக் கொதுவைமுதலான சிக்கு கள் என்ன இருந்தபோதிலும் நிமித்தமில்லை யென்பது; மிகுதி இன்னது செயப்படுமென்பது:—சர்க்கார் தீர்வை பாக்கிக்காக ஏலம் போடும்படியான நிலங்களின் பேரில் கொதுவை முதலிய சிக்குகள் என்ன இருந்தபோதிலும் நிமித்தியமில்லாமல் அதுகள் ஏலத்தில் விற்கப்படும்; விற்றபணத்திலே, தீர் வைபாக்கியும், வட்டியும், ஜப்திசெலவும், ஏலம்போடுவதற்காக செலவும் மற்றசெலவுகளும் செலுத்தப்பட்ட பின்பு மிகுதி ஏதாவதிருந்தால் அதை பாக்கிதாரனுக்குக் கொடுக்கக்கூடாதென்று தகுந்த அதிகாரமுடைய யா தொரு கோர்ட்டு கட்டளையினால் தடுக்கப்பட்டாலொழிய அவனுக்குக் கொடுத்துவிடலாகும்.

43. பாக்கிதாரனுக்கு அவனுடைய ரயித்துகள் ஏலவிக்கிரய தினம் வரையில் கொடுக்கவேண்டிய குத்தகைத்தொகை பாக்கியை வசூல் செய்கிற விதம்:—ஏலம் போடப்படுமாகில், அன்றையவரையில் பாக்கிதாரனுக்கு அவ னுடைய குத்தகை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத் தகைத் தொகை பாக்கியை, அவன் மேற்படி ஏலத்திற்கு முன்னமே வசூல் பண்ணுவதற்கு அனுஷ்டித்திருக்க கூடிய ஜப்தி மார்க்கம் தவிர, வேறே எந்த நடவடிக்கையையாவது அந்த ஏலத்திற்குப்பின்பு நடத்தி வசூல் செய்து கொள்ளலாம்.

44. நிலத்தை விற்பதைக்குறித்து:—சர்க்கார் தீர்வை பாக்கிக்காக பாக் கிதாரனுடைய நிலமுழுமையையுமாகிலும் அதில் எவ்வளவாகிலும் விற்ப

தற்கு கலெக்ட்டருக்காவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு, ஆனல் தீர்வை பாக்கியையும் அதற்கு வட்டியையும் ஜப்தி செலவையும் நிலத்தைப் பராமரித்து வந்ததற்கும் ஏலம் போடுவதற்குமுண்டான செலவுகளையும் செலுத்துவதற்கு அந்த நிலத்தில் எவ்வளவு பாகம் விற்பனைசெய்தால் போதுமோ சாத்தியமானமட்டில் அதை விட அதிகமாக விற்ககூடாது.

45. நிலப்பிரிவுக்குத் தீர்வையை பாகித்து விதிப்பதைக் குறித்து:— மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிக்காவது மொத்தமாகத் தீர்வை செலுத்திக் கொண்டாவது அனுபவிக்கப்படுகிற யாதொரு பூஸ்திதியின் ஓர் பாகமாத்திரம் ஏலத்தில் விற்கப்பட்டால், அந்த பாகத்திற்குத் தீர்வை இவ்வளவென்று கலெக்ட்டரானவர் ஏலத்திற்கு முன்னமே நிச்சயிக்கவேண்டியது ; எப்படிக் கென்ருல்:—

பூஸ்திதி முழுமைக்குமுண்டான சர்க்கார் தீர்வை மொத்தத்தை அந்த ஸ்திதி முழுமையும் என்னவிலையாயிருக்கிறதோ அதற்குத் தீர்வைவீதமாக வைத்துக்கொண்டு, அந்த வீதப்படிக்கு அந்த பூஸ்திதியிலிருந்து பிரிக்கப்படுகிற பாகத்திற்கு ஏற்படுகிற கிரயத்தின்பேரில் அந்தபாகத்திற்கு சர்க்கார் தீர்வை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டியது.

(1) கணக்குகளை ஆஜர்ப்படுத்துவதைக் குறித்து:—மேற்சொல்லியபடி நிச்சயிக்கும் பொருட்டு, கலெக்ட்டரானவர், பாகிக்கவேண்டிய அந்த நிலங்களில் உற்பத்தியான உடைவாரம் கண்டு முதலையும் அந்த நிலங்களைச் சேர்ந்த காரியங்களை மேல் விசாரணைசெய்து நடத்துவதற்குண்டான செலவுகளையும் குறித்த கணக்குகளை ஆஜர்செய்யும்படி பூமிக்குடையவர்களுக்கும் கிராம கணக்கப்பிள்ளைகளுக்கும் உத்தரவு செய்ய அதிகாரமுடையவராவார். அப்படி கேட்கும்போது அந்த பூமிக்குடையவர்களும் கணக்கபிள்ளைகளும் அப்போது நடக்கிற வருஷத்திற்கு முன்னிட்ட மூன்று வருஷங்களின் கணக்குகளுக்குக் குறையாமல் அந்தகணக்குகளை ஆஜர்ப்படுத்தவேண்டியது. பாகிக்கப்பட்ட நிலங்களுக்குத் தீர்வை நிர்ணயிக்கப்படவொட்டாமல் தடுக்கும்பொருட்டு பூமிக்குடையவன் கணக்குகொடுக்க மாட்டேனென்ருவது, அகாரணமான ஆலசியம் செய்தாலாவது கலெக்ட்டரானவர் அந்த பூஸ்திதி முழுவதையும் ஏலம் போட்டுவிடலாம்.

46. தீர்வை பிரிவணை செய்யபட்டதை போர்ட்டார் ஸ்திரப்படுத்தினல் மாத்திரமே ஸ்திரமானதாகு மென்பது:—மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிக்காவது வேறே எதின்படிக்காவது அனுபவிக்கப்பட்டு மொத்தமாகத் தீர்வை செலுத்தப்படுகிற பூஸ்திதியைப்பிரித்த பாகங்களின்பேரில் கலெக்ட்டரால் விதிக்கப்படுகிற சாஸ்வதமான தீர்வைத் தொகையானது ரிவினியூ போர்ட்டரால் எழுத்து மூலமாய்ப் பிறப்பிக்கப்படுகிற உத்திரவினுலே ஸ்திரப்படுத்தப்படுகிறவரையில் ஸ்திரமாகமாட்டது.

47. ஜாமீன் கொடுக்கிறதாயிருந்தால் ஏலத்தை நிறுத்தலாமென்பது :— பாக்கிதாரன் ஜாமீன் கொடுக்கிறதாயிருந்தால் கலெக்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது ஜாமீனை ஏற்றுக்கொண்டு, தாம் நிச்சயிக்கிற காலம் வரையிலே தாம் ஏற்படுத்துகிற திட்டங்களின்படி பாக்கிதாரனுடைய சொத்தை ஏலம்போடாமல் நிறுத்தி வைக்கலாம் ; அந்த திட்டங்களின்படி நடக்கத் தவறிப்போனால், அந்த கலெக்ட்டராவது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறு உத்தியோகஸ்தராவது சொத்தை ஏலம்போட்டு, அந்த பாக்கிதாரன் பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன் பேரிலாவது, இருவர்பேரிலுமாவது, தொடரலாம்.

48. பாக்கியை வேணுமென்றுவது மோசடியாகவாவது செலுத்தாதிருந்தால், காவலில் வைப்பதற்கு அதிகாரம் :—மேற்சொல்லியபடி வட்டியுள்பட சர்க்கார் தீர்வை பாக்கிக்கும் மற்ற செலவுகளுக்கும் பாக்கிதாரனிட அல்லது அவனுடைய ஜாமீன்தாரனிட சொத்தை விற்றுவந்த பணம்போதாமலிருந்து, பாக்கிதாரனாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனாகிலும் வேணுமென்றுபாக்கியை கட்டாமலிருக்கிறதாகவாவது, பணங்கட்டாமல் மோசஞ் செய்யும்பொருட்டு யாதொரு மோசடியான காரியஞ் செய்ததாகவாவது கலெக்ட்டர் நம்புவதற்குத் தகுந்த முகாந்தரமிருந்தால், அவர் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி ஸ்திரீஜாதி தவிர, புருஷனாயிருக்கிற பாக்கிதாரனையாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனையாகிலும் பிடித்து சிறைச்சாலையில் வைப்பிக்கலாம் ; ஆனால் சர்க்கார்தீர்வைபாக்கிக்காக இரண்டுவருஷத்திற்கதிகமாய் ஒருவரையும் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது. அந்த பாக்கி 500-ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ஆறுமாசத்திற்கதிகமாயும், 50 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் மூன்று மாசத்திற்கதிகமாயும், சிறைச்சாலையில் வைக்கக்கூடாது, மேலும் மேற்சொல்லிய கிரமப்படி காவலில் வைத்தபோதிலும் அந்த பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய பாக்கி தீர்ந்துபோனதாகமாட்டாது.

49. ஆஸாமி பிடித்துவைக்கும்பக்ஷத்தில் அதின்பேரில்நடவடிக்கை:— ஸ்திரீகள் தவிர புருஷனாகிய பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்வதற்கு கலெக்ட்டர் வாரண்டு பிறப்பித்து, அதில் அப்படி பிடிக்கப்படவேண்டியவர்களுடைய பெயர்களையும், சர்க்கார் தீர்வை பாக்கித் தொகையையும், செலுத்தவேண்டிய கெடுவான தேதியையும் கண்டெழுதி, தன் கையெழுத்தும் முத்திரையும் போடவேண்டியது. பின்பு அந்த வாரண்டை நிறைவேற்றும்படி அது யாரிடத்தில் ஒப்புவிக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது பிடித்துக்கொண்டு டிஸ்திரிக்ட்டு ஜெயிலுக்குக் கொண்டுபோய், அந்த வாரண்டை ஜெயிலரிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது ; அப்படிப்பட்ட கைதிகளை ஜெயிலில்

வைத்துக்கொள்ள அந்த ஜெயிலருக்கு அதிகாரமுண்டாக்குவதற்கு அந்த வாரண்டே போதும். அந்த ஜெயிலர் அந்தவாரண்டுக்கு நகலை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு அசலை அந்த ஜெயில் விசாரணை அதிகாரியினிடத்திற்குஉடனே அனுப்பிவிடவேண்டும்.

50. ஜாமீன்தாரனிடத்திலிருந்து வசூல் செய்கிறவிதம்:—சர்க்கார் தீர்வை பாக்கிதாரர்கள் விஷயமாய் இந்த ஆக்டில் சொல்லியிருக்கிற சகல நடவடிக்கைகளையும் அவர்களுடைய ஜாமீன்தாரர்கள்பேரில் நடத்தலாம்; அப்படிப்பட்ட நடவடிக்கைகளை முதலாளியின்பேரில் நடத்துகிற தருணத்திலாவது அதற்கு முன்னிட்டாவது அல்லது பின்னிட்டாவது ஜாமீன்தாரன் பேரில் நடத்துவதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு. ஆயினும் பாக்கித்தொகையும் வட்டி முதலான செலவுகளும் சேர்ந்த மொத்தத்தைவிட அதிகமாக இருவரிடத்திலும் வசூல் செய்யக்கூடாது.

51. தானியமாக சர்க்கார் தீர்வையை ரொக்கத்துக்குப்பதிலாக செலுத்துகிற விஷயத்தில் மாசூலை எடுத்துக்கொண்டு போகவொட்டாமல் தடுக்கலாமென்பது:—தானியமாக சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், கலெக்ட்டருக்கு யுக்தமாகத்தோன்றுகிறபடி பூமிக்குடையவன் தகுந்த ஜாமீன் கொடாதபட்சத்தில், தானியத்தைப் பங்கிட்டு சர்க்காருக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரத்தியேகமாய் வைக்கிறவரையில் நிலத்திலிருந்து மாசூலை யெடுத்துக்கொண்டுபோகவொட்டாமல் தடுப்பதற்கு கலெக்ட்டருக்காகிலும் அவரால் அதிகாரங் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு.

52. மற்ற வகையான சர்க்கார்தீர்வை, தக்காவி, மேரை, முதலான வரியிறைகளின் விஷயத்தில் அப்படியே நடவடிக்கை நடத்தப்படுமென்பது:—சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலத்தீர்வை தவிர மற்ற சகல தீர்வைபாக்கிகளையும் சாகுபடி அல்லது ரிவினியூ சம்பந்தமான காரியங்களுக்காக சர்க்காரால் கொடுக்கப்பட்ட சகல (அட்வான்ஸ்) தக்காவிகளையும், ரிவினியூ அல்லது போலீசு அலுவல்களிலிருக்கிற கிராம ஊழியக்காரர்களுக்காக யாதொரு மனிதன் கொடுக்கவேண்டிய மேரை முதலானதுகளையும் சட்டப்படிக்கு நிலத்துக்குப் போட்டிருக்கிற சகல வரி முதலானவைகளையும், வேறே விதமாய் வசூல்செய்யும்படி இதுவரையிலாவது இனிமேலாவது பிரத்தியேகமாய் நிபந்தனை எற்பட்டிராத பட்சத்தில், இந்த ஆக்டின்படி நிலத்தீர்வை பாக்கியைப்போலவே வசூல் செய்யலாம்.

53. நோட்டீசு முதலானவை சேர்ப்பிக்கிறவர்களுக்கு படி(பத்தா)கொடுக்கப்படுமென்பது:—இந்த ஆக்டின்படி நோட்டீசு வாரண்டு முதலானதுகளைக்கொண்டுபோய் கொடுப்பதற்காக நேமிக்கப்பட்டவர்களுக்கு கவர்ண்

மெண்டாருடைய அனுமதியின்பேரில் ரிவினியூ போர்டாரால் அப்போதைக்கப்போது நிச்சயிக்கப்பட்டு டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்யப்படுகிற வீதப்பிரகாரம் படிகொடுக்கப்படும்.

54. வட்டிமுதலிய செலவுகள் தீர்வை பாக்கியைப்போலவே வசூல் செய்யப்படுமென்பது :—மேற்படி பிரிவில் கண்டிருக்கிற படிச்செலவும் இந்த ஆக்ட்டின்படி எற்படுகிற வட்டி முதலிய சகலசெலவுகளும் தீர்வைபாக்கியைப்போலவே பாக்கிதாரனிடத்திலும் அவனுடைய ஜாமீன்தாரர்களிடத்திலும் வசூல் செய்யத்தக்கதாகும்.

55. எலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவு செய்யப்பட்டபோதிலும் முன்னால்நேரிட்ட செலவுகளை பாக்கிதாரன் செலுத்தவேணுமென்பது.—ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை எலம் போடும்படி முன்னே உத்தரவுசெய்யப்பட்டிருந்து, அந்த எலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்ததற்காக அல்லது கைப்பற்றினதற்காக நேரிட்ட செலவுகளை அந்த எலம் நிறைவேறியிருந்தாற்போலவே அந்த சொத்துக்குடையவன் செலுத்தவேண்டும்; துகை செலுத்தாவிட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி தீர்வைபாக்கி வசூல்செய்யப்படுமோ அவ்விதமாகவே அது வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

56. தீர்வை செலுத்தினதற்கு ரசீது கொடுப்பது.—சர்க்கார் தீர்வை செலுத்துகிற பிரதி மனிதனும், கலெக்ட்டராலாவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராலாவது கையெழுத்து செய்துகொடுக்கப்படுகிற ரசீதை பெற்றுக்கொள்ளத்தக்கவனுவான். அந்த ரசீதிலே அப்படி செலுத்துகிறவனுடைய பேரையும் அது இன்னதுக்காகச் செலுத்தப்பட்டதென்பதையும் கண்டெழுதவேண்டும், நிலத்தீர்வைக்காக செலுத்தப்பட்டால் எந்தநிலத்திற்காகச் செலுத்தப்படுகிறதோ அந்தநிலத்தின் விவரத்தையும் அந்த நிலத்தைக்குறித்து ஸெட்டில்மெண்டு கணக்கில் தாக்கலாயிருக்கிறவர்களுடைய பேர்களையும் கண்டெழுதவேண்டியது.

57. பாக்கிதாரனுவது ஜாமீன்தாரனுவது டிஸ்திரிக்ட்டுக்கு வெளியில் வாசஞ்செய்தால், இன்னது செய்ய வேண்டுமென்பது:—பாக்கிதாரனுவது அவனுடைய ஜாமீன்தாரனுவது எந்த ஜில்லாவுக்குள் அவன் தீர்வை செலுத்தவேண்டியதோ அந்த ஜில்லாவில் செலுத்தாமல் பாக்கிவைத்துக்கொண்டு அதற்கு வெளி ஜில்லாவில் வாசஞ்செய்தாலும், அவ்விடத்திலே அவனுக்குசொத்து இருந்தாலும், அப்படி எந்த டிஸ்திரிக்ட்டில் பாக்கியிருக்கிறதோ அவ்விடத்திய கலெக்ட்டர் லட்டர் எழுதி கோரிக்கொள்வதின் பேரில் மேற்படியான் எவ்விடத்தில் வாசஞ்செய்கிருனே அல்லது அவனுக்கு சொத்திருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட்டின் கலெக்ட்டரானவர் தன்னுடைய ஜில்லாவில் அப்படி பாக்கி வைத்துகொள்ளப்பட்டாற்போலவே பாவி

த்து சகலவிஷயங்களிலும் அந்த பாக்கிதாரன்பேரிலும் அவனுடைய ஜாமீன் தாரன்பேரிலும் அவர்களுடைய சொத்தின்பேரிலும் நடவடிக்கை நடத்த லாம். கலெக்ட்டரானவர் அப்படி தாம் எழுதுகிற பிரதி லெட்டரிலும் கை யெழுத்து செய்து முத்திரைபோடவேண்டும்; அந்த லெட்டரை அனுசரித்து நடத்துகிற கலெக்ட்டர்பேரிலாவது அவருடைய அதிகாரத்துக்குட்பட்டு நடத்துகிற யாதொருவர் பேரிலாவது நடத்தப்படுகிற சகல விவகாரங்களி லும் அந்த பாக்கித்தொகையைக்குறித்தும் பாக்கிதாரன் இன்னானென் பதைக் குறித்தும் அந்த லெட்டரே போதுமான ருஜுவாகக் கொள்ளப்படும்; அந்த லெட்டரெழுதிக் கொள்ளுகிற கலெக்ட்டருடைய முத்திரையாவது கையெழுத்தாவது உத்தியோகப் பெயராவது எதார்த்தமானதாயிருக்கமாட் டாதென்று அனுமானிப்பதற்கு கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தாலொ ழிய, அவைகள் யதார்த்தமானதென்பதைக்குறித்து ருஜுவேண்டுவதில்லை, ஆனால் யாவனொருவன் அந்த லெட்டரெழுதிக்கொண்ட கலெக்ட்டர்பேரில்; தன்னுடைய சுயஜில்லாவிலே வியாச்சியந் தொடருவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலொன்று மில்லை.

58. சர்க்கார் தீர்வை வீதத்தைப்பற்றிய ஆக்ஷேபங்களை ஸிவில் கோர் ட்டார் விசாரிக்கக் கூடாதென்பது:—சர்க்காருக்குச் செலுத்தப் படத்தக்க நிலத்தீர்வைவீதத்தை குறித்தாவது பிரிவுசெய்யப்பட்ட பூஸ்திதியின் பாகங் களின்பேரில் இதுவரையில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இனி நிஷ்கரிஷை செய்யப்படும் தீர்வைத் தொகையைக்குறித்தாவது உண் டாகிற யாதொரு ஆட்சேபத்தைப்பற்றி யோசனை செய்யவாகிலும் தீர்மா னிக்கவாகிலும் எந்த ஸிவில்கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை.

59. இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கைகளினாலே அநி யாயமடைந்தவர்கள் வியாச்சியந் தொடருவது; *வியாச்சியந் தொடருவதற்கு வாயிதா:—இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையி னாலே அநியாயமடைந்ததாக பாவிக்கிறவர்கள் இதில் முன்னமே சொல்லியி ருக்கிறபடி தவிர ஸிவில்கோர்ட்டுகளில் நியாயந்தேடிக் கொள்ளுவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலுண்டாக மாட்டாது; ஆனால் அவர்கள் அந்த வியாச்சியத்திற்கு மூலாதாரமான ஹேது உண்டான கால முதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அதைக்குறித்து வியாச்சியந் தொடர வேணுமேயல்லாமல், அந்த கெடுவிற்கு மேற்பட்டுத் தொடர்ந்தால் அப்படிப் பட்ட வியாச்சியத்தை ஸிவில்கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாது.

---

* குறிப்பு, கூட்டுப் பட்டாதார்களில் ஒருவன் செலுத்தவேண்டிய தீர் வை பாக்கிக்காக நிலம் ஏலம் போடப்பட்ட விஷயமாய் கூட்டுப் பட்டா தார்களில் மற்றவர்கள் நஷ்டத்துக்காக தொடரும் வியாச்சியம் செல்லாது என்று ஹைகோர்ட்டார் தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள்.

60. கலெக்ட்டர் பேரில் தொடரப்படுகிற வியாச்சியங்கள் அவருக்குப் பதிலாக வருகிறவர்பேரிலும் நடத்தப்படுமென்பது:—இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட அல்லது செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு காரியத்தினுலே அநியாயமடைந்தவன் யாதொரு கலெக்ட்டர்பேரில் கொண்டுவருகிற வியாச்சியமானது, அந்த கலெக்ட்டர் டிஸ்திரிகட்டைவிட்டுப் போய்விட்டதினுலேயே அற்றுப் போனதாக மாட்டாது; ஆனுல் அவருக்குப் பின்வேலைக்கு வருகிறவர்பேரில் அந்த வியாச்சியந் தொடரப்பட்டாற்போலவே அந்தப் பின்வருகிறவர்பேரிலே அந்தவியாச்சியம் நடத்தப்படும். முன்னிருந்த கலெக்ட்டரினுலே இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட அல்லது அவர்செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து உத்தியோக முறைமையிலே அவருக்குப் பின்வருகிற கலெக்ட்டர்பேரில் மேல் பிரிவில் கண்டிருக்கிற வாயிதாவிற்குள் வியாச்சியங் கொண்டுவரலாம்; ஆனுல் அவர் தனக்கு முன்னிருந்தவரால் உத்தியோக முறைமையிலே செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்கு அவரே உத்தரவாதஞ் செய்யவேணு மென்பதில்லை.

61. இந்த ஆக்ட்டின்படி சொத்தை எலத்தில் விற்பதற்கு 1822-ம்ஞூ 5-வது சட்டம் சம்பந்தப்படமாட்டாது.

62. இந்த ஆக்ட்டின்படி வசூல் செய்யப் படத்தக்க சர்க்கார் தீர்வை பாக்கியைக்குறித்து 1802-ஞூத்து 28-வது சட்டம், 1803-ஞூத்து 1-வது 2-வது சட்டங்களும் செல்லமாட்டா.

63. மைனர்கள் முதலான அசமர்த்தராளாகிய பூமிக்குடையவர்களின் நிலங்களை எலத்தில் விற்பதைகுறித்து 1804-ஞூத்து 5-வது சட்டத்திலும், 1831-ஞூத்து 10-வது சட்டத்திலுமுள்ள நிபந்தனைகள் ஊர்ஜிதத்தில் சென்று வருவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையினுலும் தடங்கலொன்றுமில்லை.

64. சென்னை சட்டங்களடங்கிய புஸ்தகத்திலுள்ள 1802-ம்ஞூத்து 2-வது சட்டம் 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்னப்பட்டணம் டவுனின் சரகத்துக்குள்பட்ட நிலத்திற்கு சர்க்கார் தீர்வையை வசூல் செய்வதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையும் சம்பந்தப் படமாட்டாது.

சிப்பாய் மல்தஸார்ஸ்.

1817 - ஞூத்து 8 - வது சட்டம்.

யாதொரு நிலதாரனுனவன் சென்னை ராஜதானியிலுள்ள ராணுவ உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் பக்ஷத்தில் அவன் தன்னிடபெயர், ஹோதா முதலியவற்றை கலெக்ட்டருக்குத் தெரிவித்து எழுதி வைத்திருக்கவேண்டியது. அப்பேற்பட்ட ஒரு ராணுவ உத்தியோகஸ்தனிட நிலமானது தீர்வை பாக்கிக்காக எலம் போடப்படவேண்டிய பிரமேயம் நேர்ந்தால் கலெக்

டானவர் அதைப்பற்றி நோட்டீஸ் ஒன்றை பாக்கிதாரனுக்கு தயாரித்து இத்தினை நாளைக்குள் செலுத்தவேண்டியதென்று கண்டெழுதி அதையும் அத்துடன் ஒரு கடிதத்தையும் ராணுவ தலைமைஉத்தியோகஸ்தருக்கு எழுதி அனுப்பவேண்டியது. அந்த தலைமை உத்தியோகஸ்தர் அதை அவனுக்கு சேர்ப்பிக்கவேண்டியது. அப்படிக்குறித்த காலத்திற்குள் பாக்கி செலுத்தப் படாவிட்டால் கலெக்டர் போர்டாருக்குத் தெரிவிக்கவேண்டியது. பின்னிட்டு போர்டார் உத்திரவுபடி நடந்துகொள்ள வேண்டியது.

(எல்லைக்குறிகள்.)

1860 - ஹ்த்து 28 - வது சட்டம்.

எல்லைக்குறிகளை நடவேண்டுமென்றாவது எல்லை ஸரகத்தின் பேரில் முளைத்திருக்கிற முட்செடிகள் முதலானவைகளை துரஸ்த்து செய்யும்படியாயும் கலெக்டர்களாவது ரெவினியூ செட்டில்மெண்டு ஆபீஸராவது வேறே அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராவது உத்தரவு செய்கிறவிதமாய் நடக்கவேண்டியது. ஸர்வே செய்யப்படுவதற்கு முந்தி அப்பேற்பட்ட உத்தியோகஸ்தர் அந்த நிலதார்களுக்கும் அதில் சிரத்தையுள்ள மற்றவர்களுக்கும் அவர்களுக்குண்டான பாத்தியதை சாஸன முதலியவற்றை ஆஜர் படுத்தும்படி உத்திரவு செய்யலாம். அப்படி ஆஜர் செய்யாமற் போனாலாவது, அவனே ஆஜராகும்படி ஸம்மன் செய்யப்பட்டிருந்த பிரகாரம் ஆஜராகாமற்போனாலாவது, தப்புவாக்குமூலங்கள் கொடுத்தாலாவது, 50-ரூபாய் அபராதத்திற்காவது அதை கொடுக்கத்தப்பினால் 2-மீ வரையில் எவ்விதமான காவலிலாவது வைக்கப்படுவான். சொந்தக்காரர்கள் ஆஜராய் எல்லைக் குறிகளை நடுவதற்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்யாவிட்டால் ஷை உத்தியோகஸ்தர் அவைகளை செய்விக்கும்படி ஏற்பாடுசெய்து அதற்கு பிடித்த செலவு தொகையை தீர்வை பாக்கியைப்போல் வசூல் செய்யலாம். சர்க்கார் செலவிலும் எல்லைக்குறி முதலானவைகளை நட்டு செலவை பார்ட்டிகளிடத்திலிருந்து வசூல் செய்யலாம்.

யாதொரு மனிதன் யாதொரு எல்லைக்குறியையாவது தகரார் தீர்ப்பதற்காக நடப்பட்ட வேறே யாதொரு குறியையாவது பெயர்த்துப் போட்டாலாவது, வேறு இடத்தில் பிடுங்கி நட்டாலாவது, அதற்கு எவ்வித மான கெடுதி செய்தாலாவது அப்படிப்பட்ட எல்லைக்குறி ஒவ்வொன்றுக்கும் மாஜிஸ்டிரேட்டினால் 50-ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவான்; அப்படி பெயர்த்துப்போட்ட சங்கதி முதலானவைகளைத் தெரிவித்தவனுக்கு அப்படி விதிக்கப்பட்ட அபராதத்திலிருந்து பாதிக்கு மேற்படாமல்கொடுப்பிக்கலாம். அப்படி பெயர்த்துப் போட்டது முதலான காரியத்தைச்செய்தது பலானவன் என்று தெரிந்து கொள்வது அசாத்தியமாயிருந்தால் ஷை உத்தியோகஸ்தரானவர் அந்த எல்லைக்குறியை நடும்படி செய்வித்து அதற்காகப் பிடித்த செலவை அண்டை நிலக்காரர்களிடமிருந்து கிரமமான வீதம் போட்

டாவது, கிராமத்திலுள்ள குடித்தனக் காரர்களின் பேரீஜை அனுஸரித்து அவர்களுக்கு வீதம் போட்டாவது தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யலாம்.

கிராம ஊழியசம்ப்ளம்.

1831-ஹூத்திய 6-வது சட்டம்.

ரெவினியூ சம்பந்தமாயும் ஊர்காவல் சம்பந்தமாயுமுள்ள வேலைகளைச் செய்துவரும் பரம்பரையான கிராம ஊழியத்திற்கென்று ராஜாங்கத்தாரால் விடப்பட்டிருக்கும் சம்பளமுதலானவைகளை அவ்வியாகிருதமாய் அபகரிக்கப் படாமலிருக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சட்டம்.

பீடிகை:—நிலங்களை இனமாக அடமானம் செய்தாகிலும் அல்லது ஒவ்வொருகுடியானவனிடமிருந்து ரொக்கமாகவாவது தானியமாகவாவது கிராம ஊழியத்திற்காக சொற்பதுகை வசூல்செய்துகொள்ளும்படி செய்யப்பட்ட ஏற்பாடுகளினாலும், இதரமார்க்கங்களாலும், வரும் வரும்படியானது பரம்பரையான கிராமஊழியத்திற்காகவும் ஊர்காவல் உத்தியோகத்திற்காகவும் சம்பளமாக ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியினாலேயும் அப்பேர்ப்பட்ட ஊழியங்களை கிரமமாய்ச்செய்துவரவேண்டியநிமித்தம் மேலே சொன்ன விதமான சம்பளவரும்படிகளை அவைகள் எந்த ஊழியத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அந்த ஊழியதார்களைவிட்டு அப்புறப்படுத்தப்படாமலிருக்கும்படியான வகைசெய்வது அவசியமாயிருக்கிறபடியினாலேயும், அப்படிப்பட்ட வகையால் அதை அப்புறப்படுத்தக்கூடாமையாய்ச் செய்வதற்கு அப்பேர்ப்பட்ட சம்பள வருமானமார்க்கங்களை தானுதிவிக்கிரயங்கள் செய்து பராதீனப்படுத்தினால் அப்படிப்பட்ட பராதீனம் செல்லாது என்று தீர்மானமாகச்சொல்லவேண்டி யிருக்கிறபடியினாலேயும், அப்பேர்ப்பட்ட உத்தியோகங்களுக்காவது அவைகளிடசம்பள வருமானங்களுக்காவது சொல்லிக்கொள்ளப்படும் பாத்தியதைகளடங்கிய தாவாவை சாதாரண நியாயகோர்ட்டார் விசாரணை செய்யக்கூடாதென்றும் ரெவினியூ டிபார்ட்டுமெண்டிலுள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தான் விசாரணைசெய்து தீர்மானம் சொல்லவேண்டியதாக ஏற்பாடுசெய்வது அவசியமாயிருக்கிறபடியாலேயும், அப்பேர்ப்பட்ட உத்தியோகங்களைக் கிரமமாகச் செய்துவரவேண்டிய நிமித்தியம் அந்த உத்தியோகங்களைச் செய்கிறவர்கள் கலெக்ட்டரிட நேர்விசாரணைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டவர்களாகச் செய்யவேண்டியதவசியமாயிருக்கிறபடியினாலேயும் இந்தசட்டம் ஏற்படுத்தப்பட்டது; இது ஏற்படுத்தப்பட்டதேதிமுதல் ஊர்ஜிதத்துக்குவரும்,

2. பரம்பரையான கிராமஊழியத்திற்காகவும் ஊர்காவல் உத்தியோகத் துக்காகவும் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மேல் பிரகரணத்தில் முதல்வாக்கியத்தில் பிரஸ்தாபித்த சம்பளவகயறுக்களை தானுதிவிக்கிரயம் முத லானது செய்து பராதீனப்படுத்தக்கூடாது, அப்பேர்ப்பட்ட உத்தியோகம் செய்கிறவர்களால் இனிசெய்யப்படும் அப்பேர்ப்பட்ட பராதீனமான மாறு தல்களெல்லாம் செல்லாது; யாதொருகோர்ட்டாரிட டிக்கிரியை (தீர்ப்பை) நிறைவேற்றும்பொருட்டு ஷை வருமானங்கள் ஜப்திமுதலானது செய்யப்பட உட்பட்டவைகளல்ல ; என்றும் இதனுல் ஏற்படுத்தப்படுகிறது.

3. (1) ரெவனியூ விஷயமாயும் ஊர்காவல் விஷயமாயும் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகங்களாவது அப்பேர்ப்பட்ட உத்தியோகங்களுக்கு ஏற் படுத்தப்பட்டிருக்கும் சம்பள்வருமானங்களாவது தங்களுக்குச் சேரவேண்டு மென்று செய்யப்படும் தாவாக்கள் சாதாரண நியாயகோர்ட்டாரால் விசாரிக் கப்படக்கூடாது ; இந்தசட்டத்தை பெற்றுக்கொள்ளுகிற தேதியில் அப்பேர் ப்பட்ட கோர்ட்டுகளில் பைசலாகாமல் பாக்கியிலிருந்துக்கொண்டிருக்கிற அவ்விஷயமான தாவாக்கள் ஏதாவதிருந்தால் அவைகளை தக்ஷணமே ரிஜிஸ் டரிலிருந்து அடித்துவிடவேண்டியது.

(2) ஆனுல் மேல்சொன்னப்பிரகாரம் கோர்ட்டு ரிஜிஸ்டரிலிருந்து அடித் துவிடப்படுகிற வியாச்சியங்களில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகள் அப்பேர்ப் பட்ட வியாச்சியங்களைச் செய்ததில் அவர்களுக்கு நேரிட்டிருக்கும் செலவுக ளைத் திருப்பிப்பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவர்கள்; ஆகையால், அப்பே ர்ப்பட்ட கோர்ட்டுகளின் பிரதான அதிகாரியானவர் ஷை செலவுகளை பார்ட்டி களுக்குத் திருப்பிக்கொடுக்கும்படி இதனுல் உத்திரவு செய்யப்படுகிறது.

4. (1) பரம்பரையான கிராம உத்தியோகங்கள் விஷயமாயாவது அவை களின் சம்பள வருமானங்களின் விஷயமாகவாவது தாவாக்கள் செய்யப் பட்டிருந்து அப்பேர்ப்பட்ட தாவாக்கள் சாதாரண நியாயகோர்ட்டாரால் இதுவரையில் தீர்க்கப்படாதிருந்தால் அப்பேர்ப்பட்ட தாவாக்களையும் அல் லது இனிமேல் செய்யப்படக்கூடிய அப்பேர்ப்பட்ட தாவாக்களையும் முதலில் அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் விசாரித்து தீர்மானம் செய்யவேண்டியது.

(2) மேல் வாக்கியத்தில் கண்ட மாதிரியாக கலெக்டரிடம் ஆஜர் செய் யப்பட்ட வியாச்சியங்களை விசாரித்து தீர்மானம் செய்யவேண்டிய விஷ யத்தில் தமக்கு அஸஸ்ஸராக உதவிசெய்யவேணுமென்று தம்மிட ஜில்லா விலிருக்கப்பட்ட சுதேசஸ்தர்களில் யாரையாவது ஆஜராகவேணுமென்று உத்திரவு செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படி கோரிக்கொள் ளப்பட்ட யாராவது ஆஜராகாமற்போனுல் கலெக்டரிட யுக்தானுஸாரம் 50- ரூபாய்க்கு மேற்படாமல் கலெக்டரால் அபராதம் விதிக்கப்படுவார் ; அவசி யமானுல், தீர்வைபாக்கியை வசூல் செய்வதற்கான சாதாரண மார்க்கங்க ளால் கட்டாயப்படுத்தி அந்த பணத்தை வசூல்செய்யவேண்டியது.

(3) இந்த பிரிவின் 1-வது வாக்கியத்தில் கண்டமாதிரியாக கலெக்டர்களிடத்தில் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை விசாரிக்கும்படி சுதேச அஸஸ்ஸர்களுக்கு அனுப்ப கலெக்டர்களுக்கு இஷ்டமிருந்தால் அப்படியே செய்ய கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு.

(4) ஷை வியாச்சியங்களை விசாரணை செய்வதில் அவசியமாக இருக்கும் சாக்ஷிகளை எல்லாம் ஆஜராகவேண்டுமென்று கட்டாயப்படுத்த * கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு.

5. (1) மேல் பிரகரணத்தின் 1-வது வாக்கியத்தில் கண்டமாதிரியாக கலெக்டரிடம் கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களில் அவரால் செய்யப்பட்ட தீர்ப்புக்குமேலும், 2-வது வாக்கியத்தில் கண்டவிதமாய் அபராதம் விதிக்கப்பட்ட உத்திரவுக்குமேலும், அப்பேர்ப்பட்ட தீர்ப்பு அல்லது உத்திரவு தேதிமுதல் 3-மாதத்திற்குள் போர்ட்டாருக்கு அப்பீல் செய்யலாம்.

(2) போர்ட்டாருக்கு யுக்தமாகத்தோன்றினால், மேல்வாக்கியத்தில்கண்ட 3-மாசத்திற்கப்புறம் செய்யப்பட்ட அப்பீலையும் அங்கீகரித்துக்கொள்ளலாம்.

6. மேல் பிரிவின்பிரகாரம் போர்ட்டாருக்கு செய்யப்பட்ட அப்பீலின் பேரில் அவர்கள் செய்யும் உத்திரவு அல்லது தீர்ப்பானது முடிவுபெற்றவைகளாகவும் நிராக்ஷேபணையுள்ளவைகளாயும் ஆகும், (அதாவது, அதற்குமேல் அப்பீல்கிடையாது); ஆகிலும், நியாயத்தை யோசித்து அப்பேர்ப்பட்ட தீர்ப்பு அல்லது உத்திரவை தித்துப்பாடோ மாற்றுதலோ செய்யவேண்டிய தவசியமாக கவரண்மெண்டார் தாத்பரியப்படும்பக்ஷத்தில் அவர்கள் அப்படி செய்யலாம்.

7. 1816-ஞூ 11-வது சட்டத்தின் 19, 20-வது பிரிவுகள் இதனால் ரத்தாகிறது. தலையாரி அல்லது ஊர்காவலாளிகளுட்பட ரெவினியூ விஷயமாயும் ஊர்காவல்விஷயமாயும் சம்பந்தப்பட்டும், சர்க்காரில் சம்பளம் ஏற்படுத்தப்பட்டும்,இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்களெல்லாரும் அந்தந்தஜில்லா கலெக்டர்களுடைய நேர் அதிகாரத்திற்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டவர்களாவார்கள், வேலை சொஸ்திக்காவது, வேலைக்கு லாய்க்கில்லை என்பதற்காவது, ஸஸ்பென்ஷன் பர்தர்ப்பு முதலானது கலெக்டரால் செய்யப்படுவார்கள் ; ஆனல் பிரதிவிஷயத்திலும் போர்ட்டாரிட உத்திரவுக்கும், கவரண்மெண்டாருக்கு யுக்தமாகத் தோன்றினல் அவர்களிட உத்திரவுக்கும், கலெக்டர் செய்யும் உத்திரவுகளுட்பட்டவைகளாகும்.

---

* கட்டாயப்படுத்த என்றபதத்தினல் "வாரண்டு" பிறப்பிக்கவும் கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டென்று இப்பால் போர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள்.

8. ஸ்திரமான தீர்வை ஏற்படுத்தப்பட்ட ஜில்லாக்களில் 1802-ஞூத்து 29-வது சட்டத்தை அனுசரித்துஏற்படுத்தப்பட்ட கர்ணம் வேலைக்காவது 1817-ஞூ 7-வது சட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பொது உபயோகமான பாடசாலை கோவில் முதலிய ஸ்தாபனங்களுக்காவது அப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்களின் மானேஜர்களுக்காவது ஸூபரிண்டெண்டண்டுக்காவது ட்ரஸ்டிகளுக்காவது இந்த சட்டத்தில் கண்ட எதுவும் சம்பந்தப்பட்டிருக்கிறதாக தாத்பரியப்படக்கூடாது.

சென்னை 1866ஞூத்திய 4 - வது சட்டம்.

கிராம நவுக்கர்கள் செய்யும் ஊழியத்திற்காகவும் தச்சவேலை கருமார் வேலை முதலானது செய்வதற்காகவும் விடப்பட்டிருக்கிற இனம் நிலங்கள் என்பிரஞ்சைஸ் * செய்யப்பட்டாவது அல்லது இனி செய்யப்படப்போகிறதாயாவதிருந்தால் அப்பேர்ப்பட்டவைகள் மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட 1831-ஞூ 6-வது சட்டத்துக்கு சம்பந்தப்படாது. அதாவது அவைகள் சம்பந்தமான தகரார்கள் சாதாரண நியாயகோர்ட்டாரால் தீர்க்கப்படுமேயல்லாமல் ரெவினியூ டிபார்ட்டுமெண்டாரால் தீர்மானிக்கப்படக்கூடாது. முன்னுடி ஊழியத்திற்காக அனுபவித்துவந்த இனம்நிலமானது, என் பிரஞ்சைஸ் செய்யப்பட்டதற்கு இனம் கமிஷனரால் கொடுக்கப்பட்ட டைடில்டீட் அதாவது பட்டைய சாஸனமாவது, இனம் கமிஷனரின் ரிஜிஸ்டரில் செய்யப்பட்ட பதிவுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட ஒருநகலாவது போதுமான ருஜுவாகும். இனம் நிலங்கள் என்பிரஞ்சைஸ் செய்யப்படுவதற்கு முந்தி 1831-ஞூ 6-வது சட்டப்பிரகாரம் ரெவினியூ ஆபீஸர்களால் ஊழிய இனம் நிலங்கள் விஷயமாய் செய்யப்பட்ட தீர்ப்புகளை ஆக்ஷேபணைசெய்ய ஸீவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை.

1858 - ஞூத்திய 1 - வது சட்டம்.

கட்டாயப்படுத்தீ வேலை வாங்குவது.

சென்னை ராஜதானியில் ஜலாதாரங்கள் விஷயமாய் செய்யவேண்டிய சில வேலைகளை ஊர்க்குடிகள் சேர்ந்து வீதம் போட்டு செய்யும்படி கட்டாயப்படுத்தவும் வெள்ளப்பெருக்கு முதலானதால் உண்டாகும் அபாயகரமான கெடுதியை உண்டாகாமல் தடுக்கும்பொருட்டு கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதானது சட்டத்தை அனுசரித்து நியாயமானதென்று செய்யவேண்டியதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட சட்டம்.

---

* இந்த பதத்துக்கு அர்த்தம் முதல்பாகம் 182-வது பக்கத்தில் பார்க்க.

யாதொரு ஏரி, குளம், ஆறு அல்லது வாய்க்கால் முதலானவைகளின் கரைகள் தக்ஷணம் உடைந்துபோய் அபாயம் நேரிடும்போலிருந்தால், அல்லது யாதொரு மதகு முதலானவைகள் உடைந்துபோய் அபாயம் நேரிடும் போலிருந்து அனேக கூலியாள்கள் சேர்ந்து அதைத்தடுக்கலாம்போலிருந்தாலும், அல்லது அப்படி உடைந்துபோன பிற்பாடும் அனேக கூலியாள்களை வைத்து உடனே வேலைசெய்யும் பக்ஷத்தில் கரை உடைந்து போனதை அடைத்துவிடக் கூடுமானதாகவும் அந்தஏரி முதலானவைகள்யார்வசத்திலிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தருக்குத் தோன்றினல் சமீபத்திலுள்ள கிராமாதிகாரிகளை அப்பேர்ப்பட்ட கிராமங்களிலிருக்கப்பட்ட வேலைசெய்ய சக்தியுள்ள கூலியாட்களை மேல் சொன்னப்படி கரை முதலானது உடைந்து போகாமல் தடுக்கும்பொருட்டாவது உடைந்துபோன பிற்பாடு துரஸ்துசெய்வதற்காகவாவது ஒன்றுசேர்ந்து வேலை செய்யும்படி வரவழைக்க வேண்டுமென்று உத்திரவுசெய்யலாம். குளம் முதலானவைகளின் சார்ஜிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஒருவருமில்லாமற்போனல் தாசில்தார் அந்தமாதிரி உத்திரவு செய்யலாம். அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தராவது தாசில்தாராவது சமயத்தில் இல்லாமல்போய் அபாயம் தக்ஷணமே நேரிடும்போலிருந்தால் சம்பந்தப்பட்ட கிராமாதிகாரியானவர் கரையுடைந்து போகாமல் தடுக்கும்பொருட்டும் அல்லது உடைந்துபோனதை துரஸ்துசெய்யும்பொருட்டும் தன்கிராமத்திலுள்ள கூலியாட்களை வரவேணுமென்று கோரவும், அவசியமானல், அடுத்த கிராமத்திய கூலியாட்களை அம்மாதிரி கோரவேண்டுமென்று அடுத்த கிராமங்களின் கிராமாதிகாரிகளுக்கு யாதாஸ்த்து அனுப்பவும் கூடும்.

2. மேற்சொன்ன விதமாய் யாதொரு கிராமாதிகாரியால் கோரப்பட்ட கூலியாள் வகுப்பைச்சேர்ந்த யாதொரு ஆண் நபராவது நியாயமான காரணமில்லாமல் ஆஜராகாமல் அசிரத்தையாயிருந்தாலும் அல்லது ஆஜராகமாட்டேனென்றாலும் மாஜிஸ்ட்ரேட் முன்பாக குற்றஞ் சாட்டப்பட்டு 100-ரூபா வரையில் அபராதமாவது ஒருமாசம் வெறுங்காவலாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படுவான்.

3. அப்பேர்பட்ட வேலையில் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் ஒருபகல் வேலைக்கு அக்கம்பக்கத்தில் கொடுக்கப்படும் உயர்ந்த வீதப்படி கூலிகொடுக்கப்படும். அவன் ராத்திரியில் வேலை செய்யவேண்டியதாயிருந்தால் இரட்டிப்பு கூலி கொடுக்கப்படும்.

4. கூலிக்காரர்களுக்கு சர்க்கார் கஜனவிலிருந்து பணம் எடுத்துக்கொடுக்கப்படும், யாதொரு சொந்த மனுஷியனுடைய குளம் முதலானவற்றில் அப்பேர்பட்ட வேலை செய்திருக்கும் பக்ஷத்தில் கஜானவிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்ட பணமானது நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யப்படும்.

5. 1 - வது பிரிவில் கண்டபடி உத்திரவுசெய்யப்படுவதின் பேரிலாவது அல்லது அவசரமான விஷயங்களில் தாங்களேயாவது கரை உடைவு முதலானதை அடைப்பதற்கு தேவையான மரம், இலை, மூங்கில், வைக்கல், இவைபோன்றவைகளைச் சேகரிக்கும்படி தங்கள் கிராமத்தார்களைக் கோரலாம் ; அவசியமானால் அப்பேர்ப்பட்ட மரம் மட்டை முதலானவைகள் அவைகள் எங்கேயிருந்தபோதிலும் அவைகளை வெட்டிப்போட்டு அப்படி வெட்டிய வஸ்துக்களைக்கண்டு ரசீது கொடுக்கவேண்டியது; அப்பேர்ப்பட்ட மரம் மட்டை முதலானவை அக்கம்பக்கத்தில் உயர்ந்தவிலை எவ்வளவுக்கு விற்கப்படுகிறதோ அவ்வளவு வீதம் கிரயம்போட்டு சர்க்கார்கஜானாவிலிருந்து பணம் கொடுக்கப்படும் ; அப்பேர்ப்பட்ட வஸ்துக்களை வெட்டினதினால் யாதாவது ஒருமனிதனுக்கு நஷ்டம் உண்டாயிருக்கும்பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட நஷ்டத்துக்காக கம்பன்ஸேஷன் (பிரதிபணம்) கொடுக்கப்படும் ; அப்பேர்ப்பட்ட கம்பன்ஸேஷன் துகை இவ்வளவென்பதைப்பற்றித் தகரார் உண்டாகும்பக்ஷத்தில் 6-வது பிரிவில் கண்டபடி செலுத்தவேண்டிய துகையை நிர்ணயிக்கு மாதிரியாகநிர்ணயிக்கப்படும்; அப்பேர்ப்பட்ட வஸ்துக்கள் யாதொரு சொந்தமனிதனிட குளம்முதலானவைகள் விஷயமாய் பிரயோசனம் செய்யப்பட்டிருந்தால் அந்த வஸ்துக்களின்மதிப்புதுகையை அவனிடமிருந்து தீர்வை பாக்கியைப்போல வசூல்செய்ய வேண்டியது.

6. ஜலப்பாய்ச்சல் ஜலம்வடியச்செய்தல் முதலானது சம்பந்தமான யாதொரு வேலையை அந்தந்தப்பிரதேச வழக்கப்பிரகாரம் ஊர்குடிகள் ஒன்றுசேர்ந்து குடிமராமத்துவேலையாகச்செய்வது வழக்கமாயிருந்தால் அப்பேர்ப்பட்ட வழக்கப்பிரகாரம் தன் பாகத்துக்குண்டான வேலையைச் செய்விக்கக் கடமைப்பட்டவனாயிருக்கிற யாதொரு ஆஸாமியானவன், அப்பேர்ப்பட்ட குடிமராமத்து வேலையைச்செய்விக்கும்படி தாசில்தார் அல்லது அதற்குமேற்பட்ட அதிகாரியினிட உத்திரவின்பேரில் கிராமாதிகாரியால் தான்கோரப்பட்டபடி அந்தவேலையைச் செய்விக்காமல் அசிரத்தையாயிருந்தாலும் செய்யமாட்டேனென்றாலும் அவன் செய்யவேண்டிய வேலையைச்செய்ய என்ன கூலிபிடிக்குமோ அதற்கு இரட்டிப்புக் கூலிக்குச்சமானமான துகையைச்செலுத்த வேண்டியதாகும் ; அப்படிச்செலுத்தவேண்டிய துகை எவ்வளவென்பதைப்பற்றித் தகரார் உண்டாகும் பக்ஷத்தில் 1816-வது 5, 7-வது சட்டங்கள்பிரகாரம் கிராமமுனிசிப்மூலமாய் கலெக்ட்டரிட உத்திரவுபிரகாரம் ஏற்படுத்தப்படும் கிராமபஞ்சாயத்தாரால் தீர்க்கப்படும். அப்பேர்ப்பட்டதுகை கேட்கப்படும்போது செலுத்தப்படவேண்டியது, தவறினால் நிலத்தீர்வை பாக்கியைப்போல் வசூல்செய்யப்படும் ; இந்த பிரிவுபிரகாரம் செலுத்தப்பட்டதும் அல்லது வசூல் செய்யப்பட்டதுமான துகைகளெல்லாம் சப்பந்தப்பட்ட கிராமத்தார்களிட உபயோகத்திற்காகச் செய்யப்படும் ஜலப்பாய்ச்சல் முதலான எவ்விதவேலைக்காகிலும் பிரயோஜனப்படுத்தப்படும்.

1878-௵த்திய 6 - வது சட்டத்தின் சுருக்கம்.

புதையல்.

புதையல் அகப்பட்டால் அது இன்னவிதமாய் பைசல் செய்யப்படுமென்பதைப்பற்றி.

இந்த சட்டப்பிரகாரம், 10-ரூபா மதிப்புக்கு மேற்பட்டு ஒருவன் புதையல் கண்டெடுக்கும் பக்ஷத்தில், அந்தப்புதையல் எப்பேற்பட்டதென்றும் அது சுமார் எவ்வளவு மதிப்புள்ளதென்றும், பலானதேதியில் கண்டெடுக்கப்பட்டதென்றும், அதைக்கண்டெடுத்த ஸந்தர்ப்பங்களையும் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டியது ; அப்படி அகப்பட்ட புதையலை அதிசமீபத்திலுள்ள ஸர்க்கார் கஜானாவில் ஆஜர்படுத்தி வைத்து வைக்கவேண்டியது; அல்லது தேவையானபோது அந்த ஆஜர்ப்படுத்துவதற்கு ஜாமீன் கொடுக்கவேண்டியது. கலெக்டரானவர் அம்மாதிரி தெரிவிக்கப்பட்டதின்பேரில் அந்தப்புதையலுக்கு பாத்தியமுள்ளவர்களெல்லாரும் பலானதினத்தில் ஆஜராய் பாத்தியதைகளைச் சொல்லிக்கொள்ளவேண்டுமென்று கெஜட்டில் பிரசுரஞ் செய்கிறார்; அந்ததேதியில் விசாரணை செய்கிறார். புதையல் அகப்பட்ட நிலம் தன்னுடையதென்று பாத்தியதை சொல்லிக்கொள்ள வேண்டியவன் நோட்டீஸ் பிரகாரம் ஆஜராகாமற்போனால் தன்பாத்தியதையை இழந்து விடவேண்டியது. யாதொருபாத்தியஸ்தனானவன் ஆஜரானதின்மேல் புதையல் கண்டெடுத்த தேதிக்கு 100-௵த்திற்கு முன் அந்தப்புதையல் அவனாலாவது அவன் யாரிட வார்ஸ்தாரனோ அவனாலாவது புதைத்து வைக்கப்பட்டிருந்ததென்று நம்ப ஹேது இருந்தால், அந்த பாத்தியஸ்தன் சிவில்கோர்ட்டில் வியாச்சியம் செய்து அவனுடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளும் பொருட்டு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. ஆனால், மேற்கண்டவிதமாக அந்தப்புதையலானது புதைக்கப்பட்டதாக நம்ப கலெக்டருக்கு ஹேது இராமற்போனாலாவது அல்லது வியாச்சியம் தாக்கல் செய்யப்படாமற்போனாலாவது, வியாச்சியம் செய்யப்பட்டதின்பேரில் வாதிக்கு பாத்தியமில்லையென்று தாவா தள்ளுபடி செய்யப்பட்டாலும், அப்பேர்ப்பட்ட விஷயத்தில் கலெக்ட்டரானவர் புதையலுக்கு பாத்தியஸ்தர் ஒருவருமில்லையென்று தெரியப்படுத்துகிறார்; இப்படிதெரிவிக்கிற உத்திரவினால் யாராவது தனக்கு அநியாயம்செய்யப்பட்டதாக பாவித்தால் போர்ட்டாருக்கு அப்படிதெரிவிக்கபட்டது முதல் இரண்டு ௴த்திற்குள் அப்பீல்செய்யலாம்; புதையலுக்கு யாரும் பாத்தியஸ்தர்களில்லையென்று எற்படுத்தப்பட்டு, அதின்பேரில் புதையல் கண்டெடுக்கப்பட்ட நிலம் தங்களுடையதென்று சொல்லி புதையலில் பாத்தியதை உண்டென்பதாக சொல்லிக்கொள்ளுகிறவர்கள் புதையல் கண்டெடுத்தவனைத் தவிர வேறே யாருமில்லாததாகத் தோன்றினால், கண்டெடுத்தவன் கையில் புதையல் கொடுத்துவிடப்படுறது. கண்டெடுக்கப்பட்ட நிலம் தன்னுடையதென்கிற காரணத்தால் புதையலில் தனக்கு பாத்தியதை உண்டென்று யாராவது

சொல்லி அப்பேர்ப்பட்டவனிட பாத்தியதைப்பற்றி புதையல் கண்டெடுத்தவன் தகரார் செய்யாமற்போனுல், அப்பேர்ப்பட்ட விஷயத்தில் முக்கால் பங்காவது அல்லது ரொக்கமாய் அதினுடையமதிப்பாவது புதையல்கண்டெடுத்தவனுக்கும், மீதியானது மேற்கண்டபாத்தியதையைச் சொல்லிக்கொள்ளுகிறவனுக்கும், கொடுத்துவிடப்படும்; கண்டெடுத்த இடம் பலானவனுக்குச் சொந்தமென்தைப்பற்றி தகரார் உண்டானுல் இதுவிஷயத்தை விவில் கோர்ட்டார் தீர்க்கவேண்டியது; அப்படி கண்டெடுக்கப்பட்ட புதையல் முழுதையுமாவது ஓர்பாகத்தையாவது அதற்குள்ளமதிப்புத் துகையையும் அந்த துகைக்குமேல் ஐந்தில் ஒருபங்கும் சேர்த்து பாத்தியஸ்தர்களுக்கு கொடுத்து கவர்ண்மெண்டாருக்காக கலெக்டரானவர் வாங்கலாம்; புதையல் கண்டெடுத்தவன் மேற்கண்டவிதமாய்த் தெரிவிக்காமற்போனுலாவது, ஸர்க்கார் கஜானுவில் ஆஜர்ப்படுத்திவைத்துவைக்காமற் போனுலாவது, அப்படி ஆஜர்படுத்த ஜாமீன் கொடுக்காமற் போனுலாவது அந்தப் புதையலை உருவு தெரியாமல் மாற்றினுலாவது மாற்ற எத்தனப்பட்டாலாவது, கிரமமாக நடந்திருந்தால் அவனுக்குச் சேரவேண்டிய புதையலையோ அதின் மதிப்பையோ இழந்துபோவது மல்லாமல் அப்படிப்பட்ட தப்பு காரியங்களைச் செய்ததாக மாஜிஸ்ட்ரேட்டு முன்பாக குற்றம் சாட்டப்படுவதின் பேரில் ஒருவருஷகாலம் வரையில் காவல் சிக்ஷையாவது, அபராதமாவது, அல்லது இரண்டுமாவது, விதிக்கப்படுவான், புதையல் அகப்பட்ட நிலத்தின் சொந்தக்காரனுனவன் மேலே சொன்ன குற்றங்களில் எதையாவது செய்வதில் உடைந்தையாயிருந்ததாக ருஜுவாகும் பக்ஷத்தில் புதையலில் அவனுக்குள்ள பாகத்தை இழந்து விடுவதுமல்லாமல் மாஜிஸ்டிரேட்டுக்கு முன் குற்றம் சாட்டப்படுவதின் பேரில் 6-மீ வரையில் காவல் சிக்ஷையாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படுவான்.

சென்னபட்டணம் 1889ஸூத்து 1 - ஆக்ட்டு.

சென்னைராஜதானியில் கிராம முனிசீபுகளின் கோர்ட்டுகளைக் குறித்த சட்டதிட்டத்தைத்திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்டு.

பீடிகை:—சென்னைராஜதானியிலே கிராம முனிசீபுகளின் கோர்ட்டுகளைக்குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்ருய்ச்சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்ருல்:—

1 - ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

1. (1) இந்த ஆக்ட்டை "1888ஸூத்திய சென்னபட்டணத்து கிராமக் கோர்ட்டுகளாக்ட்டு" என்றுசொல்லலாம், மேலும் இதை உடனே ஊர்ஜிதத்தில்

வழங்கத்தொடங்கவேண்டியது, ஆனல் 9-வது பிரிவில் (2) முதல் (8) வரையிலுள்ள உட்பிரிவுகளானவை அந்தப்பிரிவு (1)-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபிரகாரம் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுடைய உத்திரவின்படிமாத்திரம் வழங்கத்தொடங்கவேண்டியது.

(2) இந்த ஆக்ட்டானது 1874ஞுத்து 14-வது ஆக்ட்டில் விவரித்திருக்கிற ஷிடியூலில்கண்ட டிஸ்திரிக்ட்டுகளுக்கும் சென்னபட்டணம் டவுனுக்கும் தவிர, சென்னப்பட்டணம் பிரிஸிடென்ஸியைச்சேர்ந்த ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு தற்காலம் உட்பட்டிருக்கிற பிரதேசங்களுக்கு சம்பந்தப்படும். ஆனல் ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்கள் போர்ட்டுசெயிண்டு ஜார்ஜ்கெஜட்டில் விளம்பரமூலமாய் யாதொரு கிராமம் அல்லது பிரதேச விஸ்தீர்ணத்தை இந்த ஆக்ட்டின் வியாபகத்தினின்றும் அப்போதைக்கப்போது நீக்கிப்போட்லாம், மேலும் அப்படிப்பட்ட விளம்பரத்தை ரத்தும் செய்யலாம்.

2. (1) இத்துடன் சேர்க்கப்பட்ட ஷிடியூலில்குறித்திருக்கும் சட்டதிட்டங்கள் அதில் மூன்ருவதுகலத்திலே சொல்லியிருக்கிறவரையில் ரத்து செய்யப்படுகின்றன.

(2) ஆனல் சென்னை 1816ஞுத்து 4-வது சட்டத்தின்படியாவது 1883ஞுத்து 4-வது சென்னை ஆக்ட்டின்படியாவது ஏற்படுத்தப்பட்ட எல்லா கோர்ட்டுகளும், நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளும், செய்யப்பட்ட நேமகங்களும் அறிக்கைகளும் விதிகளும், கொடுக்கப்பட்ட அதிகாரவரம்பும் அதிகாரங்களும், நிர்ணயிக்கப்பட்ட நமூனுக்களும், பண்ணப்பட்ட உத்தரவுகளும், கூடுமானமட்டில் இந்த ஆக்ட்டின்படி முறையே ஏற்படுத்தப்பட்டவைகளாகவும் நிர்ணயிக்கப்பட்டவைகளாகவும் செய்யப்பட்டவைகளாகவும் கொடுக்கப்பட்டவைகளாகவும் நிர்ணயிக்கப்பட்டவைகளாகவும் பண்ணப்பட்டவைகளாகவும் எண்ணப்படும்.

(3) சென்னை 1816ஞுத்து 4-வது சட்டத்தையாவது 1883ஞுத்து 4-வது சட்டத்தையாவது உதகரிக்கிற எந்த சட்டதிட்டமாவது தஸ்தவேஜாவது கூடுமானமட்டிலே இந்த ஆக்ட்டையாகிலும் அதில் அதற்குச் சம்பந்தப்படும் பாகத்தையாகிலும் உதகரிப்பதாக அர்த்தஞ் செய்யப்படவேண்டியது.

3. இந்த ஆக்ட்டு வழங்கத்தொடங்குங்காலத்தில் கிராம முனிசிபுகளின் கோர்ட்டுகளிலே நடந்துகொண்டிருக்கும் எல்லா வியாச்சியங்களும் இந்த ஆக்ட்டின்படி தொடரப்பட்டிருப்பவைகளாக எண்ணப்படும், அந்தத்தேதிக்கு முன்னே கிராம முனிசிபுகளால் செய்யப்பட்ட எல்லாடிக்கிரிகளையும் இந்த ஆக்ட்டின்படி செய்யப்பட்ட டிக்கிரிகளை நிறைவேற்றுவதைக்குறித்து இதில் பின்னல் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்பிரகாரம் நிறைவேற்றலாம்.

4. இந்த ஆக்ட்டின் வியாபகத்தினின்று யாதொருகிராமம் அல்லது விஸ்தீர்ணமானது நிவர்த்திசெய்துவிடப்படும்போது, அவ்விடத்திலுள்ளயாதொருகிராமகோர்ட்டில் வியாச்சியங்கள் விசாரணையிலிருந்துகொண்டிருந்தாலும், அந்தகோர்ட்டாரால் டிக்கிரிகள்செய்யப்பட்டு நிறைவேற்றப்படாதிருந்தாலும், அந்தவியாச்சியம் அப்போது தொடரப்படப்போவதாயிருக்கும்பக்ஷத்தில் அதை விசாரணைசெய்ய யாருக்கு அதிகாரமிருக்குமோ அந்த சீவில்கோர்ட்டார் மேற்கண்ட வியாச்சியங்களையெல்லாம் விசாரணைசெய்து தீர்மானிக்க வேண்டியதுமல்லாமல் மேற்சொல்லிய டிக்கிரிகளையெல்லாம் நிறைவேற்றவும் வேண்டியது.

அப்படிப்பட்ட வியாச்சியங்களும் டிக்கிரிகளும், அந்த சீவில் கோர்ட்டிலே தொடரப்பட்ட வியாச்சியங்களாகவும் அந்தக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்கிரிகளாகவுமிருந்தாற்போல, விசாரணை செய்யப்படவும் நிறைவேற்றப்படவும் வேண்டியது.

5. இந்த ஆக்ட்டிலே, பிரஸ்தாபிக்கப்பட்ட அடியிற்கண்ட வார்த்தைகளுக்கு முன்பின் சங்கதியை யனுஸரித்து வேறே அர்த்தம்செய்ய இடமிராதிருந்தால், கிராமம் என்பது—நிலையாய் ஸெடில்மெண்டு பைசலாதியான பிரதேசத்திலே, இந்த ஆக்ட்டு நிருபிக்கப்பட்டபோது. 1816ஷூத்து 4-வது சென்னபட்டணத்து ரிகியுலேஷன்படி எந்த இடத்தில் கிராமமுனிசிபுகோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது இந்த ஆக்ட்டின்படி கிராமக்கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்றும், மற்ற இடங்களிலே லாண்டுரிவினியூ (நிலத்தீர்வையை) வசூல்செய்யும்பொருட்டு கிராமமாயிருப்பதாக கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்றும், அர்த்தமாகும்.

கிராமமுனிசிபு என்பது - இந்த ஆக்ட்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கிராமமுனிசிபு கோர்ட்டின் நியாயாதிபதியென்று அர்த்தமாகும்.

கிராமக்கோர்ட்டு என்பது - 9 வதுபிரிவின்படி ஏற்படுத்தப்படும் நியாய சபையென்றும் அர்த்தமாகும்.

டிஸ்திரிக்ட்டு ஜட்ஜி அல்லது டிஸ்திரிக்ட்டு முனிசிபு என்பது, எந்த ஜட்ஜி அல்லது டிஸ்டிரிக்டு முனிசிபு இவர்களிட அதிகாரப் பிரதேச எல்லைக்குள் கிராமக்கோர்ட்டு இருககிறதோ அந்த டிஸ்திரிக்ட்டு ஜட்ஜி அல்லது டிஸ்திரிக்ட்டு முனிசிபு என்று அர்த்தமாகும்.

2 - ம் அத்தியாயம்.

கிராமக் கோர்ட்டுகளின் ஸ்தாபகமும் ஏற்பாடும்.

6. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்கிற உத்தரவு மூலமாய்:—

(1) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களை ஒன்ருய்ச் சேர்த்து அவ்விடங்களில் முன்னமேயிருக்கிற பல கிராமக்கோர்ட்டுகளுக்குப் பதிலாக அந்தக் கிராமங்களுக்கு ஒரே ஒரு கிராமக்கோர்ட்டை ஸ்தாபிக்கலாம்;

(2) யாதொரு கிராமத்தில் பிரிவினைகள் ஏற்படுத்தி அந்தக்கிராமத்திலே முன்னமேயிருக்கிற கிராமக்கோர்ட்டுக்கு பதிலாக அப்படிப்பட்ட பிரிவினை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கிராமக் கோர்ட்டை ஸ்தாபிக்கலாம்.

(3) குறித்த யாதொரு விஸ்தீரணத்திற்காக நூதனமாய் ஒரு கிராமக் கோர்ட்டு ஸ்தாபிக்கலாம்.

இந்த ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கிராமக்கோர்ட்டிலே, இதில் பின்னுல் சொல்லியிருக்கிற பிரகாரம் நேமிக்கப்பட்ட யாதொரு கிராம முனிசீபுக்கு முன்பாகவாவது ஒரு நியாயாதிபதிக்கு மேற்பட்டு சேர்ந்த நியாயசபையார் முன்பாகவாவது நடவடிக்கை நடத்தப்பட வேண்டியது.

7. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக் கப்போது நிர்ணயிக்கிற விதிகளுக்குட்பட்டு, கிராம முனிசீபுகளை டிஸ்டிரிக்ட்டு கலெக்ட்டர் நேமிக்கவேண்டியது; ஆனுல் கிராமத்திற்குள் வாசஞ் செய்யாமலிருக்கிற யாதொரு நபர் அந்த உத்தியோகத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவனுகமாட்டான்.

8. டிஸ்திரிக்ட்டு கலெக்ட்டரானவர் யாதொரு கிராம முனிசீபை வேலைத்திறமையில்லாமைக்காவது வேலையை அசட்டை செய்வதற்காவது துர்நடத்தையாக நடப்பதற்காவது வேறே தகுந்த நியாயமான காரணத்திற்காவது ஸஸ்பெண்டு அல்லது பர்தர்ப்பு செய்யலாம்; யாதொரு கிராம முனிசீபினுடைய ஜுடிஷல் (அதாவது சட்டப்படி நியாயம் செலுத்தும் காரியத்தில்) சம்பந்தமான நடவடிக்கைகளினுல் தெரியவருகிற அவ்வித சொஸ்தி முதலாகிய காரணத்தினிமித்தம் டிஸ்திரிக்ட்டு ஜட்ஜி உத்தரவு பிறப்பித்தால் அதின்பேரில் கலெக்ட்டர் அந்த கிராமமுனிசீபை கட்டாயமாய் சஸ்பெண்டு செய்யவேண்டியது அல்லது வேலையிலிருந்து நீக்கிப்போட (பர்தர்ப்பு செய்ய) வேண்டியது.

யாதொரு கிராமமுனிசீபை சஸ்பெண்டுசெய்யவோ பர்தர்ப்பு செய்யவோ பிறப்பிக்கப்படுகிற ஒவ்வொரு உத்தரவின்பேரிலும், அந்த உத்தரவு டிஸ்திரிக்ட்டு ஜட்ஜினுடைய அறிக்கையின்பேரிலல்லாமல் கலெக்ட்டராலேயே பிறப்பிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் ரிவினியூபோர்டாருக்கும், டிஸ்திரிக்ட்டு ஜட்ஜினுடைய அறிக்கையின்பேரில் பிறப்பிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் ஹைகோர்ட்டாருக்கும், மூன்றுமாசத்திற்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட சகல அப்பீல்களின்பேரிலும் சங்கதிக்குத் தக்கபடி ரிவினியூபோர்டாரோ ஹைகோர்ட்டாரோ செய்கிற தீர்மானம் முடிவானதாகும்.

9. (1) டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்யப்படுகிற உத்தரவு மூலமாய், ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்கள்—யாதொரு கிராமத்திலாவது யாதொரு விஸ்தீர்ணத்திற்குள்ளிருக்கிற கிராமங்களிலாவது நிர்ணயிக்கப்பட்ட ஒரு தேதிமுதற்கொண்டு இந்தப் பிரிவிலே அடியில்வரும் உட்பிரிவுகளை வியாபிக்கச்செய்யவேண்டியதென்று உத்தரவுபண்ணலாம், அப்படிப்பட்ட உத்திரவை அப்போதைக்கப்போது மாற்றலாம் அல்லது ரத்துபண்ணலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு உத்தரவு செலாமணியாய்க்கொண்டிருக்கிற ஒவ்வொருகிராமத்திற்காகவும், இதுவிஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்யும்படியான ஏதாவது விதிகளுக்குட்பட்டு, கலெக்ட்டரானவர், கிராமத்தில் வாசஞ்செய்பவர்களாயும், இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை விசாரிப்பதற்காக யாதொரு நியாயசபையில் மெம்பர்களாக உட்காருவதற்கு யோக்கிதையுள்ளவர்களாயும், இருக்கிற நபர்களைக்குறித்து ஒரு ஜாபிதா தயார்செய்து அதை அப்போதைக்கப்போது தித்துப்பாடு செய்துகொண்டு வரவேண்டியது; அந்த ஜாபிதாவை கிராம முனிசிபினுடைய கோர்ட்டு கட்டடத்தில் மாட்டிவைக்கவேண்டியது.

(3) அப்படிப்பட்ட யாதொரு கிராமத்திலுள்ள கிராமக்கோர்ட்டில் தொடரப்படும்படியான யாதொரு வியாச்சியத்திலே, வாதி தன்னுடைய பிரியாதிலாவது பிரதிவாதி தன்னுடைய மறுமொழியிலாவது மூன்று ஜட்ஜிகள்கூடிய ஒரு நியாயசபையாரால் அந்தவியாச்சியம் விசாரணை செய்யப்படவேண்டியதென்று கோரிக்கொண்டால், இந்தப் பிரிவு (2) - வது உட்பிரிவில் சொல்லப்பட்ட ஜாபிதாவில்கண்டிருக்கும் யாதொரு நபரை அந்த நியாயசபைக்கு மெம்பராக நேமித்துக்கொள்ளலாம்; ஆனல் அந்த நபர் அவனுடைய (வாதி அல்லது பிரதிவாதியினிட) வேலைக்காரனுகவாவது அவனை அடுத்தவனுகவாவது, பந்துவாகவாது, வாரக்குடியாகவாவது, வியாச்சியத்தின் தேறுகடையில் நேராய்ச்சம்பந்தமுள்ளவனுகவாவது இருக்கக்கூடாது.

(4) வாதி தன்னுடைய பிரியாது மனுவிலே அப்படிப்பட்ட யாதொரு நபரை நேமித்துக் கொண்டிருந்தால், பிரதிவாதி பக்ஷத்தில் ஒருநபரை நேமித்துக்கொள்ளும்படி பிரதிவாதிக்கு அனுப்பும் ஸம்மனில் தெரியப்படுத்த வேண்டியது; பிரதிவாதியானவன் நியாயசபை வேண்டுமென்று கோரிக்கொண்டால், அதற்கு யாதொரு நபரை நேமித்துக்கொண்டிருந்தால், வாதி பக்ஷத்தில் ஒரு நபரை நேமித்துக் கெள்ளும்படி வாதிக்கு உத்தரவுபண்ணவேண்டியது. யாதொரு நியாயசபைக்கு நேமிக்கப்பட்ட எந்த நபராவது அதில் சேர்ந்து காரியம் நடத்த நிராகரித்தாலும் கூடாதவராயிருந்தாலும், அவரை நேமித்த கட்சிக்காரனுக்கு நூதனமாய் வேறொரு நபரை நேமித்துக்கொள்ளும்படி உத்தரவு பண்ணவேண்டியது.

இந்த உட்பிரிவின்படி செய்யப்படும் உத்தரவின் தேதிமுதல் பரிஷ்கார மாய் இரண்டுநாள் சென்றபின்பு, அந்த உத்தரவின்படி கட்சிக்காரன் நடந்து கொள்ளாதிருக்கும் விஷயத்தில், அப்படி நடந்துகொள்ளாதிருக்கிற கட்சிக் காரன்பட்சத்திலே நியாயசபையில் காரியம் நடத்துவதற்காக மேற்படி ஜாபிதாவிலிருந்து ஒரு நபரை கிராமமுனிசிபு தாமே தலாஷ்செய்யலாம்.

(5) மேற்சொல்லியபடி நேமிக்கப்பட்ட அல்லது தலாஷ்செய்யப் பட்ட இரண்டு நபர்களையும் கிராம முனிசிபானவர் வியாச்சியத்தை விசாரணை செய்ய தன்னுடனேகூட (நியாயசபையாராக) உட்காரும்படி சம்மன் மூலமாய் வரவழைக்க வேண்டியது.

(6) அந்த நியாயசபைக்கு கிராமமுனிசிபு பிரிஸிடெண்டாக (தலைவராக) யிருக்கவேண்டியது, நடத்தப்படும் நடவடிக்கையை அவர் ஒழுங்குபடுத்த வேண்டியது, சம்மன்கள் நோட்டீசுகள் முதலியவைகளை யெல்லாம் அவர் தன் னுடைய பெயராலேயே பிறப்பிக்கவேண்டியது, ஆனால் டிக்கிரியை நியாயச பையைச்சேர்ந்த மூன்றுமெம்பர்கள் பெயராலும் எழுதவேண்டியது. நியாய சபையிலுள்ள மெம்பர்கள் அபிப்பிராயத்தில் ஒருவருக்கொருவர் வேறுபட் டால், பெரும்பாலாருடைய (மேஜாரிட்டியினுடைய) அபிப்பிராயமெதுவோ அதுதான் ஏற்றுக் கொள்ளப்படும்.

(7) யாதொரு நியாயசபையில் சேர்ந்து காரியம் நடத்துவதற்கு இந்தப் பிரிவின்படி சம்மன்மூலமாய் வரவழைக்கப்பட்ட யாதொருநபர் எந்த மாசத்தி லாகிலும் மூன்றுநாளைக்கு (தடவைக்கு) அதிகமாக அந்த சபையில்மெம்பராக உட்கார வேண்டுமென்பதில்லை; ஆனால் அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் தன்முன்பாக ஆரம்பஞ்செய்யப்பட்ட யாதொரு வியாச்சிய விசாரணை முடிவு பெறுகிறவரையில் ஆஜராகி அந்த விசாரணையை நடத்த வேண்டியவராவார்.

(8) யாதொரு நியாயசபையில்சேர்ந்து காரியம்நடத்த இந்தப் பிரிவின் படி சம்மன்மூலமாய் கிரமமாக வரவழைக்கப்பட்ட யாதொரு நபர் நியாய மான முகாந்தரமில்லாமல் அப்படிச்செய்யமாட்டேனென்றாலும் தவறிப்போ னாலும், அந்த நபர் யாதொரு மாஜிஸ்திரேட்டுக்குமுன் குற்றவாளியென்று தீர்க்கப்படுவதின்பேரில் இருபது ரூபாய்க்கதிகப்படாமல் அபராதம் விதிக்கப் படுவதற்குள்ளாவார்.

10. கிராமமுனிசிபானவர் கிராமக்கோர்ட்டில் தொடரப்பட்ட வியாச் சியங்களைக்குறித்து ஒரு ரிஜிஸ்தர்வைக்கவும் கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதவும்வேண்டியது; உத்தரவு செய்யப்படும்போது, அந்தரிஜிஸ்தரில் பதிவு செய்யவும் கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதவும் கிராம கணக்கன் உதவி செய்யவேண்டியவனாவான்.

11. இந்த ஆக்ட்டின்படி பிறப்பிக்கப்பட்ட எல்லா சம்மன்களையும் நோட்டீசுகளையும் கட்டளைகளையும் ஸர்வு செய்வதும் சேர்ப்பிப்பதும், இந்த ஆக்ட்டின்படி ஜப்திசெய்யப்பட்ட அசையும்பொருளைக் கைப்பற்றுவதிலும் விற்பதிலும் ஒப்புவிப்பதிலும் கிராமமுனிசிபினுடைய உத்திரவின்படி நடந்து கொள்வதானது சமாசாரம்கொண்டுபோகும் வேலையை சாதாரணமாய் யார் செய்யவேண்டியதோ அந்த கிராம ஊழியக்காரனுடைய கடமையாகும்.

12. 10 - வது 11 - வது பிரிவுகளினால் முறையே நிர்ணயிக்கப்பட்ட அலுவல்களைச்செய்வதற்கு, கிராமக்கர்ணத்துக்கு அல்லது 11-வது பிரிவில் சொல்லியிருக்கிற கிராம ஊழியக்காரனுக்கு பதிலாகவாவது அவர்களோடு கூடவாவது யாவனொருவனை ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுடைய மேல்விசாரணைக்குட்பட்டு நேமிக்க ஜில்லா கலெக்கட்டருக்கு அதிகாரமுண்டு.

3-ம் அத்தியாயம்.

அதிகாரவரம்பும் தீர்மானமாயிருக்கிற விஷயங்களும் வாயிதா காலம்.

13. கிராமக்கோர்ட்டுகளால்விசாரணை செய்யப்படவேண்டியதான வியாச்சியங்கள் எவையென்றால்—கடனாவது தாவா துகையாவது கணக்குநிலுவையின்பேரிலாகிலும் மற்றப்படியாகிலும் தொகை அல்லது மதிப்பில் இருபது ரூபாய்க்கு அதிகப்படாதிருந்தால் உடன்படிக்கையின்பேரில் பாக்கியாயிருக்கிற பணத்திற்காகவாகிலும், ஜங்கமசொத்திற்காகவாகிலும், அப்படிப்பட்ட சொத்தின் மதிப்பிட்ட துகைக்காகவாகிலும், கொண்டுவரப்படும் தாவாக்கள்.

ஆனால், விலக்கு.

(1) கூட்டு வியாபாரக்கணக்கில் நிலுவை இவ்வளவென்று அதிற் சம்பந்தப்பட்ட நபர்களாவது அவர்களுடைய எஜெண்டுகளாவது முடிவு ஏற்படுத்தியிருந்தாலொழிய, அப்படிப்பட்ட நிலுவையைக் குறித்தாகிலும்,

(2) உயில் (மரணசாஸனம்) செய்யாமல் இறந்துபோயிருக்கும் விஷயத்தில் அப்படிப்பட்டவனிட சொத்தில் பங்குக்காகவாகிலும் பங்கில் ஒரு பாகத்திற்காகவாகிலும் உயிலின்படி ஏற்பாடான பொருளுக்காகவாகிலும் பொருளில் ஒருபாகத்திற்காகவாகிலும்,

(3) நிலத்தின் குத்தகைத்தொகையானது பிரதிவாதியால் கையெழுத்து போடப்பட்டிருக்கிற எழுத்து மூலமான உடன்படிக்கையை அனுஸரித்து பாக்கி ஏற்பட்டிருந்தாலொழிய, அப்படிப்பட்டகுத்தகைத் தொகைக்காகவாகிலும்,

(4) கவர்ன்மெண்டாராலாகிலும் செய்யப்பட்ட காரியத்திற்காக அவர்கள் பேரிலாகிலும், உத்தியோகமுறைமையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலாகிலும், அவர்கள் பேரிலாகிலும்,

(5) மைனர்களாலும் அல்லது சித்தப்பிரமை அல்லது புத்திமாராட்டம் கொண்டவர்களாலும் அவர்கள் பேரிலுமாகிலும்,

அப்படிப்பட்ட யாதொரு கோர்ட்டிலே வியாச்சியங் கொண்டுவரக் கூடாது.

14. கோர்ட்டுக்கு முன்பாக வியாச்சியத்தைச்சேர்ந்த இரு கட்சிக்காரர்களும் (கிராமகோர்ட்டாரால் விசாரிக்கப்படுவதற்கு) சம்மதி உடன்படிக்கை எழுதிக்கொடுக்கும்பட்சத்தில், யாதொரு கிராமக் கோர்ட்டார், 13-வது பிரிவில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிற தன்மையுள்ளதான 200-ரூபாய்க்கதிகப்படாமலிருக்கிற வியாச்சியங்களை விசாரணைசெய்து தீர்மானிக்கலாம்.

15. 16-வது பிரிவில் சொல்லியிருக்கிற நிபந்தனைக்குட்பட்டு, இந்த ஆக்டின்படி கொண்டுவரப்படும் ஒவ்வொருவியாச்சியமும், வியாச்சியம் ஆரம்பிக்கப்படும்போது பிரதிவாதிகளெல்லாரும் எந்த கிராமமுனிசிபினிட அதிகாரப்பிரதேச எல்லைக்குள் வாசஞ் செய்துகொண்டிருக்கிறார்களோ அல்லது லாபார்த்தமாக அவர்களே வேலைசெய்துகொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட கிராமமுனிசிபினுடைய கோர்ட்டில் தாக்கல்செய்யப்படவேண்டியது.

16. எந்த கிராமமுனிசிபும் வியாச்சியத்தில் தான் கட்சிக்காரராகவாவது நேராய் சம்பந்தப்பட்டவராகவாவது இருக்கிற யாதொரு வியாச்சியத்தை தன்னதிகாரத்துக்குள் எடுத்துக்கொள்ளவுங்கூடாது; அப்படிப்பட்ட வியாச்சியத்தைச் சேர்ந்ததாகவாவது அதிலிருந்து உண்டாவதாகவாவதிருக்கிற யாதொரு நடவடிக்கை விஷயமாய் தீர்மானஞ் செய்யவுங்கூடாது. அப்படிப்பட்ட ஒவ்வொருவியாச்சியம் அல்லது நடவடிக்கையையும் அடுத்த கிராமத்திலிருக்கிற யாதொரு கிராமமுனிசிபினுடைய கோர்ட்டிலே தொடரலாம்.

17. முன்னடியே தீர்மானமா யிருப்பது:—யாதொரு வியாச்சிய ஹேஷ்யமானது முன்னமே யாது கட்சிக்காரர்களுக்குள்ளாவது அவர்கள் எவர்கள் மூலமாய் தங்களுக்கு பாத்தியதை உண்டென்று சொல்லுகிறார்களோ அவர்களுக்குள்ளாவது வியாச்சியம் செய்யப்பட்டிருந்து தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டாரால் விசாரணைசெய்து தீர்மானிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில், அதே கக்ஷிக்காரர்களுக்குள் அதே வியாச்சியத்தின் ஹேஷ்யத்தின் பேரில் மறுபடியும் கொண்டுவரப்படுகிற யாதொரு வியாச்சியத்தை எந்த கிராமக்கோர்ட்டாரும் விசாரணை செய்யக்கூடாது.

18. சேரவேண்டிய பூரா துகைக்கும் தாவா செய்யவேணும்:—வியாச்சியமூலத்தைப்பற்றி வாதிக்குச்சேரவேண்டியதுகை முழுமைக்கும் யாதொரு கிராமக்கோர்ட்டில் வியாச்சியங் கொண்டுவரவேண்டியது; வேணுமானால், வாதியானவன் அந்தக்கோர்ட்டின் அதிகாரவரம்புக்குள் வியாச்சியம் கொண்டுவரும்பொருட்டு தன்னுடைய தாவா துகையில் எவ்வளவையாவது தள்ளிவிடலாம்.

வாதியானவன் தன்னுடைய தாவா துகையில் யாதொரு பாகத்தின் சம்பந்தமாய் வியாச்சியந் தொடராதிருந்தாலும், யாதொரு பாகத்தை மன தறிந்து தள்ளிவிட்டாலும், அப்படிப்பட்ட பாகத்திற்காவது பாக சம்பந்தமா யாவது அவன் வேறே வியாச்சியம் கொண்டுவரக்கூடாது.

19. 13 - வது, 15 - வது பிரிவுகளின்படி கிராமக்கோர்ட்டாரால் விசாரணை செய்யப்படத்தக்க யாதொரு வியாச்சியத்தைத் தீர்மானிக்கையில், அந்த வியாச்சியத்தைச்சேர்ந்த கட்சிக்காரர்களுக்குள் அசையாப்பொருளைப்பற்றிய பாத்தியதையைக்குறித்தாவது, அவர்களில் ஒருதிறத்தாருடைய சட்டசம்பந்தமான முறைமையைக்குறித்தாவது, அவர்கள் யார் மூலமாய் பாத்தியதை உண்டென்று சொல்லுகிறார்களோ அவர்களுடைய சட்டசம்பந்தமான முறைமையைக்குறித்தாவது, யாதொரு உடன்படிக்கை அல்லது கடமை ஏற்பட்டிருப்பதைக்குறித்தாவது விவாதமுண்டாயிருக்கிற யாதொரு விஷயத்தைப்பற்றியே வியாச்சியம் செய்வதாயிருக்கும்பக்ஷத்தில் கிராமக்கோர்ட்டாரால் இந்த ஆக்ட்டின்படி அது விசாரணைசெய்யப்படத்தக்கதல்லவோ அப்படிப்பட்டயாதொரு விஷயத்தை அஸல் வியாச்சியத்தின் விசாரணைமத்தியிலே தீர்மானிக்க வேண்டிய அவசியமிருந்தால்,அந்த அஸல்வியாச்சியத்தைத்தீர்மானிப்பதற்கு எவ்வளவு மட்டில் அவசியமாயிருக்கலாமோ அவ்வளவுமட்டில், ஷை பாத்தியதையைக் குறித்தாகிலும் சட்டசம்பந்தமான முறைமையைக் குறித்தாகிலும் உடன்படிக்கை அல்லது கடமையைக்குறித்தாகிலும் உண்டாயிருக்கிற அப்படிப்பட்ட விவாதத்தைத் தீர்மானிக்க கிராமக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு; ஆனால் அந்தத் தீர்மானமானது அதே கட்சிக்காரர்களுக்குள்ளாவது அவர்களுடைய பிரதிநிதிகளுக்குள்ளாவது வேறே யாதொரு வியாச்சியம் கொண்டுவரப்பட்டபோதிலும் அந்தவியாச்சியத்தில், அப்படிப்பட்டபாத்தியதை சட்டசம்பந்தமான முறைமை உடன்படிக்கை அல்லது கடமையைக்குறித்து ருஜூவாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது.

20. 1877 - ௵த்திய இந்துதேசத்து (லிமிட்டேஷன் ஆக்டு) காலநிர்ணயச் சட்டத்திலுள்ளநிபந்தனைகள் இந்த ஆக்டை அனுஸரித்துச்செய்யப்பட்ட வியாச்சியங்களுக்கும் மனுக்களுக்கும் சம்புந்தப்படவேண்டியது.

ஆனல் வியாச்சியந் தொடரவாவது விண்ணப்பஞ் செய்து கொள்ளவாவது ஹேஷ்யம் முதலில் எப்போது எற்பட்டதோ அந்த காலமுதற்கொண்டு மூன்றுவருஷம் சென்றபின்பு யாதொரு கிராமக்கோர்ட்டார் அப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்தையாவது விண்ணப்பத்தையாவது எற்றுக்கொள்ளக் கூடாது.

21. வியாச்சியங்களை மாற்றுவது :—டிஸ்திரிக்ட்டு முனிசீபானவர் கட்சிக்கார்களில் யாராகிலும்விண்ணப்பஞ் செய்துகொள்வதின்பேரில், யாதொரு கிராமக்கோர்ட்டிலிருந்து எந்த வியாச்சியத்தையாகிலும் வரவழைத்துக்

கொண்டு அது தம்முடைய கோர்ட்டிலேயே தொடரப்பட்டிருந்தாற்போல அதைத்தாமே விசாரணை செய்யலாம், அல்லது தம்முடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கும் வேறே யாதொரு கிராமக் கோர்ட்டுக்கு விசாரணைக் காக அதை அனுப்பலாம். ஆனல் யாதொரு கிராமக் கோர்ட்டிலிருந்து வியாச்சியத்தை வரவழைத்துக்கொண்டு அதை டிஸ்திரிக்ட்டு முனிசிபு விசாரணை பண்ணும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிற எந்த கட்சிக்காரனாவது, அப்படி வியாச்சியத்தை வேறொரு கோர்ட்டுக்கு மாற்றும்படி உத்தரவு செய்யப்படுவதற்குமுன்னமே, 1870-ஷுத்து கோர்ட்டு (பீஸ்) கட்டண ஆக்ட்டின்படி அதற்காக செலுத்தப்படவேண்டிய கட்டணத் தொகையைச் செலுத்தி விடவேண்டியது.

4 - ம் அத்தியாயம்.

வியாச்சியங்களைத் தாக்கல் செய்வதையும் தாயார் செய்வதையும், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளையும், கட்சிக்காரர்களுக்கு சம்மன் பிறப்பிப்பதையும் சேர்ப்பிப்பதையும், விசாரணையை ஒத்திவைப்பதையும், ஆஜராகாவிட்டால் இன்னதாத மேன்பதையுங் குறித்து.

22. பிரியாதுசெய்து தாவாசெய்வது :—இந்த ஆக்ட்டின்படி கொண்டு வரப்படுகிற பிரதி வியாச்சியத்தையும் கிராமமுனிசிபினிடத்தில் தாக்கல் செய்யவேண்டியது, மேலும் பிரதிவாதிகள் எத்தனை பேரிருக்கிறார்களோ அத்தனை பிராது நகல்களையும் பிராதுடன் கூட கொடுக்கவேண்டியது. சம்மன் பிரதியோடு கூட பிராதுநகல் ஒன்றை இதில் பின்னல் சொல்லியிருக்கிற விதமாய் ஒப்புவிக்கவேண்டியது, அல்லது ஒட்டவேண்டியது.

23. பிரியாதை கிராமத்தில் வழங்குகிற பாஷையிலே எழுதி, அதில் வாதியாவது அவனில்லாவிட்டால் அவனல் கிரமமாய் அதிகாரங்கொடுக்கப் பெற்ற ஏஜண்டாவது கையெழுத்து போடவேண்டியது, அதில்கண்டெழுத வேண்டிய விவரங்களென்னவென்றால்:—

(a) வாதி - பிரதிவாதி - இவர்களுடைய பெயரும் தொழில்முதலிய விபரங்களும் வாசஸ்தலமும்;

(b) வியாச்சியம் உண்டானதற்கு காரணத்தைப்பற்றி சுருக்கமாய் விவரித்தும், வியாச்சியமூலம் உண்டான காலமும்;

(c) கேட்டுக்கொள்ளுகிற பரிகாரமும், தாவாசெய்யப்படுகிற தொகை அல்லது பெறுமானமும்.

24. யாதொரு கிராமக் கோர்ட்டுக்கு முன் வந்திருக்கிற வியாச்சியத்தில் சேர்ந்த எந்த கட்சிக்காரனாவது தனக்காக ஆஜராகி வாதிக்கும்படி யாதொரு நபரை வகால்த்து நாமா எழுதி எற்படுத்தலாம், ஆனல் பிரியா

யத்தை யோசித்து கட்சிக்காரன் நேரில் ஆஜராவது அவசியமென்று கிராம முனிசீபு அபிப்பிராயப் படும்போது, அந்த வியாச்சியத்தைச் சேர்ந்த கட்சிக்காரர்களில் யாரையாவது நேரில்வந்து ஆஜராகும்படி உத்தரவுபண்ண கிராம முனிசீபுக்கு அதிகாரமுண்டு; அப்படி உத்தரவு செய்யப்பட்ட கட்சிக்காரன் நேரில்வந்து ஆஜராகாவிட்டால், நேராய்த் தானாவது தனக்காக ஏஜண்டாவது ஆஜராகாதபட்சத்தில் எப்படியோ அதே பலாபலன்களுக்கு அவன் உள்ளாகவேண்டியது.

25. பிராது கிரமமாய்க் கொடுக்கப்பட்டபின்பு அதை கிராமமுனிசீபு ரிஜிஸ்தர் செய்விக்கவேண்டியது மல்லாமல், பலானதினத்தில் பிரதிவாதி ஆஜராகி தாவாவுக்கு உத்திரவு சொல்லவேணுமென்று எழுதி சம்மன் மூலமாய் பிரதிவாதிக்கு கட்டளைபண்ணவும்வேண்டியது. சமாசாரப் பத்திரிகை முதலானது கொண்டுபோகும் வேலை சாதாரணமாய் யாருடையதோ அந்த கிராம ஊழியக்காரனாவது, 12 - வது பிரிவின்படி கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட வேறேயாதொருநபராவது, சம்மனைபிரதிவாதிக்கு நேரில்சேர்ப்பிக்கவும் அதற்கு ஒரு பிரதியை அவனிடத்தில் ஒப்புவிக்கவும் வேண்டியது.

26. சம்மன் சேராமலிருக்கும்படி பிரதிவாதி தப்பித்துக் கொண்டிருக்கிறானென்று கிராம முனிசீபுக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால், கிராம முனிசீபானவர், பிரதிவாதியினுடைய குடும்பத்திலே அவனோடு கூட வாசஞ்செய்கிற வயசுவந்த யாதொரு ஆண்பிள்ளையினிடத்தில் அதைச்சேர்ப்பித்து அதற்கு ஒரு பிரதியை ஒப்புவிக்கும்படியாவது, பிரதிவாதி சாதாரணமாய் குடியிருக்கிற வீட்டில் தெரியும்படியான ஒரு இடத்திலே சம்மன் பிரதியை ஒட்டும்படியாவது, உத்தரவுபண்ணலாம்.

27. கிராமக் கோர்ட்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியிலிருக்கிற பிரதிவாதிக்கு சம்மனைச் சேர்பிக்கவேண்டிய அவசியமிருந்தால், அதை டிஸ்திரிக்ட்டு முனிசீபுக்கு அனுப்பவேண்டியது, அவர் அதைத் தானே பிறப்பித்திருந்தாற்போல பாவித்து அதைச்சேர்ப்பிக்கும்படிச் செய்யவேண்டியது; பின்பு அந்த சம்மனை, அதுசேர்பிக்கப்பட்டதென்கிற ரிபோர்ட்டுடன்கூட கிராம கோர்ட்டுக்கு வாப்ஸ் அனுப்பவேண்டியது. அந்தரிபோர்ட்டானது அதில்கண்ட சங்கதிகளுக்கு பிரத்தியட்சமான ருஜுவாகும்.

28. நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பிரதிவாதிநேரில் ஆஜராகாமலும் அல்லது, அவனுக்காக ஏஜெண்டு ஆஜராகாமலுமிருந்து ஆகிலும் சம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாகும்பட்சத்தில், கிராம கோர்ட்டார் (எக்ஸ்பார்ட்டி) ஒருதலையாய் விசாரணைசெய்யத் தொடங்கலாம்.

சம்மன் கிரமமாய்ச் சேர்பிக்கப்பட்டதென்று ருஜுவாகாவிட்டால், கிராமமுனிசீபு புதுசம்மன் பிறப்பிக்கவேண்டியது.

ஒவ்வொரு பிரதிவாதியும் வியாச்சியத்தைக்குறித்து பரிஷ்காரமாய் இரண்டுநாளைய நோட்டீசு கொடுக்க வேண்டுமென்று சுதந்தரித்துக் கோரலாம், நிர்ணயிக்கப்பட்ட தினத்திலே உத்தரவுசொல்ல பிரதிவாதிக்கு சாத்தியமாயிருக்கும்படி தகுந்தகாலத்தில் சம்மன் சேர்ப்பிக்கப் படாதிருந்தால், வியாச்சிய விசாரணையை நிறுத்தி வேறொருநாளைக்கு ஒத்தி வைத்துக்கொள்ள வேண்டியது, அதைக்குறித்துப் பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக நோட்டீசு கொடுக்கப்படவேண்டியது.

29. கிராம ஊழியக்காரனல்லாமல் மற்றப்படி இந்த ஆக்ட்டின் பிரகாரம் சேர்ப்பிக்கப்படுகிற ஒவ்வொரு சம்மனும் அது யார்பட்சமாய்ப் பிறப்பிக்கப் படுகிறதோ அந்தக் கட்சிக்காரனுடைய செலவிலே சேர்ப்பிக்கப் படவேண்டியது; அப்படி சேர்ப்பிப்பதற்கு வாங்கவேண்டிய கட்டணத் தொகை இவ்வளவென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும், அந்த கட்டணத்தொகையானது ஆலோசனைசபையிலுள்ள கவர்னரவர்களால் நிர்ணயிக்கப்படுகிறவிதமாய் அவர்களால் ஏற்படுத்தப்படும் விதிகளுக்குட்பட்டு கிராமமுனிசீபால் வாங்கப் படவேண்டியது.

30. பிரதிவாதி ஆஜராகும்படி நிர்ணயிக்கப்பட்ட தினத்திலே —

(1) உபய கட்சிக்காரர்களும் ஆஜராகாவிட்டாலும்,

(2) வாதி ஆஜராகாமல் பிரதிவாதி மாத்திரம் ஆஜராகி, தாவாவை அவன் ஒப்புக் கொள்ளாவிட்டாலும்,

(3) வாதியினுடைய தவறுதலினாலே பிரதிவாதிக்குச் சம்மன் சேர்பிக்கப் படாதிருந்து, அந்தப் பிரதிவாதி ஆஜராகாவிட்டாலும்,

வியாச்சியத்தைத் தள்ளிப்போடக்கூடாதென்று கிராமக்கோர்ட்டார் உத்தரவுசெய்தாலொழிய, அந்த வியாச்சியத்தைத் தள்ளிப்போடவேண்டியது.

31. வாதி ஆஜராகாமல், பிரதிவாதிமாத்திரம் ஆஜராகி, தாவா முழுதையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது அவன் ஒப்புக்கொள்ளுகிற பட்சத்தில், அப்படி ஒப்புக்கொள்ளுவதற்கு ஒத்திருக்கும்படியாக கிராமக் கோர்ட்டார் பிரதிவாதியின் பேரில் தீர்ப்பு செய்யவேண்டியது, ஆனால் தாவாவில் ஒருபாகமாத்திரம் ஒப்புக்கொள்ளப்படும் விஷயத்தில் வியாச்சிய விசாரணையை வேறொரு நாள்வரையிலே கோர்ட்டார் நிறுத்திவைக்கலாம்.

32. எந்த வியாச்சியமாவது 30-வது பிரிவு (1)-வது அல்லது (3)-வது உட்பிரிவின்படி தள்ளிவிடப்பட்டால், வாதியானவன் மறுபடி வியாச்சியங் கொண்டுவரலாம்; வியாச்சியத்தைத் தள்ளிப்போடும்படி 30-வது பிரிவு

(2)-வது உட்பிரிவின் பிரகாரம் செய்யப்பட்ட உத்திரவு தேதிமுதற்கொண்டாவது, 31-வது பிரிவின் பிரகாரம் தாவாவில் ஒரு பாகத்திற்குமாத்திரம் செய்யப்பட்ட டிக்கிரிதேதி முதற்கொண்டாவது முப்பதுநாளுக்குள் வாதியானவன் தகுந்த காரணத்தினுலே தான் ஆஜராவதற்குக் கூடாமையாய் விட்டதென்று கிராமக் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் தெரிவித்தால், கோர்ட்டார் வியாச்சியந்தள்ளும்படியானதையாகிலும் டிக்ரியையாகிலும் ரத்து செய்யவேண்டியதுமல்லாமல், வியாச்சியத்தை நடத்துவதற்கு ஒருநாளை குறிக்கவும் வேண்டியது.

33. யார்பேரில் ஒருதலையாக டிக்கிரி செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பிரதிவாதியானவன் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான யாதொரு கட்டளை வகையருவை நிறைவேற்றுகிற தேதிமுதல் முப்பது நாளைக்குள் கிராமக் கோர்ட்டுக்கு தீர்ப்பை ரத்துபண்ண வேணுமென்று மனுவுசெய்து கொள்ளலாம்; சம்மனுவது நோட்டிசாவது கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்படவில்லை யென்ருகிலும், பிரதிவாதி ஆஜராவதற்குத் தகுந்த காரணத்தினுலே கூடாமையாய்விட்ட தென்ருகிலும் திருப்திகரமாய் தெரியவந்தால், கோர்ட்டார் டிக்கிரியை ரத்துபண்ண வேண்டியதுமல்லாமல், வியாச்சியத்தை நடத்துவதற்கு ஒருநாளை குறிக்கவும் வேண்டியது.

34. 32-அல்லது 33-வது பிரிவின்படி யாதொரு மனுவு செய்யப்படுவதின்பேரில் எதிர்கட்சிக்காரனுக்கு நோட்டிசு கொடாமல் டிக்கிரியை ரத்து செய்யக்கூடாது.

5 - ம் அத்தியாயம்.

வியாச்சியங்களை விசாரணைசேய்வதையும் தள்ளிக்கோள்வதையும் ராஜியாய்ப்போவதையும் சாட்சிகளுக்கு சம்மன் பிறப்பிப்பதையும் அவர்களை விசாரிப்பதையுந்குறித்து.

35. பிரதிவாதி ஆஜராளுல், பிராதில் சொல்லப்பட்ட தாவாவை அவன் ஒப்புக்கொள்ளுகிருனுவென்று கோர்ட்டார் அவனை விசாரணைசெய்து தெரிந்துகொள்ளவேண்டியது. அவன் அந்த தாவாவை ஒப்புக்கொண்டாலும், அந்த வியாச்சியத்தில் கட்சிக்காரர்கள் ராஜியாய்ப்போனுலும், அப்படி ஒப்புக்கொண்டதையாவது ராஜியாய்ப்போனதையாவதுஎழுதி ரிகார்டுசெய்து அதற்கு கட்சிக்காரர்கள் கையெழுத்துபோடவேண்டியது, அதற்கொத்திருக்கும்படியாக கோர்ட்டார் டிக்கிரி பிறப்பிக்கவேண்டியது. பிரதிவாதி அந்த தாவாவை ஒப்புக்கொள்ளாவிட்டால், தனக்குள்ள ஆட்சேபணைகளை வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ தெரிவிக்கும்படி அவனுக்கு உத்தரவு பண்ணவேண்டியது, கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோன்றினுல்,

அவன் எழுத்துமூலமான வாக்குமூலம் எழிதி தாக்கல்செய்யும் பொருட்டு வியாச்சியத்தை நிறுத்திவைக்கலாம்.

36. வாதியானவன் வியாச்சியத்தைத் தள்ளிக்கொள்ள விரும்பினல், அந்தப்பிரகாரம் எழுதி கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தவேண்டியது, கோர்ட்டார் அந்த வியாச்சியத்தை ரிஜிஸ்டரிலிருந்து அடித்துப்போடவேண்டியது; அதே வியாச்சியமூலத்தைக்குறித்து மறுபடியும் வாதிவியாச்சியங் கொண்டு வரக்கூடாது.

37. இருகட்சிக்காரர்களில் எவனுவது எதிர் கட்சிக்காரனுடைய பிரமாணத்தின்பேரில் வியாச்சியத்தைப் பைசல்செய்துகொள்ள மனமுள்ளவனுயிருந்து, அந்த எதிர் கட்சிக்காரன் அதற்குச்சம்மதித்து பிரமாணஞ்செய்தால், அந்த பிரமாணத்திற்கு ஒத்தபடி கோர்ட்டார் தீர்ப்புசொல்லவேண்டியது.

38. சட்டப்படிபிரதிவாதிக்கு வாதிபணம்கொடுக்கவேண்டியதாயிருந்து அந்தப் பிரதிவாதி யாதொரு கிராமக்கோர்ட்டில் வியாச்சியங் கொண்டுவரக் கூடியதாயிருக்கிற யாதொரு தொகையை பிரதிவாதி எதிர்க்கடனுகத் தெரிவிக்கலாம். அந்த எதிர்க்கடன்தாவா ஸ்தாபிதஞ்செய்யப்பட்டால், இருகட்சிக்காரர்களில் யாருக்காவது எவ்வளவுதொகை பாக்கியாயிருக்கியதென்று கடைசியில் தெரியவருகிறதோ அவ்வளவுதொகைக்கு டிக்கிரி பிறப்பிக்க வேண்டியது.

39. பிரதிவாதியினுடைய ஸ்ட்டேட்மெண்டு தாக்கல் செய்யப்பட்டபின்பு, கோர்ட்டார்தாவாவின் உண்மையைக்குறித்தது பரிசீலனைசெய்யத்தொடங்க வேண்டியதுமல்லாமல், இருகட்சிக்காரராலும் கோரிக்கொள்ளப்பட்ட சாட்சிகளில் ஆஜராயிராதவர்களை சம்மனனுப்பி வரவழைக்கவும் வேண்டியது.

40. கிராமக்கோட்டினுடைய அதிகார எல்லைக்குள் வாசஞ்செய்கிற யாதொரு சாட்சியை வாய்மொழியாகவாவது எழுத்துமூலமாகவாவது சம்மனனுப்பி வரவழைக்கலாம். கோர்ட்டினுடைய அதிகார எல்லைக்குவெளியில் ஐந்துமைல் தூரத்திற்குள்ளாக வாசஞ்செய்கிற யாதொரு சாட்சியை எழுத்துமூலமாய் சம்மன்செய்துவரவழைக்கலாம், அந்த சம்மனை அவன் யாருடைய அதிசார எல்லைக்குள்வாசஞ்செய்கிருனே அந்த கிராமமுனிசிபுமூலமாய் சேர்ப்பிக்கவேண்டியது. எந்த சாட்சியாவது கோர்ட்டினுடைய அதிகார எல்லைக்குவெளியில் ஐந்துமைலுக்கு மேற்பட்டதூரத்தில் வாசஞ்செய்தால், கோர்ட்டார் சவால்கள் எழுதிக்கொடுக்கும்படி கட்சிக்காரர்களுக்கு உத்தரவு செய்யலாம்,அப்படிகொடுக்கப்பட்ட சவால்களை அந்தசாட்சிக்காரர் எந்தகிராம முனிசிபினிட அதிகார எல்லைக்குள்வாசஞ்செய்கிருனே அந்தகிராமமுனிசிபுக்கு ஒருகடிதமெழுதி அதோடு அனுப்பவேண்டியது,அந்தமுனிசிபானவர் உடனே அந்த சாட்சியை சம்மனனுப்பி வரவழைத்து அந்த சவால்களின்பேரில்

அவனை விசாரிக்கசெய்யவேண்டியதுமல்லாமல், அவன்சொல்லும் ஜவாபை வியாச்சியம் நடந்துகொண்டிருக்கிற கோர்ட்டுக்கு அனுப்பிவிடவும்வேண்டியது.

41. சம்மனிலே, அது யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்தநபர் ஆஜராகி சாட்சியம் சொல்லவேண்டியதென்ருவது தஸ்தவேஜை கொண்டுவந்து ஆஜர்ப்படுத்தவாவது ஆஜர்ப்படுத்துவிக்க வேண்டியதென்ருவது உத்தரவுபண்ணலாம்.

42. தேசாசாரப்படிக்கும் வழக்கப்படிக்கும் பயிரங்கத்தில்வந்து ஆஜராகும்படி வரவழைக்கப்படக்கூடாத ஸ்திரீகளேயும், கோர்ட்டிலே நேரில் ஆஜராவதினின்றும் நிவர்த்திசெய்யப்பட்டிருக்கிற நபர்களேயும், வியாதியினுலாவது துர்ப்பலத்தினுலாவது ஆஜராகக்கூடாதவராயும் ஆஜரானுல் மிகுந்த துன்பத்துக்குள்ளாகவேண்டியவராயுமிருக்கிற யாதொரு நபரையும், சம்மனனுப்பி வரவழைக்கக்கூடாது; அப்படிப்பட்ட யாதொரு நபரினுடைய சாட்சியம் அவசியமாயிருக்கும்போது, அப்படிப்பட்டவரை அவருடைய இருப்பிடத்தில்போய் கிராமக்கோர்ட்டார் விசாரிக்கவேண்டியது.

43. சாட்சிகளே பிரமாணத்தின்பேரிலாவது பிரமாண பூர்வமான உறுதிமொழியின்பேரிலாவது விசாரிக்கவேண்டியது, ஆனுல் சாட்சிகளுடைய வாக்குமூலத்தை கிராமக்கோர்ட்டார் எழுதிக்கொள்ளவேணுமென்கிற அவசியமில்லே.

44. கட்சிக்காரர்கள் அந்த விஷயத்திலே ராஜியாய்ப்போவார்கள்போலிருக்கிறதென்று தெரியவந்தாலும், தகுந்த வேறே யாதொருகாரணம் இருந்தாலும், கிராமக்கோர்ட்டார் கட்சிக்காரர்கள் முன்னிலேயிலாவது பிரதிவாதி ஆஜராகாதவிஷயங்களிலே வாதிமுன்னிலேயிலாவது ஒருதினத்தை நிச்சயித்து அந்த தினம்வரையில் வியாச்சிய விசாரணேயை நிறுத்திவைக்கலாம். அந்த தினத்தில் கட்சிக்காரர்களாவது அவர்களிலெவராவது ஆஜராகத் தவறிப்போனுல், கிராமக்கோர்ட்டார் வியாச்சியத்தைப் பைசல்செய்வதைக்குறித்து 30-31 - வது பிரிவுகளினுல் நிர்ணயிக்கப்பட்ட விதங்களில் எதாவது ஒரு விதமாய் வியாச்சியத்தைப் பைசல்செய்யத் தொடங்கலாம் அல்லது தமக்கு யுக்தமாகக்காணுகிறபடி வேறே உத்தரவு பிறப்பிக்கலாம்.

6 - ம் அத்தியாயம்.

டிக்கிரீயையும் அதை நிறைவேற்றுவதையுங்குறித்து.

45. கட்சிக்காரர்களேயாவது அவர்களுடைய ஏஜெண்டுகளேயாவது விசாரணேசெய்தும், உபயபட்சத்து சாட்சியத்தையும் யோசித்துமானபிறகு, கிராமக்கோர்ட்டார் நியாயமாகவும் நடுநிலேயாகவும் மனசாட்சிக்குப் பொருந்தினதாகவும் காணுகிறபடி டிக்கிரி பிறப்பிக்கவேண்டியது.

46. டிக்கிரியிலே, வியாச்சியநம்பரையும் கட்சிக்காரர்ளின்பெயர்களையும் தாவாவின் விவரங்களையும் விசாரிக்கப்பட்டசாட்சிகளின்பெயர்களையும் பார்வையிடப்பட்ட தஸ்தவேஜுகளின் பலம்இன்னதென்பதையும் அதின்பேரில் செய்த தீர்மானத்தையும் அந்தத் தீர்மானஞ்செய்ததற்குள்ள ஹேதுக்களையும் கண்டெழுதவேண்டியது. தீர்மானஞ்செய்யப்பட்ட ரொக்கம் இவ்வளவு என்பதையும், ஒப்புகொடுக்கப்படவேண்டிய அசையும்பொருள் இன்னதென்பதையும், ஒப்புகொடுப்பதில்லாதபட்சத்தில் அதற்குபதிலாக செலுத்தவேண்டிய தொகை இவ்வளவென்பதையும், வியாச்சியச்செலவு இவ்வளவென்பதையும், அந்தச் செலவு இன்னின்ன கட்சிக்காரர்களால் இவ்வளவிவ்வளவு செலுத்தப்படவேண்டியதென்பதையும், அந்தடிக்கிரியில் குறிக்கவேண்டியது.

டிக்கிரி எந்ததேதியில் பிறப்பிக்கப்படுகிறதோ அந்தத் தேதிபோட்டு அதில்கிராமமுனிசீபு கையெழுத்துசெய்யவேண்டியது. யாதொருகிராமநியாய சபையாரால் வியாச்சியம் விசாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில் டிக்கிரியிலே அந்த நியாயசபையைச்சேர்ந்த எந்த மெம்பர்கள் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அவர்கள் கையெழுத்துசெய்யவேண்டியது, விண்ணப்ப்ஞ் செய்துகொள்வதின்பேரில் பிரதி கட்சிக்காரனும் டிக்கிரிக்கு நகலைப் பெற்றுக்கொள்ள அருகனாவான்.

47. ரொக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களிலே, டிக்கிரியானதொகைக்கு வியாச்சியதேதிமுதல் பணஞ் செலுத்தப்படுகிறதேதிவரையில் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டுக்கு அதிகப்படாமல் வட்டி செலுத்தப்படவேண்டியதென்று கிராமக்கோர்ட்டார் டிக்கிரிபண்ணலாம்.

பணஞ்செலுத்தும்படி கிராமக்கோர்ட்டார் டிக்கிரிசெய்கையில், அதை மேற்கண்டவீதப்படி வட்டியுடனேயாகிலும் வட்டியில்லாமலாகிலும் வாயிதாக்களாகச் செலுத்தும்படி உத்தரவுசெய்யலாம்,

48. டிக்கிரியை, அதைச்செய்த கிராமக் கோர்ட்டாராவது, நிறைவேற்றப் படுவதற்காக அது யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த கிராமக் கோர்ட்டாராவது டிஸ்திரிக்ட்டு முனிசீபாவது இதில் பின்னால் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி நிறைவேற்ற வேண்டியது.

49. குறித்த யாதொரு அசையும்பொருளை வரப்பற்றுவதற்கென்று டிக்கிரி செய்யப்படுமாகில், அந்தப்பொருளை கைப்பற்றி, டிக்கிரிபெற்றவனுக்கு அதை ஒப்பிவித்து இவ்விதமாக டிக்கிரியை நிறைவேற்றலாம். அந்தப் பொருளைக் கைபற்றக்கூடாவிட்டால், அதற்கு பதிலாகவென்று டிக்கிரி செய்யப்பட்டிருக்கிற பணத்தை செலுத்தும்படி நிர்ப்பந்தித்து டிக்கிரியை நிறைவேற்றவேண்டியது.

50. யாதொரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்கிரியின்படி செலுத்தப்பட வேண்டிய சகலதொகையும், அந்த டிக்கிரியை நிறைவேற்று வது யாருடைய அலுவலோ அந்த கிராம முனிசீபுக்கு எதிரில், டிக்கிரி பெற்றவனுக்காவது எழுத்து மூல்மாக பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக் கப்பெற்ற அவனுடைய ஏஜண்டுக்காவது செலுத்தப்பட வேண்டியது; அப்படிக்கில்லாமல் டிக்கிரி பெற்றவனுக்குத் திருப்திகரமாய் அந்த டிக்கிரி யைக்குறித்து வேறேவிதமாய் ஒழுங்கு செய்யப்பட்டால், அந்த ஒழுங்கு இப்படிப்பட்ட தென்பதை எழுதி ரிகார்டுசெய்து, அந்த டிக்கிரி பெற்றவ னவது அவனுடைய ஏஜண்டாவது மேற்படி கிராம முனிசீபுக்கு எதிரில் கையெழுத்து செய்யவேண்டியதுமல்லாமல் அந்த கிராம முனிசீபு அதற்கு அத்தாட்சி கையெழுத்து போடவும் வேண்டியது.

அப்படி பணஞ் செலுத்தப்பட்ட தென்பதையாவது ஒழுங்கு செய் யப்பட்ட தென்பதையாவது கிராம முனிசீபு டிக்கிரியின்பேரில் எழுதி இண்டார்ஸ் செய்யவேண்டியது மல்லாமல், 10-வது பிரிவில் சொல்லி யிருக்கிற வியாச்சிய ரிஜிஸ்டர் புஸ்தகத்தில் பதிவு பண்ணவும் வேண்டியது.

யாதொரு டிக்கிரியின்படி பணஞ் செலுத்தப்பட்டாலும், யாதொரு டிக்கிரியைக்குறித்து முழுவதுமாவது ஒரு பாகத்திற்காவது ஒழுங்கு செய் யப்பட்டாலும், இந்தப்பிரிவில் நிர்ணயித்திருக்கிற மாதிரியாகவாவது டிஸ் திரிக்ட்டு முனிசீபு கோர்ட்டிலாவது பணஞ் செலுத்தப்பட்டாவது ஒழுங்கு செய்யப்பட்டாவது இருந்தாலொழிய, அது ஏற்றுக் கொள்ளப்படாது.

51. 66 - வது 67 - வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு கிராமக் கோர்ட்டாருடைய டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக, தீர்ப்பான யாதொரு கடனாளியை பிடிக்கவும் கூடாது, யாதொரு அசை யாப்பொருளை ஜப்தி செய்யவுங்கூடாது.

52. டிக்கிரிபெற்றவன் விண்ணப்பஞ் செய்து கொள்வதின்பேரில், கிராமக் கோர்ட்டார், தங்களுடைய அதிகார எல்லைக்குள் தீர்ப்பான கட னாளிக்குச் சொந்தமாயிருக்கிற எந்த அசையும்பொருளை டிக்கிரி பெற்றவன் காட்டுகிறானோ அதை டிக்கிரியின்படி செலுத்தப்படவேண்டிய தொகை அளவுக்கு ஜப்திபண்ண வேண்டியது, ஆனால் அடியிற்கண்ட பொருள்கள் அப்படி ஜப்தி செய்யப்படுவதற்குள்ளாகாது, அவையாவன:—

(a) தீர்ப்பான கடனாளியும் அவனுடைய மனைவியும் மக்களும் உடுத் திக் கொள்ளுகிற அவசியமான வஸ்திரங்கள், அவர்களுடைய படுக்கை முஸ்திப்புகள்;

(b) கைத்தொழிலாளிகளிட ஆயுதங்கள், தீர்ப்பான கடனாளி விவசாயக் காரனாக விருந்தால் அவனுடைய விவசாய சாமான்கள், அவன் விவசாயஞ்

செய்து ஜீவனம் பண்ணக் கூடியதற்கு அவசியமாய் வேண்டியிருப்பதாக கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிற கால்நடைகள், தானியவிதைகள் ;

(c) கணக்கு புஸ்தகங்கள் ;

(d) கவரண்மெண்டு மிலிடெரி பென்ஷனர்களுக்கும் சிவில்பென்ஷனர்களுக்கும் கொடுக்கப்படும் வர்த்தனைகள் நன்கொடைகள், பொலிடிகல் பென்ஷன்கள் ;

(e) யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனுக்காவது ரெயில்வே கம்பெனி அல்லது பிரதேச அதிகாரிகளுடைய உத்தியோகஸ்தனுக்காவது சேரவேண்டிய சம்பளம் மாசமொன்றுக்கு இருபது ரூபாய்க்கு மேற்படாத விஷயத்தில் அப்படிப்பட்ட சம்பளம், இருபது ரூபாய்க்கு மேற்படும் விஷயத்தில் அதில் ஒரு பாதியை ஜப்தி பண்ணலாம் ;

(f) சுதேச ராணுவ யுத்த நிபந்தனைகள் சம்பந்தப்படுகிற நபர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம், வர்த்தனைகள் ;

(g) வேலையாள்களும் வீட்டு வேலைக்காரர்களும் பெறுகிற கூலிகள்.

53. தீர்ப்பான கடனாளியினுடைய ஸ்வாதீனத்தில் பொருளிருக்கும் பட்சத்தில், அதை நேராய்க் கைப்பற்றி ஜப்தி பண்ணவேண்டியது, கிராம முனிசிபு அதைபந்தோபஸ்துசெய்ய வகைசெய்யவேண்டியது. கேட்கப்படும் போது அந்தப்பொருளை ஆஜர்ப்படுத்துவதாக எழுத்து மூலமாய்ப் போதுமான ஜாமீன் கொடுக்கப்படும் பட்சத்தில் அதை தீர்ப்பான கடனாளியினுடைய வசத்திலே விட்டுவைக்கலாம். கேட்கப்படும்போது பொருள் ஆஜர்ப்படுத்தப்படாவிட்டால், ஜாமீன்தாரன்பேரில் அந்தடிக்கிரியை ஆஜர்ப்படுத்தப்படாத பொருளின்பெறுமான தொகைக்கு நிறைவேற்றலாம்.

54. தீர்ப்பான கடனாளியினுடைய ஸ்வாதீனத்தில் பொருளிராத பட்சத்தில், அந்தப்பொருள் யாருடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதோ அந்த நபர் அதை தீர்ப்பான கடனாளிக்குக் கொடுத்துவிடக் கூடாதென்று எழுதிய கட்டளை மூலமாய் ஜப்தி பண்ணவேண்டியது.

55. தீர்ப்பான கடனாளிக்கு வரவேண்டியிருக்கிற கடன்களையும் தொகைகளையும் ஜப்தி செய்வது எப்படியென்றால்—கிராமக் கோர்ட்டாருடைய மறு உத்தரவுவரையில், தீர்ப்பான கடனாளி அந்தக் கடனைப் பற்றிக்கொள்ளவோ தொகையைப் பெற்றுக்கொள்ளவோ கூடாதென்றும், கடன் வாங்கியிருப்பவன் அதைச் செலுத்தக் கூடாதென்றும் எழுதிய கட்டளை மூலமாய் ஜப்திபண்ணவேண்டியது. அசையாப்பொருளின்பேரில் உண்டாயிருக்கிற யாதொருகடனை ஜப்தி பண்ணவாகிலும் விற்கவாகிலும் கிராமக் கோர்ட்டுக்கு இந்தப் பிரிவிலுள்ள யெதினாலும் அதிகாரமுண்டாவதாக எண்ணக்கூடாது.

56. நேராய்க் கைப்பற்றியாவது எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டாவது ஜப்தி செய்யப்பட்டபின்பு, ஜப்தியிலிருக்கிறவரையில் அந்த ஜப்தி பொருளானது விக்கிரயம், தானம், அடமானம் முதலிய எவ்விதத்தினலாவது உள்ளுக்குள்ளாகப் பராதீனஞ் செய்யப்பட்டாலும், தீர்ப்பான கடஞளிக்கு அந்தக்கடன் செலுத்தப்பட்டாலும் அது ஜப்தியின்படி எந்தெந்த தாவாக்களை அமுலுக்குக் கொண்டுவரலாமோ அந்தந்த தாவாக்களுக்கெல்லாம் விரோதமானதாக ரத்தாகவேண்டியது.

57. யாதொரு டிக்கிரியை நிறைவேற்றும்பொருட்டு ஜப்தி செய்யப்பட்ட பொருளுக்கு எதாவது தாவாசெய்யப்பட்டால், கிராமக் கோர்ட்டார் அந்த தாவாவைக்குறித்து விசாரணை செய்யவேண்டியது, அந்தப் பொருளை விற்கும்படியான சுதந்தரம் தீர்ப்பான கடஞளிக்கில்லையென்று தெரியவந்தால், அதை ஜப்தியிலிருந்து விடுதலை செய்யவேண்டிது.

58. ஜப்தி செய்யப்பட்டபின்பு கூடுமான சீக்கிரத்திலே கிராமக் கோர்ட்டார் ஜப்தி செய்யப்பட்ட பொருளை விற்றுப் போடுவதற்காக ஜப்தி தேதி முதல் பதினைந்துநாளைக்குக் குறையாமல் ஒருநாளை நிச்சயிக்க வேண்டியதுமல்லாமல், அந்த உத்தேசமான விற்பனையைக் குறித்து இஸ்தியார் எழுதி அதை தங்களுடைய கோர்ட்டுக்கு வெளிப்புறத்தில் ஒட்டுவிக்கவும் வேண்டியது, மேலும் விற்பனைக்கு முன்னிட்டு அதைக்குறித்து தண்டோரா போட்டு பின்னும் பிரசித்தப்படுத்த வேண்டியது.

ஆனல் (1) தீர்ப்பான கடஞளியினுடைய எழுத்து மூலமான சம்மதியின் பேரிலாவது, (2) கைப்பற்றப்பட்ட பொருள் தனிச்சையாய் சீக்கிரத்தில் அழிந்து போகத்தக்கதாயிருக்கும்போதாவது, (3) அதை பத்திரமாய் வைத்திருப்பதற்குண்டான செலவு அதின் கிரயத்திற்கு மேற்படுகிறதாயிருக்கும்போதாவது, கோர்ட்டார் தண்டோரு போட்டு கிரமமாய் நோட்டீசு கொடுத்தபின்பு, ஜப்தி தேதிமுதல் பதினைந்து நாளைக்குள் எப்போதாகிலும் ஜப்திப்பொருளை விற்றுப்போடலாம். இப்படி செய்யும் விஷயத்தில், விற்று முதல் பணத்தை, டிக்கிரிகளை நிறைவேற்றுகையில் ஜப்தி பண்ணப்பட்ட தொகைகளை செலுத்துவதற்காக இதில் பின்னல் சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு கோர்ட்டார் வைத்திருக்கவேண்டியது.

59. விற்பதற்காக நிச்சயிக்கப்பட்ட தினத்திலே, கிராம முனிசீபுக்கு எதிரில் அந்தப் பொருள் பயிரங்கமாய் எலம் போடப்பட்டு உயர்ந்தவிலைக்குக் கேட்கிறவனுக்கு விற்றுப் போடப்படும். அந்த விலை அட்டியில்லாமல் உடனே செத்திவிடப்படவேண்டியது, செலுத்தப்படாவிட்டால் அந்தப் பொருள் மறுபடி எலம் போடப்படும்.

கொள்கிரயம் செலுத்தப் படுவதின்பேரில், கோர்ட்டார் அதற்கு ரசீது கொடுக்கவேண்டியது, அத்துடனே அந்த விக்கிரயம் அறுதியாகும்.

மறு ஏலத்தில் ஏதாவது நஷ்டம் உண்டானால் அது கடனுக்குத் தீர்ப்பு பெற்றவனாகிலும் தீர்ப்பான கடனாளியாகிலும் கேட்டுக்கொள்ளும்பட்சத்தில், பணங்கட்டத் தவறிப்போனவன்பேரில் அதற்காக டிக்கிரி செய்யப்பட்டிருந்தாற்போல அவனிடத்தில் வசூல்செய்யப்படத்தக்கதாகும்.

60. இந்த ஆக்டின்படி பிரசித்தம்செய்யப்பட்ட யாதொரு ஏலவிற்பனையை, கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோன்றும்பட்சத்தில், பலான தினம் வரையில் ஒத்திவைக்கலாம்; அதைக்குறித்து 58 - வது பிரிவில் நிர்ணயித்திருக்கிறவிதமாய் ஜனங்களுக்குப் பிரசித்தப்படுத்தவேண்டியது.

61. இந்த ஆக்ட்டுக்குட்பட்ட யாதொரு ஏலவிற்பனை சம்பந்தமாய் யாதொரு அலுவலை நடத்தவேண்டிய கிராமமுனிசீபாவது வேறே உத்தியோகஸ்தனாவது அப்படிப்பட்ட ஏலத்தில் விற்கப்பட்ட யாதொருபொருளை நேராகவாகிலும் வேறொருவரைக்கொண்டாகிலும் விலைகேட்கவுங்கூடாது; அதில் யாதொரு சுதந்தரத்தை அப்படி அடையவுங்கூடாது.

62. ஏலத்தில் பொருளை விடுவதற்குமுன்னமே, டிக்கிரியின்படி பாக்கியாயிருக்கிற தொகையையும் விற்பனைச் செலவையும் கிராமமுனிசீபிடத்தில் கொடுக்கவந்தால், இந்த ஆக்ட்டின்படி நடத்துகிற பிரதி விற்பனையையும் நிறுத்திப்போடவேண்டியது.

63. டிக்கிரியை நிறைவேற்றி வசூல்செய்யப்பட்ட பணத்திலிருந்து, நிறைவேற்றுதலுக்குப் பிடித்தசெலவை முதலில் முஜராசெய்துகொண்டு டிக்கிரிபெற்றவனுக்குச் சேரவேண்டிய தொகையை பின்பு செலுத்தவேண்டியது. ஏதாவது நிலுவையிருந்தால் அதைத் தீர்ப்பான கடனாளிக்குச் செலுத்திவிடவேண்டியது.

64. விற்கப்பட்ட பொருள் ஜப்திசெய்து நேராய்க் கைப்பற்றப்பட்ட பொருளாயிருந்தால், அதை கிரயக்காரனுக்கு ஒப்பித்துவிடவேண்டியது;

65. விற்கப்பட்ட பொருளானது தீர்ப்பான கடனாளியல்லாத வேறே யாதொரு நபரினுடைய ஸ்வாதீனத்திலிருந்தாலும், தீர்ப்பான கடனாளிக்கு எந்தநபராவது கொடுக்கவேண்டிய கடனாயிருந்தாலும், கிரயக்காரன்தவிர வேறே எவனுக்காவது பொருளின் ஸ்வாதீனத்தை ஒப்புவிக்கக்கூடாதென்றாகிலும் கடனைச் செலுத்தக்கூடாதென்றாகிலும் மேற்படி நபருக்கு எழுத்துமூலமாய் நோட்டீசுகொடுத்து அந்தப்பொருள் கிரயக்காரனுக்கு ஒப்புவிக்கப்படவேண்டியது, ஜப்திசெய்யும்போது தீர்ப்பான கடனாளிக்கு அந்தப்பொருள் அல்லது கடனில் என்னென்ன சுதந்தரமிருந்ததோ அதெல்லாம் கிரயக்காரனைச் சேர்ந்துவிடும்.

66. யாதொரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட எத்த டிக்கிரியையாகிலும், டிக்கிரி பெற்றவன் விண்ணப்பஞ் செய்துகொள்வதின் பேரில் நிறைவேற்றப் படுவதற்காக டிஸ்திரிக்ட்டு முனிசிபினிடத்தில் அனுப்பலாம், அவர் அதை தம்மால் செய்யப்பட்ட டிக்கிரியாயிருந்தாற் போலவே நிறைவேற்றலாம், அல்லது பிரதிவாதிக்கு வேறெந்த கிராமத்தில் அசையும் பொருளிருக்கிறதென்று தெரிவிக்கப்படுகிறதோ அந்த கிராமத்துக் கோர்ட்டாருக்கு நிறைவேற்றப்படுவதற்காக அதை அனுப்பலாம். அந்தக் கோர்ட்டார் அந்த டிக்கிரி தங்களால் செய்யப்பட்டிருந்தாற்போலவே நடவடிககை நடத்தவேண்டியது.

67. யாதொரு டிக்கிரியை நிறைவேற்றும் அலுவலை யாதொரு கிராமக் கோர்ட்டிலிருந்து வரவழைத்துக்கொண்டு, அந்த டிக்கிரி தம்மால் செய்யப்பட்டிருந்தாற்போலவே அதைத் தாமே நிறைவேற்ற டிஸ்திரிக்ட்டு முனிசிபுக்கு அதிகாரமுண்டு.

7 - ம் அத்தியாயம்.

நானுவிதமான சங்கதிகள்.

68. வியாச்சியத்தில் டிக்கிரி செய்யப்படுவதற்கு முன்னமே வாதியாவது பிரதிவாதியாவது இறந்துபோனல், சட்டப்படி ஏற்படக்கூடிய அவனுடைய பிரதிநிதியின்பெயரை, மறுகட்சிக்காரனுகிலும் சட்டப்படி ஏற்படும் அந்த பிரதிநிதியாகிலும் விண்ணப்பஞ் செய்துகொள்வதின்பேரில், இறந்துபோனவனுக்குபதிலாகரிகார்டில் எழுதிக்கொள்ளலாம், ஆனல் இறந்துபோன பிரதிவாதியிடத்திலிருந்து அடையப்பட்டு கிரமமாய் வகை சொல்லப்படாதிருக்கிற * ஆஸ்தியின் பெறுமான தொகைக்கு அதிகமாக சட்டப்படி ஏற்படும் அந்தப்பிரதிவாதியின் பிரதிநிதியின்பேரில் டிக்கிரிசெய்யக்கூடாது.

69. வாதியாவது பிரதிவாதியாவது இறந்துபோன தேதிமுதற்கொண்டு அறுபதுநாளுக்குள் அப்படிப்பட்டவிண்ணப்பஞ் செய்துகொள்ளப்படாவிட்டால், வியாச்சியத்தைத்தள்ளிப்போடவேண்டியது, அதே வியாச்சியமூலத்தைக்குறித்து மறுபடி வியாச்சியங் கொண்டுவர இடங்கொடுக்கக்கூடாது.

70. ஒருவனல்லாமல் பலவாதிகளாவது பிரதிவாதிகளாவதிருந்து, அவர்களில் எவனவது இறந்துபோய், அவனுடைய பிரதிநிதி மேற்சொல்லியபடி சேர்க்கப்படாமலிருந்தால், ஜீவித்திருக்கிறவாதி அல்லது வாதிகள் கேட்டுக்கொள்வதின்பேரில், ஜீவித்திருக்கிற பிரதிவாதி அல்லது பிரதிவாதிகளின்பேரில் வியாச்சியத்தை மேல் நடத்தவேண்டியது.

71. டிக்கிரிபெற்றவன் டிக்கிரி பூர்த்தியாய் நிறைவேற்றப்படுவதற்கு முன் இறந்துபோனல், சட்டப்படிஏற்படும் அவனுடைய பிரதிநிதியானவன் இறந்துபோனவனுக்குப்பதிலாக தன்னுடையபெயரை டிக்கிரிபெற்றவனகச்

சேர்க்கும்படி, கிராமக்கோர்ட்டாருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளலாம், தீர்ப்பான கடனாளிக்கு நோட்டீசுகொடுத்தபின்பு கோர்ட்டார் அந்த விண்ணப்பதாரன் சட்டப்படி ஏற்படக்கூடிய இறந்துபோனவனுடைய பிரதிநிதி தானென்று திருப்திகரமாய்த்தெரிந்துகொண்டால், ரிகார்டிலே அவனுடைய பெயரை டிக்கிரிபெற்றவனாக எழுதிக்கொள்ளவேண்டியது.

72. தீர்ப்பானகடனாளியானவன் டிக்கிரிபூர்த்தியாய் நிறைவேற்றப்படுவதற்குமுன் இறந்துபோனால், டிக்கிரிபெற்றவன் விண்ணப்பஞ்செய்துகொள்வதின்பேரில், தீர்ப்பான கடனாளியிடத்திலிருந்து அடையப்பட்டு கிரமமாய் வகைசொல்லப்படாதிருக்கிற ஆஸ்தி எவ்வளவோ அவ்வளவுக்கு சட்டப்படி ஏற்படும் அவனுடைய பிரதிநிதியின்பேரில் அந்த டிக்கிரியை நிறைவேற்றலாம்.

73. யாதொரு கிராமக்கோர்ட்டினுடைய டிக்கிரி அல்லது உத்தரவினாலே அநியாயமடைந்ததாக எண்ணுகிற யாதொருகட்சிக்காரன் அந்த டிக்கிரி அல்லது உத்தரவுதேதிமுதல் அறுபதுநாளுக்குள் மனுவு கொடுத்துக்கொள்வதின்பேரில், டிஸ்திரிக்ட்டுமுனிசீபானவர்—

கிராமக்கோர்ட்டார் லஞ்சம்வாங்கினார்களென்கிற ஹேதுவின் பேரிலாவது நீதிக்கேடாய் பாரபட்சம் பண்ணினார்களென்கிற ஹேதுவின் பேரிலாவது துர்நடத்தையாய் நடந்தார்களென்கிற ஹேதுவின் பேரிலாவது,

சட்டப்படி அந்தக் கோர்ட்டுக்கு ஏற்பட்டிராத அதிகாரத்தை அந்தக் கோர்ட்டார் செலுத்தியிருக்கிறார்களென்கிற ஹேதுவின்பேரிலாவது மற்றப்படி சட்ட விரோதமாயாகிலும் முக்கிய முறைபிறழ்வாகிலும் நடந்திருக்கிறார்களென்கிற ஹேதுவின்பேரிலாவது,

அந்த டிக்கிரி அல்லது உத்தரவு ஸ்பஷ்டமாய் நீதிக்கேடாகவோ சட்டத்திற்கு விரோதமாகவோ இருக்கிறதென்கிற ஹேதுவின் பேரிலாவது,

அப்படிப்பட்ட டிக்கிரி அல்லது உத்திரவை தள்ளிவிட்டு, தமக்கு யுக்தமாகக்காணுகிற வேறே டிக்கிரி அல்லது உத்தரவைப் பிறப்பிக்கலாம்; ஆனால் யாதொரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்கிரியையாவது உத்தரவையாவது எதிர்க் கட்சிக்காரனுக்கு நோட்டீசு கொடாமல் தள்ளிப்போடக்கூடாது. அப்படிப்பட்ட யாதொரு மனுவு பைசல் செய்யப்படுகிறவரையில், அந்த டிக்கிரி அல்லது உத்தரவு நிறைவேற்றப்படுவதை டிஸ்திரிக்ட்டு முனிசிபு நிறுத்திவைக்கலாம்.

அறுபது நாளுக்குப்பின்பு இந்தப் பிரிவின்படி மனுவுசெய்துகொள்ளப்பட்டால், நேரிட்ட ஆலஸியத்தைக்குறித்து தெரிவிக்கப்படும் காரணம் டிஸ்திரிக்ட்டு முனிசிபுக்குத் திருப்திகரமாயிருக்கும்பட்சத்தில் அவர் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பிரிவில் விதித்திருக்கிறபடிக்குத்தவிர, யாதொரு கிராமக்கோர்ட்டாரால் செய்யப்பட்ட ஒவ்வொரு டிக்கிரியும் உத்தரவும் முடிவானதாகும்.

74. டிஸ்திரிக்ட்டு முனிசீபானவர் 73-வது பிரிவின்படி யாதொரு டிக்கிரி அல்லது உத்தரவை தள்ளிவிடும்போது, அவர் அந்த விஷயத்தை டிஸ்திரிக்ட்டு ஜட்ஜிக்கு ரிபோர்ட்டு பண்ணலாம், கிராமக்கோர்ட்டார் லஞ்சம் வாங்கினரென்கிற ஹேதுவின்பேரிலாவது நீதிக்கேடாய் பாரபட்சம் பண்ணினரென்கிற ஹேதுவின்பேரிலாவது துர்நடத்தையாய் நடந்தாரென்கிற ஹேதுவின் பேரிலாவது யாதொரு டிக்கிரி அல்லது உத்தரவை தாம் தள்ளிவிடும் ஒவ்வொரு விஷயத்தையும் அப்படி கட்டாயமாய் ரிபோர்ட்டு பண்ணவேண்டியது.

75. கிராமக் கோர்ட்டுகளில் உபயோகிக்கப்படவேண்டிய நமூனுக்களையும் அந்தக் கோர்ட்டார் அனுப்பவேண்டிய ஸ்டேட்மெண்டுகளையும் ஹைகோர்ட்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம். டிஸ்திரிக்ட்டு ஜட்ஜியாவது டிஸ்திரிக்ட்டு முனிசீபாவது கிராமக் கோர்ட்டுகளுடைய ரிஜிஸ்தர்களையும் ரிகார்ட்டுகளையும் எப்போதாவது வரவழைத்து பார்வையிடலாம்.

ஷிடியூல்.

ரத்துசெய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

(2-வது பிரிவைப்பார்க்க.)

வருஷமும் லக்கமும்.	விஷயம் அல்லது பெயர்.	இவ்வளவுபாகம் ரத்தானதென்பது.
1	2	3
1817 - ஞூத்து 4-வது சென்னபட்டணத்து ரிகியுலேஷன்.	கிராமங்களிலுள்ள தலைமையான குடிகள் நிஷ்கரிஷையான ஒரு தொகைவரையில் ரொக்க முதலிய அசையும்பொருளைக் குறித்துக்கொண்டு வரப்படுகிற சீவில் வியாச்சியங்களை விசாரித்துத் தீர்மானிப்பதற்காக தங்கள் தங்கள் கிராமங்களிலே முனிசீபுகளாயிருக்கும்படி நிர்ணயிப்பதற்காகவும் அவர்களுடைய அதிகாரத்தை வரையறுப்பதற்காகவும் ஏற்பட்ட ரிகியுலேஷன்.	முன்னமே ரத்துசெய்யப்படாதிருக்கிற பாகம்.
சென்னபட்டணம் 1883-ஞூத்து4வது ஆக்ட்டு.	1816ஞூத்து 4-வது சென்னபட்டணத்து ரிகியுலேஷன்படி எவ்வளவு தொகைவரையில் சிவில் விவகாரத்திலே கிராமமுனிசீபுகள் அதிகாரஞ் செலுத்துகிறார்களோ அந்தத்தொகையை அதிகப்படுத்துவதற்கான ஆக்ட்டு.	முழுவதும்.

ரெவினியூ போர்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர்களுக்கு

அனுபந்தங்கள்.

4-ம் நெ. ஆர்டர் பிரகரணம் 2.]

புஞ்சை நிலங்களில் ஜலத்தீர்வை (கஸர் சார்ஜ்) விதிக்கப்படவேண்டிய வீதம் கண்ட அட்டவணை.

	முதல் வகுப்பு ஏரி, ஆத்துவாய்க்கால், ஊத்துவாய்க்கால்.			இரண்டாவது வகுப்பு ஏரி, ஆத்துவாய்க்கால் ஊத்துவாய்க்கால்.		
	ரூபா.	அ.	பை.	ரூபா.	அ.	பை.
ஏ. புஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட ஒருபோர் நஞ்சை மாசூலுக்காக ஜலத்தீர்வை ஏகரா 1-க்கு.	4	0	0	3	0	0
பி. அதே நிலத்தில் இரண்டாம் போகத்துக்கு ஏகரா 1-க்கு.	2	0	0	1	8	0
ஸி. சாதாரணமான நஞ்சை தானியத்தைவிட ஜாஸ்தி காலத்துக்கு ஜலம் தேவையான கரும்பு, வெத்திலை, தென்னைமரம், வாழைமரம் முதலானவைகள் பயிரிட்டால் ஏகரா 1-க்கு	6	0	0	4	8	0
டீ. ஒரு போகத்திலாகிலும் அல்லது இரு போகத்திலாகிலும் புஞ்சை சாகுபடிக்கு ஜலம் பாய்ச்சினல் ஏகரா 1-க்கு	2	0	0	1	8	0

குறிப்பு:—கோவரிஜில்லாவில் நதிகளின் முகத்துவார நிலங்களுக்கும் கர்நூல் கடப்பை வாய்க்காலினுல் ஜலம்பாய்ச்சப்படுகிற நிலங்களுக்கும் ஜலத்தீர்வை விதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகள் தமிழ் ஜில்லாக்களுக்குச் சம்பந்தப்படாதவைக ளாகையால் தர்ஜிமா செய்யப்படவில்லை.

ஆர்டர் நெ. 11-பிரகரணம் 4.]

குத்தகை வருமானத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்கு தாமாஷாக்கள்.

உத்தேசமாய் எத்தனைவருஷத்திற்குள் நிலம்சாகுபடி செய்யக்கூடும்.	குத்தகை வருமானத்தின் தற்கால மதிப்புக்கும் உத்தேசவருமானத்தின் மதிப்புக்குமுள்ள தாமாஷாக்கள்.
1-ஞூ முதல். 2-வருஷத்திற்குள்..	$\frac{9}{10}$
2.............. 4....................	$\frac{8}{10}$
4.............. 6....................	$\frac{7}{10}$
6.............. 9....................	$\frac{6}{10}$
9..............12....................	$\frac{5}{10}$
12..............16....................	$\frac{4}{10}$
16..............21....................	$\frac{3}{10}$
21..............28....................	$\frac{2}{10}$
28..............40- ஞூத்திற்குள்ளும் அதற்கு மேலும்.	$\frac{1}{10}$

20. நெ. ஆர்டர் 8-வது பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்படலான விண்ணப்பத்திற்கு நமூனு.]

__________ கிராமத்தில்குடியிருக்கும் __________ என்பனிடகுமாரனுகிய எ. ப. என்று பெயருள்ளநான் அடியில்கண்டஷிடியூலில் கண்டதும் என்பேரில் தாக்கலானதுமான நிலங்கள்ரெவினியூ ரிஜிட்டரில் தாக்கல்செய்யப்பட்டதை __________ கிராமத்தில் குடியிருக்கும் __________ என்பவனிட குமாரனுகிய ஸீ. டி. என்பவன் பேரால் மாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(என்று) எ. ப.

இந்தஷிடியூலில் கண்டநிலங்கள் ரெவினியூரிஜிஸ்டரில் தாக்கலாயிருப்பதை என்பேரில் மாற்றுவதற்கு மேற்கண்ட ஸீ. டி. என்பனுகிய நான் சம்மதிக்கிறேன்.

(என்று) ஸீ. டி.

தாலூகா.	கிராமம்.	சர்வே நெ.	வீடு நெ.	நஞ்சையா புஞ்சையா	விஸ்தீரணம்.	தீர்வை.	மாற்றுதல் இப்படிப்பட்டதென்பது.
1	2	3	4	5	6	7	8

...............................முன்பாக நிறைவேற்றப்பட்டது.

(என்று.)

ரிஜிஸ்டிரார் அல்லது சப்ரிஜிஸ்டிரார்.

குறிப்பு:—ஜமீன்தாரி இலாகாக்கள், இனும் கிராமங்கள் முதலான வைளிட விஷயத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளில் கண்ட மாதிரி நிலத்திற்கு செக்பந்தி காணவேண்டியது. பலான நிலங்களென்று தெரிந்துகொள்ளப் போதுமான விபரங்கள் தெரிவிக்கும் பக்ஷத்தில் விபரங்கள் எல்லாவற்றையும் தெரிவிக்க பார்டிகள் அசக்தர்களாயிருந்தால் கூட அதனுல் விண்ணப்பம் நிறைவேற்றப் படுவதற்கு ஆடங்க மாகாது.

மரப்பட்டா சம்பந்தமான மாற்றுதலாயிருந்தால் விண்ணப்பத்தில் எழுதியிருக்கப்பட்ட "நிலங்கள் என்ற வார்த்தைசகுப் பதிலாக மரங்கள்" என்று எழுதிக் கொள்ளவேண்டியது. ஷிடியூலில் 3-வது 4-வது கலங்களின் தலைப்பில் "மரங்கள் எந்த நிலத்தில் வளர்ந்து இருக்கின்றனவோ அதின்" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டியது, 6-கலத்தில் தலைப்பை "மரங்களின் சங்கியையும் விபரமும்" என்று மாற்றவேண்டியது.

1886-ஷு நவம்பர்மீ 26உ 2568-நெ உள்ள போர்டாரிட புரோஸிடிங்குவில் மாற்றுதலுக்காகக் கொடுக்கப்படும் விண்ணப்பம் இன்னமாதிரியாய் இருக்கவேண்டியதென்று ஏற்படுத்தப்பட்ட நமுனை.

____________________தாலுகா_______________கிராமத்தில் வசிக்கும்____________________என்பவனிட குமாரன் அல்லது குமாரர்கள் (அதற்குத் தக்கபடி) ஆகிய_______________என்று பெயருள்ள நான் (அல்லது நாங்கள்) அடியில்கண்ட ஷிடியூலில் கண்டும் என்னிட (அல்லது எங்களிட) பெயரால் பட்டாவாயிருக்கிற வைகளுமான நிலங்களை_______________கிராமத்தில் வசிக்கும்_______________என்பவனிட பெயருக்கு தயவுசெய்து மாற்றச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் (அல்லது கேட்டுக்கொள்ளுகிறோம்.)

கையெழுத்து.

இந்த ஷடியூலில் கண்ட நிலங்களின் பட்டாக்களை என் அல்லது எங்களிடபெயரால் மாற்றிக் கொள்வதற்கு மேற்கண்ட நான் அல்லது நாங்கள் இதனுல் சம்மதிக்கிறோம்.

கையெழுத்து.

ஷிடியூல்.

தாலுகா.	கிராமம்.	சர்வே நெ.	உள் நெ.	நஞ்சையா புஞ்சையா	விஸ்தீரணம்.	மொத்தத் தொகை.	ஷரா.

18 ஷு மீ தேதியில் எங்கள் முன்பாக இருதிறத்தாரும் கையொப்பம் செய்தார்கள். ஷி விண்ணப்பத்தில் முதல்பாகத்தில் கையெழுத்து செய்திருக்கிற பார்ட்டிகள் பட்டாதார்கள்தான்.

கணக்கன்.

நெ.

மணியக்கார் (நாட்டாமைக்கார்.)

தீர்மானம்.

இருதிறத்தாராலும் கோரிக் கொள்ளப்பட்டபடி பசலியில் மாற்றுதல் செய்விக்க கிராம நவுக்கர்களுக்கு உத்திரவு செய்யப்படுகிறது.

தேதி. தாசில்தார்.

கிராமத்தில் தாலூக்காவில்

தர்க்காஸ்து விண்ணப்பத்தின் நெம்பரும் தேதியும்.	1	நெ.	
	2	தேதி.	
	3	விண்ணப்பதாரன் பெயர்.	
	4	அவன் குடியிருக்கிற கிராமத்தின் பெயர்.	
	5	தர்காஸ்து கொடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் விவரம்.	
	6	நிலத்தின் ஸர்வே நெம்பரும் எழுத்தும்.	
	7	விஸ்தீரணம்.	ஏ. ஸெ.
	8	தீர்வை.	ரூபா.
	9	நிலத்தில் இருக்கும் பரங்கள், கட்டடங்கள் முதலானவைகளின் சங்கியையும் விவரணமும் மதிப்பும்.	
	10	(1) தர்காஸ்துநிலத்தின் மூலமாய் வழிவிடவேண்டியதவசியமா; (2) நிலத்தின் குறுக்கே யாதொரு ஜலதாரத்தினுடைய கரையாவது, ரஸ்தாவாவது போகிறதா, அப்படிக்கிருந்தால் எவ்வளவு விஸ்தீரணம் கழித்துவிடவேண்டியது; (3) 18-ஸ்ரீ காலமாய் நிலம் அனுபவிக்கப்படாமலிருக்கிறதா, பாதுகாக்கப்பட்ட (ரிஸர்வ்செய்யப்பட்டிருக்கிற) காட்டுக்குச் சமீபமாயாவது பாதுகாக்கப்படாத 100 ஏக்ரா விஸ்தீரணமுள்ள துண்டு நிலத்திற்குச் சமீபமாயாவது இருக்கிறதா.	
	11	இதரவிண்ணப்பதார்கள் யாராவது இருந்தால் அவர்களிடபெயர், அவர்களிடபாத்தியதைகளின் சுபாவம்.	
	12	விண்ணப்பதார்களில் யாராவது நிலத்தைக் கடைசியாய் அனுபவித்து ராஜிநாமா கொடுத்துவிட்டாரா, அப்படிக்கிருந்தால் எப்போது.	

தேதி.

நிலத்திற்காக கொடுக்கப்படும் தர்காஸ்து ஏ. மிமோராண்டம்.

13	அடியில் கண்ட காரணங்களில் எந்த காரணத்தையாவது முன்னிட்டு நிலத்தை அடமானம்செய்வதற்கு யாதாவது ஆக்ஷேபணையுண்டா:—(1) சர்க்கார் தீர்வைபாக்கிக்காக ஏலம் போடப்பட்டபோது கவர்ண்மெண்டு தரப்பில் ஏலம் எடுக்கப்பட்டநிலங்களை பதிவுசெய்யும் ரிஜிஸ்டரில் இந்த நிலம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதா. (2)பொது உபயோகங்களுக்காக ரிஸர்வ் செய்யப்பட்டாவது தேவையாகவாவது இருக்கிறதா. (3) கல்பாறைகளுள்ளதாயிருக்கிறதா. (4) ரெயில்வே ஸ்டேஷன் எல்லையிலிருந்து அரைமயிலுக்குட்பட்டதா. (5) சேரவேண்டிய பாக்கிதீர்வையை செலுத்தாமல் முன்னடியாக ராஜிநாமா கொடுக்கப்பட்டும் ஆனால் நிலம் விலை பெறுமானதை முன்னிட்டு விற்கப்படாமல் இருக்கிறதா. (6) கவர்ன்மெண்டாரால் கம்பன்சேஷன் கொடுக்கப்பட்டு யாதொருவேலைக்கு வேண்டுமென்று சம்பாதிக்கப்பட்டிருந்து இப்போது அந்தவேலைக்காக அந்த நிலம் தேவையில்லாததாயிருக்கிறதா. (7) மரப்பட்டாவின்பேரில் அனுபவிக்கப்பட்ட மரங்களுள்ளதாயிருந்து அந்தமரங்களின் தீர்வையானது நிலத்தீர்வையைவிட ஜாஸ்தியாயிருக்கிறதா:	
14	கிராமத்தில் நோட்டீஸ் பிரவிசித்தம்செய்ததேதி.	
15	கிராம நவுக்கர்களிடமிருந்து தாசில்தாரால் எப்போது பெற்றுக்கொள்ளப்படடது.	
16	தாசில்தாரிட ஷருக்களும் பைசல் செய்யும் தேதியும்.	
17	மறுபடியும் கிராம நவுக்கர்களால் மெமோராண்டம் எப்போது பெற்றுக்கொள்ளப்பட்டது.	
18	தர்காஸ்துதாரனுக்கு நிலம் ஒப்பு கொடுக்கப்பட்டதேதி.	
19	பொதுவான ஷருக்கள்.	

மணீகார்.

கர்ணம்.

ஏ. 1. கரம்புநிலங்களுக்காக கொடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தைப்பற்றிவிளம்பரம்:—

________________ கிராமத்திலுள்ள ________________ என்பவன் அடியில்கண்ட ஷிடியூலில் கண்டநிலங்களுக்கு தற்காஸ்து கொடுத்திருக்கிறான், (சாகுபடிசெய்திருக்கிறான்) என்று இதினால் தெரிவிக்கப்படுகிறது. அந்தநிலங்களுக்காக அவனுக்கு பட்டாகொடுக்கும் விஷயத்தில் ஆக்ஷேபணை செய்யும் ஜனங்கள் அதைப்பற்றி கிராமத்திய மணியகாருக்கும் கணக்கருக்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

ஷிடியூல்.

புலங்களின் நெ.	விஸ்தீர்னம்.			தீர்வை.			எல்லைகள்.

தேதி. மணியக்கார்

கர்ணம்.

மேற்கண்ட விளம்பரமானது தண்டோராபோட்டு பிரசித்தம் செய்யப்பட்டதென்றும் கிராமசத்திரத்திலும் பிரஸ்தாபநிலங்களிலும் மேற்கண்ட தேதியில் ஒட்டப்பட்டதென்றும் உறுதியாய் சொல்லப்படுகிறது.

மணியக்கார் (கையெழுத்து.)

கர்ணம் ஷை

அண்டை நிலக்கார்களின் கையெழுத்து.

குறிப்பு.— ப. நமூனாவும் ஸீ. நமூனாவும் (தாலூகா தர்காஸ்து ரிஜிஸ்டர்கள், கிராமதர்காஸ்து ரிஜிடர்கள்), அனுஷ்டிக்கப்படாமல் நிறுத்திவிடப்பட்டன.

30. நெ. ஆர்டர் பிரகரணம். 6]

_______________ மூ-த்தில் _______________ தாலூகா _______________ கிராமத்தில், கிரமமாய் தர்காஸ்து கோடுக்காமல் சாகுபடிசெய்த நிலங்களைக்கண்ட டீ. மேமோராண்டம்.

இதுவும் 72, 73-வது பக்கங்களிலுள்ள ஏ. மிமோராண்டம் ஓரேமாதிரி தான் ; ஆனால் விண்ணப்பம் என்ற வார்த்தைக்குப்பதிலாக சாகுபடி என்று வாசிக்கவும்.

ஆர்டர் நெ. 30. பிரகரணம். 32]

செங்கற்பட்டு ஜில்லாவுக்காக ஏற்படுத்தப்பட்ட தர்காஸ்து விதிகள்.

1. தர்காஸ்துசெய்யப்படும் நிலமானது எந்ததாலூக்காவில் இருக்கிறதோ அந்ததாலூக்கா தாசில்தாரிடம் நேராயாவது கடிதமூலமாயாவது 10-11-79 315 நெ. போர்டார் புரோஸீடிங்குஸில் குறித்திருக்கப்பட்ட நமூனாப்பிரகாரம் தர்காஸ்துகள் கொடுத்துக்கொள்ளவேண்டியது.

2. பிரதி தர்காஸ்தையும் வரப்பெற்றுக்கொண்டதேதியை தாசில்தாரானவர் தர்காஸ்தின்பேரில்குறித்து எல்லாதர்காஸ்துகளையும் ஒரு ரிஜிஸ்டரில் பதிவுசெய்விக்கவேண்டியது ; தாசில்தார் தர்காஸ்துக்களை கிராம நவுக்கர்களுக்கு ஒரு தாக்கீதுடன் அனுப்பவேண்டியது. இந்த தாக்கீதின் அச்சு நமூனாவும் கிராமநவுக்கர்களால் பிரசித்தம் செய்யப்படவேண்டிய நோட்டீஸின் நமூனாவும்ஸப்ளைசெய்யப்படும்.

3. தாசில்தார்களிட தாக்கீதை வரப்பெற்றுக் கொண்டதின்பேரில் கிராமநவுக்கர்கள் நிலத்தைஅளவிட்டு தாசில்தாருக்கு கேதுவரி கணக்கனுப்பவேண்டியது ; தாசில்தாருக்குக்கணக்கு அனுப்பும் தேதியிலேயே நோட்டீஸையும் பிரசித்தம்செய்யவேண்டியது, இப்படிசெய்வதால் 30-நாள் வாயிதா எப்போது முடிவாகிறதென்று தாசில்தார் தெரிந்துகொள்ளக்கூடும் ; அந்த 30-நாளைக்குள் தர்காஸ்துவிஷயமாய் செய்யப்படும் ஆக்ஷேபணைகள் கேழ்க்கப்படும். நோட்டீஸ்பிரகாரம் குறிக்கப்பட்ட 30-நாளைய வாயிதாவானவுடனே 5 - வது விதியில்கண்டமாதிரியாய் தாசில்தார் தர்காஸ்தை பைஸல்செய்யவேண்டியது.

4. கிராமநவுக்கர்களால் பிரஸித்தம் செய்யப்படவேண்டிய நோட்டீஸில் தர்காஸ்து செய்யப்பட்டநிலத்தின் நெம்பர் விஸ்தீரணம் சுபாவம் முதலானவைகளைக் குறித்தெழுதுவதும்தவிர, நிலத்தைப் பைஸல்செய்யும்விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளஜனங்கள் 30-நாளைக்குள்ளாக தாசில்தார்முன்பாக ஆஜராய் அவர்களிட ஆக்ஷேபணைகளை சொல்லிக்கொள்ள வேண்டியதென்றும் கண்டெழுதவேண்டியது; இந்த நோட்டீசுகளை கூடுமானவரையில் எத்தினை மிராசுதார்களுக்கும் பட்டாதார்களாகிய பாயக்காரிகளுக்கும் ஸார்வுசெய்விக்கக்

கூடுமோ அத்தனை நபர்களுக்கும்ஸார்வு செய்வித்து அவர்களிடகையெழுத்தும் பெற்றுக்கொள்ளப்படவேண்டியது. நிலம் அல்லது நிலத்தின் ஓர்பாகம் எந்தெந்தகிராமத்தில் சம்பந்தப்பட்டதாயிருக்கிறதோ அந்த பிரதிகிராமத்திலும் பகிரங்கமான ஓர் இடத்தில் பிரதி நோட்டீஸின் நகல்ஒன்று ஒட்டப்படவேண்டியது; நோட்டீசைஎவ்வளவு பகிரங்கமாய் பிரசித்தம் செய்யக்கூடுமோ அவ்வளவுபகிரங்கமாய் பிரஸித்தம் செய்விக்கவேண்டியதானது கர்ணம், பட்டாமணிகார் இவர்களிடகடமை; மிராசுதார்கள் முதலானவர்களால் கையெழுத்துசெய்யப்பட்ட நோட்டீஸை தஸ்தாவேஜாக கரணம்(கணக்கன்) வைத்து வைக்கவேண்டியது.

5 தர்க்காஸ்து விஷயமாய் ஆக்ஷேபணை செய்ய யாரும் ஆஜராகாமவிருந்து தர்காஸ்துதாரனுக்கு நிலத்தை அடமானம் செய்துவிடுவதில் யாதொரு நியாயமான ஆக்ஷேபணைக்கும் இடமில்லையென்று கேதுவாரி கணக்கின் 9-வது கலத்தினால் ஏற்படும் பக்ஷத்தில் நோட்டீஸ்களில் கண்ட 30-நாளான பிறகு தாசில்தார் தர்க்காஸ்த்தை முடிவாய் பைஸல்செய்து நிலம் அடமானம் செய்யப்பட்ட ஆஸாமிக்கு அல்லது ஆஸாமிகளுக்கு காலக்கிரமத்தில் நிலத்தை ஒப்புக் கொடுக்கும்படி கிராமநவுக்கர்களுக்கு உத்திரவு செய்யவேண்டியது. அனுபவஉரிமையைப்பற்றி முக்கியமான தகரார்களுண்டானால் தாசில்தாரானவர் ஆஸாமிகளை வரவழைத்துதாமாய் விசாரணை செய்தபிற்பாடு அவர்களிடபாத்தியதைகளைப் பைஸல்செய்யவேண்டியது. அந்தபாத்தியதைகளைப்பற்றி முடிவாய் பைஸல் செய்வதற்கு அந்தஇடத்தில் போய் விசாரிக்கவேண்டியது. அவசியமாய்த் தோன்றினால் அப்படி அவசியமான விசாரணைசெய்து வரும்படி ரிவினியூ இனிஸ்பெக்டரை அனுப்ப தாசில்தாருக்கு ஸர்வாதிகாரமுண்டு.

6 மிராசுதார்கள் தர்காஸ்து கொடுத்துக் கொண்டால் அவர்களுக்குத்தான் முன்பாத்தியதையுண்டு; அதற்கு அடுத்த உயர்ந்த பாத்தியஸ்தார்கள் பட்டாதார்களாகிய பாயகாரிகள்; அவர்களால் செய்யப்படும் ஆக்ஷேபணைகளானது கிராமத்தில் குடியிராதவர்கள் சாகுபடி செய்திருந்தால் அவர்களுக்கு பாதகரமாக அங்கீகரித்துக் கொள்ளப்படும். மிராசுதார்கள் தர்காஸ்து கொடுத்துக் கொள்ளாவிட்டால் அவர்களிட பாத்தியதைகளைப்பற்றி ஆலோசனையில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மிராசுதார்கள் என்ற பாத்தியதையினாலேயே மிராசுதார்கள்பேரில் யாதொரு விஷயத்திலும் நிலங்கள் அடமானம் செய்யப்படமாட்டாது, ஒரே வகுப்பில் சேர்ந்த பாத்தியஸ்தார்கள் விஷயத்தில் 13-வது விதியை அனுஸரித்து தலாஷ் செய்யப்படும். யாதொரு குடியானவன் ராஜிநாமா கொடுத்துவிட்டபடியால் நிலமானது அனுபவிக்கப்படாமல்போய் அதினால் இப்போது அடமானம் செய்ய ஹேது உண்டாயிற்றோ அந்தக் குடியானவன் மிராசுதாரனாக விருந்தாலும் அல்லது அண்டைவயல்தாரனாகவிருந்தாலும் அல்லது கிராமத்தில் குடியிருக்கிறவனாக

இருந்தாலும் அவனுக்கு முதல் பாத்தியதை கிடையாது. சர்க்கார் பாக்கிக்காக ஏலம் போட்டதில் ஏலத்தில் கேட்கிறவர்கள் இல்லாமற் போனதால் கெவர்ண்மெண்டாரால் ஏலம் எடுக்கப்பட்டு இப்பால் சாகுபடிக்கு லாயக்காய் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலங்கள் விஷயமாய் மிராசுதார்களுக்கு மேலான பாத்தியதைகிடையாது.

7. நஞ்சைநிலங்கள்விஷயமாய் 5-காணிகளுக்கு மேற்படாமலும், புஞ்சை நிலங்கள் விஷயமாய் 15 - காணிகளுக்கு மேற்படாமலும், கொடுத்துக்கொள்ளப்படும் தர்காஸ்துகளை கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீஸரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமலே தாசீல்தார்கள் பைஸல் செய்யலாம்; ஆனல் ஸர்வே நெம்பர்களில் உட்பிரிவு செய்யப்படக்கூடாது. மேற்சொன்ன விஸ்தீரணத்துக்கு மேற்பட்டுள்ள தர்காஸ்துகள் டிவிஷனலாபீஸரிட உத்திரவுகளுக் கனுப்பப்படவேண்டும்.

8. முழு ஸர்வே புலங்களுக்கு அல்லது கலெக்டரால் கிரமமாய் அனுமதி செய்யப்பட்ட புலங்களின் உட்பிரிவுகளுக்கு மாத்திரமே தர்காஸ்துகள் பெற்றுக் கொள்ளப்படும்.

9. தாசீல்தார் செய்த தீர்ப்பின்பேரில் 30-நாளைக்குள் டிவிஷனலாபீஸருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; டிவிஷனலாபீஸரிட தீர்ப்புக்குமேல் அப்பீல் செய்துகொள்ள குறிக்கப்பட்டிருக்கும் வாயிதாவானது அந்த ஆபீஸரிட உத்திரவுக்கு நகல் அப்பீல் செய்யும்ஆஸாமிக்கு கொடுக்கப்பட்ட தேதி முதல் 3-மாதம்; ஆகிலும், இந்த விதியைத்தவிர்த்து நடக்கத் தகுந்தமுகாந்திரங்களிருப்பதாக தமக்குத் திருப்திகரமாய் ஏற்பட்டால் மேற்கண்ட 3-மீ வாயிதாவுக்குப் பின்னிட்டும் அப்பீலை அங்கீகரிக்கக் கலெக்டர்களுக்கு ஸர்வாதிகார முண்டு.

10. தாசீல்தார்கள் தங்களிட கீழ் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கிராம நவுக்கர்களிட நடவடிக்கைகளைத் தணிக்கை செய்யவும் பார்த்து வரவும் அவர்களை உற்சாகப்படுத்தவும் செய்விக்கவேண்டியது; தாசீல்தார்கள் தங்கள் வசத்திலிருக்கிற கிராமங்களில் பைஸலாகாமலிருக்கிற தர்காஸ்துகள் இன்னின்னவையென்று தெரிந்துகொண்டு அவைகளை ஜரூராய் பைஸல் செய்ய வேண்டியதுடன் தாங்களே நேராய் மேல்விசாரணை செய்யவேண்டிய தகரார்களை தாமதமன்றியில் தீர்க்கவேண்டியது.

11. தாசீல்தார்கள் தங்கள் தங்கள் தாலூக்காக்களில் தர்காஸ்து பைஸல் செய்யும் விஷயமாய் நடந்தேறிய வேலையைக் காண்பிக்கும் ஸ்டேட்மெண்டுகளை குறித்த நமூனப்பிரகாரம் மாதவாரியில் ஹுஸூருக்கு அனுப்பவேண்டியது.

12. இதுவரையில் வழக்கமாய் சாகுபடி செய்யப்படாத ஏரிஉள்வாய் நிலங்கள், களங்கள், ஸ்மசானங்கள், பிரேதங்களை புதைக்குமிடங்கள், மந்தைக்கரை நிலங்கள், ரஸ்தாக்கள் இவைகளை தர்காஸ்து அடமானம் செய்யக்கூடாது, கிராம நத்தங்களுக்காகக் கொடுத்துக் கொள்ளப்படும் தர்காஸ்துகள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது.

13. தர்காஸ்துதார்கள் சம பாத்தியஸ்தர்களாயிருக்கும் விஷயங்களில் அடியில்கண்ட அம்சங்களை ஆலோசனையில் எடுத்துக்கொண்டு அடியில்கண்டமாதிரி தலாஷ்செய்யலாம்:—

1-வது. அண்டைநிலதாரனுக்கு.
2-வது. முதல்தர்காஸ்து தாரனுக்கு.

14. கரம்புநிலங்களை தர்காஸ்து அடமானம்செய்யும்போது அடமானம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் சர்க்கார்தீர்வையில் ரூ-1-க்கு 2-அணு வீதம் மிராசுதார்களுக்குச் சேரவேண்டிய ஸ்வதந்தரத்தை செலுத்த விண்ணப்பதாரன் உடன்படுகிறதாகவிண்ணப்பத்தில் கண்டெழுதப்பட்டிருக்கிறதாவென்று கவனிக்கவேண்டியது. ஆகிலும் பட்டாக்களில் ஸ்வதந்தரத்தின் தொகையைக் கண்டெழுதப்படாமல் மிராசுதார்களால் (அவசியமானால் நியாயகோர்ட்டாரைகொண்டு) வசூல் செய்துகொள்ளப்படும்படி விட்டுவிடவேண்டியது.

31-நெ. ஆர்டர் பிரகரணம், 2.]

ரயத்துவாரி நிலங்களை ராஜினுமாகோடுத்து விடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தேதிகள்:—

	ஜில்லாக்களின்பெயர்.	நிலத்தை ராஜினுமாகொடுக்க வேண்டிய தேதி.
1-வது ஸர்கில்.	தென்கன்னடம் மலையாளம் நீலகிரி	எப்ரெல்மீ 30உ
2-வது ஷை	கஞ்சம் விசாகபட்டணம் கோதாவரி கிஷ்ணு	மேமீ 31உ
3-வது ஷை	அனந்தபுரம் பல்லாரி கர்நூல் கடப்பை நெல்லூர் வடஆற்காடு சேலம் கோயம்புத்தூர்	ஜூலைமீ 15உ
4-வது ஷை	செங்கல்பட்டு தென்னார்க்காடு திருச்சினப்பள்ளி தஞ்சாவூர் மதுரை திருநெல்வேலி	ஆகஸ்டுமீ 15உ

32-ம் நெ. ஆர்டர் பிரகரணம் 8.]

தீர்வை ஏற்படாத கரம்புநிலங்களை பைசல் செய்யும் விஷயமாய் ஏற்ப டுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்து ஏற்படுத்தப்பட்ட விளம்பரப்பத்திரிகை.

விளம்பரம். நே.

____________________ஜில்லா,

அடியில்கண்ட நிலங்கள் (கரம்பு நிலங்களை ஏலம்போடும் விஷயமாய் கவரண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட 6-3—1863. 476-நெம்பருள்ள விதி களை அனுஸரித்து.........................த்தில் ஏலம்போடப்பட்டு அடியில் ஷிடியூலில்கண்ட எல்கூறும் முதல்விலை அல்லது விலைகளுக்குமேல் உயர் ந்த விலைக்கு கேட்பவர்களுக்கு 18......ஞு............மீ......உ............ கிழமை..,...மணிக்கு ஏலத்தில் விற்கப்படுமென்று இதனல் தெரிவிக்கப்படு கின்றது.

2. மேற்கண்ட நிலங்களிலாவது நிலங்களின்கிழாவது அவைகளின் ஒரு பாகத்திலாவது உள்ள பொன்முதலான உலோகங்கள், நிலக்கரி, பொன்முத லான உலோகங்கள் அடங்கிய, அல்லது அடங்கியிருப்பதாக உத்தேசிக்கப் பட்ட, பாறை கல்,தற்காலம் இருக்கிற நிலக்கரிஅல்லது இனி எப்போதாவது கண்டுபிடிக்கக்கூடிய நிலக்கரி இவைகள் கவர்ண்மெண்டாரையே சேர்ந்த வைகள். தவிரவும் கவரண்மெண்டு உத்தியோகஸ்தர்கள், கவரண்மெண்டா ரிட காரியஸ்தர்கள் கவரண்மெண்டாரிட வேலைக்கார்ரர்கள் கவரண்மெண் டாரால் கிரமமாய் அதிகாரம்கொடுக்கப்பட்ட ஜனங்கள் எல்லாரும் குதிரை கள், இதர கால்நடைகள் வண்டிகள் நாலுசக்கர சாமான் வண்டிகள் இதரவித மான வண்டிகள் இவைகளுடனேயாவது இவைகளில்லாமலாவது மேற் சொன்ன நிலங்களிலும் நிலங்களின்பேரிலும் எக்காலத்திலும் சமீபவழியால் உட்பிரவேசிக்கவும் வெளியேபிரவேசிக்கவும் திரும்பிவரவும்ஸர்வசுதந்திரமும் பாத்தியமு முடையவர்கள். தவிரவும், அப்பேர்ப்பட்ட பொன்முதலான உலோகங்களை வேலைசெய்து எடுத்துக்கொண்டு போவதற்காக யந்திரங்கள் முதலானவைகளைவைத்து அப்பேர்ப்பட்ட நிலங்களின்பேரில் வேலைசெய்து வரவும், அப்பேர்ப்பட்ட நிலங்களிலுள்ள சுரங்கங்கள் குழிகள், செங்குத் தும் ஆழமுமான குழிகள், குவியல்கள், காற்றுபோக்குவழிகள், நீரோடைகள், இவைகளில் முழுகவும், வண்டியோட்டிப்போகவும் அவைகளைச் செய்வித்து உபயோகப்படுத்திக்கொள்ளவும், அவைகளிலிருந்து இறைக்கப்படும் ஜலம் முழுமையும் உபயோகப்படுத்திக்கொள்ளவும் அப்பேர்ப்பட்ட சுரங்கங்களிலி ருந்து அடையப்பட்ட உலோகங்கள் குப்பை கூளங்கள் முதலான வஸ்து க்களை வைத்துவைப்பதற்காக மேற்கண்ட நிலங்களின் மேற்பரப்பில் எந்த பாகத்தையாவது உபயோகப்படுத்திக்கொள்ளவும், பொதுவாய்ச் சொல்லுமி

டத்து அப்பேர்ப்பட்ட பொன் முதலான உலோகங்கள், நிலக்கரி இவைகளை சேகரித்து வேலைசெய்து அவைகளை வியாபாரத்திற்கு உபயோகப்படுத்துவதற்கு தகுதியான அல்லது அவசியமான காரியங்கள் அல்லது விஷயங்களை செய்யவும் கவரண்மெண்டாருக்கு ஸர்வ ஸ்வதந்திரமுண்டு; அப்பேர்ப்பட்ட நிலங்களில் வழியேற்படுத்தி அவைகளை உபயோகித்துக்கொள்வதாலாவது அப்பேர்ப்பட்ட யந்திரம் முதலானவைகளை உண்டாக்கி உபயோகப்படுத்தி வருவதாலாவது அப்பேற்பட்டபாத்தியதைகள் பூராவையுமாவது யாதொருபாகத்தையாவது அனுபவித்து வருவதால் (நிலத்தை) விலைக்கு வாங்குகிறவனுக்கும் அவனிட சுதந்தரவாளிகளுக்கும் பிரதி நிதிகளுக்கும் காரியஸ்தர்களுக்கும் நேரிடக்கூடிய நஷ்டங்களுக்கெல்லாம் அவர்களுக்கு கவரண்மெண்டார் கம்பன்சேஷன் (பிரதிபணம்) கொடுப்பார்கள்.

3. அப்பேர்ப்பட்ட நிலங்களில் எந்தபாகமாவது குடியிருக்கும் வீடு தோட்டம் வேலிகட்டியதோட்டம் கனிவர்க்கத்தோட்டம் இவைகளுள்ளதாக இருந்தால் அப்பேர்ப்பட்டபாகத்தில் யாதொரு சுரங்கம் குழி செங்குத்தான குழி முதல்லானவைகள் வெட்டவாவது மேலே சொல்லப்பட்ட பாத்தியதைகளில் எதையாவது அனுபோகிக்க கவரண்மெண்டாருக்கு ஸ்வாதீனமில்லை.

4. பிரஸித்தம் செய்யப்பட்டிருக்கிற நிலஏலத்திற்கு விரோதமான பாத்தியதையுடையவர்களெல்லாரும் மேற்கண்டதேதியிலாவது அதற்குமுன்னிட்டாவது அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடத்தில் சொல்லிக்கொள்ளும்படி இதனல் தெரிவிக்கப்படுகிறது.

ஏலம் போடப்படுகிற நிலங்களின் ஷிடியூல்.

ஜில்லா.	தாலூகா.	கிராமம்.	லாட் நெ.	பெயர் ஏதாவது இருந்தால் அதுவும் எல்லைகளும்.	விஸ்தீர்ணம்.	ஏலத்தில் முதவில் கூறப்படும் விலை.

5. அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம்போடப்படும்:—

ஏலத்தின் நிபந்தனைகள்.

குறிப்பு:—முதல்பாகம் 109-வது பக்கத்தில் 16-வது பாராவில் கண்ட நிபந்தனைகளைப்பார்க்கவும்.

ஆர்டர் நெ. 32 பிரகாணம். 15]

தீர்வை ஏற்படாத கரம்பு நிலங்களைப் பைசல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்து செய்யப்பட்ட சாஸனங்கள்.

ஏ. சாஸனம்.

நெ.

ஆலோசனை சபையிலுள்ள ரைட் ஹானரேபில் (மகாசிறப்புற்றோங்கிய) விக்டெரி ஆப்ஸ்டேட் பார் இந்தியா அவர்கள் ஒருகக்ஷிக்காரராகவும் ஜில்லா......................வி லுள்ள..........................என்பவர் மற்றொரு கக்ஷிக்காரராகவும் 18 ஞு மீ தேதியில் நிறைவேற்றப் பட்ட இந்த அதிகாரப்பத்திரம்; ஆலோசனை சபையிலுள்ள கனம்பொருந்திய; ஸெண்ட் ஜார்ஜ்கோட்டை (மதராஸ்) கவர்னரவர்களால் 1863ஞு மார்ச்சிமீ 5வ 476-நெம்பருள்ள உத்திரவில் தீர்வை ஏற்படாத கரப்பு நிலங்களை விற்பனை செய்யும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்து ....ஜில்லா கலெக்டரானவர் இதனடியில் கண்டெழுதப்பட்ட ஷிடியூலில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிற நிலத்தை 18 ஞு மீ உயில் பகிரங்கமான எலத்தில் கூறியபடியாலும்,

அப்பேர்பட்ட எலத்தில் ஷை.......................என்பவர் ஷை நிலத்தை.......................ரூபாய்க்கு எலத்தில் கேட்டு எலத்தில், கேட்டவர்களுக்குள் உயர்ந்த விலைக்கு கேட்டவர் அவராதலால் ஷை விதிகளில் கண்ட நிபந்தனைகள் ஷரத்துகள் பிரகாரம் விலைக்கு வாங்கினவராக பிரசித்தப் படுத்தப்பட்டபடியினாலேயும், இந்த சாஸனம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக ஷை ....என்பவர் ஷை கலெக்டரிட கஜானாவில் மகத்துவமுள்ள மஹாராணியிட இந்தியா கவர்ண்மெண்டாருக்கு செல்லாகரூபா......துகை பூராவும் செலுத்தி விட்டபடியாலேயும், ஷை ......என்பவரால் மேற்கண்டபடி செலுத்தப்பட்ட ஷை துகை...ரூபாய்க்குஈடாக, (அந்த துகையைப் பெற்றுக் கொண்டதற்கு இதுவே ரசீது),...........ஜில்லா...........தாலூக்கா...........கிராமத்திலிருக்கிற.....................இங்கிலீஷ் எக்கர்களடங்கிய நிலத்தை ஆலோசனை சபையிலுள்ள விக்டெரி ஆப்ஸ்டேட் அவர்கள் ஷை.......... ...என்பவருக்கு விற்பனை செய்து, பராதீனப்படுத்தி சுவாதீனப்படுத்தி ஸ்வதந்தரம் செய்கிறார்; இதனடியில் கண்ட ஷிடியூலில் அந்த நிலத்திற்கு செக்குபந்தி கட்டியிருக்கிறது, இத்துடன் சேர்த்திருக்கிறபடத்தில் அந்த நிலம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது; அந்த நிலத்தின் பேரில் கட்டப்பட்டிருக்கிற கட்டடங்கள் (எதாவதிருந்தால்) அவைகளும், வழிகளும் பாதைகளும் நிரோட்டம் (கால்வாய்) கிணறுகள் வேலிகள் (குழிகள்) அந்த நிலத்தினாலுண்டான வசதிகள் ஆதாயங்கள் பாத்தியதைகள் அந்த நிலத்துடன் சேர்ந்த வேறெவ்விதமானவைகளும் அது சம்பந்தமான வீடு

வாசல்களும் அவைகளில் பிரதிபாகம் அல்லது எதாவது ஒரு பாகமும் ஸ்வாதீனப்படுத்தப்பட்ட ஷை நிலத்துடன் சேர்ந்தவைகள்; ஆனால் இதினால் சாஸனம் செய்யப்பட்ட நிலம் வகையருக்களுக்கு சமீபமான சர்க்கார் நிலங்களிலும் சொந்த ஜனங்களிட நிலங்களிலும் தற்காலத்திலும் மாமூலாயும் இருக்கப்பட்ட பாத்தியதைகள் சாஸனம் செய்யப்பட்டதுடன் சேர்க்கப்படாமல் ரிஸர்வுசெய்துவைக்கப்படும்; மேலும், இதனால் சாஸனம் செய்யப்பட்ட நிலம் வகயருக்களிலோ அவைகளுக்கு அடியிலோ முன்னடியாகவே கண்டெடுக்கப்பட்டாவது இனி கண்டெடுக்கப்படக் கூடியதாவதாகிய நிலக்கரி அல்லது பொன்முதலாகிய உலோகங்கள் அடங்கியவைகளாவது அடங்கியிருப்பதாய் உத்தேசிக்கப் பட்டவைகளாகவாவது இருக்கிற பாதை அல்லது கற்கள், நிலக்கரி பொன்முதலாகிய உலோகங்கள் எல்லாம் ஆலோசனை சபையிலுள்ள ஷை ஸிக்ரடெரி ஆவ்ஸ்டேட் அவர்களுக்கும் அவருக்கு பின்னிட்டு அந்த உத்தியோகத்துக்கு வருகிற அவர்ளிட காரியஸ்தர்களுக்கும் ரிஸர்வு செய்யப்பட்டவைகளாகும்.

தவிரவும் கவரண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள், கவரண்மெண்டாரிட காரியஸ்தர்கள், கவரண்மெண்டாரிடவேலைக்காரர்கள் கவரண்மெண்டாரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட ஜனங்கள் எல்லாரும் குதிரைகள் இதர கால்நடைகள் வண்டிகள் நாலுசக்கர சாமான்வண்டிகள் இதரவிதமான வண்டிகள் இவைகளுடனேயாவது இவைகளில்லாமலாவது மேற்சொன்ன நிலங்களிலும் நிலங்களின்பேரிலும் எக்காலத்திலும் சமீபவழியால் உட்பிரவேசிக்கவும் வெளியே பிரவேசிக்கவும் திரும்பிவரவும் ஸர்வசுதந்திரமும் பாத்தியதையும் உடையவர்கள். தவிரவும் அப்பேர்ப்பட்ட பொன் முதலான உலோகங்களை வேலைசெய்து எடுத்துக்கொண்டு போவதற்காக யந்திரங்கள் முதலானவைகளை அப்பேர்ப்பட்ட நிலங்களின்பேரில் உண்டாக்கி வேலைசெய்துவரவும் அப்பேர்ப்பட்ட நிலங்களிலுள்ள சுரங்கங்கள் குழிகள் செங்குத்தும் ஆழமுமான குழிகள், குவியல்கள், காற்று போக்குவழிகள், நீரோடைகள் இவைகளில் முழுகவும் வண்டியோட்டிப் போகவும் அவைகளைச் செய்வித்து உபயோகப் படுத்திக்கொள்ளவும் அவைகளிலிருந்து இறைக்கப்படும் ஜலம் முழுமையும் உபயோகப்படுத்திக்கொள்ளவும், அப்பேர்பட்ட சுரங்கங்களிலிருந்து அடையப்பட்ட உலோகங்கள், குப்பை கூளங்கள் முதலான வஸ்துக்களைவைத்து வைப்பதற்காக மேற்கண்ட நிலங்களின் மேற்பரப்பில் எந்தபாகத்தையாவது உபயோகப்படுத்திக் கொள்ளவும் பொதுவாய்ச் சொல்லுமிடத்து, அப்பேர்ப்பட்ட பொன்முதலான உலோகங்கள் நிலக்கரி இவைகளை சேகரித்து வேலைசெய்து அவைகளை வியாபாரத்திற்கு உபயோகப்படுத்துவதற்குத் தகுதியான அல்லது அவசியமான காரியங்கள் அல்லது விஷயங்களை செய்யவும் கவர்ன்மெண்டாருச்கு ஸர்வஸ்வதந்தரமுண்டு; அப்பேர்ப்பட்ட நிலங்களை வழியேற்படுத்தி அவைகளை உபயோகித்துக் கொள்வதாலாவது அப்பேர்பட்ட யந்திரம் முதலானவைகளை உண்டாக்கி உபயோகப்

படுத்தி வருவதாலாவது அப்பேர்ப்பட்ட பாத்தியதைகள் பூராவையுமாவது யாதொரு பாகத்தையாவது அனுபவித்து வருவதால் (நிலத்தை) விலைக்கு வாங்குகிறவனுக்கும் அவனிட சுதந்தர வாளிகளுக்கும் பிரதி நிதிகளுக்கும் காரியஸ்தர்களுக்கும் நேரிடக்கூடிய நஷ்டங்களுக்கெல்லாம் அவர்களுக்கு கெவர்ன்மெண்டார் கம்பன்சேஷன் (பிரதிபலன்) கொடுப்பார்கள்.

அப்பேர்பட்ட நிலங்களில் எந்தபாகமாவது குடியிருக்கும் வீடு தோட்டம் வேலிகட்டிய தோட்டம் கனிவர்க்கத் தோட்டம் இவைகளுள்ளதாக இருந்தால் அப்பேர்ப்பட்ட பாகத்தில் யாதொரு சுரங்கம்குழி செங்குத்தான குழி முதலானவைகளை வெட்டவாவது மேலே சொல்லப்பட்ட பாத்தியதைகளில் எதையாவது அனுபோகிக்க கவர்ண்மெண்டாருக்கு ஸ்வாதீனமில்லை.

இதனால் சாஸனம்செய்யப்பட்ட மேற்படி நிலமும் அதிலுள்ளகட்டடம் முதலானவைகளும் மேற்படி. என்றவனுக்கும் அவனிடசந்ததிவாரஸ்தார்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் காரியஸ்தர்களுக்கும் அனுபோகத்துக்குவிடப்படும் அப்படி அனுபவித்து வருவதற்காக மகாராணியவர்களுக்குச் சேரவேண்டிய குயிட்ரெண்டு தீர்வை நிலத்தீர்வை முதலானவைகளைச் செலுத்தவேண்டியதில்லை, ஆகிலும் இப்போது ஏற்பட்டிருக்கிற அல்லது இனிமேல் சட்டநிர்மாணத்தினால் ஏற்படக்கூடிய எல்லாபொதுவரிகளையும் அந்தந்த பிரதேசத்தில் விதிக்கப்படும் (லோகல்) வரிகளையும் செலுத்தவேண்டியது; இதனடியில்கண்ட உடன்படிக்கைக்கும் அவர்கள் உட்படவேண்டியது; இதனால் சாஸனம் செய்யப்பட்ட நிலம்வகயறாக்களைச் சுற்றிலும் தன்னிட அல்லது தங்களிட சொந்தசெலவில் ஸ்திரமான எல்லைக்குறிகளை உடனே நடவும் இனி எப்போதும் அவைகளைப்பாதுகாத்து வரவும் மேற்படி.................. அவரிட ஸந்ததி வார்ஸ்தார்களும் பிரதிநிதிகளும் காரியஸ்தர்களும் மேற்படி ஆலோசனைசபையிலுள்ள ஸிக்ரிடெரி ஆப்ஸ்டேட் அவர்கள் அவர்களுக்கு பின்னிட்டு அந்த உத்தியோகத்துக்கு வருகிறவர்கள் அவர்களிட காரியஸ்தர்கள் இவர்களிடம் இதனால் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள்.

இதற்கு சாக்ஷியாக மேற்படி ஆலோசனைசபையிலுள்ள ஸிக்ரடெரி ஆப் ஸ்டேட் அவர்களுக்காக வேலைநடத்திவருகிற ஆலோசனைசபையிலுள்ள கனம்பொருந்திய ஸெண்ட்ஜார்ஜ் கோட்டை (மதராஸ்)கவர்னர் அவர்களிட உத்திரவுபடி சென்னை கவர்ன்மெண்டாருக்கு..................டிபார்ட்மெண்டு ஸிக்ரடெரியானவரும், மேற்படி.....................ரும் மேற்படிவருஷம் மேற்படிதேதில் தங்கள் தங்கள் கையொப்பமிட்டார்கள்.

மேற்கண்ட சாஸனத்தில் பிரஸ்தாபிக்கப்படலான ஷிடியூல்.

ஜில்லாவும் ரிஜிஸ்டிரேஷன் ஜில்லாவும்.	ரிஜிஸ்டிரேஷன்ஸப்ஜில்லா.	கிராமம்.	எதாவது பெயர்கொடுக்கப்பட்டிருந்தால் அந்தபெயரும் எல்லைகளும்.	விஸ்தீர்ணம்.

........................முன்பாக }
ஷை.........................ரால் }
கையெழுத்து செய்யப்பட்டது }

........................முன்பாக }
......ஈஸ்ட் இந்தியா தீவுகளிலுள் }
..................தில்..........ஷை }
ரால் கையெழுத்து }
..........செய்யப்பட்டது...... }

ஷை..................ரிடமிருந்து }
அவரால் செலுத்தப்படவேண் }
டிய ஷை விக்கிரயத்துகை ரூபா }
...பெற்றுக்கொள்ளப்பட்டது. } ரூபா.........

சாக்ஷி ஜில்லாவின் கலெக்டர்.

ஆர்டர் நெ. 32. பிரகரணம் 16]

தீர்வை எற்படாத கரம்புநிலங்களை விற்பனை செய்வதற்காக எற்படுத்தப்பட்டிருக்கிற விதிகளை அனுஸரித்து ஒத்துக்கொள்ளும்பத்திரிகை.........

ஸீ. நமூனு (1)

..................ளுள்ள......என்று பெயருடையநான், 18......ளு.........
.........மீ......உ ......நெம்பருள்ள இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற நோட்டீஸில் பிரஸ்தாபிக்கப்படலான எலத்திற்கு நான்போயிருந்தேனென்றும் அதில் குறித்துச்சொல்லப்பட்ட நெ............துண்டு நிலத்தை............
...........ரூபா......க்கு எலம்கேட்டேனென்றும் மேற்படி நோட்டீஸில்

கண்ட ஏலத்தின் நிபந்தனைக்குட்பட்டு அந்த விலைக்கு வாங்கினவன் நான் தானென்று ஸ்தாபிக்கப்பட்டதாயும் இதனால் ஒத்துக்கொள்ளுகிறேன்; நான் ஏலத்தில்கேட்டவிலையின் ஒருபாகமாக 100-க்கு 10-வீதம் டேவணி ரூபா............ஐ......................ஜில்லா கலெக்ட்டரிடம் செலுத்திவிட்டேன்; பாக்கித்துகையை இன்றைய தேதி முதல் 30-நாட்களுக்குள்ளாக கொடுக்க இஷ்டப்பட்டிருக்கிறேன்.

ஆயிரத்தி எண்ணூற்றி..............ஞு..................மீ ....தேதியாகிய........................தினம்.

சாக்ஷி *

கையெழுத்து.

(2). நமூனா. டீ.

(முன் நமூனாவில் முதல் 8-வரியைப்பார்க்க.)

பாக்கித்துகையை வருஷம் 1க்கு.................ரூபாயாக 3-வருஷத் தவணையிலும்............ஆலோசனை சபையிலுள்ள கனம்பொருந்திய கவர்னர் அவர்களால் 1863ஞு மார்ச்சுமீ 5உயில் 476 நெம்பருள்ள ஆர்டரில் பிரஸ்தாபிக்கப்படலான விதிகள்பிரகாரம் வருஷம் 1-க்கு 100-க்கு 6-ரூபாயாக அதற்குள்ளவட்டியையும் சேர்த்து செலுத்த இஷ்டப்படுகிறேன். 18......ஞு ....மீ ......உ

சாக்ஷி *

கையெழுத்து.

ஏலத்தில் விலைக்குவாங்கினவனாலும் கலெக்டராலும் கையெழுத்து செய்யப்பட்ட நோட்டீஸின் ஓர்நகலை ஸீ. நமூனாவுக்கும் டீ. நமூனாவுக்கும் சேர்ப்பிக்கவேண்டியது.

குறிப்பு.—துகையை எழுத்தால் எழுதுக.

---

*சாக்ஷிக்காரன் தன்பெயருக்கு கீழாக தன்னிட இருப்பிடம் தன்னிட உத்தியோகம் முதலான விபரத்தை எழுதவேண்டியது.

32-ம் நெ. ஆர்டர் பிரகரணம். 23]

தீர்வை ஏற்படாத காம்பு நிலங்களை பைஸல்செய்யும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்து நிலங்களை ஏலத்தில் முதல் கூறவேண்டிய விலை.

ஜில்லாக்கள்.	பாரஸ்டு (காட்டு) நிலம்.	வெட்டவெளிநிலம்.
கஞ்சம்	ஏகரா 1-க்கு ரூபா $2\frac{1}{2}$	ஏகரா 1-க்கு ரூபா 5
விசாகப்பட்டணம்	,, 5	எல்லாவித நிலத்துக்கும்.
கடப்பை	,, 5	ஏகரா 1-க்கு ரூபா $2\frac{1}{2}$
கர்நூல்	பஞ்சுவிளைகிற கறுப்புமண் பூமி 10	மற்றவிதமான மண்ணுள்ள நிலங்களுக்கு ரூபா 5
நல்ல மலை	ஏகரா 1-க்கு ரூபா 5	
வட ஆற்காடு	,, 5	ஏகரா 1-க்கு ரூபா $2\frac{1}{2}$
திருச்சினுப்பள்ளி	,, 5	,, $2\frac{1}{2}$
மதுரை, பழனியில்	,, 10	,, 5
,, சமபூமிகளில்	,, 5	,, $2\frac{1}{2}$
திருநெல்வேலி, மலைநாடுகளில் ...	,, 10	,, 5
,, சமபூமிகளில் (எல்லாவிதமும்)...	,, $2\frac{1}{2}$	
கோயம்புத்தூர்	,, 5	,, $2\frac{1}{2}$
சேலம் (சேர்வராயமலை நீங்கலாக).	,, 5	,, 5
தென்கன்னடம் (மலைநாடுகள்) ...	,, 10	,, $2\frac{1}{2}$
,, சமபூமிகளில் ...	,, 5	,, $2\frac{1}{2}$
கோதாவரி *	} ,, $2\frac{1}{2}$	எல்லாவிதங்களிற்கும்.
கிருஷ்ணு		
நெல்லூர்	,, 5	ஏகரா 1க்கு ரூபா $2\frac{1}{2}$
தென்னார்க்காடு	,, 5	,, $2\frac{1}{2}$
மலையாளம்	*பாணம் நிலம் ஏகரா 1-க்கு 5	வைநாடு நீங்கலாக சமபூமியாக இருக்கப்பட்ட நிலங்களுக்கு ஏகரா 1-க்கு ரூபா 10

*முகத்துவாரத்திலுள்ள நிலங்கள் இந்த விதிகளிருந்து விலக்கப்பட்டிருக்கின்றன.

ஆர்டர் நெ. 93 பிரகரணம். 2]

I. கிராம ஊழியத்திற்காக ஏற்படுத்திய பண்டு.

1. அடியில்கண்டவிதிகளும் கணக்கு நமூனுக்களும் கிராமநவுக்கர்களுக்கு மாதாந்தர சம்பளம் ஏற்பட்டிருக்கிற ஜில்லாக்களிலெல்லாம் சம்பந்தப்பட்டவை.

2. பிரதிகிராமத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட கிராமசிப்பந்திகளை தாலூகாவில் ஏ. நமூனுபிரகாரம் ஒருரிஜிஸ்டரில் பதிவுசெய்து வைத்துவைக்கவேண்டியது. அந்தசிப்பந்திகளில் பின்னிட்டுசெய்யப்பட்ட மாறுதல்கள்பக்கத்தில் (மாறுதல்கள்) அனுமதி செய்யப்பட்டதேதியையும் நெம்பரையும்கண்டெழுதி தாசில்தார் இனிஷல்செய்யவேண்டியது. பலானபலானசம்பளத்தில் பலானபலான நவுக்கர்களின் மொத்தசங்கியை இவ்வளவென்று காண்பிக்கும்பொருட்டு இந்தரிஜிஸ்தருக்கு ஒரு உள்ளடக்கமுமிருக்கவேண்டியது, (அனுபந்தத்தில்கண்ட நமூனுவைப்பார்க்க).

1-வது நமூனுப்பிரகாரம் ஒரு கணக்குபுஸ்தகம் தயாரித்து வைத்துவைக்கவேண்டியது. பிரதி கிராமத்திற்கும் போதுமான பக்கங்கள்விட்டு அதை ஒருபுஸ்தகமாக தைத்துவைக்கவேண்டியது. ஒவ்வொருபக்கத்திற்கும் நெம்பர்கொடுத்து தாசில்தாரிடமுத்திரையால் முத்திரை செய்யப்படவேண்டியது; முதல் 3 கலங்களையும் ஏ. ரிஜிஸ்டரை வைத்துக்கொண்டு பூர்த்திசெய்யவேண்டியது. கிராமங்களை எழுத்து வரிசையாய் பதியவேண்டியது.

3. பிரதி மாஸ முதலிலும் முன் மாதத்தில் வாஸ்தவமாய் வேலைபார்த்துவந்த கிராமசிப்பந்திகளின் சம்பளப்பட்டிகள் 2, நெ. நமூனுப்பிரகாரம் தயாரிக்கப்பட்டு தாலூகாகச்சேரிக்கு அனுப்பப்படும், அவ்விடத்தில் அந்த சம்பளப்பட்டிகள் தணிக்கைசெய்யப்பட்டு சம்பளம் பட்டுவாடாசெய்யும்படி எழுதி அதில்தாசில்தார் (அல்லது தாசில்தார் இல்லாமற்போனுல் தாலூகா சிரஸ்தேதார்) கையெழுத்துசெய்து தாமதமன்றியில் கிராமங்களுக்கு வாபஸ் அனுப்பப்படும் சம்பளப்பட்டிகள் மறுபடி கிராமங்களிலிருந்து திரும்பிவரும்வரையிலும் தாலூகா கணக்குகளில் செய்யப்பட்டிருக்கும்பதிவு தாலூகா கஜானுவிலிருந்து பட்வாடா செய்யப்படும் வழக்கப்பிரகாரம் பட்வாடா செய்ததற்குபோதுமான ஆதாரப்பத்திரிகையாக (வவுச்சரா) பாவிக்கப்படும்; யாதொரு மாதத்தில் பெற்றுக்கொள்ளப்படாமலிருக்கிற துகைகள் ஏதாவதிருந்தால் என்னஸந்தர்ப்பங்களினுல் அவைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் போய்விட்டனவோ அவைகளைச் சுருக்கமாய்எடுத்துச்சொல்லி; ஷராகலத்தில் அந்ததுகையை குறிக்கவேண்டியது; சம்பளத்தைப் பெற்றுக்

கொள்ளப் பின்னிட்டு பில்கள் ஆஜர்செய்யப்படும்போது ஷரூகலத்தில் குறிப்பிட்டிருக்கிறவைகளைப் பார்வையிடவேண்டியது.

4. (சம்பளப்பட்டி அல்லது) பராவர்த்தானது பெரும்பான்மையாய் கிராமத்தின் வசூல் துகைகளிலிருந்து பட்வாடா செய்யப்படும்; இந்த விஷயத்தில் சம்பளம் பெற்றுக்கொண்ட பிற்பாடு சம்பளப் பட்டியில் கையெழுத்து செய்யவேண்டிய கலத்தில் கையெழுத்துசெய்து சம்பளப் பட்டியை கிராம இருஸாலுடனே தாலூகாவுக்கு அனுப்பவேண்டியது, அப்படி பட்வாடா செய்யப்பட்ட துகையை கிராமத்திய (13. நெ. 15. நெ.) காஷ் கணக்குகளில் மொத்த வசூலிலிருந்து வஜாசெய்ததாக காண்பிக்கவேண்டியது. கிராமங்களில் வசூல் நின்றுபோயிருப்பதாலாவது அல்லது வசூல் இல்லாமலிருப்பதால்வது பாங்கியிலிருந்து பணம் வாங்கிக் கொள்ளவேண்டிய போதெல்லாம் மார்ஜனில் கண்டமாதிரியாக அச்சிட்ட ஒரு செக்பிறப்பிக்கப்படவேண்டியது; பட்வாடா செய்யப்படவேண்டிய துகையை எண்ணாலும் எழுத்தாலும் காண்பிக்க வேண்டியது; அஸல் சம்பளப்பட்டியானது கிராம நவுக்கர்களுக்கு வாப்ஸ் செய்யப்படும், கிராம நவுக்கர்களானவர்கள் சம்பளப் பட்டியில் அதற்காக என்று விடப்பட்டிருக்கிறகலத்தில் பட்வாடா செய்தவர்களிட கையெழுத்தை வாங்கி மாத ஆகையருக்குள் சம்பளப்பட்டிகளை மறுபடி தாலூகாகச்சேரிக்கு திருப்பி அனுப்பவேண்டியது, கவர்ன்மெண்டு கஜாணவிலிருந்து பணம் பட்வாடா செய்யப்படும் விஷயங்களில் பணம் பட்வாடா செய்யும்படி சம்பளப்பட்டியில் இண்டார்சு செய்யலாம்; பலான மாதத்திய சம்பளமானது அதற்கு முன்மாதத்திய சம்பளப்பட்டியில் கிரமமாய் வரவுவைத்து அதை தாசில்தாரருக்கு வாப்ஸ் அனுப்பும் வரையில் பாஸ் செய்யப்பட மாட்டாது.

...............கிராம சிப்பந்திகளிட
.........மாதச்சம்பளம்ரூ......யை
தயவுசெய்து கொடுங்கள்.

5. அசல் சம்பளப்பட்டியில் பட்டுவாடா பெற்றவன் கையெழுத்து செய்து, சேரவேண்டிய துகைக்கு பில் தயார் செய்யப்பட்டும் பட்டுவாடா செய்யப்படாமலுமிருக்கிற துகைக்கு விபரங்களை ஷராகலத்திலும் கண்டு, அசல் சம்பளப்பட்டியானது தாலூகாகச்சேரியில் மறுபடியும் பெற்றுக் கொள்ளப்பட்டதின்மேல் பட்வாடா செய்யப்பட்ட துகைக்கு விவரங்களை 1-நெ. நமூனவில் மாதவாரிகலத்தில் பதிந்து அவ்விடத்தில் தாலூகா சிரஸ்தேதார் இனிஷல் செய்யவேண்டியது. பில் தயார்செய்யப்பட்டும் பட்டுவாடாவாகாமலு மிருக்கிற சம்பளத்திற்கு விபரங்கள் அந்த நமூனவில் பின்புறத்தில் காணப்படும்.

6. நிலுவைசம்பளத்திற்கு பிரத்தியேகமான சம்பளப்பட்டிதயார் செய்யப்பட்டும்; எவ்வளவு காலத்தியசம்பளம் பாக்கியிலிருக்கிறதோ அதின் விவரங்

களையும், எந்தமாஸங்களிலாவது நிலுவைசம்பளமானது கஜானாவில்திரும்ப செலுத்தப்பட்டிருந்தால் அதின்விபரங்களையும் ஜாக்கிரதையாய் கண்டெழுத வேண்டியது. பட்வாடா செய்யப்படாமலும் பெற்றுக்கொள்ளப்படாமலு மிருக்கிற சம்பளங்கள்விஷயமாய் 16-ம் நெ. நமூனாவின் பின்பக்கத்திற்கண்ட விவரங்களை அனுஸரித்து சம்பளப்பட்டிகள் தாலூகாவில் தணிக்கைசெய்யப்படும், ஏற்றுக்கொள்ளப்படும் துகைகள் 1-ம் நெ. நமூனாவில் அஸல்மொத்தத்திற்கு கீழ்பதியப்படும் பிரதிவிஷயத்திலும் தாலூகா சிரஸ்தேதார் கையெழுத்துசெய்யவேண்டியது இப்படிசெய்யப்பட்ட பதிவுகளையும் நமூனாவின் பின்புறத்தில் கண்டவிபரங்களையும் பார்த்துத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இரண்டுஇடங்களில் சிலஎழுத்துக்குறிகள் போடவேண்டியது ; கிராம வசூலிலிருந்து சம்பளம் பட்டுவாடாசெய்யப்படும் விஷயங்களில் சம்பந்தப்பட்டநபர்களுக்கு வாஸ்தவ்யமாய் பட்வாடா செய்யப்பட்ட துகைகள் மாத்திரம் பதியப்படும். ஆகையால் இந்த விஷயங்களில் பட்வாடாவாகாதசம்பளங்கள் விஷயமாய் துகைகளில் கழித்துக்காண்பிக்கவேண்டிய அவசியமில்லை. தாலூகாகஜானாவிலிருந்து நேராய் பட்வாடாசெய்யப்படும், மற்ற விஷயங்களிலோ, கஜானாவிலிருந்து, வாஸ்தவ்யமாய் பட்வாடாவான துகைகள் கணக்கின்பதிவினால் காண்பிக்கப்படும் ; பணம் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் வராமற்போவதாலாவது வேறேகாரணங்களை முன்னிட்டாவது பட்வாடாவாகாமலிருக்கிற சம்பளங்கள் "..........த்தில் பட்வாடாவாகாமலிருக்கிற சம்பளத்திற்காக கழிக்கவேண்டியது" என்பதற்கு நேராய் காண்பிக்கப்படும். எந்தமாசங்களுக்குசம்பளங்கள் சேரவேண்டியிருக்கின்றனவோ அந்தந்த மாசங்களுக்காக விடப்பட்டிருக்கும் பக்கங்களில் பட்வாடாவானதாக எழுதவேண்டியதென்று ஜாக்கிரதையாய் ஞாபகத்தில்வைக்கவேண்டியது. பணம் ரீபண்டுசெய்யப்படுவதால் பின்னிட்ட பில்களில் கழித்துவிடப்படும் ஜாஸ்திதுகைகளுக்கும் சம்பளம் பெற்றுக்கொள்ளப்படாமலோ பட்வாடாசெய்யப்படாமலோ யிருக்கிற துகைகளுக்காக தயாரிக்கப்பட்ட சப்ளிமெண்டில் பில்களுக்குகொடுக்கப்படும் துகைகளுக்கும் மேலே சொன்ன குறிப்பானது சம்பந்தப்பட்டது. கிராமஊழியத்திற்காக இனும் நிலங்கள்விடப்பட்டிருந்து அந்த இனும் நிலங்கள் பின்னிட்டு சர்க்காரால் வசப்படுத்திக்கொள்ளப் பட்டதிற்குபதிலாக கிருமநவுக்கர்களுக்குசம்பளம் ரொக்கத்தில் கொடுக்கப்படும் விஷயங்களில் (உதாரணம் வடஆற்காடு ஜில்லாவின் போல்) 3-வது கலம் பூர்த்தி செய்யப்படமாட்டாது. முன்வருஷத்திய ஜமாபந்தியில்நிர்ணயிக்கப்பட்டபடி துகைகள் அந்தந்தபக்கங்களில் பதிவுசெய்யப்படும் ; பட்டுவாடா செய்யும்விஷயத்தில் அந்ததுகைகள்தான் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட சம்பளங்களாக பாவிக்கப்படும். அப்படி பதிவுசெய்யப்பட்ட துகைகளுக்குக்கீழ் கிராமவசூலிலிருந்தாவது தாலூக்கா கஜானாவிலிருந்து நேராகவாவது பட்டுவாடா செய்யப்பட்டதுகைகள் சிகப்புஇங்கியினால் ஸ்திரமாய் ஏற்படுத்தப்பட்ட சம்பளங்கள் விஷயங்களில் பதிவுசெய்யுமாதிரியாகவே பதிவு செய்யப்படும்.

7. ஒருவருஷத்திற்கு மேற்பட்ட காலமாய் பெற்றுக்கொள்ளாமலே இருக்கப்பட்ட சம்பளம் விஷயமாய் கஜானு டிப்டி கலெக்டரிட பிரத்தியேக மான அனுமதி யன்றியில் கிராம நவுக்கர்களுக்கு பட்வாடா செய்யப்பட மாட்டாது.

8. பாங்கியிலிருந்தோ அல்லது கஜானுவிலிருந்தோ பணம் வாங்கப் படும் விஷயங்களில் பட்டுவாடா செய்யப்படாத சம்பளங்களை அடுத்த மாதத்தில் சம்பளப்பட்டியில் குறைவுசெய்து அவ்விதமாய் ரீபண்டுவோப்ஸ் செய்துவிடவேண்டியது. அப்படி ரீபண்டுசெய்யப்படும் துகைகளை தாலூகா கச்சேரியில் ஜாக்கிரதையுடன் கவனித்து வரவேண்டியது; ஒருமாதத்தில் ஜாஸ்தியாய் வாங்கின பணத்திற்காக மறுமாசத்திய பில்லில் பணத்தைக் குறைத்து வாங்கும் விஷயத்தில் ஏற்படுத்தப்பட்ட விதியை கண்டிப்பாய் அனுஷ்டிக்கும்படி செய்தால் சம்பளம் பட்டுவாடாவாகாத விஷயங்கள் மிக அபரூபமானவைகளாயிருக்கும்; கணக்குகளில் குழப்பங்கள் உண்டா காது.

9, 10, 11, 12, 13. (இந்த பிரகாரணங்கள் கிராம உத்தியோகஸ்தர்களு க்கு சம்பந்தப்பட்டதல்ல, ஆனபடியால் தர்ஜிமா செய்யப்பட வில்லை).

II பௌண்டு பண்டு.

பௌண்டு கீபரிட (கால்நடைகளை அடைத்துவைக்கும் பட்டியின் சார்ஜிலுள்ள உத்தியோகஸ்தனிட) கணக்குகள்.

1. 5-ம் நெ. நமூனு பிரகாரம் ஒரு ரிஜிஸ்டரும் 6-ம் நெ. 7-ம் நெ. நமூ னுப்பிரகாரம் நகல்களடங்கிய ரசிது புஸ்தகங்களும் கிராம உத்தியோகசாலை யில் தயார்செய்து வைக்கப்படும். கால்நடைகளை பட்டியில் அடைக்கும்படி கொண்டு வந்தவுடனே, ரிஜிஸ்டரில் 1-முதல் 5-வது கலம்வரையில் விப ரங்களை பதியவேண்டியது கால் நடைகள் சொந்தக்காரன் அல்லது அவ னிடஏஜெண்டு அபராதங்களையும் தீனிச்செலவுகளையும் செலுத்தி கால் நடைகளை மீட்பதின்பேரில் 6, 9. கலங்களை பூர்த்தி செய்யவேண் டியது; அவசியமான அபராதத்தை சொந்தக்காரன் செலுத்தத் தவறிப் போவதின் பேரில் கால்நடைகளை விற்கும்படி போலீஸ்தார் வசமோ அல்லது வேறே அதிகாரிகள் வசமோ ஒப்புவிக்கப்பட்டு அவர்களிட மிருந் து ரிபோர்ட்டு வருவதின் பேரில் 10-15-கலங்களை பூர்த்தி செய்யவேண்டி யது. மாத ஆகயருக்கு முன்னுடியாக பவுண்டுகீபர் தனக்கும் சத்திசெய்கிற

வனுக்கும் மீத்திற்கு சேரவேண்டிய கமிஷன் துகையை கணக்கிட வேண்டியது. அந்த கமிஷன் துகையையும்தீனிச்செலவுக்காக பிடித்தசெலவையும் வசூல் துகையிலிருந்து கழித்துக் காட்டவேண்டியது; ஆகிலும் வசூலான மொத்த துகையிலிருந்து தீனிச்செலவுக்காகப் பிடித்தசெலவை கழித்துக்கொண்டு மீதியை இருசால்செய்யவேண்டியது; ரிஜிஸ்டரின் நகல் ஒன்று எடுத்து அனுப்பவேண்டியது (8-வது பிரகரணத்தில் விபரம்பார்க்க); சம்பளத்தின் துகை இவ்வளவென்றும் கஜானுவுக்கு இருசால் அனுப்பிய தேதியையும் துகையையும் 16-20 கலங்களில் காணவேண்டியது. சம்பளமும் தீனிச்செலவும் பட்வாடா செய்யப்படுவதற்காக பிரத்தியேகமான வவுசர் அனுப்பவேண்டியதில்லை; பவுண்டு கீபருடைய ரிஜிஸ்டரின் எக்ஸ்ட்ராக்டாகிய மாதவாரியில் அனுப்பும் கணக்கினடியில் மார்ஜனில் கண்டமாதிரி ஒரு ஸர்டிபிகேட்டு கண்டெழுதப்பட்டாலே போதுமானது.

இதில் கண்ட சம்பளம் தீனிச் செலவு துகைகள் அதாவது ரூ... சம்பந்தப் பட்ட பார்ட்டிகளுக்கு கிரமமாய் பட்வாடா செய்யப்பட்டனவென்றும் அவசியமானபோது பார்ட்டிகளிட கையெழுத்து பெற்றுக்கொள்வதற்காக வைக்கப்பட்டிருக்கிற பிரத்தியேகமான ஒரு ரிஜிஸ்டரில் கையெழுத்து பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் உறுதியாய் சொல்லப்படுகிறது.

2. 6-ெந. நமூனுவானது பட்டியில்அடைக்க ஒப்புவிக்கப்படும்கால்நடைகளைப்பிடித்து வந்தவனுக்குக்கொடுக்கப்படும் ரசீது, 7-ம் ெந. நமூனுவானது அப்பேர்ப்பட்ட கால்நடைகளை விடுவிக்கும்பொருட்டு செலுத்தப்பட்ட பணத்திற்காக சொந்தக்காரனுக்காவது அவனிட எஜெண்டுக்காவது கொடுக்கப்படும் ரசீது; இந்த ரசீதுகளை கௌண்டர் பாயில்களுடன் (அதாவது நகல் ரசீதுகளுடன்) அச்சிடவேண்டியது, அவைகளுக்குத் தொடர்ந்த ெந. கொடுக்கவேண்டியது. 50-அல்லது 100-பக்கங்கள் அடங்கிய புஸ்தகங்களாக தைக்கவேண்டியது; (ஒரு புஸ்தகத்தில் இத்தனை பக்கங்கள் இருக்கின்றனவென்று எழுதி அவ்விடத்தில் தாசில்தார் இனிஷல் செய்யவேண்டியது) ஒருதடவையில் ஒரே புஸ்தகம் பவுண்டு கீபருக்குகொடுக்கப்படவேண்டியது; பிரதிமாஸ ஆகையரிலும் ரசீது சீட்டுகளைக் கிழித்து இருசாலும் பவுண்டு கீபருடைய ரிஜிஸ்டரின் எக்ஸ்டிராக்ட்டை 5-ம் ெந. பாரம் தாலூகாவுக்கு அனுப்பும்போது கூட அனுப்பவேண்டியது.

3. சட்டத்தின் நியமங்கள் பிரகாரம் பகிரங்கமாய் ஏலத்தில் விற்கப்படும் பொருட்டு போலீஸ்தாருக்கு கால்நடைகள் அனுப்பப்பட வேண்டியபோதெல்லாம் கௌண்டர் பாயிலே நிறுத்திவைத்துக்கொண்டு 8-ம் ெந. நமூனுப்பிரகாரம் ஸ்டேஷனுபீஸருக்கு ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டியது; விற்பனைக்காக கால்நடைகள் எப்போது தேவையாயிருக்கின்றனவோ அது வரையில் அவைகளை பவுண்டு கீபர்வைத்திருக்கவேண்டியது; கால்நடைகள்

விற்கப்படும்போதோ அல்லது சொந்தக்காரனுக்குத் திருப்பி விட்டு விடப் படும்போதோ ஸ்டேஷனுபீஸர் அந்த நமூனுவின் பின்புறத்தில் எழுதவேண் டியவற்றை எழுதி அந்த ரிபோர்ட்டையும் விற்பனை பணத்திலிருந்து சொந் தக்காரனுக்கோ அல்லது அவனிட ஏஜெண்டுக்கோ கொடுக்கப்பட்ட துகை யை கழித்துக்கொண்டு மீதிதுகையையும் பவுண்டு கீபருக்கு அனுப்பவே ண்டியது ; ஸ்டேஷனுபீஸரிடமிருந்து ரிபோர்டானது திருப்பிப் பெற்றுக் கொள்ளப்பட்டதின்பேரில் அந்த ரிபோர்ட்டை நகலுடன் ஒட்டவேண்டி யது. அந்த ரிபோர்ட்டையும் நகலையும் மாதவாரியில் அனுப்பும் இருஸாலு டனேயும் 5-நெ. ரிஜிஸ்டர் எக்ஸ்ட்ராகட்டேனேயும் தாசில்தாருக்கு அனுப் பவேண்டியது ; 9-நெ. நமூனுப்பிரகாரம் ஸ்டேஷனுபீஸர் ஒரு ரிஜிஸ்டர் தயாரித்து வைக்கவேண்டியது ; 8-வது நமூனுவை பவுண்டு கீபருக்கு அனு ப்பு முன்னமே இந்த ரிஜிஸ்டரைப் பூர்த்தி செய்யவேண்டியது. பிரதிமாத ஆகயரிலும் இந்த ரிஜிஸ்டருக்கு எக்ஸ்டிராகட் ஒன்றை ஸ்டேஸனுபீஸர் எடுத்து அதை தாசில்தாருக்கு அனுப்பவேண்டியது.

தாலூகாகச்சேரியில் தணிக்கை செய்வது.

4. மேல்கண்ட மாதிரியாக பவுண்டு கீபர்களிடமிருந்தும் போலீஸ் ஸ்டேஷனுபீஸரிடமிருந்தும் கணக்குகள் வரப்பெற்றுக் கொள்ளப்பட்டதின் பேரில் தாலூகாகச்சேரியில் அவைகளை ஜாக்கிரதையாய் தணிக்கை செய்ய வேண்டியது ; அடியில் கண்ட அம்சங்களைப்பற்றி ஜாக்கிரதையாய் தணிக் கை செய்யவேண்டியது.

(எ) பவுண்டுகீபர்களிட ரிஜிஸ்டரின் எக்ஸ்ட்ராக்ட்டுகளில் கண்டபா புகள் தொடர்ச்சியாய் நெம்பர் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா வென்றும் அந்தநெம்பர்கள் அந்தந்தபவுண்டு கீபர்களுக்கு கொடுக்கப்பட்ட ரசீதுபுஸ்த கங்களின் நெம்பர்தானுவென்றும் (மேலே 2-வது பிரகரணத்தைப்பார்க்க)

(ப) குறித்திருக்கப்பட்ட வீதங்கள்பிரகாரம் அபராதங்களும் தீனிச்செ லவுகளும் விதிக்கப்பட்டனவாவென்றும்,

(ஸீ) பட்டியில்வாஸ்தவ்வியமாய் எத்தினைநாள் கால்நடைகள் அடைக் கப்பட்டிருந்தனவோ அவ்வளவு நாள்களுக்குமாத்திரம் தீனிச்செலவு விதிக் கப்பட்டதாவென்றும்,

(டீ) பவுண்டுசிப்பந்திகளிட கமிஷனனது 96-நெ. ஸ்டாண்டிங்கு ஆர்டர்பிரகாரம் கண்டவிதங்களை அனுஸரித்து கணக்கிடப்பட்டிருக்கின்றதா வென்றும்,

(ஈ) வசூலானதுகள் பிரதிமாஸ ஆகயரிலாவது அந்தந்த இடத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற பலானதினத்திலாவது தாலூகா கஜானுவுக்கு இருசால் செய்யப்படுகின்றனவாவென்றும்,

(யப்) பேவார்ஸ் கால்நடைகளின் ஏலத்துகைகள் கணக்கில்கிரமமான ஹேட்டுக்கு "அதாவது டிபாஸிட்" என்ற ஹேட்டுக்கு வரவு வைத்துக்கொள்ளப்படுகின்றனவாவென்றும்,

5. இதராளிட ஹத்துக்குள் கால்நடைகள் பிரவேசிக்கும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரகாரம் விதிக்கப்பட்ட அபராதம் வகையருக்களையும் அதிலிருந்து தாசில்தாரால் செலவிடப்பட்ட துகைகளையும்கண்டு 10-ம் நெ. நமூனுப்பிரகாரம் ஒன்றை தயாரித்து அந்தகணக்கை பவுண்டுகீபர்களிட ரிஜிஸ்டர்களின் எக்ஸ்டிராக்ட்டுகளுடனே ஹஸூருக்கு அனுப்பவேண்டியது.

6. பவுண்டுகீபரால் வசூல்செய்யப்பட்டாவது, கால்நடைகளை ஏலம் போட்டு வசூலாயாவது, இருக்கிற அபராதங்களை அவைகளுக்கென்று ஏற்படுத்தியகலத்தில் காண்பிக்கவேண்டியது; டிபாஸிட்டில் வைத்திருக்கப்பட்ட பேவார்ஸ்கால்நடைகளின் ஏலத்துகைகளை பொதுவாய் டிபாஸிட்டுகளுக்குச் சம்பந்தமானவிதிகளை அனுஸரித்து பைஸல்செய்யப்படும்.

7. தீனிச்செலவுகளுக்காக வசூலானதுகை பூராவும் பவுண்டுகீபருக்குக் கொடுக்கப்பட்டபோதிலும் அந்தத்துகைகளை கணக்கின் இரண்டுபக்கங்களிலும் காண்பிக்கவேண்டியது.

8. யாதொருமாதத்தில் வசூலாகும் துகைகளையனுஸரித்து பவுண்டுகீபர்களுக்குச்சேரவேண்டிய கமிஷனை அந்த மாதத்திய கணக்குகளில் சேர்த்தெழுதவேண்டியது ஆகிலும் தங்களிடம் வசூலானதுகைகள் மொத்தத்தையும் பவுண்டுகீபர்கள் தாலூகாவுக்கு அனுப்பவேண்டியது; சம்பளத்திற்காக கழித்துக்கொள்ளப்பட்டதாக காண்பிக்கப்பட்டதுகையை தாலூகாகச்சேரியில் தணிக்கைசெய்ததின்பேரில் சரியாய் கணக்கிடப்பட்டதாக ஏற்பட்டால் பவுண்டுகீபர்களுக்கு வாப்ஸ் அனுப்பப்படும்; இந்தவிதியை அனுஸரித்து நடக்கும்பக்ஷத்தில் பட்வாடாவான சம்பளத்துகையை தணிக்கைசெய்ய மெத்த சௌகரியமாயிருக்கும்.

ஏ. பாரம்கணக்கும் தணிக்கையும் செய்யவேண்டியதற்காக விதிகள் ....தாலூகாவில் சர்க்கார் அனுமதியின்பேரில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற கிராம நவுக்கர்களின் ரிஜிஸ்டர்.

நெ.	கிராமம்.	மாதம் 1-க்கு ஏற்படுத்தப்பட்ட சம்பள விகிதம்.												அனுமதிகொடுக்கும் உத்திரவின் தேதி.	ஷரா.
		முனிசீப்.		மணீகார் வகையரூ.		கணக்கன்.		தலையாரி அல்லது காவல்காரன்.		வெட்டி அல்லது தோட்டி.		நீர்கட்டி அல்லது நீர்கந்தி.			
		நெ.	ரூ. அ	நெ.	ரூ. அ	நெ.	ரூ. அ.	நெ.	ரூ. அ.	நெ.	ரூ. அ.	நெ.	ரூ. அ.		

ஏ. பாரத்தில் உள்ளடக்கம்.

..................தாலூகாவில் கிராம சிப்பந்திகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சம்பளத்தின் வீதம்கண்ட ரிஜிஸ்டர் அப்ஸ்ட்ராக்ட்.

ஹோதா.	நெ.	சம்பளத்தின் வீதம்.	மாதம் 1-க்கு மொத்த செலவு.	ஷரா.
முனிசீப்				
மணீகார்				
கர்ணம்				
தலையாரி அல்லது காவலாளி				
வெட்டி அல்லது தோட்டி				
நீர்கந்தி அல்லது நீர் கட்டி				

பாரம் நே. 1. 18......ஸூ........................கிராமத்தினிட பேர்மெனேண்டார்டர் தணிக்கை ரிஜிஸ்டர்.

நெ.	உத்தியோகம்.	ஜூ 1-க்கு எழுதிப் பட்ட சம்பளம் ஷ்தம்.	ஏப்ரல்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆகஸ்டு	செப்டெம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்.	ஜனவரி	பிப்ரவரி.	மார்ச்சு.	ஷரா.
	தலைவன் மணிகார் அல்லது பெத்தகாப்பு	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	
	முனிஸீப்														
	கர்ணம்														
	தலையாரி அல்லது காவலாளி வெட்டி														
	நீர்கந்தி														
	மொத்தம்...														
	பின்பக்கத்தில்கண்ட விக்ரயப்பிரகாரம் பட்வாடா வாங்காத துகையைக்கழிக்க ...														
	மீதி மொத்தம்...														
	தாசில்தார்கையெழுத்து தேதி														

இந்தவரிக்குநேர்மேலே இருக்கிற இடமானது பின்பக்கத்தில் விபரங்கண்ட பட்வாடாவாகாத அல்லது பெற்றுக்கொள்ளப்படாத சம்பளங்களுக்கு ஸப்ளிமெண்ட் பில்களைக்கொண்டு பட்வாடாசெய்கிற துகைகளை தாக்கல் செய்வதற்காக உத்தேசித்து விடப்பட்டிருக்கிறது.

பட்டுவாடா வாகாமலாவது கஜானுவிலிருந்து பெற்றுக்கொள்ளப் படாமல் விதிக்கப்பட்ட சம்பளங்களின் விபரம்.

எந்த மாதத்திய சம்பளம்.	ஆசாமியினிட பெயரும் உத்தியோகமும் சம்பளமும் என் பட்வாடா வாகாமல் இருந்த தென்பதற்கு காரணம்.	துகை.	பட்டுவாடா தேதி	ஷரா.

2-நெ. அப்ஸ்டிராக்ட்டு.

18......ஹு..................மூ..............தாலூகா...................கிராமத்திய கிராம சிப்பந்திகளிட சம்பளப்பட்டி.

பெயர்.	உத்தியோகத்தின்ஹோதா.	மீ 1-க்கு சம்பளம்.	அபராதம் கையிருப்பு முதலானகாரணங்களை முன்னிட்டுமதிக்கவேண்டிய துகை.	வாப்ஸ்செய்யப்பட்ட மீதிதுகை.	பட்வாடாசெய்தபிற்பாடு செய்யப்பட்டகையெழுத்து.	ஷரா. பட்வாடா வாகாமலாவது கஜானுவிலிருந்து பெற்றுக்கொள்ளப் படாமலாவதிருக்கிற சம்பளத்தின் விபரங்கள்.

இந்த சம்பளப்பட்டியில் எந்தெந்த நவுக்கர்களுக்குச் சம்பளம் சேர வேண்டியதாய் காண்பிக்கப் பட்டிருக்கிறதோ அந்தந்த நவுக்கர்கள் குறித்திருக்கிற காலங்கள்வரையில் வாஸ்தவ்வியமாய் வேலே பார்த்து வந்தார்களென்று ஸர்டிபை செய்யப்படுகிறது, (எழுத்து மூலமாய் உறுதியாய் சொல்லப்படுகிறது.)

தாலூகாவின் பெயர்
கிராமத்தின் பெயர்
தேதி } நபர்கள் கையெழுத்து செய்யக்கூடாமற்போனல் இரண்டு சாக்ஷிகளிட கையெழுத்து.

கையெழுத்து.....................

தலைவன் அல்லது மணீகார்.

5-ம் நெ. பாரம்.

பவுண்டு கீபர்களால் வைத்து வைக்கப்பட வேண்டிய ரிஜிஸ்டர்.

					கால்நடைகளைப் பைஸல்செய்த விபரங்கள்.										பட்டி சிப்பந்திகளிட கம்மிஷன்.			மீதி தாலூகாவுக்கு இருசால் செய்தது.		
					சொந்தக்காரனுல் மீட்டுக் கொள்ளப்பட்டால்.				ஏலத்தில் விற்கப்பட்டால்.											
												கழிக்க.								
வரவு நெம்பர் (6. நெ. பாரம்)	கால்கடைகளின் சங்கியையும் விபரமும்.	பட்டிக்கு கால்நடைகள் கொண்டுவரப்பட்ட தேதியும் மணியும்.	பட்டியிலடைக்கப்பட்ட கால்நடையைப் பிடித்தவனிட பெயரும் இருப்பிடமும்.	சொந்தக்காரனிட பெயரும் இருப்பிடமும் (தெரிந்திருந்தால்)	சொந்தக்காரன் கால்நடை தன்னுடையதென்று சொல்லும் தேதியும் மணியும்.	வசூலான அபராதத் துகை.	கால்நடையின் தீனிக்காக வசூலான துகை.	சொந்தக்காரன் கால் நடையை மீட்டுக்கொள்ளும் பக்ஷத்தில் அப்படி மீட்டுக்கொள்வதற்கடையாளமாக அவனிட கையெழுத்து.	கால்நடை தன்னுடையதென்று சொந்தக்காரன் சொல்லத் தவறிப்போனதின்மேல்கால்நடையை ஏலம்போட்ட தேதியும் மணியும்.	விற்பனை செய்யப்பட்ட கால்நடையின் சங்கியையும் விபரமும்.	விற்பனைத் துகை.	தீனிச்செலவு துகை.	அபராதத் துகை.	மீதி.	எந்தயிடத்தில் பட்டுவாடா செய்யப்பட்டது.	பௌண்டு கீபருக்கு கொடுக்கப்பட்ட துகை.	பெருக்கிறவனுக்கு கொடுக்கப்பட்ட துகை.	தேதி.	துகை.	வசூரு.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21
						ரூ.அ.பை.	ரூ.அ.பை.				ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.		ரூ.அ.பை.				

6. நெ. பாரம்.

நே.

நெ. கால்நடையின் சங்கியையும் விபரமும்.
பட்டிக்குகொண்டுவந்த தேதியும் மணியும்.
(கால்நடையை) பிடித்தவனிடபெயரும் இருப்பிடமும்.
சொந்தக்காரனிட பெயரும் இருப்பிடமும் (தெரிந்திருந்தால்)

மேல்கண்டபடி பெற்றுக்கொண்டேன்.

....

.........த்திய பௌண்டுகீப்பர்.

தேதி

7. நெ. பாரம்.

நே.

நெ. (6-வது பாரம்) ரசீதின் நெ.
கால்நடையின் பெயரும் விவபரமும்.
செலுத்தப்பட்டபணம் { அபராதங்கள் / தீனிச்செலவுகள்

மேல்கண்டபடி பெற்றுக்கொண்டேன்.

....

............த்திய பௌண்டுகீப்பர்

தேதி

6. நெ. பாரம்.

நே.

கால்நடையின் சங்கியையும் விபரமும்.
பட்டிக்குகொண்டுவந்த தேதியும் மணியும்.
(கால்நடையை) பிடித்தவனிடபெயரும் இருப்பிடமும்.
சொந்தக்காரனிடபெயரும் இருப்பிடமும் (தெரிந்திருந்தால்)

மேல்கண்டபடி பெற்றுக்கொண்டேன்

....

............த்திய பௌண்டு கீபர்.

தேதி

7. நெ. பாரம்.

நே.

6-வது பாரம் ரசீதின் நெ.
கால்நடையின் பெயரும் விபரமும்.
செலுத்தப்பட்டபணம் { அபராதங்கள் / தீனிச்செலவுகள்

மேல்கண்டபடி பெற்றுக்கொண்டேன்.

....

............த்திய பௌண்டுகீப்பர்.

தேதி

8-ம் நெ. பாரம்.

நெ.

1: வரவு நெ. (6. நெ. பாரம்)

2. விற்பனைக்கனுப்பப்பட்ட கால்நடையின் சங்கியையும் விபரமும்.

3. எந்ததேதியில் எத்தினைமணிக்கு பட்டியில் அடைக்கப்பட்டது.

4. (கால்நடையை) பிடித்தவனிட பெயரும் இருப்பிடமும்.

5. எந்ததேதியில் எத்தினை மணிக்கு ரிபோர்டு அனுப்பப்பட்டது.

6. யாருக்கு அனுப்பப்பட்டது.

7. சேரவேண்டிய அபராதத்துகை.

8. தீனிச்செலவுகள் துகை.

.........த்திய பௌண்டுகீப்பர்.

8-ம் நெ. பாரம்.

நெ.

.............த்தியஸ்டேஷனுபீஸருக்கு

அடியில்கண்ட கால்நடைகளினிட சொந்தக்காரன் அவைகள் தங்களுடயதென்று சொல்லிக்கொள்ள நாளதுவரையில் ஆஜராகாதபடியால் அவைகள் விற்கப்படவேண்டியவைகளா யிருக்கின்றன.

வரவு நெ. (6-நெ. பாரம்.	கால்நடையின் சங்கியையும் விபரமும்.	எந்ததேதியில் பட்டியிலடைக்கப்பட்டது.	கால்நடையைப் பிடித்தவனிட பெயரும் இருப்பிடமும்.	எந்ததேதியில் எத்தினை மணிக்கு ரிபோர்டு அனுப்பப்பட்டது.	சேரவேண்டிய அபராதத்துகை.	தீனிச்செலவு துகை.
					ரூ. அ.	ரூ. அ.

....................த்திய பவுண்டுகீபர்.

.........................த்திய பௌண்டு கீபருக்கு.

ஸ்டேஷன் ஆபீஸரால் ரிபோர்ட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியும் மணியும்.	ஸ்டேஷன் ஆபீஸரால் 7-நாளையநோட்டீஸ் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது.	நோட்டீஸ்படிக்கு 7-நாள் முடிவாகுமுன் கொடுக்கப்பட்டதுகை.			7-நாளைக்குள் கால்நடைகளுக்கு பாத்தியதை சொல்லிக்கொள்ளாமல்போனால் ஏலம்போட்டதின் முடிவு.					கொடுக்கப்பட்ட பணத்தின் தொகைபோக மீதி அல்லது சொந்தக்காரனுக்காவது அவனிட காரியஸ்தருக்காவது திருப்பிக் கொடுக்கப்பட்டது போக மீதி கால் நடைகள்.	சொந்தக்காரனிட கையெழுத்து, அல்லது வாங்கினவனுடைய கையெழுத்து.	பௌவுண்டு ஆபீஸரிடத்தில் அனுப்பப்பட்டதொகை	ஷெறாக்கள்.
		தேதி.	அபராதம்.	தீனிச்செலவுகள்.	எந்ததேதியில் எத்தனை மணிக்கு விற்பனைசெய்தது.	விற்பனை செய்யப்பட்ட கால்நடையின் சங்கியையும் விபரமும்.	விற்பனை தொகை.	அபராதங்கள்.	தீனிச்செலவுகள்.				
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14
			ரூ.அ.பை.	ரூ.அ.பை.			ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.				

கையெழுத்து.........................

தேதி........ ஸ்டேஷனாபீஸர்.

9-நெ. பாரம்.

பட்டியில் அடைக்கப்பட்டு......................த்திய போலீஸ்டேஷனுபீஸருக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்ட கால்நடைகளைக்கண்ட ரிஜிஸ்டர்.

விற்பனைக்கனுப்பப்பட்ட கால் நடைகள்.			கால்நடை எந்ததேதியில் எத்தனை மணிக்கு		விற்பனை செய்யப்பட்ட கால்நடையின் சங்கியையும் விபரமும்.	விற்பனைத் தொகை.	அபராதங்கள்.	தீனிச் செலவுகள்.	சொந்தக்காரனிடத்தில் ஒப்புவிக்கத் திருப்பப்போக வேண்டிய தொகை அல்லது கால்நடை.	பவுண்டு பண்டுக்கு அனுப்பப்பட்ட தொகை.	ஷெராக்கள்.
பட்டியின் பெயர்.	(6) நெ. பாரம். வரவு நெ.	சங்கியையும் விபரமும்.	ஸ்டேஷனில் பெற்றுக்கொள்ளப்பட்டது.	விடப்பட்டது அல்லது விற்கப்பட்டது.							
1	2	3	4	5	6	7	8	9	10	11	12
						ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	

ஆர்டர் நெ 37. பிரகரணம் 5.]

...............கிராமத்தில் வீடு கட்டிக்கொள்வதற்காக இடம் வேணுமென்று கொடுத்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்களைப்பற்றி ரிபோர்ட்டு அல்லது ரிஜிஸ்டர்.

விண்ணப்பத்தின்.		விண்ணப்பதாரன்.													
நெ.	தேதி.	பெயர்.	இதுவரையில் குடியிருந்த கிராமம்.	கிராமநவுக்கர்களுக்கு எப்போது விண்ணப்பம் அனுப்பப்பட்டது.	விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட இடத்தின் விஸ்தீர்ணம்.	விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட இடத்தின் எல்லைகள்.	அந்த கிராமத்தில் முன் ஒதுக்கியாகவே விண்ணப்பதாரனுக்குச் சொந்தமான கிராம நத்தத்திலிடத்தின் விஸ்தீர்ணம்.	விண்ணப்பதாரனிட பேரீஜ்.	கிராமத்திய ஜனத்தொகை.	கிராமத்தில் மொத்தம் எத்தனை வீடுகளிருக்கின்றன.	இப்போது இருக்கிற வீடுகள் தெருக்கள், சந்துகள் முதலானவைகளடங்கிய மொத்தம் விஸ்தீர்ணம் எவ்வளவு.	கிராமத்தில் வீடு கட்டிக்கொள்வதற்காக விடுதியாயிருக்கப்பட்ட விஸ்தீர்ணம்.	இந்த விண்ணப்பத்தைப்பற்றி கிராம நவுக்கர்களிட ஷரா.	தாசில்தாரிட உத்திரவும் அதின் தேதியும்.	ஷரா.
1		2		3	4	5	6	7	8	9	10	11	12	13	14

ஆர்டர் நெ. 37 பிரகரணம். 6]

.........................தாலுகா..................கிராமத்தில்...........வடக்கில்... ....னுலும்...............கிழக்கில்..................னுலும்............... தெற்கில்...............னுலும்.....,...........மேற்கில்............னுலும் சூழ்ந்திருக்கப்பட்ட............எகரா............ஸெண்டு கிராமநத்தநிலத்தை அடியில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு - எ. ப. என்பவனுக்கு அடமானம்செய்யப் பட்டிருக்கிறதுஎன்று எல்லாஜனங்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

(1) கூரைக்கட்டடமானல் 6 மீ-த்திற்குள்ளும், ஓடுபோட்டாவது மாடிபோட்டாவது, கட்டடமானல் 18-மாதத்திற்குள்ளும், அந்தஇடத்தில்கட்டவேண்டியது. தவறினல் அதுதிரும்பவும் கவர்ண்மெண்டார் வசமாய் விடும்.

(2) அந்த இடத்தில் கட்டடங்கட்டி ஆகிலும் 1-வருஷகாலத்திற்கு மேற்பட்டு கைவிடப்பட்டிருந்தால் அந்தஇடமும் அதின்பேரிலுள்ள கட்டமும் கவர்ண்மெண்டாரிட சொத்தாகும்.

குறிப்பு:—106-ம் நெ. ஸ்ட்டாண்டிங்கு ஆர்டர், 2-வது பிரகரணத்திற்கப்புறம் அடியில் கண்டதை சேர்த்துக்கொள்க :—

ஏழை ஜனங்களுக்கு ஆதரவாக, கிருஷித்தொழிலுக்கு சம்பந்தமான ஆயுதங்களையும் ஒரு ஏர் உழவுமாட்டையும் தீர்வை பாக்கிக்காக ஜப்திசெய்யவாவது எலம்போடவாவது கூடாது என்று இப்பால் கவர்ண்மெண்டார் உத்திரவுசெய்திருக்கிறார்கள்.

ஷை ஆர்டர் 10 - வது பிரகரணத்தில் அடியில் வருவதை கடைசிவாக்கியமாகச் சேர்த்துக்கொள்க.

ஒரே எலத்தில் வாங்கப்பட்ட நிலங்களுக்கு ஒரே ஸர்ட்டிபிகேட்டு கொடுக்கப்படலாம், ஸர்ட்டிபிகேட்டானது இங்கிலீஷிலாவது சுயபாஷையிலாவது எழுதப்படலாம்.

சென்னை ராஜதானியில் உள்ள இனும் நிலங்களைப்பற்றி விசாரித்து பைஸலாத்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகள்.

50-வருஷகாலம் ஒரு நிலத்தை இனுமாக அனுபவித்து வந்ததாக ருஜுவானால் அதுவே ஸ்திரமான பாத்தியதை ஆகிறது.

1. ஸன்னதுபெற்றுக் கொண்டாவது ஸன்னதில்லாமலாவது யாதொரு நிலத்தை 50 - வருஷகாலமாய் நடுவில் யாதொரு அப்பியந்திரமுமில்லாமல் இனுமாகவே அனுபவித்து வந்திருப்பதாய் ருஜுவாகும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட நிலமானது பூர்வீகத்தில் எவ்விதமாய் சம்பாதிக்கப் பட்டிருந்தபோதிலும் ஸ்திரமான பாத்தியதையுள்ள இனும் நிலமென்று பாவிக்கப்படும்.

குறிப்பு:—சகஜமாய் இனுங்களென்றே அனுபவித்து வரப்பட்ட அசல் மின்ஹா தோட்டங்களும் தோப்புகளும் பத்திபாரடிகளும் ஹார்ஸால்மெக்டா நிலங்களும் பாடிபாட் நிலங்களும் இன்னு மிவைகளைப்போலொற்ற மற்ற நிலங்களும் ஆரம்பத்தில் இனும் சுபாவமுள்ள நிலங்களாய் இல்லாமலிருந்த போதிலும் இந்த விதிகளையனுஸரித்து இனும் நிலங்களாகவே பாவிக்கப்பட்டன; ஆகிலும் ஜமீன்தாரிஇலாகாக்களில் உள்ள இப்பேர்ப்பட்டகாணியாக்ஷிகள் இனும் நிலங்களாக பாவிக்கப்படவில்லை ; 1848 - ஞூத்திற்குப் பின்னிட்டு உண்டாக்கப்பட்டதோப்புகளுக்கு பட்டய சாஸனங்களும் கொடுக்கப்படயில்லை.

சர்க்கார் கணக்குகளைக் கொண்டு தெரிந்துக் கொள்ள வேண்டிய ருஜு.

2. ஸ்திரமான ஒரு சாஸனமாவது அல்லது வேறெவ்வித பட்டய சாஸனமாவது இல்லாமல் போகும் பக்ஷத்தில், இங்லீஷ் அரசாக்ஷியின் ஆதி வருஷங்களில் தயாரிக்கப்பட்ட கிராம கணக்குகளில் செய்யப்பட்டிருக்கிற பதிவுகளும், ஸ்திரமான ஸெட்டில்மெண்டு சம்பந்தமான கணக்குகளில் செய்யப்பட்டிருக்கிற பதிவுகளும், 1802-ம் ஞூத்திய 31-வது சீர்திருத்தச் சட்டத்தை யனுஸரித்து தயாரிக்கப்படலான ரிஜிஸ்டரில் செய்யப்பட்ட பதிவுகளும், முன்காலத்தில் செய்யப்பட்ட சர்வே சம்பந்தமான கணக்குகளில் செய்யப்பட்ட பதிவுகளும், 50-ஞூ காலத்திற்கு முன்பட்ட (சர்க்காரால்) சரியென்று சொல்லப்பட்ட இதர கணக்குகளில்செய்யப்பட்ட பதிவுகளும், அவ்வளவுகாலம் (50-வருஷம்) இனுமாக யிருந்ததென்பதற்கு ருஜுவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. ஆனுல், 50-வருஷ காலத்திற்குள் சர்க்கார் வசமாக சேர்ந்து போயும் ஸ்திரமான ஸெட்டில்மெண்டு கணக்குகளாவது அல்லது உண்மையான இதர பூர்வீக கணக்குகளாவது இல்லாமலுமிருக்கிற பூர்வீக ஜமீன்தாரிகளையாவது பாளையங்களையாவது அல்லது ஜாகீர்களையாவது சேர்ந்த இனுமாக இருக்கும் காரணத்தினுல் மேற்கண்ட விதமாய் ருஜூ செய்யப்படக் கூடாமல் போகிற விஷயத்தில் அப்பேர்பட்ட ஜமீன்தாரி வகைராக்கள் சர்க்காரைச் சேர்ந்த தேதி முதல் யாதொரு நிலம் இனுமாக அனுபவிக்கப்பட்டதென்று ருஜூவாயும், ஜாஸ்தி காலமாய் அனுபவித்து வந்ததை ருஜூப்படுத்த தப்பிப்போனதானது காலங்கடந்து போய்விட்டதினுலும் கணக்குகள் இல்லாமல் போனதினுலுதான் என்று கிரமமாய் உத்தேசிப்பதற்கு ஹேதுவான முகாந்திரங்கள் சொல்லப்பட்டும் இருந்தால், இனும் நிலமானது ஸ்திரமான பாத்தியதை உடையதாக பாவிக்கப்படும், பூரா 50-வருஷ காலம் வரையில் அனுபவித்து வந்ததற்குத் தகுந்த ருஜூ ஆஜர் படுத்தப்படாமல் போகிற ஒவ்வொரு விஷயத்திற்கும் மேற்கண்ட விதியே சம்பந்தப் பட்டது.

பூரா 50-வருஷ காலமாய் அனுபவித்து வந்ததற்காக செய்யப்பட்ட வேண்டிய ருஜூவை எந்த சந்தர்ப்பங்களில் அனுவசியமானதாக நிவர்த்திசெய்து விடலாம் என்பதைப்பற்றி.

குறிப்பு:—ஒரு நிலமானது 50-வருஷகாலம் இனுமாக அனுபவிக்கப்பட்டதென்பதற்காக செய்யப்படும் ருஜூவும் 50-வருஷகாலம் இனுமாக அனுபவிக்கவில்லை என்பதற்காக ஏற்பட்ட ருஜூவும் சமமான வலிமையுடையவைகளாயிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட இனும் நிலத்திற்கு $\frac{1}{4}$ பங்கு தீர்வை விதிக்கப்படுமென்று இதனுல் கம்மிஷனர் விதித்திருக்கிருர்.

2. யாதொரு இனும் நிலமானது ஸ்திரமான பாத்தியதை உடையதாக மேற்கண்ட விதமாய் ருஜூவான பிற்பாடு, பிரதி விஷயமும் அடியில் விவரித்துச் சொல்லியிருக்கிற எந்த வகுப்பில் சேர்ந்ததோ அதை அனுஸரித்துப் பைசல் செய்யப்படும்:—

ஸ்திரமான பாத்தியதையுடையவையென்று ருஜூவான பிற்பாடு பலவித இனும் நிலங்களைப் பைசல் செய்யும் விதம்.

(1) மதஸம்பந்தமான தேவாலயங்களுக்காகவும் தர்ம வித்தியாசாலைகளுக்காகவும் விடப்பட்டிருக்கிற இனும் நிலங்கள்.

(2) யாதொருவரிட சொந்த உபயோகத்திற்காகவாவது ஜீவனோமார்க்கத்திற்காகவாவது விடப்பட்ட இனும் நிலங்கள்.

(3) ரெவினியூ அல்லது போலீஸ் டிபார்ட்மெண்டுகளில் இனிமேல் அப்பேர்ப்பட்ட வேலைகள் செய்யப்படாமலும் அல்லது தேவையில்லாதவைகளாயும் வேலைசெய்வதற்குப் பிரதி பலனுக பூர்வீக கெவர்ண்மெண்டாரால் விடப்பட்டுமிருக்கப்பட்ட இனும் நிலங்கள்.

(4) கிராம ஊழியத்திற்காக விடப்பட்ட இனும் நிலங்கள்:—

(ஏ) ரெவினியூ அல்லது போலீஸ் வேலைகளை இன்னுமும் செய்து வரும் கிராம நவுக்கர்களால் அனுபவிக்கப்பட்டவைகள்.

(ப) கிராமத்தில் பொதுஜனங்களுக்காக ஊழியம் செய்துவரும் கம்மாளர்களாலும் மற்றவர்களாலும் அனுபவிக்கப் பட்டவைகள்.

1-வது மத ஸம்பந்தமாயும் தர்மமாயும் ஸ்தாபிக்கப்பட்ட தேவாலயங்கள் வித்தியாசாலை முதலியவைகளுக்காகவும் அவைகளில் செய்யவேண்டிய வேலைகளுக்காகவும் விடப்பட்ட இனும் நிலங்கள்.

3. தேவாலயங்கள், மசூதிகள், வித்தியாசாலைகள், சத்திரங்கள், இன்னு மற்ற பொது உபயோகமான கட்டடங்கள் ஸ்தாபனங்களைப் போலொத்த மத ஸம்பந்தமாயும் அல்லதுதர்மகாரியத்திற்காகவும் பிரயோஜனப் படும்படியாகவாவது அல்லது அவைகளில் செய்யவேண்டிய வேலைகளுக்காகவாவது விடப்பட்ட இனுமாக யிருந்தால், இனும் நிலமானது ஸ்தாபனங்கள் பெயரிலாவது அல்லது அவைகளில் வேலைசெய்துவரும் ஆஸாமிகள் பெயரிலாவது தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும் அவ்வித கட்டடங்களோ அல்லது ஸ்தாபனங்களோ செம்மையாய் பரிபாலித்து வரப்படுகிறவரையிலும் அவைகளில் செய்யவேண்டிய வேலைகளை சாஸனத்தில் கண்ட நிபந்தனைகள் பிரகாரம் செய்துவரும் வரையிலும் அந்த இனும் நிலத்தை தற்காலத்தில் அனுபவிக்கிறவர்களும் அவர்களிட வார்ஸ்தார்களும் அனுபவித்து வரும்படிக்கு விடப்படும்; அன்றியும் அந்த இனும் விஷயமாய் இனி சர்க்காரார் பிரவேசிக்க மாட்டார்கள்.

(2) குளங்களையும் வாய்க்கால்களையும் வெட்டுவதற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் விடப்பட்ட இனும் நிலங்கள் விஷயமாய் அந்த குளம் முதலான வேலைப்பாடுகளை ஒழுங்காய் பரிபாலித்து அவைகளுக்காக என்ன ஷரத்துடன் இனும் விடப்பட்டதோ அந்த ஷரத்துகள் பிரகாரம் நடந்துவரும் வரையிலும் பிரவேசிக்கப் படமாட்டாது.

2-வது யாதொருவரிட சொந்த உபயோகத்திற்காகவாவதுஜீவனோ மார்க்கத்திற்காகவாவது விடப்பட்ட இனும்.

4. யாதொரு மனுஷியனுடைய சொந்த உபயோகத்திற்காகவாவது ஜிவனோ மார்க்கத்திற்காகவாவது விடப்பட்ட இனும் நிலமாயிருந்தால் அதின் அசல் காணியாக்ஷி பிரகாரம் இனும் தார்களுக்கே ஸ்திரப்படுத்தப்படும்; இனும் தாரன் முதலில் அடமானம் செய்யப்பட்டு ரிஜிஸ்தரில் பதிவுசெய்யப்பட்ட அடமானதாரனிட சந்ததியானுக இருப்பதையாவது அல்லது பராதீனத்தினுல் இனும் சம்பாதித்ததையாவது அனுஸரித்து மேல்சொன்ன காணியாக்ஷியை அடியில்கண்ட நிபந்தனைக்குட்பட்டு சுவாதீனமாக மாற்றப்படும்.

இனும் தாரனுனவன் முதல் அடமானம் செய்யப்பட்டவனிட சந்ததியானு யிருந்தால்.

5. இப்போது இனும் நிலத்தை அனுபவிக்கிற ஆஸாமியானவன் முதலில் அடமானம் பெற்றவனிட சந்தியானுகவாவது அல்லது முதலில் ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்ட அனுபோகஸ்தனிட சந்ததியானுகவாவதிருந்தால் கெவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட இனும் நிலத்தின் காணியாக்ஷியின் நிபந்தனேகளுக்குட்பட்டு பரம்பரையாய் இனும் நிலத்தை அனுபவித்து வரும்படி விடப்படும்; அதாவது:—

(1) நேரான சந்ததியார்களும் அவிபக்தர்களாகிய சகோதரர்களுக்கு மாத்திரம் வார்ஸ் பாத்தியதை யுண்டு.

(2) அப்பேர்ப்பட்ட வார்ஸ்தார்கள் இல்லாமற்போனுல் இனும் நிலங்கள் கெவர்ண்மெண்டாரைச் சேர்ந்துவிடும்.

(3) இனும் நிலத்தைப் பராதீனப்படுத்தக் கூடாது.

(4) அவிபக்தராகிய சகோதரர் அல்லது தாயாதியின் வம்சத்தில் தவிர வேறே வம்சத்தில் ஸ்வீகாரம் செய்து கொண்டால் அப்போர்பட்ட ஸ்வீகாரம் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

இனும் தாரன் தன்னிட இனும் நிலத்தை சுவாதீனமான சொத்தாக மாற்றிக்கொள்ள இஷ்ட மிருக்கும் பக்ஷத்தில் அப்படியே உத்திரவு கொடுப்பதைப் பற்றி.

2. ஆனல் இனும்தாரனுக்குஇஷ்டமிருந்து வருஷவாரியில் ஒருகுயிட்ரெண்டைச்செலுத்திவர சம்மதித்தால்மேற்கண்ட நிர்ப்பந்தமான காணியாக்ஷியைத் தவிர்த்து தானுதி விக்கிரயம் முதலான மாதிரியாய் பராதீனப்படுத்த ஸர்வ அதிகாரத்துடன் கூடிய சொந்த சொத்தாக மாற்றிக்கொள்ளலாம்; பிரதி விஷயத்திலும் இனும் நிலத்தை தங்கள் வசமாக்கிக்கொள்ள சர்க்காருக்குள்ள பாத்தியதையை யோசித்து ஏற்படுத்தப்பட்ட அடியில் கண்ட வீதப்படி மேலே பிரஸ்தாபிக்கப் படலான குயிட்ரெண்டு தீர்வை கணக்கிடப்படும்.

இனும்தாருக்குத் தகுந்த வார்ஸ்தார் இருக்கும் பக்ஷத்தில் மேற்கண்ட விதமாய் சொந்த சொத்தாக மாற்றிக் கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட வீதம்.

(3) யாதொரு இனும் நிலத்திய தற்கால அனுபோகஸ்தனுக்கு தகுந்த சந்ததி வார்ஸ்தார்களிருந்தாலாவது (அதாவது சந்தியை விருத்திசெய்யக் கூடியவர்களும் இனும் நிலத்திற்கு சுதந்திரவாளிகளாக ஆகக் கூடியவர்களுமான ஆண் அல்லது பெண் சுதந்திரவாளிகள்) அல்லது அப்பேர்ப்பட்ட அனுபோகதாரன் பாலியமாயிருக்கிற காரணத்தை முன்னிட்டு இனிமேல் சந்ததி வார்ஸ்தார்கள் அவனுக்கு உண்டாகக்கூடுமென்றுகிரமமாய் யோசிக்கஇடமிருக்கும்பக்ஷத்திலாவது அந்தஇனும்நிலமானது அதிககாலங்கழித்தே கெவர்ண்

மெண்டார் வசமாகக் கூடுமோகையால், அந்த நிலத்தின் அல்லது அந்த கிராமத்திலுள்ள அதேமாதிரி நிலத்தின் தற்காலத்திய தீர்வை அல்லது உத்தேசத் தீர்வை எவ்வளவோ அதில் 8-ல் 1-பாகத்திற்குச் சமமான வருஷவாரி குயிட்ரெண்டு தீர்வை விதிப்பதானது அந்த இனாம்நிலத்தை திரும்ப வசப்படுத்திக்கொள்ள சர்க்காருக்குள்ள பாத்தியதைக்குப் போதுமான பிரதி பலனாக பாவிக்கப்படும்.

சந்ததியை விருத்திசெய்யக்கூடியத்தக்க வார்ஸ்தார்கள் இனாம் தாருக்கு இல்லாமற்போனால் அப்பேர்ப்பட்ட விஷயத்தில் இனாம் நிலத்தை சொந்த சொத்தாக மாற்றிக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய வீதம்.

(4) மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட வார்ஸ்தார்கள் இனாம்தாரனுக்குக் கிடையாமல் போயும் அந்த இனாம் தாரனுக்கு வயது சென்றதினாலாவது வேறெந்த காரணத்தினாலாவது அப்பேர்ப்பட்ட வார்ஸ்தார்கள் அவனுக்குண்டாவார்களென்று கிரமமாய் யோசிக்க இடமில்லாமலுமிருந்தால்,— ஆகிலும் பிள்ளையில்லாத மனைவி அல்லது பிள்ளையில்லாமலும் விதந்துவாய்ப் போயிருக்கிற பெண் இவர்களைப்போலொத்த சந்ததி அற்றுப்போகிறவர்களென்று சொல்லப்பட்ட வார்ஸ்தார்களிருக்கும் பக்ஷத்தில்,— இனாம் நிலத்தைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ள சர்க்காருக்குள்ள பாத்தியதையானது மேல் பிரகரணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயத்தினுடைய பாத்தியதைகளைவிட மேலான மதிப்புள்ளதாகையால் அந்த நிலத்தின் தீர்வையில் $\frac{1}{4}$-பங்குக்குச் சமமான குயிட்ரெண்டு தீர்வை விதிக்கப்படும்.

வார்ஸ்தார்கள் ஒருவருமே இல்லாமற் போகும் பக்ஷத்தில் இனாம் நிலத்தை சொந்த சொத்தாக மாற்றிக்கொள்ள வேண்டிய வீதம்.

(5) யாதொரு இனாம் நிலத்தின் அனுபோகதாரனுக்கு எவ்விதமான வார்ஸ்தார்களும் இல்லாமலிருந்து அவனுக்குப் புத்திர சந்தானம் உண்டாக ஹேது இல்லாத பக்ஷத்தில்—(இதற்கு உதாரணம் பிள்ளையில்லாதவிதவை), தற்காலத்திய அனுபோகதாரன் இறந்துபோகும் மேல் இனாம் நிலத்திற்குப் பூரா தீர்வையும் விதிக்கப்படுமோகையால் இந்த விஷயத்தில் தீர்வையில் $\frac{1}{2}$-பங்குக்கு சமானமான குயிட்ரெண்டு விதிக்கப்படும்.

மேல்கண்டவீதங்கள் உடனே ஏற்றுக்கொள்ளப் படாமற்போனால் அதேவீதங்கள் பிரகாரம் ஒத்துக் கொள்ளுகிறார்களாவென்று இரண்டாம்தரம் கேட்கவேண்டுமென்பது அவசியமில்லை.

6. சர்க்காருக்கு பிரதிபலனுக்கா செலுத்தவேண்டிய மேற்கண்டவீதங்கள் பிரகாரம் சர்க்காரால் குறிக்கப்பட்டஒரு சமயத்தில் உடனே ஏற்பாடுசெய்துகொள்ளக்கூடுமேஒழியஇனாம்தாரனுக்கு இஷ்டப்பட்டபோது அவ்விதமாய் ஏற்பாடு செய்துகொள்ள இடங்கொடுக்க வேண்டுமென்பது அவசியமில்லை; மேற்

கண்ட வீதங்களைச்செலுத்தி இனும்நிலத்தை சொந்தசொத்தாகமாற்றிக்கொள்ளலாமென்று சர்க்காரால் தெரிவிக்கப்படும்போது அவ்வித எற்பாடுபிரகாரம் மாற்றிக்கொள்ள தற்காலம் தாமசிக்கிற ஒரு விதந்துவானவள் தான் இறந்துபோகுமேல் அந்தஇனும் கவர்ன்மெண்டுவசமாகக்கூடிய கவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதையை போக்கடிக்கவேண்டுமென்கிற எண்ணத்தைக்கொண்டே தான் சாகுந்தருணத்திற்கு கொஞ்சமுன்பாக மேற்கண்ட எற்பாடு செய்துகொள்ளவேணுமென்றால் அப்படி செய்துகொள்ள இடங்கொடுக்கப்படமாட்டாது; அல்லது யாதொரு ஆஸாமிக்கு இனிமேல் ஸந்தானம் உண்டாகக்கூடுமென்ற ஒரு நம்பிக்கையைக்கொண்டு குறைந்த வீதப்பிகாரம் செலுத்தி மேற்கண்ட விதமானஎற்பாடு செய்துகொள்ள உத்திரவு கொடுக்கப்பட்டிருந்து (அப்போது அவ்விதமாய் எற்பாடுசெய்துகொள்ளத் தவறிப்போய்) ஸந்ததி உண்டாகுமென்கிற நம்பிக்கையற்றுப்போன தருணத்தில் மேற்கண்ட விதமாய் எற்பாடு செய்துகொள்ளவேணுமென்றால் அப்படி செய்துகொள்ள இடங்கொடுக்கப்படமாட்டாது. இப்படி மேல்கண்ட விதமாய் எற்பாடு செய்துகொள்ளப்படாத பிரதிவிஷயத்தைப்பற்றியும் பின்னிட்டு ஒரு காலத்தில் தனியாய் விசாரணைசெய்யும்பொருட்டு பிடித்த உழைப்பையும் காலத்தையும் அனுஸரித்து மேற்கண்டவீதங்களை உயர்த்த வேண்டியது அவசியமாயும் எற்படலாம்.

குறிப்பு.—1875-௵த்திற்கு முன்னிட்டு என்பிரஞ்சைஸ்செய்ய ஒத்துக்கொள்ளாமலும் ஆனால் 1878-௵ ஆகயருக்குள் என்பிரஞ்சைஸ்செய்ய ஒத்துக்கொண்ட நபர்கள்விஷயமாய் கவர்ன்மெண்டாரானவர்கள் என்பிரஞ்சைஸ் வீதங்களை ஜாஸ்திப்படுத்தினார்கள்; முன்னாடி என்பிரஞ்சைஸ் செய்யப்படாத யாதொருஇனும் நிலத்தையும் இனிமேல் கவர்ன்மெண்டாரிட பிரத்தியேகமான அனுமதியன்றியில் என்பிரஞ்சைஸ் * செய்யக்கூடாது.

பராதீனப்படுத்தப்பட்ட ஒரு இனும்நிலத்தில் கவர்ன்மெண்டாருக்குள்ள பாத்தியதைக்குப் பிரதிபலனாக அனுபோகதாரனிட இஷ்டத்தைப்பற்றி நிமித்தியமில்லாமலே அவனிடமிருந்து மிதமானகுயிட்ரெண்டு விதிக்கப்படும்.

7. யாதொரு இனும்நிலத்தை தற்காலம் அனுபோகிக்கிறவனானவன்முதலில் அந்த இனும்நிலம் யாருக்கு அடமானம் செய்துவிடப்பட்டதோ அல்லது ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிறதோ அவனிட சந்ததியானாகயிராமற்போனாலும், தானாகவாவது அல்லது தான் எவர்களுக்கு வார்ஸ்தாரனாக எற்பட்டானோ அவர்களாவது, கிரமமாய் ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்டதினாலாவது அல்லது தானாதி விக்கிரயமுதலான பராதீனத்தினாலாவது அந்த இனும்நிலத்தை கிரமமாய் சம்பாதித்துஇருந்து அப்படிசம்பாதித்ததுமுதல் அவ்விதபராதீனத்தின் பாத்தியதையினாலேயே அந்த இனும்நிலத்தை அனுபோகித்து வந்திருந்

* இந்த பதத்திற்கு அர்த்தம் 1-வது பாகம் 182-வது பக்கத்தை பார்க்க.

தால், அப்பேர்ப்பட்ட இனம்தாரனுக்கு அந்த இனம்நிலத்திலுள்ள பாத்தியதையானது சட்டப்பிரகாரம் குறைவானதாயும் இனமானது நியாயமாய் சர்க்காரைச் சேரக்கூடியதாயுமிருந்தபோதிலும் 5-வது விதியில்கண்ட ஆதாயங்களை அனுபவிக்கும்படி இடங்கொடுக்கப்படும்; ஆனால் அப்படி ஏற்பாடு செய்துகொள்ள இஷ்டமில்லையென்று சொல்லக்கூடாது. கவர்ன்மெண்டாருக்கு அந்த இனம்நிலத்திலுள்ள பாத்தியதைகளுக்குப் பிரதிபலனாக அந்த நிலத்திற்கு குயிட்ரெண்டு தீர்வைவிதிக்கப்படும். மேல் பிரஸ்தாபிக்கப்பட்ட 5-வது விதியில் 2-முதல் 5-வரையிலுள்ள வாக்கியங்களில் இனம்தாரனுக்கு சந்தானம் உண்டாகும்விஷயமாய் சொல்லப்பட்ட ஏற்பாடுகளை அனுஸரித்து இந்தகுயிட்ரெண்டானது ஏற்படுத்தப்படும் ; குயிட்ரெண்டு தீர்வை செலுத்தி வருவதற்குட்பட்டு அந்தநிலத்தை இனம்தாரனிட சொந்தசொத்தாக உடனே ஸ்திரப்படுத்தப்படும்; இதனால் அந்த இனம்நிலத்தில் இனம்தாரனுக்கு நிராக்ஷேபமான பாத்தியதை உண்டாய்விடுகிறது.

குறிப்பு:—அனுபோகத்தில் இந்தவிதியானது சொற்பம் மாறுதல்செய்யப்பட்டது. 1848-வருஷத்தில் விதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னிட்டு பராதீனமானவிஷயங்களில் எவனால் பராதீனம்செய்யப்படுகிறதோ அவனுக்கு விதிக்கப்படும் குயிட்ரெண்டானது எவனுக்கு பராதீனம் செய்யப்படுகிறதோ அவனுக்கும் விதிக்கப்பட்டது ; ஆனால் எவனுக்கு பராதீனம் செய்யப்பட்டதோ அவன், எவனால் பராதீனம்செய்யப்பட்டதோ அவனைவிட ஸந்தானவிஷயமாய் கேடான நிலமையில் இல்லாமல்இருந்ததினால்தான் (அதாவது பராதீனப் படுத்தப்பட்டவனுக்கும்) மேற்கண்டபடி குயிட்ரெண்டு விதிக்கப்பட்டது.

தீர்வையின் ஓர்பாகத்தை குயிட்ரெண்டாக விதிக்காமல் இனம் கமிஷனருக்கு இஷ்டமிருக்குமானால் எங்கும் பொதுவா யிருக்கப்பட்ட ஒருவீதப்பிரகாரம் குயிட்ரெண்டை ஏற்படுத்தலாம்.

8. சில ஜில்லாக்களில் இனம் நிலங்களுக்கு கிரமமான தீர்வை ஏற்படுத்தப்படவில்லையானபடியாலும், விதிக்கப்படும் குயிட்ரெண்டானது இனி எப்போதாவது தீர்வையை தித்துபாடு செய்யும்போது மாறுதல் செய்யப்படாமல் எப்போதும் ஸ்திரமானதாக இருக்கவேண்டியது யுக்தமாயிருக்கிறபடியாலும், இனம் கமிஷனரானவர் கலெக்டருடனும் ரெவினியூ போர்ட்டாருடனும் கலந்து பிரதி இனம் நிலத்திலிருந்து வருஷவாரியில் உண்டாகும் வரும்படியின் தாமாஷாவை அனுஸரித்து ஓர் பாகத்தை குயிட்ரெண்டாக விதிப்பதற்கு பதிலாக புஞ்சை எக்ரா 1-க்கு இவ்வளவு குயிட்ரெண்டு என்றும், நஞ்சை எக்ரா 1-க்கு இவ்வளவு குயிட்ரெண்டு என்றும், ஏற்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்; இந்த குயிட்ரெண்டு வீதமானது பிரதி ஜில்லாவிலும் அல்லது ஜில்லாவின் ஓர்பாகத்திலும் உள்ள புஞ்சை நிலங்களுக்கு ஒரேவித புஞ்சை குயிட்ரெண்டும் நஞ்சைநிலங்களுக்கு

ஒரேவித நஞ்சை குயிட்ரெண்டும் விதிக்கப்படவேண்டியது; அதே மாதிரியான சர்க்கார் நிலங்களுக்கு சராசரியில் என்னவீதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவைகளை அனுஸரித்து மேற்சொன்ன குயிட்ரெண்டானது கணக்கிடப்படும்.

(2) புஞ்சை நிலத்திற்கு விதிக்கப்படவேண்டிய குயிட்ரெண்டானது அதமபக்ஷம் 2-அணுவாகவும் நஞ்சைநிலத்திற்கு விதிக்கப்படவேண்டிய குயிட்ரெண்டானது அதமபக்ஷம் 4-அணுவாகவு மிருக்கவேண்டியது; இனிமேல் இனம் நிலத்தை உட்பிரிவினைகள் செய்துகொள்வதினால் அப்படி உட்பிரிவினைசெய்யப்பட்ட பிரதி பாகத்திற்குள்ள முறையே நஞ்சை புஞ்சை குயிட்ரெண்டானது மேற்கண்ட வீதங்களுக்குகுறைவுபடும்படியாயிருக்கக்கூடாது.

(3) இனம் நிலத்தின் பூரு தீர்வையை அனுஸரித்து அதின் தாரதம்மியப்பிரகாரம் குயிட்ரெண்டானது ஏற்படுத்தப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட பூரு தீர்வையானது 1-ரூபாய்க்கு குறைந்திருக்கும் பக்ஷத்தில் குயிட்ரெண்டானது 2-அணுவுக்கு குறைவாய் ஏற்படுத்தப்படமாட்டாது; அப்பேர்ப்பட்ட பூரு தீர்வையானது 1-ரூபாய்க்கும் 5-ரூபாய்க்கும் மத்தியமானதாயிருந்தால் குயிட்ரெண்டானது 4-அணுவீதம் விதிக்கப்படும்; அப்பேர்ப்பட்ட பூரு தீர்வையானது 5-ரூபாய்க்கும் 10 - ரூபாய்க்கும் மத்தியமானதாயிருந்தால் 8-அணுவீதம் குயிட்ரெண்டு விதிக்கப்படும்; ஷை பூரு தீர்வையானது 10 - ரூபாய்க்கு மேற்பட்டதாயிருக்கும் பக்ஷத்தில் குயிட்ரெண்டானது 1-ரூபாய்வீதம் விதிக்கப்படும்.

குறிப்பு:—இந்த அதமபக்ஷமான வீதங்களானவை முன்காலத்தில் விதிக்கப்பட்ட ஜோடிதீர்வை சேர்ந்தவை.

இனம்தாரனுக் கிஷ்டமிருக்கும் பக்ஷத்தில் 20-ம் வருஷத்திய குயிட்ரெணடை ஒரேகாலத்தில் செலுத்திவிட்டு சொந்த சொத்தாக செய்து கொள்ளலாம்.

9. பிரதி தனி இனம் நிலத்தை என்பிரன்ஞ்சைஸ் செய்து வருஷவாரியில் செலுத்தவேண்டிய குயிட்ரெண்டு இவ்வளவென்று ஒருதடவை ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு இனம் தாரனானவன் இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் அந்த குயிட்ரெண்டின் 20- வருஷத்திய மொத்தத்தை உடனேயாவது இனி எப்போதாவது செலுத்திவிட்டு வருஷவாரியில் குயிட்ரெண்டு செலுத்தவேண்டிய அவசியத்திற்குட்படாமலிருக்கலாம்.

இனம் நிலங்கள் அனுபோகம் அற்றுப்போய் இதுவரையில் யாதொரு பைஸல் செய்யப்படாதிருந்தால் அவைகளை எப்படிபைஸல் செய்வதென்பது.

10. எந்த இனம்நிலங்களின் அனுபோகதாரர்களானவர்கள் இறந்துபோயிருந்து அந்த இனம் நிலங்கள் அனுபோகமற்றுப்போனதாக பைஸல்செய்யப்படவேண்டியிருந்தால் அடியில்கண்டவிதமாய் அவைகள் பைஸல் செய்யப்படும்.

இப்போது பாத்தியதை கொண்டாடுகிறவனானவன் இறந்துபோன இனாம்தாரனிட நேரான வார்சுதாரனாகவாவது அல்லது அவனிட வம்சத்தில் பிறந்த அவிபக்தனான வார்சுதாரனாக இருந்தால்.

(1) இறந்துபோன இனாம்தாரனிட இனாம் நிலத்திற்கு, தற்காலத்திலுள்ள விதிகளை அனுஸரித்து, பாத்தியஸ்தர்களாகக்கூடிய அவனிட நேரான ஸந்ததிவார்ஸ்தார்களாவது அவிபக்தசகோதரர்கள் அல்லதுதாயாதிகளாவதுஇருந்தால் அப்பேர்ப்பட்ட வாரசுதார்கள் பேரில் அந்த இனாமானதுஸ்திரப்படுத்தப்படும்; மேலும், (இறந்துபோன) இனாம்தாரனானவன் முதலில் அடமானம் செய்யப்பட்டவனிட ஸந்ததியானாய் இருந்தால் 5-வது விதியில்கண்ட நியமங்கள்பிரகாரமும், அல்லது பராதீனத்தினால் இனாம் நிலத்தை சம்பாதித்திருந்தால் 7-வது விதியில் 2-முதல் 5-வரையிலுள்ள வாக்கியங்கள்பிரகாரமும், ஸ்வாதீனமான சொத்தாகமாற்றிக்கொள்ளப்படும்பொருட்டு அப்பேர்ப்பட்ட வார்ஸ்தார்களுடன் எற்பாடு செய்துகொள்ளப்படும்.

இப்போதுபாத்தியதை கொண்டாடுகிறவனானவன் இறந்துபோன இனாம்தாரனிட பாகம்செய்துகொண்ட தாயாதியாகவாவது இதர பந்துவாகவாவது இருந்தால்.

(2) இறந்துபோன இனாம்தாரனுக்கு நேரான வார்ஸ்தார்கள் இல்லாமலும்ஆகிலும் ஹிந்துலா (ஹிந்து மதசட்டம்) பிரகாரம் வார்ஸ்தார்களாக ஆகக்கூடிய பாத்தியதையுள்ளவர்களும் பாகம்செய்துகொண்ட குடும்பஸ்தர்களுமான தாயாதிகள்அல்லதுசகோதரனிட பிள்ளைகளாகஇருந்து ஆகிலும்தற்காலத்திய உத்திரவுகளை அனுஸரித்து இனாம்நிலத்தை தொடர்ந்தடமானம் எப்போதும் செய்விக்காமலிருந்திருந்தாலும் 7-வது விதியில்கண்ட குயிட்ரெண்டு வீதங்களுக்குட்பட்டு பரம்பரையாய் ஸ்வாதீனமான நில்மாக அப்பேர்ப்பட்ட வார்ஸ்தார்கள் பேரில் இனாம்நிலங்கள் ஸ்திரமான அடமானம் செய்யப்படும்; அவர்களிட இஷ்டானுஸாரங்களைப்பற்றி நிமித்தியமில்லாமலே சர்க்காரிடபாத்தியதைகளுக்குப் பிரதி பலனாக அப்பேர்ப்பட்ட குயிட்ரெண்டு விதிக்கப்படும்.

குறிப்பு:—அனுபோகத்தில் இந்த விதியானது கொஞ்சம் மாறுதல் செய்யப்பட்டது: பாகம் செய்துகொண்ட வம்சஸ்தார்களாகிய தாயாதிகளும் சகோதரரிட பிள்ளைகளும் முதல்அடமானதாரனிட ஸந்ததியார்களாயிருக்கும் பக்ஷத்தில் $\frac{1}{4}$-(கால்) பங்கு தீர்வை விதிக்கப்பட்டது அப்படிக்கு இல்லாத விஷயத்தில் $\frac{1}{2}$ (அரை) பங்கு தீர்வை விதிக்கப்பட்டது.

இறந்துபோன இனாம் தாரனுக்கு எவ்வித வார்ஸ்தார்களும் இல்லாமலே போனால்.

(3) இறந்துபோன இனாம்தாரனுக்கு எவ்வித வார்ஸ்தார்களும் இல்லாமலே போனால், இனாம் நிலத்திற்கு பூரா தீர்வையும்விதிக்கப்படும்.

அனுபோக முடிவு பெற்ற இனும் நிலங்களை தற்கால அனுபோகஸ்தர்களுக்கு சர்க்கார் உத்திரவின் பேரில் துடர்ந்தடமானம் செய்வது; 1-ஆயுஸ் பரியந்தம்.

11. யாதொரு அனுபோக மற்றுப்போன இனும் நிலத்தை எந்த ஆஸாமிகளுக்காவது அவர்களிட ஆயுஸ் பரியந்தம் அனுபவித்து வரும்படி சர்க்காரால் விடப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட ஆஸாமிகள் தங்களுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் தங்களிட அவ்வித காணியாக்ஷியை ஸ்வாதீனம் செய்துகொள்ளலாம், அப்படி ஸ்வாதீனம் செய்து கொள்வதற்காக செலுத்தவேண்டிய குயிட்ரென் டெவ்வளவென்றால், ஸந்தானமில்லாத இனும்தார்கள்விஷயமாய் 5-வது விதியில் 5-வது வாக்கியத்தில் ஏற்படுத்தப்பட்ட வீதப் பிரகாரம் (அதாவது அந்த நிலத்தின் தீர்வையில் அரைபங்கு.)

2. வியக்தமாய் யாதொரு காலம் வரையில் என்று இராமலும் பின்னிட்டு செய்யப்படும் ரிபோர்ட்டுக்குட் பட்டும்.

(2) ஆயுஸ் பரியந்தம் என்கிற அப்பேர்ப்பட்ட வியக்தமான நிர்ப்பந்தமில்லாமலே சர்க்காரால் துடர்ந்தடமானம் செய்யப்பட்ட இனும் நிலங்களானவை, அவைகளிட தற்கால அனுபோகதாரன் இறந்துபோகுமேல் அவைகளைப்பற்றி ரிபோர்ட்டு செய்யவேண்டியிருந்தாலும் செய்யவேண்டியிராமற்போனாலும், 5 - வது விதியில் கண்ட நியமங்கள் பிரகாரமாகவோ அல்லது 7 - வது விதியில் கண்ட நியமங்கள் பிரகாரமாகவோ அததற்கு தக்கபடி பைசல் செய்யப்படும்.

12. இந்த விதிகளை அனுஸரித்து விதிக்கப்படவேண்டிய குயிட்ரெண்டானது பாத்தியதைகளை நீடித்து அனுபவிப்பதற்குப் பிரதி பலனாகிய ஈடானதாக பாவிக்கப்படுகிறதாகையால் முன்னாடியாகவே இனும் நிலத்திற்கு பெடிகா அல்லதுஜோடி என்றதீர்வை விதிக்கப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட தீர்வையைத்தவிர மேற்கண்ட குயிட்ரெண்டும் விதிக்கப்படும்.

ஆனால் அப்படி விதிக்கப்படும் குயிட்ரெண்டானது இனும் தாரனிட பாத்தியதைகளை அனுஸரித்து வெவ்வேறு மாதிரியாக இருக்கும்; இனும் நிலத்தின் பூரா தீர்வையும் அனுஸரிக்காமல் அப்பேர்ப்பட்ட பூரா தீர்வைக்கும் முன்னாடி விதிக்கப்பட்டிருக்கும் ஜோடிக்கும் உள்ள வித்தியாஸத்துகையை—(இந்ததுகைதான் இனும் தாரனுக்கு இனும் நிலத்திலுள்ள பாத்தியதையின் மதிப்பாகிறது)—அனுஸரித்தே மேற்கண்ட குயிட்ரெண்டானது விதிக்கப்படும்.

20-வருஷத்தியகுயிட்ரெண்டை செலுத்திவிட்டு வருஷவாரி குயிட்ரெண்டு (செலுத்துவதை) தவிர்த்துக் கொள்ளலாம்.

13. நிலத்தில் விதிக்கப்பட்டிருக்கிற பெடிகாவையும் குயிட்ரெண்டையும் அவைகளின் மொத்தத்தின் 20-வருஷ துகையைமேலே 9-வது விதியில் கண்ட பிரகாரம் செலுத்திப்போட்டு வருஷவாரியில் குயிட்ரெண்ட் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

50 - வருஷ காலத்திற்குட்பட்டு விடப்பட்டிருக்கிற இனும் நிலங்களை எப்படி பைஸல் செய்யவேண்டு மென்பதைப்பற்றி.

14. 50-வருஷத்திற்குட்பட்டு விடப்பட்டவைகள் பெரும்பாலும் அடியில் கண்ட வகுப்புகளில் சேர்ந்தவை, அதாவது:—

1-வது இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரால் வியக்தமாய் அதிகாரம் செய்யப்பட்டு விடப்பட்ட இனும் நிலங்கள்.

2-வது, மேலாவிகளிட அனுமதியில்லாமல் கீழ் ரெவினியூ உத்தியோகஸ்தர்கள், குத்தகைதாரர் முதலானவர்களால் ஒழுங்கீனமாய் அடமானம் செய்யப்பட்ட இனும் நிலங்கள்.

3-வது, ஜமீன்தார்கள் பாளையதார்கள் முதலானவர்களால் விடப்பட்டும் அவர்களிட எஸ்டேட்கள் கவர்ன்மெண்டாரைச் சேரும்போது கவர்ன்மெண்டாரால் உடனே தங்கள் வசமாக்கிக் கொள்ளப்படக் கூடிய இனும் நிலங்கள் அடியில்கண்ட மாதிரியாய் பிரதி வகுப்பையும் பைசல் செய்யப்படும்.

(1-வது) இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரால் வியக்தமாய் அதிகாரம் செய்யப்பட்டு விடப்பட்ட இனும் நிலங்கள்.

15. இங்கிலீஷ் கவரன்மெண்டாரால் வியக்தமாய் அதிகாரம் செய்யப்பட்டு விடப்பட்ட இனும் நிலங்களானவை அவைகளை அடமானம் செய்தபோது கொடுக்கப்பட்ட ஸன்னதுகளிலும் அல்லது அவைகள் சம்பந்தமான சர்க்கார் கடிதப் போக்குவரத்துகளிலும் கண்ட ஷரத்துகள் பிரகாரம் பைஸல் செய்யப்படும்.

1-ஒரு வம்சஸ்தன் ஆயுஸ் பரியந்தமாவது அல்லது ஜாஸ்தி பேர்களிட ஆயுஸ் பரியந்தமாவது.

2-ஒரு வம்சஸ்தனிட ஆயுஸ் பரியந்தம் வரையிலாவது அல்லது ஜாஸ்தி பேர்களிட ஆயுஸ் பரியந்தம் வரையிலாவது அனுபவிக்கும்படி விடப்பட்ட இனும் நிலங்களாயிருந்தால், மேற்கண்ட விதிகள் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டகுயிட்ரெண்டு வீதங்களில் தன் விஷயத்தில் சம்பந்தப்பட்ட வீதங்கள் பிரகாரம் தற்கால் இனும்தாரனுனவன் தன்னிட காணியாக்ஷியை ஸ்வாதீனமான காணியாக்ஷியாக மாற்றிக்கொண்டாலொழிய பலான நபர்களிட ஆயுஸ் பரியந்தமென்று விடப்பட்ட மேற்குறித்த நபர்கள் இறந்து போனதின் மேல் அப்பேர்ப்பட்ட இனும் நிலங்களுக்கு பூரு தீர்வையும் விதிக்கப்படும்.

2-அவ்விதமான நிர்ப்பந்த அளவை யில்லாமல்.

3-பரம்பரையாயும் நிரந்தரமாயும் விடப்பட்ட இனும் நிலங்களாயிருந்தால், 50-வருஷத்திற்கு முன் விடப்பட்ட இனும் நிலங்களைப் போலவே, அவைகள் மதசம்பந்தமாயும் தர்மகாரி

யத்திற்காகவும் அல்லது ஒருவனிட சொந்த உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கிறதை அனுஸரித்து 3, 4, 5, 7-வது விதிகள் பிரகாரம் பைஸல் செய்யப்படும்.

(2 - வது) மேலாவிகளிட அனுமதி யில்லாமல் கீழ் ரெவினியூ உத்தியோகஸ்தர்களால் ஒழுங்கீனமாய் அடமானம் செய்யப்பட்ட இனும் நிலங்கள்.

16. கவர்ன்மெண்டாரிட அனுமதியன்றியில் ஒழுங்கீனமாய் கீழ் ரெவினியூ உத்தியோகஸ்தர்களால் விடப்பட்ட இனும் நிலங்களானவை அடியில் விவரிக்கப்பட்ட ஸந்தர்ப்பங்களை அனுஸரித்துப் பைஸல் செய்யப்படும்.

மோசடியாய் சம்பாதிக்கப் பட்டிருந்தால்.

2-யாதொரு இனும் நிலமானது மோசடியாய் சம்பாதிக்கப்பட்டதாக ஏற்பட்டால் அதற்கு பூரு தீர்வையும் விதிக்கப்படும்; ஆனுல், இனும் நிலத்தின் தற்கால அனுபோகதாரனுனவன் மோசடியான காரியங்களில் சேராதவனுயிருந்தால் இனும் நிலத்தின் தீர்வையில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல்படாமல் குயிட்ரெண்டு விதித்து இனும் நிலத்தை பரம்பரையான ஸ்வாதீன சொத்தாக அடமானம் செய்யப்படும்.

மோசடியாய் சம்பாதிக்கப்பட்டதல்ல வென்றுல்.

3. யாதொரு இனும் நிலமானது மோசடியாய் சம்பாதிக்கப்பட்டதல்லவென்று ஏற்பட்டு நீண்டகாலமாய் அனுபவிக்கப்பட்டு வருகிற காரணத்தை முன்னிட்டு அனுகூலமான யோசனை செய்யப்பட வேண்டியது கிரமமாய்த் தோன்றினுல், 5-வது விதியில்கண்ட பிரகாரம் உயர்ந்தகுயிட்ரெண்டுவீதம் அதாவது தீர்வையில் ½ பங்கு விதிக்கப்பட்டு இனும் தாரனிட பரம்பரையான சொந்த சொத்தாக ஸ்திரப்படுத்தப்படும்.

4. பலான இனும் மோசடியாய் சம்பாதிக்கப்பட்டதென்பதைப்பற்றியும் பலான இனும் மோசடியாக சம்பாதிக்கப்படவில்லை என்பதைப்பற்றியும் தீர்மானம் செய்ய வேண்டியதானது கவர்ன்மெண்டாரிட அதிகாரத்துக்குட்பட்டு இனும் கமிஷனரைச் சேர்ந்தது.

3-வது ஜமீன்தார், பாளையகார் முதலானவர்களால் ஒழுங்கீனமாய் விடப்பட்ட இனும் நிலங்கள்.

17. ஜமீன்தார், பாளையகார் முதலான நிலதார்களால் இனும் விடப்படுவதானது 1802-ஆூத்திய 25-வது சட்டத்தின் 12-வது பிரிவில்கண்ட நியமங்களுக்கு விரோதமானதாகையால் அப்படி விடப்பட்ட இனும் நிலங்கள் கண்டிப்பாய் செல்லாதவைகளாகும், அந்த இனும் நிலங்களைப்பற்றி கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்ததின்மேல் அவைகள் பெரும்பாலும் சர்க்காரால் திரும்ப வசப்படுத்திக்கொள்ளப்பட்டு வருகின்றன. கவன்மெண்டாரிட

அனுமதியன்றியில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் விடப்பட்ட இனாம்நிலத்தை பைஸல்செய்யும் விஷயமாய் **16**-வது விதியில்கண்ட பொது நியமங்களை அனுஸரித்து அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடிமேற்கண்ட (அதாவதுஜமீன்தார்களால்விடப்பட்ட) இனாம்நிலங்கள்பைஸல்செய்யப்படும்.

III. ரெவினியூ போலீஸ்டிபார்ட்மெண்டுகளில் இனிமேல்செய்யப்பட்டு வராமலாவது அல்லது அப்படி செய்யப்பட வேண்டியதில்லாமலாவதுஇருக்கிற ஊழியங்களுக்கு பிரபலனாக முற்காலத்திய கவர்ன்மெண்டுகளால் செய்யப்பட்ட இனாம் இவைகள் 2-வகுப்புகளானவை.

18. ரெவினியூ டிபார்ட்மெண்டிலும் போலீஸ் டிபார்ட்மெண்டிலும் இப்போது முழுமையுமாகவாவது ஓர் பாகமாவது செய்யாமல் நிறுத்திவிடப்பட்ட ஊழியங்களுக்குப் பிரதி பலனாக (சம்பளமாக) முற்காலத்திய கவர்ன்மெண்டார்களால் அடமானம் செய்யப்பட்ட இனாம் நிலங்கள் 2 - வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது :— இங்கிலீஷ் கவரன்மெண்டாரிட அரசாட்சி ஆரம்பித்த பிற்பாடு இனி செய்யவேண்டியதவசியமாயிராத ஊழியங்களாயிருந்து அவைகளுக்கு பிரதிபலனாக நிலமாகவாவது பணமாகவாவது இனாமாக ஒருவனிட சொந்த அனுபோகத்துக்காக விடப்பட்டவைகள்.

இரண்டாவது:—யாதொருவேலைகள்செய்வது அபுரூபமாகவாவது அல்லது அப்பேர்ப்பட்ட வேலைகள் பொதுஜன உபயோகத்திற்குக் கூடாமையாகவாவது இருந்தால் அப்பேர்ப்பட்ட வேலைகளைச்செய்து வரவேண்டியதென்ற ஷரத்தின்பேரில்விடப்பட்ட இனாம் நிலங்கள் பிரதிவகுப்பும் அடியில்கண்ட விதிகள்பிரகாரம் பைஸல்செய்யப்படும்:—

முதலாவது வகுப்பைச்சேர்ந்த இனாம்நிலங்களை பைஸல்செய்யும் விதம்.

19. திரும்ப சர்க்கார் வசப்படுத்திக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கும் ஸ்வதந்தரங்களுக்கும் பதிலாகவும் அடியோடு நிறுத்திவிடப்பட்ட வேலைகளாகிய தெஸ்முக், தெஸ்பந்தி முதலான வேலைகளுக்கு பதிலாகவும் விடப்பட்ட இனாங்களானவை வேலைகளுக்காகப்பிரதிபலனாகவிடப்பட்டதாக பாவிக்கப்படாமல் ஜீவனோமார்க்கத்திற்காக விடப்பட்டவைகளாக பாவிக்கப்படுமாகையால் அவைகள் பரம்பரையாய் அனுபவிக்கக்கூடியதென்று கவர்ன்மெண்டாரால் வியக்தமாய் சொல்லப்பட்டிருந்தாலாவது அல்லது வழங்கி வரும் மாமூல்பிரகாரம் ஏற்பட்டாவது இருந்தால், **5**-வது விதியைஅனுஸரித்து அப்பேர்ப்பட்ட இனாம்நிலங்கள் பைஸல்செய்யப்படும் ஆனால் பலான நபர்கள் ஆயுஸ்பரியந்தந்தான் அனுபவிக்கப்படவேண்டியதென்று குறிப்பிட்டிருந்தால் அவ்விதமாய் அவைகள் பைசல்செய்யப்படும்.

2-வது வகுப்பைச்சேர்ந்த இனும்நிலங்களை பைஸல்செய்வது.

20. ரெவினியூ டிபார்ட்மெண்டிலாவது அல்லது போலிஸ் டிபார்ட்மெண்டிலாவது, செய்வது அபுரூபமாகவாவது அல்லது செய்யாமலே நிறுத்திவிடுவது யுக்தமாகவாவது இருக்கிற ஊழியங்களுக்காக அனுபவித்துவருகிறஇனும்நிலங்களைசொந்த உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கிற இனும்நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிற உயர்ந்தவீதத்திற்கு மேற்படாத குயிட்ரெண்டைச் செலுத்தவேண்டியதற்குட்பட்டு இனும்தார்களுக்கு ஸ்வாதீனமான சொத்தாக ஸ்திரப்படுத்தப்படும்; மேற்கண்டபடி இனி செய்யவேண்டியதில்லையென்று நிறுத்திவிடப்படும் ஊழியத்திற்குப் பிரதிபலனாகவும் இனும்நிலத்தை திரும்ப வசப்படுத்திக்கொள்ள சர்க்காருக்குள்ள பாத்தியதைக்குப் பிரதிபலனாகவும் இந்த குயிட்ரெண்டானது விதிக்கப்படும்; பிரதிஜில்லாவிலும் செய்யப்படும் ஊழியத்தின் தன்மையையும் அதின் ஸந்தர்ப்பங்களையும் அனுஸரித்து மேற்கண்டபடி பிரதிபலனாக விதிக்கப்படவேண்டியவீதமும் முறைமையும் நிர்ணயிக்கப்படும்.

2. முன்னாடியாகவே எவ்விதமான குயிட்ரெண்டாவது விதிக்கப்பட்டிருந்தால் ஜாஸ்திவரி போடும்பொருட்டு கணக்கிடவேண்டிய மாதிரியானது **12**-வது விதியில்கண்டபிரகாரம்தான்.

IV.(4) கிராமஊழியத்திற்காக விடப்பட்ட இனும்நிலங்கள் 1-வது இன்னமும் செய்துவரும்ரெவினியூ அல்லது போலீஸ் உழைப்புகளுக்காககிராம நவுக்கர்களால் அனுபவிக்கப்பட்ட இனும் நிலங்கள்.

21. இன்னமும் செய்துவரவேண்டியிருக்கிற ரெவினியூ அல்லது போலீஸ் சம்பந்தமான கிராமவேலைகளை செய்துவருவதற்காக விடப்பட்ட இனும்நிலங்களானவை அந்தவேலைகளை பார்த்துவருகிறவர்கள்பேரில் அனுபோக அடமானம்செய்யப்படும். செய்யவேண்டியஊழியத்தை யோசித்துப்பார்க்கையில் இந்த இனும் நிலங்களானவை ஜாஸ்தியாயிருந்தால், குறித்த உயந்தபக்ஷம் அளவுக்கு மேற்பட்ட (இந்த அளவானது ஜில்லாகலெக்டருடனாவது அல்லது ரெவினியூ போர்டாருடனாவது போலீஸ் கம்மிஷனருடனாவது கலந்து கவர்ன்மெண்டார் அனுமதியின்பேரில் ஏற்படுத்தப்படும்,) ஜாஸ்தியானது 2 - வது விதியை அனுஸரித்து பைஸல்செய்யப்படும்:—அதாவது அப்படிப்பட்ட ஊழியம் செய்வதற்காக அனுபோகித்துவருவதற்கு பிரதிபலனாகவும் இனும்நிலமானது திரும்ப சர்க்கார் வசமாகக்கூடிய சர்க்காருக்குள்ள பாத்தியதைக்குப் பிரதிபலனாகவும் அந்த ஜாஸ்திக்கு குயிட்ரென்ட் விதிக்கப்படும்.

2. ஊழியத்திற்காக விடப்பட்டஇனும் முழுமையுமாவது ஓர் பாகமாவது ஊழியம் செய்துவராத குடும்பத்தின் நபர்களிட அனுபோகத்திலாவது அல்லது பராதீனத்தினால் சம்பாதித்தும் ஊழியம்செய்து வராமலுமிருக்கிற அன்னியர்களிட அனுபோகத்திலாவது இருக்குமாகில்—(இவைஇரண்டும்

ஒழுங்கீனமானவைகள்)— பராதீனப்படுத்தப்பட்ட இனும்நிலத்தில் எவ்வளவுபாகம் கிராமஊழியத்தை சரியாகச் செய்துவரத் தேவையென்று தோன்றக்கூடுமோ அவ்வளவுபாகம் வேலைபார்த்து வருகிறவர்களுக்கு விடப்பட்டு மீதியானது மேல்வாக்கியத்தில் பிரஸ்தாபிக்கப்படலான ஜாஸ்திநிலத்தை பைஸல்செய்யும் விதமாகவே பைஸல்செய்யப்படும்.

21-வது ஸெக்ஷன்பிரகாரம் அனுபோகத்தில் அனுஸரிக்கப்படவில்லை. ஸெட்டில்மெண்டு டிபார்ட்மெண்டாரால் ஸெட்டில்மெண்டு செய்யப்பட்டு வரும் ஜில்லாக்களிலுள்ள கிராமஉத்யோகஸ்தர்களிட ஊழியத்திற்காக விடப்பட்ட இனும்நிலங்களானவை தீர்வையில் 8-ல் 5 பங்குவீதம் (அதாவது அந்தநிலங்களில் தீர்வைக்கும் அவைகளுக்கு ஜோடி விதிக்கப்பட்டிருந்தால் அந்த ஜோடிக்கும் உள்ள வித்தியாஸத்தில் 8-ல் 5-பங்குவீதம்) பெரும்பாலும் என்பிரஞ்சைஸ் செய்யப்பட்டன. என்பிரஞ்சைஸான இனும்நிலங்களுக்கு விதிக்கப்படும் குயிட்ரெண்டை கணக்கிடுவதற்காக அடியில்கண்டவிதிகள் ஏற்படுத்தப்பட்டன:—

(1) குயிட்ரெண்டும் முன்விதிக்கப்பட்டிருக்கும் ஜோடியும் இரண்டும் சேர்ந்து இனும்நிலத்தின் பூராதீர்வையின் முக்கால்பங்கைவிட ஜாஸ்தியாயிருந்தால், ஜோடியும் குயிட்ரெண்டும்சேர்ந்து தீர்வையில் முக்கால்பங்கு இருக்கும்படியாய் சரிப்படுத்த எவ்வளவுபாகம் குயிட்ரெண்டை குறைக்க வேண்டியதவசியமாயிருக்குமோ அவ்வளவுபாகம் குயிட்ரெண்டை குறைவு செய்யவேண்டியது.

(2) இப்போது விதிக்கப்பட்டிருக்கிற ஜோடியானது பூரா தீர்வையின் $\frac{3}{4}$ பங்குக்கு சமமாகவாவது அல்லது மேற்பட்டதாகவாவதிருக்குமாகில் என்பிரன்சைஸ்மெண்டு செய்ததற்காக குயிட்ரெண்டும் விதிக்கப்படக்கூடாது. ஜோடியிலும் குறைவு செய்யக்கூடாது.

(3) இப்போது விதிக்கப்பட்டிருக்கிற ஜோடியானது பூரா தீர்வையின் $\frac{3}{4}$ பங்குக்கு சமமாயாகவாவது அல்லது மேற்பட்டதாகவாவதிருக்குமாகில் இனும் நிலத்திற்குப் பூரா தீர்வையும் செலுத்தி இனும் பட்டய சாஸனத்தைப்பெற்றுக்கொண்டு அனுபோகித்து வரவாவது அல்லது பூரா தீர்வையும் செலுத்தி ரயத்வாரி பட்டாவைப் பெற்றுக்கொண்டு அனுபோகித்து வரவாவது இவை இரண்டில் இனும் தாரனுக்கு எது இஷ்டப்பட்டிருக்கிறதோ அந்தமாதிரி செய்துகொள்ள இடம் கொடுக்கவேண்டியது.

(4) 8-வது விதியின் 3-வது வாக்கியத்தை அனுஸரித்து குயிட்ரெண்டை கணக்கிடுவதில் ஒன்றுக்குகீழ்ப்பட்ட பின்னங்களை பிரதிவிஷயத்திலும் அடித்து விடவேண்டுமே யல்லாமல் அரைக்கு மேல்பட்ட பின்னங்களை முழு எண்ணாக கணக்கிடக் கூடாது.

22. கிராமத்திய பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்யும் கம்மாளர் முதலானவர்கள் அனுபவித்துவரும் இனங்கள் பரம்பரையாய் அனுபவிக்கும்படி விடப்பட்டவைகளாக பாவிக்கப்பட்டு எந்த விதமான ஊழியத்தைச் செய்து வருவதற்காக இந்த இனங்கள் விடப்பட்டனவோ அந்த ஊழியத்தை தொடர்ந்து செய்து வரவேண்டியதென்பதற்குட்பட்டு இனங்களின் அனுபோகதாரர்களுக்கும் அவர்களிட சந்ததி வாரஸ்தார்களுக்கும் ஸ்திரப்படுத்தப்படும்.

கிராமத்திய பொதுஜனங்களுக்கு ஊழியம் செய்யும் கம்மாளர் முதலானவர்கள் அனுபவித்துவரும் இனங்கள்.

2. மேற்கண்ட விசமான ஊழியம் இனிமேல் தேவையிராமலிருக்கிற விஷயங்களை 20-வது விதியை அனுஸரித்து பைசல் செய்யப்படும்; விஸ்தீரணத்தில் இருக்கும் ஜாஸ்தியை 21 - வது விதியை அனுஸரித்துப் பைசல் செய்யப்படும்.

23. ஜமீன்தாரிகளிலும் இதர சொந்த ஆஸ்திகளிலும் உள்ள இனம் நிலங்களில் எவைகள் ஸ்திரமான பைஷ்கஷ் தீர்வை ஏற்படுத்தப்பட்ட ஆஸ்திகளிலிருந்து விலக்கப்பட்டும், 1802-ம் ஞூத்திய 25 - வது சீர்திருத்தச் சட்டத்தின் 4-வது பிரிவு பிரகாரம் கவர்ண்மெண்டாரையே சேரவேண்டியவைகளுமாய் இருக்கின்றனவோ அவைகள் இப்போது விசாரித்து நடத்தப்படும் இனம் ஸெட்டில் மெண்டில் சேர்க்கப்பட்டு கெவர்ண்மெண்டு தாலூகாக்களிலுள்ள அம்மாதிரி இனம் நிலங்களைப் பைஸல் செய்வதற்காக என்னவிதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அதே விதிகளை யனுஸரித்து இனம் கம்மிஷனரால் பைஸல் செய்யப்படும்; ஆனால் ஸ்திரமான ஸெட்டில் மெண்டு செய்யப்பட்ட பிறகு எஸ்டேட்டுகளின் சொந்தகாரர்களால் மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட சட்டத்தின் 12-வது பிரிவில் கண்ட நியமனங்களுக்கு விரோதமாய் விடப்பட்டிருக்கக் கூடிய இனம் நிலங்களைப்பற்றி மேல் கண்ட விதமாய் விசாரணை செய்யப்படமாட்டாது. ஆனால் சொந்தக்காரர்களிட எஸ்டேட்டுகளானவை இனி எப்போதாவது கெவர்ண் மெண்டாரைச் சேரும் பக்ஷத்தில் அந்த எஸ்டேட்டுகளிலுள்ள இனம் நிலங்களைப்பற்றி விசாரணை செய்யப்படும்.

(ஜமீன் தாரிகளிளாலாவது அல்லது சொந்த எஸ்டேட்டுகளிலாவது உள்ள இனம் நிலங்களைப் பைஸல் செய்யும் விதம்.)

24. இனம் என்கிற பதமானது நிலத்தீர்வை கொஞ்சம்கூட செலுத்தாமலாவது அல்லது அனுகூலமான குயிட்ரெண்டைச் செலுத்தியாவது அனுபவித்து வரும்சுரோத்திரியங்கள், அக்கிரகாரங்கள், முழு இனம் கிராமங்கள், இவைகளுக்குச் சம்பந்தப்பட்டதாகபாவிக்கப்பட வேண்டியது ; சிறிய இனம் நிலங்களைப் பைஸல்செய்வதற்கு என்ன

இனம் என்கிற பதமானது நிலத்தீர்வை முழுமையுமாவது ஓர் பாகமாவது விதிக்கப்படாமல் விலக்கப்பட்டிருக்கிற சிறிய கைப்பற்று நிலங்களுக்கும் முழு கிராமங்களுக்கும் சம்பந்தப்பட்டது.

விதிகள் எற்பட்டிருக்கின்றனவோ அதே விதிகளை யனுஸரித்து அப்பேர்ப்பட்ட கிராமங்களை பைஸல் செய்யவேண்டியது.

ரிஜிஸ்டரில் தாக்கலாயிருக்கிற அனுபோக தாரனை வைத்துக்கொண்டாவதுஇனும்நிலத்தைஅனுபோத்து வரும் குடும்பத்தின் தலைமை ஆஸாமியை வைத்துக் கொண்டாவது இனும் ஸெட்டில்மெண்டு செய்யப்பட வேண்டியது.

25. ரிஜிஸடரில் தாக்கலாயிருக்கிற இனும் தார்களை வைத்துக் கொண்டாவது அல்லது ரிஜிஸ்டரில் யாதொரு பெயரும் தாக்கல் செய்யப்படாமற்போனால் இனும் நிலத்தை அனுபோகித்து வரும் குடும்பத்தின் தலைமை ஆஸாமியைவைத்து கொண்டாவது (குடும்பத்தின் தலைமை ஆஸாமி மாதிரமே ஸர்க்காருக்கு ஜவாப்தாரியாக பாவிக்கப்படுவான்) இனும் ஸெட்டில்மெண்டு செய்யப்படும்.

ஆனால் குடும்பத்தின் தலைமை ஆஸாமியுடன் கலந்து புது ஸெட்டில்மெண்டு பிரகாரம் இனும் நிலத்திற்கு விதிக்கப்படக் கூடிய குயிட்ரெண்டு அல்லது இதர நிபந்தனைகளுக்குட்பட்டு குடும்பத்திலுள்ள இதர ஆஸாமிகளுக்கு இனும் நிலத்திலுள்ள உட்பங்குகளை அனுபவிக்கும் விஷயத்தில் மேற்சொன்ன விதியை அனுஸரித்துப் பிரவேசிக்கப் படமாட்டாது.

குறிப்பு:—பாகம் செய்துகொண்ட குடும்பங்கள் விஷயத்தில் இனும் நிலத்தை அனுபவித்துவரும் ஆஸாமிகள் பெயரெல்லாம் ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்டன.

இனும் தார்களை தங்கள் இனுங்களை கைவிட்டு விட்டாலாவது அல்லது அவர்கள் ஆஜராகாமல் போனலாவது அப்பேர்பட்ட விஷயங்களில் நடந்துகொள்ள வேண்டியதைப்பற்றி.

26. யாதொரு இனும்நிலத்திற்கு சொந்தக்காரனென்று சொல்லப்பட்ட ஆஸாமியானவன் ஜீவித்திராமற்போவதனுலாவது அல்லது அப்படி ஜீவித்து இருந்தும் இனும் நிலம் தன்னுடையதென்று பாத்தியதை கொண்டாடும்பொருட்டு பகிரங்கமாய் ஆஜராகாமற் போவதனுலாவது யாதொரு இனும் நிலமானது சர்வார்த்தமாய் அடியோடே கைவிடப்பட்டும் இனும்நிலத்திற்கு சொந்தகாரன் பலானவனென்று ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்ட ஆஸாமிக்கு கிரமமாய் நோட்டீஸ் அனுப்பிய பிற்பாடும் அவன் தன்னிட பாத்தியதையை ருஜூபிக்கத் தவறிப் போகும் பக்ஷத்தில், முதலில் அப்பேர்ப்பட்ட இனுமானது ஜில்லா கலெக்டரால்ஜப்தி செய்து வைக்கப்படும்; நோட்டீஸ் தேதிமுதல் ஒருவருஷம் சென்ற பிறகு 1802-ஸூத்திய 31-வது சீர்திருத்த சட்டபிரகாரம் கலெக்டர்களுக்கு வகிக்கப்பட்டிருக்கும் பொது அதிகாரங்களை அனுஸரித்து (கலெக்டரால்) பூரா சர்க்கார் தீர்வையும் விதிக்கப்படத் தக்கதாய் பாவிக்கப்படும்.

பிறர் எல்லைக்குள் பிரவேசித்து சேர்த்துக்கொண்ட நிலங்களைப்பற்றி ரிஜிஸ்டர் அல்லது (அளவுக்கு மிஞ்சி) ஜாஸ்தியாயிருக்கப்பட்ட நிலத்தைப்பற்றி.

27. கணக்கில் தாக்கலாயிருக்கிற விஸ்தீரணத்திற்கு மேற்பட்டிருக்கிற நிலம் அல்லது பிறர்எல்லைக்குள் பிரவேசித்து சேர்த்துக்கொண்டநிலங்கள் 50 வருஷகாலமாய் அனுபவிக்கப்பட்டதென்று ருஜுப்படுத்தப்படும்பக்ஷத்தில் அசல் இனும்நிலத்தின் ஓர்பாகமாகப்பாவிக்கப்படும். 50 - வருஷத்திற்கு குறைவுபட்டதாயிருந்தால் ஜாஸ்திநிலத்திற்கு அதின் ஸந்தர்ப்பங்களுக்குத்தக்கபடியும், ஆகிலும் தீர்வையில் மூன்றில் இரண்டுபங்குக்கு மேற்படாமலும், குயிட்ரெண்டுவிதிக்கப்படும்; ஆனால் அஸல் அனுபோகதாரனனவன் மோசடியானகாரியங்கள் எதாவது செய்துஇருப்பதாய் ஏற்படும்பக்ஷத்தில் பூராதீர்வையும் விதிக்கப்படும்.

குறிப்பு:—கணக்குகளில் தாக்கல்செய்யப்பட்டிருக்கும் ஜாஸ்திஅளவுகளுக்கு இந்த விதியானது ஸம்பந்தப்பட்டது; ஸர்வேசெய்யும்போது ஏற்பட்ட ஜாஸ்திஅளவானது 124 - ம் நெம்பர் போர்டாரிட ஸ்டாண்டிங்கு ஆர்டர் பிரகாரம் பைஸல் செய்யப்படும்.

ஸ்வாதீனமான சொத்தாகமாற்றிக்கொள்ளப்பட்ட இனும்நிலங்கள் விஷயமாய் வேறே யாதொருவிதமாயும் பிரவேசிக்கக்கூடாதென்பதைப்பற்றி.

28. மேலேகண்ட விதிகளை அனுஸரித்து ஸ்வாதீனமான சொத்தாக மாற்றிக்கொள்ளப்பட்ட இனும்நிலங்கள் விஷயமாய் அவைகளுக்குவிதிக்கப்பட்டிருக்கிறகுயிட்ரெண்டு தீர்வைகிரமமாய் வசூலாகும்பொருட்டு நடத்தவேண்டியதற்கு அவசியமான அமுல்களைத்தவிர சரக்காரால் இனி வேறே எவ்விதமாயும் பிரவேசிக்கப்படமாட்டாது; இனும்தாரனுக்கிஷ்டமிருக்கும்பக்ஷத்தில் நிலத்தின் வருஷவாரி குயிட்ரெண்டின் 20-மடங்குக்குச்சமமான ஓர் துகையை ஏககாலத்தில் செலுத்திப்போட்டால், குயிட்ரெண்டை வசூல்செய்யும்பொருட்டு சர்க்காரால் நடத்தப்படும் அமுல்களைக்கூட தவிர்த்துக்கொள்ளலாம்.

என்பிரஞ்சைஸான இனும்நிலங்களை ஸிவில்கோர்டாரிட அதிகாரத்தில் வைக்கவேண்டியதைப்பற்றி.

29. மேற்கண்டவிதமாய் வருஷவாரியில் குயிட்ரெண்டு செலுத்திவருவதினலாவது அல்லது குயிட்ரெண்டின் 20 மடங்குக்குச்சமமான துகையை ஒரேகாலத்தில் செலுத்திப்போட்டாவது என்பிரஞ்சைஸ் செய்துகொண்ட இனும்நிலங்கள் விஷயமாய் வார்ஸ்பாத்தியதை முதலானவைகளைப்பற்றித்தகரார் உண்டாகும்போதெல்லாம் மற்றவிதமான சொத்துக்களைப்போலவே சாதாரண நியாயஸ்தல கோர்டாரிட அதிகாரத்துக்குட்பட்டவைகள், தவிரவும் குயிட்ரெண்டை மொத்தமாய்செலுத்தி

தவிர்த்துக்கொள்ளாமல் போகும்விஷயங்களில் வருஷவாரியில் குயிட்ரெண்டு செலுத்துவதற்குட்பட்டு இனும்தாரனுடைய இஷ்டானுஸாரம் அந்த இனும் நிலங்களை தானுதிவிக்கிரயம் முதலானவைகள்செய்யலாம்.

இனும்காணியாக்ஷியை அங்கீகரித்துக்கொண்டதற் கடையாளமாக இனும்தாரனுக்குப் பட்டயசாஸனம் கொடுக்கப்படுவதைப்பற்றி.

30. மேற்கண்டவிதிகளை அனுஸரித்து நடத்தப்பட்டவிசாரணையில் யாதொரு இனும்நிலமானது உறுதிப்பாடானதென்று ஏற்பட்டவுடனே இனும்தாரனுக்கு ஒருபட்டயசாஸனம்கொடுக்கப்படும், இனும்நிலத்தில் அதனிட தற்கால காணியாக்ஷிபிரகாரம் இனும்தாரனுக்குள்ள பாத்தியதையை அங்கீகரித்துக் கொண்டதாகவும் அப்பேர்ப்பட்ட காணியாக்ஷியை எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு சுவாதீனமான காணியாக்ஷியாக மாற்றிக்கொள்ளக்கூடுமோ அந்த நிபந்தனைகளையும் பட்டயசாஸனத்தில் கண்டெழுதப்படும்.

குறிப்பு:—மேல்சொன்னவிதிகளையனுஸரித்து 1869-ம்ஷுத்திற்கு முன்னிட்டுகொடுக்கப்பட்ட பட்டயசாஸனங்களில் எவ்வளவுபாத்தியதை கொடுக்கப்படவேண்டுமென்றுஉத்தேசிக்கப்பட்டதோ அதற்குமேற்பட்டபாத்தியதை கொடுக்கப்பட்டதாக தோன்றியபடியால், பட்டயசாஸனங்களில் கண்டெழுதப்பட்ட யாதொரு அம்சமும் எந்தநிலங்களிலிருந்து யாதொரு இனுமானது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்தநிலங்களின் எவ்விதமான அனுபோகஸ்தர்களிட பாத்தியதைகளை விவரிப்பதாகவாவது, அல்லது அளவை குறிப்பதாகவாவது, தவறி நடக்கக்கூடுமென்றுவது, அல்லது அழிப்பதாகவாவது அல்லது இனும்தாரனைவிட பட்டய சாஸனத்தில்கண்ட வேறே எந்த நபர்களிட பாத்தியதைகளுக்கு ஹானியானதாகவாவது, பாவிக்கப்படமாட்டாது.

2. மேலும் 1869-வருஷத்துற்குமுன்னிட்டு கொடுக்கப்பட்ட பட்டயசாஸனங்களானவை விக்டோரியா அதிகாரம் 41 - சட்டம் 22, 23-பிரகாரம் இந்தியா ஸெக்டரி ஆவ்ஸ்டேட்டால் கொடுக்கப்படவில்லை, ஆனுல்விக்டோரியா அதிகாரம் 59-சட்டம் 33, 34 ஐ அனுஸரித்து இந்தக்குறைவு நீக்கப்பட்டது, கொடுக்கப்பட்டிருக்கும் பட்டய சாஸனங்களெல்லாம் செல்லுமென்றும் இதினுல் உறுதிசெய்யப்பட்டது.

3. இனும்விதிகளை அனுஸரித்தே மற்ற இனுங்களை பைஸலாத்திசெய்யும்படிக்கும் அவைகளுக்குப் பட்டய சாஸனம் கொடுக்கும்படிக்கும் உத்திரவுசெய்யப்பட்டது.

125-ம் நெ. ஆர்டர் பிரகரணம் 3]

கைவிடப்பட்ட இனும்நிலத்தின் குயிட்ரேண்டை கணக்கிடும் மாதிரி.

	தீர்வை.	குயிட்ரெண்டு.
அஸல் (அதாவது முதலில் விடப்பட்ட) இனும்	ரூபா. 16	ரூபா. 8
ஜாஸ்தி அளவுக்காக விதிக்கப்பட்டவரி ...	4	4
மொத்தம்...	20	12
கைவிடப்பட்டநிலம்—ஜாஸ்தி	4	4
இனும்	2	1
மொத்தம்...	6	5
மீதிவைத்துக்கொண்ட இனும்.	14	7

ரீவினியூ கோர்ட்டுகள்.

180-ம் ஆர்டர், பிரகரணம் 6.]

1869-ஹூத்திய சென்னை கெவர்ன்மெண்டாரிட 3-வது சட்டத்தை யனுஸரித்து பிறப்பிக்கப்படும் ஸம்மன்களின் பாரங்கள்:—

1. நேராய் ஆஜராகவேண்டியதற்காகவும் தஸ்தாவேஜுகளை ஆஜர்ப் படுத்தவதற்காகவும் பிறப்பிக்கப்படும் ஸம்மன்கள்.

.........விருக்கும்.........என்பவனுக்கு இப்போது நம்மிடமுன்பாக நடந்து கொண்டுவரும் ரிவினியூ விசாரணையில் (இந்தஇடத்தில் பலானவிஷயத்தைப்பற்றி விசாரணைசெய்யப்படுகிறதென்று சுருக்கமாய் எழுதவேண்டும்) சாக்ஷியம் சொல்லவும், அடியிற்கண்ட தஸ்தாவேஜுகளை (இந்தஇடத்தில் பலான தஸ்தாவேஜுகளென்று கூடியவரையில் சரியாய் எழுதவேண்டியது) ஆஜர்ப்படுத்தவும் நீர் ஆஜராகவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால்......... தேதியில்............மணிக்கு நம்மிடமுன்பாக நேராய் ஆஜராகும்படிக்கும், இதனால் உமக்கு கட்டளையிடப்படுகிறது; நம்மிட உத்திரவில்லாமல் அந்த இடத்தைவிட்டு நீர்போகக்கூடாது.

...............இன்றையதினமாகிய........தேதியில் நம்மிட கையொப்பமும் முத்திரையும் செய்யப்பட்டது.

(முத்திரை.)

கையெழுத்து.

2. தஸ்தாஜேஜுகளை ஆஜர்ப்படுத்தும்படி பிறப்பிக்கப்படும் ஸம்மன்.

..................விருக்கும்...................க்கு..................இப்போது நம்மிடமுன்பாக நடந்துகொண்டிருக்கிற ரிவினியூ விசாரணையில் (பலான ஸங்கதியைப்பற்றி விசாரணைசெய்யப்படப்போகிறதென்று இவ்விடத்தில்சுருக்கமாய்எழுதுக) அடியில்கண்டதஸ்தாவேஜுகள் (தஸ்தாவேஜுபலானவை என்று கூடியவரையில் சரியாய் இவ்விடத்தில் விவரித்துஎழுதுக) தேவையாயிருக்கிறபடியால்.........தேதியில்.........மணிக்கு நம்மிடமுன்பாக ஷை தஸ்தாவேஜுகளை ஆஜர்செய்யவேண்டியதென்றும் அல்லது ஆஜர்செய்விக்கவேண்டுமென்றும் இதனால் உமக்குகட்டளை இடப்படுகிறது.................. ......இன்றியதினமாகிய.........தேதியில் நம்மிட கையொப்பமும் முத்திரையும் செய்யப்பட்டன.

(முத்திரை)

கையெழுத்து.

180-ம் ஆர்டர், 2-வது பிரகரணம்.

கட்டளை ஸார்வு செய்வதற்காக கோர்ட்டுகளில் விதிக்கப்படவேண்டிய பீஸ்களின் வீதம்.

கட்டளையின் சுபாவம்.	எந்த ரிவினியூ கோர்ட்டிலும் விதிக்கப்படவேண்டிய துகைகள்.		
1. பிரதி ஸம்மனுக்கும் அல்லது நோட்டீஸுக்கும் (ஏ) ஒரு பிரதிவாதி அல்லது சாக்ஷிக்கு ...	0	8	0
(பி) அதே காலத்தில் கட்டளைகளுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டு அதே கிராமத்தில் வாஸம்செய்கிற ஜாஸ்திபிரதிவாதிகளுக்கும் அல்லது சாக்ஷிகளுக்கும்	0	4	0
2. பிரதி வாரண்டுக்கும் (ஏ) பிடிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு மனுஷியனுக்காகவும் பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டாயிருந்தால் (பி) அப்பேர்ப்பட்ட ஒவ்வொரு வாரெண்டு விஷயமாய் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி வாரெண்டாயிருந்தால், (ஸி) அப்பேர்ப்பட்ட பிரதி வாரெண்டு விஷயமாயும் பிறப்பிக்கப்பட்ட ஏல வாரெண்டாயிருந்தால் (டீ) அப்பேர்ப்பட்ட வாரெண்டு விஷயமாய் பிறப்பிக்கப்பட்ட சொத்து ஒப்புக்கொடுக்கும் வாரெண்டாயிருந்தால் வாரெண்டு பிறப்பிக்கப்பட்ட தேதிமுதல் மூன்று நாளைக்குப் பின்னிட்டு ஒவ்வொரு நாளைக்காக வாரெண்டு ஒப்புவிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தர் செய்த வேலைக்காகவும் ஜாஸ்தி பீஸ் விதிக்கப்படுவதும் தவிர	1	0	0
(இ) டீயில் சொல்லப்பட்ட உத்தியோகஸ்தனானவன் அமீனாவாக இருந்தால்	0	6	0
(எப்) அந்த உத்தியோகஸ்தன் சேவகனாக இருந்தால்	0	4	0
3. கிராம முனிஸீபினிட தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றுக்கும் ...	0	4	0
விளம்பரம் எச்சரிப்பு அல்லது உத்திரவு இவைகளுக்காகவும் மற்றெவ்விடத்திலும் பிரஸ்தாபிக்கப் பட்ட ஒவ்வொரு கட்டளைக்கும்...	1	0	0
மேலே 2-டீ,யில் கண்ட விதமாய் கணக்கிட்ட 3-ம் நாளைக்கப்புறம் ஜாஸ்தி பீஸ் வசூல் செய்யப்படும் ...			
5. ஏலம்போடும் விஷயங்களில் ஏலதாரன் கூலிக்காக ஏல பணத்தில் முதல் 350-ரூபாய்க்கு ரூபாய் 1-க்கு 1-அணாவீதமும் 350-ரூபாய்க்கு மேற்பட்டும் 1000-ரூபாய்க்குள்பட்டும் இருக்கிற துகையில் 1-ரூபாய்க்கு ½-அணா வீதமும் 1000-ரூபாய்க்கு மேற்பட்ட எந்த துகையிலும் 1-ரூபாய்க்கு ¼-அணா வீதமும் வசூல் செய்யப்படும் ...			

குறிப்பு, 1 :—

ரெயில்வேமூலமாயாவது அல்லது சர்க்கார்வண்டி முதலானவைகள் இருக்கும் பக்ஷத்தில் அவைகளின்மூலமாயாவது போவதற்கு பிடிக்கும்செல்வையாதொருகக்ஷிக்காரன் முன்னுடிசெலுத்தலாம்; அப்பேர்ப்பட்டவிஷயத்தில் கட்டளை ஸார்வுசெய்கிறவனுனவன் அப்பேர்ப்பட்ட ரயில்வேமூலமாயாவது அல்லது சர்க்கார்வண்டி வகைருமூல்மாயாவது போக கடமைபட்டிருக்கிறுன் ; அப்படிமுன்னுடிசெலுத்தப்பட்ட துகையானது வியாச்சியத்தின் செலவின் ஓர்பாகமாகும்.—

குறிப்பு, 2:—

கட்டளைகளை ஜடுதியில் பிறபிக்கவேணுமென்று கோரிகொண்டு ஜடுதியில் நிறைவேற்ற உத்திரவு செய்யப்பட்டால். அப்பேர்ப்பட்ட கட்டளைகளுக்கு சாதாரணமாய் என்னபீஸ்உண்டோ அதுவும் அதைப்போல அதற்கு மேல் ½-ப்பங்கும் விதிக்கப்படும்:—

129-ம் ஆர்டர், பிரகரணம் 5]

பென்ஷன் விஷயமாய் உறுதிமொழி நமூனு.

.........உ ....நெ. கவர்ன்மெண்டார்டர் பிரகாரம் ......ரூபா பென்ஷனுக்கு பாத்தியமுள்ள ஆஸாமி நான்தான் என்றும்,..............கஜானு உத்தியோகஸ்தரிடத்தில் என்னிட எழுத்து மூலமான ரசிதை ஆஜர்ப்படுத்தி தொகையைப் பெற்றுக்கொள்ளும்படி...............என்பவனுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேனென்றும் இதனுல் நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

தேதி

என்னிட முன்பாக இன்றையதினமாகிய................உயில்......... ....பிரமாணிக்க பூர்வமாக பென்ஷனர் கையெழுத்து செய்தார்.

சாக்ஷி (எஜெண்டின் கையெழுத்து).

கிராம முனிசீபு அல்லது கிராமப் பிரமாணம் செய்விக்க அதிகாரமுள்ள வேறே உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—இந்த நமூனுவுக்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டியதில்லை.

தீர்வை வசூல் சம்பந்தமானது.

ஆர்டர் நெ. 100. பிரகரணம் 3.]

ரயத்துவாரி நிலங்களின் கிஸ்துபந்தி.

ஜில்லாக்கள்.		வருஷவாரி தீர்வையில் பிரதி மீ த்திலும் செலுத்தவேண்டிய கிஸ்தின் 1 ரூபாயிக்கு தாமாஷா.								மொத்தம்.
		நவம்பர்.	டிசம்பர்.	ஜனவரி.	பிப்ரவரி.	மார்ச்சு.	எப்ரல்.	மே	ஜூன்	
		அ.	அ.	அ.	அ.	அ.	அ.	அ	அ.	அ.
செங்கல்பட்டு	...	...	...	4	4	4	4	...	...	16
வட ஆற்காடு	சந்திரகிரி, சித்தூர், பலமனேர், குடியாத்தம், வாலாஜா தாலூகாக்களில் ...	...	4	4	4	4	...	...	...	16
	மற்றதாலூகாக்களில் ...	...	...	4	4	4	4	...	...	16
தென்னாற்காடு	...	...	...	4	4	4	4	...	...	16
தஞ்சாவூர் ...	நஞ்சை { கார் ...	3	6	7	...	...	...	...	...	16
	நஞ்சை { சம்பா ...	...	...	...	2	3	5	4	2	16
	புஞ்சை	...	...	...	...	...	...	...	...	...
	அக்டோபர் மீ வரையில் 100 க்கு 50-தாமாஷாவுக்குட்பட்டு சாகுபடியாயிருந்தால் கைப்பற்றிலிருக்கிறநிலத்தில் பாதியின்பேரிலும், ஜாஸ்தி சாகுபடியாயிருந்தால் சாகுபடியான வணியிலும்	3	6	7	...	...	...	...	...	16
	மீதி நிலத்தில் ...	...	...	...	2	3	5	4	2	16
	கட்டுகுத்தகை கிராமங்கள்..	1	2	3	1	2	3	3	1	16
திருச்சினப்பள்ளி	...	...	4	4	4	4	...	...	...	16
மதுரை	...	...	2	2	2	2	4	4	...	16
திருநெல்வேலி	...	...	...	...	4	4	4	4	...	16
கோயம்புத்தூர்	...	...	...	4	4	4	4	...	...	16
சேலம்	...	...	4	4	4	4	...	...	...	16

ஆர்டர் நெ. 106. பிரகரணம் 11.]

இந்த பிரகரணத்திற்கு கடைசியில் அடியில்கண்ட வாக்கியம் இப்பால் கவர்ன்மெண்டாரால் சேர்க்கப்பட்டது.

ஆகிலும், அப்படி கோரிக் கொள்ளப்படும் விண்ணப்பங்களானவை அந்த விண்ணப்பங்கள் கலெக்டருக்கு எந்த வருஷத்தில் செய்யப்படுகின்றனவோ அந்த வருஷத்திற்கு அடுத்து முந்தின மூன்று பசலிகளில் சேர வேண்டிய பாக்கிகளை வசூல்செய்யும் பொருட்டு மாத்திரமே அங்கீகாரம் செய்யப்படும்; ஸிவில் கோர்ட்டில் தாவாசெய்து பாக்கிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாயிதா 3-வருஷம்தான்.

ஆர்டர் நெ. 112.]

1. நிலத்தை துரஸ்து முதலானது செய்வதற்காக ஸர்க்காரில் கடன் வாங்குவதைப்பற்றின விதிகள்.

2. தாசில்தார்களும், டிவிஷனலாபீஸர்களும் அடியிற்கண்ட மாதிரியாக கடன்கொடுக்க உத்திரவு செய்யலாம்:—

	ரூபா.
தாசில்தார்கள்...	... 250
டிவிஷனலாபீஸர்கள்...	... 500
கலெக்டர்கள்...	...1000

1000-ரூபாயிக்கு மேற்பட்ட கடனுக்காக போர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டும். 5000-ரூபாயிக்கு மேற்பட்ட கடனுக்காக கவர்ன்மெண்டார் அனுமதி கொடுக்கவேண்டும்.

3. தாசில்தார் அல்லது அதற்கு மேற்பட்ட ஹோதாவுள்ள உத்தியோகஸ்தர்களிடத்தில் கடன் துகைக்காக விண்ணப்பங்கள் கொடுத்துக் கொள்ளலாம். விண்ணப்பமானது இத்துடன் சேர்த்திருக்கிற பாரப்பிரகாரம் இருக்கவேண்டியது, அதில் விண்ணப்பதாரன் கையெழுத்து செய்யவேண்டியது. வாய்மொழியாய் கடன் வேணுமென்று சொல்லிக்கொண்டாலும் அப்படி எந்த உத்தியோகஸ்தரிடம் சொல்லிக் கொள்ளப்படுகிறதோ அவர் விண்ணப்பதாரனை எழுத்து மூலமான விண்ணப்பம் கொடுக்கும்படி செய்யவேண்டியது.

4. விண்ணப்பதாரன் நேராய் ஆஜராகவேண்டுமென்பது அவசியமில்லை, ஆனால் பின்னிட்டு அவன் ஆஜராகவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டால் அவனாவது, அவனிட கிரமமாய் அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது ஆஜராகவேண்டியது. அப்படி ஆஜராகத் தவறினால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

5. விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்கிற யாதொரு உத்தியோகஸ்தரானவர் விண்ணப்பத்தில் கண்ட கடன்துகையை கொடுக்க அதிகாரமில்லாதவராயிருந்தால் அந்ததுகையைக் கொடுக்க அதிகாரமுள்ள உத்தியோகஸ்தருக்கு அந்த விண்ணப்பத்தை யனுப்பவேண்டியது.

6. ஜில்லா கலெக்டராவது அல்லது மேலே சொன்ன வேறே உத்தியோகஸ்தராவது *விண்ணப்பத்தின் பிரகாரம் கடன் கொடுக்கலாமென்று உத்தேசிக்கப் பிரத்தியக்ஷமான காரணங்களிருப்பதாகத் தோன்றினால் ரிஜிஸ்டரில் இந்த விண்ணப்பத்தைப் பதிவுசெய்வித்து சம்பந்தப்பட்ட நிலம்

* இந்த விதிகளில் கலெக்டர் என்று பிரஸ்தாபித்தால் கலெக்டராவது மேலே சொன்ன உத்தியோகஸ்தராவது என்று அர்த்தமாக பாவிக்க.

இருக்கிற இடத்திற்குப் போய்பார்த்து விசாரணைசெய்து ரிபோர்ட் அனுப்பும்படி செய்யவேண்டியது விண்ணப்பத்தின் பிரகாரம் கடன் கொடுக்கக் கூடாதென்று தேன்றினல் விண்ணப்பத்தைத் தள்ளும்படி செய்யவேண்டியது.

7. சம்பந்தப்பட்ட கிராமத்தில்போய் விசாரணை செய்யாமல் யாதொரு கடன்கொடுக்கவும் உத்திரவு செய்யக்கூடாது. உத்தேசிக்கப்பட்ட கடன் துகை 500-ரூபாய்க்குமேற்பட்டிருக்கும்பக்ஷத்தில் தாசில்தார் அல்லது டிபுடி தாசில்தாருடைய ஹோதாவுக்குக் குறையாத ஒரு உத்தியோகஸ்தர்போய் அஜிமாஷ்செய்து ரிபோர்ட் செய்யவேண்டியது, 500-ரூபாய்க்குக் குறைந்திருந்தால் ரிவினியூ இன்ஸ்பெக்டர்போய் அஜிமாஷ்செய்து ரிபோர்ட் செய்யக்கூடும். அஜிமாஷ் செய்யவேண்டிய உத்தியோகஸ்தரானவர் பலான கிராமத்தில் பலான ஆஸாமியானவன் பலான துகைகடன் கேட்டிருக்கிற விஷயமாய் பலான தேதியில் அந்த கிராமத்துக்கு தாம் வந்து அஜிமாஷ் செய்து விசாரணை செய்யப்போகிறதாக ஒரு நோட்டீஸ் எழுதி அந்த நோட்டீஸை அந்த கிராமத்தில் எல்லாரும் பார்க்கக்கூடிய ஒரு இடத்தில் ஒட்டும்படி அனுப்பவேண்டியது. அந்த நோட்டீஸை ஒட்டும்படி கொண்டுபோன மனுஷியன் அப்படி பிரசித்தம் செய்யப்பட்டதற்கு அடையாளமாக கிராம அதிகாரிகளிடத்தில் கையெழுத்துவாங்கி அந்த நோட்டீஸுக்கு ஒரு டேபிளி கேட்டை நோட்டீஸ் பிறப்பித்த அதிகாரியிடம் ஆஜர்ப்படுத்த வேண்டியது. நில துரஸ்து வகையரு செய்வதற்காக கடன் கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்ட இந்த ஆக்ட் பிரகாரம் நோட்டீஸ்களை ஸர்வுசெய்வதற்காக யாதொரு பத்தாவும் வசூல் செய்யப்படமாட்டாது.

8. குறித்ததினத்திலாவது அல்லது பின்னிட்டு நோட்டீஸ கொடுத்து ஒத்திவைக்கப்பட்ட தினத்திலாவது அஜிமாஷ் செய்யும் ஆபீஸர் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குப்போய் சம்பந்தப்பட்ட விண்ணப்பதார்களையும் கிராமாதிகாரிகளையும் கிராமத்தில் கவுரமுள்ள குடித்தனக்காரர்களையும் வரவழைத்துக்கொண்டு பிரஸ்தாப நிலமிருக்கிற இடத்துக்குப்போய் அஜிமாஷ் செய்து உத்தேசித்திருக்கப்பட்ட வேலையைச் செய்வதால் யாதொரு சர்க்கார் அல்லது சொந்த ஜனங்களிட பாத்தியதைகளுக்கு ஹானி உண்டாகக் கூடியதாவென்று திருப்திகரமாய் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டியது; விண்ணப்பத்தில் கண்ட அம்சங்கள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்த்து தெரிந்துகொண்டு பணம் கொடுக்கலாமாவென்று தீர்க்கும் பொருட்டு என்னென்ன சங்கதிகள் அவசிசமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்குமோ அந்த சங்கதிகளெல்லாவற்றையும்பற்றி ரிபோர்ட் செய்ய வேண்டியது; செய்வதாய் உத்தேசித்திருக்கப்பட்ட வேலைக்கு எதாவது ஆக்ஷேபணைகளிருக்குமானல் அஜிமாஷ் செய்யும் உத்தியோகஸ்தர் அது விஷயத்தில் முக்கியமாய் கவனம் செலுத்தி ஆக்ஷேபணையில் சம்பந்தமான சாக்ஷியங்களையும் கண்டெழுதவேண்டியது. விசாரணை முடிவானவுடன்

தம்மிட சிபார்சையும் அபிப்பிராயத்தையும் கண்டு விண்ணப்பத்தை மேலதிகாரிக்கு அனுப்பவேண்டியது. யாதொரு மனுஷியனுடைய சாக்ஷியமானது முக்கியமாயிருந்து அவன் சாக்ஷி சொல்லும்பொருட்டு ஆஜராகமாட்டேனென்றாலும் ஆஜராகாமல் அசிரத்தையாயிருந்தாலும் சம்மன் பிறப்பிக்கவேண்டியது; அஜிமாஷ் செய்யும் உத்தியோகஸ்தர் 1869-ளுடத்திய 3-வது ஆக்ட் பிரகாரம் சம்மன் பிறப்பிக்க அதிகாரம் இல்லாதவராயிருந்தால் சம்மன் பிறப்பிக்கும்படி அதிகாரமுள்ள ஒரு உத்தியோகஸ்தரை இதுவிஷயமாய்க் கோரிக்கொள்ளவேண்டியது.

9. விண்ணப்பதாரன் கடன்வாங்கிவேலைசெய்யவேண்டியதென்ற நல்ல எண்ணமுடையவனு என்றும் ஸ்திதியுள்ளவனு வென்றும் ஜாமீன் சொத்து மதிப்பு போதுமானதாவென்றும் முக்கியமாய் கவனித்து விசாரிக்கவேண்டியது ; துரஸ்து செய்யவேண்டிய நிலத்தில் சம்பந்தப்பட்டவர்களிட பாத்தியதைகளைப்பற்றியும் கூட ஈடுமானம் வைக்கப்பட்ட நிலத்தைப்பற்றியும் ஜாகிரதையாய் விசாரிக்கவேண்டியது, ஏனென்றால் நிலத்தை ஈடாகக் கொடுக்கும் ஒரு மனுஷியன் அந்த நிலத்திற்கு வாஸ்தவ்வியத்தில் சுதந்தரக்காரனுவென்றும் நிலத்தில் முன்னடமான முதலானவைகளில்லையாவென்றும் நிலத்தீர்வைபாக்கி இல்லையாவென்றும் முன்னுடியாக சர்க்காரில் வேறே கடன் இந்த நிலத்தை ஈடாகவைத்து வாங்கவில்லையாவென்றும் நிச்சயித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது. கடன்வேணுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளுகிறவன் துரஸ்துசெய்யவேண்டிய நிலத்தின் ரிஜிஸ்தரான பட்டாதாரனுகயிருக்கவேண்டியது ; கொதுவைக்கடன் கொடுத்தவர்கள்நிலத்தை அனுபவித்துவந்தாலும் அவர்கள்செய்யும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவேகூடாது. உபஜாமீனுக வைக்கப்பட்ட நிலத்துக்கு ஜாமீன்தாரன் பட்டாதாரனுகயிருப்பதும்தவிர வாஸ்தவமாய் அனுபவிக்கிறவனுயுமிருக்கவேண்டியது. தவிரவும், அந்தநிலத்திற்குக் கூட்டு அனுபோகதாரர்களிருந்து அதில் ஓர்பாகம்மாத்திரம் தன்னுடையதா யிருக்கும்பக்ஷத்தில் தனக்குள்ளபாகத்தைமாத்திரந்தான் ஈடுவைத்திருக்கிருனுவென்றும், (ஆனால் கூட்டுசொந்தக்காரர்கள் சம்பதப்பட்டால் முழுநிலத்தையும் ஈடாகவைக்கலாம்), ஜாகிரதையாய் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது. உபகரணமாகவைக்கும் ஜாமீனுனது எப்போதும் நிலமாகவே யிருக்கவேண்டியது; யாதொரு விண்ணப்பதாரனுனவன் நிலத்தின் சொந்தக்காரனிடத்தில் குத்தகை ஒப்பந்தம் செய்துகொண்டு பயிரிடுகிற குடியானவனுயிருந்து தனக்கு அந்தநிலத்தில் உள்ள பாத்தியதையை பராதீனம் செய்யக்கூடுமாயிருந்தால் 14 முதல் 17-வரையிலுள்ள விதிகள்பிரகாரம் நடவடிக்கைகள் நடத்தப்படும்; அப்படி பாராதீனம்செய்ய பாத்தியதையுமில்லாதிருந்து துரஸ்துசெய்ய பாத்தியதையுள்ளவன் நிலதாரனு அல்லது குத்தகைதாரனுனென்று தெரிந்துகொள்ள சாதாரணமானஒருவித ஏற்பாடுமில்லாமற்போனுல், கடன் கொடுக்கப்படமாட்டாதென்று சொல்லிவிடவேண்டியது, ஆனுல் நிலதாரன் சம்மதிக்கும்பக்ஷத்தில் கொடுக்கலாம்.

10. ஈடுவைக்கப்பட்ட ஜாமீன்சொத்தின் பெறுமானமானது கடன் கேட்கப்படும் தொகைக்கு அதமபக்ஷம் $1\frac{1}{4}$-பங்காவது இல்லாமற்போனல் கடன் கொடுக்கப்படமாட்டாது.

11. செய்யவேண்டிய வேலையானது 5,000 ரூபாய்க்குமேல் பிடிக்கக் கூடியதாயும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட் வேலையின் அனுபோகம் தெரியவேண்டியதாயுமிருந்தால் அப்படி செய்யவேண்டியவேலைக்கு ஒரு ப்ளானையும் அதற்குப் பிடிக்கக்கூடிய செலவுக்கு எஸ்டிமேட்டும் தயாரித்து அஜிமாஷ்உத்தியோகஸ்தரிடம் ஆஜர்செய்யும்படி விண்ணப்பதாரனைக் கேழ்க்கலாம், ஆனல் விண்ணப்பதாரன் அப்பேர்ப்பட்ட எஸ்டிமேட்டையாவது ப்ளானையாவது ஆஜர்ப்படுத்த அசக்தனுயிருந்தால் அவனுக்காக அப்பேர்ப்பட்ட எஸ்டிமேட்முதலானதை கலெக்டர் தயார்செய்விக்கலாம்; ஆனல் அப்படி தயார்செய்வதற்காக கலெக்டரிட உத்தேசத்தில் எவ்வளவுதுகை பிடிக்குமென்று தோன்றுகிறதோ அவ்வளவுதுகையை அவனிடமிருந்து முன்னுடியாக வசூல் செய்யவேண்டியது. ஆகிலும் கலெக்டருக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட துகையை செலுத்த ஜாமீன் வாங்கிக்கொள்ளலாம்.

12. அஜிமாஷ்செய்து விசாரித்து ரிபோர்ட்முதலானது செய்ததை பரிசோதித்துப்பார்த்தமேல் கடன்கொடுக்கலாமென்று கலெக்டருக்குத்தோன்றினல் கேழ்க்கப்பட்டத் துகையையாவது அல்லது அதற்குகுறைந்த ஓர் துகையையாவது கடன்கொடுக்கலாமென்று எழுதி அவ்விதமாக ஒரு உத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

13. 1,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடனுயிருக்கும்பக்ஷத்தில் அந்த ரிகார்டானது போர்டாருக்கு அனுப்பப்படும்; 5,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடனுயிருக்கும்பக்ஷத்தில் போர்டார்துவாரா கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படும், ரிவினியூபோர்டாரோ அல்லது பிரதேச கெவர்ன்மெண்டாரோ அப்பேர்ப்பட்ட ரிகார்ட்டுகளை பரிசிலனைசெய்து கடன்கொடுக்கும்படி உடனே உத்திரவுசெய்தாலும் செய்யலாம், அல்லது தங்களுக்குயுக்தமாய்த் தோன்றும்பக்ஷத்தில் பின்னும் விசாரணைக்காக அனுப்பலாம்; கடன்கொடுக்கலாமென்று அனுமதி கொடுக்கப்பட்ட உத்திரவை கலெக்ட்ர் பெற்றுக்கொண்டதின்பேரில் துகையை கொடுக்கும்படி அவர் ஒருஉத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

14. யாதொரு விண்ணப்பதாரனுனவன் நிலதாரனிடத்தில் குத்தகைக்குப்பயிரிடுகிற ஓர் குடியானவனுயிருந்து துரஸ்துசெய்யவேண்டிய நிலத்தில் தனக்குள்ள பாத்தியதையைப் பராதீனம்செய்யக்கூடுமாயிருந்தது அப்பேர்ப்பட்டநிலத்தையாவது வேறே போதுமான மதிப்புள்ளசொத்தையாவது கடனுக்கு ஈடாகவைப்பதாய் உத்தேசிக்கும்பக்ஷத்தில் அப்படி விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டதாக நிலதாரனுக்கே ஒருநோட்டீஸ்மூலமாய்த் தெரிவிக்கவேண்டியது. நேராய் அப்பேர்ப்பட்ட நோட்டீஸை ஸர்வுசெய்விக்கக்

கூடாமற்போனல் கலெக்ட்ராபீசில் அந்தநோட்டீசுக்கு ஒரு நகல்ஒட்டப்படும் நிலதாரன்வாசம்செய்கிறவீட்டிலும் ஒட்டவேண்டியது; விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிற ஜில்லாவில் அந்தநிலதாரன் இல்லாமற்போனுலாவது அ வன் குடியிருப்பது பலானஇடம்என்று தெரியாமலாவதுஇருந்தால் ஷை நில விஷயமாய் அந்த நிலதாரனுக்கு யார் காரியஸ்தனுக (எஜெண்டாக) இருந்து காரியத்தை நடத்திவருகிருனே அவனிடம் நோட்டீஸ் ஸ்ர்வுசெய்விக்கப் படும்.

15. அப்பேர்ப்பட்ட நோட்டீஸைப் பெற்றுக்கொண்டதாக நிலதார ஞவது அவனிடஎஜெண்டாவது ஒத்துக்கொண்டாலொழிய அல்லது அப் பேர்ப்பட்டநோட்டீஸானது கிரமமாக ஸார்வுசெய்யப்பட்டதாக கலெக்ட ருக்குத் திருப்திகரமாக வேறேவிதமாய் ருஜூப்பித்தாலொழிய யாதொரு நோட்டீஸூம் ஸர்வுசெய்யப்பட்டதாக பாவிக்கப்படமாட்டாது. ஒரு பாத்தி யஸ்தனுக்கு மேற்பட்டு கூட்டுபாத்தியஸ்தர்களிருந்து அவர்களில் யாதொரு பாத்தியஸ்தனுவதுவேறேமனிதனுவது அவர்களுக்குக்காரியஸ்தனுக இருப்ப தாகத் தெரியவந்தால் அப்பேர்ப்பட்ட மனிதனிடம் ஸர்வுசெய்திருந்தாலே அந்த பாத்தியஸ்தர்களில் ஒவ்வொருவரிடமும் ஸர்வு செய்யப்பட்டதாக பாவிக்கப்படும்.

16. அப்பேர்ப்பட்ட நோட்டீஸில் காணவேண்டியஅம்சங்களாவன.— கடன்கேட்டத்துகை இவ்வளவு, தூஸ்துசெய்யவேண்டியது பலானவித மென்பது கடனுக்கு ஈடாகவைக்க உத்தேசித்திருக்கிற ஜாமீன் சொத்து இன்னமதிப்புள்ளதென்பது. இந்த அம்சங்களைக் கண்டும் அப்படி கடன் கொடுக்கும் விஷயத்தில் நிலதாரனுக்கு எதாவது ஆக்ஷேபணையிருந்தால் நோ ட்டீஸ் ஸர்வுசெய்யப்பட்ட தேதி முதல் ஒருமாதத்திற்குள் அதைப்பற்றி எழுத்துமூலமாய்க் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் கண்டெழுத வேண்டியது.

17. நிலதாரனுவது அவனிட எஜெண்டாவது மானேஜராவது அப்படி ஆக்ஷேபணைகளைத் தெரிவிக்காமற்போனுலாவது அப்படி தெரிவித்ததின்மேல் கலெக்டர் அவற்றைப்பற்றி விசாரணைசெய்து விண்ணப்பதாரனுக்கு அந்த நிலத்தில் பராதீனம் செய்யக்கூடும்படியான பாத்தியதை உண்டென் றும் தனியாய் அப்பேர்ப்பட்ட பாத்தியதையின் பெறுமானமாவது அல்லது இதர ஜாயிண்டு ஜாமீன் கொடுக்கப்பட்டிருந்தால் அதனிட பெறுமானமும் சேர்ந்தாவது கடனுக்குப்போதுமான ஈடாக இருப்பதாக கலெக்ட்டர் அபிப் பிராயப்படும்பக்ஷத்தில் கடன் கொடுக்கும்படி உத்திரவுசெய்யலாம். அல்லது போர்ட்டார் அல்லது கவரன்மெண்டாரிட அனுமதிக்காக அந்த தஸ்தா வேஜூகளை அனுப்பலாம்.

17. கடன் கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்திரவானது கலெக்ட்டராபீஸில் வைத்துக்கொள்ளப்படும். கடன்துகை தாலூக்கா கஜானாவிலாவது ஜில்லா கஜானாவுக்குட்பட்ட வேறெந்த கஜானாவிலாவது பட்வாடா செய்ய வேண்டியதாயிருந்தால் அப்பேர்ப்பட்ட கஜானாவுக்கு ஒரு நகல் அனுப்பப்படும்.

18. இந்தவிதமாக கொடுக்கப்படும் கடன் துகைக்கு 100-க்கு வருஷம் ஒன்றுக்கு $6\frac{1}{4}$-வீதம் வட்டிவிதிக்கப்படும். கடன் கொடுக்க அதிகாரமுள்ள உத்தியோகஸ்தர்கள் ஏதோ பிரத்தியேகமான சில விஷயத்தில் குறைந்த வட்டி வீதமாகவாவது வட்டியில்லாமலாவது கடன் கொடுக்கவேணுமென்று அபிப்பிராயப்பட்டால் அப்படிச்செய்வதற்குள்ள காரணங்களை எடுத்துச் சொல்லி போர்ட்டார் துவாரா கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்ய வேண்டியது. அப்பேர்ப்பட்ட விஷயங்களில் கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமிருக்கும்பட்சத்தில் குறைந்த வட்டி வீதமாகவாவது வட்டியில்லாமலாவது கடன் கொடுக்க உத்தரவுசெய்யலாம்.

19. ரூபா 100-க்கு மேற்படாத கடன் விஷயத்தில் கடன் கொடுத்த தேதிமுதல் இரண்டாம் வருஷம் முடிவானவுடன் கடனைத்திருப்பிச்செலுத்த ஆரம்பஞ்செய்யவேண்டியது ; 1,000-ரூபாய்க்கு மேற்பட்ட கடன்விஷயத்தில் மூன்றும் வருஷமானவுடன் திருப்பிசெலுத்த ஆரம்பிக்கவேண்டியது, ஆனால் கடன் கொடுக்கலாமென்று உத்திரவுசெய்த அதிகாரியானவர் துரஸ்து செய்யவேண்டிய வேலையானது அப்படி பூர்த்தியாய் பலன் கொடுக்கிறதற்கு ஜாஸ்திகாலம் பிடிக்குமென்று பிரத்தியேகமானவிஷயத்தில் அபிப்பிராயப்பட்டால் கடன்கொடுத்த தேதிக்கும் கடனின் முதல்வாயிதாதுகையை திருப்பிச்செலுத்தவேண்டிய காலத்துக்கும் மத்தியில் ஜாஸ்தி ஸாவுகாசம் கொடுக்கலாம்; ஆனால் அப்படிப்பட்ட காலமானது 5-வருஷத்திற்கு மேற்பட்டதாயிருக்கக் கூடாது. அதுபோலவே, பலன் கிடைக்கிறதற்கு இந்த விதியில் கண்டிருக்கிற (1,000 ரூபாவரையில் இரண்டுவருஷம், அதற்கு மேற்பட்டதற்கு மூன்றுவருஷம் என்ற) காலம் தேவையில்லை என்று அபிப்பிராயப்பட்டால் அப்பேர்ப்பட்ட காலத்தைக் குறைக்கலாம்.

ஆகிலும் கடன் துகையின்பேரில் வட்டியானது கடன் கொடுத்ததேதி முதல் ஒருவருஷம் முடிவானவுடன் கணக்கிடப்படும்.—(சேரவேண்டியதாகும்); அப்படி கணக்கிடப்பட்டு முதலுடன் சேர்க்கப்படும். கடனை இத்தனைவருஷத்திற்குள் இவ்வளவுவாயிதாவில் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பதாரனிட ஸவுகரியங்களையும் அந்தந்தவிஷயத்தின் அவசியத்தையும் அனுஸரித்து கலெக்ட்டர் குறிப்பிடவேண்டியது; ஆனால் அடியிற் கண்ட உயர்ந்தபட்சம் அளவுக்குமேற்படக்கூடாது.

உயர்ந்த பக்ஷம் இத்தனை வருஷங்களில் செலுத்த வேண்டுமென்பது.

100-முதல்	ரூபா 500-வரையிலுள்ள	கடன்தொகைகளுக்கு	...	10
500	ஷ 1000 ஷ	ஷ	...	15
1000-முதல்	அதற்கு மேற்பட்ட	துகைகளுக்கு	....	20

மேற்கண்ட வருஷங்களுக்கு மேற்பட்ட ஸாவுகாசம் ஏதோ சில பிரத்தியேகமானவிஷயத்தில் கொடுக்கவேண்டியதாக சிபார்சுசெய்தால் அப்படி செய்வதற்குள்ள காரணங்களை விவரமாய் எடுத்துச்சொல்லி கவர்ன்மெண்டாரிட அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

100-ரூபாய்க்கு குறைந்து கடன் கொடுக்கப்படமாட்டாது. ஆகிலும் கிணறுகள்வெட்டவேண்டியதற்காவது துரஸ்து செய்யவேண்டியதற்காவது 100-ரூபாய்க்கு குறைந்த துகை கடனுகக் கொடுக்கலாம். அப்பேர்ப்பட்ட கடன் துகையைத் திருப்பிக்கொடுப்பதற்கு 20-வருஷம் வரையில் வாயிதாவுண்டு. விண்ணப்பதாரனுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் வருஷவாரியில் கடன் துகைமுதலுக்கும் வட்டிக்கும் சேர்த்து கொடுத்துவரலாம்.கடன்பெற்றுக்கொண்டயாதொரு ஆஸாமியானவன் ஆர்டரில்கண்ட வாயிதாவுக்குமுன்னதாக அந்தகடன் துகையை முழுதுமாவது அதின் ஓர்பாகத்தையாவது செலுத்திப் போடலாம். வாயிதாபிரகாரம் வட்டிசெலுத்தாமல் பாக்கியாயிருந்தாலாவது வட்டியும் முதலும் (செலுத்துவதாயிருக்கப்பட்ட விஷயத்தில்) வட்டிசெலுத்தப்படாமற் பாக்கியிருந்தாலாவது துடர்வட்டி (காம்பவுண்டு வட்டி அதாவது வட்டிக்கு வட்டி) 100-க்கு $6\frac{1}{4}$-வீதம் விதிக்கப்படும்.

22. எந்த கஜனுவிலிருந்து கடன் துகையைப் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த கஜானுவிலேயே திருப்பி செலுத்தவேண்டியது ஆகிலும் கலெக்டருக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் ஜில்லாவிலுள்ள வேறே எந்த கஜானுவிலாவது செலுத்திவிடும்படி உத்திரவு செய்யலாம். கடன் வாங்கின மனுஷியனுனவன் தான் செலுத்தவேண்டிய கடன் வாயிதா துகையை நிலத்தீர்வையுடன் செலுத்த இஷ்டப்பட்டால் பிரதி வருஷத்திலும் நிலத்தீர்வையின் கடைசி கிஸ்துடன் சேர்த்து வசூல் செய்யப்படும்.

23. இட்டபயிர் சாவியாய்ப்போய் விட்டதென்றுவது வேறே ஏதோ கஷ்டகாலம் நேர்ந்துவிட்டதென்றுவது ருஜுவான பக்ஷத்தில் கடனுக்காகவும் வட்டிக்காகவும் செலுத்தவேண்டிய வாயிதா துகையை கொஞ்சகாலம் வரையில் வசூல் செய்யாமல் நிறுத்திவைக்கலாம். இதுவிஷயத்தைப்பற்றி போர்டாருக்குக் கலெக்டர் ரிபோர்ட் செய்யவேண்டியது. அதின் பேரில் போர்டாருக்கு யுக்தமாய்த் தோன்றுகிறபடி உத்திரவு செய்வார்கள்.

24. கவர்ன்மெண்டாரிட உத்திரவுக்குட்பட்டு ஜில்லா கலெக்டரான வர் கடன் கொடுக்கப்பட்டு வேலை நடந்தேறி வருகிறவைகளை கிரமமாக அஜிமாஷ் செய்து வரும்படிக்கும் எந்த காரியத்திற்காக கடன் வாங்கப்பட்டதோ அதே காரியத்திற்கு அந்த கடன் பிரயோஜனப்படுத்தப்பட செய்ய வேண்டிய விஷயத்திலும் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டியது.

25. நடந்தேறிவரும் வேலைகளையும் அவைகளுக்காக செலவான துகைக்குக் கணக்கு வைத்திருப்பதையும் கலெக்டராவது இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது எப்போதாவது பார்வையிடக்கூடும்.

26. 5000-ரூபாய்க்கு மேற்பட்டு கடன் வாங்கின விஷயத்தில் மேலதிகாரிகளிட அனுமதியின் பேரில் கலெக்டரால் குறிக்கப்படுகிற பாரப்பிரகாரம் கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டியது.

27. கடன் வாங்கின யாதொரு மனுஷியனனவன் எந்த ஷரத்துகளுக்குட்பட்டு கடன் வாங்கினனே அந்த ஷரத்துகளில் எதாவது ஒன்றின் பிரகாரம் நடக்கத் தவறிப்போனதாக கலெக்டருக்குத் திருப்திகரமாய் எப்போ[illegible]வது ஏற்படும் பக்ஷத்தில் மேலதிகாரிகளிட உத்திரவுக் குட்பட்டும் கடனை வசூல் செய்து விடுவதற்காக தமக்குத் தோன்றுகிற காரணங்களைக் கண்டெழுதியும் அப்பேர்ப்பட்ட கடன் பெற்ற மனிதனிடத்திலிருந்தாவது அல்லது அவனுக்காக நபர் ஜாமீன் கொடுத்தவனிடத்திலிருந்தாவது பாக்கியிருக்கப்பட்ட கடன் துகையையும் அதற்குள்ள வட்டியையும் செலவுகள் எதாவது நேர்ந்திருந்தால் அதையும் நிலத்தீர்வை பாக்கியைப்போல சட்டப்பிரகாரம் வசூல் செய்யப்படும்.

28. யாதொரு வேலைக்காக கடன் துகையானது முழுமையும் ரொக்கமாக முன்னடி கொடுக்கப்பட்டால் கடன் கொடுக்கும்படி செய்த உத்திரவில் எத்தினை நாளைக்குள் அந்தவேலை முடியவேண்டியதென்று கண்டிருக்கிறதோ அத்தனை நாளைக்கப்புறம் அதைப்போய் அஜிமாஷ் செய்து ரிபோர்ட் செய்யவேண்டியது. எந்த வேலைகளுக்காவது கடன் துகையானது சில வாயிதாப்பிரகாரம் கொடுக்கப்பட்டால் முதல் வாயிதா கொடுத்தபிறகு நடந்தேறி வந்திருக்கிற வேலைகளை அஜிமாஷ்செய்து இரண்டாவது முதலான வாயிதா துகையைக் கொடுக்கவேண்டியது.

29. கிணர் வெட்டுவதற்காக கடன் வாங்கும் விஷயத்தில் ரொம்பவும் ஆதாயமான ஷரத்தின்பேரில் பிரத்தியேகமான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அவைகளை பின்னல் கண்டிருக்கிறது.

விண்ணப்பதாரன் பெயர், அவனுடைய இருப்பிடம் வகையரு.	கடன்வேண்டிய மொத்தம் தொகை.	ஜாமீன்: ஈபார்ஜாமீ டு வேறே விதமானதா.	எவ்விதமான தீராஸ்து செய்யவேணுமென்பது.	நிலமிருக்கும் இடம்.	நிலத்தில் விண்ணப்பதாரனுக்குள்ள பாத்தியதை.	நிலத்தில் இதாருக்குள்ள பாத்தியதை.	எந்தெந்த தேதிகளில் கடனை திருப்பி செலுத்துகிறதாய் உத்தேசிக்கிறது.

விண்ணப்பதாரன் கையெழுத்து.

குறிப்பு.—இந்த விண்ணப்பத்திற்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டியதில்லை.

II. கிணர் வெட்டுவதற்காக கடன் கொடுக்தும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட பிரத்தியோகமான விதிகள்.

1. இந்த விதிகள் பல்லாரி அனந்தப்பூர் கர்னூல் கடப்பை இந்த ஜில்லாக்களுக்கு சம்பந்தப்பட்டவை, ஆனல் இந்தியா கவர்ன்மெண்டாரிட அனுமதிக்குட்பட்டு சென்னை கவர்ன்மெண்டார் இதர ஜில்லாக்களுக்கும் வியாபிக்கும்படிக்கு செய்யலாம். இந்த விதிகள் சம்பந்தப்படுகிற ஜில்லாக்களில் சாதாரணமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள் (I-வது பாகத்தின் விதிகள்) பிரகாரமும் கடன் கொடுக்கலாம்.

குறிப்பு. 1891, 92-ம் ஸு த்தில் மழைமாரியில்லாமல் அனேகமாய் ராஜதானிமுழுதும் பஞ்சம் உண்டானபடியாலும் சாகுபடிசெய்ய ஜலமில்லாமற் போனபடியாலும்இந்தவிதிகளின்படி $\frac{1}{4}$-வட்டிக்கு 30-வருஷம்வனாயில் வாயிதாவுக்குகடன்கொடுக்கும்படியான ஏற்பாடுகளை ராஜதானிமுழுதிலும் வியாபிக்கும்படி சென்னை கெவர்ன்மெண்டார் இப்பால் உத்திரவுசெய்திருக்கிறார்கள்.

2. இந்தவிதிகள்பிரகாரம் கொடுக்கக்கூடிய யாதொருகடன் துகையானது 750-ரூபாய்க்கு மேற்படக்கூடாது.

3. வருஷவாரியில் முதலுக்காகவும் வட்டிக்காகவும் சேர்ந்ததுகையை பலானவருஷங்களுக்குள் வருஷவாரியில் ஒரேவித வாயிதாவாக கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டியது.

குறிப்பு. விவரம் இத்துடன் சேர்த்திருக்கப்பட்ட அட்டவணையைப்பார்க்க.

4. 100-க்கு வருஷம் ஒன்றுக்கு 3-வட்டிவீதமாக கடன் கொடுக்கப்படும்.

5. உயர்ந்தபக்ஷம் 30-வருஷவாயிதாவக்குள் கடனை திருப்பிக்கொடுத்துவிடவேண்டியது.

6. செலுத்தவேண்டிய கடனுக்காகவும் அதின்வட்டிக்காகவும் முஜராவாகும்படியாக யாதொரு கிணத்திலிருந்து ஜலம்பாயக்கூடிய ஆயக்கட்டு நிலததின்பேரில் வருஷவாரியில் ஒரு பிரத்தியோகமானதீர்வை விதிக்கப்படும்; அப்பேர்ப்பட்ட பிரததியோகமான தீர்வையானது என்ன தாமாஷாபிரகாரம் வி[illegible]ப்படுமென்றால், கடன் துகையில் ரூபாய்க்கு ஒருஅணுவீதத்துக்காவது எக்ரா 1-க்கு 5-ரூபா வீதத்துக்காவது மேற்படக்கூடாது; இந்த இரண்டுவீதங்களிலும் எதுதாழ்ந்ததோ அந்தவீதம்தான் விதிக்கப்படும்.

குறிப்பு: (உதாரணம்:— 3-எகரா ஈடுமானத்தின்பேரில் 200-ரூபாய் ஒருவன் கடன் வாங்குகிறான், இந்த விதியின்பிரகாரம் விதிக்கப்படவேண்டிய ஸ்பெஷஸ்தீர்வை எவ்வளவென்றால், ரூபா-200×0-1-0= 12-8-0, ஒரு வீதம்; எக்ரா 1-க்கு 5-ரூபாயாக 3 எகராவுக்கு 15-0-0 இன்னொருவீதம்; இந்த இரண்டுதுகைகளிலும் தாழ்ந்ததாகிய 12-8-0 ரூபாய்தான் விதிக்கப்படும்.

7. அப்பேர்ப்பட்ட ஸ்பெஷல்தீர்வையானது முன்னுடியாகவே நிலத்திற்குள்ள சாதாரணமான தீர்வையைத்தவிர விதிக்கப்படுவதாகும்; நிலத்தீர்வையும் ஷை ஸ்பெஷல்தீர்வையும் பட்டாவில் பிரத்தியோகமாய் எழுதப்படும், ஆனால் பிரதிபசலியிலும் கடைசிதீர்வை கிஸ்துடன் ஸ்பெஷல்தீர்வை செலுத்தப்படவேண்டியதாகும்; செலுத்தப்பட்டதுகையை முதலில் நிலத்தீர்வைக்கு வரவுவைத்துக்கொண்டு மீதிஏதாவதிருந்தால் கடனுக்கு முஜராவாக ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல்தீர்வை பாபத்தில் வரவுவைத்துக்கொள்ளப்படும்.

குறிப்பு. இந்தவிதிகளை அனேகஇடங்களில் ஜனங்கள் சரியாய் அர்த்தம்செய்து கொள்ளக்கூடாமையாயிருப்பதால் இவ்விடத்தில் கொஞ்சம் விமரிசையாய் எடுத்து உதகரிப்பது யுக்தமாயிருக்கிறது :—

ஸ்பெஷல்தீர்வை என்னத்துக்காக விதிக்கப்படுகிறதென்றால், வாங்கின கடன் தொகையையும் வட்டியையும் கொஞ்சம் கொஞ்சமாகச்செலுத்த அட்டவணையில்கண்ட ஓர்தாமாஷாப்பிரகாரம் கணக்கிடப்பட்டதுகைக்கு முஜராவாக விதிக்கப்படுகிறதேதவிர கிணறுவெட்டி நிலத்தை துரஸ்துசெய்து நிலத்தை ஜாஸ்தி விலைபெறுமானதாக செய்து விட்டதற்காக ஜாஸ்திதீர்வை விதிக்கப்பட்டதாகதாத்பரியமல்ல; இப்படி விதிக்கப்படும் ஸ்பெஷல்தீர்வையானது எத்தினை வருஷங்களுக்குள் கடனைத்திருப்பிச் செலுத்திவிடுவதாக முதலில் ஷரத்துசெய்யப்பட்டதோ அத்தனை வருஷங்களுக்குமாத்திரம் வசூல்செய்யப்படும், அத்தனை வருஷங்களுக்கு அப்புறம் நிலத்தின்பேரில் கடன் வாங்குவதற்குமுன்பாக எவ்வளவு நிலத்தீர்வை செலுத்திவைக்கப்பட்டதோ அதேதீர்வைதான்; அப்புறம் அந்தநிலத்திற்கு ஸ்பெஷல்தீர்வைகிடையாது. குடியானவர்களுக்கு சிரமமாவது அசவுகரியமாவதில்லாமல் மேற்கண்ட ஸ்பெஷல்தீர்வையை வசூல்செய்து விடும்பொருட்டு நிலத்தீர்வை கிஸ்துடன் சேர்க்கப்பட்டு வசூல்செய்யப்படுகிறதேதவிர வேறில்லை; இப்படி வசூல்செய்வதற்கு அனுஸரணையாயிருக்கும்பொருட்டு நிலத்தீர்வையையும் கடன்துகைக்கு முஜராவாகிய இந்த ஸ்பெஷல் தீர்வையும் சேர்த்தெழுதி பிரத்தியேகமான பட்டாகொடுக்கப்படுகிறது; எத்தினைவருஷத்திற்குள் கடன் செலுத்திவிடுவதாக முதலில் ஷரத்துகள் கண்டிருக்கிறதோ அத்தனை வருஷத்திற்குத்தான் ஊர்ஜித்ததிலிருக்கும், அதற்கப்புறம் வழக்கம்போல் நிலத்தீர்வையை [illegible]கிரம் கண்டெழுதி பட்டாகொடுக்கப்படும். இப்பேர்ப்பட்ட ஸ்பெஷல் பட்டா கொடுப்பதைப்பற்றி சிலஜனங்கள் தப்பர்த்தம்செய்து கெவர்ண்மெண்டார்பேரால் பட்டாசெய்துகொண்டுவிட்டதாக சொல்லுகிறார்கள்; இது கொஞ்சம் கூட சரியல்ல, வட்டிவிஷயமாய் எதிர்வட்டி கழிக்கிறதில்லையென்றும் முதலுக்கு செலுத்தப்பட்டபணத்தை அடுத்தவருஷத்திய முதலிலிருந்து கழிக்கிறதில்லையென்றும் சொல்லுகிறார்கள்; இதுவும்சரியல்ல; அட்டவணையில் கண்டமாதிரி உதாரணம்-$1\frac{1}{4}$ ஏகராநிலத்தின்பேரில் ஒருவன் 100-ரூபாய் கடன்வாங்குகிறான், 30-வருஷத்தில் திருப்பிச் செலுத்திபோடுவதாகச் சொல்லுகிறான்; இந்த 30-வருஷகாலத்திற்கும் வருஷவாரியில் முதலுக்காக செலுத்திவிட்ட துகை போக பாக்கி முதல் துகைக்குச்சேரவேண்டிய வட்டியையும், முதல் பூராவையும் 30வருஷத்திற்குள் செலுத்த வருஷவாரியில் எவ்வளவுதுகையை ஏற்படுத்தினால் தீர்ந்துபோமோ அதையும்,(6-வது விதிப்பிரகாரம்) கணக்கிட்டு 30-வருஷத்தில்சமமான ஓர்துகைவீதம் கொடுத்துவந்தால் கடன் தீர்ந்துபோய் விடுகிறது;பிரஸ்தாப உதாரணத்தில் அப்படி கணக்கிடப்பட்டதுகை எவ்வளவென்றால் சுமார் ரூபா$5\frac{1}{8}$; 30-வருஷம் இந்தரூபா $5\frac{1}{8}$ வீதம் செலுத்தினால் $153\frac{3}{4}$ ரூபாயாகிறது, அதாவது முதலில் கடன்கொடுத்த 100-ரூபாய்போக, $53\frac{3}{4}$ரூபாய் (வருஷவர்ரிமுதலுக்காக கொடுத்ததுகைபோக மீதிமுதலின்பேரில்கூடிய) வட்டியாகிறது. சிலர் தப்பர்த்தம்செய்கிறபடி 30-வருஷகாலம்வரையில் 100ரூபாய்க்கே வட்டிவிதித்துவந்தால் 100-க்கு வருஷம் 1-க்கு 3 வட்டியாக 30-வருஷத்திற்கு $30\times3=90$-ரூபாய் வட்டியாகிறது, 100-ரூபாமுதல்

சேர்ந்து 190-ரூபாய்கொடுக்கவேண்டியதாகிறது ; மேலே பிரஸ்தாபித்தபடி கூடியதுகையோ 153¾ரூபாய்தானுகிறது; ஆகச்சே, எதிர்வட்டி கழிக்கிறதில் லையென்றுவது 30-வருஷம்வரைவில் 100-ரூபாய்க்கு வட்டி விதிக்கப்பட்டுவருகிறதென்றுவது சொல்வது தப்பென்று பிரத்தியக்ஷமாய் இந்த உதாரணத்தினுல் ஏற்படுகிறது.

---

8. யாதொரு கிணத்திலிருந்து ஜலம் பாயக்கூடிய ஆயக்கட்டு நிலத்தை ஸ்பெஷல் தீர்வை செலுத்துவதற்காகவும் பாக்கியிருக்கிற கடன் துகைக்கும் ஜாமீனுக வைத்துக் கொள்ளவேண்டியது. அந்த நிலங்கள் நீங்கலாக வேறே ஜாமீன் வேண்டியதென்று கேட்கக்கூடாது.

9. ஆயக்கட்டாக ஏற்படுத்திய நிலத்தை அலாதியாய் வேறொரு பட்டாவில் எழுதப்படும். கடன் தீர்க்கப்படுகிறவரையில் அந்த ஆயக்கட்டு நிலம் கிணற்றுதாரத்தைப் பொறுத்ததாயிருக்கவேண்டியது. நிலத்தீர்வையையாவது ஸ்பெஷல் தீர்வையையாவது செலுத்தாமல் பாக்கி யேற்பட்டிருந்து வேறே விதமாய் வசூல் செய்யக்கூடாமற்போனுல், பாக்கியிருக்கிற கடன்துகை பூராவையுமாவது அல்லது அதில் எவ்வளவு பாகம் கலெக்டர் குறிக்கிருரோ அதையாவது உடனே பாக்கியேற்பட்டதாகத் தெரிவித்து கி[illegible]ள்பட ஆயக்கட்டு நிலம் பூராவையும், ஷெ துகை, அதற்குள்ளவட்டி, எலம் போடுவதற்காக ஏதாவது செலவுபிடித்திருந்தால் அந்த சிலவு, ஆக மொத்தம்துகைக்காக எலம் போடப்பட்டு எலத்துகையை ஷெ மொத்தத்துக்காக முஜராசெய்யப்படும், தவிரவும் அசல் கடன்துகையில் ஏதாவது செலுத்த வேண்டியது பாக்கியிருந்தால் அந்த பாக்கியைத் தீர்ப்பதற்காக அந்த ஆயக்கட்டு நிலமானது ஸ்பெஷல் தீர்வை செலுத்துவதற்குட்பட்டதாகும்.

10. எலத்தில் விற்றுவந்த துகையிலிருந்து முதலில் நிலத்தீர்வைக்கும் அதற்குள்ளவட்டி மேலேசொன்ன இதரசெலவுகளுக்கும்முஜராசெய்து அதற்கப்புறம் ஸ்பெஷல் தீர்வைக்கும் அதற்குண்டான வட்டிக்கும் முஜராசெய்யப்படும்; மீதி ஏதாவது இருந்தால் அதை கிணற்றுக்காக வாங்கின கடனின் பாக்கிக்காக வரவுவைத்துக் கொள்ளப்படும். எலத்துகையில் அப்பேர்ப்பட்ட மீதி ஏற்படும் விஷயத்தில், எலத்தில் விலைக்கு வாங்குகிறவன் இந்த துகையானது கடனுக்காக வரவுவைத்துக் கொள்ளப்படுகிறபடியால் அப்படி தீர்க்கப்பட்ட கடன்போக மீதிகடன் பாக்கியிருப்பதை முன்னுடியாக ஏற்பட்டிருந்த வாயிதாப்பிரகாரமாகவே செலுத்த இஷ்டப்பட்டால் வருஷவாரியில் செலுத்தவேண்டிய ஸ்பெஷல் தீர்வையைக் குறைத்துக் கொள்ளலாம் ; அல்லது அப்பேர்ப்பட்ட வருஷவாரி ஸ்பெஷல் தீர்வை வீதமாகவே செலுத்த இஷ்டப்பட்டால் வாயிதா வருஷங்களைக் குறைத்துக்கொள்ளலாம். (உதாரணம்: 30-வருஷத்தில் செலுத்துவதாக ஒருவன் 300-ரூபாய் கடன்வாங்கியிருக்கிருன். வருஷவாரியில் முதலுக்காகவும் வட்டிக்காகவும் ரூபாய் 15

ஸ்பெஷல்வரி செலுத்திவருகிருனென்று வைத்துக் கொள்வோம். இம்மாதிரி 10 வருஷம் செலுத்துகிருன். 11-வது வருஷத்தில் ஸ்பெஷல்வரி செலுத்தப்படாமல் பாக்கி ஏற்படுகிறது; (சாதாரண நிலத்தீர்வை 5-ரூபா என்று வைத்துக்கொள்வோம்), அதுவும் செலுத்தப்படாமல் பாக்கியேற்படுகிறது; நிலமும் கிணறும் உடனே ஏலம் போடப்படுகிறது. ஏலத்தில் 150-ரூபா விலைக்குப் போகிறது. இந்த 150-ரூபாய் விலையிலிருந்து அந்த நிலத்திற்குள்ள சாதாரண நிலத்தீர்வையை முதலில் கழித்துவிட்டு பாக்கித்துகை ரூபாய் 145-இல் ஸ்பெஷல் தீர்வை 15—0—0 ஐகழித்துவிட்டால் மீதி யிருக்கப்பட்டதுகை 130; 10—வருஷகாலம் ஸ்பெஷல் தீர்வை செலுத்தி கடனில் செல்லானதுகை 10 × 15=150-ரூபாய் இந்ததுகையானது 10-வருஷ காலத்திற்குவட்டியும் முதலும் சேர்ந்தது. 10-வருஷம் வட்டி 50-ரூபாய் என்றுவைத்துக்கொள்வோம்; போக அசலுக்கு வரவுவந்த துகை ரூபாய் 100; மொத்தம் கடன் துகை 300-ரூபாயில் இந்த 100-ரூபா போனுல் 200-பாக்கியிருக்கிறது. மேற்கண்ட ஏலத்துகையில் மீதிரூபா 130-ஐயும் இந்த 200-ரூபாய்க்கு வரவு வைத்துக்கொள்ளப்படும், கடன்போக பாக்கியிருக்கிற ரூபா 200—130=70-ரூபாய் ஏலதாரனுனவன் இந்த 71 - ரூபாயையும் செலுத்திப் போடும் பக்ஷத்தில் ஆயக்கட்டின்பேரில் கடன் தீர்ந்து போய்விடுகிறது. அல்லது இந்த 70 - ரூபாயை முன்வாயிதா கொடுத்த பிரகாரம் பாக்கியிருக்கப்பட்ட 30—10=20 வருஷத்தில்செலுத்த இஷ்டப்பட்டால் முன் ஸ்பெஷல் தீர்வையாகிய துகையானது 15-ரூபாயிலிருந்து 5-ரூபா வீதத்துக்கு இறங்கிவிடும், 15-ரூபா வீதமாகவே செலுத்த இஷ்டப்பட்டால் பாக்கியிருக்கிற 20-வருஷவாயிதாவை 7-வருஷவாயிதாவாக குறைத்துக் கொள்ளலாம்.

குறிப்பு.—இந்த உதாரணத்தில் கண்டதுகைகளும் மற்ற எண்ணிக்கைகளும் செம்மையாய் தெரியும்பொருட்டு சொச்ச எண்களில்லாமல் முழு எண்களாக எடுத்துக்கொள்ளபட்டன; ஆகச்சே, கணக்காக போடும்பட்சத்தில் பேதங்களிருக்கும்.

மேற்கண்ட விதமாக ஏலம் போடப்பட்டு மறுபடி கணக்குகள் ஏற்பட்டவுடனே முதல் பட்டாவை ரத்துசெய்து இனி எத்தனை வாயிதா செலுத்த வேண்டியதென்றும் எவ்வளவு ஸ்பெஷல் தீர்வை செலுத்தவேண்டுமென்றும் கண்டு ஒரு புதுப்பட்டா கொடுக்கவேண்டியது. ஏலத்துகையில் மேற்கண்டபடிநிலத்தீர்வை ஸ்பெஷல்தீர்வை இதுகளுக்காக முஜராசெய்தது போக மீதி யிருக்கப்பட்ட துகையானது பாக்கிசேர வேண்டியகடன் துகையைவிட ஜாஸ்தியாயிருந்தால் அப்படி பாக்கியிருக்கப்பட்ட கடன் துகையைக்கழித்துக்கொண்டு அதில் மீதி யிருக்கப்பட்ட துகையை முதல் பாக்கிதாரனுக்கு (முதலில் கடன் வாங்கி பணம் கட்டாமல் போனவனுக்கு)க் கொடுத்துவிடவேண்டியது அதற்கப்புறம் ஸ்பெஷல் தீர்வை கிடையாது; அப்படி ஏலத்துகையில் மீதி யில்லாமற்போனுலாவது அல்லது ஏலத்துகையே கடனு

க்குப்போதாததாக இருந்தாலாவது முன்னடி எற்படுத்தப்பட்ட வாயிதா வருஷங்கள் வரையில் ஸ்பெஷல் தீர்வை மாருமல் அப்படியே செலுத்தப் படவேண்டியது, அத்தனை வருஷங்கள் வரையில் அந்த ஸ்பெஷல் தீர்வை வீதம் செலுத்தியும் கடன் பூராவும் முஜராவாகாமற்போனல் அப்படிநேரிடும் நஷ்டம் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்தது.

11. குறித்த வாயிதா வருஷங்கள் பிரகாரம் கடன் செலுத்தித் தீர்க்கப் பட்டாலாவது அல்லது மேல்பிரகரணத்தில் கண்டபிரகாரமாவது செலுத்தித் தீர்க்கப்பட்ட பிறகு ஆயக்கட்டு நிலத்திற்கு முன் சாதாரணமாயுள்ள நிலத் தீர்வைதான் விதிக்கப்படும்; கிணர்வெட்டி அதினல் ஜாஸ்தியாக விருத்தி செய்யப்பட்டதற்காக அப்படிப்பட்ட தீர்வை ஸெட்டில்மென் ட்காலத்தில் ஜாஸ்தி செய்யப்படக்கூடாது. அப்படிப்பட்ட கிணற்றிலிருந்து அந்த ஆயக்கட்டு நிலத்திற்காவது வேறேநிலத்திற்காவது ஜலம் பாய்ச்சப்பட்டால் அப்படி ஜலம் பாய்ச்சுவதற்காக ஜலத்தீர்வை அல்லது கசர்சார்ஜ விதிக்கப்பட மாட்டாது; ஆனல் அப்படிப்பட்ட நிலங்கள் சாதாரணமாகவே நஞ்சை தீர் வைவிதிக்கப்பட வேண்டியிருந்தால் அந்த நஞ்சை தீர்வை விதிக்கப்படும்.

12 அக்கம்பக்கத்தில் கிணற்றினல்ஜலம்பாயக்கூடிய இந்தமாதிரி நிலங் களி[illegible]ளர்விலையை அனுசரித்து, பிரஸ்தாபித்த ஆயக்கட்டு நிலமானது கிணர் வெ[illegible]ப்பட்டபிற்பாடு கடன்துகையில் பாதிக்குக் குறையாமலாவது மதிப்பு இருந்தாலொழிய இந்தவிதிகள் பிரகாரம் கடன் கொடுக்கப்படமாட்டாது. (ஒரு நிலம் கிணர்வெட்டினபிற்பாடு ரூபாய் 100 - பெறுமானது, இப்போது கடன் 200-ரூபாய்க்கு மேற்படக்கூடாது.)

13 இந்தவிதிகள்பிரகாரம் கடன் வாங்கவேணுமென்று யாதொரு குடி யானவன் இஷ்டப்பட்டால், ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்தில் 5-ரூபாய் பீஸ் கட்டி கிணர்வெட்டுவதாய் உத்தேசித்திருக்கப்பட்ட இடத்தில் குழிபோட்டு பரிசோதித்துப்பார்க்கும்படி கோரலாம். (இதற்காக அலாதியாய் சிப்பந்திகள் எற்படுத்தப்பட்டிருந்தால் அவர்களைக்கொண்டுப்பரிசோதித்துப்பார்க்கவேண் டியது). அப்படி பரிசோதித்துப் பார்த்தமேல், எவ்வளவு அகலத்துக்கு குழி போட்டுப் பார்க்கப்பட்டதென்றும் எவ்வளவு ஆழம் போனதின்மேல் ஜலம் அகப்பட்டது அல்லது அகப்படயில்லை என்றும், ஜலம் அகப்பட்டிருந்தால் எந்தமாதிரி ஜலமென்றும் அந்த சிப்பந்திகளுக்குத் தலைமை உத்தியோகஸ்தர் விண்ணப்பதாரனுக்குத் தெரிவிக்கவேண்டியது. 35-அடி ஆழத்தில் ஜலம் அகப்படாமற்போனல் முன்னடி கட்டின பீஸ் ரூபாய் 5-ம் வாப்ஸ் செய்யப் படும். பின்னிட்டு விண்ணப்பதாரன் இந்தவிதிகள்பிரகாரம் கடன்வாங்கினல் அந்த பீஸ்தொகை வாப்ஸ் செய்யப்பட்டு அப்படி குழிபோட்டுப் பரிசோதி த்துப்பார்த்ததற்காக பிடித்த அஸல் செலவானது கடன் துகையில் ஓர்பாக மாகும். (அதாவது கடன்துகை ரூபா 100-கேட்டிருந்து ஷெ செலவு 20- ரூபாய் பிடித்திருந்தால் இப்போது 100—20=80 - ரூபாய் கொடுக்கப்படும்.)

14. கடனுக்காகச்செய்யும் விண்ணப்பத்தில் எவ்வளவு துகை கடன் வேணுமென்றும், கிணற்று ஆயக்கட்டு நிலத்தின் விவரணத்தையும், அதுவிண்ணப்பதாரன்பேரில் பட்டாவாய் வருகிறதாவென்றும், அவனிட அனுபோகத்தில் இருக்கிறதாவென்றும், முன் அடமானம் முதலானது செய்யப்பட்டிருந்தால் அதின்விவரமும், விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட தேதிமுதல் ஒருவருஷத்திற்குள் கிணர்வெட்டாமற்போனால் கடனில் பாதி துகையைத் திருப்பிக்கொடுக்க என்ன ஜாமீன்கொடுக்கிறானென்றும், கண்டெழுதவேண்டியது. மேல் பிரகரணப்படி குழிபோட்டு பரிசோதித்து இருந்தால் அதின் முடிவைக் கண்டு ஒரு அச்சிட்ட ஸ்டேட்மெண்டு விண்ணப்பதாரனுக்கு கொடுக்கப்படுவதை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டியது.

15. தாலூகா கச்சேரியிலிருந்தும் ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்திலிருந்தும் விண்ணப்ப நமூனாக்களைப் பெற்றுக்கொள்ளலாம். நமூனா கொடுக்கிறவர்களைக்கொண்டாவது கிராமத்திய கணக்கர்களைக்கொண்டாவது விண்ணப்பத்தில் தேவையான அம்சங்களை எழுதவேண்டியது; விண்ணப்பங்களை நேராக ஆஜர்செய்தாலும் செய்யலாம், தபால்மூலமாயாவது வேறுவிதமாகவாவது அனுப்பலாம்; ரிவினியூ இனிஸ்பெக்டர் ஹோதாவுக்குக்குறையாத உத்தியோகஸ்தர்களுக்குவிண்ணப்பங்களைக் கொடுத்துக்கொள்ளலாம்; விண்ணப்பம் பெற்றுக்கொண்டதற்கு விண்ணப்பதார்களுக்கு ரசீதுகொடுக்கவேண்டியது.

16. யாதொரு ரிவினியூ இனிஸ்பெக்டராவது அவருக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தராவது யாதொரு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டவுடனே, நிலத்தை அஜிமாஷ்செய்து விணணப்பத்தில்கண்ட அம்சங்கள் சரியாயிருக்கின்றனவாவென்று கிராமத்தில் சுருக்கமாய் விசாரணைசெய்து, உத்தேசித்திருக்கப்பட்ட கிணற்றினால் ஆயக்கட்டு நிலத்துக்கு ஜலம்பாயுமாவென்றும், கிணர்முழுகி ஜலம் அகப்படும்பக்ஷத்தில் அக்கம்பக்கத்தில் அம்மாதிரி நிலங்களின் ஊர்விலையை அனுசரித்து பிரஸ்தாபநிலம் என்னவிலை பெறுமென்றும், (மதிப்பில் கடனில் பாதிதுகைக்குக் குறையாமலிருக்கவேண்டிய) ஜாமீன்சொத்து பெறுமானதாவென்றும் போதுமானதாவென்றும், ரிபோர்ட்டு செய்யவேண்டியது. இந்த ரிபோர்ட்டானது டிவிஷனல் ஆபீஸாருக்கனுப்பப்படும். அவர் அந்தரிபோர்ட்டைப்பரிசீலனைசெய்துபார்த்து இந்தவிதிகள்பிரகாரம்கடன் கொடுக்கலாமாவென்றுயோசித்து, வேண்டியநிபந்தனைகள் பிரகாரம் நடந்திருக்கும்பக்ஷத்தில் விண்ணப்பத்தை அங்கீகாரம்செய்துகொள்ளவேண்டியது; எந்த காரியத்திற்காக பணம் கொடுக்கப்பட்டதோ அந்த காரியத்திற்காக பணத்தைப் பிரயோஜனப்படுத்துவதாயும் குறிக்கக்கூடியவாயிதாவுக்குள் உறுதிப்பாடானதாயும் கிரமமாய் வெட்டப்பட்டும் முற்றிலும் பிரயோஜனப்படும்படியாயும் இருக்கப்பட்ட ஒருகிணற்றை வெட்டிமுடிப்பதாக விண்ணப்பதாரன் ஜாமீன் கொடுப்பதின்பேரிலும் குறித்த பாரப்பிரகாரம் அவசியமான தஸ்தாவேஜுகளை தயார்செய்துகொடுப்பதின்பேரிலும் கேட்ட

கடன்துகையில் பாதிகொடுக்கும்படி தாசில்தாருக்கு உத்திரவு செய்யவேண்டியது. அப்படி வேலை பூர்த்திசெய்வதற்காக கொடுக்கப்படும் வாயிதா சாதாரணமாய் 1-வருஷம்; ஆனால் 300-ரூபாயுக்கு மேற்பட்ட கடனுயிருக்கும்பக்ஷத்தில் கலெக்டரானவர் இரண்டுவருஷம் வாயிதாகொடுக்கலாம்; முதல் (இன்ஸ்டால்மெண்டு) வாயிதாவில் கொடுத்ததுகைக்கு வேலைசெய்தாய்ப்போனால் வேலையை அளந்து கணக்கிடும்படி விண்ணப்பதாரன் கோரிக்கொள்ளவேண்டியது. அப்படி அளந்துகணக்கிட்டமேல் முதல்வாயிதா துகைக்கு வேலை நடந்திருப்பதாகத் தெரியவந்தால் பின்னும் ஜாமீன்கொடுப்பதின்பேரில் கேட்ட கடன்துகையில் பாதிக்குமேற்படாமல் இரண்டாவது (இன்ஸ்டால்மெண்டு) வாயிதா துகைகொடுக்கலாம். இவ்விதமாக கொடுக்கப்படும் இன்ஸ்டால்மெண்டு துகைகளுக்கு வட்டிகிடையாது; ஆனால் எந்தகாரியத்திற்காக துகைகொடுக்கப்பட்டதோ அந்தகாரியத்திற்காக கிரமமாய் பிரயோஜனப் படுத்தப்படவில்லையென்று கலெக்டருக்குத் திருப்திகரமாய் ஏற்பட்டால் 6¼வட்டி விதிக்கப்படும். கிணறுகட்டாமல் போனாலாவது அல்லது கிணறுவெட்டி ஜலம் அகப்படாமற்போனாலாவது இந்த விதியின்பிரகாரம் கொடுக்கப்பட்ட (இன்ஸ்டால்மெண்டு) வாயிதாதுகைகளை விண்ணப்பதாரனிடமிருந்து ஜாமீனைத்தொடர்ந்து வசூல்செய்யப்படும்.

கிணர்வெட்டிமுடித்தானவுடன் விண்ணப்பதாரனானவன்கிணற்றை அளந்து வேலையை மதிப்புபோடும்படி கோரவேண்டியது. (இன்ன தாமாஷாப்படி அளந்து மதிப்பிடவேண்டியதென்பது ஜில்லா ஒட்டுக்குமாவது தாலூக்கா ஒட்டுக்குமாவது முன்னடியாக ஏற்படுத்தப்படும். இப்போதுசெய்த வேலையின் மதிப்பானது முன்னடி வாங்கின கடன்துகையில் 100-க்கு 10-க்கு மேற்பட்டுக் குறையாமலிருந்தால் இன்ஸ்டால்மெண்டு துகைகளுக்காக ஆஜர் செய்யப்பட்ட ஜாமீன்களை விடுதலை செய்துவிட்டு கடன் துகை பூராவுக்கு ஒரு ஆர்டர் பிறப்பிக்கவேண்டியது. அந்தமதிப்பானது கடன்துகையில் 100-க்கு 10-க்கு மேற்பட்டு குறைந்திருக்கும் பக்ஷத்தில் விண்ணப்பதாரன் தனக்கு இஷ்டமிருந்தால் தான்வாங்கின கடன்துகையில் வேலைக்குப் பிடித்ததுபோக ஜாஸ்திபணத்தை வாப்ஸ்செய்து அவ்விதமாக கடனைக் குறைத்துக்கொள்ளலாம். அதற்கு அனுஸரணையாக ஸ்பெஷல்தீர்வையையும் குறைத்துக்கொள்ளலாம். அப்படிக்கில்லாமல் வேலையின் மதிப்பானது கடன்துகையில் 100-க்கு 10-மேற்பட்டு ஜாஸ்தியாயிருக்கும்பட்சத்தில் ஜாஸ்தி பிடித்தபணத்தை (கடனாக) கொடுக்கும்படி கேட்கலாம். ஆனால் 5-வது 6-வது விதியில்கண்ட நிபந்தனைகளை மீறி நடக்காமலிருக்கவேண்டியது.

18. மேற்கண்டவிதமாக கடன்துகை இவ்வளவென்று நிஷ்கரிஷை செய்யப்பட்டபிற்பாடு இன்ஸ்டால்மெண்டு துகைகளுக்காக கொடுக்கப்பட்ட ஜாமீன்களை விடுதலைசெய்து கடன் துகையைக்கண்டு கலெக்டரால் ஒரு ஆர்டர்பிறப்பிக்கப்பட்டு கொடுக்கப்படும். அந்த ஆர்டரில் விண்ண

ப்பதாரன் கையெழுத்துசெய்யவேண்டியது. இந்த ஆர்டர் பிறப்பிக்கப்படும் தேதிமுதல் வட்டிவிதிக்கப்படும். இந்த ஆர்டருக்கு ஒருநகலும் ஆயக்கட்டு நிலத்திற்கு ஒரு ஸ்பெஷல்பட்டாவும் கொடுக்கப்படும். அந்த ஸ்பெஷல் பட்டாவின் பின்புறத்தில் பசலிவாரியில் செலுத்தவேண்டிய துகை இவ்வள வென்று கண்டெழுதப்படும். விண்ணப்பதாரனிட சாதாரணபட்டாவில் இந்த ஆயக்கட்டு நிலத்தைத்தவிர்த்து போடுவதற்காக அந்த சாதாரணபட்டாவை அவனிடத்திலிருந்து வாங்கி அந்த நிலத்தை அடித்து விடவேண்டியது.

19. கடன்துகையைக்கண்டு ஆர்டர் பிறப்பித்தபிற்பாடு, நிலத்தீர்வையின் கிஸ்துவசூலானது 6-மீ த்திற்கு மேற்பட்டதாயிருந்தால் அந்த கிஸ்துடன் கடனுக்காக முதல்வருஷத்தவணைத்துகை சேரவேண்டியதாகும். 6-மீ த்திற்கு குறைவாயிருந்தால் அதற்கடுத்தபசலியின் கடைசி கிஸ்துடன் கடனின் முதல் தவணையை செலுத்தவேண்டியதாகும். உதாரணம்: 1892-ம் வருஷம் ஜனவரிமீ கடன் துகையைக்கண்டு ஆர்டர் பிறப்பிக்கப்படுகிறது. 1892-ம் வருஷத்திய கிஸ்தானது மேமீ த்தோடு முடிவாகிறது, (அதாவது மேமீ த்தில் கடைசி கிஸ்துசெலுத்தவேண்டியதா யிருக்கிறது); இந்த விஷயத்தில் கடனுக்காக முதல்வாயிதா துகையானது 1893-ஹ மேமீ த்திய கிஸ்துடன் செலுத்தவேண்டியதாகும் ஆனால் கடன்துகையைக்கண்ட ஆர்டர் 1891-ஹ நவம்பர்மீ பிறப்பிக்கப்பட்டிருந்தால் 1892-ஹ மேமீ த்திய கிஸ்துடன் முதல்வாயிதா செலுத்தவேண்டியதாகும். கடன்கொடுக்கும்போது இந்த ஷரத்தும் செய்யவேண்டியது.

கிணர்வெட்டுவதற்கு கடன் வேணுமென்று கோரிக்கொள்ளும் விண்ணப்பம்.

விண்ணப்பதாரனிட பெயரும் இருப்பிடமும்.	வேண்டிய கடன் துகை.	ஒருவருஷத்திற்குள் கிணர் வெட்டாத பக்ஷத்தில் கடனின் பாதிதுகையை திரும்ப செலுத்த ஜாமீன்.	கிணற்றிலிருந்து ஜலம் பாயக்கூடிய ஆயக்கட்டு நிலத்தின் விஸ்தீர்ணம்.	நிலத்தில் மனுதாரனுக்குள்ள பாத்தியதை.	நிலத்தில் இதராளுக்குள்ள பாத்தியதை.

விண்ணப்ப்தாரன் கையெழுத்து.

அட்டவணை.

அடியிற்கண்ட அட்டவணையில், 100-ரூபாய் கடன் வாங்குவதாக பாவிக்கவேண்டியது.

எத்தினை வருஷங்களுக்குள் செலுத்துவதாக ஒப்பந்தம்.		வருஷவாரியில் இவ்வளவு தொகை செலுத்திவந்தால் கடன்தீருமென்பது. 100-த்துக்கு-ரூ 1-க்கு வீதம் 3-வட்டி யுள்பட. ரூபா.	அணா.	பை.
1-வருஷத்திற்குள் செலுத்திவிடவேண்மோனால்:—	...	103	0	0
2 ஷை	...	52	4	2
3 ,,	...	35	5	9
4 ,,	...	26	14	6
5 ,,	...	21	13	4
6 ,,	...	18	7	3
7 ,,	...	16	0	9
8 ,,	...	14	3	10
9 ,,	...	12	13	6
10 ,,	...	11	11	8
11 ,,	...	10	12	11
12 ,,	...	10	0	9
13 ,,	...	9	7	5
14 ,,	...	8	13	8
15 ,,	...	8	6	0
16 ,,	...	7	15	4
17 ,,	...	7	9	8
18 ,,	...	7	4	4
19 ,,	...	6	15	8
20 ,,	...	6	11	7
21 ,,	...	6	7	8
22 ,,	...	6	4	5
23 ,,	...	6	1	3
24 ,,	...	5	14	6
25 ,,	...	5	11	11
26 ,,	...	5	9	5
27 ,,	...	5	7	3
28 ,,	...	5	5	3
29 ,,	...	5	3	4
30 ,,	...	5	1	7

பலான விஸ்தீர்ணமுள்ள ஆயக்கட்டு நிலத்திற்கு பலானதுகை வரையில் கடன் கொடுக்கலாமென்பதைக் காட்டும் அட்டவணை.

ஆயக்கட்டு ஏகரா.		வருஷவாரி ஸ்பெஷல் தீர்வை.				உயர்ந்தபக்ஷம் கொடுக்கக் கூடிய கடன் துகை. *
		ரூபா.	அ.	பை.		ரூபாய்.
$\frac{1}{2}$	...	2	8	0	...	49
$\frac{3}{4}$	...	3	12	0	...	73
1	...	5	0	0	...	98
$1\frac{1}{4}$	...	6	4	0	...	122
$1\frac{1}{2}$	...	7	8	0	...	147
$1\frac{3}{4}$	...	8	12	0	...	171
2	...	10	0	0	...	196
$2\frac{1}{4}$	...	11	4	0	...	220
$2\frac{1}{2}$	...	12	8	0	...	245
$2\frac{3}{4}$	...	13	12	0	...	269
3	...	15	0	0	...	294
$3\frac{1}{4}$	...	16	4	0	...	318
$3\frac{1}{2}$	...	17	8	0	...	343
$3\frac{3}{4}$	...	18	12	0	...	367
4	...	20	0	0	...	392
$4\frac{1}{4}$	...	21	4	0	...	416
$4\frac{1}{2}$	...	22	8	0	...	441
$4\frac{3}{4}$	...	23	12	0	...	465
5	...	25	0	0	...	490
$5\frac{1}{4}$	...	26	4	0	...	514
$5\frac{1}{2}$	...	27	8	0	...	539
$5\frac{3}{4}$	...	28	12	0	...	563
6	...	30	0	0	...	588
$6\frac{1}{4}$	...	31	4	0	...	612
$6\frac{1}{2}$	...	32	8	0	...	637
$6\frac{3}{4}$	...	33	12	0	...	661
7	...	35	0	0	...	686
$7\frac{1}{4}$	...	36	4	0	...	710
$7\frac{1}{2}$	...	37	8	0	...	735
$7\frac{3}{4}$	...	38	12	0	...	750

* குறிப்பு.—இதில் ஒரு ரூபாயிக்குக் குறைந்த பாகம் விடப்பட்டது.

III. பயிர் செய்கிறவர்களுக்குக் கடன் கொடுக்கும் சட்டப் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட விதிகள்.

A. பஞ்சம் நிவர்த்தி செய்யும்பொருட்டுத் தவிர வேறே உபயோகத்திற்காக (பயிர்செய்வதற்காக) கடன் கொடுப்பதைப்பற்றி விதிகள்.

1. சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு அடியிற்கண்ட உபயோகத்துக்காக பிரதி விஷயத்திலும் 1000-ரூபாய்க்கு மேற்படாமல் கடன் கொடுக்கலாம்:—

(*a*) விதை வாங்கவும் உழவுமாடு வாங்கவும்.

(*b*) நெருப்பினாலாவது வெள்ளத்தினாலாவது நாசமாக்கப்பட்ட வீடுகளைத் திரும்ப கட்டுவதற்காக.

(*c*) நிலத்தை துரஸ்து செய்வதற்காக கடன் கொடுப்பதற்கான விதிகளில் பிரஸ்தாபிக்கப்படாததாயும் ஆகிலும் பயிரிடும் விஷயமாய் சம்பந்தப்பட்டதாயுமான உபயோகங்களுக்கு.

2. வாய்மொழியாகவும் விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அப்படி எந்த உத்தியோகஸ்தரிடத்தில் சொல்லிக் கொள்ளப்படுகிறதோ அவர் உடனே எழுத்து மூலமான விண்ணப்பத்தைத் தயார்செய்வித்து பெற்றுக் கொள்ள வேண்டியது.

3. இந்த விதிகள் பிரகாரம் கடன் வேண்டியவர்கள் கலெக்டரிடத்திலாவது டிவிஷனலாபீசரிடத்திலாவது தாலூகாவிலுள்ள தாசில்தாரிடத்திலாவது டிப்டி தாசில்தாரிடத்திலாவது விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியது. கேட்கப்பட்ட கடன் தொகையானது ரூபா 250-க்கு மேற்படாமற்போனால்தாசில்தாராவது தனி சார்ஜிலுள்ள டிப்டி தாசில்தாராவது உத்திரவு கொடுக்கலாம். ரூபாய் 500-க்கு மேற்படாமற்போனால் டிவிஷனலாபீஸர் உத்திரவு கொடுக்கலாம், ஆனால் ரூபா 500-க்கு மேற்படும் பக்ஷத்தில் கலெக்டர் மாத்திரந்தான் உத்திரவு கொடுக்கக்கூடும். விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட உத்தியோகஸ்தர் விண்ணப்பதாரனிட நடத்தை, ஜாமீன் கொடுக்க அவனுக்கு இருக்கும் சக்தி, கடன் கொடுப்பது கிரமமானதா என்று விசாரித்து தெரிந்துகொண்டு கடன் கொடுக்கக்கூடும் போலிருந்தால் அப்படியே கொடுக்கும்படி உத்திரவு செய்யவேண்டியது. தான் கொடுக்கக்கூடிய கடன் தொகைக்கு மேற்பட்ட தொகையாயிருந்தால், அந்த தொகையை கொடுக்க அதிகாரமுள்ள தகுந்த உத்தியோகஸ்தருக்கு தாம் செய்த விசாரணையைப் பற்றி ரிபோர்ட்டு அனுப்பவேண்டியது. ஆகிலும் சாகுபடிக்கு லாயக்கான நிலத்தின் யாதொரு அனுபோகதாரனாவது சொந்தக்காரனாவது சர்க்கார் பாக்கி செலுத்த வேண்டியதா யிருந்தாலாவது முன்னாடி நிலதுரஸ்து விஷய

மாயாவது இந்த விதிகள் பிரகாரமாக்வாவது கடன் கொடுக்கப்பட்டிருந்து அப்பேர்ப்பட்ட கடன் செலுத்தப்படாமல், பாக்கி நின்றுபோயிருந்தால் அப்பேர்ப்பட்டவனுக்குக் கடன் கொடுக்கப்படமாட்டாது; ஆனல் கலெக்டருக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் அப்படி கொடுக்கவேண்டியதற்குத் தன க்குள்ள காரணங்களைப் பூர்த்தியாய்த் தம்மிடகையாலேயே கண்டெழுதி கடன் கொடுக்கும்படி உத்திரவு செய்யலாம்.

4. கடனை திருப்பிக்கொடுக்கும் விஷயமாய் அடியிற்கண்ட நிபந்தனை களுக்குட்பட்டு கடன் கொடுக்கப்படும் :—

(a) உழவு மாடு வாங்குவதற்காவது சட்டப்பிரகாரமும் இந்த விதிகள் பிரகாரமும் வேறே எந்த உபயோகத்துக்காகவாவது வாங்கப்பட்ட கடனு யிருந்தால் இரண்டு வருஷத்திற்குள் திருப்பிக் கொடுக்கவேண்டியது; ஆனல் கலெக்டருக்கு யுக்தமாய்த் தோன்றினல் முன்னடியாக போர்டாரிட அனுமதி பெற்றுக்கொண்டு 10-வருஷத்திற்கு மேற்படாத ஓர் காலம் வரை யில் வாயிதா கொடுக்கலாம்.

5. பலான வாயிதாவுக்குள் கடன் கொடுப்பதாய் ஏற்பாடுசெய்துகொ ண்டிருந்து அதற்கு முன்னடியாகவே துகையைச் செலுத்த வேணுமென் ருல் அப்படியே செலுத்திவிடலாம்,

6. கடன் கொடுக்கும் அதிகாரியானவர் ஏற்படுத்துகிறபடி வட்டியுடன் வாயிதா துகைகள் செலுத்தவேண்டியது. தகுந்த காரணமிருக்கும் பக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட வாயிதாவை கலெக்டராவது டிவிஷலாபீஸராவது நிறுத்தி வைக்கலாம்.

7. வருஷம் 1-க்கு 100-த்துக்கு $6\frac{1}{4}$-வீதம் வட்டி விதிக்கப்படும். கடன் கொடுக்கப்படும் தேதியிலிருந்து வட்டி கணக்கிடப்படும்; ஆனல் பிரதேச கெவர்ன்மெண்டாருக்கு இஷ்ட மிருக்கும்பக்ஷத்தில் ஏதோ காரணங்களை முன்னிட்டு குறைந்த வட்டி வீதம் விதிக்கலாம், அல்லது வட்டி யில்லாமலே கடன் கொடுக்கலாம், அல்லது வட்டி பாபத்தில் பாக்கி ஏற்பட்டுப் போயிரு ந்தால் அப்பேர்ப்பட்ட பாக்கியை வஜாசெய்யலாம்.

8. கடனுக்காக நிலம் ஈடுமொனத்தின் பேரில் ஜாமீன் வாங்கப்படும். (ஜாமீன் துகையானது கடன் துகைக்கு அதமபக்ஷம் $1\frac{1}{4}$-பங்காவது இருக்க வேண்டியது.)

9. கடன்துகை ஸாங்கிஷன் செய்யப்பட்ட மேல் கடன் கேட்டவனுக் காவது அவனிட கிரமமான ஏஜெண்டுக்காவது துகையைக் கொடுப்பித்து ரசீது பெற்றுக் கொள்ளவேண்டியது; ஆனல் மாடு வாங்குவதற்காகக் கொடு க்கப்படும் துகையாயிருந்தால் துகைக்கு பதிலாக கலெக்டரானவர் மாடுகளை வாங்கி விண்ணப்ப தாரனுக்குக் கொடுக்கலாம்.

பஞ்சம் நிவர்த்தி செய்வது தவிர வேறே பயிரிடும் உபயோகத்திற்காக கடன் வேண்டுமென்று செய்து கொள்ளப்படுவதற்கு விண்ணப்ப நமூனு.

விண்ணப்பதாரனிட பெயர், அவன் தகப்பன் பெயர், அவனிட இருப்பிடம்.	கடன் வேண்டிய தொகை.	எந்த எண்ணத்தைக்கொண்டு கடன் கேட்கப்படுகிறது.	ஜாமீனாக ஈடுவைப்பதாய் உத்தேசிக்கப்பட்ட நிலம் இருக்கும் இடம்.	நிலத்தில் விண்ணப்பதாரனுக்குள்ள பாத்தியதை.	நிலத்தில் இதரர்களுக்கு ஏதாவது பாத்தியதை இருந்தால் அதைப்பற்றி.	எந்த தேதிகளில் திருப்பிக் கொடுத்துவிடுவதாக உத்தேசிக்கப்படுகிறது.

விண்ணப்ப தாரனிட கையெழுத்து.

B. பஞ்சம் நிவர்த்தி செய்யும்பொருட்டு கடன் கொடுப்பதைப் பற்றின விதிகள்.

பஞ்சம் நேரிட்டு இருப்பதாக பிரதேச கெவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுவதின்பேரில்தான் இந்த விதிகள் பிரகாரம் கடன் கொடுக்கப்படும்.—

(1) சாகுபடிக்கு லாயக்கான நிலங்களின் சொந்தக்காரர்களாயும் அனுபோகஸ்தர்களாயுமிருப்பவர்களுக்கு (அவர்கள் தற்காலம் ஜீவனத்திற்கு மார்க்க மில்லாமல் கஷ்ட ஸ்திதியிலிருப்பதைப்பற்றி) அடுத்த அறுவடைகாலம் வரையில் அவர்கள் ஜீவித்திருக்கும்படியாக அடியிற்கண்ட விதிகள்பிரகாரம் 200-ரூபாய்க்கு மேற்படாமல் கடன் கொடுக்கலாம்.

(2) அப்பேர்ப்பட்ட கடன்களுக்கு வட்டி கிடையாது. சாதாரணமாய் அவைகள் உயர்ந்த பக்ஷம் 3-வருஷகாலதில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியது.

(3) கலெக்டரிட பொதுவான அதிகாரத்துக்குட்பட்டு டிவிஷனலாபீஸராவது விண்ணப்பதாரன்குடியிருக்கிற ரிலீப் ஸர்க்கிலின் அதிகாரியாவது அப்படி கடன் கொடுக்கலாம்.

(4) அப்பேர்ட்ட அதிகாரியானவர் தேவையான விசாரணைகளைசெய்து கடன் கொடுக்கவேண்டியது அவசியமாகயிருப்பதாயும் அது திருப்பிக் கொடுத்து விடப்படும் என்று நம்ப ஹேதுயிருப்பதாயும் தோன்றினுல் அவசியமாய் எவ்வளவு துகை வேண்டுமென்பதாகத் தோன்றுமோ அவ்வளவு துகை கொடுப்பிக்கவேண்டியது. திருப்பி செலுத்துவதற்கு வாயிதாவும் எற்படுத்த வேண்டியது.

(5) அப்பேர்ப்பட்ட கடன் துகை மாதத்திற்கு ஒரு தரமாவது இரண்டு மாதத்திற் கொருதர மாவது தவணைகளாக செலுத்தவேண்டியது.

(6) கடன் துகை யாரால் அனுமதி செய்யப்பட்டதோ அவர் முன்பாக வாவது தாசில்தார் முன்பாகவாவது பட்வாடா செய்யப்படும். அப்பேர்ப் பட்டதுகை பட்வாடா செய்ததாக ஷை உத்தியோகஸ்தராவது தாசில்தாரா வது அதில் கையெழுத்து செய்யவேண்டியது.

(7) சொற்ப நிலதார்களுக்கே இந்த கடன் துகையானது கொடுக்கப் படும். அந்தகடன் துகையை நிலத்தீர்வையைப்போல் வசூல் செய்யக்கூடு மாகையால் அவர்களிடத்திலிருந்து அவசியம் ஜாமீன் வாங்க வேண்டுமென் பது கட்டாயமல்ல, ஆனுல் கடன் பெற்றுக்கொள்ளுகிறவனுக்கு இருக்கப் பட்ட சொத்தானது கடன் துகைக்குப் போதுமானதா யிருக்கவேண்டியது; அப்படிக்கு போதுமானதாயில்லாவிட்டால் போதுமான ஸ்திதியுடைய வேறே ஒருவன் நபர் ஜாமீனுகயிருந்தாலொழிய கடன் கொடுக்கப்படமாட் டாது.

ஜீவனத்திற்கு கஷ்டமாக பஞ்சம் வந்திருப்பதை நிவாரணசெய்து [illegible]ள் வதற்காக கடன் வேண்டுமென்று செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்தின் நமூனு.

விண்ணப்பதாரனிட பெயர், அவன் தகப்பன் பெயர், அவனிட இருப்பிடம்.	கடன் வேண்டிய துகை எவ்வளவு.	என்னத்திற்காக கடன் வேண்டியிருக்கிறது.	விண்ணப்பதாரனிட சொத்தின் விபரம்.	நிலத்தில் விண்ணப்பதாரனுக்குள்ள பாத்தியதை.	நிலத்தில் இதராளுக்கு எதாவது பாத்தியதை இருந்தால் அதைப்பற்றி.	ஜாமீன் யாராவது கொடுத்தால் அவன் பெயர், அவனிட தகப்பன் பெயர், அவனிட இருப்பிடம்.	திரும்பி செலுத்துவதாய் உத்தேசிக்கப்பட்ட தவணைகளும் வாயிதா தேதிகளும்.

விண்ணப்பதாரன் கையெழுத்து.